தெய்வத் தமிழ்க்

கருவூலம்



வெளியீடு:

தெய்வத் தமிழ்க் கல்வி கலைபண்பாட்டு அறக்கட்டளை


அஞ்சல் பெட்டி எண். 7409, 46, பெருமாள் முதலி தெரு,

கொண்டியம்பதி, சென்னை-600 079.

திருவருட்பா

உரைமனங் கடந்த ஒருபெரு வெளிமேல்
அரைசு செய்து ஓங்கும் அருட்பெருஞ்ஜோதி
ஊக்கமும் உணர்ச்சியும் ஒளிதரும் ஆக்கையும்
ஆக்கமும் அருளிய அருட்பெருஞ்ஜோதி
எல்லையில் பிறப்பெனும் இருங்கடல் கடத்தி என்
அல்லலை நீக்கிய அருட்பெருஞ்ஜோதி
ஏறா நிலைமிசை ஏற்றி என்றனக்கே
ஆறாறு காட்டிய அருட்பெருஞ்ஜோதி
ஐயமும் திரிபும் அறுத்து எனது உடம்பினுள்
ஐயமும் நீக்கிய அருட்பெருஞ்ஜோதி.

– திரு அருட்பிரகாச வள்ளலார்



அருள்மிகு இராஜகணபதி

தெய்வத் தமிழ்க் கருவூலம்

அனைத்துலக

தெய்வத் தமிழ் முதல் மாநாடு

சென்னை.

தெய்வத் தமிழ்க் கருவூலம்

☆

நாள் - 23-2-92 முதல் 26-2-92 வரை

இடம் - தவத்திரு. சங்கரதாஸ் சுவாமி கலையரங்கம்
அபிபுல்லா சாலை, சென்னை - 17.

வெளியிடுவோர் - தெய்வத்தமிழ்க் கல்வி கலை
பண்பாட்டு அறக்கட்டளை,
சென்னை - 79.

ஆன்மசக்தி பி. வெங்கடேசன்
தெய்வத் தமிழ் மன்றம்
அஞ்சல் பெட்டி எண்: 1190
சென்னை-600021

வெளியீடு:
தெய்வத் தமிழ்க் கல்வி கலைபண்பாட்டு அறக்கட்டளை
~~அஞ்சல் பெட்டி எண். 7409, 46, பெருமாள் முதலி தெரு,~~
~~கொண்டியம்பதி, சென்னை-600 079.~~

தெய்வத் தமிழ் மன்றம்
சென்னை

அச்சிட்டோர் — பி. ஆர். லித்தோகிராபர்ஸ்,
1, லோட்டஸ் ராமசாமி தெரு,
சென்னை – 13.

பொருளடக்கம்

முன்னுரை

எண்ணங்கள் மலர்வது எதனால் என்ற சிந்தனை எழுகின்றபோது "யாது மனம் நினையும் அந்த நினைவுக்கு நினைவாகி" என்ற அருள் ஞானியின் நினைவுதான் எழுகின்றது. நல்வினை தீவினைகள் காரணமாக நல்லெண்ணங் களும், தீய எண்ணங்களும் எழுகின்றன என்பதும் உண்மையே. ஆன்மீகப் பெரியோர்களுக்கு இறைவன் அவர்களுடைய அறிவில் நின்று குருவாய், உணர்த்தி அருள் எண்ணங்களைத் தோற்றுவிக்கிறான் என்பதும் மறுக்க முடியாத உண்மையாகும். இவ்வகையில் எளியேனுக்கு எழுந்த எண்ணங்கள் எவ்வகையைச் சார்ந்தது என்பதைக் கூற இயலாது. இருப்பினும், என்னைப் பொறுத்தவரையில் "என் செயினும் என்பெறினும் என் இறைவா யாவும் நின் செயலே" என்று எண்ணும் உறுதி கொண்டு செயல்பட்டு வருகிறேன். அதுவும் அவனருளே. எனவே, என்னுடைய சிந்தனைகளும் அதனுடைய செயல் வடி வங்கள் யாவும் "தெய்வ கட்டளை" என்பதை உறுதியாக ஏற்று இயங்குகிறேன்.

அவ்வகையில் எனது சிந்தனைக் கண்முன் தோன்றியதுதான் "தெய்வத் தமிழ் மன்றம்" இச்சிந்தனை சிலநாட்களுக்கோ, சில மணித்துளிகளுக்கோ நீடித்த சிந்தனையல்ல, வினாடியில் உதித்த திருப்பெயர்தான் "தெய்வத் தமிழ் மன்றம்". இம்மன்றம் ஒளிவிடும் ஓங்காரத்தைத் தன் சின்னமாகக் கொண்டு இயங்கி வருகிறது.

தெய்வத் தொண்டிற்காக வாழ்க்கையை அர்ப்பணம் செய்து தொடங்கிய மன்றம். ஆகையால் தொடங்கிய ஓராண்டிலேயே ஒருசில ஆண்டுகள் மிகத் தீவிரமாகச் செயல்புரிந்தால் எவ்வளவு முடியுமோ அத்துணை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அன்றுமுதல் தொண்டுகள் தொய்வில்லாமல் தொடர்கின்றன. இம்மன்றத்தின் தொண்டுகளைக் குறித்து விளம்பரம் செய்வதில் என்னுடைய பணிபத்தில் ஒரு பாகத்திற்கும் குறைவுதான். இந்நாளில் விளம்பரம் இருந்தால் தான் பலரும் அறியமுடியும் என்பது உண்மையே. ஆனாலும் இதற்கென பொருட்செலவு செய்யும் நிதி ஆதாரமின்றி தொண்டு ஒன்றையே ஆதாரமாகக் கொண்டு தெய்வத் தமிழ்மன்றம் இயங்கி வருகின்றது. மன்றத்திற்கென பதினோரு கொள்கைகள் உண்டு. தனிக்கொடி உண்டு. மன்றத்தின் முதல் நூல்களாகத் திகழ்பவை திருக்குறள், திருவருட்பா ஆகும். அதனையடுத்து சைவம், வைணவம், இரு துறைகளையும் சார்ந்த தெய்வத் தமிழ் நூல்களை ஏற்றுப் போற்றி பரப்பி வருகின்றோம். மன்றத்தின் சார்பாக தமிழ்நாடு முழுவதிலுமுள்ள மத்திய சிறைச்சாலை சிறைவாசிகளுக்கு திருக்குறளை ஆதார மாகக் கொண்டு நல்லுரைகள் ஆற்றி வந்ததும் சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கெல்லாம் ஒரு குழுவினராகச் சென்று பாடிப் பேசி நன்னெறிகளைப் பரப்பி வந்ததும், சென்னையில் பத்து இடங்களுக்கு மேல் வாரந்தோறும் திருக்குறள், அருட்பா வகுப்பு நடத்தி வந்ததும் மருத்துவ முகாம்கள், இலவச கண் கண்ணாடி வழங்குதல் போன்ற சமூக சேவைகள் செய்ததும் போன்ற பல்வேறு வகையான தொண்டுகளையெல்லாம் மன்றத்தின் மூன்றாவது ஆண்டு சிறப்பு மலர் சிறப்பாக எடுத்துக்காட்டும். இம் மன்றத்தின் மிகப் பெரும் சாதனையாக ஆண்டுதோறும் நிகழ்ந்து வருகின்ற "மார்கழி இசை விழா" யாவரும் அறிந்ததாகும். முப்பது நாட்களிலும் முப்பது புகழ்மிகு இசை வாணர்கள் கலந்துகொண்டு சிறப்பிக்கும் சிறப்பு விழாவாக இவ்விழா நடை பெற்று வருகிறது. இத்தகைய தொண்டுகளுக்கிடையே 'ஆன்ம சக்தி' என்ற மாத இதழ் தெய்வத் தமிழறிஞர்களின் அரியக் கருத்துக்களைத் தாங்கி வெளிவந்து கொண்டிருக்கின்றது. இம்மன்றத்தின் முக்கிய கொள்கையாகிய சமரச நோக்கு சிறிது சிறிதாக வளர்ந்து தெய்வத் தமிழ் சம்பந்தப்பட்ட அனை வரையும் ஒன்று சேர்த்து ஒரு சமரச மாநாட்டினை கூட்டிட வேண்டுமென்ற எண்ணத்தைத் தூண்டி விட்டது. அவ்வெண்ணத்தின் வளர்ச்சிதான் இன்று நடைபெறுகின்ற "அனைத்துலகத் தெய்வத் தமிழ் முதல் மாநாடு" ஆகும்.

மன்றத்தின் முக்கிய அன்பர்களை அழைத்து எனது எண்ணத்தை வெளிப்படுத்தியபோது பலரும் மகிழ்ச்சியோடு வரவேற்றார்கள். அதில் பெரும்பாலானவர்கள் நிதி ஆதாரம் ஏதுமில்லாத நமது மன்றம் இவ்வரிய செயலைச் செய்வது என்பது சாத்தியமாக இராது என்றே கூறினர். இது போன்றே தெய்வீக அன்பர்களில் பெரும்பாலானவர்கள் இதேக் கருத்தைக் கொண்டிருந்தாலும் எனது எண்ணத்தில் மட்டும் சிறிதும் தளர்ச்சி ஏற்பட வில்லை. திருவருளும் துணை நின்றது. எனது உடன் பிறவாச் சகோதரராகத் திகழும் கலைமாச் செல்வர் எஸ்.டி. காசிராஜன். ஐ.ஏ.எஸ்., (ஓய்வு) அவர்கள் பெருந்துணையாக நின்றார். அவருக்குத் துணையாக பெரும்புலவர் திரு. இர. திருஞான சம்பந்தர் அவர்கள் சிறப்புத் துணையாக வந்தார். தெய்வத் தமிழ் மன்றத்தில் மன்றப் புலவர்களாகத் திகழ்கின்ற அருள்விளக்கம் அண்ணாமலை அடிகளார் அவர்களும், சித்தாந்த புலவர் தா.ம. பார்த்தசாரதி அவர்களும் அருகிலிருந்து தொடக்க காலமுதல் தொண்டாற்றி வருகின்றார்கள். மாநாடு நடைபெறுவதற்கு முதலில் ஒரு அலுவலகம் வேண்டும் என்ற எண்ணம் வந்தபோது திருவருள் தொண்டர் திரு. கோ. தனபாலன் அவர்கள் தனது இல்லத்தின் மாடியை கொடுத்து உதவினார். மன்ற அன்பர் திரு. ஆர். சோமசுந்தரம் அவர்கள் தனது தொலைபேசியைக் கொடுத்து உதவினார். முக்கிய அன்பர்கள் பலரும் உதவிகள் வழங்கினர். அலுவலகம் செயல்படத் தொடங்கியது. மலர் வெளியடுவதற்காக சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் ஆட்சியாளர் திரு. இரா. முத்துகுமாரசாமி அவர்களை அணுகி னோம். அவரும் நல் ஆலோசனைகளைத் தெரிவித்து மலர்க் குழுத் தலைவராகப் பொறுப்பேற்றார். முதன் முதலில் மலருக்கு உயிரூட்ட வந்த பெருந்தகையாளர் இந்தியன் வங்கியின் தலைவர் திரு. எம். கோபாலகிருஷ்ணன் ஆவார்கள். மேலும் உள்ளத்திற்கு பெரும் மலர்ச்சியை ஏற்படுத்தியவர் தொழிலதிபர் பெருந்தகை திரு. ஏ.சி. முத்தையா அவர்கள். மாநாட்டிற்குப் புரவலர்களையும், பிரதிநிதிகளையும் சேர்த்துக் கொடுப்பதில் முனைந்து நின்றவர் திருச்செங்கோடு திரு. கா. அ. சீனிவாசன் அவர்களும், பிறர்க்குதவும் பெருந்தொண்டர் திரு. விசுவநாதன் அவர்களும், வைணவச் செம்மல் திரு. கே.இ.பி. ரங்கராஜன் அவர்களும் ஈரோடு டாக்டர் எம்.சி. இராசமாணிக்கம் அவர்களும், பேராசிரியை டாக்டர் சு. வள்ளியம்மாள் அவர்களும், ஆன்மசக்தி புரவலர் திரு. கோ. ஆறுமுகசாமி அவர்களும் நன்றிக்குரியவர்களாவார்கள்.

மாநாட்டு அலுவலகத்தில் ஓராண்டு காலமாக சித்தாந்த புலவர் தா.ம. பார்த்தசாரதி அவர்கள் பொறுப்பு வகிக்கும் தொண்டினைச் செய்தார். கடந்த இரண்டு மாதங்களாக மலருக்கான பணிகளை அருள்விளக்கம் அண்ணா மலை அடிகளார் மேற்பார்வையில் புலவர்கள் திரு. கோவிந்தசாமி, திரு. இரத்தினசாமி, திரு.கி.மா. பக்தவச்சலம் ஆகியோர் செய்தனர்.

மாநாட்டு சிறப்பு மலரை அடுத்து "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத் தோரே" என்ற வாக்கிற்கிணங்க மாநாடு நடைபெறுகின்ற நான்கு நாட்களிலும் முழுமையான உணவுப் பொறுப்புக்களை தமது பொறுப்பில் ஏற்றுக் கொண்ட வர் அருளாளர் பெருந்தகை அன்னதானசிவம் தவத்திரு ஐயப்ப சுவாமிகள் ஆவார்கள். இதுபோன்று இம்மாநாட்டிற்கு பல்வேறு வகைகளிலும் உதவிகள் புரிந்த பெருந்தகையாளர்களின் பெயர் பட்டியலகளை, அடுத்து வெளிவர விருக்கும் தொகுப்பு மலரில் நன்றியுணர்வோடு வெளியிடுவோம்.

கடைசியாக 'தெய்வத் தமிழ்க் கருவூலம்' என்ற பெயரில் உங்களுடைய திருக் கரங்களில் தவழ்கின்ற இம்மலரின் அச்சுப் பணிகளை செம்மையாகவும், சிறப்பாகவும் மிகக் குறுகிய காலத்தில் அழகாக தனது சொந்தப் பணியாகக் கருதி அச்சிட்டுக் கொடுத்தவர் பி.ஆர். லித்தோ கிராப்ஸ் உரிமையாளர் திரு. பி.ஆர். செல்வராஜ் அவர்களுக்கு எங்களது நன்றி உரியதாகும்.

வணக்கம்.

ஆன்மசக்தி பி. வெங்கடேசன்

மலர் மணம்

இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ.பி.எல்
மலர்க்குழுத் தலைவர்

இறையுணர்வு என்பது தமிழ்ர்கள் வாழ்வில் இரண்டறக் கலந்த ஒன்று. கடல் கொண்ட தென்னாட்டிலும் சிதைவுற்ற சிந்துவெளி நாகரிகத்திலும் கடவுள் வழிபாடு இருந்ததைப் பல்வேறு அகழ்வாய்வுச் சான்றுகள் எடுத்தியம்புகின்றன. குறிப்பாகச் சைவ சமயம் மிகத் தொன்மையானது என்பது நிலைநாட்டப்பட்டதோர் உண்மை.

ஓதுவார் உள்ளத்தை உருக வைக்கும் திருவாசகத்தை ஆங்கிலத்திலேயே மொழிபெயர்த்த டாக்டர் ஜி.யு.போப் குறிப்பிடுவது "சைவம் தென்னிந்தியாவின் பழமையான வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட சமயம். ஆரியர் வருகைக்கு முற்பட்டு நிலவி வருவது. தமிழ் மக்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டது... வரலாற்றுக் காலத்துக்கு முன் திராவிட சமயமாகத் திகழ்ந்தது சைவமே."*

"காலமும் நாள்கள் ஊழி படையாமுன், ஏக உருவாகி நின்ற ஒருவன்" என்று அப்பர் பெருமான் (பதிகம் 14) குறிப்பிடுவது போல ஊழியின் தொடக்க காலத்திலேயே தோன்றியவன் சிவன். ஊழியைத் தொடக்கி வைத்தவனும் அவனே.

பின்னர் ஏற்பட்ட பல்வேறு கலப்பால் தமிழர்களின் சமயப் போக்கு பலவகைகளில் வேறுபட்டது. இருப்பினும் அகப் புறச் சமயங்களைக் கொண்டு தமிழை வளர்த்துக் கொண்டவன் தமிழன்.

முழுமுதற் கடவுளாகிய சிவனைக் கொண்டு இயல், இசை, நாடகம் என முத்தமிழைத் தோற்றுவித்துக் கொண்டவன் தமிழன். சமய நெறிகளில் பிற சமயத் தாக்குதல்களை ஏற்றுக்கொண்ட தமிழன் தன் மொழியை வளர்க்க எல்லா சமயங்களையும் பயன்படுத்திக் கொண்டான்.

இன்று உலகில் நிலவி வருகின்ற இலக்கியச் செல்வங்களைக் கொண்டு தமிழனை எந்தெந்தச் சமயம் எந்தெந்தக் காலத்தில் அதிகமாகப் பாதித்தது என்பதனை நாம் அறியக் கூடும்.

தங்க இலக்கியமான சங்க இலக்கியமே நமக்குக் கிடைக்கும் பழைய இலக்கியமாகும். மங்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியம் அக்காலத்தின் இலக்கண நூலாயினும் அதன் பொருளதிகாரம் அக்காலத் தமிழன் வாழ்வைப் படம் பிடித்துக் காட்டுகிறது. நிலத்தை ஐவகையாகப் பிரித்து ஒவ்வொரு நிலத்திற்கும் தனித் தனிக் கடவுளைக் காட்டுகிறார். சிவன், திருமால், பிரமன், முருகன், காளி போன்ற தெய்வங்களின் இயல்பு எடுத்துரைக்கப் பெறுகின்றது.

இந்நிலையில் சங்க இலக்கியத்திலுள்ள எட்டுத் தொகையைச் சார்ந்த தனிப்பாடல்கள் பல்வேறு சமயத்தைச் சார்ந்த புலவர்களால் பாடப்பெற்றிருப்பினும்கூட சமயப்பொது நோக்குடையனவாக அமைந்துள்ளன. சைவ சமயத்தைச் சார்ந்த நக்கீரர் போன்ற புலவர்கள், புத்த மதத்தைச் சார்ந்த இளம் போதியார், சைன மதத்தைச் சார்ந்த உலோச்சனார் ஆகியோர் இலக்கிய நயம் மிக்க பாக்களை இயற்றிய காலம் சங்க காலமேயாகும். சமணம் படைத்த சிலம்பும் பௌத்தம் படைத்த மேகலையும் காப்பியத் தமிழுக்கு வித்திட்டன. இவற்றில் சமண, பௌத்த சமயக் கருத்துக்கள் இடம் பெற்றிருப்பினும் மேலோட்டமாகக் காப்பியப் பண்பே தலை தூக்கி நிற்கின்றன.

* Saivism is the old prehistoric religion of South India, seeentially existing from pre - Aryan times, and holds sway over the herts of the Tamil people.. In a period quite antecedent to all historic data, the native Dravidian religion was a kind of caivism.

- **Dr. G.V. Pope,** Thiruvasagam Introduction.

சமயத்தைக் கொண்டே இலக்கியத்தைப் படைக்கும் பாங்கு திருமுறைக் காலத்தில் எழுகின்றது. சமயம் இல்லையேல் தமிழ் இல்லை, தமிழ் வளர்ச்சி இல்லையென்னுமளவிற்குப் பல்லவர், சோழர், பாண்டியர் காலமான இடைக்காலத்தில் தேவாரம், திருவாசகம் முதலான திருமுறைகளும் ஆழ்வாராதியர்களின் நாலாயிர திவ்ய பிரபந்தமும் முகிழ்கின்றன.

தேவார காலத்தில் அடங்கியிருந்த சமண, பௌத்த சமயப் பெரும் புலவர்கள் மீண்டும் காப்பிய காலத்தை உருவாக்குகின்றனர். கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் வித்திடப் பெற்ற சிலம்பும் மேகலையும் பின்னால் சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி என ஐம்பெரு, ஐஞ்சிறு காப்பியங்களாய் மலர்கின்றன.

இவையனைத்தையும் மிஞ்சும் வகையில் கம்பனுடைய இராமகாதை சைவம், வைணவம் என்ற இரண்டும் போற்றும் பெருங்காப்பியமாகத் தோன்றிய பின் காப்பிய காலத்திற்கு மணிமுடியாய் அது அமைந்து விட்டது.

திருமுறைகளையொட்டிச் சாத்திர நூல்கள் தோன்றி சைவ இலக்கியத்தின் தொடர்ச்சியை ஏற்படுத்தின. அதன்பின் சைவமும் வைணவமுமே புராணங்களாக, சிற்றிலக்கியங்களாக இந்த நூற்றாண்டு வரை தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறது.

இடையில் பட்டினத்தார், தாயுமானவர், அருட் பெருஞ்சோதி, வள்ளலார் என அருளாளர்கள் பலர் தோன்றித் தெய்வத் தமிழை வளர்த்தனர்-.

இவ்வருளாளர்கள் வளர்த்த தெய்வத் தமிழை ஆயும் மாநாடாக முதல் உலகத் தெய்வத் தமிழ் மாநாடு தமிழகத்தின் தலைநகரில் நடைபெறுகிறது. தெய்வத் தமிழ் மன்றம் சிறப்பாக நடத்தும் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளது. இம்மன்றத்தினைத் தோற்றுவித்துத் திறம்பட நடத்திவருபவர் **அருளாளர் 'ஆன்ம சக்தி' ஆசிரியர் திரு. வெங்கடேசன்** அவர்கள். அவர் இல்லையேல் தெய்வத் தமிழ் மன்றம் இல்லை, தெய்வத் தமிழ் மாநாடு இல்லையெனுமளவிற்குத் தொண்டாற்றி வருபவர். அவருக்குப் பக்க பலமாக பெருந் துணையாக இருப்பவர்கள் கலைமாச் செல்வர் **எஸ். டி. காசிராஜன்.** ஐ.ஏஎஸ் (ஓய்வு) அவர்களும், பெரும்புலவர் திரு. **இர. திருஞான சம்பந்தர்** அவர்களுமாவார்கள்.

தெய்வத் தமிழாகவே உருவாகி நிற்பவர் திரு. வெங்கடேசன் அவர்கள். இதன் பயனாகத் தான் இன்று உங்கள் கைகளிலே இந்த தெய்வத் தமிழ்த் தேனொழுகும் வாடா வண்ண மலர் திகழ்கின்றது. ஏற்றுங்கள், போற்றுங்கள், புகழ்பாடுங்கள்.





தெய்வத் தமிழ்மன்றம்

கொடிப் பாட்டு

தெய்வ மொழிதரும் சிவக்கொடியே,
தெய்வம் விளங்கும் தமிழ்க் கொடியே!
தெய்வ அருள் நிழல் படர் கொடியே, - என்றும்
தெய்வத் தமிழ் மன்றத் தனிக் கொடியே!

சிவப்பிடை மஞ்சள் நிறம் துலங்க
சேர்மஞ்சள் நடுவே ஓம் விளங்க
தவப்பயனாக எழும் கொடியே
தியாக வண்ண மணிக் கொடியே!

உலகப் பொதுமறை குறளாலே
ஒற்றுமை ஓங்கும் நிலையாலே
நிலவும் நல்லற முறையாலே
நிம்மதி வளர்க்கும் அறக்கொடியே!

உன் எழில் கண்டே புனிதமுறும்
உன் நிழல் அமர்ந்தே கனிவு பெறும்
என் மனக்கண்ணே! என்னுறவே
என்னுயிர்க் குயிராய் வளர் கொடியே!

ஓம்

தெய்வத் தமிழ் மன்றத்தின் ஓங்காரக் கொடி

கொடியின் வண்ணங்கள்

நடுப்பாகம் மஞ்சள். அப்பாகத்தின் அளவிலிருந்து கால்பாகம் மேலே சிவப்பு. அதே போன்று கால்பாகம் கீழே சிவப்பு. நடுப்பாகத்தின் மஞ்சளின் நடுவே ஒளிவிடும் ஓங்காரம் சிவப்பு.

கொடியின் விளக்கம்

கொடியின் மேல்பாகமும் கீழ்ப்பாகமும் சிவப்பு வண்ணத்தில் தோற்றமளிப்பது தியாகத்தைக் குறிக்கும்.

நடுப்பாகத்தில் இருக்கும் மஞ்சள் வண்ணம், தியாகத்தினால் பெறும் அருள் நிலையைக் குறிக்கும்.

மஞ்சளின் நடுவே சிவப்பு வண்ணத்தில் ஒளிவிடும் ஓங்காரம் அருள் நிலையைக் குறிக்கும்.

தெய்வ வணக்கம்

ஓம்

உலகம் யாவையும் தாம்உள ஆக்கலும்,
நிலைபெறுத்தலும், நீக்கலும், நீங்கலா
அலகு இலாவிளை யாட்டுடை யார் - அவர்
தலைவர், அன்னவர்க் கேசரண், நாங்களே. (ஓம்)


(மன்றத்தின் ஒவ்வொரு நிகழ்ச்சியின்போதும் முதலில்
தெய்வ வணக்கமாகப் பாடப்படுவது)

தெய்வ வாழ்த்து

வான் முகில் வழாதுபெய்க, மலிவளம் சுரக்க, மன்னன்
கோன்முறை அரசுசெய்க, குறைவிலாது உயிர்கள் வாழ்க,
நான்மறை அறங்கள் ஓங்க, நற்றவம் வேள்வி மல்க,
மேன்மை கொள்சைவநீதி, விளங்குக உலகமெலாம்.

(ஓம்)

(மன்றத்தின் ஒவ்வொரு நிகழ்ச்சியின் முடிவிலும்
தெய்வ வாழ்த்தாக பாடப்படுவது)



கோயிலின் பேர்

தெய்வத்தமிழ் என்பதெங்கள்
அன்னையின் பேர்!
தெய்வத் தமிழ் மன்றமவள்
கோயிலின் பேர்! - வாழி! (தெய்வ)

தெய்வத் தமிழ்ப் புலவனின் பேர்
திருவள்ளுவன் - அவன்
திருக்குறள் என்னுமதி
நிதியுள்ளவன்! வணங்கும் (தெய்வ)

உவமைக்கும் உவமை என
விளங்குபவன் - இந்த
உலகெலாம் தொழும்நிலையில்
துலங்குபவன்! (தெய்வ)

தவநிறை அறத்திற்கே
பொருள் சொன்னவன் - என்றும்
தெய்வம் போல் தனக்கு நிகர்
தானானவன் - வள்ளுவர் (தெய்வ)

வையத்தில் வாழ்வாங்கு
வாழ்ந்திடவும் - அதனால்
வானுறையும் தெய்வநிலை
சூழ்ந்திடவும்! (தெய்வ)

பொய்வந்த கலை ஞானம்
துறந்திடுவோம் - என்றும்
பொருள் நிறை குறளறத்தில்
சிறந்திடுவோம் - வாரீர்! (தெய்வ)

-புலவர் ஜகந்நாதன்

அனைத்துலக தெய்வத் தமிழ் மாநாட்டின்
அமைப்புக் குழுவினர்

கலைமாச் செல்வர் எஸ்.டி. காசிராஜன், ஐ.ஏ.எஸ் (ஓய்வு)
கௌரவத் தலைவர்

ஆன்மசக்தி பி. வெங்கடேசன்
நிர்வாகத் தலைவர்
நிறுவனர்
தெய்வத் தமிழ் மன்றம்

பெரும்புலவர் இர. திருஞானசம்பந்தர்
பொருளாளர்

அருள்விளக்கம் அண்ணாமலை அடிகளார்

சித்தாந்தப் புலவர் தா.ம. பார்த்தசாரதி

வித்துவான் சுலோசனா வெங்கடேசன். எம்.ஏ.,

டாக்டர் சு. வள்ளியம்மாள். எம்.ஏ.பி.எச்.டி.,

திரு. கே. பி. ரங்கராஜன்

புலவர் மு. வெங்கடேசன்

திரு. கோ. தனபால்

திரு. ஆர். சோமசுந்தரம்

நன்றிக்கு உரியவர்கள்!



திருமிகு. எஸ். ஆர். இராமநாதன் அவர்கள்

உரிமையாளர், ஸ்ரீநடராஜா விலாஸ் ஜூவல்லரி ஹால், சிதம்பரம் – 1.

பல்லாண்டு காலமாக அம்பலவாணரின் அடியார்களுக்கு அருள் தொண்டாற்றிவரும் அன்புத் தொண்டாற்றும் உயர் குடும்பத்தைச் சார்ந்தவர். தெய்வத் தமிழ் மன்றத்தின் பேராதரவாளர். மன்ற அன்பர்கள் நடராஜப் பெருமானை வழிபடுவதற்காக குழுவினரோடு செல்லும் போதெல்லாம் உபசரித்து உணவளித்து பாராட்டுபவர். இவருடைய தொண்டு மென்மேலும் தொடர பிரார்த்திக்கின்றோம்.



திருவருள் தொண்டர் திரு. கோ. தனபாலன் அவர்கள்,

இவர் கொண்டியம்பதியில் வாழ்ந்து வருகின்ற சிறப்பு வணிகராவார். தெய்வப் பண்பு மிக்கவர். தெய்வத் தமிழ் மன்றத்தின் கிளையை கொண்டியம்பதியில் நிறுவி, சிறப்பாக நடத்தியவர். அனைத்துலக தெய்வத் தமிழ் மாநாட்டு அலுவத்திற்கு தனது இல்லத்தின் மாடியை ஓராண்டு காலத்திற்கு மேல் இலவசமாகக் கொடுத்துதவிய பெருந்தன்மையும், பெரிய உள்ளமும் படைத்தவர். அவருக்கும் அவரது குடும்பதினருக்கும் தெய்வத் தமிழ் மன்றம் என்றும் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளது.

வாழ்க பல்லாண்டு!



திரு. ஆர். சோமசுந்தரம் அவர்கள்

இனிமையும் அன்பும் படைத்த தெய்வத் தமிழ்த் தொண்டர். அனைத்துலக தெய்வத் தமிழ் மாநாட்டு அலுவலகத்தில் தொலைபேசி கிடைக்காமல் திணறியபோது தமது தொலைபேசியை மாநாடு முடியும்வரை பயன்படுத்திக் கொள்வதற்காக வழங்கிய பெருந்தகையாளராவார்கள்! நீடு வாழ்க!



நமச்சிவாயம் வாழ்க!
நாதன்தாள் வாழ்க!



அருளாய் வந்தமைந்த
அழகுத்தமிழ் முருகன்!

உ

Sri Chandramouleeswaraya Namaha

Sri Sankara Bhagavadpadacharya Paramparagatha

HIS HOLINESS SRI KANCHI KAMAKOTI PEETADHIPATHI

Jagadguru Śri Sankaracharya Swamigal Srimatam Samasthanam

KANCHEEPURAM-631 502.

Camp:

சென்னையில் அமைத்து தெய்வ தமிழ் மன்றத்தை நடத்தி வந்து 9வது ஆண்டு விழா கொண்டாடும் தெய்வத் தமிழ்க் கல்வி - கலை - பண்பாட்டு அறக்கட்டளை வரும் பிப்ரவரி 23 - 24 - 25- 26 ஆகிய நான்கு நாட்களிலும் அனைத்துலக தெய்வத் தமிழ் முதல் மாநாட்டினை நடத்த விருப்பதும் ''தெய்வத் தமிழ்க் கருவூலம்'' என்ற சிறப்பு மலர் வெளியிட விருப்பதும் அறிந்து மகிழ்கிறோம்.

அன்னை பராசக்தியை 'பாஷா ரூபா'' என்று ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம் அர்ச்சிப்பதற் கேற்ப தமிழையே தெய்வமாகப் போற்றும் புலவர் பெருமக்களும் உண்டு.

எங்கும் நிறைந்து எல்லாம் வல்லதாகவுள்ள பரம் பொருளே. தனது ஐந்தொழில்க ளுக்கு ஏற்பவும் அன்பர்களுக்கு அருள்பாலிக்கவும் பலவேறு பெயர்களுடனும் பலவேறு உருவங்களுடனும் திகழ்கின்றது.

அவ்வப்பெயரிலும் உருவிலும் இறைவனைக் கண்ட அடியார்கள் பலரும் தங்கள் தங்களது அநுபவங்களையெல்லாம் பிறர் பலருக்கும் பயன்பட எளிய இனிய தமிழில் பாடிவைத்துள்ளனர்.

ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் நிறுவியுள்ள ஷண்மதங்களும் இப்பாடல்களில் ததும்பி வழியக் காணலாம். இவ்விறையே உடல் தொறும் ஆன்மாவாகவும் பிறவாகவும் விளங்கு வதை உணர்த்தும் பாடல்களும் எண்ணிலடங்கா.

இக்காரணங்களினாலேயே தமிழ் தெய்வத் தமிழ் என்றழைக்கப்படுகிறது. மனிதனை தேவநிலைக்கு உயர்த்தும் இவைகளது பெருமையை ஒவ்வொருவரும் உணர்வதால் உட லும் மனமும் தூயனவாகி விடுதலையிலும் (முக்தியிலும்) வேணவா பிறக்கின்றது. தெய்வ அருளால் ஆணவம் - காமம் - வெகுளி - மயக்கம் முதலான தீய பண்புகள் தேய்கின்றன. அருள் - பரோபகார சிந்தனை முதலான நற்பண்புகள் மலர்கின்றன. சமுதாய வாழ்வு இன்பமயமாகின்றது.

இம்முயற்சியில் ஈடுபட்டுள்ள இம்மாநாடு எல்லாம் வல்ல கருணைக்கடலின் நல்லாசி யினால் நன்று நடந்தேறுவதாக!

மலர் தமிழின் காலங்கடந்த தெய்வீக மணம் கமழ்விப்பதாக மலர்வதாக!

நாராயணஸ்ம்ருதீ:

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்
26 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

தருமபுரம்
மயிலாடுதுறை (அஞ்சல்) 609 001

" ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும்எம் ஆதியே. "

சைவ சமய முதற்குரவராகிய திருஞானசம்பந்தரை 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்' என்று அழைத்தனர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் தமிழே - சைவம், சைவமே தமிழ் என்பது முன்னோர் கண்டு தெளிந்த உண்மையாகும்.

தமிழ் இலக்கிய வளர்ச்சி வரலாறு என்பதே தமிழகத்தைப் பொருத்தவரை - சமயவளர்ச்சி வரலாற்றோடு பிரித்தறிய இயலாத ஒன்று. இவ்வுண்மை தெளிப்படாது நடத்தப்பட்ட பல உலகத் தமிழ் மாநாடுகளில் சமயத்திற்கு உரிய இடம் தரப்பெற வில்லை என்பது பலராலும் உணரப்பட்டது.

இக்குறைப்பாட்டைக் களைந்து உலகளாவிய நிலையில் 'அனைத்துலக தெய் வத்தமிழ் முதல் மாநாட்டை, சென்னையில் வரும் 1992 பிப்ரவரி மாதம் நான்கு நாள்கள் சிறப்பாக நடத்த முன் வந்துள்ள தெய்வத் தமிழ் கல்வி கலை பண்பாட்டு அறக்கட்டளையினர் தமிழ் மக்களின் பாராட்டுக்கு உரியவர்களாகின்றனர்.

மாநாடு சிறக்கவும், மாநாட்டு மலர் தெய்வமனம் கமழ்வதாக மலரவும், மாநாட்டை - முன்நின்று நடத்தும் அன்பர்களுக்கு நலம்பல பெருகவும் உலகம் மறந்த மேன்மைத் தெய்வத் தமிழ் உலகெலம் நிலை பெற்றுச் சிறக்கவும் செந்தமிழ்ச் சொக் கன் திருவருளைச் சித்திக்கின்றோம்.

உ

சிவமயம்

திருக்கயிலாய பரம்பரை
ஸ்ரீ - ல - ஸ்ரீ
சிவப்பிரகாசதேசிக பரமாசாரிய சுவாமிகள்
குருமகாசந்நிதானம்
திருவாவடுதுறை ஆதீனம்

திருவாவடுதுறை - 609 803
(தஞ்சாவூர் மாவட்டம்)

''நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப் பொழுதும் என்நெஞ்சின் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க''

உலக மக்களிடை மனித நேயமும் இன்ப நல்வாழ்வும் நிலவி நலன்கள் பெருக சென்னை, தெய்வத் தமிழ் மன்றம் அனைத்துலக தெய்வத் தமிழ் மாநாட்டினை முதன்மையாக நடத்துவது அறிந்து மகிழ்கிறோம்.

வாழ்க்கைக்கு இன்றியமையாத பொதுநெறி ஒழுக்கம், உயிர்க்கு உறுதி பயப்பது சமய அறநெறி, மக்கள், பண்புகளிற் சிறந்து நல்லவண்ணம் வாழவும், வாழ்வின் முடிந்த பயனாகிய பெரும் பேற்றினை அடையவும் அருளாசிரியன்மார்கள் நம் தெய்வத் தமிழ் மொழியில் அருளிய அருட்பெருநூல்கள் துணை நின்று உதவுவன. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்,' 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்', 'அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்' என்ற உலகு தழுவிய உயர் கோட்பாடு கொண்டு மேன்மையில் திகழ்வது நம் தமிழ்ச் சமயநெறி.

உலக ஒற்றுமைக்கும் அமைதிக்கும் வேண்டுவதாகிய உயர் நெறியினை அருளும் நம் தெய்வத் தமிழ்நூல் உண்மைகளை உலகறியச் செய்திடும் சிறந்த குறிக்கோளுடன் மாநாடு நடைபெறுவதும் மாநாட்டுச் சார்பில் சிறப்புமலர் வெளியிடப் பெறுவதும் பாராட்டுதற்குரியன.

நான்கு நாட்கள் நடைபெறும் மாநாட்டு நிகழ்ச்சிகள் இனிது நிகழ்ந்து அருளொளி சிறக்கவும், விழாமலர் 'தெய்வத் தமிழ்க் கருவூலம்' நன்கு மலர்ந்து தெய்வமணம் பரப்பிச் செம்மை நலம் பயக்கவும் அருள்தரு ஞானமா நடராசப் பெருமான் திருவடி மலர்களைச் சித்தித்து வாழ்த்துகிறோம்.

உ

சிவ சிவ

கயிலைமாமுனிவர்

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

அதிபர், ஸ்ரீ காசிமடம்

திருப்பனந்தாள் — 612 504

(தஞ்சை மாவட்டம்)



சென்னையில் அனைத்துல தெய்வத் தமிழ் முதல் மாநாடு 1992-ம் ஆண்டு பிப்ரவரி 23, 24, 25, 26-ஆம் நாட்களில் நிகழ்வதும், விழாத் தொடர்பாக சிறப்புமலர் வெளியிடப் பெறுவதும் அறிந்து மகிழ்ச்சி.

அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் விளங்கும் பரம்பொருளைப் பரவும் அன்பர்க்குத் தமிழ் சமயம் வகுத்துத் தந்த எளிய நெறிமுறைகளை நோக்குகையில் அதன் காலங்கடந்த பழமைக்குக் காரணம் அறிய முடிகிறது. 'யாவற்குமாம் இறைவற்கொரு பச்சிலை;' ''போதும் பெறாவிடில் பச்சிலையுண்டு;'' 'நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம் அன்பே மஞ்சன நீர்' - எனும் சான்றோர் வாக்குகள் நமது தெய்வத்தமிழ் நெறியின் சீர்மையை நன்குணர வழிகாட்டுவன ஆகும்.

அன்பு நெறியும் தொண்டு நெறியும் வழியாகச் செம்மாந்த வாழ்வு வாழும் தமிழ்க்குடியின் மேன்மையைப் புரந்து காத்திட உதவும் தெய்வத்தமிழ் முதல் மாநாடு இனிதே நிகழவும், 'விழாமலர்' செந்தமிழ்த் தேனைச் சுரக்கும் சொற்கோவைகளால் சிறக்கவும் செந்திற்கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.


சுபம்.

சிவசிவ

வானமாமலை மடம் வழங்கும்
வாழ்த்துரை

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



நமது மாநில த்தலைநகராம் சென்னை பட்டினத்தில் 1992 பிப்ரவரி 23 முதல் 26 வரை நான்கு நாட்கள் நடக்க இருக்கும் அனைத்துலக தெய்வத்தமிழ் முதல் மாநாடு நடக்க இருப்பது கண்டு சந்தோஷம் அடைகிறோம். இது ஒரு நல்ல முயற்சி. இது போல் அநேக மாநாடுகள் தமிழகம் எங்கும் நடைபெற்று தெய்வத்தமிழ் மணம் எங்கும் கமழ நமது மடம் அரங்கநகரப்பனையும் ஸ்ரீஹம்ஸகா கோதா ஸமேத தெய்வநாயகனையும் பிரார்த்தனை செய்து ஆசீர்வாதம் செய்கிறோம். அநேக மங்களாஸாஸனங்கள்.

(signature)



உ

சிவமயம்

ஸ்ரீ தொண்டை மண்டலாதீனம்,

சீலத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் மடம்,

57, உபதலைவர் பரமசிவம் தெரு, : : பெரிய காஞ்சிபுரம்-631 502.

''வடமொழியும் தென்தமிழும் மறைகள் நான்கும் ஆயினான்காண்'' (அப்பர்)

தழற்புரை நிறக்கடவுள் தந்த தமிழ் தந்தான்'' (அகத்தியப் படலம் - கம்பர்)

''வட மொழியைப் பாணினிக்கு வகுத்தருளி அதற்கு இணையாத்
தொடர்புடைய தென்மொழியை உலகம் எல் தொழுது ஏத்தும்
குடமுனிக்கு வலியுறுத்தார் கொல் ஏற்றுப் பாகர்''

(சிவ ஞான சுவாமிகள்)

இந்த வாக்குளால் தமிழானது தெய்வ மொழிகளுள் ஒன்று என்பதும், அதனை உலகுக்கு வழங்கியவர் சிவபிரரான் என்பதும் உணரப்படும்.

இத்துணைச் சிறப்புடைய தமிழ் மொழியில் சைவநாயன்மார்களும்; ஆழ்வாரா திகளும், பின்னர்த் தோன்றிய அருளாளர்களும் பாசுரங்கள் பலபாடி இறைவனைப் பரவிப் பணிந்தனர். ஆகவே அவை எல்லாம் தெய்வப் பாக்கள் ஆகும். அவற்றை நாளும் ஓதி வழிபாடாற்றி நலம் பெறுவோர் எண்ணிலர் என்க!

''சென்னை தெய்வத் தமிழ்க் கல்வி கலை பண்பாட்டு அறக்கட்டளை'' என்னும் அமைப்பு ஒன்று நிறுவப் பெற்று

''சேம முற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்''

''தேமரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்''

என வரும் தேசியகவி பாரதியாரின் கட்டளையினைச் செயலாக்கி வருவது அறிந்து மகிழ்கின்றோம்.

இந்த அறக் கட்டளையினர் இதுபோது வரும் பிப்ரவரித் திங்களில் அனைத்தல கத் தெய்வத் தமிழ் மாநாடு ஒன்று நடத்த முயற்சி மேற்கொணட்ருப்பதும் பாராட்டுக் குரிய செயலேயாகும். இம்மாநாட்டின் குறிக்கோளும் 'தெய்வத் தமிழ்க் கருவூலம்' எனும் சிறப்பு மலர் வெளிவந்திருப்பதும் பேரணி ஊர்வலமும், தமிழ் நாட்டுத் தக்கவர்கள் பற்பல வகையில் இதில் தொண்டாற்ற இணங்கி இருப்பதும், உவகை யூட்டுகின்றன. மாநாட்டின் திட்டமே அதன் வெற்றிக்கு அடிகோலுவதாக உள்ளது என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

மாநாடு எல்லா அங்கங்களுடன் சிறப்பாக நடைபெறவும், மலர் நன்கு மலர்ந்து நாற்றிசையும் மணம் பரப்பவும், இவற்றால் தெய்வத் தமிழ் வையத்துள்ள முன்னர்ப் போல அரியாசனத்து அமரவும், இதில் பங்கு பற்றும் அனைவரும் அனைத்து நலங்க ளுடன் நீடினிது வாழவும் திருவருளைச் சித்திக்கின்றோம்.



Telegrams : "AADHEENAM" Madurai.
Phone : 22793

HIS HOLINESS

Sri-la-Sri Arunagirinatha
Sri Gnanasambanda Desika
Paramachariya Swamigal

292nd GURUMAHA SANNIDHANAM
&
AADHEENA KARTHAR
MADURAI AADHEENAM

மதுரை ஆதீனம்
சைவமும் தமிழும்
தழைத்தினி தோங்குக.

70, South Avani Moola Street,
MADURAI-625 001 (S. INDIA)

"ஆன்மசக்தி"
திரு. பி. வெங்கடேசன்,
46, பெருமாள் கோவில் தெரு,
கொண்டயம்பதி
சென்னை — 600 079.

16/01/1992.

எல்லாம் வல்ல எம்பெருமானது திருவருளால் எல்லா நலன்களும் எய்துக!

எழுச்சி மிக்க இந்த மாநாடு, சமய உணர்ச்சியை ஊட்டத் தக்கதாய், அதன்மேலும் இச் சமுதாயம் வளர்ச்சி அடையக் கூடியதாய், உயர்ச்சி பெற்றிடத் திருவருள் பாலிக்குமாறு எமது இறைத் தாய் தந்தையாகிய சிவபெருமானைப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றோம்!!

எல்லோருக்கும் ஆசீர்வாதம்!!

ஸ்ரீ ஞானசம்பந்த தேசிகர்
16/01/92.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

வழங்கியருளும் வாழ்த்துரை

இனிய அன்புடைய நமது ஆன்ம சக்தி பி.வெங்கடேசன் அவர்களுக்கு, எல்லா நன்மைகளும் பெருக, திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

அனைத்துலக தெய்வத் தமிழ்முதல் மாநாடு நடைபெறும் இனிய செய்தி மகிழ்வைத் தருகிறது. பண்டைக் காலத்தில் தமிழுடன் இறைநெறியும் நன்னெறியும் அந்நியமின்றி ஒன்றாக இருந்தது. அதனால்தான் ''நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும் ஞான சம்பந்தன்'' என்று நம்பியாரூரரும் ''செழுந்தமிழ் வழக்கு'' என்று சேக்கிழாரும் அருளிச்செய்தனர். உலக மொழிகளில், பக்திக்குரிய மொழி தமிழ் என்றே மொழி நூலறிஞர்கள் கூறுகின்றனர். பண்சுமந்த தமிழ்ப் பாடலினைப் பரிசாகப் பெற இறைவன் கொற்றாளாக வந்த வரலாறு வேறு எந்த மொழியில் உண்டு? தமிழ், உலகந்தழீஇய உணர்வுகளை விளக்கும் இலக்கியம் படைத்த மொழி, நாடு, மொழி, இனம், சாதி, குலம், சமயம் இவைகளைக் கடந்து உலகந்தழீஇய சிந்தனை தமிழுக்கு உண்டு.

''தென்னா டுடைய சிவனே போற்றி!
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி!''

என்ற திருவாசக அடிகள் நினைந்து நினைந்து ஓதத் தக்கவை. இந்த நூற்றாண்டில் இறை நெறியின் மூலம் உலகம் ஒன்றுபடாது போனால் உலகத்தைக் காப்பாற்ற யாராலும் இயலாது. இந்த உலகத்துக்கு அம்மையப்பராக விளங்கும் பெருமான் திருவருளால் ஒருலகம் காண்போம்! பொது நெறி காண்போம்! மாநாடு இந்த வகையில் பல ஆக்க வழியிலான முடிவுகளை எடுத்து எதிர்காலத்தின் சிறப்புக்கு வித்திடும் என்று நம்புகின்றோம்.

மாநாடு இனிதே நிறைவெய்த, திருவருளைச் சித்தித்து வாழ்த்துகின்றோம்.

இன்ப அன்பு

Om Sakthi



ADHIPARASAKTHI SIDDHAR PEETAM

MELMARUVATTUR 603 301 Tamilnadu INDIA

Phone : Acharapakkam 87 & 99

Arulthiru BANGARU ADIGALAR
Founder President

அனைத்துலகத் தெய்வத் தமிழ் மாநாடு நடத்த இருப்பது கேட்டு எமக்கு மனநிறைவும், மகிழ்ச்சியும் ஏற்படுகின்றன.

ஆன்மீக உணர்வு குறைந்து போனதால்தான் இன்று எங்கும் கொதிப்பும், கொந்தளிப்புகளும், தீவிரவாதங்களும் பெருகி வருகின்றன.

மனிதாபிமானம், அன்பு நெறி, அருள்நெறி என்ற உணர்வுகள் படித்த மக்களிடையே ஓங்கி வளர வேண்டும். ஆன்மீகம் கலவாத எந்த முன்னேற்றமும் நிலைப்பதில்லை. தமிழ்நாட்டு மக்களிடையே சாதி, சமயம், மொழி, இனம் என்ற எல்லைகட்கு அப்பாற்பட்ட ஆன்மிக ஒற்றுமைக்காக எம் சித்தர் பீடம் இருபது ஆண்டுகளாக உழைத்து வருகிறது.

எங்கள் உழைப்பு தற்போது பலன் தந்து வருகிறது. எங்கள் எதிர்பார்ப்புக்குத் தக்கவாறு தாங்கள் நடத்தவுள்ள அனைத்துலக தெய்வத் தமிழ் மாநாடும் இருப்பது அறிந்து எமக்கு மகிழ்ச்சி. உங்கள் பணி சிறக்கவும் மாநாடு வெற்றி பெறவும் அன்னை ஆதிபராசக்தி அருள் பாலிப்பாளாக!

ஓம் சக்தி!

பங்காரு அடிகளார்.



ஆன்மசத்தி அன்பர் அரிய முயற்சியினால்
பான்மை அனைத்துலகப் பாக்கியமாம் - மேன்மைமிகு
தெய்வத் தமிழ்போற்றும் சீராரும் மாநாடு
செய்தார் மிகவும் சிறப்பு.

தெய்வத் திமிழதனைத் திக்கெல்லாம் கேட்டுணர
உய்யும்மா நாடொன்றுவந்துசெயல் - வையமிசை
உண்மைநெறி மக்கள் உணரத் துணையாகும்
வண்தமிழ்சீர் வாழ்க வளர்ந்து.

தமிழ்நாட்டின் ஞானியர்கள் தந்த அருள்நூல்
அமிழ்தம் அகிலம் அருந்த - உமிழ்திரைப்பார்
போற்றும்மா நாடு பொலிவு பெறநடத்தல்
ஏற்றம் மிகஅமைந்த தே.

சித்தர்களும் ஞானிகளும் செய்யதமி ழாற்செய்த
வித்தகமார் ஞானநூல் மேதினியில் - உத்தமர்கள்
சொல்லச் செவிமடுக்கத் தோன்றும்மா நாடுகுகன்
நல்லருளால் ஓங்க நயந்து.

அனைத்தாம் உலக அணியாகும் தெய்வ
இனித்ததமிழ் மாநா டினிதே - தனிச்சிறப்புப்
பெற்று விளங்கிப் பெரிதும் பயன்அமைய
நற்றகைய வேலனரு ளால்

— சுந்தர சுவாமிகள்.

கௌமார மட ஆலயம் - கோவை

தொலைபேசி : 26479

தவத்திரு. சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரி

பேரூர் (அ. நி.) - கோயமுத்தூர் - 641 010.

உயர்தனிச்செம் மொழியாகி உலகத்தில் பழமைமிகு
சிலமொழியுள் முதலாகித் திருக்குறளைத் தரும்தமிழை
பலர்போற்றத் தொண்டாற்றும் பான்மையினர் தெய்வநெறிப்
புலமைவளர்ந் திடப்பணிகள் புரிகின்றார் சென்னையினில்
தெய்வநெறி தமிழ்ப்பண்பு சேர்ந்தகலைப் பண்பாடு
உய்வதற்காம் அருட்பாடல் உணர்வு மக்களிடம் ஓங்கச்
செய்பணிகள் பலவாற்றும் செம்மையினர் அயல்வழக்கின்
பொய்மை யகன்றிடச் சான்றோர் போற்றும் அருட்பணிசெய்வார்

இலக்கண இலக்கியச் சிறப்பால் இனிதான வாழ்க்கைநெறி
புலப்படுத்தும் தமிழ்மரபைப் போற்றி அறிவுரை பகர்ந்து
நலம்பொருந்து ஆன்மச நயந்தும் வெங்கடேசன் அன்பால்
பலருதவியுடன் தெய்வத் தமிழ்ப் பண்பைப் பரப்புகின்றார்.
செந்தமிழ் நாட்டுயர் கோயில் திருவுருவம் தனைப்போற்றி
வந்தனைசெய் அருட்பாடல் வாழ்க்கையினில் நிறைவுதரும்
சிந்தனைக்கு விருந்தாகும்; செம்மைநலம் தரும்அதனைத்
தந்திடவே தெய்வத் தமிழ் மாநாடுதனைக் காண்பார்.

மாநாடு சிறந்திடவும் வளர்தமிழில் சிறப்போங்கித்
தேனாய் இன்னமுதமாய் தித்திக்கும் தெய்வநலம்
ஊனார்ந்த வாழ்வுக்கு உவகைதர மாநாடு
வானார்ந்த புகழ்பெருக வளந்தரவே வாழ்த்துகின்றோம்.

அன்புள்ள
சாந்தலிங்க அடிகளார்



Arulthiru Dr. Sayimatha

SIVA BRINDA DEVI

President- World Women Organisation

☎ **2342**

Thilagavathiar Thiruvarul Adheenam

Machuvadi, PUDUKKOTTAI-622 001

Tamil Nadu, South India.

''தழற்புரைச் சுடர்க் கடவுள் தந்ததமிழ் தந்தான்'' என்று கம்பர்.

''இறைவன் தந்த தமிழை, அகத்தியன் தந்தான்'' என்றும்.

''என்றுமுள தென்தமிழ் இயம்பி

இசைகொண்டான்'' என்றும் கூறுவதிலிருந்து தெய்வத் தமிழின் காலம், தொன்மையானது

என நாம் அறிய முடிகின்றது.

''குறுமுனிக்கும் தமிழுரைக்கும்

குமர முத்தம் தருகவே'' எனவும்,

''சங்கத் தமிழின் தலைமைப் புதல்வா

தாலோ தாலேலோ'' என்ற பிள்ளைத் தமிழ்ப் பாடல்களிலிருந்து, அகத்தியனுக்குத் தமிழைத் தந்தவன் திருமுருகன் எனவும் உணரமுடிகின்றது.

''வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்து'' மக்கள் ஐந்து கண்டங்களிலும் வசிக்கின்றனர். இவர்கள் அனைவரும் தெய்வத் தமிழை அற்றிய, உணர இத்தெய்வத் தமிழ் முதல் மாநாடு வழி கோலும் என நாம் நம்புகிறோம். தெய்வத் தமிழ் திக்கெட்டும் பரவச் செய்யும் பாங்கறிந்து நாம் தெய்வத்தமிழ் முதல் மாநாடு வாழ்க; இதன் தொண்டுகள் வளர்க; நடத்தும் நல்லன்பர்கள் உயர்க; இவர்கள் எண்ணங்கள் சிறக்க, என அம்பலக் கூத்தன் அடிகளை வணங்கி, நல்லாசிகள் பல்லாயிரம் கூறுகின்றோம்.

அன்புடன்

டாக்டர் சாயிமாதா சிவ பிருந்தாதேவி

திலகவதியார் திருவருள் ஆதீனம்

உ
முருகா
"வேலை வணங்குவதே வேலை"

தொலைபேசி :
565666





கிருபானந்தவாரி
107, சிங்கண்ண செட்டித் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 600 002

வாழ்த்து
நேரிசை வெண்பா.

சாந்தமிகு செல்வத் தமிழ்ச்சோ யுகம்
சேர்ந்தன் பெருமான் இருபதாண் — வாய்ந்த
நாமமெனாம் எய்தியே நற்பெருமை செய்து
நாமதனில் வாழ்க நிலைத்து

அன்பன்
கிருபானந்த

ஊரன் அடிகள்
GORAN ADIGAL



தொலைபேசி Phone : 82
வடலூர் } 607 303
VADALUR
தென்னார்க்காடு மாவட்டம்
SOUTH ARCOT DISTRICT

மலருக்கு ஆசிச்செய்தி

அனைத்துலக தெய்வத் தமிழ் மாநாடு, சைவம், வைணவம், சமரச சன்மார்க்கம் ஆகிய மூன்றையும் சேர்த்துத் தமிழ்ப் பண்பாட்டை முழுமையாகப் பிரதிபலிப்பதாய் அமைந்திருக்கிறது.

பழந்தமிழர்க் கொள்கையே சைவ சமயம் என்பார் மறைமலையடிகள். சங்ககாலத் தமிழகத்தில் சைவமும் இருந்தது. வைணவமும் இருந்தது. தமிழ்நாட்டு சமயங்கள் சைவமும் வைணவமுமே. நாயன்மார், ஆழ்வார் ஆச்சாரியர் காலங்களில் இவை நன்கு வளர்ந்து தழைத்தன. சைவத்தில் சன்மார்க்கம் பழைமையாகவே உண்டு. அப்பழைய சன்மார்க்கத்தில் புதிய சமரச சுத்த சுத்த சன்மார்க்கமாக விளக்கியருளினார் வள்ளளார் இராமலிங்க சுவாமிகள். அன்பர் ஆன்மசக்தி வெங்கடேசன் இவை எல்லாவற்றையுமே சேர்த்து தெய்வத் தமிழ் மன்றம் என்பதன் மூலம் பரப்பி வருவது மகிழ்ச்சிக்குரியது. அணு சக்தியிலும் வலியது ஆன்ம சக்தி. ஆன்ம சக்தி என்றும் திங்களிதழைத் தெய்வத் தமிழ் மன்றம் நடத்துவதும் மகிழ்ச்சிக்குரியது. எல்லாவற்றிலும் சிறப்பாக இப்போது உலகளாவிய வகையில் அனைத்தலக தெய்வத் தமிழ் முதல் மாநாட்டை நடத்துவது மிகவும் மிகழ்ச்சிக்குரியது.

இது தமிழ்த் தொண்டு, சைவத் தொண்டு, வைணவத் தொண்டு, சன்மார்க்கத் தொண்டு.

தமிழ் - சைவம் - சனமார்க்கம் இம்மூன்றையும் நன்கறிதல் இந்நாளைய தேவை. அதைப் பூர்த்தி செய்வது தங்கள் அரிய பெரிய மாநாடு.

வாழ்க வளர்க

19/7/91

இலண்டன் மெய்கண்டார் ஆதீனம்

LONDON MEIKANDAAR AADHEENAM

வாழ்த்துரை

We heartily congratulate the organising committee of the First international Divine Tamil Conerence in Madras: 23 - 26 Feb., 1992 and pray to the Almighty to shower His Blessings for the success of this unique and historic event.

Tamil Divine Bhakti literature spanning several centuries from Valluvar to Vallalar not only reflects our great religions and cultural heritage but also underlines our search for Truth based on the cardinal four - fold values of Aram, Porul, Inpam and Veeu. It is well known that the Tamil Language has been acclaimed as the language of religious Bhakti, unequalled for its divine content and beauty of expression in any other language in the world, Let us be proud of this noble mother tongue of ours and preserve it for posterity.

It is our hope that the conference will shed new light on neglected, areas such as the Tamil Siddhars, and Sumerian - Indus - Dravidian religious ethos.

We wish the conference all success.

அன்பேசிவம்,

சிவநந்தி

உ



ஓங்காரம்

உலக அமைதிக்காக ஒரே இரவில் ஒருகோடி
சிவ பஞ்சாட்சர ஜெப மகாவேள்வி.

சுவாமி ஓங்காரநந்தா
108, கஜபூஜை ஸ்தாபகர்
தலைவர் ஓங்கார ஆஸ்ரமம்

ஓங்காரம்
18, நடுத்தெரு,
சோலை நகர்,
பாண்டிச்சேரி-605003.

அன்பு பி.வெங்கடேசன் அவர்களுக்கும் மற்றும் இம்மாநாட்டிற்குச் சிறப்புப் பணியாற்றும் தவச்சீலர்களுக்கும் அனேக ஆசிகள்.

உலகிலேயே இதுவரை நடந்திராத இப்புனித அனைத்துலக தெய்வத் தமிழ் முதல் மாநாடு மிகவும் சிறப்புடையதாகும். திருமூலர், தாயுமானவர், வள்ளலார், சித்தர்கள் போன்றோர்களின் ஆன்மீகக் கருத்துகள் உலகெங்கும் பரவ வேண்டியது அவசியமாகும். இவைகள் பரவினால் உலகில் வன்முறை நீங்கும். சத்துவ குணம் பெருகும். இறைவன் திருவருளை மக்கள் பெறுவார்கள்.

இம்மாநாட்டின் குறிக்கோள் மாநாட்டின் மூலம் நிறைவேறி உலகெங்கும் தெய்வீகத் திருவருள் பரவி உயிரினங்கள் எல்லாம் என்றும் ஆனந்த அமைதியோடு வாழ எல்லாம் வல்ல திருச்சிற்றம்பலத்தானை ஆழ்ந்து சிந்தித்து ஆசி வழங்குகிறோம்.

இம்மாநாடு பூரண வெற்றிபெற யாம் வாழ்த்துகிறோம்.

சந்தோஷம்

திரு. M. கோபாலகிருஷ்ணன்

தலைவர்: இந்தியன் வங்கி



வாழ்த்துரை

ஓர் இனமக்கள் பேசும் மொழிக்கு மட்டும் இலக்கணம் வகுக்காமல் அம் மக்கள் வாழும் வாழ்க்கைக்கும் இலக்கணம் வகுத்த பெருமை உலக மொழிகளுள் தமிழ் மொழி ஒன்றுக்கு மட்டுமே உண்டு. மனித மனத்தின் மாசை அகற்றி, பண்புடையவனாய், ஒழுக்கமுடையவனாய், பிறர்க்குப் பயன்படுபவனாய் வாழ வழிகாட்டிய தமிழ் இலக்கியங்கள் பல. சங்க இலக்கியங்கள் முதல் திருக்குறள் வழியாக பிற்கால திருஅருட்பா வரை எண்ணற்ற தெய்வத் தமிழ் நூல்கள் ஒப்பற்ற தெய்வ நெறியை நமக்கு உணர்த்தி நிற்கின்றன. அந்த இலக்கியங்கள் முக்கியமாகக் காட்டும் நெறி அன்பு.

"அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே
அன்பெனும் குடில் புகும் அரசே"

என்பது அருட்பா வாக்கு. இப்படி அன்பின் வழியாலன்றி நல் வாழ்க்கை கை கூடாது என்றும், பேரின்ப வாழ்க்கையை அடைய முடியாது என்றும் உலகம் முழுமைக்கும் பொதுவான கருத்துக்களை அழுத்தமாகச் சொன்ன தெய்வத் தமிழ் நூல்களை உலகெங்கும் மேலும் பரவிடச் செய்யும் ஒரு உன்னத குறிக்கோளுடன் நடத்தப்படும் அனைத்துலக தெய்வத் தமிழ் மாநாடு இன்றைய சூழ்நிலையில் மிகவும் பாராட்ட வேண்டியது. அதுவும் இந்த முதல் மாநாடு சமய சன்மார்க்க சமரச மாநாடாக நடத்தப்படுவது மேலும் ஒரு சிறப்பாகும். மாநாடு முழு வெற்றியடையவும் மாநாட்டை ஒட்டி மலரப் போகும் **'தெய்வத் தமிழ் கருவூலம்'** சிறப்புடன் அமையவும் என் வாழ்த்துக்கள்.

அன்புடன்,

ம. கோபாலகிருஷ்ணன்



திருமலைக்கேணி

ஸ்ரீலஸ்ரீ காமாட்சி மௌனகுருசாமிகள் மடம்,

செங்குறிச்சி-624 804. (P.O) திண்டுக்கல்.

முத்துக்கோபாலகிருஷ்ணசாமி மடாதிபதி.

உயர்திரு அனைத்துலகத் தெய்வ தமிழ் மன்றத்தின் நிர்வாக தலைவர் ஆன்ம சக்தி பி.வெங்கடேசன் அவர்கட்கு.

எம்.பெருமானின் கருணையினால் தாங்கள் எடுத்துக் கொண்ட முயற்சியினைப் பாராட்டுகிறோம். தங்களது முயற்சி வெற்றி பெற வாழ்த்துகிறோம்.

தெய்வத் தமிழ் மன்றம் எல்லாம் வல்ல எம்பெருமான் அருளால் சீரும் சிறப்பு மாக மேலோங்கி வளர, ஆன்மீக பெருமக்களை ஒன்று சேர்க்க வளர வேண்டுமாய் எம்பெருமானைப் பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு

உ

ஜெயதுர்க்கை

ஸ்ரீலஸ்ரீ துர்க்கை சித்தர்
62C, நல்லதம்பி தெரு,
பம்மல்-சென்னை-75.



ஜெயதுர்க்கா பீடம்
சாக்த மந்திர நெறிக்கழகம்

க்ஷேமம் வர்ஷய.

அனைத்துலக தெய்வத் தமிழ் மாநாடு நடைபெறுவது குறித்து மிகவும் அகமமிழ்கிறோம்.

தெய்வமும் தமிழும், உயிரும் உடம்பும் போன்று இணைப்பிரியாது இரண்டறக் கலந்தவையாகும்.

உடலாம் தமிழை ஓவாது ஓம்புவதன் மூலம், உயிராகிய தெய்வம் நன்கு ஒளிவிட்டுப் பிரகாசிக்கச் செய்யும் உமது பணி உன்னதமான ஓர் உயர்பணியாகும்.

''என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே''

என்பார் திருமூலநாயனார்.

அவ்வழியொழுகி, தமிழ்த் தொண்டே ஆன்மீகத் தொண்டாய் ஆற்றும் உமதுபணி வளர்பிறையென வளரவும், தெய்வத் தமிழ் மாநாடு நன்முறையில் வெற்றியெய்தவும், ஞானப் பாலூட்டி நற்றமிழ் ஓங்கச் செய்த அருளாம்பிகை, அன்னை ஸ்ரீதுர்க்கா தேவியை வந்தித்து, ஆசீர்வதிக்கின்றோம்.

ஓம் நமோ ஜெயதுர்க்கா!

ஆசியுடன்,
ஸ்ரீ துர்க்கைச் சித்தர்

வாழ்த்துரை

மக்கள் நீதிபதி, மாண்பமை,
திரு. என்.கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள்,
சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி (ஓய்வு).

அனைத்துலக தெய்வத் தமிழ் முதல் மாநாடு சென்னையில் நடைபெறுவதை எண்ணி நான் மகிழ்ச்சி அடைகிறேன். நமது தமிழ் பெருமக்கள் உலகில் பல பகுதிகளிலே (மலேசியா, சிங்கப்பூர், இந்தோஷியா, அமெரிக்கா, ஆப்ரிக்கா, சினிடால் முதலிய இடங்களில்) பல்லாண்டு காலமாக வாழ்கிறார்கள். இருப்பினும் நமது இந்து தர்ம தமிழ் நாட்டு ஞானப் பெருமக்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி மரபுகளையும், பாரம்பரியத்தையும் போற்றி வருவதைக் காண்கின்றோம். இந்நிலையில் நமது இந்து தர்மத்தை காத்து வரும் தமிழ் மக்கள் ஒன்று சேர்ந்து தங்களுடையை கருத்துக்களை அளவளாவி பிறருடன் பகிர்ந்து கொள்ளும் அரிய வாய்ப்பினை இத்தெய்வத் தமிழ் முதல் மாநாடு அளிக்கும் என்பதில் ஐயமில்லை.

சகல மதங்களும் கூறும் நல்ல கொள்கைகள் அனைத்தும் ஏற்கனவே நமது இந்து மதத்தில் உள்ளன. பல்லாயிரக்கணக்கான வருடங்களாக அந்தந்த கால ஞானிகள், முனிவர்கள், அருளாளர்கள் அனுபவத்தின் நிதர்சனமான சத்திய தர்மங்களின் மொத்த வடிவமாக உருவாக்கப்பட்டதே இந்து மதம். தமிழ்நாட்டு ஞானப் பெருமக்களின் எண்ணற்ற தெய்வத் தமிழ் பாடல் மூலமாக உலக அமைதிக்கும், ஒற்றுமைக்கும் வழிகோலியிருக்கிறார்கள்.

ஆகவே, இத் தெய்வத் தமிழ் முதல் மாநாடு உலகத்திலுள்ள அனைத்துத் தமிழ் மக்களை ஒன்று சேர்த்து அருளாளர்களின் வழி நடப்பதற்கு பேருதவியாகவிருக்கும் என்பதோடு, இம்மாநாடு நடைபெறுவதற்கு செயல்படும் அனைத்து அன்பர்களுக்கும் சான்றோர் பெருமக்களுக்கும் எனது மனமார்ந்த நல் வாழ்த்துக்களோடு இத் தெய்வத் தமிழ் முதல் மாநாடு செம்மையாக நடைபெற இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துரை

ப.சிதம்பரம்

'MINISTER OF STATE FOR COMMERCE'
INDIA
NEW DELHI - 110 011.
பிப்ரவரி 3, 1992.

அன்புள்ள திரு. வெங்கடேசன் அவர்களுக்கு,

தாங்கள் எழுதிய கடிதம் கிடைக்கப்பெற்றேன். மிக்க நன்றி.

மாநாடு சிறப்புடன் நடந்தேற எனது இதயம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்களன்புள்ள,

(ஒப்பம்) ப.சிதம்பரம்.



இராமவீரப்பன்
கல்வி அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை-600 009

வாழ்த்துச் செய்தி

தெய்வத் தமிழ்க் கல்வி, கலை பண்பாட்டு அறக்கட்டளை, அனைத்துலக, தெய்வத் தமிழ் முதல் மாநாடு நடத்துவதை அறிந்து பெரிதும் மகிழ்கின்றேன்.

என்னை நன்றாய் இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாய்த் தமிழ் செய்யுமாறே

என்னும் வாக்கிற்கேற்ப இறையுணர்வோடு, இனிய தமிழ் வளர்த்த அடியார்களின் அருமை, பெருமைகளைப் போற்றிப் பரவ இம்மாநாடு பெருந்துணைபுரியும் என்பதில் ஐயமில்லை. இறைவனையே, ஏழிசையாய் இசைப்பயனாய் கண்ட மரபு நம் மரபு. இறைவன் எழுந்தருளியிருக்கும் கோயில்களைச் சீரமைக்கவும், நிர்வாகத்தைச் செம்மைப்படுத்தவும் தமிழ்நாட்டில் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் தலைமையில் அமைந்துள்ள தமிழக அரசு, தனிக்கவனம் செலுத்தி அரும்பணியாற்றி வருகிறது.

தொண்டர் சீர் பரவும் இம்மாநாட்டில் 'தெய்வத் தமிழ்க் கருவூலம்' எனும் பெயரில் மலர் வெளியிடுவது பெரிதும் பாராட்டுக்குரியது. வரவேற்கத்தக்கது.

மாநாட்டின் நிகழ்ச்சிகள் மனம் மகிழத்தக்கவகையில் அமையவும், வெளியிடவுள்ள மலர் ஆன்மீக மணம் பரப்பும் அருள் மலராகப் பொலியவும் வாழ்த்துகிறேன்.

அன்புள்ள,



DR. C. ARANGANAYAGAM
MINISTER FOR LABOUR
SECRETARIAT
MADRAS-600 009

வாழ்த்துச் செய்தி

அனைத்து உலக "தெய்வத் தமிழ் முதல் மாநாடு" சென்னையில் நடைபெறவிருப்பது அறிந்து மிகவும் மகிழ்கின்றேன். தமிழ்நாட்டில் ஆதிநாள் தொட்டு இன்று வரை நம் இனிய தமிழ் மொழி ஞானப் பெருமக்கள் பலரால் போற்றி வளர்க்கப்பட்டு வருகிறது.

மருத்துவம், அறிவியல், தத்துவம் போன்று அனைத்துத் துறைகளிலும் தமிழ் சீரார்ந்த சிறப்புப் பெற்றதோடு மட்டுமல்லாமல் ஞானப் பெருமக்களின் கீர்த்தியால் தெய்வத்தமிழ் ஓங்கி உலகளந்து நிற்கிறது. மாநாடு சிறப்புற நிகழவும், தேறும் கருத்துக்கள் தெய்வத் தமிழை மேலும் சிறப்பிக்கும் வழிவகைகளைக் காட்டவும் என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கள் அன்புள்ள,

ஓம்.........

செ. அரங்கநாயகம்.



டி. வி. வெங்கட்டராமன், இ.ஆ.ப.
தலைமைச் செயலர்
தமிழ்நாடு அரசு

தலைமைச் செயலகம்
சென்னை-600 009

வாழ்த்துச் செய்தி

அனைத்துலகத் தெய்வத் தமிழ் முதல் மாநாடு சென்னையில் நடைபெறுவது தமிழ் மக்கள் அனைவருக்கும் பெருமகிழ்ச்சி தரக் கூடிய ஒன்றாகும். என்னுடைய அருமை நண்பர்கள் திரு எஸ்.டி.காசிராஜன், திரு.பி.வெங்கடேசன் போன்றவர்கள் இந்த மாநாட்டிற்கான பொறுப்புகளை மிகச் சீரிய முறையில் நிறைவேற்றி வருவது இந்த மாநாட்டு ஏற்பாடுகளில் தனித்தன்மை வாய்ந்ததாகும். தமிழ் மொழியை தெய்வத் தமிழ் மொழியாக்கிய சான்றோர்களுடைய உயர்ந்த ஆன்மிக உணர்வு மிக்க போற்றத் தக்கது. பல நூற்றாண்டுகளாக தெய்வத் தமிழ் எண்ணற்ற தமிழ் மக்களின் உள்ளங்களில் தெய்வத் தன்மையையும் ஆன்மீக உணர்வையும் வளர்த்து தமிழ் சமுதாயத்திற்குச் சிறந்த பண்புகளையும் நாகரிகத்தையும் வழங்கியுள்ளது. இவை உலக மக்களின் நினைவிற்குக் கொண்டு வரப் படும் வகையில் நடைபெறும் அனைத்துலக தெய்வத் தமிழ் முதல் மாநாடு சிறப்பாக நடைபெற்று தமிழ் மக்களுக் குப் பெரு மகிழ்ச்சியைத் தரும் என்பதில் ஐயமில்லை. இந்த மாநாடு நல்ல முறையில் நடை பெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

[illegible]

வாழ்த்துரை



கி. ஆ.பெ. விசுவநாதம்
திருச்சிராப்பள்ளி 620008

சென்னை ஆன்மசக்தி திரு.பி.வெங்கடேசன் அவர்களின் பெருமுயற்சியால் அனைத்துலக தெய்வத் தமிழ் முதல் மாநாடு ஒன்று அண்மையில் சென்னையில் நடைபெற விருக்கிறது என்ற செய்தியும், அதன் நினைவாக மலர் ஒன்று வெளிவர விருக்கிறது என்ற செய்தியும் என்னை மகிழ்விக்கின்றன.

மாநாடு இனிது நடைபெற வேண்டுமெனவும், மலர் நாட்டுக்கும், மொழிக்கம், சமயத்திற்கும் நற்றொண்டு செய்யும் நல்லறிஞர்களின் கட்டுரைகளைத் தாங்கி வெளி வந்து நாடுமுழுதும் நன்மணம் வீசவேண்டுமெனவும் எல்லாம் வல்ல இறைவனை வணங்கி வாழ்த்துகிறேன்.

திருச்சிராப்பள்ளி-8
30-8-1991

தங்களன்பிற்குரிய

கி.ஆ.பெ.விசுவநாதம்



MAYELAI MA MUNIVAR
GURUJI SUNDARARAM SWAMIGAL

JAYARAM VILAS
235, RAMAKRISHNA MUTT ROAD
MYLAPORE, MADRAS-600 004.

மயிலை மாமுனிவர்
குருஜி சுந்தரராம் சுவாமிகள்
வாழ்த்துரை

தமிழகத்திலே பற்பல மாநாடுகள் பலவிதக் கொள்கைகளுக்காக ஆங்காங்கே நடக்கும் இக் காலத்திலே, அதுவும் மதவெறி மாநாடுகள் பலவிதமாக நடக்கும் இக்காலத்திலே, சுத்த சத்திய சமரச நேர்மை கொண்ட தெய்வத் தமிழ் மாநாடு என்ற வகையிலே, கல்வி ஞானமும், கலை ஞானமும் கலந்த வகையிலே கருத்துள்ள மெய்ஞ்ஞானத்தைப் பலருக்கும் போதிக்கும் வண்ணம் மிகத் தெளிவான மாநாடு சென்னையிலே மிக அரும்பாடுபட்டு தன்னையே அர்ப்பணித்து அழைக்கும் நல்லவர் பி.வெங்கடேசன் அவர்கள் சத்திய சாத்தத்தைக் கொண்டு தம்பெற்ற பாக்கியத்தை பிறர் நல்விதமாகப் பெறுவதற்கும் அவரவர் வாழ்க்கை நாடகத்தை நலல்விதமாக நடத்துவதற்கும் அக்காலத்தில் ஞான கடாட்சம் கொண்ட மெய்ஞ்ஞான மூர்த்திகளின் அருள்வாக்கு சிறப்பிக்கும்படியாக வருகிற பிப்ரவரி மாதம் 1992-ல் பற்பல தமிழக மடாதிபதிகளின் முன்னிலையில் நடத்துகின்றார் என்றால் ஒரு அரிய பெரிய தெய்வீக சத்திய சாதனை. ஆகையால், பஞ்சபூதங்களும் முக்கோடி தேவாதி தேவர்களும் சுத்த சத்திய ஞானம் கொண்ட சித்தர்களும் இந்த தெய்வத் தமிழ் மாநாடு அனைத்து உலகத்திலும் உண்மை உணர்ச்சியோடு நல்லதோர் தெய்வீக ஞானத்தை நிரந்தரமாக ஒளிவீச வேண்டுமென்று என் குருநாதர் தங்கள் ஆசிரம மௌன குருவை தியானித்த வண்ணம் பிரார்த்திக்கின்றேன்.

வாழ்த்துக்கள்

தெய்வத் தமிழின் திறமெல்லாம்
தெரிந்து தெளிந்து திறமறிந்தே
உய்ய உரைக்கும் உயர்மொழியாம்
உணர்வார் உளத்துள் அதுஒளியா
செய்யத் தமிழின் செழுமை எலாம்
சேர்ந்து துய்க்க அனைத்துலகத்
தெய்வத் தமிழின் மாநாடு
திகழ்க ஒளிர்க வாழியவே!
திறம்சார் தெய்வத் தமிழ்மன்றம்
தேர்ந்தே நடத்தும் அனைத்துலக
அறம்சார் தமிழின் மாநாடே
அருமை பெருமை மிகஒளிரா
நிறஞ்சார் நன்மை நீடுலகில்
நின்று நிலவி நலஞ்செழிக்க
உறவார் உழைப்பார் உலகுய்ய
ஓங்கி வெல்க! வாழியவே!

சொ.ர.தேமொழியார்
செங்கற்பட்டு

THE SOUTH AFRICAN TAMIL FEDERATION





LAUDIUM 0037 PRETORIA

R.S.A

இக்கலியுகத்தில் பல இன்னல்கள் மத்தியில், துன்பக் கடலினுள் மூழ்கி கரை யேற முடியாமல், தத்தளித்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில், தெய்வத் தமிழ் மன்றத்தினர் அனைத்துலகத் தெய்வத்தமிழ் மாநாடு நடத்த இருக்கும் செய்தி கேட்டுக் கலங்கரை விளக்கத்தை கண்டது போல் மட்டொணா மகிழ்ச்சி அடைகிறோம். மானிடப் பிறப்பின் மகிமைப் புரியாது, இருவினைகளின் வேறுபாடு தெரியாமல், மூவாசைகளால் கலவரப்பட்டு, எம் நால்வர் காட்டிய நாற்பாதங்களை மறந்து, பஞ்சமா பாதகங்களை மனம் நாடும் இந்நாளில், அசுரனை அழிக்க ஆறுமுகன் அவதரித்தது போல், அனைத்துலக தெய்வத்தமிழ் மாநாடு பற்றிச் செய்தி வந்துள்ளது. இம்மாநாட்டை நடத்தத் திட்ட மிட்டுள்ள தெய்வத் தமிழ் மன்ற உறுப்பினர்களும், வாழ்த்துரைகள், கட்டுரைகள் அனுப்பி வைக்கும் அன்பர்களும், மாநாட்டைச் சிறப்பு றச் செய்வதற்காகப் பல வகையிலும் உதவிபுரிந்த அனைவரும் எழுபிறப்பிலும் இன்னல் நீங்கி வாழ்வார்கள் என்பதில் எள்ளளவும் ஐயம் இல்லை. இம்மாநாட்டின் மூலம் உலகின் எண் திசையிலும் வாழும் சைவத் தமிழ் மக்கள் பயன் பெறுவர் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

''திரைக்கடல் ஓடியும் திரவியம் தேடு'' என்ற ஔவையாரின் முதுமொழிக் கேற்ப எம்மூதாதையர்கள் தாய்நாட்டை விட்டு தென்னாபிரிக்கா வந்து சேர்ந்தார்கள். துர்அதிஷ்டவசமாக தாய்நாட்டுத் தொடர்பு துண்டிக்கப்பட்டது. சென்னை தெய்வத் தமிழ் மன்றம் எம்மையெல்லாம் மறவாமல் மாநாட்டில் கலந்து கொள்ள அழைப்பு விட்டிருப்பதும், வாழ்த்துச் செய்தி கேட்டிருப்பதும், எம்மை மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கச் செய்வதுடன் மீண்டும் தெய்வீகத் தமிழ்த் தொடர்பு பாலம் ஒன்றையும் அமைப்பதற்கு வழிகோலும்.

மேலும் மாநாடு தெய்வீகமாகவும் சிறப்பாகவும், அனைத்துலக வாழ் சைவ, வைணவ தமிழ் மக்களுக்கு மிகவும் பயன் உள்ளதாகவும் அமைய வேண்டுமென, தென்னாப்பிரிக்காவில் வாழும் இலட்சக்கணக்கான தமிழ் மக்களின் சார்பிலும், இந் நாட்டின் தலைநகரான பிரிட்டோரியா நகரின் மத்தியில் வீற்றிருக்கும் அழகிய மாரி யம்மன் ஆலயத் தலைவர் என்ற முறையிலும், தென்னாப்பிரிக்கத் தமிழர் சமயக் கூட்டிணைப்பு மத, மொழி ஆலோசகர் என்ற வகையிலும் என் நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வணக்கம்

எஸ்.சத்தியா பிள்ளை
கழகத் தலைவர்

''மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்''

பிரம்மஸ்ரீ நடராஜ சர்மா
தென்னாப்பிரிக்க தமிழர் சமயக் கூட்டிணைப்புக் கழக ஆலோசகர்
பிரிட்டோரியா அழகிய மாரியம்மன் ஆலயத் தலைவர்

உ

சிவமயம்

அகில இலங்கை இந்து மாமன்றம்

தலைமையகம் : இல. 101/1, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு 2, இலங்கை. தொலைபேசி : 434990

அனைத்துலக தெய்வத் தமிழ் முதல் மாநாடு தமிழ்நாட்டின் தலைநகரத்தில் சிறப்புற நடந்தேற எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக.

தேமதுர தமிழ்மொழியில் படைக்கப்பட்ட தெய்வீக இலக்கியங்களை ஆராயும் முதல் முயற்சி இது எனவும் சைவ நாயன்மார்கள் வைணவ ஆழ்வார்கள் தமிழ்ச்சித்தர்கள் சேக்கிழார், தாயுமானவர், பட்டினத்தார், இராமலிங்க சுவாமிகள் முதலிய பல்வேறு சமயப் பெரியார்களின் படைப்புகளும் ஆராயப்படும் எனவும் மாநாட்டு அமைப்பாளர்கள் அறிவித்திருக்கிறார்கள். யாழ்ப்பாணம் தந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மட்டக்களப்பில் பிறந்த சுவாமி விபுலானந்த அடிகள் முதலிய இலங்கைச் சமய பெரியவர்கள் தமிழில் படைத்த தெய்வீக இலக்கியங்களும் மாநாட்டில் ஆராயப்படும் எனவும் எதிர்பார்க்கின்றோம்.

அனைத்துலகத் தெய்வத் தமிழ் முதல் மாநாடு வெற்றிபெற இலங்கைவாழ் இந்துமக்கள் அனைவர் சார்பிலும் எங்கள் வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் அனுப்பி வைக்கின்றோம்.

வே.பாலசுப்பிரமணியம்
தலைவர்

கந்தைய. நீலகண்டன்
பொதுச்செயலாளர்

தலைவர் :
வே. பாலசுப்பிரமணியம்
தொலைபேசி : 692712 (இல்லம்)
447215 (அலுவலகம்)

பொதுச்செயலாளர் :
கந்தையா நீலகண்டன்
தொலைபேசி : 580807 (இல்லம்)
445254-449268 (அலுவலகம்)

கௌரவ பொருளாளர் :
மு. கந்தசாமி
தொலைபேசி : 523998 (இல்லம்)
452073 (அலுவலகம்)

நல் வாழ்த்துக்கள்

தெய்வத் தமிழ் மன்றம், அனைத்துலக தெய்வத் தமிழ் மாநாடு நடத்துவது குறித்து பெரு மகிழ்ச்சி அடைகிறேன். இம் மாநாடு ஆக்கப் பணிகளுக்குரிய அடிப்படைகளை நிறுவும் என்று நம்புகிறேன். இக்கால இளந்தலை முறையினர் தமிழ்ச் சமயக் கோட்பாடுகளை அறியாது அல்லலுறுகின்றனர். வேற்றுச் சமயத் தீ வெள்ளமெனப் பெருக்கெடுத்துப் பரவுகிறது. தமிழ்ச் சமயம் பதுங்கிப் பின் வாங்குகிறது. தமிழ்ச் சமயத்தைத் தழுவிய அயலவர் எமது சமயக் கொள்கைகளுக்கு மாறுபட்ட கருத்துக்களைத் தீவிரமாகப் பரப்பி வருகின்றனர். இம்மாநாடு இவற்றுக்கெல்லாம் தெளிவான விளக்கமும் நல்ல பாதையும் அமைத்துத் தர எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக.

அரு.புட்பரதம்
மொரீசியசு

"மலர்ந்த முகமே வாழ்க்கையின் இன்பம்"

கலைமாமணி திருக்குறளார் வீ. முனிசாமி.

தெய்வத் தமிழ் மன்றத்தை நிறுவி அருந்தொண்டு ஆற்றி வரும் கெழுதகமை நண்பர் திருவாளர். வெங்கடேசனார் அவர்கள் என்றென்றும் மலர்ந்த முகத்துடன் தொண்டாற்றி வரும் சீலர் ஆவார். இடுக்கண் வந்தாலும் இனிமையாகப் பேசி மலர்ந்த முகத்துடன் தோற்றமளிப்பார். அவர் கொண்டு வந்துள்ள இந்த மலர் தெய்வ மணங்கமழும் சீர்மிகு தமிழ் மலராகும். தமிழகத்தில் வந்துள்ள மலர்களில் அனைத்திலும் முதல் வரிசையில் வைத்து பாராட்டக்கூடிய மலராக இது அமைந்துள்ளது. சான்றோர்களும், பேராசிரியர்களும், பெரும் புலவர்களும், ஆராய்ச்சியாளர்களும், மேடைப் பேச்சு விற்பன்னர்களும், மற்றும் ஆழ்ந்த தமிழறிவு படைத்த அனைவர் கருத்துரைகளும் நிரம்பிய மலராக இந்த மலர் அமைந்துள்ளது. பல்கலைக்கழகங்களும் பாராட்டக்கூடிய அம்சங்கள் நிறைந்துள்ளன. தமிழகத்திலுள்ள உயர்நிலைப் பள்ளி நூலகங்களிலும், பொது நூலகங்களிலும் இந்த மலர் வைக்கப்பட்டு அலங்கரிக்கப்பட வேண்டும். முயற்சி திருவினையாக்கும் என்ற இலக்கணத்திற்கு இந்த மலர் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. பல்வேறு துறைகளில் பாண்டித்யம் பெற்ற பேரறிஞர்கள் வெளியிட்டுள்ள சிறந்த நூல்கள் அனைத்திலுமிருந்து திரட்டப் பட்ட கருத்துக்கள் செறிந்து நிறைந்து இந்த மலரில் காணப்படுகின்றது.

மலர்க்குழுவினருக்கு மனமார்ந்த பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் எல்லா இன்பமும் பெற்று பல்லாண்டு வாழ்க, வாழ்க என வாழ்த்துகிறேன்.



வாழ்த்துக்கள்

அரு. சங்கர் B.SC
சென்னை 600021

இன்று உலகில் வழங்கி வரும் மொழிகளனைத்தையும் ஆய்ந்து பார்த்த அறிஞர் கூற்றும் தமிழ்மொழியே உலகத் தலைமொழி என்பதாகும்.

எனவே இம்மொழியைத் 'தெய்வத் தமிழ்' என்று கூறுவது எவ்வகையானும் பொருத்தமுடைய ஒன்றே.

இறைவன் உளம் மகிழ்ந்துவேண்டியவை வேண்டியார்க்கு அருளச் செயவல்ல சொற்களையே மந்திரச் சொற்களென்பர். 'மந்திரம் போல் வேண்டுமடா சொல்லின் பம்' என்று பாடுவார் பாரதி. அப்படிப்பட்ட மந்திரப் பாடல்களை மலிந்தது தமிழ் மொழி.

நம் அன்னை மொழியின் இத்தகு கீர்த்தியை அறிய மாட்டாராய், அம்மொழி யையே தன் மொழியாகக் கொண்ட தமிழரிற் பலர், பாமரராய், விலங்குகளாய் வாழ் வதை உணர்ந்து, வருந்தி, கருணையினாலே கண்ணீர் பெருக்கி அவர் நலனுக்கா கவே ஓர் நல்ல அன்புள்ளத்தின் வழி தோற்றுவிக்கப்பட்டதே 'தெய்வத் தமிழ்மன்றம்.'

சிறைக் கோட்டத்தை அறக் கோட்டமாக்கியும் திருக்குறளின் பெருமையை சேரிப்புறங்களிலே ஒலிக்கச் செய்தும் தமிழிசையின் உயிர்ப்பை மார்கழி மாதம் முழு மையும் இசைவிழாவாக வெளிப்படுத்தியும் சமயங்களுக்கிடையே சமரசங்கண்ட மகான் தாயுமானவப் பெருந்தகையின் சத்திய மொழிகளை நாட்டிலே பரவச் செய் தும், உலகில் சாந்தி நிலவ, ஆன்ம சக்தியை ஓங்கச் செய்ய 'ஆன்ம சக்தி' மாத இதழ் கண்டு பணியாற்றி வருகிறது. தெய்வத் தமிழ் மன்றம்.

'என் வாழ்க்கையே இந்த உலக மக்களுக்கு நான் தரும் சேதியாகும்' என்று தன்னம்பிக்கையோடு கூறிச் சென்றார் அண்ணல் காந்தியடிகள்.

எண்குணமும் பஞ்ச சீலமும் உலகோர்க்குத் தந்த கௌதம புத்தர் சொல்லிய வண்ணம் வாழ்ந்து காட்டினார்.

மகாவீரர், இயேசு நாதர், நபிகள் நாயகம், தேவாரமூவர், திருவாசக ஒருவர், அருட்பா வள்ளல், நம் காலத்தே ஒரு திரேசா என ஒழுக்க சீலர்களாய், போதித்த வண்ணம் வாழ்ந்து வாழும் பெருமக்கள் பட்டியல் மிகப் பெரியது. அம்முறையில் நம் வட்டாரத்தில் அன்பும் கருணையும் செயலும் வடிவாய்க் கொண்டு அடக்கத்துடன் தெய்வப் பணியாற்றி வரும் திரு.பி.வெங்கடேசனார் தான் இவ்வெழிலார் மன்றங் கண்ட பெருமகன்.

தக்கவர்களை உடனழைத்துக் கொண்டு அப்பரடிகள்போல் தெய்வ உழவாரப் பணி மேற்கொண்டுள்ள அவர் தன் பணியிலே வெற்றி பெற வாழ்த்துகிறேன். அவர் காணவிரும்பும் தெய்வத் தமிழ் மாநாடு வெற்றியுற என்றுமுள செம்பொருளை வழுத்துகிறேன்.



உலகத் தமிழர் கடமை

(டாக்டர். நா. மகாலிங்கம்)

யாதும் ஊரே யாவரும் கேளிர் என்பது பழந் தமிழ் இலக்கியக் கூற்று. எந்த ஊரையும் தன்னுடைய ஊர் போல மதித்து அங்குள்ள மக்களோடு உறவு கொண்டு வாழ்க்கை நடத்துதல் வேண்டும் என்பது இதன் பொருள். கல்வியைச் சிறப்புறக் கற்றவர்களுக்கு எந்த நாட்டிலும் மதிப்பு உண்டு என்பதனை வலியுறுத்த, 'கற்றோர்க்குச் சென்ற இடமெலாம் சிறப்பு' என்றும்,

'கண்ணுடையர் என்பவர் கற்றோர்; முகத்திரண்டு
புண்ணுடையோர் கல்லா தவர்'

என்றும் பண்டைத் தமிழ் படைப்புக்களில் காண்கி றோம். கல்வியைப் பற்றிக் கூறிய திருவள்ளுவனார்,

'யாதானும் நாடாமால் ஊராமால் என் னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு'

என்று கற்றோர்க்கு எந்த நாட்டிலும் சிறப்புக் கிடைக் கும் என்பதனை வற்புறுத்தியுள்ளார்.

உலக மக்கள் எல்லோரும் வெவ்வேறு நாடுகளி லிருந்து, வெவ்வேறு திசைகளிலிருந்து வந்து கூடிய போதிலும், அப்படி அவர்கள் ஒன்று கூடும் பொழுது எல்லோரும் மக்களென்ற ஒரே இனத்தைச் சேர்ந்தவர் கள் என்ற உணர்ச்சி அவர்களிடையே இருத்தல் வேண் டும். மருத நிலத்தில் பொன்னும், மலையில் மணியும், காட்டில் பவழமும் தோன்றிப் போதிலும் அவை யாவும் சேரும் பொழுது அணிகலன் என்ற ஒரே பெயரைப் பெறுவது போல, வெவ்வேறு திசைகளிலிருந்து வந்த பொழுதும், அத்திசைகளைச் சிறிது நேரம் மறந்து 'மக்கள்' என்ற ஒரே பொருள் அமைய வேண்டும்.

உலகத்து மக்கள் விரும்பும் பொருள்களை வாய்மை என்ற அறத்தினின்று வழுவாமல் பெற முடியும் என்பதை,

'வாய்மையின் வழா அது மன்னுயிர் ஓம்புநர்க்கு
யாவதும் உண்டோ எய்தா அரும் பொருள்'

என்று பழந் தமிழ்க் காப்பிய அறிஞரான இளங்கோவடிகள் கூறியிருப்பதை நினைவு கூர்ந்தால், எப்பொழுதும் உண்மையே பேசி, மற்ற உயிர்களுக்குத் துன்பம் தராமல் ஒருவர் நடந்து கொள்வாரேயானால், உலகில் அவரால் அடைய முடியாதது எதுவும் இல்லை என்பதை நாம் உணர்வோம். ஆகவே வாய்மை அறம், பிறருக்கு இன்னா செய்யாமை, ஆகிய இரண்டையும் பண்டைக் காலத்தில் இளங்கோவடிகள் வற்புறுத்தி னார். பின்னர் நமது வாழ் நாளிலேயே நம் நாட்டில் வாழ்ந்த காந்தி அடிகளும் வள்ளற் பெருமானும் இந்தக் கருத்தை நிலை நாட்டினர். 'சத்தியமே கடவுள்' என்றார் காந்தியடிகள். 'உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்' என்றார் வள்ளலார். பிறருக்குத் துன்பம் விளையாமல் வாழ்வதன் அவசியத்தை வள்ளலார் மிக அழகாக எடுத்துரைத் துள்ளார். வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய வள்ளலார்.

'பட்டோடே பணியோடே திரிகின்றீர் தெருவில்
பசியோடே வந்தாரைப் பார்க்கவும் நேரீர்'

என்று ஜீவகாருண்யத்தையும்

'வன்சொல்லின் அல்லது வாய்திறப் பறியீர்
வாய்மையும் தூய்மையும் காய்மையில் வளர்ந்தீர்'

என்று வாய்மையின் அவசியத்தையும் மக்களிடத்துப் புகட்டினார்.

உலகில் மக்களாய்ப் பிறந்தவர்கள் யாவரும் ஒரே இனம், ஒரே குலம் என்ற கருத்து பொதுவாக மக்களிடையே இப்பொழுது வலுப்பெற்று வருவதைக் காண்கிறோம். 'எல்லோரும் ஒரு குலம், எல்லோரும் ஓர் இனம், எல்லோரும் இந்திய மக்கள்' என்று பாடியவர், அமரகவி சுப்பிரமணிய பாரதியார். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலேயே 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்று திட்டவட்டமாகக் கூறியவர் திருமூலர். இன்று இந்தக் கருத்துத்தான் 'தேசிய ஒருமைப்பாடு' என்றும், 'உலக மக்கள் ஒருமைப்பாடு' என்றும் பேசப்பட்டு வருகிறது.

உலகு எப்படி இருத்தல் வேண்டும் என்பது பற்றி பழந் தமிழ் அறிஞர்கள் பலர் கூறியிருக்கிறார்கள். உலகில் வாழ் மக்கள் அடுக்களையில் காணப்படும் நெருப்பைத் தவிர மக்களைச் சுடுந் தீயை அறிய மாட்டார்கள் என்ற கருத்தில் 'அடுதீ அல்லது சுடுதீ அறியார்' என்று கோவூர் கிழார் என்ற பெரியார் குறிப்பிட்டார். குறுங்கோழியார் கிழார் என்ற மற்றொரு அறிஞரின் கருத்துப்படி மழை பெய்தற்கு முன்னர் தோன்றும் வானவில்லைத் தவிர ஏனைய கொலை

வில்லுகளை மக்கள் அறியமாட்டார், என்ற கருத்துப்படி, 'திருவில் அல்லது கொலைவில் அறியார், நாஞ்சில் அல்லது படையும் அறியார்' என்று கூறினார். பழந் தமிழ் இலக்கியங்களில் காணப்படும் இவற்றை ஆராய்ந்தறியுங்கால், தற்போதைய உலகில் காணப்படும் அழிவுப் போக்கின் முட்டாள் தனத்தையும் அதற்கென ஏற்படும் பணச் செலவின் விளைவுகளையும் செவ்வனே உணர முடியும்.

இவற்றையெல்லாம் ஆலோசிக்கும் பொழுது நம் தமிழ் இலக்கியங்களில் காணப்படும் ஆலோசனைகளும் போதனைகளும் மனித வாழ்க்கையைச் சிறப்புறச் செய்வதற்கு மிகவும் இன்றியமையாதவை என்பது தெளிவாகிறது. அப்படியானால் அவற்றை நமது மக்கள் கற்றுக்கொள்வதற்கு இதுவரை நாம் எடுத்த நடவடிக்கைகள் என்ன? நமது குழந்தைகளுக்கு இவற்றைச் சொல்லிக் கொடுக்க எத்தனித்திருக்கிறோமா?

வெளி நாடுகளிலுள்ளவர்களின் கஷ்டங்களைப் பற்றிப் பின்னால் பார்ப்போம். நமது நாடு பாரத நாடு. பழம் பெரும் நாடு. பண்பாட்டிற் சிறந்த நாடு. வெளி நாட்டார் விரும்பி வரும் நாடு. இப்படியெல்லாம் பெருமைப்பட்டுக் கொள்கிறோம். ஆனாலும் மாணவப் பருவத்திலிருந்தே கற்றுக்கொடுக்க வேண்டிய பல நற்செய்திகளை நாம் கற்றுக் கொடுப்பதை ஒதுக்கி விட்டோம். கோயில்கள் பள்ளிகளாகவும் செயல்பட்ட காலம் மாறிவிட்டது. பல கோயில்கள் கேட்பாரற்று இருக்கின்றன. பள்ளிகளில் மாணவர்கள் சரியாகவும் படிப்பதில்லை. ஆசிரியர்களும் முறையாகப் போதிப்ப தில்லை.

இவற்றைத் திருத்தி அமைக்க வேண்டுமானால் ஆரம்ப வகுப்புகளில் இலவசமாக, கட்டாயமாக, குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்க வேண்டும். வருங்கால சமுதாயமாவது கற்ற மக்களைக் கொண்டதாக இருப்பதற்கு இது ஒன்று தான் சிறந்த முறை. பின்னர் உயர் நிலைப்பள்ளி வரும் குழந்தைகளுக்குப் பள்ளிப் பாடங்களுடன் அவரவருக்கு நாட்டமுடைய தொழில்களையும் கற்றுக் கொடுத்தல் வேண்டும். காலை நேரத்தில் பள்ளிப் பாடங்களைக் கற்கும் மாணவனுக்கு மாலை நேரத்தில் தொழிற் கல்வி போதிக்கப்படுதல் வேண்டும். மாணவர்களுக்குத் தொழிற் கல்வி கற்பிப்பதற்காக பெரிய தொழில் நிறுவனங்கள் மாத்திரமல்லாது, சிறு தொழில் நிறுவனங்களும் கைவினைஞர்களும் முன்வர வேண்டும்.

தொழில்களைக் கற்றுக் கொள்ளும் காலத்தில் மாணவர்கள் பெற்றுக்கொள்ளும் ஊதியத்தைக் கொண்டு அவர்கள் பாடசாலைகளுக்குரிய கட்டணங்களைக் கொடுக்கக் கூடியதாக இருக்கும். ஐந்தாம் ஆறாம் வகுப்பு வரை இலவசமாகக் கல்வி புகட்டி, அதன் பின்னர் வகுப்புக் கட்டணங்களைச் செலுத்திப் படிக்கும் முறையைக் கையாண்டால் தான், கல்வியின் முக்கியத்துவத்தை மாணவரும் உணருவார்கள். அவர்களின் பெற்றோருக்கும் சுமை ஏற்படாது. நாட்டின் அலசிய தேவைகளில் ஒன்று உற்பத்திப் பெருக்கம். ஆதலின் மாணவப் பருவத்திலேயே தொழிற் கல்வி புகட்ட வேண்டியது அவசியமாகிறது. எல்லோருமே அரசுப் பணிகளில் ஈடுபடுவதோ, என்ஜினியர் அல்லது டாக்டர் ஆவதோ சாத்தியமானதல்ல என்பதை நாம் நினைவில் வைத்து அதற்குத் தகுந்தவாறு தக்க தருணத்தில் நடவடிக்கை எடுப்பது நமது இன்றியமையாத கடமையாகும்.

சில ஆண்டுகளுக்கு முன்னால், பள்ளிப் பாடங்களில் ஒன்றாக சமயம் கற்பிக்கப்பட்டது. ஒரு மாணவன் இந்துவாக இருந்தாலும், கிறிஸ்தவனானாலும், அன்றி வேறு மதத்தைச் சார்ந்தவனாக இருந்தாலும், அந்தந்த மதங்களின் சிறப்புகள் அவனுக்கு சிறு வயதிலிருந்தே, ஆரம்பப் பள்ளி நிலையிலிருந்தே சொல்லிக் கொடுக்கப்பட்டன. பாடத் திட்டத்தில் இது ஒரு பாடமாகக் கருதப்பட்டது. அப்பொழுதெல்லாம் பள்ளி துவங்கு முன்னர், இறைவனை வழிபட்டு, தேவாரங்களையோ, திவ்ய பிரபந்தங்களையோ, அல்லது மத சமயத் தோத்திரங்களையோ மாணவர் பாடிய பின், பள்ளிப் படிப்பு தொடங்கியது. இதனால் மதப் பற்று மாணவரிடையே வலுவடைந்ததோ இல்லையோ, இசையில் நாட்டம் மாத்திரமல்லாது நல்லொழுக்க மனப் பான்மையும் அவர்களுக்கு ஏற்பட்டது என்பதில் ஐயமில்லை. ஏனோ அந்தப் பழக்கத்தை இப்பொழுது கைவிட்டிருக்கிறோம்.

தாய் மொழிப் பற்றும், பண்பாட்டுப் பாதுகாப்பும் வளர்ச்சியும் நம் ஒவ்வொருவருடைய கடமை எனக் கொள்ளல் வேண்டும். நாம் எல்லோரும் நம் நாட்டின் குறைகளைத் தீர்த்துப் பெருமைகளைப் பாதுகாத்து வளர்க்க, அஞ்சாது, அயராது, உழைக்க முன்வர வேண்டும். மொழிப் பற்று, குறிப்பாகத் தாய் மொழிப் பற்றுக் கொண்ட பெரியோர் பலர், தாய் மொழிக் கல்விக்கு ஆதரவு கொடுத்து அம் முயற்சி செழித்தோங்க, ஆர்வங்கொண்டு செயல்பட வேண்டும். திண்ணைப் பள்ளிக் கூடக் காலம் போல், இன்று இல்லை எனினும், தற்கால நவீன, போதனா முறைகள் மூலம் சிறப்பாக வானொலி, தொலைக் காட்சி, திரைப் படங்கள் முதலானவற்றின் துணை கொண்டு சிறந்த முறையில் கல்வி, கலைகளைப் புகட்டும் காலம் இது. எனவே நல்ல முறைகளைக் கைக் கொண்டு சிறுவர் சிறுமியருக்குச் சிறந்த கல்வி புகட்டுவதே நம் தொண்டெனக் கொள்ளல் வேண்டும்.


ரவீந்திரநாத் தாகூர் அவர்கள் ஸ்தாபித்த சாந்தி நிகேதனம், விஸ்வ பாரதி கல்விப் பல்கலைக் கழகங்கள், ஸ்ரீநிகேதனம் போன்றவை நமக்கு முன்மாதிரி நிலையங்களாக, கல்வி, கலைக் கழகங்களாகத் திகழ்கின்றன. இயற்கை வனப்புக்கும், அமைதிக்கும் உரிய தனி இடங்களாக நாற்புறமும் சோலையும் இயற்கை அன்னையின் அன்பை அள்ளி அள்ளி அளிக்கும் பிரத்தியேக அமைதிக் கூடங்களாக, தியான வழியிலும் மாணவரை வழிப்படுத்த அனுகூலமாக அமைந்த எளிமைக் கோயில்களாக, செம்மை நிறைந்த சூழல்கொண்ட நிலையங்களாக, கல்வி, கலை நிறுவனங்களாகத் திகழும் அச் சிறந்த கலைக் கோவில்களை நாம் இன்று புகழ்ந்து பாராட்டுகிறோம். இயற்கையின் அழகில் மூழ்கி மகிழ்ந்து மலர வேண்டும். பள்ளிக்கூடம் சிறைக் கூடமாக அமைதல் ஆகாது. கண்மூடிப் பழக்கங்கள் இடம் பெற

வாய்ப் பில்லை. பழக்கவழக்கம், ஒழுக்கம் எல்லாம் மாணவப் பருவத்திலிருந்தே இயல்பாகச் சிறந்து அமைய வேண்டும். சித்திரமும், சீரிய ஒழுக்கமும், கலை உணர்வும், சிறுவரிடையே ஏற்படச் சுற்றாடல் சிறப்பாக அமைய வேண்டும்.

உலக இளைஞர்களிடையே இன்று காணப்படும் ஒழுக்கமின்மையைப் போக்கி, அவர்களைச் சிறந்த குடிமக்களாகத் திகழ வைப்பதற்கு ஆவன செய்ய வேண்டியது ஒவ்வொரு தமிழ் மகனின் தலைசிறந்த கடமையாகும். அதனை உணர்ந்து உலகத் தமிழ் மக்கள் ஒன்று சேர்ந்து உழைக்க வேண்டும்.

பெற்ற தாய்தனை மகமறந் தாலும்
பிள்ளையைப் பெறும் தாய்மறந் தாலும்
உற்ற தேகத்தை உயிர் மறந்தாலும்
உயிரை மேவிய உடல் மறந்தாலும்
கற்ற நெஞ்சகம் கலை மறந்தாலும்
கண்கள் நின்றிமைப்பது மறந்தாலும்
நற்றவத்தவர் உள்ளிருந் தோங்கும்
நமச்சிவாயத்தை நான் மறவேனே!

—திருஅருட்பா



அருள் எனும் தோட்டத்தில்

(நீதிபதி. ச. மோகன்)

தென்னாட்டில் 19-ம் நூற்றாண்டில் தோன்றிய சிறந்த மெய்ஞ்ஞானி ஒருவர் உண்டென்றால் அவர் இராமலிங்க அடிகளே ஆவார். அவருடைய கருத்துக்கள் மக்களிடையே மலராததின் காரணம் என்ன என்ற வினாவிற்கு விடை காண முயல்வோம். அவர் இருந்த நூற்றாண்டு 19-ம் நூற்றாண்டு. விஞ்ஞானம் வளர்ச்சியுறாத காலம்.

மனிதன் சந்திரமண்டலத்தை அடைந்திராத காலம். மூடப் பழக்க வழக்கங்கள் நிறைந்திருந்த காலம். அன்று அவர் சொன்ன கருத்துகள், அறிவுரைகள் அந்தக் காலத்திற்கு அப்பாற்பட்டதாக இருந்தன. அந்தக் கருத்துகள் முறைக்கு உட்பட்டிருக்கவில்லை. ஒரு வரம்புக்கு உட்பட்டிருக்கவில்லை. ஒரு மரபுக்கு உட்பட்டிருக்கவில்லை. அதுவரை இருந்து வந்த சமுதாயம், அப்பொழுதிருந்த சமயம், ஒரு முறைக்கு ஒரு கோட்பாட்டுக்கு, உட்பட்டிருந்தது. ஒரு வரம்பிற்கு கட்டுப்பட்டிருந்தது. ஒரு மரபை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. மேற்கோளாகச் சொல்லப் போனால் கடவுள் கோவிலில் குடி கொண்டிருக்கிறார் என்ற கருத்து நிலவி வந்ததால் இயற்கையில் கடவுளைக் காண மறுத்தது. இந்தச் சூழ்நிலையில் தான் இராமலிங்க அடிகள் தோன்றினார். இயற்கையில் இறைவன் இருப்பதை மக்களுக்கு உணர்த்தினார்.

கண்மூடிப் பழக்கங்கள் எல்லாம்
மண்மூடிப் போகட்டும் என்றார்
மக்கள் மருட்சியுற்றனர்.

நம் உயிருக்கு உயிரான இறைமைதான் எல்லா உயிர்களிலும் உறைகின்றது. எனவே ஒவ்வொரு உயிரும் விலை மதிக்க முடியாத ஒன்று. பிற உயிர்கள் வருந்தினால் நாம் வருந்த வேண்டும். அவைகள் துன்புற்றால் நாம் துயர் துடைக்க வேண்டும் என்று பறை சாற்றினார். உலகத்திலுள்ள அனைத்து மக்களும், உயிர்களும் இறைவன் பிரதிபலிப்பு என்று உரைத்தார். இந்த உள்ளக் கிடக்கையில் ஒரு வரம் கேட்கிறார்.

அப்பா நான் வேண்டுதல் கேட்டு
அருள் புரிதல் வேண்டும்.
ஆருயிர்கட் கெல்லாம் நான் அன்பு
செயல் வேண்டும்

இந்த வரத்தை நான் ஏன் கேட்கிறேன் என்றால்:- உலகத்து உயிர்கள் படும் வருத்தத்தைக் கண்டும் கேட்டும் என்னால் சிறிது நேரம் கூட சகிக்க முடியவில்லை. அந்த வேதனையைப் போக்கும் திறன் எனக்கு தேவை என்கிறார்.

மண்ணுல கதிலே உயிர்கள்தாம் வருந்தும்
வருத்தத்தை யொரு சிறிதெனினும்
கண்ணுறப் பார்த்து, செவியுறக் கேட்டும்
கணமும் நான் சகித்திட மாட்டேன்
எண்ணுறு மெனக்கே நின்னருள் பலத்தால்
இசைத்த போதிசைத்த போதெல்லாம்
நண்ணுமவ் வருத்தம் தவிர்க்க நல்வரந்தான்
நல்குதல் எனக்கிச்சை எந்தாய்.

இதே கருத்தைத் திருக்குறள் இயம்புகிறது.

"அறிவினான் ஆகுவ துண்டோ, பிறிதின்நோய்
தன்நோய்போல் போற்றாக் கடை"

உங்களுடைய அறிவினால் என்ன பயன்? மற்றவர்களின் மெய்வருத்தம் தன் வருத்தமாகக் கருத வேண்டும் மற்றவர்களின் பிணியைத் தன் பிணியாய் எண்ண வேண்டும். மற்றவர் துயரைத் தன் துயராய் ஏற்று, அவர்களின் வருத்தத்தையும், பிணியையும், துயரையும் துடைத்து ஆறுதல் அளிக்க வேண்டும். அதுதான் மனிதனின் சிறந்த பண்பு. இந்த வேதனையில் விம்மி அழுகிற நெஞ்சம் அன்புணர்வின் அடிப்படையிலே செல்கின்றது.

வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம்
வாடினேன்

இவ்வாறு முதலில் அவர் உலகுக்குக் கூறியது எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்ட வேயாகும். அது தான் உண்மையான தொழுகை நேர்மையான வழிபாடு என்று சொன்னார்கள். உண்மையான இறைவனைக் காணும் முயற்சியில் ஈடுபட வேண்டுமானால் உள்ளத்தை அன்பின் இருப்பிடம் ஆக்கிக் கொள். அதுதான்

முக்கியம். உயிரிருக்கும் உடலைப் பேண ஒழுக்கத்தை வளர்க்க வேண்டும். மனதை அடக்க வேண்டும். ஆருயிர்களிடத்தில் பரிவுகாட்டி, உள்ளத்தை இரக்கத்தின் சுனையாக ஆக்கிக் கொள்ள வேண்டும் என்கிறார். சொல்லில் வாய்மை, செயலில் தூய்மை நிறைந்தால் மனம் தூய்மையின் சோலையாக மிளிரும். உள்ளம் சமரச சன்மார்க்கத்தின், நன்நெறியின் பிறப்பிடமாகும். ஒருவனுக்கு நிராசையாகிய, அமைதி என்னும் மனைவி, ஈகை என்னும் செல்வம், அறிவாகிய துணைவன், அகந்தை அற்ற நிலை என்னும் நண்பன், மனமாகிய ஏவலாள் அமைய வேண்டும். எல்லாம் அமைந்து விடும். அந்தோ, மனம் தான் எளிதில் ஏவலாளாக அமையாது இருக்கின்றதே ஏழை என் செய்குவேன் என்று உளம் வருந்துகிறார். எனவே மனதை வயப்படுத்தி, அன்பெனும் விதையை ஊன்றி, இரக்கமெனும் நீர்பாய்ச்சி, அருள் எனும் பயிர் வளர்த்து நன்னெறி எனும் பூஞ்சோலையில் மெல்லிய தென்றல் என்றும் உங்களைத் தழுவட்டும் என்றும் நயம்பட அழைக்கிறார்.

அடுத்து சாதியை ஓயாது சாடினார்.

ஒன்றே குலமும், ஒருவனே தேவனும் என்று தமிழ்நாடு உலகுக்கு அறிவித்திருந்தாலும், எங்கும் சாதிப்பிணக்குகள், சண்டைகள் மலிந்திருந்தன. சாதியைச் சாடாத திருமறைகள் தமிழ் நாட்டில் இல்லை.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்கிறது திருக்குறள்.

தீண்டாமையைப் பற்றிக் கூறும் பொழுது தேவாரம் சொல்கிறது.

அங்கமெலாம் குறைந்து அழுகு தொழு நோயராய்

ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்

கங்கை வார் சடைக் கரந்தார்க்கு அன்பராகில்

அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே

இதைத்தான் வள்ளலார்:- இறைமை என்னும் அருட் சோதியினைக் காணவேண்டுமெனில் சாதி, சமயம் என்ற வழக்குகளை விட வேண்டும் என்று கூறுகிறார்.

"சாதி சமயச் சழக்கை விட்டேன், அருள்
சோதியைக் கண்டேனடி"

எல்லா உயிர்களும் இறைமையின் உறைவிடம் என்ற உண்மை ஞானத்தினை உணர்ந்தவர்கள் சாதி என்ற அடிப்படையில் உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்று மக்களை வேறு படுத்தல் பாபம் என்கிறார் பாரதியார்.

"சாதிகள் இல்லையடி பாப்பா, குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்"

ஆனால் எவைகள் பாவம் என்று அடிகளார் சொல்லும் பொழுது வாழ்க்கைக்கே இலக்கணம் வகுக்கின்றார்.

இந்தப் பிறப்பில் நான் அறிந்து ஒரு தீங்கும் செய்ததில்லை. இந்தப் பிறப்பில் இல்லாவிட்டால் முற்பிறப்பில்.

நல்லோர் மனத்தை நடுங்கச் செய்தேனோ
வலிய வழக்கிட்டு மானம் கெடுத்தேனோ
தானம் கொடுப்போரைத் தடுத்து நின்றேனோ
கலந்த சிநேகிதரைக் கலகம் செய்தேனோ
மனம் ஒத்த நட்புக்கு வஞ்சகம் செய்தேனோ
குடிவரி உயர்த்திக் கொள்ளை கொண்டேனோ
ஏழை வயிறு எரியச் செய்தேனோ
தருமம் பாராது தண்டம் செய்தேனோ
மன்றோரம் பேசி வாழ் வழித்தேனோ
உயிர்க்கொலை செய்வோர்க்கு உப்காரம்
செய்தேனோ
களவு செய்வோருக்கு உளவு சொன்னேனோ
பொருளை இச்சித்துப் பொய் சொன்னேனோ
ஆசை காட்டி மோசம் செய்தேனோ
வரவு போக்கு ஒழிய வழியடைத்தேனோ
வேலை யிட்டுக் கூலி குறைத்தேனோ
பசித்தோர் முகத்தைப் பாராதிருந்தேனோ
இரப்போர்க்குப் பிச்சை இல்லை என்றேனோ
கோள்களைச் சொல்லிக் குடும்பம் குலைத்தேனோ
நட்டாற்றில் கையை நழுவவிட் டேனோ
கலங்கி ஒளித்தோரைக் காட்டிக் கொடுத்தேனோ
குருவை வணங்கக் கூசி நின்றேனோ
குருவின் காணிக்கை கொடுக்க மறந்தேனோ
கற்றவர் தம்மைக் கடுகடுத் தேனோ
பெரியோர் பாட்டில் பிழை சொன்னேனோ
பட்சியைக் கூண்டில் பதைக்க அடைத்தேனோ
கன்றுக்குப் பாலூட்டாது கட்டி வைத்தேனோ
ஊன்சுவை உண்டு உடல் வளர்த்தேனோ
கல்லும் நெல்லும் கலந்து விற்றேனோ
அன்புடை யவர்க்குத் துன்பம் செய்தேனோ
குடிக்கின்ற நீர் உள்ள குளம் தூர்த்தேனோ
வெய்யிலுக்கு ஒதுங்கும் விருட்சம் அழித்தேனோ
பகை கொண்டு அயலோர் பயிர் அழித்தேனோ
பொதுமண்ட பத்தைப் போயிடித் தேனோ
ஆலயக் கதவை அடைத்து வைத்தேனோ
சிவனடி யாரைச் சீறி வைதேனோ
தவம் செய்வோரைத் தாழ்வு சொன்னேனோ
சுத்த ஞானிகளைத் தூஷணம் செய்தோனே
தந்தை தாய் மொழியைத் தள்ளி நடந்தேனோ
தெய்வம் இகழ்ந்து செருக்கடைந் தேனோ
என்ன பாவம் செய்தேனோ இன்னதென்று
அறியேனே

சாதி ஒழிப்பு என்பதும் சமுதாயப் பணி என்பதும் புதுமைக் கருத்துக்கள் அல்ல, புரட்சிக் கருத்துகள் அல்ல என்றும் இறையுணர்வு பெற்ற பெரியோர்கள்

தொன்று தொட்டு சொன்ன நெறிகள் தான் இவை. இருப்பினும் இவற்றை ஏற்று நடக்கும் திறனை நம் இதயம் இன்னும் பெறவில்லை. உறுதியான இறை உணர்வு உள்ளத்தில் பதிந்து விட்டால் அகத்தில் அருளுணர்வு ஆறாகப் பெருகிவிடும். வேற்றுமைகள் மறைந்து ஒற்றுமை ஓங்கும். இந்நிலையில்தான்

மருட் சமய வாதுகளும், மாமலச் சடங்குகளும் மண்ணைக்கௌவும்
இருட் சாதி வேற்றுமை இடர் செய்யும்
பிரிவினைகள் இரிந்து தேயும்,

என்று கூறுகின்றார்.

மேலும் வள்ளற்பெருமானுடைய பாடல்களைப் படித்துச் சிந்தித்துச் சீரிய பாதை ஒன்று அமைத்து, சமுதாயத்தைச் செப்பனிட்டு அருள் எனும் தோட்டத்தில் அன்பு மலர்கள் பூத்துக் குலுங்கப் பாடுபடுவோம். அதுவே அவருக்கு நாம் காட்டும் நன்றி.



எவ்வெவ் மொழிகளில் திருக்குறள் மொழி பெயர்க்கப்பட்டன

1. ஆங்கிலம் 2. இலத்தீன் 3. பிரெஞ்சு 4. உருஷிய 5. போர்லிஷ் 6. சுவீடிஷ் 7. டச்சு, 8 செக்கோஸ்லோவாக்கியா 9. மலாய் 10. சிங்களம் 11. பர்மா 12. ஜப்பான் 13. சீனம் 14. பிஜி 15. சமஸ்கிருதம் 16. குஜராத்தி 17. மராத்தி 18. இந்தி 19. உருது 20. பெங்காலி 21. மலையாளம் 22.கன்னடம் 23. தெலுங்கு 24. ஜெர்மன் ஆகிய உலக மொழிகளில் திருக்குறள் மொழி பெயர்க்கப்பட்டன.

பஞ்ச பூதத் தலங்கள்

1. சிதம்பரம் - ஆகாயத்தலம் (வெளி)
2. காளத்தி - வாயுத்தலம் (காற்று)
3. திருவண்ணாமலை - தேயுத்தலம் (தீ)
4. திருவானைக்கா - அப்புத்தலம் (நீர்)
5. திருவாரூர் (அ) காஞ்சி - பிருதிவித்தலம் (நிலம்)



புத்தரும் வள்ளுவரும்

(எஸ்.டி. காசிராஜன் ஐ.ஏ.எஸ் (ஓய்வு)

புத்தர் பெருஞானி, வள்ளுவர் பேரறிஞர். புத்தர் அரசர் பரம்பரையில் வந்த அரசர். வள்ளுவர் அரசியல் துறையில் அணுக்கமானவராக இருந்து, அறிய வேண்டுபவை எல்லாம் நுணுக்கமாக அறிந்தவர். புத்தர் தம் அரச வாழ்வைத் துறந்த உலகோர். அல்லலை ஒழித்தலைத் தாமே வலிந்து ஏற்றுக் கொண்டு பணியில் ஈடுபட்டவர்; வள்ளுவர் இயல்பாகவே மாந்தர் மனநிலைகளையும் வாழ்வியல்களையும் உணர்ந்து அவர்கள் உய்தற்கு வழிகாணத் துடித்தவர். புத்தர் தாம் கண்ட அரிய பொருள்களையெல்லாம் "திரிபிடகம்" எனத் திரட்டி மொழிந்தனர்; வள்ளுவர் தாம் கண்ட அரியவற்றையெல்லாம் முப்பாலாகத் தொகுத்து வழங்கியவர்.

முன்னவர் வரலாற்றுச் சான்றுகள், அவர் உரைகளிலே உண்டு. அறிஞர் பெருமக்களும், அவர் தம் சீடர்களும் எழுதிய பகுதிகளும் உண்டு; கதைகளும் மிகப் பலவாயின. பின்னவர் வரலாற்றுச் சான்றுகளாக அறியக் கிடப்பது, முப்பால் ஒன்றே. மற்றைப் பின்னல்கள் எல்லாம் ஆராய்ச்சிக்கு உதவுபடியாக இல்லை. ஆனால் அவரை மதிக்காமல், அவர் சொற்பொருளை ஆளாமல் தமிழ் இலக்கிய உலகில் அவருக்குப் பின்னே ஒரு நூலும் தோன்றியதில்லை. அவ்வளவு பெருமை உண்டாயிற்று. பூவிற்குத் தாமரையே, பாவிற்கு வள்ளுவர் வெண்பா. சிந்தைக்கு இனிய; செவிக்கு இனிய; வாய்க்கு இனிய; வந்த இருவினைக்கு மாமருந்து, வள்ளுவனார் பன்னிய இன்குறள் வெண்பா. "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து, வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என்று பாரதியார் பாடியது உண்மை, வெறும் புகழ்ச்சியன்றாம்.

புத்தர் பெருமான் திருவள்ளுவருக்கு முன்னே வாழ்ந்தவர் என்பது எவரும் ஏற்கும் ஒரு கருத்து. வள்ளுவர் முப்பாலுக்குப் புத்தரின் வாழ்வும், வாக்கும் வழிமுறையும் துணையாக இருக்கக் கூடும். வள்ளுவரின் கூர்ந்த அறிவும், கொழுமையான மூளையும், துருவித் துருவிக் கண்டு துலக்கும் திறமையும், புத்தரை ஆய்ந்து அலசிப் பயன்படுத்திக் கொண்டிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு கண்ட பொருளைத், தம் பொருளாகவே ஆக்கித், திறம் பெறப் படைத்திருக்கவும் வேண்டும். "எல்லாவற்றுள்ளும் நல்லவற்றையே தேர்ந்து கொள்ளுவது இவர்க்கு இயல்பாகலின்" என்று பரிமேலழகர் சுட்டுவது போல, இவர்கால எல்லையில் ஆராய்ச்சிப் பொருளாக இருந்தவற்றையெல்லாம் ஆராய்ந்து கொண்டார் எனலாம். அவ்வாறானால் புத்தர், வள்ளுவரின் ஆய்வுப் பொருளாக விளங்கியிருக்க வேண்டும். அதனால் இருவருக்கும் உள்ள ஒப்புமைக் கருத்துக்கள் எண்ணற்றனவாம். வேறுபடும் இடங்களும் உண்டு; ஆனால் மாறுபடும் இடங்கள் அரிது.

புத்தர் அரச வாழ்வைத் தம் இருபத்தொன்பதாம் வயதில் துறந்தார். அன்பான தந்தை, இனிய மனைவி, இளஞ்செல்வன், அருமைச் சுற்றம்,பெருமைச் சூழல் எல்லாமும் ஒருநாள் நள்ளிரவில் ஒருகணத்தே துறந்து வெளியேறினார். ஆறு ஆண்டுகள் வெயிலால் உலர்ந்தார்; பனியால் நனைந்தார்; காடுகரைகளிலே திரிந்தார்; பசி பட்டினிகளிலே அலலலுற்றார். துன்பத்தை வலிதாக ஏற்று ஏற்று, நடக்கவும் செயலற்றுத் துன்புற்றார். தம்மால் எவ்வளவு துன்பம் தாங்கமுடியும் என அளவிட்டுப் பார்த்தார். மூச்சை அடக்கித் தவத்தில் நின்றார். காதின் வழியாகக் காற்றுக் கிளம்பியது. அதனையும் பொத்தினார். குத்திக்குடைவது போலத் துன்புற்றார். போராட்டத்தின் மேல் போராடினார்; விரலை வயிற்றில் வைத்தால், முதுகெலும்பு தட்டுமளவும் பட்டினி கிடந்து தவம் செய்தார். நாற்பது நாள்களுக்கு மேலும் "சோறும் நீரும்" இன்றியிருந்தால் என்ன ஆகும்? பின்னே போதி மரத்தின் கீழே ஞானம் பெற்றார்.

> "சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
> சுடச்சுட நோற்கிற் பவர்க்கு".

என்றார் திருவள்ளுவர். தீயின்கண் ஓடும் பொன்னுக்கு அது சுடச் சுடத், தன்னோடு கலந்த குற்றம் நீங்கி, ஒளி மிகுவது போல, தவம் செய்ய வல்லார்க்கு, அதனால் வரும் துன்பம் வருத்த வருத்தத் தம்மொடு கலந்த பாவம்

நீங்கி ஞானம் மிகும். புத்தர் வாழவில் அப்படியே நிகழ்ந்த செய்தி இது.

"உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு"

என்றார் திருவள்ளுவர். அதற்கு உருவாக விளங்கியவர் எவர்? புத்தரினும் சிறந்தார் ஒருவர் உளரோ? தமக்கு வந்த துயரங்களைப் பொறுத்தார்; பிற உயிர்களுக்கு ஒருசிறு தீங்கும் செய்தார் அல்லர்; மாறாக நலமே புரிந்தார். ஆதலால் வள்ளுவர் காணும் தவத்திற்கு உருவாக அமைந்தவர் புத்தர் பெருமானே ஆவர்.

ஆடுகளை ஓட்டிக் கொண்டு போகிறான் ஒருவன்; எங்கே போகின்றன? என வினவுகிறார் புத்தர்; அரசர் பிம்பிசாரன் நடத்தும் வேள்விக்குப் பலியாகச் செல்கின்றன என்றான் ஆட்டு மந்தைக்காரன். புத்தர் உள்ளம் இரங்கியது. இளகியது. அழுதது. ஆங்கே ஒரு நொண்டியாடு! நடக்கத் திணறித் தயங்கி வந்தது. அதன்மேல் இரக்கம் காட்டாத மேய்ப்பன் அடித்துத் துன்புறுத்தினான். புத்தர் அவ்வாட்டைத் தோளின் மேல் தூக்கிப் போட்டுக் கொண்டு நடந்தார்; என்னே புத்தரின் அருள்; உலகை உய்விக்க வந்த அந்த உத்தமர். உயிர்க்கு இரக்கம் காட்டுதலே, உயிருள்ளார் கடன் என்பதை உணர்த்த வந்த பெருமான் செயல். எவருள்ளத்தைக் கொள்ளை கொள்ளாது? வள்ளுவர் குறள் வருகின்றது;

"அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்"

அந்தணர் எவர்? என ஒரு வினாவை எழுப்புகிறது திருவள்ளுவர் திருவுள்ளம். அதற்கு விடை "அறவோர்" என்கிறது அவருள்ளம். "அறவோர்" எவர்? என மேலும் வினா எழுகின்றது. உயிர்கள்மேல் அருள் கொள்ளுவோர், செந்தண்மை கொள்ளுவோர், என்று விடை வருகிறது. புத்தர் வாழ்வில் முகிழ்த்த, முப்பால் மொழி இது என்பதில் தவறும் உண்டோ?

"தான் ஒரு குற்றமும் செய்யாதிருந்தும் தனக்குக் கிடைக்கும் வசைகளையும் அடிகளையும் இறைத் தண்டனையையும் பொறுமையோடு ஏற்றுக் கொண்டு, பொறுமையே தன் ஆற்றலாகவும் பலங்களே தன் சேனைகளாகவும் பெற்றுள்ளவன் எவனோ அவனையே நான் அந்தணன் என்று சொல்வேன்".

"வெகுளியை விட்டவன், கடமைகளிலே கவனம் உள்ளவன், ஒழுக்க விதிகளின்படி நடப்பவன், பரிசுத்தமானவன், தன்னடக்கமுள்ளவன் எவனோ, எவன் இவ்வுடலைக் கடைசி உடலாகக் கொண்டுள்ளானோ - அவனையே நான் அந்தணன் என்பேன்".

"நிற்பனவும் திரிவனவுமாகிய எவ்வுயிரையும் துன்புறுத்தாமலும், வதைக்காமலும் வதைக்கக் காரணமாய் இல்லாமலும் எவன் உள்ளானோ அவனையே நான் அந்தணன் என்பேன்".

"பகைமை உணர்ச்சியுள்ளவர் நடுவே பகைமை அகற்றும், தடியெடுத்து நிற்போர் நடுவே அமைதியுடனும், ஆசையுடையோர் நடுவே, ஆசை அற்றும் உள்ளவன் எவனோ, அவனையே நான் அந்தணன் என்பேன்," என்று புத்தர் அருளியுள்ள தம்மபதத்திலுள்ள செய்திகளை அறிவோர், "அந்தணர் என்போர் அறவோர்" என்று வள்ளுவர் கூறும் விளக்கத்தைத் தெள்ளிதில் அறிவர்.

ஆடுகளின் பின்னே, நொண்டியாட்டைத் தோளில் கொண்டு புத்தர் வந்ததை அறிந்தோம் அல்லவா! அவர் பிம்பிசாரனின் வேள்விச் சாலைக்கே வந்து சேர்ந்தார். வேந்தனைக் கண்டார்.

"வாழும் உயிரினை வாங்கிவிடல் - இந்த
மண்ணில் எவர்க்கும் எளிதாகும்
வீழும் உடலை எழுப்புதலோ - ஒரு
வேந்தன் நினைக்கினும் ஆகாதையா!"

என்று அறிவுரை கூறினார்.

"ஆட்டின் கழுத்தை அறுத்துப் பொசுக்கி நீர்
ஆக்கிய யாகத்து அவியுணவை
ஈட்டும் கருணை இறையவர் தம் கைகளில்
ஏந்திப் புசிப்பரோ கூறுமையா?,"

என இரக்கமிக உரைத்தார்.

"மைந்தருள் ஊமை மகனை ஒருமகன்
வாளால் அறிந்து கறிசமைத்தால்
தந்தையும் உண்டு களிப்பதுண்டோ? - இதைச்
சற்று நீர் யோசித்துப் பாருமையா!"

என்று சிந்தனையைக் கிளப்பினார்.

"தாயென நம்பி வரும் உயிரை - யாக
சாலை நடுவில் கிடத்தி ஒரு
பேயெனக் கீறிப் பிளப்பதனால் - என்ன
பேறும் பெருமையும் பெற்றீரையா?"

என்று இடித்துரைத்தார்.

வாய்பேசா உயிரெல்லாம் அங்குக் கூடி வாய்பெற்று வழக்கிட்டது போல வழக்காடினார் புத்தர்பெருமான். "செய்பிழையாவும் பொறுப்பீர்; கொலை தவிர்க்க ஆணை பிறப்பிப்பேன்" என்று ஏற்றுக் கொண்டான் வேந்தன். இக்கருத்து வள்ளுவரைத் தட்டியெழுப்பியிருக்க

வேண்டும். நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து உருகியிருக்க வேண்டும். அதனால் வெளிப்பட்டது ஒரு திருக்குறள்.

"அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று,"

என்பது அது. ஆயிரம் வேள்வி செய்தும் ஆவதென்ன? உயிரைக் கொல்லாமை, கொன்றதைத் தின்னாமை இதுவே தலையாய அருள் வேள்வி என்பது இதன் பொருள்.

புத்தர் காட்டுவழியே அலைந்தார் அல்லவா? ஒரு நாள் கடுவெயிலில் வாடி மயங்கிக் கீழே வீழ்ந்தார். ஆங்கே ஆடு மேய்த்துக் கொண்டிருந்தான் ஒரு சிறுவன். ஓடிவந்தான். ஒரு மரத்தின் கிளையைக் கொணர்ந்து புத்தர்மேல் வெயில் படாதாவாறு ஊன்றினான். ஓர் ஆட்டைக் கொணர்ந்து முன்னே நிறுத்தி மடியில் இருந்து புத்தர் வாயில் படுமாறு பாலைக் கறந்தான். பால் தெளிக்கப்பட்டதும், சிறிது பருகியதும் புத்தர்க்கு உணர்வு வந்தது. "தம்பி! கலத்தினிலே கொஞ்சம் பாலைக் கறந்து தா" என்றார். "ஐயையோ! ஆகாது. யான் இடைச் சிறுவன். தீண்டத் தகாதவன்," என்றான். புத்தர் அவனுக்கு அருள்மழை பொழிந்தார்: தம்பி!

"ஓடும் உதிரத்தில் - வடிந்து
ஒழுகும் கண்ணீரில்,
தேடிப் பார்த்தாலும் - சாதி
தெரிவதுண்டோ அப்பா!.

எவர் உடம்பினிலும் - சிவப்பே
இரத்த நிறமப்பா!
எவர் விழிநீர்க்கும் - உவர்ப்பே
இயற்கைக் குணமப்பா"

"பிறப்பினால் எவர்க்கும் - உலகில்
பெருமை வராதப்பா!
சிறப்பு வேண்டுமெனில் - நல்ல
செய்கை வேண்டுமப்பா"

என்று நொழிந்தார். "நன்மை செய்பவரே மேற்குலத்தார்; தீமை செய்பவர் கீழ்க்குலத்தார்" என்று விளக்கினார். சிறுவன் தெளிந்தான். கலத்திலே பால் கறந்து கொண்டு வந்து தந்தான். "பிறப்பினால் எவர்க்கும் பெருமை வராது. சிறப்பு வேண்டுமெனில் நல்ல செய்கை வேண்டும், என்னும் புத்தர் மொழி, திருவள்ளுவர் திருமொழியாக எப்படி வெளிப்படுகிறது பாருங்கள்:"

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும், சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்."

"மேல்இருந்தும் மேலல்லார் மேல்அல்லர்; கீழ்இருந்தும்
கீழ்அல்லர் கீழலல்ல வர்,"

என்று செப்புகிறார் செந்தமிழ்ப் புலவர். செயற்கரிய நற்காரியங்களை செய்யாத சிறியர், உயர்ந்த குலத்திற் பிறந்தவரெனக் கூறினும் பெரியராகார்த் தாழ்ந்தோராகக் கருதப்படுவர், நற்காரியங்கள் செய்யின் பெரியோராவர். ஒருசிறு மாற்றமும் இல்லாமல் ஒருவர் உரைத்ததே போல வெளிப்பட்டுள்ளது அல்லவா: எவ்வெவ்விடத்தில் பிறந்தால் என்ன, தாமரையில் எழிலும், மல்லிகையின் மணமும் ஒன்றாகத்தானே உள்ளன. அறிஞர்கள் எங்கே பிறந்தால் என்ன? எக்காலத்தில் மொழிந்தால் என்ன? ஒன்றாகவே உள்ளது.

புத்தர் அரிது முயன்று கண்டு தெளிந்துரைத்த முடிவென்ன? ஆசையே துன்பத்துக்குக் காரணம் என்பது தானே! ஆசையை ஒழிப்பது தானே துன்ப நீக்கமும் இன்ப ஆக்கமும். திருவள்ளுவர் அவாவறுத்தல் என்றே ஓர் அதிகாரமே படைத்துள்ளார். எத்தனை எத்தனை அருமணிகள் ஆங்கு மின்னுகின்றன. புத்தர் வாழ்நாளெல்லாம் கண்ட வயிரமணிகள் அங்கு வனப்புற வைத்துப் போற்றப் பெற்றுள்ளன எனலாம்.

"ஆசை இல்லாதவர்க்குத் துன்பம் இல்லை. ஆசை உண்டாயின் துன்பம் அடுத்தடுத்து வரும். ஆசை என்னும் கொடுந்துன்பம் அழிந்தால் இன்பம் இடைவிடாது வரும். ஆசை ஒழிந்தால் அழியா இன்பம் எய்தும்". இவை வள்ளுவர் வழங்கும் மும்மணிகள்:

"அவாஇல்லார்க்கு இல்லாகும் துன்பம், அஃதுண்டேல்
தவாஅது, மென்மேல் வரும்"

"இன்பம் இடையறா தீண்டும், அவாவென்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்".

"ஆரா இயற்கை அவாநீப்பின், அந்நிலையே
பேரா இயற்கை தரும்"

அதாவது, ஒருகாலும் நிரம்பாத இயல்பினையுடைய அவாவினை ஒருவன் நீக்குமாயின், அந்நீப்பு அவனுக்கு அப்பொழுதே எஞ்ஞான்றும் ஒரு நிலைமையனாம் இயல்பைத் கொடுக்கும், என்பன வள்ளுவர் வாக்குகள்.

இவற்றுடன் புத்தர் பொன்மொழிகளைக் கேட்போம்:

"எவனை இந்தக் கொடிய நஞ்சு போன்ற ஆசை பற்றிக் கொள்கிறதோ, அவனுக்குத் துன்பம் காட்டுப் புல்லைப் போல் வளர்ந்து பெருகிக் கொண்டே இருக்கும்"

"மரத்தை வெட்டினாலும், அதன்வேர் கெடாமல் உறுதியாக இருந்தால் மீண்டும் தளிர்த்துவிடும். அதுபோல் ஆசையின் காரணங்களாகிய வேர்கள் அழிக்கப் படாவிட்டால் துன்பம் திரும்பத் திரும்ப

வளர்ந்து கொண்டே இருக்கும்".

"நான் யாவற்றையும் வென்றவன். நான் யாவற்றையும் அறிந்தவன். வாழ்வின் நிலைகள் யாவற்றிலும் நான் ஒட்டுப் பற்றில்லாதவன். எல்லாவற்றையும் நான் துறந்தாயிற்று. அவாவை அழித்ததால் நான் முக்தி அடைந்தேன்."


"வயல்களுக்குத் தீமை களைகள்: மனித வர்க்கத்திற்குத் தீமை ஆசை. ஆதலால் ஆசையற்றவர்களுக்குச் செய்த உதவி பெரும் பயனை அளிக்கும்".

மனித வரலாற்றில் புத்தர் பெருமானுக்குத் தனிப் பேரிடமுண்டு. அவரைப் போல் முழுமையாகச் சிந்தித்தவர் அரியர். சிந்தனைக்கே இலக்கணம் வகுத்தவர் அவர். பொன்னைத் தேய்த்துப் பார்த்தும், வெட்டிப் பார்த்தும், சுட்டும், மாற்றுக் காண்பது போல ஒவ்வொரு பொருளையும் ஆராய்ந்து கண்டவர் அவர். அவ்வாறே ஆராய்ந்து காணவேண்டும் என்றவரும் அவர். திருவள்ளுவரும் அத்தகையரே.

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

"எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு".

என்பவை வள்ளுவர் வழங்கிய திருமணிகள். எந்தப் பொருள் ஆனால் என்ன? அந்தப் பொருளில் அமைந்துள்ள மெய்ம்மை யாது என்பதைக் காண்பதே அறிவாகும்! இவ்வளவோ! இவர் கூறினார் அவர் கூறினார் என்று ஏன் ஆராய வேண்டும்? கூறிய பொருள் என்ன, என்பதன்றோ முதன்மையானது. எதிர்பாராதவர் இடத்துக் கூட ஏற்றமிக்க கருத்துக்கள் கிடைப்பதில்லையா? இக்கருத்துக்களை வழங்குகிறார் வள்ளுவர். புத்தரோ என்ன சொல்கிறார்? "நான் கூறுகிறேன் என்பதற்காக ஒப்புக் கொள்ளாதே. உள் அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் பொருந்தி வருகிறதா, என்பதைப் பார்த்தே ஏற்றுக் கொள்" என்கிறார். இருவர் கருத்துக்களும் ஒன்றே! இருவர் சொற்களும் ஒன்றே! ஆம்! உள்ளத்தால் ஒன்றுபட்ட சான்றோர் உரைமணிகள் ஒன்றுபட்டனவாகவே இருக்கும். ஆதலால் கருத்தால் பெரிதும் ஒன்றுபட்ட பெருமக்களை நினைவு கூர்தல் இன்பம் மட்டுமன்று, பெரும்பயனுமாகும்.





சன்மார்க்க வித்தகர்

(ஆன்ம சக்தி. பி.வெங்கடேசன்)

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

"அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி
விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே"

"சூரியர்கள் சந்திரர்கள் தோன்றாச் சுயஞ்சோதி
பூரணதே யத்திற் பொருந்தும் நாள் எந்நாளோ"

தாயுமானவர் அருளிய மேற்கண்ட கண்ணிகள் அவருடைய அருள்ஞானத் திருவாழ்வை நமக்கு எடுத்துக்காட்டுக்கின்றன. அருளரசரின் அனைத்துப் பாடல்களுமே உலகில் அறத்தையும் சமரச சன்மார்க்கத்தையும் நிலைநாட்டத் தோன்றிய அருட்பாடல்களாகும் . இவ்வரிய செல்வம் தமிழ்மக்களுக்குக் கிடைத்த பெரும் பேராகும்.

தோற்றம்

தமிழ்த் திருநாடாம் சோழவள நாட்டில் இன்றைக்கு ஏறக்குறைய 300 ஆண்டுகளுக்கு முன்பு திருமறைக்காடு (வேதாரண்ய) எனும் திருத்தலத்தில் இருபேரன்பு கொண்ட தெய்வீகச் சகோதரர்கள் வாழ்ந்து வந்தனர். ஒருவர் பெரியவர் வேதாரண்யர் மற்றவர் கேடிலியப்பப் பிள்ளை. அவ்வூர் மக்களின் பெருமதிப்பைப் பெற்ற பெருங்குணசீலர்களாக இரு சகோதரர்களும் திகழ்ந்தனர். மக்கள் விரும்பியவாறு, கேடிலியப்ப பிள்ளை மறைக்காட்டிலுள்ள திருக்கோயிலின் அறங்காவலராகத் தொண்டாற்றி வந்தார். இக்கால கட்டத்தில்தான், திருச்சி மன்னர் முத்துக்கிருஷ்ண நாயக்கர் தனது பரிவாரங்களுடன், திருமறைக்காட்டு இறைவனை வழிபட அங்கு வந்தார். ஆலய சார்பில், கேடிலியப்பபிள்ளை அரசரை அன்போடு வரவேற்று, தகுந்த மரியாதையளித்தார். கேடிலியப்பபிள்ளையின் நற்பண்புகளையும், நல்லாற்றலையும் கண்ட அரசர், தனது அரசவையில் அவருக்குத் தலைமைக் கணக்காயர் பதவியளிக்கவிருப்பதைக் தெரிவித்து திருச்சிக்கு வருமாறு பணித்தார். தமையனார் வேதாரண்யர் தம்பி கேடிலியப்பரை திருச்சிக்கு அனுப்பி வைப்பதே சிறப்பு என உணர்ந்து வேண்டிய ஏற்பாடுகள் செய்தார். கேடிலியப்ப பிள்ளையோ தனது ஒரே மகன் சிவசிதம்பரத்தை, குழந்தையே இல்லாத தமையனார் வேதாரண்யரிடம் ஒப்புவித்துவிட்டு, துணைவியார் கெஜவல்லி அம்மையாருடன் திருச்சி வந்து சேர்ந்தார். கேடிலியப்பர் அரண்மனையில் தனது கடமைகளைச் சீராக செய்து வந்தார். ஆற்றல்மிக்க அயராத பணிகளுக்கிடையிலும் அவரது உள்ளம், அன்பும் அறமும்,ஊறுகின்ற ஊற்றுக்கேணியாகத் திகழ்வதை கண்டு அரசர் உள்ளூரப் பெருமிதம் கொண்டார். கேடிலியப்ப பிள்ளை, சிராப்பள்ளிக்குன்றில் கோயில்கொண்டிலங்கும் சிவபெருமான் தாயுமானவரிடம் இடையறாது உருகிநின்று, அன்பைப் பெருக்கி, தமக்கு ஓர் ஆண்மகவைக் கொடுத்தருள வேண்டி வழிபட்டு வந்தார். அதன் காரணமாக, இப் பூவுலகில் வந்துதித்த சன்மார்க்கச் சுடர்தான் நம் தாயுமானவர்.

வளர்ச்சி

தாயுமானவர், உலகியல் மரபுப்படி தோன்றித் தவழ்ந்தும் வளர்ந்து தக்க வயதினை எய்தினார். தந்தையார் கேடியலியப்ப பிள்ளை தமது திருமகனுக்கு தக்க ஆசிரியர்களைக் கொண்டு, தமிழ் தெலுங்கு வடமொழிகளைக் கற்பித்து அதில் ஆழ்ந்த புலமை பெறச் செய்தார். வேதாந்த சித்தாந்த ஞானக் கல்வி தாயுமானவரின் உள்ளத் தாமரையில் இயற்கையாகவே மலர்ந்து மணம் பரப்பியது.

நீர் வேட்கையுற்றவன் வேறொன்றையும் நாடாது நீரையே நாடுவான் போன்று, தாயுமானவர் முந்தைய பிறவியின் தொடர்பு தொடர இப் பிறவியிலும் சிந்தை அவிழ்ந்து சின்மயமாக நின்று சீரருளையே நாடி நின்றார்.

காலமும் கல்வியும்

காலத்தால் மறைந்தார் கேடிலியப்ப பிள்ளை. மன்னவர் உடனே தாயுமானவரை அழைத்து, தந்தையார் விட்டுச் சென்ற பணியினைத் தொடருமாறு பணித்தார். தாயுமானவர் அரச ஆணையை மறுக்காது ஏற்றார். அரண்மனையிலே பணி! ஆனால் அகமும் புறமும் அருள் நிலையில் கொண்டுள்ள வேட்கையைத் தணிக்க வழியறியாது தவித்தார். புறத்தே வான வெளியில் சூரியனும் சந்திரனும் நாள்தோறும் தோன்றித் தோன்றி மறைந்து கொண்டிருப்பதைக் காணக் காண அவரது உள்ளம் ஏக்கமுற்று வாடியது. உலகியல் வாழ்க்கை வேம்பெனக் கசந்தது. மனவெளி கடந்த பரவெளியில் சூரியர்களும் சந்திரர்களும் தோன்றும் நாள் காணுகின்ற

அந்த இனிய நாள் எந்த நாளோ? அந்த ஞானக்கல்வியைக் கற்பிக்கு ஆசான் யாரோ? அவர் எங்கிருக்கின்றாரோ? எப்போது வருவாரோ? என்றெல்லாம் நினைந்து நினைந்து நெஞ்சம் நைந்தார்.

மேலே வானத்தையும், கீழே பூமியையும், உதிக்கின்ற ஆதவனையும், ஒளிவிடும் நிலவினையும், அடிக்கின்ற காற்றையும், சூழ்ந்துவரும் மேகக் கூட்டங்களையும், பொழிகின்ற மழையினையும், அலைகின்ற கடலையும் பாடித் திரியும் வண்டினங்களையும் பறந்து செல்லும் பறவையினங்களையும் பார்த்துப் பார்த்து நீங்கள் பூரணமாம் பெரிய பொருளைக் கண்ட துண்டோ? கண்டு பேசியதுண்டோ? எனக் கேட்டுக் கேட்டுத்திக்கனைத்தும் தெண்டனிட்டுத் தேடித்தேடி அலையும் அளவிற்கு, இவருடைய திருவருள் நாட்டம் வளர்ந்து கொண்டே சென்றது.

அரண்மனையில் தாயுமானவர் ஆற்றிவந்த பணிகளைவிட அவருடைய தெய்வீகத் தன்மையும் அருட் பொலிவும் அரசரை வெகுவாகக் கவர்ந்தன. எனவே தான் வேதாந்த சித்தாந்த புலவர்களைக் கொண்ட ஒரு பேரவையினைக் கூட்ட வேண்டுமென்ற தாயுமானவரின் விருப்பத்தை அரசரே முன்னின்று நிறைவேற்றி வைத்தார். அவையில் எல்லோரும் கூடினார்களே தவிர கூடியதன் நோக்கம் நிறைவேறவில்லை. ஞான மார்க்கத்தில் தனக்குள்ள சந்தேகங்களுக்கு விளக்கம் காணத் துடித்த தாயுமானவருக்கு, வந்தவர்களில் ஒவ்வொருவரும், ஒவ்வொரு கோணத்தில் தங்களது கருத்துக்களைக் கூறியது மேலும் வேதனையையும் குழப்பத்தையும் உண்டாக்கி விட்டன. 'பூதலயமாகின்ற மாயை முதலென்பர் சிலர் என்ற பாடலினின்றும் இதனை அறியலாம்.

வழிபாடு:

'தந்தை தாயும் நீ, என் உயிர்த் துணையும் நீ' என நாள் தோறும் பலமுறைகள் சென்று சிராப்பள்ளிக் குன்றுடையோனின் சீரடியில் வீழ்ந்து, அங்கைகொடு மலர்தூவி அங்கமது புளகிப்ப, அன்பினால் உருகி, விழிநீர் ஆறாகப் பெருக்கி நின்று வணங்கினார். மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாகத் தொடங்கித் தொழுதார். எந்தநாள் இறைவனின் கருணைக்கு உரித்தாகும் நாளோ என, எண்ணி எண்ணி இதயம் வாடினார். ஆலயம் தொழுது அரண்மனை அடைந்தபோதும் நெஞ்சத்தைக் கோயிலாக்கி, நினைவை சுகந்தமாக்கி, அன்பை மஞ்சன நீராகக் கொண்டு மானசீகமாக வழிபட்டார்.

மோனகுரு தோற்றம்:

நாள்தோறும் காலந்தவறாமல் சென்று தாயுமான தயாபரமூர்த்தியை வணங்கி வழிபடும் வழக்கப்படி ஓர்நாள் தாயுமானவர் குன்றேறிச் சென்று, குன்றிடாத கொழுஞ்சுடராம் இறைவனின் திருச்சந்நிதானத்தை அடைந்தார். பாராயோ என்னை முகம்பார்த்து ஒருகால் என்கவலை தீராயோ, வாய்திறந்து செப்பாய் பராபரமே என நீராய்க்கசிந்து நெட்டுயிர்த்து நின்று வேண்டினார். வழிபாடு முடிந்தது. அண்ணலை நினைந்தவாறே அரண்மனை செல்ல மூலவரை விட்டுப் பிரிந்தார்.

சில அடிகளே நடந்தார். வெந்து வெடிக்கின்ற சிந்தை வெப்பகல, வந்து பொழிக்கின்ற மாமழையென, வழியில் குன்றின் ஓரிடத்தில் அற்புதமாய் எழுந்தருளியிருக்கும் மோனகுருவைக் கண்டார். காந்தம் இரும்பைக் கவர்ந்திருக்கும் தன்மை போன்று மோனகுருவின் அருட்சக்தி தாயுமானவரைக் கவர்ந்திழுத்தது. கணத்தில் பாய்ந்து சென்று சற்குருவின் திருவடியில் கண்புதைத்தார். மோனியின் மூடிய திருக்கண்கள் மலர்ந்தன. தாயுமானவர் சட்சு தீட்சை (பார்வை) பெற்றார். திருக்கரங்கள் தாயுமானவரின் தோள்களைத் தீண்டின. இப்போது ஸ்பரிச தீட்சை (தொடுதல்) பெற்றார். மோனகுரு எழுந்து கனவேகமாக நடக்கத் தொடங்கினார். தாயுமானவர் நிற்கவில்லை. விடாமல் பின் தொடர்ந்தார். திருமூலர் மரபில் சற்குருவாக வந்த மோனகுரு மீண்டும் ஓரிடத்தில் அமர்ந்தார். "சும்மா இரு" என்ற ஒரு வார்த்தையின் உண்மையை குறிப்பாக உணர்த்தினார். தெய்வத்திருவருளால், தனக்கு உபதேசிக்க வந்த மோனகுருவைப் பற்றி பின்னால் தாயுமானவர் குறிப்பிடுகையில் ,*169*சின்முத்திராங்க மரபில் சத்தமற எனையாண்ட குருமௌனி கையினால் தமியனேற்கு உதவு பொருளே." எனக் கூறுகின்றார். உள்ளொளி காட்டிய உயிராம் மோனகுரு தன்னைவிட்டகன்றதும், தாயுமானவர் தாயைப்பிரிந்த சேயெனத் தவித்தார்.

அவரது புலன்கள் மயங்கின. ஞானப் பித்தேறிச் சுழன்றார். அருள் ஆசை பெருக்கெடுத்துப் பெருகியது. குருவின் ஆணைப்படி சும்மாயிருக்கச் சுகம் உதயமாகும் எனவும் சும்மா விருந்தால் சுட்டற்ற பூரணநிலை எய்தமுடியும் எனவும் உள்ளுள்ளே உணர்ந்தார். அக்கணமுதல் அனுபவப் படியைத் தாண்டிச் செல்லும் ஆன்ம வீரரானார்.

மோன நாயகர்

"வேட்டைப் புலப் புலையர் மேவாத வண்ணம் மனக் காட்டைத் திருத்திக் கரைகாணப் புறப்பட்டார்" நம்முடைய தாயுமானவர். வாசா கைங்கரியமின்றி ஒரு சாதன மனோ வாயு நிற்கும் வண்ணம் வாலாயமாகப் பழகி அறியாதவர். குருவருளுக்குப்பின் அத் துறையில் ஆழ்ந்து பயின்றார். அதன் காரணமாக எழுந்த மாபெரும் எதிர்ப்பையும் சமாளிக்க சித்தமானார். ஆம், நினைவொன்றும் நினையாமல் நின்று மோன சத்தைத்

திரட்டுகின்ற இனிய வேளையில் அதனை அழித்துக் கெடுக்கவரும் ஆயிரமாயிரம் எண்ணக் கூட்டங்களை எதிர்த்துப் போரிட்டார். தியான மோனத்தில் பயிற்சி பெறுங்கால், மனக் கடலில் மறைந்துள்ள தத்துவக் கூட்டத்தின் சூக்கும நுட்பங்களை நன்கறிந்தார். "காராரும் ஆணவக் காட்டைக் களைந்தார். அகங்காரமெனும் கல்லைப் பிளந்தார். நெஞ்சகமான பூமிவெளி காணத் திருத்தினார். அதன்மேல் பாரதியறியாத மோனமாம் வித்தைப் பதித்தார். அன்புநீர்ப் பாய்ச்சி, அது பயிராகுமட்டும் மாமாயை வன்பறவை (எண்ணங்கள்) அணுகாதவண்ணம் நேராக நின்றார்." மாயமாம் மனத்தை மாய்த்து ஓங்காரக் கொடியைப் பறக்கவிட, சிரத்தை எனும் வாள்வேண்டும்; பந்தமற மெய்ஞ்ஞான தீரம் வேண்டும்; இவைகளைத் தந்து என்னைப் பாதுகாத்து அருள் செய்ய வேண்டும் என சித்தாந்தப் பேரொளியைச் சிந்தை செய்தார்.

"பல மொழிக்கும் இடம் கொடுக்கும் ஒரு மொழியே மலம் ஒழிக்கும் ஒழிக்குமென மொழிந்த குருமொழி" என உணர்ந்தார். குருநாதர் சொன்ன ஒரு வார்த்தையினை மலையிலக்காக நம்பினார். முயன்ற முயற்சியில் சிறிதும் சோர்ந்திடாது முன்னேறினார் வெற்றிப் படிகளில் காலூன்றிச் சென்று, காய மோனத்தைக் கடந்தார்; மனோ மோனத்தைத் தாண்டினார்; வெளிமோனத்தைத் தீண்டினார். உடல் குழைய, உள்ளிருக்கும் கள்ளம்குழைய, ஓயாது உழைத்தார். வாக்கும் மனமும் மௌனமுற எந்தையாம் இறைவனை நோக்கும் மௌனம் வெறும் நூலறிவால் மட்டும் கிடைப்பதன்று. அசைவற்ற மோன சாதனை ஒன்றின் மூலமே அதனைப் பெறமுடியும் என உணர்ந்தார்; கல்லெறியப் பாசி களைந்து நன்னீர் காணும் நல்லோரின் சொல்லுணர்ந்தார். ஞானம் வந்து தோன்றியது. ஞானச் சுடராக மிளிர்ந்தார். மோன நாயகராய்த்திகழ்ந்தார்.

மாயத்திரை:

திருச்சிராப்பள்ளி அரண்மனையில் ஓர்நாள். எங்கிலும் துயரக் குரல்கள் ஒலித்தன. நோய்வாய்ப்பட்டிருந்த அரசர் அதனின்றும் மீளாது மறைந்துவிட்டார். தாயுமானவர் அருகிலிருந்து அன்புருவான அரசருக்கு வேண்டிய இறுதிக் கடன்களைச் செய்து முடித்தார்.

காலங்கள் கடந்தன. அரசி மீனாட்சியின் ஆட்சி முறைகள் செம்மையாகவே நடைபெற்று வந்தன. இடையில் ஊழ்வினை வந்து உறுத்திற்று. மோனக்கரும்பைச் சுவைத்துக் கொண்டிருந்த தாயுமானவர், அரசியரின் புறக்கண்களுக்கு தித்திக்கும் தீஞ்சுவைக் கரும்பாகத் தென்பட்டார். தூய பனித்திங்களும் சுடுவதெனப் பித்தேற்றும் மாய மடவார்போலானார் அரசியார். உண்மையில் அரசியார் மாயப் பொய் பலகூட்டும் மாயத்தாள் அல்லள். ஆனாலும் நெடு நாட்களாக வளர்த்து வந்த ஆசைச் சூழலிலிருந்து மீளமுடியாது தவித்தாள். தாயுமானவரை தனது மாயச் சுழற் காட்டில் சிக்கவைக்க முதலில் அன்பால் அணுகினார். பின் அதிகாரத்தில் மிரட்டினார். ஆண்டானுக்கு அடிமைக்கு நடுவே முளைத்த மனத்திரையை அடையாளம் கண்டு நீக்கிய தாயுமானவருக்கு, அரசியார் போடவந்த மாயத்திரை ஒரு பொருட்டாகவே இருக்கவில்லை பவழநிற ஒளிசிந்தும் மங்கல விளக்கு நம் தாயுமானவர். அவ்வொளி அழகில் மயங்கி வீழும் விட்டில் பூச்சி அரசி மீனாட்சி. அரசியின் அறியாமையைக் கண்டு தாயுமானவர் உளம் இரங்கி வருந்தினார். அரசிக்கு நல்லறிவு நல்கிடவேண்டி, நடுவுறு நாயக விளக்கின் நாயகனைச் சிந்தித்தார். இனியும் அவணிருந்தால், மனமாயைக் கன்மம் திரும்புமோ தொடுவழக்காய்ச் சென்மம் வருமோ என அஞ்சி, அன்று இரவே அருமைச் சீடர் அருளையருடன் திருச்சியை விட்டகன்றார்.

தல வழிபாடு

திருச்சியிலிருந்து அருளையருடன் புறப்பட்ட தாயுமானவர், அருகிலுள்ள திருவானைக்காவல் எனும் திருத்தலத்தில் வழிபாடு நிகழ்த்தினார். அவண் எழுந்தருளியிருக்கும் அகிலாண்ட நாயகி அம்மைமீது 'வட்டமிட்டொளிர' எனத் தொடங்கும் திருப்பாடல் ஒன்றைப் பாடினார். பின் தென் திசையை நோக்கிப் பயணம் மேற்கொண்டபோது, நல்லூர் எனும் சிற்றுரை அடைந்தார். அப்போது தாயுமானவர் தமது சிவபூசைப் பெட்டகத்தை எடுத்துவரத் தவறினமையை அறிந்து, அருளையரை அதனை எடுத்துவருமாறு அனுப்பி விட்டு, ஆங்கிருந்தார். அவ்வமயம், ஆங்குள்ள மலர்ச்சோலை ஒன்றினுள் சென்று, அஞ்செழுத்தின் உண்மையை நெஞ்சழுத்திக்கொண்டே, இறைவனுக்குச் சூட்டி மகிழ மலர் கொய்ய முனைந்தார். தூய்மையான பால்வண்ணப் பூக்களைத் தனது பசுங் கரங்களால் மெதுவாகக் கொய்யத் தொடங்கினார். சில பூக்களே கொய்திருப்பார். சிந்தை ஒருமித்து செயலற்று நின்றார். விரும்பும் சரியைமுதல் மெய்ஞ்ஞானம் நான்கும் அரும்பு, மலர், காய், கனி போன்றன. என்பது தாயுமானாரின் திருவுள்ளத் திருவாக்காகும். ஞானத்தில் சரியை நிலையில் மலர் வனத்தில் புகுந்த அடிகளார் ஞானத்தில் கிரியை நிலையில் மலர் கொய்ய முனைந்தார். பின் ஞானத்தில் யோக நிலையில் அசைவற்று நின்றார்.

ஞானக் கனியை எட்டிப் பிடிக்கும் தவஞானியெனத் திகழ்ந்தார். இச் சிற்றூரிலே கருணாகரக் கடவுள் எனும் பதிகம் பாடியருளினார். அப் பதிகத்திலுள்ள ஒரு பாடல்தான் மலர் கொய்த

படலத்தின் அனுபவத்தைத் தெரிவிக்கும் `பண்ணேன் உனக்கான பூசை' எனத் தொடங்கும் திருப்பாடலாகும்.

பின் அருளையர் பின் தொடர புறப்பட்டு விராலிமலையை அடைந்தார். அங்கிருந்த சித்தர் கணங்களுடன் தாயுமானவருக்குத் தொடர்பு ஏற்பட்டது. அப்போது சித்தர் கணம் என்ற பதிகம் பாடி அருளினார். அங்கிருந்து புறப்பட்டுப் புதுக்கோட்டை அருகிலுள்ள திருக்கோகர்ணம் என வழங்கும் கபிலை நகரை அடைந்தார். அத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் பெரியநாயகி அம்மைமீது `காற்றைப் பிடித்து' எனத் தொடங்கும் திருப்பாடல் ஒன்றைப் பாடியருளினார். பின் இராமேஸ்வரம் என்னும் தேவைநகர் சென்று அவண் எழுந்தருளியிருக்கும் இராமநாதரை சிந்தை குளிரச் சிந்தித்துத் துதித்தார். மலைவளர் காதலி அம்மையின் திருச் சந்நிதானத்தை அடைந்து `மலைவளர் காதலி' எனும் திருப்பதிகத்தைப் பாடியருளினார்.

இல்லறமும் துறவறமும்:

தாயுமானவர் திருச்சி அரசவையில் பணியாற்றி வருங்காலை, திருமறைக் காட்டில் அவரது தமையனார் சிவசிதம்பரம்பிள்ளை இல்லறத்தை இனிது நடத்தி வந்தார். அரண்மனையில் நிகழ்ந்த செய்திகளையும், தாயுமானவர் அருளையருடன் திருச்சியை விட்டகன்று, தல வழிபாடு மேற் கொண்டு, தற்போது இராமேஸ்வரத்தில் தங்கியிருக்கின்ற செய்தியினையும் சிவசிதம்பரம் பிள்ளை கேள்வியுற்றார். தமது அன்னையாருடன் கலந்து பேசி, ஒரு முடிவு செய்து கொண்டு இராமேஸ்வரம் விரைந்தார். தாயுமானவரைக் கண்டார். கண்களில் நீர் பெருக்கி மகிழ்ந்தார். திருமறைக்காடு போந்து அன்னையின் திருமுகத்தைக் காண வேண்டுமெனக் கேட்டார். தாயுமானவரும் இணங்கினார். மூவருமாக திருமறைக்காடு சேர்ந்தனர்.சின்னாட்களுக் கெல்லாம் திருமணப் பேச்சுக்கள் ஒலித்தன. நும் மரபைக் காத்திட இல்லறம் ஏற்கத்தான் வேண்டுமென, இரு கண்களினின்றும் கண்ணீர் ஊற்றென வெதும்பியூற்ற, தாயாரும் தமையனாரும் உள்ளம் உருகி நின்று வேண்டினர். ஊழ் வலியோ! அல்லது உலக நாயகனின் திருக்கூத்தோ! ஈதென்ன புதுமையோ! என தாயுமானவர் வியந்தார். மறுத்தல் வேண்டாம். உளமார ஏற்பதே ஏற்புடைத்து என உள்ளுணர்வு உணர்த்தியதையும் அவர் உணராமலில்லை. திருவருள் சம்மதத்தின் பேரில், ஓர்நாள் நல்லோரையில், வேத விதிப்படி தெய்வநெறியில் தோய்ந்த நல்லரசியாம் மட்டுவார் குழலி அம்மையாரை தாயுமானவர் தமது வாழ்க்கைத் துணைவியாக ஏற்றார்.

"வாழி சோபனம் வாழி நல்லன்பர்கள்
சூழவந்தருள் தோற்றமும் சோபனம்
ஆழிபோல் அருள் ஐயன் மவுனத்தால்
ஏழையேன் பெற்ற இன்பமும் சோபனம்"

என்ற இனிய திருப்பாடல் ஒன்று தாயுமானவரின் திருவுள்ளத் தாமரையினின்றும் தோன்றி வானில் கலந்தது. சாட்டையிற் பம்பர சாலம் போல் எலாம் ஆட்டுவான் இறையென அறிந்து, தாயுமானவரும் மட்டுவார் குழலி அம்மையாரும் தேட்டமொன்றற அருட்செயலாற்றிவந்தனர். இல்லறத்தில் அன்பின் ஆட்சி மேலோங்கி நின்றது. இன்பமாய் உலகமெல்லாம் பிழைப்பதற்கு உன் அன்புநிலை என்பார். அதுவும் நினையன்றி உண்டோ என பரம்பொருளின் திருவருளை நினைந்து தாயுமானவர் தண்ணீரில் தாமரை இலை என வாழ்ந்தார்.

மாதத்திலே ஒரு திங்களாக, மூவைந்து திங்களுக்கும் மேலாக திங்கள் தோன்றி மறைந்தன."மங்கலம் என்ப மனைமாட்சி மற்று அதன்; நன்கலம் நன்மக்கட் பேறு" என்ற தெய்வத் திருவள்ளுவரின் திருவாக்குப்படி, தாயுமானார் நடத்தி வந்த அறம்மிக்க இல்வாழ்வின் இனிய பயனாக முழுநிலவைப் போன்ற முத்தான செல்வம் கனக சபாபதி, பெறுதற்கரிய நன்மகனாத் தோன்றினார். தோன்றிய மகிழ்ச்சி, மைந்தனை ஈன்றெடுத்த மங்கையர்க்கரசியாம் மட்டுவார்குழலி அம்மையார் திடீரென மறைந்து விட்ட மனத்துயரால் மறைந்தது. தந்தை, தாய், தமர், தாரம் மகவு இவையெல்லாம் சந்தையிற் கூட்டம் என்பதை அறியாதவரா நம் தாயுமானவர்! மனைவாழ்வின் மாற்றத்தால் விளைந்த புதியதொரு மாற்றம் அடிகளாரை மாமுனிவராக்கும் புகழ்மிகு பெருவாழ்வுக்கு அழைத்துச் சென்றது. கேடிலியப்பர் சிவசிதம்பரத்தை தனது தமையனாரிடம் விட்டுச் சென்றதைப் போன்று, தாயுமானவர் செல்வன் கனக சபாபதியைச் சிவசிதம்பரம் பிள்ளையிடம் ஒப்புவித்து விட்டு அனைவரிடமும் விடைபெற்று வெளியேறினார். "அந்தக் கரணம் அடங்கத் துறப்பதுவே; எந்தத் துறவினும் நன்று எந்தாய் பராபரமே"என்று கூறிய அடிகளார். துறவுக்கு இலக்கணம் படைக்கவந்த வேதாந்த வீரராகப் புறப்பட்டார்.

இப்பூவலகின் நேசத்தாலும், பிறவிப் பிணியின் துன்பத்தாலும், அலைந்து அதனால் களைப்பு நீங்கிட, விண்ணவன் தாளெனும் விரிநிலா மண்டபத்தில் தண்ணீர் அருந்தித் தளர்வொழிய தணியா வேட்கை கொண்டு விரைந்தார். அருளையர் பின் தொடர்ந்தார்.

அத்துவித முத்திநிலை

அருளாளர்களின் திருப்பாதங்கள்பட்ட தெய்வத் திருத்தலங்கள் பலவும் சென்று, சட்டையொத்த இவ்வுடலைத் தள்ளுமுன்னே, எனக்குச் சகச நிட்டையைத் தந்தருள வேண்டும் ஐயனே எனத் தாயுமானவர் அன்பினால் உள்ளுருகி மொழி குளறி

வேண்டினார். பாக்கியங்கள் எல்லாம் பழுத்து மனமும் பழுத்தார். திருக்கூத்தை நோக்கும் திருவருள் பெற்றார். அந்தரத்தே நின்றாடும் ஆனந்த கூத்தனின் அருளால், தாயுமானவர் இராமநாதபுரம் போந்தார். நகரை அடுத்துள்ள லட்சுமிபுரம் எனும் கிராமத்திற்கருகில் அழகியதொரு மலர் வனத்தைக் கண்டு. அத் திருவிடத்தை ஆனந்த நிட்டைக்கு ஏற்ற அற்புத இடமெனத் தேர்ந்தெடுத்தார். உடனிருக்கும் மாணாக்கர் அருளையருடன், கோடிக்கரை ஞானியார் எனும் சீடரும் மற்றும் பல சீடர்களும் ஏற்படலாயினர். ஆசிரமம் அமைக்கப்பட்டது. தாயுமானவர் தொடர்ந்து தியான மோனத்தில் திளைத்தார். இடையில் சில நேரங்களில் சீடர்களுக்கு அருள் வார்த்தையும், காணவருவோருக்கு நல்லுபதேசமும் நல்கினார்.

விண்ணார் நிலவுதவழ் மேடையில் நின்னன்பர்கள் எல்லோரும் வீற்றிருக்க, என்னைமட்டும் இம் மண்ணான வீட்டில் இன்னும் வைத்திருப்பது ஏனோ பராபரமே என நெட்டுயிர்த்துப் பேரன்பில் நினைதல் செய்தார்.

ஓர் நாள் முத்துச்சுடர் போன்ற முழுமதி வானவீதியில் தண்ணொளிபரப்பித் தவழ்ந்து கொண்டிருந்தது. சென்றுசென்று அணுவாய்த்தேய்ந்து தேய்ந்து ஒன்றாகி நின்றுவிடும் நந்நிலை தன்னை நெருங்கிவருவதை தாயுமானவர் உணர்ந்தார். திருந்து சீரடித்தாமரைக்கு அன்புசெய்து பொருந்திவிடும் புண்ணியமிக்க நன்தாள் இந்நாளே என ஓர்ந்தார். திருக்கண்களை மூடினார் மாயக்காற்று மாயமாய்ப் புகுவதற்கும் இடமின்றி இந்திரியச் சாளரங்கள் யாவும் சரியாக மூடப்பட்டன. பயணம் தொடங்கியது. மன வெளி கடந்தார். ஏறு மயிர்ப்பாலம் உணர்வு இந்த விடயங்கள் நெருப்பாறெனவும் நன்றாய் அறிந்து. அதனையும் கடந்தார். சிற்பர வெளிக்குள் வளர்தற்பரமதான பரதேவையை அஞ்சலி செய்தார். பிரியாத பேரொளி பிறக்கின்ற அருட் ககனவட்டத்துள் நுழைந்தார்.

தீதணையாக்கர்ப்பூர தீபமென அவர்கண்ட சோதியுடன் ஒன்றி, சித்த நிருவிகற்பம் சேர்ந்தார். உடல் தீபம் வைத்த கர்ப்பூரம்போல் வயங்கிற்று. அருளொளி அணைத்தது. பேரொளி இணைத்தது. அருளரசர் தாயுமானவர் அத்துவித முத்திநிலை எய்தினார்.

சன்மார்க்கச் சுடர்

சரியை, கிரியை, யோக சாதனம் விடுத்ததெல்லாம் சன்மார்க்கமல்ல வென்பதை நன்குணர்ந்தவர் நம் தாயுமானவர். எனவேதான் தொடக்கமுதல்,அம் முறையினைச் சீராக, முறையாகச் செயல்படுத்தி வந்துள்ளார். தாயுமானவர் ஒரு முழுமைபெற்ற சன்மார்க்கச் சீலாராகத் திகழ்வதற்கு துடித்துக் கொண்டிருந்த வேளையில்தான் மோன குருதோன்றினார். ஆங்காரமான குலவேட வெம்பேயினையும், பூதமொடு பழகி வளர இந்திரியமாம் பேய்களையும், புந்தி முதலான பேய்களையும், போராடும் கோபாதி இராட்சசப் பேய்களையும் ஐந்தெழுத்தின் அருட்சக்திகொண்டு விரட்டியடித்தார். மனத்தை மாசற்ற மாணிக்கப் பெட்டகமாக மாற்றும் முயற்சியில் முனைந்துநின்று வெற்றி பெற்றார். எக்காலமும் எவர்க்கும் உதவுகின்ற ஏந்தலாக, எளியோரின் ஏழ்மைகண்டு இரங்கும் எந்தையாக, இன்சொல் தவறாது எப்போதும் நன்சொல் பகரும் நல்லறிஞராக, பொய்மையாம் இழுக்குரைத்து கொலைகள் பயிலாத பண்பாளராகத் திகழ்ந்தவர் மாமுனிவர் தாயுமானவர். அடிகளார் அவர்கள் இத்தகைய தெய்வீகப் பண்புகளைக் கைவரப் பெற்றமைக்குக் காரணம், அறிஞர் பெருமக்களும், கைவரப் பெற்றமைக்குக் காரணம், அறிஞர் பெருமக்களும், சித்தரினங்களும், மாமுனிவர்களும், தேவர்களும், தங்கள் வீடெனக்கொண்ட மோனத் திருவீட்டை இவர் தனது தாயகமாகக் கொண்டிருந்ததுதான்.

சந்தான கற்பகம்போல் அருளைக்காட்டத் தக்க நெறியாம் மோனநெறியே சன்மார்க்கம் என்பதனை `அந்தோ ஈததிசயம்'எனத் தொடங்கும் பாடலிலும், எச்சமயத்தாரும் வந்து இறைஞ்சா நிற்பதும், கண்டவுடன் ஆனந்தத்தைக் கூட்டுவிப்பதும் சன்மார்க்கமே என்பதனை `சன்மார்க்க ஞானமதின்' எனத் தொடங்கும் பாடலிலும் அழகுறத் தெளிவுபடுத்தியுள்ளார். சன்மார்க்கப் புனலில் நீராடி சமரசச் சந்தனம் பூசி, சுத்த அம்பரமாம் ஆடை அணிந்தார். எங்கெங்கே பார்த்தாலும் எவ்வுயிர்கும் அவ்வுயிராய் அங்கங்கிருப்பது அருளாம் ஆண்டவரே என்பதனை, சென்ற திக்கனைத்தும் பறைசாற்றினார். சன்மார்க்கச் சுடரென மிளிர்ந்தார்.

சமரச ஞானி


மனத்தின் இயக்கம் உள்ளவரை மனத்தில் வேறுபாடுகளும் தோன்றிக்கொண்டேயிருக்கும் என்பதனை உணர்ந்த நம் தாயுமான அடிகளார் ஒருரையால் வாய்க்கும் உண்மைக்கு ஓரனந்தம் நூல் கோடிப் பேருரையால் பேசில் என்ன பேராம் பராபரமே எனக் குறிப்பிடடுள்ளார். பலகோடி நூல்களைப் படித்தும், பல்வேறு கருத்துக்களைக் கேட்டும், பாதரசமாய் மனது சஞ்சலத்தில் ஆழ்ந்து சலனப்படாதிருக்க குருமொழிந்த ஒருமொழியின் சிறப்புணர்ந்து அவ்வழியில் சீரோடு சென்றால் சமரசம் எங்குள்ளது என்பது தெள்ளிதின் புலப்படும் என்பதைப் பல பாடல்களின் மூலம் தெளிவுபடுத்தியுள்ளார்.

எடுத்துக்காட்டாக "வேறுபடும் சமயமெல்லாம் புகுந்து பார்க்கின், விளங்கு பரம்பொருளேநின்

விளையாட்டல்லால் மாறுபடுங் கருத்தில்லை. முடிவில மோன வாரிதியில் நதித்திரள்போல் வயங்கிற்றம்மா" என்பதினின்றும் அறியலாம். மோனக் கடலில் சயனித்திருப்போர் அருகில் அருள் அலைகள் தவிர வேறு அலைகள் வந்து அலையாது சமரசமன்றி வேறு விரசம் தோன்றாது எனவே சமயங் கடந்த நிலையினை அல்லது சமரசத்தை உணரவேண்டின் மன விகாரத்தை மாய்க்கும் மோனப் பயிற்சி பெறுதல் அவசியமாகின்றது. சமயம் கடந்த மோன சமரசம் வகுத்த நீ எனத் தாயுமானவர் இறைவனை முன்னிலைப்படுத்தி விளிப்பதினின்றும் இதனை நன்கு அறியலாம்.

மைவிடா தெழு நீலகண்டய குருவே, விஷ்ணு வடிவான ஞானகுருவே, மலர்மேவி மறையோது நான்முகக் குருவே, மதங்கள்தோறும் நின்ற குருவே எனப்பாடி, சமயங்களிடையே சமயவாதிகளிடையே, சமரசத்தை நிலைநாட்டி அதற்கு வித்தூன்றிய வித்தகர்தான் சமரசஞானி தாயுமானவர். அவர் கண்ட பெருவாழ்வின் பெருவழி நோக்கி, அவர் தம் கொள்கை போற்றி, அவ்வழி நின்று செயலாற்றி உய்வோமாக.

"மூர்த்தி எல்லாம் வாழி எங்கள் மோனகுரு
வாழி அருள்
வார்த்தை என்றும் வாழி அன்பர் வாழி
பராபரமே"



பன்னிரண்டாம் திருமுறை

பெரிய புராணம்


சேக்கிழார்

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்(து) உள்ளமும் ஓங்கிட
மன்று ளார்அடியார் அவர் வான்புகழ்
நின்ற(து) எங்கும் நிலவி உலகெலாம்.

இன்பம் என்றும் எங்கும் பெருகுக! ஒன்றிய அன்புணர்வால் உள்ளம் ஓங்குக! உலகெலாம் அடியார் புகழ் ஓங்கி நின்று நிலவுக!



திருவள்ளுவர்



திருமூலர்



திருவருட்பிரகாச வள்ளலார்



வள்ளலார் கட்டளை

(நல்லாசிரியர், பெரும்புலவர் இர. திருஞான சம்பந்தர்.)

[நிலை மண்டில ஆசிரியப்பா]

உலக முதன்மொழி உயர்தனிச் செம்மொழி
நலமிகு தமிழ்மொழி வழங்கும் நாட்டில்
தோன்றிய ஆன்றோர் பலருள் வடலூர்
"தோன்றல்" அளப்பரும் ஆற்றலர் ஆவார்
பொன்போல் அவர்தரும் கட்டளை கேண்மின்!
மக்கள் பிறப்பை உற்ற அன்பரீர்!
தக்க முறையில் கடவுளர் அளித்த
வீடே நும்முடல் என்பது அறிமின்!
ஈடே யற்ற நும்முடல் மிளிர
காலைக் கடனை ஆற்றிய பின்னர்
காலை இளவெயிலில் ஐநாழிகை உடலை
போர்வை தன்னால் போர்த்திப் பின்னர்
வேர்வை மிகாத தொழிலினைச் செய்வீர்!
இளவெந் நீரில் நாளும் குளிப்பீர்!
துளங்கவே பசித்த பின்னரே உண்பீர்!
புளியும் மிளகாயும் உப்பும் குறைத்தே
வெள்ளைப் பூண்டும் வெங்கா யமுமே
சிறிதே சேர்த்து உணவினைச் செய்வீர்!
கருணைக் கிழங்கு மிகவும் நன்றாம்
கரிசாலங் கண்ணி தூதுளை முன்னி
முருங்கை பசலைக் கீரை வகைகளை
பருப்புடன் கலந்து சமைப்பீர்! சமைப்பீர்!
கத்தரி வாழை அவரை முருங்கை
கொத்தவரை தூதுளம் பீர்க்குப் புடலைக்
காய்கள் உணவிற் கேற்ற தாகும்
பொய்யுடன் பொறாமை கொலைமடி, கோபம்
நையவே இவற்றை விடுத்தல் வேண்டும்!
உறங்கும் போதெலாம் இடப்பால் உறங்குவீர்!
உள்ளம் சொல், செயல் மூன்றும் என்றும்
கள்ளம் இல்லா வகையில் வாழ்வீர்!
செம்பிற்குக் களிம்பு இயற்கை அதுபோல்
தெம்புறு உயிர்க்கு ஆணவம் இயல்பாம்
இதனை அறவே ஒழிமின்! ஒழிமின்!
இதமாய் உடலை வளர்க்க நீவிர்
புலாலை விடுமின்! புலாலை விடுமின்!
அருளுளம் கொண்மின்! அருளுளம் கொண்மின்!
அருட்பெருஞ் சோதி ஆண்டவன் தோன்றி
அருள்நிறை உலகில் வாழவே அருள்வான்.
என்பதை உணர்ந்தேன் ஆன்ம நேயர்காள்!
இன்புற்று வாழச் சூளினைக் கொண்மின்!
உலகம் எங்கும் சன்மார்க்க சங்கம்
நலம்தரப் பரப்புவீர்! நலம்தரப் பரப்புவீர்!
சோதி சோதி ஞான சோதியால்
கோதில் மரணம் இல்லா வாழ்வுற
இன்றே எழுமின்! எழுமின்! எழுமினே!

வாக்குகள் நான்கு வகைப்படும்.

1 அபரவாக்கு - ஸ்தூல வாக்கு

2 பரவாக்கு - அசரீரி வாக்கு

3 துரிய வாக்கு -அறிவில் விளங்குவது

4 அனுபவ வாக்கு -யாவுமாய் விளங்கித் தோன்றுவது

-உபதேசக் குறிப்புகள்

திருவேற்காடு ஆதி கருமாரி பதிகம்

(பெரும்புலவர். இல. தாமோதரன். எம்.ஏ., பி.எட்)

அண்டங் களெலாம் புரக்கும் அகிலாண்ட நாயகியே
கண்டங் கரியான் கரதலம் பற்றிடும் தாரணியே
துண்டங் கறைபிறை தூயோன் மனத்தமர் துய்யவளே
பிண்டங் கொடுக்கும் பெரியோளே நின்னடி போற்றுவனே.

சொல்லும் பொருளும் பொருளின் சுவையுமாய் ஆனவளே
கொல்லும் பகையே வரினும் உனைநாளும் கூறியே நான்
வெல்லும் திறத்தைப் பெறுவன்யான் வேறுள பேறுமுண்டோ
அல்லும் பகலும் இணையடி ஏத்தும் அடியவனே.

மருந்தும் மனநோய் தமக்கே மருத்துவி யானவளும்
அருந்தும் மருந்தென அன்புடன் எம்மை அழைப்பவளும்
இருந்தும் இலாதவள் போலெங்கும் சித்து விளைப்பவளும்
திருந்தும் உயிரையே தேடி இருப்பேன் உளமதியே!

அறமே பெருக்கும் அருளுடைக் காமாட்சி அன்னையளே
மறமே யழித்து உயிரைப் புரந்திடு மாரியளே!
திறமே வளர்த்துத் தீ மையே யகற்றிடும் தாயவளே
புறமே புகா லெனையே திருத்திடும் பூரணியே.

சுடரும் சுடரின் ஒளியும் மதியமும் நீயலவோ
படரும் பலகோடி அண்டமும் வானமும் ஆனவளே
இடரும் இணையிலா இன்பமும் ஆகியே நிற்பவளே
அடரும் அலைகள்சால் துன்பம் தடுக்கும் அணையவளே

அன்னையே உன்னைச் சரணாய் அடைந்தேயான் நின்றனன் காண்
என்னையே ஏற்பையோ? ஏலா திருப்பையோ? இன்றளவும்
தன்னையே போற்றித் தருக்கும் உலகிலே தாயனையாய்
உன்னையே போற்றியே நிற்கின்ற தொண்டனும் யானலவே?

ஏது பிழையினை யான்செய்தேன் என்னதான் யான்புரிந்தேன்
வாது புரிந்தே வதைப்பதும் ஏனோநீ வாலையளே!
ஓது தமிழால் யானுமுனை நாளும் உயர்த்திலனோ
மாது மலையர சன்செல்வி என்னே திருவுளமே.

என்றனக் கேநீ யருளா திருப்பதும் நீதியாமோ
உன்றனக் கோர்மக னென்றே நீ யெண்ணாய் உமையவளே
நின்றனக் கென்றும் அடியவன் செய்பிழை கூறுதியே
கன்றெனக் கூவிக் கதறுவ துன்காதில் வீழ்ந்திலதே!

தாயா யிருந்தாள் தரிசிக்க அன்று உடல் குறைய
பேயா யலைந்தகா ரைக்காலம் மைக்கே யருளியவள்
மாயா வுலகில் குறைக ளனைத்தும் மறந்தருளி
சேயா யெண்ணியே யாவர்க்கும் வழங்கும் பெரியவளே!

வாழிய நல்லறம் ஓங்குக ஆவினம்; நீள் நிலத்தில்
வாழிய யாவரும் வெல்க அறமே, அறமுடையார்
வாழிய ஐயப்பன் வாழிய தொண்டரும் வாழியவே
வாழிய எல்லா உயிரும் உலகும் அண்டங்களுமே.

மனிதனின் ஏழுவகை நிலைகள்

1. தாய் கர்ப்பத்தில் ஐந்து மாதம் வரையில் குழவியாக இருப்பது
2. அவயவாதி உற்பத்திக்காலம்
3. பிண்டம் வெளிப்பட்ட காலம்.
4. குழந்தைப் பருவம்
5. பாலப் பருவம்
6. குமாரப் பருவம்
7. விருத்தாப்பியப் பருவம்

எழுவகைப் பிறப்புக்கள்

1. தாவரம்
2. நீர்வாழ்வன
3. ஊர்வன
4. நடப்பன
5. பறப்பன
6. மக்கள்
7. தேவர்

வேத நெறி

(தவத்திரு. சாந்தலிங்க இராமசாமி அடிகளார்)

நமது நாட்டில் பழமையான சமயநெறி வாழ்வாங்கு வாழும் வாழ்க்கையோடு இயைந்தது. அறமும் அன்பும் வளர்க்கும் அன்பு நெறியாக வழிகாட்டுகிறது.

"ஒன்றே குலம் ஒருவனே தேவன்
நன்றே நினைமின்கள்"

என்பது திருமந்திரம்

இதனை தமிழர்கள் தொன்றுதொட்டு வாழ்க்கையில் மேற்கொண்டுள்ளனர். சங்க காலம், சங்கமருவிய காலம் என பகுக்கப்படும். மிகப் பழங்காலத்திலேயே நமது வழிபாட்டு முறை சிறப்பாக அமைந்திருந்தது என்பதற்குச் சான்றுகள் இலக்கியங்களில், தொல்பொருள் களிலும் காணக்கிடைக்கின்றன. வாழ்க்கையைச் செம்மைப்படுத்துகின்ற நெறியைச் சமயநெறி என்பார்கள் சான்றோர்கள். சமயம் என்ற சொல் "சமைத்தல்" என்பதிலிருந்து உருவானது என்பர் சமைத்தல், சமைதல் என்ற சொற்கள் உலகியல் வழக்கில் "பக்குவப் படுத்தப்பட்டது" என்ற பொருளில் வழங்கப்படுவதைக் காணலாம்.

சமய நெறி உண்மை கண்டோராலும், உண்மைப் பொருளாகிய இறைவனாலும் அருளிய மொழிகள் சமய வாழ்விற்கு வழிகாட்டுவன. இவற்றையே முதல் நூல்கள் எனலாம். உலக மொழிகளிலும் பழமைமிக்க இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில்

"வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதல் நூலாகும்"

என வரையறுத்துக் கூறுகிறது. "வினையின் நீங்கிய" என்ற சொல்லுக்கு இருள் சேர் இருவினையும் சேராத முழு முதலாகிய இறைவனையும் அவ்விறைவன் அருள் பெற்று இருவினை நீங்கிய அருளாளரையும் குறிப்பது என உரையாசிரியர்கள் பொருள் கொண்டனர். ஆதலின் அவர்கள் அருளியநூல் முதல் நூலாகும். முதல் நூல் என்பது அடிப்படை. எனவே, அடிப்படை வித்தாக இருந்து வெளிப்படுவது வேதம் "வித்" என்ற சொல்லிலிருந்து வேதம் என்ற சொல் உருவாயிற்று. வித்து மண்ணுள் மறைந்து முளையாக வெளிப்படும் அதுபோல நம் பொறிகளால் எளிதில் உணர முடியாமல் சூழ்ந்து நோக்குங்கால் வெளிப்படும். அரிய செய்திகளைக் கொண்டு விளங்குவதால் இது "மறை" எனவும் வழங்கப்படுகிறது.

ஆறறிவுபடைத்த மனித இனம் "வையத்துள் வாழ்வாங்கு வாழ நிறை மொழி மாந்தர் மறை மொழிகள்" துணைபுரிகின்றன. இந்நிலை மொழிகள் "மறை" எனப் போற்றப்படுகின்றன. உலகில் உள்ள பல்வேறு மதத் தலைவர்களும் தமக்குரிய வழிபாட்டிற்குத் தங்கள் தலைவர்கள் கூறும் மொழிகளை ஏற்று மறை எனப் போற்றப் படுகின்றனர். அந்நெறியில் நமது வாழ்வியலை நடத்துகின்றனர்.

தமிழர்கள் உயர் தனிச் செந்தமிழை தாய் மொழியாகக் கொண்டவர்கள். தமிழ் காலத்தால் முந்தயது. செந்தமிழ், தெய்வத் தமிழ் எனவும் போற்றப்படுகின்றது, மிகவும் பழமையான உலக மொழிகளில் ஒன்றாகத் திகழ்வது சீரிளமைத் திறத்தோடு விளங்குவதுமான மொழி நம் தமிழ் மொழி தமிழர் வாழ்வில் இலக்கியமும், இலக்கணமும் வாழ்வாங்கு வாழத் துணைபுரிகின்றன. வாழ்க்கையை அக வாழ்க்கை புற வாழ்கை எனப்பகுத்து உலகியலை நடத்துவதற்கு உரிய இலக்கணத்தைப் பெற்றிருப்பது தமிழ். அன்பால் இணைந்து ஒருவனோடு ஒருத்தி சேர்ந்து நெறிப்பட வாழும் வாழ்க்கை அகத்திணை எனவும் பிறர்க்குதவி செய்து பொருள் தேடி நாட்டின் நலம் பேணி வாழ்கின்ற வாழ்க்கையைப் புறத்திணை எனவும் தொல்காப்பியம் குறித்துள்ளது.

திணை என்பது "ஒழுக்கம்" இவ்வொழுக்கத்தை பேணவேண்டும் என்பதற்கு வள்ளுவர்

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்".

என்று கூறியுள்ளார்.

உடல்நலத்திற்கும் மன நலத்திற்கும் ஒழுக்கநெறி இன்றியமையாதது உயிர் நலத்திற்கு உரியது கடவுள் வழிபாடு, வழிபாட்டு நெறியையும் வாழ்வியல் நெறியையும் காட்டுவது "வேதம்" எனவும் "மறை" எனவும் வழங்கப்படுகிறது.

"நிறை மொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப"

என்று தொல்காப்பியம் கூறுகிறது. வாய்மொழியானது வாய்மொழியாக வழிவழி வந்தது "வேதம்" ஆதலின் எழுதாக் கிளவி என அது வழங்கப்பட்டது. நீண்ட காலம் தமிழ் மக்கள் அதனையே தொல்காப்பியர் தம் காலத்திற்கு முன்பே வழங்கப்பட்டதால் "மந்திரம் என்ப" என்ற சொல்லால் குறிப்பிடப்படுகிறது. சங்க இலக்கியங்களில் நால் வேதம். என்ற பகுப்பை ஏற்று "நால்வேத நெறி" என்றும் "வேத முதல்வன்" என்று கூறுவதுடன் "நான்மறை" என்றும் வழங்கப்படுகின்றன. வேத நெறி சிறந்தது என்றும் அது மாறுபடத் தக்கதல்ல என்றும் நினைந்து,

"நாஅல் வேத நெறி திரியினும்" எனவும்

"புரையில் நல்பனுவல் நால் வேதத்து

அருந் சீர்த்துப் பெருங் கண்ணுரை நெய்மலி

ஆவுதி பொங்க பன்மாண வீயாச்சிறப்பின் வேள்வி"

என்றும் சொல்வதால் இவை தமிழர்க்கு உரியவை எனப்புலனாகியது.

நான்மறை என்ற சொல் சங்க நூல்களில் பெரிதும் எடுத்தாளப்பெறுகிறது.

"ஆன்ற கேள்வி அடங்கிய கொள்கை

நான்மறை முனிவர் சுற்றமாக" எனவும்.

சிறந்த நான்மறை முனிவர் எனவும் கூறுவதால் நான்மறை உணர்ந்த மேலோர்களைச் சுற்றமாகக் கொண்டு வாழ்தல் சிறப்புடையது. அது மன நலத்திற்கு உரியது எல்லாப் புகழையும் பெற்று வாழவாங்கு வாழத் துணைபுரியும் என்பதை திருவள்ளுவர்.

"மன நலம் மண்ணுயிர்க் காக்கும் இனநலம்

எல்லாப் புகழும் தரும்"

என்று கூறுகிறார்.

உயிர் நலமும், மன நலமும், உடல் நலமும் எய்தும் நலவாழ்வு வையத்துள் வாழ்வாங்கு வாழும் வாழ்க்கை யாகும். அவ்வாழ்வு வாழ்வாங்கு வாழ்ந்த தெய்வத்துள் வைக்கப்படுவதுமாகிய மேலுலக வாழ்வு தரும் என்பதை

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்

தெய்வத்துள் வைக்கப்படும்"

எனத்தமிழ் மறை போற்றுகிறது.

"உடம்பார் அழியின் உயிரார் அழிவர்

திடம்படும் மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்"

எனவும்

"உடம்பினை முன்னம் இழுக்கென்று இருந்தேன்

உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்"

எனவும் திருமூலர் அருளியுள்ளார்.

"உடம்பெனும் மனையகத்துள் உள்ளதே மகளியாக

மடம்படும் உணர்நெய் யட்டி உயிரெனுந் திரிமயங்கி

இடம்படு ஞானத் தீயால் எரிகொள இருந்து நோக்கில்

கடம்பமர் காளை தாதை கழலடி காணலாமே"

என திருநாவுக்கரசரும் கூறுகிறார்.

வையத்துள் வாழ்வாங்கு வாழும் வாழ்வில் திடம்படும் மெய்ஞ்ஞானம் சேர்வதும் உடம்பினுக்குள்ளே உறு பொருள் காண்பதுவும் நோக்கமாக அமைதல் வேண் டும். இவ்வொழுக்க நெறியே நால்வேத நெறியாகும்.

இந்நெறியே நான்மறை முழுமுதல் மக்கட் செல்வனா கிய சிவனைப் போற்றும் நெறியாகும். ஆலமர் கடவுளா கிய சிவபெருமான்.

"நன்றாக நால்வர்க்கும் நான் நான்மறையின்

உட்பொருளை

அன்றாலின் கீழிருந்து அறம் உரைத்தான் காணேடி"

எனத் திருவாசகம் போற்றுகிறது.

எனவே நான் மறை முது நூல் முக்கட் செல்வனால் அருளப் பெற்ற முதனூல் ஆகும். அது அறநெறிகளை உணர்த்துவது, ஒழுக்க நெறிகளை வகுத்துக் காட்டுவது வழிபாட்டு நெறிகளை வளர்ப்பது என்பதைச் சேக்கிழார்

"வேதநெறி தழைத் தோங்க

மிகு சைவத் துறைவிளங்க"

என அருளினார்.

வேதம் என்ற சொல் தமிழில் தூயதாகப் புனிதமாகப் போற்றப்படும் சொல். இறையருள் பெறுவதற்கு வழி செய்கிறது. ஆனால் வடமொழியில் வேதம் என்ற சொல் வியாசரால் வகுக்கப்பட்ட நால் வேதங்களைக் குறிப்ப துடன் மருத்துவ நூலை "ஆயுர்வேதம் " எனவும் காம நூலை 'காந்தர்வ வேதம்' எனவும், படைக்கலப் பயிற்சி நூலை 'தனுர்வேதம்' எனவும் வழங்கப்படுகிறது. இவை கள் மெய்ப் பொருளை முழுமையாக உணர்த்துவன அல்ல. உலகில் வாழ்வுக்கும் வளத்துக்கும் உரியவற்றைப் பெறுவதற்கு வழிகாட்டுவனவாக அமைகின்றன.

நால் வேதம் என்று சொல்லப்படுவது வியாசர் வகுத்ததற்கு முன் வேறு பெயரால் விளங்கியதைத் தொல்காப்பிய உரை ஆசிரியரான நச்சினார்கினியர் 'பராசரன் மைந்தன் வகுத்தது அல்ல' என்று கூறுவதால் அறியலாம். எனவே உயர் கருத்துக்களை வழங்குவன என்பதில் நமக்கு மாறுபட்ட கருத்து இல்லை என்றாலும் தமிழர் நெறிக்கு முதல் நூலாக அமைந்த தமிழ் மறை நூல்கள் நமது திருமுறைகள் திருக்குறள் ஆகியவை யாகும்.

"அறமுரைத்த நான்மறையின் விளக்கமே" இந்நூல்கள் எனலாம்.

மறை நெறியும், ஆகம நெறியும் நம் தமிழ்ச் சமுதாய நெறியாதலின் நமது ஆதி குருமுதல்வர் சாந்த லிங்கர் அடிகளார். 'உம்பரும் பரவும் ஒருதமிழ் வேதத்து' ஒளித் தெமக்கு அளித்த வள்ளுவரே என திருக்குறளைக் கூறியுள்ளார்.

தேவர்களாலும் போற்றத்தக்கது தமிழ்வேதம் என்று சிறப்பிக்கப்படுவதால் "தமிழ் மறைத் திருக்குறள்" ஆகும் சங்க இலக்கியங்களிலும் நால்வேதம், நான்மறை என்பன தமிழுக்கே உரிய எழுதாக் கிளவி எனக் கொள்ளவேண்டும். வேதநெறி என்று சேக்கிழார் கூறும் அறநெறியில் ஒழுகி மிகு சைவத் துறையாகிய ஆகம நெறியில் வழிபட்டு வாழ வேண்டும். அவ்வழிபாட்டுக்கு உரிய மறைமொழி ஐந்து எழுத்து ஆதலின்

"வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது

நாதன் நாமம் நமசி வாயவே"

என அருளியுள்ளார் திருஞானசம்பந்தர். இந்த இரு வினை பாசமும் மூன்று கல்களாகிய மும்மலங்களும் இணைத்துப், பிணைத்து வீழ்த்தப்பட்ட பாவக்கடலாகிய பிறவியிலிருந்து கரையேற அருளும் ஐந்தெழுத்தைத் தெப்பமாகக் கொண்டு பிறவிப்பெருங்கடலை கடந்து இறைவன்தாள் சேரவேண்டும் என்பது நான்மறையின் முடிந்த முடிவாகும். மறைநெறியும் ஆகமநெறியும் ஒன்று என்பதை எங்கள் ஆதி குரு முதல்வர் 'அவிரோத உந்தியார்' நூலில் அருளியுள்ளார். ஏவல்நெறி, தேர்மறை நெறி, ஆகமநெறி, ஒன்று எனக் காட்டும் வீரசைவ தொல் நெறி மாகேசன் எங்கள் சாந்தலிங்க தேசிகனாம் தூயோன் தாளே.

தெய்வத் தமிழால் வழங்கப்படும் செந்நெறி வேதநெறி அவினாசியில் முதலைவாய்ப் பிள்ளையை மீட்ட தெய்வத் தமிழ் பற்றித் தண்டபாணி சுவாமிகள்

"பந்தடிக் கொங்கைப் பரவை தன் கேள்வன் மற்றையராம்
வந்தனை காரரும் மகிழ்ந்திடுமாறு மறைபயிலும்
அந்தணச் சேயை அவினாசியூரில் அழைத்தது எண்ணில்
சந்தனக் குன்றின் மலை மேல் பிறந்த தமிழ்த்தெய்வமே."

எனச் சிறப்பித்தரு[illegible]புள்ளார். தெய்வத் தமிழ்ப்பாக்கள் நிறைமொழியாகும் அம்மொழியே மறைமொழி ஆதலின் வேதநெறியென்பது.

1. தன்னம்பிக்கை கொண்டிருந்த ஒரு சிலரது வாழ்க்கை வரலாறே உலக சரித்திரமாகும். நீ எதையும் சாதிக்க முடியும். அளவு கடந்த ஆற்றலை வெளிப்படுத்தப் போதுமான அளவிற்கு உண்மையாக நீ முயற்சி செய்யாத போதுதான் நீ தோல்வி அடைகிறாய். ஒரு மனிதனோ, ஒரு நாடோ தன்னம்பிக்கையை இழந்தவுடனேயே அழிவு வருகிறது.

நீ எதை நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய். நீ உன்னை பலவீனன் என்று நினைத்தால் பலவீனனாகவே ஆகிவிடுகிறாய். நீ உன்னை வலிமையுடையவனென்று நினைத்தால் வலிமையுடையவனாகவே ஆகிவிடுவாய்.

2. ஓராயிரம் முறை நீ உனது இலட்சியத்தைக் கைக்கொள். ஆயிரம் முறை நீ தோல்வியுற்றாலும் மீண்டும் ஒரு முறை கைக்கொள்ள முயல்க.

வெற்றி பெறுவதற்கு நிறைந்த விடா முயற்சியையும் பெரும் மனவுறுதியையும் நீ கொண்டிருக்க வேண்டும்.

3. ஒரு கருத்தை எடுத்துக்கொள். அந்தக் கருத்தையே உனது வாழ்க்கை மயமாக்கு. அதையே கனவு காண். அந்த ஒரு கருத்தை ஒட்டியே வாழ்ந்துவா. உன் உடலின் ஒவ்வொரு பாகத்திலும் அக்கருத்தே நிறைந்திருக்கவேண்டு. அந்நிலையில் மற்ற எல்லாக் கருத்துகளையும் தவிர்த்து விடு. வெற்றிக்கு இதுவே வழி.

4. இடைவிடாத பயிற்சியின் மூலம் நாம் துன்பங்களை வெல்ல முடியும்.

5. எப்போதும் எந்த மனிதனையும் ''நீ உருப்படாதவன்'' என்று சொல்லாதே.



கௌமாரம்

தவத்திரு. சுந்தர சுவாமிகள்
(மகா சந்நிதானம், கௌமார மடாலயம் கோவை.)

உலகம் உய்யப் பல அரிய செய்திகளை, உலக முதற் காரணமாக விளங்கும் பரம்பொருள், பல ஞானிகட்கு முதலில் உணர்த்தியது நமது இந்திய நாட்டில்தான்.

அப்படி உணர்த்தப்பெற்ற செய்திகள் அனைத்தையும் சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் வியாச முனிவர் தொகுத்து, இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்று நான்கு பெரும் பிரிவுகளாகப் பகுத்து வழங்கினார். இந்த வியாச முனிவர், திருமாலின் ஒரு அவதாரமே என்று கூறுவர். இந்த நான்குமே நான்கு வேதங்கள் என்று போற்றப்படுபவை.

இந்த நான்கு வேதங்களிலும் கூறப்படும் செய்திகளையும் கரும காண்டம், பக்தி காண்டம், ஞானகாண்டம் என்றும் மூன்று காண்டங்களில் உட்படுத்திக் கூறுவர்.

இவற்றில் கரும காண்டம் என்பது மக்கள் சமுதாயம் சிறந்து வாழ வேண்டிய நெறி முறைகளைச் செவ்வனே எடுத்துக் கூறுவன. பக்திகாண்டம் என்பது நல்ல சமுதாயத்தார், உலக முதற்காரணனான பரம்பொருளை எண்ணித் தம் ஆன்ம ஈடேற்றத்திற்கு ஏற்ற, கடவுள் வழிபாடு, உபாசனை முதலியவைகளை விளக்கவல்லதாம். மூன்றாவதாகிய ஞான காண்டம் என்பது, பக்தி வழியில் நின்று பரம்பொருள் நிச்சயம் உணர்ந்து ஆன்மா, அந்தப் பரம்பொருளோடும் கூடிப் பெரும் பேரின்ப நிலையின் இலக்கணத்தைக் கூற வல்லதாம்.

கடவுள் வழிபாட்டு முறைகளைக் கூறவந்த வேத முனிவர்கள், அவற்றை ஆறு வகையாகத், தம்தம் பட்டறிவு வாயிலாக உணர்ந்து விளக்கியுள்ளனர். இந்த ஆறு நெறிக்கும் ஆறு வகையான தெய்வ வடிவங்களையும், அவற்றை வழிபடும் முறைகளையும், அவற்றிற்கு ஏற்ற உளவழிபாட்டு மந்திரங்களையும் வேறுவேறாக அமைத்துள்ளனர்.

அந்த ஆறு நெறிகளே (1) சைவ சமயம், (2) சாக்தேய சமயம், (3) வைணவ சமயம், (4) காணாபத்ய சமயம், (5) கௌமார சமயம், (6) சௌர சமயம் என்று கூறப்படுவன.

சூரியனை முதற்காரணப் பொருளாக ஏற்று வழிபடுகின்றது சௌர சமயமாகும்.

சிவனை ஆதிபரம்பொருளாக ஏற்றுக் கொண்டது சைவ சமயம் என்று ஆகியது.

சக்தியைத் தனிப்பரமாக ஏற்று வழிபடுவது சாக்தேய சமயம் என்று வழங்குகிறது. சிவ, சக்திகளின் குமாரர்களில் மூத்தவராகிய கணபதியை சர்வ வல்லமை படைத்த பரமாக எண்ணுவது காணாபத்திய சமயம் என்று பெயர் பெற்றது.

விஷ்ணு என்ற வடிவத்தில் பரம்பொருளை வைத்து வழிபடும் சமயம் வைஷ்ணவம் என்றாயிற்று.

அதுபோலவே சிவ குமாரர்களில் இளைய குமாரனைத் தனிப்பரமாக வைத்து வழிபடும் சமயம் கௌமார சமயம் எனப்பட்டது. சிவன், சம்பந்தமுடையது சைவம் என்றும் விஷ்ணு சம்பந்தமுடையது வைணவம் என்றும் ஆகியது போல குமாரன் சம்பந்தமுடையது கௌமார சமயம் என்று ஆயிற்று.

ஆன்மாக்கள் தமது பரிபக்குவ அநுபவங்களுக்கும் சமுதாய சூழ்நிலைகளுக்கும் ஏற்ப ஏதாவது ஒரு வழியை மேற்கொள்வர். எனவே இப்பிரிவுகட்கு 'சமயம்' என்று பெயர் ஏற்பட்டது. அச்சமயங்களின் கொள்கைகளை உணர்த்துமிடத்து 'மதம்' என்ற பெயர் கூறப்பட்டது.

கௌமாரம் என்ற சமயத்துக்குரிய கடவுள் 'குமாரன்' என்று கூறினோம். குமாரன் என்ற பெயர் சிவகுமாரனாகிய முருகப் பெருமானையே குறிக்கும். மேலும் கு – அஞ்ஞானத்தை, மாரன் அழிப்பவன் என்று கூறுவர். குரு என்ற பெயருக்கும் இப்பொருள் அமைவது உணர்க.

இந்த ஆறு சமயங்களிலும் கௌமார சமயத்திற்கு மட்டும் ஒரு சிறப்பு உண்டு. மற்றைய ஐந்து சமயங்களும் தம்தம் கொள்கைகளே முடிவானது என்று ஏற்றுக் கூறுவன. ஆனால் கௌமார சமயம் முதலில் முருகக் கடவுளையே பரம்பொருளாக வழிபட ஆரம்பித்து ஆன்ம பரிபக்குவம் ஏற்பட ஏற்பட மற்றைய சமயங்களும் குமாரனில் வேறல்ல என்றும், அக்குமாரனது திருமுகங்களாகவே இருப்பன என்றும் விளக்கவல்லது. அதற்கு மேலும் ஞான நிலையில் சகல சமய சாத்திரங்களையும் உணர்த்தவல்ல குருபரமாகவும் முடிந்த நிலையை ஆன்மாக்கள் துய்க்கச் செய்வது இக்கௌமாரமே என்பதும் அக்கௌமார நெறி நின்று உய்தி பெற்ற பல மகான்களின் விளக்கமாகும்.

கௌமார ஞான பானுவாக விளங்கிய அருணகிரி நாதசாமிகள் முருகனை 'ஆறு சமய சாத்திரப் பொருளோனே' என்று போற்றுவார்.

கௌமார சமயத்திற்கென்றே தியானானுபூதி, நாளிலைச்சதகம், கௌமார முறைமை முதலான பல சாத்திர நூல்களை அருளிய தண்டபாணிசாமிகளும் தமது நூலில், ஏக பரம் பொருளின் ஒளி ஞாயிறு (சூரியன்)

ஒடுக்கும்தன்மை சிவன், தோற்றுவிக்கும் தன்மை சக்தி, காக்கும் தன்மை திருமால், இடையூறு நீக்கி உதவும் தன்மை கணபதி, ஞானம் உணர்த்தல் குமாரன், என்று கூறியுள்ளார்.

பரம்பொருளின் பிரகாசம் பரிதிப் புத்தேள்
பலஉலகும் ஒடுக்குகின்ற பண்பே ஈசன்
கரந்தவற்றை உதவுவது சத்தி, யாவும்
காப்பது மால் அடியவர்தாம் கருதும் செய்கைக்கு
உரம்கொடுத்து முடித்திடுதல் கணேசன், ஞான
உபதேசம் புரிந்திடுதல் ஒள்வேற் கையான்
வரம்பெறுமட் டுபாசித்துப் பெற்றோர் இந்த
வகைஉணர்வார் ; மற்றையர்க்கு வம்பா மன்றே.

(கௌமார முறைமை)

மேலும் 'ஆரிய நூற் றலைவர்புகல் சமயக் கூட்டம் ஆறும் எங்கள் கவுமாரத்துள் அடக்கம் தானே' என்பர். சிரவணபுரம் சண்மத சமயா தீத சமரஸாத்துவித கௌமார மடாலயத்தின் இரண்டாவது குருமகா சந்நிதானங்களாக எழுந்தருளியிருந்த தவப்பெருந்திரு கந்தசாமி சுவாமிகள் கௌமார சமயம் பற்றிக் கூறியுள்ள விளக்கங்களில் சிலவற்றையும் ஈண்டுக் காணலாம்.

ஒளியில் விளைந்த உயர்ஞான பூதரத்து உச்சியின் மேல், அளியில் விளைந்ததோர் ஆனந்தத் தேனை அநாதியிலே வெளியில் விளைந்த வெறும் பாழைப் பெற்ற வெறுமதனியைத் தெளிய விளம்பி அன்பர்களைக் கருணையினால் அறைகூவி ஆட்கொள்ளும் குருபரத்துவ விவேகம் உடையதே 'கௌமார சமயம்' எனப்படும்.

இதற்கு ஆதாரம் திருநெல்வேலியில் அவதரித்துத் திருவாமாத்தூரில் கௌமார மடாலயம் அமைத்தவரும், இச் சிரவணபுரம் மடாலயத்துக் குருமுதல்வரான அருட் பெருந்திரு இராமானந்த சுவாமிகளது ஞான குருநாதராக விளங்கியவருமான திருப்புகழ் சுவாமிகள், முருகதாச சுவாமிகள் என்று அழைக்கப்படுகின்ற வண்ணச்சரபம் தவத்திரு. தண்டபாணி சாமிகள், திருவாய் மலர்ந்தருளியுள்ள கௌமார விநோதம், கௌமாரநூல், கௌமார முறைமை முதலான சாத்திரப் பகுதிகளேயாம்.

அவற்றுள் கூறப்பட்டுள்ள விரிவான விளக்கங்களிலிருந்து சில பகுதிகளை மட்டும் ஈண்டு இக்கட்டுரைக்கு ஏற்பச் சுருக்கமாக எடுத்தியம்புகின்றோம்.

திருமுகத்தின் பகுதி

கன்ம காண்டம்

நான்கு திசைகளையும் நோக்கியுள்ள முகங்கள் அத்திசைகளிலுள்ள ஆன்மாக்களை அவ்வவர்களது கன்மங்கட்கேற்ற போக சுகங்களிற் செலுத்தி அனுபவிக்கச் செய்து போக்கவும், ஆகாமியங்களை ஆக்கவும், துணையாதலில் கன்ம காண்ட நிச்சயத்தைக் காட்டும் பிரமகுருத்துவமுள்ள கௌமாரத் தன்மையை உடையதாகிறது.

பக்தி காண்டம்

அகமுக உபாசனையான மேல்நிலையில் நிலைத்து அமையும் தெய்வத் தன்மையுடன் சகமுகத்து அமைந்துள்ள ஆன்மாக்களைத் தேற்றவும் திருக்கோயில்களில் விளங்கும் மூர்த்திகட்குச் சாந்நித்தியத்தை ஏற்றவும் வெளிமுகச் சித்தி வல்லபங்களைக் காட்டும்படி பத்தர்கட்கு அருள் புரிவதால் பக்திகாண்ட நிச்சயம் உணர்த்தும் துணையாய், சிவகுருத்துவமுள்ள கௌமாரத் தன்மையை உணர்த்துகிறது.

ஞான காண்டம்

போக்குவரவின்றி ஆறுதிசையினும் முகமாகி உபாசனைப் போதமற விழுங்கியமையும் பரிபூரணத் தன்மை கௌமார ஞான காண்டத்தை உணர்த்துகிறது.

உபாசனைப் பகுதியான சண்மத விளக்கம்

உபாசகர்களுக்கு, கட்டுண்டல், வெட்டுண்டல், அடியுண்டல், பிடியுண்டல், அருந்தல், பொருந்தல் ஆகிய பாசபந்த மயக்க விகாரமாதிய அவஸ்தைகளை உண்டு பண்ணுவதாய், இரச கந்த கன்ம வடிவுற்று பிண்ட யோனியில் உதித்துள்ள தூலதேக மானாபிமானங்களை மாற்றச் செய்ய வல்லதாய் பிடிபடாத இச்சாவடிவ நாதவிந்து மயமான ஜீவ இயக்கத்துடன் தெய்வமேனிகள் உதித்தற்கு ஆதாரமாகி விளங்கும் சூரிய மூர்த்தியை இடைவிடாது சிந்தித்து நாடி உருகும் காதல் அமையும்படி முதன்முதலாகப் பெறும் சாதன சித்தியே கௌமார பேரொளிச் சத்தி அத்துவிதாநுபவமாகும்.

சைவம்

அதனுள் அமைந்த பஞ்ச சத்திகளுள் ஒன்றான சங்கார சத்தியைத் தவவலியால் கைவரப் பெறுவதே கௌமார சிவாமிச சித்தி வல்லபம்.

சாத்தேயம்

அதற்கு மேல் அதனுள் விளங்கும் திருவருட் சகள சாத்திய சத்தியே கௌமார சாத்தேய சித்தியாம்.

வைணவம்

அதன்பின் அண்டபிண்ட சராசரங்கள் அனைத்தும் தன்மயமாகக் கண்டு தனது யோக சித்தி வல்லபத்தால் அவைகள் அநுபவிக்க வேண்டிய போக பாக்கியங்களைத் தனது சங்கற்ப மாத்திரத்தால் உதவும் சாத்திய சத்தியே கௌமார வைணவ சித்தியாம்.

காணாபத்தியம்

அதன்மேல் உயிர்களுக்கு ஏற்படும் விக்கினங்களை முழுமையும் பற்றற ஒழித்து, தடைபடாத சித்திபுத்தி வல்லபம் அனைத்தும் வழங்கி விளையாட வைக்கும் சாத்திய சத்தி கௌமார காணாபத்திய சித்தியாம்.

கௌமாரம்

முடிவான சுத்த ஞானமயமான பூரணாநுபவமே கௌமார குருத்துவ சாத்திய சித்தி வல்லபமாம்.

கௌமாரப் பகுதிகள்

1. உலக கௌமாரம்

மலையின் மீது அமைத்துள்ள கோயில்களிடத்தில் விளங்கும் விக்கிரகங்களைப் போற்றி வணங்குதல் உலக கௌமாரம் எனப்படும்.

2. மகா விரத கௌமாரம்

மகாமேருவின் மேற்குத் திசையின் கண் விளங்குபவன் என்னும் நிச்சயத்துடன் மற்றவர்களுக்கும் தெரிய விளம்புவது மகாவிரத கௌமாரம் எனப்படும்.

3. துவித கௌமாரம்

எண்ணிறந்த தேவர்கள் போற்றும்படி விளங்கும் தலைமைத் தன்மையுடையன் என வியந்து துதித்துப் போற்றுதலே துவித கௌமாரம்.

4. அத்துவித கௌமாரம்

குமாரனுக்கு அன்னியமாகிய வேறொரு பொருள் இல்லை என்பதாகிய உண்மைத் துணிவே அத்துவித கௌமாரமாம்.

5. சமரச கௌமாரம்

கொலை, புலை இம்சையாதிய குற்றங்களை உலகத்தில் இல்லாமல் கடிந்து போக்கும் குமாரன் என்பவர் நன்மை மிகுந்த சமரச கௌமாரர்களாம்.

6. அதீத கௌமாரம்

குறைவற்ற பலகோடி திருவருளாட வியற்றி ஆன்மாக்களுக்கு வேண்டிய வேண்டியாங்கு அருளி வீட்டின்பத்தையும் வழங்கும் பரம குமாரன் என்பதே அதீத கௌமாரக் கொள்கையாம்.

குருவருள்விட் டுலகில்ஒரு சமயம் இல்லை
கூறரிய கடவுள்மகன் குருஎன் றெண்ணித்
திருவருள்வேண் டுவதெவர்க்கும் இயல்பென் றாலும்
தெளிந்தோருக் கவன்தானே தெய்வ மாகும்
அருஅருளால் உருவானால் அதற்கும் அப்பேர்
'றிஒரு பேரிட்டால் அழகா காதால்
கருஅருளா தாண்டுகொள்ளும் குமாரனான
கடவுளன்றி அவன்ஆணை கடவுள் இன்றே.

(கௌமார வினோதம்)

இன்னமும் கௌமாரம் பற்றிய விரிவான செய்திகளை மேலே குறிப்பிடப்பட்ட சில நூல்களிலும், மேலும், முருகதாசர் அநுபூதி, கௌமாரலகிரி, சுப்பிர மணிய நூல், பிரணவாநுபூதி, ஞானவந்தாதி என்பன போன்ற பல நூல்களிலும், ஸ்ரீலஸ்ரீ தண்டபாணி சாமி கள் திருவாய் மலர்ந்தருளியுள்ளார். அந்நூல்களைப் படித்துப் பயன்பெறுக.

குருபாதமே கதி

கள், காமம், கொலை, களவு பொய் இவ்வைந்தும் கொடிய துக்கத்தை உண்டு பண்ணும். இவ்வைந்திலும் கொலை கொடிய பாவம். எனினும், கள்ளுணண்ட வனுக்குக் காமம் உண்டாகாமலிருக்காது. கொலை செய்யத் துணிவு வராமலிருக் காது. களவு செய்யாமலிரான். பொய் பேச அஞ்சான் ஆகையால் இந்த ஐந்தையும் ஒழிக்கவேண்டியது அவசியம். இவற்றில் ஒன்றை அடைந்தவனானாலும், அவனை மற்றவை தொடராமல் இரா.



திருமந்திரத்தில் அன்பு நெறி

(டி.வி.வெங்கட்டராமன். இ.ஆ.ப)

திருமந்திரம் சைவப் பெருமக்கள் போற்றி வணங்கும் பன்னிரு திருமுறைகளில் பத்தாம் திருமுறையாக வைக் கப்பட்டுள்ளது. திருமந்திரத்தை அருளிச் செய்த திருமூல தேவ நாயனார் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த ஓர் ஒப்பற்ற யோகியாவார். பல ஆண்டுகள் கயிலை மலைப் பகுதிகளில் வாழ்ந்து இறையனுபவம் பெற்று, தென்னாட்டிலுள்ள திருத்தலங்களைத் தரிசிக்க வருகை தந்தபொழுது, காவிரி ஆற்றங்கரையிலுள்ள சாத்தனூர் என்கிற கிராமத்தின் வழியே சென்றுகொண்டிருந்த பொழுது, ஓர் மாலைப் பொழுதில் ஆடுமாடுகளை மேய்த்து வந்த மூலன் என்கிற இடையன் இறந்து தரை யில் கிடக்க, அவனுடைய உடலைச் சுற்றி நின்று கண்ணீர் சொரிந்து கொண்டிருந்த நிலையை திருமூல தேவ நாயனார் பார்த்தார். மனம் நெகிழ்ந்தார். பசுக்கள் மேய்ப்போன் மீது வைத்திருந்த அன்பினைக் கண்டு வியந்தார். மூலனை உயிர்ப்பிக்கத் தீர்மானித்து, யோக சாதனையால் தன் உடலை விட்டு மூலனின் உடலில் பாய்ந்து மூலனை உயிர்ப்பித்தார். அன்று முதல் திருமூலர் ஆனார். 3000 ஆண்டுகளும் அருகிலிருந்த அரச மரத்தடியின் கீழ் யோக நிலையில் அமர்ந்து தவம் புரிந்து, ஆண்டிற்கு ஒரு முறை உபதேசித்த மந்திரங் கள்தான் 3000 மந்திரங்களாக, திருமந்திர மணி மாலை யாக இன்று நமக்கு ஒப்பற்ற ஆன்மீக சாதனை நூலாகக் கிடைத்துள்ளது.

திருவருளால் நமக்குத் திருமந்திரம் கிடைத்துள்ளது. பசு இனங்கள் தம் அன்பினை மூலன் மீது சொரிந்தன. ஞானியார் உயிரினங்கள் அனைத்தின் மீதும் தான் பெற்றிருந்த அன்பால், பரிவால், உயிர்கள் உய்ய வேண்டி திருமந்திர மாலையை அருளிச் செய்துள்ளார். எனவே, திருமந்திரம் அன்பினால் தோன்றியதென்றால் முற்றிலும் உண்மையாகும். இறைவன் உயிர்கள் மீது மழைபோல் பொழிவது திருவருள் ஆகும். உயிர்கள் தன்னலமற்ற அன்பினைப் பிறவுயிர்கள் மீது பொழிவது இறைவனுடைய திருவருளுக்குச் சமமாகும்.

இறைவனைச் செல்வத்தாலும், கல்வியாலும் அடைந்துவிட முடியாது. இவற்றினுக்கு மேலே பல படிகளுக்கு அப்பாலுள்ள அறிவு எனும் சாதனத்தாலும் இறைவனைத் தெரிந்துகொள்ள முடியாது. செல்வம், கல்வி, அறிவு என்கின்ற நிலைகளிருந்து இறைவனைக் காண முயலுபவர்கள் தோல்வி அடைவார்கள். செல்வ மும் கல்வியும் ஆணவத்தை வலுப்படுத்துகின்றன; அகங் காரத்தை வளர்க்கின்றன; அறியாமைக்கு வித்திடுகின் றன. இவற்றின் வழியாக இறை உண்மையைப் பெற இயலாது.

இறைவனைப் பெற அவனுடைய திருவருள் தேவை. திருவருள் பெற்ற மாத்திரத்திலேயே மனதில் நிரம்பி யுள்ள சிந்தனைகளின் தன்மை மாறிவிடுகின்றது. இருள் நீங்கி, ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் மாபெரும் சோதியை அகக்கண்கள் பார்க்கத் தொடங்குகின்றன.

"அருளால் எவையும்பார் என்றான், அதை
அறியாதே சுட்டிஎன் அறிவாலே பார்த்தேன்"

என்பார் தாயுமானவர்.

இறைவனின் அருளை முழுமையாகப் பெற்றவர் திருநாவுக்கரசர். இறைவன் அவரைப் பல துன்பங் களுக்கு ஆளாக்குகின்றான். திருநாவுக்கரசர் பரம் பொருளிடம் பற்றுக் கொண்டவராக, மாறாத குறிக் கோளுடன் நீங்காத அன்புடையவராக இருப்பதன் காரணமாகத் திருமாலும், நான்முகனும் காணாத சோதியைத் தம்முள்ளேயே கண்டுகொள்கின்றார்.

"தேடிக் கண்டு கொண்டேன்—திரு
மாலொடு நான்முகனும்
தேடித் தேடொனாத் தேவனை என்னுள்ளே
தேடிக் கண்டுகொண்டேன்"

என்று நாவுக்கரசர் தான் பெற்ற பேரின்பத்தில் மிகுந்த பெருமை கொள்கின்றார்.

காரைக்கால் அம்மையாரும் அதே நிலையில் இருப்ப வர். இறைவனுடைய அருளின் தன்மையை முற்றிலும் அறிந்தவர் அவர். அவனுடைய அருளால் திருமாலும், நான்முகனும் காணாத ஒருவனைத் தான் கண்டு கொண் டதை நினைத்து நினைத்துப் பரவசப்படுகின் றார். பிறருக்கு அரியதாக உள்ள ஒன்று தனக்கு எளிதாகக் கிடைத்து விட்டதே என்று எண்ணி வியப்படைகின்றார்:

"இன்று நமக்கு எளிதே; மாலுக்கும் நான்முகற்கும்
அன்றும் அளப்பரியன் ஆனானை, — என்றும்ஓர்
மூவா மதியானை மூவே மூலகங்கள்
ஆவானைக் காணும் அறிவு"

(அற்புதத் திருவந்தாதி)

அருளாளர்கள் இறைவனுடைய அருளை எளிதாகப் பெறக்கூடிய முழுமையான தகுதி பெற்றவர்கள். இறைவன் அள்ளித் தருவது அருள். அந்த அருள்

இன்பத்திலே திளைப்பதே நம்முடைய கோட்பாடாக அமையவேண்டும். அருள் நமக்கு வெறுமனே கிடைத்து விடுமா? நாம் அதற்கு ஏதாவது செய்ய வேண்டுமா என்கிற கேள்விகள் எழலாமல்லாவா? காரைக்கால் அம்மையார் இதை எண்ணிப் பார்க்கின்றார். தனது நெஞ்சை நோக்கிப் பேசுகின்றார். "நெஞ்சே, இதுவரை நீ அறியாமல் இருந்தாய், இன்று உனக்கு ஈசன் அருள் கிட்டி விட்டது. அதற்குக் காரணம் என்ன தெரியுமா? நீ என்ன தவறு செய்திருந்தாலும் இறைவனிடம் உன்னுடைய அன்பைப் பெருக்கினாய். அவனுடைய அருளாகிய பெரும் சேமம், நன்மை, பாதுகாப்பு எல்லாம் உனக்குக் கிட்டிவிட்டது.

ஆகவே, நீ பெருமகிழ்ச்சி பெற்ற நிலையில் இருக்கின்றாய். ஆனால், இத்துடன்போதும் என்று நிறுத்தி விடாதே. ஊரெல்லாம் பிச்சைக் கோலத்துடன் திரிந்து வருபவன் இறைவன். பிறர் தொடாத எலும்பினை மாலையாகக் கோர்த்து அணிந்து வருகின்றான். அவனை, சாதாரணம் என்று நினைத்து விடாதே, அவன் மீது மேலும் மேலும் உனது அன்பைப் பெருகச் செய்ய வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலமாகத்தான் இறைவனுடைய அருளை நீ தொடர்ந்து பெறுவாய்" என்று காரைக்கால் அம்மையார் தனது நெஞ்சத்திற்கு அறிவுரை கூறுகின்றார்:

"மகிழ்தி மடநெஞ்சே! மானிடரின் நீயும்
திகழ்தி; பெருஞ்சேமம் சேர்ந்தாய்; – இகழாதே
யாரென்பே யேனும் அணிந்துழல்வார்க் காட்பட்ட
பேரன்பே இன்னும் பெருக்கு".

(அற்புதத் திருவந்தாதி)

இந்த அன்பைப் பற்றி நாம் சற்று சிந்திக்க வேண்டும் நாம் நமது குடும்பத்தில் உள்ளவர்களிடம் அன்பை வைக்கின்றோம். நமக்குத் தெரிந்தவர்களிடம் பாசத்தைக் கொட்டுகின்றோம். மனைவி, மக்கள், நண்பர்கள் என்றவாறு கூறிக்கொண்டு அவர்களின் மீது உயிரையே வைத்திருக்கிறோமென்று பேசிக்கொள்கின்றோம். இந்த உணர்வினால் வரக்கூடிய அனுபவம் அன்பாகுமா? சற்று ஆழ்ந்து நோக்கினால் அது அன்பாகாது என்று புலப்படும். இந்த உறவிலே ஆசை இருக்கும், வேட்கை இருக்கும், நமக்குத் தெரியாமலேயே பிரதிபலன்களை எதிர்பார்க்கும் நோக்கமும் பொதிந்து கிடக்கும். எல்லாவற்றிற்கும் மேலாக, தான் என்றும், தனது என்றும் வைத்துப்பார்க்கும் தன்மை இருக்கும். ஆகவே, சுயநலம் இருக்கும். "மனிதர்கள் இச்சையுளே வைப்பர்" என்கிறார் திருமூலர். புணர்ச்சிக் காலத்தில் இல்லாளுடன் ஒருவன் அன்புகொண்டு உணர்ச்சி நிரம்பி இருக்கும் நிலை அன்பு என்று கூறப்பட்டாலும் அது சுயநலத்திலே தோன்றிய அன்பாகுமே யொழிய உண்மையான அன்பாகாது. உண்மையான அன்பில் தியாகம் இருக்கும், ஆசை இருக்காது. பலாபலன்களை எதிர்பார்க்கும் குறிக்கோள் இருக்காது. பயன் கருதாமல் அன்பு செய்வதே ஒப்பற்றதாகும். மனைவி, மக்கள், உறவினர், நண்பர்கள் மீது வைப்பது மட்டும் அன்பன்று. தன்னுடன் தொடர்பு இல்லாதவர்கள் மீதும் வைக்கும் அன்பே உண்மையான அன்பாகும். இந்த அன்பு தெய் வீகத் தன்மையுடையது. மனிதனை மனிதனாக்குவது. இத்தகைய அன்பு உயிர்களிடையே இயல்பாகவே இருக் கின்றது. ஆனால், மும்மலங்களாகிய திரை உண்மையை மறைக்கும்போது இந்த அன்பானது ஆசையாக மாறி விடுகின்றது. உண்மையில் எவ்வாறு அருள் இறை வனுடைய இயல்பாகின்றதோ, அவ்வாறே உயிருடைய இயல்பாக அன்பும் அமைந்துள்ளது. இதைத் தெரிந்து கொள்ளாதவர்கள் அன்புக் கண்களால் உலகினைப் பார்க்க மாட்டார்கள். இவர்கள் எலும்பின்மீது தோல் போர்த்தப்பட்ட உயிரற்ற, பயனற்ற, வெற்றுடம்பு மட்டுமே என்கிறார் திருவள்ளுவர்;

"அன்பின் வழியது உயிர்நிலை அஃதில்லார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு".

உயிர்களிடையே தன்னலமற்ற அன்பு வைப்பது இறைவனுடைய அருளுக்குச் சமானமாகும். அத்தகைய அன்பு மனிதர்களை இறைவனுக்கு அருகிலேயே அழைத்துச் செல்லும். அன்பு வளர வளர, இறைத் தன்மையும் வளரும். இறைவன் உயிர்கள் உய்யும் பொருட்டு உடலையும், உடலால் பெறக்கூடிய அனுபவங்களையும், இன்ப துன்பங்களையும் அளிக்கின்றான். உயிர்களின் வினைக்கீடாக இறப்பையும், பிறப்பையும் அமைத்துக் கொடுத்துள்ளான். அவற்றை அனுபவிப்பது உயிர்களுடைய கடமையாக உள்ளது. அவை எப்படி இருந்தாலும் அன்பு வழியில் வாழ்க்கை அனுபவங்களைப் பெற்றும், ஏற்றும் தொழிலைச் செய்து வரக்கூடிய உயிர்கள் தங்களுடைய பிறவிப்பயனைப் பெறுவதற்கும் வழிகாட்டியாக அமைவது அன்பு ஒன்றேதான் என்கின்றார் திருமூலர். இறைவன் அன்புள்ளம் கொண்ட உயிர்களிடையேதான் புகுந்து கலந்து நின்று பிறவித் துன்பத்தை நீக்குகின்றான். இதைக் கோடிட்டுக் காட்டும் திருமந்திரம் பின்வருமாறு:–

"இன்பப் பிறவிக் கியல்வது செய்தவன்
துன்பப் பிறவித் தொழில்பல என்னினும்
அன்பிற் கலவிசெய் தாதிப் பிரான்வைத்த
முன்பப் பிறவி முடிவது தானே"

(திருமந்திரம் . . . 281)

இறைவனிடத்தில் வைக்கும் அன்பு எல்லாவற்றையும் விட மேலானது. ஆனால், இந்த அன்பும் தன்னலமற்றதாக இருக்கவேண்டும். மாசற்றதாகவும், தூய்மையானதாகவும், உண்மையானதாகவும் இருக்க வேண்டும். இத்தகைய அன்பு உயிர்கள் மீதெல்லாம் பொருந்தி இறைவனை நாடிச் செல்கின்றது. உலகத்தில் ஆசா பாசங்களின் அடிப்படையில் தோன்றும் அன்பானது ஐம்புலன்களின் சக்திக்கு கட்டுப்பட்டு இயங்குகின்றது. ஆசை வடிவிலே நிற்கின்றது. இறைவனின் மறைப்புச் சக்திக்கு உட்பட்டது. ஆனால் ஐம்பொறிகளின் தொடர்பு அறுபட்ட நிலையில் எழும் அன்பானது இறைவனுடைய அருளுக்குப் பாத்திரமானது. அத்தகைய அன்பு உள்ளத்தில் இறைவன் தனது திருவடியைப் பதிக்கின்றான். அவனுடைய அருட்சக்தி அந்த உள்ளத்தை ஏற்றுக்

கொள்ளுகின்றது. அந்த அருட்சக்தியே அவ்வுள்ளத்தை ஒளிமயமாக்குகின்றது. அதுவே அந்த உள்ளத்திற்குப் பரம் பொருளையும் அடைவிக்கும். அவ்வுள்ளங்களில் சிவ பெருமான் "அன்பினில் விளையும் ஆரமுதாய்" விளங்கி அருள் புரிவான்.

"அன்புறு சிந்தையின் மேலெழும் அவ்வொளி
இன்புறு கன்னியொடேற்க இசைந்தன
துன்புறு கன்னியைந் தாடுந் துடக்கற்று
நண்புறு சிந்தையை நாடுமின் நீரே"

(திருமந்திரம் . . . 282)

அன்பை யாரிடம் வைப்பது? 'சிவப்பரம்பொருள் மீது வையுங்கள்' என்கிறார் திருமூலர். அவன் பொன்னினும் பிரகாசமானவன். செக்கர் மேனியன் அவனுடைய திருமேனி செக்கர் வானத்தைப் போலச் சிவந்திருக்கும். "சிவனெனும் பெயர் தனக்கே உடைய செம்மேனி எம்மான்" என்கிறார் அப்பர் சுவாமிகள். உடலெல்லாம் திருநீறு பூசிக்கொண்டவன். செக்கர்வானாகிய செஞ் சடையிலே இறைவன் பிறையை அணிந்திருக்கின்றான். அது மிகவும் இளம்பிறை. ஆயினும், பளிச்சென்று பிரகாசிக்கின்றது. முதலில் பிறைக்கு இறைவன் தண்டனை வழங்கியிருந்தான். பின்னர் பெருங்கருணை யுடன் பிறையைத் தனது சடையிலே சூடிக் கொண்டான். வெண்ணீறு சுடுகாட்டுப் பொடியாகும். எல்லாம் முடிந்த பிறகு எஞ்சி நிற்கும் "அந்தம் ஆதி" யைச் சுட்டிக் காட்டு கின்றது. இந்த வெண்ணீற்று ஒளியில் விளங்கும் சிவ பெருமானுடன் பிரியாது பின்னிக் கிடக்கும் அன்பே எல்லாவற்றிற்கும் மேலானதாகும். 'அத்தகைய சிவ பிரானை நாடுங்கள், அவனிடம் அன்பை வையுங்கள், அவனருளைப் பெறுங்கள்' என்கிறார் திருமூலர்:

"பொன்னைக் கடந்திலங் கும்புலித் தோலினன்
மின்னிக் கிடந்து மிளிரும் இளம்பிறை
துன்னிக் கிடந்த சுடுபொடி யாடிக்குப்
பின்னிக் கிடந்ததென் பேரன்பு தானே"

(திருமந்திரம் . . . 271)

இறைவனை அடையப் பல வழிகள் உண்டென்போர் பெரியோர். இவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று முறைப்படுத்தப்பட்டுள்ளது. திருமூலரே வேறொரு இடத்தில் "தவமும், அறமும் மேற்றுணை யாமே" என்கின்றார். வாழ்க்கையிலே கடைப்பிடிக்க வேண்டிய அன்பும், அறமும் மனிதனைப் பக்குவப் படுத்துகின்றன. புலனடக்கம் செய்து மனத்தைக் கட்டுப் படுத்தி உடலால் அடையப் பெறும் இன்பங்களைக் குறைத்து அல்லது தவிர்த்துக் கடுமையான துறவறம் பூண்டு யோக சாதனை மூலமாகவே இறைவனை அடைதல் சாலச் சிறந்தது என்னும் கொள்கையுடையவர் கள் உண்டு. திருமூலர் அருளிச் செய்துள்ள திருமந்திரத் தில் முக்கியான பகுதியான மூன்றாம் தந்திரம் யோக நெறிகளை விரிவாக எடுத்துச் சொல்லுகின்றது. திரு மூலர் மூவாயிரம் ஆண்டுகள் கடுமையான யோகம் புரிந்து வாழந்த யோகியானதால் அட்டாங்க யோகம் என்கின்ற நெறிக்கு முக்கியமான இடத்தைத் தருகின் றார். அதே நேரத்தில் அவர் அன்பைப் புறக்கணிக்க வில்லை. அன்பு இன்றியமையாதது என்று சொல்லுகின் றார். கடுமையான தவம் செய்துதான் இறைவனை அடைய முடியும் என்பதல்ல. எலும்பை விறகாக்கும் வகையில், ஊனுடலை தவக்கனலில் வாட்டும் வகையி லும் இறைவனை நாடினாலும் அந்த முயற்சிக்கு அடிப் படையாக உள்ளத்திலே அன்பு இல்லையெனில் ஒரு பயனும் இல்லை. எல்லாவற்றிற்கும் மேலாக இறைவன் விரும்புவது அன்பு. அந்த அன்பினால் இறைவன் தொண்டரை உருக்கவல்லவன். அன்பினால் உருகி உருகி மாணிக்கவாசகர் சிவமானார். இறைவனை அடைய அன்பில் உருகி அழ வேண்டும்; அரற்ற வேண்டும். இராப்பகல் இறைவனை பணிந்தேத்த வேண்டும். அகமுருகி இறை நினைவை நிரப்பி இறைவன்பால் தன்னை முழுதும் அர்ப்பணித்துக் கொள்ளவேண்டும். "நானும் அப்படிச் செய்துள்ளேன். அதையும் நீங்கள் செய்யுங்கள். என்போல நீங்களும் அன்பால் உருகி இறைவனை ஏத்தினால் ஞானத்தை அடையலாம். இல்லாவிட்டால் இறைவனை அடைய முடியாது" என்கிறார் திருமூலர்:

"என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினும்
அன்போ டுருகி அகங்குழை வார்க்கன்றி
என்போன் மணியினை யெய்தஒண் ணாதே"

(திருமந்திரம் . . . 272)

"அன்புள் உருகி அழுவன் அரற்றுவன்
என்பும் உருவ இராப்பகல் ஏத்துவன்
என்பொன் மணியை இறைவனை ஈசனைத்
தின்பன் கடிப்பன் திருத்துவன் தானே"

(திருமந்திரம் . . . 2980)

ஆதியும், அந்தமும் இல்லாதவன் இறைவன். சுயம்பு வானவன். ஊழிதோர் ஊழி ஐந்தொழில்களை விடாது புரிந்துகொண்டு வருகின்றான். சிவபெருமான் கொன்றை மலரைச் சூடி இருக்கின்றான். அவனுக்கு அது மிகவும் பிடித்தமான மலர். தன்னுடைய அருளி னால் தேனையும் மிக்க இன்பம் தரும் சக்தியை ஒரு பக்கத்தில் உடையவனாக இருக்கின்றான். அவனுடைய ஒளி பொன்னைப் போல இருக்கின்றது. ஆனால், இத் தகைய இறைவன் அடைய முடியாதவன் என்று ஐயுற வேண்டாம். அவனிடம் அன்பு வைப்பவர்கள் மீது அருள் மழை பொழிகின்றான். "ஆர்வம் உடையவர் காண்பார் அறந்தன்னை" என்கின்றார் திருமூலர். இறைவன் அவ் வாறு தன்னிடம் அன்பு செய்பவர்களுக்கு வேண்டிய வற்றைத் தருகின்றான், ஏனென்றால் அவன் அன்பு வடிவமாக இருக்கின்றான். அவனிடம் யார் அன்பு கொள்கின்றார்களோ அவர்களிடம் நிலையாக நின்று கொண்டு அருள் பாலிக்கின்றான். அவர்களுக்கு வழித் துணையாகவும் இருக்கின்றான். "தானொரு வண்ணம் என் அன்பில் நின்றானே" என்கிறார் திருமூலர். இறை வனுடைய நினைப்பில் தங்களுடைய முழு சிந்தனையை

வைப்பவர்களுக்குச் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் சோதி யாகத் தோற்றமளிக்கின்றான்.

"அன்பினுள் ளான்புறத் தானுட லாயுள்ளான்
முன்பினுள் ளான்முனி வர்க்கும் பிரானவன்
அன்பினுள் ளாகிஅமரும் அரும்பொருள்
அன்பினுள் ளார்க்கே அணைதுணை யாமே"

(திருமந்திரம் . . . 279)

இறைவன் பேரின்ப வடிவானவன். சீவர்களுடைய இன்பத்தில் பொருந்தி மகிழ்கின்ற அன்பு வடிவான வன். இராப்பகல் தன்னைப் பாசத்துள் வைத்துப் பரிவு செய்வார்களை நன்கு அறிவன். அவர்களிடையே வந்து அவர்கள் உள்ளத்திலேயே உறைந்து கொள்வான். ஆனால், இதை யாரும் அறிந்து கொள்வதில்லையே! அவனை, விட்டு விட்டு நினைப்பதில் பயனில்லை. கிடைப்பதற்கரிய ஒளி வடிவாகிய இறைவனைச் சிக் கெனப் பற்றிக்கொண்டு அவன் வழியே செல்ல வேண் டாமா? அவ்வாறு செல்வதன் மூலம் எல்லையில்லாப் பெருமையை அடைய வேண்டாமா? அவ்வாறு நீக்கமற நினைந்து அவனுடன் ஒன்றி இருப்பதே இனிமையான நீராடல் ஆகுமல்லவா? இவ்வாறு தான் செய்தவாறு மற்றவரையும் "இறைவனைச் சிக்கெனப் பிடித்துக் கொள்ளுங்கள்" என்று அழைக்கின்றார் திருமூலர்:

"விட்டுப் பிடிப்பதென் மேதகு சோதியைத்
தொட்டுத் தொடர்வன் தொலையாப் பெருமையை
எட்டுமென் னாருயிராய் நின்ற ஈசனை
மட்டுக் கலப்பது மஞ்சன மாமே"

(திருமந்திரம் . . . 289)

மாணிக்கவாசகர் இறைவனைச் சிக்கெனப் பிடித் துக் கொண்டவர். தன் எண்ணங்களையெல்லாம் இறை வனிடம் அர்ப்பணித்துத் தன் கண்களை அழகிய திருவடி களாகிய மலர்களுக்கு அடிமையாக்கி தனது வாக்கை இறைவனுடைய நாமத்திற்கு நிழலாக்கி மாணிக்கவாச கர் இறைவனைச் சிக்கெனப் பிடித்துக் கொள்கின்றார். "அம்மையப்பன் ஓர் ஒப்பிலாத மணி. அன்பினில் விளைந்த ஆரமுது. நானோ புழுவிற்கும் கீழானவன். அஞ்ஞானத்தில் மூழ்கி நிற்பவன். ஆயினும் இறைவன் எனக்கு சிவபதத்தை அளித்தான். செல்வன் சிவபெரு மான். அவனைச் சிக்கெனப் பிடித்துக்கொண்டு விட்டேன்" என்கின்றார்.

"அம்மையே அப்பா ஒப்பு இலா மணியே
அன்பினில் விளைந்த ஆர் அமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்து அலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவ பதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே"

(திருவாசகம்)

இறைவனை ஒருவர் சிக்கெனப் பற்றிக் கொண்டால் அவர் வேண்டியவற்றையெல்லாம் இறைவன் வாரி வழங்குகின்றான். மும்மலங்களை அழிக்கின்றான். அருட்கண்ணை விழிப்பிக்கின்றான். அன்பர்களுடைய உள்ளத்தில் சிவ ஒளியைப் பெருகச் செய்வான்.

"... ... ...
....
அருத்தியுள் ஈசனை யாரருள் வேண்டில்
விருத்தி கொடுத்திடும் விண்ணவர் கோனே"

(திருமந்திரம் . . . 277)

இறைவனிடம் மக்கள் பலவிதங்களில் அன்பு வைக் கின்றனர். இம்மையிலும் மறுமையிலும் இறைவனருளால் பலவிதமான நன்மைகளைப் பெறுகின்றனர். ஆனால், உண்மையான அன்பர்கள் இறைவனிடமிருந்து இத் தகைய நன்மைகளை நாடுவதில்லை. அவற்றை அவர் கள் வெறுப்பார்கள். அன்பிலே ஊறி நிற்கின்ற அடிய வர்கள் இறைவனிடமிருந்து ஒன்றுமே வேண்டுவ தில்லை. அவர்கள் வீட்டுப் பேறினைக் கூட பெரிதாக நினைப்பதில்லை. முக்தி அடையவேண்டும் என்கின்ற ஆசையும் அவர்களிடம் இருப்பதில்லை. உலகில் மக்கள் பல பொருள்களைச் சேர்த்து வாழ வேண்டுமென்று விரும்புகின்றார்கள். ஆனால், இறைவனுடைய உண்மை அன்பர்கள் பொருட்செல்வத்தை நாடுவதில்லை. அத னால் கிடைக்கும் இன்பத்தை விரும்புவதில்லை. இன்பத் திற்குப்பிறகு துன்பமும் வரும் என்று அவர்கள் நன்கு உணர்ந்தவர்கள். அவர்கள் இன்ப துன்பங்களைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. எல்லாவற்றையும் சம திருஷ்டியோடு பார்ப்பார்கள். இவர்கள் வேண்டுவது இறைவனுடைய அன்பு. இறைவன் மீது அன்பு வைப் பதையே பேரின்பமாகக் கருதுவார்கள். இவர்கள் பற்றற்றவர்கள். இவர்கள் இறைவனை வேண்டி வணங் குவது உயர்ந்த அன்பின் அடிப்படையில் அமைகின்றது. சேக்கிழார் பெருமான் இத்தகைய திருத்தொண்டர்களின் அன்பினை வெகுவாகப் புகழந்து பாடுகின்றார்:—

"கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்,
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்,
கூடும் அன்பினிற் கும்பிட லேஅன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்"

(பெரிய புராணம் – திருக்கூட்டச் சிறப்பு, 8)

கண்ணப்ப நாயனார் திருக்காளத்தி மலையில் இறைவனைக் காணச் செல்கின்றார். உள்ளத்திலே ஒரு சொல்லொணா உவகை பொங்குகிறது. பாரம் நீங்கு கிறது. அளவிலாத அவா பொங்கி, இறைவன் மீது பெரும் காதலாக மலர்கின்றது. பல பிறவிகள் எடுத்து இன்பதுன்பங்களை அனுபவித்து, வாழ்க்கை எனும் ஏணியில் உள்ள எல்லாப் படிகளையும் தாண்டி, இறைவனது மலையிலே கண்ணப்பனார் சேர்ந்தவராக, முன்னம் பாசத்தை விட்டவராக, அன்பே உருவமாக நின்ற பெருமையை சேக்கிழார் பெருமான், "சார்பு

விட்டகல நீங்கிப் பொங்கிய ஒளியின் நிழல் பொருவில் அன்பே உருவானார்" என்றார். கண்ணப்பனார் அன்பு வடிவமானார். அன்பே அவர் உருவம் ஆயிற்று. அன்பே சிவம் ஆகையால் கண்ணப்பனார் இறை உருவத்தைப் பெற்றார். ஆகவே அவருடைய அறிவு முழுவதும் இறைவனையே அறிந்து நின்றது. வேறு ஒன்றினும் செல்லவில்லை. கண்ணப்பனாரின் செயல்களெல்லாம் இறைவனுக்கு இனிமை செய்தல் பொருட்டே ஆயின. இதனைச் சேக்கிழார் பெருமான், "அவனுடைய வடிவெல்லாம் நம் பக்கல்; அவனுடைய அறிவெல்லாம் நமை அறியும் அறிவு; அவனுடைய செயலெல்லாம் நமக்கு இனியவாம்" என்று அருளிச் செய்தார்.

ஆகவே, அன்பு மிகப் பெரிது. தவம், யோகம் போன்றவைகளை விட பெரிது. அன்பினால் உருகினால் சிவத்தை அடையலாம். அவ்வாறு முதல்வனை நாடுங்கள். நானும் சிவத்தை அன்பினாலேயே நாடினேன். பெரும் கருணையோடு சிவபெருமான் என் அன்பை ஏற்று உருக்கித் தன் அன்பையே தலையாக நிற்கச் செய்தான். மீண்டும் மீண்டும் பிறவிக் கடலிலே மூழ்கக்கூடிய நிலையை நீக்கி வினைகளைச் சிறிது சிறிதாகக் குறைத்துக் கொண்டு சாவை நோக்கிச் செல்வதை விட இறவாமையை நாடுவதே மேலாகும். அதை அன்பினால் செய்வதே சாலச் சிறந்தது. அன்பு அறிவைத் தருகின்றது, ஒளியைத் தருகின்றது, மும்மலங்களை அழிக்கின்றது. அன்புள்ளம் படைத்தவர்கள் சிவமாம் தன்மையைப் பெறுகின்றனர், அன்பிற்கும், சிவத்திற்கும் இடைவெளி இல்லை. அன்பே சிவம்.

"அன்பும் சிவமும்இரண் டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே"

(திருமந்திரம் . . . 270)

முதல் திருமுறை

சம்பந்தர்

உண்ணாமுலை யுமையாளொடு முடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ண மறுமே.

உண்ணாமுலை உமையாளொடு உடனாகியும் ஒன்றாகியு உள்ள பெருமான் மலையில் மாமணிகள் திகழும் நிலத்தில் வீழும் அருவித்திரள் மழலை முழவு போல் அதிரும். அங்கு எழுந்தருளியுள்ள அண்ணாமலையாரைத் தொழ வினை அறுமே.

இரண்டாம் திருமுறை

சம்பந்தர்

மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பி னுருத்திர பல்கணத்தார்க்
கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்.

தேன் நிறைந்த புன்னையம் சோலையாகிய மயிலாப்பூரில், இளமயில்கள் ஆர்ப்பரிக்கின்ற ஊரில் எழுந்தருளி இருக்கின்ற கபாலீச்சரத்தில், ஒட்டி உறவாடுகின்ற பண்புடைய மெய்யடியார் திருக்கூட்டத்திற்குத் திருவமுது அமைத்துப் பரிமாறியூட்டும் சிறப்பினைக் காணாதே பூம்பாவாய் நீ போதியோ.



சரணாகதி

(டாக்டர். மாடபூசி. வரதராஜன். எம்.ஏ., பிஎச்.டி.)

1-0 முன்னுரை:

திருமால் தன் கருணையால் உயிர்களுக்கு ஐம்பொறிகளோடு கூடிய உடலைத் தந்து தன்னை உள்ளபடி அறிந்து பேரின்பப் பெரு வாழ்வு பெற வேத சாத்திரங்களையெல்லாம் காட்டிக் கொடுத்தான். இந்நூல்களில் இறைவனை அடைந்து உய்ய அடிப்படையாக அறிய வேண்டிய செய்திகள் ஐந்து. அதாவது பற்றப்படுமவனான இறைவ னுடைய இயல்பு, பற்றுபவனான ஆன்மாவினுடைய இயல்பு, இறை வனை அடைவதற்கு உறுப்பான நெறி இயல்பு, அடைந்து பெற வேண்டிய பேற்றின் இயல்பு, அப்பேற்றைப் பெறவொட்டாமல் தடுக் கும் பகை (விரோதி) இயல்பு என்பனவாம். இவையே அர்த்த பஞ்சகம் என வழங்கப்படுகிறது. மக்கள் வாழ்க்கையுடன் தொடர்பு கொண்டிருக்கும் சமயங்களில் பல உயரிய கொள்கைகளைத் தன்ன கத்தே கொண்ட பரந்த சமயம் வைணவ சமயமாகும். இது மேற் கூறிய அர்த்த பஞ்சகத்தை அடிப்படையாகக் கொண்டது. இவற்றில் இறைவனை அடைவதற்குரிய நெறிகள் பலவாறாக இருக்கின்றன. அவை கர்மயோகம், ஞானயோகம், பக்தியோகம்,பிரபத்தி அல்லது சரணாகதி, மற்றும் ஆசார்யாபிமானம் என்பனவாகும். இறைவனது ஐந்து நிலைகளில் விபவம் எனப்படும் இராமன் கிருஷ்ணன் முத லான அவதாரங்களில் பலர் இறைவனைப் பற்றி சரணாகதி செய்து பயன் பெற்றனர். இந்நெறியைப் பின்பற்றி உய்வு பெறாத இவ்வுலக மக்கள் வல்வினைப் பயனால் மாறி மாறிப் பலபிறப்பும் பிறந்து துன்பக்கடலுள் துவள்கின்றதை எண்ணி, இக்கலியுகத்தில் இறைவன் ஆழ்வார்களையும் ஆசார்யர்களையும் தோற்றுவித்தான். ஆழ்வார் கள் காலத்திலிருந்தே இறைவனையே நெறியாகப் பற்றும் முறை, மேன்மை பெற்றது. இதனை வைணவ ஆசார்யர்கள் மேலும் விளக் கம் பெறச் செய்தனர்.

இவற்றை அடிப்படையாகக் கொண்டு, சரணாகதியின் இலக்க ணம், அது வைணவத்தில் பெற்ற இடம் ஆகியன பற்றி விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

2-0 சரணாகதியின் இலக்கணம்

சரணாகதி என்ற வடசொல் விஸர்க்கம்(=:) நீங்கப் பெற்று சரணாகதி எனத் தமிழில் வழங்கப் படுகிறது. இச் சொல்லில் 'சரணம்' என்பதற்கு உபாயம், வீடு, காப்பாற்றுபவன் என்று மூன்று பொருள் கள் வழங்கப்படுகின்றன.1. சரணாகதியை ந்யாஸம் என்னும் பிர பத்தி என்றும் வழங்குவர்.2. சரணாகதி என்ற சொல்லுக்கு அடைக்க லம் புகுகை என்று அகராதி பொருள் கூறும்.3. வைணவ சமயத்தில் மும்மறைகளான திருமந்திரம், துவயம், சரமசுலோகம் ஆகியவற் றுள் துவயம் என்கிற மந்திர ரத்தினம் சரணாகதி நெறி பற்றி சொல்லு வதால் அதற்கு சரணாகதி என்றே பேராயிற்று எனக் கருதுவர் காஞ்சீ பிரதிவாதி பயங்கர அண்ணங்கராசார்ய சுவாமிகள்.4. சரணாகதி செய்பவன், சரண்யன் (+சஞ்சமாகப் பற்றப்படுபவன்) ஆகியோர்க் குரிய சில நெறி முறைகள் வேதம் முதலான நூல்களில் கூறப்பட்டுள் ளன.

2.1 சரணாகதி செய்பவனின் தன்மைகள்:

ஒருவன் அடைக்கலம் புகும் போது, அனைவருக்கும் நன்மை செய்ய உறுதி கொண்டவாயும், தீமையை விட்டவனாயும், காக்கும் கடவுளிடம் நம்பிக்கை யுடையவனாயும், அந்நம்பிக்கையைப் பின் பற்றும் வகையில் தன்னைக் காப்பாற்றுமாறு இறைவனை வேண்டுப வனாயும், அதற்காகத் தன்னை அவனிடம் செலுத்துமவனாயும், கைம்முதலில்லாதவனாயும் இருத்தல் வேண்டும் என்பது நூற் கொள்கை.

ஒருவன் ஏதோ ஒரு தீவினையால் செல்வத்தை இழந்து வருந்து கிறான். மற்றொருவன் இயற்கையில் வறுமையாயிருந்து செல்வத் தைப் பெற விரும்புகிறான். வேறு ஒருவன் உடல் உயிர் வேறுபாடு அறிந்ததனால் ஆத்மாநுபவத்தைப் பெற விரும்புகிறான். மற்றும் ஒருவன் இறைவனையே அடைந்து அவனுக்கே கைங்கர்யம் செய்ய விரும்புகிறான். இப்படி துக்கப்படுபவன், பொருள் விரும்புபவன், கைவல்யா நுபவம் வேண்டுபவன், இறைவனையே அடைய விரும் புபவன் என்னும் நான்கு விதமான அதிகாரிகளுக்கும் சரணாகதியே உரிய நெறி எனக்கூறுகிறது விஷ்ணு புராணம்.6.

2.2. சரண்யனுடைய (இறைவன்) தன்மைகள்:

ஒருவன் வெகுநாளாகக் கெட்ட ஒழுக்கத்தையுடையவனாய் இருக்கிறான். உண்ணா உணவையும் உண்பவனாய் இருக்கிறான். மேலும், செய்ந்நன்றி மறந்தவனாயுமிருக்கிறான். நாத்திகவாதமும் செய்பவன். இவ்வாறு இருப்பினும் இறைவனை நம்பிக்கையுடன் அடைந்தானாகில் அவனைச் சரண்யனான இறைவன் தன் மகிமை யாலே குற்ற மற்றவனாகச் செய்வதாக சாத்வத சம்கிதை கூறுகிறது.7. தஞ்சமடைந்தவன் கொல்லத் தக்கவனாயினும் அவனைக் காட்டிக் கொடுப்பதில்லை என்று யசுர் வேதம் கூறுகிறது. உலகுக்குக் குரு வான சீமந் நாராயணன் எவனொருவன் எல்லா முறையாலும் சரண மடைகிறானோ அவன் தேவர், முனிவர்கள், பங்ச பூதங்கள், மூதா தையர், உறவினர் ஆகியோர்க்கு அடிமையல்லன் என்றும் கடமைப் பட்டவனல்லன் என்றும் பாகவதம் கூறுகிறது. 9. எவனைக் காட்டி லும் மேலான காப்பவன் இல்லையோ, அப்படிப்பட்டவனும், எல் லையற்றவனும், அளவிட முடியாதவனுமான இறைவனையே சரண மாகப் பற்ற வேண்டும் என்று விஜ்ணு புராணம் கூறுகிறது.10. சாத்தி ரங்களின் உயர்ந்த கருத்தான இந்த சரணாகதி ஒரு தடவை செய்யப் பட்டாலே அந்த மனிதனைப் பிறவிப் பெருங்கடலினின்றும் தாண்டு விப்பதாக இலட்சுமீ தந்திரம் கூறுகிறது. 11. ஒருவன் ஒரு தடவை இறைவனைச் சரணம் அடைகிறான். இறைவனுக்கு அடியவனாகி றேன் என்றும் வேண்டுகிறான். அப்படிப்பட்டவனை எல்லா பிராணி களிடத்தினின்றும் அபயம் அளிப்பதற்கு இராமபிரான் விரதம் கொண்டதாக இராமாயணம் கூறுகிறது. 12. கர்ம ஞான பக்தி யோகங் கள் முதலான தர்மங்களை இவை உபாயம் என்னும் எண்ணத்தோடு செய்யாமல் விட்டு இறைவன் ஒருவனே உபாயமாக அதாவது நெறி யாக எவன் அடைகிறானோ, அவனைத்தான் எல்லாப் பாபத்திலிருந் தும் விடுவிப்பதாகக் கண்ணன் கீதையில் கூறுகிறார்.13. இவ்வாறு வேத இதிகாச புராணங்கள் முதலானவை சரணாகதிக்கு இலக்கணம் வகுத்துள்ளன. இந்நெறி இதிகாச புராண காலங்களில் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளவும், விரும்பிய செயலைச் செய்து கொள்ள வும், நிலையற்ற இம்மைப் பயனைப் பெறவும் பயன்பட்டு வந்துள்

ளது.

3.0 வைணவத்தில் சரணாகதி நெறியின் இடம்:

இவ்வாறு நிலையற்ற இம்மைப் பயனைப் பெறவதற்காகச் சரணாகதி பயன்பட்டதன்றிக்கே, இறைவனையே தஞ்சமாக அடைவதாகிய அச்சரணாகதி வீடு பேற்றிற்குப் பயன்படுவது ஆழ்வார்கள் காலத்தில் முதன்மை பெற்றது.

3.1. ஆழ்வார்கள் காட்டிய நெறி

மேற்கூறிய அர்த்த பஞ்சகமென்னும் அறிய வேண்டிய ஐந்து பொருள்களும் மும்மறைப் பொருளான திருமந்திரம், துவயம, சரம சுலோகம் ஆகியவற்றில் அமைந்துள்ளன. இம்மும்மறைப் பொருள்களின் விளக்கமே ஆழ்வார்கள் அருளளிய நாலாயிர திவ்வியப் பிரபந்தமாகும். ஆழ்வார்கள் இறைவனையே நெறியாகப் பற்றி உய்யும் வகையைப் பல பாசுரங்களில் எடுத்துக் காட்டியுள்ளனர். விரிவுக்கு அஞ்சி சில இங்கு எடுத்துக் காட்டப்படுகிறது.

பொய்கையாழ்வார் தாம் அருளிய முதல் திருவந்தாதியில்

அடைந்த அருவினையோடு அல்லல் நோய் பாவம்
மிடைந்தவை மீண்டொழிய வேண்டில் - நுடங்கிடையை
முன் இலங்கை வைத்தான் முரணழிய - முன்னொரு நாள்
தன் வில் அங்கை வைத்தான் சரண்.14.

என்ற பாடலில் அருவினை, நோய், பாவம் ஆகியவை வாசனையோடே நீங்க வேண்டுமாயின் (+நீங்கி மோட்சமடைய வேண்டுமாயின்) முன்பு இலங்கையையழித்த இராமபிரானைச் சரணம் புக வேண்டும் என்று சரணாகதி நெறியைக் காட்டுகிறார். குலசேகர ஆழ்வாரும்,

'தருதுயரம் தடாயேல் உன் சரணல்லால்
சரணில்லை...' என்ற பாடலில் 15. இறைவனாலே கொடுக்கப்பட்ட பிறவித் துயரைப் போக்கிக் கொள்ள அவனையே நெறியாகப் பற்றுவதாகக் கூறுகிறார். இங்ஙனே ஆழ்வார்களுக்கு அவயவியான நம்மாழ்வாரும் தாம் அருளிய திருவாய் மொழியில் ஐந்தாம் பத்தில் நான்கு முறையும். 16. ஆறாம் பத்தில் ஒரு முறையும் 17. இறைவனைச் சரணமாகப் பற்றுகிறார். 'நோற்ற நோன்பிலேன்' என்ற பதிகத்தில் தம்மிடம் கைம் முதலில்லாமையையும் வேறு கதியில்லாமையையும் முன்னிட்டு 'ஆறெனக்கு நின் பாதமே சரணாகத் தந்தொழிந்தாய் உனக்கோர் கைம்மாறு நானொன்றிலேன்' என்று வானமாமலை திவ்வியதேசத்து எம்பெருமானையே ஆறாகவும் பேறாகவும் பற்றுகிறார். இவ்வாறு மேலும் இரண்டு பதிகங்களில் வீடு பேற்றைப் பெறுவதற்காகச் சரணாகதி செய்கிறார். 'பிறந்தவாறும்' என்னும் பதிகத்தில் இறைவனது குணத்தை அநுபவிக்கும் காலத்தில் தளர்வின்றிருக்கச் செய்த சரணாகதியாகும். இறுதியாக, 'உலக முண்ட பெருவாயாவில் எங்கும் எக்காலத்திலும் எல்லார்க்கும் அடையலாம் படியான பெருமையோடு நம் காரியத்தைச் செய்து முடிப்பதற்குத் தக்க அறிவு ஆற்றல் நிறையப் பெற்று எப்போதும் சேவை கொடுக்கும் திருவேங்கட முடையான் திறத்து, 'புகலொன்றில்லாவடியேன் உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே3 என்று சரணம் அடைகிறார். இவ்வாறு ஆழ்வார் தம் உபதேசத்தின் மூலமாகவும் தமது அனுட்டானத்தின் மூலமாகவும் சரணாகதிக்கு மிக்க செல்வாக்கை உண்டாக்கியுள்ளார். பிற்காலத்தவரும் இந்த எளிதான முறையைப் பற்றும் படி உபதேசித்தார். இவ்வாறு தஞ்சமடைந்தவர்களின் குலத்துக்கு மூல புருஷராகவும் இருப்பார். இது பற்றியே நம்மாழ்வாரை 'பிரபந்நஜந கூடஸ்தர்' என்ற பெயரிட்டு அழைக்கின்றனர்.

3.2 ஆசார்யர்கள் வளர்த்த நெறி:

ஆழ்வார்கள் வழி வந்த வழித் தோன்றல்களான பூர்வாசார்யர்களும் இந்த சரணாகதி நெறியைப் பின்பற்றி உலகோர்க்கு உய்யும் வகையை உணர்த்தியுள்ளனர். இனி, நாதமுனிகள் தொடக்கமான, ஆசார்யர்கள் எவ்வாறு சரணாகதி நெறியை வளர்த்தனர் என்பது விளக்கப்படுகிறது.

நம்மாழ்வார் மூலமாகப் பெற்ற இந்த நெறியை நாதமுனிகள் தம் பேரனான ஆளவந்தார்க்கு உய்யக் கொண்டார், மணக்கால் நம்பி, என்னும் ஆசார்யர்கள் மூலமாகக் காட்டிக் கொடுத்தார். ஆளவந்தாரும் தாம் அருளிய தோத்திர ரத்தினம் என்னும் நூலில் கர்ம ஞான பக்தி யோகங்களைக் காட்டிலும் சரணாகதி நெறியே சிறந்தது என்பதை அறிவுறுத்தியுள்ளார். சரணமடையத் தகுந்தவனான எம்பெருமானைப் பார்த்து 'ந தர்ம நிஷ்டோஸ்மி....' என்கிற படியே கர்ம ஞான பக்தி யோகங்களாகிற உபாயம் ஒன்று மில்லாதவனாயும் வேறு புகலற்றவனாயும் இருந்து தாம் எம்பெருமானது திருவடித் தாமரைகளையே நெறியாகப் பற்றுவதாக கூறுவர்.18.

இவ்வாறு ஆளவந்தார் அருளிய ஸ்தோத்திர ரத்தினம் அவர் வழி வந்த இராமாநுசருக்கு உதவியாயிருந்தது. மேலும் திருக்கச்சி நம்பிகள் மூலமாகப் பெற்ற ஆறு வார்த்தைகளுள் ஒன்றான சரணாகதி நெறியே தக்க நெறி என்பதனையும் கருத்தில் கொண்டு இராமாநுசர் சரணாகதி கத்யம் என்னும் நூலில் பக்தி நெறியை வீட்டிற்கு உபாயமாகப் பற்றாமல் பெரிய பெருமாளான திருவரங்கனின் திருவடிகளையே தஞ்சமாகப் பற்றுவதே சரணாகதி நெறி என்று நிலைநாட்டினார். இதில் எம்பெருமானுடைய திருவடித் தாமரைகளிலே தனக்கு உண்மையான சரணாகதி நிஷ்டைவிளைவதற்காகப் பெரிய பிராட்டியார் திருவடிகளில் வேறு புகலில்லாததான் தஞ்சமாகப் பற்றுகிறார். அந்த சரணாகதியினால் தாம் பெற விரும்பும் பயனான ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா வடிமை செய்கை தவிர வேறொன்று மன்று என்றும் தெரிவிக்கிறார். மேலும் ஒன்றிரண்டு கைங்கர்யங்களைச் செய்து மனநிறைவு பெறுகையன்றிக்கே சென்றால் குடையாம்...' என்கிற படியே எல்லா முறையுமான அடிமைகளையும் செய்யப் பெறவேணும் என்கிற ருசி தொடர்ந்து வருமாகில் அதுவே பெறாப் பேறு என்றும் காட்டினார். இடையறாத மகிழ்ச்சியான இறையநுபவம் உண்டாகி அதனால் அடிமையில் ருசி உண்டாகும் என்றும் கூறுகிறார்.19.

இப்படி மறுமைப் பயனைப் பெற வழி காட்டிய வள்ளலான இராமாநுசர் செய்த சரணாகதியே தம்மை உய்விக்கும் என்ற நம்பிக்கையை வளர்த்தவர்கள் அவர் காலத்திலும், பின்பும் வந்த ஆசார்யர்களாவர். ஆசார்யர் சம்பந்தமே வேண்டற்பாலதாகும். அதுவே வீடு பேற்றை அளிக்க வல்லது என்ற உறுதியையும் கொண்டிருந்தனர். எடுத்துக் காட்டாக, கூரத்தாழ்வான் என்னும் ஆசார்யர் தாம் அருளிய ஒரு தனியனில் 'ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே' என்று இராமாநுசருடைய திருவடித் தாமரைகளை நெறியாகப் பற்றுவதாகக் கூறுகிறார்.20. திருவரங்கத்த முதனார் என்னும் ஆசார்யரும் இராமாநுச நூற்றந்தாதி என்னும் பிரபந்தத்தில் இராமாநுசர் செய்த சரணாகதிப் பயனாக அவர் சம்பந்தத்தை எவ்கையாலும் பெற்ற உலகத்தார் உய்ந்து போவர்கள் என்பதை, 'பொருந்திய தேசும் பொறையும் திறலும்... அருந்தவன் எங்களிராமாநுசனை அடைபவர்க்கே' என்ற பாசுரத்தால்21 உணர்த்துகிறார். மேலும் 'பேறொன்று மற்றில்லை நின் சரணன்றி அப்பேறளித்தற்கு ஆறு ஒன்றுமில்லை மற்றச் சரணன்றி22 என்கிற படியே இராமாநுசருடைய திருவடிகளை யொழிய வேறுபயன் ஒன்றுமில்லை என்றும் அந்தப் பயனைக் கொடுத்ததற்கு அவர் திருவடிகளை யொழிய நெறிவேறு இல்லை என்றும்ஆசார்யனைத் தஞ்சமாகப் பற்றுவதே இறைவனை அடைய வழி என்பதை நிலை நாட்டினார் அமுதனார். இங்ஙனே பலர் உரைத்துள்ளனர்.

இவ்வாறு இராமாநுசர் காட்டிய நெறியைப் பின்பற்றி நம் பிள்ளை என்னும் ஆசார்யர் சரணாகதி நெறி எல்லோரும் செய்வ

தற்கு உரியது என்ற கூறுவர்.23. நம்பிள்ளை நெறியைப்பின்பற்றிய பெரியவாச்சான் பிள்ளை என்னும் ஆசார்யர் சரணாகதி நெறியைப் பற்றிச் சொல்லும் போது, பிற வழிகளை மேற்கொண்டால் பயன் தரும்காலத்தில் இறைவன் கைபார்த்திருக்க வேண்டும். இறைவனையே நெறியாகக் கொண்டால் வேறொன்றைத் தேட வேண்டியதில்லை என்பர்.24. மேலும் பக்தி என்பது வேதனம், தியானம், உபாஸனம் என்று சொல்லப்படுவதாய், ப்ரீதியாலே அடையத்தக்கதாய், எம்பெருமானை மனக்கண்ணால் காணத்தக்க தன்மையான ஞான விசேஷமாகும். இது கர்ம ஞான யோகங்களை உதவியாகக் கொண்டு தாமதித்துப் பயன் அளிப்பதாயிருக்கும். இத்தகைய குற்றமில்லாத சுருதியிலும் ஸ்ம்ருதியிலும் சொல்லப்பட்டதாய் சுகமானதும் நம்பிக்கையுமுள்ளதாய் ஞான விசேஷமுமாயிருப்பது சரணாகதி என்று உரைப்பர்.25. இராமாயணம், பாரதம் முதலானவற்றில் முக்கியமான சுலோகங்களின் கருத்தைக் கூறும் 'தனிசுலோகம்' என்னும் நூலில் விபீஷணன் செய்த சரணாகதியைப் பற்றிக் கூறும் போது, அவன் சரணாகதிக்கு இலக்கணமான ஆறு தன்மைகளோடு இராமபிரானைச் சரணமடைந்ததாகக் கூறுவர்.26.

பெரிய வாச்சான் பிள்ளை காலத்துக்குப் பின்னர் வேதாந்த தேசிகர் என்னும் ஆசார்யர் 'அந்தணர் அந்நியர் எல்லையில் நின்ற அனைத்துலகும் நொந்தவரே முதலாக நுடங்கி அனன்னியராய் வந்தடையும் வகை' என்று சரணாகதி நெறிபற்றி உரைப்பர்.27

பிள்ளை லோகசார்யர் என்னும் ஆசார்யர் சரணாகதி நெறியை மிகவும் விளக்கமாக ஸ்ரீவசனபூஷணம் என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். சரணாகதிக்கு இடம், காலம், முறை, உரியவன், பயன் என்கிற வரம்பு இல்லை என்றும் இன்ன விஷயத்தில் செய்ய வேணும் என்கிற விஷய நியமம் மாத்திரம் உண்டு என உரைப்பர்28. எடுத்துக்காட்டாக, பயன்பற்றிய வரம்பு ஏதும் கிடையாது என்பதற்கேற்ப சரணாகதி பண்ணின தருமபுத்திரன் முதலானோர்க்குப் பயன் இராஜ்யம், திரௌபதிக்குப் பயன் புடவை பெறுதல், சீதையைத் தீண்டிய காகாசுரனுக்குப் பயன் உயிர், ஸ்ரீகஜேந்திரனுக்குப் பயன் கைங்கர்யம், விபீஷணனுக்குப் பயன் இராமபிரானை அடைதல், இளைய பெருமாளான இலக்குமணனுக்குப் பயன் இராமன் பின் செல்லல் என்று கூறுவர்.29. சரணாகதிக்கு விஷயநியமமாவதுஎம்பெருமானுடைய ஐந்து நிலைகளில் ஒன்றான அர்ச்சாவதாரத்தில் எளிவந்த தன்மை முதலான குணங்கள் நிறைந்திருக்கையாலே சரணாகதியை அநுட்டிக்க வேண்டும் என்பதாகும். 'ஆழ்வார்கள் பலவிடத்திலும் ப்ரபத்தி பண்ணிற்றும் அர்ச்சாவதாரத்திலே' என்பர்.30 முமுட்சுப்படியில் சரணாகதி என்னும் துவய மந்திரத்தின் முதல் பகுதியான 'ஸ்ரீமந் நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே' என்பதிலுள்ள சரணம் என்ற சொல்லுக்கு விருப்பத்தை அடைவதற்கும் பகையான பாபத்தைப் போக்குவதற்கும் இறைவனையே தப்பாத உபாயமாக நெறியாகக் காட்டுவர்.31 நம்மாழ்வார் அருளிய திருவாய் மொழி சரணாகதி மந்திரமான துவயத்தின் பொருளைப் பலகாலும் உணர்த்துவதால திருவாய் மொழியை தீர்க்க சரணாகதி என்பர்.

இறைவனைப் பற்றுவதற்குரிய நெறிகளை மேற்கொள்ள ஆற்றலற்றவனுக்கு ஆசார்யன் திருவடிகளே தஞ்சமாகும். இந்நெறியினைக் கொள்ளுவதிலுள்ள எளிமையைக் காட்டுபவன் ஆசார்யனே யாவான். அறியாதனவற்றை அறிவிப்பவனுமாவான். இதனாலேயே 'ஆசார்யாபிமானமே உத்தாரகம்' என்று போற்றுவர் பிள்ளை லோகாசார்யர்.32

இவ்வாறு ஆசார்யப் பற்றினைப் போற்றும் நெறியில் தோன்றிய மணவாளமாமுனிகள் தாம் அருளிய உபதேச ரத்தின மாலையில்

ஞான மனுட்டான மிவை நன்றாகவேயுடைய
னான குருவை யடைந்தக்கால் - மாநிலத்தீர்
தேனார் கமலத் திருமாமகள் கொழுநன்
றானே வைகுந்தந் தரும்.33

என்ற பாடலில் ஞானமும் அனுட்டானமும் செம்மையாகவுடைய ஆசார்யனை அடைந்தால்தேன் பொருந்திய தாமரைப் பூவில் இருக்கும் திருமகள் கேள்வனானதிருமால் தானே பரமபதத்தை அளிப்பான் என்று சரணாகதி நெறிப் பயனைக் கூறுகிறார்.

4-0 முடிவுரை:

ஆக, சரணாகதி நெறியானது வேதம் முதலான நூல்களால் வித்தாக விதைக்கப்பட்டு, இதிகாச புராணங்களால் வேர் ஊன்றப் பெற்று, ஆழ்வார்களால் மரமாக்கப்பட்டு, ஆளவந்தார் இராமநுசர் போன்ற ஆசார்யர்களால் மலர்களாக மலரச் செய்து, நம்பிள்ளை, பெரிய வாச்சான் பிள்ளை, பிள்ளை லோகாசய்யர், மணவாள மாமுனிகள் போன்ற ஆசார்யர்களால் அம்மலர்கள் சூடப் பெற்றது உள்ளங்கை நெல்லிக்கனி. இந்நெறியைப் பின்பற்றி நாமும் உய்யும் வகை அறிவோமாக.

ஆழ்வார் எம்பெருமானார் சீயர் திருவடிகளே சரணம்

அபிராமி அருள்


சீவகாருணிய ஒழுக்கத்தினால் கடவுள் அருளைப் பெறக்கூடும். வேறெந்த வழியாலும் பெற இயலாது. சீவகாருணியம் விளங்கும்பொழுது அறிவும் அன்பும் உடனாக நின்று விளங்கும். அந்த உபகார சக்தியால் எல்லா நன்மைகளும் தோன்றும்.

சுவாமி விவேகானந்தர்

"உயிரே போவதானாலும் நேர்மையுடன் இருப்பீர்களாக! ஒழுக்கமுள்ளவனாக இரு, தைரியமுள்ளவனாக இரு. இதய பூர்வமான உறுதி பிறழாத ஒழுக்கத்தில் நிலை பெற்றிரு. சுயநலமே ஒழுக்கக்கேடு. சுயநலமின்மையே நல்லொழுக்கம்.

ஔவையார்

பசிப்பிணியானது ஒருவனது மானம், குலம், கல்வி, ஈகை, அறிவு முதலியவற்றையெல்லாம் கெடுத்துவிடும்.



அன்னை அபிராமி



குமரகுருபரர் வாழ்வும் தொண்டும்

முனைவர். சி. பாலசுப்பிரமணியன்
துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

பெருவாழ்வு

தாமிர பரணியாற்றின் வடகரையில் ஸ்ரீவைகுண்டமென்னும் திருத்தலத்தின் அருகில் ஸ்ரீகைலாசம் என்னும் பகுதியில் வழிவழியாகத் திருமுருகப் பெருமானிடத்து நிலைத்த பக்தியும் தமிழ்ப்புலமையும் வாய்ந்த சைவ வேளாளர் குலத்துதித்த சண்முகசிகாமணிக் கவிராயருக்கும் சிவகாமசுந்தரி அம்மையாருக்கும் சுமார் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னால் பிறந்தவர் சைவமும் தமிழும் தழைக்கச் செய்த குமரகுருபரர் ஆவர்.

குமரகுருபரர் பிறந்த ஐந்தாண்டுகள் வரை பேச்சு வராத ஊமைக் குழந்தையாக இருந்தார். இதனால் கவலையுற்ற பெற்றோர்கள் திருச்செந்தூருக்கு எடுத்துச் சென்று செந்திலாண்டவர் திருச்சந்நிதியில் கிடத்தி விட்டுப் பாடு கிடந்தனர். முன்னியதை முடித்து வைக்கும் முருகப் பெருமான் அருளால் பேச்சு வராத குழந்தை பேசும் திறம் பெற்றது. அம்மட்டோ! பாடும் திறமும் பெற்றது. முருகணருளைப் பெற்ற குமரகுருபரர் கல்வியில் நல்ல தேர்ச்சிபெற்றுக் கந்தர் கலிவெண்பா என்னும் நூலினை முதற்கண் பாடினார். தாம் பிறந்த தலத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீகைலாசநாதர் மீது கைலைக் கலம்பகம் என்னும் ஒரு பிரபந்தம் இயற்றினார். நல்ல புலமை வந்து சேர்ந்தது. இதன் பயனாக மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ். மதுரைக் கலம்பகம், திருவாரூர் நான் மணி மாலை, முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ், சிதம்பர மும்மணிக்கோவை, சகலகலாவல்லி மாலை, காசிக் கலம்பகம் முதலான நூல்களைத் தம் வாழ்நாளில் இயற்றித் தமிழிற்குத் தலைசிறந்த தொண்டாற்றியுள்ளார். இவருக்குச் சிவஞான உபதேசம் செய்தருளியவர் திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்தில் நான்காம் பட்டத்தில் குருமூர்த்தியாக விளங்கிய ஸ்ரீமாசிலாமணி தேசிகர் ஆவர். துறவுநிலை அருள வேண்டுமென தம் ஞானாசிரியரிடம் குமரகுருபரர் கேட்க, அவர் அதற்கு முன் தலயாத்திரை செய்து வரும்படி பணித்தல் அவ்வாதீன மரபாதலின் அக் குருமகா சந்நிதானம் அவரைக் காசியாத்திரை செய்து வரும்படி கட்டளையிட்டனர். காசிக்குச் சென்று திரும்பிவர நெடுங்காலம் ஆகுமே என்று கவன்ற குமரகுருபரரை நோக்கி ஸ்ரீமாசிலாமணி தேசிகர் சிதம்பரம் வரை சென்றுவரப் பணித்தார். அவ்வாறே சிதம்பரம் சென்று சில நூல்களை இயற்றித் திரும்பிய குமரகுருபரர் காசிக்கும் சென்றார். காசியை அக்காலத்தில் ஆண்ட டில்லி பாதுஷாவின் மனத்தில் இடம் பெற்றுச் சிவத்தொண்டு சில காசியில் புரிய வாய்ப்பேற்படுத்திக்கொள்ள வேண்டும் என்று எண்ணிய குமரகுருபரர் அப்பாதுஷாவின் தாய்மொழியாகிய ஹிந்துஸ்தான மொழியை விரைவில் அறிந்துகொள்ள அருள்பாலிக்க வேண்டுமென்று சகலகலாவல்லி மாலை பாடிக் கலைமகள் அருளினைப் பரவினார். கலைமகள் திருவருள் வாய்க்கப் பெற்ற குமரகுருபரர் பாதுஷாவிடம் ஹிந்துஸ்தானி மொழியிலேயே பேசி, அவர் மனத்தினைக் கவர்ந்து, காசியில் கேதார கட்டத்தில் மடம் கட்ட ஓர் இடம் பெற்றார்.

> "கேதார கட்டத்திலுள்ள கேதார லிங்கத்தை
> முகம்மதியர் மறைத்திருந்தனரென்றும்
> குமரகுருபர முனிவர் அம்மூர்த்தியை வெளிப்படுத்தி
> ஆலயம் முதலியன கட்டுவித்து நித்திய
> நைவேத்திகங்கள் நடத்தச் செய்தனரென்றும்
> இன்றும் ஆகம விதிப்படி தமிழ்நாட்டு முறையில்
> சில திருவிழாக்கள் அங்கே நிகழ்கின்றனவென்றும்
> சிலர் கூறுவர்."

என்று டாக்டர் உ.வே. சாமிநாதையர் குறிப்பிடுவார் (குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத் திரட்டு' குமரகுருபர சுவாமிகள் சரித்திரச் சுருக்கம்,

செய்யுள்திறம்

தமிழ்த்தாத்தா டாக்டர் உ.வே. சாமிநாதையர் குமரகுருபரர் பற்றிக் குறிப்பிடும் மேலும் சில செய்திகள் மனங்கொளத் தக்கனவாகும். அவை வருமாறு :

> "குமரகுருபர முனிவர் காசியில் தங்கியிருந்த மடத்திற்குக் குமாரசாமி மடமென்று பெயர். அங்கே இவர் சிவபோகம் செய்து கொண்டு வாழ்ந்து வந்தார். அக்காலத்தில் காசித்துண்டி விநாயகர் பதிகமும் காசிக்கலம்பகமும் இவரால் இயற்றப்பெற்றன. இவர் தாம் வாழ்ந்திருந்த மடாலயத்தில் புராண சாலை ஒன்று ஏற்படுத்தி அங்கே ஹந்துஸ்தானி பாஷையிலும் தமிழிலும் புராணப் பிரசங்கமும் செய்ததுண்டு: சிறந்த ராமபக்தராகிய துளஸிதாஸர் அந்தப் பிரசங்கங்களைக் கேட்டு உவந்தாரென்றும், கம்பராமாயணத்திலுள்ள கருத்துக்களைத் தாம் ஹிந்துஸ்தானியில் இயற்றிய இராமாயணத்தில் அமைத்துக் கொண்டனரென்றும் கூறுவர்.

ஸ்ரீகுமரகுருபர சுவாமிகளுடைய செய்யுட்களில் தனிச் சிறப்புப் பெற்று விளங்குவது அவற்றின் இன்னோசை யேயாகும். ஏனைப் பாட்டுக்களிலிருந்து இவருடைய செய்யுட்களைச் செவிப்புலன் கொண்டே வேறுபடுத்தி விடலாம். இவற்றைக் கேட்கும்போது நமக்குத் தென் பாண்டி நாட்டுப் பொருநை நதியின் ஓட்டம் நம் ஞாபகத்துக்கு வருகின்றது. சொற்களும் சொற்றொடர்களும் ஒன்றனோடு ஒன்று செவிக்கினிமை தரும் வண்ணம் பொருந்தி அமைந்துள்ளன. பொருளிலே கருத்துச் செல்வதற்கு முன் செய்யுட்களின் ஓசை நம் கருத்தை இழுக்கின்றது.

சொல்லின்பத்தை விளைவிப்பனவாகிய கருவிகள் அனைத்தும் கம்பீரமாகச் செல்லும் இவருடைய செய்யுள் நடையில் நன்கு அமைந்துள்ளன. எவ்வகை யாப்பையும் பேராற்றலுடன் அமைக்கும் இம்முனிவருக்குச் சொற்களும் தொடை நயங்களும் சிறிதும் முயற்சியின்றி இயல்பாகவே வந்து அமைகின்றன. வழியெதுகையும் முரண்டொடையும் அச்செய்யுட்களின் ஓசையைப் பொலிவுறுத்துகின்றன. சந்தத்தை இவர் மிக எளிதின் அமைத்துள்ளார். விருத்தங்களிலும் வெண்பாவிலும் இவருக்கே உரிய ஓசைநயம் மேம்பட்டு விளங்குகின்றது. அகவல்களிலும் வேறு செய்யுட்களிலும் இவருடைய கருத்துக்கள் தெளிவாக விளங்குகின்றது. அகவல்களிலும் வேறு செய்யுட்களிலும் இவருடைய கருத்துக்கள் தெளிவாக விளக்கப் பெற்றுள்ளன."

இனி, டாக்டர் உ.வே.சா. அவர்கள் குறிப்பிட்டுள்ள இக்கருத்துக்களை ஆராய்ந்து காண்போம்.

தமிழ்ப்பற்று

குமரகுருபரர் என்றவுடன் முதற்கண் அவருடைய அளவிடற்கரிய தமிழ்ப்பற்று விளக்கமுறும். தாம் தம் வாழ்வில் முதன்முதலில் பாடிய கலிவெண்பாவிலேயே,

ஆசுமுதல் நாற்கவியும் அட்டவா தானமும்சீர்ப்
பேசுமியல் பல்காப் பியத்தொகையும் – ஓசை
எழுத்துமுத லாம் ஐந் திலக்கணமும் தோய்ந்து
பழுத்த தமிழ்ப்புலமை பாவித்து

– கந்தர் கலிவெண்பா : 118 – 119

என்று உலகியற் பொருள்களில் எதனையும் விரும்பாத இவர் சொல்நயத்துடன் கவிபுனையும் பெற்றியினைப் பெரிதும் விரும்பி வேண்டுகிறார். மேலும் இவர் பாடிய சகலகலாவல்லி மாலையில் காணப்பெறும் கீழ்க் காணும் பகுதிகள் இவருடைய ஆராத தமிழ்க் காதலைப் புலப்படுத்தும் எனலாம்.

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்

– சகலகலா வல்லி மாலை, 2

பண்ணும் பரதமுங் கல்வியும் தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும்பொழுது எளிது எய்த நல்காய்

– சகலகலா வல்லி மாலை 10

தமிழின்சிறப்பினைப் பல்லாற்றானும் இவர் தம்முடைய செய்யுட்களிற் புலப்படுத்தியுள்ளார் என்று டாக்டர் உ.வே.சா. அவர்கள் பின்வருமாறு பட்டியலிட்டுக் காட்டுவர்.

அருந்தமிழ்
இசை முத்தமிழ்
கலைத்தமிழ்த் தீம்பாலமுதம்
கொத்து முத்தமிழ்
கொழித்தெடுத்துத் தெள்ளித் தெளிக்குந் தமிழ்
கொழி தமிழ்
கொழுத்த தமிழ்
சங்கத் தமிழ்
செழுந்தமிழ்ச் செல்வம்
செந்தமிழ்த் தெள்ளமுது
சொற்சுவை பழுத்த தொகைத்தமிழ்
தண்டமிழ்
தருசுவை யமுதெழ மதுரம தொழுகு பசுந்தமிழ்
தலைச்சங்கம் பொங்கும் பொன் முத்தமிழ்
தீஞ்சுவைக் கனியும் தன்டேனறையும்
வடித்தெடுத்த சாரங்கனிந்
தூற்றி ருந்த பசுந்தமிழ்
துறைத்தமிழ்
தெள்ளுதமிழ்
தெலரி தமிழ்
தென்னந் தமிழ்
தேக்கமழ் மதுரமொழுகிய தமிழ்
பண்ணுலாம் வடிதமிழ்
புத்தமுதம் வடிந்தொழுகும் தீந்தமிழ்
பைந்தமிழ்
மதுரித்துவட்டெழு முத்தமிழ்
முத்தமிழ்
முதுசொற்புலவர் தெளிந்த பசுந்தமிழ்
முதுதமி முத்தி
மும்மைத் தமிழ்
வண்டமிழ்
வண்டமிழ்க் கடல்
விரைத்தேன் பில்குந் தேந்தமிழ்

இவ்வாறெல்லாம் தமிழிடத்துத் தோய்ந்த அன்புடைய குமரகுருபரர், அவ்வண்மைத் தம்மட்டோடு நிறுத்திக் கொள்ளாமல், தம்மையொத்த புலவர்களும் தெய்வத் தமிழ்மாட்டுப் பேரன்பு பூணுதல் வேண்டும் என்பதனை எடுத்துரைப்பாராய்ப் பின்வருமாறு பேசுகின்றார் :

செஞ்செவி கைப்பயான் தெரித்த சின்மொழி
அஞ்செவி மடுத்தாங் களித்தனள் அதனால்

– சகலகலாவல்லி மாலை 101 : 21–22

தேத்தமிழ் தெளிக்கும் செந்நாப் புலவர்
... ...
பாத்தொடுத் தடுத்த பரஞ்சுடனர்
நாத்தழும் பிருக்க ஏத்துமின் நீரே

– காசிக் கலம்பகம் 101 : 24–30

இல்லறம், துறவறம் ஆகிய இரண்டு குறித்தும் சிதம்பர மும்மணிக்கோவையில் இவர் தந்துள்ள விளக்கம் அருமைப்பாடு உடையனவாகும்.

இல்லறம்

இல்லறத்தின் இலக்கணம் வருமாறு :

இல்லறம் துறவறம் எனச் சிறந்த தனவே
அந்நிலை யிரண்டினுள் முன்னது கிளப்பிற்
கற்றநூல் துறைபோய்க் கடிமனைக் கிழவன்
நற்குணம் நிறைந்த கற்புடை மனைவியோடு
அன்பும் அருளும் தாங்கி இன்சொலின்
விருந்து புறந்தந்து அருந்தவர்ப் பேணி
ஐவகை வேள்வியும் ஆற்றி இவ்வகை
நல்லற நிரப்பிப் பல்புகழ் நிறீஇப்
பிறர்மனை நயவா அறன்மனை வாழ்க்கைக்கு
வரையா நாளின் மகப்பேறு குறித்துப்
பெருநலம் துய்க்கும் பெற்றித் தன்றே

– சிதம்பர மும்மணிக்கோவை : 2 : 23 – 33

இதன்பொருள் வருமாறு :

நல்ல நூல்களைக் கற்று, அவற்றின்வழி நின்று கற்புடைய மனைவியோடு மகப்பேற்றை விரும்பி, நன்னாளில் இன்பந் துய்த்து, அன்பும் அருளும் உடையவனாகி, இன்சொற் கூறி, விருந்தினரை உப சரித்து, அருந்தவத்தினரைப் பாதுகாத்து, ஐவகை வேள்வியை யாற்றிப் பிற நல்ல அறங்களை நிறை வேற்றிப் புகழ்பூண்டு பிறன்மனையை நயவாமல் வாழ் தல் இல்லறம் என்னும் கருத்து விளக்க முறுகின்றது.

துறவறம்

இனித் துறவறம் குறித்துக் குமரகுருபரர் குறிப் பிட்டிருப்பனவற்றைக் காண்போம்.

மற்றையது கிளப்பின் மனையற நிரப்பி
முற்றுணர் கேள்வியின் முதுக்குறை வெய்திப்
பொருளும் இன்பமும் ஒரீஇ அருளொடு
பொறையும் ஆற்றலும் நிறைபே ரொழுக்கமும்
வாய்மையும் தவமும் தூய்மையுந் தழீஇ
ஓரறி வுயிர்க்கு உறுதுயர் ஓம்பிக்
காலோய் நடைய னாகித் தோலுடுத்து
என்பெழு மியாக்கையன் துன்புறத் துளங்காது
வரையும் கானும் எய்திச் சருகொடு
கானீர் அருந்திக் கடும்பனிக் காலத்து
மாநீர் அழுவத் தழுங்கி வேனிலில்
ஐவகை அழலின் மெய்வருந்த வருந்தி
இவ்வகை யொழுகும் இயல்பிற் றன்றே

– சிதம்பர மும்மணிக்கோவை 34 – 46

இதன்பொருள் வருமாறு :

இல்லறம் பூண்டு வாழ்ந்தபின், ஞான சாஸ்திரங் களைக் கேட்டு, மெய்யறிவு வாய்க்கப் பெற்றுப் பொரு ளையும் இன்பத்தையும் நீங்கி, அருள், பொறை, ஆற்றல், ஒழுக்கம், வாய்மை, தவம், தூய்மையென் னும் குணங்கள் பொருந்தி, ஓரறிவுயிர்க்கு வரும் துன்பத்தையும் பாதுகாத்துக் காலால் நடந்து, தோலுடுத்து, என்பு தோற்றும் படி உடல் இளைத்துத் துன்பங்களுக்கு நடுங்காமல் மலை, காடு என்பவற் றிற்குச் சென்று சருகையும், நீரையும். காற்றையும் அருந்திப் பனிக்காலத்தில் தண்புனலில் மூழ்கியும், வேனிற் காலத்தில் பஞ்சாக்கினியிலிருந்தும் தவம் புரிந்து ஒழுகுவது துறவறம்.

இவ்வாறு டாக்டர் உ.வே.சா. அவர்கள் பொருள் விளக்கம் காண்கின்றார். (குமரகுருபரர் சாமிகள் பிரபந்தத் திரட்டு ஆராய்ச்சி.

கல்வி

இனிக் கல்வி குறித்துக் குமரகுருபரர் கூறுவன வற்றைக் காண்போம்.

கல்வி கற்புடைய மனைவியை ஒப்பது ; அம்மனை வியினாற் பெறும் காதற் புதல்வனே இனிய செய்யுள் சொல்வன்மை செல்வமாகும் ; அந்தச் செல்வத்தால் அவையிலுள்ளார் மனம் மகிழச் செய்ய ஒரு சிலராலேயே ஒல்லும் என்பது குமரகுருபரருடைய கருத்தாகும்.

கல்வியே கற்புடைப் பெண்டிர் அப்பெண்டிர்க்குச்
செல்வப் புதல்வனே ஈர்ங் கவியாச் – சொல்வளம்
மல்லல் வெறுக்கையாம் மானவை மண்ணுறுத்தும்
செல்வமும் உண்டு சிலர்க்கு

– நீதிநெறி விளக்கம் : 3

மேலும் நீதிநெறி விளக்கத்தில் இளமை நிலையாமை, செல்வம் நிலையாமை, யாக்கை நிலையாமை என்னும் தொன்றுதொட்ட அரிய கருத்துக்களைப் பின்வருமாறு உரைப்பர்.

நீரிற் குமிழி இளமை நிறைசெல்வம்
நீரிற் சுருட்டு நெடுந்திரைகள் – நீரில்
எழுத்தாகும் யாக்கை நமரங்காள் என்னே
வழுத்தாதது எம்பிரான் மன்று

– நீதிநெறி விளக்கம் ; காப்புச் செய்யுள்

இதனால் நீரில் தோன்றும் குமிழி போன்றது இளமை என்றும், அந்நீரில் எழும் அலைகளைப் போன்றன இளமை என்றும், அந்நீர்மேல் எழுதிய எழுத்துப் போன்றது உடம்பு என்றும், அதனால் சிவபெருமானை வழுத்துவதே வாழ்வாக அமைய வேண்டும் என்றும் குமரகுருபரர் குறிப்பிடுகின்றார்.

மேலும் படைப்புக் கடவுளாம் பிரம்மாவைக் காட்டி லும், படைப்பிலக்கியம் படைக்கும் புலவன் உயர்ந்தவன் என்று கூறுகிறார் குமரகுருபரர். காரணம் பிரம்மன் படைக்கும் மனிதர்கள் காலப்போக்கில் மடிந்து முடி கிறார்கள். ஆனால், புலவோர் படைக்கும் அரிய இலக் கியப் படைப்புகள் காலங்கடந்தும் வாழும் அமரத்துவ நிலையினைப் பெற்றவை என்று குறிப்பிடுகின்றார்.

கலைமகள் வாழ்க்கை முகத்தது எனினும்
மலரவன் வண்டமிழோர்க்கு ஒவ்வான்-மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யும் உடம்பு

– நீதிநெறி விளக்கம் : 6

அறநெறிகள்

குமரகுருபரர் ஒரு பெருந்தமிழர் சைவநெறி புரந்த தவச்செல்வர் தமிழின்மாட்டுத் தனிப்பேரன்பு செலுத்தியவர் தமிழ்மக்கள் வாழ்வாங்கு வாழ்ந்து உத்தியினை இறுதியிற் பெற்றுச் சாகாநிலை கூடவேண்டும் என்று கருதிய உத்தமராவர். எனவே தம்முடைய நூல்களில் தமிழினம் ஈடேற்றம் காண ஒப்பற்ற பல கருத்துக்களை - அறநெறிக் கருத்துக்களை வலியுறுத்தியுள்ளமையைக் காணலாம்.

செல்வம் என்பது நம்முடைய மனத்தில் எழுகின்ற நிறைவாகும். மீண்டும் மீண்டும் கட்டுக்கடங்காமல் ஆசை படர்ந்துகொண்டிருந்தால் அதுவே வறுமைக்கு வாய்ப்பாகும் என்றார்.

செல்வம் என்பது சிந்தையின் நிறைவே
அஃகா நல்குரவு அவாவெனப் படுமே
– சிதம்பர மும்மணிக்கோவை 26 : 20–21

அடுத்து, ஒருவன் தனக்குப் பிறர் பெருமதிப்புத் தரவேண்டும் என்று விரும்பினால் முதற்கண் தான் அவர்களுக்கு மதிப்புத்தர வேண்டும் என்கிறார்.

பிறராற் பெருஞ்சுட்டு வெண்டுவான் யாண்டும்
மறவாமே நோற்பது ஒன்று உண்டு - பிறர்பிறர்
சீரெல்லாம் தூற்றிச் சிறுமை புறங்காத்து
யார்யார்க்கும் தாழ்ச்சி சொலல்
– நீதிநெறி விளக்கம் : 19

பிள்ளைத் தமிழ்

பிள்ளைத்தமிழ் நூல்களில் இவர் பாடியருளிய மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழும் முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழும் தனிச்சிறப்பு வாய்ந்தவைகளாகும். அதிலும் குறிப்பாக மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் தெய்வநலஞ் சான்றதெனலாம். ஏனெனில் இவர் திருமலைராயன் அவையில் பாடிய "தொடுக்குங் கடவுள்" எனத் தொடங்கும் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழின் வருகைப்பருவப் பாடல் உமையம்மையே உவந்து பரிசு நல்கிய பாடல் என்பது. அப்பாடல் வருமாறு :

தொடுக்கும் கடவுட் பழம்பாடல்
தொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழின் ஒழுகுநறுஞ்
சுவையே அகந்தைக் கிழங்கை அகழ்ந்து
எடுக்கும் தொழும்பர் உளக்கோயிற்கு
ஏற்றும் விளக்கே வளர்ச்சிமய
இமயப் பொருப்பில் விளையாகம்
இளமென் பிடியே எறிதரங்கம்
உடுக்கும் புவனம் கடந்துநின்ற
ஒருவன் திருவுள் ளத்தில்அழகு
ஒழுக எழுதிப் பார்த்திருக்கும்
உயிரோவியமே மதுகரம்வாய்
மடுக்கும் குழற்காடு ஏந்தும் இள
வஞ்சிக் கொடியே வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே
– மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்-வருகைப் பருவம்

இசை பற்றிய செய்திகள்

பண்ணோடு பாடலைச் செவி மடுக்காமல் துறவியல் வாழ வேண்டும் என்று இவர்,

பெண்மை வியவார் பெயரும் எடுத்தோதார்
கண்ணொடு நெஞ்சுறைப்ப நோக்குவார்
– –பெண்ணொடு

பாடல் செவிமடார் பண்பல்ல பாராட்டார்
வீடில் புலப்பகை யினார்
– நீதிநெறி விளக்கம் : 84

என்று நீதிநெறி விளக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு குறிப்பிட்டிருப்பதற்கு, பெண்கள் பாடும் பாடலைச் செவிமடார் என்று ஓர் அமைதி கூற வேண்டும். ஏனெனில் பண்ணொடு பாடலைச் செவி மடாமை துறவியர் இயல்பு என்று கூறினர். இவர் பண்ணை வெறுத்தவர் அல்லர் என்பது இவரது செய்யுட் களினால் புலனாகும். சகல கலாவல்லி மாலையில் இவர் கலைமகளை நோக்கித் தமக்குப் பண்ணும் பரதமும் கல்வியும், இனிய சொல்லமைதியுடைய பாட்டும் தாம் வேண்டும் பொழுதெல்லாம் தம்மை வந்து அடைய வேண்டும் என்று வேண்டு வதனைக் காணலாம்.

பண்ணும் பரதமும் கல்வியும்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுது எளிது எய்தநல்
... காய்
– சகலகலாவல்லி மாலை : 76

தமக்கு இத்தகைய அரிய பேற்றினைக் கலைமகள் அருளிய காரணத்தினால்தான் அக்கலைமகளைக் கண் கண்ட தெய்வம் என்று கழிபேருவகையுடன் பாராட்டியிசைக்கின்றார்.

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரும் என்
பண்கண் டளவில் பணியச்செய்
வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பில் உன்போல்
கண்கண்ட தெய்வம் உளதோ
சகல கலாவல்லியே
– சகலகலாவல்லி மாலை : 10

எனவே, பதினேழாம் நூற்றாண்டின் மிகப்பெரும் புலவரான குமரகுருபரர், சைவமும் தமிழும் தழைத்தினிதோங்கப் பாடுபட்ட - இல்லற வாழ்வைத் துறப்பினும் தமிழைத் துறக்காத தவவலிமை சான்ற தகைசால் பெருந்தகை ஆவர் என்பது அவருடைய வாழ்வாற் புலப்படும் செய்திகளாகும்.



அபிராமி அருள்

(திருமதி. தேவகி முத்தையா. எம்.ஏ., எம்.ஃபில்)

அருணாம் புயத்துமென் சித்தாம் புயத்து மமர்ந்திருக்கும்
தருணாம் புயமுலைத் தையனல் லாள்தகை சேர்நயனக்
கருணாம் புயமும் வதனாம் புயமுங் கராம்புயமும்
சரணாம் புயமுமல் லாற்கண்டி லேனொரு தஞ்சமுமே
— (அபிராமி அந்தாதி: 58)

அபிராமி: அளவில்லாத தன் பேரழகால் யாரையும் ரமிக்கச் செய்ப வள். மிகுந்த பேரழகுடையவள். அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லி - திருக்கடவூரெனும் திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் பேர் எழில் வடிவான எம் அம்மையின் திருப்பெயரே அபிராமி. சின்னஞ்சிறு பெண்போல் மனதைக் கொள்ளை கொள்ளும் அவளது அழகு! மின்னாயிரம் ஒரு மெய்வடிவாகிய அத்திரு வடிவம்!! மொழிக்கும் நினைவிற்கும் எட்டாத அழகிய திருக்கோலம்! இதனைக் கண்ணார ஒருமுறை கண்டாலேயன்றி உணர இயலாது. அவளது திருவருளோ, ஒரு முறை உணர்ந்தால் வேறு ஒன்றின் உணர்வே இராது; நினைந்து, நினைந்து, வியந்து, வியந்து தன்னையே செயலிழக்கச் செய்யும் பேரருள்.

திருக்கடவூர்த் தல வரலாறு:

திருக்கடவூர் எனும் தலம் தஞ்சை மாவட்டத்தில் மயிலாடுதுறைக்குத் தென்கிழக்கே 22 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள அட்ட வீரட்டங்களில் ஒன்று. அத்தலம் தருமையாதீனத்தில் அருளாட்சிக்குட்பட்ட 27 திருக்கோவில்களுள் சிறப்புமிக்க ஒன்று; மார்க்கண்டேயரைக் காக்கும் பொருட்டு கால சம்காரம் நிகழ்ந்த திருத்தலம். இறைவனது திருநாமம் அமிர்தகடேசர்; இறைவியின் திருநாமம் அபிராமவல்லி. திருப்பாற்கடலைக் கடைந்து அமிர்தம் கொண்ட கடத்தைத் தேவர்கள் வைத்துவிட்டு நீராடச் சென்ற காலை அமிர்தகடமானது சிவலிங்க உருவெடுத்து அமிர்தகடேசர் என்றும், திருத்தலம் திருக்கடவூர் என்றும் பெயர் பெற்றதாக வரலாறு. கால சம்கார மூர்த்தி சன்னதி மார்க்கண்டேயருக்காக, காலனைக் கொன்ற கோலத்தில் இடப்பாகம் கொண்ட பாலாம்பிகையுடன் பொலிவுடன் தோன்றுவதாகும். இச்சன்னதியில் அமையப் பெற்றிருக்கும் மிருத்யுஞ்சேய மகாமந்திர யந்திரமானது காலனை வென்று ஆயுளைப் பெருக்கும் வல்லமை பெற்றதாகும்.

தலச் சிறப்பு:

பிரமன் ஞானோபதேசம் பெற விரும்பி, சிவபெருமானை நோக்கித் தவம் புரிந்தான். தவத்திற்கு இரங்கிய இறைவன், வில்வ விதையினைப் பிரமனிடம் கொடுத்து இவ்விதை எத்தலத்தில் ஒரு முகூர்த்த காலத்தில் (1.30 மணி நேரம்) முளைக்கின்றதோ அத்தலமே உனக்கு ஞானோபதேசம் கிடைக்குமிடம் என்று அருள, பிரமனும் அவ்வாறே பல இடங்களில் இட்டுப் பார்த்து அது முளைக்கவில்லை. இத்தலத்தில் இட்டதும் குறித்த காலத்தில் முளைத்தது. பிரமனும் இறைவனை வழிபட்டு ஞானோபதேசம் பெற்றான். இதனால் வில்வ வனம் என்றும் வில்வ மரம் தல விருட்சமாகவும் விளங்குகின்றது. பிரமன் பூசித்த சிவலிங்கம் வில்வனேசுவரர் என்ற திருப்பெயரோடு மேற்கு நோக்கிய சந்நிதியாக சுவாமி கோயில் வடக்குப் பிரகாரத்தில் பிட்சாடன மூர்த்தி சபைக்குக் கீழ்பால் அமைந்துள்ளது. மார்க்கண்டேயர் வரவழைத்த கங்கையில் சாதிமுல்லைக் கொடியும் வந்தமையால் அதுவும் இங்கு தலவிருட்சமாகத் திகழ்கின்றது. ஈவதற்கு அரிய மங்கலநூல் தாலியையும் விற்றுக் குங்குலியத் தூபம் இட்டு அதனால் குங்குலியக் கலய நாயனார் என வழங்கப் பெறும் நாயனாரும், சொல் விளங்கிப் பொருள் மறைந்து கிடக்கும்படித் தம் பெயரால் கோவைபாடி அரசர்களிடம் பொருள் பெற்று இத்தலத்தில் திருக்கோவில் பணிகள் பல செய்த காரிநாயனாரும், சித்தாந்த சாத்திரம் பதினான்கினுள் இரண்டாவதாகத் திகழும் திருக்களிற்றுப்படியார் எனும் நூலை அருளிச் செய்த உய்யவந்த தேவநாயனாரும் தோன்றிய திருத்தலம் இது. திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசரும், குங்குலியக் கலய நாயனாரால் வரவேற்கப்பட்டு இருவரும் ஒரு சேர எழுந்தருளி இறைவனை வழிபட்டுப் பதிகம் பாடிய தலமும் இதுவேயாகும். சம்பந்தர் பதிகம் ஒன்றும், அப்பர் பதிகங்கள் மூன்றும், சுந்தரர் பதிகம் ஒன்றும் ஆக இத்தலத்திற்குக் கிடைத்துள்ளன. மேலும் அபிராமி பட்டர் என்பவர் அபிராமியின் பக்தியில் மூழ்கித் திளைத்து ''அபிராமி அந்தாதி'' பாடிய பெருந்தலம் திருக்கடவூர்.

அந்தாதி என்பது 96 சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றாகும். அந்தாதி என்றால் நூலின் ஒவ்வொரு பாடலிலும் இறுதியிலுள்ள எழுத்து, அசை, சொல், சீர், அடி ஆகிய இவற்றுள் ஏதேனும் ஒன்று அதற்கடுத்த பாடலின் முதலாக வருமாறு அமைவதாம். இறுதிப் பாடலின் முடிவும் முதற் பாடலின் தொடக்கமும் ஒன்றாக இணையும்படி மண்டலித்து மாலைபோல் தொடுத்துப் பாடப்பெறும் ஒருவகைச் சிற்றிலக்கியமாகும். ஓர் உருவம், ஒரு நாமம் இல்லாத இறைவனுக்குப் பலவுருவங்கள் தந்து வழிபட்ட அடியார்கள் பக்திச் சுவை சொட்டச் சொட்டப் பாடிய பாடல்கள் பல. அவற்றுள் ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்திவ்வுலகெங்குமாய் நிற்கும் அன்னை அபிராமி மீது பாடப்பெற்றது அபிராமி அந்தாதியாகும். இதனை இயற்றியவர் திருக்கடவூரில் சற்றேறக்குறைய 260 ஆண்டுகட்கு முன்பு அந்தணர் குலத்தில் கௌசிக கோத்திரத்தில் தோன்றிய அபிராமி பட்டர் ஆவார். இவர் தஞ்சையை ஆண்ட சரபோஜி மன்னர் காலத்தவர். தமிழிலும், வடமொழியிலும், இசையிலும் தேர்ந்தவர். இயற்பெயர் சுப்பிரமணிய அய்யர். அபிராமி அம்மை, பட்டருக்குத் தன் திருவருள் காட்டிய வரலாறு கூறுமுன் மார்க்கண்டேயருக்கு அம்மையப்பர் அருள்கூர்ந்த வரலாற்றைப் பார்ப்போம்.

மிருகண்டு முனிவர் பிள்ளைப் பேறு கருதித் தவம் புரிந்தார். தவத்திற்கு இரங்கிய இறைவனும் காட்சியளித்து நல்லறிவும் அழகும் பக்தியும் உள்ள பிள்ளை வேண்டின் 16 வயதுதான் உயிர் வாழும்; நல்லறிவும் அழகும் பக்தியும் இல்லாத பிள்ளை வேண்டுமானால் 100 வயது வாழும்; இவற்றுள் எது வேண்டுமென வினவ, முனிவர் 16 வயது பிள்ளைதான் தேவை என்றார். நல்லறிவும் பக்தியும் உடைய பிள்ளையெனில் அது தானே தனது ஆயுளைக் கூட்டிக் கொள்ளும் என்ற நம்பிக்கையே காரணம். அவ்வாறே மகவினைப் பெற்றார். அம்மகவே மார்க்கண்டேயர் என்ற பெயரோடு வளர்ந்தார். அறிவும், பக்தியும் பெருக வளர்ந்த மார்க்கண்டேயருக்கு 16ஆம் வயது நெருங்கியது; காலன் அவர் உயிரைப் பறிக்க நெருங்கி

னான். மார்க்கண்டேயர் பற்றற்ற பரம் பொருளான அமிர்தகடேசரைப் பற்றி நிற்க, மார்க்கண்டேயர் மீது பாசக் கயிற்றை வீச, பாசக் கயிறு அமிர்தகடேசர் மீதும் வீழ்ந்தது. அருளே வடிவான சிவலிங்கத்தினின்று அம்மையப்பராக இறைவனும் இறைவியும் தோன்றி தனது இடது காலால் இயமனை உதைத்து அழித்தார். அமிர்தகடேசர் பாலாம்பிகை சமேத காலசம்கார மூர்த்தியானார். மார்க்கண்டேயருக்கு என்றும் பதினாறு என்ற வரமும் அளிக்கப் பெற்றதாகக் கூறுவது இத்தல வரலாறு. அம்மையும் அப்பனும் ஒன்று சேர்ந்து உற்ற துன்பம் பெற்றவரைக் காக்கும் தலம் திருக்கடவூர். இவ்விருவரும் இணைந்து ஓர் அடியவனின் உள்ளத்துள் நுழைந்துவிட்டால் கொடிய காலனும் அணுக இயலாத மாபேறு பெற்றவனாகின்றான் என்பது கண்கூடு.

அன்பே வடிவான அம்மையப்பர் அபிராமிப் பட்டருக்கு அருளிய வரலாறும் ஒன்றுண்டு. சுப்பிரமணிய அய்யர் மீது பொறாமையுற்ற சில கொடியவர்கள் அவர் ஊனும் கள்ளும் உண்டு, சிறு தெய்வ வழிபாடு செய்து வருபவர் என்று பலவாறாகக் கூறி வந்தனர். காவிரியில் கடலாடி திருக்கடவூர்க் கோவிலுக்கு வந்த சரபோஜி மன்னனிடமும் அவ்வாறே கூறினர். அன்று தை அமாவாசை நாள். அபிராமி அம்மையின்பால் பக்தியில் மூழ்கி அவளது முகமதியில் ஒன்றியிருந்த பட்டரைக் கண்டு அன்று என்ன திதி என்று மன்னரது ஆட்கள் வினவ, அருள் ஒளியில் திளைத்துக் கிடந்த பட்டர் முழு நிலாநாள் (பௌர்ணமி) என்று கூறினார். துன்மதியினர் கூறியது மெய்யெனக் கருதினான் மன்னன். இன்று பௌர்ணமி என்று கூறிய தாங்கள் எனக்கு இன்று மாலை முழுமதியைக் காட்ட இயலுமா என்று வினவ, பட்டரும் ''காட்டுகின்றேன்'' என்றார். அதுவரை அபிராமி அம்மையின் அருள் வெள்ளத்தில் மூழ்கியிருந்த பட்டர், உலகமுகப்பட்டார்; நிகழ்ந்ததை உணர்ந்தார்; கேட்டவனோ மன்னன்! அன்றைய நாளோ அமாவாசை! மன்னனின் வினாவிற்கு முரண்பட்ட விடை கூறியமைக்கு மனம் வருந்தினார்; ஆயின், உடன் தெளிந்தார்; ''அம்மையின் அருள்வழியே சொல்லியிருக்கின்றோம்; எனவே, அவளிடத்திலேயே குறைகளை முறையிடுவோம்'' என்று எண்ணி அம்மையின் மீது அந்தாதி பாடத் தொடங்கினார். இதுவே அபிராமி அந்தாதி நூல் பிறந்த வரலாறு ஆகும்.

''உதிக்கின்ற செங்கதிர்'' எனும் பாடலில் தொடங்கி எழுபத்தொன்பதாவது பாடலாகிய 'விழிக்கே அருளுண்டு'' என்று பாடும் போது அம்மை தம்முடைய தாடங்கத்தைக் கழற்றி வானில் வீசியதால் முழு நிலவு தோன்றியதாக அறிவது செவி வழிச் செய்தியாகும். அதனைக் கண்டு மகிழ்ந்து மன்னரும் பட்டரை வணங்கி, அவருக்கு அவ்வூரில் வேலி நிலத்திற்கு ஒரு மரக்கால் வீதம் நெல் கொடுக்கச் சொல்லி, பட்டாக்களை வழங்கியது வரலாற்றில் உள்ள செய்தி. சுப்பிரமணிய அய்யர் என்ற பெயர் கொண்ட அவருக்கு அபிராமி பட்டர் எனும் பெயர் அன்று முதல் வழங்கலாயிற்று. இதில் உணர வேண்டிய ஒன்று யாதெனில் அவளையே சரணம் என்று நம்பிய அடியார்க்கு அவள் இரவையும் பகலாக்குவாள்; இருளையும் ஒளியாக்குவாள். அவளது அருள் எத்தகைய சிறப்பானது என்பதனைப் பட்டரது அருள் நூலான அபிராமி அந்தாதி வழி காண்பதே நலம்.

அபிராமி உதிக்கின்ற செங்கதிரை நெற்றித் திலகமாகக் கொண்டு, மாணிக்கம், மாதுளம் மொக்கு, குங்குமத்தோயம் போன்றவற்றின் செந்நிறத்தைக் கொண்டு பொலிவுடன் காட்சி தருகின்றாள். அவ்வெழில் உதயத்தை விரும்பி வணங்குவோர்க்கு விழுத்துணையாவாள். துணைகள் பலவகை. ஜடமான கருவிகளும் உயிருடையவையும் மனிதர்களும் வெவ்வேறு வகையில் துணையாக உதவுகின்றன. வெகு தூரம் நடப்போர்க்குக் காலுக்குச் செருப்புத் துணை; வெயிலில் நடப்போர்க்குக் கையில் உள்ள குடை துணை. ஆற்றைக் கடப்போர்க்கு அதில் செல்லும் ஓடம் துணை. இவை யாவும் ஜடப் பொருள்கள். பால் வேண்டுவோர்க்கு அதைத் தரும் பசு துணை. இராக்காவல் வேண்டின் குரைக்கும் நாய் துணை. தூரப் பயணத்திற்குக் கடுகி ஓடும் குதிரை துணை. இவை அனைத்தும் உயிருடைய ஜீவன்கள். குழந்தைக்குத் தாய் தந்தையர் துணை, மனைவிக்குக் கணவன் துணை, குடிகளுக்கு மன்னன் துணை. இவர்கள் மனிதர்கள். இம்மூவகைத் துணைகளும் மனிதனின் உடம்பிற்குத் துணையாகின்றன.

உடல், உள்ளம், உயிர் என்ற மூன்றில் ஒன்றை விட ஒன்று சிறந்தது. உள்ளம் உடலை விடச் சிறந்தது. அதற்கு நலம் செய்யும் துணைவர் ஆசிரியர்களும் ஞான குருக்களும், ஆவர். அதுபோலவே உயிருக்குத் துணையாக யாரேனும் இருந்தால் அவர்கள் அனைத்துத் துணைகளையும் விட மேலானவர்கள் என்று உறுதியாகக் கூறலாம். உயிருடன் உடம்பைப் பிறப்பித்தவர்கள், தாயும் தந்தையும் ஆயினும் அவர்கள் இவ்வுயிருக்குத் துணையாக இயலாது. உயிர் எங்குச் சென்றாலும், எந்தப் பிறவி எடுத்தாலும் அங்கும் நமக்குத் துணையாக நிற்பதே மேலான துணையாகும். அம்மேலான துணையே அபிராமி. அதனால் அவளே விழுத்துணைவிழுமிய துணை. இந்நாயகியை விழுத்துணையாகக் கொண்ட ''தம் அடியார்கள் மரணம் பிறவி இரண்டும் எய்தார் இந்த வையகத்தே'' என்கின்றார், பட்டர்.

என்றும் நாம் துணையாகக் கொள்ளும் பொருள் எல்லா வகையிலும் சாலச் சிறந்ததாக இருத்தல் வேண்டும். இங்குப் பட்டர் விழுத்துணையாகக் கருதும் அபிராமி, படைத்தல், காத்தல், மறைத்தல் என்ற முத்தொழிலையும் புரியும் அழியாத கன்னிகை. அவள் ''வார் சடையோன் அருந்திய நஞ்சினை அமுதாக்கிய அம்பிகை. அமிழ்தம் பெற, தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடையவே கொடிய ஆலகாலம் விடம் தோன்றியது. இவ்விடத்தின் கொடுமையைக் கண்ட தேவர்களும் அசுரர்களும் அஞ்சி நடுங்கிக் கொண்டு, மகாதேவனிடம் கொடுக்க, அதனை மகாதேவன் நெல்லிக்கனி போல் உருட்டித் தன் கையில் கொண்டு விழுங்கினான். அதனை உண்ணாது விடின் அனைத்துலகும் அழிந்துபடும். ஆகையால் அண்டசராசரங்களையும் காக்க எண்ணிய எம்பெருமான் அதனைத் தானே உண்டான். அன்னையின் கருணை அதனினும் உயர்வு; அவ்விடம் எம் பெருமானின் உட்சென்றால், அங்கிருக்கும் அண்டசராசரங்களுக்கு மட்டுமல்லாது, அவற்றைக் காக்கும் எம்பெருமானுக்கும் இடர் உண்டாகும் என எண்ணி ஆலகால விடத்தை அம்பெருமானின் திருக்கண்டத்திலேயே தங்குமாறு அழுத்தினாள். இதுவே தாயின் கருணை - அன்புத் தீண்டல். அவளது கருணைக்கு உட்பட்டவர்கள் மஹாதேவன் மட்டுமல்லன்; பிரமன், முராரி, ஆதித்தன், அம்புலி, காமன், குபேரன், பொதிய முனி, கந்தன், கணபதி மற்றும் மாயா முனிவராகிய மார்க்கண்டேயர் போன்ற தெய்வங்களும் மட்டுமல்லர்; அவளது சரணாரவிந்தங்களைப் பற்றுக்கோடாகக் கொண்ட ஒவ்வோர் அடியார்க்கும் அவள் ஓடோடி வந்து அருள் பாலிக்கின்றாள். அவளருளினை அடைய வனத்தில் கடும் தவம் செய்ய வேண்டுமென்றில்லை. அவள் நினைவை ஒரு மாத்திரைப் போது மனதில் வைத்தாலும் போதும். வைத்தவர் அவளது அருள் பெறுவது உறுதி:

அபிராமியின் அருள் மண்ணுலகிற்குத் தேவையானவையாகிய செல்வம், கல்வி, வீரம் என்பனவற்றைத் தரவல்லது எனும் பொருளில்,

தனம் தரும் கல்வி தரும் ஒரு நாளும் தளர்வறியா
மனம் தரும் தெய்வ வடிவும் தரும்நெஞ் சில்வஞ்சம்இல்லா
இனம் தரும் நல்லன எல்லாம் தரும்அன்பர் என்பவர்க்கே
கனம்தரும் பூங்குழ லாள்அபி ராமி கடைக்கண்களே...

(அபிராமி அந்தாதி: 69)

என்று கூறுகிறார். அபிராமி அம்மையின் கடைக்கண் அருளினால் பெறத்தக்க பேறுகளாகத் தனம், கல்வி, ஒருநாளும் சோர்வறியா

மனம், தெய்வீகம் பொருந்திய தோற்றப் பொலிவு, கபடு சிறிதும் இலாச் சுற்றம் மற்றும் நல்லன எல்லாம் என்ற பதினாறு பேறுகளும் பெறத்தக்கவை, அம்மையின் அடியடைந்தோர் பெறாத இம்மைப் பேறுகள் ஏதுமில்லை எனும் கருத்தில்,

''சேரும் தலைவி சிவகாம சுந்தரி சீறடிக்கே
சாரும் தவம்உடை யார்படை யாத தனம் இல்லையே''

(அபிராமி அந்தாதி: 63:3.4)

என்று பாடுகின்றார்.

அபிராமி அம்மையின் அருள்பற்றிக் கூறுங்காலை, தருமை ஆதினம் குருமகா சந்நிதானத்தின் கூற்றினை அடிக்கோள் காட்டுவதே முறையாகும். ''இங்ஙனம் உள்ள நன்மைகளை அடையும் தகுதி யாருக்குண்டு?'' என்பதற்கு விளக்கம் கூறுவார் போல் ''அன்பர் என்பவர்க்கே'' என்கின்றார் அபிராமிபட்டர். அன்பர் என்பவர் யார்? இறைவனிடத்தில் அசையாத அன்புடையவரே அன்பராவார். அவனிடத்தில் அவ்வன்பு இருக்குமானால் மற்ற தகுதிகளைப் படிப்படியாக நாளடைவில் வளர்க்கும் நல்லனவே செய்து அல்லன அகற்றி வாழ்வோரும், பிற உயிரையும் தம் உயிரபோல் நினைத்து வாழ்வோரும், தமக்கு வரும் துன்பங்களைப் பொறுத்துக் கொண்டு பிற உயிர்க்கு வரும் துன்பங்களைத் துடைத்து வாழ்வோரும், எல்லா உயிர்களும் இன்புற்றிருத்தல் வேண்டுமென எண்ணி வாழ்வோரும், எந்நிலையில் நின்றாலும் அந்நிலையில் இறையுணர்வு வழுவாது நிற்போரும், துன்பத்தைக் கண்டு துவண்டு போகாமலும் இன்பத்தைக் கண்டு இறுமாப்புக் கொள்ளாமல் வாழ்வோரும், பிறர்க்கு ஒரு நிலை, தமக்கு ஒரு நிலை என்று எண்ணாமல் வாழ்வோரும் - இத்தகையோரே அன்பராவர். இந்த அன்பரவர்க்கு அபிராமியின் கடைக்கண்களே அருள்பாலிக்கும்'' என்று அழகாகக் கூறுகின்றார்.

ஈங்கு அபிராமியம்மைப் பதிகத்தில் அமையப் பெற்றுள்ள ஒரு சிலவற்றை ஆய்தல் வேண்டும். ''சகல செல்வங்களும்'' எனத் தொடங்கும் பாவில் பட்டர், அபிராமி பதினாறு பேறும் தந்தருளி நலமகிழ் வாழ்வளிக்க வேண்டும்'' என்கின்றார். யாருக்கு? ''நின்னை சத்தியமாய் நித்தியம் உள்ளத்தில் துதிக்கும் உத்தமர்க்கு'' என்கிறார். பட்டரது சொற்கள் மணிவாசகரின் ''இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க'' என்பதனைத் தழுவியது போல் அமையப் பெற்றிருக்கின்றன. அவளை இமைப் பொழுதும் மறவாதார்க்கு, விரும்பிக் கேட்கும் முன்னரே ஓடோடி வந்து அருளை அள்ளி அள்ளி மடி கொள்ளாதபடி தந்திடுவாள்.

அபிராமியின் அருளால் பெறவல்ல பேறுகள் தனம், கல்வி, தளர்விலா மனம், தெய்வ வடிவு, நெஞ்சில் வஞ்சமிலாச் சுற்றம், மற்றும்,

வையம் துரக மதகரி மாமகு டஞ்சிவிகை
பெய்யுங் கனகம் பெருவிலை யாரம் பிறைமுடித்த
ஐயன் திருமனை யாளடித் தாமரைக் கன்புமுன்பு
செய்யுந் தவமுடை யார்க்குள வாகிய சின்னங்களே

என்கின்றார். சென்ற பிறவியிற் தவம் செய்து அம்மையருளைப் பெற்றவர்கள், இப்பிறவியில் கொண்டுள்ள அடையாளங்கள் பல்லக்கு, குதிரை, யானை, கனகம், கிரீடம், விலை மதிப்பற்ற மாலைகள் முதலியன என்பார். இவை யாவும் இவ்வுலக வாழ்விற்குத் தேவையானவை. பட்டரது மற்றோர் பாடலை உற்றுக் கவனிப்போமாயின், நாயகி தம் அடியவர் அவள் தம் திருவடிகளைச் சேருவதால் இன்ன பேற்றினை அடைகின்றனர் என்பதனை நன்கு உணரலாம்.

''சொல்லும் பொருளு மெனநட மாடுந் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடி யேநின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலுந் தொழுமவர்க் கேயழி யாவரசும்
செல்லுந் தவநெறி யுஞ்சிவ லோகமுஞ் சித்திக்குமே''

(அபிராமி அந்தாதி: 28)

என்கின்றார். சொல்லும் பொருளும் போலும் இணை பிரியாது இருக்கும் அம்மையப்பரின் புதுமலர்த்தாள்களை அல்லும் பகலும் தொழும் அடியார்கட்கு, இவ்வுலகில் பகைவர்களாலும் அழிவு வாராத அரசும் பயனடையும் வரையில் செல்லும், தவநெறி வாழ்வும், இறுதியில் சிவலோக பதவியும் தந்தருள்வாள் என்கின்றார். ஈங்கு மீண்டுமொரு முறை தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்தப் பரமாசாரியார் அவர்களின் பக்தியும் பயனும் பற்றிய அருள்வாக்கினை நோக்குவோமாக: ''வாழைத் தோட்டம் போடும் போது வாழை மரங்களுக்கு இடையில் குறுகிய காலத்தில் பயன்தரக் கூடிய கீரை, கத்தரி முதலிய பயிர்களைப் பயிரிடுவது வழக்கம். முதலில் கீரை, கத்தரி ஆகிய பயன்களைப் பெற்றாலும் முடிவில் வாழையின் பயனை அடைவது திண்ணம். அதுபோல் கடவுளை வழிபடுவது வீட்டுப் பேற்றைப் பெறுவதற்காகவே; இடையில் வரும் எல்லா நன்மைகளையும் அடைந்து அனுபவித்துக் கொண்டே முடிவில் அவன் திருவடியாகிய வீட்டுப்பேற்றை - பேரின்பத்தை அடையலாம்'' என்கின்றார். இக்கருத்துடைய இரு பாடல்களில் வரும் அடிகள்:

''வந்தே சரணம் புகும் அடியாருக்கு வானுலகம்''

.... நாயகிதன் அடியார்
மரணம் பிறவி இரண்டும் எய் தார்இந்த வையகத்தே''

என்பனவாம்.

இறைவன் அம்மையப்பனாக விளங்கி உலகத்து உயிர்களுக்கு அருள் வழங்குகின்றான். இயக்குதல் இயங்குதல் என்றும் இருவகை ஆற்றல்களை அம்மையப்பராகக் காணலாம். அம்மை இயங்கும் ஆற்றல், அப்பன் இயக்கும் ஆற்றல். இவ்விரண்டும் ஒன்றையொன்று பிரியாத நிலையில் உலகம் இயங்கிக் கொண்டிருக்கின்றது. உலக உயிர்கள் அனைத்தும் ஆண், பெண் என்ற நிலையில் உள்ளன. நம் உடலும், சிவம், சக்தி என்ற அமைப்பில் உள்ளது. வலப்பக்கம் சிவம். இடப்பக்கம் - சக்தி. இறைவனும் இறைவியும் மலரும் மணமும் போலவும், நெருப்பும் சூடும் போலவும், பிரிப்பு இன்றி இருப்பர். ஆலயங்களில் அர்த்த நாரீசுர வடிவம் இதனை நமக்கு நன்கு உணர்த்துகின்றது. இத்தோற்றத்தை அம்மையப்பன் என்று வழங்கி நாம் வழிபட்டு வருகின்றோம். திருக்கடவூரிலும் அம்மையப்பராகவே மார்க்கண்டேயருக்கு அருள் புரிந்தார் அமுதீசர். இவ்வமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி அபிராமியோ, பட்டரைப் போன்ற சாமானியர்க்கும் அருள் பாலித்திருக்கின்றாள். அவளது அருள் பட்டருக்குக்கிட்டியது போன்று அவளைச் சத்தியமாய் நித்தம் உள்ளத்தில் துதிக்கும் உத்தமர் அனைவருக்கும் கிடைக்க வேண்டி நிற்போம்! நூற்பயன் நுகர்வோம்!!

''ஆத்தாளை யெங்க ளபிராம வல்லியை யண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத் தாளைப் புவியடங்கக்
காத்தாளை யங்கையிற் பாசாங் குசமுங் கருப்புவில்லும்
சேர்த்தாளை முக்கண்ணி யைத்தொழு வார்க்கொருதீங்
கில்லையே''.

சன்மார்க்கத்தில் ஞானப்பாதை

மு.பாலசுப்பிரமணியம்.பி.காம்.

சன் மார்க்கம் என்பது சரியை கிரியை யோகம் ஞானம் என்பதில் ஞானத்தை அனுஷ்டிக்கின்ற கூட்டம் எனக் கொள்க என்கின்றார் வள்ளலார். அதனால்தான் காமக்குரோதம் ஏற்படுகின்றபோது ஞான அறிவினால் தடுத்துக்கொள்பவரே சன் மார்க்கத்திற்குரியவர் ஆவார்.

சரியையாகிய தாசமார்க்கத்தில் இறந்த பிள்ளையை எழுப்பிக் கொடுத்தார் அப்பர் சுவாமிகள்.

கிரியையாகிய சற்புத்திர மார்க்கத்தில் சாம்பலுக்கு உயிர் கொடுத்து பூம்பாவையை மீண்டும் எழுப்பிக் கொடுத்தார் திருஞான சம்பந்தர். யோகமாகிய சகமார்க்கத்தில் ஒன்றுமே இல்லாத நிலையில் முதலையுண்ட பாலகனை வரவழைத்துக் கொடுத்தார் சுந்தரர்.

ஞானமாகிய சன்மார்க்கமோ இறந்தாரை எழுப்புதல் மட்டுமல்ல இறவாமலே இருக்கமுடியும் என்று வழிவகை காட்டுகின்றது.

கிழக்குத் திசையை நோக்கி வழிபட்டால் போகமும், மேற்குத் திக்கை நோக்கி வழிபட்டால் சொர்ணமும், தெற்குத் திக்கை நோக்கின் ஞானமும் வடக்குத் திக்குச் சித்த சுத்தியும் ஏற்படும் என்கின்றார். இதைக் குறித்தே ஆலயங்களில் குடும்பத்திலுள்ள சமுசாரிகட்குப் போகமும் பொருளும் கிடைக்க இறைவனைக் கிழக்கு நோக்கியும் அவர்கள் மேற்கு நோக்கி வணங்குமாறும் செய்துள்ளார்கள். அதே ஆலயத்தில் சந்நியாசிகள் தெற்கு நோக்கியுள்ள தட்சணாமூர்த்தியை வடக்கு நோக்கி நின்று வழிபடச் செய்துள்ளனர். சம்சாரிக்குக் கிழக்கும் மேற்கும் சன்யாசிகட்கோ தெற்கும் வடக்கும்.

என் மார்க்கம் இறப்பொழிக்கும் சன்மார்க்கம் என்கிறார் வள்ளலார்.

ஞானம் என்பது அறிவை ஆயுதமாக்கி உலகியல் வாழ்விலே சிறிதும் உளம் செலுத்தாது பல உண்மைகளை அறிந்து மெய்ப் பொருளை அடைதல் எனக் கொள்ளலாம். இறைவனை வள்ளலார் மூன்று நிலைகளாகக் காட்டுகின்றார்.

இயற்கை உண்மை

இயற்கை விளக்கம்

இயற்கை இன்பம்

இறைவனை எப்படி அடைய முடியும்?

குணமுதற் கருவிகள் கூடிய பகுதியில் அணைவுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி அகவல் முதலில் நாம் நம்முடைய குணங்களை மாற்றிக்கொள்ள வேண்டும். சன்மார்க்கச் சங்கத்துச் சாதுக்கள் காணச் சத்தியம் சொன்னேன் என்கிறார் சன்மார்க்க சங்கத்தில் சாதுக்களைத் தான் வள்ளலார் சேர்க்கிறார். சாதுக்கள் சினத்தை அவித்தவர்கள். ஏன் சினத்தை அவிக்க வேண்டும்? மனிதன் உலகியல் வாழ்விலிருந்து ஆன்மீக வாழ்விற்குச் செல்லும்போது உலகியலார் செய்யாத பல சாதனைகளைப் புரிவதால் அவனுடைய அருளாற்றல் பெருகுகின்றது. அவருடைய வாய்ச்சொல் பலிக்கும். சினத்துடன் யாரையேனும் சபித்தால் அச்சொல் பலித்து அதனால் பிறர்க்கு இடுக்கண் உண்டாகும். அது முடிவாக இவனுக்கே பாபத்தைச் சேர்க்கும். வினையை ஒழிக்கப் போய் வினையைச் சேர்த்த கதையாகிவிடும். எனவே சினமும் காமமும் தவத்தை அழிக்கும் கருவிகளாதலால் அவற்றை முதற்கண் விலக்க வேண்டும்.

சுத்த சன்மார்க்கத்திற்குச் செல்ல மூன்று நிலைகளை வள்ளலார் வகுத்துள்ளார்.

சமய சன்மார்க்கம்

மத சன்மார்க்கம்

சுத்த சன்மார்க்கம்

வள்ளலார் இவற்றிற்குத் தரும் விளக்கத்தை நன்கு அறியவேண்டும்.

சமய சன்மார்க்கம் என்பது தெய்வ வழிபாட்டை ஒட்டியதல்ல. அடியிற்குறித்துள்ள ஆறு சத்துவ குணங்களை எவன் அனுபவமாக அடைகின்றானோ அவனே சமய சன்மார்க்கி 1. கொல்லாமை 2. பொறுமை 3. சாந்தம் 4. அடக்கம் 5. இந்திரிய நிக்கிரகம் 6. ஆன்ம இயற்கைக் குணமாகிய ஜீவகாருண்யம்.

மத சன்மார்க்கம்

சமய சன்மார்க்கமாகிய சத்துவ குணங்களைக் கடந்து வந்தால் நிர்க்குண லட்சியமாகிய மத சன்மார்க்கம் என்கிறார். இருவினைகளும் இங்கே சமன்படும்.

சுத்த சன்மார்க்கம்

அடுத்த நிலைதான் சுத்தசன்மார்க்கம். இங்கேயும் இரண்டு நிலைகளை வள்ளலார் காட்டுகின்றார்.

1. சாதகர் 2. சாத்தியர்

சாதகர் என்பவர் பயிற்சிகளிலே சாதனைகளிலே ஈடுபட்டு முயற்சியோடு இருப்பவர்கள்.

சாத்தியர்கள் முயற்சியிலே வென்று இறையனுபவம் பெற்று அனுபவித்துக் கொண்டு சதா ஆனந்த நிலையில் உள்ளவர்கள். கேட்டல் சிந்தித்தல் தெளிதல் நிஷ்டை கூடல் ஆகிய நான்கையும் கடந்து ஆரூடராக நிற்பதால் இந்த சாத்தியர்கட்கு எவ்வித சாதனையும் வேண்டாம் என்கிறார், வள்ளலார். சமய சன்மார்க்கம் என்னும் ஆரம்ப நிலைக்கே அடி எடுத்து வைக்காதவர்கள் சாதனை வேண்டாம் என்றால் என்ன பலனை அடைய முடியும்?

வள்ளலார் மூன்று நிலையங்களை ஏற்படுத்தினார்.

1. சங்கம் 2. சாலை 3. சபை, அதாவது

1. சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்
2. சமரச சுத்த சன்மார்க்க சத்தியத் தருமச்சாலை
3. சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞானசபை.

சங்கம்: அனைத்து மக்களும் சாதி சமயம் குலம் கோத்திரம் எவ்விதப் பாகு பாடுமின்றி அனைவரும் சேரலாம் இங்கே சேருவதற்குக் கட்டணம் மாதச் சந்தா ஆண்டுச் சந்தா வள்ளலார் ஏற்படுத்த

வில்லை.மாறாக நான்கு ஒழுக்கங்களை வரையறை செய்கிறார்.

1. இந்திரிய ஒழுக்கம்
2. கரண ஒழுக்கம்
3. ஜீவ ஒழுக்கம்
4. ஆன்ம ஒழுக்கம்

இந்த ஒழுக்கங்கள் இன்னதென்று (திருவருட்பாவின் மூலம்) அறிந்து உண்மையாக ஒழுகினால் நாம் பெறும் புருஷார்த்தங்கள் நான்கு என்கிறார்.

1. ஏமசித்தி
2. சாகாக்கல்வி
3. தத்துவ நிக்கிரகம்
4. கடவுள் நிலையறிந்து அம்மயமாதல்

இந்த ஒழுக்கங்களில் நிறைவு பெற்றவர்கள் அடுத்த நிலையாகிய தருமச் சாலைக்கு வரத்தகுதி பெற்றவராவர்.

தருமச்சாலை:

உயிர்கொலையும் புலைப்புசிப்பும் தவிர்த்த அகவினத்தாரா வர். ஜீவகாருண்யத்தையே உயிர் மூச்சாகக் கொண்டிருப்பர். தனக் கென வாழாத பிறர்க்கெனவே வாழ்பவர். இரக்கமே இவர்கள் உயிர். ஜீவகாருண்யமே இவர்கள் இலட்சியம். பசி - பிணி - தாகம் - இச்சை - எளிமை - பயம் - கொலை ஆகிய ஏழு ஆபத்துக்களால் உயிர்கள் துன்பப்படும் போது எவ்விதத் தந்திரத்தாலாவது அத்துன்பத்தைப் போக்குவது. எவ்வுயிரையும் தான் பெற்றெடுத்த சேய் போல் எண் ணிக் கனிவோடு நோக்கி - இதமாகப் பேசி - நன்மையே செய்து அதன் பலனை எதிர் நோக்காது வாழ்பவர். ஜாதி மத சமய பேதங்கள் ஒழிந்து அனைவரும் ஒன்று பட வேண்டும் என்னும் ஒருமைப்பாட்டு ணர்வு கொள்பவர். வள்ளலார் உயிர்க்கொலையும் புலைப்புசிப்பும் உடையோரைப் புறவினத்தார் என்றும் அவற்றைத் தவிர்த்தோரை அகவினத்தார் என்றும் கூறுவார்.

மக்களை இரண்டாகப் பிரிக்கும் வள்ளலார் அகவினத்தாரை மேலும் இரண்டு பிரிவாக்குகின்றார்.

1. புறப்பணி செய்வோர்
2. அகப்பணி செய்வோர்.

தன்னைச் சுற்றி தனக்குப் புறம்பாக உள்ள அனைத்துயிர்களும் இன்பமடையச் செய்யும் ஜீவ காருண்யப் பணியைப் புறப்பணி என்றும், தன் உயிர்க்காகச் செய்யும் சாதனையை அகப்பணி என்றும் காட்டுகின்றார். சாதனையை ஏற்காத மக்களைப் புறப்பணிக்கே விடுக என்கிறார்.

மணவாளர் வருகின்ற தருணமிது மடவாய்
மாளிகையின் வாயிலெல்லாம் வளம் பெற நீ புனைக
குணவாளர் அணையும் மலரணையை அகத்தே நானே
குலவும் மணி விளக்கத்தால் அலங்கரிக்கப் புகுவேன்
தணவாத சுகந்தரும் என் தனிக்கணவர் வரிலோ
சற்றும் அய்ல் வாதனைகள் உற்றிடுதல் ஆகா
அணவாத மனத்தவரைப் புறப்பணிக்கே விடுக
அன்புடையார் களுக்கிடுக அகப்பணி செய்திடவே

(அனுபவமாலை)

சபை:

சபைக்கு வருவோர் சுத்த ஞானிகள். நீரைப் பல நிலைகளில் வடிகட்டி சுத்தப்படுத்திப் பின்னர் குடிக்கப் பயன்படுத்துவது போல் பல நிலைகளில் பல ஒழுக்கங்களில் பயின்று ஞானத்தை அடைய வந்தவர்களாவர். இப்படிப்பட்ட வரோடு கூடி வாழ்வதே தன் இச்சை என்கிறார் வள்ளலார்.

சற்சபைக் குரியார் தம்மொடுங் கூடித் தனித்த பேரன்பும் மெய்யறிவும்
நற்சபைக் குரிய ஒழுக்கமும் அழியா நல்ல மெய் வாழ்க்கையும் பெற்றே
சிற்சபை நடமும் பொற்சபை நடமும் தினந்தோறும் பாடி நின்றாடித்
தெற்சபை உலகத் துயிர்க்கெலாம் இன்பம் செய்வது ஏன் இச்சையாம் எந்தாய்.

(பிள்ளைச் சிறு விண்ணப்பம்)

சன்மார்க்கம் என்பது வாய்ப் பேச்சல்ல அடைவது என்கிறார். நாம் பலவற்றை அறியவேண்டும். பிறவிக் கடலிலே அழுந்திப் பிறந்து பிறந்து, இறந்து இறந்து வினை வழியே சென்று கொண்டுள்ள உயிரை வினைத் தளையிலிருந்து நீக்கி இறைவனை அடைந்து இனி யும் பிறவா நிலையில் இருக்கச் செய்வதே ஞானத்தின் பயனாம். ஜீவனை ஆண்டவனுடன் இரண்டறக் கலப்பதற்கு வழி செய்வதே ஞானம். இந்த உடல் என்றாவது ஒரு நாள் வீழ்ந்தே தீரும். எனவே இதை அலட்சியப் படுத்தி நித்தியமாகிய ஜீவனை நித்தியப் பொருள் மாகிய இறைவனுடன் கலந்து விடச் செய்ய வேண்டும் என்று ஞானி கள் கருதி முயற்சிகளை மேற்கொண்டனர். இங்கே வள்ளலார் ஒரு சட்டம் வகுக்கிறார். அதாவது எவன் ஒருவனுடைய உடலானது மண்ணுக்கோ நெருப்புக்கோ இரையாக விடப்படுகிறதோ அவன் வினைக்கேற்ப மீண்டும் தேகம் எடுத்தே ஆகவேண்டும். சுவரை வைத்துச் சித்திரம் எழுதுவது போன்று இந்த உடலிலேயே தான் ஜீவனும் இறைவனும் கலக்க வேண்டும். இந்த உடம்பு போனால் பிறவிதான் கிட்டும் திருமூலரும்.

உடம்பை முன்னம் இழுக்கென்றிருந்தேன்
உடம்பினுள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்பினுள்ளே உத்தமன் கோயில் கொண்டானென்று
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே

(திருமந்திரம்)

அழியும் உடம்பா நித்தியமாகும். ஒருகாலும் முடியாதென் போர்க்குத் திடமாக உறுதியாக வள்ளலார் கூறுவார் பொத்திய மலர்ப் பிணிப் புழுக் குரம்பைதான் சித்தியல் சுத்த சன்மார்க்கச் சேர்ப்பினால் நித்திய மாகியே நிகழும் என்பது சத்தியம் சத்தியம் சகத்துள்ளீர்களே

(திருஅருட்பா)

இது எப்படிச் சாத்தியமாகும் என்று சந்தேகிப்போர் திருவருட்பாவை நன்கு பயின்று தெளிவு அடைவராக. வள்ளலார் கூறிய மரணமிலாப் பெரு வாழ்வு என்பது எந்த மரணத்தை நாம் அறிந்தும் கண்டும் வருகின்றோமோ அந்த மரணத்தை வெல்வதேயாம். இதற்கு நாம் முதலில் கற்க வேண்டும். பின்னர் அதை அடைய வேண்டும். என்ன கற்பது.

1. பரம் அபரம் பகர்நிலை
2. மதிநிலை இரவியின் வளர்நிலை அனலின் திதிநிலை.
3. கணநிலை அவற்றின் கருநிலை
4. பதிநிலை பசுநிலை பாசநிலை
5. பிரம ரகசியம்
6. பரம ரகசியம்
7. சிவரகசியம்

தக்க ஆசாரியனைக் கொண்டு மேற்குறித்த நிலைகளை அறிந்து கொண்டு நெற்றிக் கண்ணைத் திறக்கப் பெற்றுக் கொண்டோமேயா னால் சாதனையில் ஈடுபடுவோர்க்கு மட்டும்

1. முதலில் நாதங்கள் கேட்கும்
2. காணாத காட்சிகள் காணும்

3. உடலிலே மலர் மணம் வீசும் கற்பூரம் மணக்கும் மலமற்ற தேகமாக மாறும்.

உலகியலார் பருகியறியாத அமுதம் கிட்டும். இறை காட்சி கண்டு அது உடலோடும் உயிரோடும் கலக்கும். இதுவே இரண்டறக் கலத்தல். உடம்பை விட்டு விட்டுக் கலப்பதல்ல. உடம்பினுள்ளே கலப்பது.

இந்நிலை பெற்ற வள்ளலார் எங்கே என்று ஆன்மீகம் அறியாத சிலர் வினவலாம். உலகியலிலிருந்து அருளியலுக்கு மனம் முதலியவை மாறும்போது இந்தத் தூலதேகமும் படிப்படியாக மாறும். இங்கேயும் மூன்று நிலைகளை வள்ளலார் கூறுகிறார்.

1. சுத்த தேகம்
2. பிரணவ தேகம்
3. ஞான தேகம்.

சுத்த தேகம் என்பது ஞான வேள்வியினால் தவக் கனலால் வேதிக்கப்பட்ட தூல தேகம் தன்மை மாறி மல ஜலம் வியர்வை சாயை முதலியன நீங்கிச் சுத்த தேகமாக மாறும்.

நிழல் விழாத இந்தத் தேகத்தைப் படம் பிடிக்க இயலாது. வள்ளலாரின் நிழற்படம் இல்லாமல் போனதே இதற்கு நல்ல சான்றாகும். இந்தச் சுத்த தேகம் தோன்றும் பிடிபடும்.

மேலும் தொடர்ந்து செய்யும் தவமானது மேலும் கனலால் வேதிக்க இந்தச் சுத்த தேகமானது பிரணவ தேகமாக மாறுகிறது. இந்தப் பிரணவ தேகம் தோன்றும் பிடிபடாது.

முடிவாக ஞானதேகம் பெறும் போது தேகம் இருக்கும். ஆனால் ஊனக் கண்களுக்குத் தோன்றாது. நம் கண் அறிவான பார்வை அறிவு சாதனா சகாயத்தால் நுண்ணறிவாக மாறினால் கண்ணுக்குத் தெரியாத ஞான தேகத்தையும் காண இயலும். இதுவே வள்ளலார் பெற்ற நிலை. ஞான தேகியாய் வள்ளலார் இருக்கிறார்.

இதை வள்ளலார் பல பாக்களில் உறுதி செய்கின்றார்.

ஆடுகின்ற சேவடிக்கே ஆளானேன் மாளாத யாக்கை பெற்றேன்
கூடுகின்ற சன்மார்க்க சங்கத்தே நடுவிருந்து குலாவுகின்றேன்
பாடுகின்றேன் எந்தை பிரான் பதப்புகழைப் பாடிப்பாடி
நீடுகின்றேன் இன்பக் கூத்தாடுகின்றேன்
எண்ணமெலாம் நிரம்பினேனே.

காற்றாலே புவியாலே ககனமதனாலே கனலாலே
புனலாலே கதிர் ஆதியாலே
கூற்றாலே பிணியாலே கொலைக் கருவியாலே
கோளாலே பிறவியற்றுங் கொடுஞ் செயல்களாலே
வேற்றாலே எஞ்ஞான்றும் அழியாதே விளங்கும் மெய்
யளிக்க வேண்டுமென்றேன் விரைந்தளித்தான் எனக்கே
ஏற்றாலே இழிவென நீர் நினையாதீர் உலகீர்
எந்தை அருட்பெருஞ்ஜோதி இறைவனைச் சார்வீரே.

இறைவன் இறைவன் என்று பேசுகிறோமே அவன் எப்படி இருப்பான்? அவனைக் காணத்தவம் செய்கிறோமே அந்தத் தவம் எப்போது நிறைவுறும்? ஆண்டவனையும் ஜீவனையும் காரியத்தால் அதாவது செயல்பாட்டால் அறிய முடியுமே தவிர வெளியே நேரிடையாகக் காண முடியாது. உடம்பு இயங்கினால் உயிர் உள்ளது. இயக்கம் நின்று போனால் உயிர் போய்விட்டது. அதே போல ஆண்டவனும் அண்டத்திலும் பிண்டத்திலும் நான்கு இடங்களில் காரியப்படுகின்றான்.

அண்டத்தில்

அகம் அக்கினி
அகப்புறம் சூரியன்
புறம் சந்திரன்
புறப்புறம் நட்சத்திரம்

பிண்டத்தில்

அகம் ஆன்மா
அகப்புறம் ஜீவன்
புறம் கரணங்கள்
புறப்புறம் இந்திரியங்கள்

இறைவனை உள்ளத்தில் மட்டுந்தான் காணமுடியும்.

பொது உணர் உணரும் போதலால் பிரித்தே அது வெனில் தோற்றா அருட் பெருஞ்ஜோதி

(அகவல்)

இறைவன் முச்சுடராகத் தோன்றுவார் பரநாத நிலையிலே பெருஞ்ஜோதி தோன்றும். அதன் நடுவே பொன்னொளி தோன்றும். ஆங்கு அதன் நடுவே செவ்வொளியாக இறைவன் தோன்றுவான். இதுவே இறை அனுபவம் - அவ்வொளியே இவ்வுடலில் கலப்பது - அதுவே கடவுள் நிலையறிந்து அம்மயமாவது.

ஈற்றறியேன் இருந்திருந்திங்கு அதிசயிப்பதென் நீ
என்கின்றாய் நீ எனைவிட்டேகு தொறும் நான்தான்
காற்றறியாத் தீபம்போல் இருந்திடும் அத்தருணம்
கண்ட பரிசென்புகல்வேன் அண்ட பகிரண்டம்
தோற்றறியாப் பெருஞ்ஜோதி மலை பரநாதத்தே
தோன்றியதாங் கதனடுவே தோன்றிய தொன்றதுதான்
மாற்றறியாப் பொன்னொளியோ அவ்வொளிக்குள்ளாகும்
வள்ளல் அருள் ஒளியோ ஈது அதிசயிக்கும் வகையே

(அனுபவமாலை)

இதை நெற்றியிலே திருநீறிட்டு அதன் நடுவே சந்தனமிட்டு அதன் நடுவே சிவந்த குங்குமமிட்டுப் பெரியோர்கள் காட்டினார்கள். பிரமர்களும் நாரணர்களும் காண ஏங்கி நிற்கும் இக்காட்சியை அருந்தவத்தால் வள்ளலார் கண்டார். அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்.

வானிருக்கும் பிரமர்களும் நாரணரும் பிறரும்
மாதவம் பன்னாட் புரிந்து மணிமாட நடுவே
தேனிருக்கும் மலரணை மேற் பளிக்கறையினூடே
திருவடி சேர்த்தருள்க எனச்செப்பி வருந்திடவும்
நானிருக்கும் குடிசையிலே வலிந்து நுழைந்தெனக்கே
நல்ல திரு அருளமுதம் நல்கிய தன்றியும் என்
ஊனிருக்கும் குடிசையிலும் உவந்து நுழைந்தெளியேன்
உள்ளமெனும் சிறு குடிசையுள்ளூ நுழைந்தனையே

ஔவைப் பிராட்டியிடம் எது பெரியது என்றபோது இறைவன் தொண்டருள் ஒடுக்கம் எனவே தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே என்றாளாம். இங்கே இறைவனைத் தன்னுளே கண்டு, கொண்ட வள்ளலார் நமக்கும் அவ்வழியை எளிமையாகக் காட்டுகின்றார். வள்ளலார் காட்டும் சன்மார்க்கத்தில் ஞானப்பாதை காட்டும் எல்லையோ இவ்வுலகில் என்றென்றும் இறவாமல் இருந்து கொண்டு இறைவனுடன் இவ்வுடலிலே கலந்து கொண்டு இவ்வுடலை ஞான உடலாக்கி வாழ்ந்து கொண்டிருப்பதே, மண்ணினால் குயவன் பானை செய்கிறான். அந்தப் பானையை நெருப்பில் சுடுகிறான். அந்தப் பானை பலகாலம் இருக்கும். மழை நீரையும் அதில் பிடிக்கலாம். சுடாத பாத்திரம் மழை நீருக்கு நிற்குமா? அதே இந்த மண்ணுடல் தவத்தால் சுட்டால் நிற்கும். இஃதே உண்மை. நானே தவம் புரிந்தேன் நம் பெருமான் நல்லருளால் நானே அருட்சித்தி நாடடைந்தேன் - நானே அழியா வடிவம் அவை மூன்றும் பெற்றேன் இழியாமல் ஆடுகின்றேன் இங்கு. (திருவருட்பா)

வள்ளலார் பெற்ற பேற்றை நாமும் பெறுவோமாக.

வள்ளல்துணை



பண்டார சாத்திரங்கள்

செஞ்சொற் கொண்டல்
டாக்டர். சொ. சிங்கார வேலன், எம். ஏ., பி எச். டி

''பண்டாரம்'' என்ற சொல் வழக்கு:

கி.பி.14 ஆம் நூற்றாண்டில் **''பண்டாரம்''** என்ற சொல்லால் உயர்ந்த மெய்ஞ்ஞானிகளைக் குறிக்கும் வழக்குத் தமிழகத்தில் வந்தது என்று கருதலாம். 'அருட்செல்வக் கருவூலமாகிய பண்டாரத்தைப் பொதிந்து வைப்பவர்' என்ற பொருளில் **'பண்டாரம்'** என்ற சொல் கையாளப் பட்டிருக்க வேண்டும்.

''காலம் உண்டாகவே காதல் செய்துய்மின் கருதரிய
ஞாலமுண்டானொடு நான்முகன் வானவர் நண்ணரிய
ஆலமுண்டானெங்கள் பாண்டிப்பிரான்றன் அடியவர்க்கு
மூலபண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே''1

என்ற திருவாசகத்தில், இப்பொருண்மை இனிது தெளிவாகின்றது. மகா வித்துவான் ச.தண்டபாணி தேசிகரவர்கள் 'மூலபண்டாரம்' என்பதற்கு **'சேமநிதி'** என்று பொருள் கண்டுள்ளமை கருதத்தக்கது.2

திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமட முதல்வரான குமரகுருபர சுவாமிகள், தருமையாதீனம் 4 ஆவது குருமூர்த்திகளாக எழுந்தருளியிருந்த மாசிலாமணி தேசிகர் மீது பாடியருளிய உயர்ந்த ஞானநூல், ''பண்டார மும்மணிக் கோவை'' என்றே வழங்கப்படுகின்றது. குரு தோத்திரமாகவும், ஞான சாத்திரமாகவும் விளங்குவது இத் திருநூல். முப்பத்தாறு கட்டளைக் கலித்துறைகளைக் கொண்ட, ''பண்டாரக் கலித்துறை'' என்ற நூல் தருமையாதீன முதற்குரவர் அருளிய ஞானப் பனுவல்.

ஞான உபதேசம் பெற்ற இவ்வருளாளர்கள் தம்மை நாடி வருவோர்க்கு உபதேசம் செய்து வரும் இயல்பு பற்றித் ''தேசிகர்'' என்றும் குறிக்கப்பட்டனர்.

கி.பி.17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வெள்ளியம்பல வாணத் தம்பிரான், சிற்றம்பல நாடிகள் பரம்பரையைத் தம் முத்தி நிச்சயப் பேருரையில் எழுதும் போது பின்வருமாறு தெளிவாக்குகின்றார்: ''உமாபதி சிவாசாரியரும், மச்சுச் செட்டியாரும் மறை ஞான சம்பந்த குரவல் பால் அருள் பெற்றார். அவருள் மச்சுச் செட்டியார் பால் அருள் பெற்றார் காழிக் கங்கை மெய்கண்டார். அவர் பால் அருள் பெற்றார் காழிப் பழுதை கட்டிச் சம்பந்த பண்டாரம் முதலியோர். அவருள் காழிப் பழுதைகட்டிச் சம்பந்த பண்டாரத்தின் பால் அருள் பெற்றார் சிவபுரம் ஞானப் பிரகாச பண்டாரம். அவர் பால் அருள் பெற்றார் சிவபுரம் தத்துவப் பிரகாச பண்டாரம். அவருள் அருள் பெற்றார் திருவாரூர் செட்டித் தெருப் பழுதை கட்டி ஞானப் பிரகாச பண்டாரம் முதலியோர். அவர் பால் அருள் பெற்றார் சிதம்பரநாத மாசிலா மணி கமலை ஞானப் பிரகாச பண்டாரம் முதலியோர். அவருள் சிதம்பரநாத மாசிலாமணி கமலை ஞானப் பிரகாச பண்டாரத்தின் பால் அருள் பெற்றார் இந்நூல் செய்த குருஞான சம்பந்த பண்டாரம் முதலியோர் என்க.''3 இப்பகுதியில் 'பண்டாரம்' என்ற சொல்வழக்கு உயர்ந்த பொருளில் முறையாகக் கையாளப்பட்டுள்ளது.

தருமையாதீனப் பண்டார சாத்திரங்கள்:

திருக்கயிலாய பரம்பரையில் வந்த சைவத் திருமடங்களில், அருளாசிரியராக வீற்றிருந்த ஞானாசிரியர்கள் அருளிய நூல்களைப் 'பண்டார சாத்திரங்கள்' என்று குறிக்கும் வழக்கு உள்ளது; தருமையாதீனம் முதற்குரவர் குருஞான சம்பந்த பரமாசாரியர் படைத்த அருள் நூல்களைப் பண்டார சாத்திரம் என்று போற்றி வழங்குகுவர்; இவர்கள் அருளிய நூல்கள் வருமாறு: (1) சிவபோக சாரம், (2) திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவல், (3) முத்தி நிச்சயம், (4)சோடச கலாப் பிரசாத ஷட்கம் (5) சொக்கநாதக் கலித்துறை (6) சொக்க நாத வெண்பா (7) ஞானப் பிரகாச மாலை (8) நவரத்தின மாலை (9)ஞானாவரண விளக்கம் (10) சிவபூசா பத்ததி.

இவற்றுள் **முதல் மூன்று நூல்களும் சைவ சித்தாந்த ஞான** சாத்திரங்கள்; நான்காவதாக உள்ள சோடச கலாப் பிரசாத ஷட்கம் **யோக நூல்;** அடுத்து வரும் நான்கும் **தோத்திர வகை** சார்ந்தவை. சிவ ஞான சித்தியார் என்ற பெருநூலின் பரபக்கம், சுபக்கம் ஆகிய பகுதிகளை விளக்கும் விரிவுரையாக 'ஞானவரண விளக்கம்' அமைந்துள்ளது. 'சிவஞானத்தைச் சூழ்ந்திருக்கும் தடைகளை அகற்றி விளக்கம் தருவது' என்பது 'ஞானாவரண விளக்கம்' என்ற தொடரின் பொருளாகும். இந்நூல் முழுதும் இப்போது கிடைக்கவில்லை; வெள்ளியம்பல வாணத்தம்பிரான் உரையுடன் இரண்டு பிரிவுகளாக இந்நூல் தருமையாதீனத்தால் அச்சிடப் பெற்றுள்ளன.

'சிவபூசா பத்ததி' என்ற உரைநடை நூல் குருஞானசம்பந்தரால் செய்யப் பெற்றிருக்கக் கூடும் என்று அறிஞர் கருதுவர்.1. தஞ்சை சரசுவதி மகால் ஏட்டுச் சுவடிப் பகுதியில், இந்நூல் கிடைத்துள்ளது; அதனிறுதியில் ஞானப்பிரகாசர் துதிச் செய்யுள் என்ற அமைப்பைக் கொண்டு இந்நூல் ஸ்ரீ குருஞான சம்பந்தர் செய்திருக்கக் கூடும் என்பர்.

தருமையாதீனம் ஏழாவது குருமூர்த்திகளாக விளங்கிய திருவம்பல தேசிகர் அருளிய **''வருணாசிரம சந்திரிகை''** என்ற நூலும், **''சமாதி லிங்கப் பிரதிட்டாவிதி''** என்ற நூலும், ஒன்பதாவது குருமூர்த்திகளாக எழுந்தருளியிருந்த திருநாவுக்கரசு தேசிகரால் அருளப் பெற்ற ''சித்தாந்த நிச்சயம்'' என்ற நூலும், பத்தாவது குருமூர்த்திகளாக எழுந்தருளியிருந்த சிவஞான தேசிகர் அருளிய **''திருவருட்பாத் திரட்டு''** என்ற நூலும் இவ்வாதீனத்தின் ஏனைய பண்டார சாத்திரங்களாம்.

பதினோராவது குருமூர்த்திகளாக விளங்கியிருந்த சச்சிதானந்த தேசிகர் அருளிய ''சிவஞான போத பாஷ்யம்'' என்ற நூல், வடமொழிச் சிவஞான போதத்துக்கு வடமொழியிலேயே இயற்றப் பெற்ற விரிவுரைத் தொகுப்பாகிய, ''செந்தமிழ்ப் பூம்பொழில்'', 26ஆவது குருமூர்த்திகளின் அருளுரைத் தொகுப்பாகிய ''திருவருட்செய்தி'' ஆகியவை, உரைநடை வகையில் அமைந்த பண்டார சாத்திரங்களாம்.

சிவபோகசாரத் திருவருள் திறம்:

குருஞானசம்பந்தர் அருளிய ''சிவபோகசாரம்'' சிறந்த ஞான சாத்திரப் பனுவல்; அடிகள் வணக்கம்,பெறுதற்கு அருமை, அறியும் பகுதி, உபதேச விளக்கம், அநுபூதிநிலை, உபாய நிலை, பணியுறுத்

தல், துறவின் பகுதி, அறிவோர்ப் புகழ்ச்சி, மடவோர்ப் பழிப்பு, பொதுநிலை என்ற பதினொரு உட்தலைப்புக்களில் சிவஞானச் செல்வராக விளங்கிய இவ்வருளாளர் தம் அநுபவச் செல்வத்தை வெளிப்படுத்தியுள்ளார். மெய்கண்ட சாத்திரத்தின் பிழிவாக உள்ள இத்திரு நூல், சிவஞான சித்திநெறி மேன்மையை விளக்குகின்றது; சிவஞான சித்தி நூலின் ஒரு விருத்தம் கூட முழுமையாகப் படித்தல் தேவையில்லை; ஒரு பாதி விருத்தமே முத்தி நிலை கூட்டும் என்று ஒரு வெண்பாவில் உரைத்தருள்கின்றார்.

''ஆறாறு தத்துவமும் ஆணவமும் வல்வினையும்
நீறாக முத்திநிலை நிற்போர்க்குப் - பேறாகப்
பாவிரித்த நூலெல்லாம் பார்த்தறியிற் சித்தியிலே
ஓர்விருத்தப் பாதிபோதும்''1

சிவஞான சித்தியாரில், ''அறியாமை அறிவகற்றி அறிவினுள்ளே அறிவுதனை அருளினான் அறியாதே அறிந்து'' என்ற திருவிருத்தத்தை நினைவு கொண்டருளியது இது என்பர்.2.

'இறை', 'உயிர்', 'தளை' என்ற சைவசித்தாந்த அடிப் படைப் பொருளை விளக்குவது பின்வரும் சிவபோகசாரம்.

''என்னை அறிவென்றான்; என்னறிவில் ஆனந்தம்
தன்னைச் சிவமென்றான்; சந்தமும் - என்னை உன்னிப்
பாரா மறைத்ததுவே பாசமென்றான்; இம்மூன்றும்
ஆராய்ந்த வர்முத் தராம்''1

குருவருளால் சும்மா இருந்து நிட்டை கூடுவதே பேரின்பம் என்பதனைப் பின்வருமாறு விளக்குவர்.

''அருளறிந்து தானாம் அறிவறிந்தே ஆங்குட்
பொருளறிந்து தானடங்கிப் போத - இருளகல
விம்மா திருந்து விகற்பமற ஒன்றாகிச்
சும்மா இருக்கை சுகம்.''2

''ஆன்மாவுக்கு இயற்கையாக ஆனந்தம் இல்லை; ஆன்மாச் சிவத்தோடு கலந்து நிற்றலே முத்தி; பேரின்பம். உயிர் சென்று சார்ந்த பொருளாகிய சிவத்துக்குரியது; ஆன்மா சார்ந்ததன் வண்ணமாய்ப் பேரின்பத்தை அநுபவிக்குமே யன்றிப் பேரின்பம் அதற்கு உரிய தன்று; அஃது ஆன்மாவின் இயல்பு ஆகாது; ஆனந்தம் சிவத்தின் இயல்பன்று ஆன்ம இயல்பு என்று கூறுவது ஆகமங்களுக்கு மாறுபட்டது; அது சித்தாந்த முத்தியுமன்று'' என்று நிலைநாட்டுவது **''முத்தி நிச்சயம்''.**

''அண்ணலைப் போல் ஆனந்தம் ஆன்மாவிற் குண்டாகில்
எண்ணில் பிறப்பிறப்பை எய்துமோ - கண்ணிருளை
ஓட்டாதோ ஆதவனுக்கு ஒத்த ஒளி உண்டாகில்
கேட்டாயோ கேட்டிலையோ கேள்''3

பிரசாத ஷட்கம்:

வடமொழியில் உள்ள 'பிரசாத ஷட் ஸ்லோகீ' என்ற ஆறு பாடல்களின் மொழி பெயர்ப்பாக, 'சோடசகலாப் பிரசாத ஷட்கம்' என்றருளினர்; ஏழு ஆசிரிய விருத்தங்களால் ஆகிய இந்நூல், 'பிரசாத யோகம்' பற்றிய திருநூல். இந்நூல் கூறும் பிரணவ கலைகள் பதினாறு; அகாராம், உகாரம், மகாரம், விந்து, அர்த்த சந்திரன், நிரோதினி, நாதம், நாதாந்தம்,சக்தி, வியாபினி, வியோம ரூபினி, அநந்தை, அநாதை, அநாசிருதை, சமனை, உன்மனை என்பன. ஆன்மாவினிடத்தில், குண்டலினி சக்தியை மேல் நோக்கிச் செலுத்துவதனால் இப்பதினாறு கலைகளையும் முறையாகத் தரிசித்து, மேல் சென்று சிவத்துடன் இரண்டறக் கலத்தலே 'பிரசாத யோகநெறி' என்பர். யோக நெறி வல்லார்க்கு விளங்கித் தோன்றும் பொருண்மை உடையதே இப்பெருநூல்.4

தசகாரிய அகவல்:

''திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவல்'' 136 அடிகளில் ஆசிரியப்பாவால் அமைந்த திருநூல்; தத்துவரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, ஆன்ம ரூபம், ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, சிவரூபம், சிவதரிசன், சிவயோகம், சிவபோகம் என்ற தசகாரியத்தை விளக்குவது. சுபாவம், வியாத்தி, வியாபகம், குணம், விசேடம், உருவகம், உருவம், சொரூபம், தரிசனம், சுத்தி என்ற பத்துப் பொருள்களை விரித்துரைப்பார். தம் குரு நாதரின் அறிவுறுத்தலாலேயே தாம் இந்நூலைப் படைத்ததாக உரைப்பர்.

ஏனைய இருநூல்கள்:

நான்காம் வருணத்தினர்க்கும் சந்நியாசம் (துறவு) உண்டு என்பதை விளக்க எழுந்தது. **'வருணாசிரம சந்திரிகை'** சமாதியில் சிவலிங்கப்பிரதிட்டை செய்வதற்குரிய விதிமுறைகளையும், அம்மை, பரிவார தெய்வங்களை எழுந்தருளச் செய்யத் தக்க நெறிகளையும், பெருவிழா நடத்தும் முறைகளையும் விளக்குவது **'சமாதி லிங்கப் பிரதிட்டா விதி'** 220 திருப்பாடல்களைக் கொண்ட இந்நூல் திருவல்ல தேசிகரால் இயற்றப் பெற்ற அரிய நூல்.

திருவருட்பாக்கள்:

பத்தாவது குருமூர்த்திகளாகிய சிவஞான தேசிகர் பாடியருளிய திருவருட்பாத் திரட்டு அரிய தோத்திரப் பாக்களால் ஆகிய தொகுதி; பக்தி நலம் ததும்பும் ஞானப் பனுவல். வேளூர் முத்துக் குமாரசுவாமி, காசி விசுவநாதர், காசி கால பைரவர், காசி அன்னபூரணி, காசி துண்டி கணபதி, முதலிய தெய்வங்களின் மீதும், தட்சிணா மூர்த்தி மீதும் பாடப் பெற்ற உருக்கமான இத்திருப்பாட்டுக்களில், சரியை, கிரியை, யோக, ஞான நுட்பங்கள் பொதிந்துள்ளன.

திருவாவடுதுறை யாதீனப் பண்டார சாத்திரங்கள்:

திருவாவடு துறை ஆதீனத்தில் பண்டார சாத்திரங்கள் என வழங்கும் ஞானப் பனுவல்கள் பல. ''நூல்கள் உலகியல் உணர்த்துவனவும், ஒழுக்கம் உணர்த்துவனவும், உண்மை உணர்த்துவனவும் என் முத்திறப்படும். அவற்றுள் உணமை உணர்த்துவன ஞான நூல்கள். அவை இலக்கணம் உணர்த்துவனவும், அனுபவம் கூறுவனவும் என இருவகைப்படும். இலக்கணம் உணர்த்துவன சிவாகமக்களின் ஞானபாதங்கள். இலக்கணமும் அனபவமும் கலந்து உணர்த்துவன மெய்கண்ட சாத்திரங்கள். அனுபவம் கூறி, மாணாக்கன் ஐயமறுத்து வழிகாட்டி ஞானநெறிக்குக் கை கொடுத்து அவனைமெதுமெதுவாக அழைத்துச் செல்வன பண்டார சாத்திரங்கள்'' என்ற விளக்கம் மெய்கண்ட சாத்திரங்களுக்கும் பண்டார சாத்திரங்களுக்கும் இடையே உள்ள நிலை வேறுபாட்டை இனிது உணர்த்துவதாகும். ★

நோக்கமும் திறனும்:

பண்டார சாத்திரங்கள் எழுந்த நோக்கம் யாது? ''பண்டாரங்கள் என்பார் சிவன் ஆன்மாக்களின் மீது வைத்த அளவில்லாக் கருணையினாலே மானிடச் சட்டை தாங்கி வந்த மகான்கள். அவர்கள் தம் மாணாக்கர்களுடைய சாதக நிலைக்குத் தக அவ்வப்போது விளையும் ஐயங்களை அவர்கள் அனுபவம் கண்டு அறுக்க வேண்டிய நிலை உண்டாக்க அதற்காக அருளிச் செய்யப் பெற்றவையே இந்நூல்கள்.''1 . பண்டார சாத்திரங்களும் பதினான்கு எனல் மரபு; அவற்றுள் நிட்டையை விளக்கும் நூல்கள் இரண்டு; அவை உபாய நிட்டை வெண்பா, நிட்டை விளக்கம் என்பன.

'நிட்டை' என்பது 'நன்றாக நிலைபெறுதல்' என்ற பொருளை உடைய சொல், நிட்டை உபாய நிட்டை, ஞானநட்டை என இருவகைப்படும். உபாய நிட்டை - எண்வகை யோக உறுப்புக்களான் உருவில் உள்ளத்தைப் பதித்து உருவே தான் என்னும் பாவனையில் அசையாது நிற்கும் அறிவுச் செயல்; ஞானநிட்டை - நீரும் நீரும் கலந்தாற்போல அறிவுருவான ஆன்மா அறிவுருவச் சிவத்தினிடம் அருளே தானாய் அசையாது நிற்கும் நிலை.

அம்பலவாணரின் அருள்நூல்கள்:

திருவாவடுதுறை ஆதீனத்தில் மூன்றாவது குருமகாசந்நிதான மாக எழுந்தருளியிருந்த அம்பலவாண தேசிகர் அருளிய ஞான நூல்கள் சித்தாந்த நூல்களில் அங்கங்கே இலை மறை காய் போல் மறைந்து கிடக்கும் அரும் பொருள்களையெல்லாம் எளிதாக மாண வர் அறிந்து கொள்ள வேண்டும் என்ற கருணை உள்ளத்துடன் இயற்றப்பட்டவை. அவை: (1) தசகாரியம் (2) சன்மார்க்க சித்தியார் (3) சிவாச்சிரமத் தெளிவு (4) சித்தாந்தப் பஃறொடை (5) சித்தாந்த சிகாமணி (6)உபாய நிட்டை வெண்பா (7) நிட்டை விளக்கம் (8) உபதேச வெண்பா (9) அதிசய மாலை (10) நமச்சிவாய மாலை என்பன:2

''தசகாரியம்'' அம்பலவாண தேசிகர் இயற்றியருளிய நூல்; மெய்கண்டார் அருளிய சிவஞான போதம்; அருணந்தி சிவாசாரி யார் அருளிய சிவஞான சித்தியார்; உமாபதி சிவத்தின் புடை நூலாக மூன்றையும் நோக்கித் தாம் அருளிய நூல் என்கின்றார்;

''முன்னவன் வடநூல் நோக்கி மொழிந்தனன் போதம்; மற்றோன்
பின்னவன் அந்நூல் நோக்கிப் பெயர்த்தனன் சித்தியாக
அன்னவை யிரண்டு நோக்கி அறைந்தனன் புடைநூல்; மற்றோன்
சொன்னவை மூன்றும் நோக்கித் தொகுத்தனன் அவத்தை பத் தாய்''3

சித்தாந்தப் பஃறொடை

இது சைவ சித்தாந்தக் கருத்துக்களைப் பஃறொடை யாப்பில் எடுத்துரைக்கும் சீரிய நூல். இதன் முன்னமைநயந்த நமச்சிவாய துதிப் பாடல்கள் பொருள் நயமும், சித்தாந்த நுட்பமும் உடையவை;

''செய்யாப் பணிபலவும் செய்வேன் திருவுதைத்துச்
செய்யும் பணி சிறிதும் செய்தறியேன் - உய்யுநெறி
எத்தால் வருமடயேற்(கு) இன்பா வடுதுறைக்குள்
அத்தா நமச்சிவாயா''

திருவருளாலும், குருவருளாலும் துண்டப் பெற்ற பணி செய்தலே உய்யும் நெறி தருவதென்பதும், 'ஏகனாகி இறைபணி நிற்றலே' அது என்பதையும், அதுவே பேரின்பப் பெருவாழ்வு தருவது என்பதை யும் இத்திருப்பாடலில் அம்பலவாண தேசிக மூர்த்திகள் அழகுற உணர்த்தியுள்ளனர்.

''இருவினை யுற்றுக் கீழ்மே லிசையும்எவ் வுயிர்க்கும் மூன்றாய்
உருவினை யுற்றுக் கீழ்மே லுறும்வினை தன்பால் அன்பால்
வருவினை யாக்கித் தென்னாவடுதுறைக்கண் மகிழ்ந்த
திருவினை நமச்சிவாயன் திருவடிக் கமலம் போற்றி.''

''நல்வினை தீவினைப் பயன்களைத் துய்த்திட்ப் பெற்றுக் கீழ் மேல் பொருந்தும் எவ்வுயிர்களையும் ஆனாவதற்கு உருவம், அருவம், அருவுருவம் என்ற மூன்று திருமேனிகளை எடுத்துத் தன்பால் பொருத்தி நல்லின்பம் பெறச் செய்யும் நமச்சிவாய தேசிக மூர்த்திகள் திருவடித் தாமரைகளைப் போற்றுவோமாக'' என்ற பொருள் நலம் பொதிந்த இத்திருப்பாடல் ஓதி மகழ்தற்குரியது.

''கண்டக் கறையும் கண்ணுதலும் மாற்றி நெறித்
தொண்டர் குழாமென்னத் துலங்கியே - அண்டர் தொழும்
வேதாரணியத்தின் மெய் கண்ட. சந்ததிக்கோர்
ஞாதாவெனப் பேரும் நண்ணியே - ஓதாது
உணர்ந்தார்க்கு உலவாக் கிழி வழங்கி, ஒப்பில்
மணந்தாள் பசுக் குலத்தை மாற்றிப் - புணர்ந்த
திருவாவடுதுறை வாழ் தேசிகனா மென்றே
ஒருவாத் தொழிற்பேரும் உற்றே''

எனவரும் சித்தாந்தப் பஃறொடைப் பகுதியில் சிவ பிரானே தம் குருவாய் எழுந்தருளி உபதேசம் புரிந்த திறத்தை உளமுருகிப் பாடு தல் காணலாம். ★

உபாய நிட்டை வெண்பா:

மிகச் சிறந்த ஞான நூலாகிய இப் பண்டார சாத்திரம், 46 வெண்பாக் களை உடையது. ''நூற்சிறப்புப்'' பற்றிய இந்நூலின் இறுதி வெண்பா, இதன் தொகையையும், ஆசிரியர் திருப்பெயரையும் பின்வருமாறு உணர்த்துகின்றது:

''உபாய நிட்டை வெண்பா உரைத்தானாற் பத்தா(று)
அபாய நிட்டை வாராமல் ஆர்க்கும் - உபாய நிட்டை
வெண்பாவில் ஆவடு தண்டுறையை வெஃகினர்க்கு
நண்பாகும் அம்பலவா ணன்''1

''திருவாடுதுறையைச் சேர்ந்தோர் அனைவர்க்கும் நண்பாரும் அம்ப லவாண தேசிக மூர்த்திகள், ஒருவர்க்கும் தீங்கு சாராத படி, உபாய நிட்டை வெண்பா என்னும் இந்த நாற்பத்தாறு வெண்பாக்களை அருளினார்'' என்பது கருத்து.

எல்லாம் சிவன் செயல் என்றிருப்பார்க்கே இந்நூல் உபதேசிக் கத்தக்கது; இந்த உடலே சிவமாம் என்ற பரிணாம வாதிகளுக்கு இந்நூல் உரியதன்று என்பார்;

''சீவிக்கும் காயம் சிவனலவே யென்னுமலப்
பாவிகட்கு இந்நூலைப் பகரற்க - மேவும்
உயிரே செயலற் றொடுங்கும் போது ஈசன்
செயலே யென்பார்க்கே யுரைக்கச் செய்.''2

''குருடன் குருடனுக்குப் பூரண சந்திரனைக் காட்டியதுண்டா? கண் ணுடையானொருவன் கண்ணற்றவனுக்குக் காட்டத்தான் வழக்கம் உண்டா? ஆதலால் அது போல ஞானத்தைக் கேடற்ற ஞான நாட்டம் உடையார்க்கே நன்றாக உரைக்க'' என்பார்.

''நாட்டமற்றான் ஆங்கவன் போல் நாட்டமற்றார்க்கே, மதி
காட்டியதும் உண்டோவக் கண்ணுடையான் - நாட்டமற
வந்தார்க்குக் காட்ட வழக்குண்டோ? ஞானத்தை
நந்தா தவர்க்குரைக்க நன்கு.''3

குருடனுக்குக் குரடன் நிறைமதியைக் காட்ட முடியாதவாறு போல ஞான நாட்டம் இல்லாதார்க்கு ஞானத்தை ஊட்டற்க ஞானம் உடை யானுக்கே நன்கு உரைக்க என்ற கருத்து எத்துணை எளியது! சீரியது! நடைமுறைக்கு ஒத்தது!

உடற்பற்று நீங்கினால் சிவம் சாரும்; அதனால் மலபரிபாகமும், அதனால் மந்திர தேகமும், அதனால் சிவஞானமும், அதனால் ஞான தேகமும் ஒருங்கு தோன்றும்; உயிர் ஞானதேகியாய் நிற்கும் என்று அருளும் உண்மை, மறக்க வியலாத மெய்ப் பொருள் அன்றோ?

''ஆகமற்றால் அடைவதாகும் அரனாலு மல
பாகமுற்றால் மந்திரத்தின் பற்றாகும் - தேக
மனுவால் துறந்தறிவின் மன்னுமரன் ஞானத்
தனுவாகும் என்னத் தகும்''1

உயிர் பௌதிக உடலோடு கூடி உடலாயும், மந்திர சரீரத்தோடு கூடி அதுவாயும், சிவத்தோடு கூடிச் சிவமாயும் நிற்கும் என்ற கருத்துப் பொதிந்த திருப்பாடல் எவ்வளவு பெரிய அநுபவ உண்மையைத் தன்னகத்தே கொண்டுள்ளது!

ஊனாய்த் திரிந்தங்குழலும் ஒருகால்; மனுவே
தானாய்த் திரியத் தகுமொருகால் - கோனாகும்
நேயமே தானாக நிற்கும் ஒருகால் - உயிரின்
காயமே லுற்ற கடன்''2

உயிர் 'உடலுக்கு வேறானவன் யான்' என்று உணர வேண்டும்;

அவ்வாறு உணர்ந்தால் உடல் தொடர்பு (சரீர சம்பந்தம்) நீங்கும்; மலம் நீங்கும்; உயிர் சிவத்தைச் சார்ந்து சிவமாகும்; திருவருள் உயிரைச் சாரும். இந்த உண்மையை உணர்த்துவது பின்வரும் அழகிய பாடல்:

''சோதித்த காயத் துடக்கற்றால் தொல்லைமலம்
சேதித்த தாகுமெனச் செப்புநூல் - பேதித்த
ஆவியே தானால் அடையும் அரனடியும்
மேவியே நிற்கும் விரைந்து''3

நிட்டை விளக்கம்:

இருபத்தெட்டுத் திருப்பாட்டுக்களைக் கொண்டது 'நிட்டை விளக்கம்'; நூற்சிறப்புப் பற்றிய பாட்டு ஆசிரியர் பெயரையும்; பாட்டுத் தொகையையும் உணர்த்துகின்றது;

''நிட்டை விளக்கம் நிகழிருபா னெட்டையும் நஞ்
சட்ட மறுப்பதற்காய்ச் சாற்றினான் - சிட்டன்
திருவாவடு துறையான் சென்றடைந்தார்க் கெல்லாம்
அருளாகும் அம்பல வாணன்''4

ஆரவார நிட்டை உண்மை நிட்டை ஆகாது என்று நிட்டை விளக்க முதற்பாடலிலேயே வற்புறுத்துகின்றார்; உடற்பற்றை நீக்கி, உயிரை ஒடுக்கி, பாதத்துத் தன் செயலற்று அடங்கி இருக்கச் செய்து, உயிரைச் சிவமாக்குதலே உண்மை நிட்டையின் இலக்கணம் என்று தெளிவு படுத்துகின்றார்.1. மல பரிபாகமும் சத்திநிபாதமும் இன்றிச் சிவத்தைப் பெறலாம் என்று வேலையற்றுக் கண்மூடிக் கிடப்பது தானா நிட்டை என்று உண்மை உணர்த்துகின்றார்.2. உடற்பாசம் உள்ளவரையில் சிவலோகம் பாவனை சித்தியாது என்று தெளிவு படுத்துகிறார்.3. இவ்வாறே பொறியடக்கம் ஒன்றுமே சிவதரிசனத்திற்கு ஏதுவாகாது என்று அறிவுறுத்துகின்றார்.4. சித்தம் ஒழித்தல் ஒன்றுமே நிட்டை ஆகாது; சத்திநிபாதமும், மலபரிபாகமும், வினைக்கழிவும், ஒருங்கே அமைதல் வேண்டும் என்று உண்மை உணர்த்துவார்.5

''என்னிச்சை உன்னோடுனு மிச்சை உன்னிச்சையே மலத்தின்
தன்னிச்சை யுன்னிச்சை யென்னிச்சையாகத் தருவதுண்டேல்
அன்னிச்சை நீயற்று அருளிச்சையாக அடையுமந்த
மன்னிச்சையே நிட்டை என்றான் சிவாயநம மன்னவனே''6

ஆன்மா என்றும் சுதந்திரமற்றது ஆதலின் அதன் விருப்புயாவும் இறைவனுடைய விருப்பே; போக போக்கியங்களை விரும்பும் மலத்தின் காரியமாகிய இச்சைகள் இறைவனதும் அவனருள் நிற்கும் ஆன்மாவினுடையதும் ஆகாது; ஆதலால் நான் என்பது அற்றுத் திருவருள் இயக்க இயங்குமதே உண்மை நிட்டை என்று இப்பாட்டில் உணர்த்தப் பட்டது.

உண்மை நிட்டையாவது, சிவஞானமே வடிவாய் அவன் அருளில் தோய்ந்து நிற்கும் நிலை என்று உணர்த்தினார்.7. 'விழித்த கண் விழித்தபடியிருக்க, குருநாதன் உபதேசித்த உண்மை ஞானத்தால் உள்ளதை உள்ளவாறே உணர்ந்து, மனம் ஒன்றியிருப்பதே ஞான நிட்டையாம் என்று நமசிவாய மூர்த்திகள் உபதேசித்தார்' என்பார் பிறிதொரு பாடலில்.8

நிறைவுரை:

பண்டார சாத்திரங்களை ஓதி உணர்ந்து அநுபவம் பெறுதலே தக்கது; மெய்கண்ட சாத்திரக் கருத்துக்களை அநுபவமும் கலந்து, விளக்கும் விளக்க நூல்களே இவை. சைவ சித்தாந்த ஞானக் கருவூலங்களாகிய அருட்பெட்டகங்கள்.

1. திருவாசகம் - திருப்பாண்டிப் பதிகம் - பா 5
2. மேற்படி நூல் - தருமையாதீனப் பதிப்பு (1949) பக்.294
3. முத்திநிச்சயப் பேருரை - தருமையாதீனப் பதிப்பு

1. திரு.மு.அருணாசலம், ''ஸ்ரீகுருஞானசம்பந்தர்'', பக். 47-48

1. சிவ போகசாரம் - (தருமையாதீனப் பதிப்பு) 23
2. சிவஞான சித்தியார் - சுபக்கம் 282

1. சிவபோகசாரம் - 26
2. மேற்படி நூல் - 63
3. முத்திநிச்சயம் - 12
4. திரு.மு.அருணாசலம், ஸ்ரீகுருஞானசம்பந்தர், (1975) பக். 37

★ ''பண்டார சாத்திரம்'', திருவாவடுதுறை ஆதீனம் - (உபாய நிட்டை வெண்பா, நிட்டை விளக்கம்) 1964; முகவுரை - மகாவித்துவான். ச.தண்டபாணி தேசிகர்

1. மேற்படி நூல் - (1964) மகாவித்துவான். ச.தண்டபாணி தேசிகர் முகவுரை
2. குருபரம்பரை விளக்கம் (1981) திவாவடுதுறை யாதீனம் - பக்.63
3. மேற்படி நூல் - பக். 64

★ ''குருபரம்பரை விளக்கம்'', திருவாவடுதுறை ஆதினம், (1981) பக்.64

1. ''உபாயநிட்டை வெண்பா'', திருவாவடுதுறை ஆதீனம் (1964) - பா.47
2. மேற்படி நூல் - பா.46
3. மேற்படி நூல் - பா.44

1. உபாய நிட்டை வெண்பா - 40
2. மேற்படி நூல் - 35
3. மேற்படி நூல் - 18
4. நிட்டை விளக்கம் - 29

1. நிட்டை விளக்கம் - பா.1
2, மேற்படி நூல் - பா.2
3. மேற்படி நூல் - பா.3
4. மேற்படி நூல் - பா.5
5. மேற்படி நூல் - பா.11
6. மேற்படி நூல் - பா.16
7. மேற்படி நூல் - பா.17
8. மேற்படி நூல் - பா.18

LIFE FORCE

SWAMI VIGNANANANDA, PRANA YOGA CENTRE
CALIFORNIA - U.S.A.

I will explain to you for a few manutes the inner Life Force which you do have. The thoughts are the great Life Force. For one who does not know the way to use it properly, the thoughts become as dust. You have to know every thought, you have to recognize and remember about it. Then you become the Self. It means we do have another life inside - within us. This we call a Self. When one cannot understand his own thoughts, he has worries, problems, confusions, difficulties, sickness, weakness, over sleepiness - so many troubles. One who really recognizes what kind of thoughts he has, he becomes what we call a Self. This is the other life within us which we call the Life Force.

The Life Force, which you do have as you are recognizing the thoughts properly and acting properly for the thoughts, is granting you great energetic life. An extraordinary, powerful life, an everlasting joyful life. One who really recognizes the way to his own thoughts - that person always has beautiful balance. That's because the thoughts come from the mental and physical aspect. One who really recognizes about it all the time will never miss his own life.

For example, a student said "Swami-ji, I'm very fat, but I don't know what to do about it. Please give me any kind of explanation."

I said, "Oh my dear, you have to be carerful about the diet. The overeating plus oversleeping makes you more and more fat because certain nervous connections are made dull from overeating. Then gradually you feel to sleep more. Then you're starting another kind of worry. Altogether combining, you miss your life. This comes from thoughts - you don's care about your own thoughts, you see."

One's weakness internally makes a lot of bubblings called thoughts. But those thoughts will never help you. They give you more and more weakness, weakness, weakness. And how much you have weakness from thoughts which do not touch in your heart, or touch in your balance - that becomes more weakness - weak thoughts.

When you go on a boat or big ship on the ocean, speedily going on, you can see from the boat, peeping to see in the water, a million, million bubbles coming. The million milllion bubbles look so beautiful - like pure white cotton. But they won't stay. One who does not recognize or realize or understand that his own thoughts are like these bubbles, has more and more problems coming. One who really recognizes his own thoughts - that person really attains rejuvenation. That person never has any kind of sufferings or problems.

One who writes books recognizes his own true thoughts. The talkings, activities, spiritual experiences, spiritual practices - everything stays in his mind or in his knowledge. That's because he is always using the knowledge point. This we call Life Force. Another example - there are those who have a certain negative attitude that they do not change even after so many years. Why? Because they do not communicate with their own thoughts. They do know that if we are going to do these practices we can easily change. But they don't care seriously and they don't bother about it. "Well as it is. Take it easy", something like that. But one who really recognizes his own thoughts - that person is never missing the life to live on this earth.

How can we get it? First of all, relaxations and meditations. When you sit in a proper position to think of your own Self, then proper mental and physical balance comes to you. When the balance comes to you, then you are going to be entering the Self. Then everything combined, the thoughts become purer and purer. This is like filtering. The bubbling thoughts come under control from watching the thoughts. The thoughts become pure thoughts. One who does not filter the thoughts, one who does not care about the thoughts becomes a destroyer of his own life. He is missing the life. It means also for one who is really filtering the thoughts, concentrating the thoughts, the breath is coming very properly. In that way all kinds of diseases, sickness, weakness are all going to disappear.

So many people who do not know how to find their own thoughts turn to reading a lot of books. But for one who does not have the clear thoughts, the essence of the reading cannot stay with him. He has to come to that stage, that position, where the essence of the books can easily touch his heart. From that position also he can easily communicate, easily understand the thoughts - what kind of thoughts and how to make sure to stay with the meaning of the thoughts. This is called the Life Force.

Every thought is extremely alive. Every activity is extremely alive. For one who really corresponds and communicates, if he concentrates on his own thoughts, then he can find how much energy, power and strength he does have. But we don't care for ourselves. We just depend upon the weakness of the thoughts, thoughts of the weakness. Then we are missing our real health, real happiness, real joy. And what happens is a lot of sickness, worries and problems - all affecting us like demon - devils, endlessly going on to our life's end.

Life Force - it's of great importance to know that it means exactly the thoughts. We have to filter the thoughts, recognize the thoughts. One who does not meditate or does not communicate with the spiritual, who reads anatomy books to find out about the body. That reading is just for the time being and is also like a dream. But when you filter your own thoughts, you can know everything inside - how the body is functioning, what's going on you know that. In that way you can easily develop the one true life, true path, true direction. Then the weakness of the dullness will disappear. This we call the Life Force.

I simply say for anybody or everybody it is not so difficult. The weak thoughts make you to think it is difficult. If you really think - the thoughts come from where? Do thoughts really help us? How can we find joy - how can we find knowledge? If you really work on it, then you can really find your own thoughts - true thoughts.

For that the practices are very important, especially meditation, relaxation - all completely communicating mind and body together. Then success comes according to everyone's own judgement, own way of controlling that weakness from thoughts. In three to six months you can get it exactly.

Examine the spiritual gaints - all come from normal life. Other people wonder how spiritualists can be so different. It's because we are always regulating our thoughts - controlling, regulating. In this way the thoughts are going to be true. Regulating means you do not depend upon your own thoughts. If you depend upon your own thoughts, this makes more and more bubbles coming - weakness. If you don't depend upon your own thoughts, you are going to be concentrating upon and regulating your thoughts. Then really you are going to be affecting the Soul - Self. This we call the Life Force.

I heard so many people telling, "I'am very, very busy Swami-ji." Why do they talk like that? The reason is they are too much involved with the thoughts. But they do not concentrate upon the real true thoughts. Lots of thoughts and ideas buddbling up-they are just completely involved with them. So they are missing the true point and true ideas. Also many people are talking about so many subjects - in so many directions they are talking. Finally they don't know what they are saying. This is time wasting. But one who is really following to learn can find, from the many thoughts, the true thoughts. Touch the true thoughts and that will really wake you up to know the true Life Force.

சின்னச் சின்னத் தகவல்கள்

★ ஆழ்வார் திருநகரில் நம்மாழ்வார் கோயில் ஒரு புளிய மரத்தடியில் உள்ளது. இதற்கு உறங்காப் புளி என்று பெயர். இம்மரம் காய்க்கும். ஆனால் காய் பழுக்காது.


★ திருச்செங்கோடு இறைவன் பெயர் உமையொருபாகமுடையான். அம்மன் பெயர் பாகம்பிரியாள். இந்த அர்த்தநாரீஸ்வர வடிவுக்குப் பாதி வேட்டியும், பாதி புடவையுமாக நெய்யப்பட்ட ஆடை அணிவிக்கப்படுகிறது.

★ திருவையாறுக்கு அருகிலுள்ள திங்களூரில் பங்குனி உத்திரத்தன்று சந்திர ஒளி சிவலிங்கத்தின்மீது படும்படியாகக் கோயில் கட்டப்பட்டுள்ளது.

★ தேவக்கோட்டையிலுள்ள ஒரு கோயிலில் விநாயகர் காலில் சிலம்புடன் காணப்படுகிறார். இவருக்குச் சிலம்பணி விநாயகர் என்று பெயர்.

— ஆர். ராமசுப்பிரமணியன்.





திருக்குறளில் சிவனியம்

சைவப்பேரறிஞர் மகாவித்துவான்

சி. அருணைவடிவேல் முதலியார்

முன்னுரை:

''வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு''

என்ற தேசிய கவி சுப்பிரமணிய பாரதியார் சொற்படி **'திருக்குறள்'** - என்னும் தமிழ் நூல் இன்று உலகம் போற்றும் நூலாய் விளங்குகின் றது. அதற்குக் காரணம் அது தான் கூறும் பொருள்களைப் பலரும் ஏற்கத் தக்க வகையில் பொதுப்படக் கூறுதலேயாகும்.

'ஒருவரோடு ஒருவர் மாறுபட்டு வாதிடும் சமய வாதிகள் கூடத் திருக்குறளை ஒருங்கே ஏற்கின்றார்கள்' - என்பதை,

**''ஒன்றே பொருள்எனின், வேறென்ப; வேறென்னின்
அன்றென்ப ஆறு சமயத்தார்; - நன்றென்ன
எப்பா லவரும் இயைபவே வள்ளுவனார்
முப்பால் மொழிந்த மொழி.''**

என்னும் திருவள்ளுவர் மாலை வெண்பாவால் அறியலாம்.

இதனால் திருக்குறளை ஒரு சமயம் சார்ந்த நூலாகச் சொல்ல இயலாவிடினும் சமய நோக்கில் அந்நூலை நோக்குகின்றவர்கள் யாதேனும் ஒரு சமயத்தை அதன் உள்ளுறைப் பொருளாகக் கூறியே வருகின்றனர்.

இந்நிலையில் பலர் திருக்குறளைச் சமணம் சார்ந்த நூலாகக் கருதுகின்றனர். அதற்குக் காரணம் அதில் கொல்லா நோன்பு தலை யாயதாக வற்புறுத்தப்படுதலேயாகும்.

மணிமேகலைக் காப்பிய ஆசிரியராகிய **சீத்தலைச் சாத்தனார்** ''தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள் - பெய்யெனப் பெய்யும் மழை'' என்னும் குறட்பாவினை அப்படியே தமது காப்பி யத்துள் எடுத்துக்கூறி, அதனைச் செய்த திருவள்ளுவரை, **''பொய் யில் புலவன்''** எனப் பாராட்டினார்.★ அதனால், 'அவர் திருக்குற ளையும் பௌத்தம் சார்ந்த நூலாகக் கொண்டிருந்தார் - என ஊகித்தல் கூடும். அதன்படி பார்க்கும் பொழுது திருக்குறளைச் சமணம் சார்ந்த நூலாகக் கருதுவோர் கருத்துப் பிழையானதாகிவிடும்.

'திருக்குறளில் கொல்லா நோன்பு சிறப்பித்துப்பேசப்படுவதைச் சீத்தலைச் சாத்தனார் அறியாதவர்' எனக் கூற இயலாது. அறிந்திருந் தும் அவர் அவ்வாறு கருதினமையால், 'கொல்லா நோன்பு சமண சமயத்திற்குத்தான் உரியது' எனக் கருதுவதை அவர் ஏற்கவில்லை என்று தெரிகின்றது. எனினும், 'சமணர், பௌத்தர்' - என்னும் இருசாராருள் **'கொல்லா விரதிகள்'** - என்பது சமணர்களுக்கே உரிய பெயராய் வழக்கத்தில் காணப்படுகின்றது.

திருக்குறளின் சிறந்த உரையாசிரியராகிய பரிமேலழகர், திருக் குறள் காமத்துப்பாலில் போந்த **''தாமரைக் கண்ணான் உலகு''**★ என்னும் தொடருக்கு,

''ஐம்புல நுகர்ச்சியைத் துறந்த
தவயோகிகள் எய்தும் செங்கண்மால் உலகம்''

எனப் பொருள் கூறி, அவ்வுலக இன்பத்தை **''நிரதிசய இன்பம்''** - என்றும் குறித்தார். ஆதலால் அவர் திருக்குறளை முற்றிலும் வைண வம் சார்ந்த நூலாகக் கருதினமை வெளிப்படை.

ஆயினும் அவர் 'கடவுள் வாழ்த்து' அதிகாரத்தில் கடவுளை எண் குணத்தான் எனக் கூறியதில் எண்குணங்களைச் சைவாகமத் தில் உள்ளவற்றையே எடுத்துக் கூறியது. 'சமண சமயம் கூறும் எண்குணங்கள் அல்ல' என மறுத்தற் பொருட்டேயாம். 'சைவாகமங் கள் கூறும் எண்குணங்கள் வைணவத்திற்கு ஏலாதவை அல்ல' என் பது அவர் கருத்து.

இன்னும் **'இறைமாட்சி'** அதிகாரி முகவுரையில், **''இறை -** என்பது கடவுளுக்கு உரிய பெயராய் இருக்க, அதனைத் திருவள்ளு வர் அரசனுக்கு ஏன் கூறினார்'' - என்னும் வினாவை எழுப்பிக் கொண்டு.

''உவகபாலர் உருவாய் நின்று
உலகம் காத்தலின் - இறை - என்றார்''

என விடை கூறி,

— திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேனே என்னும் - என்று பெரியோரும் பணித்தார்'' - என நம்மாழ்வார் பாடலை மேற்கோளாகக் காட்டினார்.

உலகபாலராவார் திக்குப்பாலகர்களாயினும் அவர்கள் இறை வன் ஆணையாலே உலகபாலராய் உள்ளனர்' என்பது கருத்து. அதனால், ''இறைவன் தனது காத்தல் தொழிலைத் திக்குப் பாலகரி டம் வைத்து நடத்துதல் போல, மண்ணுலகில் அரசனிடத்திலும் வைத்து நடத்துகின்றான்; அதனால் அரசனும் - இறை - எனப்படுகின் றான்'' என்பதாம்.

இங்ஙனம் கூறிவந்தவற்றில், ''உலகம் காத்தலின் - இறை - என்றார்'' - என்பது முதன்மையாக நோக்கத் தக்கது. அதனால், ''காப்பவன்தான் இறைவன்; காப்பவன் திருமாலேயன்றிப் பிறர் அல் லர்'' என்பது அதில் தொக்கு நிற்கின்றது.

'இறை மாட்சி' - அதிகாரக் குறள்களில்

**''முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறை என்று வைக்கப்படும்''**

என்னும் குறள் ஒன்று. இதில், **''காப்பாற்றும் மன்னவன் இறை என்று வைக்கப்படும்''** - என்பதை அவர் (பரிமேலழகர்) தமது உரையில் அவர், (அரசன்) ''பிறப்பால் மகனேயாயினும் செயலால் - மக்கட்குக் கடவுள் - என்று வேறு வைக்கப்படும்'' - என உரைத்து, ''வேறு வைத்தல், மக்களிற் பிரித்து உயர்த்து வைத்தல்'' எனத் தந்த விளக்கத்தை மேற்காட்டிய முகவுரையோடு சேர்த்துப் பார்க்கும் கொள்கைக்கு வலிய சான்றாகக் கொண்டார் என்பது அக்குறளின்

★ 'சைவம்' என்பதன் மறுபெயராகச் சென்னைத் தெய்வத்தமிழ் மன்றத்தார் ஆள்வது **'சிவனியம்'** என்பது. அதனால் அவர்கள் விருப்பத்திற்கு இணங்க அமைந்தது இத்தலைப்பு.

★ காதை - 22. 59 - 61.

★ திருக்குறள் - 1103 உரை.

பொழுது இனிது விளங்கும்.

'காத்தல் தொழில் பற்றி அரசனை இறைவனாக உபசரித்தல் சைவத்திற்கும் ஏற்புடையதே' - என்பது,

''**அரசனும் செய்வது ஈசன் அருள்வழி**'' என்னும் **சிவஞான சித்தியாரால்** உணரலாம்.★

''மன்னானாய்; மன்னவர்க்கோர் அமுத மானாய்''★

''மண்ணாளும் மன்னவர்க்கு மாண்பாகி நின்றானை''★ எனச் சைவத் திருமுறைகளிலும் சொல்லப்பட்டது.

அரசனைத் திருவள்ளுவர் 'இறை' எனக் கூறியதன் காரணத்தை அவர் (பரிமேலழகர்) விளக்கிய விளக்கம் பற்றி நாம் யாதும் கூற வில்லை. ஆயினும், 'காத்தல் தொழிலை உடைமையே இறைத் தன்மை' என வரையறுத்துக் கொண்டு, அவ்வரையறையின்மேல் ''**தாமரைக்கண்ணான் உலகு**'' எனத் திருவள்ளுவர் கூறியது'' - வீட்டுல கமாவது அதுவே - என்னும் கருத்தினால்தான்'' என அவர் (பரிமேல ழகர்) தாம் அத்தொடருக்கு உரைத்த உரையை நியாயப்படுத்தியிருப் பாராயின் அஃது ஏற்கத் தக்கது ஆகாது. ஏனெனின்,

''**மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்**'' என்னும் குறளில், ''திருவள்ளுவர் - பூமேல் நடந்தான் - எனக் குறிக்கப்படுகின்ற அருகக் கடவுளைத்தான் கூறினார்'' - என உரைப்பார் உரையை, 'அது மெய்யுரையாகாது' என்பது பட, ''இதனை, - பூமேல் நடந்தான் - என்பதோர் பெயர் பற்றிப் பிறிதொரு கடவுட்கு ஏற்றுவாரும் உளர்'' என மறுத்துத் தாம் அதற்கு வேறு உரை கூறினார்.

மறுப்பு வெளிப்படையாக இல்லை என்றாலும், ''திருவள்ளுவர் எந்த ஒரு சமயக் கடவுளையும் தமது நூலில் பெயர் குறித்துக் கூற நினைக்கவில்லை. அதற்குக் காரணம் அவர் பொது நூல் செய்யக் கருதியதேயாகும். அதனால் அவரது நூலுக்கு அவர் ஒரு சமயக் கடவுளைப் பெயர் குறித்துக் கூறியதாக உரைக்கும் உரை உரையா காது'' என்பது குறிப்பால் தோன்ற வைத்துப் போயினார்.

திருக்குறளின் முதற் பாட்டில் திருவள்ளுவர் கடவுளை, ''ஆதி பகவன்'' எனக் கூறியதில், ''ஆதி'' என்றது ஆதி சக்தியை. அதனால் ''பகவன்'' என்றது, அவளைத் தனது சக்தியாக உடைய சிவபெருமானையே - எனச் **சிவஞான யோகிகள்** தமது 'சோமேசர் முதுமொழி வெண்பா' நூலின் முதற் செய்யுளில் கூறினார்.

திருக்குறளில் ''மலர்மிசை யேகினான்'' என்றது, பூமேல் நடந்தானைக் கூறியதே - என வாதிடப்படுமானால், அதில், ''ஆதி பகவன்'' என்றது ஆதி சக்தியை உடைய சிவபெருமானையே குறிக்கும் - என்னும் சிவஞான யோகிகள் வாதமே வலியுடையதாய் வெற்றி பெறும்.

இவையெல்லாம் நிகழாதபடி கடவுள் வாழ்த்தில் நூலுக்கு ஏற்ப உரையைப் பொதுவாகவே கூறிச் சென்ற **பரிமேலழகர்**, காமத்துப் பாலில் ''தாமரைக் கண்ணான் உலகு'' - என்றதற்கும், ''மிக்க இன்பத்தை யுடைய மாயோன் உலக இன்பம்'' - எனப் பொதுவாக உரை கூறிப் போதலே ஏற்புடையதாகும். ஏனெனில், 'வீட்டுலகம்' என ஓர் உலகம் சமயங்களில் சொல்லபடுமாயினும் 'அது மாயோன் உலகமே' என வைணவமும், 'சிவ லோகமே' எனச் சைவமும், 'பொன்னெயில் வட்டம்' எனச் சமணமும், 'துடித லோகம்' எனப் பௌத்தமும் கூற, அவைகளுள் ஒன்றை மட்டுமே திருவள்ளுவர் வீட்டுலகமாகக் கூறினார் எனச் சுட்டி யுரைத்தல் அவருடைய நடைக்கே ஏலாத ஒன்றாம்.

இனி, கடவுளது தொழிலை **படைத்தல், காத்தல், அழித்தல்** - என மூன்றாகக் கூறுதல் சைவ நூல்களில் மட்டுமன்றி, வைணவ நூல்களிலும் பரவலாகவே காணமுடியும். 'அதனால் கடவுளாவான் முத்தொழிலுக்கும் முதல்வன்' என்பதே சைவம், வைணவம் இரண்டிற்கும் கருத்து. அதனால் முத்தொழில்களில் ஒருவனை ஒரு தொழிற்கே உரியவனாகக் கூறினால் அவன் முதற் கடவுளாகாது, முதற்கடவுளது ஆணைவழி நின்று அத்தொழிலை நடத்தும் அதிகார மூர்த்தியே ஆவான். அந்நிலையில் வைணவம் பரம ருத்திரர்களை அதிகார மூர்த்திகளாகக் கூறியபோதிலும் அதற்கு மாறாகச் சைவம் பிரம விட்டுணுக்களையே அதிகார மூர்த்திகளாகக் கூறும். இதனை,

''**விரைக் கமலத்தோன் மாலும் ஏவலால் மேவினோர்கள்,**
புரைத்ததி கார சத்தி புண்ணியம் நண்ண லாலே''

என்னும் சிவஞான சித்தியாரால் அறியாலாம்.

'சிவஞான சித்தியார் நுதலிய பொருள் சைவாகம ஞானபாதப் பொருள்' - என்பது,

''....... மெய்கண்டான் நூல்
சென்னியிற் கொண்டு, **சைவத் திறத்தினைத்**
தெரிக்கல் உற்றாம்'' -

என்னும் அதன் சுபக்கப் பாயிரத்தால் விளங்கும்.

''திருக்குறட் கடவுள் வாழ்த்தில் திருவள்ளுவர் குறித்த எண்குணங்கள் யாவை'' என்னும் வினாவிற்குச் சைவ சமயம் கூறும் எண்குணங்களை விடையாக் கூறி,

''**இவ்வாறு சைவாகமத்துக் கூறப்பட்டது**'' என உரைத்த அவரை (பரிமேலழகரை) 'சைவாகமப் பொருளை அறியாதவர்' எனக் கூற இயலாது. இங்ஙனம் மாற்றுக் கருத்துக்குள் பல இருத்தலை அறிந்திருந்தும் அவர் ''தாமரைக் கண்ணான் உலகு'' என்பதற்கு வைணவ உரையே உரையாகக் கூறியது ஏற்புடைத்தாகாது.

இனி, ''திருவள்ளுவர் ஒரு குறளில்,★ ''**அடியளந்தான் தாயது**'' - என மாயோன் உலகை அளந்த கதையைக் குறித்தலால் அவர் வைணவ மதத்தினர்'' - எனச் சிலர் கூறுவர்.

பரிமேலழகர் அது பற்றி விரிவு ஏதும் கூறாவிடினும்,

''தன் அடியளவானே எல்லா
உலகையும் அளந்த **இறைவன்**''

எனக் கூறினார்.

புராணக் கதைகள் எந்தச் சமயத்தைச் சார்ந்தனவாயினும் எவையேனும் சில பயன் தோன்றுமாயின் எந்தப் புராணக் கதையையும் எவரும் எடுத்துக்காட்டுதல் இயல்பே. அஃதே பற்றி அவர்களை அந்தச் சமயத்தவராக அறுதியிட்டு விட இயலாது.

''**கூற்றம் குதித்தலும் கைகூடும்**'' என்னும் குறளில் மார்க்கண்டேயர் வரலாறு குறிக்கப்பட்டதைப் பரிமேலழகர் கூறாது போயினும், **மணக்குடவர்** கூறினார். கௌதம முனிவரால் இந்திரன் சாபம் எய்திய கதையைத் திருவள்ளுவர் குறித்தார்.★

எனவே, ஒருவர் ஒரு புர்ராணக் கதைகளை எடுத்துக் காட்டுதல், 'அவரை எந்தச் சமயத்தவர்' என அறிவதற்கு வழியாகாது.

ஆகவே திருக்குறளில் சமய வாய்ப்பாடுகள், புராணக் கதைகள் இவை பற்றி நோக்காமல் கொள்கை பற்றி நோக்குதலே நேரிதாம்.

சைவ சித்தாந்த சாத்திரங்கள் திருக்குறளை அதன் பொருள்

★ சுபக்கம் - சூ - 2.32.

★ திருமுறை - 6.95.7

★ தருவாசகம் - திரு (அம்மானை - 10)

★ திருக்குறள் - 610.

★ திருக்குறள் - 269, 25.

பற்றி மேற்கோளாகக் காட்டியுள்ளன. அவை வருமாறு:

''சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின்'' என்றமையால்
சார்புணர்தல் தானே தியானமுமாம்; - ''சார்பு
கெடஒழுகின்'' நல்ல சமாதியுமாம், கேதப்
படவருவதில்லை வினைப்பற்று.

''வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை'' என்றமையால்
வேண்டின் அஃது ஒன்றுமே வேண்டுவது; - வேண்டின் அது
''வேண்டாமை வேண்டவரும்'' என்றமையால்
வேண்டிடுக வேண்டாமை வேண்டுமவன்பால்.★

**''தலைப்பட்டார் தீரத் துறந்தார்; மயங்கி
வலைப்பட்டார் மற்றையவர்''** என்று - நிலைத்தமிழின்
தெய்வப் புலமைத் திருவள்ளுவர் உரைத்த
மெய்வைத்த சொல்.★

இவற்றால் அந்நூல்கள் திருக்குறளைச் சைவ நூலாகக் கருதி னமை தெளிவு.

திருவள்ளுவர் வரலாறாகச் சொல்லப்பட்டுவரும் பழைய கதையில் அவர் ஒரு சமயம் சொல்லிய வெண்பாவாகச் சொல்லப்பட்டது.

**''பூவில் அயனும், புரந்தரனும் பூவுலகைத்
தாவி அளந்தோனும் தாம் இருக்க, - நாவில்
இழைநக்கி நூல்நெருடும் ஏழை அறிவேனோ
குழைநக்கும் பிஞ்ஞகன்றன் கூத்து''**

என்பது. இவ்வெண்பாத் திருவள்ளுவரைச் **சிவநெறிச் செல்வராகக்** காட்டுகின்றது.

சைவர்கள் திருவள்ளுவரை, நாயனாராகக் குறிப்பிடுவர்.

அவரது திருவுருவச் சிலை முதலியன **சிவவேடப் பொலிவுடன் கூடியதாகவே** வைத்து வழிபடப்படுகின்றது.

இன்னோரன்ன பல காரணங்களால் திருவள்ளுவரைச் சிவநெறியாளராகவும், அவரது நூலைச் சைவ நூலாகவும் கூறுதல் இன்று தோன்றுகின்ற ஒரு புதுச் செய்தியாகாமை விளங்கும்.

காஞ்சிபுரம் திரு க.வச்சிரவேல் முதலியார் அவர்கள் எழுதிய ''திருக்குறளின் உட்கிடை சைவசித்தாந்தம்'' என்னும் நூல் முன்பு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் வெளிவந்துள்ளது.

இவ்விடத்தில் ஒன்றை நினைவு கூர்தல் வேண்டும். அஃதாவது, ஓரிடத்தில் பரிமேலழகர்,

**''எல்லா நூல்களினும் நல்லன
எடுத்து, எல்லார்க்கும் பொதுப்படக்
கூறுதல் இவர்க்கு இயல்பு''★**

எனக் கூறியபடி எந்த ஒரு மதக் கொள்கைகளிலும் சிறந்தவற்றை வலியுறுத்திக் கூறுகின்ற **வள்ளுவர்** பெருமான் அம்மதங்களில் உள்ள பொருந்தாக் கொள்கைகளையும் ஆங்காங்குக் குறிப்பிடத் தவறவில்லை என்பது.

அம்முறையில் பார்க்கும் பொழுது **''எண் குணத்தான்''** என்பது முதலாகச் சைவ சமயக் கொள்கைகள் பலவற்றை எடுத்துக் கூறி வலியுறுத்திய அவர் அதில் உள்ள பொருந்தாக் கொள்கையாக ஒன்றையும், ஓரிடத்திலும் குறிப்பிடவில்லை - என்பது இங்கு நாம் கோடிட்டுக் காட்ட விரும்பவது.

சமண பௌத்த மதங்கள் கடவுள் உண்மை கொள்ளாத மதங்கள். திருவள்ளுவர் தமது நூலில் முதலிற் கூறியது கடவுள் வாழ்த்து.

காலம் சென்ற **திரு. வ.உ.சி.** அவர்கள் ஏதோ ஒரு போக்கில், ''திருக்குறளின் பாயிர அதிகாரங்கள் திருவள்ளுவரால் செய்யப்பட்டன அல்ல'' - எனக் கூறினாராயினும் திருவள்ளுவரை அவர் கடவுட் கொள்கை இல்லாதவராகக் கூறவில்லை. கடவுளது சிறப்பை நூலுட் கூறியிருப்பதாகவே கூறினார். அதனால் அது பற்றி இங்கு ஆராயத் தேவையில்லை.

கடவுள் உண்மையைக் கொள்ளாமையால் சமண பௌத்த மதங்கள், ''உலகம் ஒருவனால் படைக்கப்பட்டது'' என்னும் கொள்கையை ஏற்பதில்லை. திருவள்ளுவர் தமது நூலின் தொடக்கத்திலேயே

''ஆதி பகவன் முதற்றே உலகு''

என்பதனால், ''ஆதி பகவன் இல்லையேல், உலகம் இல்லை'' எனக் கூறினார். அதற்கு அவர் எடுத்துக் காட்டிய உவமை, ''அகர உயிர் இல்லையேல், எழுத்து எதுவும் இல்லையாதல்போல'' என்பது.

**''இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்''.★**

என்னும் குறளில் உலகம் ஒருவனால் இயற்றப்பட்டதாய்க் கூறினார்.

இவை சமண பௌத்தங்கட்கும், அவற்றொடு ஒப்ப **உலகாயதம், மீமாஞ்சகம், சாங்கியம்** ஆகிய, கடவுட் கொள்கை இல்லாத மதங்கட்கெல்லாம் மறுப்பாய் அமையும்.

**''உறங்கு வதுபோலும் சாக்காடு; உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு''**

என்னும் குறள், **''விழிப்பவனாவான் முன்பு உறங்கியவனே ஆதல் போலப் பிறக்கும் உயிர் எதுவும் முன்பு இறந்த உயிரே''** - எனக் கூறும் முகத்தால், ''முன்பிறப்பு, மறுபிறப்பு இல்லை'' - எனக் கூறும் மதங்கட்கு மறுப்பாய் அமைந்தது.

**''அற்றார் அழிபசி தீர்த்தல்; அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி''**

**''இலர்பலர் ஆகிய காரணம், நோற்பார்
சிலர்; பலர் நோலா தவர்''**

**''உயிர் உடம்பின் நீக்கியார் என்ப, செயிர்உடம்பின்
செல்லாத்தீ வாழ்க்கை யவர்''**

**''அறத்தாறு இதுஎன வேண்டா; சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தா னிடை''★**

என்னும் குறள்கள்'', - **அறம், மறம்** (புண்ணியம், பாவம்) என்பன சில இல்லை; அவை வெறும் பூச்சாண்டிப் பேச்சு'' என்பார்க்கு மறுப்பாகும்.

''பெற்றாற் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு''

''செல்விருந் தோம்பி விருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு''

''அடக்கம் அமரருள் உய்க்கும்; அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்''

★ திருக்களிற்றுப்படியார் - 34, 40.

★ நெஞ்சுவிடு தூது - காற்றி - 24, 25

★ திருக்குறள் - 322 - உரை

★ திருக்குறள் - 1062.

★ திருக்குறள் - 339, 226, 270, 330, 39.

''உண்ணாமை உள்ளது உயிர்நிலை; ஊன் உண்ண
அண்ணாத்தல் செய்யாது அளறு''

''அருள்சேர்ந்த நெஞ்சினார்க்கு இல்லை, இருள்சேர்ந்த
இன்னா உலகம் புகல்''★

என்னும் குறள்கள், ''துறக்கம் இல்லை, நரகம் இல்லை, அவைகள் வெறுங் கற்பனைகள்'' - என்பவர்கட்கு மறுப்பாகும். இவை அனைத் திற்கும் பொதுவாகத் திருவள்ளுவர்.

''உலகத்தார் உண்டென்பது இல்என்பான் வையத்து
அலகையா வைக்கப் படும்''★

எனத் தொகை மறுப்பு ஒன்றைக் கூறியுள்ளார்.

இங்ஙனமாகத் திருவள்ளுவர் கூறிவந்த மறுப்புக்கள் பலவற் றில் யாதொன்றிற்கும் **சைவம், வைணம்** என்னும் இரண்டும் இலக்கு ஆகாமை குறிப்பிடத் தக்கது.

வினைக் கொள்கை:

வினைக்கொள்கை, அல்லது **ஊழ்க்கொள்கை** சமண சமயத் தில் தலையாயது. பௌத்தமும் அதனைத் தழுவியுள்ளது. சைவ வைணவங்களிலும் அக்கொள்கை குறிப்பிடத் தக்க ஒன்றாய் இருப்பி னும் அதனைச் சமண சமயக் கொள்கையாகவே பலர் கருதுகின்றனர். அவர்கள் அது பற்றிய அடிப்படைக் கொள்கையை எண்ணிப் பார்ப் பதில்லை.

சமண சமயத்தில்: வினையே முதல்வன்; கருத்தா. அதனால் சுதந்திரம் உடையது. தானே தன்னைச் செய்தவனைத் தேடிச் சென்று அவனுக்குத் தன் பயனைக் கொடுக்கும். வினையை யாராலும் விலக்க முடியாது. 'கடவுள்' என்று ஒருவன் இருப்பினும் அவனும் வினைக்கு உட்பட்டவனே. பௌத்தமதக் கொள்கையும் ஏறக் குறைய இதுதான்.

சைவத்தில் வினை கருத்தா அன்று: இறைவனே கருத்தா. அதனால் வினை சுதந்திரம் உடையது அன்று, கருத்தா செலுத்திய வாறே செல்வது.

மேலும் வினையாவது, இறைவன் வகுத்த ஒரு நெறிமுறையே யன்றி இயற்கையாய் அமைந்தது அன்று. இதனை,

''இவ் ஆன்மாக்களுக்கு இருவினை முதல்வன்
ஆணையின் வரும்... அவை அவனது
ஆக்கினை ஆகலான்''★

என்னும் சிவஞான போதத்தால் அறியலாம்.

இது வைணவத்திற்கும் பொருந்தும். என்றாலும் அங்கு இது போலத் தெளிவாக எடுத்துச் சொல்லப்படவில்லை.

திருவள்ளுவர்,

''ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்''

எனக் கூறினாராயினும் அதனை அவ்வதிகாரத்திலே

''வகுத்தான் வகுத்த வகை''

எனக் கூறுவதையும் பார்க்கின்றோம்.

சைவ வைணவ சமயங்கள் ''விலக்கலாகாத வலிமையை உடைய வினையை விலக்குவதற்கு, அல்லது நீக்குவதற்குக் கட வுளை வழிபடுவது ஒன்றே வழி'' - எனக்கொண்டு,

''கடவுளை வணங்கினால் வினை நீங்கும்; வினை நீங்கும்'' - எனக் கூறாத இடமே இல்லை எனலாம். எனவே, வினைக் கொள்ளை பற்றி அடிப்படையை நோக்கினால் சமண பௌத்தங்கள் சைவ வைணவங்களினின்றும் பெரிதும் விலகிப் போதலை உணர லாம். திருவள்ளுவர்,

''இருள்சேர் இருவினையும் சேரா, இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு''★

என்றார். இது சமண பௌத்தங்கட்குச் சிறிதும் பொருந்தாது வேறு நிற்பதாகும்.

கொல்லா நோன்பைச் சமண சமயம் உண்மையில் வாழ்க்கை யில் கடைப்பிடிக்க முடியாத அளவு பெரிதுபடுத்திக் கூறியபோதி லும் அதனை உண்மையில் கடைப்பிடிக்கும் அளவிற்குச் சைவ வைணவங்கள் வற்புறுத்தியே வருகின்றன. அதனால் அந்த நோன் பைத் திருவள்ளுவர் சிறப்பித்துக் கூறுதல் பற்றியே அவரே அச்சம யத்தவராக அறுதியிடுதல் இயலாது.

சமண சமயத்தில் கொல்லா நோன்பிற்கு மேற்பட்டதாக எதுவும் இல்லை. அதனால் அஃது அதனை மிகைப்படுத்திக் கூறுகின்றது. சைவ வைணங்களில் கொல்லா நோன்பிற்கு மேலாகக் கடவுட் கொள்கை இருத்தலால் அதனையே அவைகள் மிகுதியாகக் கூறுகின் றன.

திருவள்ளுவரும் கடவுட் கொள்கையை வலியுறுத்திப் பேசுத லைப் பார்க்கின்றோம்.

மணிமேகலை ஆசிரியர் திருவள்ளுவரைப் பௌத்த சமயத்தவ ராகக் கருதிய போதிலும் திருவள்ளுவர் பெரிதும் கடிந்து ஒதுக்கிய புலால் உண்டலை அவர் அக்காப்பியத்தில் **ஆதிரை பிச்சையிட்ட காதையில்** உடன்பட்டுக் கூறினார்.

''ஓர் உயிரை ஒருவன் தான் கொன்றுதான் அதன் ஊனைத் தின்னலாகாது, பிறன் கொன்று கொடுத்த ஊனாயினும், தானாக இறந்ததன் ஊனாயினும் உண்பதில் பாவம் இல்லை. கொலைப் பாவம் கொன்றவனுக்குத் தான். தின்பவனுக்கு இல்லை'' - என்பது புத்த மதம்.

திருவள்ளுவர் **'கொல்லாமை'** அதிகாரத்தை மட்டும் கூறிப் போகவில்லை, **'புலால் மறுத்தல்'** - அதிகாரத்தையும் உடன் கூறி னார்.

''கொல்லான், புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்''

''தினற்பொருட்டாற் கொல்லாது உவகெனின் யாரும்
விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல்''

என்னும் குறள்கள் நோக்கத் தக்கன.

இனிச் சாத்தனார் மணிமேகலையில் எடுத்துக் காட்டிய திருக்கு றள் பௌத்த சமணங்கட்கு அரண் செய்வது அன்று. எங்ஙனம் எனின், **கடவுள் வேறு, தெய்வம் வேறு** பௌத்த சமணங்கள் கடவுளைத்தான் 'இல்லை' என்கின்றனவேயன்றி, தெய்வத்தை 'இல் லை' என்று சொல்லவில்லை.

சமண பௌத்த காப்பியங்களில் தெய்வங்கள் பல ஆங்காங்கு இடம் பெறுதலைக் காணலாம்.

'கடவுள்' எனப்படுவான் ஒருவனே யன்றிப் பலர் இல்லை. ஆயினும் தெய்வங்கள் பலவாகும். தெய்வங்களைத்தான், **'தேவர்**

★ திருக்குறள் - 58, 86, 121, 255, 243, 850

★ சூ. 2. அதிகரணம் - 2.

★ திருக்குறள் - 380, 377, 5.

கள்' எனப் பலரும் குறிக்கின்றனர்.

தொல்காப்பியர் தெய்வங்களை நிலக்கருப் பொருள்களுள் ஒன்றாக வைத்து முதற்கண் கூறினார். உயிர்கள் எடுக்கும் பிறப்புக்கள் பலவற்றுள் தெய்வப் பிறப்பும் ஒன்றாகச் சொல்லப்படுகின்றது. எனவே தெய்வங்கள் பிறப்பு இறப்புக்களை உடையன பிறப்பு இறப்பு இல்லாதவனே கடவுள்.

''தென்புலத்தார் தெய்வம்'' - என்னும் குறளில் திருவள்ளுவர், 'இல்லறத்தான் தெய்வங்களுக்குக் கடமைப்பட்டவன்' - எனக் கூறினார்.★ அதில் கூறப்பட்ட தெய்வம்,

''கற்றதனால் ஆய பயனென்கொல், வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்''

என்னும் குறளில் ''வாலறிவன்'' கூறப்பட்ட கடவுள் அன்று.

'இல்லறத்தான் தெய்வங்களுக்கு கடமைப் பட்டவன்' என்றால், 'எல்லாத் தெய்வங்களையும் எல்லாரும் வழிபட வேண்டும்' என்பது பொருள் அன்று. தெய்வங்கள் பல ஆதலின் எல்லாரும், எல்லாத் தெய்வங்களையும் வழிபடுதல் இயலாது. 'எவையேனும் சில காரணங்களால் தாமாகவோ, அல்லது தங்கள் குடிவழியில் முற்காலந்தொட்டு வழிபட்டு வரும் வழக்கத்தினாலோ கொள்ளப்பட்ட தெய்வங்களை மட்டுமே வழிபடல் வேண்டும்' என்பதுதான் பொருள். இவ்வாறான தெய்வங்கள், **'இட்ட தெய்வம்'** என்றும், **'குல தெய்வம்'** என்றும், **'மனைத் தெய்வம்'** என்றும் சொல்லப்படும். இவ்வழிபாடு கடவுள் வழிபாட்டிற்கு முரணானதோ, அல்லது கடவுள் வழிபாட்டை நிரப்பிவிடுவதோ ஆகாது. கடவுள் வழிபாட்டைத் தனியாக எவரும் செய்தே ஆக வேண்டும்.

மகளிர்க்குக் கணவன் தெய்வமேயல்லாது, கடவுளல்லன். அதனால் மகளிர்க்கும் கணவனை வழிபடுவதே தெய்வ வழிபாடாகும். அதன் பிறகு கணவனுக்கு விருப்பம் இருக்குமானால் அவனது கட்டளைப்படி இருவருமாகச் சேர்ந்து வேறு தெய்வங்களை வழிபடலாம். இதைத்தான் திருவள்ளுவர். ''தெய்வம் தொழாஅள் கொழுநற்றொழுதெழுவாள்'' எனக் கூறினார். பரிமேலழகரும் இதற்கு,

''பிற தெய்வம் தொழாது, தன் தெய்வமாகிய
கொழுநனைத் தொழாநின்று துயிலெழுவாள்''

என்றே பொருள் கூறினார். இதனால், 'மகளிர் பிற தெய்வங்களைத் தொழ வேண்டியதில்லை' என்பது கூறப்பட்டதேயன்றிக் கடவுளைத் தொழ வேண்டுவதில்லை' என ஓரிடத்திலும் கூறப்படவில்லை.

ஆயினும் பௌத்தத்தில் கடவுள் இல்லாமையால் சாத்தனார் தமது காப்பியத்துச் சிறைசெய் காதையில் 'மருதி' என்னும் பெண் கடவுள் விழாவைக் காணப் போயினமையாலே தனது கற்புச் சிறப்பில் சிறிது குறைபாடு எய்தியதாகக் கற்பனை செய்து அதற்குத் திருவள்ளுவர் திருக்குறளையும் பயன்படுத்தினார். ஆயினும் திருக்குறட் கருத்து அஃதன்று என்பது இங்குக் கூறிவந்தவற்றால் விளங்கும். ஆகவே, ஆடவராயினும், பெண்டிராயினும் கடவுளை வழிபட்டே வீடு பெறல் வேண்டும்' என்னும் சைவ வைணவ சமயக் கொள்கை பற்றித் திருவள்ளுவர் மாறுபட்ட கருத்துடையர் ஆகாமை தெளிவாம்.

இனிச் சைவம், வைணவம் இரண்டினிடையே கொள்கை வேறுபாடு பெரிதில்லை.

சைவம், **''கடவுள் எவ்வாற்றானும் பிறப்பிற் படுதல் இல்லை'** - என்கின்றது. வைணவம், **''கடவுள் தன் பொருட்டன்றி, உயிர்களின் பொருட்டுப் பிறப்பிற் படுவான், இஃது அவனது எளிவந்த தன்மை''** - என்கின்றது.

இஃதொரு தலையாய வேற்றுமை. இதனால் உலக நலத்திற்கு உழைத்த உத்தமர்களை வைணவம் 'கடவுளின் பிறப்பு' என்கின்றது. சைவம், 'கடவுளை அடைந்து அவன் உலகத்திருந்தவர்கள் அவனால் அனுப்பப்பட வந்து பிறந்தவர்கள் என்கின்றது.

திருவள்ளுவர்,

''பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு''★

என்னும் குறளில், ''இயல்பாகவே பற்றுடைய உயிர்கள் அது நீங்குதற்கு இயல்பிலே பற்றில்லாதவனைப் பற்றுதல் வேண்டும்'' எனக் கூறினார். அது, **''பிறவிப் பெருங்கடல் நீந்துவர்''** என அவர் கூறியதற்கும் பொருந்தும், அஃதாவது இயல்பிலேயே பிறப்பில் அகப்பட்ட உயிர்கள் அதனின்றும் நீங்குதற்கு இயல்பிலே பிறப்பு இல்லாதவனையே பற்றுதல் வேண்டும்'' - என்பதாம்.

'ஒரு நோயை நீக்கும் மருத்துவர் தாமே அந்த நோயை உடையவராய் இருத்தல் வேண்டும்' - எனக் கூறினால் அஃது எவ்வளவு தூரம் பொருத்தமானதாகும்?

'எல்லாம் வல்ல தன்மையே கடவுள் தன்மை' என்றால், பிறப்பில் உள்ள உயிர்களைத் தான் அத்துன்பத்துள் விழாமல் கரையில் நின்றே கரை ஏற்றுதல் இயலாதோ?

'கடவுள் உயிர்களின் பொருட்டு, அல்லது உலக நலத்தின் பொருட்டு பிறப்பான்' - என்பதற்குத் திருக்குறளில் சான்றில்லை.

''பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும், மற்று
நிலையாமை காணப் படும்.''

எனவும்,

''பற்றி விடாஅ இடும்பைகள்; பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு.''★

எனவும் 'பிறப்பிற்குக் காரணம் பற்றே' என வரையறுத்துவிட்டு, 'அக்காரணம் இல்வழியும் பிறப்பு உளதாம்' என்றால் மாறுகோள் உரையாம்.

இனி, வைணவ சமயம், ''பரமுக்தியாக'', அஃதாவது, ''முடிநிலை வீடு பேறாகக்'' கூறுவது, 'பரமபதம்' - எனப்படும் **வைகுந்தத்தில் மாசுடம்பு இன்றி, ஒளியுடம்போடு கூடியிருந்து இறையின்பத்தை நுகர்தலாம்.**

உரைகூறியதற்கும் அஃதே காரணம். சைவ சமயமும் வைணவம்போல, **'சிவலோகம்' என ஓர் உலகத்தை வீட்டுலகமாகக் கூறியபோதிலும், அதனை அடைந்து அங்குள்ள இன்பத்தை நுகர்தலைப் பர முக்தியாகக் கூறாமல் 'பத முக்தி' என்றே கூறி,**

யாதோர் உடம்பும் இன்றி உயிர்
இறைவனோடு நேரே ஒன்றாய்க்
கலந்து இன்புறுதலையே

'பரமுக்தி' எனக் கூறும்.

திருவள்ளுவர்,

''மற்றும் தொடர்ப்பாடு எவன்கொல், பிறப்பறுக்கல்
உற்றார்க்கு உடம்பும் மிகை''

எனக்கூறினார். எனவே, 'யாதோர் உடம்பும் இல்லாத நிலையே

★ திருக்குறள் - 350.

★ திருக்குறள் - 349, 347

வீட்டு நிலை' என்பதே அவரது கருத்தாயிற்று. இது வைணவத்திற்கு ஏலாது.

'வீட்டு நிலையில் இங்குள்ள உடம்புகள்போல இல்லாமல் வேறுவகையான உடம்பு உண்டு' - என்பதற்குத் திருக்குறளில் சான் றில்லை. மாறாக, 'உடம்பு யாதும் இல்லாத நிலையே வீட்டு நிலை' என அது கூறுகின்றது.

இனி நாமே எண்ணிப் பார்ப்பினும் உடம்பு எதுவாயினும் அஃது உயிரினது வியாபகத்தைத் தடுத்துச் சிறுமைப் படுத்தும் சிறையே. ஆதலின் அஃது உயிர்க்குக் கட்டாகுமேயன்றி வீடாகாது.

உயிர் உலகில் வாழுமளவும் பிற பொருள்களில் உள்ள இன்பத் துன்பங்களைத் தான் நேரே பற்றி அனுபவியாது உடம்பால் பற்றி உடம்பு வழியாகவே அனுபவிக்கும். ''அதே நிலைமைதான் வீடு பேற்றிலும் உண்டு'' எனக் கூறினால் அதற்கும், கட்டிற்கும் வேறு பாடு இன்றாம். 'உடம்பு ஒளியுடம்பு' எனின் அதனை 'இரும்பு விலங்கு' என்னாமல் 'பொன் விலங்கு' என்று கூறலாம். அதற்கு மேலாக அதன்கண் சிறப்பு யாதும் இல்லை. அதனால் அதனைத் திருக்குறளில் வலியப் புகுத்த வேண்டுவதில்லை.

இனித் திருவள்ளுவர்,

> ''யான், எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு
> உயர்ந்த உலகம் புகும்''

எனக் கூறியதனால், 'அவர் வீட்டு நிலையை ஓர் உலகமாகவே கூறினார் எனலாம்' - எனின், அங்ஙனம் அன்று.

'கடவுள் வாழ்த்து' அதிகாரத்தில் **'ஆதி பகவன்'** என்பது முதலாகப் பல பெயர்களிலும் 'துறவு' அதிகாரத்தில் **'பற்றற்றான்'** என ஒரு பெயரிலும் கடவுளைத் திருவள்ளுவர் ஆண்பாற் பெயராலே கூறினார். அதனால், 'கடவுளை அவர் இவ்வுலகில் உள்ள எண்ணற்ற ஆடவர்கள் போல ஓர் ஆடவனாகக் கருதினார்' எனக் கூடுமோ?

இன்னும் **''பிறவிப் பெருங்கடல் நீந்துவர்''★** என்றார். அத னால் 'பிறவி' என்று ஒரு கடல் இருப்பதாகவும், அதன் கரையில் கடவுள் வீற்றிருப்பதாகவும் அவர் கூறினார் - என்றால் பொருந்து வதோ? பொருந்தா. அதனால், விளங்காத பொருள்கள் விளங்குதற் பொருட்டு யாவர்க்கும் தெளிவாய் விளங்கிய பொருள்களாக அவை களை உருவகித்துக் கூறுதல் நூல் வழக்கு.

நாம் அறிந்த பொருள்களில் அண்டவெளி எல்லையின்றிப் பரந்து, ஏனை எல்லாப் பொருள்களையும் தன்னுள் அடங்கக் கொண் டுள்ளது. அதனால் அத்தகைய கடவுளை, 'பரவெளி, பரமாகாசம்' - எனக் கூறுதலும், ஆயினும். 'அண்ட வெளிபோல கடவுட் பொருள் அறிவில்லாதது அன்று. அறிவே வடிவானது' என உணர்த்துதற்கு 'சிதாகாசம், சிதம்பரம், சிற்பர வியோமம்' என்றெல்லாம் சொல்லப்ப டுகின்றது. இவை போலவே உயிர்கள் என்றும் நிலையாய் இருந்து பேரின்பத்தை நுகரும் வீட்டு நிலையையும் நூல்கள் ஓர் உலகமாகக் கூறுதல் உண்டு. அதனால், 'உடம்பற்ற நிலையே வீட்டு நிலை' எனக் கூறிய திருவள்ளுவருக்கு 'வீட்டு நிலை ஓர் உலகம்' என்பது கருத்தா மாறு இல்லை.

திருவள்ளுவர் கடவுளை அறிமுகப்படுத்திய வகைகளில் **'எண் குணத்தான்'★** என்பது ஒன்று. சைவத் திருமுறைகளில் இறைவனை எண்குணத்தானாகக் கூறுதல் காணலாம். திவ்யப் பிரபந்தத்தில் அம் முறை காணப்படவில்லை.

சமண சமயம் இறைமைக் குணங்கள் எட்டைக் கூறிய போதி லும் அவை சைவ சமயம் கூறும் குணங்களைப் போல இன்றியமை யாதனவாய் இல்லாமல் 'எட்டு' என்னும் தொகையை நிரப்பக் கூறுவ னவாய் இருத்தல் விளங்கும்.

வேத மத தத்துவங்களில் சைவ சமயத் தத்துவம் ஒன்றில்தான், **'உயிர்களைப் பிணித்துள்ள கட்டு மூன்று'** - என்பது கூறப்படுகின் றது. அம்மூன்றாவன **ஆணவம், கன்மம், மாயை,** 'இவற்றுள்ளும் ஆணவமே முதன்மையானது. அதை ஒட்டித்தான் ஏனை இரண்டும் வந்தன' என்பது அத்தத்துவக் கொள்கை.

பிற வேத மதங்கள் எல்லாம் மாயை, கன்மம் இரண்டை மட் டுமே கட்டுக்களாகக் கூறுகின்றன. திருவள்ளுவர்,

> ''பொருளல்ல வற்றைப் பொருள்என் றுணருள்
> மருளானாம் மாணாப் பிறப்பு''

என்னும் குறளில் 'மருள்' என ஒன்றைக் கூறினார்.

'மருள் - மயக்கம்' என்பது தெளிவு.

அப்பால்,

> **''இருள் நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி**
> **மாசறு காட்சி யவர்க்கு''★**

என்னும் குறளில் மருளுக்கு வேறாக, 'இருள்' என ஒன்றைக் கூறி னார். எனவே, அவையிரண்டையும் 'ஒன்று' என வாதித்தற்கு வழி யில்லை.

உலகத்தில் 'இருள்' எனவும், 'ஒளி' எனவும் உள்ளவற்றைத் தத்துவத் துறையில் 'அறியாமை' எனவும், 'அறிவு' எனவும் கொள் ளுதல் எல்லாச் சமயத்தார்க்கும் ஒப்ப முடிந்தது. எனவே, 'இருள்' என்பது அறிவு சிறிதும் இல்லாமையையும், 'மருள்' என்பது சிறிது அறிவோடு கூடிய அறியாமையையும் குறித்தல் விளங்கும்.

அறியாமையைப் போலச் சிறிது அறிவும் இடர் விளைப்பதே யாம். அதனால் இருளைப் போல மருளும் ஒரு கட்டாகின்றது.

> ''நில்லாத வற்றை நிலையின என்றுணரும்
> புல்லறி வாண்மை கடை''

என்னும் குறளில் மருளைத்தான், **'புல்லறிவாண்மை'** என்றார். எனவே, 'மருள்' என்பது மாயையைக் குறிக்கும் தமிழ்ச் சொல்லாக வும், 'இருள்' என்பது ஆணவத்தைக் குறிக்கும் தமிழ்ச் சொல்லாக வும் திருக்குறளில் அமைந்தனவாம். எவ்வாறு எனில், **''ஆணவமாவது, அறிவை மறைத்து அறியாமையையே உண்டாக்குவது''** என்பதும், **''மாயையாவது ஆணவத்தைச் சிறிதே விலக்கிச் சிறிது அறிவைக் கொடுப்பது''** என்பதுமே அவை பற்றிக் கூறும் சைவாகமங்களின் கருத்து ஆதலின்.

இனி,

> ''பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
> செம்பொருள் காண்ப தறிவு''★

என்னும் குறளில், **''பிறப்பிற்குக் காரணம் ஆவனவற்றுள் பேதைமையே முதலாவது''** - எனத் திருவள்ளுவர் கூறினார். 'பேதைமை' என்பதும் 'இருள்' என்பதுபோல ஆணவத்தையே குறித்தல் மேற்கூ றியவாற்றால் விளங்கும்.

'தீவினை யச்சம்' - என ஓர் அதிகாரத்தை வைத்து அதில்,

> **''எனைப்பகை உற்றாரும் உய்வர்; வினைப்பகை**
> **வீயாது பின்சென்று அடும்''**

★ திருக்குறள் - 346, 350, 10.

★ திருக்குறள் - 9.

★ திருக்குறள் - 351, 352.

★ திருக்குறள் - 331, 358.

எனவும், மற்றும், ''ஊழிற் பெருவலி யாவுள'' எனவும், ''இருள்சேர் இருவினையும் சேரா'' எனவும்,

''நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்; தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்''★

எனவும் பிறவாறும் கூறிய திருவள்ளுவரை, 'வினைக் கொள்கை உடையவர்' என்பது பற்றிப் பல கூறத் தேவையில்லை.

இவ்வாற்றால் திருவள்ளுவர் தமது நூலில் மருள், வினை ஆகிய இருகட்டுக்களை மட்டும் கூறிப் போகாமல் 'இருள்' என்னும் ஒன்றையும் சேர்த்து, அதனை முதன்மையாகவும் வைத்துக் கூறியுள்ளார் ஆதலின் அது பற்றி அவரது நூலைச் 'சைவம் சார்ந்த நூல்' எனக் கூறுதல் எளிதாகின்றது அன்றோ?

மேலும் பல நுட்பங்களை எடுத்து விளக்குவதாயின் இக்கட்டுரை மிக விரிந்து செல்லும்.

பரிமேலழகருக்கு ஆணவம் உடன்பாடு இன்மையால் ''இருள் நீங்கி இன்பம் பயக்கும்'' - என மேற்காட்டிய குறளில் ''இருள்'' என்பதற்கு 'நரகம்'' என்றும், 'அஃது ஆகுபெயராய் அதற்குக் காரணமான பிறப்பைக் குறித்தது' என்றும் உரைத்தார். மருளால் வரும் பிறப்பு நரகம் ஒன்றிற்குத்தான் காரணமோ? சுவர்க்கத்திற்குக் காரணம் ஆதல் இல்லையோ? போலி உரை கூறப் புகுவார் யாவராயினும் அவர்கட்கு இவ்வாறான இடர்ப்பாடு உறுதல் இயல்பே.

மேலும் சுவர்க்க நரகம் பற்றிய ஆராய்ச்சி அற நூல்களில் மட்டுமே இடம் பெறும். வீட்டு நூல்களில் 'கட்டு, வீடு' என்பனவே பெரிதும் இடம் பெறும்.

இன்னோரன்னவை பலவும் நடுவு நிலையில் நின்று ஆராய்வார் கட்கே உரியனவாம்.

★ திருக்குறள் - 207, 380, 138.

வைகறைத் துயிலெழு

வைகறை யாமம் துயிலெழுந்து தான்செய்யும்
நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து வாய்வதில்
தந்தையும் தாயும் தொழுதெழுக என்பதே
முந்தையோர் கண்ட முறை.

(ஆசாரக்கோவை)

புத்தி அதற்குப் பொருந்தும் தெளிவளிக்கும்
சுத்த நரம்பினர் தூய்மையுறும் - பித்தொழியும்
தாலவழி வாதபித்தம் தத்தநிலை மன்னுமதி
காலை விழிப்பின் குணம்

(பதார்த்த குண சிந்தாமணி)

தொகுப்பு: தி.சுந்தரமூர்த்தி
அம்பத்தூர், சென்னை.

திருவள்ளுவர்

1. ஒருவன் கற்க வேண்டிய நூல்களை நன்கு பிழையின்றி கற்க வேண்டும். கற்றபின் கற்றவாறு நடக்கவேண்டும். வருந்திக் கற்றவர்களே அறிவினையடைவார்கள். ஆற்று மணலில் நாம் தோண்டிய அளவுக்கு ஏற்பவே நீர் ஊறும். அதுபோல, நாம் வருந்திக் கற்கும் அளவிற்கே அறிவு மேலோங்கி நிற்கும். ஒருவற்கு அழிவற்ற சிறந்த செல்வமாக அமைவது அவர் கற்ற கல்வியேயாகும். பிற செல்வங்கள் எல்லாம் நிலைத்து நிற்கா. கல்லாதவர் பெற்றுள்ள செல்வம் கற்றவரிடம் ஏற்படும் வறுமையினும் மிகக் கொடியதாகும். (ஏனெனில், கல்லாதவரது செல்வம் பிறர்க்குத் துன்பம் தரவல்லது) கற்றவர் மக்களுக்கும் கல்லாதவர் விலங்கிற்கும் ஒப்பாவார். (குறள் 391,395,396, 400, 408, 410.

2. கற்றறிய வேண்டிய நூல்களைக் கற்றார் கூறக் கேட்டறிதல் கேள்வி எனப்படும். இக்கேள்வியறிவு பிறவகைப்பட்ட செல்வங்களைக் காட்டிலும் மிகவுயர்ந்த செல்வமாகும். எனவே, கற்று அறிய இயலாவிடினும் கேள்வியறிவாவது பெற வேண்டும். அவ்வாறு பெறின் அவ்வறிவு நமக்குத் தளர்ச்சி வருங்காலத்தில் உறுதுணையாக உதவும் (குறள் 411, 415).

3. உள்ளத்தைப் புலன்வழியே செல்லவிடாது, தீயனவற்றின்றி நீக்கி, நன்மையின்கண் செலுத்துவதே உண்மையறிவின் இயல்பாகும். எந்தப் பொருளை எவரெவரிடம் கேட்டாலும், அதன் உண்மையான இயல்பை அறியக்கூடிய ஆற்றலே அறிவாகும். உலகு நன்மையை நாடி எங்ஙனம் வாழ்கின்றதோ அதற்குப் பொருந்த நாமும் வாழ்வதேஅறிவுடைமையாகும். அறிவுடையார் எல்லா நன்மைகளையும் உடையவராவார். அறிவில்லதாவர்க்கு எல்லாச் செல்வங்களும் அமைந்திருப்பினும் அவர் ஒன்றுமில்லாதவரேயாவார் (குறள் 422, 423, 426, 430).

4. எப்பொருள் எத்தன்மையாய்த் தோன்றிடினும், அதன் தோற்றத்தில் மயங்காது, அதன் உண்மை இயல்பை அறிவதே அறிவாகும். பிறப்பு வேண்டும் எனக்கருதும் அறியாமை நீங்க, சிறப்பான உண்மைப் பொருளாம் பரம் பொருளை அறிவதே மெய்யறிவாகும் (குறள் 355, 358).



உயிர் நிலை
(அர்த்த பஞ்சகம்)

T.A. கிருஷ்ணமாசாரியார் சிரோமணி வித்துவான்
(ஓய்வு பெற்ற பேராசிரியர். S.V.O காலேஜ், திருப்பதி.)

ஸ்ரீ வைஷ்ணவ சமயத்தில் - அடையத்தக்க இறையின் நிலை, அவ்விறையை அடையும் உயிரின் நிலை, உயிர் இறையை அடைதற்கு உரிய நெறி, அடைந்து பெறப்படும் பயன், அடைய வொட்டாமல் தடை செய்யும் பகை ஆகிய இவ்வைந்தும் அர்த்த பஞ்சகம் எனப்படுகின்றன. இறை-திருமால் ; உயிர் - ஜீவாத்மா ; நெறி - உயிர் தஞ்ச மாகப் பற்றும் அத்திருமால் ; பயன் - உயிர் உடல் நீத்துப் பரமபதமடைந்து அத்திருமாலைக் கண்டு களிப்பதும் அக்களிப்புக்குப் போக்குவீடாகத் தொண்டு செய்வதும் ஆகும் ; பகையாவன - யான் என தென்னும் செருக்கும், அதனால் மதிகெட்டுச் செய்யும் பொல்லா வொழுக் கங்களும், அவற்றால் மேன்மேலும் இடையறாமல் தொடரும் பூதவுடல்களும் ஆம். இப்போது உயிரென்னும் ஜீவாத்மாவின் நிலையை - இயற்கைத் தன்மையைச் சிறிது காண்போம்.

உடல் பொறிகள் மனம் பிராணன் அறிவு ஆகிய இவற்றைவிட வேறுபட்டிருக்கையும், அறிவே, வடி வாகையும், இன்பவுருவாகையும், அழிவில்லாமையும், அணுவாகையும், அறிவுடைமையும், திருமாலால் உட் புகுந்து அடக்கியாளப் படுகையும் தாங்கப் படுகையும், அத்திருமாலுக்கே அடிமையாகையும் பிறவும் ஜீவாத் மாவின் நிலைகளென்றும், எல்லாமறிந்த பிள்ளை லோகாசாரியர் தாம் பணித்த தத்துவத் திரயம் என்னும் நூலில் அருளிச் செய்துள்ளார். இவற்றை முறையே ஈண்டு மூதலிப்போம்.

ஜீவாத்மா 'நான்' என்று தோற்றுகையாலும், உடல் பொறி மனம் முதலியவை 'என்னுடைய உடல்' எனது பொறி எனது மனம் என்று 'நான்' எனப்படும் ஆத்மாவைவிட வேறாகத் தோற்றுகையாலும், 'இது உடல்,' 'இது கண்' என்று தோற்றுவதன்றி 'நானென்று தோற்றாமையாலும், விழிப்பு நிலையில் 'நான் பருத் தேன்' 'நான் இளைத்தேன்' என்று சிலசமயங்களில் பருப்புக்கும் இளைப்புக்கும் இலக்கான உடலே 'நான்' என்று தோற்றினாலும், சுழுத்தி (ஸுஷுப்தி) என்னும் அயர்ந்து தூங்கும் நிலையில் அப்படி உடல் தோற்றாமையாலும், அந்த சுழுத்தி நிலையிலும் ஆத்மா 'நான்' என்று தோற்றுகையாலும், எல்லா நிலைகளிலும் உடல் முதலியவற்றைவிட வேறுபட்டவனாய்க் கொண்டு ஆத்மா உளன் என்று கொள்ளவேணும். "உறங்குவதற்கு முன்பு இவற்றையெல்லாமறிந்திருந்த நான் உறங்கும் போது என்னுடம்பையுங்கூட அறிந்திலேன்" என்று விழித்த பின்பு நினைக்கையாலே, உறங்கும் போது அறியப்படாத உடல் முதலியவற்றைவிட வேறுபட்டு, அந்நிலையில் தனக்குத்தான் தோற்றியிருந்த ஆத்மாவின் உண்மை புலனாகும்.

பொறிகளில் கண்ணையோ செவியையோ ஆத்மாவாக இசைந்தால் நடுவில் கண்ணையோ காதையோ இழந்த ஒருவன் "முன்பெல்லாம் எல்லாவற்றையும் கண்டு கொண்டிருந்த நான் இப்போது எதையும் காண்கின்றிலேன்", "எல்லாவற்யும் கேட்டுக் கொண்டிருந்த நான் இப்போது ஒன்றையும் கேட்கின்றிலேன்" என்கிறானல்லவா? அது பொருந்தாது ; கண் அல்லது செவி இப்போது இல்லாமையால், ஆகையால், கண் செவி முதலியவற்றைவிட வேறுபட்ட ஒரு ஆத்மா - கண்செவிகள் உள்ள காலத்திலும் இல்லாத காலத்திலும் உளனென்பது தோன்றுகிறது.

மனமும் ஆத்மாவன்று எண்ணுவதற்குக் கருவியாகத் தோற்றுகிற மனது சிற்சில சமயங்களில் எந்த எண்ணத்தையும் உண்டுபண்ணாமல் மூடமாய் நிற்கையால்.

பிராணனும் (மூச்சுக்காற்றும்) ஆத்மாவல்ல ; மூர்ச்சை யாய் விழுந்த நிலையில் அப்பிராணன் தோற்றாமையால்.

அறிவும் ஆத்மாவாகமாட்டாது பானை துணி முதலியவற்றைக் காணும்போதோ தொடும் போதோ "பானையை இப்போது அறிகிறேன்" துணியை இப் போது அறிகிறேன்" என்று தோன்றுகிற அறிவு அவற் றைக் காணாத - அல்லது தொடாத போது தோற்றாமை யால்.

இங்ஙனமல்லாமல் - "நான் கண்ணும் செவியும் முன்பு விளங்கியிருந்தேன், இப்போது குருடனும் செவிடனும் ஆனேன்", "முன்பு என்மனம் விளக்கமாக இருந்தது, இப்போது ஒன்றும் தெரிகிறதில்லை," "நான் அப்போது மூர்ச்சையடைந்து மூச்சின்றிக் கிடந்தேன், இப்போது மூச்சு விடுகிறேன்", "எனக்கு அப்போது அறிவு உண்டாகியிருந்தது. இப்போது அறிவு அழிந்தது என்று பொறிகளும் மனமும் பிராணவாயுவும் அறிவு மாகிய இவை தோற்றினபோதோடு தோற்றாத போதோடு வாசியற்று ஆத்மா எப்போதும் 'நான்', 'என்' என்று தோற்றுகையால் இவற்றைக் காட்டிலும் வேறுபட்டவன் ஜீவாத்மா என்பது தேறிற்றாகிறது.

இந்த யுக்திகளாலன்றியே "பஞ்சவிம்ச:ஆத்மா பவதி" (யஜுரஷ்டகம் 1-2-17) என்ற வேத வாக்கியத்தாலும் ஆத்மா உடல் முதலியவற்றைவிட வேறுபட்டவனாக அறியப்படுகிறான். நிலம் நீர் தீ வளி வானம், மூக்கு நாக்கு கண் த்வக்கு காது, வாய் கை கால் குதம் பெண்குறி அல்லது ஆண்குறி, நாற்றம் சுவை ஒளி ஊறு ஓசை, மனம், அஹங்காரம், மஹாந், பிரகிருதி ஆகிய இருபத்து நான்கு தத்துவங்களைவிட வேறுபட்டு இருபத்தைந்தாம் தத்துவம் (பொருள்) ஆவான் ஜீவாத்மா - என்பது இவ்வாக்கியத்தின் கருத்து.

ஜீவாத்மா அறிவே வடிவானவன். தனக்குத் தானே தோன்றுமவன் என்றபடி. பானை முதலிய சடப்பொருள்கள் ஆத்மாவில் உள்ள அறிவாகிய பண்பிற்கு இலக்காகி அவ்வறிவின் வாயிலாக ஆத்மாவிற்குத் தோற்றும். அவ்வறிவுகளும் ஆத்மாவுக்குத் தாமே தோற்றும். ஆத்மாவோ வென்னில் - (தன்னிடம் உள்ள அறிவிற் கிலக்காய்த் தோற்றுதலேயன்றி) தனக்குத் தானே 'நான், நான்' என்று தோற்றும். "ஹ்ருதி அந்தர் ஜ்யோதி புருஷ" என்ற ப்ருஹதாரண்யகோபநிஷத்தும் (6-3-7) ஹ்ருதயத்தின் கண் உள்ளே ஞானவடிவமாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறான் புருஷன் (ஜீவாத்மா) என்று கூறுகிறது.

ஆத்மா இன்பவுருவானவன். இன்பமென்பதும் ஆனந்த மென்பதும் சுகமென்பதும் ஒன்றேயாம். இதுதன்னை அனுகூலமென்பர் வடநூலார். இயற்கையாகவே விரும்பப்படும் சுகமே அனுகூலமெனப்படும். மற்றொரு பொருளை அனுபவிப்பதனால் உண்டாகும் மற்றொரு சுகத்தைத் தான் உடையவனாக, "கண்டு சுகமடைந்தேன் நான்," "உண்டு இன்பமெய்தினேன் யான்" என்று தோன்றுதலேயன்றி, தனக்குத் தானே சுகமாகத் தோற்றுகிறான் ஆத்மா என்க. இதனை எங்கே காணலாம் என்றால், அயர்ந்து தூங்கி விழித்தவன் 'சுகமாகத் தூங்கினேன்' என்ற விடத்தில் காணலாம். அயர்ந்து தூங்கும் நிலையில் காணப்படும் பொருள்களோ உண்ணப்படும் பொருள்களோ, காண்பதோ உண்பதோ ஏதுமில்லாமையால் அதனால் உண்டாகும் வேறு சுகமன்றி, ஆத்மாவின் இன்பவுருவமே 'சுகமாக' என்பதற்கு இலக்காக வேண்டுகையால் என்க. 'சுகமாகப் பாடினேன்' என்ற விடத்தில் பாடுங்காலத்தில் உண்டாகும் சுகம் குறிக்கப்படுவதுபோல், "சுகமாகத் தூங்கினேன்' என்ற விடத்திலும் தூங்கும் காலத்தில் உள்ள ஆத்மாவாகிற சுகமே குறிக்கப்படுகின்றது. "ஆர்த்ரம் ஜ்வலதி" என்ற தைத்திரீயோபந்ஷத்தும் (நாரா - 48) ஆத்மா சில்லென்று (=சுகவடிவாக) விளங்குகிறான் என்று அறிவிக்கிறது.

ஆத்மா அழிவில்லாதவன். 'ஒருவன் பிறந்தான்', 'ஒருவன் இறந்தான்' என்பதற்கு - '(நித்தியனான) ஆத்மா உடலெடுத்தான்' 'அவன் உடல் விட்டான்' என்பதே பொருளாகும். " ந ஜாயதே, ம்ரியதே வா விபச்சித்" என்னும் கடோபநிஷத்து (1-2-18) பேரறிவுடைய ஜீவாத்மா பிறப்பதில்லை இறப்பதுமில்லை - என்று குறிப்பிடுகிறது.

ஆத்மா அணுவாகிறான் ; இருதயத்திலிருந்து வெளிப்படுவதையும், வேறிடத்துக்குப் போவதையும், அங்கிருந்து திரும்பி வருவதையும் வேதம் கூறுவதனாலென்க. "ஹ்ருதி ஹ்யேவ அயம் ஆத்மா" (ப்ருஹதாரண்யகோப நிஷத்து 6 - 4 - 2) என்றும், "தேந ப்ரத்யோ தேந ஏஷ ஆத்மா நிஷ்க்ராமதி" (ப்ருஹதாரண்யகோபநிஷத்து 6 - 4 - 2) என்றும், "யே வை கே ச அஸ் மாத் லோகாத் ப்ரயந்தி சந்த்ரமஸமேவ தே கச்சந்தி" (ப்ருஹதாரண்யகோபநிஷத்து (6 - 4 - 6) என்றும், "தஸ்மாத் லோகாத் புநரேதி அஸ்மை லோகாய கர்மணே" (ப்ருஹதாரண்யகோபநிஷத்து (6 - 4 - 6) என்றும் கூறுவது காண்க. "இவ்வாத்மா இருதயத்திலேயே அல்லவா இருக்கிறான்", "பகவான் காட்டும் அவ்வொளியினால் (வழிதெரிந்து) இந்த ஆத்மா (இருதயத்திலிருந்து) வெளிப்படுகிறான்", "யார் இவ்வுலகிலிருந்து புறப்படுகிறார்களோ. அவர்கள் அனைவரும் சந்திர மண்டலத்தைக் குறித்தே போகிறார்கள்", "(இதற்கு முன்பு தான் ஈட்டிய நல்வினைகளின் பயனை அனுபவித்துவிட்டு) அந்த லோகத்திலிருந்து மறுபடியும் நல்வினைகளைச் செய்வதற்கு இவ்வுலகிற்குத் திரும்பிவருகிறான் ஜீவாத்மா" என்பது முற்காட்டிய உபநிஷத்துக்களின் கருத்து. ஆகையால் கண்ணுக்குப் புலப்படாத ஆத்மா புறப்படுவது போவது வருவது ஆகியவை உபநிஷத்துகளின் மூலமாக அறியப்படுகின்றமை கொண்டு - அணுவடிவானவன் என்று தேறியது.

'ஏஷோணுராத்மா சேதஸா வேதிதவ்ய:" என்ற முண்டகோபநிஷத்தும் (3-1-9) இந்த அணுவான ஜீவாத்மா மனிதனால் அறியத்தக்கவன் என்று பகர்கிறது.

ஆத்மா அறிவுடையவன். இதற்குமுன்பு ஆத்மாவின் வடிவம் அறிவு என்கிறோம். இப்போது அவனிடத்தல் மற்ற பொருள்களைப் பற்றிய - 'இது பானை' 'இது துணி' என்று அறியும் அறிவும் உண்டு என்கிறோம். "ஏஷ ஹி போத்தா விஜ்ஞானாத்மா புருஷ" என்னும் ப்ரச்நோபநிஷத்து (4-9) இந்த ஜீவாத்மா அறிவுடையவனும் அறிவு வடிவான வனுமன்றோ - என்று ஓதுகின்றது. அறிவுடையவன் என்றதனால், அறிந்த நல்ல பொருளை விரும்புமவனும் அதையடையச் செயல்படுமவனும் அடைந்து அனுபவிப்பவனுமாகிறான் ஜீவாத்மா என்பது சொல்லாமலே விளங்கும்.

ஆத்மா திருமாலால் உட்புகுந்து அடக்கியாளப்படுபவன். "ய : ஆத்மாநம் அந்தர : யமயதி" என்ற ப்ருஹதாரண் யகோபநிஷத்து (5-7-22) எந்தத் திருமால் ஜீவாத்மாவை உட்புகுந்து நியமிக்கிறானோ = (இதைச் செய் இதைச் செய்யாதே என்று அறிவித்து) அடக்கியாள்கிறானோ என்று உணர்த்துகிறது.

ஆத்மா திருமாலால் தாங்கப்படுபவன். "ஏத ஸ்ய வா அகடிரஸ்ய ப்ரசாஸநே... ஸூர்யா சந்த்ரம ஸௌ வித்ருதௌ திஷ்டத :" என்ற ப்ருஹதாரண்யகோபநிஷத்து (5-8-7) இந்த அழிவற்ற திருமாலின் கட்டளையாலே சூரியன் சந்திரன் முதலிய எல்லாப் பொருள்களும் ஒன்றோடொன்று குழம்பாமலும் கீழே விழாமலும் தாங்கப்படுகின்றன என்று போதிக்கின்றது.

ஆத்மா திருமாலுக்கு அடிமையானவன் "யஸ்யாஸ்மி ந தமந்தரேமி" என்ற யஜுர்வேதாஷ்டகம் (3-7) எந்தத் திருமாலுக்கு நான் அடியவனாகிறேனோ அவரைவிட்டு வேறொருவரிடம் செல்லமாட்டேன் என்று உபதேசிக்கிறது. இங்ஙனம் முறையே கூறப்பட்ட ஒன்பது உயிரியல்புகளில் திருமாலுக்கு அடிமையாகை என்பது மிக முக்கிய இயல்பாகக் கருதுவர் பெரியோர்.

இன்னும் - கண் முதலிய பொறிகளால் அறியப் படாமை, அறிவற்ற பொருள்களைப் போன்றதாக நினைக்கப்படாமை, இளைப்பது பருப்பது போன்ற மாறுபாடில்லாமை முதலிய சில இயல்புகளும் ஆத்மாவுக்குக் கூறப்பட்டுள்ளன. விரிப்பின்பெருகும்.

ஸ்ரீவைஷ்ணவமதத்தில் மிக உயர்ந்ததாகக் கருதப்படுகின்ற "ஓம் நமோ நாராயணாய" என்னும் அஷ்டாக்ஷர மஹாமந்திரம் - ஓம் என்ற முதற்சொல்லால், எல்லாவெழுத்துக்கும் அகரம்போல் எல்லாவுலகிற்கும் காரணனாய் அவற்றைக் காக்கும் திருமாலுக்கன்றி மற்றொருவருக்கும் ஜீவாத்மா அடியவனாகமாட்டான் என்றும், நம: என்ற இரண்டாம் சொல்லால், ஜீவாத்மா தன் விருப்பம் நிறைவேற அத்திருமாலையன்றி வேறொருவரையும் தஞ்சமாகப் பற்றமாட்டான் என்றும், நாராயணாய என்ற மூன்றாம் சொல்லால், நாராயணனென்னும் பெயருடைய அத்திருமாலின் உகப்புக்காகவன்றி பிறருகப்புக்காவோ தன்னுகப்புக்காகவோ ஜீவாத்மா அத்திருமாலுக்குத் தொண்டு செய்யான் என்றும் இத்தகைய மூன்றியல்புகளை ஜீவாத்மாவுக்குக் கூறுகின்றது. மேலும் திருமாலோடு சேர்ந்தால் இன்புறுகையும் அவரைப் பிரிந்தால் துன்புறுகையும், தன்னுடைய பிறப்பு செயல் முதலிய எல்லாம் அத்திருமாலுக்கே வசப்பட்டிருக்கையுமாகிய இவ்வியல்புகள் மூன்றும் ஜீவாத்மாவினுடையவையாக அம்மந்திரமே குறிப்பிடுவதாகக் கொள்ளுவர்.

மேலும் அத்திருமாலைவிட்டுப் பிரியாத திருமகளுக்கும், அத்திருமாலைத் தம் மனத்துக்குள்ளே எப்போதும் தியானிக்கும் தொண்டர்களுக்கும் இந்த ஜீவாத்மா அடிமையானவன் என்னும் இவ்வியல்பும் அம்மந்திரத்திலிருந்தே கிடைக்கின்றதென்றும் இசைவர்.

முதன் முதலில் குறிப்பிடப்பட்ட இறைநிலை உயிர்நிலை நெறி பயன் தடை ஆகிய அர்த்த பஞ்சகத்தை விவரிக்கின்ற - நம்மாழ்வாருடைய திருவாய் மொழியானது - 'ஏறாளுமிறை யோனும்' (4-8) என்னும் பதிகத்தால் திருமாலுக்கு அடிமையாகையே ஆத்மாவின் இயல்பென்றும், 'கண்கள் சிவந்து' (8-8) என்ற பதிகத்தால் அறிவும் ஆனந்தமும் வடிவமாகக் கொண்டு உடல் முதலியவற்றைவிட வேறாய்த் திருமாலை விட்டுப் பிரியாத தன்மையுடைமை ஆத்மாவின் இயல்பென்றும், 'கருமாணிக்கமலை' (8-9) என்ற பதிகத்தால் திருமாலுக்கன்றி வேறொருவர்க்கும் அடிமையாக இல்லாதிருத்தல் ஆத்மாவின் இயல்பென்றும், 'பயிலுஞ்சுடரொளி' (3-7) என்ற பதிகத்தால் திருமாலின் தொண்டருக்கடிமையாயிருக்கை ஆத்மாவின் இயல்பென்றும் குறிக்கின்றமை அதன் உரைகளில் காணத்தக்கன. ஆக உயிர்நிலையென்பது இயன்றவரையில் காட்டப்பட்டதாயிற்று.

1. சாந்தியும் சமரச ஞானமும் இல்லாதவர்கள் எவ்வளவு கற்றிருந்தாலும் பயனில்லை. அவர்களை விடக் கல்லாதவர்கள் நல்லவர்கள் என்பதில் ஐயமில்லை.

2. இறைவா! பார்க்குமிடந்தோறும், நீக்கமற நிற்கும் பராபரமே! செருகால் என் மனம் குழப்பமுற்று ஒன்றிலும் உறுதியாக நில்லாது. ஒன்றை விட்டு மற்றொன்றுக்குத் தாவி அதைப்பற்றிக்கொள்ள, பாசம் எனும் பேராசைக் கடலில், நான் வீழ்ந்துவிடாமல் இருக்குமாறு, 'நான்' என்னும் தன்மையற்ற பரிசுத்தமான நிலையை எனக்கு அருள்வாயாக.

சக்திமிக்க யோகேஸ்வரி போற்றி

சௌந்தரா கைலாசம்

நில்லா தெந்த நேரமும் கலையும்
பொல்லா மனமும் பொறிகள் ஐந்தும்

செல்வதை விடுத்துச் சீரிய தான
நல்வை ராக்கியம் நாளும் பழகி

ஒருநிலை நிற்க உதவு வதுதான்
அருமைசேர் யோகம் ஆகிடும் என்பர்!

பரமாத் மாவும் ஜீவாத் மாவும்
இரண்டாத் மாக்கள் எனும்நிலை மாறி

ஒன்றி, மனத்தை உள்ளே திருப்பி
நன்றறி வூட்டும் நல்லொளி அங்கே

இருப்பதை அறிந்து விருப்புடன் அதில்தனைக்
கரைத்து லயித்தலே சிறப்புறு யோகம்!

யோகம் என்பதே ஒருகலை அன்றோ?
அகமும் மனமும் அதனால் அழகுறும்!

செய்யும் செயல்கள் செம்மைபெற் றோங்கும்!
உய்யும் வகையை உணர்ந்திட லாகும்!

தாக்கும் தீய சக்திகள் அகல
ஆக்கம் பெறலாம், அறிவைப் பெறலாம்!

யோக சக்திகள் ஓங்கிடப் பெற்றே
யோகினி தேவியர் உயிர்புரக் கின்றனர்!

வணங்கித் தினமும் வழிபடு வோரின்
உணர்வைப் பெருக்கி உள்ளொளி யருள்வர்!

சிறந்த மனோலயம் தேக்கும் வழியை
முறையாய் உணர்த்தி முன்னேற் றிடுவர்!

யோகம் தருவர், பெறுவர், உடையோர்
யோகத் தாலே அடையப் படுவர்!

உள்ளமும் உடலும் உவப்பன வற்றை
அள்ளி வழங்கி அருளைப் புரிவர்!

ஐந்துபூ தங்களால் ஆன உடலும்
சிந்தையும் நன்கு திகழ உதவுவர்

ஆறா தாரச் சக்கரங் களுக்கும்
ஓரா யிரஇதழ் ஒளித்தா மரைக்கும்

பொறுப்பேற் றிருந்து போற்றிநிற் பார்க்குச்
செறியும் வளமும் செழிப்பும் அருள்வர்!

பணிந்துப சரித்துப் படையலும் இட்டால்
கனிந்தருள் காட்டிக் கேட்டவை தருவர்!

சிந்தை உருக அத்தேவ தைகளை
அந்த அந்த ஆதா ரங்களில்

வைத்து நிதமும் வணங்கிடில் யாவும்
சித்தி யாகித் தீரும் துயர்கள்!

இன்பமும் அமைதியும் என்றும் மனத்துள்
நின்று நிலவி நிறைவைப் பெருக்கும்!

ஏழெ னப்படும் இந்தயோ கினிகளைச்
சூழ ஐம்பத் தோரட் சரங்கள்

பரிவா ரங்களாய்ப் பாங்குடன் அமையும்;
திருவடி தொழுவார்க் கருள்மழை பொழியும்!

தேவியின் அம்சமாய்த் தெரியும்யோ கினிகள்
மேவிடும் ஆதா ரங்களை நினைத்துப்

பற்றுடன் தொழுதால் பஞ்ச பூதநல்
வெற்றி கிடைக்கும்; மேன்மைசேர் யோகம்

சித்திக்கப் பெறும்! தேவியே யோக
சக்தி மிக்க யோகீஸ் வரிதானே!

நாதன்தாள் வாழ்க!



தெய்வச் சேக்கிழார்

மு. கிருஷ்ணன். ஐ.ஏ.எஸ் (ஓய்வு)

தூக்கு சீர்த்திருத் தொண்டத் தொகைவிரி
வாக்கி னாற்சொல்ல வல்லபி ரான்எங்கள்
பாக்கி யப்பயனாய்ப்பதி குன்றைவாழ்
சேக்கி ழான்அடி சென்னை இருத்துவாம்

— காஞ்சிப் புராணம்

பெரியபுராணம் பன்னிரு திருமுறைகளில் பன்னிரண்டாம் திரு முறை என்பதும் இதன் ஆசிரியர் தெய்வச் சேக்கிழார் என்பதும் சைவப் பெருமக்கள் யாவரும் அறிந்ததே. தெய்வச் சேக்கிழார். இந்த பெரியர் புராணத்தை அவர் ஆக்கித் தரவில்லை என்றால் சைவமே தமிழ் நாட்டில் திருஞான சம்பந்தர் காலத்திற்கு முன் மங்கி இருந்தது போல் சிறப்பிழந்திருக்கும் என்பது திண்ணம். பெரிய புராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தனி அடியார்கள் தொகை அடியார்கள் வரிசை யில் இதுவரை தோன்றியுள்ள பல அருளாளர்கள் அந்த அடியார்க ளின் அடிச்சுவட்டில் திரு நெறிய வாழ்க்கையை மேற்கொண்டு ஒழுகி சைவத்தையும் அடியார்களையும் போற்றி வந்துள்ளனர். தாம் இயற் றிய பெரிய புராணத்திற்குச் சேக்கிழார் இட்ட பெயர் திருத் தொண்டர் புராணம். இப்புராணத்தின் நோக்கம் என்ன என்று அவரே கூறுகிறார்.

உலகம் உய்யவும் சைவம் நின் றோங்கவும்
அலகில் சீர்நம்பி ஆரூரர் பாடிய
நிலவு தொண்டர்தம் கூட்டம் நிறைந்துறை
குலவு தண்புனல் நாட்டணி கூறுவோம் - பாடல் 40

அவர் கூறிய வண்ணம் இன்றுவரை உலகம் உய்ந்து வந்துள் ளது. சைவமும் நின்று ஓங்கி நிலவி வருகிறது. இவர் சுந்தரர் பாடிய திருத்தொண்டத்தொகை நம்பியாண்டார் நம்பிகள் பாடியுள்ள திருத் தொண்டர் திருவந்தாதி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு ''வந்த வாறு வழாமல் இயம்புவாம்'' என்று இப்புராணத்தை இயற்றி யுள்ளார்

மற்று இதற்குப் பதிகம்வன் தொண்டர்தாம்
புற்றுஇடத்து எம்புராணர் அருளினால்
சொற்ற மெய்த்திருத் தொண்டத் தொகைஎனப்
பெற்ற நற்பதி கம்தொழப் பெற்றதாம் - பாடல் 38

அந்த மெய்ப்பதி சுத்தடி யார்களை நம்தம் நாதனாம் நம்பியாண் டார்நம்பி

புந்தி ஆரப் புகன்ற வகையினால்
வந்த வாறு வழாமல் இயம்புவாம் - பாடல் 39

சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகை எழுந்த வரலாற்றுக் குறிப்பினையையும் அவரே குறிப்பிட்டுள்ளார்.

என்று மாமுனி வன்தொண்டர் செய்கையை
அன்று சொன்ன படியால் அடியவர்
தொன்று சீர்திருத் தொண்டத் தொகைவிரி
இன்றென் ஆதரவால் இங்கு இயம்புகேன் - பாடல் 37

திருமலையில் எழுந்தருளியிருந்த பலலாயிர சுத்தயோகிகளுக்கு உப மன்னிய முனிவர் சுந்தரர் கயிலாயத்திற்குத் திரும்பியபோது அவர் வரலாற்றை எடுத்துரைத்தார் இந்த அடிப்படையிலே இப்புராணத் தைச் சுந்தரர் வரலாற்றுப் புராணமாகவே ஆரம்பித்து முடித்துள்ளார். இது தனித் தமிழ் நூலேயன்றி வடமொழி நூலின் மொழி பெயர்ப்பு அல்ல.

சேக்கிழார் வரலாறு: கரிகாலன் தொண்டை நாட்டை வளப்படுத்தி நாற்பத் தெண்ணாயிரம் குடிகளை, குடிபுகச் செய்தான் என்பதும் அக்குடிகளுள் சேக்கிழான் குடி ஒன்று என்பதும் இவர்கள் வேளாளர் கள் என்பதும் அக்குடியில் தோன்றியவர் நம் சேக்கிழார் என்பதும் அக்குடிப்பெயரே அவருக்குச் சிறப்புப் பெயராய் அமைந்துவிட்டது என்பதும் வரலாறு. இவர் அருண் மொழித்தேவர் என்று சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டார் என்று உமாபதி சிவாச்சாரியார் கூறி யுள்ளார். சேக்கிழாரது தெய்வ வாக்குப்பற்றி இப்பெயர் எழுந்தது என்று சிலர் கூறுவர். அருண்மொழி என்ற பெயர் முதல் இராசராச சோழனின் பெயர் என்றும் தம் அரசரிடத்து அன்புள்ள மக்கள் தம் மக்களுக்கு அவ்வரசனின் பெயரை இட்டு வழங்கிய மரபை ஒட்டி இராசராசன் சிவபக்தியில் சிறந்து விளக்கினமையால் சேக்கிழாரின் பெற்றோர் இவருக்கு அவ்வரசனின் பெயரைச் சூட்டினார்கள் என் றும் சிலர் கூறுவர். திரு வெள்ளியங்கிரி முதலியார் இவர் தந்தை என்றும் திருமதி அழகாம்பிகை இவர் தாயார் என்றும் கர்ண பரம்ப ரையாகச் சொல்லப்படுகிறது.

திருமழபாடி சிவாலயத்திலுள்ள ஒரு சாசனத்தில் ''ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து... குன்றத்தூர் நாட்டுக் குன்றத்தூர்ச் சேக்கிழார் மாதேவடிகள் ராமதேவனான உத்தம சோழப் பல்லவ ராயன்'' என்று குறிக்கப்பட்டுள்ளது. ஆதலால் சேக்கிழாருக்கு இராம தேவர் என்ற இயற்பெயர் இருந்தது என்று தெரிகிறது.

தொண்டைநாடு இருப்பத்து நான்கு கோட்டங்கள் கொண்டது. அவைகளில் ஒன்று புலியூர்க் கோட்டம் அதன் உட்பிரிவுகள் பலவற் றுள் ஒன்று குன்றத்தூர் வளநாடு.

அதனுள் இருந்த பல ஊர்களிலும் சிறந்து விளங்கியது குன்றத் தூர் என்னும்பதி. இவ்வூர் கி.பி.பத்தாவது பதினோராவது நூற்றாண் டில் பேரூராக விளங்கி இருந்தது. இப்போது இது சிற்றூராக உள்ளது. இவ்வூரில்தான் நமது சேக்கிழார் பெருமான் பிறந்தார். இவரது திரு நட்சத்திரம் வைகாசிப் பூசம்.

இரண்டாம் குலோத்துங்க சோழனே அனபாயன். இவன் ஆட் சிக்காலம் கி.பி.1133 - 1146 ஆகும். இவனுக்கு நமது சேக்கிழார் முதல் அமைச்சராய் இருந்தார். ஆகவே இவர் காலம் 12 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி.

சேக்கிழார் இளமை முதலே நன்கு கல்வி கற்று இலக்கண இலக் கிய திருமுறைகள், சாத்திரம் புராண இதிகாசங்களில் நல்ல பயிற்சி யும், கல்வெட்டு ஆய்வும், வரலாற்றுப் புலமையும் கொண்டு விளங்கி னார். ஔவையார் ''தொண்டை நாடு சான்றோர் உடைத்து'' என்று கூறியதை பரிசோதிக்க விரும்பி சோழன் தொண்டை மானுக்கு மூன்று கேள்விகள் எழுதி அனப்பி தொண்டைநாட்டுச் சான்றோர் வாயிலாக விடை காணும்படி கேட்டுக் கொண்டான். அவ்வாறே அக்கேள்வித்தாளை சேக்கிழாரிடம் கொடுக்க சேக்கிழார் அம்மூன்று கேள்விகளுக்கும் மூன்று திருக்குறள்களை விடைகளாக எழுதி அனுப்பினார். அதைக் கண்ட சோழன் பெரிதும் மகிழ்ந்து அவரை வரவழைத்து முதல் அமைச்சராக்கி **உத்தமச் சோழபல்லவர்** என்ற பட்டத்தையும் வழங்கினான்.

முதல் கேள்வி: மலையில் பெரியது எது?

பதில்: நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்.

இரண்டாம் கேள்வி: கடலில் பெரியது எது?

பதில்: பயன் தூக்கார் செய்த உதவி.

மூன்றாம் கேள்வி: உலகில் பெரியது எது?

பதில்: காலத்தினால் செய்த நன்றி.

இந்த வரலாறு சிதம்பர சபாநாதர் புராணத்தில் குறிப்பிடப்பட்டுள் ளது.

பெரியபுராணத் தோற்றம்: சோழ மன்னன் திருத்தக்க தேவர் பாடிய சீவக சிந்தாமணியினைப் பொருள் விரிக்குமாறு கேட்டு இன் புற்று வந்தான். மன்னன் சைவனாக இருந்தும் சமண காவியத்தைக் கேட்டு இம்மை மறுமை இன்பங்களை இழக்கிறானே என்று இரங்கி சேக்கி ழார் சுந்தர மூர்த்தி சுவாமிகள் இயற்றிய திருத்தொண்டத் தொகை யில் குறிப்பிட்டுள்ள நாயன்மார்களின் வரலாறுகளையும் திருத் தொண்டத் தொகை சிவனருளால் பாடப் பெற்றது என்பதையும் திருநாரையூர் பொல்லாப் பிள்ளையார் உணர்த்தி அருள நம்பியாண் டார். நம்பிகள் திருத்தொண்டர் திருவந்தாதி பாடித்துதித்ததையும் சேக்கிழார் முறையாகச் சொல்லக் கேட்டுப் பரவசமடைந்து மக்களும் இவைகளை உணரவேண்டும் என்று இவ்வரலாறுகளை விரித்து ஒரு பெருங்காப்பியமாகச் செய்துதரும்படி சோழன் வேண்டினான்.

அதற்கிசைந்த சேக்கிழார் தில்லை நகர் சென்று நடராஜப் பெரு மானை வணங்கி வேண்ட நடராஜப் பெருமான் அசரீரியாக **''உல கெலாம்''** என்று அடியெடுத்துக் கொடுத்து உணர்த்தி அருள இப்பு ராணத்தைப் பாடி முடித்தார். அதை அறிந்த மன்னன் மிகவும் மகிழ்ந்து தில்லைக்கு வந்து நடராசரையும் ஆசிரியரையும் வணங்கி னான். நடராசரது அருள் ஆணைப்படி அவரே விரைந்துரைக்க ஆயிரக்கால் மண்டபத்தில் ஏற்பாடு செய்தான். அதற்கு எல்லா இடங் களுக்கும் தகவல் அனுப்பி சிற்றரசர்கள், அமைச்சர்கள் முதலிய பலரையும் வரச்செய்தான். தில்லைவாழ் அந்தணர்களும் மடாதிபதி களும் கலந்து கொண்டனர். சித்திரைத் திருவாதிரையில் தொடங்கி அடுத்த சித்திரைத் திருவாதிரையில் அரங் கேற்றுரையை நிகழ்த்தி முடித்தார். அரங்கேற்றத்திற்கு வந்தவர்களுக்கெல்லாம் உணவும் உறைவிடமும் அரசனே முன்னின்று ஏற்பாடு செய்து கொடுத்தான்.

நிறைவிழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடினான்.

அரசன் ஆசிரியரையும் புராணத்தையும் யானைமேல் ஏற்றி தானும் உடன் ஏறி ஆசிரியருக்குத் தானே வெண்சாமரை வீசி ஊர்வ லம் வந்தான். ஆசிரியருக்கு ஞான முடி சூட்டித் **''தொண்டர் சீர் பரவுவார்''** என்ற பட்டத்தை அளித்துப்போற்றினான். திருத் தொண் டர் புராணத்தை பன்னிரண்டாவது திருமுறையாகச் சேர்த்து செப் பேடு செய்து நடராசர் சந்நிதியில் வைத்தான்.

அம்பலவாணர் அடியெடுத்துக் கொடுத்து உள் நிறை உணர்த்தி யருள ஞானக் கண்ணாலே நிகழ்ச்சிகளைக் கண்டறிந்து புராணத் தைப் பாடியருளினார். நடராசப் பெருமானின் அருளாணைப்படி ஆயிரக்கால் மண்டபத்தில் அரங்கேற்றமும் நடந்தது. அதனால் திரு வள்ளுவரைப் போல் இவரும் **தெய்வப்புலவர்** என்ற பெருமைக்கு உரியவரானார்.

புராண அமைப்பு: ஆசிரியர் இதை **மாக்கதை** என்று குறிப்பிடுகிறார் (பாடல் 3) அவரே இன் தமிழ்ச் செய்யுட்கள் கொண்டவை என்கி றார். இரண்டு காண்டங்களாகவும் பதின்மூன்று சருக்கங்களாகவும் வகுத்துப் பாடியுள்ளார். 10 பாக்கள் கொண்ட பாயிரமம் உண்டு. மொத்தம் 4286 திருவிருத்தச் செய்யுட்கள் கொண்டது. இவைகளில் 33 பாக்கள் இடைச் செருகல் என்று பிற்காலத்தவர் கூறியுள்ளார்.

புராண வரலாறு திருக்கயிலையில் தொடங்கி திருக்கயிலையி லேயே நிறைவு பெறுகிறது. சுந்தரரின் திருத்தொண்டத் தொகை வரிசையிலேயே அடியார்களின் வரலாறுகளைப் பாடியுள்ளார். பல பாடல்கள் தேவாரப்பாக்களுக்கு விரிவுரை போல அமைந்துள்ளன. சில பதிகங்கள் பாடப்பெற்றுள்ள சந்தத்திலேயே வரலாற்றுப் பாடல்க ளும் அமைந்துள்ளன. சில அற்புதங்கள் நிகழ்ந்தமைக்குரிய கார ணங்களையும் கூறப்பட்டுள்ளன. அந்தந்த நாட்டுக்கு ஏற்பவும் அந் தந்த மரபுக்கு ஏற்பவும் வரலாற்றின் சூழ்நிலைக்கு ஏற்பவும் செய்தி களை அமைத்துள்ளார். பெண்களைப் பற்றிக் கூறும் போதெல்லாம் ''அர்'' விகுதியையே போட்டுக் குறிப்பிட்டுள்ளார். மங்கலமற்ற சொற்களைத் தவிர்த்துள்ளார் (உதாரணம் கொலை) தெய்வ நலம் குறையாமல் நிகழ்ச்சிகளை அமைத்துள்ளார். அடியார்களின் செயல் களை எல்லாம் அருளிச் செயல்கள் என்றே குறிப்பிட்டுள்ளார். வணங்கினார் என்று கூறாமல் வணங்கி அருளினார் என்று குறிப்பிடு வார். செயல் செய்ததை, செய்து அருளினார் என்பார். ஒவ்வொரு வரலாற்றிலும் பக்திச் சுவை நன்கு விளங்கும்படி பாடியுள்ளார். விளக்கும் உவமைகள் எல்லாமே சிவ சிந்தனை பொதித்தவை.

அம்பலவாணர் எடுத்துக் கொடுத்த **''உலகெலாம்''** என்ற தொடரை முதலிலும் இடையிலும் முடிவிலும் வைத்துப் பாடியிருப் பது போற்றுதற்குரியது **''உலகெலாம்** உணர்ந்து ஓதற்கரியவன் என்று பாயிரமுதல் பாட்டிலும் திருஞானசம்பந்தர் புராண 216 வது பாடலில் ''ஓதி ஏறினார் உய்ய **''உலகெலாம்''** என்று இடையிலம் வெள்ளானைச் சருக்கத்தில் 53 வது கடைசி பாடலில் ''எங்கும் நிலவி **''உலகெலாம்''** என்று கடையிலும் பாடியுள்ளார். புராணத்தை உல கெலாம் என்று முடித்திருப்பது அருமையிலும் அருமை.

பெரியபுராணச் சிறப்பு: இப்புராணத்தில் நாயன்மார்கள் வாழ்ந்த காலத்தில் இருந்த தமிழக வரலாறும் உரிய இடங்களில் நன்கு கூறப் பட்டுள்ளது. அப்பர் காலத்துப் பல்லவ அரசன் சமணத்தினின்றும் நீங்கி சைவம் சார்ந்து குணதர வீச்சம் எடுத்தமை, சோழர் குறுநில மன்னராக வாழ்ந்தமை புகழ்ச்சோழர் ஆண்டமை, பல்லவர் வாதா பியை அழித்தமை நெல்வேலியில் நெடுமாறன் போர் செய்து வென் றமை கோட்புலியார் காலத்துப் பஞ்சம் அப்பர் சம்பந்தர் காலத்துப் பஞ்சம், இராச சிம்மன் கயிலாச நாதர் கோயில் கட்டியது ஆகிய வரலாற்றுச் செய்திகளும் பல தவங்களின் வரலாறுகளும் இடம் பெற்றுள்ளன.

கண்ணப்ப நாயனார் வரலாற்றில் கண்ணப்பரைப் பற்றி சிவ கோசரியார் கனவில் சிவபெருமான் கூறியது மிகச் சிறப்பாக அமைந் துள்ளது. பாடல் 157 ''அவன் வடிவே நம்பக்கல் அன்பு அறிவு நமை அறியும் அறிவு. அவன் செயல் எல்லாம் நமக்கு இனியவாம்'' என்று சுருங்கக்கூறி விளங்க வைத்துள்ளார். ஆனாய நாயனார் புராணத் தில் குழல் அமைப்பைப் பற்றியும் குழல் இசையைப் பற்றியும் விளக் கியுள்ளார் - பாடல்கள் 25, 26, 27 இயற்பகை நாயனார் மனைவியை மெய்த்தவர் கேட்டவாறே கொடுத்தனன் என்று கூறியபோது **கலங்கி மனந்தெளிந்து** பின் ''நீர் உரைத்தது ஒன்றை நான் செயும் அத்தனை யல்லால் உரிமை வேறுளதோ எனக்கு'' என்று கூறி வணங்கினாள் என்பதோடு அவளை **திருவினும் பெரியாள்''** என்று குறிப்பிட்டு இலக்குமியை விட பெரியவள் என்று அவள் கற்புத்திறத்தை விளக்கி யுள்ளது எத்துணைமாட்சி. ஏனாதி நாயனார் புராணத்தில் போர்க்க ளத்தையே படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

திருமலைச் சிறப்புப் பகுதியில் தென்திசையைப் பலவாறாகப் போற்றியுள்ளார். பாடல் 25ல் மாதவம் செய்த தென் திசை என்றும் பெருமை சேர் பெரும் பற்றப் புலியூர் ஒருமையாளர் வைப்பாம் பதி இருக்கும் இடம் என்றும் அத்தன் ஆடும் அம்பலம் இருக்கும் இடம் என்றும் காதல் மங்கை இதய கமலமாய் மாதோர் பாகன் உறையும் ஆரூர் இருக்கும் இடம் என்றும், எம்பிராட்டி கம்பை யாற்றில் வழி பட்ட உம்பர் போற்றும் காஞ்சிமா நகரம்யுடையது என்றும், நங்கள் நாதனாம் நந்தி தவம் செய்து பெருமை பெற்ற ஐயாறு என்ற தவம் இருக்குமிடம் என்றும் தேசம் எல்லாம் விளங்கிய தோணிபுரம் இருக் குமிடம் என்றும் பலபட பல பாக்களில் புகழ்ந்து உள்ளார்.

சிறுத் தொண்டர் மனைவி திரு வெண்காட்டு நங்கையை நிறை தவத்துப் **போரைவர்** தமக்குப் பெருகுதிரு என்றும், மனை அறத்தின் வேர் என்றும் விளக்கு திரு என்றும் போற்றியிருப்பது சிந்தனைக்கு ஓர் விருந்து.

கழறிற்றறிவார் நாயனார் புராணத்தில் அவருக்கு அரசு உரிமை கிடைத்தபோது சிவபெருமானின் முன் சென்று **அன்பு நிலைமை வழுவாமை அரசு புரக்க அருளுண்டேல்** தாம் அரசு ஏற்பதற்காக விண்ணப்பம் செய்தார் என்னும் காதல்வழி பாடும் **யாவும் யாரும் கழறினவும் அறியும் உணர்வும்** தாவில் விறலும் தண்டாத கொடையும் படைவாகன முதலாம் காவல் மன்னர்க்குரிய னவும் எல்லாங் கைவந்துறப் பெற்றார் என்றும் கூறி வழிபாட்டின் முனைப்பை குறிப்பிட்டுள்ளார்.

இவர் சுந்தரரைப் பார்க்கத் திருவாரூக்குச் சென்ற போது வழி யில் அவர் வழிபட்ட தலங்களின் சிறப்பையும் பெருமையையும் பலவாறாகப் போற்றியிருப்பது தல யாத்திரையின் முக்கியத்து

வத்தை விளக்கியுள்ளார்.

திருவாரூரில் சுந்தரருக்காகப் பரவையார் தம்பால் சிவபெருமான் தூதராகச் சென்று அவர்களின் ஊடலைத் தீர்த்து வைத்த நிகழ்ச்சியைப் பல பாடல்களில் உள்ளம் உருகும் வண்ணம் விவரித்துள்ளார்.

இங்ஙனம் பெரியபுராணம் முழுதும் தெய்வீகக் கலை களஞ்சியம் என்பதும் தெய்வீக இலக்கிய நூல் என்பதும் இதனை ஓதுவார் உணர்வர்.

சேக்கிழார் சிறப்பு: கொற்றவன் குடி உமாபதி சிவச்சாரியார் சேக்கிழார் சுவாமிகள் புராணம் என்று இயற்றியுள்ளார். திரிசிரபுரம் மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை சேக்கிழார் சுவாமிகள் பிள்ளைத் தமிழ் என்ற நூலை இயற்றியுள்ளார். இவ்விரு நூற்களும் நூலாசிரியரையும் நூலையும் புகழ்ந்து பேசுகின்றன.

ஆசிரியர் சோழநாட்டுத் திரு நாகேச்சுரத்து இறைவரைத் தமது ஆன்மார்த்த நாயகராகக் கொண்டு வழிபட்டு வந்தனர் என்று உமாபதியார் அறிவிக்கின்றார். அங்கு அவர் பலகாலம் தங்கிப் பலத்திருப்பணிகளும் செய்திருக்கின்றார். அங்குள்ள இறைவரை வழிபட்ட நல்வினைப் பயனாலே அவர் பெற்றோர் அவரையும் அவர் தம்பி பாலறாவயரையும் பெற்றெடுத்தனர் என்று அவர் அத்தலத்தில் பல காலந்தங்கியும் அதனைத் தமது அரசியல் அலுவலகமாகவும் வழிபாடு தலமாகவும் கொண்டொழுகினர் என்றும் அந்நினைவு பற்றியே தமது குன்றத்தூரில் திரு நாகேச்சுரக் கோயில் அமைத்தனர் என்றும் சொல்லப்படுகிறது.

சேக்கிழார் பெருமான் பெரியபுராண அரங்கேற்றத்திற்குப் பிறகு தில்லையிலே தங்கிக் கூத்தப்பெருமானுக்குத் திருத்தொண்டு புரிந்து அடியார்களுடன் கூடி அருந்தவத்தினிலிருந்து பின் அம்பலவாணரது எடுத்த திருவடி நிழலில் சேர்ந்து இன்புற்றனர். இன்று குன்றத்தூரில் அவருடைய கோயில் சிறப்புற விளங்கி வருகிறது. ஆண்டு தோறும் அவருக்கு விழா எடுக்கப்படுகிறது.

நூற்பயன்: மக்களின் சிந்தையிருள் போக்கி ஞானவொளி தந்து இகத்தும் பரத்தும் இன்பமளித்துப் பேரின்ப முத்திரை அடைய உதவும் கலை ஞானங்களை அறிந்து ஒழுகும் உலகியல் நல்வாழ்வுக்கு இது பெருந்துணையாகும்.

முடிவு: தொகையா நாவ லூரானி
தொடுத்த திருத் தொண்டப்பெருமை
வகையால் விளங்க உயர்நம்பி
யாண்டார் வகுப்ப மற்றதனைத்
தகையா அன்பின் விரித்துலகோர்
தம்மை அடிமைத் திறப்பாட்டின்
உகையா நின்ற **சேக்கிழான்**
ஒளிர் பொற் கமலத் தாள்பணிவாம்.

— திருவானைக்காப் புராணம்
சேக்கிழார் அடிபோற்றி

எழுவகைக் குற்றங்கள்

இழிந்த காமமும் இடர்தரு கோபமும்
பழிவரு லோபமும் பாழ்த்த மோகமும்
செருக்குறு மதமும் செகுக்கும் அழுக்காறும்
அறிந்தே கொலைபுரி அளவிலாப் பாதகச்
செயலுமாம் ஏழும் சேர்தரா தகற்றுமின்

(வள்ளலார் ஆற்றுப்படை)

திருமூலர்

அறிவில்லாதார் அன்பு என்பது உயிர்க்குணம் எனவும், சிவம் என்பது இறைமை எனவும் வேறுபடுத்திக் கூறுவர். இரண்டும் வெவ்வேறானவை அல்ல. அன்புதான் சிவமாவது. இதை அனுபவித்தால் அறிபவர்கள் தாங்களும் அன்பே சிவமாக அமர்ந்து மகிழ்ந்திருப்பார். இவையிரண்டும் மணியும் அதன் ஒளியும் போன்றவை. அன்பெனப்படுவது இறைவனது அருள்தான். அருளே இறையுருவாகின்றது. இறைவன் தத்துவங்களைக் கடந்து நிற்பவன்; ஆயினும் உரை கடந்து நிற்பவனல்லன், தன்னோடு நிற்பதாகிய பரம்பொருளை அன்பினதாலன்றி உயிர் அறிய இயலாது. அறிவதற்கும் அன்பு தான் பயன்படுவது, அன்பே துணை.



வள்ளலார் ஆற்றுப்படை

(அருள் விளக்கம் அண்ணாமலை அடிகளார்)

ஆற்றுப்படையின் இலக்கணம்

வள்ளல் இராமலிங்க அடிகளிடம் வழிப்படுத்துதல் என்பது பொருள். அருட்பிரகாசர் வள்ளல் பெருமானிடம் அருளுபதேசம் பெற்றுத் திரும்பும் ஆன்மநேய அன்பர்கள் தம் எதிர் வரும் ஆன்மநேய அன்பர்களைக் கண்டு தாம் பெற்ற பேற்றினை அவர்களும் பெற்றுய்யும் பொருட்டு அவர்கள் செல்லுதற்குரிய வழித்தடங்கள் காணும் இடமும் காலமும் கண்டபோது உரையாடும் திறத்தினையும் கூறி அடிகளிடம் வழிப்படுத்துதல் ஆற்றுப்படையின் இலக்கணமாகும். இது தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்று. ஆறு–வழி. படை–படுத்துதல்.

திருச்சிற்றம்பலம்

கடவுள் வாழ்த்து

அப்பன் அருள்வேண்டி ஆற்றுப் படைநூலை
ஒப்பவே செப்புவன் ஓர்ந்து (குறள்)

நூல்

(நிலைமண்டில ஆசிரியப்பா)

உலகம் போற்றும் உயர்நெறி அறிந்தே
இலகும் சமரச சன்மார்க்கம் ஈந்தருள்
திருவருட் பிரகாசர் வள்ளலார் திருவடி
விரும்பித் துதித்து வியன்பே ரருளுரை
உணர்ந்தே எம்மூர் திரும்பும் எம்மெதிர்
உற்றிடும் உயிர்கட்(கு) உறுகண் செய்யா
நற்றவச் செல்வர்காள் நலம்பெறப் போந்தீர்
பூசநன் னாளாய்ப் பொருந்தியும் உளதே
ஐயா வழங்கும் அருளுரை கேண்மின்:

உபதேசம்

''நல்வழி நாடிடும் நண்பர்காள் வந்தனம்
எழுவகைப் பிறப்புள் ஏற்புடைப் பிறப்பு
விழுமிய மானிடப் பிறப்பே யாகும்
இப்பிறப் பதனில் எய்துதற் குரித்தாம்
செப்பரும் நற்பயன் சிந்திப் பீரேல்
பிறந்தும் இறந்தும் பெருந்துயர் உழல்வதின்
பிறவா இறவாப் பெருநிலை பெரிதே
இந்நிலை யுற்றிட எவர்க்கும் பொருந்தும்
செந்நெறி சமரச நன்னெறி யன்றோ!
தன்னுயிர் போலவே மன்னுயிர் ஓம்புமின்
எத்தகு நிலையிலும் எத்தகு பேதமும்
சித்தமே கொள்ளாத் தெளிவினைப் பெறுமின்
இழிந்த காமமும் இடந்தரு கோபமும்
பழிவரு உலோபமும் பாழ்ந்த மோகமும்
செருக்குறு மதமும் செகுக்கும் அழுக்காறும்
அறிந்தே கொலைபுரி அளவிலாப் பாதகச்
செயலுமாம் ஏழும் சேர்தரா(து) அகற்றுமின்
ஏமசித் தியுடன் சாகாக் கல்வியும்
தத்துவ நிக்கிரகம் செய்தலும் கடவுள்
நிலையினைப் புரிந்து அவர்மயம் ஆதலும்
நான்காம் உறுதிப் பொருள்களை நாடியே
அடைந்திடும் ஒழுக்கமும் அம்முறை நான்காம்
இந்திரிய ஒழுக்கமும் கரண ஒழுக்கமும்
ஜீவ ஒழுக்கமும் ஆன்ம ஒழுக்கமும்
கடைப்பிடித் தொழுகலைக் கடமையாக் கொண்மின்
பசித்தும் தனித்தும் விழித்தும் இருக்கப்
பயிற்சியும் பல்கால் பயின்றே பழகுமின்
மயலுறு நும்மனம் மாசற்றே விளங்கும்
மனமலர் ஏகியே மகிழ்ந்திடும் அருளிறை
சத்திய ஞான சபையுமுள் காண்குவிர்
நித்திய ஞான நிறையமு(து) உண்குவிர்
முத்தேக சித்தியை முன்னவன் அருள்செய
மரணமே இலதாம் பெருவாழ்(வு) எய்துவிர்''
என்றே அடிகள் இயம்பிடும் உபதேச
மந்திர மொழிகள் மாண்பெழ உணர்வீர்.

வழிப்படுத்துதல்

ஆகவே அன்பர்காள் அப்பேறு பெறவே
இரயிலில் பேருந்தில் வண்டிகள் தம்மிலும்
அருகிருப் பதாயின் அன்புகொடு நடந்தும்
உத்தர ஞான சிதம்பரம் எனப்படும்
வடலூர் செல்மின் வயங்குபெரு வெளியின்
இடையே உயர்ந்துள எழில்ஞான சபையில்
எழுதிரை நீங்கிட எழுஞ்ஜோதி தொழுது
வழுத்துமா மந்திரம் வாயாரப் போற்றி
வழுவாமல் அயலே வள்ளலார் மூட்டிய
அணையா நெருப்புறு அத்தர்ம சாலையும்
கண்டுமே வணங்கிக் கடுகி நடந்துமே
தென்மேற் றிசையில் திருமேட்டுக் குப்பம்
சித்தி வளாகத் திருக்கோயில் நுழைந்ததும்
பத்தி மிகுந்திடப் பரிந்துவலம் வந்ததும்
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்திக்
கண்ணினீர் ததும்பிக் கால்வழி வழிந்திடச்
சிரமேல் கூப்பிய கையின ராகிநம்
ஐயா அருட்கரம் ஏற்றிய அருட்சுடர்
கண்டுமே தொழுது கண்மூடி யோகுற
யாமுணர் நல்லுரை நீவிரும் உணர்ந்தே
வம்மின் வம்மின் வாழுநெறி இஃதே.
இராமலிங் காயநம இராமலிங் காயநம
அருட்பெருஞ் ஜோதி அருட்பெருஞ் ஜோதி
தனிப்பெருங் கருணை அருட்பெருஞ் ஜோதி.

திருச்சிற்றம்பலம்

1. வலிய பாறை நிலத்தின் கண் உள்ள பட்டுப்போன மரம் தழைத்து வளராததுபோல, உள்ளத்தில் அன்பில்லாதவனுடைய வாழ்க்கையும் சிறப்புற்று விளங்காது. உயிர் உடலில் நிலைபெற்று வாழ்வதே அன்புடைய வாழ்க்கையின் பயனேயாகும். அன்பற்றவரின் உடல் தோலால் போர்க்கப்பட்ட வெறும் எலும்புக் கூட்டிற்கு நிகர், உயிரின் தத்துவம் அன்பிலேயே உள்ளது. அன்பில்லையேல் அவ்வுடல் பிணத்திற்கு நிகர் (குறள் 78, 73,80)

2. அருட்செல்வமே பல்வகைச் செல்வங்களுள்ளும் சிறந்த செல்வம். அஃது உயர்ந்தோரிடம் தான் அமையும், பொருட் செல்வம் அற்பர்களிடத்தும் உள்ளது. நல்ல நெறியில் நின்று ஆராய்ந்திடில் அருளே நமக்குத் துணையாகும் என்பதை அறிவோம். இம்மையில் சுகம் பெறப் பொருள் வேண்டு. மறுமையில் நலம்பெற அருள வேண்டும். அருளே மறுமைக்குச் செல்வம். அன்பெனும் தாய் பெற்ற குழந்தையே அருளாகும். (அன்பின் முதிர்ச்சியே அருள்) அக்குழந்தை பொருளென்னும் செவிலித்தாயால் வளரும் (குறள் 241, 242, 247, 757).



மங்களா சாசனம்

(சிந்தாமணிச் செம்மல். மு. இராமசாமி, இராசிபுரம்.)

வாழ்த்து

மனித வாழ்க்கையின் வளர்ச்சிக்கு வித்தாக அமைவது வாழ்த்து. இது, அன்பில் தோய்ந்த அமைதி நிறைந்த உள்ளத்தில் தோன்றுவது. அத்தகைய உள்ளத் தினர் சான்றோர் எனப்படுவர். அவர்கள் ஆன்று அவிந்து அடங்கிய கொள்கையினராக விளங்குபவர்கள்

இத்தகைய உயர்ந்த கொள்கைப் பிடிப்புள்ள சான்றோர்கள், தமது தூய உள்ளத்தில் எழும் நல்லுணர் வோடு, வாழ்த்துவார்கள். அந்த நல்வாழ்த்தினைப் பெற்றவர்கள், தமது வாழ்க்கையில் நல்ல வளர்ச்சி பெற்று, பிறர் பயன்படும் முறையில் வாழ் வார்கள்.

அனுபவத்தாலும், வயதாலும், தூய்மையாலும் பெரியவர்களாகயிருப்பவர்கள், தம்மினும் குறைந்த வயதினரை வாழ்த்துவது உலகியல் நெறி. வாழ்த்துபவர் பெரியவர், வாழ்த்துப் பெறுபவர் சிறியவர். இது உல கியல் நடைமுறை. ஆனால் ஆன்மீக நெறி இதற்கு மாறு பட்டதாக அமைகிறது.

ஆன்மீக நெறி

எது ஆன்மீகம்? மனித உடலில் தங்கி உயிருக்கும் உயிராக அமைந்திருப்பது ஆன்மா. உடலை இயக்குவது உயிர். உயிரை இயக்குவது ஆன்மா. இயங்கும் உடல் கண்ணுக்குப் புலனாவது அதனை இயக்கும் உயிர் கண்ணுக்குப் புலனாகாதது. கருத்துக்கும் புலனாவது. அந்த உயிரை இயக்கும் ஆன்மா. கருத்துக்கும் புலனா காதது. உடல் உணர்வுக்கும் அப்பாற்பட்ட ஒரு பேரு ணர்வினால் உணரப்படுவது. ஜீவனை (உயிரை) இயக்கு வதால் ஜீவான்மா எனப்படும். இது அந்தராத்மா என்றும் பேசப்படும்

இந்த ஜீவான்மாவையும் இயக்கும் ஆன்மா ஒன்று உண்டு. அது, 'பரமான்மா' என்று தத்துவஞானிகளால் கூறப்படும். ஜீவான்மாவுக்கும் பரமான்மாவுக்கும் உள்ள தொடர்பு என்ன? உடலுக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பு யாது? இவைகளின் இயக்கம் எவ்வாறு நடைபெறு கின்றன ? என்பதை விளக்குவதே ஆன்மீகம் என்று சொல்லப்படும்.

இந்த ஆன்மீக விளக்கத்தில், பரமான்மா, உயர்வற உயர்ந்த பரம்பொருள் என்றும், நிலையில்லாத உடலில் உயரோடு இணைந்துள்ள ஜீவான்மா, தாழ்ந்தது என்றும் தெளியலாம். தாழ்ந்த நிலையினவான ஜீவான்மா, உயர் நிலையில் நிற்கும் பரமான்மாவை அணுகுவது எப்படி?

அதற்கு உதவுவது பக்தி என்ற பேருணர்வு. ஜீவான்மா, பக்திப் பேருணர்வு நிறையப் பெற்றால் பக்தனாக உயர்வு பெறலாம். பக்தனாகிய ஜீவான்மா பரமான் மாவாகிய பகவானை நெருங்கி விடுகின்றது. நெருங்கிய பக்தன், தனது, அளவுகடந்த, ஊற்றெழுந்து ஓடி வந்த பக்திப் பெருக்கினால், தன்னினும் மிகமிக மேம்பட்ட பகவானையே வாழ்த்தத் தொடங்கி விடு கின்றான்.

வாழ்த்துவது பக்தன். அவன் அடியான், சிறிய ஞானத்தன். வாழ்த்துப் பெறுவது பகவான். அவன் ஆண்டான், மயர்வறமதிநலம் அருளும் தேவாதி தேவன். இது ஆன்மீக நெறி.

பக்தன் பகவானை வாழ்த்துவதற்குத்தான் மங்களா சாசனம் என்று பெயர்.

மங்களா சாசனம்

இந்தச்சொல் தொடரை, 'மங்கள + சாசனம்" என்றும். மங்கள + ஆசனம் என்றும் என்றும் பிரிக்கலாம். இதுவடமொழி சொல்தொடர் 'மங்கள + சாசனம்' 'மங் களாசாசனம்' என்று இயையும். இதனை தீர்க்க சந்தி என்று வடமொழி இலக்கணம் கூறும்.

மங்கள + ஆடனம் என்று பிரித்துப் பொருள்காண வேண்டும் என்பது, பிரதிவாதி பயங்கர அண்ணங்கராச் சிரியர் அவர்களது கொள்கை.

'(பகவானுக்கு) எம் பெருமானுக்குக் காப்பிடும் விஷயம்' என்பது ஆச்சாரியார் கண்ட பொருள்.

சாசனம் – உறுதிப்படுத்துதல். பகவானுக்கு, மங் களத்தை உறுதிப்படுத்துவது என்பது சில வைணவ அறிஞர் பெருமக்களது கருத்து. அதாவது, 'மங்களா சாசனம்' என்றால், மங்கல வாழ்த்து என்று பொருள்' என்பது வைணவச் சான்றோர்கள் தரும் விளக்கம்.

பெரியவர்கள் சிறியவர்களை வாழ்த்தும் உலகியல் நெறியில் வாழ்த்து என்ற அளவில் நிற்கும். பக்தன் பகவானை வாழ்த்தும் ஆன்மீக நெறியில், மங்கல வாழ்த்து (மங்களா சாசனம்) என்று உயர்வு பெறும்.

'மங்களா சாசனம்' என்ற இந்த அருமையான, பொருள் பொதிந்த தொடர், வைணவ சம்பிரதாயத்தில் மட்டும் வழங்கும் உரிமை பெற்றதாகும்.

பெருமாள் எழுந்தருளியிருக்கும் வைணவத் திருத் தலங்கள் 108. இந்த நூற்றெட்டுத் திருத்தலங்களும் ஆழ்

வார்களால் மங்களாசாசனம் செய்யப் பெற்றவைகள். பன்னிரு ஆழ்வார்களும், தமது பாசுரங்களால் மங்களா சாசனம் (மங்கல வாழ்த்து) செய்யப்பட்டதால் தான், இந்த 108 கோயில்களும் திவ்ய தேசத் திருத்தலங்களாயின.

மங்களா சாசனத்தின் பெருமை

ஆழ்வார்கள் பன்னிருவர். அவர்களுள் ஒருவருக்குப் பெரியாழ்வார் என்று பெயர். இவருக்கு இயற்பெயர் விட்டு சித்தன்' (விஷ்ணு சித்தர்) என்பது. 'பெரியாழ்வார்' ஆனது எப்படி? இவர் பொய்கையார் முதல் குலசேகரர் இறுதியாக உள்ள ஆழ்வார்களைக் காட்டிலும் மூத்தவரும் அல்லர்! நம்மாழ்வார். திருமங்கை ஆழ்வார் போன்று ஆயிரக் கணக்கான பாசுரங்களைப் பாடியவரும் அல்லர்! அப்படியிருக்க 'பெருமை' என்ற பட்டத்திற்கு உரியயவரானது எப்படி?

இதனை விளக்குகின்றது உபதேசரத்தின மாலை என்ற வைணவப் பிரபந்தம். இது, மணவாள மா முனிகளால் அருளிச் செய்யப் பெற்றது.

'மங்களா சாசனத்தில் மற்றுள்ள ஆழ்வார்கள் தங்கள் ஆர்வத்தளவு தான் அன்றி – பொங்கும் பரிவாலே வில்லிபுத்தூர்ப் பட்டர்பிரான் பெற்றான் பெரியாழ்வார் என்னும் பெயர்.

என்ற வெண்பா, பட்டர் பிரான் (விட்டு சித்தன்) பெரியாழ்வாராகப் போற்றப்பட்டதன் காரணத்தை விளக்குகிறது.

'எம்பெருமானுக்கு என்வருகின்றதோ என்று வயிறு பிடித்து மங்களா சாசனம் செய்வதில் இவருடைய காதல் பெரிதானது பற்றியே, இவரைப் பெரியாழ்வார் என்றனர் என்றதாயிற்று' என்பது பிரதிவாதி பயங்கரம் அவர்கள் தரும் தெளி பொருளாகும்.

'பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத் தாண்டு

பலகோடி நூறாயிரம்

மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா ! உன் சேவடி செவ்விதிருக்காப்பு'

என்பது, பகவானுக்கு, பக்திப் பெருக்கால் பெரியாழ்வார் பாடிய மங்களா சாசனப் பாசுரம். இதுவே, நாலாயிரத்திவ்யப் பிரபந்தத்தின் முதல் பாசுரமாகவும் விளங்குகின்றது.

இந்த அரும்பெரும் நிகழ்ச்சி. மங்களா சாசனத்தின் பெருமையை விளக்குகின்றது.

மற்றைய ஆழ்வார்களின் மங்களா சாசனம்

பட்டர் பிரான், பாண்டியனது அவைக்களத்தில் நாராயணனது பரத்துவத்தை உறுதிப்படுத்தித் தெளிவாக்கினார். தனது பரத்துவ நிலையை மன்னன் முதலிய மக்கள் அனைவர்க்கும் தெளிவுபடுத்திக் காட்டிய பட்டர்பிரான் (விஷ்ணு சித்தர்) மகிழ்ந்து ஆனந்தம் பெற வேண்டி, பகவான், கருடவாகனனாய் விண்ணில் நின்று காட்சி கொடுத்தான். கிடைத்தற்கரிய காட்சியைக் கண்டு களித்த பட்டர் பிரான், இந்த அழியா அழகுக்குக் கண்ணேறு வந்து விடுமோ, என்ற அச்சத்தால், அன்பு மீதூரப் பெற்றவராய் 'பல்லாண்டு' என்று பாசுரம் இட்டு பெரியாழ் வாராக உயர்ந்தார்.

இத்தகைய தொரு நிகழ்ச்சி, மற்றைய ஆழ்வார்களின் பக்தி வாழ்க்கையில், ஏற்படும் வாய்ப்பு அவர்களுக்குக் கிட்டவில்லை. ஆயினும் அவர்களும் மங்களாசாசனம் செய்தார்கள். அவர்களது மங்களாசாசனம், எல்லாக்காலத்து மக்களுக்கும் பயன்படுவனவாய் அமைந்துள்ளன. எப்படி?

ஐவனக் நிலை

அங்கு இங்கு எனாதபடி எங்கும் நிறைந்துள்ள (விஷ்ணு – எல்லா இடங்களிலும் நிறைந்தவன்) அந்த நாராயணன், ஜீவராசிகளைப் பாதுகாப்பதற்காக தனக்கு ஏற்படுத்திக் கொண்ட நிலைகள் ஐந்து இது வைணவ சித்தாந்தம் கூறும் தெளிபொருள்.

பரம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சை என்பன அந்த ஐந்து நிலைகள். பரமபதத்தில், திருமகள் கேள்வனாய், நித்திய சூரிகள் வணங்கி, வழிபாடு செய்யும் தோற்றத்தினனாய் வீற்றிருப்பது பரநிலை. திருப்பாற்கடலில், அனந்த சயனனாய் காட்சியளிப்பது வியூக நிலை. இதுதான் அவதாரம் செய்வதற்குக் கால்கொண்ட நிலை. மூன்றாவது, (விபவம்-அவதாரம்) இராமனாகவும், கண்ணனாகவும், அவதாரம் செய்து மக்களோடு மக்களாய் ஒன்றி நின்று வாழ்ந்து காட்டிய நிலை. இப்படி எடுத்த அவதாரங்கள் பத்து. நான்காவது, உயிர்ப் பொருள், உயிர் அற்ற பொருள் (இயங்கு திணை, நிலைத்திணை) அனைத்திலும் கலந்து கிடக்கும் நிலை. இது, அந்தர்யாமியாய், (கண்ணுக்குப் புலப்படாமல்) அனைத்துப் பொருள்களோடும் இணைந்து நிற்பதாகும். ஐந்தாவது; அனைத்து உயிரினங்களும் தம் கண்ணால் கண்டு களிக்கும் வகையில் ஆங்காங்கு, கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அர்ச்சை நிலை. இதை, அர்ச்சாவதாரம் என்றே வைணவப் பெருமக்கள் போற்றுவார்கள்.

இந்த ஐந்து நிலைகளில், அர்ச்சை நிலையே, எல்லாக் காலத்து மக்களும் கண்டுகளிப்பதற்கு உரிய தாகும். அதனால், மக்களின் நல்வாழ்வுக்காக, அர்ச்சாவதார மாகிய இந்த நிலையைப் பெரிதும் போற்றிப் புகழ்ந்து பாசுரம் பாடலானார்கள் ஆழ்வார்கள்.

அர்ச்ச நிலையின் பெருமை

'மண்ணுலக மக்களை ஆட்கொள்ளும் நல்ல வழி எது? என்பது விண்ணுலகத் தேவர்களுக்குக் காட்சி கொடுத்துக் கொண்டிருந்த பரமபத நாதனது சிந்தனை. அந்தச் சிந்தனையின் நிறைவுதான் அர்ச்சாவதாரம்.

மண்ணகத்துக் கோயில்களில் வீற்றிருக்கும் மூர்த்திகள் வெறும் கல்லாலும் செம்பாலும் ஆனவைகள் என்று சாதாரண மக்கள் எண்ணுவார்கள். ஆனால், ஆழ்வார்கள். பகவானே, இந்த வடிவில் எழுந்தருளிக் காட்சி கொடுக்கின்றான் என்று நம்புபவர்கள், அந்த நம்பிக்கையைத் தமது பாசுரங்களில் வெளியிட்டுள்ளார்கள் ஆழ்வார்கள். அத்தகைய பாசுரங்களே மங்களா சாசனப் பாசுரங்களாகும்.

பரம் :– பரமபதநாதன்

'திருவாறன் விளை' என்ற திவ்யதேசம் மலை நாட்டுத் திருப்பதிகளுள் ஒன்று. இது நம்மாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப் பெற்றதாகும்.

'இன்பம் பயக்க எழில் மலர்
மாதரும் தானும் இவ் ஏழுலகை
இன்பம் பயக்க இனிதுடன்
வீற்றிருந்து ஆள்கின்ற எங்கள் பிரான்,
அன்புற்று அமர்ந்து உறைகின்ற
அணிபொழில் சூழ் திரு வாறன்விளை
அன்புற்று அமர்ந்து வலம் செய்து
கைதொழும் நாள்களும் ஆகும் கொலோ?'

(திருவாய்மொழி. 7.10.1)

'திருமகளும் தானுமாய், இந்த ஏழு உலகங்களையும் ஆள்வதற்காக, பரமபதத்தில் வீற்றிருக்கும் எம் பெருமானே, இந்தத் திருவாறன் விளை என்னும் திருத்தலத்தில் வந்து கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கின்றான். அத்தகைய பெருமானைக் கண்டு அன்புடன் வணங்கிக் கைதொழும் நாட்களே, பயனுடைய நாள்களாகும்.' என்பது இப்பாசுரத்தின் சுருக்கமான பொருள்.

'பரநிலையில் வீற்றிருக்கும் பெருமானே, இங்கு வந்து அர்ச்ச நிலையில் காட்சி கொடுக்கின்றான் என்று நம்மாழ்வார் மங்களா சாசனம் செய்கின்றார்.

இங்கு எழுந்தருளியிருக்கும் பெருமானுக்கு, 'திருக்குறளப்பன்' என்ற ஒரு புதுத்திருநாமம் வைத்து மகிழ்கின்றார் ஆழ்வார். ஆழ்வாரால் சூட்டப் பெற்ற திருநாமம் (பெயர்) பெருமானது வாமனாவதாரத்தையும், திருக்குறள் நூலையும் பக்தர்களின் உள்ளத்தில் தங்க வைக்கின்றது.

வியூகம் : பாற்கடல் நாதன்

திருவழுந்தூர், சோழ நாட்டுத் திருப்பதிகளுள் ஒன்று. இங்கு எழுந்தருளியுள்ள பெருமானை ஆமரு வியப்பனாகக் கண்டு மகிழ்ந்தவர் திருமங்கை ஆழ்வார். அவர் மங்களாசாசனம் செய்கின்றார் இந்தத் திருத்தலத்தை.

'செங்கமலத் திருமகளும் புவியும் செம்பொன்
திருவடியின் இணைவருட, முனிவர் ஏத்த,
வங்கமலி தடங்கடலுள் அனந்தன் என்னும்
வரியரவின் அணைத்துயின்ற மாயோன் காண்மின்
எங்குமலி நிறைபுகழ் நால் வேதம் ஐந்து
வேள்விகளும் கேள்விகளும் இயன்ற தன்மை
அம்கமலத்து அயன் அனையார் பயிலும் செல்வத்து
அணிஅழுந்தூர் நின்று உகந்த அமரர் கோவே'

(பெரிய திருமொழி. 8.7.1)

'அழகிய திருவழுந்தாரில் நின்று மகிழ்ந்த தேவர் தலைவன், திருப்பாற்கடலினுள் திரு அனந்தன் என்ற பாம்பின் மேல் துயின்று கொண்டிருக்கும் மாயவன் தான், இந்த உண்மையைத் தெரிந்து கொள்ளுங் கள் என்று மக்களுக்கு உணர்த்துகின்றார் மங்கை மன்னன்.

திருப்பாற்கடலில் பள்ளி கொண்டிருக்கும் நிலைக்குப் பிறகு தான் பெருமான் அவதாரம் செய்கின்றான். என்பது வைணவ சமயத் தத்துவம் கூறும் உண்மையாகும்.

அதனை உறுதிப்படுத்தும் வகையில் திருமங்கை ஆழ்வார், இந்த முதல் பாசுரத்திற்குப் பிறகு, பெருமானது பத்து அவதாரங்களையும் இந்தப் பதிகத்துள் பாடியுள்ளார்.

'பன்றியாய் மீனாகி அரியாய் பாரைப்
படைத்து, காத்து உண்டு உமிழ்ந்த பரமன்'

என்பது இந்தப் பதிகத்தின் இறுதிக் கவித்தொடர்.

விபவம் : அவதாரப் பெருமான்

'திருச்சித்திர கூடம்' என்ற திவ்யதேசத்துக்கு, குலசேகராழ்வார் சென்றார். அங்கு வீற்றிருக்கும் எம்பெருமானை இராமனாகவே கண்டு கண் குளிர்கின்றார். குலசேகரர். இராமாவதாரத்தில் நிகழ்ந்த வரலாற்றுச் செய்திகள் அனைத்தையும் இந்தத் திருக்கோயிலிலேயே கண்டு ஆனந்தம் பெறுகிறார் ஆழ்வார்.

"அங்கண்நெடு மதிள்புடை சூழ்" அயோத்தி என்னும்
அணிநகரத்து உலகனைத்தும் விளக்கும் சோதி
வெங்கதிரோன் குலத்துக்கோர் விளக்காய்த் தோன்றி
விண்முழுதும் உயக் கொண்ட வீரன் தன்னை,
செங்கண்நெடுங் கருமுகிலை, இராமன் தன்னைத்
தில்லைநகர்த் திருச்சித்ர கூடம் தன்னுள்
எங்கள் தனி முதல்வனை, எம் பெருமான் தன்னை
என்றுகொலோ கண்குளிரக் காணும் நாளே."

(பெருமாள் திருமொழி 10.1)

சோழ நாட்டுத் திருப்பதிகளுள் ஒன்றாகிய தில்லை (சிதம்பரம்) நகர்த்திருச்சித்ர கூடத்துக் கோயிலில் வீற்றிருப்பது, அயோத்தியில் அவதாரம் செய்த இராமபிரானே என்று சாசனம் (உறுதிப்படுத்தி) செய்து மங்கலம் பாடுகின்றார் குலசேகராழ்வார்.

அந்தர்யாமி : அனைத்துள்ளும் கலந்து நிற்கும் பெருமான்

கண்ணுக்குப் புலப்படாமல், ஒவ்வொருவர் உள்ளத்திலும் தங்கியிருக்கும் நிலைக்கு அந்தர்யாமித்துவம் என்று பெயர். அப்படிப்பட்ட நிலையினனான பெருமானே திருவேங்கடத்தில் வீற்றிருக்கின்றான் என்று பேயாழ்வார் பாசுரம் இடுகின்றார்.

'உளன்கண்டாய் நன்னெஞ்சே ! உத்தமன் என்றும்
உளன்கண்டாய், உள்ளுவார் உள்ளத்து – உளன்
கண்டாய் விண்ஒடுங்கக் கோடு உயரும் வீங்கருவி
வேங்கடத்தான் மண் ஒடுங்கத்தான் அளந்த மன்'

(மூன்றாம் திருவந்தாதி 40)

அர்ச்சாவதாரம் : அர்ச்சநிலைப் பெருமான்

பூதத்தாழ்வார் தனது அனுபவத்தைப் பாசுரமாக்கி யுள்ளார். அந்தப் பாசுரங்களுள் ஒன்று ஒரு இடத்தில் அர்ச்சை நிலையில் காட்சி கொடுக்கும் பெருமானே மற்றோர் இடத்திலும் காட்சி கொடுப்பதாக அமைந் துள்ளது.

'மனத்துள்ளான் வேங்கடத்தான் மாகடலான்,
மற்றும்
நினைப்பரிய நீள் அரங்கத்துள்ளான்
எனப் பலரும்
தேவாதி தேவன் எனப்படுவான், முன் ஒரு நாள்
மாவாய் பிளந்த மகன்'
(இரண்டாம் திருவந்தாதி -28)

'மந்திபாய் வட வேங்கடமாமலை, வானவர்கள்
சந்தி செய்ய நின்றான் அரங்கத்து அரவின்
அணையான்'

என்ற திருப்பாணாழ்வாரின் பாசுரமும் இங்கு சிந்தித் தற்கு உரியது. மண்ணவரையும் விண்ணவரையும் சந்திக் கச் செய்வதற்காகவே திருவேங்கடத்தில் பெருமான் எழுந்தருளியுள்ளான். 'அந்தத் திருவேங்கடத்தானே திரு வரங்கத்தில் பாம்பணையில் பள்ளி கொண்டுள்ளான்' என்பது இப்பாசுரத்தின் கருத்து.

நிறைவு

'இவ்வாறாக ஐந்து நிலையாக அமர்ந்த பெருமானே ஆங்காங்கு, கோயில் கொண்டு எழுந்தருளி, மக்களுக்குக் காட்சி கொடுக்கின்றான்' என்று ஆழ்வார்கள் பாடுகின்றார்கள்.

ஒவ்வொரு கோயிலிலும் உள்ள மூர்த்தியின் மேல், ஒவ்வொரு நிலைப் பெருமானை ஆவாஹனம் செய்கின் றார்கள் ஆழ்வார்கள். ஆழ்வார்களால் பெருமான், மூர்த்தியின்மேல் எழுந்தருளித் தங்குவதாக, சாசனம் (உறுதிப்படுத்துதல்) செய்தபிறகு, அந்தத் திருக்கோயில் மங்கல வாழ்த்தோடு புனிதம் பெற்றுவிடுகின்றது.

ஆழ்வார்களால் மங்களா சாசனம் செய்யப் பெற்ற திவ்யதேசங்களுக்கு மக்கள் சென்று வழிபாடு செய்து உய்வு பெறலாம்.

சிவ விரதம்

சிவ விரதங்கள் எட்டு என்று கந்த புராணத் தின் ஏழாவது காண்டத்தில் கூறப்பட்டுள்ளது. அவை முறையே.

1. சோம வார விரதம் (திங்கட்கிழமை).
2. அஷ்டமி விரதம் (வைகாசி பூர்வபட்ச அஷ்ட மியில்)
3. கேதார மாவிரதம் (ஐப்பசி மாதம் - தீபாவளி)
4. உமா மகேச்சுர விரதம் (கார்த்திகை மாதம் -பௌர்ணமி)
5. திருவாதிரை விரதம் (மார்கழி மாதம்)
6. பாசுபத விரதம் (தைப்பூசம்)
7. சிவராத்திரி விரதம் (மாசி மாதம்)
8. கல்யாண விரதம் (பங்குனி உத்திரம்)

— பாமா பால்வண்ணன்

''கற்பூர ஆரத்தி தத்துவம்''

ஆத்மா பரமாத்மாவோடு கலப்பதைக் குறிக்கும் கற்பூரம் வெள்ளையானது. அது சுத்த சத்துவ குணமுள்ள ஆத்மாவைக் குறிக்கும். கற்பூ ரத்தை ஏற்றியவுடன் அது தீபம்போல எரிவது ஞானாக்கினியால் மலம் நீங்கப் பெற்ற ஆன்மா வானது சிவகரணம் பெற்று நிற்பதைக் காட்டும். கற்பூரம் இறுதியில் ஒன்றுமின்றிக் கரைந்து போவ துபோல ஆன்மாவானது சரீரங்களெல்லாம் நீங்கி இறைவனோடு ஒன்றுபடும். இதைக் காட்டுவதே கற்பூர தீபாராதனையின் தத்துவமாகும்.

— நித்தியானந்தம்



மகாமந்திரத்தின் மகிமை

குங்குலியம் (பழ. சண்முகனார், வடலூர்)

'மகாமந்திரம்' என்ற சொற்றொடர் அருட் பிரகாச இராமலிங்க வள்ளலார் உரைநடைப் பகுதி 'பேருபதேசம்' என்ற தலைப்பில்:-

''இத்தருணம் ஆண்டவர் எல்லாவற்றையும் நீக்கி எல்லோரும் மேலான இன்பத்தையடையும் பொருட்டு முடிவான இன்பானுபவத் திற்குச் சாதகசகாயமான திருவருள் - **''மகாவாக்கியத் திருமந்திரத் தை'** -தமது உண்மையை வெளிப்படக் காட்டும் **''மகா மந்திர வாக்கியத்தை''** எனக்கு வெளியிட்ட அவ்வண்ணம் எனது மெய்ய றிவின் கண் அனுபவித்தெழுந்த - உண்மை அறிவனுபவானந்த இன்பத்தை நீங்கள் எல்லவரும் என் போல் ஐயம் - திரிபு - மயக்கம் இன்றி அடைய என் உள்ளே எழுந்து பொங்கிய ஆன்மநேய ஒரு மைப் பாட்டுரிமையைப் பற்றிக் குறிப்பித்தேன், குறிப்பிக்கின்றேன். குறிப்பிப்பேன். நமது ஆண்டவர் கட்டளையிட்டது யாதெனின், நமக்கு முன் சாதனம் கருணையானதினால் ஆண்டவன் முதற் சாதன மாக:-

''அருட் பெருஞ் ஜோதி அருட் பெருஞ் ஜோதி
தனிப் பெருங்கருணை அருட் பெருஞ் ஜோதி''

என்னும் திருமந்திரத்தை வெளிப்படையாக எடுத்துக் கொண்டார். தயவு, கருணை, அருள் என்பவை ஒரு பொருளையே குறிக்கும். ஆதலால் பெரிய தயவுடைய அறிவே பூரண இன்பமாம். அது ஒப்பற்ற பெருந் தயவுடைய பேரறிவேயாம். இஃது வாச்சியார்த்தம். இவ்வண்ணம் சாதனம் முதிர்ந்தால் முடிவான இன்பானுபவம் பெறுவ தற்குத் தடையில்லை. ''சந்ததமும் வேதமொழி யாதொன்று பற்றின் அதுதான் வந்து முற்றும்'' என்னும் பிரமாணத்தால் உணர்க'' எனக் கூறியருளியதில் வந்திருப்பதைக் காண்கிறோம்.

இச் சிறிய அளவு கூறிய நிலையிலேயே அடிகள் தம் திருவாய் ''திருவருள் மகாவாக்கியத் திருமந்திரத்தை'' என ஒரு முறையும் அடுத்தடுத்தே ''மகாமந்திர வாக்கியத்தை'' என ஒரு முறையுமாக இரண்டு முறை மலர்ந் திருப்பதிலிருந்தே **''மகா மந்திர மகிமை''** தெரியவுள்ளது.

இற்றைக்கு மூவாயிரம் ஆண்டு முந்திய நூல் **'தொல்காப்பி யம்'** சங்க இலக்கியங்கள் இன்று கிடைத்துள்ளவைகளுக்கு முன் ஆயிரம் ஆண்டுகள் முந்தியது. இன்று, உலகம் தழுவி ஓங்கி வரும் நம் ''மறையான'' **''திருக்குறளு''** க்கும் மூலமாகயிருக்கிறது.

நிறை மொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறை மொழி தானே மந்திரம் என்ப - (1435)

என்ற தொல் காப்பிய நூற்பாதான் -

நிறை மொழி மாந்தர் பெருமை நிலத்து
மறை மொழி காட்டி விடும் - (28)

என்ற திருவள்ளுவத்துக்கு மூலமாகிறது.

மறைந்து நிற்பதால் மறை என ஆயிற்று. அதனுடைய செயற் பாட்டு இயக்க உண்மையால் புறத்தே காட்சிப் படுகிறது. மறைந்து நிற்பது உயிர். காட்சிப் பட்டியங்குவது. உடல், உலகம் பெரும் பெரும் பேராய்வுகளைச் செய்யும் மனிதனை இயக்கம் உயிரினில் மறைந்து நின்று இயக்குகிறான் **''மாமணிச் சோதியான்''** அவனின் றேல் உயிரும் இயங்காது. அவனுடைய முழு இருப்பினையும் அடை யப் பெற்றவரே நிறை மொழிமாந்தர். இவர்கள் மொழிதான் ஆணை மொழி. மறைமொழி = வேதவாக்கு என்பதை:-

''கருணை ஒன்றே வடிவாகி எவ்வுயிரும்
தம் உயிர் போல் கண்டு ஞானத்
தெருள் நெறியில் சுத்த சிவ சன்மார்க்கப்
பெருநீதி செலுத்தாநின்ற
பொருள் நெறி சற்குண சாந்தப் **புண்ணியர் தம்**
திருவாயால் புகன்ற வார்த்தை
அருள் நெறி வேதாகமத்தின் அடிமுடி சொல்
வார்த்தைகள் என்றறைவராலோ'' - (5298)

என்ற திருவருட்பா உறுதி செய்கிறது. இந்த நிறை மொழிப் புண்ணி யரே வள்ளலார்.

மந்திரம் என்பதற்கு வடமொழி விளக்கம்:-

மனநாத் ரயதே இதி மந்த்ரம்

என்பதாம், நினைத்தால் காப்பது என்பது இதன் பொருள்.

மந்திரம் என்ற சொல்லுக்கு 'அபிதான சிந்தாமணி' என்ற அக ராதி நூல் பக்கம் 1258ல் விளக்கம் விரிவாகயிருந்தாலும் இங்கு தேவையானதிலும் ஒரு சிலமட்டும் தரப் பெறுகிறது.

(1) மனனம் செய்பவனைக் காப்பது

(2) முறைப்படி தீட்சைபெற்று நியமத்துடன் செபிப்பவனுக்கு எல்லா சித்திகளும் உண்டாம்.

(3) இம்மத்திரங்கள் ஏகாட்சரி, பஞ்சாட்சரி, திரிபுரசுந்தரி ம்ருத் யூஞ்செயம், பிரசாத காயத்ரி பஞ்சபிரம்ம மந்திரம்....

(3) மந்திரங்கள் பல்வகை அவற்றுள் மகாமந்திரத்தை மந்திரம் உணர்ந்த ஆசிரியர் பால் கேட்டறிக.

இவ்விளக்கத்தில் மகாமந்திரத்தை ஏனைய மந்திரங்களுக்குப் பெயர் சூட்டிச் சொல்லியிருப்பது போல் சொல்லாமல் ''மகாமந்திரம்'' என்று மட்டும் சுட்டியிருப்பது கவனித்துச் சிந்திக்கத் தக்கது. 'அபி தான சிந்தாமணி' நூல் இப்போது வெளிவருமாயின் வள்ளற் பெரு மான் திருவாய் மலர்ந்தருளிய மந்திரமாகவே குறிக்கப் பெற்றிருக் கும்!

மகாமந்திரம் என்று வள்ளலார் சொல்லியதில் ''ஆண்டவர் கட்டளையிட்டதெனக் காண்கிறோம். கட்டளை என்பது ஆணை. ஆணை என்பதற்குரிய அகராதிப் பொருள்களில் சில ஆக்ஞை, ஆட்சி, ஆளுமதிகாரம், சத்தியம், கட்டளை... முதலியன.

மந்திரம் என்ற சொல்லுக்குமுன் உள்ள ''மகா'' என்ற சொல் லைக் கவனிக்க வேண்டும். ராஜன் - மகாராஜன், கவி - மகாகவி, வித்துவான் - மகாவித்துவான், மகம் - மகாமகம், தேவன், மகாதே வன் - மகாதேவ், உபதேசம் - மகாஉபதேசம் என்ற வழக்குச் சொற் களே இதன் பெருமையைத் தெரிவிக்கிறது. இதற்கு மேற்பட்ட இனி ஒரு மந்திரம் இல்லை என்பது தெளிவு இது போல் வாக்கியம் என்பதோடு நில்லாமல் மகா வாக்கியம் என்றதனையும் ஓர்க 'இதோ

டன்றி திரு, என்று சேர்த்துத் திருமந்திரம் எனவும் மொழிந்திருப்ப தால், இத் - திரு என்ற சொல்லுக்கு - **''கண்டாரால் விரும்பப் பெறும் தன்மை நோக்கம் என்றது அழகு''** என்ற திருக்கோவை யார் பேராசிரியர் உரையும் இங்கு ஏற்றுச் சிறப்பிக்கத் தக்கதாம். மேலும் ஆளுடைய நம்பிகளான சுந்தரர் தம் திருப்பாட்டில்: -

பொன்னும் மெய்ப் பொருளும் தருவானைப்
போகமும் திருவும் புணர்ப்பானை (7-59-3)

என்று பாடுவதில் உலகியற் போகத்துக்குப் பொன்னும், **மெய்ப் பொருளுக்குத் ''திரு''** வும் வகைப் படுத்தியதைச் சிந்தித்து மகிழ் வேமாக.

அகத்தே கறுத்துப் புறத்தே வெளுத்திருந்த
உலகர் அனைவரையும்
சகத்தே திருத்திச் சன்மார்க்க
சங்கத் தடை வித்திடவும் அவரும்
இகத்தே பரத்தைப் பெற்று
மகிழ்ந்திடுதற்கென்றே எனை இந்த
உகத்தே இறைவன் ''வருவிக்க உற்றேன்''
அருளைப் பெற்றேனே - (5485)

என்ற திருவருட்பாவின் அகச் சான்றின் படி ஆண்டவனின் அருளா ணையின் வண்ணம் இப் பூவுலகில் அவதரித்து (வருவிக்க - அவத ரிக்க) மன்பதை உய்யும் வண்ணம்:-

வழிபாட்டிற்கு ஒரு உருவமும், அவ்வுருவத்திற்கு ஒரு பெய ரும், மந்திரமும் வேண்டுவது இன்றியமையாத தால்

அகல்விளக்கு ஞானதீபத்தை உருவமாகவும்
அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் என்பதைப் பெயராகவும்

''அருட் பெருஞ் ஜோதி அருட் பெருஞ்ஜோதி
தனிப் பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி என்பதை

மந்திரமாகவும் கொண்டார். நாம் உய்யவும் வெளிப்படுத்தினார்.

உலகில் உள்ள சமய மதங்கள் அனைத்தும், வேதாந்தம் சித்தாந் தம், கலாந்தம், யோகாந்தம், போதாந்தம், நாதாந்தம் என்ற ஆறு வகை (ஷட்மதம்) மதங்களுள் அடங்கும் இவைகளில் முன்னைய இரண்டில் பின்னைய நான்கு மடங்கும் என்பர். ஆன்றோர்கள் வகுத்த இவ்வாறும். காலப் போக்கில் ஆங்காங்கே தம் தம் நிலைக ளுக்கேற்ப வெவ்வேறு மதப் பெயர்களுடன் வெவ்வேறு சமய பேர்க ளுடன் விரிந்தன! கருத்தால், செயலால் ஒன்றுக் கொன்று முரணின மூலமான தலைவன் (தான் தோன்றியவனான ஒருவனே ஒருவன்) ஒருவனே என்ற அடிப்படையை அறவே மறந்து **என்மதம், உன்ம தம், என் சமயம், உன் சமயம்** என்ற அறயாமையால் ஏற்பட்ட பிணக்கு முற்றி போர்க் கோலமாயின. இவ்வகைப் போர்களில் மான் டோர்களின் எண்ணிக்கை, நாட்டு வெறிப் போரான அரசியற் போர்க ளில் செத்து மடிந்தவர்களைக் காட்டிலும் எண்ணிக்கை அதிகமென ஆய்வாளர் கூறுவர். . (இன்றும் மடிகின்ற வெட்கக் கேடும் கைகண்ட பலனாகி வருகிறதன்றோ!) இவ்விளக்கம்:-

பேருற்ற உலகிலுறு சமயமத வெறியெலாம்
பேய் பிடிப்புற்ற பிச்சப் பிள்ளை
விளையாட்டெனஉணர்ந்திடாது
உயிர்கள் பல பேத முற்று அங்கும் இங்கும்
போருற்றிறந்து வீண் போயினார் இன்னும் வீண்
போகாத படி விரைந்தே புனிதமுறும் சுத்த
சன்மார்க்க நெறிகாட்டி மெய்ப் பொருளினை உணர்த்தி எல்லாம்
ஏருற்ற சுகநிலை அடைந்திடப் புரிதி நீ
என் பிள்ளையாதலாலே

இவ்வேலை புரிக என்று இட்டனம் மனத்தில்
வேறெண்ணற்க என்ற குருவே!
நீருற்ற ஒண்ணிய நெருப்பே! நெருப்பினுள்
நிறைந்திருள் அகற்றும் ஒளியே!
நிர்க்குணாநந்த பரநாதாந்த வரை ஓங்கும்
நீதி நடராஜபதியே! (3677)

என்ற திருவருப்பாவால் நன்கு அச்சுறுத்தப் பெறுகிறது.'' இவ் வேலை புரிக என்றிட்டனம்'' என்பது தான் தொடக்கத்தில் ஆண்ட வன் இட்ட கட்டளை. (கட்டளை = ஏவல். இங்கு திருக்கட்டளை யாம்) இப்பணிதான் தொடங்கி வேர் ஊன்றி வளர்கிறது.

ஜோதியைப் பற்றிச் சொல்லாத சமய மதங்களே இல்லை. அனைத்தும் உள் விளக்கமாகி உள்ளதே தீவிர புறங்கவியச் சொல்ல வில்லை. எனவே முதன்மை ஸ்தானமாக ஞானசபை நிறுவி அத னுள் வழி படு கடவுளாக **'ஜோதி'** யை வைத்தும் அதற்கு மந்திரமாக **ஜோதி**யையே குறித்தும் வாழ்வுக்குப் பசிப் பிணியிருப்பின் அணுவ ளவு கூட முயற்சி பயன்தரா தென்பதற்கு **''தருமச்சாலை நிறுவியும்** ஒருங்கே அமைத்த முதல்வரும் **வள்ளற் பெருமான்தானே!** உருவ மாக அமையப் பெற்ற ''ஜோதி'' தீபம். உருவத்துக்கு உருவமாக உள்ளது. ஆனால்பிடிபடாத அருவமாகவுமுள்ளது எனவே ''உருஅ ரு'' ஆயிற்று. நாமம் எச்சமயத்தாரும் ஏற்க ''அருட் பெருங்ஜோதி ஆண்டவர் ஆயிற்று. மந்திரமும் அவ்வாறே' **ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்** என்ற ஆத்தீக உலகரனைவரும் இதற்கு மறு மாற்றம் கூற வாய்ப்புண்டோ? உலக ஒற்றுமைக்கு இதைவிட **'ஆதி யும் நடுவும் ஈறும்** வேறுளதோ?

இனி மந்த்ர விளக்கம் பற்றி சற்று சிந்திப்போம். அருட் பெருஞ் ஜோதி கண்டது இரண்டு முறை முதலில் உள்ளது மூன்றாவதாக அச் சொற்றொடர் வருவதற்குப் பதிலாக தனிப் பெருங்கருணை'' என்பது மூன்றாவது மந்திரமாகவும் நாலாவதாகவே மீண்டும் ஒருமுறை முத லாவதான மந்திரம் வருகிறது. இறைவன் நீக்கமற நிறைந்துளான். அவனில்லாத இடமே இல்லை என் வாழையடி வாழையாய் வாய் வேதாந்தமாகச் சொல்கறோமே தவிர அணுவளவு கூட இந்த மெய்ம் மொழியை உற்று நோக்கி அநுபவத்துக் கொண்டுவர முயன்றோ மில்லை. இந்த ஒளி நிறைவை முதலில் நம்முன் காண வேண்டும். பிண்டமே அண்டம், அண்டமே பிண்டம். நம்மில், நமக்குள் ஒளிரா மல் புறத்தே அண்டத்தில் உள்ள ஒளிப் பொருள்களைத் தேடி ஆய் வது அநுபவமாகாது! இதனை விடுத்து மண்ணிலும் விண்ணிலம் ஆய்வது புற ஆய்வே அன்றி தனக்கத்தானே னஆன்ம குறைவு: ஆகாது. எனவே தனக்குத்தானே அவற்றுள்ளும், அவரவர்க ளுள்ளே தேடவேண்டும்.

தேனுக்குள் இன்பம் சிவப்போ கறுப்போ
வானுக்குள் ஈசனைத் தேடும் மதியிலியீர்
தேனுக்குள் இன்பம் செறிந்திருந்தாற் போல்
ஊனுக்குள் ஈசன் ஒளிந்து நின்றானே!

என்ற திருமூல,ர் திருமந்திரத்தைச் சிந்திக்க வேண்டும்!

(திருமந்திரத்தையும், திருவாசகத்தையும் ஊன்றிக் கவனிக்க வும் என்பது வள்ளலார்வாக்கு)

உள்ளங்கை நெல்லிக் கனியைப் புரிந்து கொள்ளாது வெள்ளங்கைக் கரடியைப்பின் தொடர்வது போலாம். புறத்தே அலைவது! அகமே புறம், புறமே அகம் என்பது வெகு எளிதாகப் புரியமுடியும். உபதே சக் குறிப்பு. என்ற தலைப்பில் அண்ட பிண்ட பூர்ண பாவன அனுஷ் டான விதி என்ற உள் தலைப்பில் விளக்கமாகச் சொல்வதால் விரிவு ஆங்குக் காண்க.

ஜோதியுள் ஜோதியுள் ஜோதி - சுத்த
ஜோதி சிவ ஜோதி ஜோதியுள் ஜோதி
ஜோதி யுள் ஜோதியுள் ஜோதி - (4604)

எனத் தொடங்கும் பாடலில் விளக்கம் தருகிறார்.இதுமுதல்4614ஆம் பாடல்வரை 29 கண்ணிகளில் பல உண்மைகள் சொல்லுவர். இவை களில்:

தருநெறி எல்லாம் உள்வாங்கும் - சுத்த
சன் மார்க்கம் என்றோர்தனிப்பேர் கொண்டோங்கும்
திருநெறிக்கே சென்று பாரீர் திருச்
சிற்றம்பலத்தே திருநடஜோதி - (4603)

எம் பொருள் எம் பொருள் என்றே சொல்லும்
எல்லாச் சமயத்துள் எல்லார்க்கும் ஒன்றே
செம்பொருள் என்பது பாரீர் - திருச்
சிற்றம்பலத்தே திருநடஜோதி.- (4604)

சைவ முதலாக நாட்டும் - பல
சமயங்கள் எல்லாம் தனித்தனிக் காட்டும்
தெய்வம் இது வந்து பாரீர் - திருச்
சிற்றம்பலத்தே திருநடஜோதி - (4605)

என்ற முக்கண்ணிகளில் **''ரத்தினச் சுருக்கமாக''** இதன் பெருமை நிலை நாட்டுவர் இச்சோதிதான் (மூன்று முறை) மந்திரத் தொடரில் வைத்துக் காட்டுவது. இரண்டு ஜோதிக்குப் பிறகு மூன்றாவது அமைந்துள்ள ''தனிப் பெருங்கருணை'' தான் ஏறா நிலமிசை ஏற்றி வைக்கும் ஏணியாம்.

ஜோதியுட் ஜோதியின் சொருபமே அந்தம்
ஆதி யென்றருளிய அருட் பெருஞ்ஜோதி - (263/264)

என்பது அகவல் பகுதியிலிருந்து சான்றுக்கு எடுத்தாளப்பெறுகிறது. **ஜோதி, பெருஞ்** ஜோதியாகி **அருட்** பெருஞ்ஜோதியை ஈற்றில் நிறைகிறது.

''ஜோதியே, சுடரே, சூழ்ஒளிவிளக்கே (திருவாசகம் 456) என்பது திருவாசகம். அருள் விளக்கே அருட்சுடரே அருள்ஜோதி சிவமே என்பது அருட்பாவின் அருள் விளக்கம் (4060 ஆம்) பாடலின் தொடக்கம் முன்னைய தின் பேருரை விளக்கமே பின்னையது! **அருள் என்றும் சிவமென்றும்** நுண்பொருள் சேர்த்து விளக்கம் தருகிறது. இந்த விளக்கமேதான்திருவாசகத்திருவண்டப் பகுதியில்:
'அருட் பெருந்தீயின் அடியோம்' என ஆகி திருவருட்பாவில் **அருட்பெருஞ்ஜோதியாக** மலர்ந்து ஓங்கி ஒளி விடுகிறது.இவ்வருட் ஜோதிதான் அனைத்து ஒளிப் பொருள்களுக்கும் ஒளி வழங்குகிறது. நமக்குத் தெரிகின்ற பெரிய ஒளிகளுக்குமே இதுதான் மூலம். இவ்வுண்மை:

முச்சுடர்களும் ஒளி முயங்குற அளித்தருள்
அச்சுடராம் சபை அருட் பெருஞ்ஜோதி - (4615)

முச்சுடராதியால் எச்சக உயிரையும்
அச்சறக் காத்தருள் அருட் பெருஞ்ஜோதி - (239/740)

என்ற அகவல் வரிகளால் விளங்கும்.

எனவே அனைத்திற்கும் மூலமாயுள்ள அருட்பெருஞ் ஜோதியையடைய உரை நடை சர்வசித்தி என்ற தலைப்பில் ''சுத்த சன்மார்க்கத்திற்கு படிகள் 3. அவை **சிற்சபை (1) பொற்சபை (2) ஞானசபை (3)** என்பர்:

ஈற்றறியேன் இருந்திருந்திங் கதிசயிப்ப தென்நீ
என்கின்றாய் நீ என்னைவிட்டு ஏகுந்தொறும் நான்தான்
காற்றறியாத் தீபம்போல் இருந்திடும் அத்தருணம்
கண்ட பரிசு என்புகல்வேன அண்ட பகிரண்டம்
தோற்றறியாப் பெருஞ்ஜோதி மலை பரநாதத்தே
தோன்றியதாங்கதன் நடுவே தோன்றிய தொன்றதுதான்
மாற்றறியாப் பொன்னொளியோ அவ்வொளிக்குள் ஆடும்
வள்ளல் அருளொளியோ ஈததிசயிக்கும் வகையே - (5767)

என்பது அநுபவ மாலையில் 54ஆம் பாடல்.

இதில் ''நீ'' என்பது மனதை. மனஞ்சம்பந்த முறின் ''காற்றறியாத்தீபம்'' போல் தியானம்கை கூடாது என்பது தேற்றம்.இந்தத் தேற்றத்தின் தெளிவில் பெற்ற பரிசுதான் **''மாற்றறியாப் பொன்னொளியோ அவ்வொளிக்குள் ஆடும் வள்ளல்அருள்ஒளியோ''** என்பது. பரநாதம் என்பது நேரியதியானம் வளர்ந்து தனக்குத் தானே கேட்கும் உள்நாத ஒலி நிலை. அண்டபகிரண்டங்களிலும் காணப்படாத ஜோதிமலை தோன்றும் (தோற்றறியா - காட்சிப்படாத) பரநாத விளக்கமாவது; புருவ மத்தியில் விந்துவும் அதற்குமேல் இரண்டரை அங்குலத்தில் நாதமும் அதற்கு மேல் இரண்டரை அங்குலத்தில் பரவிந்துவும் அதற்கு மேல் இரண்டரை அங்குலத்தில்**''பரநாதமுமாகும்.''**

இதற்குமேல் இரண்டரை அங்குலத்தில், தீக்கிராந்தம், அதிக்கிராந்தம் துவாதசாந்தம் முதலானவைகளும் அதீதத்தில் சுத்த சிவமும் உள்ளது. (விரிவு உரைநடை பிண்டாநுபவ இலக்கணத் தலைப்பில் காண்க)

சிற்சபை, பொற்சபை இரண்டும் உருவத் தோற்றக் காட்சி யனுபவமே!

திருக் கதவம் திறவாயோ திரைகளெல்லாம் தவிர்த்தே
திருவருளாம் பெருஞ்ஜோதி திருவுருக் காட்டாயோ
உருக்கிய துற்றெடுத்தே உடம்புயிரோடுளமும்
ஒளிமயமே ஆக்குறமெய் உணர்ச்சியருளாயோ
கருக் கருதாத் தனிவடிவோய் நின்னை என்னுட் கலந்தே
கங்குல் பகல் இன்றி என்றும் களித்திடச் செய்யாயோ
செருக் கருதாதவர்க் கருளும் சித்தி புரத்தரசே
சித்த சிகாமணியே என்திருநடநாயகனே

இப்பாடல் மூலம் திருக்கதவம் திறந்தவுடனே காட்டப்படுவது அருளாம் பெருஞ்ஜோதி. **திருவுருதான் இங்கு** ; இனிச் செயற்படுவது இரண்டாவது அடியில் கூறப்பெறுவது அடுத்த நிலையாம் அமுத ஊற்றுப் பகுதி;

மணிக்கதவம் திறவாயோ மறைப்பை யெல்லாம் தவிர்த்தே
மாற்றறியாப் பொன்னே நின் வடிவது காட்டாயோ
கணிக்கறியாப் பெரு நிலையில் என்னோடு நீ கலந்தே
கரைகடந்த பெரும்போகம் கண்டிடச் செய்யாயோ
தணிக்கலிலாக் காதல் மிகப்பெருகுகின்ற தரசே
தாங்கமுடியா தினிஎன் தனித்தலைமைப் பதியே
திணிக்கலை யாதிய எல்லாம் பணிக்கவல்ல சிவமே
சித்தசிகா மணியே என் திருநடநாயகனே!

என்ற இரண்டாவதான இப்பாடலிலும் **''வடிவது காட்டாயோ''** என்பதுதான் குறிப்பு. அடுத்தவரிகள் முன்பாட்டுப் போல் ''இனி ஆகவேண்டிய அதாவது உருவக் காட்சிக்குப் பிறகு நடைபெற வேண்டிய கலத்தல் நிலை. எனவே இரண்டு பாடல்களிலும் கண்டது உருவமே! பதிகரணங்களாகி விட்டால் தான் காட்சி ஒளியைத் தாங்க முடியும்.

உரைகடந்த திருவருட்பேர் ஒளிவடிவைக் கலந்தே
உவட்டாத பெரும் போகம் ஓங்கியுறும் பொருட்டே
இரைகடந் தென்னுள்ளகத்தே எழுந்து பொங்கித்ததும்பி
என் காதல்பெரு வெள்ளம் என்னை முற்றும் விழுங்கிக்
கரைகடந்து போனதினித்தாங்க முடியாது
கண்டுகொள் வாய்நீயே என் கருத்தின்வண்ணம் அரசே!
திரைகடந்த குருமணியே சிவஞான மணியே
சித்த சிகாமணியே என்திருநட நாயகனே

என்ற மூன்றாம் பாடலில் முன்னைய பாடல்களின் பயனாய் மேலோங்கிய ஒளி வடிவில் கலந்த, உவட்டாத பெரும் போகம் ஓங்கி

காதல் வெள்ளம் முற்றும் விழுங்கி கரைகடந்து போனது. இன்ப வெள்ளத்தில் மூழ்கிவிட்டால் இனி இருப்பு இல்லாது போய்விடும். இருப்பு இல்லாத கடலில் கலந்த நதி போலாகிவிட்டால், உயிர்க்குலத் துக்குக் கருணை செய்ய முடியாது. எனவே **''இருப்பு இருக்க வேண்டும்''** அவ்வாறானால் நதியில் கடல் கலக்க வேண்டும். கலக் கும் ஆற்றலைப் பெறுவதானால் அமுதம் உண்டு ''ஸ்திரத்தன்மை பெற வேண்டும் யாக்கை.

இப்பாடற் பகுதிகள் ''திருக்கதவம் திறத்தல்'' என்ற தலைப்பில் வரு வன. 3 பாடல்கள் இங்கு வேண்டுவன இப்போது கண்டோம்; 4 முதல் 10 வரை உள்ள பாடல்கள் மேலும் விவரங்கள் தெரிய வேண்டு வோர் அங்குக் காண்க. இம்மூன்றாவது பாடல் அநுபவத்திற்கு வர இதன் நடுவே ஒரு நிகழ்ச்சி நடைபெற வேண்டியதுளது. அது அமு துண்ணும் நிலை. இதனைக் காண **''ஆணிப்பொன்னம்பலக் காட்சி''**ப் பகுதிக்கு நாம் வர வேண்டும்.
தொடக்கத்திலேயே: -

ஜோதிமலை ஒன்று தோன்றிற்று அதில்ஒரு
வீதி உண்டாச்சுதடி - அம்மா
வீதி உண்டாச்சுதடி

என அருள்வர். இந்த **''ஜோதி மலைதான்''** முன்னர் அநுபவமாலை பாடலாகத் தொடங்கிய ஈற்றறியேன் (5767) என்ற பாடலில் மூன்றா வது அடியில் வரும் **தோற்றறியாப் பெருஞ்ஜோதிமலை** என்பது. எனவே நமக்குரிய இங்குள்ள அடுத்த நிகழ்ச்சி **''ஆணிப் பொன் னம்பலத்து''** ஜோதிமலையே ''என்பது முற்றிலும் பொருத்தமாம் 4915 கண்ணி 1ல் தொடங்கும் இச் **''சிந்து''** வகைப் பாடல்கள் 4946 கண்ணி 32 உடன் நிறைவெய்துகிறது.

சந்நதியில் சென்று நான் பெற்ற பேறது
சாமி அறிவாரடி - அம்மா
சாமி அறிவாரடி.

இதுதான் நிறைவுப் பாடல். பெருமானாற் சிற்சபை பொற்சபைக் காட்சிப்பேறு பெற்றுவிட்ட பிறகும் ஈறான பேறு பெறுவதற்கு அம் மையின் அருள் வேண்டப் பெறுகிறது.

தாங்கும் அவளருளாலே நடராஜர்
சந்நிதி கண்டேனடி - அம்மா
சந்நிதி கண்டேனடி

இப்பாடலில் வரும் **அவளருளாலே''** என்பது இங்கு எப்படி வந் தது, **'தாங்கும்''** ''அவளருளாலே'' என்று சிறப்பித்தும் கூறப்பெறுகி றது. அந்த ''அவள்'' யார்? இதற்கு விடையாக,
அம்மையைக் கண்டேன் அவளருள் கொண்டேன்
அமுதமும் உண்டேனடி - அம்மா
அமுதமும் உண்டேனடி -

என்பர். எனவே அவள் என்பது அம்மை! அமுத முண்ண அம்மை யார் இன்றி முடியுமா? அந்த அம்மையார், யார்?

அத்திரு வாயிலில் ஆனந்தவல்லி என்
அம்மை யிருந்தாளடி - அம்மா
அம்மை இருந்தாளடி -

என்பர். இத்திருவாயில் எது? இவ்வளவு தூரம் நெருங்கி வந்த பிறகும் இங்கு அணுக்கத்திருவாயில் என ஒன்று உண்டாம்! (அணுக் கம் - நெருக்கம் அணுக்கத் தொண்டர் என்ற வழக்கு ஓர்க) இந்தத் திருவாயிலை யார் காட்டினார்கள்!

அங்கவர் காட்ட அணுக்கத்திருவாயில்
அன்பொடு கண்டேனடி - அம்மா
அன்பொடு கண்டேனடி

என்பர். இங்கு கூறப் பெற்ற ''அங்கவர்'' முதலான விரிவுகள் (சத்தர் கள், சத்திகள், ஐவர்கள் என்ற பெரு விளக்கம். எஞ்சிய பாடல்களில் வருவதை நூலில் காண்)

இங்கு நம் விளக்கத்துக்குரிய அளவோடு நின்றனம்
இனி நம் மகாமந்திரத்துக்கு வருவோம்!
ஒரு முறை சொல்லிப் பலமுறை ஓதுவோமாக!
அருட் பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப் பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

முதல் ''இரண்டு முறை அருட்பெருஞ்ஜோதி'' என்பது சிற்சபை, பொற்சபை காட்சி அநுபவம். மூன்றாவது தனிப் பெருங்கருணை அமுதூட்டும் ஒப்பிலாத் தாயின் மாபெருங்கருணை. பாலூட்டல் உலகியலிலே ''தாய்'' தானே. தாய்தானே தந்தையைக் காட்டவேண் டும். அமுதூட்டி ஆளுடைய பிள்ளையாரான ஞான சம்பந்தப் பெரு மகனாருக்கு அம்மைதானே ஊட்டியதாக வரலாறு. விருத்தகிரியில் - 'குமார தேவப்பெருந்தேவருக்கு' அம்மைதான் பாலூட்டுவதாகத் தரிசனம் காட்டுகிறார்கள், வரலாற்றுப்படி, இன்றும்! திருவள்ளுவம் பூப்பரப்பை நிலம் என்னும் நல்லாளாக (பெண் பாலாக) வே குறிப்பி டுகிறது. பூமாதேவி என்று தானே வழங்குகிறோம்! எனவே மூன்றாம் மந்திரம் கருணையாயிற்று, பெருங்கருணையாயிற்று. தனிப் பெருங் கருணையாயிற்று. இதனைச் சொல்லச் சொல்ல நாமணக்கிற தன்றோ! இம்மூன்று அநுபவத்திற்குப் பிறகு 'நடராசர்' சந்நிதி. இந்த நடராசர்தான் **''அருட்பெருஞ்ஜோதி நீதி நடராசபதி''**சந்நிதி- சமு கம் திருமுன் என்றெல்லாம் பெயர்கொள்ளும். அமுதமுண்டு உடல் பேராற்றல் பெறவேண்டும். இதனாற்றான் நந்தமக்கு பேரொளி கிட்ட வில்லை. கருணையில் குறைவில்லை! அமுதமழை பெய்தவண்ண மாயிருக்கிறது தாங்கும் அவள் அருள் பெறவில்லை நாம் என்பதை நன்கு ஐயமறப்புரிந்து கொள்ளவேண்டும். அவரவர்கள் பக்குவத்துக் குத்தக மேலேற்றிக் கொண்டுதான் ''கருணை'' செய்கிறது. முடிவான கருணை அமுத முண்ணலே. இவ்விவரத்தை முழுதும் ஒருங்கி ணைய ஒரு பாடலிலே ''பிள்ளைச் சிறு விண்ணபத்தில்'' பெருமான் தந்தருள்வர் அது தான்: -

சற்சபைக் குரியார் தம்மொடுங் கூடித்
தனித்த பேர் அன்பும் மெய்யறிவும்
நற்சபைக்குரிய ஒழுக்கமும் அழியா
நல்ல மெய்வாழ்க்கையும் பெற்றே
சிற்சபை நடமும் பொற்சபை நடமும்
தினந்தொறும் பாடி நின்றாடித்
தெற்சபை உலகத் துயிர்க் கெலாம்
இன்பம் செய்வதென் னிச்சையாம் எந்தாய் - (3401)
இப்பாடல். சிற்சபை, பொற்சபை, நடன உருவக்காட்சியாகவும் தெற் சபை - ஞானசபையாகவும் அழியா நல்லமெய் வாழ்க்கை மரணமி லாப் பெருவாழ்வான பயனையும், உயிர்க்கெலாம் இன்பம் செய்வது தருமச்சாலைக் கருணைக் கருவூலமாகவும் கொள்வது சாலும்.

(குறிப்பு: சிற்சபை என்ற சொல்லைப்பெருமானார் வேறு வேறு நிலைக ளில் வெவ்வேறு இடங்களில் கையாள்வதை அததற்குத்தக அன்பறி வோடு கொண்டு உய்வோமாக) இவ்வாறான விளக்க உணர்வோடு ஓதும் போதுதான் மந்திரம் அதற்குரிய பலன் தரும். அவ்வாறு உணர்ந்தோதாது சொல்லளவோதினாலும் ''ஊமையனுக்கு உளறு வாயன் நல்லதென்றளவில் அதற்குரிய பலன் நல்காமல் போகாது. இனி இந்த ''அருட்பெருஞ்ஜோதி'' மந்திரத்திலுள்ள எழுத்துக்க ளைச் சிந்திப்போம்: - தமிழில் உயிரெழுத்து. 12. இதில் குறில் 5 நெடில் 7 நெடில்களில் ''ஐ'' என்பது அ+ய். ஆகவும் ''ஔ'' என்பது அ+வ் வாகவும் கொள்ளும்போது நெடில் எழுத்துக்களும் 5 ஆகவே மாறுகின்றன. இவ்வைந்தும் ''அருட்பெருஞ்ஜோதி'' யில் உண்டு.

அ - என்றமுதலெழுத்தில் - அ - 1

ரு- ,, ,, இரண்டாவதில் - உ - 2

பெ- ,, ,, நாலாவதில் - எ - 3

சோ- ,, ,, ஏழாவதில் - ஓ - 4

தி- ,, ,, எட்டாவதில் - இ - 5

உயிர்போடு இணைபிரியாமல் செபிக்க **உயிரெழுத்து** அனைத்தும் அமைந்திருப்பது ஒரு தனிச்சிறப்பல்லவா?

இது காறும் கூறியவை ஒருபுறமிருக்க. மந்திரமொழிகளை வேறு ஒருவிதமாகச் சிந்திப்போம் -

இதில் இறைவனின் உண்மையும், அடையும் வழியும் சொல்லப் பெறுகிறது.

இறை உண்மை - சத்து

அடையும் வழி- மார்க்கம். சத்+மார்க்கம் = சன்மார்க்கம்

இது எந்த ஒரு சமயப் பெயரையும் குறிக்காத சொல். அனைத்து லகும் (UNIVERSE) பற்றிய ஆராச்சியின் பயனாக அறிவியலார் கூறுவது பிரபஞ்சம் முழுவதும் சூரியர்களாய், சந்திரர்களாய், உடுக்களாய்; இவ்வாறு கூட்டப் பெற்ற கூட்டங்களாய் (GALAXI) பாள்வெளிகளாய்(MILKY WAYS) ஒளிப்பொருள்களாய் உள்ளன என்பதாம். இவ்வாய்வு அதிசயிக்கத் தக்க தொரு பேருண்மைலாகிறது. இதனோடு அனைத்துப் பெருமங்க (பூதங்கள்)ளான மண், நீர், தீ, காற்று, ஆகாயம் என்பவைகளும் இவ்வொளிக் கூறும் சம்பந்தப்பட்ட வையேயாமென்கிறது. இப்பெருமங்களின் துணையோடு வாழுமுயிற்கெல்லாம் ஒளி உண்டு என்பதை ''கிளியன்ஸ் போட்டோகிராபி'' படமெடுத்து நீரூபித்து விட்டது. மக்களின் உடலிலும் - மரங்களிலும் உதிர்சருகிலும் இருக்கும் ஒளித்தன்மைகளில் ஒளியின் வீக்கம் இருக்கும். நிலையும் வீக்கத்தில் குறைவு இருக்கும் நிலை பகுதியுமாயுள்ளதே அல்லாது ஒளியே, ஒளியின் கூறே இல்லாமல் இல்லை. இவ்வுண்மையைச் சுமார் 120 ஆண்டுகளுக்கு முன்னரே -

ஒளிஒன்றே அண்ட பகிர் அண்டம்எலாம் விளங்கி
ஓங்குகின்ற தன்றிஅண்ட பகிரண்டங்களிலும்
வெளிநின்ற சராசரத்தும் அகத்தி னொடுபுறத்தும்
விளம்பும் அகப்புறத்தினொடு புறப்புறத்தும் நிறைந்தே
உள்நின்ற இருள்நீக்கி இலங்குகின்ற தன்மை
உலகறியும் நீயறியாததன்று கண்டாய்தோழி
தனிநின்ற ஒளிமயமே வேறிலை எல்லாமும்
தான் என வேதாகமங்கள் சாற்றுதல் சத்தியமே

என்ற பாடலால் நிறுவிமுடித்துள்ளார். **''ஒளிமயமே வேறிலை எல்லாமும்''** என்ற ஈற்றடியே புற ஆய்வில் விஞ்ஞானிகள் கண்ட பேருண்மை. எவ்விதக் கருவிகளும் கணக்கியல்களுமின்றி அருள் வயத்தால் தம்மை அறிந்து தமக்கு ஆதாரத் தலைவனையும் அறிந்த அருளறிவின் பயன் அல்லவா இது! அருட்பெருஞ் ஜோதியாம் அநுபவத்தை அநுபவித்து (அனுபவமாகவும் அருட்பெருஞ் ஜோதியைப் பாடியுள்ளார்) கண்ட, உண்ட அநுபவப் பெயரே எடுத்த எடுப்பிலே மந்திரத்தின் பெயராகக் கொண்டார்; இதுவரை வந்த, நடை முறைச்சமய, மத, மந்திரப் பெயர் எது இப்படிப்பட்ட பகல் போல் உலகர் அனைவருக்கும் பொருத்தமாயுள்ளது, எனச்சவால் விடுவது போல் இல்லையா? சிந்திப்போமாக!

அருட்பெருஞ்ஜோதியின் மூலக் கூறுகள்தான். அக்கூறுகளின் அணுவிலும் ஓர் அணுதான் மேற்சொல்லப்பட்ட ஆய்வாளர்கள் கண்டது. பல்வேறு மூலக்கூறுகள் தான் சத்தர்கள் என்ற பெயர்களில் (ENERGY) செயற்பாட்டிற்குத் தோற்றமாகவும் வெளிப்பட்டு இயங்கிக் காட்சிப்படுவதை (இயக்கத்தை) சத்திகள் என்றும் வள்ளலார் சுட்டுவர்: - இந்நிலை: -

அகர நிலை விளங்குசத்தர் அனைவருக்கும் அவர்பால்
அமர்ந்த சக்திமாரவர்கள் அனைவருக்கும் அவரால்
பகரவரும் அண்ட வகை அனைத்தினுக்கும் பிண்டப்
பகுதிகள் அங்கனைத்தினுக்கும் பதங்கள் அனைத்தினுக்கும்
இகரமுறும் உயிர் எவைக்கும் கருவிகள் அங்கெவைக்கும்
எப்பொருட்கும் அநுபவங்கள் எவைக்கும் முத்தி எவைக்கும்
சிகரமுதல் சித்திவகை எவைக்கும் ஒளிவழங்கும்
திருச்சிற்றம்பலந்தனிலே தெய்வம் ஒன்றேகண்டீர்! - *(3270)*

என்ற திருவருட்பாவினால் விளங்குகிறது.

மேற்சொன்ன ஒளியின் மூலக்கூறுகள் உயிர்களின் தேவைகளுக்கேற்ப அளவிட்டு அருளப்பெற்று அதாவது மிஞ்சிய சூட்டினால் தீய்ந்து போகாமலும் சூடேஇல்லாமல் போவதால் வாழமுடியாமற் போகாமலும் காக்கப்பெறும் நுட்பத்தையும் ''அருள்'' என்று கூறுவதைவிட வேறு என்ன சொல் உள்ளது! சூரிய சந்திராதிகள் கதிகள் அந்தந்த அளவில் மயிரிழை தவறாது செலுத்தப்படாவிட்டால் இந்தப் பிரபஞ்சம் என்னவாகும்! இந்த முறை தவறாக் கோட்பாட்டை சிந்தித்துக் கொண்டே வாழ்நாள் கழிக்கலாம் போலிருக்கிறதன்றோ! எனவே ஒளியின் கூறு நாம் என்றால் அந்த ஒளிக்கூறைப் பெருக்கினால் ஒளிவடிவம் பெறமுடியு மென்பதை அறிவு ஒப்புக் கொள்கிறதல்லவா? இந்த நிலைதான் **பெருமானார் பெற்றார் பெற்றுக்காட்டி வாழ்கிறார் நம்மையும் அந்நிலையடையத் தூண்டிக் கொண்டே அருள் பாலித்து வருகிறார்.** இவ்வாறு பெற்றடைந்து வாழ்கிற நிலைதான் சித்திநிலை! முத்தி நிலை அல்ல. முக்தி நிலை சித்தி நிலைக்குச் சாதனமே அன்றி **''சித்தியாகா''! திருஅருட்பாவின் பிழிசாறே இதுதான்!**

அண்ட பிண்ட விளக்கம்

அண்டம்

அகம்=அக்கினி
அகப்புறம்=சூரியன்
புறம்=சந்திரன்
புறப்புறம்=நட்சத்திரங்கள்

பிண்டம்

அகம்=ஆன்மா
அகப்புறம்=ஜீவன்
புறம்=மனமுதற்கரணவகைகள்
புறப்புறம்=கண்முதற் கருவிவகைகள்

ஒளிப்பொருளான ஆன்மா அந்தக் கரணங்களான மனம் முதலான கூட்டத்தில் வாழும்போது, ஜீவிக்கின்ற போது ஜீவன் எனப்பெயர் பெறுகிறது. எனவே இதுவும் ஒளிப்பொருள் என்பதில் ஐயமில்லை. இனி புறப்புறமாகிய கண்முதலான பொறிகள் உள்ள உடலும் (யாக்கை) முற்சொன்ன ஆன்மா, ஜீவன், அந்தக்கரணங்களில்லாமல் இயங்கா (இயங்காவிடில் யாக்கையின் பெயர் - மூச்சடங்கி விட்டால் - அதன் பெயர் - அதவாது ஒளித்தன்மையாம் சூடு இல்லாவிட்டால் - குளிர்ந்துவிட்டால் என்ன பெயர் சொல்வோம்?) எனவே அதுவும் ஒளிப்பொருள்தானே! இந்த யாக்கை இப்படி சூடற்றுப் போகாமல், சூட்டினை வளர்க்க நாம் என்ன செய்யவேண்டும்? மூன்றாவதான ''மனமுதலான கரணங்களை முழுக்க முழுக்க **கருணையாக - பெருங்கருணையாக தனிப்பெருங் கருணையாக** மாற்ற வேண்டும். இதுதான் சீவகாருண்யச் செயலின் உச்சநிலை! இவ்வாறானால் தான் இப்போது வாச்சியார்த்தமாக உள்ள ஒளி நிலையான ஆன்மா, ஜீவன் அநுபவ ஒளிப்பொருளாக ஆகி நாலாவதான புறப்புற யாக்கையும் ஒளிமயமாகும். புறத்திலுள்ள சந்திரன் - தண்ணிலவு அல்லவா? கல்லாக - பராய் முரட்டுக் கட்டையான மனம் - இளகிக் குளிர்ச்சியுடைந்தால் தான் (உயிர்க் கருணைக்கு இளகுவது) முதலாவதான மந்திரம் இரண்டிற்கும், கடைசியான மந்திரத்திற்கும் நடுவே அமைந்துள்ளது. தனிப்பெருங்கருணை மந்தி

ரம்! இச்செயலே மற்றைய மூன்றினையும் ஒளிப்பொருளாக்கும்! உள்ளதனை உள்ளபடி உணரவேண்டும். உயிர் - ஒளிப்பொருள் என்றோம் (ஆன்மாஸ்ரீ) இது செயற்படும்போது ஜீவன் என்றோம். மூச்சு இயங்குவதால் செயற்பாடுள்ளது. சந்திரனை ஒப்பிட்ட மனம் இளக வேண்டுமென்றோம். இதுவே சூட்டினை ஆக்குகிறது என்றும் சொன்னோம். இந்நிலையே சிவபதி வளர் இடமாம். இவ்வுண்மை

ஒளிவளர் உயிரே உயிர் வளர் ஒளியே
ஒளி உயிர் வளர்தரும் உணர்வே
வெளிவளர் நிறைவே நிறைவளர் வெளியே
வெளிநிறை வளர்தரு விளைவே
வளிவளர் அசைவே அசைவளர்வெளியே
வளியசை வளர் தரு செயலே
அளிவளர் அனலே அனல் வளர் அளியே
அளிவளர் வளர் சிவபதியே - (4244)

வளிவளர் அசைவே - காற்றின் அசைவு; இதனால், வளர் தருசெயல் - யாக்கையியக்கம் - உலகயியக்கம், அளி - தண்மை, இதுவே அனல் தருவது; இவைகளால் சிவம் வெளிப்படுகிறது; சிவமே இவையெல்லாவற்றையும் வளர்க்கிறது. இதில் ஆன்மா, ஜீவன் என்ற அகமும் அகப்புறமும் அடங்கியுள்ளது.

இனி மூன்றாவதான மனமுதலான கரணங்கள் மாறவேண்டும். இதற்கு ''தயவு'' முதல் அடிப்படை, இரக்கம், கருணையாக மலர வேண்டுமன்றோ. இதை ஒரு தவமாக (யக்ஞமாக)க் கொள்ளவேண்டும். தவமுமியற்றவேண்டும். தயை இடைவிடாமற் கலந்த தவம் தான் பயன்பெறும். அப்போதுதானே ''மனம்'' தவத்தை எளிமையாகப் பற்ற முடியும். தவம் என்பது புருவமத்திய தியானமுறை. யாக்கை நிலைபெற சூடுதரும் தவம் இன்றியமையாதது. இதனாற்றான் - கரிசாலை - தூதுனை முதலானவை உண்ணவேண்டுமென்று வற்புறுத்துவர். உடம்பார் அழியின் உயரார் அழிவரன் றோ! இந்தத் தவமும் தயையும், குருதியும் செம்மையும் போல், மலரும் மணமும் போல் இணை பிரியாதிருக்க வேண்டுமென்பதை

தவம்வளர் தயையே, தயை வளர் தவமே,
தவநிறை தயை வளர் சதுரே!
நவம் வளர் புரமே புரம் வளர் நவமே
நவபுரம் வளர் தரு இறையே!
துவம் வளர் குணமே குணம் வளர் துவமே
துவகுணம் வளர் தரு திகழ்வே!
சிவம்வளர் பதமே பதம் வளர் சிவமே
சிவபதம் வளர் சிவபதியே - (4249)

என்ற திருவருட்பா விளக்கி ஒளிருகிறது.

இத்தகைய விளக்கத்தால் புறப்புறமான யாக்கை மாறுவதை -

திருவளர் வளமே வளம் வளர் திருவே
திருவளம் வளர்தரு திகழ்வே
உருவளர் வடிவே வடிவளர் உருவே
உருவடி வளர்தரு உறைவே
கருவளர் அருவே அருவளர் கருவே
கருவரு வளர் நவகதியே
குருவளர் நெறியே நெறிவளர் குருவே
குருநெறி வளர் சிவபதியே! - (4247)

என்ற திருவருட்பாவால் புரிந்து கொள்கிறோம். **உருவளர் வடிவே** என்பது கண் முதலான இந்திரியங்களடங்கிய (புற உறுப்புகள்) புறப்புற உடலை ஐயமற விளக்குகிறது.

மேற்கூறிய வாற்றால் முதலிரண்டு 'அருட்பெருஞ்ஜோதி' மந்திரம், ஆன்மாவையும் ஜீவனையும் மூன்றாவது சொன்ன தனிப்பெருங்கருணை மனமுதற் கரணங்களையும் நான் காவதான அருட்பெருஞ்ஜோதி உடலைச் சொல்லியது அண்ட பிண்ட ஒற்றுமை இணக்கம் கூறும்போது அண்டத்தில் நான்காவதான உடுக்கள், (நட்சத்திரங்களை) பிண்டத்தில் யாக்கைக்கு ஒப்பிட்டோம். இங்கு ஒரு ஐயம் எழலாம். அதாவது நட்சத்திரம் எல்லாம் விஞ்ஞான முறைப்படி சூரியர்களேயாம்! அவ்வாறானால் வரிசைக்கிரமத்தில், அக்கினி, சூரியன், சந்திரன் என்ற ஒளி அளவுக் கிரமத்தில் ஒளியுள்ள (மிகுதியுள்ள) நட்சத்திரத்தை சந்திரனுக்குக் கீழே எப்படி வைக்கலாம் என்று! விஞ்ஞானமுறையில் நட்சத்திரம் சூரியனே ஆனாலும். தோற்றஅளவில் நட்சத்திரம் மிகமிக குறைந்த அளவாய்த் தோன்றுதல் பற்றி மேலும் ஒளிவகைகள் சொல்லி வந்த முறையில் - அக்கினி, சூரியன், சந்திரன் சொல்லியாகி விட்டது. நாம் ஏற்றும் தீப வகைகள் ஒளிப்பொருள்கள் தானே! இந்த ஒளியைச் சொல்ல வேண்டாமா? நமக்கு உபயோகப்படும் நித்தியவாழ்வுள்ள வாழ்க்கைக்குள்ள நம் செயற்குட்பட்ட ஒளிவிடுபடலாமா? இந்த தீபமுதலான ஒளிகளை நட்சத்திரமாக (தோற்றத்தின் அளவில்) கொள்ளவேண்டும்! மேலும் ஒரு நுட்பம்; விஞ்ஞான முறைப்படி அதிக சூடுள்ள (நட்சத்திரம் பல - எனவே சூரியர்களும் பல) ஒளிப்பொருள்களால் தானே யாக்கை ஒளியாகமாற முடியும்? இதில் ஒரு நியாயமு முண்டன்றோ! சாமானியமா யாக்கை மாறுவது? பெருமானார் வெள்ளி நாணயத்தைத் தொட்டால் அது உருகிவிடும் என்பது வரலாறு!


சமரச சுத்த சன்மார்க்க சங்க
சத்திய விண்ணப்பத்தில்: -

''இயற்கை விளக்க நிறைவாகியுள்ள ஒரு சுத்த சிவானுபவ ஞான சபையில் இயற்கை உண்மை நிறைவாகிய திருவுருவைத்தரித்து இயற்கை இன்ப நிறைவாகிய சிவானந்த ஒருமை திருநடச் செய்கையை எவ்வுயிரும் இன்பம் அடைதற் பொருட்டேசெய்தருளுகின்ற எல்லாம் வல்ல தனித்தலைமைக் கடவுளாகிய அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே'' எனச் சொல்லுவார்.

இவ்விளக்கத்தில் வரும் ஞானசபை என்பது சிற்சபை பொற்சபை இரண்டையும். ஒரு அருட் பெருஞ் ஜோதியாகவும் இவை இரண்டையும் உள்ளடக்கிய ஞான சபையை ஒரு அருட்பெருஞ்ஜோதியாகவும், கொண்டு எவ்வுயிரும் இன்படைதல் வேண்டுமென்பதை ''தனிப்பெருங் கருணையாகவும் மூன்றாவதாகிய அருட்பெருஞ்ஜோதி சுத்தப் பிரணவஞான தேகத்தைக் குறிக்கும் ஒளிவடிவம் பெறுவதாகவும் கொள்வது பொருந்தும். இயற்கை உண்மை; இயற்கை விளக்கம். இயற்கை இன்பம் மூன்றிற்கும்;

ஞானசபை; தருமச்சாலை; சித்திவளாகம் இம் மூன்றிற்கும் மிகமிகப் பொருத்தமுமுள்ளது!

இதுகாறும் சொல்லியதைச் சுருங்கச் சொன்னால் அருட்பெருஞ்ஜோதி = சாத்தியம்
தனிப்பெருங்கருணை = சாதகம்





மறையின் மாண்பு

(கம்பராமன்) S.K. இராமராசன்

பல்லாயிர வருடங்களுக்கே முன்பு பாரத நாடு ஞானக்கண் பெற்றது. அது, தன்னைப் பார்த்தது. உலகைப் பார்த்தது. கடலைப் பார்த்தது. சூரியனைப் பார்த்தது. சந்திரனைப் பார்த்தது. நட்சத்திரங்களைப் பார்த்தது. அதற்கு உடனே நாணம் வந்தது.

நான் ஜடப் பொருள்களைக் கடவுளாக எண்ணினேன். அவை கடவுள் அல்ல. இவற்றிற்குள். உள்ளுறையாக கலங்கும் பொருள் தான் கடவுள் என்று தனக்குள் பேசிக் கொண்டது. அதன் இதயத்திலிருந்து

எந்த உருத்திரன் அக்கினியில் இருக்கிறானோ, நீரின் கண்ணும் செடி கொடிகளிலும் இருக்கிறானோ, எவ்வுருத்திரனை அக்கினிய றிய வில்லையோ, எவ்வுருத்திரனுக்கு அக்கினியே திருமேனியோ, எவ்வுருத்திரன் அக்கினிக்குள் இருந்து கொண்டு அதை ஏவுகிறானோ (அதை வணங்குவோம்) என்னும் வேதம் புறப்பட்டது. சிவபிரானால் வேத ஞானம் பெற்ற அப்பர்

எரிபெருக்குவர்: அவ்வெரி ஈசனது
உருவருக்கம தாவது உணர்கிலர், என்றும்
அருக்கன் பாதம் வணங்குவர்; அந்தியில்
அருக்கன் ஆவான் அரனுருவல்லனே என்றும்
உணர்ந்து பாடிப் பரவசமானார்.

வேதத்தைப் பயில்வதும் உரைகாண்பதும் கடினம். வேதம் பயின்றவர்களும் பலர் தவறான உரைகண்டு மக்களை மயக்கி வருகின்றனர். ஆகையால் முன்னோர்கள் 'வேதம் அறிவிலியைக் கண்டு பயப்படுகிறது' என்று கூறினர்.

வேதத்தின் புறப்பகுதியைப் பார்த்து விளக்கம் கூறுவது பெரும் பிழை. இப்படிப் பட்டவர்களுக்குக் காரைக்காலம் மையார் பாணியில் ஒரு பெயர் வைக்கலாம். அது 'நுழைவிலார்' என்பதாம். வீட்டிற்குள்ளே போகாமல் உள்ளேயிருக்கும் மனிதர்களின் குணாதிசயங்களைக் கூறுபவர்கள் நுழைவிலாதார் என்று அறியவேண்டும்.

இன்று இந்துக்கள் வேத ஞானம் பெறாதவர்களாக உள்ளனர். இதனால் புறப்புறப்புறப்புறச் சமய மாக்களால் ஏமாற்றப்படுகின்றனர். அத்தீங்கு எதிர்காலத்தில் பேரிழப்பை உணடுபண்ணும்.

நம் நாட்டில் பல கோடி நூல்கள் நலிந்துள்ளன. அவற்றிற்கு அடிப்படையாக உள்ளவை பதினான்கு வித்தைகள் ஆகும். அவை வேதங்களும் (4) வேதாங்கங்களும் (6) நியாயமும் (1) மீமாம்சையும் (1) ஸ்மிருதியும் (1) புராணமும் (1) ஆகும்.

இதனை வேதம் ஒரு நான்கும் ஆறங்கமும் நன்னியாய மீமாம்சையோடு மிருதி புராணமும் ஈரேழாம் என்று வேதாந்த சூடாமணி கூறும்.

பதினான்கு வித்தையுடன் ஆயுர்வேதம் அர்த்தவேதம் தநுர்வேதம் காந்த ருவவேதம் என்னும் நானன்கையும் சேர்த்து பதினெட்டு வித்தைகள் என்று கூறும் மரபு உண்டு இவ்வுண்மையை,

சங்கையில் ஆயுள் வேதம், காந்தருவம்
தனுமறை யென்றிவை மூன்றும்
அரசர்கள் நீதி யறைந்திடற் குரிய
அர்த்தசாத் திரமொடு இந்நான்கும்
விரவியே பதினெண் வித்தைகள் என்ப என்று விஷ்ணு புராணம் பேசும்.

வேதத்தை மயக்கமின்றி யறிவதற்குக் கருவியாக உள்ளவையே ஆறங்கம் ஆகும். அவை, சிட்சை, வியாகரணம், சந்தஸ், நிருத்தம், சோதிடம், கல்பம் என்பன.

வேதாந்தம் ஆறு சீக்கை கற்பம்
இலக்கணம் சந்தோ பிசதம் நிருத்தம்
சோதிடம் என்னச் சொல்லப் படுமே என்று பொருள் தொகை நிகண்டு பேசும்.

இவற்றுள் சிட்சை எழுத்திலக்கணம் கூறும். வியாகரணம் சொல்லிலக்கணம் கூறும். சந்தஸ் யாப்பிலக்கணம் கூறும். நிருத்தம் வேதத்தில் உள்ள சொற்களின் பொருளை விளக்கும். சோதிடம் காலத்தையும் கால நிகழ்ச்சியையும் கூறும். கல்பம் வேள்வி முறைகளைக் கூறும்.

இவ்வுண்மையை நச்சினார்க்கினியர், ''ஆறங்கமாவன உலகியற்சொல்லை யொழித்து வைதிகச் சொல் ஆராயும் நிருத்தமும், அவ்விரண்டையும் உடனாராய்ந்த ஐந்திரத் தொடக்கத்து வியாகரணமும் போதாயனீயம், பாரத்துவாசம் ஆபத்தம்பம் ஆத்திரேயம் முதலிய கற்பங்களும், நாராயணீயம் வாராகம் முதலிய கணிதங்களும் எழுத்தாராயச்சியாகிய பிரம்மமும். செய்யுள் இலக்கணமாகிய சந்தமும் ஆம் (தொல் புறத் 20) என்று விளக்கினார்.

வேத நாதனுக்குக் கல்பம் கை ஆகும். சந்தம் கால் ஆகும். சோதிடம் கண் ஆகும். நிருத்தம் காது ஆகும். சிட்சை மூக்கு ஆகும். வியாகரணம் முகம் ஆகும்.

இதனை மணிமேகலை

கற்பம் கை, சந்தம் கால், எண் கண்,
தெற்றென் நிருத்தம் செவி, சிக்கை மூக்கு,
உற்ற வியாகரண முகமும் பெற்று என்று கூறும்
(சமயக்கணக்கர்)

வேதத்தின் அங்கங்களை - அங்கம் ஆறும் வேதம் நான்கும் என்றும் (திருச்சந்த விருத்தம்) அங்கமோரானுடை வேள்வியான அருமறை நான்கும் (தேவாரம்) என்றும் செந்தமிழ் வேதம் சிறப்புறப் - பேசும்.

சங்கப் பனுவல்களும் ஆறறியந்தணர்க்கு அருமறை பல பகர்ந்து (கலித்தொகை) என்றும் ஆறுணர்ந்த ஒரு முது நூல் என்றும் ஆறங்கங்களைப் போற்றுகின்றன.

ஆறங்கங்களைப் பெற்ற வேதத்தின் சிறப்பைச் சங்கப்பனுவல்களும், தமிழ் வேதங்களும், நீதி நூல்களும் சிறப்பித்துப் பேசுகின்றன.

சங்க காலத்தில் வேதம் எழுதாக் கிளவி என்றும், கேள்வி என்றும் குறிக்கப் பெற்றது. எழுதாக் கிளவி நின்சொல் (குறுந்தொகை) என்றும் கேள்வி முற்றிய வேள்வி யந்தணர் (புறநானூறு) என்றும் கூறுவதை அறிதல் வேண்டும்.

வேதத்தை அந்தணர்கள் திரும்பத் திரும்ப ஓதிவந்தனர். அதனைக் கேட்ட கிளிகளும் வேதத்தை முழங்கின. உருத்திரங் கண்ணனார்.

வளைவாய்க் கிள்ளை மறைவிளி பயிற்றும்
மறைகாப் பாளர்உறைபதி என்று பெரும்பாணாற்றுப் படையில் இசைத்தார்.

முடிஞ்சியூர் முடிநாகனார்
பாஅல் புளிப்பினும்: பகல் இருளினும்
நாஅல் வேத நெறிதிரியினும்...
நடுக்கின்றி நிலீஇயரோ (புறம்) என்ற கூறுவதை நோக்கினால் சங்க காலம் வேதத்தை எப்படி மதித்தது என்பதை யறியலாம்.

வேதம் சங்கிதை என்றும் பிராம்மணம் என்றும் ஆரண்யகம் என்றும் உபநிடதம் என்றும் நான்கு பகுதிகளைக் கொண்டதாகும். வேதங்களின் முடிவில் சூத்திரங்கள் இருக்கும்.

1. சங்கிதை கடவுளின் பொருள் சேர் புகழைக் கூறும் மந்திரங்களின் தொகுப்பாகும் 2. பிராம்மணம் வேள்விச் சடங்குகளைக்கூறும் 3. ஆரண்யங்கள் வேள்விக்கு மெய்ப்பொருள் கூறும். 4. உபநிடதம் இறைவன், உயிர், கட்டு என்னும் முப்பொருள்களை விளக்கும். சூத்திரங்கள், மந்திரங்களின் தலைவன் தேவதை. வேதயாப்பு முதலியவற்றைக் கூறும்.

வேதத்தை மூன்று காண்டங்களாகப் பிரிந்துள்ளனர். அவை 1. கர்ம காண்டம். 2. உபாசனா காண்டம். 3. ஞானகாண்டம் ஆகும்.

சங்கிதையும் பிராம்மணமும் கர்மகாண்டம். ஆரண்யம் உபாசகாண்டம். உபநிடதம் ஞானகாண்டம் வேறுவிதமாகவும் பிரிப்பர். சேர்ந்தன திவாகரம் ஞான பாகையும் கரும பாகையும் ஆயிருபாற் பொருள் வேத நூற்கே என்று கூறும்.

வேதம் என்னும் சொல் அறிவிப்பது என்னும் பொருள் தரும் இச்சொல்லின் பகுதி வித் என்பதாகும் வித் - அறிவு.

வேதம் என்னும் சொற்குக் கூறப்பட்டுள்ள பொருள்கள் பல.வே என்பது மந்திரபாகம் என்றும் தம் என்பது பிரம்மண பாகம் என்றும் சிலர் கூறுவர். இன்னும் எழுத்துக்களைப் பலவிதமாகப் பிரித்துப் பல பொருள் கூறும் மரபு தொன்று தொட்டு வந்துள்ளது.

வேதம் இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என நான்கு வகைப் படும். இப்பிரிவை அமைத்தவர் வேத வியாசர். இப்பிரிவு தொல்காப்பியம் தோன்றிய பின் அமைந்தது என்று நச்சினார்க் கினியர் கூறுகிறார்.

நான்கு கூறாய் மறைந்த பொருள் உடைமையின் நான்மறை என்றார். அவை தைத்திரியமும், பௌடிருமும் தலைவாகாரமும், சாம வேதமும் ஆம். இனி, இருக்கும் எசுவும் சாமமும். அதர்வணமும் என்பாரும் உளர். அது பொருந்தாது இவர் இந்நூல் செய்த பின்னர் வேதவியாசர் சின்னாட் பல்பிணிச் சிற்றறிவினர் உணர்தற்கு நான்கு கூறாக இவற்றைச் செய்தார் ஆதலின் என்று தொல்காப்பியப் பாயிர உரையில் கூறினார்.

திருமங்கையாழ்வர். நான்கு வேதங்களின் பெயர்களைச் சந்தோகம் பொழியம் தைத்திரியம், சாமவேதம் என்று கூறுகிறார். சந்தோகன் பௌழியன் ஐந்தழல் ஓம்பு தைத்திரியன் சாமவேதி என்றும் சந்தோகா பௌழியா தைத்திரியா சாம வேதியனே என்றும் பாடுகிறார்.

வேதமாகிய கோவிலின் கருப்பக் கிருகம் போல இருப்பது உபநிடதம் ஆகும். இவ்வுபநிடதம் உலகத்துக்கே ஒளி வழங்குகிறது. நம் பாரதியார்.

பன்னரும் உபநிட நூலெங்கள் நூலே
பார்மிசை யேதொரு நூலிது போலே என்று பேசியது தன்மை நவிற்சியே. மதுரக் கவிதையால் அறிஞர்களை மயக்கியவர் கவி வேந்தர் பரஞ்சோதி முனிவர். அவர் (திருவிளையாடல் புராணம்) நரிபரியாக்கிய படலத்தில் சிவபிரான் நடத்திவந்த குதிரையை அற்புதமாக வருணித்தார். அதில் உயிர்நாடியாக ஒரு தொடர் அமைந்துள்ளது. அது ஆழ்ந்த கருத்துடையது. ''முதுகின்மேல் உபநிடக் கலனை கொண்ட வாலிய வைதிகப் புரவி'' என்றார். அதனால், வேதத்தின் முடிவில் உபநிடதம் இருப்பதும் உபநிடத முடிவில் சிவம் இருப்பதும் புலனாகிறது.

பழங்காலத்தில், அறிஞர்கள் உலகத்துக்கு மூல காரணம் எது என்று ஆராய்ந்தபடியிருந்தனர். ஆராய்ச்சியில் கண்டவுண்மைகளை வெளிப்படுத்தினார்கள். இப்படிப்பட்ட வெளிப்பாடுகளைப் பெற்ற மதம் இந்து மதம் ஒன்றே.

பிரம்மா முதல் புழுவரை உள்ள எல்லாம் எதிலிருந்து உண்டாயிற்றோ, உண்டானவை எதில் நிலைத்திருக்கின்றதோ அவைகள் எதில் ஒன்று படுகிறதோ அதுவே பிரம்மம். (பிருகுவல்லி) என்றும்

எதிலிருந்து சூரியன் உதயம் ஆகிறானோ எதில் மறைகிறானோ, அந்த வாயுவையும், பிராணனையும் தேவர்கள் உபாசித்து மேற்கொண்டனர். இப்போதும் மேற்கொள்கிறார்கள். இனியும் மேற்கொள்வார்கள். (பிருகதாரண்யம்) என்றும்.

படைப்புக்கு முன் அவனே ஒன்றாக இருந்தான். பிறகு மூன்றாக ஆனான். ஐந்து ஏழு ஒன்பது பதினொன்று முதலான பலவாக ஆனான் (சாந்தோக்கியம்) என்றும் உபநிடதங்கள் பேசுகின்றன.

இவ்வுலகத்திற்குத் தோற்றம் முதலியன எதனிடம் உள்ளதோ அதுவே பிரம்மம் என்று வியாசர் சுருக்கிக் கூறினார் (பிரம்ம சூத்திரம்)

தமிழ் மறை வழங்கிய வள்ளுவர் அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு என்று அனுபூதியால் கூறினார்.

உலகை இயக்கும் பிரம்மத்தை ஆராய்ந்து உபநிடதம் உடலையியக்கும் உயிரையும் ஆராய்ந்து கூறிற்று. அதற்கு ஆத்மா என்று பெயரிட்டனர். (பிரம்மம் என்னும் பொருளிலும் இச்சொல் ஆளப் பட்டுள்ளது)

அரணிக் கட்டையில் இருக்கும் நெருப்பு எவ்வாறு காணப்படவில்லையோ கடைந்த பிறகு எவ்வாறு காணப்படுகிறதோ அப்படி உடலில் காணப்படாத ஆத்மா தியானத்தால் கடைந்து பார்த்தால் புலப்படும் என்று உபநிடதம் பேசும் (சுவேதாச்வரம்)

ஆத்மாவின் நுட்பத்தை உவமை மூலம் தெரிவிக்க முயல்கிறது. உவமையாவும் ஒருபுடை விளக்கமே. முற்றும் அன்று. விழிப்பாக ஆராயவேண்டும்.

ஒருவானினுடைய நுனியை நூறு பாகம் செய்து அதில் ஒரு பாகத்தை நூறு பாகம் செய்யின் அதில் ஒரு பாகம் ஜீவன். அவன் ஞானமுடையவன் நாசமில்லாதவன் (சுவேதாச்வரம்) என்றும்.

இந்தப் புருஷன் மனோமயனாய் இருக்கிறான். மனத்தால் அரியப் படுபவனாய் இருக்கிறான். அவன் இதயத்துக்குள்ளே நெல்யவம் இவைகளின் அளவினனாய், மெய்ப் பொருளாய் ஒளிவடிவாக விளங்குகிறான். (பிரகதாரண்யம்) என்றும்

என்னுடைய ஆன்மா இதயத்திற்குள் நெல்யவம், கடுகு, சாமை, அரிசி இவைகளைக் காட்டிலும் நுட்பமாகவுள்ளது. (சாஞ்தோக்கியம் என்றும் கூறும் பகுதிகள் நுட்பமாக உணரத் தக்கவை (திருமந்திரம் 204)

இந்த ஆன்ம பிறவாத பேறு பெறப் பிரம்மத்தைத் தேடவேண்டும். தேடிக் கண்டு அதனிடம் தன்னை ஒப்படைக்க வேண்டும்.

பிரம்மத்தை அடைந்த ஆன்மா சிறுமையிலிருந்து விடுதலை பெறுகிறது. சிறு துளி கடலாவதே முத்தி.

அந்தத் தேகத்தில் பிரம்மபுரம் என்ற பெயருள்ள ஒரு வீடு உள்ளது. அந்த வீடு நுட்பமானது. அது தாமரை மலரைப் போன்றது. அந்த வீட்டில் மிகவும் சிறிய நுட்பமான ஒரு ஆகாசம் உள்ளது. அந்த ஆகாயத்தில் எது இருக்கிறதோ அதைத் தேடவேண்டும். (சாந்தோக்கியம்) என்று கூறப்பட்டுள்ளது. பிரமாபுரம் மேவிய பெம்மான் தோடுடைய செவியன்... பொடி பூசி என் உள்ளம் கவர் கள்வன் ஆனான் என்று சீகாழிப் பிள்ளையார் பேசுவார்.

பூமிக்குள் இருக்கும் தங்கப் புதையலை அறியாதவனைப் போல் இந்த மக்கள் தினந்தோறும் உறக்கத்தில் பிரம்மத்தைச் சார்ந்திருந்த போதிலும் அஞ்ஞானத்தால் அந்தப் பிரம்மத்தை அறியவில்லை. இப்படிப்பட்ட இந்த பிரம்மத்திற்குச் சத்தியம் என்று பெயர். (சாந்நோக்கியம்) என்று முழங்குவதை அறிஞர்கள் எங்கும் முழக்க வேண்டும்.

அனுபூதியால் சத்திய ஞானம் பெற்ற நம்திருமூலர் உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம் என்றும். காண் ஆகத்துள்ளே அழுந்தியமாணிக்கம் என்றும் திருவாய் மலர்ந்தருளினார்.

பிரம்மத்தை யடையும் வழி மறைக்கப்பட்டுள்ளது. அந்த மறைப்பை நீக்க முயல வேண்டும். அதற்கு ஒரு மந்திரத்தை உபநிடதம் பேசுகிறது.

செஞ்சுடரே! பிரம்மத்தை யான் அடைய விரும்புகிறேன். அதன் வழி மூடப்பட்டுள்ளது. ஆகையால் சத்திய காமனாகிய யான் அந்தப் பிரம்மத்தையடைய வழியைத் திறந்துவிடு. என்று பிரார்திக்கக் கற்பிக்கிறது ஈசோபநிடதம்.

சத்தியம் பேசுபவன்தான் பிரம்மத்தைக் காண முடியும். ஆகையால் சத்தியகாமன் என்ற சொல் இடமறிந்து அமைக்கப் பெற்றுள்ளது.

சில கதைகளும், சில நீதிகளும் கூறியதால் அது (விரிவாக இருப்பினும்) வேதம் ஆகாது. ஆகமம் ஆகாது. சில வரிகள் இருப்பினும் அது முப்பொருள் பற்றி ஆராய்ந்தால் அது வேதம். திருக்குறளில் உள்ள மெய்யுணர்தல் அதிகாரம் உபநிடதங்களுக்கு விதை போன்றது. இதற்கு விரிவுரை அமையாமையில் நாம் தாழ்நிலையில் உள்ளோம். இந்துக்கள் ஒன்றுபட்டு வேற்றுமை மறக்கும் காலம் வந்து கொண்டுள்ளது. அதை வர வேற்போம்.

சமய நெறியில் மகளிர் பங்கு

1. எழுத்துக்கள் எல்லாம் 'அ' எனும் ஒலிவடிவை முதலாகக் கொண்டுள் ளன. அதுபோல, உலகம் இறைவனை முதலாகக் கொண்டுள்ளது. மெய்ஞ்ஞான சொரூபியாகவும், பேரானந்தக் கடலாகவும் விளங்கும் அக்கடவுளின் திருவடிகளை வணங்குவதே நாம் கல்வி கற்பதன் முடிந்த பயன். அக்கடவுள் விருப்பு வெறுப்பற்றவர். அவர் திருவடிகளைத் தியானிப்பவர்க்குத் துன்பங்கள் உண்டாகா. அவர்கள் பிறவியாகிய பெருங்கடலைக் கடப்பர். பிறவிக்குக் காரணமான அஞ்ஞானம் நீங்க இறைவனைத் தியானிப்பதே மெய்யறிவாம். (குறள் 1,3,4, 7,10,358).

2. ஆசை, கோபம், அறியாமை எனும் இவை மூன்றும் அழிவின் காரணமாக வரும் பிறப்பு, இறப்பு துன்பங்களும் அழியும் (குறள் 360).

3.பிறவாமையை விரும்புவோர், யாதொரு பொருளையும் விரும்பாதிருக்கவேண்டும். அவ்வாறு உலகப் பொருள்களிடத்துக் கொண்டுள்ள பற்றினை (அவாவினை) விலக்கிக் கொள்ள (ஒழித்துவிட) சிறந்த வழி, யாதொரு பொருளிடத்தும் விருப்பு வெறுப்பற்றவரான இறைவனிடத்து நம்பற்றினை மாற்றிக் கொள்ளுதலே யாகும் (குறள் 362, 350).

தேகத்தைப் பொன்போல் பாதுகாக்க வேண்டும்

(அருட்பெருஞ்சோதி அடிகள்)

தேகத்தைப் பொன்போல் பாதுகாக்க வேண்டும்

- அருட்பெருஞ்ஜோதி அடிகள் -

உடலெடுத்த உயிர் கொண்ட இம்மானிட உடலை, ஆண்டவருடைய உடலாகிய பெருஞ்ஜோதிக்கு ஏற்றாற்போல் ஒளிப்புற உடலாக்கிக் கொண்டு வாழ்ந்தால்தான் தெய்வத்தோடு ஒன்றி வாழ முடியும். உயிர், எடுத்த உடலை விட்டால் மற்றொரு உடலில் புகுமேயன்றி, உடல் இல்லாது இறையருள் வெளிப்ப டாது. உயிர் தனித்து இயங்கவும் இயலாத ஒன்று. மற்றும் சூக் கும உடல் கொண்டு இறையருளை வெளிப்படுத்தலாம் என் றால் ஆண்டவர் நமக்கு தூல உடலை அளிக்காமலே, சூக்கும உடலோடு மட்டும் கடவுள் நிலை அடைந்துவிடலாம் என்று அருள் நியதி ஏற்படுத்தியிருப்பார். அப்படிச் செய்யாமல் இன்ப துன்பங்களை உயிர் அனுபவிக்க இத்தூல உடலை அளித்திருப்ப தால், உயிர் செய்த நன்மை தீமைகள் சூக்கும உடம்பையும் தாக்கி, இப்புற உடல் வீழ்ந்தால், திரும்பவும் தூல உடலெடுத்து செய்த செயல்களுக்குண்டான விளைவுகளை அனுபவித்து, நன் மைகளின் விளைவாக உள்ளுடம்பைத் தூய்மையானதாக்கி, அதிலிருந்து மேலும் நிலையான சுத்த, பிரணவ, ஞான உடலாக மாறி இறையருளை, உடலோடு கூடிய உயிர், முழுமையாக வெளிப்படுத்தும் உடலில் தூல உடலோடு பிறந்த நாம் தீமையே செய்யாமல் நன்மையே செய்து, அதாவது பாவமே செய்யாமல் புண்ணியமே செய்திருந்தால், தூல உடலை இழந்த போது, சூக்கும உடலில் புண்ணிய பலன்கள் அவ்வுள்ளுடம்போடு சேர்ந்து, புண்ணிய பலத்தினால், தூய்மையாக நிற்கும். இது எதுபோல் எனில், செம்பு பரிசன வேதியால் மாறுவதுபோல், தூய்மையாக மாறிய உடல் இறையருளால் சுத்த, பிரணவ, ஞான தேகமாக மாறும். ஆனால் செம்பே இல்லாது பொன்னாக மாற்ற முடியாததுபோல், தூல தேகமே இல்லாமல் சுத்த தேகமா கவோ, பிரணவ தேகமாகவோ, ஞான தேசகமாகவோ மாற்ற இயலாது. ஆகையால், கிடைத்த இந்த அசுத்த தூல தேகத்தைக் கொண்டுதான் ஞானதேகம் பெறவேண்டும். தூல உடல் வீழ்ந் தால், வேறு ஒரு தூல உடல் கொண்டுதான், சூக்கும உடம்பைத் தூய்மைப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. எனவே, அசுத்த பூத காரிய தேகமாகிய அநித்தியத் தன்மை கொண்ட இத்தூல உடலையே நித்தியத் தன்மை கொண்ட ஞான உடம் பாக மாற்றிக் கொள்ள வேண்டியதாயிருக்கிறது. தூல உடல் கீழே விழாதவன்தான் சுத்தசன்மார்க்கி. இதைத்தான் வள்ளல் பெருமான் ''சாகாதவனே சன்மார்க்கி'' எனக் குறிப்பிடுகின்றார். இடைவிடாத சத்விசார வசத்தால் மாயையின் மயக்கம் நீங்கி, நிராசை என்ற ஞான யோக நிலை எய்தி, பர ஜீவகாருண்ய ஒழுக்கத்தால் ஞானம் சித்தித்து, ஞான முதிர்ச்சியால் ஞான சித்திகள் கைகூடி மரணமிலாப் பெரு வாழ்வில் வாழ வேண்டி யுள்ளது. எனவே, கிடைத்த இவ்வுடலைப் பொன் போல் முத லில் பாதுகாத்து, முடிவில் மரணமிலாப் பெருவாழ்வை நாமெல்லோரும் இறையருளால் அடைவோமாக!

கடவுளை அடையக் கடைப்பிடிக்க வேண்டிய வழிகள்

1. சமய அறிவைப் பெறுதல்
2. ஆலயங்களைத் தரிசனம் செய்தல்.
3. மனித சமுதாயத்திற்குத் தொண்டுகள் செய்தல்
4. தர்மங்கள் செய்தல்
5. மற்றவர்களுக்குப் பதவி, உடலமைப்புக்குத் தக்கபடி முடிந்த உதவிகள் செய்தல்.
6. பிறரிடத்தும், விலங்கினங்களுக்கும், பறவைகளுக்கும் மற்ற உயிர்களிடத்தும் இடர் செய்யாமை.



அர்த்த பஞ்சகம் பேற்றியல்

S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்
"ஸுதர்சனம்" ஆசிரியர் - திருச்சி.

மாறிமாறிப் பலபிறப்பும் பிறந்து துன்பக் கடலுள் துவள்கின்ற நம்போல்வார் நல்வீடு பெறுவதற்கு உறுப்பாகத் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்கள் பல உண்டு அவற்றுள் அர்த்த பஞ்சகஜ்ஞானம் மிகவும் முக்கியமானது. அந்த ஐந்து விஷயங்களாவன 1. எல்லாவலகையும் உடையவனாகிய இறைவனைப் பற்றிய உண்மையாகிற இறைநிலை. 2. அவனுடைய உடைமைகளில் உயர்ந்த ஜீவர்களாகிற நம்மைப் பற்றிய உண்மையாகிற உயிர்நிலை. 3. நல்வீடு பெற்று நாம் அடையும் பயனாகிய வாழ்வு. 4. இவ்வாழ்வை அடைவதற்கு உபாயமாகிற நெறி. 4. இதுகாறும் நாம் இவ்வாழ்வை அடையத் தடையாயிருந்த தடைகள்.

அர்த்த பஞ்சகம் ஸகல வேதசாஸ்த்ரங்களின் ஸாரம் என்பதை

**''ப்ரப்யஸ்ய ப்ரஹ்மணோ ரூபம் ப்ராப்துச்ச ப்ரத்யகாத்மந:
ப்ராப்த்யுபாயம் பலம் ப்ராப்தேஸ் ததா ப்ராப்திவிரோதி ச
வதந்தி ஸகலா வேதாஸ் ஸேதிஹாஸ புராணகா:
முநய ஸ்ச மஹாத்மந: வேத வேதார்த்த வேதி ந:''**

(அடையத்தக்க பரம்பொருளின் தன்மை அடைபவனான ஜீவாத்மாவின் தன்மை, அடையும் வழி, அடைந்து பெறும் பயன், அடைவதற்குத் தடை ஆகியவற்றை இதிஹாஸ புராணங்களோடு கூடிய எல்லா வேதங்களும், வேத சப்தார்த்தங்களை அறியும் மஹாபுருஷர்களான முனிவர்களும் உரைக்கின்றனர்.) என்னும் ப்ரமாணம் கொண்டு அறியலாம். இதனையே பராசர பட்டர் மிக்க இறைநிலையும் மெய்யாம் உயிர்நிலையும், தக்க நெறியும் தடையாகித் தொக்கியலும், ஊழ்வினையும் வாழ்வினையும் ஓதும் குருகையர் கோன், யாழினிசை வேதத் தியல்'' என்று அருளினார். இந்த ஐந்து விஷயங்களில் வாழ்வு அல்லது பேறு எனப்படும் முக்திநிலை விளக்கப்படுகிறது.

உயிராகிற ஜீவன் இறைவனாகிற ஸ்ரீமந்நாராயணின் அருளாலே பிராக்ருத தேஹஸம்பந்தம் நீங்கப் பெற்று, நித்ய விபூதியாகிற பரமபதம் என்றுதான் விரும்பிய வாழ்ச்சியைப் பெறுவது முக்தி நிலை எனப்படுகிறது. ஜீவாத்மா பரமபதம் சென்று ஜ்ஞாநாநந்தமயமான தன் ஆத்ம ஸ்வரூபத்தையே சரீரமில்லாமல் என்றும் தான் தனி நின்று அநுபவித்துக் கொண்டிருக்கையாகிற கைவல்யம் எனப்படும் தாழ்ந்த மோக்ஷத்தையோ, அல்லது இறைவனான ஸ்ரீமந்நாராயணனை அடைந்து அப்ராக்ருத சரீரம் பெற்று அந்தமில் பேரின்பத்து அடியரான நித்யமுக்தர்களோடு கூடி நின்று அவனை அநுபவித்துப் பேரின்பமடைதல், அவனுக்குக் கைங்கர்யம் செய்து பேரின்பமடைதல், அவனுகப்பையே பயனாகக் கொண்டு அவனுக்கு அடிமை செய்து அவன் முகமலர்த்தி கண்டு பேரின்பமடைதல், அவனது அடியார்களது உகப்பையே பயனாகக் கொண்டு அவர்களுக்கு அடிமை செய்து அவர்கள் முகமலர்த்தி கண்டு பேரின்பமடைதல் ஆகியவற்றில் தான் விரும்பிய தொன்றைப் பெறும் தலைசிறந்த மோக்ஷத்தையோ இவ்வுலகில் தான் விரும்பியபடி அடைகிறான் என்று சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. இத்தலை சிறந்த மோக்ஷமாகிற ஸாயுஜ்யமே 'பரமமோக்ஷம்' என்றும் 'நல்வீடு' என்றும் 'வீறு பெறு துறக்கம்' என்றும் கூறப்படுகிறது. நித்யஸூரிகளுக்குப் போலே இவ்வுலகிலுள்ள பத்தஜீவர்களுக்கும் இத்தகைய நல்வீட்டை அருளித் தான் இன்புற வேண்டும் என்னும் ஆசையாலேயே, ஸ்ரீமந்நாராயணன் ப்ரளய காலத்தில் ஸூக்ஷ்மமான மூலப்ரக்ருதியெனும் அசேதனப் பொருளோடு கலந்து சரீரேந்திரியங்களற்றுக் கிடக்கும் ஜீவர்களுக்கு ஸ்ருஷ்டி காலத்தில் ஸ்தூலமான உடலையும் இந்திரியங்களையும் அளித்து, தன்னை அறிவிக்கும் சாஸ்திரங்களையும் அளித்து, தானும் நாட்டிற் பிறந்து படாதனபட்டு, ஞானிகளையும் அவதரிக்கச் செய்கிறான். இத்தகைய நல்வீட்டை விரும்பினால், இதை அடைவதற்கு ஒவ்வொரு ஜீவனுக்கும் உரிமையுண்டு - என்பது ஆழ்வார்கள் கண்ட நெறி.

இந்த நல்வீட்டை அடைவதற்குப் பற்பல படிகளாகவே உலகிலுள்ள எல்லாச் சமயங்களையும் படைத்திருக்கிறான் என்பதும் ஆழ்வார்கள் கண்ட நெறியின் உட்கருத்தாகும். பரமபதத்தில் ஸ்ரீமந்நாராயணனுக்கும், அவனுடைய அடியார்களுக்கும் கைங்கர்யம் செய்து பேரின்பப் பெருவாழ்ச்சி பெறுவதற்காகவே முக்தஜீவன் இறைவனின் விருப்பத்தைப் பின்செல்லும் தன் விருப்பப்படி அப்ராக்ருதமான சரீரத்தை எடுத்துக் கொள்கிறான். ஈச்வரனுடைய திருமேனி போலே இந்த முக்த சரீரமும் நித்ய விபூதியிலுள்ள சுத்தஸத்வமுடைய அசேதனப் பொருளால் ஆனது. ஸத்வம், ரஜஸ்ஸு, தமஸ்ஸு என்னும் முக்குணங்களுடைய ப்ராக்ருத சரீரம் போலே, இந்த சரீரம் ஜீவனுடைய ஜ்ஞாநாநந்தங்களைக் கட்டுப்படுத்தித் தாழ்த்தாது. இந்த சரீரத்தைக் கொண்டு எல்லா இடங்களிலும், எல்லாக் காலங்களிலும், எல்லா நிலைகளிலும் உசிதமான எல்லாவிதமான கைங்கர்யங்களையும் செய்கிறான் பேரின்பப் பெருவாழ்வு பெற்ற முக்தன். இதுவே ஜீவஸ்வரூபத்திற்கத் தகுந்த பெருவாழ்ச்சியாகும். இக்கைங்கர்யத்தையும் தாஸனான தன் ஆனந்தத்திற்காக என்று எண்ணிச் செய்யாமல், ஸ்வாமியான அவனுடைய ஆனந்தத்திற்காகவே என்று எண்ணிச் செய்ய வேண்டும். ஸம்ஸார மண்டலத்தில் இருக்கும் போது அவனுகப்புக்கேயான கைங்கர்யத்தைச் செய்ய ஆசைப்படுபவர்களுக்கே அத்தகைய பெருவாழ்வு கிடைக்கும் என்பதை ''தனக்கேயாக எனைக்கொள்ளும் ஈதே எனக்கே கண்ணனை யான்கொள் சிறப்பே'' என்று நம்மாழ்வாரும், ''உனக்கே நாம் ஆட்செய்வோம்'' என்று ஆண்டாளும் அருளிச் செய்தனர். உடைமையான ஜீவனை அடைந்து தான் இன்புற வேண்டும் என்பதே உடையவனான இறைவனின் விருப்பமாகையால் ஜீவன் மோக்ஷத்திலும் தன் ஆனந்தத்தைக் குறிக்கோளாகக் கொள்ளாமல், இறைவனின் ஆனந்தத்தையே குறிக்கோளாகக் கொள்வது தலைசிறந்தது. இத்தகைய மோக்ஷத்தையும் இறைவன் எவர்க்கும் நிர்ப்பந்தப்படுத்திக் கொடுப்பதில்லை. எவர்கள் இத்தகைய அடிமை செய்ய ஆசைப்படுகிறார்களோ, அவர்களுக்கே இதை அருளுகிறான் இறைவன். ஆகையால் இவ்வடிமை இவ்வுலகில் தகாதவர்களுக்குச் செய்யும் அடிமைபோலே துன்பத்தை விளைவிப்பதாயிராமல், உயிர்களுக்கு எல்லா உறவுமாயிருக்கும் இறைவன் விஷயத்தில் அவனுகப்புக்காகச் செய்யப்படுவதாகையால் பேரின்பப் பெருவாழ்வாயிருக்கிறது. ஆழ்வார்கள் நெறியின்படி உயிர்களுக்கு முக்தியை அளிப்பதற்கு உரியவன் திருமாலே யாவான். ''மோக்ஷத்தை அளிக்க வல்லவன் புருஷோத்தமனே'' என்று புருஷஸூக்தமும், ''மோக்ஷத்தை ஜநார்த்தனனிடமிருந்தே பெற வேண்டும்'' என்று ரிஷிகளும், ''எருத்துக் கொடியுடையானும்,

பிரமனும், இந்திரனும் மற்றும் ஒருத்தரும் இப்பிறவி என்னும் நோய்க்கு மருந்தறிவாருமில்லை; மருத்துவனாய் நின்ற மாமணி வண்ணா'' என்று பெரியாழ்வாரும், ''மறுபிறப்பு அறுக்கும் மாசில் சேவடி மணிதிகழ் உருபின் மாஅயோயே'' ''நாறு - இணர்த்துழா யோன் நல்கின் அல்லதை ஏறுதல் எளிதோ வீறுபெறு துறக்கம்'' என்று சங்ககாலப் புலவர்களும் கூறியது காண்க.

முக்தியில் ஜீவன் பெறும் தலைசிறந்த பேறு எம்பெருமான் உகப்புக்கேயான கைங்கர்யமேயாகும். இதை நம்மாழ்வார் ''உகக்கு நல்லவரொடும்'' (திருவாய்மொழி 10.3.9) என்று தொடங்கும் பாட்டில் நாயகித் தன்மையில் வைத்துக் காட்டுகிறார். கண்ணன் 'பசு மேய்க்கப் போகிறேன்' என்று பராங்குச நாயகியாகிற ஆய்ச்சியிடம் பொய் கூறுகிறான். அவன் மற்றும் சில கோபிகளைச் சென்று அடைவதற்காக அப்படிக் கூறுகிறான் என்று உணர்ந்த பராங்குச நாயகி ''நீ உகக்கும் ஆய்ச்சிகளை இங்கேயே வரவழைத்து எங்கள் கண் முன்னே அவர்களைத் தழுவினாயானால் நாங்கள் நீ எங்களைத் தழுவும் போதிலும் மிகவும் இன்புறுவோம். இதற்காகப் பொய் சொல்லி வெளியில் சென்று யாராவது அசுரர்களிடம் அகப்பட்டுக் கொண்டால் என் செய்வோம் நாம்? நீ உகப்பதே எங்களுக்குத் தேவை. அது எங்களைத் தழுவுவதாலேயே விளைய வேண்டும் என்னும் நிர்ப்பந்தமில்லை. நீ உகக்குமவர்களைத் தழுவுவதால் விளைந்தாலும் எங்களுக்கு மிக்க மகிழ்ச்சியே. இதில் எங்களுக்கு சக்களத்தி மனப்பான்மை கிடையாது'' என்கிறாள். இது அவனுகப்பே பேறு' என்பதை மிகத் தெளிவாகக் காட்டுகிறது. அப்பாசுரம் பின்வருமாறு -

உகக்கு நல்லவரொடும் உழிதந்து
உன் தன் திருவுள்ளம் இடர்கெடுந்தொறும் நாங்கள்
வியக்க இன்புறுதும் எம்பெண்மையாற்றோம்
எம்பெருமான்! பசுமேய்க்கப் போகேல்
மிகப்பல அசுரர்கள் வேண்டுருவங்
கொண்டு நின்று உழிதருவர்கஞ்சனேவ
அகப்படில் அவரொடும் நின்னோடு ஆங்கே
அவத்தங்கள் விளையும் என் சொற்கொள் அந்தோ!

இதைக் கருத்திற்கொண்டே பூர்வாசார்யர் ஒருவர் ''இரக்கம் உபாயம் (ஆறு), இனிமை உபேயம் (பேறு)'' என்று அருளிச் செய்தார்.

ஜோதி தரிசனம்

உணருள்ளம் கண்ணாடி உற்றவருள் தீபம்
இணங்குமாயை ஏழு திரைகள் - வணங்கித்
தொழுதேத்த மாயாத் திரைவிலகத் தோன்றும்
செழுமருள் ஜோதியெனச் செப்பு

(வள்ளலார் அருள்வேட்டல் அந்தாதி)

''**சி**வ மூலமந்திரமாகிய ஸ்ரீ பபஞ்சாக்ஷரமும், அகோர மந்திரமும் சிவாலய தரிசனத்தின் முடிவில் ஜெபித்ததற்குரிய மந்திரங்களாகும். விநாயகர், முருகர், தக்ஷிணா மூர்த்தி, அம்பிகை இவர்களுக்குரிய மந்திரங்களையும் அவரவர்கள் சந்நிதிகளில் இருந்து ஜெபிக்கலாம். ஸ்ரீ பபஞ்சாக்ஷர ஜெபத்தைத் தக்ஷிணா மூர்த்தி சந்நிதியிலும் செய்யலாம். ஜெபத்தின் முடிவில் ஒன்றும் செய்யாது அமைதியாய் மனத்தை இறைவனிடத்தில் சேர்த்து அவனையே நினைத்து இருக்கும் தியானமும் இங்கு ஜெபம் என்பதில் அடங்கியுள்ளது.

— ''சிவாலய தரிசன முறை''

தொகுப்பு: வே.சரவணமூர்த்தி.

''**சி**வலிங்கமே பிரணவ முதற்பொருள். இதன் சோதித் தன்மையே அகர, உகர, மகரமாயிருக்கும். அகரம் சிவமும், உகரம் சத்தியும் மகரம் கலை வடிவமுமாம். நாத விந்துக்கள் அகர உகரங்களுள் அடங்கும். அகரம் கண்டமும், உகரம் கோமுகியும், மகரம் விட்டமுமாம். பிரணவம் இலிங்கமுமாயிருக்கும்.

அகார முதலா வனைத்து மாய்நிற்கும்
உகார முதலா உயிர்ப்பெய்தி நிற்கும்
அகார உகார மிரண்டு மறியில்
அகார உகார மிலிங்க மதாமே.

— திருமந்திரம்

தொகுப்பு: வே.சரவணமூர்த்தி.



ஸ்ரீ ஆண்டாள் ரங்கமன்னார்

திருப்பாவையிலோர் பாட்டின் சுவை

(பேராசிரியர். சி. ஜெகந்நாதாசாரியார்)

"கனைத்திளங் கற்றெருமை கன்றுக் கிரங்கி
நினைத்துமுலை வழியே நின்றுபால் சோர
நனைத்தில்லம் சேறாக்கும் நற்செல்வன் தங்காய்!
பனித்தலைவீழ நின்வாசற் கடைபற்றி
சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக் கினியானைப் பாடவும்நீ வாய்திறவாய்
இனித்தானெழுந்திராய் ஈதென்னபேருறக்கம்!
அனைத்தில்லத்தாரும் அறிந்தேலோ ரெம்பாவாய்".

இப்பாசுரத்தில் ஸ்ரீ கிருஷ்ணனை விட்டுப் பிரியா மலிருப் பானொருத்தனின் தங்கையை எழுப்புகிறார்கள் முற்பட எழுந்திருந்த சிறுமியர். கண்ணனை நொடிப் பொழுதும் பிரியகில்லாதவனாதலின், அவனை, 'நற் செல்வன்' என்றார்.* கண்ணனோடு எப்போதும் கூடித்திரிவன் என்றது எவ்வாறு பெற்றதெனில் 'இளங் கற்றெருமை கனைத்து' என்றதனாலாகும்: வகுத்த காலத்திற் கறக்கப் பெறாமையாலன்றோ முலைகடுத் துக் கதறுகின்றன இளங்கன்றுடைய எருமைகள்! எருமை களை உரிய காலத்திற் கறக்காமல்போனால் முலை கடுப்புற்றுக் கனைத்தல் இயல்பு.

ஈண்டு ஒரு வினா எழுகின்றது. இங்ஙன் கண்ணனை விட்டுப் பிரிய மாட்டாதா னொருவன் என் கையால் அவன் ஸ்வதர்மத்தை விட்டானென்பது பெறப்படுமே! குலத்தொழிலை அநுஷ்டியாது விடுகை தருமமா? என்பது. இதற்கு விடை – "தொழில் எனக்குத் தொல்லை மால்தன் நாமமேத்தப். பொழுதெனக்கு மற்றதுவே போதும்" என்ற திருமழிசைப்பிரான் வாய்மொழியேயா கும். இது விசேஷ அதிகாரிகளுக்கு ஏற்றதொன்று. ஆகவே, இப்பாசுரத்தில் அத்தகைய உத்தம பாகவத னொருவன், தன்குலத்தொழிலாகிய பால்கறப்பதையும் நீத்துக் கண்ணனுடைய அதிமாநுஷ சேஷ்டிதங்களிலீடு பட்டவன், விவஹரிக்கப்படுகிறான். அதுபற்றியன்றோ 'நற்செல்வன்' எனப்பட்டான். ஈண்டு, கைங்கரிய ஸ்ரீநோக்கி ஸ்ரீ வான்மீகியும் 'லக்ஷ்மணோ லக்ஷ்மி ஸம்பந்ந:' என்றார் என்பது உணர்க. எனவே, இப் பாசுரத்தில், 'கர்மாநுஷ்டானத்தை விட்டாயினும் பகவத் கைங்கரியம் செய்தலாகும்' என்ற கருத்து பெறவைக் கப்பட்டது என்க.

இக்கருத்தினை வேறு சில அதிகாரிகளும் மேற்கொண்டு ஒழுகியுள்ளனரென்ப. அதற்கு ஓர் எடுத்துக்காட்டு கூறுவல் :–

ஒருகால், பெருமாள் கோவில் என்ற திவ்ய க்ஷேத்ரத்தில், ஒரு பரம பாகவதர் சந்தியாவந்தனம் பண்ணத் தொடங்கி, அர்க்யம் ஒரு தரம் விட, அப்போது தேப்பெருமாள் புறப்பாடிட்டெழுந்தருள, அப்படியே அவ்அர்க்யம் விடுதலை விட்டு, அநுயாத்ரையாகச் சென்று, பெருமாள் கோயிலுக்கு எழுந்தருளியபின், மறுபடியும் புஷ்கரணியிலிறங்கி, விட்ட அர்க்யம் தொடங் கிச் சந்தி செய்து முடித்தார் என்ப.

மற்றும் ஒன்று ஈண்டு கூறுவேன்; பெருமாளது பிரம உற்சவத்தை நடப்பித்தற்காகச் சங்கற்பித்துக் கொண்டு, பவித்திரமும் காப்பும் கட்டிக் கொண்டவரது தாய் பரம பதித்தாளாக, அவர் நேரே பித்ருகாருநம் சென்று அக்னிப்ரதாநம் செய்து, ஸ்நாநம் செய்திட்டு, நேரே கோயிலைச் சார்ந்து காப்புக் கட்டி உற்சவத்தைச் சிறப்பித்து நடத்தி, உற்சவமான பின்பு, மாதாவின் சரம கர்மங்களைத் தொடங்கி முடித்தல் வேண்டும் எனப் பெரியோர் சொல்லக் கேட்டதுண்டு என்பது.

இவற்றால், மேற்கொண்ட கிரியைகளை விட்டுவிடக் கூடாது, பின்னராவது செய்தே தீரவேண்டுமென்ற சாஸ்த்ரார்த்தம் கவனித்தற்குரியது. அதுபற்றியன்றோ, "பொது விதியானது சிறப்பு விதியால் சிறிது நழுவும்" என்றே சாக்கிரதையாகக் கூறினார் பெரியோர் என்ப. 'நழுவும்' என்றாரேயொழிய அடியோடு ஒழிக்கப்படும்' என்று சொல்லப்படவில்லை. 'நழுவும்' என்ற சொல் 'தானே நழுவும்' என்ற பொருளது; எப்படியெனில், உறங்குபவன் கைப்பண்டம்போலே' என்பர். எனவே, விசேஷ தர்மத்தை யநுஷ்டிக்கும்போது சாதாரணதர்மம் தன்னடைவே நழுவும் என்பது பெறப்படும்.

பால் சோர நனைத்தில்லம் சேறாக்கும்

எருமை கன்றுக் கிரங்கி நினைத்துச் சொரிந்த பால் இல்லத்தைச் சேறாக்கிற்று இங்கு, என்றாள் ஆண்டாள். ஆனால், கம்பன் ஆண்டாளின் இந்தக் கருத்தை

* தோற்றிமாயும் சம்பத்தன்றி கிருஷ்ணன் திருவடிகளில் நிரந்தர சேவை செய்தல் நற்செல்வம்; கைங்கரிய லக்ஷ்மியிறே இவ்வாத்மாவுக்கு நிலைநின்ற சம்பத்து".

யொட்டியே பாட்டமைத்து, பால் வீணாகாதபடி செய்த நயத்தை ஈண்டு ஒருசார் ஒப்புநோக்கி இன்புறுக :–

**"சேலுண்ட வொண்க ணாரிற் றிரிகின்ற செங்கா லன்னம்
மாலுண்ட நளினப்பள்ளி வளர்த்திய மழலைப் பிள்ளை
காலுண்ட சேற்று மேதி கன்றுள்ளிக் கனைப்ச் சோர்ந்த
பாலுண்டு துயிலப் பச்சைத் தேரைதாலாட்டும் பண்ணை" ***

இனி, **'நற் செல்வன் தங்காய்'** – விபீடணன்போல் 'பஞ்செனச் சிவக்குமென்கால் தேவியைப் பிரிந்த பாவி வஞ்சனுக் கிளையன், களவியலரக்கன் பின்பு தோன்றிய வன்' என்ற இவ்வாறாகவன்றி 'நற்செல்வன் தங்காய்' என உறவிட்டு அழைக்கும்படி யிருப்பதென்னே! என ஈடுபட்டபடி.

'பனித்தலை வீழ நின் வாசற் கடைபற்றி' என்றவிடத்து இரக்கந் தோன்ற நிற்பது காண்க. இதனை ஆங்கிலத் தில்' Pathos என்பர். மேலே பனிவெள்ளம், கீழே பால் வெள்ளம், நடுவே உள்ளத்தில் மால்வெள்ளம் என்கிறார் களாம். வாசற்கடை – தண்டியம் எனப்படுவது.

ஐந்தாம் அடியில், **'சினத்தினால் செற்ற'** என்றதால் மனப்பூர்வமாகக் கொல்லவும் எண்ணவில்லை என்பது த்வனி; (யதிவா ராவணஸ் ஸ்வயம்! என்றவனல்லனோ) கோபம் விஞ்சிப் போய்க்கருணா மூர்த்தியையும் அடக்கி விட்டது என்றபடி. மற்றும், கரனை வதைத்த போது கோபத்தைத் தான் வரவழைத்துக் கொண்டான் என்ற பொருளில் ஸ்ரீ வான்மீகி எழுதியுள்ளார்; "ரோஷ மாஹாரயத் தீவ்ரம்நிஹந்தும் ஸமரேகரம்' என்று. ஆனால், அந்த வான்மீகரே, தன் அடியவனை நலிந்தமைக் காக இராவணனோடு பொரும்போது இராமன் போகத் திற்கு வசமானான் என எழுதியுள்ளார்; "ததோராமோ மஹாதேஜா; ராவனேந க்ருத வ்ரணம் – த்ருஷ்ட்வா ப்லவக சார்த்தூலம் கோபஸ்ய வசமேயிவாந்". அக் கருத்துப் பற்றியேதான், ஆண்டாளும் 'சினத்தினால்' எனப் பாடினாள்.

'செற்ற' என்ற சொல்லாற்றலால், ஓரம்பால் அவன் தலைகளைத் தள்ளாது, ஆயுதங்களை முறியச் செய்து, புத்திர பந்துக்களையெல்லாம் இழக்கப்பண்ணி, மனக் லேசத்தை விளைத்து, இறுதியில் தலையறுபட்டுக் கருங் குன்றுபோல் முகங்குத்தி வீழச் செய்தமையைக் குறிப் பித்தபடி.

இனி, 'மனத்துக்கினியானை' என்பதற்கு அகலவுரை;

இத்தொடர்க்கு (1) நட்பினர் நொதுமலர் என்ற இவர் கள் மனத்துக்கினியவனாவதன்றி, (2) பகைவரின் மனத் துக்கும் இனியன் என்று பொருள் காணவேண்டும்.

(1) நட்பினர் நொதுமலர் மனத்துக்கினியவன் எப்படியெனக் காண்போம்; (அ) ரிஷிகளுக்கெல்லாம் மனத்துக்கினியவன்; கங்கைக் கரையில் வாழ்ந்த தபோதனர் இராமனைத் தரிசித்து மகிழ்ந்து,

**"எதிர்கொ டேத்தினர் இன்னிசை பாடினர்
வெதிர்கொள் கோலினர் ஆடினர் வீரனைக்
கதிர்கொள் தாமரைக் கண்ணனைக் கண்ணினான்
மதுர வாரி யமுதென மாந்துவார்" – என்னுமாறு
ஆகவில்லையோ!**

மற்றும், குடிமக்களுக்கெல்லாம் இனியவனன்றோ! **"உண்ணும் நீரினும் உயிரினும் அவனையே உவப்பார்"** (மந்திரப்படலம், செ. 42.)

(ஆ) மேலும், அவனது 'ராம' நாமமே மனத்துக்கு இனிமையன்றோ! 'ராம நாமமே கற்கண்டு, ரஸமறியாத வனே கல்குண்டு' என்ப. அன்றியும் 'ராம நாமமே வரகட்க நீவி' என்றார் தியாகையர். 'ராம' என்றிரண்டு எழுத்தினைக் காட்டிலும் மனத்துக்கு இனிமை பயப்ப தொன்றுண்டோ?

**"கெதாயு பஞ்ச பாத கங்க ளைத்து ரத்து மந்திரம்
இதா மிதா மிதல லவென் றலந் துழலு மேழைகாள்!
சதா விடாம லோது வார் தமக்கு நல்ல மந்திரம்
இதா மிதா மிராம ராம ராம வென்னும் நாமமே"**

என்றார் ஓர் கவியும்.

**"நன்மையுஞ் செல்வமும் நாளும் நல்குமே
தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே
சென்மமும் மரணமும் இன்றித் தீருமே
இம்மையே ராமவென் றிரண்டெழுத்தினால்"**

(கம்பரா: காப்பு. செ. 13)

மற்றும், இந்த ராம நாமத்தின் இனிமையை அதன் பெருமை நோக்கியுணர்க. "பார்வத் யுவாச; கேநோபா யேநலகுநா விஷ்ணோர்நாம ஸஹஸ்ரகம் – பட்யதே பண் டிதைர்நிர்யம் சுரோதும் இச்சாம்யஹம் ப்ரபோ; ஈஸ்வர உவாச; ஸ்ரீ ராமராமராமேதி ரமேராமே மநோரமே – ஸஹஸ்ரநாமதஸ் துல்யம் ராமநாம வராநநே" என்ற மகாபாரதத்தாலும், அவ்விடயத்தையே கூறுகிற "சம்ப நாடன்னுமைசெவி சாற்று பூங், கொம்பனாடன் கொழு நன் இராமப்பேர்" என்ற அடிகளாலும் அறிக.

(2) இனி, பகைவர்க்கும் இனியனாதல் எப்படி எனக் காண்போம் :–

(அ) மூக்கும் வெம் முரண் முலைக் கண்களும் முறையாலிழந்து அரற்றிய சூர்ப்பணகையும் 'போக்கினீர் என் நாசி போய்த்து என்?" என்றும், 'மேக்குயரும் நெடு மூக்கும் மடந்தையர்க்கு மிகையன்றோ' என்றும்,

"பொன்னுருவப் பொருகழலீர் புழைகாண
மூக்கரிவான் பொருள்வே றுண்டோ
இன்னுருவ மிதுகொண்டிங் கிருந்தொழி

---

* கம்பராமாயணம் – நாட்டுப்படலம், செ. 13

யும் நம்மருங்கே யேகா எப்பால்

பின்னிவளை யயலொருவர் பாராரென் றேய

ரீந்தீர் பிழைசெய் தீரோ

அன்னதனை யறிந்தன்றோ அன்பிரட்டி

பூண்டதுநா னறிளி லேனோ"

(சூர்ப்பணகைப் படலம், செ. 133)

என்றும் கூறியது, அவளது கொடிய மனத்துக்கும் இனியனா யிருந்ததனாலன்றோ! மற்றும் சூர்ப்பணகையால், சீதையினழகைச் சொல்லக்கேட்ட இராவணன் உருவெளித் தோற்றமாகச் சீதையைக் கண்டு, "நங்காய்! மைந்நின்ற வாட்கண் மயில் நின்றென வந்தென் முன்னர், இந்நின்றவ ளாங்கொல் இயம்பிய சீதை" (மாரீசன் வதைப் படலம், செ. 148) என்று கேட்க, அதற்கு விடையாக, இராமாநந்த பரவசையான சூர்ப்பணகை தான் உருவெளித் தோற்றமாக்க கண்டிரா நின்ற இராமன், இறையேனும் விட்டகலாதிருப்பவே, அண்ணன் கேட்டதன் குறிக்கோளையு மறியாது தன்னையும் மறந்து,

"செந்தாமரைக் கண்ணொடும் செங்கனி வாயினோடும்

சந்தார் தடந்தோளோடும் தாழ்தடக் கைகளோடும்

அந்தார் அகலத்தோடும் அஞ்சனக் குன்றமென்ன

வந்தான் இவனாகும் அவ்வலில் இராமன்"

(மாரீசன் வதைப் படலம், செ. 149)

என்று விடையிறுத்தனளன்றோ! இங்ஙன் செய்தது நஞ்சு தீட்டிய அவ்வஞ்ச மகளின் மனத்துக்கும் இனியனா யிருந்த தாலன்றோ!

(ஆ) இஃதோடு, சூர்ப்பணகையைப் பற்றிய விருத்தாந்தத்தை நிறுத்தி, இராம பாணத்தால் அடிபட்ட வாலியைப் பற்றிப் பார்ப்போம்.

மார்பில் இராமபாணம் பாய்ந்து, இராமபிரானை ஏசலுற்ற வாலி, உயிர்துறக்குந் தறுவாயில்,

"அரந்தைவெம் பிறவியென் நோய்க் கருமருந்தனைய

வையா!

வரந்தரு வள்ளால்! ஒன்று கேள்என மறித்துஞ்

சொல்வான்"

"ஏவுகூர் வாளியா லெய்துநா யடியனேன்

ஆவிபோம் வேலைவாய் அறிவுதந் தருளினாய்

மூவர்நீ முதல்வன் நீ முற்றுநீ மற்றுநீ

பாவநீ தருமநீ பகையுநீ யுறவுநீ"

என்றும் பேசவில்லையோ? இதற்குக் காரணம்– ஓவியத்தெழுத வொண்ணாவுருவத்திலீடு பாடன்றோ! எனவே, பகைக்கப்பட்டார்க்கும் மனத்துக்கினியான் என்பது பெற்றாம்.

(குறிப்பு:– ஈண்டு, 'ஏவு கூர்வாளியால் அறிவுதந்து' என இயைத்து, அம்பு ஆசாரியனாகி அறிவூட்டியது எனக் காண்க. கூலியனுக்குக் காலாழி ஆசாரியனாகி அஞ்ஞானம் போக்கித் திருமந்திரத்தை உபதேசித்தது, போலே) மற்றும் 'நீ' என முன்னிலைப்படுத்தி எட்டுதரம் கூறியது–அஷ்டாக்ஷர மந்திரத்திற்குரியவன் என்பதையும் காட்டும்).

(இ), பெரும் பகைவனான இராவணனுக்கும் மனத்துக்கு இனியனாகிறான் இராமபிரான்:–

முதல்நாட் போரில் தோற்ற இராவணன், "வாரணம் பொருத மார்பும் வரையினையெடுத்த தோளும், நாரத முனிவற்கேற்ப நயம்பட வுரைத்த நாவும் தாரணி மௌலிபத்தும் சங்கரன் கொடுத்த வாளும் வீரமுங் களத்தே போட்டு" வெறுங்கையோடிலங்கை மீண்டான். மீண்டவன், "மாதிரமெவையும் நோக்கான் வளநகர் நோக்கான் வந்த, காதலர் தம்மை நோக்கான் கடற் பெருஞ் சேனை நோக்கான், தாதவிழ் கூந்தன் மாதர் தனித்தனி நோக்கத் தானோர், பூதலமென்னும் நங்கை தன்னையே நோக்கிப்புக்கான்". புகுந்தவனுக்கு, "நாளொத்த நளினமன்ன முகத்தியர் நயனமெல்லாம் வாளொத்த, மைந்தர் வார்த்தை யிராகவன் வாளியொத்த". இப்படி நாணமுற்றுத் திரும்பிய இராவணன் மாலியவானிடத்துச் சென்று, பதினாறு கவிகளால், (கும்பகர்ணன் வதைப்படலம், செ. 16–31) இராமன் வல்லமை முதலியவற்றை வியந்து பாராட்டி, இறுதியாக, "நாசம் வந்துற்ற காலை நல்லதோர் பகையைப் பெற்றேன்" என்கிறான்; காரணம், அழகனுடலி வீடுபாடும் அவன் சேவகச் செய்கையிலீடுபாடும்; எனவே, பகைவனும் கொண்டாடும் மனத்துக்கினியான் என்பது விசதமன்றோ! இதற்கு,

"போயினித் தெரிவ தென்னே பொறையினாலுலகம்

போலும்

வேயெனத் தகைய தோளி யிராகவன் மேனி நோக்கித்

தீயெனக் கொடிய வீரச் சேவகச் செய்கை கண்டால்

நாயெனத் தகுது மன்றே காமனும் நாமும் எல்லாம்"

என்ற பாடலே சான்று பகரும்.

(ஈ) தன் கணவன் மேனியை மேலும் கீழும் எள்ளிருக்குடமின்றித் துளை செய்த இராமனிடத்துப் பெரும்பகைமை கொள்ள வேண்டியிருப்ப, கற்புக்கடம் பூண்ட தெய்வமாகிய மண்டோதரி அழுது அரற்றும் போது பேசும் பேச்சைக் கேளுங்கள்:–

"ஆரா வமுதாய் அலைகடலிற் கண்வளரும்

நாராயணனென் றிருப்பேன் இராமனைநான்

ஓராதே கொண்டகன்றாய் உத்தமனார் தேவிதனைப்

பாராயோ நின்னுடைய மார்பகலம் பட்டவெல்லாம்"

(இராவணன் வதைப்படலம், செ. 245)

இங்ஙனம் பேசியது, அவள் மனத்துக்கு இராமன் சாக்ஷாத் நாராயணனாகி இனியனாகிய தாலன்றோ!

இனி, இராமபிரானை 'மனத்துக்கினியானை' என்று பெண்பிள்ளைகள் கூறியது, – கண்ணனைப் போலப் பெண்களைப் பாடுபடுத்தாமையாலாகும் ; 'வேம்பேயாக 'வளர்த்தாளே' என்னும்படியின்றே இதன் விரிவு :– "மனத்துக்கினியானைப் பாடவும்":– (1) திருட்டுக் கண்ணனையா பாடினோம்; தருமம் பின்னிரங்கியேகும் பிரபுவைத் தானே பாடுகின்றோம். (2) நாம் எப்படிப் போனாலென்ன என்றுவிட்டு, தன் வயிற்றை மட்டும் வெண்ணெய் விழுங்கி நிரப்பி, கிடைத்த பண்டங்களை யுண்டு செருக்கித்திரியும் கண்ணனையா பாடுகின்றோம்; ஒரு மனைவிக்காகத் தான் வருந்தி ஒன்றையும் விரும்பாது காய் சருகுகளை எப்போதேனும் உண்டு வருந்திய மகாநுபாவனையன்றோ பாடுகின்றோம். (3) பஞ்ச லக்ஷம் குடியிற் பெண்களையும் அலைக்க வைத்து அழவைக்கும் கண்ணனையா பாடுகின்றோம்; பெண்ணுக்காகத் தான் வருந்திப் பாடுபடும் மகானை யன்றோ கொண்டாடுகிறோம். இத்யாதி வியாக்யானங் களைப் பெருக்கிக்கொண்டே செல்க. 'கண்ணன் தெருவிலே பெண்களுக்கு ஓயாத தொல்லை' என்றார் பாரதியாரும்.

'ஈதென்ன பேருறக்கம்' என்றவிடத்து உணரவேண்டு வது; தமோ குணத்தினடியாகச் சாதாரண ஸம்ஸாரிகளி டைத் தோன்றும் நித்திரை ஒரு வகை, திருப்பாற்கடலிலே திருமால் அணிகிள ரரவின்மேற் பள்ளிகொண்டு உலகக் காவல் முறையைச் சிந்தனை செய்துகொண்டே உறங்கு வான் போல் செய்யும் யோக நித்திரை ஒருவகை, இந்த இரண்டு வகையிலொன்றினும் சேராததாயிருக்குமொரு நித்திரையாயிருக்கின்றது உன் உறக்கம் என்பது. 'இனி, ஈதென்ன பேருறக்கம்'; பேருறக்கம் – பெரிய துயில்; பக வான் யோக நித்திரை செய்தாலும் கூப்பீடு கேட்டால் எழுந்து உதவுவான்; நீயோ அவ்வாறில்லை' என்றபடி.

'அனைத்தில்லத்தாரும் அறிந்து' என்றது 'உன் வீட்டு வாசலில் பெண்களாகிய யாமனைவரும் திரண்டுவந்து கூப்பிடுவதனால் உனக்கு வரும் பெருமதிப்பை எல்லோரும் அறிய வேண்டும்' என்ற மனக்கருத்தோடு படுத்திருக்கிறாயானால், நாங்கள் அங்ஙனமே உன் பெருமதிப்பை அறிந்தாயிற்று; இனி, எழுந்துவா' என்கின்றனர்.

ஈண்டு, பெரியவாச்சான் பிள்ளை, இராமாநுஜரைப் போலவே இருக்கிறாள் இந்தப் பாகவதப் பெண்ணும் என்றார். ('எம்பெருமானார் திருவவதரித்தாற் போலே காணும் இப்பெண்பிள்ளையும்' (பெரிய வாச்சான் பிள்ளை). அதாவது இராமாநுஜர் திருக்கோட்டியூர் நம்பி சொன்ன ரகஸ்ய விஷயங்களை யாவரும் அறிய எடுத்துக் கூறியதால் அவர் பெருமையை அனைவரும் அறிந்தன ரன்றோ! அது போல, இவள் பெருமையை அனைவரும் அறிந்தனர் என்றபடி. இவளை உடனிட்டுக் கொண்டு போனால்தான் கண்ணன் க்ருபை பண்ணுவன் என்பதை 'பனித்தலை வீழ நின் வாசற் கடைபற்றி' நிற்கின்றோம் என்பதால் பெறவைத்தார்கள்.

இனி, இப்பாசுரத்திற்கு உள்ளுறை – 'பகவதநுபவம் பெற்ற பாகவத நிஷ்டரான பாகவதரொருவரை யுணர்த்துகிறார்களென்பது'. இந்த ஸ்வாபதேசார்த்தத் தின் விரிவு மகிமைகளைப் பெரியோர்பாற்கேட்டுணர்க.

அன்றியும், இத்திருப்பாவையில் துயிலெடை பாசுரங் களாக அமைந்திருக்கும் பத்துப் பாசுரங்களும் (செய்யுள் 6–முதல் 15 வரை) ஆழ்வார் பதின்மரையும் (எழுப்பப் படுபவர் பெண்பிள்ளைகளாயினும், ஆழ்வார் பதின் மருள் ஒவ்வொருத்தர்க்குள்ள தகுதியைப் பெற்றவர் போல ஒவ்வொரு பெண்பிள்ளையுமிருத்தலின், இங்ஙன் கூறியது) துயிலுணர்த்துவதென ஸ்வாபதேசவுரை கூறு வர் வானமாமலை சீயர் போன்ற மகான்கள். அப்பெற் றிப்பட நோக்க, இப்பாசுரத்தால் எழுப்பப்பட்டவள் தொண்டரடிப் பொடியாழ்வார் போன்ற தகுதி பெற்ற பெண்பிள்ளையென்பர் சிலர். 'மேட்டிள மேதிகள் தளை விடுமாயர்கள்' என ஆழ்வார் எருமையைப் பற்றிக் கூறிய செய்தி போல இங்கும் எருமையைப் பற்றிச் சொல்லி யிருப்பதாலும், அங்கு அவர் திருப்பள்ளி யெழுச்சி சொன்னது போலவே இங்கும் இப்பாசுரமும் திருப்பள்ளி யெழுச்சியாதலாலும், 'மனத்துக்கினியானைப்பாடவும் நீ வாய்திறவாய்' என்பதால், ஆழ்வார்முதல் தசையில் பகவானை மறந்திருந்து, பின்னர் அம்மறதியுறக்கத்தி லிருந்து எழுந்து பகவானைப் பாடியது போல, இவளும் முதலில் வாய்திறவாது கிடந்து பின் உறக்கம் நீத்துக் கண்ணனைக் கிட்டி மங்களாசாஸநம் செய்ய எழுந்து வந்ததாலும் இங்ஙன் கொள்ளவேண்டும் என்பர். மற்றுஞ் சிலர், இப்பாசுரத்தால் எழுப்பப்பட்டவள் பொய்கையார் போன்ற தகுதிவாய்ந்த பெண்பிள்ளை யென்று கூறி, அதற்கேற்ப மேற்கோள் காட்டுவர். யாதாயினும் ஆகுக; ஒன்று நிச்சயம். திருப்பாவைப் பாட்டு ஒவ்வொன்றும் அரும்பொருட் சுரங்கம் என்பது தேற்றம்; தொடுவார்க்கேற்பப் பொருள் சுரக்கும் பெற்றியது.

இனி, ஆசாரியபரம்பரையின்படி துயிலெடைப் பெற்றி நோக்கின், 'ஸ்ரீராம மிச்ராய நம:' என்றதற்கேற்ப 'மணக்கால் நம்பிகள்' எழுப்பப்படுகிறார் எனக்கொள் ளல் வேண்டும். அடிகள் 5–6 இல் இராம கதை யநுசந்திக் கப் பட்டிருப்பதால் இங்ஙன் கொண்டது இராம மிச்ரருக்குப் பொருந்தும்.

"பாதங்கள் தீர்க்கும் பரம னடிகாட்டும்
வேத மனைத்துக்கும் வித்தாகும் – கோதைதமிழ்
ஐயைந்து மைந்தும் அறியாத மானிடரை
வையம் சுமப்பதும் வம்பு"

எஸ். பி.
10.1.92



திருவாசகத்தில் ஆன்மநேய ஒருமைப்பாடு

(பேராசிரியர் ச. வளவன். பச்சையப்பன் கல்லூரி, சென்னை.)

சிவஞானியர், ஆன்மாக்கள் உய்வடையும் பொருட்டு, சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய வழிகளைக் காட்டினர். இவற்றுள் பற்றற்றான் தாளைப் பற்றும் கிரியையாகிய பத்தி நெறியில் ஆழ்ந்து, பிறப்பறுத்துப் பரமரருளால் சிவகதி அடையும் பேறுபெற்றோர் தம்போன்ற பிற ஆன்மாக்களோடு நேயமும் ஒருமையும் உடையராய்த் திகழ்தல் வேண்டும் என்று நன்கு உணர்த்தினர். இறைவனை 'நேயத்தே நின்ற நிமலன்' எனப் போற்றுகிறார் மாணிக்க வாசகர். 'அன்பெனும் பிடிக்குள் அகப்படும் மலையே' என்று விளிக்கிறார் அருட்பிரகாச வள்ளலார். மாயப் பிறப்பறுக்கும் வழியாய் நேயத்தை நிலைநாட்டுகின்றார் அருளாளர் மாணிக்க வாசகர். அவர் அருளிய திருவாசகத்தில் கோடிட்டுக் காட்டப்படும் 'ஆன்மநேய ஒருமைப்பாடு' என்னும் கருத்துரு வள்ளலாரின் திருமுறையில் விரித்துக் கூறப்படுகிறது.

''அன்பர் உள்ளமாம் சிவமே பெறுந்திரு'' எனத் திருச்சதகத்தில் சிவத்தின் தன்மையை விளக்குகிறார் மாணிக்க வாசகர். சிவம் என்னும் பெறத்தகும் திரு உள்ள இடம் அன்பர் உள்ளமே என்னும் இத்துணிவினால் அனைத்து ஆன்மாக்களிடத்தும் நேயம் கொள்ளலே இறைவனை அடையும் வழி என்று சுட்டுகிறார். எங்கும் மறைந்தே தோன்றுபவன் இறைவன். 'விறகில் தீயினன்; பாலில் படுநெய்போல் மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்' என்று இறைவன் அனைத்திலும் மறைந்துள்ள தன்மையை விளக்குகின்றார் திருநாவுக்கரசர். எங்கும் எதிலும் மறைந்துள்ள இறைவன் அன்பர் உள்ளத்தில் மட்டும் மறைந்து நில்லாமல் வெளிப்பட்டுத் தோன்றும் தன்மையனாய் உள்ளான் என்கிறார் மாணிக்கவாசகர்.

அவன் எதிலும், எப்போதும் மறைந்தே - ஒளிந்தே இருக்கும் கள்வனே! எனினும் அன்பர் உள்ளத்தில் மட்டும் அந்தக் கள்வன் மறைந்து நிற்காமல் வெளிப்பட்டுத் தோன்றுகிறான்' என்கிறார்.

''பரந்துபல் ஆய்மலர் இட்டு
முட்டாது அடியே இறைஞ்சி
இரந்த எல்லாம் எமக்கே பெறலாம்
என்னும் அன்பர் உள்ளம்
கரந்து நில்லாக் கள்வனே! நின்றன்
வாழ்கழற்கு அன்பெனக்கும்
நிரந்தரமாய் அருளாய் நின்னை
ஏந்த முழுவதுமே''

என்று திருச்சதகத்தின் மெய்யுணர்தல் பகுதியில் பாடி அருள்கிறார் மாணிக்க வாசகர். உள்ளத்ததில் வெளிப்பட்டு நிற்பது ஆன்ம நேயமே! அதுவே கள்ளத்தால் இறைவனாக நிற்கிறது என்கிறார்.

ஆன்மாக்களின் இலக்கு, பிறப்பும் இறப்பும் கடந்து முத்தியடைதலே! இப்பெரு முயற்சிக்கு எளிய வழி ஒன்றைக் காட்டுகிறார். மாணிக்க வாசகர். பிறப்பையும் இறப்பையும் ஆன்மாக்கள் கடந்தாக வேண்டும். பிறப்பு, இறப்பாகிய பெருங்கடலை எந்தத் தோணி கொண்டு கடப்பது? நேயமே பிறப்பு, இறப்பு என்னும் பெருங்கடலைக் கடக்க உதவும் பெருந்தோணி என்று பேசுகிறார் மணிவாசகர்.'' பின்றா நேயத்தால் பிறப்பு இறப்பைக் கடந்தார்'' என்று முத்தியடைந்தோரை அடையாளம் காட்டுகிறார்.

மாணிக்க வாசகர் அருளிய 'திருவெம்பாவை' பாடல்கள் இருபதும் ஓர் ஆன்மா, பிற ஆன்மாக்களிடத்து நேயங்கொண்டு தன்னோடு அவை அனைத்தும் இறைவனை அடையுமாறு செய்யும். நோக்கில் பாடப்பட்ட திருப்பாடல்களாகும். இறைவனை உய்த்துணர்ந்த ஆன்மா அவ்வாறு உணராத ஆன்மா இடத்து நேயம் கொண்டு, அனைத்து ஆன்மாக்களும் ஈசனார்க்கு அன்பராக வேண்டிய தன்மையை வலியுறுத்தும் வகையில் பாடுகிறார் மணவாசகர்.

''பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல் நாம்
பேசும்போது எப்போதிப் போதாரமளிக்கே
நேசமும் வைத்தனையோ?''

இறைவனை அடைதலை விட்டு உலகியலில் உழலும் ஆன்மாக்களின் குறைபாட்டை இவ்வாறு வெளிப்படுத்துகின்றார்.

இறைவனின் ஊர் எது? பேர் எது? அவன்தன் உற்றார் யார்? அயலார் யார்? அவனைப் பாடும் வழி எது? - இவ்வினாக்களுக்கு எல்லாம் விடை ஒன்றுதான். அவன் தோழன் - அதுவும் சொல்லுக்குள் அடங்காத பெற்றிமிகு தோழன். அவன் தொண்டர் உள்ளத்தில் தங்கி இருப்பவன். ஆன்மாக்களிடத்தில் கொள்ளும் நேயமும் ஒருமைப்பாடுமே அவனை அடையத்தகும் சாதனங்களாகும். அவன் 'ஊழி முதல்வனாய் நின்ற ஒருவன் எனினும் ஏழை பங்காளன்'

''பாதாளம் ஏழினும் கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே.
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓதஉலவா ஒரு தோழன் தொண்டர் உளன்
கோதில் குலத்து அரன்தன் கோயிற்பிணாப் பிள்ளைகள்!
ஏது அவன் ஊர்? ஏது அவன் பேர்? ஆம் உற்றார்? ஆர் அயலான்?
ஏது அவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய்?

'இறைவன் உயிர்கள் அனைத்துக்கும் உய்வளிக்க வல்லவன். அனைத்து உயிர்களின் தோற்றுமிடம் அவன் பொற்பதமே. அனைத்து உயிர்க்கும் போகம் அளிப்பவை அவன் பொற்கழல்களே! அனைத்து உயிர்க்கும் இறுதியும் அவன் இணையடிகளே! என்று திருவெம்பாவையின் இறுதிப் பாடலில் 'அனைத்து உயிரும் ஒன்று என்று எண்ணும்' ஆன்மநேய ஒருமைப்பாட்டை உறுதிப் படுத்துகின்றார் மணிவாசகர்.

''போற்றியருளுக நின் ஆதியாம் பாதமலர்
போற்றியருளுக நின் அந்தமாம் செந்தளிர்கள்

போற்றியெல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல்லா உயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான் முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீர் ஆடேலோர் என்பாவாய்''

அனைத்து உயிரும் ஒன்று என எண்ணும் நிலை வரவேண்டுமானால் தாம் எல்லா ஆன்மாக்களுக்கும் கீழே உள்ள நிலையினராக உணரவேண்டும். இந்த முதற்படியை மாணிக்கவாசகர் அனுபவத்தால் உணர்ந்து உணர்த்தியிருக்கிறார். 'நாயிற் கடையாய்க் கிடந்த அடியேன்' என்றெல்லாம் தாழ்த்தி, தாழ்ந்த நிலையைக் கற்பித்துக் கொள்கின்றார். அதனால் அன்பு பெருகுகின்றது.

இறைவனைப் போற்றுதலால் அன்பு பெருகுவது முதல் நிலை. இறைவனை வணங்கும் ஆன்மாக்களைப் போற்றி அவற்றுடன் உறவு கொள்வதால் அன்பு மேலும் பெருகுகின்றது. இது இரண்டாவது நிலை. பெருகிய அன்பைத் தம் உள்ளத்தில் உண்டாக்குமாறு தொடர்ந்து இறைவனை வேண்டுதல் மூன்றாம் நிலை. மாணிக்கவாசகர் பெருகிய அன்பைப் பெற்றார்; நிலை பெறச் செய்தார்; மனத்தைப் பற்றிலிந்து விடுபடச்செய்து, வழிபட வைத்து, வழியும் காட்டினார்.

இறைவனைப் போற்றுவதால் பழிக்கும் மனநிலையே தோன்றாது. எல்லா உயிர்களையும் போற்றும் மனநிலை வளரும். போற்றும் மனநிலை வரவேண்டுமானால் பணிவு வேண்டும். பணிவோரைப் பணிந்துதான் நிமிர்த்தமுடியும். நிமிர்த்திய போது இருவரும் ஒரு நிலையினராக ஆகின்றனர். அனைவரும் ஒரு நிலையினர் என்பதைச் செயலும் மனமும் உணர்த்தும் - இங்ஙனம் அன்பு பெருகத் தொடங்குவது முதல்நிலை.

எல்லா ஆன்மாக்களும் ஒரு நிலை என்று உணர்ந்தபின் உறவு வளரும். மேலும் மேலும் ஆன்மாக்களைப் போற்றுவோம். அன்பு பெருகும். இந்த நிலை இரண்டாம் நிலை.

அன்பு பெருகினாலும் மனம் உலகநெறியில் வீழ்ந்துவிடும் வாய்ப்பு உள்ளது. அதனால் அன்பைக் காட்டி, இறைவனை வழிபட்டு அந்த அன்பே பெருகிக்கொண்டு இருக்க வேண்டும் என வேண்டினால் அன்பு பெருகும். இது மூன்றாவது நிலை.

அன்பு பெருகிக் கொண்டே இருக்க வேண்டுமென்றால் எப்படி? தொடர்ந்து ஆன்மாக்களோடு அன்புறவு கொள்ள வேண்டும். அதாவது ஆன்மநேய ஒருமைப்பாட்டுடன் விளங்க வேண்டும். இந்த ஆழ்ந்த அழகிய கருத்தினை மாணிக்க வாசகர் திருச்சதகத்தில் தெளிவுறக் காட்டுகின்றார்.

நீத்தல் விண்ணப்பம், 'பற்றுகளிலிருந்து நீங்க வேண்டும் என்றும், தம்மைப் பற்றுகளிலிருந்து நீக்க வேண்டும் என்றும்' விண்ணப்பிக்கின்றவை. 'ஏதுகொண்டு நான் ஏது செய்யினும் வல்லலையே' என்று திருச்சதகத்தில் வருந்தும் மணிவாசகர்.

''குதுகுதுப் பின்றி நின்று என்குறிப் பேசெய்து நின்குறிப்பில்
விதுவிதுப் பேனை விடுதிகண் டாய்''

என்று நீத்தல் விண்ணப்பத்தில் காரணமும் காண்கின்றார்.

பற்றைவிடவேண்டும். அந்த இடத்தில் அன்பைப் பெருக்க வேண்டும் என்று உணர்த்தும் அவரே அது எளிதல்ல என்பதையும் கூறுகின்றார். தம்மையறியாமல் எண்ணம், சொல், செயல் முதலியன பற்றை விடாமல் பற்றி நிற்கும் என்கிறார். இவற்றை எல்லாம் நினைந்து நினைந்து, வணங்கி வணங்கி விட்டாலும், குறிப்பு குதுகுதுப்பின்றி நின்று காட்டி விடக்கூடும் என்கிறார். ஆன்மத்திற்குக் காட்டும் நேயத்திலும் இக்குறை நேர்ந்துவிடக்கூடும் என்ற குறிப்பே மாணிக்கவாசகரால் இங்குக் குறிக்கப்பெற்றது.

இறைவனுடன் ஒருமைப்பாடு கொள்ளும் நெறியையும் மாணிக்கவாசகர் உணர்த்துகின்றார். ஆனால் அவற்றைக் குறியீடாக உணர்த்துகின்றார் என்பர். திருத்தெள்ளேணத்தில்,

''நவமாய செஞ்சுடர் நல்குதலும் நாமொழிந்து
சிவமான வாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ!''

என்று குறிப்பிட்டு இறையுடன் ஒருமையாகும் நெறியை, அதாவது இறைநிலையை எய்தும் நெறியை ஒரு குறியீடாக்கியுள்ளார் மணிவாசகர்.

''சூடுவேன் பூங்கொன்றை சூடிச்சிவன் திரள்தோள்
கூடுவேன் கூடிமுயங்கி மயங்கிநின்று
ஊடுவேன் செவ்வாய்க்கு உருகுவேன்''

என்று திருவம்மானையில் பாடி, இறையை மணந்து கொண்ட நிலையை ஒரு குறியீடு ஆக்கியுள்ளார்.

தாமே இறையாதலும், தாம் இறையை மணத்தலும் ஆகிய இரு குறியீடுகள் இறையுடன் ஒருமைப்பாடு கொள்ளும் நெறிகளைக் காட்டும்.

'உவட்டாது உள்ளூறி ஊறி ஊற்றெழுந்து என்னையும் தானாக்கிய' நிலையே இறையுடன் ஒருமையாகும் நெறி. 'நான்' என்பது 'தான்' ஆகும் நிலை. தானாக்கியவனும் இறைவனே. அதனால் தாம் மணிவாசகரும் 'சிவம் ஆக்கி', 'தேவு ஆக்கி' என்றே பாடுகிறார். 'அவன் அருளால் அவன்தாள் வணங்கும்' முதல் நிலை வாய்த்தால் இறுதி நிலையான 'நான்' தானாக்கும் நிலை வாய்க்கும். 'நான்' 'தான்' ஆனானால் எல்லா ஆன்மாக்களும் - 'தான்' நிலையானால் ஆன்மநேய ஒருமைப்பாடு விளங்கும்.

ஆன்மநேய ஒருமைப்பாடு என்பதே ஆன்மாக்களின் கூட்டுறவுதாமே! ஆன்மாக்களின் கூட்டுறவு என்பது உயிர்களின் கூட்டுறவுதாம். உயிர்களாகிய நாம் ஒன்று என்பதை உணர்வதற்கு மணிவாசகர் தம் திருவாசகம் முழுவதிலும் வழி காட்டுகின்றார். இறைவன் குருவாக இருந்து உயிர்களின் கூட்டுறவை நிலை நிறுத்தும் வழி கூறுவான். அதனால்,

''இனிஓர் இடையூறு அடையாமே
திகழும் சீரார் சிவபுரத்துச்
சென்று சிவன்தாள் வணங்கிநாம்
நிகழும் அடியார் முன்சென்று
நெஞ்சம் உருகி நிற்போமே!''

மணிவாசகர் நம்மை நோக்கி அறிவுரைகள் வழங்கினாரல்லர்.

இப்போது நம்முடன் கலந்திருந்து கருத்துக்களைக் கூறுகின்றார். ஆனால் திருவாசகம் முழுமையும் அவரது அனுபவ வெளிப்பாடாகவே இருக்கிறது. அந்த அனுபவம் ஆன்ம உணர்வில் கலந்து வளர்ந்துள்ளது. அது தானானது. அதனால்தான் ஆன்மநேய ஒருமைப் பாட்டை உணர்ந்தது; அதனை நேரிடையாக உணர்த்தாமல் குறியீடு போலவும், தாழ்ந்த நிலையில் இருந்து உரைப்பது போலவும் காட்டியதற்குக் காரணம் பற்று விட்ட உயர்நிலைதான். ஆன்ம நேய ஒருமைப்பாட்டில் கலந்து விட்ட உணர்வு எனத் தெளியலாம்.





பரிமேலழகர் உரைத்திறன்

(புலவர் மணி, ச.சீனிவாசன். எம்.ஏ.,)

திருக்குறள் என்னும் ஒப்புயர்வற்ற நூலுக்கு இடைக் காலத்தில் தருமர் முதலாகப் பதின்மர் உரை வரைந்த னர். அப்பதின்மருள் ஒருவர் பரிமேலழகராவார். இவரே பதின்மருள் காலத்தால் பிற்பட்டவர் எனக்கூறுவர். பரிமேலழகர் உரை தோன்றிய பின் மற்றையோர் உரைகள் ஞாயிற்றின் முன் விளக்காயின. பழைய உரைகளில் இப்போது கிடைப்பன ஐந்து உரைகளே. மணக்குடவர், பரிதி, பரிப்பெருமாள், காளிங்கர், பரிமேலழகர் உரைகளே அவை.

பரிமேலழகர் வரலாறு

பண்டைக்கால அரசர், புலவர் முதலியோர் வரலா றுகள் தெளிவாக முற்றிலும் அறியமுடியாதவாறு போல, பரிமேலழகர் வரலாறும் முற்றிலுமாக அறியக் கூட வில்லை. வழங்கும் வரலாறும் முற்றிலும் ஏற்றுக் கொள்ளப்படுமாறும் இல்லை. இவர் எட்டுத் தொகையுள் ஒன்றாகிய பரிபாடல் என்னும் நூலுக்கும் உரை இயற்றி யுள்ளார். இவர் காஞ்சிபுரத்தில் உலகளந்தபெருமாள் கோவில் அர்ச்சகர் பரம்பரையில் பிறந்தார் என்று பரிமேலழகர் உரைப்பதிப்புகளின் முன்னுரையில் குறிப் பிடுகின்றன. "திருக்காஞ்சிவாழ் பரிமேலழகன்" – எனத் தொண்டைமண்டல சதகம் குறிப்பிடுகின்றது. அர்ச்சகர் மரபில் பிறந்தார் என்பது செவிவழிச் செய்தியே. உண்மை வரலாறு அன்று. பரிபாடல் என்னும் நூலில் செந்தமிழ் இதழிலிருந்து பழைய அகவல் ஒன்றை டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் அவர்கள் எடுத்துப் பதிப்பித்துள்ளார்கள். அவ்வகவலில்,

> "நீணிலங்கடந்தோன் தாள்தொழு மரபிற்
>
> பரிமேலழகன்"

என்று குறிப்பிட்டுள்ளது. திருமாலின் தாளைத் தொழு கின்ற மரபில் பிறந்தார் என்பதனால் வைணவர் எனக் கொள்ளலாமேயன்றி அர்ச்சகர் மரபில் பிறந்தார் என்று கொள்வதற்கில்லை. நம் தமிழகத்தில் ரெட்டியார், யாதவர், நாயடு முதலிய குலத்தவரெல்லாம் வைணவ சமயத்தவர்களே. மேற்கண்ட அகவலடிக்கு இம்மூன்று குலத்தினுள் ஏதேனும் ஒரு குலத்தில் பிறந்திருக்கலாம் என்றும் கொள்ளலாமன்றோ? இவருடைய காலம் 13ஆம் நூற்றாண்டு எனக் கூறுவர்.

உரைப்பெருமை

தற்பொழுது கிடைத்த ஐந்து உரைகளுள் பரிமேலழகரைத் தவிர்த்து மற்றைய உரையாசிரியர்கள் திருக்குறளுக்குப் பொழிப்புரை மட்டும் வரைந்தார்க ளேயன்றி விரிவுரை வரைந்தார்கள் இல்லை. மணக் குடவர் சிற்சில இடங்களில் விரிவுரை வரைந்துள்ளார். இலக்கண நுட்பங்களை எடுத்துக் காட்டுவதில் அவர்கள் ஈடுபடவில்லை. பரிமேலழகரோ சொல்நயம், பொருள் நயங்களை எடுத்துக் காட்டுவதோடு இன்றியமையா இடங்களில் இலக்கணக் குறிப்பு எழுதத் தவறுவதில்லை. ஏறக்குறைய 450 பாடல்களில் இலக்கண அமைதியைக் காட்டிச் செல்கிறார். அக்குறிப்புகளை அவர் எழுதாமல் விட்டிருப்பின் பல குறள்களுக்கு நாம் விபரீதமாகப் பொருள் கொள்ள நேரிடும். உண்மைப் பொருள் காண இயலாது.

திருவள்ளுவரின் குறள் எவ்வாறு 'ஓதற்கு எளிதாய் உணர்தற்கு அரிதாக' உள்ளதோ, அவ்வாறே இவர் உரையும் அமைந்துள்ளது. சொற்சுருக்கம், திட்ப முடைமை, நுண்மாண்நுழைபுலம், வேற்றுமொழி கல வாமை, தக்க மேற்கோள், இலக்கண அமைதி போன்ற வற்றைப் பயன்படுத்தி உரை எழுதுவதில் பரிமேலழ கருக்கு நிகர் பரிமேலழகரே எனக் கூறல் வேண்டும்.

> *பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற*
>
> *சிலசொல்லல் தேற்றா தவர் (649)*

– என்னும் குறட்பாவில் சொல்லிய குறையைத் தாம் மேற்கொள்ளாது சிலவாகிய சொற்களில் பலவாகிய கருத்துகளை அடக்கி உரை எழுதியமை வியப்பினும் வியப்பாம். குறளில் ஒரு சொல்லை நீக்கிவிட்டு வேறு சொல்லை நியமிப்போமானால் எப்படி பொருட்செறிவு கெட்டொழியுமோ அவ்வாறே இவர் உரையில் ஒரு சொல்லை மாற்றினாலும் நூலின் பெருமை கெட்டுப் போகும். வீணான தேவையற்ற சொற்களை இவா உரையில் காணல் இயலாது. 'நவில் தொறும் நூல் நயம் போலும்' – என்னும் குறளடிக்கு இவர் உரையே ஒரு சான் றாகும். சுமார் முந்நூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த உமாபதிசிவம் என்பவரால் பாடப்பட்டது எனச் சொல்லப்படும் ஒரு வெண்பாவில் பரிமேலழகர் உரை ஒரு தனி இலக்கியமாகவே குறிப்பிடப்பட்டுள்ளது.

"வள்ளுவர்சீர் அன்பர்மொழி வாசகந்தொல் காப்பியமே
தெள்ளு பரிமேலழகர் செய்தவுரை – ஒள்ளியசீர்த்
தொண்டர் புராணம் தொகுசித்தி ஓராறும்
தண்டமிழின் மேலாந் தரம்"

இவ்வெண்பாவில் வள்ளுவரை முதலில் கூறி இடையில் திருவாசகத்தையும் தொல்காப்பியத்தையும் கூறி அடுத்துப் பரிமேலழகரைக் குறிப்பிடுகிறார். பரிமேலழகர் உரையையும் தனிநூலாக எண்ணி தமிழில் ஆறு நூல்கள் மேலாம்தரம் எனக் குறிப்பிடுகிறார். மற்றைய உரையாசிரியர்கள் யாருக்கும் இப் பெருமை இல்லை. இடைக்கால இலக்கிய ஆசிரியர்களில் சிலர் இவர் உரையைத் தம் பாடல்களில் அமைத்துப் பாடியுள்ளனர். எடுத்துக்காட்டாக ஒன்றிரண்டு காண்போம்.

வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல் (291)

இப்பாட்டின் விசேட உரையில் பரிமேலழகர் "தீங்கு பயவாதாயின் மெய்ம்மையாம் ; பயப்பின் பொய்மையாம் என்பது கருத்து" – எனக் கூறினார். பரிமேலழகருக்குப் பிற்காலத்தில் வாழ்ந்த துறைமங்கலம் சிவப் பிரகாச சுவாமிகள் தமது திருவெங்கைக் கோவை என்னும் நூலில் ஒரு பாடலில் இவ்வுரையைப் பொன்போலப் பொதிந்து வைத்துள்ளார்.

"வாய்மை எனினும் புலரியைக் கூறுதல் வாரணங்காள்
சேய்மையுறு நங்கா தலர்கூட்டம் சிதைத்தெமக்குத்
தீமை பயந்தமை யால்திருவெங்கைவா ணர்செய்த
தூய்மை உணர்ந்தவர் வாய்மை அன்றாமெனச் சொல்லுவரே"

ஒரு தலைமகள் தன் தலைமகனோடு இணை விழைச்சில் ஈடுபட்டிருந்தாள். அதுபொழுது தெருவில் கோழி கூவிற்று. கோழிகள் விடியற்காலத்தில் கூவும் இயல்புடையன அல்லவா? அதன் குரலைக் கேட்ட பொழுது விடியும் காலத்தில் இணைவிழைச்சு கூடாது என அகன்று போய்விட்டான். தலைவிக்கு அவன் அகன்றது பெருவருத்தமாயிற்று. அவள் கோழியைப் பார்த்துக் கூறுவதாக இத்துறை அமைந்தது. 'ஓ வாரணங்களே! பொழுது விடிந்தது என நீங்கள் கூறியது வாய்மைதான் ; இருப்பினும் என் தலைவன் என்னை விட்டு நீங்குமாறு எனக்குத் தீமை செய்து விட்டீர்களே; அதனால் நீங்கள் பொழுது விடிந்தது எனக்கூறியது உண்மையன்று' – என வருந்திக் கூறினாள்.

இப்பாடலில் குறட்பாவின் கருத்தையும் உரையின் கருத்தையும் சேர்த்து அமைத்துள்ளமையை உணர்ந்து மகிழலாம். இன்னும் சிலர் இடைக்காலத்தில் இவர் உரையைக் கண்டனம் செய்ததும் உண்டு. மகிழ்ந்து போற்றப்பட்டவைகளே மிகுதியாகும்.

மற்றுமோர் எடுத்துக்காட்டு

புறத்துறுப்பு எல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப்பு அன்பில வர்க்கு.

இக்குறட்பாவின் விசேட உரையில் – "புறத்துறுப்பாவன – இடனும் பொருளும் ஏவல் செய்வாரும் முதலாயின; யாக்கையில் கண் முதலிய உறுப்புகள் எல்லாம் என்ன பயனைச் செய்யும்? மனத்தின்கண் உறுப்பாகிய அன்பு இலாதார்க்கு என்று உரைப்பாரும் உளர்; அதற்கு இல்லறத்தோடு யாதும் இயைபில்லாமை அறிக' – என்று கூறினார். இக்கருத்து அமைய நன்னெறிப்பாடல் ஒன்று கூறுகிறது.

"இல்லானுக்கு அன்பிங்கு இடம்பொருள் ஏவல்மற்று
எல்லாம் இருந்தும் அவற்கென்செய்யும் – நல்லாய்
மொழியிலார்க்கு ஏது முதுநூல் தெரியும்
விழியிலார்க்கு ஏது விளக்கு"

இப்பாடலில் அன்பில்லாதவனுக்கு இடம், பொருள், ஏவல் செய்வார் முதலாயின இருந்தும் என்ன பயனைச் செய்யும்? எனப் பரிமேலழகர் உரையைப் போற்றி ஆண்டுள்ளமையைக் காணலாம். சிவப் பிரகாசர் மற்றையோர் உரையையும் கற்றிருப்பார்; ஆயினும், அவற்றை எல்லாம் தள்ளிவிட்டு இவர் உரையையே ஏற்றுக் கொண்டார். இனி அவர் உரையின் மாண்பினைக் காண்போம்.

உரை நுட்பம்

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

இக்குறட்பா கடவுள் வாழ்த்து என்னும் அதிகாரத்தின் முதற்பாடல் என்பதை யாவரும் அறிவோம். இப்பாடலின் விரிவுரையில் –

"உலகு என்றது, ஈண்டு உயிர்கள் மேல்நின்றது; காணப்பட்ட உலகால் காணப்படாத கடவுட்கு உண்மை கூற வேண்டுதலின், 'ஆதிபகவன் முதற்றே உலகு' என உலகின் மேல் வைத்துக் கூறினார்; கூறினாரேனும் 'உலகிற்கு முதல் ஆதிபகவன்' என்பது கருத்தாகக் கொள்க" – என்று கூறியுள்ளார்.

இப்பகுதியில் இறுதித் தொடர் ஓர் ஐயத்தை உண்டாக்குகிறது. உலகிற்கு முதல் ஆதிபகவன் என்பதை ஏன் கருத்தாகக் கொள்ள வேண்டும்? இந்த ஐயத்தைத் தெளிவாக்கும் முறைதான் பரிமேலழகரின் நுண்மாண் நுழைபுலத்தை நமக்குத் தெரிவிக்கிறது. எடுத்துக் கொண்ட அதிகாரத்தின் தலைப்பு கடவுள் வாழ்த்து என்பது. அத்தலைப்பிற்கு இணங்க கடவுளுக்கு முதன்மை கூற வேண்டும். அவ்வாறு கூறாமல் 'உலகு ஆதிபகவனை முதலாக உடையது' – என உலகு எழுவாய் ஆகிறது. முதன்மை பெறுகிறது. இவ்வாறு தலைப்பை விட்டுக் கூறுதல் வழுவன்றோ? அவ்வழுவிற்கு அமைதி காணல் வேண்டும். காணப்பட்ட உலகைக் கொண்டு காணப்படாத கடவுளுக்கு உண்மை கூற வேண்டும். உலகு காணப்பட்டது. கடவுள் காணப்படாதது. அதனால் உலகு கடவுளை முதலாக உடையது என மாற்றிக் கூறப்பட்டது. கூறப்பட்டாலும் அதிகாரத்திற்கு ஏற்பக் கடவுள் உலகிற்கு முதல்வன் என்பதைக் கருத்தாகக் கொள்க – என விரிவுரை கூறினார். இவ்வாறு கூறியது நமது சிந்தனைக்கு நல்ல விருந்தாகும்.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக

இப்பாடலை அறியாதவர் இரார். இப்பாடலின் பொரு ளும் எளிமையாக விளங்கக் கூடியதே. ஆயினும் இப்பாட லுக்குப் பொருள் கூறும்போது எதிர் வினாக்களை வினவு வோமாயின் விடை கூறுதல் சற்றுக் கடினமாகவே இருக்கும். ஈற்றடியாகிய 'நிற்க அதற்குத் தக' – என்னும் தொடரில் அதற்கு என்பது சுட்டுச் சொல். அதற்குத்தக எனச்சுட்டும் போது எதற்குத் தக என வினவு வோமானால், மேலடியில் உள்ள கற்பவை என்னும் சொல்லைச் சுட்டும். கற்பவை என்பது பன்மை வினை யாலணையும் பெயராகும். கற்க வேண்டிய நூல்களை என்று அச்சொல்லுக்குப் பொருள் கூறுவர். அதற்கு என்பது ஒருமையைச் சுட்டும் சொல்லாகும். பன்மைப் பெயரை ஒருமைச் சுட்டால் சுட்டுவது பொருந்துமா? அவற்றிக்குத் தக எனப் பன்மைச் சுட்டாக அன்றோ இருத்தல் வேண்டும்? பரிமேலழகரின் பெரும் புலமையை இது போன்ற இடங்களில்தாம் உணர வேண்டும்.

கற்க வேண்டிய நூல்களை என்னும் பன்மையைத் தொகுதி ஒருமையாக்கி அக்கல்விக்குத்தக எனப்பொருள் கூறினார். அதற்கு – அக்கல்விக்கு என ஒருமையாயிற்று. மரங்கள் பல இருந்தாலும் தோப்பு என்பது ஒருமை யாகும். மக்கள் பலர் இருந்தாலும் கூட்டம் என்பது ஒருமையாகும். அவை போலக் கற்க வேண்டிய நூல்கள் எனப் பன்மையாக இருந்தாலும் அக்கல்விக்கு என்னும் போது தொகுதி ஒருமை ஆகிறது. இப்போது பன்மை ஒருமையைச் சேர்க்கும் வழு களையப்படுகிறது.

இதற்கு மேலும் இக்குறளுரையில் ஒரு நுட்பம் காணலாம். கற்றபின் என்பதற்குப் பிற உரையாசிரியர் களும் தற்கால உரையாசிரியர்களும் கற்றபிறகு எனப் பொருள் கூறினர். கற்றபிறகு எனக் கூறினால் கல்விக்கு எல்லை உண்டு எனவும் அதற்கு மேல் கற்பதற்கு ஒன்று மில்லை எனவும் ஆகிறது. 'சாந்துணையும் கல்லாதவாறு என்' – என வள்ளுவர் கூறியதற்கு இப்பொருள் முர ணாகிறது. 'கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உல களவு' – என்னும் இலக்கியமும் அடிபட்டுப் போகிறது. 'முற்றும் உணர்ந்தவர் இல்லை முழுவதூஉம் கற்றனம் என்று களியற்க' – என்னும் பாடல் பொருளற்றதாகி விடு கிறது. இக்குறைகள் நேரா வண்ணம் பரிமேலழகர் பின் என்பதை இடைச் சொல்லாகக் கொண்டு 'கற்றால்' – எனப் பொருள் கூறினார். கற்றால் கற்ற அளவிற்குச் செயற்படுத்துக – என்று கூறினார். இவ்வாறு கூறுவத னால் மேற்சொல்லிய குறைகள் களையப்படுகின்றன.

ஒருமை பன்மைக்கு மற்றுமோர் எடுத்துக்காட்டு

சென்ற இடத்தால் செலவிடாத் தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு (422)

(பரி–உரை) மனத்தை அது சென்ற புலத்தின்கண் செல்லவிடாது, அப்புலத்தின் நன்மை தீமைகளை ஆராய்ந்து தீயதனின் நீக்கி நல்லதன்கண் செலுத்துவது அறிவு.

இப்பாட்டில் சென்ற இடத்தால் என்னும் போது எதைச் சென்ற விடத்தால் செலவிடாது தடுத்தல் வேண் டும்? என வினா எழுகிறது. அதற்கு மனத்தை என ஏற்ற செயப்படுபொருளை வருவித்துக் கொண்டார். மனமா னது ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்னும் ஐந்து புலன்கள் வழியாகச் சென்று நன்மையோ, தீமையோ அனுபவிக்கிறது. ஐந்து புலன்களும் மனத்திற்கு இடமாகிறது. அங்ஙனம் இருக்க மனத்தைச் சென்ற இடங்களால் செல்லவிடாது என்றன்றோ இருத்தல் வேண்டும்? சென்ற இடத்தால் என ஒருமையாகக் கூறலாமா? இதற்கு ஓர் அமைதி காணல் வேண்டும். திருவள்ளுவர் இலக்கணவழுவாகக் கூறிவிட்டார் எனக்கூறலாமா? பரிமேலழகர் அவதாரிகை உரையில் வள்ளுவரை தெய்வப் புலவர் என்று குறிப்பிடுகிறார். தெய்வப் புலவர் பாடலில் நம் சிற்றறிவைக் கொண்டு வழு ஏற்றலாமா? பரிமேலழகரின் அனுபவமும், பெரும் புலமையும் ஈண்டு அமைதி காண முற்படுகின்றன.

புலம் ஐந்தாயினும் ஒரு காலத்து ஒன்றின்கண் அல்லது செல்லாமையின், 'இடத்தால்' என்றார் – என விசேடங் கூறினார்.

மனம் ஐந்து புலன்களையும் அனுபவித்தாலும் ஒரு நேரத்தில் ஒன்றைத்தான் அனுபவிக்கிறது. இதை நடை முறையில் யாவரும் காணலாம். கண் ஒரு காட்சியைக் கண்டு அனுபவிக்கும்போது மற்றைய நான்கு புலன்களும் வேலை செய்வதில்லை. ஓய்வு கொள்கின்றன. காது இனிய ஓசையை ஆழ்ந்து துய்க்கும் போது மற்ற புலன்கள் செயற்படுவதில்லை. இவ்வாறே மற்றைய புலன்க ளுமாகும். இந்தப் பட்டறிவைக் கொண்டு இடங்களால் எனப் பன்மையில் கூற வேண்டியிருப்பினும், ஒரு காலத்து ஒன்றின்கண் அல்லது செல்லாமையின் இடத்தால் என ஒருமையால் கூறினார் – என உரை வரைந்தார்.

எண்கவனகர் (அட்டாவதானி) நூற்றுக் கவனகர் (சதாவதானி) முதலியோர் ஒரே நேரத்தில் பல புலன்களை துய்க்கின்றனரே என வினவலாம். அவர்கள் விதிவிலக்கானவர்கள். அவ்விதி பொதுவிதி ஆகாது.

சிலர் தம் இல்லங்களில் உணவை அருந்திக் கொண்டே கையில் ஒரு கதைப் புத்தகத்தை வைத்துக் கொண்டு படிப்பர். வானொலிக் கருவியையும் அண்மை யில் வைத்துக் கொண்டு பாட்டைக் கேட்பர். இவர்களுக்கு ஒன்றிலும் கூர்ந்த புலன் உணர்வு இருக்காது. உணவை யும் சுவைத்து உண்டிருக்க மாட்டார்கள். பாடலையும் சுவைத்துக் கேட்டிருக்கமாட்டார்கள். படித்த கதை யையும் திரும்ப எடுத்துச் சொல்ல வராது. இப் பழக்கமுள்ளவர்களுக்கு நினைவாற்றலும் குறைவாகவே இருக்கும். உணவு, இசைப்பாடல், கதைபடித்தல் முதலியவற்றை வெவ்வேறு நேரங்களில் அனுபவிக்க வேண்டுமேயன்றி ஒரே நேரத்தில் அனுபவித்தல் இயற்கைக்கு மாறானதாகும். ஒரு புலனைச் சுவைக்கும் போது மற்ற புலன்களைத் தடுத்தல் வேண்டும். ஒரு புலனும் நல்லதன்கண் செல்லுவதாக இருத்தல் வேண்டும். அதனால் பரிமேலழகர் இப்பாட்டின் விரிவுரையில் "குதிரையை நிலமறிந்து செலுத்தும் வாதுவன்போல வேறாக்கி மனத்தைப் புலமறிந்து செலுத்துவது அறிவு என்றார்" – என்று எழுதினார். இனி அவர் குறளுக்கு எழுதும் இலக்கண மாண்பினைக் காண்போம்.

பரிமேலழகரின் இலக்கண நுட்பம்

பரிமேல்ழகரின் இலக்கண அறிவினை வியவாதவர் இலர். இவரினும் பிற்காலத்துத் தோன்றிய உரையாசிரியர்களாகிய சிவஞான முனிவர், காரிரத்தினக் கவிராயர், இலக்கணக்கொத்து சாமிநாத தேசிகர், இலக்கண விளக்கம் வைத்தியநாத நாவலர், பிரயோக விவேக உரையாசிரியர் முதலியோர் இவர் கூறும் இலக்கணக் குறிப்பினைப் பொன்போல் போற்றித் தம் உரையில் எடுத்தாண்டுள்ளனர். கச்சியப்ப முனிவர் தாம் பாடிய விநாயக புராணத்தில் இவர் உரையைப் பல இடங்களில் பாட்டாகப் பாடியுள்ளார். பரிமேலழகர் தாம் எழுதும் உரைக்குத் தொல்காப்பியத்தையே ஆதரவாக எடுத்துக் கொண்டார். இவர் தம் உரையில் இருபத்தாறு நூல் களிலிருந்து மேற்கோள் தந்துள்ளார். ஆனால், எடுத்தாண்ட நூல்களின் ஆசிரியர் பெயர்களைக் கூறும் வழக்கம் இவருக்கில்லை. ஆனால் ஓரிடத்தில் மட்டும் தொல்காப்பியர் பெயரைக் குறிப்பிடுகிறார்.

தொல்வரவும் தோலும் கெடுக்கும் தொகையாக
நல்குரவு என்னும் நசை (1043)

இப்பாட்டின் உரையில் "தோலாவது – இழுமென் மொழியால் விழுமியது நுவறல்" – என்றார் தொல்காப்பியனாரும் – எனக் குறிப்பிட்டுள்ளார். முன்னர் கூறியாங்கு சுமார் 450 பாடல்களுக்கு மட்டும் இவர் இலக்கணக் குறிப்பு எழுதியிருந்தாலும் எழுதாத பாடல்களுக்கும் தொல்காப்பிய இலக்கண அமைதி கொண்டே உரை கூறியுள்ளார் என்பது கூர்ந்து நோக்கின் விளங்காமற் போகாது. பொழிப்புரை கூறும்போதும் இலக்கண அமைதி கொண்டே உரை எழுதினார் என்பதற்குச் சில எடுத்துக் காட்டுகளைக் காண்போம்.

பழுதெண்ணும் மந்திரியின் பக்கத்துள் தெவ்வோர்
எழுபது கோடி யுறும். (639)

இப்பாட்டின் விரிவுரையில் பரிமேலழகர் இலக்கணக் குறிப்பு ஒன்றும் எழுதினாரில்லை. இப்பாட்டிற்கு முற்கால உரையாசிரியர்களும் தற்கால உரையாசிரியர் களும் பொதுவாகக் கூறும் உரையாவது –

அருகிலிருந்தே அரசனுக்கு கேடு செய்ய எண்ணும் அமைச்சன் ஒருவனைப் பார்க்கிலும் எழுபது கோடி பகைவர் நல்லவராவர். ஏனெனில், அவர்கள் வெளிப் படைப் பகைவர் என்பது அறிந்து தற்காப்புச் செய்து கொள்ளலாம். தெவ்வோர் – பகைவர் என்றே பதவுரை யிலும் பொழிப்புரையிலும் கூறுகின்றனர். தெவ்வோர் என்பதற்குப் பகைவர் என்பது உண்மையான பொருளாயினும் ஈண்டு அவ்வாறு கூறுதல் பொருந்துமா? என எண்ண வேண்டும். பரிமேலழகர் சிந்தனையில் மட்டுமே இவ்வையம் தோன்றிப் பின்னர் தெளிவு பிறக்கிறது.

தெவ்வோர் – பலர்பால் பெயர்ச் சொல்

உறும் – செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று

பலர்பால் பெயர்ச் சொல் செய்யும் என்னும் முற்றி னால் முடிவது இலக்கண வழுவாகும்.

பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையில்

செல்லாதாகும் செய்யுமென்னும் முற்றே. (நன்னூல்)

என்பது விதியாகும். தொல்காப்பியமும் இவ்வாறே கூறுகிறது.

இவ்வாறு வழு ஏற்படும் இடங்களுக்கு அமைதி கூறும் (வழுவமைதி) நூற்பாக்களும் இல்லை. இங்கனிருக்க இலக்கண வழு ஏற்படுமாறு தெய்வப்புலவர் பாடல் இயற்றுவாரா? எண்ணையும் எழுத்தையும் கண்ணாகக் கருதுக என்று சொல்லியவராயிற்றே, இந்த இடத்தில் தான் நாம் பரிமேலழகரை எண்ணி எண்ணி வியக்க வேண்டியுள்ளது.

தெவ்வோர் என்பதைப் பலர்பாலாகக் கொள்ளாது தெவ் ஒரெழுபது கோடி உறும் எனப்பிரித்து உரை எழுதி உள்ளார். 'தெவ்வே பகைமை' என்பது தொல்காப்பியம். தெவ் என்பது பகைமையை உணர்த்தும் உரிச் சொல்லா கும். இச்சொல் ஈண்டுப் பகைவர்க்குப் பண்பாகு பெயர். தெவ் என்பது பொருளால் பலர் பாலாயினும் சொல்லால் பால்பகா அஃறிணைப் பெயராகும். அதனால் செய்யும் என்னும் முற்றைக் கொண்டு முடிந்தது.

தெவ்வோர் – பகைவர் எனக்கூறுவோமாயின் மேற் சொன்ன இலக்கண வழு உண்டாகும். விரிவுரையில் யாதும் இலக்கண அமைதி கூறாமல் பதவுரையில் இவ் வருமைப் பாட்டை அமைத்து உரை எழுதியுள்ளார். இவ்வாறு சிந்தனைக்கு விருந்தளித்த பரிமேலழகருக்கு புலவருலகம் என்ன கைம்மாறு செய்ய இயலும்?

பரிமேலழகர் சில எளிய இலக்கணக் குறிப்புகளை எழுதும் போதும் இவ்வளவு எளிய இலக்கணக் குறிப்பு எழுத இவரைப் போன்ற பேரறிஞர் வேண்டுமோ என எண்ணத் தோன்றும். எளிய இலக்கணக் குறிப்பாக இருந்தாலும் அந்தந்த இடங்களில் அவ்வாறு எழுதாவிடின் நாம் மயக்க உணர்வில் தவறாகவே உணர்வோம். எடுத்துக்காட்டாக ஒரு பாடலைக் காண்போம்.

இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு

இப்பாட்டில் **பயத்ததோ** – ஒகாரம் அசை என எழுதினார். இவ்வளவு எளிய குறிப்பை எழுத இவருக்கு ஏன் எண்ணம் வந்தது? பலர் ஒகாரத்தை வினாப் பொருளில் வந்தது எனக் குறிப்பிடுவர். ஒரு தொடரில் ஒரு வினாவிற்கு இரண்டு வினா எழுத்துகள் வருதல் கூடாது. என்ன என்பதில் முதல் எழுத்து எ என்பது வினாவாகிறது. அப்படியிருக்க ஓ எப்படி வினாவாக முடியும்? இரண்டு வினா எழுத்துகளில் எதைத் தள்ளுவது? எதைக் கொள்வது? எ என்னும் எழுத்தை நீக்கினால் பதம் கெடும். மெய்முதலெழுத்தாகிவிடும். அதனால் இறுதியிலுள்ள ஓகாரத்தை அசை எனக் கொண்டால் பதமும் கெடாது. அமைதியும் பெறும். மற்ற இலக்கியங்களைக் கற்கும் போதும் இவர் கூறும் இலக்கணம் நமக்கு வழிகாட்டுவதாக அமைகிறது.

தந்தது உன்தன்னைக் கொண்டது என்தன்னைச்
சங்கரா! யார்கொலோ சதுரர்? (திருவாசகம்)

இப்பாடலடியில் யார்கொலோ என்பதில் யா வினா எழுத்து. கொலோ – ஓகாரம் அசை. இது பரிமேலழகர் உரையைக் கற்றதனால் நாம் பெற்ற அறிவாகும்.

பன்மைப் பொருள் ஒருமையில் முடிந்தால் என்ன செய்வது?

நத்தம்போல் கேடும் உளதாகும் சாக்காடும்

வித்தகர்க்கு அல்லால் அரிது (235)

இப்பாட்டின் பொருளை நாம் பரிமேலழகர் உரையின்றி மற்ற நூற்புலமையைக் கொண்டு உணர முடியாது. உணர்ந்தபின்னரும் அதனைப் பிறர்க்கு எளிதில் உணர்த்தவும் முடியாது. பொருள் உணர்வதில் இப்போது கருத்தைச் செலுத்தாமல் இலக்கண அருமையை மட்டும் காண்போம்.

கேடும், சாக்காடும் – என இரண்டு உம்மைகள் வருகின்றன. இவை என்ன உம்மைகள்? எண்ணும்மைகளாகும். எண்ணும்மைகள் வரும் போது எழுவாய் இரண்டாகிறது. எனவே இரண்டும் சேர்ந்தால் பன்மையாகிறது. இரண்டு உம்மைகளும் அரிது என ஒருமையால் முற்றுப் பெறுகிறது. அரிது என்பது ஒன்றன்பால் குறிப்பு முற்றாகும். அரிய என்பது பன்மை முற்றாகும். பன்மை எழுவாய்கள் ஒருமை முற்றால் முடிவது வழுவன்றோ? அரிய என முடிப்போமானால் யாப்பிலக்கணத்தில் வெண்பாவின் இறுதிச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் நான்கு வாய்பாட்டினுள் ஒன்றால் முடிதல் வேண்டும் என்ற இலக்கணம் வழுவிப் போகும். இதை எப்படி அமைதிப் படுத்துவது? பரிமேலழகரிடம் சென்றுதான் கேட்டறியவேண்டும்.

இப்பாட்டின் விசேட உரையில் "அரிது என்பதைத் தனித் தனி கூட்டி உரைக்க" – என எழுதினார். தனித் தனி கூட்டி உரைக்க" – என எழுதினார். இப்போது நத்தம் போல் அரிது; உளதாகும் சாக்காடும் அரிது எனப்பொருள்பட்டுப் பன்மை ஒருமை வழுகளையப் படுகிறது. இவ்வாறே,

இகலின் மிகலினிது என்பவன் வாழ்க்கை

தவலும் கெடலும் நணித்து (856)

என்ற பாட்டிலும், தவலும் கெடலும் எனவரும் எண்ணும்மைகள் **நணித்து** என ஒருமையில் முடிவதால் 'நணித்து என்பதைத் தனித்தனி கூட்டுக' என்றுரைத்தார்.

மாதவர் நோன்பும் மடவார் கற்பும்

காவலன் காவல் இன்றெனின் இன்றால்

(மணிமேகலை)

இப்பாடலடிகளில் நோன்பும் கற்பும் எனவரும் எண்ணும்மைகள் இலவால் எனப்பன்மையாக முடியாமல் இன்றால் என ஒருமையாக முடிந்துள்ளது. இந்நூலுக்கு உரை எழுதிய நாவலர், பெரும்புலவர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள், "இன்று என்பதைத் தனித் தனி கூட்டுக" என எழுதியுள்ளார். காவலன் காவல் இன்றெனின் மாதவர் நோன்பும் இன்றால்; மடவார் கற்பும் இன்றால் – எனப்பொருள்பட்டு இலக்கண அமைதி கிடைக்கிறது. (ஆல் – அசை) இதுவும் பரிமேலழகரிடமிருந்து பெற்ற அறிவாகும்.

ஒடுவென்னும் வேற்றுமை உருபு

ஒடு என்பது மூன்றாம் வேற்றுமையின் உருபாகும். தொல்காப்பியர் மூன்றாம் வேற்றுமைக்கு இந்த ஒடு உருபை மட்டுமே கூறினார். நன்னூலாரோ,

"மூன்றாவத னுருபு ஆல் ஆன் ஒடு ஓடு

கருவி கருத்தா உடனிகழ்வு அதன்பொருள்"

என மூன்றாம் வேற்றுமைக்கு நான்குருபுகள் கூறினார். ஒடு என்பதே ஓடு என நீண்டது. திருவள்ளுவரும்,

'விலங்கொடு மக்களனையர்'

'உலகத்தோடு ஒட்ட ஒழுகல்'

என ஒடு, ஓடு உருபுகளைப் பயன்படுத்தி உள்ளார். நன்னூலார் கூறிய ஆல் ஆன் உருபுகளை,

'இயல்பினால் இல்வாழ்க்கை வாழ்பவன்'

'அறத்தான் வருவதே இன்பம்'

என்னும் பாக்களில் பயன்படுத்தி உள்ளார்.

மேல் நூற்பாவில் கூறப்பட்ட நான்கு உருபினுள் ஆல், ஆன் என்பன கருவி, கருத்தாப் பொருள்களில் வருதல் வேண்டும். ஒடு ஓடு என்னும் இரண்டும் உடனிகழ்ச்சிப் பொருளில் மட்டுமே வருதல் வேண்டும்.

ஆசிரியனொடு மாணவன் வந்தான். இதில் வருதல் தொழில் ஆசிரியனுக்கும் உண்டு. மாணவனுக்கும் உண்டு. எனவே இது உடனிகழ்ச்சிப் பொருளாகும். (இருவரும் சேர்ந்து ஒரே தொழிலைச் செய்தல்)

கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்

என்ன பயனும் இல. (1100)

இப்பாடலில் ஒடு உருபு வந்துள்ளது. இருவர் கண்களும் நோக்குதல் என்னும் ஒரே தொழிலைச் செய்தன. அதனால் இது உடனிகழ்ச்சிப் பொருளாகும்.

இவ்விதிக்கு மாறாகத் திருக்குறளில் ஒரு பாடல் வந்துள்ளது.

கொடியார் கொடுமை உரைக்கும் தொடியொடு

தொல்கவின் வாடிய தோள். (1235)

இப்பாட்டில் தொடியொடு என மூன்றனுருபு வந்துள்ளது. 'வளையல்களும் கழன்று பழைய இயற்கை அழகும் இழந்த இத்தோள்கள்' – எனப்பொருள் கண்டார் பரிமேலழகர். தொடிக்கும் தோளுக்கும் வாடிய என ஒரே வினை வருகிறது. தொடி கழலுமே ஒழிய வாடாது. தோள்வாடி அழகு கெடுவது உண்டு. அதனால் ஈண்டு ஒடு என்னும் உருபு உடனிகழ்ச்சிப் பொருளில் வரவில்லை. இவ்விடத்துப் பரிமேலழகர் **'ஒடு வேறு வினைக்கண் வந்தது'** – என எழுதினார்.

வாடுதல் தொடிக்கு வேறுபடுதலால் தொடியொடு என்ற இடத்து ஒடு – ஒரே வினையின் உடனிகழ்ச்சியில் வாராமல் வேறுவினைக்கண் வந்தது என்றார். பரிமேலழகரைத் தவிர வேறு யாருக்கு இக்குறிப்புப் புலப்படும்?

யாப்பிலக்கண அமைதி

வெண்பாவிற்கு இலக்கணம் கூறும்போது ஈரசைச் சீர்களும் மூவசைச் சீர்களும் மட்டுமே பயின்று வருதல் வேண்டும் எனக் கூறப்படும். இறுதிச் சீர் மட்டும் நாள், மலர் என்னும் வாய்பாட்டில் அடக்கி ஒரசைச் சீர் வரலாம் என்பது விதியாகும். இவற்றிற்கு வாய்பாடு கூறும் போது தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் – என ஈரசை வாய்பாடுகளும், தேமாங்காய், புளிமாங்காய், கருவிளங்காய், கூவிளங்காய் – என மூவசை வாய்பாடுகளும் கூறப்படும்.

மூவசை வாய்பாடுகளில் இறுதியிலுள்ள கருவிளங் காய், கூவிளங்காய் – என்னும் இரண்டும் நிரை நடு வாகிய வெண்பா உரிச் சீர் என வழங்கப்படும். இவற் றுள் நடு அசையாகிய விள என்பது இரண்டெழுத்தும் குறிலாக உள்ளது. இதில் இரண்டாம் எழுத்து நெடிலாக வருதல் கூடாது. அஃதாவது கருவிளாங்காய், கூவிளாங் காய் என வருதல் கூடாது. ஈரசையாயின் கருவிளா, கூவிளா என வரினும் தவறில்லை.

வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா

யாக்கை பொறுத்த நிலம் (239)

இப்பாட்டில் வசையிலா, இசையிலா – என்னும் இரண்டும் ஈரசையாகி இரண்டாமெழுத்து நெடில் வந்து கருவிளா, கருவிளா என அமைந்துள்ளன.

மூவசைச் சீரில் நடு அசையின் இரண்டாமெழுத்து நெடிலாக வருதல் கூடாது என்பதற்கு யாப்பிலக்கணத் தில் தனியாக விதி கூறப்படவில்லை. தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் ஓரிடத்தில் இளம் பூரணர் வெண்பா நூல்களெல்லாம் அமைந்துள்ள முறையைக் கூர்ந்து நோக்கி இவ்வுண்மையைக் கூறியுள்ளார். திருக்குறளில் ஒருபாட்டை எடுத்துக் காட்டி அங்ஙனம் கொள்ள வேண் டும் என்பதை மிக நுட்பமாக நமக்கு அறிவுறுத்தினார்.

ஊறொரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்

ஆறென்பர் ஆய்ந்தவர்கோள் (662)

இப்பாட்டின் முதற்சீர் ஊறொராமை எனற்பாலது ஊறொரால் என நின்றது. இளம் பூரணர் (தொல் – பொருள் – பொருளியல்) முதல் நூற்பா உரையில் "இரண்டு என்னும் தொகைக்கு ஊறொராமை எனப் பொருள் உரைக்க வேண்டும்" – என உரைத்தார். ஊறொ ராமை என்னும் போது நடு அசையின் இரண்டாம் எழுத்து நெடிலாக வந்து கூவிளாங்காய் என்றாகி விடும். அதனால் அச்சொல்லை வள்ளுவர் செய்யுள் விகார மாக்கினார். ஊறொரால் என்னும் போது ஈரசையாகி கூவிளாம் என்றாகிறது.

வெண்பா இலக்கியங்கள் அனைத்தையும் ஆராய்ந்த போது, அப்படிக் கூவிளாங்காய், கருவிளாங்காய் என வரும்படியாக ஒரு வெண்பாவும் அகப்படவில்லை.

நன்னூல் பாயிரத்தில் ஒரு வெண்பா

"முன்னோர் மொழிபொருளே யன்றி அவர்மொழியும்

பொன்னேபோல் போற்றுவம் என்பதற்கும் –

முன்னோரின்

வேறுநூல் செய்துமெனும் மேற்கோளில் என்பதற்கும்

கூறுபழம் சூத்திரத்தின் கோள்"

இவ்வெண்பாவின் மூன்றாம் அடியில் **செய்துமெனும்** என்னும் மூவசைச் சொல்லில் நடு அசையின் இரண்டாம் எழுத்துக் குறிலாகவே அமைந்துள்ளது. ஆனால், நன்னூலுக்கு உரை எழுதிய இராமனுச கவிராயர் **செய்துமேனும்** எனப்பாடங்கொண்டு தவறிழைத்தார். ஆனால், வெண்பாக்களில் அளபெடை வரும்போதும் நடு அசையின் இரண்டாமெழுத்து ஐகாரமாக வரும் போதும் இவ்விதி கொள்ளப்படுவதில்லை.

கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே

எடுப்பதூஉம் எல்லாம் மழை. (15)

சிறுபடையான் செல்லிடம் சேரின் உறுபடையான்

ஊக்கம் அழிந்து விடும். (498)

இப்பாடல்களில் கெடுப்பதூஉம், எடுப்பதூஉம் என நடு அசையின் இரண்டாமெழுத்து நெடிலாக வரினும் அளபெடையானமையால் தவறாகக் கொள்ளப்படுவ தில்லை.

சிறுபடையான், உறுபடையான் – என நடு அசையின் இரண்டாமெழுத்து நெடிலாயினும் 'தற்சுட்டு அளபொழி ஐமூவழியும் நையும்' – என்னும் விதிப்படி ஐகாரத்தைக் குற்றெழுத்தாகக் கொள்ளல் வேண்டும். இந்த இரு இடங்களில் நடு அசையின் இரண்டாம் எழுத்து நெடி லாக வருதலை வெண்பாவில் காண முடியாது. இவ் விதிக்கு மாறாக வெண்பாக்களில் சீர்கள் அமையுமாயின் அவற்றைப் புலவர்கள் செய்யுள் விகாரமாக்கிச் செப்பம் செய்கின்றனர். அவ்வாறு திருவள்ளுவர் செப்பம் செய்த இடங்களையும் அவற்றைப் பரிமேலழகர் எடுத்துக் காட்டிய திறனையும் சில பாடல்களில் காண்போம்.

சென்ற இடத்தால் செலவிடாத் தீதொரீஇ

நன்றின்பால் உய்ப்பது அறிவு (422)

இப்பாட்டில் பரிமேலழகர் **செலவிடாது** என்பது குறைந்து நின்றது. குறைக்காமல் உள்ளவாறே வைத்து அலகிட்டாலும் யாப்பு கெடவில்லை. செலவிடாது – கரு விளங்காய் ; காய்முன்நேர் – பொருந்துகிறது. ஆனால், நடு அசையின் இரண்டாமெழுத்து நெடிலாகி மேற் சொன்ன விதிக்கு மாறாகிறது.

ஒளியார்முன் ஒள்ளிய ராதல் வெளியார்முன்

வான்சுதை வண்ணங் கொளல் (714)

இப்பாட்டில் பரிமேலழகர் **ஒள்ளியார்முன்** என்றது விகாரத்தால் ஒளியார் என நின்றது – என எழுதினார். ஒள்ளியார் முன் – என்று கொண்டே அலகிட்டாலும் அலகு தவறவில்லை.

ஒள்ளி யார்முன் – கூவிளங்காய் – காய்முன்நேர், இருப்பினும் நடு அசையின் இரண்டாமெழுத்து நெடிலாக அமைந்து மேற்சொன்ன விதிக்கு மாறாகிறது. ஒளியார்முன் என்னும் போது புளிமாங்காய் என்றாகி இடர்ப்பாடு இல்லாமல் போகிறது.

நத்தம்போல் கேடும் உளதாகும் சாக்காடும்

வித்தகர்க் கல்லால் அரிது (235)

இப்பாட்டில் பரிமேலழகர் போல் என்பதை ஈண்டு உரையசை என நீக்கிவிட்டு அவ்விடத்து ஆகும் என்பதைக் கூட்டுக – என்றார்.

நத்தமாகும் கேடும் – என மாற்றுகிறார். இச்சொல்லையும் அலகிடும்போது தவறவில்லை.

நத்தமாகும் – கூவிளங்காய் – காய்முன்நேர்.

இருப்பினும் நடு அசை இரண்டாமெழுத்து மேற்சொன்ன விதிக்கும் மாறாகிறது. நத்தம்போல் என்னும் போது அவ்விடர்ப்பாடு இல்லை.

இதுவரை பரிமேலழகரின் உரைத்திறனில் ஒரு சில அறிந்தோம். இன்னும் கூறிக் கொண்டே போகலாம். விரிவஞ்சி விடப்பட்டது.

உருத்திராக்கமும் அதன் வகைகளும்

சைவர்களுக்குரிய சிவ சின்னங்கள் மூன்று.

1. உருத்திராக்கம்,
2. திருநீறு.
3. திருவைந்தெழுந்து (நமசிவாய) உச்சரிப்பு இவற்றில் உருத்திராக்கம் முக்கியமானது.

உருத்திராக்கங்களின் வகைகள்.

ஒரு முகம் முதல் பதின்மூன்று முகம் வரையில் உள்ளது. அவைகளைப் பற்றிய விபரங்கள்.

ஏகமுக உருத்திராக்கத்துக்கு இறைவன் பரமசிவன். இதனைப் பூணின் பிரமவதையாலாய பாவம் நீங்கும்.

இரண்டு முகம் உடையதற்கு இறை மணிகண்டன். இதனைத் தரிக்கின் கொலைப் பாவம் போம்.

மூன்று முகக் கண்டிக்கு அனல் தெய்வம். இதனை அணியின் வினை தீரும் (சுசி, பவமானன், பாலகன் என்பவர்)

நான்கு முகக் கண்டிக்கு அதிதெய்வம் நான்முகன். இதனைத் தரிக்கின் நரர்வதைப் பாவம் தீரும்.

ஐம் முகக் கண்டிக்கு இறை காலாங்கி. இதனைத் தரிக்கின் உணவால் ஆய தீங்கு தீரும்.

ஆறுமுகக் கண்டிக்கு ஆறுமுகனே அதிபன். இதனைப் பூணின் பிரமவதை போகும்.

ஏழுமுகக் கண்டிக்கு ஈசன் நாகேசன். இதனைத் தரிக்கின் களவானாய குற்றம் நீங்கும்.

எட்டு முகக் கண்டிக்கு ஈசன் விநாயகன். இதனைப் பூணின் பொற்காசு திருடிய பாவம்போம்.

ஒன்பது முகக் கண்டிக்குத் தெய்வம் வயிரவன். இதனைத் தரிக்கின் கொலை பாவங்கள் யாவும் போகும்.

பத்து முகக் கண்டிக்குப் பதி அரி. இதனை அணியின் பேய் அஞ்சி நீங்கும்.

ஏகாதச முகக் கண்டிக்கு இறை ஏகாதச உருத்திரர். இதனைப் பூண்டவர்க்கு விக்கினங்கள் நீங்கும்.

பன்னிரு முகக் கண்டிக்குத் தேவர் ஆதித்தர். காதில் கோத்தணிவார்க்கு ஊறுகள் போம். மனோபீஷ்டங்கள் நிறைவேறும்.

பதின்மூன்று முகக் கண்டிக்குத் தெய்வம். பரமசிவன் இதனைச் சென்னியில் தரிக்கின் பத்தி முத்தியுண்டு.



அன்பைப் பெருக்கி அருளாளராகுக!

(அருள் விளக்கம் அண்ணாமலை அடிகள்.)

1. தொடக்கவுரை

மக்களாகப் பிறந்தவர்கள் சிறந்த நிலையில் இம்மைப் பயனும், மறுமைப் பயனும் அடைந்து வாழ்வ தற்கு உறுதுணையாய் இருப்பது 'அன்பு' என்ற உயர்ந்த பண்பேயாகும். இந்தப் பண்பினை இறைவன் நமக்குப் பூரணமாக அருளியுள்ளான். பிறவுயிர்கட்கு இவ்வன்பு எத்துணையோ சதவிகிதம் குறைவாகும். எடுத்துக் காட்டாக மீன்கள் முட்டைகளை வயிற்றுள் தாங்கியிருந்து வெளிப்படுத்தும் அந்த அளவுக்குத்தான் அன்பு உண்டு. அம்முட்டைகள் என்னவாயின என்ற ஏக்கம் அம்மீன்க ளுக்கில்லை. அந்த முட்டைகள் கதிரவன் வெப்பத்தால் பொரிந்து குஞ்சுகள் வெளிப்பட்டு இயல்பாக வாழும். பல்லி பாம்பு போன்ற உயிர்கள் முட்டைகளிட்டுச் சில நாட்கள் பாதுகாத்துக் குஞ்சுகள் வெளிப்பட்டபின் அவை தாமாக இரைதேடும் வரையில் அன்புடையவையாக இருக்கும். பூனை, நாய், ஆடு போன்ற விலங்குகள் தாம் ஈன்ற குட்டிகளைப் பல மாதங்கள் அன்புடன் பாது காக்கும். பசு, எருமை, யானை போன்ற விலங்குகள் தாம் ஈன்ற கன்றுகளைச் சில ஆண்டுகள் நினைவோடு அன்பு பாராட்டும். மக்களுக்குள் பெற்றோர் தம் பிள்ளைகளிடம் தாமுள்ளளவும் அன்புடையவராவர். பிள்ளைகளும் தம் பெற்றோரிடம் தாமுள்ளளவும் அன்பு காட்டிப் பாது காப்பர். அம்மட்டோ பெற்றோர் இறந்த பின்பும் அவர் களுடைய நினைவு நாள் வழிபாடும் ஆண்டுகள்தோறும் நிகழ்த்துகின்றனர். ஆகவே, இறைவன் பூரண அன்பை மக்களினத்திற்கே அளித்துள்ளான் என்பது தெற்றென விளங்கும். இவ்வன்பைப் பெருக்கி நன்மை அடைவதும் அன்றி மாறாக அன்பை விடுத்தபோதுண்டாகும் வன்பைப் பெருக்கித் தீமை அடைவதும் மனிதர் தமக்குள்ள பகுத்தறிவைப் பயன்படுத்தும் உரிமைக் போக்கைப் பொறுத்ததாகும்.

2. அன்பு பெருகிக் கிடைத்த மனிதவுடல்

"எடுத்த பிறப்புகள் எண்ணத் தொலையா" என்ற கூற்றின்படி நாம் எடுத்த பிறப்புகள் எழுகடல் மணலி னும் அதிகமாகும். பிறப்புகள் தோறும் அன்பு பெருகிப் பெருகிப் பூரண அன்புடைய மனிதராகப் பிறந்துள் ளோம். இது பற்றியே நம் திருவள்ளுவர் :

"அன்போ(டு) இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்(கு)
என்போ(டு) இயைந்த தொடர்பு"

என்று கூறியுள்ளார். ஈண்டு என்பு (எலும்பு) என்றது உடம்பினைக் குறிக்கும். "அரிதரிது மானிடர் ஆதலரிது" என்ற ஔவையார் வாக்கிற்குச் சிறந்த பொருளை இக்குறட்பாவில் காண்கின்றோம். அருமையான மக்க ளுயிர்க்கு எலும்புத் தோல் போர்த்த மனித உடம்பின் தொடர்பு ஏற்பட்டமை முற்பிறப்புகளில் அவ்வன்பு வளர்ந்து வளர்ந்து வந்ததன் காரணமாகும் என்பதை உணர வேண்டும். அன்பு ஒன்றே நம்மை ஈடேற்றக்கூடிய பண்பு என்பதனையும் அறிய வேண்டும். பிற உயிர் கட்கில்லாத மனிதப் பிறப்பின் சிறப்புகளைப் பின்வரும் பாடல் அடிகளால் நன்கு தெரிந்து கொள்ளலாம் :

எழுகடல் சூழ்ந்த இந்நில வுலகில்
விழுமிய பிறப்பு மக்கட் பிறப்பே
இப்பிறப் பரிதென இயம்பினர் ஔவை
ஒப்பிடின் பேசிடும் உயிரிது வாகும்
தப்பா தன்பினைத் தாங்கிடும் உயிராம்
பகுத்தறி வுற்றிடும் பண்புள உயிராம்
தகுமுறை கல்வி தான்பயில் உயிராம்
மிகுமிறை யுணர்வும் மேவிடும் உயிராம்
நிமிர்ந்தே நடந்திடும் நீடுயிர் இதுவே
ஆயுதம் பற்றிடும் ஆற்றல திதுவே.

3. அன்புக்கும் அருளுக்குமுள்ள ஒற்றுமை

அன்பை நிறைவாகப் பெற்றுள்ள மனிதன் அதனைப் பெருக்கி அருளுடையவனாக ஆக வேண்டும்.

அன்பைப் பெருக்கியென தாருயிரைக் காக்கவந்த
இன்பப் பெருக்கே இறையே பராபரமே!

என்றார் தாயுமானவர். இதனால் அன்புடையவன் அருளுடையவனாக வளர்ந்தால் அனந்த கோடி காலம் எண்ணற்ற பிறப்புகளை எடுத்துப் பிறந்தும் இறந்தும் வாழ்ந்துவரும் நிலைமை மாறிப் பிறவா இறவா நிலைமை எய்துதற்கு அன்பு துணையாவதை அறியலாம். எனவே அன்புடையவன் அருளுடையவனாக உயர வேண்டும். இது பற்றியே திருவள்ளுவ நாயனார், "அருளென்னும் அன்பீன் குழவி" என்று விளக்கியுள்ளார். 'அன்புத் தாய் பெற்றெடுத்த அருளென்னும் குழந்தை' என்பதே இத்தொடரின் பொருள். தம் மனைவி மக்கள் உறவினர் ஆகியவர்களிடத்து மட்டும் காட்டும் நேயம் அன்பாகும்.

இந்நேயம் அளவுபடுத்தப்பட்ட குறுகிய அன்பாகும். (Limited Love) அனைத்து உயிர்களிடத்தும் காட்டும் நேயம் அளவின்றி விரிந்து பரந்த அன்பாகும். (Universal Love) இந்நிலை எய்தியவன் தெய்வமாவன். "அன்பு நிறைந்தவன் மனிதன் அருள் நிறைந்தவன் ஆண்டவன்" என்பதை உணர்வோமாக.

4. அன்புடையாருக்கும் அன்பில்லாருக்குமுள்ள வேற்றுமை

அன்புடையவர் பிறர்க்கும் பிற உயிர்கட்கும் தம் பொருட்களையேயன்றி அரிய தம்முயிரையும் கொடுப்பர். அன்பில்லாதவரோ எல்லாப் பொருள்களையும் தமக்கே உரிமையாக்குவர். இத்தகையவர் தம்முயிரைக் கொடுப்பது இயலாத செயல் என்பது பெறப்படும்.

இக்கருத்தினையே தெய்வப் புலவர்,

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு

என்ற குறள் வெண்பாவால் விளக்கியுள்ளார். பிறர்க்காகப் பிற உயிர்கட்காகத் தம்முயிரைக் கொடுக்கும் நிலை தியாக நிலை – வள்ளல் நிலை எனப்படும். இந்திரனுக்குத் தன் முதுகுத் தண்டை வச்சிராயுதமாகக் கொடுத்த ததீசி முனிவரையும், ஒரு புறாவுக்காகத் தன் தொடையின் சதையினை அரிந்திட்டும் எடை சரியாகாமையால் தன்னையே துலாக்கோலில் ஏற்றித் தியாகம் செய்த சிபிச் சக்கரவர்த்தியையும், தன் உடம்பை விடுத்து இறந்துபட்ட மூலன் என்ற இடையன் உடம்புக்குள் புகுந்து அதாவது கூடுவிட்டுக் கூடு பாய்ந்து பசுக்களுக்கு மகிழ்ச்சியை உண்டாக்கிய திருமூல தேவரையும் சிந்திக்க வேண்டும். இந்நிலை எய்தியவர்க்கு இறைவன் திருவருளும் உள்ளத்தில் தோன்றி நிற்கும். தோன்றவே அற்புதங்கள் ஆற்றும் அருளாளர் ஆகின்றனர். இவர்களே "செயற்கரிய செய்வார் பெரியர்" என்ற குறட்கருத்துக்கு எடுத்துக் காட்டாவார்கள்.

5. அன்புக்குள்ள ஆற்றல்

அன்புள்ளம் படைத்தவர் தாங்கள் அன்பு கொண்டுள்ள உயிர்கட்கு இடையூறு நேர்ந்தபோது அதனை நீக்க ஆற்றலுடன் எழுந்து செயல்படுவர்.

'அன்பிற்கு முண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்'

என்றார் பொய்யாமொழியாரும். பறவை விலங்கு ஆகிய வற்றிடமும் இவ்வாற்றலைக் காணலாம். எடுத்துக் காட்டாக ஒரு கோழிக்குஞ்சை பருந்து அடித்துக் கொண்டு சென்றால் வெகு உயரம் பறக்கமுடியாத பெட்டைக்கோழி ஆற்றல் மிகுந்து அப்பருந்துடன் போராடும். அக்கோழிக்கு இவ்வாற்றல் அது தன் குஞ்சின்மீது வைத்த அன்பால் வந்தது. அவ்வாறே தன் கன்றைப் புலி வந்து தாக்கும்போது புலிக்குப் பயந்தோட வேண்டிய பசு பயம் நீங்கித் துணிவு கொண்டு மிக்க ஆற்றலுடன் அப்புலியைத் தாக்கும். இவ்வாற்றல் அன்பினால் வந்ததேயாகும்.

கண்ணப்பநாயனார் தன் கண்ணை இடந்து சிவன் கண்ணில் அப்பிய அருஞ்செயல் அன்பாற்றல் மிகுதியால் விளைந்ததென்று விளம்பவும் வேண்டுமோ? "கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்" என்றார் மாணிக்க வாசகரும். வடக்கிருந்து உயிர்விடத் துணிந்த கோப்பெருஞ் சோழனுடன் புலவர் பிசிராந்தையாரும் உண்ணாதிருந்து உயிர்விட்டமை அன்பின் ஆற்றலினாலேயேயாகும். பெற்ற குழந்தைக்கு விபத்து நேர்ந்தால் தம்முயிரைப் பொருட்படுத்தாமல் குழந்தையைக் காப்பாற்றிவிட்டுத் தம்முயிரை விட்ட தாயார் பலராவர். நாட்டின் மீது வைத்த அன்பின் காரணமாகத் திருப்பூர் கொடிகாத்த குமரன் உயிர்விட்டதையும் ஈண்டுச் சிந்தித்துக் கண்ணீர் பெருக்க வேண்டும்.

6. அருளுக்குள்ள ஆற்றல்

அன்பிற்கே இத்தகைய ஆற்றல் என்றால் அருளுக்கு எத்தகைய பேராற்றல் இருக்கும் என்பதை உணர வேண்டும். அளவற்ற அற்புத ஆற்றலாகவன்றோ இருக்கும். இறையருள் பெற்றவர்க்கு அல்லல் – துன்பம் இல்லை என்பதைத் திருவள்ளுவர்,

"அல்லல் அருளாள்வார்க்(கு) இல்லை வளிவழங்கும்
மல்லல்மா ஞாலங் கரி"

என்று கூறியுள்ளார். அருளுடையார்க்குத் துன்பம் இல்லை என்பதை இவ்வுலகில் வாழ்ந்த அருளாளர்கள் வாழ்க்கை நிகழ்ச்சிகளிலிருந்து அறியலாம். பல்லவ மன்னன் மகேந்திர வர்மன் திருநாவுக்கரசருக்கு நஞ்சு கொடுத்துப் பருக வைத்தபோதும், சுண்ணாம்பு நீற்றறையிலிட்டுச் சுட்டபோதும், யானையை ஏவி இடறச் செய்தபோதும், கல்லில் பிணைத்துக் கடலில் எறிந்தபோதும் எத்தகையை இடையூறும் நேரிடாதவாறு காப்பாற்றப்பட்டமை அருள் பெற்ற காரணத்தினாலன்றோ?

இறையருள் பெற்றவர்க்கு அருளுதலும் சபித்தலுமாகிய ஆற்றல் உண்டு. திருஞானசம்பந்தர் மயிலை கபாலீசுவரர் கோயிலில் எலும்பைப் பூம்பாவையாக உயிர்ப்பித்ததும், அவரே, விடமேறி இறந்த வணிகனைத் திருமருகலில் உயிர்ப்பித்ததும், திருநாவுக்கரசர் இறந்துபட்ட திங்களூர் அப்பூதி அடிகளின் மகனை உயிர்ப்பித்ததும், அவிநாசியில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் முதலையுண்ட பிள்ளையை உயிருடன் தருவித்ததும் அருளுதலாகிய ஆற்றலால் நிகழ்ந்தவையே.

அருளதலேயன்றிச் சபித்தலும் நிகழ்ந்துள்ளன. கவுந்தியடிகளுடன் கோவலனும் கண்ணகியும் மதுரைக்குச் சென்றபோது இடைவழியில் ஒரு வேட்டுவனும் அவன் மனைவி வேட்டுவச்சியும் அடிகளுடன் வந்த தம்பதிகளின் பேரழகைக் கண்டு வியப்புற்று "இவர் யாவர்?" என்று அடிகளை நோக்கிக் கேட்டனர். அடிகளும் "இவர்கள் எம் மக்கள்" என்று பதில் கூறினார். உடனே அவ்வேட்டுவனும் வேட்டுவச்சியும் கலகல வென்று ஏளனச் சிரிப்பு சிரித்து "ஒரு வயிற்றில் பிறந்த அண்ணனும் தங்கையும் கணவனும் மனைவியும் ஆவாரோ?" எனக்கேட்டு மீண்டும் பெருநகை செய்தனர். அடிகள் வெகுண்டு அவர்களைக் குள்ளநரிகளாக ஆகச் சபித்தார். சாபம் பலித்து இருவரும் நரிகளாகி ஊளை

யிட்டுக் கொண்டு காட்டுவழி ஓடினர். இந்திரனுக்கு ஆட்பட்ட அகலிகையை அவள் கணவர் கௌதம முனிவர் "கல்லாகக் கடவன்" என்று சபிக்க அவளும் கல்லாயினாள். பட்டினத்தடிகள் "தன்வினை தன்னைச் சுடும் ஒட்டப்பம் வீட்டைச் சுடும்" என்று சபித்து அப்பத்தைப் பழிக்குரியவர் வீட்டின் மீது எறிய அவ்வீடு தீப்பற்றி எரிந்தது. இவ்வாறு பல எடுத்துக்காட்டுகள் நூல்களில் காணலாம்.

7. அன்பு தழைக்க ஆன்மநேயம்

அன்பு தழைக்க "எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணும்" ஆன்ம நேயம் வேண்டும். தாயுமானவரும் "எவ்வுயிரும் என்னுயிர் போல் எண்ணியிரங் கவுநின், தெய்வ அருட்கருணை செய்யாய் பாராபரமே" என்று வேண்டிப் பாடியுள்ளார். அன்புப் பயிர் தழைக்க ஆன்மநேயம் சிறந்த எருவாகும். ஆன்மநேயம் இல்லாத அன்பினால் நன்மை விளை யாதென்பதை உணர வேண்டும். பின்வரும் பாடல்களால் ஆன்மநேய தத்துவத்தின் இன்றியமையாமையை அறிந்து கொள்ளலாம் :

(1) பெரியோர் அனைவருமே பேருலகர் ஒன்றாய்
உரிமையுற்று வாழும் வழிக்குப் – பெரிதுமே
அன்புநெறி சொன்னார் அதுதழைக்க ஆன்மநேய
இன்புநெறி காட்டும் எமக்கு.

(2) வழங்குபல தத்துவங்கள் வையமதில் உண்டு
முழுங்குநும் தத்துவமே மூலம் – புழங்கும்
சமரச ஆன்மநேய தத்துவமே பாரில்
இமயமாய் ஓங்கிடவே எண்ணு

(வள்ளலார் அருள்வேட்டல் அந்தாதி)

இக்காரணம் பற்றியே வள்ளலார் ஆன்மநேயமாகிய ஜீவகாருண்யமே முத்தி வீட்டின் திறவுகோல் என்றருளி னார்.

8. முடிபுரை

"செயற்கரிய செய்வார் பெரியர்" என்ற வள்ளுவர் வாக்கின்படி அருளாற்றல் பெற்று அற்புதங்களைச் செய்யும் அருளாளர் மெய்ஞ்ஞானிகளாவர். விஞ்ஞானி களோ இயற்கைப் பொருள்களிடத்தே பொதிந்துள்ள ஆற்றலை வெளிப்படுத்துகின்றவராவர். இக்கருத்தை விளக்கும் திருக்குறள் :

'பெருமை யுடையவர் ஆற்றுவர் ஆற்றின்
அருமை யுடைய செயல்' என்பதாகும்.

அன்பு குறித்துத் திருமூலர் அருளியுள்ள மந்திரமொன் றைக் காண்போம்.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ(து) ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவ(து) ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே.

அன்பு குறித்துத் திருவருட்பிரகாசர் வள்ளலார் அருளியுள்ள அருட்பாவொன்றைக் காண்போம்.


அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே
அன்பெனும் குடில்புகும் அரசே
அன்பெனும் வலைக்குள் படுபரம் பொருளே
அன்பெனும் கரத்தமர் அமுதே
அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடலே
அன்பெனும் உயிரொளிர் அறிவே
அன்பெனும் அணுவுள் அமைந்தபே ரொளியே
அன்புரு வாம்பர சிவமே.

மேற்கண்ட மந்திரப் பாவையும் அருட்பாவையும் சிந்தித்து அன்பைப் பெருக்கி அருளாளராகிப் பேரின்பப் பெருவாழ்வில் திளைப்போமாக.

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!







திருவள்ளுவர் கண்ட தாய்மை

குறள் ஞானி, பேராசிரியர். டாக்டர் கு. மோகனராசு
(நிறுவனர் : உலகத் திருக்குறள் உயராய்வு மையம்)

நுழைவாயில்

உலக மனித இனத்திற்குப் பொதுவழி காட்டிப் புது ஒளி ஊட்டியவர் பொதுமறைப் பேராசான் திருவள்ளுவர். அதிலும், பெண்ணினப் பெருமைக்கும் உரிமைக்கும் அவர் காட்டிய வழி புதுமையானது; புரட்சிகரமானது. அந்தப் புரட்சிப் பேராற்றின் ஒரு கிளைதான் "தாய்மை" பற்றிய சிந்தனைகள்.

புனிதப் பொலிவு

பெண்ணினப் பெருமையைப் பறைசாற்றும் குறள்கள் பல ; அவற்றுள் ஒன்று,

"மங்கலம் என்ப மனைமாட்சி, மற்றதன்
நன்கலம் நன்மக்கள் பேறு" (குறள் 60)

என, 'வாழ்க்கைத் துணைநலம்' என்னும் அதிகாரத்தில் வரும் குறள்.

இக்குறளில் வரும் 'மனைமாட்சி' என்பதற்குச் சான்றோர்கள் கண்ட / கொண்ட பொருள்கள் பல ; மனையாளின், நற்குண நற்செய்கைகள் – நல்லொழுக்கம், கற்பின் மாட்சிமை – பெருமை – மாண்பு – நற்பண்பு என மனைவியொடு சார்த்திப் பொருள் கண்டவர்கள் பலர் ; இல்லறம் நடத்தல், இல்லறத்தின் பெருமை என இல்லறத்தோடு சேர்த்துப் பொருள் கொண்டவர்கள் சிலர்; நல்ல குணங்களையுடைய பெஞ்சாதி, இல்லக் கிழத்தி என மனைவியாகவே கொண்டவர்கள் சிலர்.

'வாழ்க்கைத் துணை' என்னும் தொகை, கணவன் அல்லது மனைவியைச் சுட்டுவது போல், 'மனைமாட்சி' என்னும் தொகை, மனைவியைச் சுட்டுவதாகக் கொள்வது பொருத்தமாகவே தோன்றுகிறது.

மனைமாட்சியாக விளங்குவதால்தானே 'மனைவி' என்றனர்!

மேலும்,

மனைமாட்சி

> மனை (ஆகிய) மாட்சி

> மனைவி (ஆகிய) பேறு / பொலிவு

> மனைவிமை

எனக்கொள்ளவும் இடம் உண்டு.

'மங்கலம்' என்னும் சொல், அழகு, நன்மை, புனிதம், பெருமை, பொலிவு, மங்கல மணி என்னும் பொருள்களைக் கொண்டது.

ஆக,

'மங்கலம் என்ப மனைமாட்சி' என்பதற்கு, 'மனைவிமை புனிதமானது என்பர்' என உயர்நிலைப் பொருள் கொள்ள இடம் உளது.

அதாவது, நல்ல மனைவியாகும் பேறு புனிதமானது எனக் கொள்ளலாம்.

அந்தப் புனிதத்திற்கும் அணியாக – பெருமை தருவதாக – பொலிவூட்டுவதாக – அமைவது ஒன்று உண்டு. அதுதான்,

"நன்மக்கட் பேறு"

அதாவது, "தாய்மை" அடைவது.

மனைவிமை புனிதமானது ; தாய்மை, அந்தப் புனிதத்திற்கும் பொலிவு சேர்ப்பது.

– இது, இக்குறளின் திரண்ட பொருள்.

பெண்மை, மனைவிமையில் புனிதம் அடைகிறது. தாய்மையில் மேலும் பொலிவடைகிறது – ஒரு வகையில் நிறைவடைகிறது.

– இது, இக்குறளின் ஊடுபொருள்.

நல்ல மனைவியாகும் பேறோ, தாய்மைப் பேறோ அடையாத பெண்ணைச் சமுதாயம் மதிக்காது ; அத்தகைய பெண்ணால் ஆகும் பயன் ஒன்றும் இல்லை என்பதை,

"அற்றார்க்கொன்று ஆற்றாதான் செல்வம், மிகநலம்
பெற்றாள் தமியள்மூத் தற்று" (குறள் 1007)

என்னும் குறள் உணர்த்துகின்றது.

'வறியவர் ஒருவர்க்கு, அவர் வேண்டும் ஒன்றை
உதவாதவன் செல்வம், அனைத்து நலன்களும்
வாய்க்கப் பெற்ற ஒருத்தி, தனித்திருந்து
மூப்படைவதைப் போன்றது'

என்பது இக்குறளின் பொருள்.

'தமியள்' என்பதற்கு, 'மனைவிமையும் தாய்மையும் அற்றுத் தமியளாதல் எனப் பொருள் கொள்ளலாம்.

தாய்மை தரும் மகிழ்வு

ஒரு பெண் மிகுநலம் பெற்றவளாக அமைவது அவளுக்கு மகிழ்வு தருவது ; அதனினும் மகிழ்வு, அவளுக்கு நல்ல கணவன் வாய்ப்பது ; அதனினும் மகிழ்வு, அவள் நல்ல மனைவியாக – குடும்பத் தலைவியாகத் தன்னை உருவாக்கிக் கொள்வது.

இவை அனைத்திலும் ஒரு பெண்ணுக்குப் பெரு மகிழ்வு தருவது அவள் தாய்மை அடைவதே.

தாய்மைப் பேறு பெருமகிழ்வு தருவதற்குப் பல காரணங்கள் உண்டு. அவற்றுள் சில வருமாறு ;

(i) உலக உயிர்கள் அனைத்திலும் 'பெண்' இனத்திற்கே இயல்பான உணர்வு ;

(ii) 'தாய்' என்னும் பேறு கிடைத்தல் ;

(iii) 'மலடி' என்னும் பழி நீங்கல் ;

(iv) வழிமுறை சிறக்க வழியேற்படல் ;

(v) முதுமையில் தக்க 'காவல்' கிடைத்த நிறைவு

மேலும், தாய்மைப் பேறு என்பது, 'இன்பத்தின் முடிவில் கிடைக்கும் இன்பம்' அன்று ; 'துன்பத்தின் முடிவில் கிடைக்கும் இன்பம்'. முன்னதினும் பின்னது பெருமகிழ்வு தருவது ; பெரியது ; நெஞ்சில் நிலைத்து நிற்பது ; சமுதாய மதிப்பிற்கு உரியது.

திருவள்ளுவரும் இந்தப் பெருமகிழ்வை,

"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும்" (குறள் 69)

என்னும் தொடர்வழி வெளிப்படுத்துகின்றார்.

தம் பொருள் – தம் மக்கள்

ஒரு நல்ல அறிஞர்க்கு அவருடைய சிந்தனைகள்தாம் அவருக்குச் சொத்து ; ஒரு நல்ல ஆராய்ச்சியாளருக்கு அவருடைய புதிய கண்டுபிடிப்புகள்தாம் அவருடைய சொத்து ; 'உலகம்' என்னும் உணர்வுடைய ஒருவருக்கு அவருடைய அந்த உணர்வுதான் அவருடைய சொத்து.

அதுபோல, ஒரு நல்ல பெற்றோர்க்கு அவர்களுடைய குழந்தைகள்தாம் அவர்களுடைய சொத்து. அதனை விடுத்து, மண்ணையும், பொன்னையும் பிற பொருளையுமே பொருளென மதித்து வாழ்வார்களாயின் அவர்கள் நல்ல பெற்றோர்கள் ஆக முடியாது. இதனை,

'தம்பொருள் என்பதம் மக்கள்' (குறள் 63)

என்னும் தொடர் உணர்த்துகின்றது.

அது மட்டுமன்றி, பெறத்தகு பேறுகள் அனைத்தினும் மிக உயர்ந்த பேறாகத் தம் மக்கள் பேற்றையே கருதும் மன உணர்வு வாய்க்கப் பெற்றவர்களாகவும் அவர்கள் விளங்க வேண்டும் என்பதை,

"பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற' (குறள் 61)

என்னும் குறள் உணர்த்துகின்றது.

இவ்விருவகை மன உணர்வுகளும் பொதுவாகப் பெற்றோர்க்கு இயல்பாக வாய்த்திருத்தல் வேண்டும் எனினும், தாய்க்கே தனிச் சிறப்புடையன.

அதாவது, தாய்மை என்பது, தம் மக்களையே அனைத்திலும் உயர்வாக – உயிராகக் கருதுவது ; இவ்வுணர்வு இயற்கையாய் அமைவது.

ஐம்புல உணர்வும் மக்களேயாதல்

ஒரு பேரறிஞன் – ஞானி – ஐம்புல உணர்வை அண்டப் பெருவெளியில் உணர்கிறான் ; ஒரு உண்மையான காதலன் அந்த ஐம்புல உணர்வைத் தன் காதலியிடம் உணர்கிறான். இதனை,

"சுவையொளி ஊறுஓசை நாற்றமென்று ஐந்தின்
வகைதெரி வான்கட்டே உலகு" (குறள் 27)

"கண்டுகேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள" (குறள் 1101)

என்னும் குறள்கள் வழி உய்த்துணர முடிகின்றது.

ஆனால், பெற்றோர் (குறிப்பாக, தாய்), அந்த ஐம்புல உணர்வும் தம் பிள்ளைகளாகவே அமைவதை உணர்வர்; உணர வேண்டும் – இது, வள்ளுவத்தின் எதிர்பார்ப்பு. இந்த எதிர்பார்ப்பை,

"மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம், மற்றவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு" (குறள் 65)

"குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்" (குறள் 66)

"அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்" (குறள் 64)

என வரும் குறள்கள் உணர்த்துகின்றன.

இத்தகைய உணர்வு, ஒத்து அல்லது ஒட்டி உறவாடும் தாயிடம் (அல்லது தந்தையிடம்) அமையாது ; தம் மக்களோடு பின்னிப் பிணைந்து ஒன்றி உறவாடும் தாயிடமே வாய்க்கும்.

ஆக, தாய்மை என்பது, தான் தம் மக்கள் எனப் பிரித்துணராது. பின்னிப் பிணைந்து மிளிரும் / ஒளிரும் ஒரு பேருணர்வு என்பது தெளிவுறும்.

தாயின் அறிவுப் பார்வை

'பெண்கள் என்றால் அறிவு அற்றவர்கள்' எனப் பார்ப்பது ஒருசார் பார்வை; அதனால்தான்,

"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்" (குறள் 69)

என்னும் குறளில் வரும் 'கேட்ட தாய்' என்பதற்கு விளக்கம் தர எண்ணிய பரிமேலழகர்.

"இயல்பால் தானாக அறியாமையின்
கேட்ட தாய் எனவும் கூறினார்"

எனவும்,

"பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற" (குறள் 61)

என்னும் குறளின் விளக்க உரையில்

"அறிவறிந்த என்றதனான், மக்கள்
என்னும் பெயர் பெண் ஒழித்து நின்றது"

எனவும், பிறழ எழுதினார். இப்பார்வை, திருவள்ளுவர் பார்வை அன்று.

பெண்களை அறிவற்றவர்கள் என்று திருவள்ளுவர் எங்குமே கூறவில்லை ; கல்வியை இருபாலார்க்கும் பொதுவாக்கியே கூறுகின்றார்.

தன் மகனைச் 'சான்றோன்' எனச் சான்றோர் கூற, அதனைக் கேட்ட தாய், அவனைப் பெற்றெடுத்த பொழுதினும் பெரிது மகிழ்கின்றாள் (குறள் 69) என்றால், அம்மகனைச் 'சான்றோன்' ஆக்க, அவளுடைய பங்கு இல்லாமலாப் போயிருக்கும்?!

"தம்மின் தம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க்கு எல்லாம் இனிது" (குறள் 68)

என்னும் குறளில், தன் மகனைத் தம்மினும் அறிவுடையவனாக்குவதில் தாய்க்கும் பங்குண்டு என்று திருவள்ளுவரே கூறுகின்றார்.

ஆக, திருவள்ளுவர் கண்ட தாய் அறிவுடையவள் ; தன்னினும் தன் மகனை அறிவுடையவனாக்கும் / சான்றோனாக்கும் உணர்வுடையவள் ; தன் மகன் அறிவு வையத்து மக்களுக்கெல்லாம் இன்பம் பயக்குமாறு அமைய வேண்டும் என்னும் உலகளாவிய பரந்த நோக்கு உடையவள்.

தாயின் அறவடிவம்

பத்து மாதங்கள் சுமந்து, துன்புற்று, தன் மகவை ஈன்றெடுத்த வயிறு தாயின் வயிறு. அந்த வயிறு பசித்திருக்க, அவள் ஈன்ற மகன் பார்த்திருப்பது போன்ற கொடுமை – நன்றி கொன்ற செயல் – வேறொன்றில்லை.

ஆகவே, எது செய்தாகினும் தாயின் பசியைப் போக்க வேண்டும் ; அச்செயல் பாவச் செயலாக இருப்பினும் பரவாயில்லை என்பர்.

இதனைத் திருவள்ளுவர் மறுக்கின்றார்.

இப்படியொரு 'இக்கட்டான சூழல்" ஏற்பட்டாலும் பழிக்கத் தக்க செயல்களைச் செய்யாதே என்பதே வள்ளுவரின் வளப்பார்வை.

ஏன்?

தாய்மை அறவடிவானது ; தன் பசியைப் போக்குவதற்காகத் தன் மகன் அறமற்ற – பழிக்கத்தக்க – செயலைச்செய்தான் என்பதை அத்தாய்மை தாங்காது.

அதனால்தான்,

"ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை" (குறள் 656)

என்று கட்டளை இடுகின்றார் அறநெறிக் காவலர்.

அறத்தின் – அன்பின் – பொறுமையின் – வடிவாக விளங்கும் அந்தத் தாய்மை – தன் மக்களோடு பின்னிப் பிணைந்து விளங்கும் அந்தத் தாய்மை – இரண்டு சூழல்களில் அந்த மக்களையே வெறுக்கிறது ; பிறன் போல நோக்கி ஒறுக்கிறது.

ஒன்று, அந்த மகன், "பேணாப் பெருங்குற்றம்" (மன்னிக்க முடியாத மாபெரும் பாவம்) எனக் கருதத் தக்க கள்ளுண்ணலை நாடும் போது!

மற்றொன்று, தன் மகன் அறமற்ற வழிகளில் சென்று வறுமை அடையும் போது!

இதனை,

'ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால், என்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி" (குறள் 923)

"அறஞ்சாரா நல்குரவு ஈன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும்" (குறள் 1047)

என்னும் குறள்கள் வெளிப்படுத்துகின்றன.

ஆம்! தம் மக்கள் அறம் பிறழும் போது தாய்மை "தன் தாய்மை"யையே தண்டித்துக் கொள்கிறது.

தாய்மையின் பேரறம்

"காமம் சான்ற கடைக்கோட் காலை
ஏமம் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"

(தொல். 1138)

எனத் துறவு வாழ்க்கைக்கு அறப்பாதை அமைக்கிறது தொல்காப்பியம்.

இன்பமெலாம் நுகர்ந்து தெளிந்த நிலையில், 'அறம்புரி சுற்றமுடன்' கணவனும், மனைவியும் இணைந்து துறவு பூண்டு, சமுதாயத்தில் அறத்தொண்டு ஆற்ற வேண்டும்.

– இதுவே, தொல்காப்பியம் காட்டும் துறவு. இச்சூழலில், பெற்றோர்க்கு அவர் பெற்ற மக்கள் துணை நிற்க வேண்டும். அதனால்தான் அம்மக்களை "ஏமம் சான்ற மக்கள்" என்கிறார் தொல்காப்பியர்.

இத்துறவு வாழ்க்கையில், தம் மக்கள் அளவில் நின்ற தாய்மை விரிவு படுகிறது ; மக்கள் அனைவரும் ஒன்று என எண்ணி மலர்ச்சிப் பெறுகிறது ; தாய்மை பேரறம் பூணுகிறது.

இத்துறவு நெறியைப் போற்றி, விரிவான வரையறைகள் வகுத்ததுதான் வள்ளுவம், அதனால் பெண் துறவு பழிக்கப்படவில்லை.

ஆணுக்கும், பெண்ணுக்கும் பொதுமைப் படுத்தப் பட்ட துறவே வள்ளுவர் வகுக்கும் துறவு.

தாயும், தந்தையும் இத்தகைய நல்லாற்றில் நிற்கும் போது, அவர்களுக்குத் தக்க பாதுகாவலாக அமைய வேண்டியது இல்வாழ்வான் கடமை என்பதை,

"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை" (குறள் 41)

என்னும் குறள் உணர்த்துகின்றது.

[இயல்புடைய மூவர் : பெற்றோர், மனைவி, மக்கள்]

இவ்வகையில், வள்ளுவமும் தாய்மையின் பேரறத் தைக் குறிப்பாக உணர்த்துகின்றது.

நன்றிக் கடன்

தன்னையே இழந்து நிற்கும் அருட்பேருருவான தாய்மைக்கு மாந்தரினம் செலுத்தத் தக்க நன்றிக் கடன் யாது?

"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்" (குறள் 67)

எனத் தந்தையின் கடன் கூறி,

"மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்என்னும் சொல்" (குறள் 70)

என, மகன் தந்தைக்குச் செய்ய வேண்டிய நன்றிக் கடனைச் சுட்டுகின்றது வள்ளுவம்.

ஆனால், மகன் தாய்க்கு ஆற்ற வேண்டிய நன்றிக் கடனைத் தனித்து எங்கும் திருவள்ளுவர் சுட்டவில்லை.

தாய்மை, நன்றிக் கடன் செலுத்த முடியாத ஒரு பேரருள் என்பதால் கூறாது விட்டார் போலும்!

நிறைவுரை

இதுவரை கூறியவற்றைக் கொண்டு, திருவள்ளுவர் கூறும் 'தாய்மை' பற்றிய கருத்துகளைப் பின்வருமாறு தொகுத்துக் காணலாம்.

தாய்மை என்பது,

(i) பெண்மையின் புனிதப் பொலிவு

(ii) சமுதாய நன்மதிப்பிற்குரியது ;

(iii) தன் மக்களையே தன் பொருளாக – பெறற்கு பேறாக கருதுவது;

(iv) தன் மக்களிடமே ஐம்புல உணர்வுகளையும் கண்டு, பின்னிப் பிணைந்து வாழ்வது;

(v) தானும் அறிவாகித் தன் மக்களைத் தன்னினும் அறிவுடையோராக்க முயல்வது;

(vi) அறமே வடிவாகி ஒளிர்வது;

(vii) 'தன் மக்கள்' என்னும் உணர்வை அடிநிலை யாகக் கொண்டு, 'யாவரும் என் மக்கள்' என்னும் பேரற உருக் கொள்வது ;

(viii) பிறரால் நன்றிக் கடன் செலுத்த இயலாதது.

மொத்தத்தில், திருவள்ளுவர் பார்வையில் 'தாய்மை' என்பது, மனித வடிவாகி நிற்கும் ஓர் அருட்பேருருவம்.



'அன்பர் பணியும்' இன்ப நிலையும் — தாயுமானவர்

டாக்டர் பொன். சௌரிராஜன்
(தமிழ்த்துறைத் தலைவர்: திருவேங்கடவன் பல்கலைக் கழகம் — திருப்பதி.)

'தொண்டர் தம் பெருமை சொல்லவும் அரிதே' என்றார் ஔவையார். 'வெறும் வீணருக்கே உழைத்துடலம் மாயமாட் டோம்; பரிபூரணனுக்கே அடிமை செய்து வாழுவோம்' என்று தொண்டர் தம் பெருமிதத்தை எடுத்துரைத்தார் பாரதியார். 'நாமார்க்கும் குடியல்லோம்; நமனை அஞ்சோம்... சோமாற்கே நாம் என்றும் மீளா ஆளாய்க் கொய்மலர் சேவடியினையே குறுகி னோமே!' என்று அடியார் தம் இயல்பைத் தன் மேலிட்டு உல குக்கு உரைத்தார் அப்பர் பெருமான்.

திருவள்ளுவர்தம் பாயிரமும் நுட்பமாக அடியார் திறத்தை யும் அவர்தம் வழிபாட்டையும் உணர்த்தக் காணலாம்.

'கடவுள் வாழ்த்து' இறைவன் தன் முதன்மை, தனிமை, உயிரெலாம் உயிர்க்குமாய் இயைந்தமை, தூய்மை, மன மலர் மிசை ஏகினமை, விருப்பு வெறுப்பற்ற தன்மை, நன்று தீதின்மை, காணாமற்கண்டு கேளாது கேட்டும் பொறிவாயில் ஐந்தும் கடந்து நின்ற நிலைமை, ஒப்பின்மை, உயர்வின்மை, அறவாழியாம் அருமை ஆகிய குணங்களைக் குறிப்பிட்டு அந் நெறி நின்றாரே குறியாகிய விடுதலையை உறுவர் என்று அடி சேர்தலாகிய நெறிவழி, வழிப்பாட்டைக் குறிப்பிடுகிறார் வள் ளுவர்.

அடிசேர்தலும் அவன் நெறி அறிதலும் அன்னை படைத்த இயற்கை வழி, சிறப்பாக பஞ்ச பூதங்கள்வழி புலனாகும் என்று அடுத்த 'வான் சிறப்பு' வைத்து நீர் இரு வகையிலும் துப்பாகும் பாங்கை உணர்த்துவர். அவன் அமைப்பின்வழி அவன் நெறி அறிக; உணர்க; ஒழுகுக என்பது 'வான் சிறப்பு' வழி வள்ளுவர் வையகத்துக்குத் தரும் செய்தி இதுவே ஆகும்.

அவன் குணம் நினைந்து அவன் அமைப்பறிந்து, அவன் அடிசார்ந்தவர்களே அடியார்கள். அவர்களும் விருப்பு, வெறுப் பிலார்; இருமை வகை தெரிந்து ஈண்டு அறவாழ்வு வாழும் சீவன் முத்தர்கள் செயற்கு அரிய செய்யவல்லார். பஞ்சபூத நுட்பம் அறிந்து வையத்தைத் தம் வயப்படுத்தியோர் உண்மையை உள்ள வாறே உணர்ந்து உணர்த்தவல்ல நிறைமொழி அவர் மறை மொழி. எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு பணி செய்து கிடப் போர் அவரே அடியார். அவர்தம் வழிபாடே அடியார் வழிபாடு. அவன் திருவடி சேர்ந்து அவன் அமைப்புணர்ந்து ஒழுகும் அடி யார் வழி சேர்தலால், அடியார் கூட்டத்தால், அடியார் வழிபாட் டால் பெறும் வாழ்வுப் பயன் 'அறம்'. அறத்தால் மனமாசு அகலும். சத்திநி பாதம் வாய்க்கும். உண்மைக் காட்சி எழும். போக்குவரவற்ற பூரணனோடு ஒன்றும் நிலை வாய்க்கும். இப் படி அடியார் நலத்தை, திறத்தை, வழிபாட்டை, பயனை திரு வள்ளுவப் பெருந்தகையும் புலப்படுத்தியுள்ளார்.

அடியார் வழிபாடு இந்து சமயப் பிரிவுகளுள் சைவமும், வைணவமும் கண்ணெனக்கொண்டு போற்றிச் சிறப்புற்று வரு கின்ற இரு சமயப் பிரிவுகள் ஆகும். சுந்திரமூர்த்தி நாயனார் திருத்தொண்டத் தொகை அருளி அடியாரை வணங்கினார். நம்பி யாண்டார் நம்பி திருத்தொண்டர் திருவந்தாதி பாடி அடியார் வரலாற்றுச் சிறப்பைக் குறிப்பித்தார். பத்திச் சுவை நனி சொட் டச் சொட்ட அடியார் வாழ்வை திருத்தொண்டர் மாக்கதையாக உலகுக்குப் பாடித் தந்தார் சேக்கிழார் பெருமான்.

சேரன் குல சேகரர்தம் பாசுரங்கள் அடியார்தம் செம்மை, சிறப்பு, இயல்பு, இறைவன் இருப்பு முதலியவற்றை எடுத்து ரைக்கும், முதலாழ்வார் மூவர் திருக்கடையூர் இடைகழியில் கூடியபோது இடையே திருவொடும், பொன்மேனியொடும், ஆழி சங்கொடும் திருமால் தோன்றியதன் நுட்பம் அடியார் சங்க மத்தில் ஆண்டவன் தோன்றுவன் என்பதாகக் கொள்ளலாம்.

இத்தகு அடியார் வழிபாடு தாயுமானவர் பாடலில் சீரும் சிறப்பும் பெற்று விளங்குகிறது. 'வையத்துள் வாழ்வாங்கு வாழின்' தெய்வநிலை தேடிவரும் என்று திருவள்ளுவர் கூறுவர்; தாயுமானவரோ, 'அன்பர் பணி செய்தாலே இன்ப நிலை தானே வந்து வாய்க்கும்' என்று உறுதி கூறுகிறார்

அன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கிவிட்டு விட்டால்
இன்ப நிலை தானே வந்து எய்தும் பராபரமே.

சமயத்தின் பணி ஒவ்வொரு மானுடனையும் ஆளாக்கு வதே... 'அன்பர் பணி செய்ய ஆளாக்குவதே' ஆளாகிய பிறகு அந்த ஆன்மா தானாக முயன்று பணி செய்து இன்ப நிலை அடைதல் வேண்டும் என்பது தாயுமான சுவாமிகளின் அடியார் வழிபாடு பற்றிய நிறைவாக்கு; மறைவாக்கு எனலாம். ஆயினும் அவர்தம் 1452 பாடல்களை நுணுகிக் கற்கும்போது அடியார், அடியார் வழிபாடு பற்றிய உண்மைகள் அனைத்தும் அவற்றின் வழி புலப்படுகின்றன.

அடியார் தம் இலக்கணம், இயல்பு, பெருமை, அவரொடு, அவர்பால் இறை உறையும் பெற்றி, அவர் வழிபாட்டின் பயன் எனப் பலவாறு 'அடியார்' பற்றி செய்திகள் அவர் பாடலில் கனிந்து நிறைந்திருக்கக் காணலாம்.

தாயுமானவர் 'அடியார்' என்றும் 'அன்பர்' என்றும் குறிப்பி டுவதன் வழி இறைவனுக்கு உரியவர்கள் இறைவனுக்கே அன்பு செய்பவர்கள் அடியார் என்ற கருத்தைப் புலப்படுத்துகின்றார். அடியார், அன்பர் என்று அப்படி குறிப்பிடும்போதெல்லாம் பல இடங்களில் ''நல்லருள் படைத்த அன்பர்'' (125), நல்லவர் (827), நல்லோர் (828), நல்லோர் (125), நல்லார்கள் (345), நல்லோர் (826), நல்லார் (1038) எனப் பல இடங்களில் 'நல்' என்ற அடை மொழியுடன் அடியவர்களைக் குறிப்பிடுகின்றார். அந்த 'நல்' என்ற சொல்லுக்கு விளக்கம் தருவதுபோல் 'கொல்லாவிரதம் கொண்டவர்', 'இச்சித்துச் சிந்தை வழிச் செல்லாதவர்', 'உணர்ந் தோர் பாமாலைக்கு உரியவன் நீ என்று கண்டோர்', 'சொல்லா லும் பொருளாலும் அளவையாலும் தொடரவொண்ணா அருள் நெறியைத் தொடர்ந்து நாடுவோர்', 'மன அடக்கமுள்ளோர்', 'கனிந்த அன்பே பூசை என்போர்', என்று நல்லாரின் இலக்கணங் களாகக் கொல்லாமை, உண்மை நெறி நிற்றல், அன்புடைமை,

அருள் உடைமை, பொறை, தெய்வச் சான்றோர்பால் ஈடுபாடு ஆகிய பண்புகளைத் தாயுமானவர் குறிப்பிடுகின்றார்.

அத்தகு அடியவர்தம் இயல்பாகச் சில பண்புகளை அடிக ளார் தம் பாடல்களில் தெளிவு செய்கின்றார். 'உண்மைத்தர்', 'பேயர்', 'பாலர்' இவர்தம் இயல்பு உடையவர்கள் துரிய வடிவி னர் கால தேச கட்டுக்களை மறந்தவர்கள் (130); பாடுவார், ஆடு வார், நின்று நின்று அழுவார், இறைவன் திருவடியை முடிமேல் சூடுவார் (379); ஆடிப்பாடி மகிழ்ந்த நிலையினராய் இறைவ னைத் தேடுவதே அவர்கள் இயல்பு. அவர்கள், 'ஆணவக் காட் டைக் களைந்து, அகங்காரக் கல்லைப் பிளந்து, மனத்தைத் திருத்தி, மோன விதையை ஊன்றி, அன்பு நீர் பாய்ச்சி, மாயப் பிறவியினின்று காத்துப் பேரின்பத்தைத் துய்ப்பவர்கள்' (72), 'உன்னையே நினைந்து உருகி, நாடிக் கருத்தழிந்து, சொல் தடு மாறி, உண்மை மறந்து, உணர்தற்கு அரிய வன்மை இன்பத் துய்ப்பிலே இருப்பவர்கள்' (77), 'இயமம், நியமம் முதலியவற் றைக் கடைப்பிடித்து யோக நெறியில் நிற்பவர்கள்' (97), 'குற்ற குறைந்து குணம் மேலிடுவோர்' (457) இத்தகு இயல்பினர் அடிய வர்கள்.

அடியவர்தம் பெருமை அளப்பரியது. விவேகத்தில், தெளி வில், மெய்யுணர்வில் திளைப்பவர்கள் அவர்கள் (453), அவர் பெயர் உச்சரித்தலே முத்திக்கு வழியாகும் (582). அவர்கள் சித்தம் தெளிந்து சிவமானோர் (783), இறைவன் அவரோடு அவர்பால் இடங்கொண்டுள்ளான்.

'மாசற்ற அன்பர் நெஞ்சை மாறாத பெட்டகமாகக் கொண்ட வன் இறைவன்' (1318), 'தொண்டரொடு கூட்டு கண்டவன்' (83) 'கருவி கரணங்கள் ஒய்ந்த தொண்டர்களிடத்தில் வீற்றிருப்ப வன்' (86).

தொண்டர்களால் எளிதில் அடையப் பெறுபவன் இறை வன் என்று எடுத்தெடுத்து இயம்புகின்றார். 'அன்பர் அன்புக்கு எளியன' (55). 'அன்பினால் மூர்ச்சித்த அன்பருக்கு அமிர்த சஞ் சீவி போல் வந்து ஆனந்த மழை பொழிபவன்' (80). 'தொழு கின்ற அன்பர் உளம் களிகூர மன்றுள்துளங்கும் ஆனந்தக் கூத்தன்' (433). 'தமை உணர்ந்தோர் பாமாலைக்குப் பட்சமானோன்' (175). 'காதலன்பர்க்கு கதி நிலை ஈதெனக்காட்டும் போதன்' (365), 'தொண்டருக்கு எளியான்' (263).

அடியாருக்குப் பணி செய்து, அடியாரைக் கண்டு, அவரோ டிணங்கி, அவர் சொற்கேட்டு, அன்னவர்க்கே பணி செய்து, அவர்களுடன் வாழ்வதே மனிதப் பிறவியில் பெறற்கரிய பேறு ஆகும். அன்பர்க்குப் பணி செய்யும் வாழ்வு வாய்க்குமேல் ''ஈண் டுக் கன்மம் எடுப்பன் அனந்தமே'' (250) என்பர் அடிகளார். இறைவன் அன்பர்க்குப் பணி செய்யும் பேற வாய்ப்பின் இவ் உலக வாழ்வை நான் வேண்டுவன் (308) என மீண்டும் உறுதி செய்வர். அந்த அன்பர்களோடு இயைந்து இணங்கி வாழப் பெரி தும் அவர் உறுவர். 'இறைவா! அடியார் பணி எனக்குக் கை கூடுமாறு எனக்குக் கருணை செய்வது எப்போது' (317) 'தாயாய், தந்தையாய் தனிப்பெறும் உறவாய் எனக்கு உள்ளவர் நின் அடி யரே அன்றோ' (341), நின் அடியார் கூட்டத்திலே மனது செல்ல அருள் புரிய மாட்டாயா?' (579), 'சிற்சு கோதய விலாசமே யான் குறை பல கொண்டவன்; மருளன் உன் அருள் படைத்த அன்ப ரோடு சேர்ந்தால் உய்வன் சேர்ப்பையோ' (125), 'அன்புருவாகி அன்பரொடு இன்ப வீட்டினில் இருப்பனோ' (129), 'இனம் பிரிந்த மான்போல தட்டுத் தடுமாறித் தவிக்கும் என்னை இன்ப முற்ற அன்பர் பக்கல் இருத்தி வைத்துக் காத்த தலைவா' (133). 'நீ நல்லார்கள் அவையகத்தே என்னை இருக்க வைத்தாய்' (345), 'கூடிய நின் சீரடியார் கூட்டம் என்று எனக்கு வாய்க்கும் இறை வா' (365).

அடியார் காட்சி, அடியார் கேள்வி, அடியார் இணக்கம், அடியார் உறவு, அடியாரிடையே இயைந்து வாழும் கூட்டு இவை எல்லாம் அவர்க்குப் பணி செய்வதற்காக. அப்பணியிலே ஆண்டவனைக் கண்டு வாழ்வு நிறைவுறுதற்காகத் தனக்கு அடி யார் பணி அருளல் வேண்டும் என்று அடிகளார் வேண்டுகின் றார். 'இறைவா! அடியவர்களுக்கு நானும் ஒரு அடியவன் அன்றோ! தொண்டரடித் தொண்டன் அன்றோ' (627). 'சீரடி யார்க்கு ஏவல் செய்யும் பக்தி நெறிக்கு முகம் பாரப்பா. அடியவர் போல் அருட்கண்ணினால் உன்னைக் காண அரளப்பா' (234), உன் தொண்டர் பணி செய்வதென்றோ' (582).

சீவன் முத்தர்கள் வாசனாமலம் முற்றும் அகல பிராரத்தக்க ருமம் கழிகின்ற வரை அடியாரது தோற்றத்தையும் ஆலயத்தை யும் அவன் அருள் திருமேனியைக் கொண்டு வழிபடுதலை

மாலா நேயம் மலிந்தவர் வேடமும்

ஆலயம் தானும் அரனெனத் தொழுமே (சூ.12) என்பர் மெய்கண்டார். 'பொய் கண்டார் காணா புனிதமெனும் அத்து வித நெறிகண்ட' மெய்கண்டார்தம் நெறி நிற்கும் தாயுமானவ அடிகளார் 'அன்பர் அடி கண்டதே அருளின் வடிவமாய்' (129) கொண்டு நெறி நின்றார். 'குருலிங்க சங்கமாம் கொண்ட திருமே னி' (482) என்று அவன் அருள் மேனியைப் போற்றிப் புகழ்ந்தார். 'எந்நாட் கண்ணியம்' 'அடியார் வணக்கம்' என்று பாடல் பல பாடினார். ''வெம்பந்தம் தீர்த்து உலகாள் திருஞானசம்பந்தன்'' அருள் எனக்கு கிட்டும் (1107), 'ஏரின் சிவபோகம் இங்கி இவர்க்கே என்ன உழவாரம் கொண்ட அப்பர் திருவடிக்கு அன்பு வைப்பது எப்போது' (1108), 'பித்தர் இறை என்று பேதைபால் தூது அனுப்பிய தமிழ்வித்தகர் சுந்தரர் கொண்ட மெய் வாழ் வைப் புகழ்வது எப்போது' (1109). 'வாதவூர் ஐயனுக்கு அன்பு வைப்பது எந்நாள்' (1110), ''பட்டினத்தார், பத்தரகிரி பண்புணர் வது எந்நாள்'' (1111), 'மிக்க திருமூலர் அருள் மேவும் நாள் எந்நாள்' (1113).

இறுதியாக, இறையடியார் உலகத்து உயிரெல்லாம் உய்வ தற்காக உடல்தாங்கி வாழ்வோர் என்ற உண்மையையும் அழகா கத் தெளிவாகச் சுருக்கமாக உணர்த்துகின்றார்.

''எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன்; பராபரமே'' (856)

அடிகளாரும் அடியார் வழிபட்டு ஆண்டவன் அருள் பெற்று, தான் உற்ற பேரின்பப் பெரு வெள்ளத்தை உலகத்து உயிர்கள் பெற்று உய்ய வேண்டும் என்னும் பேரார்வத்தால் 'சேர வாரும் செகத்தீரே' என்று அழைக்கின்றார்.

காகம் உறவு கலந்துண்ணக்
கண்டீர்! அகண்டா காரசிவ
போக மெனும்பே ரின்ப வெள்ளம்
பொங்கித் ததும்பிப் பூரணமாய்
ஏக வுருவாய்க் கிடக்குதையோ!
இன்புற் றிடநாம் இனி எடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச்
சேர வாரும்! செகத்தீரே! (555)

இவ்வாறு அடியார் பணி, அடியராம் அன்பர் பணி, அன்ப ராம் உயிர் பணி ஆற்றல்வழி இன்பம், பேரின்பம் அடையலாம் என்பது தாயுமானவர் கொண்டது மட்டுமன்றிக் கண்ட நெறியும் ஆகும்.

ஆன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்ப நிலை தானே வந்து எய்தும் பராபரமே!



சித்தி வளாகத்தில் சித்தி நிலை

(டாக்டர். எம்.சி. இராசமாணிக்கம்)

இந்தத் தலைப்பைப் பார்த்தவுடன் திருவருட் பிரகாச வள்ளற் பெருமானார் என்னும் சிதம்பரம் இராமலிங்க அடிகளார், வடலூருக்கு அருகில் உள்ள மேட்டுக் குப்பம் என்ற கிராமத்தில், சித்தி வளாகம் என்ற குடிசையில், 1870-ம் ஆண்டு முதல் 30.01.1874 தைப்பூச நாளில் திருக்காப்பிட்டுக் கொள்கிறவரையில் பெற்ற சித்தி நிலைகளைப் பற்றி விவரங்கள் தான் நம் கண் முன் தோன்றுகின்றன. ஆனால், உண்மையில் சித்தி வளாகம் என்பது என்ன? அது இருக்கின்ற இடம் யாது? அதில் பெறக்கூடிய சித்தி நிலைகள் என்னென்? என்பனவற்றைச் சுருக்கமாக ஆய்வதுதான் இக்கட்டுரை.

''வளாகம்'' என்ற சொல் இடம், விளைந்தவிடம் என்று பொருள் படும். ''சித்தி'' என்ற சொல் அறிவு, சித்தித்தல், நிறைவேற்றம், மோக்கம் என்று பல பொருள்களில் வரும். சித்திகள் விளைகின்ற இடம் சித்தி வளாகம் என்று பொருள் படும்.

வள்ளற் பெருமான் வடலூரைச் ''சித்திபுரம்'' என்று அழைத்தார். ''உத்தரஞான சித்திபுரம் என்றும், உத்தர ஞான சிதம்பரம் என்றும் திருவருளால் ஆக்கப்பட்ட ஆக்கச் சிறப்புப் பெயர்களும், பார்வதி புரம் என்றும், வடலூரென்றும் உலகியலால் குறிக்கப்பட்ட குறிப்புப் பெயர்களும் பெற்று விளங்குகின்ற தெய்வப் பதியினிடத்தே...'' என்று சமரச சுத்த சன்மார்க்க சங்க சத்திய விண்ணப்பத்தில் குறிப்பிடுகின்றார்.

ஆக, சித்திபுரம், சிதம்பரம், பார்வதிபுரம், வடலூர் ஆகிய 4 பெயர்களும் ஒரே இடத்தைக் குறிக்கின்றன. அந்த இடம் எது என்பது தான் முதற்கேள்வி?

''வருவா ரழைத்துவாடி வடலூர் வடதிசைக்கே
வந்தாற் பெறலாம் நல்ல வரமே''

''நம்பார் வதிபாக னம்புரத்தில் நின்றுவந்தோன்
அம்பாரத் தென்கிழக்கே அம்பலத்தான் - வெம்பாது
பார்த்தால் அளிப்பான் தெரியுஞ் சிதம்பரம் நீ
பார்த்தாய்இப் பாட்டின் பரிசு''

''சித்தி புரத்தே தினந்தோறும் சீர் கொளருள்
சத்திவிழா நீடித் தழைத்தோங்க...''

''... எனது மெய்ப்பொருளாம் தனித்தந்தை இத்தருணந்தனிலே
செய்யகத்தே வளர்ஞான சித்திபுரந் தனிலே
சித்தாடல் புரிகின்றார் திண்ணமிது தானே''

''திரணமும் ஓர் ஐந்தொழிலைச் செய்ய ஒளி வழங்கும்
சித்திபுரம் என ஓங்கும் உத்தரசிற் சபையில்
சரணம் எனக் களித்தெனையும் தானாக்க எனது
தனித்தந்தை வருகின்ற தருணம்இது தானோ''

''உத்தர ஞான சித்திமா புரத்தின்
ஓங்கிய ஒருபெரும் பதியை
உத்தர ஞான சிதம்பர ஒளியை
உண்மையை ஒரு தனி உணர்வை
உத்தர ஞான நடம்புரி கின்ற
ஒருவனை உலகெலாம் வழுத்தும்
உத்தர ஞான சுத்தசன் மார்க்கம்
ஓதியைக் கண்டு கொண்டேனே''

''திருந்தும் என் உள்ளத் திருக்கோயில் ஞான
சித்தி புரம் எனச் சத்தியம் கண்டேன்...''

''... தோரணமே விளங்கு சித்தி புரத்தினும் என் உள்ளத்தும்
சுத்தநடம் புரிகின்ற சித்த சிகாமணியே''

''சித்தி புரம் இடமென்று சின்னம்பிடி''

''... எல்லாஞ் செயவல்ல சித்தா சித்திபுரத்
தமர்ந்த தேவே சித்தசிகா மணியே''

''... சீராலும் குணத்தாலும் சிறந்தவர் சேர்ஞான
சித்தி புரத் தமுதே

''ஞான ஒளியினால் ஓங்கும் ஓர் சித்தி புரத்தவா''

''செருக்கருதா தவர்க்கருளும் சித்திபுரத் தரசே
சித்தசிகா மணியே என் திருநடநா யகனே''

''சித்துவந்தாடும் சித்திமா புரத்தில் திகழ்ந்தவா
திகழ்ந்தென துளத்தே ஒத்துநின் றோங்கும் உடையவா''

''அருளோங்கு கின்ற தருட்பெருஞ் சோதி யடைந்ததென்றன்
மருளோங்கு றாமல் தவிர்த்தது நல்ல வரமளித்தே
பொருளோங்கி நான்அருட் பூமியில் வாழப் புரிந்ததென்றும்
தெருளோங்க ஓங்குவ துத்தர ஞான சிதம்பரமே''

''உலகமெ லாந்தொழ உற்றதெனக் குண்மை ஒண்மைதந்தே
இலகஎ லாம்படைத் தாருயிர் காத்தருள் என்றதென்றும்
கலகமி லாச்சுத்த சன்மார்க்க சங்கம் கலந்தது பார்த்
திலகமெ னாநின்ற துத்தர ஞான சிதம்பரமே''

''எத்தாலும் மிக்க தெனக்கருள் ஈந்ததெல் லாமும் வல்ல
சித்தாடல் செய்கின்ற தெல்லா உலகும் செழிக்க வைத்த
தித்தா ரணிக்கணி ஆயது வான்தொழற் கேற்றதெங்கும்
செத்தால் எழுப்புவ துத்தர ஞான சிதம்பரமே''

''உத்தர ஞானசி தம்பரமே
சித்தியெலாம் தரும் அம்பரமே''

இந்தப் பாடல்களை நுணுகி ஆராய்ந்தால் என் கேள்விக்குப் பதில் கிடைத்து விடும். வடலூர், பார்வதி புரம், சித்தி புரம், சிதம்பரம் என்று கூறப்படுகின்ற அந்த ஒரு இடம், ஒப்புயர்வற்ற இடம், தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள வடலூரோ, பார்வதிபுரம் கிராமமோ அல்ல. அது அறிவொளியாக விளங்கி அனைத்தையும் தர வல்ல ஆற்றல் மிக்கதாக உள்ள நம் சிரநடு சிற்றம்பலம் தான். வள்ளற் பெருமான் தன் அக அனுபவத்தைத்தான் இந்தப் பெயர்களில் வைத்து உணர்த்துகின்றார். ஏன்?

''ஆன்மாக்கள், புண்ணிய பாவ கருமங்களால் பேதப்பட்டு, மந்தம், மந்ததரம், ராஜசம், தாமசம், கருமம் முதலிய வேறுபாடுகளால் அனாதி தொடங்கி இன்றளவில் - உயிர்த்திரள் ஒன்றானாலும் - கரணக் கூட்டுறவால் வெவ்வேறு தன்மையாய் விளங்குகின்றன. ஆதலால், மா கருணையுடைய கிருபாநிதியாகிய சிவபெருமான்

திருவருளை, அங்கையிற்கனி என உணர்ந்த அனாதி, நித்திய, முத்த, சித்தராகிய, ஈசுவர தத்துவ புவனானுபவ ஈசுவரனால் நாம் உய்யும் பொருட்டு, உலகத்தின் கண்... தத்துவானுபவங்களாகிய உண்மை நாமங்கள் கெடாதிருக்கத் திருப்பெயர் முதலியவைகளை, மூர்த்தி, தலம், முதலியவைகளுக்கு ஏற்படுத்தி வழங்கச் செய்தார்கள்'' என்பது வள்ளற் பெருமான் வாக்கு.

ஆகவே, மூர்த்தி, தலங்களின் பெயர் எல்லாம் நம் உடலின் தத்துவானுபவங்களின் பெயர்களே. இதுதான் அடிப்படை. வள்ளற் பெருமான் பிள்ளைப் பருவத்தில் (வயது 7 முதல் 9 வரை) பாடிய ''கந்த கோட்டத் தெய்வமணி மாலை'' சென்னை நகரில் ''பார்க் டவுன்'' என்னும் பகுதியில் ''கந்தசாமி கோயில்'' என்று அழைக்கப்படுகின்ற கந்தகோட்டத்தில் பாடப் பெற்றவையே.

''... சென்னையில் கந்த கோட்டத்துள் வளர்
தலம் ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே''

என்று 31 பாடல்களிலும் மகுடம் வைத்துள்ளார். இவற்றில் சென்னைக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற அடைமொழிகளைக் கூர்ந்து நோக்கினால் அநதச் சென்னை சென்னியாக விளங்குவதை அறியலாம்.

''தரமேவு சென்னை, தள்ளரிய சென்னை, தலைவர் புகழ் சென்னை,
தரையிலுயர் சென்னை, தாம்பிரிவில் சென்னை, தன் புகழ் செய் சென்னை, தப்பற்ற சென்னை, தளர்விலாச் சென்னை தான் கொண்ட சென்னை '' இவற்றின் விளக்கங்களை ''கந்த கோட்டத்தில் வள்ளலார்'' என்ற என் நூலில் கண்டு கொள்க. அதே போன்று திருத்தணிகையைப் பாடும் போது,

''அடியர் தனிமனமாம் புகழ்வார் தணிகாசலனே
தன்செய்கை என்பதற்றே தணிகாசலம் சார்ந்திலனே
தணிகைக்கு ணின்றே உடையதா நன்னெஞ்சக்
குண்மையைக் காண்பிக்கும் உத்தமனே'

என்று குறிப்பிடுகிறார். புறத்தில் திருத்தணியைப் பாடுவதாகத் தோன்றினாலும் அகத்தில் உள்ள தணிகையையே பாடினார் என்பது வெள்ளிடைமலை. சென்னையில் உள்ள திருவொற்றியூரைப் பாடும் போது,

''செய்யகம் ஓங்கும் திருவொற்றியூரில் சிவபெருமான்''
''என் உளம் சேர் ஒற்றியூர் எம் இருநிதியே''
''மாதலத்து ஓங்கு ஒற்றி வாழ்வே''
''அடியர் நெஞ்சத்து அருட்பெருஞ் ஜோதி ஓர்
படிவமாகும் படம்பக்க நாதரே''

என்று குறிப்பிடுகின்றார். புறத்தில் திருவொற்றியூரில் பாடுவதாகத் தோன்றினாலும் உண்மையில் அகத்தில் உள்ள ஒற்றியையே பாடியுள்ளார் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெரிகின்றது.

ஆகவே வள்ளற் பெருமான் தொடக்க காலத்திலிருந்து இறுதி வரை பலவேறு தலங்களில் உள்ள மூர்த்திகளைப் பாடினாலும் அனைத்தின் இருப்பிடமும், இந்த உடம்பில் சிரநடு சிற்றம்பலமாக விளங்கும் சித்திவளாகமே. வள்ளற் பெருமான் மட்டுமின்றிப் புகழ் நூல் அருளிய அனைத்து ஞானிகளும், புறத்தில் வெவ்வேறு தலங்களில் பாடினாலும், அகத்தில் உள்ள சித்திவளாகத்தையே பாடியுள்ளனர். கட்டுரையில் விரிவஞ்சி ஒரு சிலவற்றை மட்டும் ஈண்டுக் குறிக்கின்றேன்.

''தொண்டர்க்கு அங்கங்கே அறுசமயம் ஆகிநின்ற
திக்கினை என்திருமுது குன்று உடையான் தன்னைத்
தீவினையேன் அறியாதே திகைத்தவாறே''

''என்னுளே உயிர்ப்பாய்ப் புறம் போந்து புக்கு
என்னுளே நிற்கும் இன்னம்பர் ஈசனே''
''என் மனத்து இன்னம்பர் ஈசனே''

— அப்பர் சுவாமிகள்

''எங்ஙனம் நான் பிரிந்திருக்கேன் என்ஆரூர் இறைவனையே''

— சுந்தரமூர்த்தி சுவாமிகள்

''புய வர்க்கா மருப்புமுகு முட்டா திருப்பழநி
வாழ்வுக் குகந்தடிய ராவிக்குள் நின்றுலவி வருபெருமாளே''

''நல் தூணோடிச் சுடராகா சத்தைய
ணைந்துவி ளங்கரு ணாசலந்திகழ் தம்பிரானே''

''சேரொணாவகை வெளியே திரியு மெய்ஞ்
ஞான யோக ளுளமே யுறைதரு
தேவ னூர்வரு குமரா வமரர்கள் தம்பிரானே''

— அருணகிரிநாதர்.

''சென்னி யோங்கு தண்திருவேங்கடமுடையாய் உலகு
தன்னை வாழநின்ற நம்பீ தாமோதரா சதிரா''

— பெரியாழ்வார்

''எழிலுடைய வம்மனையீர் என்னரங்கத் தின்னமுதர்
குழலழகர் வாயழகர் கண்ணழகர்''

— ஆண்டாள் நாச்சியார்.

''அருவாய் நின்றவனைத் தென்னழுந்தையில் மன்னி நின்ற
கருவார் கற்பகத்தைக் கண்டு கொண்டு களித்தேனே''

— திருமங்கையாழ்வார்.

ஆகவே ஞானிகள் அனைவரும் புறத்தில் பல்வேறு தலங்களில் பாடினாலும், அகத்தில் உள்ள சித்திவளாகத்தையே இடமாகக் கொண்டு பாடியருளியுள்ளனர் என்பது தெள்ளத் தெளிவாக விளங்குகின்றது. இனி அப்படிப்பட்ட சித்திவளாகத்தில் விளையக் கூடிய சித்தி நிலைகள் என்னென்ன என்பதைப் பார்ப்போம்.

வள்ளற்பெருமான் சித்திகளைப் பற்றித் திருவருட்பாவில் பல இடங்களில் குறிப்பிட்டிருக்கிறார். அருட்பெருஞ்ஜோதி அகவலிலும் மிகச் சிறப்பாகக் கூறுகிறார்:

''சேகர மாம்பல சித்தி நிலைக்கெலாம்
ஆகர மாம்சபை அருட்பெருஞ் ஜோதி''

''இன்புறு சித்திகள் எல்லாம் புரிகஎன்
றன்புடன் எனக்கருள் அருட்பெருஞ் ஜோதி''

''மூவகைச் சித்தியின் முடிவுகள் முழுவதும்
ஆவகை எனக்கருள் அருட்பெருஞ் ஜோதி
கரும சித்திகளின் கலை பல கோடியும்
அரசுற எனக்கருள் அருட்பெருஞ் ஜோதி
யோகசித் திகள்வகை உறுபல கோடியும்
ஆகஎன் றெனக்கருள் அருட்பெருஞ் ஜோதி
ஞானசித்திகள் வகை நல்விரி வனைத்தும்
ஆனியின் றெனக்கருள் அருட்பெருஞ் ஜோதி
புடையுறு சித்தியின் பொருட்டே முத்தியை
அடைவதென்றருளிய அருட்பெருஞ் ஜோதி
முத்தி என் பதுநிலை முன்னுறு சாதனம்
அத்தக வென்றஎன் அருட்பெருஞ் ஜோதி
சித்தியென் பதுநிலை சேர்ந்த அனுபவம்
அத்திறம் என்றவென் அருட் பெருஞ்ஜோதி.

ஏகசிற் சித்தியே இயல்உற அனேகம்
ஆகிய தென்றஎன் அருட்பெருஞ் ஜோதி
இன்பசித் தியின்இயல் ஏகம்அ னேகம்
அன்பருக் கென்றஎன் அருட்பெருஞ் ஜோதி''

''எல்லாம் வல்லசித் தெனக்களித் தெனக்குனை
அல்லா திலைஎனும் அருட்பெருஞ் ஜோதி''

''தீயிடைப் பெருந்திறல் சித்திகள் பலபல
ஆயுற அமைத்த அருட்பெருஞ் ஜோதி
தீயிடைச் சித்துகள் செப்புறும் அனைத்தும்
ஆயுற அமைத்த அருட்பெருஞ்ஜோதி''

''வெளியிடை உயிரியல் வித்தியல் சித்தியல்
அளிபெற அமைத்த அருட்பெருஞ் ஜோதி''

''சித்தெலாம் வல்ல திறனளித் தெனக்கே
அத்தனென் றோங்கும் அருட்பெருஞ் ஜோதி''

''அலகிலாச் சித்தாய் அது நிலை அதுவாய்
உலகெலாம் விளங்கும் ஒருதனிப் பொருளே''

''ஆடுறு சித்திகள் அறுபத்து நான்கெழு
கோடியும் விளங்கக் குலவுமெய்ப் பொருளே
கூட்டுறு சித்திகள் கோடிபல் கோடியும்
ஆட்டுற விளங்கும் அருட்பெறும் பொருளே
அறிவுறு சித்திகள் அனந்த கோடிகளும்
பிறிவற விளங்கும் பெருந்தனிப் பொருளே''

''சத்தெலாம் ஆகியும் தானொரு தானாம்
சித்தெலாம் வல்லதோர் திருவருட்சிவமே''

''அருட்டனி வல்லபம் அதுவே எலாம் செய்
பொருட்டனிச் சித்தெனப் புகன்றமெய்ச் சிவமே''

''சத்தியல் அனைத்தும் சித்தியல் முழுதும்
அத்தகை தெரித்த அருட்சிவ குருவே''

''எல்லா நிலைகளும் ஏற்றிச்சித் தெலாம்
வல்லான் எனஎனை வைத்தசற் குருவே''

''சித்திகள் எல்லாம் தெளிந்திட எனக்கே
சத்தியை அளித்த தயவுடைத் தாயே''

''சத்திசத் தர்கள் எலாஞ் சார்ந்தென தேவல் செய்
சித்தியை அளித்த தெய்வநற் றாயே''

''தன்சித் தனைத்தையும் தன்சமு கத்தினில்
என்சித் தாக்கிய என்தனித் தந்தையே''

''என்றும் உள்ளதுவாய் எங்கும் ஓர் நிறைவாய்
என்றும் விளங்கிடும் என்தனிச் சித்தே
சக்திகள் பலவாய் சத்தர்கள் பலவாய்
இத்தகை விளங்கும் என்தனிச் சித்தே
தத்துவம் பலவாய்த் தத்துவி பலவாய்
இத்தகை விளங்கும் என்தனிச் சித்தே
படிநிலை பலவாய்ப் பதநிலை பலவாய்
இடிவற விளக்கிடும் என்தனிச் சித்தே
மூர்த்தர்கள் பலவாய் மூர்த்திகள் பலவாய்
ஏற்பட விளங்கிடும் என்தனிச் சித்தே
உயிர்வகை பலவாய் உடல்வகை பலவாய்
இயலுற விளக்கிடும் என் தனிச் சித்தே
அறிபவை பலவாய் அறிவன பலவாய்
எறிவற விளக்கிடும் என்தனிச் சித்தே
நினைபவை பலவாய் நினைவன பலவாய்
இனைவற விளக்கிடும் என்தனிச் சித்தே
காட்சிகள் பலவாய்க் காண்பன பலவாய்
ஏட்சியின் விளக்கிடும் என்தனிச் சித்தே
செய்வினை பலவாய்ச் செய்வன பலவாய்
எய்வற விளக்கிடும் என்தனிச் சித்தே
அண்ட சராசரம் அனைத்தையும் பிறவையும்
எண்தர விளக்கும் என் தனிச் சித்தே
எல்லாம் வல்லசித் தெனமறை புகன்றிட
எல்லாம் விளக்கிடும் என்தனிச் சித்தே''

''முத்தர்கள் சித்தர்கள் சத்திகள் சத்தர்கள்
எத்திறத் தவர்க்குமாம் என்தனி இன்பே''

''மூவரும் முனிவரும் முத்தரும் சித்தரும்
தேவரும் மதிக்கும் சித்திசெய் மணியே''

''சித்திக்கு மூலமாம் சிவமருந் தெனஉளம்
தித்திக்கும் ஞானத் திருவருள் மருந்தே''

''சித்திகள் அனைத்தையும் தெளிவித் தெனக்கே
சத்திய நிலைதனைத் தயவினில் தந்தனை''

என்று அருட்பெருஞ்ஜோதி அகவலில் சித்தி வகைகளையும், தனக்கு அனைத்துச் சித்தி வகைகளையும் இறைவன் அருளியதாகவும் கூறு கின்றார். அகவல் மட்டுமின்றித் திருவருட்பா ஆறு திருமுறைகளி லும் பலவேறு இடங்களில் இவ்விளக்கங்கள் வருகின்றன. கட்டுரை யின் விரிவஞ்சி ஒரு சிலவற்றை மட்டும ஈண்டுக் காண்போம்.

''சித்திகள் எல்லாம் வல்லதோர் ஞானத் திருச்சபை''

''சத்திய ஞான சபை என்னுள் கண்டனன்
சன்மார்க்க சித்தியை யான்பெற்றுக் கொண்டனன்''

''சித்தியெலாம் வல்ல திருப்பொதுவில் புனித நடத்தரசே''

''பொதுவில் சித்துருவாய் நடம் புரியும் உத்தமசற் குருவே''

''என் உள்ளம் திருக்கோயிலாக் கொண்டு சித்தியெலாம்
போதித் துடம்பையும் பொன்னுடம் பாக்கி''

''எலாம் செயவல்ல செய்கை தனிலே சித்தாய் விளங்கி
உபசித்தாய சத்திகள் சிறக்க வளர்கின்ற ஒளியே''

''முதல் அந்தமின்றித் திகழ்கின்ற மெய்ஞ்ஞான
சித்தி அனுபவ நிலை தெளிந்திட வயங்கு சுடரே''

''மாசித்திகள் அடிப்பணி செய்திடச் சூழ்ந்த
நற்குணச் சன்மார்க்க சங்கத்தார்''

''சரதமா நிலையில் சித்தெலாம் வல்ல சக்தியைத்
தயவினால் தருக வரதனே என்றேன் வந்தருட்ஜோதி
வழங்கினை''

''புனித அமுதளித்துச் சித்தி நிலை மேல் சேர்வித்தென்
கருத்தில் கலந்தோய்''

''சாகா வரங்கொடுத் தென்றும் தடைபடாச் சித்திகள்
எல்லாம் அளித்தனை எனக்கே''

''சேட்டை அற்றுக் கருவி எலாம் என்வசம் நின்றிடவே
சித்தி எலாம் பெற்றேன்''

''எல்லாம் செய்வல்ல சித்தாம் பொருளைத்
தருணமிது தெரிந்தெனக்குத் தானே வந்தளித்த
தயாநிதி''

''சித்தி நிலை முழுதும் கொடுத்து மூவாமல் சகமேல்
இருக்கப் புரிந்தாயே''

''திரைந்த என் உடம்பைத் திருஉடம்பாக்கித் திகழ்வித்த
சித்தனே சிவனே''

''ஊனேயும் உடல் அழியாது ஊழிதொறும் ஓங்கும்
உத்தம சித்தியைப் பெறுவீர் சத்தியம் சொன்னேனே''

''பொத்திய மலப்பிணிப் புழுக்குரம் பைதான்
சித்தியல் சுத்தசன் மார்க்கச் சேர்ப்பினால்
நித்தியம் ஆகியே நிகழும் என்பது
சத்தியம் சத்தியம் சகத்து ளீர்களே''

''எல்லாம்செய் வல்ல சித்தர் தம்மை உறும்போது
இறந்தார் எழுவாரென்று புறந்தாரை ஊது''

''செத்தவர்கள் எல்லாம் திரும்ப எழுந்துவரச்
சித்தம் வைத்துச் செய்கின்ற சித்தியனே''

''சித்தர் எனும் நின்னடியர், திருச்சபையில் நடுஇருத்திச்
சித்துருவின் வளர்க்கின்றாய் சிற்சபையில் நடிக்கின்றாய்''

''முத்தியைப் பெற்றேன் அம்முத்தியினால் ஞான
சித்தியை உற்றேன் என்று உந்தீ பற
சித்தனும் ஆனேன் என்று உந்தீ பற

''தவமே புரிந்து நின்னை உணர்ந்த சாந்த சித்தரே
தகும் ஐந்தொழிலும் தாமேஇயற்ற வாய்ந்த சித்தரே''

''சித்தர் உளத்தில் சுடர்செய் தோங்கும் தெய்வச் சோதியே''

''அண்டங்கள் எல்லாம் அணுவில் அடக்கும்
அரும்பெருஞ் சித்தரே வாரீர்
அற்புதரே இங்கு வாரீர்''

''பாகார் மொழியாள் சிவகாம வள்ளிநாளும்
பார்த்தாட மணிமன்றில் கூத்தாடுகின்ற சித்தர்''

''எல்லாம் வல்ல ஒரு சித்தருக்கே நல்லபிள்ளை நானே''

''சித்தர்கள் ஆனந்தத் தெள்ளமு துண்டனர்''

''பித்தர் என மறைபுகலும் சித்தர்வரு கின்றார்''

''துரியங்கடந்த சுகசொருபர் பொதுவில்
சுத்த நடம் புரிகின்ற சித்தர் அடிக்கழலே
பெரிய பதத் தலைவர் எலாம் நிற்கு நிலை''

''மெய்யன் எனை ஆட்கொண்ட வித்தகன் சிற்சபையில்
விளங்குகின்ற சித்தன் எலாம் வல்ல ஒரு விமலன்''

''தனித்தலைவன் எல்லாஞ்செய் வல்லசித்தன் ஞான
சபைத் தலைவன்''

''சித்துரு வானமருந்து - என்னைச்
சித்தெலாம் செய்யச்செய் வித்தமருந்து''

''திருப்பொதுவில் திருநடம் நான் சென்றுகண்ட தருணம்
சித்தி எனும் பெண்ணரசி எத்திஎன்கை பிடித்தாள்''

''தனித்தஞான அமுதளித்துப் புடையே இருத்தி
அருட்சித்திப் பூவைதனையும் புணர்த்தி அருட்
கொடையே கொடுத்தாய்''

இப்படிப் பல்வேறு கோணங்களில் சித்தி நிலைகளை விளக்குவதோடு இறைவனையே சித்தராகவும், தன்னையும் சித்தனாகவும் அனைத்துச் சித்தி நிலைகளையும் பெற்றதாகவும் குறிப்பிடுகின்றார். வாழையடி வாழை என வந்த திருக்கூட்ட மரபில் வந்த கடைசிச் சித்தரான திருவருட்பிரகாச வள்ளலார்.

வள்ளற் பெருமானுக்கு முன்னுள்ள சித்தர்களும் ஞானிகளும் இதே கருத்துக்களை வேறு விதமாக கூறியுள்ளனர். ஒரு சிலவற்றை மட்டும் ஈண்டுக் குறிக்கின்றேன்.

''சாற்றுஞ்சன் மார்க்கமாந் தற்சிவ தத்துவத்
தோற்றங்களான சுருதிச் சுடர்கண்டு
சீற்றம் ஒழிந்து சிவயோக சித்தராய்க்
கூற்றத்தை வென்றார் குறிப்பறிந் தார்களே''

''சித்திக்கு வித்துச் சிவபரந்த தானாதல்''

''பதமுத்தி மூன்றும் பழுதென்று கைவிட்டு
இதமுற்ற பாச இருளைத் துரந்து
மதமற் றெனதியான் மாற்றிவிட் டாங்கே
திதமுற் றவர்கள் சிவசித்தர் தாமே''

''சித்தர் சிவத்தைக் கண்டவர் சீருடன்
சுத்தாசுத் தத்துடன் தோய்ந்துந்தோ யாதவர்
முத்தரம் முத்திக்கு மூலத்தர் மூலத்துச்
சத்தர் சதாசிவத் தன்மையர் தாமன்றே''

என்று சித்தருக்கு இலக்கணம் வகுக்கின்றார், ''சாத்திரங்களில் சிறந்தது திருமந்திரம்'' என்று வள்ளற் பெருமானால் பாராட்டப்பெற்ற திருமூலர்.

1. அணிமா (நுண்மை)
2. மகிமா (பருமை)
3. இலகிமா (மென்மை)
4. கரிமா (விண்தன்மை)
5. பிராத்தி (விரும்பிய தெய்தல்)
6. பிராகாமியம் (நிறைவுண்மை)
7. ஈசத்துவம் (ஆட்சியனாதல்)
8. வசித்துவம் (கவர்ச்சி)

என்ற அட்டமாசித்திகளின் விளக்கங்களையும் மூன்றாம் தந்திரத்தில் கூறுகின்றார்.

''சித்தி செய்த சித்தருக்குச் சித்தரென்று நாமம்
செப்புவதேன் சிவதீட்சை பத்தும்சித்தி
முத்திசித்தி தீட்சை பத்தும் சித்தி மந்திரம்
மோனசித்தி வேதாந்த சித்தாந்தம் சித்தி
சத்திகா யத்திரியெட் டஞ்செழுத்தும் சித்தி
தாரசித்தி பிரசாதசித்தி யத்வாத சித்தி
தத்துவத்தின் சித்தியொடு தத்துவப் பிரசித்தி
சர்வதயா பிரசித்தி காயசித்தி தானே''

''தானென்ற சொரூபசித்தி குளிகை சித்தி
தனிவாத சித்தியுடன் யோகசித்தி
கோனென்ற ஞானசித்தி போதசித்தி
கொடியபி சாதசித்தி சாம்பவத்தின் சித்தி
தேனென்ற பரப்பிரம சாதசித்தி
செப்பாதே இருபத்தி யஞ்சு சித்தி
வானென்ற சித்தியெல்லாம் வந்தபேர்க்கு
மகத்தான சித்தரென நாமமாச்சே''

— அகத்தியர்

''சிந்தை தெளிந்திருப்பவனே சித்தன்
செகமெலாம் சிவமென்றே யறிந்தோன்சித்தன்''

— வால்மீகர்

''சித்தரென்றுஞ் சிறியரென்று மறியொணாத சீவர்காள்
சித்தரிங்கி ருந்தபோது பித்தரென்றே எண்ணுவீர்
சித்தரிங்கி ருந்துமென்ன பித்தனாட்டி ருப்பரே
அத்தனாடு இந்தநாடு மவர்களுக்கெ லாமொன்றே''

— சிவவாக்கியர்.

''அவியா விளக்கைப்பொன் னம்பலத்தாடியை ஐந்தெழுத்தாற்
செவியாமல் நீசெபித்தாற் பிறவாமுத்தி சித்திக்குமே''

''வித்தாய் மரமாய் விளைந்தகனி காய்பூவாய்ச்

சித்தாகி நின்ற திறமறியேன் பூரணமே''

— பட்டினத்தார்

''ஆயிரத்தெட் டிதழ்வீட்டி லமர்ந்த சித்தன்
அண்டமெலாம் நிறைதிடும் அற்புதச் சித்தன்
காயமில்லா தோங்கிவளர் காரணச் சித்தன்
கண்ணுளொளி யாயினானென் றாடாய் பாம்பே''

— பாம்பாட்டிச் சித்தர்

''முத்திக்கு வித்தான மூர்த்தியைத் தொழுது
முத்திக் குறுதிகள் செய்யாக் கால்
சித்தியும் பத்தியும் சத்தியு முத்தியுஞ்
சேரா வாகுமே கோணாரே''

''சினமென்னும் பாம்பிறந்தாய் தாண்டவக்கோனே - யாவுஞ்
சித்தி என்றே நினையேடா தாண்டவக்கோனே''

— இடைக்காட்டுச் சித்தர்.

''பாரிலுயர்ந்தது பத்தி - அதைப்
பற்றின பேர்க்குண்டு மேவரு முத்தி
சீரிலுயரட்ட சித்தி - யார்க்குஞ்
சித்திக்கு மேசிவன் செயலினால் பத்தி''

— கடுவெளிச் சித்தர்

''பலித்ததடா யோகசித்தி ஞானசித்தி
பருவமாய் நாடி வைத்துப் பழக்கம் பண்ணே''

— உரோமரிஷி

''ஆமிவளை யறிந்தவர்கள் சித்தர் சித்தர்
அறிந்தாலு மனமடக்க மறிய வேணும்''

''தேனென்ற மொழிச்சியிவள் சித்தர்க் கெல்லாஞ்
சிறுபிள்ளை பத்துவய துள்ள தேவி''

''இட்ட குறி நாதவிந்து ரூபங் காண
இயலறியாச் சண்டாளர் சுட்டிடுவார்
விட்டகுறை வந்ததென்றால் தானே எய்தும்
விதியிலார்க் கெத்தனைதான் வருந்தினாலும்
பட்டுமன மாய்வதல்லால் வேறொன்றில்லை
பத்தியிலார்க் குரைத்துமனம் பாழ்போக் காதே
திட்டமதாய்ப் பாணம் வைத்துத் தேவிபூசை
சீர்பெற்றார் பதினெட்டுச் சித்தர் தாமே''

— கருவூரார்

''தத்துவ மேயுடல் தானெனு மானது தன்னை யறிந்திடுநீ
சித்தது வாகிப் பிராணனி ரானதில் திரண்டதைக் கண்டிடுநீ
கற்றுமே காணாக் கண்மணி யானதைக் கண்டுதெளிந்திடுநீ
முற்று சிவானந்த போதகமானது முத்தியு மிதுதானே''

— சிவானந்த போதம்.

''பானென்ற வேதாந்தஞ் சித்தாந் தம்பார்
பறக்கிறதோர் குளிகை முதல் வாதம் பார்த்துத்
தேனைன்ற கைலாய வர்க்க மாகிச்
சித்தருக்குச் சிதத்ராய் ரிஷியா னாரே''

— கைலாயக் கம்பளிச் சட்டை முனி.

''நடத்தலாமே மனவா சிஒரு
நாலைந்து பீற்றலை மூடாமல்
திடத்தினால் மனஞ் சித்தா னாற்சித்தந்
தெளிந்து கொள்ளலாம் ஞானப்பெண்ணே''

— மதுரை வாலைசாமி ஞானக்கும்மி

''ஆசை நாலுசது ரக்கமல முற்றினொளி
வீசி யோடியிரு பக்கமொடு றச்செல்வளி
ஆவல் கூறமண்மு தற்சலச பொற்சபையு மிந்துவாகை

ஆரமூணுபதி யிற்கொளநி றுத்திவெளி
யாறு சோதிநுறு பக்தினுட னெட்டுஇத
ழாகி யேமுமள விட்டருண விற்பதியின் விந்துநாத

ஓசை சாலுமொரு சத்தமதி கப்படிக
மோடு கூடியொரு மித்தமுத சித்தியொடு
மோது வேதசர சத்தியடி யுற்றதிரு நந்தியூடே

ஊமை யேனையொளிர் வித்துனது முத்திபெற
மூல வாசல்வெளி விட்டுனது ரத்திலொளிர்
யோக பேதவகை யெட்டுமிதி லொட்டும்வகை யின்றுதாராய்''

அமுத சித்தி எப்படி உடம்பில் உருவாகின்றது என்பதை இந்தத் திருப்புகழில் விளக்குகின்ற அருணகிரிப் பெருமான், ''சித்து வகுப்பு'' என்ற அருமையான தொரு திவகுப்பையும் அருளியுள்ளார்.

''மிக்க சித் திகளெலாம் வல்லநீ ரடிமை முன்
விளங்கவரு சித்திஇலிரோ
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே''

''கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு
கருணாகரக் கடவுளே''

''சித்திநிலை முத்திநிலை விளைகின்ற பூமியே
தேடரிய சத்தாகிஎன்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே''

''சித்த நிருவிகற்பஞ் சேர்ந்தார் உடல்தீபம்
வைத்த கர்ப்பூரம்போல் வயங்கும் பராபரமே''

''சித்தந் தெளிந்து சிவமானோ ரெல்லோர்க்குங்
கொத்தடிமை யான குடிநான் பராபரமே''

— தாயுமானவர்.

ஆகவே, இது காறும் சிந்தித்ததிலிருந்து, கோயில், திருச்சிற்றம்பலம், சிற்சபை, சித்திபுரம், சித்திவளாகம், மேலும் சித்தர்கள் பெயர் வைத்த ஊர்களின் திருப்பெயர்கள் ஆகிய அனைத்தும் நம் உடம்பின் சிரநடு சிற்றம்பலத்தையே குறிக்கின்றது என்பதையும், அங்கிருந்தே அனைத்துச் சித்தி நிலைகளையும் அவர்கள் பெற்றனர் என்பதையும் தெளிவாக அறிகிறோம்.

சாதாரண மக்களுக்குத் தத்துவங்கள் 96. சித்தர்களுக்குப் புறக்கருவிகளாகி கீழ்நிலைத் தத்துவங்கள் 60 செயல்படாமல் பாசமற்று, மாயையற்று நின்றுவிடுகின்றன. அவர்களுக்கு அகக் கருவிகளாகிய மேல்நிலைத் தத்துவங்கள் 36 (''ஆறாறு காட்டிய அருட்பெருஞ்ஜோதி'') மட்டும், செயல்படும். 36 தத்துவங்களும் உள்ளிருக்கும் கருவிகளில் சமரசமாகி ஒளியாகிய இறைவனை அடைந்து ஒளிதேகமாவது தான் முடிவான சித்திநிலை. இதுதான் ஞானசித்தி, காயசித்தி, மரணமிலாப் பெருவாழ்வு, பேரின்ப சித்திப் பெருவாழ்வு.

ஆகவே, நாமும் உண்மையான சித்திவளாகத்தை அறிந்து சித்தி நிலைகளைப் பெற முயலுவோமாக. இக்கட்டுரையைக் கண்ணுறும் அன்பர்கள் அருள் கூர்ந்து தங்களின் கருத்தினை எழுதுமாறு வேண்டுகிறேன்.



தமிழ்க் கல்வெட்டுகளில் கோயில் சார்ந்த அறங்கள்

(முனைவர். கா. அரங்கசாமி. எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி)

முன்னுரை

கி.மு. ஐந்தாம் நூற்றாண்டு முதல் கி.பி. 19 ஆம் நூற்றாண்டு முடிய ஆயிரக் கணக்கான தமிழ்க் கல்வெட்டுக்கள் கண்டறியப்பட்டுள்ளன. தொடக்கத்தில் நடு கற்கள், குகைத் தளங்கள், தூண்கள் முதலியனவற்றுள் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்களே பெரும்பான்மையானவையாகும். பல்லவர், பாண்டிய சோழர் காலத்தேயே கல்வெட்டுக்கள் பல்கின. அவ்வாறு பன்னூறாண்டுக் காலம் பரந்துபட்ட வரலாற்றின் அடித்தளமாகிய தமிழ்க் கல்வெட்டுக்கள் வழிக் காணும் கோயில் சார்ந்த அறங்களைப் பற்றிச் சுருங்கக் காண்பதே இக்கட்டுரையின் கருத்தாம்.

தமிழ்க் கல்வெட்டுக்கள்

கருங்கல்லில் வெட்டப்பட்டுள்ள சாசனங்கள் கல்வெட்டு, சிலாசாசனம், சிலாலேகை, கல்லெழுத்து, சாசனம், பிரசஸ்தி என்று குறிக்கப்படும். 'சாசனம்' என்பது வடசொல், அது கட்டளை அல்லது உத்தரவு என்று பொருள்படும். சாசனங்கள் தங்கம், வெள்ளி, செம்பு முதலிய உலோகங்களில் எழுதப்படினும் பெரும்பாலும் அவை கல்லில் வெட்டப்பட்டு வந்ததனால் 'கல்வெட்டுக்கள்' என்றும், 'சிலாலேகை' என்றும் பெயர் பெற்றன. உலோகங்கள், கருங்கற்கள் ஆகிய வற்றிலன்றிச் சாசனங்கள் மட்பாண்டம், செங்கல், சுட்ட மண், பளிங்குக் கல், படிமம், முதலியவற்றினும் எழுதப்பட்டு வந்தன.[1] மேற்குறிப்பிட்டவற்றுடன், மரம் சங்கு, தந்தம், பனை ஓலை, பூர்வ பத்திரம், காகிதம், பருத்தித் துணி, தோல் முதலியவற்றிலும் எழுத்துப் பொறிக்கப் பயன்பட்டுள்ளன. "வன்மையான பொருள் களின் மீது எழுதுவதால் எழுதப்பட்ட செய்தி நீண்ட காலம் அழிவு பெறாமல் நிலைத்து நிற்கும்"[2] என்ற கருத்தினையொட்டிக் கல்வெட்டுக்கள் பெரும்பாலும் கல்லில் வெட்டப் பட்டன என்பதையும், அதனாலேயே கல்வெட்டு என்னும் பெயரும் நிலைத்தது என்பதையும் அறியலாம்.

திருக் கோயில் சார்ந்த அறங்கள்

தமிழகத்துக் கோயில்கள் இடைக் காலத்தும், பிற் காலத்தும் அறத்தின் தலையூற்றுக்களாய்த் திகழ்ந்தன. ஆன்மீக, சமய நம்பிக்கைகளின் அடித்தளம் கோயில் கள். "அன்றறிவாம் என்னாது அறம் செய்க"[3] என்ற ஆணையின் செயல்வடிவமாக அவை அமைந்தன.

இதனையே,

"கண்டார் காணா வுலகத்தே காதல் செய்து
நில்லாதேய்
பண்டேய் பரமன் படைத்த நாள் பார்த்து நின்று
நைய்யாதேய்
தண்டார் மூப்பு வந்துன்னைத் தளரச் செய்து
நில்லாமுன்
உண்டேல் உண்டு மிக்கது உலகறிய வைம்மினேய்"[4]

என்று கல்வெட்டுப் பாடல் கூறும்.

வீர வழிபாட்டின் அடிப்படையில் தோன்றிய நடுகற் களையும், சமய வறத்தின் அடிப்படையில் தொடங்கிய சமண, புத்த அறவியல் செயல்களையும், பின்னர் ஓங்கியுயர்ந்த சைவ, வைணவக் கோயில்களைச் சார்ந்த அறங்களையும், தமிழ்க் கல்வெட்டுக்கள் விளக்கம் செய்கின்றன. "சிவன் ஆலின்கீழ் அமர்ந்தவராய், முனிவர்களுக்கு அறமுரைத்தவராய்க் காட்சி தருவார்".[5] அவரது ஊர்தியே அறத்தின் வடிவம். ஆதலால் கோயில்கள் அறத்தின் அச்சாணியாகத் திகழ்ந்தன. "நாச்சியார் அமுது படிக்கும், பூசைக்கும், 32 அறத்துக் கும், திருப்பணிக்கும் உடலாக விட்டுக்குடுத்த நல்லூர்"[6] என்னும் கல்வெட்டின் வழி கோயில் நோக்கமே 32 அறங்களையும் நாட்டில் நடத்துதல் என்பதேயாம். "தமிழகத்தின் முன்னோர் புரிந்து வந்த பேரறங்களில் தெய்வ வழிபாடு பெருகுதற் பொருட்டுச் செய்து போந்த தருமச் செயல்களே சாசனங்களில் பெரிதும் கூறப் படுவன".[7] "இடைக்காலத்தில் கோயில்கள் பொருளியல், அரசியல், வாழ்வியல் மையங்கள். அவைகளே நில வுடைமையாளர்களைப் போல் பலருக்கும் பணி யளித்தன. அறங்காவலர்களே நீதிபதிகளாகவும் சில வேளைகளில் இருந்தனர். கோயில் பண்டாரம் வைப்பகமாய் (வங்கி) இலங்கி மக்கட்குத் தக்க காலத்தில் பொன்னும் பொருளும் கடனும் உதவின. ஊர்ப்புறத் தொழில் வளர்ச்சியே கோயிலைச் சார்ந்திருந்தது. இவ்வாறு இக்கோயில்கள் வாழ்வின் வான் பயனாக அமைந்தன.[8] "அதன் செயல் முறைகள் அனைத்தும் மனிதப் பண்பை மதித்துப் போற்றி அருளாட்சியை

உலகில் நிலைநாட்டும் நோக்குடன் அமைக்கப் பட்டிருந்தன."[9]

சமண புத்தக் கோயில்கள்

ஆற்காடு பூண்டியில் சினாலயம் சம்பு குலத்து மன்னரால் அமைக்கப் பட்டதை அழகிய பாடல் கல்வெட்டொன்று எழில்பட உரைக்கும். அக்கல்வெட்டு,

"பூண்டியென்பது காண்டகு திருநகர்
சீயன் சம்புமன் திருவறப்புறமாய்
....
சினவரன்றனக்குச் செம்பொற் கோயில்"[10]

அமைத்தான் என்று பாராட்டியுரைக்கும். அவ்வாறே விசய மங்கலத்துச் சந்திரநாத சாமிக்கும் ஆதிகேசு வரர்க்கும், அணியாத அழகியார்க்கும் செய்த அறக் கொடைகள் பற்றியும்11 சமண புட்பநாதசாமி கோயிற் கொடை பற்றியும்12 கல்வெட்டுக்கள் கூறும். "இவ்வாறு அறவியல் கோட்பாடுகளின் அடிப்படையில் தோன்றிய சமண, புத்த சமயங்களின் தாக்கத்தால் தமிழகத்தில் அறவியல் சிந்தனைகள் மேலும் ஆக்கம் பெற்றன. சமண புத்த சமயக் கல்வெட்டுக்களின் வழிச் சமண புத்த சமயக் கோட்பாடுகள் நன்கு பரவி இருந்ததும், துறவிகட்கு வாழிடங்கள், பள்ளிகள் அமைத்துத் தருவதிலும், ஆசிரி யர்களை நன்றியுடன் போற்றுவதிலும் மக்கள் பேரீடுபாடு காட்டினர் என்பதும் புலப்படும்."[13]

கோயிலுக்குத் தந்த கொடைக்குரிய காரணங்கள்

ஆயிரக்கணக்கான கல்வெட்டுக்களில் நூற்றுக்கணக் கான கல்வெட்டுக்களே கொடைக்குரிய காரணங்களைக் கூறுகின்றன. காரணம் ஆன்மீக உணர்வில் முதிர்ந்த பொதுநலவுணர்வும் பக்தியும் உடையோர் கோயிலுக்குச் செய்யும் கொடைகளில் தம்மை விளம்பரப்படுத்தாது இறைவன் பெயராலேயே செய்துள்ளனர். "பெரும் பாலும் கோயிற் கொடைக்குரிய காரணங்களாக (1) சமய நம்பிக்கை, (2) புண்ணியம், (3) நன்றியுணர்வு, (4) நலம் பெற, (5) வெற்றி பெற, (6) தருமத்துக்காக, (7) பிரா யச்சித்தமாக – தண்டனைக்காக, (8) குலாபிமான தர்ம மாக, (9) வெண்திருநீறுசிறக்க, (19) சிவலோகம் சேர, (11) பெருமை பெற, (12) விசயாபிசேகம், வீரபிசேகம் செய்த நாளில், (13) பக்திக்காக, (14) புண்ணிய யாகத்துக்காக, (15) பிறந்த நாள் – பெயரீட்டு விழா, (16) தாயார் சுவர்க்கம் செல்ல, (17) தவம் செய்யச் செல்ல, (18) வழிபட, (19) கோத்திர அபிவிருத்தி – புத்திர பவுத்திர பரம்பரை சுகப் பட, (20) மழை பெய்ய விளைச்சல் பெருக, (21) திருப்பணி செய்தவர் அரன்பாதம் அடைய, (22) தன்கிளை வாழ, (23) தோசம் போக, (24) பேய் ஓட்டியதற்காக, (25) ஆன்மா சாந்திபெற, (26) புத்ர முகதர்சனம் பண்ண, (27) மேக நோய் தீர்க்க, (28) நேர்த்திக் கடனாக கொடை கொடுத் தமை அறியப்படும்.14 இவ்வாறு சமயம், பக்தி, ஆன் மீகம், கொடை கொடுத்தமை அறியப்படும். இவ்வாறு சமயம், பக்தி, ஆன்மீகம், அறவுணர்வு முதலான பல் வேறு அடிப்படைகளில் கொடைகள் அமைந்துள்ளமை அறியப்படும்.

கோயிலுக்குத் தந்த அறப்புறங்கள்

1. அடுக்களைப்புறம், 2. அக்கார சாலைப் புறம், 3. அமாவாசிப்புறம், 4. அம்பலப்புறம், 5. அமுதுபடிப் புறம், 6. அவலமுதுப்புறம், 7. அவிப்புறம், 8. பாரதப் புறம், 9. பாரத விருத்திப்புறம், 10. காணிமாடப்புறம், 11. கற்றளிப்புறம், 12. இடைப்புறம், 13. மெழுக்குப்புறம், 14. நட்டுவப்புறம், 15. நிமித்தப்புறம், 16. ஒழுக்கவிப்புறம், 17.ஒழுக்கிடைப்புறம், 18. பவிலியப்புறம், 19. புதுக்குப் புறம், 20. பூந்தோட்டப்புறம், 21. சந்தி விளக்குப் புறம், 22. சந்திப்புறம், 23. சத்திப்புறம், 24. சாத்திரப் புறம், 25. சிறீகோயில்புறம், 26. சிவிகைப்புறம், 27. சேகண்டிப் புறம், 28. தயித்திரிய இடைப்புறம், 29. சிறீருத் ராயணப் புறம், 30. தானப்புறம், 31. தாட்டலைப்புறம், 32.தண்ணீர்ப் பந்தல் புறம், 33. திருமடப்புறம், 34. திருவர்த்த சாமப் புறம், 35. தேவர்ப்புறம், 36. திருச்செங்கழுநீர்ப் புறம், 37. திருச் செண்டையப்புறம், 38. திருமஞ்சனப் புறம், 39. திருக்கோட்டிப்புறம், 40. திருமாடைப்புறம், 41.திரு மாலைப்புறம், 42. திருமந்தர யோகைப்புறம், 43. திருநந்த வனப்புறம், 44. திருநந்தா விளக்குப் புறம், 45. திரு ஞாயிற்றுக்கிழமைப்புறம், 46. திருவோடைப்புறம், 47.திரு வுத்தரமாப்புறம், 48. திருப்பாளப் புறம், 49. திருப்பலிப் புறம், 50. திருப்பாவாடைப் புறம், 51. திருப்பண்ணி காரப் புறம், 52. திருப்போகைப்புறம், 53. திருவுண்ணாழிகைப் புறம், 54. திருவாய்மொழிப்புறம், 55. திருப் பள்ளி யெழுச்சிப்புறம், 56. மடப்புறம், 57. திருவிளக் குப்பட்டி, 58. திருமெய்ப்பூச்சுப்புறம், 59. விளக்குப்புறம், 60. கானப் புறம், 61. விழாப்புறம், 62. திருப்பள்ளி மடப் புறம், 63. மடப்பள்ளிப்புறம், 64. அறப்புறம், 65. சாலைப்புறம், 66. செங்கழுநீர்ப் புறம். மேற்கண்ட 66 வகையான அறப்புறங்கள் கோயிலுக்குத் தரப்பட்ட மையில் கோயில் சார்ந்த அறக் கொடைகளின் பரப் பளவை நாம் உணரலாம்.[15]

திருவிளக்கறம்

"நிறைந்த பொன்னருமேனி நிமலன்தன் சந்நிதிக்கே
உறைந்திடும் நெய்யினாலே ஒரு விளக்கு
தவப்பெற்றோர்
குறைந்திடா ஒளி பொருந்தக் கோடி செங்கதிரவன்
போல்
சிறந்திடு விமானமேறிச் செல்லுவார்
சிவலோகத்தில்"[16]

என்னும் கல்வெட்டுப் பாடல் விளக்கறத்தின் பயனைக் கூறும். விளக்கு எரிப்பது, தாங்கள் செய்த பாவத்துக்குக் கழுவாயாகவும்; சில சமயங்களில் மனச்சான்றின் பயனாகவும்; நியாயத்தார் வழங்கிய தீர்ப்பையொட்டியும் ஏற்பட்டது.[17]

கோயில் சார்ந்த அறங்களில் திருவிளக்கிடுதலில் பொதுமக்கள் பேரீடுபாடு கொண்டு; வேண்டுதல் –

தண்டனை – பிராயச்சித்தம் – பகைநீங்க – வெற்றி பெற – செயல் சிறக்க எனப் பல்வேறு நோக்கங்களுக்காக விளக்கிட்ட செய்தியைக் கல்வெட்டுக்கள் காட்டும்18 கோயிலில் விளக்கேற்றுவது உள்ளத்தில் ஆன்ம ஒளி ஏற்றுவதற்கு ஒப்பாகும். "உள்ளம் பெருங்கோயில் உன்னுடம்பு ஆலயம்... கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கு" என்னும் தமிழ் மந்திரப் பாடல் உள்ளக் கோயிலில் ஏற்றும் ஞான விளக்கையே உலகக் கோயிலில் ஏற்றுவர் என்பதை உருவகப் படுத்தும். விளக்கிடல் ஞானம் பெறல் என்பதை,

"விளக்கினார் பெற்ற இன்பம் மெழுக்கினாற் பதிற்றியாகும்
துளக்கில் நன்மலர் தொடுத்தால் தூய விண்ணேறலாகும்
விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞானமாகும்
அளப்பில் கீதஞ் சொன்னார்க்கு அடிகள் தாம் அருளுமாறே"[19]

என்னும் அப்பர் திருவாக்கும் மெய்ப்பிக்கும்.

கோயில் சார்ந்த பிறவறச் செயல்கள்

கோயில்களைச் சார்ந்து – குகைகள் – மடங்கள் அமைத்துத் திருமுறைகளைப் பயிற்றுவித்தனர். அடியவர்க்கு அன்னதானம் மேற்கொண்டனர். சமயக் கல்வியுடன் இசை நடனம் வளர்த்தனர். மடத்தில் இருந்த தொண்டர்கள் போர்க்காலத்தில் மடத்தைக் காக்கப் போராடி உயிர் தந்த ஈகச் செய்திகளையும் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.[20] கோயிலைச் சார்ந்த நூலகங்கள் 'சரசுவதி பண்டாரம்' எனப்பட்டது. மற்றும் கோயில்கள் மருத்துவ நிலையங்களாகவும் செயல் பட்டதுடன் மருத்துவக் கல்வியையும் கற்றுத் தந்தன. பஞ்ச காலத்தில் கோயில்களே காப்பகங்களாயின.

"மனித இதயங்களுக்கு அருகில் தெய்வங்களைக் கொணரவே சிற்பக் கலை பயன்பட்டது"[21] என்னும் கருத்துக்கு ஏற்பச் சிற்பக்கலைக் கூடங்களாகக் கோயில்கள் விளங்கியதுடன், இசை, நடனம், நாடகம் முதலான முத்தமிழ்த் துறைகளையும் பக்தியுணர்வுடன் போற்றி வளர்த்தனர்.

"அறம் வளர்த்த நாச்சியார், கோயிலுக்குச் செய்த பணியைப் பாராட்டி ருத்ர மகேசுவரர்கள் நாளுக்கு 1 பதக்கு நெல்லும், மாதம் இரு பணமும் கொடுத்தனர்.[22]

"கோயில் பணி மக்களின் உழைப்பைப் பாராட்டி நிலம் தந்தனர்"[23] என்னும் செய்திகள் உடல் உழைப்பின் உயர்வினைப் போற்றிய அறவியல் மனப்பாங்கினைக் காட்டும். கோயில் சார்ந்த பணியாளர்கள் உழைத்து உண்ண வேண்டும் என்ற உயரிய நோக்கில் சீவிதமாக – யோகமாக – காணியாக – நிலம் தரப்பட்டது. இவ்வாறு கோயில்கள் தாய் போல் நின்று பணியாளர்களையும், மக்களையும் சேயெனக் காத்து அறப் பயிர் வளர்த்தன.

கோயில்கள் அறமன்றங்களாக – ஆவணக் களரியாக – அவையினர் கூடும் இடமாகவும் செயல்பட்டன. மேலும் கோயிலுக்குத் தரப்பட்ட கொடைகளைத் தணிக்கை செய்ய, குறை நிறைகளை ஆய்வு செய்ய "ஆராய்ச்சி" செய்யும் அறிஞர் குழுக்களும் செயல்பட்டன.[24]

முடிவுரை

அறத்தால் வருவதே இன்பம் என்ற தமிழ் மறையின் நெறி வழுவாமல் 'அறமல்லது துணையில்லை அற மறவற்க" என்ற அமுதவாக்கின்படி கோயில்கள் அறப்பணிக் களமாகச் செயல்பட்டதைத் தமிழ்க் கல்வெட்டுக்கள் காட்டுவதைக் காணலாம். இவ்வாறு அறமொன்றே தரும் நல்லின்பம் என்ற மெய்ப் பொருளியல் உண்மையை உணர்ந்த நம் முன்னோர்கள் அதனையே சமயமாகவும், பக்தியாகவும் மக்கள் நெஞ்சில் பாங்குற வளர்த்தனர். எனவே மனித நேயம் மாண்புடன் இலங்கும் வழியும் அதுவே எனக் கண்டுணர்ந்து தொடர்ந்து போற்றி வந்தனர். இன்றைய வாழ்வியல் துன்பங்கட்கு நாம் நமது அறநெறிப் பண்பிலிருந்து விலகியதே என்ற உண்மையையும் நமது கல்வெட்டுக்கள் காட்டுகின்றன. ஆதலின் கல் மேல் எழுத்துப் போல் நின்று நிலவும் அறவழி ஆட்சியை ஆன்மீக உணர்வுடன் போற்றி வளர்ப்பதே நம் தலைக் கடனாதல் வேண்டும்.

அடிக் குறிப்புகள்

1. தென்னிந்தியக் கோயில் சாசனங்கள் தொகுதி 5, பகுதி 2. பின்குறிப்பு ப. 244.
2. பன்னீர் செல்வம் இரா. கல்வெட்டுக்கள் ப. 1.
3. குறள் – 36
4. வேதாசலம் வெ. திருவெள்ளறை – ப. 148.
5. காலச்சுவடுகள் ப. 43.
6. திருமுருகன் பூண்டிக் கல்வெட்டு.
7. சாசனத் தமிழ்க் கவி சரிதம் ப. 220.
8. மகாலிங்கம் டி.வி. விசயநகர ஆட்சியல் ஆட்சி முறையும் சமுதாய வாழ்வும் (ஆங்கிலம்) ப. 235.
9. திருநாவுக்கரசு க.த. முதலாம் இராசராசன், பக். 267, 268.
10. தென்னிந்தியச் சாசனங்கள், தொ. 1. ப.26, 27.
11. தென்னிந்தியக் கோயில் சாசனங்கள். தொ. 1 எண் 31.
12. தென்னிந்தியக் கோயில் சாசனங்கள் தொ. 1, எண் 273.
13. அரங்கசாமி, கா. தமிழ்க் கல்வெட்டுக்களில் அறவியல் கோட்பாடுகள், முனைவர்பட்ட ஆய்வேடு – பகுதி 2. இயல் 2. ப. 12.
14. அரங்கசாமி, கா. தமிழ்க் கல்வெட்டுக்களில் அறவியல் கோட்பாடுகள், முனைவர்பட்ட ஆய்வேடு – பகுதி 2. இயல் 2. ப. 16, 17, 18.
15. அரங்கசாமி, கா. தமிழ்க் கல்வெட்டுக்களில் அறவியல் கோட்பாடுகள், முனைவர்பட்ட ஆய்வேடு – பகுதி 2. இயல் 2. ப. 21, 22, 23.
16. தென்னிந்தியக் கோயில் சாசனங்கள் தொ. 2, ப. 693
17. அரங்கசாமி கா. முனைவர்பட்ட ஆய்வேடு, அட்டவணை – பின்னிணைப்பு.
18. அரங்கசாமி கா. முனைவர்பட்ட ஆய்வேடு, அட்டவணை – பின்னிணைப்பு.
19. அப்பர், பொதுத் தனித்திருநேரிசை ப. 33.
20. தென்னிந்தியச் சாலைகள், தொ. 11, எ. 56.
21. முதலாம் இராசராசன் – ப. 294.
22. தென்னிந்தியக் கோயில் சாசனங்கள், தொ. 1, எ. 128.
23. தென்னிந்தியச் சாசனங்கள், தொ. 14, எ. 74.
24. அரங்கசாமி கா. முனைவர்பட்ட ஆய்வேடு, பகுதி 2, இயல் 2, ப. 42.



பக்தி

(முனைவர். மைதிலி வளவன்.
எம்.ஏ (தமிழ்)., எம்.ஏ (வரலாறு)., பிஎச்.டி)

அறிவின் துணையால் ஆராய்பவர் பலர்; உணர்வின் வழியாய் உணர்பவர் பலர்; அறிவும் உணர்வும் கலந்தோ அவ்வப்போது ஒவ்வொன்று மேம்பட்டோ விளங்கும் நிலையில் விடை காண்பார் மிகப் பலர். இத்தன்மைகள் யாவும் இயற்கை. இவற்றால் பெறும் அனுபவம் பலருக் கும் சென்று சேரும்போது பலப்பல அனுபவங்களாக மாறுகின்றன.

எடுத்துக்காட்டாக, 'தமிழ்' என்பதனையே காணலாம். சேரன் செங்குட்டுவன் படையொடு புறப்பட்டான். அப்போது 'அருந்தமிழ் ஆற்றல்' அறியாதவர் மீது சீற்றங் கொண்டு புறப்பட்டது இப்படை என்றான். சேரனுக்குத் தமிழ் என்பது 'வீரம்' என்ற அனுபவத்தினைத் தந்தது.

அரசன் பிரகத்தனுக்குக் கபிலர் தமிழ் உணர்த்தினார். அதாவது தமிழரின் அக வாழ்க்கையை உணர்த்தினார். இங்கே கபிலர் தமிழ் என்பதை அகவாழ்வாகத் தம் அனுபவத்தால் உணர்ந்தார் என அறியலாம்.

'தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறு இறைவன் நன்றாகப் படைத்தான் என்று திருமூலர் கூறினார். 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பினார் சம்பந்தர்' என்றார் சுந்தரர். 'நாரணர்க்கு ஞானத்தமிழ் விளக் கேற்றினேன்' என்றார் ஆழ்வார். இவர்கள் எல்லோரும் தமிழ் என்பதனைப் பக்தி அனுபவமாகக் கண்டனர்.

தமிழ் என்பதற்கே வீரம், காதல், பக்தி என்று தத்தம் அனுபவப் பொருளைக் காலந்தோறும் உணர்ந்து உணர்த்தியுள்ளனர். மானுடம் வெல்ல வேண்டும் என்னும் சிந்தனை தோன்றி வளர்ந்து நிலைபெற்ற நிலையை இம்முப்பொருளும் காட்டுகின்றன எனலாம். வீரத்தால் எதனையும் விளைவித்து விடலாம் என்ற அனுபவம் இயற்கையினிடத்தில் வெற்றி கொள்ள முடியவில்லை. காதலால் எதனையும் கைக் கொள்ள லாம் என்ற அனுபவமும் எல்லா இடத்திலும் வெற்றி கொள்ள முடிவில்லை. அறிவும், உணர்வும் இணைந்து பக்தியாக அனுபவம் பெறுமானால் மனநிறைவு அல்லது ஆன்ம விடுதலை கிடைக்கும் என்பதை உணரத் தலைப்பட்டனர். அதற்கும் இவ்விரு அனுபவமும் வழிகூட்டின.

வீர அனுபவமும் காதல் அனுபவமும் ஓர் எல்லை வரை வளர்ந்து பின் உருமாறின. பக்தி அனுபவமோ எல்லையின்றி வளர்ந்து கொண்டிருக்கிறது. அது வள ரும் முறையே தனிச்சிறப்பாக உள்ளது. ஆன்மாவைப் பரம் பொருளின் ஒரு கூறாகப் பார்க்கும் நிலையும் ஆன்மாவே பரம்பொருள் எனப்பார்க்கும் நிலையும் வளர்ந்தன. இருநிலையிலும் பரம்பொருள் முடிவிலா தது என்ற விடையே கிடைக்கின்றது.

தமிழில் கிடைக்கும் பழைய இலக்கியத்துள் ஒன்று திருமுருகாற்றுப்படை அது மனிதத்தத்துவத்தையும், இறை உண்மையையும் பக்தி நிலையில் கண்டு எளிதாக விளக்கியுள்ளது. கல்வி, கேள்வி இல்லாத, ஆனால் உலக இன்பம் யாவற்றையும், உடலை வளர்த்துப் போராடி அனுபவிக்க எண்ணும் மக்கள் ஒருசாரார். இறையை ஓதி உணர்ந்து கேட்டு அறியும் மக்கள் ஒருசாரார். இவ்விரு நிலையினரும் முருகன் முன் நின்று வழிபடும்போது அவன் பொதுவாகவே உள்ளான். 'முனிவிலாத பொருள் தன்மை'யுடன் உள்ளான். உணர்வும், அறிவும் பொருந்தி அவற்றைக் கடந்தது இறை என்ற பொது உண்மையை மிக எளிதாக விளக்கியுள்ளது முருகாற்றுப்படை. பரம்பொருளின் இலக்கணம் என்ன என்பதையும் நக்கீரர் தம் அனுபவத்தால் கண்டு அந்நூலில் உரைத்தார்.

அன்புடையவர்கள் வணங்கும் இடத்திலும் வெறி யாடும் களத்திலும் காட்டிலும் சோலையிலும், ஆற்றி டைக் குறையிலும் ஆற்றங்கரையிலும் குளக்கரையிலும் நாற்சந்தி முச்சந்திகளிலும் பூக்களுள்ள கடம்பம் மற்றும் பிற மரத்தடிகளிலும் அம்பலத்திலும் நடுதறிகளிலும் பிற இடங்களிலும் நீக்கமற நிறைந்திருப்பது பரம்பொருளின் இலக்கணமாகும் என்றார்.

அந்தப் பரம்பொருளை அடையும் வழியையும் முருகாற்றுப்படை கூறியுள்ளது. 'பரம்பொருளை அடைய வேண்டும் என்னும் ஒரு குறிக்கோளுடன் புறப்பட்டால் போதுமாம். காடு, சோலை முதல் கந்துடைநிலை வரை வேண்டிக் கொண்டவர்கள் விரும்பியவாறு வழிபடலாம். அவற்றை ஏற்றுக் கொண்டு பரம்பொருள் அங்கங்கே உறையுமாம். உறுதியுடன் புறப்பட்டால், புறப்பட்ட உடனேயே விரும்பிய நிலையை அடையலாம் என்று நக்கீரர் உணர்ந்து உணர்த்தியுள்ளார்.

'இன்னே பெறுதி நீ முன்னிய வினையே' என்றே கூறியுள்ளார். அறிவு நிலையால் தத்துவ விசாரணையில் ஈடுபட்டவரும் உணர்வு நிலையால் எளிய நிலையில் நின்ற மனமும் 'புறப்பட வேண்டும்' என்ற ஓர் உறுதியைப் பெற்றால் நினைத்த பயன் கிட்டும் என்றார். அந்த உறுதிதான் பக்தி என்றார்.

நக்கீரரின் பக்தி அனுபவமே சுந்தரருக்கும் உண்டானது. என்பதனை அவர் தம் வரலாற்றில் காணும் சிறப்பு நிகழ்ச்சிகளால் அறியலாம். தடுத்தாட் கொள்ளல், வன் தொண்டராதல், தம்பிரான் தோழராதல் அடியவர்க்கு அடியவராதல் ஆகிய நான்கு சிறப்பு நிகழ்ச்சிகளும் சுந்தரரின் அனுபவ நிலைகளே எனலாம். உறுதியுடன் புறப்பட்டால் நினைத்த பயன் உடனே கிட்டும் என்றார் நக்கீரர். 'வேண்டுநர், வேண்டியாங்கு வழிபட ஆண்டாண்டு உறையினும்' பரம் பொருளைக் கண்டவுடன் தம் உறுதியை மறந்து அதனைப் புகழத் தொடங்குவதும் ஒருவகைத் தடைதான். உறுதிக்கு நன்மையால் விளையும் தடையது.

கைதொழுதும் காலில் விழுந்து வணங்கியும் பலபடப் பரம் பொருளைப் பாராட்டியும் மயங்குதல் ஒரு தடை. பரம் பொருளைப் புகழுதல் இயலாத ஒன்று என்பதை அதுவே உணர்த்தும் தன்னைப் புகழ்வதைத் தடுத்து ஆட்கொள்ளும் இதை உணர்ந்தே சுந்தரர்


"செய்ய சேவடி நீங்கும் சிறுமையேன்
மையல் மானுடமாய் மயங்கும் வழி
ஐயனே தடுத்து ஆண்டு அருள்செய்"
என்று வேண்டினார்." ,,


மையல் மானுடமாய் மயங்கும் வழியைத் தடுக்க வேண்டினார் மக்களை மக்களாய்ப் பார்ப்பதும் அவருள் பரம் பொருளைப் பாராததும் மானுடமாய் மயங்கும் வழி. அதுமட்டுமல்ல பரம்பொருளைத் தன்னிலிருந்து விலக்கிப் பார்க்கும் நிலையும் மானுடமாய் மயங்கும் நிலையாகும். இவற்றிலிருந்து தாமே விலக முடியாமல் கிடப்பேன் என்றார். அதனால் இறை வந்து தடுத்தாட் கொண்டது பரம்பொருளைப் பரம் பொருளாக மட்டுமே கண்டு புகழ்ந்து நக்கீரரின் அனுபவத்தினை இறை தடுத்து 'நின்னடி உள்ளி வந்தனன்' என்று கூறுமாறு செய்து ஆட்கொண்டது. சுந்தரனாயும் தடுத்தாட் கொண்டது பரம்பொருள்.

இறையடி உள்ளியபின், பரம்பொருளுக்கே தொண்டு செய்யும் சூழல் ஏற்படும். அதற்கு மாறான சூழ்நிலைகள் தோன்றினாலும் பரம் பொருளுக்குத் தொண்டு செய்வதி விருந்து மாறமாட்டார்கள். நக்கீரரும் மாறினாரல்லர். பரம்பொருளின் வான் புகழை நயந்த வன் தொண்டரானார். இடையறாது இறைக்குத் தொண்டாற்றினார். சுந்தரரும் வன்தொண்டராய்த் தொண்டாற்றினார். நக்கீரர் வன்தொண்டு ஆற்றியதைக் கண்டு பரம்பொருள் பெறலரும் பரிசில்' ஈந்தது. தன்னோடு கலக்கச் செய்தது. நக்கீரர் இறையோடு இயைந்து இவ்வுலகில் தொண்டாற்றலானார். சுந்தரரும் வன்தொண்டால் பரம் பொருளுடன் கலந்ததை அறிந்தார். 'தோழமையாக உமக்கு நம்மைத் தந்தனம்' என்றது பரம்பொருள். தம்பிரான் தோழரானார். நக்கீரர் அனுபவமே சுந்தரருக்கும் வாய்த்தது.

தாம் பெற்ற அனுபவ உயர் நிலையைத் தொண்டர்க்குத் தொண்டராக இருந்து உலகினுக்கு உணர்த்தினார் நக்கீரர். அடியவர்க்குத்தானே வந்து அருளும் பரம் பொருள் என்று உரைத்தார். பரம்பொருளை அடியவர் களிடத்து ஆற்றுப்படுத்தும் இரண்டறக் கலந்த நிலை தம்பிரான் தோழரான நிலை – திருமுருகாற்றுப்படை பாடியதால் விளங்குகின்றது. அடியவர்க்கு அருள வரும் பரம்பொருள் என்பதால் அதுவே அடியவர்க்கு அடியவராகிறது. தாம் இறையுடன் இயைந்ததால் தாமும் அடியவருக்கு அடியவரானார். தம்பிரான் தோழரான சுந்தரரும் 'அடியார்க்கும் அடியேன்' என்று பாடினார். அடியார் சிறப்பினைத் தொகுத்துத் திருத்தொண்டத் தொகைபாடி அடியார்க்கு அடியேன் எனக் காட்டினார்.

சங்க காலம் தொடங்கி பக்தி அனுபவம். ஒரு நிலையாக உள்ளது என்பதும் அது தோன்றி வளர்ந்து சிறப்புப் பெறுகின்றது என்பதும் நக்கீரர். சுந்தரர் பக்தி அனுபவம் உணர்த்தும் முடிவிலாத பொருளான பரம் பொருளிடத்து உறுதியுடன் புறப்பட்டால் எளிதில் அது வந்து சேரும் என்பதையே நக்கீரரும் சுந்தரரும் நமக்கு உரைத்தனர். உறுதியே பக்தி என்பதும் இதனால் நன்கு விளங்கும்.





தேவார மூவர் இசைத் தொண்டு

(டாக்டர். த. அமிர்தலிங்கம். எம்.ஏ., பிஎச்.டி)
ஆசிரியர். திருக்கோயில்'

முன்னுரை

ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே" என்று இறைவனைப் போற்றுகிறார் அப்பர் சுவாமிகள். "ஏழிசையாய், இசைப்பயனாய்" என்று பாடுகிறார் சுந்தரமூர்த்தி சுவாமிகள். இசையாகவும், இசையின் பயனாகவும் இறைவனே விளங்குகின்றான் என்பதை வேதமும் சொல்கிறது: தமிழ் வேதமாக விளங்கும் தேவாரமும் அவ்வாறே கூறுகிறது என்பதைத்தான் அப்பர் சுவாமிகள் சுந்தர மூர்த்தி சுவாமிகள் வாக்கிலிருந்து அறிந்து கொள்கிறோம்.

ஓசையிலிருந்துதான் இறைவன் சகலலோகங்களையும் படைக்கிறான். சிவபெருமான் தம் ஒரு திருக்கரத்தில் கொண்டு விளங்கும் உடுக்கையின் ஓசையால் ஈரேழு பதினாலு உலகங்களையும் சகல ஜீவராசிகளையும் படைக்கின்றார். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் இவை ஈசனின் பஞ்ச கிருத்தியங்கள். இதில் படைத்தல் எனும் முதல் கிருத்தியமே உடுக்கையிலிருந்து எழும் இசையால் தான் நிகழ்கிறது என்பதைத் "தோற்றம் துடியதனில்" எனும் உண்மை விளக்கப் பாடலால் அறிகிறோம்.

கலைகளுக்குத் தெய்வமான சரஸ்வதி கையில் வீணை வைத்திருப்பது நம் எல்லோருக்கும் தெரியும். பரமேசுவரரின் பத்தினியான பராசக்தியும் கையிலே வீணை வைத்திருக்கிறாள்.

"ஸரிகமபதநி ரதாம் தாம்
வீணா ஸங்கிராந்த சாந்த ஹஸ்தாந்தம்"

நவரத்தின மாலா ஸ்தாத்திரத்தில் காளிதாஸர் இப்படிக் கூறுகிறார். அம்பாள் விரல் நுனியால் வீணையை மீட்டிக் கொண்டிருக்கிறாள். ஸரிகமபதநி என்ற ஸப்த ஸ்வரங்களின் இசையில் திளைத்து ஆனந்திக்கிறாள் என்பது இதன் பொருள்.

சட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்தியமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் இவை சப்த சுரங்களாகும். இப்பெயர்களின் முதல் எழுத்துக்களைச் சேர்த்துத்தான் சரிகமபதநி என்று வழங்குகிறோம்.

அம்பாள் சாந்தமயமாக இருப்பதற்குக் காரணமே இசைதான். அவள் மென்மையான அருள் உள்ளம் கொண்டு அடியார்களுக்குத் திருவருள் செய்ய காரணமாக இருப்பதும் இசைதான்.

"சாந்தாம் ம்ருதுள ஸ்வாதாந்தாம்
குசபரதாந்தாம் நமாமி சிவகாந்தாம்"

அம்பிகை சங்கீதத்தில் அமிழ்ந்திருப்பதானல்தான், சாந்த ஸ்வரூபிணியாகவும், ஸங்கீத அனுபவத்தினால்தான் அவளுடைய உள்ளம் புஷ்பத்தைப் போல மிருதுவாகவும், மென்மையாகவும், கருணை மயமாகவும் ஆகியிருக்கிறது என்று தொனிக்கும் வகையில் காளிதாசர் பாடியிருக்கக் காண்கிறோம்.

அம்பாளைப் போலவே ஈசுவரனும் கூட வீணை வாசிக்கும் திருக்கோலம் கொண்டிருக்கிறார். தும்புரு, நாரதர், சுகர் ஆகியோர் இசைஞானம் போதிக்க வேண்டும் என்று வேண்ட, வீணை தாங்கி வாசித்துக் காட்டி அரிய இசை நுணுக்கங்களை அம்முனிவர்களுக்குப் போதித்திருக்கிறார். வீணா தட்சிணாமூர்த்தி என்ற திருநாமம் அப்போது அவருக்கு உண்டானது. ஈசன் வீணை வாசித்து, நவகோள்களின் கொடுமைகளை நீக்குகிறான் என்று திருஞான சம்பந்த சுவாமிகளும் 'கோளறு பதிகத்தில்' பாடியிருக்கக் காண்கிறோம்.

"வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே"

திருஞான சம்பந்தர் அருளியிருக்கும் இப்பாடல் கோளறு பதிகத்தின் முதல் பாடல். சிவபெருமான் வீணை வாசித்து கோள்கள் தீமை செய்யாத வண்ணம் தடுத்தாட்கொள்கிறார் என்பதை "திராவிட சிசு" என்று ஆதிசங்கரரால் போற்றப்படும் திருஞானசம்பந்தர் இப்பதிகத்தில் கூறியிருக்கக் காண்கிறோம். எங்கும் நீர்மயமாகி ஊழிப் பெருவெள்ளத்தில் உலகம் ஒடுங்கி விட்ட பிறகு, மீண்டும் உலகத்தை வீணை வாசித்தே உண்டாக்குவார் சிவபெருமான். இதனை அப்பர் சுவாமிகள்

"பெருங்கடல் மூடிப் பிரளயம் கொண்டு
பிரமனும்போய்
இருங்கடல் மூடி யிறக்கும் இறந்தான் களேபரமும்
கருங்கடல் வண்ணன் களேபரமுங் கொண்டு
கங்காளராய்
வருங்கடல் மீளநின்றெம் இறைநல்வீணை
வாசிக்குமே"

என்று பாடக் காண்கிறோம்.

அசுவதரன், கம்பளதரன் என்று இரு கந்தர்வர்கள் சிவபெருமானை வேண்டித் தவம் செய்து சிவபெருமானின் குண்டலமானார்கள். சிவபெருமானின் செவிகளில் குண்டலமாக இருந்து கொண்டு, இடைவிடாமல் இசைபாடி ஈசனை மகிழ்விக்கிறார்கள். அவ்விருவரும் என்றும் புராணங்கள் கூறுகின்றன.

ஏழிசையாக, இசைவடிவாக, இசைப் பயனாக விளங்கும் இறைவன், இனிய இசைக்கு உருகி விடுகிறான். "வேத அத்தியயனம், யோகம், தியானம், பூஜை முதலானவற்றைக் கஷ்டப்பட்டு அப்பியசிப்பதால் கிடைக்கிற ஈசுவரானுபவத்தைத் தெய்வீகமான சங்கீதத்தின் மூலம், நல்ல ராக தாள ஞானத்தின் மூலம் சுலபமாகவும் சௌக்கியமாகவும் பெற்றுவிடலாம் என்கிறார்கள் ஆன்றோர்கள். சிவபெருமானின் நெற்றிக் கண்ணின் நெருப்பும் கூட, இனிய இசையால் குளிர்ந்து போகுமாம். "நெற்றி தனிக் கண் நெருப்பைக் குளிர்விக்கும் கொற்றைத் தனியாழ் குல முனிவன்" என்று நாரதரின் வீணை இசைச் சிறப்பு போற்றப் படுகிறது நளவெண்பாவிலே.

ஆயகலைகள் அறுபத்து நான்கிலும் தலையானது என்று பெருமையுடையது இசைக்கலை. தெய்வீகமானது இசைக்கலை, கடவுளிடம் மனிதரையும், மனிதனிடம் கடவுளையும் இசைய வைப்பது இசை. நாடு மொழி மதம் நிறம் முதலான பேதங்களையெல்லாம் போக்கி அனைவரிடமும் ஒருமைப்பாட்டு உணர்வை ஏற்படச் செய்வது இசையேயாகும்.

இசைக்கு நல்லார் பொல்லார், கற்றார், கல்லார், சிறியார், பெரியார், இல்லறத்தார், துறவறத்தார், ஆண்டான் அடிமை என்ற பேதமொன்றும் இல்லை. எல்லோரும் இனிய இசைக்கு மயங்குவர். மதயானையும் யாழிசைக்கு மயங்கும். ஆடு, மாடுகளும் குழலிசைக்கு மயங்கும் நச்சரவும் மகுடிக்கு மயங்கும்.

இறைவனுக்குகந்த நிவேதனப் பொருள் இசைதான். இசையின் மூலம்தான் நாம் இறைவனிடம் பக்தி கொள்ள முடியும். இவ்வுண்மை உலகம் முழுமைக்கும் ஒத்ததாகும். ஓரொரு தொண்டிற்கு ஓரோரு குறிப்பிட்ட பயனைத் தரும் இறைவன் இசைத் தொண்டு புரிவாருக்கு அளவே இல்லாமல் பயன் தருவான் என்று போற்றுகிறார், அப்பர் பெருமான்.

"விளக்கினால் பெற்ற இன்பம்
மெழுக்கினால் பதிற்றி யாகும்
துளக்கிநன் மலர்த் தொடுத்தால்
தூயவின் ஏறலாகும்
விளக்கிட்டார் பேறு சொல்லின்
மெய்ந்நெறி ஞானமாகும்
அளப்பில கீதம் சொன்னார்க்கு
அடிகள் தாம் அருளுமாறே"

இசைத் தொண்டு புரிந்தவர்க்கு என்ன பயன் கிடைக்கும் என்பதை என்னால் அளவிட்டுக் கூற முடியாது என்றே அப்பர் சுவாமிகள் இப்பாடலில் கூறியிருக்கக் காண்கிறோம்.

ஆணவம் மிகுந்த அரக்கன் இராவணனுக்கு அன்று சிவபெருமான் அருள் செய்யக் காரணமாய் இருந்தது அவன் பாடிய இசை, எளிய பாணபத்திரன் பொருட்டு வேதங்கள் காண முடியாத திருமுடியில் இறைவனால் விறகு சுமக்க, காரணமாக இருந்தது பாணபத்திரரின் இசைத் தொண்டே, திருஞானசம்பந்தர் நாளும் இன்னிசையால் பக்தியினை வளர்த்த பாங்கினை நாம் அறிவோம்.

அவர் மேக ராகக் குறிஞ்சிப் பண்ணில் பாடியருளிய தேவாரத் திருபாடல்களைப் பாடினால் வறண்ட கோடை காலத்திலும் கூட மழை பொழிவதை இன்றும் கண் கூடாகக் காணலாம்.

அன்னை பராசக்தியிடம் ஞானப்பால் உண்டு தேவாரம் பாடத் தொடங்கிய திருஞானசம்பந்தரின் வடிவமே இசைவடிவம் என்கிறார் சேக்கிழார்.

"ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்
தேனக்க மலர்க்கொன்றை செஞ்சடையார் சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்"

என்பது பெரிய புராணம். திருஞான சம்பந்தர் சமணருடன் நிகழ்த்திய புனல் வாதம், அனல் வாதம் புகழ் பெற்றவை.

திருநீறு பூசுவதையே குற்றம் என்று கூறிய பாண்டியனைத் திருநீற்றால் குணப்படுத்தி திருநீறு பூசச் செய்த சைவ சமயத்தைத் திருஞான சம்பந்தர் மீண்டும் தமிழகத்தில் தழைக்கச் செய்தார் என்றால் அதற்குக் காரணம் அவருடைய தமிழிசைத் தொண்டு. திருஞான சம்பந்தருக்கு இறை வனே திருக்கோலக்காவில் பொற்றாளம் வழங்குகிறார். அவருடைய தேவாரப் பாடல்களுக்கு உடனிருந்து இசை மீட்ட திருநீலகண்ட யாழ்ப்பாணரை அனுப்பிவைக்கிறார். நாளும் இன்னிசையால் தமிழ் வளர்த்த ஞானசம்பந்தர் நிகழ்த்திய பக்தி இயக்கத்தால்தான் தமிழ் இயக்கத் தால்தான் சைவ சமயம் தமிழகத்தில் உயிர் பெற்றுத் தழைத்தது என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

"தென்னவன் தனக்கு நீறு சிரபுரச் செல்வர் ஈந்தார்
முன்னவன் பணிந்து கொண்டு முழுவதும் அணிந்து
கொண்டான்
மன்னன் நீறு அணிந்தான் என்று மற்றவன் மதுரை
வாழ்வார்
துன்னிநின் றார்கள் எல்லாம் தூயநீறு அணிந்து
கொண்டார்"

"பூதிமெய்க்கணிந்து வேந்தன் புனிதனாய் உய்ந்தபோது
நீதியும் வேத நீதியாகியே நிகழ்ந்த தெங்கும்
மேதினி புனிதமாக வெண்ணீற்றின் விரிந்த ஜோதி
மாதிரம் தூய்மை செய்ய அமணிருள் மாய்ந்ததன்றே"

என்று சேக்கிழார் பெருமான் அமணிருள் மாய்க்க அவதாரம் செய்த திருஞான சம்பந்தர் தமிழிசை இயக்கத்தால், அமணிருள் மாய்த்து வெண்ணீற்றின் விரிந்த சோதியைத் தழைக்கச் செய்த வரலாற்றைத்தான் மிகமிக விரிவாகப் பாடுகிறார். 4253 செய்யுட்களால் ஆன பெரிய புராணத்தில் 1256 பாடல்கள் தமிழ் இசை இயக்கத்தால் சைவம் தழைக்கச் செய்த திருஞான சம்பந்தர் வரலாறு கூறுவது. ஆகவேதான் பெரிய புராணத்தையே "பிள்ளைபாதி புராணம் பாதி" என்று சிறப்பிக்கிறார்கள் ஆன்றோர்கள்.

இவ்வாறு தமிழ் ஞான சம்பந்தர் என்றே தம்மை அழைத்துக் கொண்ட திருஞான சம்பந்தரின் வெற்றிக் கெல்லாம் அவர்தம் இசைத் தொண்டே காரணம் என்று போற்றுகிறார் சுந்தர மூர்த்தி நாயனார்.

"நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும்
ஞானசம்பந்தனுக்கு உலகவர்முன்
தாளம் ஈந்து அவன் பாடலுக்கிரங்கும்
தன்மையாளன்"

என்கிறார் சுந்தரமூர்த்தி நாயனார். ஆகவே திருஞான சம்பந்தரின் வெற்றி தமிழிசையின் வெற்றி.

மகேந்திரவர்ம பல்லவனைச் சைவன் ஆக்கித் திருநாவுக்கரசர் வெற்றி கொண்டார் என்றால் அதுவும் தமிழ் இசையின் வெற்றிதான்.

"சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடு இசைப்பாடல் மறந்தறியேன்"

என்று இசைப்பாடலை மறந்தறியேன் என்று உறுதி கூறிய பிறகுதான் இறைவனார் அவர் தம் சூலை நோயை போக்கிப் பல அற்புதங்கள் ஆற்றவும் அருள் புரிந்தார் என்பதைக் காண்கிறோம்.

சுந்தர மூர்த்தி நாயனாரை வயோதிக அந்தணர் கோலத்தில் வந்து வழக்காடித் தடுத்தாட்கொண்ட போது இறைவனார் தமக்கு விருப்பமான அர்ச்சனை அடியவர் பாடும் இசைப்பாட்டே என்று அறிவிக்கவும் காண்கிறோம்.

"மற்றுநீ வன்மை பேசி வன்தொண்டன் எனும் நாமம்
பெற்றனை நமக்கும் அன்பின் பெருகிய சிறப்பின் மிக்க
அர்ச்சனை பாட்டே யாகும் ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடுகென்றார் தூமறை பாடும் வாயார்"

இவ்வாறு சிவபெருமான் தமக்கு விருப்பமான அர்ச்சனை பாட்டு என்று அறிவுறுத்த சுந்தரர் பாடியமையால் தானே அவருடைய பாடல்கள் எல்லாம் திருப்பாட்டு என்றே வழங்கிடக் காண்கிறோம்.

அங்கும் இங்குமாகச் சிதறிக் கிடந்த இந்தத் தேவாரப் பாடல்களை முழுமையாக நமக்குத் தொகுத்தருளியவர் நம்பியாண்டார் நம்பிகள். திருநாரையூர் பொள்ளாப் பிள்ளையார் (சுயம்பு மூர்த்தியாதலால் இப்பெயர்) பக்தரான நம்பியாண்டார் நம்பிகளை நாடித் தேவாரப் பாடல்களைத் தொகுத்துத்தர வேண்டினார் இராஜ இராஜசோழ மன்னன். தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய இராஜராஜ சோழன்தான் இவர். பொள்ளாப் பிள்ளையார் திருவருளால் தேவாரப் பாடல்கள் தில்லையம்பலத்தின் கண் ஓரறையில் வைத்துப் பூட்டப்பட்டிருப்பதை அறிந்து, தில்லை மூவாயிரவரை அணுகித் திருக்கதவம் திறந்தருளுமாறு வேண்டினர் நம்பியாண்டார் நம்பிகளும் இராஜராஜ சோழனும். "தேவாரம் பாடிய மூவரும் வந்தால்தான் திருக்கதவம் தாள் திறப்போம்" என்று மறையவர் கூற, நம்பியாண்டார் நம்பியின் ஆலோசனை பேரில், இராஜராஜ சோழன் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவர்தம் திருவுருவச் சிலைகளை எழுந்தருளச் செய்தார். மூவர் வந்த பிறகு திருக்கதவம் தாள் திறந்து விட்டனர் தில்லை மறையவர்கள். அவ்வறையில் இருந்த ஏடுகள் பல கரையானால் அரிக்கப்பட்டு காணப்பட இருவரும் வருந்த, "தேவையான திருமுறைகளை வைத்து மற்றவற்றைத்தான் செல்லரிக்கச் செய்தோம்" என முழங்கியது அசரீரி.

பின்னர் நம்பியாண்டார் நம்பிகள் திருமுறை ஏடுகளை நன்கு ஆய்ந்து திருஞான சம்பந்தர் அருளி நமக்கு கிடைத்த 385 திருப்பதிகங்களை முதல் மூன்று திருமுறைகளாகவும், திருநாவுக்கரசர் அருள நமக்குக் கிடைத்த 315 திருப்பதிகங்களை 4, 5, 6 திருமுறைகளாகவும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருள நமக்குக் கிடைத்த 100 திருப்பதிகங்களை ஏழாம் திருமுறையாகவும் வகுத்தருளினார். இராஜராஜ சோழனும் "திருமுறை கண்ட சோழன்" எனும் பெயர் பெற்றான். இதே கால கட்டத்தில்தான் நாதமுனி என்னும் வைணவப் பெரியார் பெருமுயற்சி செய்து ஆழ்வார்கள் பாடிய பாசுரங்களை நாலாயிரத் திவ்விய பிரபந்தமாகத் தொகுத்தருளினார்கள்.

தேவாரம் பாடிய மூவரோடு திருவாசகம் பாடிய மணிவாசகரையும் சேர்த்து சைவ சமயக் குரவர் நால்வர் என்று உலகம் போற்றுகின்றது. "நாலுபேர் சென்ற வழியில் நாமும் செல்ல வேண்டும்" என்று நாட்டில் ஒரு பழமொழி வழங்குகிறது. திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் சென்ற பக்தி வழியில் நாமும் செல்ல வேண்டும் என்பதுதான் இதன் பொருள்.

"சொற்கோவும் தோணிபுரத் தோன்றலும்எம் சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகனும் – முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே மாமறைநூல் தானெங்கே
எந்தைபிரான் ஐந்தெழுத்தெங்கே"

என்று ஆன்றோர் ஒருவர் பாடியிருப்பதற்கிணங்க தேவாரம் பாடிய மூவரும், மாணிக்கவாசகரும் நம்மிடையே தோன்றாமல் போயிருந்தால், சைவ சமயம் இன்றுள்ள சிறப்போடு இருந்திருக்க இயலாது என்பது உண்மையான கருத்தேயாகும்.

தேவாரத்திலுள்ள ஒவ்வொரு பாடலும் ஒரு மந்திரம் ஆகும். பக்தியுடன் தேவாரப் பாக்களை நாளும் "காதலாகிக் கசிந்துருகிக் கண்ணீர் மல்கி" ஓதுவோம் ஆகில் தீவினைகள் நீங்கும்; வாழ்வின் நலங்கள் ஓங்கும். கிடைத்தற்கரிய இறைவனுடைய திருவடிப்பேறு எளிதில் கிட்டும்.

தேவாரப் பாடல்கள் என்னென்ன அற்புதங்கள் புரிந்திருக்கின்றன என்பதையெல்லாம் நமக்குச் சான்றோர்கள் தொகுத்துப்பாடி அருள் செய்திருக்கிறார்கள்.

"புனலில் ஏடெதிர் செல்லெனச் செல்லுமே
புத்தனார் தலைத்தெனத் தத்துமே
கனலில் ஏடிடப் பச்சென்றி ருக்குமே
கதவு மாமறைச் காட்டில் அடைக்குமே
பனையில் ஆண்பனை பெண்பனை ஆக்குமே
பழைய என்பு பொற்பாவைய தாக்குமே
சினவரா வெவ்விடம் தீர்கெனத் தீர்க்குமே
செய்ய சம்பந்தர் செந்தமிழ்ப் பாடலே"

இது திருஞான சம்பந்தர் அருளியிருக்கும் தேவாரப் பாடலின் சிறப்பை எடுத்துரைக்கும் அற்புதப் பாடலாகும். இதைப் போலவே திருநாவுக்கரசர், சுந்தரர் அருளியிருக்கும் தேவாரப் பாடல்களின் சிறப்பை எடுத்துரைக்கும் அற்புதப் பாடல்களும் உள்ளன.

அமெரிக்க நாட்டில் ஒரு பிரபல டாக்டர் தம் மருத்துவ மனையின் பிரதான முகப்பில் "இசையை நாடுங்கள்; இசையை நாடினால் என் மருத்துவமனைக்கு வர வேண்டிய தேவையே இருக்காது" என்று எழுதி வைத்திருக்கிறார். சாதாரண இசைக்கே நோய் தீர்க்கும் ஆற்றல் இருக்குமானால், தேவார இசைக்கு எத்தகைய மகத்தான ஆற்றல் இருக்கும் என்பதைப் பாருங்கள்.

"சூர்வாள் அரக்கன்தன் வலியைக் குறைவித்துச்
சீராலே மல்கு சிற்றம்பலம் மேய
நீரார் சடையானை நித்தல் ஏத்துவார்
தீரா நோயெல்லாம் தீர்தல் திண்ணமே"

என்று பாடுகிறார், திருஞான சம்பந்தர். அவரே கொல்லிமழவன் மகள் கொண்ட முயலகன் நோயை "துணிவளர் திங்கள்" எனத் தொடங்கும் பதிகம் பாடிக் குணப்படுத்தியிருக்கக் காண்கிறோம். "திருநீற்றுப் பதிகம்" பாடி பாண்டியன் நெடுமாறன் வெப்பு நோயைக் குணப்படுத்தியிருக்கிறார். நோய் தீர்ப்பதற்கு மட்டும் அல்ல, பொருள் பெருக, சுகப்பிரசவம் ஆக, நவகிரக தோஷம் நீங்க, இழந்த கண் பார்வை பெற, பகைமை விரோதம் நீங்க, வழக்கில் வெற்றி பெற, மனநிம்மதி சாந்தி பெற, களவு போன பொருள் மீளக் கிடைக்க இப்படி எத்தனையோ பலன்களுக்கான அற்புதப் பதிகங்கள் தேவாரத் திருமுறைகளில் இடம் பெற்று விளங்கக் காண்கிறோம்.

எங்கே தேவாரத் திருமுறை இசை இசைக்கப் படுகிறதோ அங்கே இறைவன் எழுந்தருளி அருள் பாலிக்கிறான் என்பதை தேவார திருமுறை பாடிய அருளாளர்களே நமக்குத் தெளிவுபடுத்தியிருக்கக் காண்கிறோம்.

"மனத்தகத்தான் தலைமேலான் வாக்கின் உள்ளான்
வாயாரத் தன்னடியே பாடும் தொண்டர்
இனத்தகத்தான்"

என்கிறார் திருநாவுக்கரசு சுவாமிகள்.

"பண்ணும் பதம் ஏழும்
பல்லோசைத் தமிழவையும்
உள்நின்றதோர் சுவையும்
உறுதாளத்து ஒலிபலவும் ஆனான்"

என்று இறைவனே பாடற் பண்ணாக அவற்றின் சுரங்களாக தாளமாக விளங்குகிறான் என்கிறார் திருஞான சம்பந்தர்.

தேவாரத் திருமுறைகளில் தக்கராகம், பழந்தக்கராகம், தக்கேசி, குறிஞ்சி, வியாழக் குறிஞ்சி, மேகராகக் குறிஞ்சி, யாழ்மூரி, இந்தளம், சீகாமரம், காந்தாரம் பியந்தைக் காந்தாரம், நட்டராகம், செவ்வழி, காந்தார பஞ்சமம், கொல்லி, கொல்லிக் கௌவாணம், கௌசிகம், பஞ்சமம், சாதாரி, பழம்பஞ்சுரம், புறநீர்மை, அந்தாளிக் குறிஞ்சி, செந்துருத்தி, நட்டபாடை முதலான பண்கள் பயின்று வந்துள்ளன.

திருமுறைகளில் வரும் பண்களுக்கு இன்றைக்கு வழங்கப்படும் பெயர்கள்தான் மாறியுள்ளன.

திருமுறைப் பண்களும் அதற்கான இராகங்களும் பின்வருமாறு :

1. நட்டபாடை	கம்பீரநாட்டை
2. தக்கராகம்	காம்போதி
3. காந்தாரம்	நவரோசு
4. செவ்வழி	யதுகுலகாம்போதி
5. அந்தாளிக்குறிஞ்சி	சாமா
6. பழம் பஞ்சுரம்	சங்கராபரணம்
7. மேகராகக் குறிஞ்சி	நீலாம்பரி
8. கொல்லி சௌவாணம்	நவரோசு
9. பழந்தக்கராகம்	சுத்தசாவேரி
10. குறிஞ்சி	அரிகாம்போதி
11. நட்டராகம்	பந்துவராளி
12. வியாழக்குறிஞ்சி	சௌராஷ்டிரம்
13. புறநீர்மை	பூபாளம்
14. பஞ்சமம்	ஆஹிரி
15. செந்துருத்தி	மத்யமாவதி

16. தக்கேசி	காம்போதி
17. கொல்லி	நவரோசு
18. இந்தளம்	மாயாமாளவகௌளை
19. சாந்தாரபஞ்சமம்	சேதாரகௌளை
20. கௌசிகம்	பைரவி
21. பியந்தைக் காந்தாரம்	நவரோசு
22. சீகாமரம்	மாயாமாளவகௌளை
23. சாதாரி	பந்துவராளி

ஆகவே இசை மிகத் தொன்மையானது. மிகப் பழமையான இசை என்பதால்தான் தமிழிசையைக் கர்நாடக இசை என்று கூறுகிறோம். சுமார் 2500 ஆண்டு காலத்திற்கு முன்பே தமிழகத்தில் தமிழிசை சிறந்து விளங்கியது என்பதற்கான ஆதாரங்கள் தொல்காப்பியம், பத்துப் பாட்டு, எட்டுத் தொகை முதலான சங்க இலக்கியங்கள் சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி முதலான ஐம்பெருங் காப்பியங்களில் எல்லாம் பரந்து கிடக்கின்றன. இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழும் சிறந்து விளங்கிய பண்டைத் தமிழகத்தின் பெருமையைத் "தெரிமாண் தமிழ் மும்மைத் தென்னம் பொருப்பன்" என்ற பரிபாடல் தொடர் சுட்டுகிறது.

இவ்வாறு மிகத் தொன்மையானது என்பதால்தான் தமிழிசையைக் கருநாடக இசை என்று கூறுகிறோம். இன்றைக்கு சங்கீத மும்மூர்த்திகள் என்று தியாகையர், சியாமா சாஸ்திரி, முத்துசாமி தீட்சிதர் ஆகிய மூவரை வையம் கொண்டாடுகிறது. இவர்கள் எல்லாம் 18 மற்றும் 19ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்து இசைக்கு அருந் தொண்டாற்றிய சான்றோர்கள் ஆவர். இவர்களுக்கும் மிக முற்பட்ட காலத்திலேயே அதாவது கி.பி. ஏழாம் நூற்றாண்டிலேயே தமிழிசைக்கு மகத்தான தொண்டு ஆற்றியவர்கள்தான் இன்றைக்கு ஞாலம் இசை விழா கொண்டாடும் திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசு சுவாமிகளும் ஆவர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டிலே வாழ்ந்திருக்கிறார். அதிலும் திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசு சுவாமிகளும் மிகப் பெரும் எதிர்ப்பிற்கிடையே அரசின் ஆதரவைப் பெற்றிருந்த சமண சமயத்தை எதிர்த்து மிக அற்புதமான இசைப் பணியை ஆற்றி அதன் மூலம் தமிழ் சமயத்தை – தமிழ்ப் பண்பாட்டை – தமிழ் கலை கலாசாரத்தைக் கட்டிக் காத்திருக்கிறார்கள் என்றால் அவர்களுடைய புகழையெல்லாம் உள்ளபடி எடுத்து விவரிப்பதற்குச் சேக்கிழார் பெருமான் கூறுவதைப் போல ஆதிசேஷனுக்கு உள்ளதைப் போல நமக்கும் ஆயிரம் நா வேண்டும்.

தேவாரம் தமிழ்வேதம் : வேதத்தைக் கூறும் போதும் வேதம் ஓதுவது என்றுதான் கூறுகிறோம். தேவாரத்தை சொல்லும் போதும் தேவாரம் ஓதுவது என்றுதான் கூறுகிறோம். இன்னும் சொல்லப் போனால் இசை என்பதையே ஒரு வேதமாக காந்தர்வ வேதம் என்று சிறப்பித்துக் கூறுவார்கள். காந்தர்வ வேதமும், தமிழ் வேதமும் சேரும் போது அங்கே இறைவன் ஓடி வந்து அருள் செய்வான் என்பதில் யாருக்கும் எந்த ஐயமும் வேண்டாம். அவ்வாறான தமிழ் வேதத்தை போற்றும் ஒப்பற்ற ஒரு விழாவான தேவார மூவர் இசைக் கலை விழா மாதங்களில் சிறந்த மார்கழி மாதத்தில் கொண்டாடப்படுவது மிகப் பொருத்தமான ஒன்றாகும்.

வாழ்க தேவார இசை!

வாழ்க தேவார மூவர் திருப்புகழ்!

விபூதி (திருநீறு) அணிவதன் பலா பலன்கள்

விபூதி அணிவது

ஐஸ்வர்யம் அளித்தும் பரிசுத்தமாக்கியும் பாவங்களிலிருந்து விலக்கியும் சர்வ உபத்ரவங்களை நசித்தும் சௌபாக்கியத்தைக் கொடுத்தும் சம்பத்துக்களை அளித்தும், பூத, ப்ரேத, பிசாச, ராக்ஷஸ கணதோஷங்களினின்றும் காப்பாற்றியும் மோக்ஷத்தையும் அளிக்கின்றது.

விபூதி அதாவது திருநீறு

நான்கு வகைப்படும்.

1. கல்பம், 2. அணுகல்பம், 3. உபகல்பம், 4. அகல்பம்

அவைகளின் விபரங்கள்:-

1. கல்பம்:- வியாதியில்லாத கன்றுடன் கூடிய பசுவின் சாணம், பூமியில் விழாமல் தாமரை இலையில் வாங்கி, உருண்டையாக்கி, பஞ்ச பிர்ம்ம, மந்திரங்களால் சிவாக்னியில் எரித்து எடுப்பது கல்பம் எனவும்;

2. அணுகல்பம்:- காடுகளில் கிடைக்கும் பசும் சாணங்களைக் கொண்டு சிவாக்னியில் தகித்துத் தயாரிப்பது அணுகல்பம் எனவும்;

3. உபகல்பம்:- மாட்டுத் தொழவங்களிலும், மாடுகள் இருக்கும் இடங்களிலும் இருந்து எடுத்த சாணத்தைக் காட்டுத் தீயில் எரித்து அதையே மறுபடியும் சிவாக்னியில் எரித்து எடுப்பது உபகல்பம் எனவும்;

4. அகல்பம்:- மந்திரமில்லாமல் எல்லோராலும் சேகரித்த சாணத்தைக் கொண்டு சுள்ளிகளால் எரிக்கப்பட்டு எடுப்பது அகல்பம் எனவும் நான்கு வகைப்படும்.

— அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயில் கும்பாபிஷேக மலர்
4.4.1976 - பக்கம் 274



சைவம் வைணவம் ஒப்பீடு

அருங்கலைக்கோன், தமிழ்ப் பேரவைச் செம்மல்
பேராசிரியர். டாக்டர். ந. சுப்புரெட்டியார். எம்.ஏ., பிஎச்.டி.

உலகம் தோன்றிய நாள் தொட்டு மக்களிடையே சமயம் என்ற ஒன்று நிலவி வருகின்றது; உலவி வருகின்றது என்றும் சொல்லலாம். சமயத்தையும் மக்களையும் தனித் தனியே பிரித்தற்கியலாது. மக்களும் தனித்து வாழ இயலாத நிலையில் உள்ளனர். சமயம் என்பது என்ன? 'சமயம்' என்ற சொல்லுக்கு நெறி, கொள்கை என்னும் சில பொருள்கள் உள்ளன. ஒருவர் நாள் தோறும் தம் கொள்கையை நெறிப்பட நடத்துதற்கு சில நற்கொள்கைகளை வகுத்துக் கொள்ள வேண்டுமன்றோ? இந்த நற்கொள்கைகளின் கூட்டமே சமயம் என்று வழங்கப்பெறுகின்றது. இங்ஙனம் உலகில் தோன்றியுள்ள சமயங்கள் பலப்பல. அவற்றுள் சைவம், வைணவம் என்ற இரண்டும் வேதத்தை அடிப்படையாகக் கொண்டவை யாதலான், அவை 'வைதிக சமயங்கள்' என வழங்கப் பெறுகின்றன.

வைதிக சமயங்களுள் சைவம் சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டுள்ளது. வைணவம் திருமாலை (விஷ்ணு) முழுமுதற் கடவுளாகக் கொண்டுள்ளது. 'விஷ்ணு' என்ற சொல்லுக்கு எங்கும் நிறைந்தது என்பது பொருள். சிவபெருமானும், திருமாலும் முழுமுதற் கடவுள்கள் என்பதைக் கம்பநாடன் மிக அழகாகக் காட்டுவான். இராவணனது மூல பலம் யாவும் இலங்கையில் வந்து திரளுகின்றது. இராமனது கணை மாரியால் மூல பலம் நிர்மூலமாகி விடுகின்றது. இந்நிலையில் இராமனது தோற்றத்தைக் காட்ட வந்த கவிஞன் இராமனை சங்காரத்தை முடித்த நிலையில் சுடுகாட்டில் காணப் பெறும் சிவபெருமானுடன் ஒப்பிட்டுக் காட்டுவான்.

பேய் மொய்த்து நரிகள் ஈண்டிப்
பெரும் பிணம் பிறங்கித் தோன்றும்
ஈமத்துள் தமியன் நின்ற
கறைமிடற்று இறைவன் ஒத்தான்

சங்காரக் காரணனே 'முழுமுதற் கடவுள்' என்ற சித்தாந்த உண்மை இவ்வாறு காட்டப் பெறுகின்றது. அடுத்து, இராமனைத் திருமாலுடன் ஒப்பிடுவான்.

மண்டு நான் மரித்துக் காட்ட
மன்னுயிர் அனைத்தும் வாரி
உண்டவன் தானே யான
தன்னொரு மூர்த்தி ஒத்தான்

இந்தப் பாடலில் 'உலகம் உண்ட' பெருவாயனே முழுமுதற் கடவுள் என்ற வைணவ சித்தாந்தத்தை நிலை நாட்டுவான்.

முத்தொழில்கள்

படைத்தல், காத்தல், அழித்தல் என்பன முத்தொழில்கள். சைவ சித்தாந்தம் சற் காரிய வாதத்தை அடிப்படையாகக் கொண்டது. அஃதாவது 'இல்லது தோன்றாது : உள்ளது அழியாது' என்றதன் அடிப்படையில் அமைந்தது. 'தோன்றுதல்' என்பதும் 'அழிதல்' என்பதும் அவற்றை உடைய பொருள்களின் நிலை மாற்றங்கள். 'அழித்தல்' என்பது 'தூல (பரு) நிலையில் உள்ளவற்றைச் சூக்கும (நுண்) நிலையில் படுத்து ஒடுக்குதலே'யாகும். 'படைத்தல்' என்பது 'சூக்கும நிலையில் உள்ளவற்றைத் தூல நிலையிற் கொணர்தல்' ஆகும். 'காத்தல்' என்பது 'அங்ஙனம் தூல நிலையில் கொணர்ந்தவற்றை அந்நிலையில் நிறுத்துதல்' ஆகும். சங்காரத்தை 'ஒடுங்கின சங்காரம்' என மெய்கண்ட தேவர் குறித்ததும் இது பற்றியே யாகும் என்பது ஈண்டு சிந்திக்கத் தக்கது. இந்த முத்தொழில்களையும் இரு கடவுளர்களும் 'விளையாட்டு' போல் நடத்திக் காட்டுவர். மிகப் பெரிதாகிய உலகத்தை தொழிற் படுத்துவது மிகப் பெரிய தொழிலாயினும் "பேராற்றலை உடைய பெரியோனாகிய முதல்வனுக்கு அஃது ஒரு விளையாட்டுப் போலச் சிறிதும் வருத்த மின்றியே எளிதில் செய்யப் பெறுவதேயாகும்" என்பதுவே 'விளையாட்டு' என்பதன் உட்பொருள். இதனைச் சிவபெருமான்

"காத்தும் படைத்தும் —
கரந்தும் விளையாடி"[3]

செய்வான் என்பது மணிவாசகப் பெருமானின் மணி வாக்கு. திருமாலும் இவ்வாறே முத்தொழில்களையும் செய்விப்பவன் என்பதை

"பூவளர் உந்தி தன்னுள்
புவனம் படைத்து
உண்டு உமிழ்ந்த
தேவர்கள் நாயகன்[4]

என்று திருமங்கையாழ்வாரின் திருவாக்கு எடுத்துக் காட்டும். இக்கருத்துகளை எல்லாம் உள்ளடக்கியப்

1 யுத்த மூல பலம் 231, 232
2 ஷ 232
3 திரு.வா. திருவெம். 12
4 பெரி. திரு. 991

போக்கில் அரியும் சிவனும் ஒன்று என்ற பொது மக்கள் வாக்கில் இந்தப் பேருண்மை விளக்கப் பெறுகின்றது.

தத்துவங்கள்

சைவத்திலும் வைணவத்திலும் தத்துவங்கள் மூன்றாக அமைந்திருப்பது சிறந்த ஒப்பீடாக அமைகின்றது. சைவ சித்தாந்தத்தில் தத்துவங்கள் **பதி, பசு, பாசம்** என்பனவாகும். வைணவ சித்தாந்தத்தில் (விசிஷ்டாத்வைதத்தில்) இந்தத் தத்துவங்கள் **சித்து அசித்து ஈஸ்வரன்** என்ற மூன்றாகும். இந்த இரண்டு சமயங்களிலும் தத்துவங்கள் இவண் நுவலப் பெற்ற முறையில்தான் வழங்கப் பெறும். ஈண்டு சைவத்தில் இறைவன் (பதி), முதலிலும் வைணவத்தில் இறைவன் (ஈஸ்வரன்) இறுதியிலும் குறிப்பிடப் பெற்றுள்ளமை கவனிக்கத் தக்கது. அங்ஙனமே முன்னதில் **பாசம்** இறுதியிலும் பின்னதில் அசித்து நடுவிலும் வந்துள்ளமையும் நோக்கத் தக்கது. மற்றும் முன்னதில் பசு நடுவிலும் பின்னதில் சித்து முதலிலும் வந்துள்ளமை கருதத் தக்கது. இரு சமயங்களிலும் மூன்று தத்துவங்களும் நித்தியப் பொருள்களாக இருப்பனவாகவும் இவை ஒன்றுக்கொன்று சமமில்லாதவை என்று சாற்றப் பெறுகின்றன. இத்தத்துவங்கள் சாதாரண மக்கள் வாக்கில் **கடவுள், உயிர்கள், உலகம்** என்று வழங்கப்பெறும். இவற்றை விரிவாக ஒப்பிட்டு ஆராய்வோம்.

1. இறைவன்

"சங்கார காரணனாயுள்ள முதலையே முதலாக உடைத்து இவ்வுலகம்"[5] என்று கூறுவர் மெய்கண்டார். உலகம் அழிந்த பிறகு சங்காரனைத் தவிர ஒருவரும் இலர் என்ற கருத்தை நிலை நிறுத்துவதற்காகவே இப்பெருமை அவருக்கு ஏற்றிக் கூறப் பெற்றது. மேற்கூறப் பெற்ற படைத்தல், காத்தல், அழித்தல் பற்றிய விளக்கம் ஈண்டு நினைக்கத் தக்கது. இதனால்தான் மெய்கண்டதேவரும் சங்காரத்தை 'ஒடுங்கின சங்காரம்' என்று குறித்ததும் சிந்திக்கத் தக்கது.

வைணவத் தத்துவப்படி இறைவன் உலகத் தோற்றத்தில் மூவகைக் காரணங்களாகவும் உள்ளான். சித்தும் அசித்தும் சூக்குமமாக (நுண்மையாக) இருக்கும் நிலையில், அதாவது உலக உற்பத்திக்கு முன்னர் அவற்றுள் இறைவன் அந்தர்யாமியாக சங்கல்பத்தோடு நின்று இருக்கும் நிலையில்' – இறைவன் உலகிற்கு முதற் காரணமாகின்றான். இங்ஙனம் நுண்ணிய நிலையில் இருக்கும் சித்து அசித்துகளை வெளிப்படுத்தி 'உலகப் படைப்பு செய்வோம்' என்று இறைவன் எண்ணுகின்ற நிலையில் அவன் உலகிற்கு நிமித்த காரணனாகின்றான். இறைவனுடைய **ஞானம், சக்தி** முதலியவையே துணைக் காரணமாகின்றன. சைவ சமயத்தில் தூல நிலை – சூக்கும நிலை – தூல நிலை என மாறி மாறி வரும் என்று கூறப்படுவது. போல ஈண்டும் அவ்வாறு கூறப் பெறுகின்றது. வைணவம் இதனை 'உண்டு – உமிழ்தல்' என்று பேசும். உண்ணல் – அழித்தல் – உமிழ்தல் – படைத்தல். இறைவன் உலகை உண்ட பிறகு ஒருவரும் மீதமாக இருப்பதில்லை. அதனால்தான் இங்கு ஈஸ்வரனே முழுமுதற் கடவுளாக உள்ளான் என்று வைணவத் தத்துவம் பேசும். இவ்வுலகமும், தேவரும், மூவரும், எம்பெருமான், உண்டு உமிழ்ந்த எச்சில்[6] என்பர் திருமங்கையாழ்வார்.

ஐந்து நிலைகள்

இறைவனுக்கு உருவம் உண்டு என்று இரு சமயங்களும் கூறும். வைணவம் தத்துவ நிலையில் இறைவனைப் 'பிரம்மம்' (பெரியது) எனக் குறிப்பிடும். இந்நிலையில் இறைவனுக்கு உருவம், குணம் முதலியன இல்லை. சைவம் இறைவனைச் சொரூப நிலை, தடத்த நிலை என்று இருவகையாகப் பிரித்துப் பேசும். சொரூப நிலையில் உருவம், குணம் முதலியன இல்லை. அடையாளமும் இல்லை. இந்நிலையில் இறைவன் 'பரசிவம்' என்று வழங்கப்படும். இஃது இறைவன் தன்னையே நோக்கி நிற்கும் நிலை, தடத்த நிலை என்பது இறைவன் உலகத்தை நோக்கும் நிலை. இந்நிலையில், இறைவன் தனது ஆற்றலால், பராசக்தி, ஆதி சக்தி, இச்சா சக்தி, ஞான சக்தி, கிரியா சக்தி என ஐந்து நிலைகளாகப் பிரியும். இச்சா சக்தி எப்போதும் செயற்பாட்டுக்குத் துணையாக நிற்கும். மற்ற ஞான சக்தி கிரியா சக்தி ஆகிய இரண்டும் ஒவ்வொன்றும் தனித் தனியாகவும் இணைந்தும் ஏறியும் குறைந்தும் செயற்படும். இதனால் தடத்த நிலைகள் ஐந்து வகைப்பட்டு நிற்கும். ஞான சக்தி மாத்திரம் தொழிற்படும் நிலையில், பதி, 'சிவம்'[1] என நிற்கும். கிரியா சக்தி மாத்திரம் தொழிற்படும் நிலையில் பதி சக்தி என நிற்கும். இரண்டும் ஒப்பத் தொழிற்படும் நிலையில் பதி 'சதா சிவம்'[3] என நிற்கும். ஞான சக்தி குறைந்து கிரியா சக்திமிக்குத் தொழிற்படும் நிலையில் பதி 'மகேஸ்வரன்'[4] என நிற்கும். கிரியா சக்தி குறைந்து நிற்க ஞான சக்தி மிக்குத் தொழிற்படும் நிலையில் பதி 'வித்தியேஸ்வரன்'[5] என நிற்கும்.

வைணவத்தில் இறைவனின் நிலை 'பரம்' – வைகுந்தத்தில் எழுந்தருளியிருக்கும் பர வாசுதேவன்[1] நிலையென்றும், வியூகம்[2] – திருப்பாற் கடலில் வாசுதேவன் சங்கர்ஷணன் பிரத்தியும்னன் அநிருத்தன் என்ற நிலைகள் என்றும் விபவம்[3] எண்ணிறந்தவை, இவை சாட்சாத் அவதாரம், ஆவேச அவதாரம் என இருவகையாகப் பிரியும் என்றும் அந்தர்யாமித்துவம்[4] – எல்லா உயிரினங்களின் இதயங்களில் பெரிய பிராட்டியாருடன் கட்டை விரல் அளவாக எழுந்தருளியிருக்கும் இருப்பு என்றும், அர்ச்சை[5] என்பது சேதனர்களின் விருப்பத்திற்கு ஏற்பப் பலப்பல உருவங்களைக் கொண்டிருத்தல்.

2. உயிர்கள்

சைவத்தில் உயிர் பசு என்று வழங்கப் பெறும் ; உயிர் ஒன்றல்ல ; அளவிறந்தன. பசுவின் அறிவு 'பரதந்தர அறிவு' பிறிதொரு பொருள் அறிவிக்கவே அறியுந் தன்மையுடையது. எப்பொருளைச் சார்ந்ததோ அப்

5 சி.ஞா.போ. சூத்திரம் 1 (வார்த்திகம் 1)
6 பெரி. திரு. 11 : 6 : 2
7 தா.பா : உடல் பொய்யுறவு 22

பொருளின் தன்மையை அடையும்; இது சார்ந்ததன் வண்ணமாதல் என வழங்கப் பெறும். 'பளிங்கனைய சித்து'[7] எனக் குறிப்பிடுவர் தாயுமான அடிகள். சைவம் உயிர்களை மூவகைப் படுத்திப் பேசும். ஆணவ மலம் என்ற ஒன்றையே உடைய உயிர்கள் 'விஞ்ஞான கலர்'[1] என்றும் ஆணவம், கன்மம் என்ற இரு மலங்களையுடைய உயிர்கள் 'பிரளயா கலர்'[2] என்றும் ஆணவம், கன்மம், மாயை மும்மலங்களையுடைய உயிர்கள் 'சகலர்'[3] என்றும் திருநாமமிட்டு வழங்கப் பெறும்.

வைணவத்தில் ஆன்மாக்கள் சித்து எனவும், சேதநர், எனவும் வழங்கப்பெறும். அணுவின் அளவுடையது. கண் முதலிய இந்திரியங்கட்குத் தோற்றாது. அறிவு மயமானது. இறைவன் ஏவியபடி நிற்கும் தன்மையது. இந்த உயிர்கள் எண்ணற்றவை. இவை பத்தர்[1] (தளைப் பட்டிருப்பவர்) முத்தர்,[2] நித்தியர்[3] என மூவகைப் படுவர். பத்தர் என்போர் பகவானின் மாயையால் மறைக்கப் பெற்றவர்கள் ; அநாதி அஞ்ஞானத்தால் தேடிய புண்ணிய பாவமாகிய வினைகளால் சூழப் பெற்றவர்கள் ; அவரவருடைய வினைக்குத் தக்கபடி மாறி மாறி தேவ, மனித, விலங்கு, தாவர வடிவங்களைப் பெற்று துக்க பரம்பரைகளை அநுபவிக்கும் நம் போலியான சமுசாரிகள், முத்தர் என்பவர் இவ்வுலகத் தளைகள் களையப் பெற்றும் பரம பதத்தில் கைங்கர்ய போகரான வர்கள். நித்தியர் என்போர் ஒரு நாளும் சமுசார சம்பந்த உணர்வு இல்லாத அநந்தன், கருடன், சேனை முதலியார் தொடக்க மானவர்கள்.

3. உலகம்

உயிர்களை உலக பாசம் பிணித்து நிற்பதால் சைவம், இதனைப் பாசம் என்று வழங்கும். பாசங்கள் மூன்று. சைவம் அவற்றை ஆணவம், கன்மம், மாயை என வழங்கும். இவற்றுள் மாயை அனைவராலும் எளிதில் உணரப் படுவது. பல்வேறு பிறவிகளாகக் காணப்பெறும் உடம்புகளும், மற்றும் நிலம் நீர் முதலிய பெரும் பொருள்களும் அவற்றினால் ஆக்கப் பெறும் சிறு பொருள்களும் ஆகிய உலகத் தொகுதி முழுவதும் மாயையில் அடங்கும். உலகத்திற்கு மூலகாரணம் மாயையாகும். உலகில் காணப் பெறும் பொருள்கள் யாவும் இதன் காரியமாகும். இக்காரியங்கள் பலவற்றையும், சித்தாந்தம் தனு, கரணம், புவனம், போகம் ஆகும். புவனம் என்பது உலகங்கள் பலவற்றையும் உள்ளடக்கிய அண்டங்கள் பலவற்றை உள்ளடக்கி நிற்கும். அண்டங்கள் எல்லாவற்றிலும் கீழ் உள்ளவை பிருத்வி தத்துவ அண்டங்கள். இந்த அண்டங்கள் ஆயிரங்கோடி என்று சிவாகமங்கள் பேசும். மணிவாசகப் பெருமான் 'நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன' என்று கூறுவார். இந்த அண்டங்களுக்குப் 'பிரமாண்டம்' என்று பெயர். நாம் வாழும் பிரமாண்டப் பகுதி நூறு கோடி யோசனை உயரமுள்ளது. இதன் நடுப் பகுதியே பூமியின் பரப்பாகும். இதுவே பூலோகம் எனப் படுவது. இதன் கீழே அதலம், விதலம், சுதலம், தராதலம், நசாதலம், மகாதலம், பாதாளம் என்கின்ற ஏழு உலகங்கள் உள்ளன. பூலோகத்தின் மேல் புவலோகம் சுவலோகம், மகலோகம், சனலோகம், தவலோகம், சத்திய லோகம் என்ற ஆறு உலகங்கள் உள்ளன.

வைணவம் உலகத்தை அசித்து என்று பேசும். இது அறிவில்லாத பொருள். இஃது அசேதனம் என்றும் வழங்கப் பெறும். அசித்து விகாரத்திற்கு இடமானது. அசித்து சுத்த தத்துவம், மிச்ர தத்துவம், சத்துவ சூனியம் என்று மூவகையாகப் பேசப்பெறும். இவற்றுள் மிச்ர தத்துவமே மூலப்ரகிருதி என்பது. இதில்தான் எம்பெருமான் படைத்த எண்ணிறந்த அண்டங்கள் அடங்கியுள்ளன. வைணவமும் இவற்றைப் பதினான்கு என்று கணக்கிட்டுக் காட்டும். கீழண்ட கபாலத்திற்கு மேல் இருப்பது. கர்ப்போதகம். இதன் மேல் அதலம், விதலம், நிதலம் தராதலம், மகாதலம், சுதலம், பாதாளம் என்கின்ற ஏழு உலகங்கள் உள்ளன. இவற்றின் மேல் நாம் வாழும் பூலோகம் உள்ளது. இந்த உலகத்திற்கு மேல் சூரியனுக்குக் கீழ் புவர்லோகம் சுவர்லோகம் மகாலோகம் சனர் லோகம் தபோ லோகம், சத்திய லோகம் என்ற ஆறு உலகங்கள் உள்ளன.

சைவத்தில் அசுத்தமாயையின் ஒரு பகுதி காலம் என்பது. இஃது இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்ற மூன்றாக நிற்கும். எல்லாக் காலங்களும் உயிர்களின் வினைக்கு[8] ஏற்பச் செலுத்தும் இறைவனது சக்தியின் வழியே தத்தம் காரியத்தைச் செய்யும். எல்லாச் செயல்கட்கும் காலமே பற்றுக் கோடாகும். காலமின்றேல் செயல் இல்லை.

வைணவத்தின் காலம் சத்துவ சூனியம் எனப்படும். இஃது எங்கும் பரவி நிற்கும். ஒரே திரவியம் எதிர், நிகழ் கழிவு என்ற கால நிலைகட்கு இதுவே காரணமாகும். வினாடி நாழிகை முதல் பரார்த்தம் வரையிலுள்ள பகுதிகள் இதன் கூறுகளாகும். இது பரமபதத்தில் நடையாடாது. இந்த உலகில் இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்று செயல்பட்டு நடையாடும்.

4. முத்திக்கு வழிகள்

ஆருயிர்கள் பாசத்தினின்றும் நீங்கிப் பதியினை அடைதற்கு நான்கு நெறிகள் சைவத்தில் பேசப் பெறுகின்றன. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவை. சரியையைத் தாச மார்க்கம் (தொண்டு நெறி) என்றும், கிரியையைச் சத்புத்திர மார்க்கம் (மகன்மை நெறி) என்றும், யோகத்தைச் சக மார்க்கம் (தோழமை நெறி) என்றும், ஞானத்தைச் சன்மார்க்கம் (நன்னெறி) என்றும் வழங்குவர் சித்தாந்திகள். இவற்றிற்கு எடுத்துக் காட்டுகளாக நாவுக்கரசர், ஞானசம்பந்தர், தம்பிரான் தோழர், மாணிக்க வாசகர் என்ற நால்வரையும் காட்டுவர் சைவப் பெருமக்கள். சரியை முதலிய மூன்றும் ஞானத்தின் வளர்ச்சி நிலைகளே என்ற பேருண்மையை

'விரும்பும் சரியை முதல்
மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்புமலர் காய்கனி போல்
அன்றோ பராபரமே!'

---

8 இரண்டு சமயங்களும் வினையை (கன்மத்தை) ஆகாமியம் (எதிர்வினை) சஞ்சிதம் (பழவினை) பிரார்த்தம் (ஊழ்வினை) நுகர்வினை என்று பேசும்.

என்ற தாயுமானவ அடிகளின் திருவாக்காலும் அறிய லாம். சரியை – அரும்பு, கிரியை – மலர், யோகம் – காய், ஞானம் – கனி என்ற அடிகளின் விளக்கம் அற்புதமாய் அமைந்துள்ளது

வைணவத்தில் முத்திக்குரிய நெறிகளை இதம் (ஹிதம்) என்று வழங்குவர். இங்கு சித்தோபாயம், சாத்தியோ பாயம் என்ற இரு நெறிகள் பேசப் பெறுகின்றது. சித்தோபாயம் என்பது முன்னேயுள்ள நெறி இது சர்வேஸ்வரன் நாயக – நாயகி பாவனையில் வரும். 'மகள் பாசுரத்தில்' இந்த உபாயம் சிறப்புற்று ஓங்கியிருப்பதைக் காணலாம். சாத்தியோபாயம் என்பது நம்மால் மேற் கொள்ளப் பெறும் உபாயம். இது பக்தி நெறி என்றும் பிரபத்தி நெறி என்றும் இருவகையாகப் பேசப் பெறும். பக்தி நெறி கர்மயோகம், ஞானயோகம், பத்தியோகம் என்ற மூன்று நிலைகளில் பயிற்சியடைய வேண்டிய நெறி என்று கூறுவர். பிரபத்தியை பிரபத்தி யோகம் என்று பேசுவர். ஆகவே சைவத்தில் நான்கு வழிகளைக் காட்டு வது போலவே வைணவமும் கர்மயோகம் ஞானயோகம் பக்தியோகம், பிரபத்தியோகம். என்ற நான்கு நெறி முறைகளை வகுத்துக் காட்டுவதைக் காணலாம். ஈண்டும் கர்ம யோகம், ஞானயோகம் ஆகிய இரண்டும் பக்தி யோகத்தின் வளர்ச்சிப்படிகள் என்று நுவலப் பெறும்.

5. வீடு பேறு

வாழ்வின் மேலான நோக்கம் வீடு பேறு அடைவது : இந்த வீடு அமைதியானது; எல்லை இல்லாத பேரின்பம் அளிப்பது. ஆன்மா பேரின்பம் அடைந்து எப்பொழுதும் அந்நிலையில் நீடிப்பதையே நோக்கமாகக் கொள்ளு கின்றது. இது வரையிலும் சைவமும் வைணவமும் ஒரே கருத்தையுடையன.

சைவசித்தாந்தம் இதனைச் 'சித்தாந்த முத்தி' என்று பேசும். 'பரமுத்தி' என்பதும் இதுவேயாகும். இஃது அத்துவிதக் கலப்பு எனப்படும். வைணவத்திலும் ஆன்மாவும் இறைவனும் இத்தகைய ஒரு கூட்டாகவே உள்ளனர். இரண்டிலும் ஆன்மாவும் இறைவனும் ஐக்கியப்பட்டிருந்தாலும் அவை தனித்தனியாகவே உள்ளன.

முத்தி வகைகள்

சைவத்தில் பரமுத்தி, அபரமுத்தி, பரமுத்தி, சிவன் முத்தி என நான்கு நிலைகள் பேசப் பெறுகின்றன. ஆயினும், ஆன்மா பரம சிவனோடு இரண்டறக் கலக்கும் நிலையான பரமுத்தியே – சித்தாந்த முத்தியே (தாயுமான வர்) – முடிந்த முத்தியாகும். ஆனால் வைணவத்தில் ஒரே முத்திதான் உண்டு. கைவல்ய முத்தியும், சீவன் முத்தி நிலையும் இங்கு பேசப் பெறுகின்றன. இரண்டிலும் மோட்சத்தில் சீவர்களின் நிலை சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சயம் என்று நான்காகப் பேசப் பெறுகின்றன.

6. வேறு சில

1. ஓங்காரம்

இது இருசமய வாதிகளாலும் போற்றப் பெறுகின்றது. சைவத்தில் இது சிவாய நம (சூக்கும பஞ்சாக்கரம்) நமச்சிவாய (தூல பஞ்சாக்கரம்), சிவாய சிவ (அதி சூக்கும பஞ்சாக்கரம்) என்பவற்றோடு சேர்த்து ஓதப் பெறுவதில்லை. வைணவத்தில் பிரணவத்தைச் சேர்த்தே திருமந்திரம் ஓதப் பெறுகின்றது.

2, மந்திரங்களின் எழுத்துக்கள்

இரண்டு சமயங்களிலும், மந்திரங்களிலுள்ள எழுத் துக்களுக்குப் பொருள்கள் கூறப் பெறுகின்றன. சூக்கும பஞ்சாக்கரமாகிய சிவாய நம என்னும் மந்திரத்தில் 'சி' என்னும் எழுத்து கடவுளைக் குறிக்கின்றது. 'வா' என்னும் எழுத்து அம்முதற்கடவுளோடு உடனாய் நிற்கும் திருவரு ளைக் குறிக்கின்றது. 'ய' என்னும் எழுத்து உயிரைக் குறிக் கின்றது. 'ந' என்னும் எழுத்து மும்மலங்களையும் தத்தம் தொழில்களில் ஏவிப் பாகம் வருவித்தற் பொருட்டு அவற்றோடு உடனாய் நின்று உயிரை மறைத்தலால் 'திரோதான சக்தி என்றும் 'திரோதான மலம்' என்றும் கூறப்படுவதாகிய 'சிவசக்தியைக் குறிக்கின்றது. 'ம' என்னும் எழுத்து உயிரைப் பிணித்து நிற்கும். ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் உணர்த்தும் ஒலிக்குறியாகும்.

'ஓம் நமோ நாராயணாய' என்ற எட்டெழுத்து (1+2+5) மந்திரத்திலுள்ள எட்டு எழுத்துக்களும் எம்பெருமானுக் கும் நமக்கும் உள்ள ஒன்பது உறவுகளைக் குறிக்கும் என்பதாகக் கொள்வர் வைணவப் பெருமக்கள். அகாரத் தினால் (1) தந்தை–தனயன் உறவும் (2) இரட்சிக்கப்படு பவன் இரட்சிப்பவன் என்ற உறவும் அறியக்கிடக்கின் றன. 'ஆய' என்னும் மறைந்து கிடக்கும் நான்காம் வேற் றுமை உருபினால் (3) சேஷ – சேஷி (அடிமை – அடிமைக் கொள்பவன்) என்ற உறவு சொல்லப் பெறுகின்றது. உகாரத்தினால் (4) நாயக நாயகி உறவு நவிலப் பெறுகின் றது. மகாரத்தினால் (5) அறிபவன் – அறியப்படும் பொருள் உறவு உரைக்கப் பெறுகின்றது. நம்ஸஸாலே (6) ஸ்வஸ்வாமி (சொத்து– சொத்துக்குரியவன்) உறவும், 'நார' பதத்தாலே சரீர சரீரி பாவனையும் அயன பதத்தாலே தாங்குகின்றவன். தாங் கப்படும் பொருள் (ஆதாய–ஆதேய தொடர்பும்) ஆய பதத் தால் போகத்தை அனுபவிப்பவன். போக்கியப் பொருள் (போக்கு– போக்கிய) இவற்றின் சம்பந்தமும் சொல்லப் பெறு கின்றன. (பிள்ளை உலக ஆசிரியர்)

சாதனங்கள்

சைவ சமய சாதனங்கள் மூன்று. அவை திருநீறு, உருத்திராக்கம், ஐந்தெழுத்து. இவற்றுள் ஐந்தெழுத்து உள்ளத்தில் உறைவது. திருநீறும் உருத்திராக்கமும் உடம்பில் உள்ளவை. உருத்திராக்கம் உருத்திர மூர்த்தி யின் கண்மணியினின்றும் தோன்றியதாகச் சொல்வர்.

வைணவ சமய சாதனங்களும் மூன்றாகவே அமைந்துள்ளன. அவை திருமணக் காப்பு, துளசி மணிமாலை, எட்டெழுத்து. இவற்றில் எட்டெழுத்து உள்ளத்தில் உறைவது. திருமணக் காப்பும், துளசிமணிமாலையும் உடம்பில் திகழ்பவை.

4. சமயக் குறிகள்

வைணவர்களின் சமயக் குறி ஊர்த்துவ புண்ட்ரம் – (இரேகை). இது திருமண் காப்பு என்பது. இஃது நெற்றியில் மூக்கின் தொடக்கம் முதல் கேசம் வரையில் மேல் நோக்கி மூன்று இரேகைகளாக இடப் பெறுவது. இது வைகுந்தத்தைச் சேர்ப்பிப்பது. இது தவிர வயிறு, மார்பு, கண்டம், வலப்புற, வயிறு, வலப்புயம், வலப்புறக் கழுத்து, இடப்புற வயிறு, இடப் புயம் இடப்புறக் கழுத்து, முதுகடி, பிடரி ஆகிய இடங்களில் இடப் பெறுகின்றது. இவற்றிற்கு நீளம் அகலம் உயரம் அளவுகள் உண்டு. இவற்றைத் தரிக்கும் முறைகளும் உண்டு; தரிக்கும் போது நாவினால் நவிற்ற வேண்டிய மந்தரங்களும் உண்டு. (ஒரு நாளைக்கு ஒரு முறைதான் தரிப்பது வழக்கம்)

சைவர்களின் சமயக்குறி திரியக புண்ட்ரம். இது நெற்றியில் குறுக்காக மூன்று ரேகைகள் தரிப்பது. இது சிவ லோகத்தை அடைவிப்பது. இது நெற்றியைத் தவிர உச்சி, மார்பு, நாபி, இரு முழந்தாள், இரு தோள்கள், இரு முழங்கைகள், இரு மணிகட்டுகள் இரு விலாப்புறம், முதுகு, கழுத்து என்ற பதினைந்து இடங்களில் திரி புண்டரமாக இடப் பெறுவது. நெற்றி, மார்பு, இரு தோள்கள் இந்த இடங்களில் ஆறு அங்குல நீளமும் மற்ற இடங்களில் ஒரங்குல நீளமுமாக இடுவது வழக்கம். அளவு நீடினும் குறையினும் குற்றம். திரிபுண்டரம் இடையில் துண்டித்தல் அதிகம் நீங்குதல் பிரிவு இல்லாதிருத்தல் கூடாது. காலை, உச்சி, மாலை என்ற காலங்களிலும் தரிப்பது வழக்கம்.

5. புண்டரத்தின் உட்பொருள்

வைணவத்தில் ஊர்த்துவ புண்டரம் பிரணவமாகத் தியானிக்குமாறு சொல்லப் பெற்றுள்ளது. அகாரத்தின் பொருள் சீமன் நாராயணன், உகாரத்தின் பொருள் இலக்குமி, மகாரத்தின் பொருள் சீவான்மாக்கள், புண்டரம் அணிபவர்களை நாரணன் எந்தத் துன்பமும் அணுகாதபடி காப்பாற்றுவான். திருமண் காப்பினை அணிந்திருப்பவர்களைக் கண்டால் எமதூதர்களும் விலகிப்போவர். சைவ சமயத்தில் திரியகப் புண்டரம் பதி, பசு, பாசத்தைக் குறிக்கும். இது தவிர குருலிங்கம், சங்கமம், அகரம், உகரம், மகரம், சத்து, சித்து, ஆனந்தம் இப்படி 29 தத்துவங்களைக் குறிக்கும். திருநீற்றை அணிவதால் பல்வேறு நோய்கள் நீங்கும்.

6. குரு உபதேசம் பெறுதல்

இஃது இரு சமயங்களிலும் வேறு வேறு பெயர்களைப் பெறும். குரு மூர்த்தியாய் இருப்பவர்கள் தம் சீடர்கட்குத் தவத்தையும், ஞானத்தையும் அளிக்கும் முறையைச் சைவசித்தாந்தம் தீக்கை (தீட்சை) என்று வழங்கும். தீக்கை என்பது அஞ்ஞானத்தைப் போக்கி மெய்ஞ் ஞானத்தைத் தருவது என்று பொருள்படும். இந்த தீக்கை சமய தீக்கை, விசேட தீக்கை. நிர்வாண தீக்கை என மூவகைப்படும். தீக்கையில் உபதேசிக்கப்படும் மந்திரங்கள் பலவற்றுள் பஞ்சாக்கரம் (சிவாய நம ;) என்பது முதன்மையானது. தீக்கைப் பெறுங்கால் மந்திரங்களை உபதேசிப்பதிலும் முறைகள் உள்ளன.

வைணவத்தில் குருமுகமாகப் பெறுவது பஞ்ச சம்ஸ்– காரம்; பஞ்சம் – [5] சம்ஸ்காரம் –, வேறு வேறு ஒரு காரியத் திற்குத் தகுதியுள்ளவனாம்படிச் செய்தல். இதில் தாபம் புண்ட்ரம் நாமம் மந்திரம் யாகம் என்று ஐந்து படிகள் உள்ளன. தாபம் என்பது ஓமத்தீயில் சுடப்பெற்ற சங்கு சக்கரங்களைப் புயங்களில் மேற்பகுதிகளில் தரித்துக் கொள்ளுதல். புண்டரமாவது நெற்றி முதலிய பன்னிரண்டு இடங்களில் மேல் நோக்கி இடுகின்ற திருமண் காப்புகளாகும். நாமமாவது, ராமானுஜதாஸன் என்ற தாஸ்ய நாமத்தைப் பெறுதல். மந்திரமாவது எட்டெழுத்து மந்திர உபதேசம் பெறுதல், யாகமாவது பகவதாராதனமாகும்.

7. இலக்கியத் தொகுப்பு

இரண்டு சமயங்களில் மறைந்த சமய இலக்கியங்களைத் தேடித் தொகுத்த வரலாறுகளிலும் ஒருவித ஒற்றுமை நிலவுவதைக் காணலாம். சைவத்திரு முறைகளை தொகுத்த திருநாரையூர் நம்பியாண்டார் நம்பி பொல்லாப் பிள்ளையாரின் அருளினால் அவை வைக்கப் பெற்றிருக்கும் இடத்தைத் தெரிந்து அவற்றை தொகுத்தார். திருநாரையிலிருந்து சுமார் 15 கல் தொலைவிலுள்ள காட்டுமன்னார் கோயிலைச் சார்ந்த நாத முனிகள் திருக்குருகூர் திருக் கோயிலில் திருப்புளி ஆழ் வார் நிழலில் அர்ச்சை வடிவில் எழுந்தருளியுள்ள நம்மாழ்வார் திருவருளால் நாலாயிர திவ்ய பிரபந்தப் பாசுரங்களைத் தொகுத்து அடைவுபடுத்தினார். தொகுத்து அடைவு படுத்திய முறைகளிலும் பண் முதலியவை அமைத்த முறைகளிலும் ஓர் ஒற்றுமையுண்டு.

8. திருப்பல்லாண்டு

திருமுறை தொகுப்பிலும் நாலாயிரத் தொகுப்பிலும் திருப்பல்லாண்டு என்ற தலைப்பில் இரண்டு பதிகங்கள் காணப்படுகின்றன. இவையிரண்டும் அவ்வச் சமயக் கடவுளர்க்கு, வாழ்த்துக் கூறுவதாக அமைந்துள்ளன. இரண்டும் ஒரே யாப்பில் அமைந்துள்ளன. இரண்டின் வரலாறுகளும் ஒரே விதமான சுவையுடைய தெய்வீகக் கூறுகள் அடங்கியுள்ளன. இரு சமயங்களில் காணப் பெறும் இந்த ஒற்றுமை சில வேற்றுமைகள் ஆராய்ச்சி யாளர்களுக்குப் பேரின்பம் நல்குகின்றன.



திருமுறையில் மகளிர்

(கவிஞர். ராகவி. எம்.ஏ., எம்.எட்.)

ஆற்றிலே தூக்கி எறி; அமிழா; நீந்தி வரும்
ஆர்தழிலில் போட்டாலும் அழியாது பசுமைகாட்டும்
காற்றிலே கலையாது கடலிலே தெப்பமாகும்
களிற்றையும் அடக்கிவிடும் கடம்வெப்பு நோய்தீர்க்கும்
நிற்றறைக்குள் இட்டாலும் நெஞ்சமெலாம் குளிர்விக்கும்
நீர்நிறைந்த ஓடையாய் நிமலனை நினைவூட்டும்
கூற்றையும் வென்றுவிடும் குறைவிலாப் பாடல்கள்
கூனையும் நிமிர்த்திவிடும் கோதிலாத் திருமுறைகள்

பெண்மை என்றாலே மென்மை என்பர். ''பெண்மை என்பது கட்புலனாகிய தோர் அமைதித்தன்மை'' என்பார் அடியார்க்கு நல்லார். நல்ல குடும்பம் பல்கலைக்கழகம் என்றால் அதன் தலைமைப் பேராசான் பெண்ணே. மனைக்கு மாட்சி தரும் மகளிர் நம்நாட்டில் பண்டைக் காலந்தொட்டே மாண்புடன் வாழ்ந்து வந்திருக்கின்றனர்.

மகளிரால் அன்பு வளரும்; இன்பம் பெருகும்; அருள்சிறக்கும்; அறம் விளங்கும்; தியாகம் பொலியும். உலகம் சிறக்கும்; மகளிர் மாண்புடையராக இல்லையேல் உலகமே அல்லலுற்று அழியும். அதனால்தான் ''ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே'' என்ற வழக்கு எழுந்தது.

திருமுறைகள் வாழும் வகை கூறுவன. மகளிர் பற்றி அவை என்ன கூறுகின்றன? தணியாத அன்புகொண்டவர்கள் பெண்கள். அந்த அன்புகனிந்து மாறாத தெய்வ பக்தியாக மலர்கிறது. அசையாத பக்தியிலிருந்து எழுவது சமதர்மநோக்கு; அதன் முதிர்ச்சியாக ஆன்மவிடுதலை பெற்ற நிறைவு. இவ்வாறான வளர்ச்சியின் வடிவாகவே உள்ளது திருமுறைகளில் காட்டப்படும் மகளிர் நிலை. பாரதி தீட்டிக் காட்டிய நேர்மைத் திறமும்; நெஞ்சில் உரமும், நிலத்தில் யார்க்கும் அஞ்சாத தன்மையும் திமர்ந்த ஞானச் செறிவும் உள்ள மகளிரை நாம் திருமுறையில் காண்கிறோம்.

அன்பு, தியாகம் செய்யும் மனத்திண்மை; தொண்டு நெறி, ஆன்மீக உன்னதம், தீராத தெய்வ பக்தி இவையெல்லாம் திருமுறையில் காணப்படும் மகளிர் பால் நிறைந்திருந்ததை ஊன்றிப் படிப்போர் அறிந்து கொள்ள முடியும். அதனால்தான் காரைக்காலம்மையும் திலகவதியாரும், மங்கையர்க்கரசியாரும், பரமனைப் போற்றிய பாவை நாச்சியாரும், மங்கலம் பொங்கும் சங்கிளியாரும், போன்ற மகளிர் திலகங்கள் காலத்தைக் கடந்து வாழும் தூயநெறித் தெய்வ நங்கையர்களாகப் போற்றப் படுகின்றனர்.

காரைக்காலம்மையார்: பிறவாயாக்கைப் பெரியோனாகிய சிவபெருமானால் ''அம்மையே'' என்று அழைக்கப்படும் அரும்பெறும் பேறு பெற்றவர் அம்மையார் ஒருவரே. தேவாரப் பாடல்களுக்கு நாற்றங்காலாக விளங்குவது இவ்வம்மையின் பக்திப் பனுவல்களே. இவர் இயற்றிய நூற்றி நாற்பத்து மூன்று பாடல்களும் பக்தி இலக்கியத்திற்குப் பண்ணையாவது; தமிழிலக்கியத்துக்குப் பாதையாவது. ''வருமிவள் நம்மைப் பேணும் அம்மைகாண்'' என்று பரம்பொருளாலேயே உளங்குளிர அழைக்கப்பட்டவர். மனத்திண்மைக்கு இலக்கணம்! பக்தியின் திருஉரு. பெண்மைக்குப் பெரும் புகழ் சேர்த்து இறவாத இன்ப அன்பை வேண்டிப் பெற்றவர். ''மடுத்த புனல் வேணியனார் எடுத்தருளும் பொற்பாதத்தின் கீழ் மகிழ்ந்து பாடி இருக்கும் பேறு பெற்றவர். இவரது தெய்வத்தன்மையை இவர்கணவராகிய பரமதத்தனே கூறுவதாக அமைத்திருக்கிறார் சேக்கிழார்.

''மற்றவர் தம்மை நோக்கி
மானுடம் இவர்தாம் அல்லர்
நற்பெருந் தெய்வமாதல்
நானறிந் தகன்ற பின்பு
பெற்றஇம் மகவுதன்னைப்
பேரிட்டேன்; ஆதலாலே
பொற்பதம் பணிந்தேன் நீரும்
போற்றுதல் செய்மின்'' என்றான்.

கணவனாலேயே தெய்வமாகப் போற்றப்படும் பெருமை அம்மையாருக்குக் கிடைத்தது. கணவனுக்காகஎன்றே தங்கியிருந்த வனப்பை நீக்கி அருளுமாறு இறைவனை வேண்டினார். என்புருவம் அருளப் பெற்றார். அம்மையார் என்புருவை வேண்டிப் பெற்றதைச் சிவபெருமானே உமாதேவியாரிடம் கூறுவது சிந்திக்க வேண்டிய ஒன்று. பெண்ணுரிமை பேசப்படும் இந்தக் காலக்கட்டத்தில் அம்மையாரின் மனத்திண்மை, திடபக்தி முதலியவை நுட்பமாகப் புரிந்து கொள்ளப் பட வேண்டிய ஒன்று. போற்றப்பட வேண்டிய ஒன்று. கணவன் தன்னை விட்டு நீங்கியதன் காரணத்தை அறிந்து கொண்ட அக்கணமே தெளிந்த அறிவோடு தன் இலக்கு எதுவெனத் தீர்மானித்த திடமனம் பெண்மைக்குப் பெருமை சேர்த்து விடுகிறது.

பெற்றோருக்கோ, மற்றோருக்கோ துன்பம் தராமல் தன் விதியைத் தானே தீர்மானிக்கும் உரிமை பெண்ணுக்கு இருந்தது என்பதை புனிதவதியார், பேயார் ஆன வரலாறு உணர்த்துகிறது. பேரெழில் தாங்கிய ஊறுடம்பை நீக்கி என்புடம்பு வேண்டிப் பெற்ற மனோதிடம் மிகவும் போற்றப்படவேண்டிய ஒன்றல்லவா?

தாம் அடைந்த மெய்ஞ்ஞான உணர்வை உலகுக்கு ''அற்புதத் திருவந்தாதி'' மூலம் உணர்த்தினார். ''பொற்பாதம் போற்றும் நற்கணங்களுள் நானும் ஒன்று ஆனேன்'' என்று நமக்கு மகிழ்வுடன் அறிவிக்கிறார். உலக வாழ்க்கையின் உயர்ந்த முடிவு மெய்ஞ்ஞான உணர்வே என்பதை காரைக்காலம்மையார் பாடல்கள் உணர்த்துகின்றன.

''இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும்; மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போதுன்
அடியின் கீழ் இருக்க'' என்றார்

சேக்கிழார் பெருமான். காரைக்காலம்மையாரின் அருந்தமிழ்ச் சொற்களைக் கயாளும் திறன் பெண்மைக்குப் பெருமை சேர்ப்பதாக வன்றோ பொருந்துகின்றது.

'ஆராத அன்போடு பேராத காதல் பிறந்து அண்ணலைச் சென்

றேத்துவதற்காகவே' தம் பாடல்களை இயற்றியதாக அம்மையாரே கூறுகிறார். வெண்பாப் பாடுவதில் - புகழேந்தியாருக்குப் பன்னெடுங்காலம் முன்பாகவே - சிறந்து விளங்கியவர். அற்புதத் திருவந்தாதி இவரது தமிழ்ப் புலமைக்கும், இறைப் பற்றுக்கும் மிகச் சிறந்த சான்றாக விளங்குகிறது.

இவரது தெய்வப் பனுவல்கள் இறைத்தன்மையை நாம் உணர்வதற்கு வகை செய்பவை! இறைவன் என்று ஒருவன் உண்டா? 'ஆம் எனில் எங்கிருக்கிறான்? எவ்வகை உருவம் உடையவன்?' என்றெல்லாம் கேட்போருக்கு விடை தருபவர் போல தாம் பெற்ற இறை அனுபவத்தை

''அன்றும் திரு உருவம் காணாதே ஆட்பட்டேன்
இன்றும் திருஉருவம் காண்கிலேன் - என்றும்தான்
எவ்வுருவம் தம்பிரான் என்பார்கட்கு என்னுரைக்கேன்
எவ்வுருவோ நின்னுருவம் எது?'' என்று நுண்மாண் நுழைபுலம் விளங்க வினாவாகவே விடை தருகிறார். அது மட்டுமல்ல ''அப்படியானால் அந்த இறைவன் வானில் உள்ளானா? மண்ணகத்தில் உள்ளானா?'' என்றெல்லாம் கேட்பவர்க்கு அற்புதமாக விடை தருகிறார்.

வானத்தான் என்பாரும் என்க மற்று உம்பர்கோன்
தானத்தான் என்பாரும் தாம் என்க - ஞானத்தால்
முன் நுஞ்சத் தால் இருண்ட மொய்யொளிசேர் கண்டத்தான்
என் நெஞ்சத் தான் என்பன் யான்.

தம் நெஞ்சத்தையே இறைவன் வாழும் இடமாகக் கூறும் துணிவு மகளிர் உலகத்துக்கே மாண்பு சேர்ப்பதல்லவா? இறைவனை நேரில் காணும் இன்னருட்பேறு பெற்றவர் காரைக்காலம்மையார்.

தேவாரப் பாடலுக்குத் தோற்றுவாய் காட்டியவர்
நாவாரப் பாடுதற்கு நாற்றங்கால் நாட்டியவர்
பேயாரைப் போற்றிடுவோம் பெரும் பேறு எய்திடுவோம்
வாயாரப் பெண்மைக்கு வாழ்த்துக்கள் கூறிடுவோம்.

திருமுறையில் மகளிர் பங்கு என்பதற்குக் காரைக்காலம்மையார் என்ற மகளிர் திலகத்தையே முதற்பொருளாகக் கூறலாம். அம்மையாரின் நான்கு நூல்களும் பதினோராந் திருமுறையில் சேர்க்கப்பட்டுப் பக்திப் பயிர் வளர்க்கின்றன.

மங்கையர்க்கரசியார்

மங்கையர்க்குத் தனியரசி; எங்கள் தெய்வம்
வளவர் திருக்குலக் கொழுந்து வளைக்கைமானி
செங்கமலத் திருமடந்தை; கன்னிநாடன்
தென்னர் குலப்பழி தீர்த்த தெய்வப்பாவை

என்று சேக்கிழாரால் போற்றப்படும் மகளிர் குலத்திலகம் மங்கையர்க்கரசியார். திருமுறை காட்டும் மகளிரில் தனிச்சிறப்புடையவர். உடலுக்கு ஆதாரம் உணவு. உணர்வுக்கு ஆதாரம் கல்வி. உயிருக்கு ஆதாரம் சமயம். உயிரில்லாவிட்டால் உணர்வும் உடலும் இல்லை. சமயஞானம் இல்லையேல் வாழ்வு இல்லை. இதை உணர்ந்து சமயம் காத்த தெய்வ மகளிர் இவர். வைராக்கிய சிகரம் காரைக்காலம்மையார். வாழ்வின் சிகரம் மங்கையர்க்கரசியார். புனிதவதி என்ற பிள்ளைத் திருநாமம் பேயார் என்று மாறியது போல, 'மானி' என்ற இயற்பெயர் மாறி மங்கையர்க் கரசியார் என்ற பெயர் மாற்றம் ஏற்பட்டது.

'தற்காத்து தற்கொண்டான் பேணி தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்'

என்ற தமிழ் மறை வாக்குக்கு ஏற்ப பெண்மைக்கு இலக்கணமாக வாழ்ந்தவர் இவர். பாண்டிய நாடே சமணநாடாக மாறிய போதும் இவர் சைவ நன்னெறியைத் துறந்தாரில்லை. தன்னை மட்டுமல்லாது. சைவசமய நன்நெறியையும் காத்த மாதரசி. இவரது அசையாத சிவபக்தி, தளராத முயற்சி, தன் கணவரைச் சைவநெறிக்குத் திரும்பிய பாங்கு இவற்றைச் சேக்கிழார் சுவை சொட்டச் சொட்டப் பாடுகிறார்.

சம்பந்தப் பெருமான் திருப்பூந்துருத்திக்குச் சென்று அப்பரடிகளைச் சந்தித்தார். அப்பர் பெருமான் ''சைவம் என்ற பயிர் தழைக்கத் தாங்களே வேலியாயிருக்கிறீர்'' என்று திருஞான சம்பந்தரிடம் மகிழ்ந்து கூறினார். ஆனால் சம்பந்தரோ பாண்டிமாதேவியின் உரிமை வாழ்க்கையை நினைவில் வைத்துக் கூறுவார் போல மங்கையர்க்கரசியின் அன்பும் மாண்புமே சைவப்பயிர் தழக்கக் காரணம்' என்று விடை கூறினார். சைவம் தழைத்தமைக்கு மங்கையர்க்கரசியின் பங்கு மகத்தானது.

திலகவதியார்

பெண்மையின் திண்மைக்கு மறுபெயர் திலகவதியார் என்பது வரலாறு காட்டும் உண்மை. தனக்காகப் பேசப்பட்ட மணாளன் போரில் வீரமரணம் அடைந்ததைக் கேட்ட திலகவதியார் உடனே உயிர் துறக்க முற்பட்டார். அருமைத் தம்பியை அனாதையாக்கக் கூடாது என்று அனைவரும் வேண்டிக் கொள்ளவே தன் வாழ் நாள் முழுவதும் தனது தம்பிக்காகவே அர்ப்பணம் செய்தார். யார் அந்தப் பேறுபெற்ற பாக்கிய சாளி! திருநாவுக்கரசர் என்று போற்றப்பட்ட வாகீசப் பெருந்தகையே அந்தத் தம்பி. உழைப்பின் பெருமையை உலகத்திற்கு எடுத்துக் காட்டிய உழவாரப் படைத்தொண்டர்! சமண சமயத்தைச் சார்ந்து விட்ட தம்பியை மீட்டுச் சைவப் பயிர் வளர்க்கும் தளராத் தொண்டராக மாற்றிய மகளிர் குல விளக்கு அப்பரின் தமக்கை திலகவதியார்.

திருமுறைகள் தழைக்கத் தம் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்த அருட் செல்வி திலகவதியார். தன் நிலையிற்றிரியாது மலையென நிமிர்ந்து நின்று சைவநெறி தழைக்கத் துணை நின்றவர். அக்காலச் சூழலில் மணம் ஆகாத ஒருபெண் தான் கொண்ட கொள்கையில் அசையாது நிற்பது எவ்வளவு அரிது? அதனினும் அரிதரிது அக்கொள்கையில் வெற்றி பெறுவது. இந்த அரும் பெரும் சாதனையை அணுவளவும் தளராது சிறப்பாகச் செய்த சாதனை பெண்மணி திலகவதியார். நாவுக்கரசரின் தேவாரப் பாடல்கள் உள்ளளவும், சைவ நன்னெறி உள்ளளவும் திலகவதியாரின் செயற்கரிய தியாகம் நிலைத்திருக்கும். திருமுறைகள் பாடப்பெறும் போதெல்லாம் இம் மாதரசியின் பெயரும் ஒலிக்கும். திருமுறையில் நால்வர் பாடல்களிலும் இறைவன் ''மாதொரு பாதியனாகவே'' போற்றப் படுகிறான். ''வேயுறு தோளி பங்கன்'' என்றும், 'பண்ணினேர் மொழியாளுமை பங்கரோ'' என்றும் பாடப்படுவது உலகில் பொருள்கள் யாவும் சக்தி பாதி, சிவன் பாதி என்று விளங்குவதால் தான். நாவுக்கரசரும் ''காதல் மடப்பிடியோடும் களிறு வருவன கண்டேன் கண்டேனவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்'' என்று பெண்மையின் அன்புருவை இறைவனிடம் காண்பதைப் பாடுகிறார். திருத்தாண்டகத்திலும் தித்திக்கும் திருவாசகத்திலும் பெண்மையின் சக்தி வடிவம் போற்றப்படுகிறது. ''அம்மையே அப்பா ஒப்பிலா மணியே'' என்றும் ''மாதிருக்கு பாதியன்'' என்றும் ''நற்குழலிபங்கன்'' என்றும் ''குவளைக் கண் கூறன்'' என்றும் பெண்மை கலந்த ஆண்மையைப் போற்றுகிறார் மணிவாசகப் பெருமான்.

முடிவுரை:

மேற்கண்டவாறு ''திருமுறையில் மகளிர்'' போற்றப் படும் சிறப்பு நந்தமிழர் பண்பாட்டுச் சிறப்பு அம்சமாகும். சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாறு உலக வாழ்க்கையில் பெண்மையின் சிறப்பை விளக்கும் வரலாறு அல்லவா? ஞானத் திருவடிவாய், இன்மதுக்குடமாய், கானமதுகரமாய் கண்ணிரைந்த பேரழகாய்ப் பாராட்டப்படும் பெண்மை தாய்மைப் பண்பால், கற்பின் திண்மையால் தெய்வ நிலைக்கு உயர்கிறது.

நுண்ணியல் அணுக்கதிரியக்க ஆய்வு விளக்கம், அன்றும்-இன்றும்

டாக்டர். M. மாரியப்பன் R.I.M.P., R.H.M.P.

தொன்மைமிக்க ஆதி மொழியாகிய தமிழ் மொழியின் சிறப்புக்களைப் பெருமையுடன் ஆய்வு செய்யும் வகையில் நடத்தப்படும் சிறப்புக்குரிய "ஆறாவது உலகத் தமிழ் மாநாடுப் பொழிவுடன்" நடந்திட வாழ்த்தி, மேற்படித் தலைப்பில்– தமிழ்த்தாயின் மகவுகளில் ஒருவனாகிய சிறியேன் அனுபவ, ஆய்வுக் கருத்துக்களை மாநாட்டு ஆய்வுக் குழு, மற்றும் அவண் வந்து கூடும் தமிழ்–அறிவுச்சுடர் விளக்கத்தின் பிரதிபாலிப்பாகிய பேரறிஞர்களின் மத்தியில், தமிழ்பற்றிய ஆய்வுக்குரிய இத்துணுக்கினை, "அணுவை"ப் பற்றிய வெளி–உள் அனுபவத்தின் ஓர்மை நிலைகளின் விளக்கமாக வைத்துள்ளேன்; இந்த ஆய்வுக் கட்டுரை வெறும் ஆய்வு மட்டுமல்ல, அடியேன் கண்டுணர்ந்தவையாகும்; அதன் எதிரொலியாக வரைப்பட விளக்கத்தோடு அமைத்திருக்கின்றேன்; பொதுவாக இன்றைய நிலையில் நம்மவர்களால் வெளியுலகத்தில் உள்ள அணுவை மையமாக வைத்துத்தான் இன்றைய "விஞ்ஞானம்"– செயல்படுகின்றது. ஆனால் வெளிமுகமான செயலானவைகள் அனைத்துமே, அகத்துள் இருந்தே வெளிப்பட்டுள்ளன என்பதே அடியேனது ஆய்வாகும்; இந்த உண்மையைத் தொன்மையிலேயே தமிழ் அறிஞர் பெருமக்களானோர் வெளிப்படுத்திச் சுட்டிக் காட்டியிருக்கின்றனர். அந்த வழியில் வந்த "சித்தாய்வாளர்"–களில் ஒருவரான வள்ளலார் இராமலிங்க அடிகளின், திருவருட்பாவிலுள்ள பாடலையே ஆதாரமாகக் கொண்டு இந்த ஆய்வுக் கட்டுரைதனை, அனுபவம் சார்ந்த விளக்கமாக விவரிக்க முன் வந்திருக்கின்றேன்.

முதலில் இன்றைய, அதாவது–இருபதாம் நூற்றாண்டில் இருந்த விஞ்ஞானிகளின் "அணுவைப் பற்றிய"– கருத்துக்களைப் பார்ப்போம்; "அணு"– என்பதற்கே கிரேக்க மொழியில் "ஆட்டம் (ATOUM)" என்ற பெயர் வழக்கில் உள்ளது; ஆட்டம் என்றால், "பகுக்க இயலாதது" என்று பொருள்படும்; அதாவது ஒருபொருளின் மிகச்சிறிய, நுண்ணிய பிரிவே "அணு (ATOUM)"– என்றும், அதற்குமேல் அதைப்பிரிக்க இயலாது என்றும், "டால்டன்"–என்ற விஞ்ஞானி கூறினார்; அதன் பின் வந்த "J. J. தாம்சன்"– என்ற விஞ்ஞானி, "அணு வானது" – உருண்டைவடிவம் உடையதென்றும், அதனுள்ளே சிறு சிறு துகள்களாக "எலக்ட்ரான்கள் – (ELECTRONS) பரவி" உள்ளனவென்றும் கண்டறிந்தார். அவருக்குப் பின், "எர்னஸ்ட் ருத்தர் போர்டு"–என்ற விஞ்ஞானி, அணுவிற்குள் "சூரிய மண்டல"– அமைப்பு இருப்பதாகக் கண்டறிந்தார்; அதாவது, சூரியனைச் சுற்றிக் கோள்கள் அமைவுள்ளதைப் போன்று, அணுவினுள் அதன் உள் மையத்தில் நேர் "மின்னோட்டமுள்ள" அணுக்கருவும் (NUECLEUS), அதைச்சுற்றி எதிர் மின் னோட்டமுள்ள "எலக்ட்ரான்கள் – (ELECTRONS)" உள்ளனவென்றும், அந்த எலக்ட்ரான்கள் "கருவை" மையமாகக் கொண்டே சுற்றி வருகின்றன என்றும் கண்டறிந்தார்; பிறகு 1913–ஆம் ஆண்டில் "நீல்ஸ் போர்"– என்ற ஆலந்து நாட்டு விஞ்ஞானி, அணுக்கருவில் நேர்மின்னோட்டம் உள்ள "புரோட்டான் (PROTON)" இருப்பதையும் கண்டறிந்தார்; இவருக்கு அடுத்தபடி, 1932– ஆம் ஆண்டு இங்கிலாந்தில் வாழ்ந்த "சாட்விக்" – என்ற விஞ்ஞானி அவ்வணுக் கருவில் "நியூட்ரான் (NUETIRON)",– இருப்பதைக் கண்டு அறிந்தார்கள்.

ஆக இதுவரை பொதுக் கருத்தாக இந்த 20–ம் நூற்றாண்டில் வாழ்ந்து "அணுவைப் பற்றி" ஆய்வு செய்த விஞ்ஞானிகளைப் பொதுவாக எடுத்துச் சொன்னேன்; இனி இவ்வாய்வுக் கட்டுரைக்கு நான் எடுத்துக் கொண்ட 19–ம் நூற்றாண்டில், வாழ்ந்த "மெய்ஞ்ஞானி வள்ளலார்"– அணுவைப் பற்றி கூறிய கருத்துக் களையும், அதைக் கொண்டு யான் அனுபவமாகச் சுய ஆய்வில் கண்டுணர்ந்த விவரங்களையும் தொடர்கின்றேன்.

அடிகளாரின் மெய்ஞ்ஞான அனுபவத்தால் அவர்கள் கண்டாய்ந்து, வெளியுலகர் அறியும்படிப் பாடிய திருவருட்பாவில், அவர் அணுக்களைப் பற்றி – அப்பெருமானார் பாடியுள்ள பாடலை விவரித்து விட்டுப் பிறகு விளக்கத்தின் கருத்திற்கு வருகின்றேன்; கீழே அப்பாடல் தனைக் கொடுத்துள்ளேன்.

"தோன்றிய வைங் கருவினிலே சொல்லருமோ ரியற்கை
துலங்குமதிற் பலகோடி குலங்கொள் குருத்துவிகள்
ஆன்றுவிளங் கிடுமவற்றி னசலை பல கோடி
அமைந்திடுமற் றவைகளுளே யமலைகளோ ரனந்தம்
ஏன்றுநிறைந் திடுமவற்றிற் கனிப்பதனுக் கரிதாய்
இயங்குபிர காசிகாவு மிருந்தனமற் றிவற்றில்
ஊன்றியதா ரகசத்தி யோங்குமதி னடுவே
உற்றதிரு வடிப்பெருமை யுரைப்பவ ரார்தோழி",–


–(திருவருட்பா).

ஆக, அணுக்களின் தொகுப்பை மேற்படி "திருவருட்பாவின்" – வாயிலாகக் காண்க; அதை ஒவ்வொரு வாசகமாகப் பொதுப் பட அடியேன் கீழே விவரித்திருக்கின்றேன்; "தோன்றிய ஐம் கருவினிலே" – அதாவது, உலகப் பொருள்களெல்லாம் தோன்றுவதற்கு – அடிப்படையாக யெழுந்த நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்ற ஐம்பூதங்களின் நடுவே, "கருவாகிய" சொல் அரும் இயற்கைத் துலங்கும்; அதாவது, இன்னதென்று விவரித்துச்

சொல்லமுடியாத ஒப்பற்ற ஓர் தெய்வத்தன்மை விளக்க மாகும்; "அதில்" – அந்த இயற்கையுண்மை ஆற்றலிலே, "பலகோடி" – அதாவது பல கோடிக் கணக்கான, "குலம் கொள் குருத்துவிகள்" – இனவேறுபாடுகளைத் தரும்தோற்றத்திற்கு அடிப்படையான வளர்ச்சிகள், "ஆன்று விளங்கிடும்" – அதாவது நிரம்பி விளங்கி அருளும். "அவற்றுள்" – அவ்வாறு விளங்கும் அணுவின் உட்பகுதியிலே, "அசலை பலகோடி" – அதாவது, அசலை (PROTON)– என்கின்ற முன் அணுத்துகள்கள் ஏராளமாக அமைந்துள்ளன; "ஏன்று நிறைந்திடும் அத னுள்" – அந்த முன் அணு, பின் அணுத்துகள்களின் எண்ணிக்கைக்கும், நிறைக்கும், ஏன்ற அளவு பொருந்தி நிரம்பியிருக்கும்; அவைகளுள் கணிப்பு அதனுக்கு "அரிது ஆய்" – அதாவது, இவ்வளவு என்றுகணித்துச் சொல்ல முடியாத அளவு உடையதாய், "இயங்கு பிரகாசிகள்" – ஒளி வீசிக் கொண்டிருக்கும் பிரகாசிகள் (ELECTRONS), என்கின்ற மின் அணுத் துகள்கள், "தாம் இருந்தன" – அதாவது, அணுக்கருவின் ஆற்றலால் முன் அணுத்துகள்களையும், பின் அணுத்துகள்களையும் சுற் றிக் கொண்டிருக்கின்றன. "மற்று இவற்றில்" – இன்னும் இவைகளின் கூட்டங்களில், "ஊன்றிய தாரக சத்தி ஓங்கும்" – அதாவது நிலைத்துச் சுழன்று கொண்டிருக் கும் நட்சத்திர ஆற்றலும் ஓங்கி வளரும்; "அதின் நடுவே" அந்த நட்சத்திரக் கூட்டத்தின் மத்தியில், "உற்ற திரு வடிப் பெருமை" – நின்று, அச்சுழலுக்கு ஏற்ப அனைத் தையும் இயங்கச் செய்துகொண்டிருக்கும் அருட் பெருஞ் ஜோதி ஆண்டவரின் திருவடிப் பெருமைதனை, "உரைப் பவர் ஆர், தோழி" அதாவது, என்தோழியே! (அதாவது மனமே) என்று, மேற்படித் திருவருட்பாப் பாடலில் அணுக்களைப் பற்றி விளக்கியுள்ளார்.

ஆகவே, இன்றைய விஞ்ஞான ஆய்வில் கண்டு தெளிந்தவை சுமார் 112 – அணுநிலைகளையே தான்; அதில் மேற்படி அசலை, அமலை, பிரகாசிகை, அணுக்கரு போன்றனவும் அடங்கும்; ஆயினும் நம் தமிழ் மரபினர்களாகிய அன்றைய விஞ்ஞானிகள் (அதாவது சித்தர்கள்), மற்றும் மெய்ஞ்ஞானிகளாகிய "வள்ளற் இராமலிங்க அடிகளார்" போன்றோர் – முன்னரே அணுக்களைப் பற்றி விளக்கியுள்ளனர். ஆகவே, இருபதாம் நூற்றாண்டில் விஞ்ஞானிகள் சொன்ன அணுவின் கூறுகளையும், அதன் செயல்திறனாய்வுகளை விட, முன்னரேத் தமிழ் வழி மரபினர் வழி தோன்றி, – நம் மிடையே வாழ்ந்தவராகிய மெய்ஞ்ஞானி இராமலிங்க அடிகளார்19–ம் நூற்றாண்டில் (1873–ல்) அணுக்களைப் பற்றிய அவரது மேற்படிப்பாடலிலே அதிகமான விளக் கத்தின் அடிப்படையில் பாடியுள்ளார் என்பது தெளிவு. இது வெறும், புற (இன்றைய விஞ்ஞானிகளின்) ஆய்வு போன்றதன்று; அவர்தம் அகத்துள்–தமது மெய்ஞ்ஞான இயற்கை ஆய்வு, அறிவுத்திறனால் தம் அனுபவத் தால் கண்டு உணர்ந்துகொண்டு சொல்லப்பட்ட தாகும்; அவ்வகையான, உறுப்பியல் சார்ந்த அனுபவத் தின் நிலைதனை அடியேன் கீழே வரைப்பட விளக்க மாகத் தெளிவுப்படுத்தியுள்ளேன்:

வரைபட விளக்கம் – 1



மேலே விளக்கப்பட்டுள்ள வரைப்பட வட்டத்தை, இடதுபக்கத்தின் நேத்திரமாக ஒப்பிட்டுக் கொள்ளவும்; இதில் உள்ளேயுள்ள சிறு புள்ளி (விந்து) நுண்கருநிலை அமைப்பாகும்; அதை ஒட்டிய உள் பெரிய வட்டம், அணுக்கரு நிலையைச் சுட்டிக் காட்டுவதாகும்; அவ் வட்டத்துள் இரண்டு கூட்டல் குறிகள் (பிளஸ் மார்க்குத் தரப்பட்டுள்ளன; அதில் மேலேயுள்ள கூட்டல் குறி, "அசலை" யையும், கீழேயுள்ள கூட்டல் குறி, "அமலை" யையும் குறிப்பிடுவனவாம். "அதை அடுத்துள்ள பெரிய வட்டமான வெளி வட்டம், "பிரயாசிகை" சுற்றி வருவதைக் குறிப்பிடும்; இவ்வட்டத்தின் நேர் மேலும், கீழும் இரண்டு சிறிய வட்டமுள்ளன; அதன் உள்ளே கழித்தல் – (மைனஸ்) குறியாகக் கோடுகள் உள்ளன; இதையே, "பிரயாசிகை" – சுற்றிவரும் நிலையுடன் கூடிய, செயலாற்றுகின்ற தன்மையைக் குறிப்பிடும் விளக்கமாகும் ; அதாவது, உலகம் "ஐம்பூத" இயல் அமைப்புகளைக் கொண்டதாகும்; அந்த அமைப்பில் பல கோடிக்கணக்கான . "அணுக்கள் (Atoum)" இருக் கின்றன என்றும் – அந்த அணுக்கரு அமைப்புகளைப் பகுத்துப் பிரித்துக் காணில், அந்த அணுக்களிலே "அசலை (Proton)" என்கின்ற "முன் அணுத்துகள்கள்" – கோடிக் கணக்கில் அமைந்திருக்கின்றனவென்றும், – அவற்றுள் "அமலை (Nuetron)" என்கின்ற, "பின் அணுத் துகள்கள்" – ஓரனந்தம் இருக்கின்றனவென்றும், அவற் றைச் சுற்றிக் கொண்டு கணக்கிட முடியாத அளவுக்கு "பிரகாசிகள்" (Electron) என்கின்ற, "மின் அணுத்துகள் கள்" – இருக்கின்றனவென்றும் கூறியுள்ளார் வள்ளற் பெருமானார்; ஆகவே, அன்று அவர் பாடிய மேற்படிப் பாடல், – இன்றைய விஞ்ஞானத்தோடு ஒப்பிட்டுப் பார்க் கும் போது நூற்றுக்கு நூறு பொருத்தமுடையதாக யிருக்கின்றது.

அன்றியும், அவர் பாடலில் கோடிக்கணக்கான அணுக்கள் உள்ளதாகவும் சுட்டிக் காட்டியுள்ளார்; ஆயி னும் இன்றைய நவீன விஞ்ஞான உலகம், தங்களுடைய ஆய்வில் சுமார் 112 – அணுக்களைத்தான் கண்டுபிடித்து வெளியிட்டுள்ளது; ஆகவே, மனிதனால் கண்டு பிடிக்க முடியாத அணுத் தன்மைகள் ஏராளமாக உள்ளன; அணுவைப் பற்றி கூறியுள்ள வள்ளற் பெருமான், அடுத்து "வான" – சாஸ்திரத்தைப் பற்றியும் கூறியுள்ளார்; எவ்வா றெனில்,,


சூரியனைச் சுற்றி – "பூமி" முதலான கோள்கள் சுற்றிக் கொண்டிருப்பதைப் போன்று, நட்சத்திரக் கூட்டத்துள்ளே சூரியன் ஓர் சிறிய நட்சத்திரமாகும்; அது தன்னைச் சுற்றிக் கொண்டிருக்கும் கிரகங்களோடு, அதைக் (சூரியனை) கவர்ந்திழுத்துக் கொண்டிருக்கும் மற்றொரு நட்சத்திரத்தைச் சுற்றிக் கொண்டிருக்கின்றது; அதுவும் சூரியனை விடப் பெரிய – வேறொரு நட்சத்திரத்தைச் சுற்றிக் கொண்டிருக்கின்றது; இவ்வாறு பிரபஞ்சத்தில் இருக்கின்ற எல்லா நட்சத்திரங்களையும் இயக்குகின்ற அசையாத, நட்சத்திரம் (அதாவது, "Fixed Star") ஒன்றும் இருக்க வேண்டுமெனவும், அடிகளார் குறிப்பிட்டுள்ளார் என்பதையும் கவனத்தில் ஏற்க வேண்டிய ஒன்றாகும் ;

இக்கருத்தையே "நியூட்டன்" – என்ற விஞ்ஞானி ஒருவர், ஊர்ஜிதப்படுத்தித் தனது ஆய்வையும் – வள்ளலார் சொன்ன கருத்திற்கேற்ப ஆமோதித்துள்ளார்; ஆகவே, அடியேனால் முற்பகுதியில் சுட்டிக் காட்டப் பட்டுள்ள, வரைப்படத்தில் வெளிவட்டம் பெரியதாக ஒன்றும், அவ்வட்டத்தில் மேல்பகுதி – கீழ் பகுதி ஆகிய இடங்களில் நேர் எதிரிடையான சிறு வட்டமும், அச்சிறு வட்டத்தினுள்ளே "கழித்தல் (மைனஸ்)" அடையாளக் குறியாகச் சிறு கோடும் வரைந்து காட்டி, அதற்குப் "பிரயாசிகை (Electron)" எனவும் பெயரிடப் பெற்றுள்ளது; அடுத்து உள்ளே சிறிதான வட்டம், (பெரிய வட்டங்களுக்கு மத்தியில் உள்ளது) அந்தச் சிறிய வட்டப் புள்ளியையே, "அணுக்கரு (Nucleus)" எனப் பெயரிடப் பெற்றுள்ளது; அச்சிறு வட்ட (புள்ளி) அமைப்பிலோர் பகுதியின் – ஓரமாக (அதாவது வட்டக் கோட்டையொட்டி) கீழும், மேலும் ஆக இரண்டு கூட்டல் அடையாள (பிளஸ்) குறியைக் காட்டி, அதில் மேல் பகுதிக் கூட்டல் குறிக்கு "அசலை (Proton)" – எனவும், கீழேயுள்ள கூட்டல் ப்குதிக்கு "அமலை (Neutron)" – எனவும் பெயரிடப்பட்டுள்ளன; ஆகவே மேற்படி வரைப்படத்தில் காண்பது, மேலே விவரிக்கப்பட்டுள்ள புற விளக்கத்தைக் காட்டுவதாகும்; இனி, கீழே அடியேனுடைய அனுபவ சார்புள்ள ஆய்வு விவரத்தைக் கொடுக்கின்றேன்.

ஞான சாதனா அப்பியாசகன் என்ற வகையில் (தியான) அக (உள்) ஆய்வு நோக்கினால் கண்டுணர்ந்த விவரங்களையே, சாதனா ஆய்வாளர்களும், அறிஞர் பெருமக்களும் தெளிவுற மேற்படி, விளக்கங்களையும் – வரைப்படத்தையும் ஆய்வால், ஆய்ந்தறிந்து, – என்னுடைய அனுபவத்தையும் (ஆய்வோடு) நின்று விடாமல் – அனைவரும் தெளிவு அப்படியே பெறல் வேண்டும் என்ற அவாவே இக்கட்டுரையை எழுதியதன் நோக்க மாகும்; ஆகவே விளக்கமும், – வரைப்படமும் அசலை, அமலை, பிரயாசிகை, அணுக்கரு, என்னும் வள்ளலா ரின் பாடலின் தன்மைகெடாமலும், ஆய்வில் கண்ட மேற்படி சூக்கும "அணு" இயல்களை அனுபவத்தில் பிசகில்லாமலும் விவரித்துள்ளேன்.

இனி அடியேனது நேர்முக அகத்து ஆய்வைத் தொடர்கின்றேன்; இதுவரை இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ள வரைப்படத்தின் புறத்து விளக்கங்களை மட்டுமே விவரித்தேன்; இப்பொழுது அகத்து (உள்) விளக்கமாக – எடுத்துக் கொண்டு, மேற்படி வட்டப் பகுதியை இடது பக்க நிலையாகக் கொண்டு ஆய்வைப் பற்றி விவரித்தல் ஏற்புடைமையாகும் என்பது அடியேனின் விருப்பமாகும்; ஆகப் பெரிய வட்டத்தினுள்ளே, சிறிய வட்டத்தின் அமைப்புள்ளது; மேலும் – கீழுமாக இரண்டு கூட்டல் குறி (பிளஸ்)யின் அடையாளச் சின்னங்கள் வரையப் பெற்றுள்ளது; அச்சிறிய வட்டத்தையே (புள்ளியையே) "அணுக்கரு (Nuecleus)" – எனச் சொல்லப்பட்டுள்ளது; "அணுக்கரு" – என்றாலே, அவ்வணுக்களின் கூட்டத்திற்கு ஆதார நிலையென்றாகின்றது; இது அக ஞானச்சாதனா அப்பியாசத்தில், ஓர் நீர் மண்டலமாக உள்ள வட்ட அமைப்பாகத் தோற்றமாகியுள்ளது; அதற்கு மத்தியிலேதான் "சிவ நிலை" – புலப்படும். "ஓங்காரப் பீடமாகிய (மௌன பீடம்)" அமையப் பெற்றுள்ளது; ஆங்கேதான் "பிராணன்", "அபானன்", – எனப்படும் ஆதாரச் சூக்கும இயல் தன்மைச் செயல்பட்டு சாதகர்களை ஞான நிலை பெறச் செய்கின்றது; அந்த அடிப்படை உண்மையையே –வரைப்படத்தில் உள்ள இரண்டு கூட்டல்கள்; குறிப்பிடுவதாகும். அதிலே மேலேயுள்ளக் கூட்டல் குறி, சிவநிலையெனப்படும் "ஈசானியத்திலும்" – அதாவது, அதுவே "சத்" – என்ற "அசல்" (அதாவது அசலையாக) இடம் பெறுகின்றது; அடுத்துக் கீழேயுள்ள கூட்டல் குறியானது, "சித்" என்ற "அமல்" (அதாவது அமலை) என இடம் பெறுகின்றது; அடுத்துள்ள வெளி வட்டமான பெரிய வட்டத்தில் குறிப்பிட்டுள்ள "கழித்தல்" (மைனஸ்) குறியாகிய "பிரயாசிகை" – யென ஞான சாதனா அப்பியாசத்தின் முறைக்கு ஏற்ப, "ஆனந்தம்" – எனப் பொருள்படுகின்றது; எவ்வாறெனில், "அசலை"யெனப்படும் அமைப்பை உறுதியான, அழியாத, நிலையான ஓர் "அசல்" – பொருளாகத்தான் ஏற்றுக் கொள்ள முடியும்; ஆகவே அந்த அசலாகியது, சிவநிலையாகிய, "சத்து" எனவும் – அது மேல் பகுதியான "ஈசானியத்தில்" – நிலைத்துக் கீழ்ப்பகுதியை நோக்கி (அதாவது, தெற்குப் பகுதியை) பார்த்தவாறு அமையப் பெற்றதாம்; அடுத்தபடி கீழேயுள்ள கூட்டல் குறியானது, "சத்தி" – அம்ச நிலையாகவும், – பஞ்சேந்திரிய சத்திகளின் (அதாவது, "பஞ்சபூதவியல்") சூட்சும வண்ண அமைப்பாகவும் உள்ளது; அதனால் "அமலையாகிய (சித்து)"க் கீழே இருந்து மேற்படி "சத்தி நிலையும்" – "பஞ்சேந்திரிய" – நிலையும் ஒன்றாகி (ஞான சாதனையால்) அப்பியாசகன் இணைப்பையுண்டாக்கும் போது, அது "அபான வாயு" என்ற முறையில் மேல் நோக்கியெழுந்து, சிவ நிலையாகிய "சத்து" – அம்சத்தை நோக்கிப் பாய்ந்து மேலே சென்று, "மௌன பீட வாயிலை"த் திறந்துவிட ஏதுவாகியவுடன் உள்ளேயுள்ள "சிவவொளி" – வெளிப்பட முடிகின்றதாம்; இதைத்தான், "சத்து – சித்து" ஒன்று கூடிய "சிவ • சத்தி" அம்சமாக ஞான சாதகன் காண்கின்றான்; அந்நிலையில் அவன் பெறுவதே – "ஆனந்த நிலையாகும்" இந்த நிலைக்குரிய விளக்கமே "பிரயாசிகை" – எனப்பட்ட அமைப்பிற்குப் பொருந்தும்; ஆகவே, மேற்படி "சத்சித்தானந்தம்" ஆகிய மூன்றையும் – வெளியுலக அமைப்பிற்கேற்ப, வரைப்படமாக வரையப்பட்டு, முக்கியமாக வள்ளலாரின் திருவருட்பாவின் பாடலுக்கும் பொருத்தம் பிசகாமல், "அக" அனுபவத்தையும், எவ்வித மறைப்பும் இல் லாமல் புகுத்தி அடியேன் வரைந்து கொடுக்க அத்திருவருள் ஆணையே முன்னின்று அடியேனை இயக்கியுள்ளது.

தமிழின் தொன்மை மரபு சிறந்து விளங்கிய அன்றைய நாட்களில் வள்ளலார் போன்ற மெய்ஞ்ஞான சித்தர்கள் தம், அகத்துள் கண்டுணர்ந்த அணுநிலை களையேதான், இன்றைய விஞ்ஞானம் அணுக்கரு (Nuecleus), அசலை (Proton), அமலை (Nuetron), பிரயா சிகை (Electron), – யென அவ்வணுவின் விளக்கங்களைத் தெளிவுபடுத்தி யுள்ளதெனலாம்; "அண்டத்தில் உள்ளது பிண்டத்தில்" – என்பது நமது செந்தமிழ் வாசகமாகும்; அதன்படி அண்டத்தில் (தூல) அமைப்பில் உள்ளதையே மேற்படி வரைப்பட விளக்கமாகவும் ஏற்கலாம்; ஆகவே அடியேன் அதன் (சூட்சும) அமைப்பிற்கேற்றவாறு 'பிண்ட'த்தில் உள்ள நிலைகளை அப்படியே விவரித்துள்ளேன். அதையும் புரிந்து கொண்டு பயனுறும் வகையில், வரைப்படத்தில் விவரித்துள்ளேன்.



இந்த இரண்டு வட்டத்தின் உள்ளேயுள்ள சிறு புள்ளியே உச்சி, மௌன பீடம், எனப்படும். அதுவே கிழக்குப் பகுதியாகும். அப்புள்ளியின் நேர் பின்பகுதியே மேற்குப் பகுதி எனப்படும். புள்ளியின் மேற்பகுதி நேர் வடக்கும், நேர் கீழ் பகுதி தெற்குமாகும். ஆக உச்சியை மையமாகக் கொண்டு மேல் வடக்கிற்கு மத்திய பகுதியின் பக்கப் பகுதி வடகிழக்கு எனவும், அவ்வாறே நேர்கீழ் பகுதியும் மத்திய பகுதிக்கும் பக்கப் பகுதி தென் கிழக்கு எனப்படும்.

ஆகவே மேற்பகுதியுள் உள்ள கூட்டல் குறி "ஈசானியம்" – என்ற "சிவநிலைக்களமாகவும்," – கீழேயுள்ள கூட்டல் குறியைக் "கன்னி மூலை" – அல்லது "அக்கினி மூலைக்குரிய" தென்கிழக்கு "சத்திநிலை" களப்பகுதியெனவும், சொல்லப்பட்டுள்ளது; அதனாலேதான் சிவன் தெற்கு நோக்கியுள்ளதைச் சுட்டிக் காட்டும் முறையில், "தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட வர்க்கும் இறைவா போற்றி" – என்றனர் ஞான சித்தர்கள்; ஆகவே, மேற்படி விளக்கங்களைச் சொந்த தியானாய்வின் அப்பியாச அடிப்படையில் அடியேன் உள்ளுணர்வு பூர்வமாக அனுபவத்தில் கண்டுணர்ந்த "சத்" (உண்மை), நிலை அனுபவங்களாகும்; ஆகையால்தான், "அண்டம் – பிண்டம்" கொண்டதோர் இணைப்பாக விவரித்து வரைப் பட விளக்கம் வரைய முடிந்தது. அந்தச் சாதனைக்குரிய இடம் நமது சிரசின் பகுதியில் உள்ள "ஞானேந்திரிய" – அமைப்பின், நேத்திர பகுதியேயென்பதை சுட்டிக் காட்டி விளக்கும் வகையில் வரையப்பட்டனவாகும்.

இதுவரை புறம், அகம், சார்புடைய விவரத்தின் விளக்கவரைப் படங்களை எழுதி, அதற்குரிய விவரங் களையும் தொகுத்து விவரித்து இருக்கின்றேன்; ஆகவே முன் வரைப்படத்தையும், பின் வரைப்படத்தையும் ஒப் பிட்டு – ஊன்றிக் கவனித்தால், "அணு நுண்" – இயலின் உண்மை நிலைகள் விளங்கும்; ஆகவே அனைத்தும், "சத்து அணுவும்" – "சித்து அணுவும்", இணைந்தால் மூன்றாவது நிலையாகிய – "மின் இயல்" – ஆனந்த மயமாக விளங்கும். இதனால்தான் உலக, உயிர், தோற் றங்கள் உண்டாகி வளர்கின்றன; இயங்குகின்றன; ஆகையால் சத்தி அம்சமாகிய "அமலை" – சிவ அம்ச மான "அசலை" – யுடன் கலந்தால் அல்லது கலக்கப் பட்டால்தான், வெளியுலக போக பாக்கிய அமைப்புக ளும், அகமுகத் தத்துவ ஞானப் பேரின்ப அமைப்பு களும், எளிதாகப் பெறப்பட்டுப் பிரகாசத் தெளிவை (பிரயாசிகையை) அடையவும், பெற்றுய்யவும் முடியும்.

இதுவரை அடியேன் விவரித்தவற்றை விடாப்பிடி யாக முறைப்படி ஆய்வு செய்பவர்கள் மேற்படி உண்மை விளக்கத்தைக் கண்டுணர முடியும்; புறநிலைகள் இயங் குவது, தோன்றுவது, மறைவது, எல்லாமே "அகத்தின்" – செயலின் விளக்கங்களேயாகும்; நம்பினோர் கைவிடப் படார், இது நான்குமறைத் தீர்ப்பு" – எனச் சொல்லாமல் சொல்லி, இக்கட்டுரையை நிறைவு செய்கின்றேன்.



THIRU MANDIRAM

(BAKTHA SIRONMANI. AUKULA. RAJENDIRA BABU. D. COM.,)

The Saiva Siddhanta (1) system of metaphysics is set forth in the compilation of Tamil works known as "Twelve Tirumurais" of which "Tirumandiram" is the tenth Tirumurai (2).

"Tirumandiram" begins with Payiram which includes Upadesam or instruction, reminding us of the perishability, worthlessness and mutability of the physical causal body, wealth and youth, and provokes inquiry into that which remains permanent and everlasting.

The term "mantram" denotes an idea that sustains and safeguards a person who is deeply immersed, as it were, in seeking Truth through its instrumentality.

To elevate men, to great heights, as his idea. One who feels a compulsive urge to enter into a deeper and higher realms of life, should safeguard himself with ideas that bring about an upward orientation in one's being.

The late Dr. V.V. Ramana Sastri defines mantram as "an idea that is formed out of (spiritual) churning. Mantrams, therefore, are images that emerge in the mind (astral plane) as a result of ceaseless meditation on the Absolute. Mantram is the spark that lights the torch of knowledge. Mantrams are a means of attaining knowledge and a beacon light to the seeker.

The southern part of our great country is a land of poetry and mysticism. Here mountain solitudes, cool and pleasant groves, mutts and monasteries and temples on the banks of holy rivers, streams or tanks and stately temple towers pointing to Heaven have inspired the poets and philosophers.

In the post epic-age, just as Buddhism flourished in the northern part of our country, so about this age Jainism dominated the lives of the ancient Tamils in Sourth India. The Jains have enriched Tamil literature and wieldd enormous power over the church and the state in South India. Their gift of vegetarianism to the southerners deserves to be remembered for even with gratitude. Till the fifth century A.D. the Tamils developed under Jain influence a pessimistic view of life and looked for solace in renunciation and retirement from the world and severe austerities.

It was at this critical stage that sixty three savaite saints made their dramatic appearance at different centres in South India and showed by their singular example an entirely new way of life in attaining salvation. Their cosmopolitan character and unconventional approach to the problems of life found Universal acceptance.

Tirumular's origin, the circumstances that led to leaving Kailas and to his settling down in the land of the Tamils, the social forces that inspired him to produce immortal monumental work "Tirumandiram", all these are lost in the mist of antiquity. No historical background is possible. None knows the real name of this great sage. Tirumular is the name he acquired later when he became a cowherd. One has to turn to another great treatise "Periapuranam" for what it has to say on the story of his life.

OM
Seventh Tantram

Padmas or Chakras

Chakras are in the Linga sarira (Astral body). Linga sarira is of 17 tattwas, viz. 5 Jnanendriyas (Ears, skin, eyes, tongue and nose), 5 Karmendriyas (speech, hands, legs, genitals, arms); 5 Pranas (Prana, Apana, viyana, Udana, Samana); Manas (mind); and Buddhi (intellect). These have corresponding centres in the spinal cord and the nerve plexuses in the gross body. Each chakra has control and function over a particular centre in the gross body.

Sushmna prana moves in the nervous system of the Linga sarira (astral body) Sthoola prana moves in the nervous system of the gross physical body. The two courses are intimately connected. They act and react upon each other. The chakras are in the astral body even after the disintegration of the physical organism at death. According to a school of thought, the chakras are formed during concentration and meditation only. This is not possible. The chakras should exist there in a subtle state, as the gross matter is the result of the subtle matter. Without the subtle, the gross body is impossible.

Wherever there is an interacting of several nerves, arteries and veins, that centre is called Plexus: The physical gross plexuses that are known to the Vaidya shastras are Hepatic, Cervical, Bractinal, Coccygeel, Lumbar, Sacres, Cardiac, Epigastric, Esophageal, Pharyngeal, Pulmonary, Lingual, Prostatic, etc. Similarly there are plexuses or centres of Sukshmna prana in the sushmna Nadi. All the functions of the body are under the control of these in the sushumna. These are subtle centres of vital energy. These are the centres of consciousness (Chaitanya). These subtle centres of Subshumna have their corresponding centres in the physical body.

The subtle centres in the Sushumna Nadi are otherwise known as Lotuses or Chakras. A particular Tattwa predominates at every chakra. There is a presiding deity in each chakra. In every chakra a certain animal is represented. It denotes that the centre has the qualities, Tatwas or Gunas of that particular animal. There are six important chakras :– Muladhara, Swadhisthana, Manipura, Anahata, Vishuddha and Ajna. Sahasrara is the chief chakra. It is in the head. These 7 chakras correspond to the Lokas (Bhuh, Bhuvah, Swah, Maha, Jana, Tapa and Satya lokas). Muladhara to Vishuddha are the centres of pancha bhutas (five elements):– Earth, water, fire, air and ether.

The term "Shat chakra" refers only to the chief six chakras viz. Muladhara, Swadhishthana, Manipura, Anahata, Vishuddha and Ajna. Above all these we have Sahasrara chakra. This is the chief of all the chakras. All the chakras have intimate connection with this centre. This is situated above all the chakras.

Om

Japa is the repetition of any mantra or name of the Lord. A mantra in the Hindu religion, has a Rishi who gave it to the world, a metre which governs the inflection of the voice, and a Devata or a supernatural being, higher or lower, as its informing power. The Bija, seed, is a significant word, or a series of words which gives it a special power. Sometimes this word is a sound which harmonises with the keynote of the individual using it and varies with individuals, sometimes this word expresses the essence of the Mantra, and the result of the Mantra is the flower springing from this seed. The shakti is the energy of the form of the Mantra ie., the vibration forms set up by this sounds. These carry the practitioner to the Devata. that is worshipped. The Kilaka, the pillar, is that which supports and makes strong the Mantra, or the pin. which fastens the Mantra together, this is the ceasing of sorrow, by the freeing of oneself from imperfections.

"As the smallest drop of water detached from the ocean contains all the qualities of the ocean, so man,

detached in consciousness from the Infinite, contains within himself its likeness; and as the drop of water must, by the law of nature, ultimately find its way back to the ocean, and lose itself in its silent depths, so must man, by the unfailing law of his nature, at last returns to his source, and lose himself in the heart of the Infinite.

Om is made up of "A U M." "A" represents the physical plane "U" represents the mental and astral plane, the world of intelligent spirits, all heavens "M" represents the whole deep sleep state, and all that is unknown even in ones wakeful state all that is beyond the reach of the intellect.

Anda Lingam

The Linga in the post vedic period became symbolical of the generative power of Lord Siva.

Linga means "Mark" in Sanskrit. It is symbol which points to an inference.

In the Linga Purana"

"Pradhanam prakriti Vedahurlingamuttaman
Gangaharvarnarasairheenam sabda
Sparshadivarjitam"

The foremost lingam which is primary and is devoid of smell, colour, taste, hearing, touch etc. is spoken of as Prakriti (Nature). The Lingam is an egg. It represents Brahmanda. Whatever that is contained in the Brahmanda is in the Lingam. The whole world is the form of Lord Siva.

A Siva linga consists of three parts, the lower of which is the Brahma Peeta, the middle one the Vishnu-pitha and the uppermost one, the Siva pitha.

Linga signifies that the creation is effected by the union of Prakriti and Purusha. It means Laya, Jnanam, Vyapyam, Prakash, Arthaprakasha. Samarthya and the symbol which denotes the above meaning. Lingam means the place of dissolution the world and all beings. It signifies also "Satyam, Jananam, Anantam, Truth, Knowledge and Infinity." It indicates that Lord Siva is endowed with all-pervading and self-luminous nature. Linga is a symbol which makes us to understand the various kinds of Artha which are indicated above.

There are six lingas viz. Anda linga, Pinda linga, Sadasiva linga, Atma linga, Jnana linga and Siva linga. These lingas are taken to mean the characteristies by which the Anda (the Universal) Pinda (the body) Sadasiva etc. are to be recognised and understood.

Pinda Lingam

Siva made Maya as the body, senses and the Universe and thrust the jivas into the Maya. He created the idea of egoism 'I' ness in them. He bound them in karma and made them experience pleasure and pain according to the nature of these karmas, virtuous actions or vicious deeds. This is the state of bondage of the jivas.

By slow degrees Siva who releases them from the fettering of egoism, karmas and Maya and makes them shine as Siva.

The jivas have no independance, when they are under the influence of three impurities i.e., Anavam, Karma and Maya. They are endowed with a little knowledge (Alpajnana).

Life or prana is in the body. Lord Siva is within the Prana. He is the Prana of Pranas, and yet he is in distant from the Pranas and the body. Siva is the support for the body, Prana and jiva. The jiva cannot do any action without Siva. It is Siva who illumines the intellect.

The four Sadhanas (viz. Sariai, kriyai, Yoga, and Jnanam) are the four steps to attain salvation. They are like the bud, flower, unripe fruit and ripe fruit.

Lord Siva gradually frees the individual souls from egoism, karma and Maya. The jivas gradually become disgusted with the sensual pleasure. They become balanced in pleasure and pain. Through the benign grace of the Lord they understand that karma is the cause for births and deaths. They begin to do actions for the Lord, Serve the devotees of the Lord and attain purity of mind. They understand that the soul or Siva is distant from the body, senses and mind and is beyond the reach of mind and speech. They get initiation. By practising Siva yoga, all the activities of senses, mind and itellect cease. Their hearts melt and attain Siva pada.

The first manifestation is called the Sadhyaka Tattwa. There is the beginning of formation of ideas. There is Nada sakti in this Tattwa. Next comes Iswara Tattva. This tattwa is called Bindu. The fourth Tattwa is Vidya or Suddhavidya. Prakriti modifies into the Tattwas of mind, senses and the matter which contribute the world.

Nada, Bindu are all names for different aspects of Sakti. Nada is really Siva sakti. Siva has two aspects. In one aspect he is the supreme changeless one who is Sat Chit Ananda. This is Param Samvit. In the other aspect he changes as the world. The cause of change is Siva Tattwa.

Panchakshara is a Maha Mantra which is composed of five letter, Namassiva. A Mantra is that which removes all obstacles and miseries of one who reflects on it and bestows eternal bliss and immortality. Panchakshara is the best among seven crores of Manttras. There are seven skandhas in Yajurveda. There is Rudrayayi in the centre of the middle skandha. In this Rudrayayi there are one thousand Rudra Mantras. Namassivaaya or the Siva Panchakshara Mantra shines in the centre of these one thousand Rudra Mantras.

Yajurveda is the head of Parameshwara, who is the Veda Purusha. Rudram which is in the middle is the face. Panchakshara is His eye, Siva which is in the centre of the Namassivaya. Pranava denotes the external form of the Lord. Panchakshara is the body of Lord Siva. This is the abode of Lord Siva. If Om is added to the Namassivaya in the beginning then it becomes Shadakshara or six lettered Mantra. The five letters denote the five actions or panchakrityam of the Lord viz. Srishti (creation), sthiti (preservation) Samhara (destruction). Tirodhana (veling) Anugraha (blessing) the five elements and all creations through the combination of five elements.

"Na" repesents Tirodhana "Ma" the Mala or impurity, "Si" Lord Siva. "Va" the Arul Sakti and "Ya" the individual soul.

Anna Lingam

Nishkala Siva is Nirguna Siva. He is not connected with the creative Sakti. Sakala Siva is associated with the creative Sakti. Maya or Prakriti is within the womb of Sakti. Maya is the matrix of the world.

Gnana Lingam

Linga is not a block of stone. It is all radiant Tejas or Chaitanya. Linga means "Mark" in Sanskrit. It is a symbol whih points to an inference.

The support of peetam is Prakriti or Parvati and Linga is a Chinmaya Purusha which is luminous.

Jnaneya or that which is to be known is Siva Ananda which is a product of Siva and His grace, Sakti. The Jnata (knower) is the individual soul or Jiva. He obtains Jnanam or knowledge and then knows Siva by abiding in Siva Anand.

Siva Lingam

This vast world of countless forms is a Linga of the Omnipotent Lord. When one sees and looks at the linga one's mind is elevated and begins to think of the Lord.

"I am one without a second. I am formless Pure".

The soul is a real and eternal entity. Desire, aversion, volition, pleasure, pain, intelligence, cognition are all its qualities or marks. The object of the notion "I" is the soul. No cogntion or recollection is possible without a soul. The eye cannot see the objects and the ear cannot hear sounds without a soul. There should be an agent to use the instruments (senses). The agent is the soul. After an object is seen, even if the eyes are both destroyed, the knowledge that I have seen remains. This knowledge is not a quantity of either the objects or the senses. The mind is not the soul. It is only an instrument of the soul, by means of which it thinks. The self is the subject. The soul exists when the body perishes the senses cut off and the mind is controlled.

Linga is only a outward symbol of the formeless Being. He is indivisible, all-pervading, eternal, auspficious, ever-pure, immortal essence of this vast Universe, who is the undying soul sealed in the chambers of one's heart, innermost self or Atma and who is identical with the Supreme Brahman.

Tirumular

My adorable Guru instructed me to fix the Brahmarandhra at a centre near the larnyx, and to keep my mouth shut (i.e.) observe silence and think of God always. Instead my mind was wandering helter skelter and my doubts increased. Due to benigngrace of God my doubts were shattered to pieces and I was taken to his fold. I now learnt that God is the protector of all souls. I now realised that He is the doer. Our intimacy grew deeper and deeper and have unshaken faith. I have reached a perfect awareness of Supreme Reality.

"Tat Twam Asi" "where" (I' and 'Thou' submerged). There is no separate entity. Lover and the beloved become one. I attained the Supreme Bliss of Life of Sat Chit Ananda. Everlasting bliss of Happiness.

Siva Puja

Lord Siva is worshipped in His Saguna aspect in the form of Siva Lingam. Siva bhaktas do panchayatana puja. In this pooja, Ganesha, Lord Siva, Parvati, Suryanarayana and Saligrama are all duly worshipped. One will have wealth, Peace of mind, attainment of Dharma, Artha, Kama and Moksha also if one performs Panchayatana pooja.

The idol is only a symbol of the Divine. A devotee does not behold therein a block of stone or a mass of metal. It is an emblem of God for him. He visualises the indwelling presence on the Murti or image. The Murti is the same as the Lord, for it is the vehicle of the expression of the Mantra chaitanya which is the Devata.

The Hindus know that the images are simply so many symbols to fix the mind for developing concentration, so many concrete pegs to hang their spiritual ideas and convictions.

Nirguna Worship

Hinduism leads the aspirants gradually from material images, from the diverse mental images to the One personal God, and from the Personal God to the Impersonal Absolute or the Transcendental Nirguna Brahman.

One should meditate on Siva in His all pervasive, unmanifested aspect, as the Supreme Para Brahman. Lord Siva as Supreme Brahman. Without form, attributless, eternal, infinite, one should meditate on Him as the Shuddha, Satchitananda, Vyapaka, Atman, Nitya, Suddha, Budha, Mukta, eternally free Brahman. An unlimited means of consciousness.

The human soul makes different kinds of attempts to grasp and realise the Infinite or the Absolute according to his strength or degree of evolution. He soars higher and higher, gathers more and more strength and eventually merges himself in the Supreme and attains Oneness or Identity.

Guru Puja

God alone is the Guru or spiritual teacher. He shows Siva or Sat. Sat Guru is Ambalam or Chidakasa Siva. One has to search the Guru in one's own heart. Knowledge, devotion, purity, siddhis are obtained through the grace of the Guru. The grace descends on virtuous aspirants who have purity dispassion etc. Guru param imparts spiritual instructions. Then Suddha Guru confers upon him Divine grace. The latter gets several powers, purity, the power to know the Mantras, higher siddhis etc. The Sat Guru reveals him in the Chidakasa, breaks the three bonds of Anava (egoism), karma (action) and Maya (the illusion) and helps him to enter the illumitable domain of Moksha or supreme abode of eternal bliss. Sat Guru presents himself later on and manifests Sat, Asat and Sadasat. The jiva attains this final knowledge and becomes Sivam Himself. The Guru who presents himself in the earlier and later stages is Siva himself.

Tirumular says :

The holy feet of my Lord are Mantra beauty and truth.

Abandon pride of learning. Introspect. Look within. One will be established in Siva. Nothing will shake the devotee. He will be freed from trammels of births and deaths.

Maheswara Puja

Of the three yagnas, Athithi yagna is the last one i.e., giving food to guests and honouring them.

Hospitality is one of the householders chief duties. He must even feed first the guests, Brahmanas and householders.

Yogis and sannyasins give solace to the householders when they are in trouble and in distress. They are the messengers of the Atman knowledge and heavenly place. They are the disseminations of Adhyamtic science and Upanishadic revelations. They heal the sick, confort the forlorn and nurse the bed ridden. They bring hope to the hopless, joy to the depressed strength to the weak and courage to the timid, by imparting the knowledge of the Vedanta and the significance of the "Tat Twam Asi" Mahavakya.

When a Gnani is fed, Lord is pleased.

Greatness of Devotees

Devotees of Siva do not have Ragha-Dwesha or pleasure and pain. They become Immortal. They eat sparingly and only once. Hunger and thirst do not hurt them. When the soul leaves the material body, they attain Moksha.

Additan (Surya) Sun

I always adore Surya, the Sun, the beautiful Lord of the world, the Immortal, the quintessence of the Vedanta, the Lord of Gods, ever-pure, the one true consciousness of the world himself, the Lord of India, the Gods and men, the preceptor of the gods, the creast-jewel of the three worlds, the very heart of the forms of Brahma, Vishnu and Siva, the giver of Light.

O Pushan, (Sun, nourisher) the only Seer (sole traveller of the heavens), controller of all (yamas), Surya, son of Prajapathi; dispense they rays and gather up the burning light, I behold Thy glorious resplendent form, I am He, the Purusha within Thee".

The sun acquires four properties or characteristics when he emerges into the world (universe) in the mind and in Gnana andadittan, Pindadittan, Manadittan and Gnanadittan.

Andadittan gives light and sustains the seven worlds.

Pindadittan is the soul, having removed the three Malas kinds of impurities Anava, Karma and Maya and having removed the Malas reside in Gods mind.

Manadittan is the Light in the soul which draws him closer and gives knowledge.

Gnanadittan is the manifestation and paramadittan which opens at in the soul like lotus.

The soul that abides in Sivadittan passes through several stages and acquires appropriate names at each stage, viz. Purusha, jiva Pasu and Bodha etc.

Sivadittan is the Sivaprakasam that gives light to the first four categories.

Control over sense organs

We have 5 mad elephants in our body and that cannot be tied to their posts (eyes, ear, tongue, skin and nose). They can be controlled only when the Mahat as well as the elephants become weak and emaciated.

In a forest there are five lions roaming as they please. If the lions are deprived of their claws and teeth, the forest can be made safe.

The owner owns five birds. They are picking food grains in five enclosures set apart, but they can escape through holes if you are not diligent.

A king has five sons and ninety six ministers. Each son desires to rule the kingdom as the king. To which king the tax payers should pay their taxes. It is not possible for each to pay taxes to each and every king. To overcome this is to overthrow all the five sons.

Gunas are those who have conquerred the senses and they contemplate Siva in their heart and enjoy the Atmic bliss of Sat Chit Ananda. They do have Deha Abhimana. Without the grace of Guru, one cannot achieve everlasting Bliss of Life. Guru is competent to teach to his disciple Atma Vidya, removes the pit falls, veil of ignorance, tossing of mind till he becomes a Dheera, controls the mind and fix his gaze on the Lord.

1. The world is not real but appears real.
2. Never forget God.
3. Pray silently, intensely as long one can do.
4. Speak the truth at all costs. Do not budge an inch and utter falsehood.
5. God is one. He is called in different names (Rupa and Anga) according to ones whims and fancies.
6. Let noble thoughts come from all sides and
7. When you are in jaws of death, do not allow your mind to think on transitory objects which you have already tasted but fix your gaze on the holy feet of Lord and enjoy the Ananda Swaroopa and attain Him (Moksha).



சைவத் தமிழ் திருமுறை ஓங்குக

(க. கருப்பையா, மலேசியா)

தென்னாடுடைய சிவனே போற்றி!
எந்நாட்டவருக்கும் இறைவா போற்றி!

ஐந்து கரத்தனை ஆனைமுகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன் தனை ஞானக்கொழுந்தினைப்
புந்தியில் வைத்து அடி போற்று கின்றேனே

(காப்பு திருமூலர் திருமந்திரம்)

தமிழ் இன்பமொழி, தொன்மை மொழி, மறை மொழி; திருமுறைகள் மெய்யுணர்வால் நாயன்மார்களால் திருக் கோவில்களில் பாடல் பெற்றவை.

நாம் நல்வாழ்வு பெற நல்வழி தேவைப்படுகிறது. கடவுளைப் பற்பல நோக்கத்துடன் வணங்குகிறோம். வேதவழி நின்ற சான்றோர்கள் காட்டிய நெறிமுறைப் படி, வழிபாடு செய்வது நமது கடமை.

ஈசனுக்கு ஆயிரமாயிர நாமங்கள், ரூபங்கள். அவை யாவும் அன்பர்களை ஆட் கொள்ள, இறைவன் எடுத்த அருட்கோலங்கள். ஆண்டவன் நம்மேல் கருணை கொண்டு அருள் பாலிக்கிறார்.

வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல

(திருக்குறள்)

ஞானப்பெரு மக்களால், இயற்றப்பட்ட தெய்வீகப் பாடல்கள், பல திருமுறைகளாக மலர்ந்து, சைவ நெறிக்கு, ஊக்கமும், ஆக்கமும் தரவல்லதாக விளங்கி வருகின்றன. அவைகளை அருளிய ஆன்மீகப் பேரறிவா ளர்களை நாம் உளமார வாழ்த்தி; போற்றிப் புகழக் கடமைப் பட்டுள்ளோம்.

திருமுறையே! சைவ நெறிக்கருவூலம்
தென்தமிழின் தேன்பாகாகும்
திருமுறையே! கயிலையின் கண்சிவ பெருமான்
செவி மடுத்த செந்தமிழ் வேதம்
திருமுறையே! நடராசன் கரம் வகுத்த
எழுதியருள் தெய்வ நூலாம்
திருமுறையே! சொக்கேசன் மதிமலிவாய்
மலர்ந்தருளும் சிறப்பிற் றாமால்

(திருமுறைத்தலங்கள் என்னும் நூலிலிருந்து)

இறைவன் சம்பந்தப்படாத நிலை ஏதேனும் உண்டா? அப்படி இருப்பின், அது வெற்றி பெறுமா? வெற்றி பெற் றாலும், அது நிலைத்து நிற்குமா? நின்றால் ஆண்டவனின் அனுக்கிரகத்தை அடைய அது உதவி புரியுமா? என்பது சிந்தனைக்குறியது. சித்திப் பெறுவது, அவரவர் தவப் பயனைப் பொறுத்துள்ளது. கடவுளை நாம் உளமாற வழிபட வேண்டும்.

தேவர்குறளும் திரு நான் மறையும்
மூவர் தமிழும் முனி மொழியும் – கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென்று உணர்

(ஔவையார்)

தோலும் துகிலும் குழையும் சுருள் தோடும்
பால் வெள்ளைநீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையும் உடைத்தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்து ஊதாய் கோத்தும்பி

(மாணிக்கவாசகர் திருவாசகம்)

எப்பொழுதெல்லாம் இறைவனின் அருளும், துணை யும் தேவைப்படுகிறதோ, அப்போதெல்லாம் தவறாமல் கடவுளைப் பிரார்த்திக்க வேண்டும்.

நூறான் பயன் ஆட்டிநூறு மலர் சொரிந்து
நூறா நொடிவதனின் மிக்கே – நூறா
உடையான் பரிசுத்த வெரிஉத்தமனை வெள்ளேறு
உடையானை பாடலால் ஒன்று

(கபிலர் சிவபெருமான் திருவந்தாதி)

நூறு மலர்களைச் சொரிந்து, ஆராதனைகள் செய்து வழிபடும் பயனை, பொருளுணர்ந்து, உள்ளன்போடு பாடிப் பெறலாம் என்பது ஆன்றோர் வாக்கு.

வாழ்த்தவாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்த சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே!
வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே

(திருநாவுக்கரசு தேவாரம்)

பேரின்பத்தினை துய்க்க விரும்புவோர் அதனை அருளவல்ல பேராளரும் நமது அருள் மயமான சக்தியினை என்றுமே, நீங்காமல் மங்கள சொருபமான, அந்தத்திரு நீலகண்டரை தியானித்து, வாழ்த்தி வழிபட வேண்டும்.

பாடுகின்ற பனுவலோர்கள் தேடுகின்ற செல்வமே
நாடுகின்ற ஞானமன்றில் ஆடுகின்ற அழகனே
அத்தனென்ற நின்னையே பத்திசெய்து பனுவலால்
பித்தனின்று பேசவே வைத்ததென்ன வாரமே
சிந்தையன்பு சேரவே நைந்து நின்னை நாடினேன்
வந்து வந்துளின்பமே தந்திரங்கு தானுவே
அண்டரண்டம் யாவுநீ கொண்டு நின்ற கோலமே
தொண்டர்கண்டு சொரிகணீர் கண்டநெஞ்சு கரையுமே
அன்னைபோல அருள்மிகுத்து மன்னுஞான வரதனே
என்னையே எனக்களித்து நின்னையானும் நினைவனே

(தாயுமான சுவாமிகள்)

இறைவனை வழிபடுவதற்கே இந்தப்பூத உடலை எம்பெருமான் மனிதப் பிறவியின் வழி அருளியுள்ளார்.

சிற்பர வெளிதனிடிக்குமா,
வகண்ட தத்துவ பரத்துவா
செப்பரும் ரகசிய நிலைக்குள்ளே
விளங்கு தற்பர திரித்துவா திருவளர் முருகோனே

(தவத்திரு பாம்பன் சுவாமிகள்)

முருகப் பெருமான் ஔவைப் பிராட்டியிடம் கேட்கிறார். நமக்கு மறை முகமாக, உபதேசிக்க அரியது எது வென்று?

அரிது அரிது! மானிடராதல் அரிது மானிடர் ஆயினும் கூன், குருடு, செவிடு, பேடு நீங்கிப் பிறத்தல் அரிது. மானிடர்களுக்கு மனித உடம்பு வழங்கியதன் காரணம், அது பெற்றுள்ள, ஐம்புலன்களைக் கொண்டு ஆண்டவனை வணங்குவதற்கே! கூனாக உள்ளவன் கும்பிட முடியாது. குருடன் கடவுளைத் தரிசிக்க முடியாது. செவிடன் ஓதும் திரு மந்திரங்களைக் கேட்க முடியாது. ஊமை மெய்மறந்து, நெஞ்சுருகப் பாடமுடியாது. இவைகளை உணர்த்தவே! ஐயன் வினாவினார் போலும்,

கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளுங் களிப்பே,
காணார்க்கும் கண்டவர்க்கும் கண்ணளிக்கும் கண்ணே
வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரம் அளிக்கும் வரமே
மதியார்க்கும், மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே
நல்லார்க்கும் பொல்லார்க்கும் நலம்கொடுக்கும் நலமே
எல்லார்க்கும் பொதுவில் நடம் இடுகின்ற சிவமே,
என்னரசே, யான்புகலும் இசையும் அணிந்தருளே

(இராமலிங்க சுவாமிகள் திருவருட்பா)

மதிக்கத்தக்க மானிடப் பிறவிதான் பரம் பொருளை மனம், மொழி, மெய் என்ற முக்கரணங்களால் வழிபட வேண்டும். கடவுளை பற்பல நோக்கத்துடன் வாழ்த்துகிறோம். அதற்கேற்ற சிரஞ்சீவித்தன்மை கொண்ட அருளொளி பெற்ற ஞானப் பெருமக்கள் அருளிய சைவத்தமிழ் திருமுறைகளை ஓதி உணர்வோம்.

"ஆடும்பரி, வேல் அணிசே வல்" எனப்
பாடும் பணியே பணியா யருள்வாய்
தேடும் கயமா முகனைச் செருவில்
சாடும் தனியானை சகோதரனே

(அருணகிரிநாதர் கந்தர் அநுபூதி)

படிக்கப் படிக்க, பரவசத்தைக் கூட்டிப் பக்தியை உண்டு பண்ணி; முக்த்தியைத் தரவல்லது சைவ நெறி முறைகள். அருளானந்தத்தைப் பெறக்கூடிய மெய் ஞானக் கருவுலங்கள், எதைப்படிப்பது, எதைப் படிக்காமல் விடுவது என்ற மனப்போராட்டத்தைக் கொடுக்கிறது. அறநூல்களை உண்மைத்தெய்வப் பற்றுள்ளோர்கள் படித்து பேரானந்தம் அடையவேண்டும்.

உளன் கண்டாய் நன்னெஞ்சே உத்தமன் என்றும்
உளன் கண்டாய் உள்ளுவார் உள்ளத்து உளன் கண்டாய்
வெள்ளத்தின் உள்ளானும் வேங்கடத்து மேயானும்
உள்ளத்தின் உள்ளானென்றோர்

(பொய் கையாழ்வார் திவ்யப்பிரபந்தம்)

உடலுக்கு உணவும், அறிவுக்குக் கல்வியும், உள்ளுணர்வுக்குப் பிரார்த்தனையும் இன்றியமையாதது. பக்குவ நிலைக்கு உயர்ந்த மக்களின் எண்ணங்களும் செய்கைகளும் நல்லனவற்றையே நாடும்.

பிரார்த்தனையைத் தனியாகச் செய்வதை விட மேலானது பலர் கூடிச் செய்யும் வழிபாடாகும். இதனால் பல நன்மைகள் உண்டு. ஆர்வம் அதிகரிக்கிறது. மக்கள் நேயம் ஏற்படுகிறது. நல்ல பண்புகள் உண்டாக ஏதுவாகிறது.

இனிய தமிழ்த் திருமுறைச் சோலையில் பக்தி என்ற நறுமணம் கமழும் திருஞானப் பெரியார்கள் அருளிய திருமறை நூல்களை மெய்மறந்து படித்து பரமன் திருவடியடைவோம்.

கல்லாப்பிழையும் கருத்தாப்பிழையும் கசிந்து உருகி
நில்லாப்பிழையும், நினையாப்பிழையும் நின்
அஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையும் துதியாயப் பிழையும் தொழாப்
பிழையும்
எல்லாப் பிழையும், பொறுத்து அருள்வாய் கச்சியே
கம்பனே !

(பட்டணத்து அடிகள்)

வைய நீடுக மாமழை மன்னுக
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தாந்தழைத்து ஓங்குக
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே.

(சேக்கிழார் 12ம் திருமுறை)

நல்லவை பெருக வேண்டும்
நாடெலாம் வாழ வேண்டும்
வளர்க சைவத் தமிழ்த் திருமுறைகள்

தெய்வத் தமிழ் நாட்டியம்



பரத ஈழவாணன், மலேசியா.

நாட்டியத் தோற்றம்

நாட்டியங்களுள் மிகவும் தொன்மையானது மற்ற வகை நாட்டிய நடனங்களுக்கெல்லாம் மூலமாக இருப்பது தென்னிந்தியாவின் (பரதம் – பிறந்த பரத கண்ட நிலபரப்பு) கலைச் செல்வங்களுள் ஒன்றான பரத நாட்டியமேயாகும். பரதக்கலை சிறந்த கவின் கலையாகும். இது தமிழ்ப் பரத முனிவருடைய நாட்டிய நூலை இலக்கணமாகக் கொண்டது.

நாட்டிய நூல் எனும் பழைமையான நூலை எழுதியவர் பரதர். பரதரும் இன்னும் பல முனிவர்களும் ஒன்றிணைந்து எழுதப்பட்டிருக்கலாம் என கருதப் படுகிறது. பரத நூல் ஆயிரமாயிரம் நூற்பாக்கள் அடங்கிய நூலாகும். இது முப்பத்தாறு பகுதிகளைக் கொண்டதாகும்.

நாட்டியத்தின் தூய ஆடல் (நிருத்தம்) அவற்றுடன் வேறு யுக்திகளைச் சேர்க்கும் போதுதான் நாட்டியத்தின் மெய்ப்பாடு மிளிர்கிறது. இவைகளுக்கு வழிவகைகளே அபிநயங்கள் எனக் கருதப்படுகிறது.

பாரதத்தின் வேதகாலத்தில் முற்பட்ட சிந்து வெளி நாகரிகத்தின் காலகட்டத்தில் பற்பல சில வடிவங்களைக் கொண்டு உணர்த்தும் பொழுது சிந்து வெளி மக்கள் நடனக் கலையில் மிக முக்கியத்துவம் காட்டியும், அறிவுடையவராகவும் இருந்தனர் என்பது தெளிவாகிற தன்றோ உண்மை.

பரதத்தைப் பற்றி எழுதிய முதல் நூல் நாட்டியப் பெருநூல். இதை பரதமுனி எழுதினார். இது கி.மு. மூன்றாம் நூற்றாண்டினது என்று அறிஞர் பலர் தமது கைவண்ணங்களில் கலையின் மேன்மையையும், துவக்கத்தையும் கருதி வரலாறாக தமது நூற்பாக்களில் எழுதி வடித்துள்ளனர். பரதம் – அறம், பொருள், இன்பம், வீடு எனும் நாற்பேறுகளையும் நல்க வல்லது. மனவுறுதி, உடல் வளம், இன்ப உணர்ச்சிகளையும் அளிக்க வல்லது.

நாட்டியம் முதன்முதலில் சிவனும், பார்வதியும் நடனம் புரிந்ததாகத் தொன்மையான புராணங்கள் கூறுகின்றன. அப்படி நோக்குமிடத்து சிவனும், பார்வதியும் ஆடிய நிருத்த ஆடல் 108 எனவும், இதைக் கரணங்கள் எனவும் கலைகள் கூறுகின்றன.

ஆடல் நிலைக்கு வழிகாட்டி ஆலயம்

பதின்மூன்றாம் நூற்றாண்டின் இராஜசிங்கன் தேவனால் கட்டப்பெற்ற சிதம்பரம் நடராஜர் ஆலயத்தின் கிழக்கு, மேற்குக் கோபுர வாசல்களின் அருகில் பரத சாஸ்திரத்திலுள்ளபடி கரணத்தைப்பற்றிச் சொல்லியுள்ள சுலோகங்களும், அவைகளின் கரணங்களும் செதுக்கப்பட்டிருக்கின்றதைக் காணலாம். இவைகளுள் 93 கரணமே காணப்படுகிறது. மற்ற 15ஆம் கட்டிடத்தைச் சீர்திருத்தம் செய்யும் காலங்களில் கவனமின்மையால் அழிந்து போயிருக்க வேண்டும் என்று கருதப்படலாம்.

அதே இராஜசிங்கன் கட்டிய கயிலாசநாதர் கோவிலில் ஆடிய பதாகை நடனம், லதாவிருச்சிக நடனம், ஊர்த்வ தாண்டவம், ஆனந்த தாண்டவம் மற்றும் பல 108 கரண நிலை நடன தாண்டவங்களையும் இக்கோவிலில் ஆடற்கலை வடிவ சிற்பமாகச் செதுக்கப்பட்டு, அழியாச் செல்வமாக உருப்பெறச் செய்தான். இதன்படி அரசர்களாலும் ஆடல் கலைக்கு, ஆலயங்கள் வழிகாட்டியாக திகழ்ந்து வந்திருக்கிறது என்பது மறுக்க முடியாது. அவ்வாறே சமயத்துடன் கலையும் – கலைச் சிற்பமும் ஒரு நிலை கொண்டு வளரத் தொடங்கியிருந்திருக்கிறது.

காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோவிலில் கூத்தன், கூத்தியர் நடன உருவங்களாக இரு சிற்பங்களில் செதுக்கப்பட்டுள்ளது. ஆண்களும், பெண்களும் சேர்ந்து ஆடும் கூத்து வகைகளும் அக்காலம் தொட்டு இருந்து வந்துள்ளது. பரதக் கூத்துக்கு இது போன்ற ஆலய சிற்பங்கள் எவ்வளவு வழிகாட்டியாக திகழ்ந்திருக்கிறது என்பதைப் பார்க்கும்போது வியக்கும் வண்ணமாயுள்ளது.

கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரரை மணந்த பரவையார் திருவாரூர்க் கோயில் நடன மாதராவர். கி.பி. 9-ஆம் நூற்றாண்டிலேயே காஞ்சி – முத்தீச்சுரர் கோயில் மட்டும் நாற்பத்திரண்டு பேர் இருந்து இசை, கூத்து ஆகிய கலைகளை வளர்த்தனர். சோழர் கால (900 – 1300) கட்டத்தில் தலைசிறந்து கலை வளர்க்கப்பட்டது. அவ்வப்போது சைவ – வைணவ சமயங்கள் வளர்க்கப்பட்ட காலம், அந்தக்காலக்கட்டத்தில் தான் கோயில்கள் யாவும் கற்கோயில்களாக உருபெற்று மறுமலர்ச்சி தந்தன. ஓவியம், சிற்பம், இசை, நடனம், நாடகம் போன்ற கலைகளும் வளர்க்கப்பட்டன.

அச்சமயத்திலேதான் கோயில்கள் புதுபிக்கப்பட்ட போது கோயில்களில் எல்லா மண்டபங்களின் – கருவறை களிலும், கோயில் தூண்களிலும், உச்சநிலை கோபுரங் களிலும் நடன வகைகள் செதுக்கப்பட்டன. உதா ரணத்திற்கு, சிதம்பரம், காஞ்சி, தஞ்சை, கங்கை கொண்ட சோழபுரம், திருவண்ணாமலை முதலிய இடங் களில் பெரிய பெரிய கோயில்களைக் கூர்ந்து கவனித் தால் கலைவடிவ ஆடல் நிலைகளின் தோற்றம் இருப் பதை நன்கு அறியலாம்.

சிலப்பதிகாரம் கூறும் கூத்து வகைகள்

இத்தில்லை திருக்கூத்து (பரதம்) நடனத்தைப் பற்றி யும் இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரத்திலும் நன்கு தெளிவுபடக் காணலாம். கூத்தப் பெருமானின் ஆடல் அசைவுகளையும் பல வகைப்படுத்தி வரையப் பட்டிருப்பது தமிழுக்குக் கிடைத்த பெரும் கருவூலமாகும். நடனமாடுபவர்களுக்கு கூத்தன், ஆடுமகன், ஆடுமகள் என்னும் பெயரும் உண்டு. ஆடல் ஆசானாகப்பட்டவன் இருவகைக் கூத்துகளில் வல்லவனாக இருத்தல் வேண்டு மெனச் சிலப்பதிகாரத்தில் காணலாம். சிலப்பதிகாரம் கூறுமிடத்து கூத்து வகைகள் பதினேழு ஆகிறது. அவை : வசைக்கூத்து, புகழ்க்கூத்து, வேத்தியல் கூத்து, பொது வியல் கூத்து, வரிக்கூத்து, வரிசாந்திக்கூத்து, சாந்திக் கூத்து, விநோதக்கூத்து, ஆரியக் கூத்து, தமிழ்க்கூத்து, இயல்புக்கூத்து, தேசியக் கூத்துகள், மெய்க்கூத்து, அகமார்க்கம் கூத்து, அபிநயக்கூத்து, நாடகக் கூத்து, சொர்க்கக் கூத்து எனவாகும்.

உதாரணம் : சாந்திக்கூத்தானது தலைவன் இன்ப மேந்தி நின்று ஆடிய கூத்து.

அ. மெய்க்கூத்தானது தேசி, வடுகு, சிங்களம் என மூவகைப்படும். இவை மெய்த்தொழிற் கூத்துகளின் மெய்க்கூத்தாயின. இவை அகச்சுவை பற்றி எழுத லின் அகமார்க்கம் எனப்படும்.

ஆ. அபிநயக்கூத்து என்பது, கதை தழுவாத பாத்தி ரத்தைப் பொருளுக்குக் கையசைத்து வல்லபம் செய்யும் பலவகைக் கூத்து.

இ. நாடகக் கூத்தானது கதை தழுவி வரும் கூத்து. சிலப்பதிகாரத்தில் பொன்மயில் மாதவி ஆடிய பதினொன்று ஆடல் வகை, அவை, கொடுகொட்டி ஆடல், பாண்டரங்கக் கூத்து, அல்லியத் தொகுதிக் கூத்து, மல்லாடல், துடிக்கூத்து, குடைக்கூத்து, குடக்கூத்து, பேடிக்கூத்து, மரக்காலாடல், பாவைக் கூத்து, கடையம் கூத்து என்பனவாகும்.

மேலும் சாக்கைக் கூத்தானது, சாக்கையன் என்பவன் கூத்து நிகழ்த்தும் மரபினன். அவனால் ஆடப்படும் கூத்து 'சாக்கைக்கூத்து' எனப் பெயர் பெற்றது. சாக்கையன் ஒருவன் சேரன் செங்குட்டுவனுக்கு முன் சிவபெருமான் ஆடிய 'கொட்டிச் சேதம்' என்னும் கூத்தை ஆடினான் என்றும் சிலப்பதிகாரம் செப்புகிறது.

திருமூலர் கண்ட தமிழ் நடம்

திருமந்திர மாலை என்ற திருமந்திரத்தை அருளிச் செய்த திருமூலரைத் "தமிழ்ச் செய்ய திருமூலர்" என்று கூறுவதுண்டு. வேதம் செய்த வித்தகர்கள் என்று வேறு வேறு பக்தர்களைப் போற்றுவதுண்டு. திருமூலரையோ, 'சிவபெருமானைத் தமிழ் செய்தவர்' என்று கூறலாம். 'அன்பு சிவம் இரண்டு என்பர் அறிவிலார்' கூறும் இவர், தமிழும் சிவமும் இரண்டு அல்ல, ஒன்றே என்பதைப் போல் திருமந்திரத்தை அருளிச் செய்திருக்கிறார். இவரும் நடன நடராஜ தரிசனம் செய்து, ஊர்த்துவ தாண்டவத்தையும் தரிசித்திருக்கிறார். இதற்கு,

"ஆதிபரன் ஆட, அங்கைக் கனலாட,
ஓதும்சடை ஆட, உன்மத்தம் உற்றாட,
பாதிமதி ஆட, பாரண்டம் மீதாட,
நாதமோடு ஆடினான், நாதாந்த நட்டமே"

என்ற பாடல் ஒரு சான்றாகும்.

காளி கண்ட ஊர்த்துவ தாண்டவம்

காளி (சக்தி) இறைவனை 'ஆடு' என்று கட்டளையிட, அவனும் ஆடுகிறான். அவளும் ஆடுகிறாள். முதன் முத லில் அவளுக்குக் கீழ்ப்படிந்து ஆடுவது போலத்தான் ஆடுகிறான். அவளுக்குக் குதூகலம்தான். பிறகு ஆடற் போட்டி. அவள் ஆரம்பத்தில் ஆடலைக் காண்கிறாள், பிறது அதில் கலந்து கொள்கிறாள் : போட்டி போடு கிறாள்.

இறைவன் நீண்டு விரிந்து நிமிர்ந்து ஊர்த்துவ தாண்டவம் (கரணம்) ஆடுகிறான். ஒரு கால் மேலே ... மேலே இன்னும் மேலே சென்ற வண்ணமாய் இருக்கிறது. ஒரு கால் கீழே... கீழே பாதாளம் ஊடுருவிச் செல்கிறது; சென்ற வண்ணமாய் இருக்கிறது.

எட்டுத் திக்கிலும் எட்டுத் தோள்கள் வீசி நின்று ஆடுவதற்குத் தோன்றுகின்றன. ஆனால் இடம் எங்கே? தோள் ஒன்றே எட்டுத் திக்குகளையும் போர்த்து விடு கிறது! இல்லை, பேர்த்து விடுகிறது!

காளியின் ஆவேசம் அடங்கி ஒடுங்கிப்போகிறது. எப்படி எங்கிருந்துதான் காணப் போகிறாளோ? அவ ளுக்கு நிற்கத்தான் இடம் எங்கே? ஊர்த்துவ தாண்டவம் எல்லையை விட்டு ஏகுவதற்கும் இடம் இல்லையே என்று ஏங்குகிறாள். இது காளி கண்ட சிவ – ஊர்த்துவ நடம். பின்னர், ஆடு என்று ஆடலரசனை கட்டளையிட்ட காளியே ஈசனோடு வந்து ஐக்கியமாக வேண்டிய தாயிற்று. இதுகாறும் நக்கீர தேவ நாயனார் இப்படிப் பாடுகிறார்.

தாள் ஒன்றால் பாதாளம் ஊடுருவித் தன்விசும்பில்
தாள் ஒன்றால் அண்டம் கடந்து உருவி – தோள் ஒன்றால்
திக்கனைத்தும் பேர்க்கும் திறல்காளி கரளத்தி
நக்கனைத்தான் கண்ட நடம்

நாதாந்த திருஉரு நடராஜன்

தில்லைத் தாண்டவனை அப்பர் பெருமானின் தேவாரப் பாடலில் குனித்த புருவம் எனக் கூறுகிறார். குனித்த புருவத்தை விளக்கமுறச் செய்கின்றன. கொவ்வைக் கனி போன்ற சிவந்த வாயும் அதில் அரும்பும் புன்னகையும், பவளம் போல் மேனியைப் பால் போன்ற வெண்ணீறு நீறு பூத்த நெருப்பைப் போல் சொலிக்கச் செய்கிறது.

தூக்கிய திருவடி, குஞ்சிதபாதம், இது இடது திருவடி. அருளால் அடியவரைத் தூக்கி ஆனந்தத்தில் அழுத்துவது. ஊன்றிய திருவடி, முயலகன் என்ற பூதத்தை நசுக்குகிறது. முயலகன் ஆணவத்தின் உருவம். ஒரு கையில் உடுக்கை ; இது அணுத்துகள்களை ஒன்று கூட்டும் என்பர். அஞ்சேல் என்று அமைந்த கரம் (அந்தோ) எய்த்துப் போனோம் அருள் செய் இறைவா! என்று தஞ்சமென வந்து விழும் அடியார்களை அளித்து ஆதரிக்கிறது. ஒரு கையில் அனல், இது அழிக்கிறது.

ஒரு புறம் உள்ள மான், துள்ளும் மனத்தைக் குறிப்பிடுகிறது. கூத்தப் பெருமான் அணிந்திருக்கும் புலித்தோல், அகங்காரத்தைக் குறிப்பிடும். கொல் புலித்தோல் நல்லாடை என்பது பெரியோர் வாக்கு. புலித்தோல் கொடிய தாய் மூர்க்கமாய் நம்மை எதிர்க்கும் அகங்காரத்தைக் கொன்றே தீர வேண்டும், கூத்தப்பிரான் அருளால் என்பது குறிப்பு.

"கோயில் சுடுகாடு, கொல்புலித்தோல் நல்லாடை" – குளுமையால் ஆயாசம் தீர்ப்பது கங்கை, ஞானத்திற்கு அறிகுறி. கங்கையுடன் சந்திரனையும் தரித்திருக்கிறார். சந்திரன் (பிறை) ஆத்மாவின் மகிழ்ச்சிக்கு அறிகுறி.

ஆடற்கலை நிருத்தம்

அழகூட்டும் பரதக்கலையில் கரணம் என்ற சொலின் நடைமுறையிலுள்ள பொருளும் (விளக்கம்) அகராதிகள் காட்டும் பொருளும் இயக்கத்தை அல்லது செய்கையைக் குறிக்கின்றது. குத்துக்கரணம் அடித்தல் "கரணம் தப்பினால் மரணம்" என்பவை இன்னும் வழக்கிலுள்ள சொற்றொடர்கள். மதுரைத் தமிழ்ப் பேரகராதியின்படி கரணம் என்பது கூத்து. அப்படி பார்க்கையில் ஒவ்வொரு கூத்தும் ஆடல் நிருத்தம்தான். செய்கை கையாற் செய்யும் போது தொழில் என்பவற்றைக் குறிக்கும். கரணம் கருவியையும் குறிக்கும். இதன்படியாகவே உபகரணம் என்ற பதம் தோன்றியது. ஆகவே கரணம் என்பது கலைப் பொழிவுடன் திகழ வேண்டிய ஆடலுக்கான செயற்பாடு. அதாவது ஆடலுக்கான தூய அசைவாகும்.

ஆடலுக்கான அசைவு மூன்று கூறுகளில் தங்கியுள்ளதெனக் கண்டனர். அவையாவன: கால்களின் அசைவு, கைகளின் அசைவு, உடலின் நிலை முதலானதைச் சாரி என்றும், இரண்டாவதை முத்திரை என்றும் உடலின் நிலையைத் தானம் என்றும் நாட்டிய நூல் கூறுகிறது.

கால்களின் அசைவு வகைகளையும் (சாரி பேதம்) அவற்றின் பயன்களையும், ஆசிரியர்கள் மூலம் பயிற்சி முறையில் அறிந்து கொள்ள வேண்டும் என நாட்டிய நடன இலக்கண பாலபாட நூல்கள் கூறுகின்றன. ஆகவே ஆடற்கலையின் அசைவுக்குரிய முறைகள் யாவும் குரு பாவத்துடன் மாணவர்கள் உறவினடியாகக் கற்க வேண்டியவை மிகமிக அவசியம். குரு மூலம் கற்காத கலை (பரதம்) அடிப்படை இல்லாத கட்டிடமாகப் பாழாகும் என்பது முறைப்படி கலைகளைக் கண்டவர்களின் மரபு.

அழகூட்டும் மெய்ப்பாடு

தமிழில் மெய்ப்பாட்டு ஆடற்கலை நான்கு வகையாகும். இதனை வட மொழியில் ஆங்கீகம், வாசிகம், ஆகார்யம், சாத்வீகம் என்பர்.

1. ஆங்கீகம் அபிநயம் என்பது அங்க பிரத்யங்க உபாங்கப் பிரிவுகளின் அசைவுகளால் ஏற்படுத்தப்படும் சைகைகள்.

2. வாசிக அபிநயம் என்பது வார்த்தை உச்சரிப்புகளின் மாறுதல், தாளம் முதலியவற்றால் அமைவது.

3. ஆகார்ய அபிநயம் என்பது ஒவ்வொரு பாத்திரத் திற்கும் உரி உடை, அலங்காரம் இவைகளைக் கட்டுப்படுத்துவது.

4. சாத்வீக அபிநயம் என்பது ஸ்தம்பித்தல், மயிர்க்கூச்செறிதல், வியர்த்தல், மூர்ச்சித்தல், கண்ணீர் வடித்தல், முகவர்ண பேதம், நடுங்குதல், குரல் மாற்றல் முதலிய எட்டு விதமான சாத்வீக பாவங்களையும் அங்க அசைவுகளாலும் ஜாடைகளாலும் வெளிப்படுத்தும் வகையை விளக்குகிறது.

முகபாவங்கள்

முகபாவங்களின் முதன்மையாக மிளிர்வது ஸ்தாயி பாவமாகும். இவை மொத்தம் எட்டு. அவை ரதி, சிரிப்பு, சோகம், குரோதம், உற்சாகம், பயம், வெறுப்பு, அதிசயம் ஆகும்.

மேற்கூறப்பட்ட ஸ்தாயி பாவத்திலிருந்து பிரியும் ரஸங்களானவை எட்டாகும். அவை : ரதி – சிருங்காரம், சிரிப்பு – ஹாஸ்யம், சோகம் – கருணை, குரோதம் – ரௌத்திரம், உற்சாகம் – வீரம், பயம் – பயானகம், வெறுப்பு – பீபத்சம், அதிசயம் – அற்புதம். ஒன்பதாவது ரஸமான வெகுளித்தனத்தை – அபிநயகுப்தர் சேர்த்து ஒன்பதாகக் குறிப்பிடுகிறார். சஞ்சாரி பாவ உணர்ச்சிகள் மொத்தம் முப்பத்து மூன்றாகும். அவை : ஏக்கம், பலவீனம், சந்தேகம், பொறாமை, வெறி, அலுப்பு, சோம்பல், மனச்சோர்வு, கவலை, திசை திரும்பிய கவனம், நினைவு, திருப்பி, அவமானம், நிலையில்லா மனம், சந்தோஷம், கொந்தளிப்பு, ஸ்தம்பித்தல், அகந்தை, துன்பம், பொறாமையின்மை, தூக்கம், காக்காய் வலிப்பு, பகற்கனவு, அஜீரணத்தால் விழித்தல், அதிக கோபம், பாசாங்கு, கொடூரம், அறிவுடைமை, நோய், பைத்தியம், சாவு, பதட்டம், கருத்தரங்கு ஆகியவையாகும்.

சாத்வீக பாவங்கள் மொத்தம் எட்டாகும். அவை: வியர்த்தல், ஸ்தம்பித்தல், நடுக்கம், அழுதல், நிறம் மாறுதல், புல்லரித்தல், குரல் மாறுதல், மயக்கம் ஆகியனவாகும்.

ஆடலுக்கான மூன்று கூறுகளில் இரண்டாவதாகக் கருதப்படுவது கையசைவுகளாகும். அவை - முத்திரைகள் எனக்கூறுவர். முத்திரை இருவகைப்படும். ஒற்றக்கை முத்திரை இருபத்தெட்டு ஆகும். இரட்டைக்கை முத்திரை இருபத்து மூன்று ஆகும்.

ஆங்கீக அபிநயத்தில்

மார்பு ஐந்து வகையும், பக்கங்கள் ஐந்து வகையும், இடை ஐந்து வகையும், பாதங்கள் பதின்மூன்று வகையும், நயனங்கள் எட்டு வகையும், ஆண்களுக்கான நிருத்த நிலை ஆறு வகையும், பெண்களுக்கான நிருத்து நிலை மூன்று வகையும், மண்டல நிலைகள் பத்து வகையும், உள்ளங்கை நிலை நான்கு வகையும் என நாட்டிய சாஸ்திரம் வழங்குகிறது.

பரத நடன உருப்படிகள்

பிற்காலத்தில் பரத (நிருத்தியம்) நாட்டிய நடன உருப்படிகளில் முதலில் மகா கணபதி துதிப் பாடலாகும். இது கஜ்ஜை பூஜை, அரங்கேற்றம், கச்சேரி போன்றவற்றில் ஆடல் இல்லாமல் பாடுவதாகும். இஃது முழுமுதற் கடவுள் வினாயகருக்காக பாடப் படுவது. மலர் அஞ்சலி, கணேச கவுத்துவம் அல்லது நடேச கவுத்துவம், தோடய மங்களம், அலாரிப்பு, ஜதீஸ்வரம் (ஜதி - சுரம்), பதம், சப்தம் (சத்தம் - ஓசை), வர்ணம் (சுரஜதி), தில்லானா, ஆண்டாள், குறத்தி, ஜவாளி ஆகும். மங்களம் கச்சேரி முடியும் தருவாயில் இடம் பெறுவது.

அடவு வரிசைகள்

கலை நூல் முறையில் (நடன ஆசிரியரிடம்) குருவிடம் பரதம் கற்க வரும் போது முதற்கண் அடிப்படை அடவுகள் (ஸ்டேட்ஸ்) கற்பிக்கப்படுகிறது. துவக்கமாக காலசைவுகள், தட்டளவு முதற்கொண்டு போதிக்கப்படுவது பரதக் கலையில் அடிப்படை மரபாகும். அடவுகளில் துவக்கம் தொடங்கி கோர்வை, கார்வை என தொடரப் படுகிறது. "காவேரியைப் போல் கங்கையைப் போல் கருத்துகள் ஊறும் உள்ளம்" என்பது போல அடவுகளும் அபிநயங்களும் ஆடற்கலைகளுக்கு அழுத்தமான நுண்ணறிவாகும். அடவு வரிசையில் இதுகாறும் சிலவற்றின் பெயர்களைக் காண்போம். தட்டடவு, நாட்டடவு, தட்டி மெட்டடவு, குத்தடவு, குதித்து மெட்டடவு, மர்த்தித அடவு, சுருக்கலடவு, மண்டியடவு, பாய்ச்சலடவு, சுற்றலடவு, கோர்வையடவு, வீசுகால் அடவு, சரிகை அடவு, எத்தடவு, பக்கடவு, சாய்வடவு, ஊசி அடவு, மகுட அடவு என வரிசைப்படுத்தலாம். இன்னும் ஏராளமான அடவுகளும் இருக்கின்றன.

அடவுகளின் சொற்கட்டு

பரதப் பயிற்சியில் துக்க அடவுப்பாட முறையில் எல்லா அடவுகட்கும் சொல்லு கட்டு என்ற சொற்கட்டுகள் இருக்கின்றன. அவற்றில் சிலவற்றை அடவுகளோடு, சொற்கட்டும் கவனிக்கலாம்.

தட்டடவு - தை யா : தையி, நாட்டடவு - தையும் தத்தத் : தையும் தாகா, குத்தடவு - தத்தை தாகா : தித்தை தாகா, குதித்து மெட்டடவு - தைகத் : தைகி, மர்திக அடவு - தா கை தை கா : தித்தை தை தா, கோர்வை அடவு - தத்தை தாம் : தித்தை தாம், மகுட அடவு - தித் தித் தை என அடவுகட்டும் பெயர் வாரியாக சொற்கட்டு பயன்படுகிறது. சொற்கட்டுக்குப் பிறகு குருவானவர் மேடைக் கச்சேரியில் அவை : நட்டுவாங்கமாக மறுமலர்ச்சியுடன் மிளிர்வதைக் காணலாம்.

குறத்தி நாட்டியத்தில் குறவஞ்சி நாடக வகைகள்

பரத நிருத்திய உருவப் படிகளில் (புஷ்பாஞ்சாலி முதல் ஜவாளி வரை) பதினொன்றாவதாகவுள்ள குறத்தி நடனத்திலும், நாட்டிய நாடக வகையிலும் இன்றியமையாதவையாகும். முக்கியமாக வரலாற்றைக் குறித்து குறத்தி நாட்டிய நாடகங்கள் பழமையான தொன்மையைத் தெளிவுபடுத்துகிறது.

தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்றாகக் கருதப்படுவது குறவஞ்சி. இது சிற்றிலக்கியங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. அவற்றில் தற்போது வழக்கிலுள்ள குறவஞ்சிகள் பின்வருமாறு : திருக்குற்றாலக் குறவஞ்சி, கும்பேசர் குறவஞ்சி, அழகர் குறவஞ்சி, காங்கேயன் குறவஞ்சி, கொடுமுடிக் குறவஞ்சி, குமார லிங்கக் குறவஞ்சி, செந்தில் குறவஞ்சி, சாமிமலைக் குறவஞ்சி, திருமலையாண்டவர் குறவஞ்சி, திருமண்ணிப் படிக்கரைக் குறவஞ்சி, தியாகேசர் குறவஞ்சி, திரு விடைக்கழி குறவஞ்சி, வெள்ளைப் பிள்ளையார் குறவஞ்சி, விராலிமலைக் குறவஞ்சி, ஞானக் குறவஞ்சி, கபாலீசுவரர் குறவஞ்சி, க..ணப்பர் குற வஞ்சி, சிற்றம்பலக் குறவஞ்சி, பரதமலைக் குறவஞ்சி என்பனவாகும்.

பாரதத்தில் தோன்றிய தொன்மையானதும், பிற்காலத்ததும் ஆகிய பரத நூல்கள்

தமிழகத்தில் நாயக்கராலும், மகாராட்டிரராலும் ஆளப்பட்ட காலக்கட்டத்தில் தோன்றிய தொன்மையான பரத நூல்களானவை : பரத நூல், மகா பரத சூடாமணி, அபிநய தர்ப்பணம், அபிநயதர்ப்பண விலாஸம், பாவ ராகதாளம், ஆதிமூல பரதம், சுத்தானந்தப் பிரகாசம், பரத சேனாபதியம், சபாரஞ்சித சிந்திரமணி, துவாதச சாகஸ்ரி, சதாசிவ பரதம் ஆகியவை குறிப்பிடத்தக்கது. இதில் சில நூல்கள் இன்னும் பொது மக்களுக்குக் கிடைக்கவில்லை. பரத சாஸ்திர நூலைப் பற்றி குறிப்பிடுகையில் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் தொடக்கத்தில் இருந்த அரபத்த நாவலர் என்பவர் பரதக் கலை நூலைத் தொகுத்து வெளியிட்டிருக்க வேண்டுமென எமது ஆய்வில் தென்படுகிறது. அபிநய தர்ப்பணம் எனும் நூலைப் பிற்கால நந்தி கேசுவரர் என்பவர் எழுதியிருக்கலாம். துவாதச சாகசரி எனும் இந்நூல் ஆதிபரதமெனவும் ஈசனும், ஈசுவரியும் உரையாடிய முறையில் எழுதப்பட்டவையாகும் எனக் கூறப்படுகிறது.

சொல்லழகில் தமிழ்

தமிழ்ச்சொல் வரிசைகளில் சொல்லழகு மிக முக்கியமானவை. அதிலும் நான்கு இணைச்சொற்கள் சேர்ந்து உச்சரிக்கும் தன்மை கொண்ட வார்த்தைகள் இருக்கின்றன. அவ்வகையிலே ஆலயத் தொடர்பான சொல் – தொடரைக் காண்போம். "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்ற சொற்றொடரில் பெயர்ச்சொல், இடைச் சொல், வினைச் சொல், உரிச்சொல் என அனைத்து சொல் உரிமைகளும் சேர்ந்திருக்கிறது. இஃது தமிழ் – தமிழுக்கே பெருமைதானே!

தமிழ் என்றால் கலை – கலை என்றால் அழகு
அழகு என்றால் ஆடல் – ஆடல் என்றால் பரதம்
பரதம் என்றால் சிவநடனம் – சிவநடனம் என்றால் தில்லைக் கூத்து
தில்லைக்கூத்து என்றால் சிற்றம்பலம் (சிதம்பரம்) – சிற்றம்பலம் என்றால் ஆலயம்
ஆலயம் என்றால் உலகம் – உலகமே ஆடற்கலையழகுதானே!!

தமிழக பாரம்பரிய நடனங்கள்

தமிழகத்தில் ஆண்டாண்டுகாலமாய் தமிழ் மக்கள் தொன்றுதொட்டு தங்களது பாரம்பரிய நடனங்களாகச் சிலவற்றை மேற்கொண்டு வந்தனர். அவற்றில் கீழே மிக முக்கியமாக ஆடல் – கூத்து வகைகளைக் காண்போம். அவற்றில் கொம்மியாட்டம், கோலாட்டம், ஒயிலாட்டம், பின்னல்கோலாட்டம், கரகாட்டம், காவடியாட்டம், புரவியாட்டம், பொம்மலாட்டம், நிழலாட்டம், மயிலாட்டம், பேடியாட்டம், புலியாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், தெருக்கூத்து, கணியான் கூத்து ஆகியவை குறிப்பிடத் தக்கவை. இன்னும் சில கிராமங்களில் ஆடக்கூடிய ஆடல் வகைகள் இருந்திருக்கலாம் எனத் தோன்றுகிறது.

பாரத – பாரதீய நாட்டியங்கள்

பாரத தேசம் (இந்தியா) பல மாநிலங்களைக் கொண்ட துணைக் கண்டமாகும். பதினான்கிற்கு மேற்பட்ட தேசிய மொழிகளை உள்ளடங்கிய நாடு. ஒவ்வொரு மாநில மக்களுக்கும் மொழி, கலை, பண்பாடு, கலாச்சாரம், இலக்கியம், மரபு ஆகியவை உண்டு. அவ்வகையில் நாம் சில மாநிலங்களின் மரபிலான நடனங்களைக் காண்போம். தமிழ்நாடு – பரதக்கலை, ஆந்திரம் – குச்சிப்புடி, கேரளம் – கதக்களி, மோகினியாட்டம், ஒரிசா – ஒடிசி, பஞ்சாப் – பங்கடா, மணிப்பூர் – மணிப்புரி, மகாராஷ்டிரா – செரைகௌ, கர்னாடகம் – யட்சகானம் ஆகும்.

பரதக்கலை மலர்ச்சி பெற்ற காலம்

தமிழகத்தில் : தேவதாசி ஒழிப்புச் சட்டம் வந்தது முதல் தொடர்பாக நாட்டியக் கலை மரபினர் அக்கலைப் பயிற்சியைக் கைவிட்டனர். அதன் பின் சிறிது காலம் நடனக்கலை தளர்வு பெற்றது. முன்னர் நடனக்கலை வளர்ச்சி சிறந்த காலம் எனவும் கூறலாம்.


பின்னர் தமிழகத்தில் நாடகம் – படக்காட்சி வரைத் தொடங்கிய கால கட்டத்தில்தான், அதாவது ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளுக்கு முன்தான் நாட்டியம் நடை போடத் தொடங்கியது எனக் கூறலாம். பரதமெனத் தூய கலை வழி வழியாகக் கடந்த ஐம்பது ஆண்டுகளாகத் தரணியில் தமிழோடும் கலையோடும் உயிரூட்டப்பட்டும், வளர்க்கப்பட்டும் வருவதைக் கண்முன் காணலாம். இன்று இக்கலைக் காவியத்தை எல்லா மரபினரும் பயின்று மலர்ச்சி காணத் தொடங்கியுள்ளனர். மதம் – இனம் சார்பற்ற பேதம் இல்லாமல் தமிழே கலையாகக் கொண்டு வளர்க்கபடுகின்றது. இத்தகைய பெருமை தமிழுக்கும் – தமிழர்க்கும் – தமிழ்நாட்டுக்குமே உரியதாகும்.

பண்டுதொட்டுத் தொடரும் இக்கலை ஆண்டாண்டு காலமாய் அழியாக் கலைச்செல்வமாக அடிப்படை இட்டு தற்போது – தற்கால நிலையில் வரும் பிற்காலத்தில் மறுமலர்ச்சியும் பெற ஆவன செய்யப்பட்டு வருகிறது.

பரதக் கலை மாணவர்களும், மாணவ மணிகளின் பெற்றோர்களும், நடன ஆசிரியர்களும், கலையார்வலர்களும், இலக்கியச் சான்றோர்களும், பொதுமக்களும், அரசியலமைப்புகளும், அரசும், பரதக்கலை வளர்ச்சியில் – மலர்ச்சியில் புத்துணர்வு ஏற்பட்டு வீறு நடை போடும்.

மேலும், சமூக நலத் தொண்டர்களும் கலை பயில் மன்றம், மாமன்றம், சங்கம், கழகம், நிறுவனம் போன்றவை குழு அமைத்துப் பாடுபட்டு வருகிறார்கள். கலைஞர்களை விடக் கலையோடு கலைஞர்களாகப் பரதம் கொண்டவர்கள் வளர்த்து வரும், வளரும் கலை, தமிழ் கூறு நல்லுலகம் இருக்கும் வரை அவர்களது கலைத் தொண்டு என்றென்றும் மாறாது ; மறையாது நிலைத்து வாழும் என்பதுறுதி.





டாக்டர். இரா. சேது. தமிழ்ப் பேராசிரியர்
விவேகானந்தா கல்லூரி, சென்னை.

'பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப்போ
லாருந் துறக்கை யரிதரிது - நேரே
மனத்துறவு மப்படியே மாணா விவற்றி
லுனக் கிசைத்த வாறொன்றே யோர்'

— தாயுமானவர்

பிறப்பும் இளமையும்: சோழநாட்டின் தலைநகரான காவிரிப்பூம்பட்டினத்தில் சிவபக்தராகவும் பெருஞ்செல்வராகவும் வாழ்ந்த சிவநேசருக்கும் ஞானகலை என்ற அம்மையாருக்கும் பட்டினத்தடிகள் மகவாகப் பிறந்தார். திருவெண்காட்டில் எழுந்தருளியுள்ள இறைவனது திருப்பெயரால் பெற்றோர் 'திருவெண்காடார்' என அழைத்தனர். திருவெண்காடர் ஐந்து வயதடைந்தபோது, தந்தையார் இறைவன் திருவடிநிழலையடைந்தார். அன்னையாரின் அருந்துணையால் நல்லாசிரியரை அணுகி, அறிவு நூல்களனைத்தையும் கற்று, இறையுணர்வு வளரப் பெற்றார். காளைப் பருவம் எய்தியவுடன், சிவகலையென்னும் மங்கை நல்லாளை மணந்து இல்லற நெறியினின்று வழுவாதொழுகினார். தம் குல மரபுப்படி, வணிகத்தில் ஈடுபட்டுப் பெரும் பொருள் ஈட்டி, அறம்பலவும் செய்து அவ்வூர் மக்களால் 'பட்டினத்தார்' என அழைக்கப் பெற்றார்.

மருதவாணர் மகவாய் வாய்த்தல்: மன்னரும் மதிக்கும் பெருநிதிக் கிழவராக விளங்கிய அவருக்கு மகப்பேறு இல்லாதது மனக் குறையைத் தந்தது. அக்குறையினைப் போக்கத் திருவிடை மருதூரில் கோயில் கொண்டுள்ள மருதவாணரை நாளும் வழிபடுவாரானார். இறைவரும் இவர் குறை நீக்க, அக்கோவில் குருக்கள் சிவசருமர் கனவிலும் அவர் மனைவியின் கனவிலும் தோன்றி, 'இத்திருக்கோயில் அருகிலுள்ள வில்வமரத்தடியில் கிடக்கும் குழந்தையைக் கொண்டு சென்று, காவிரிப்பூம்பட்டினத்தில் மக்கட்பேறு இல்லாமல் வருந்தும் திருவெண்காடரிடம் தந்து பொருள் பெற்றுச் சிவத் தொண்டு புரிக' என ஆணையிட்டு மறைந்தார். அவ்வாறே திருவெண்காடர் - சிவகலை கனவில் தோன்றி, 'சிவசருமரும் சுசீலையும் தரும் குழந்தையைப் பெற்றுக் கொண்டு அவர்களது வறுமையைக் களையப்பொருளளிக்குமாறு கூறி' மருதவாணர் மறைந்தார். திருவெண்காடர் குழந்தையையும், சிவசருமர் பொருளையும் பெற்றுத் தத்தம் குறை நீங்கப் பெற்று மகிழ்ந்தனர். மருதவாணர் அருளால் பெற்ற குழந்தையைத் திருவெண்காடர் 'மருதப் பிரான்' எனப் பெயரிட்டழைத்தனர். மருதப்பிரானும் இளமையிலேயே கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினார்.

மருதப்பிரானின் அருஞ்செயல்: மருதப்பிரானும் பதினாறு வயது நிரம்பியதும், பொருளீட்ட நண்பர்களோடு கடல் கடந்து சென்று அங்கோர் தீவை அடைந்தார். அத்தீவில் தமது ஊரிலிருந்து கொண்டு சென்ற பொருள்களை விற்று, அதன் வருவாயில் எரு மூட்டைகளையும் அவல் கடலையையும் மூட்டை மூட்டையாகக் கட்டிக் கப்பலில் ஏற்றிக் கொண்டு தமது ஊர் புறப்பட்டார். இவரது செயலைக்கண்ட நண்பர்கள் எள்ளி நகையாடினர். தமது ஊர் திரும்புங்கால் நடுக்கடலில் பெருங்காற்றால் அலைப்புண்டு கப்பல் திசை தடுமாறியது. இந்நிலையில் அவரது நண்பர்கள் தங்களது பசியினைக்களைய அவல் மூட்டைகளையும் குளிர்காய எருமூட்டைகளையும் தந்தால் ஊரடைந்தவுடன் அவற்றைத் திருப்பித் தருவதாக உறுதி கூறினர். மருதப்பிரானும் அவர்களது உறுதிமொழியை எழுத்துவடிவில் பெற்றுக்கொண்டு அவர்களுக்கு வேண்டியவற்றை அளித்தார். அவரது நண்பர்களும் ஊர் திரும்பியவுடன் மருதப் பிரானிடம் பெற்ற அவல் மூட்டைகளையும் எரு மூட்டைகளையும் திருப்பிக் கொடுத்தனர். தம் மைந்தர் கொண்டு வந்த மூட்டைகளைத் திருவெண்காடர் அவிழ்த்துப் பார்த்தார். அவல் மூட்டைகள் சிறு சிறு பொற்கட்டிகளாகவும், எரு மூட்டைகள் மாணிக்கக் கற்களாகவும் ஒளிவிடக் கண்டார். தம் மைந்தரது வாணிபத் திறமையை வியந்து மகிழ்ந்து அவரைக் காணச் சென்றார். அவரை எங்கே தேடியும் காணப் பெறாது திருவெண்காடர் வருந்தினார். மருதப் பிரான் தம் தந்தையாரிடம் பொன்மணிகளையும், தம்தாயாரிடம் ஒரு சிறு பெட்டியினையும் கொடுத்துவிட்டு யாரும் அறியாவண்ணம் திருவிடைமருதூரையடைந்து இறைவனோடு இரண்டறக் கலந்தார்.

பட்டினத்தார் துறவு: திருவெண்காடர் மகனை எங்கு தேடியும் காணப் பெறாமல் தம் மனைவியிடம் வினவினார். அவ்வம்மையாரும் சிறிது நேரத்துக்குமுன் மருதப்பிரான் தம்மிடம் கொடுத்துச் சென்ற சிறு பெட்டியைக் காட்டினார். திருவெண்காடர் அச்சிறு பெட்டியைத் திறந்து பார்த்தார். அதனுள் காதற்ற ஊசி ஒன்றும், ஓலைச் சுருள் ஒன்றும் இருக்கக் கண்டார். அவ்ஓலைச்சுருளைப் பிரித்துப்படித்தார். 'காதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே' என்ற வாசகம் எழுதப் பட்டிருப்பதைக் கண்ணுற்றுத் துணுக்குற்றார். அக்கணமே பாரனைத்தும் பொய்யென்று துறந்தார். தம் நிதிக்காப்பாளர் சேந்தனாரை அழைத்து, 'இங்குள்ள செல்வமனைத்தையும் கொள்ளையிடச் செய்யுமாறு' கட்டளையிட்டு விட்டு ஊர்ப் பொதுவிடத்தில் தங்கி வீடுதோறும் சென்று பிச்சையேற்று உண்டு சிவநினைவில் ஆழ்ந்தார். இதனைக் கேள்வியுற்ற அவ்வூர் அரசன், பட்டினத்தாரை அணுகி, 'இத்துறவடைந்த நீர் பெற்ற தென்ன' வினயமாகவினவினான். பட்டினத்தாரும் ''நீ நிற்க, யாம் இருக்க'' என எளிதாக மறுமொழி புகன்றார். தம் தாயார் வேண்டிக் கொண்டபடி, அவருக்கு ஈமக்கடன்களை ஆற்ற அவ்வூரிலே தங்கி இருந்தார். சில நாட்கள் கழிந்த பின்னர் தாயார் இறக்க, அங்கு அடுக்கப்பட்டிருந்த விறகுகளை அகற்றிப் பச்சை வாழைப் பட்டைகளை அடுக்கி, அவற்றின்மேல் தாயாரைக் கிடத்திச் சில பாடல்கள் பாடினார்; அனல் கொழுந்து விட்டெறிந்தது. தம் தாயாருக்குச் செய்யவேண்டிய இறுதிக் கடன்களை அன்போடும் உருக்கத்தோடும் செய்து முடித்தார். அப்போதவர் முற்றும் துறந்திருந்தும்,

'ஐயிரண்டு திங்களா வங்கமெலா நொந்துபெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் - செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை
யெப்பிறப்பிற் காண்பே னினி' என்று தம் தாய் மீது கொண்ட நன்றி குறித்துக் குழைந்துருகிப் பாடி அன்பை வெளிப்படுத்தினார்.

திருத்தல வழிபாடு: காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து தாய்க்கு ஆற்ற வேண்டிய இறுதிக்கடமை முடிந்ததால் பட்டினத்தார் திருவிடை மருதூர் வந்து சில நாட்கள் தங்கினார். பின்னர் தென்னாட்டுத் திருக்கோயில்களையும் பிற இடங்களையும் வழிபடப் புறப்பட்டு, சோழநாடு,

பாண்டிநாடு, மலைநாடு, கொங்குநாடு, துளுவநாடு, தொண்டை நாடு, முதலான திருத்தலங்களுக்குச் சென்று வழிபட்டுப் பதிகங்கள் பாடியருளினார். ஏறத்தாழ அறுபத்தொன்பது திருத்தலங்களை வழி பட்டுப், பாக்கள் அருளியுள்ளார்.

பட்டினத்தார் வாழ்வில் அருஞ்செயல்கள்: இவரது தமக்கையார் தம் ஊரில் பட்டினத்தார் வீடு தோறும் சென்று இரந்துண்டு வாழ்வது, மானக்கேடான செயல் என எண்ணி அவரைக் கொல்லக் கருதி நஞ்சூட்டிய ஓர் அப்பத்தினை உண்ணக் கொடுத்தார். உண்மை உணர்ந்த அவர், 'தன் வினை தன்னைச்சுடும் ஓட்டப்பம் வீட்டைச் சுடும்' என்று கூறி அவ்வப்பத்தினைப் பிட்டு ஒரு பகுதியைத் தமக் கையர் வீட்டில் செருகினார்.

அவ்வீடும் பிறவும் எரியத்தலைப்பட்டன. அது கண்ட ஊரார் அஞ்சிப் பட்டினத்தாரை வேண்ட, அவர் 'தங்களைக் கேட்டு பிறந்தி லம்' என்றொரு பாடலைப் பாடித்தீயை அவித்தனர். திருவாரூரில் நீர்க்கோவை நோய் வாய்ப்பட்டு உயிர்துறந்த ஒருவரை உயிர்பெற் றெழச்செய்தார். துளுவநாட்டில் உஞ்சேனை மாகாளம் என்ற ஊரின் புறத்தே அமைந்துள்ள பிள்ளையார் ஆலயத்தில் சிவ நினைவில் ஆழ்ந்திருந்தார். அவ்வழியாக வந்த கள்வர், அங்குள்ள பிள்ளை யாரை வணங்கித் தாங்கள் களவாடச் செல்லும் இடத்தில் பொருள் கிடைத்தால் அதில் ஒரு பகுதியைப் பிள்ளையாருக்குக் காணிக்கைய ளிப்பதாக வேண்டிக்கொண்டு சென்றனர். அவ்வூர் அரசனது அரண் மனையில் களவாடித் திரும்புங்கால். அக்கள்வர்கள் தாங்கள் வாக்க ளித்தபடி பிள்ளையார் கழுத்தில் விழுமாறு ஒரு மாணிக்க மாலையை எறிந்து விட்டுச் சென்றனர். ''அம்மாணிக்க மாலையானது. பிள்ளை யார் கழுத்தில் விழாமல், அவ்விருளில் பிள்ளையார் உருவத்தின் பின்னே நிட்டையில் இருந்த பட்டினத்தார் கழுத்தில் விழுந்தது. இதனை அவர் அறியாத நிலையில் இருந்தார்.

கள்வரைத் தேடிவந்த அரண்மனைக் காவலர்கள் மௌனநிலை யிலிருக்கும் பட்டினத்தார் கழுத்தில் களவுபோன மாணிக்க மாலை இருக்கக்கண்டு அவரை அரண்மனைக்கு அழைத்துச் சென்று, அரச னுக்குச் செய்தியைத் தெரிவித்தனர். அக்காலத்தில் களவுக்குக் கழு வேற்றலே தண்டனையாக விருந்ததால், இவரைக் கள்வராகக் கருதிக் கழு வேற்றுமாறு அரசனும் ஆணை பிறப்பித்தான். காவலரும் அதைச் செயல்படுத்தினர். தம்மைக் கழுவிலேற்றியதும் பட்டினத் தார் நிட்டை கலைந்து உணர்வு பெற்றார். நிலைமை உணர்ந்து,

'என் செயலாவது யாதொன்றுமில்லை இனித்தெய்வமே
உன் செயலே என்றுணரப் பெற்றேன், இந்த ஊனெடுத்த
பின்செய்த தீவினை யாதொன்றுமில்லை, பிறப்பதற்கு
முன்செய்த தீவினையோ, இங்ஙனே வந்து மூண்டதுவே?'

என ஒரு பாடல் பாடினார். கழுமரம் தீப்பற்றியெரிந்தது. இச்செய்தி யைக் கேட்டறிந்த அரசன், பட்டினத்தார் காலடியில் விழுந்து வணங் கித் தாம் அறியாமல் செய்த பிழையைப் பொறுத்தருளுமாறு இறைஞ் சினான். பட்டினத்தாரும் அவருக்கு அருளுரை வழங்கினார். பட்டி னத்தாரிடம் அருளுரை பெற்ற மன்னனே பத்திரகிரியாராவார். அருளுரை பெற்ற பத்திரகிரியார் ஒரே கணத்தில் உலக வாழ்வைத் துறந்து இறையின்பத்தில் ஈடுபட்டுத் தம் குருவுக்குப் பின் வீடு பேற்றி னைப் பெற்றார். பத்திரகிரியார் வீடு பேற்றினைப் பெற்றதைக் கண்ட பட்டினத்தார், 'தமக்கு முக்தி கிட்டும் காலம் எப்போது கிட்டு'மென இறைவனிடம் முறையிட்டார். இறைவனும் 'ஒற்றியூர் வருக' எனக் கூறி மறைந்தார். திருவொற்றியூர் செல்லும் வழியில் திருவெண்காட டைந்தார். அங்கு சேந்தனாரின் மனைவியார் அவரைக் கண்டு தம் கணவர் அரசனால் சிறைப்படுத்தப்பட்ட செய்தியை உரைத்தார், சேந்தனாரைச் சிறையினின்று விடுவித்துச் சிவத்தொண்டு புரியத் திருவருள் புரிந்தார்.

பற்றும், பற்றற்றானைப் பற்றுதலும்: உலக வாழ்வு நிலையில்லாத தென உணர்ந்தார். செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை என்ற உண்மையைத் தெளிந்தார். நிலையில் லாத வாழ்வு பெற்ற மனைவி, மைந்தர், சுற்றம், எழிலுடம்பு, வாழ்வு ஆகிய அனைத்தும் பொய்யெனக் கண்டார். வருந்தினார். 'முடி சார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரு முடிவிலொரு பிடிசாம்பராய் வெந்து மண்ணாவது' உறுதியென்பதை வலியுறுத்தினார். நிலையில் லாத செல்வத்தைத் தேடியலையும் வீணரை, 'செல்வப் பின் சென்றுப சாரம் பேசித் தினந்தினமும் பல்லினிக் காட்டிப் பரிதவிப்பதைக் கண்டு' வாடினார். மனிதப் பிறவியைப் பயனற்றதாக்கும் மூவாசைக ளான மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை ஆகியவற்றைக் கடுமையாகச் சாடினார்.

பொன்னை நினைந்து வெகுவாகத் தேடுவர் பூவையன்னாள் தன்னை நினைந்து வெகுவாயுருகுவர் தரணியில்' என மாந்தரின் மாண்பில்லாத செயலைப் பழித்தார். நிலையில்லாப் பொருளை நம்பி நிலையான பொருளான இறைவனைப் பற்றவேண்டுமென் றார். வெறும் தத்துவங்களையும் ஆணவத்தையும் அகற்றித் திருவ ருள் துணையாகிய தாயுடன் சென்று தந்தையாகிய சிவனை அடை வதே முக்தியென்றார். தாயாகிய திருவருள் துணையில்லாமல் தந் தையாகிய சிவனை அடைய முடியாதென்பது சித்தாந்த நூற்களின் துணிவெனினும் இறுதியில் தாயாகிய திருவருளை மறந்து தந்தையா கிய சிவனை அடையும் ஒருமை நிலையே பெற்றோரே முத்தி நிலை யடையப் பெறுவரென்றார்: இதனை

'மாய நட்டோரையும் மாயா மலனெனு மாதரையும்
வீய விட்டோட்டி வெளியே புறப்பட்டு மெய்யருளாந்
தாயுடன் சென்று பின்றாதையைக் கூட்டிப்பின்றாயை மறந்
தேயுமதே நிட்டையென்றானெழிற் கச்சி யேகம்பனே'

என மொழிந்தார். இறைவனை அடைவதே பிறவியின் நோக்கம். அதனால் இறைவனுக்கு ஒன்றும் பயனில்லை. பொன்னால் ஆகக்கூ டிய பொன்னைப் பெற்றவர்க்கண்டு பொன்னைப் பெற்றவனால் பொன்னுக்கு என்ன பயன்? அடியார்க்கு ஆண்டவனால் பய னுண்டு. ஆண்டவனுக்கு அடியாரால் என்ன பயன்! பயனொன்றும் கருதாத இறைவனைப்பற்றுவதே பிறவிப்பிணிக்கு மருந்தென்றார். ஒரு பயனையும் எதிர் நோக்காத இறைவனை அடைய எத்தகைய் அருஞ்செயல்களையும் ஆற்றலாமல்லவா? மற்ற அருளாளர்களைப் போல தன்னால் அருஞ்செயல்கள் செய்ய முடியவில்லையே என வருந்துகின்றார். 'பிள்ளைக்கறி சமைத்தார் சிறுத் தொண்டர்; மனைவி கூறிய சூளுரையால் இளமையைத் துறந்தார். திருநீலகண்ட நாயனார்; அறியாப்பருவத்தில் அன்புபூண்டு ஆறே நாளில் தம் கண்ணைக் கொடுத்தார் கண்ணப்பர். அருஞ்செயல்கள் செய்து பெற வேண்டிய இறையன்பை எச்செயலும் செய்யாமல் எப்படிப் பெறமு டியும் எனக் கேட்கின்றார். இறைவன் உள்ளத்தில் இருக்க, ஊர் ஊர் தோறும் அவனைத்தேடி அலைவது விளக்கிருக்கத் தீத்தேடுவது போன்றதெனச் சுட்டினார். உலகப் பற்றுக்களை மனத்தினின்று அகற் றினால் மட்டும் போதாது, உள்ளத்தை இறைவனது திருவடிகளிலே ஒப்படைத்து விடுவதே இறைவனை - பற்றற்றானை பற்றும் வழி யென்றார் -

பட்டினத்தார் காலம்: பட்டினத்தார் இருவர் வாழ்ந்ததாக அறிஞர் கூறுவர். முதல் பட்டினத்தார் நம்பியாண்டார் நம்பியால் குறிப்பிடப் படுபவர். நம்பியாண்டார் நம்பியின் காலம் பத்தாம் நூற்றாண்டின் இறுதியென்பர். இவர் பாடிய பாடல்களில் ஐந்து பிரபந்தங்கள். பதி னோராவது சைவத் திருமுறையுள் தொகுக்கப் பெற்றுள்ளன. அவை கோயில் நான் மணிமாலை, திருக்கழுமல மும்மணிக்கோவை, திரு விடை மருதூர் மும்மணிக்கோவை, திருவேகம்ப முடையார் திருவந் தாதி, திருவொற்றியூர் ஒருபாஒருப∴துஎன்பன. இந்நூல்கள் சைவ சாத்திர விளக்கங்களைக் கண்டு புலவரும் போற்றும் இலக்கியங்க ளாக விளங்குகின்றன இப்பிரபந்தங்களில்வரகுணபாண்டியன் குறிப்

பிடப்படுவதால், வரகுண பாண்டியனுடைய காலமாகிய 9ஆம் நூற்றாண்டுக்குப் பின்னும், நம்பியாண்டார் நம்பியின் காலமாகிய 10ஆம் நூற்றாண்டின் இறுதிக்கு முன்னும் வாழ்ந்தவராவார். பட்டினத்தார் பெயரில் 'திருப்பாடல் திரட்டு' என்ற பாடல் தொகுதி வழங்கி வருகிறது. இப்பாடல்களைப் பாடியவர் பட்டினத்தார் வேறு ஒருவர் என அறிஞர்கள் கருதுகின்றனர். பட்டினத்தார் -வரலாறு மூவரால் எழுதப்பட்டுளளது. முதன் முதலில் ஒருவர் பட்டினத்துப் பிள்ளையார் 'புராணம்' என்ற நூலை எழுதினார். இப்புராணம் எழுதியவரது பெயரோ, காலமோ தெரியவில்லை. இதன் பின்னர் தொழுவூர் வேலாயுத முதலியார் 'திருவெண்காட்டடிகள் சரித்திரம்' என ஒரு உரைநடை நூல் எழுதினார். தண்டபாணி சுவாமிகள் தாம்பாடிய புலவர் புராணத்தில் பல புதிய கதைகளைச் சேர்த்துப் பட்டினத்தார் சரித்திரம்' எனப் பாடி வைத்தார். முதற் பட்டினத்தார் பதினோராந்திருமுறைப் பிரபந்தங்கள் பாடியவர். இவர் பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தவர். திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் பாடிய சேந்தனார் இவர் காலத்தைச் சார்ந்தவர். இரண்டாம் பட்டினத்தார் 14ஆம் நூற்றாண்டின் இறுதியில், சிவவாக்கியர் முதலான சித்தர்கள் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்தவர். இது குறித்தே 'சித்தர் ஞானக்கோவை' என்ற நூலும் இவரை ஒரு சித்தராக மதித்து இவர் பாடல்களையும் சித்தர் பாடல்களோடு சேர்த்துக் கூறுகின்றது. பட்டினத்தார் வாழ்வோடு தொடர்புடையபத்திரகிரியார்14ஆம் நூற்றாண்டில் வாழ்ந்ததாகக் கருதப்படுகின்றார். எனவே இரண்டாவது பட்டினத்தார் காலம் 14ஆம் நூற்றாண்டெனலாம். இவ்விரண்டு பட்டினத்தாருக்கும். உரியனவல்லாத வேறு பல பாடல்கள் பட்டினத்தார் பெயரில் பாமர மக்களிடையே செல்வாக்குப் பெற்று விளங்குகின்றன. புகழ்பெற்ற ஒரு புலவர் பெயரால் புனை கதைகள் வழங்கப்படுவதற்குப் பட்டினத்தாரும் விதி விலக்கன்று. பட்டினத்தாரின் பெருமையைத் தாயுமானவரும்

'ஒட்டுடன் பற்றின்றி உலகைத் துறந்த செல்வப்
பட்டினத்தார் பத்திரகிரி பண்புணர்வ தெந்நாளோ' *எனப் போற்றுகின்றார். வள்ளலார் சரித்திரத்தில் சிவஞான வள்ளல்.*

'பட்டினத்துப் பிள்ளையினைப் பத்திரகிரியைப் பரவி
விட்டுவிட மாட்டார் வெறுவீணர்' *என வுரைத்தார்.*

பட்டினத்தார் முக்தி: *இறைவனின் கூற்றுக்கொப்பப் பட்டினத்தார் திருவொற்றியூரை அடைந்தார். அத்திருத்தலத்தில் பல நாட்கள் தங்கிப் பல பாடல்கள் பாடினார். சில வேளைகளில் கடலோரஞ்சென்று மாடு மேய்க்கும் சிறுவர்களோடு விளையாடி மகிழ்வார். ஒரு நாள் அச்சிறுவர்களோடு விளையாடுவது போல் விளையாடி ஒரு குழியில் மறைந்தார். அவரோடு விளையாடிய சிறுவர்கள் அவரைக் காணாது தேடுகையில், ஒரு மணற் குன்றின்மேல் காட்சியளித்தார்; சிறுவர்கள் அவரை நெருங்கியபோது ஒரு குழியில் குதித்து மறைந்தார். இவ்வாறு பல முறை சிறுவர்களுக்கு ஆடல் காட்டி, ஒருமுறை குழியில் இறங்கி அமர்ந்து சிறுவர்களால் மணலாலும் செடிகொடிகளாலும் மூடச்செய்து இறைவனோடு இரண்டறக்கலந்து சிவலிங்க உருவாய்க் காட்சியளித்தார். இச்செய்தியினைச் சிறுவர்கள் வாயிலாக அறிந்த ஊராரும் சிவலிங்க வடிவத்தைக் கண்டு வியப்புற்றுத் தொழுதனர். திருவொற்றியூர் செல்லும் அன்பர்கள் இன்றும் அவரது சிவலிங்க வடிவத்தைக் கண்டு தொழுது வழிபடுகின்றனர்.*

திருவள்ளுவர்


1. எவ்வுயிரையும் கொல்லாதிருத்தலே நல்ல அறமெனப்படும். கொல்லுதல் பாவங்களைத் தரும். தன்னுயிர் போகக்கூடிய நிலையேற்படினும், தான் பிறிதொன்றின் உயிரைப் போக்கும் தொழிலைச் செய்யற்க (குறள் 321, 327).

2. பிறன் செல்வத்தை வஞ்சனையால் கவர எண்ண வேண்டாம், ஏனெனில், அதைப் பெற்றாலும் அதனால் நன்மை அடைய முடியாது. பிறன் பொருளைக் களவு செய்ய மனத்தாலும் நினைக்கக் கூடாது. நினைத்தால்கூட அவ்வெண்ணம் தீமையைத் தரும். நல்லோர் நெஞ்சில் அறம் நிலைத்து நிற்பதைப்போல, களவுச் செயலையுடையவர் நெஞ்சில் வஞ்சனையே நிலைத்து நிற்கும். (குறள் 281, 282, 283, 288).

3. பிறன் மனைவியைக் காம விருப்பத்துடன் நோக்காத உள்ளம் படைத்தவனது ஆண்மையே பேராண்மை. சான்றோர்க்கு நன்மை தரும் ஒழுக்கமும் அஃதேயாகும். (குறள் 148).

4. பெற்றதாயும் தன் மகன் கள்ளுண்டு அம்மயக்கத்தில் களித்திருப்பதைக் கண்டு வருந்துவாள். அவ்வாறிருக்க, சான்றோர் முன் களிமயக்கத்தில் ஒருவன் இருப்பது எத்துணை அருவருக்கத்தக்கது! தூங்குகின்றவர் செத்தாரினும் வேறாகத் தோன்றமாட்டார். அவ்வாறே கள்ளுண்பவர் எக்காலத்தும் உயிர்க்கு அறிகுறியாகிய அறிவை இழத்தலால் நஞ்சுண்டவரேயாவார். (குறள் 923, 926).

5. வெற்றியே தருவதாயினும் சூதாடுதலை ஒழிக, சூதில் வெற்றி பெறுவது, தூண்டிலில் உள்ள இரும்பு முள்ளைமீன் இரையென்று தவறாக விழுங்குவதையொக்கும். பின்னர் உயிர்க்கு அபாயம் நேர்வது நிச்சயம். அதுபோல அவ்வெற்றி நாசமுண்டாக்காமல் விடாது. சூதாடுபவர் பல துன்பங்களையும் அடைந்து தம் புகழையும் இழப்பர். சூதினைப்போல ஒருவனை, வறுமையடையச் செய்வது வேறொன்றில்லை. (குறள் 931, 933, 934).



கருமாரிபட்டர் அன்னதானசிவம் தவத்திரு ஐயப்ப சுவாமிகள்



சித்தர் சிறப்பு

(இலக்கிய மாமணி. பொன். பரமகுரு - ஐ. பி. எஸ்)

உலகில் அரிய மானிடப் பிறவி எடுத்த நமக்கு உண்ணவும், உடுக்கவும், உரையாடவும் வழி காட்டுகிறாள் தாய். நல்வழிப் பள்ளிக்கு வழிகாட்டுகிறார் தந்தை. அறிவுக்கு வழிகாட்டுகிறார் ஆசிரியர். ஆனால், உலகில் வாழ்வாங்கு வாழ்ந்து, இறுதியில் இறைவன் அருளைப் பெற வழிகாட்டுகிறார்கள் திருவருள் பெற்ற ஞான சித்தர்கள்.

ஆண்டவனின் கிளை சக்திகளாய்த் திகழும் சித்தர்கள் காட்டாற்று வெள்ளம் போன்ற மக்களை கரையுள்ள ஆறுபோல் நல்வழிப் படுத்தி, அரிய பல நற்பயனை அடையச் செய்கிறார்கள். மலையில் உற்பத்தியாகும் நீர் கடலுடன் சங்கமமாக ஆறு ஒழுங்கு படுத்துவது போல், மக்கள் ஆண்டவனுடன் ஐக்கியமாக அறநெறிகளை வகுத்து வழி காட்டுகிறார்கள் அந்த ஞான சித்தர்கள்.

சித்தர் என்பார் யார்? வெகு சிக்கலான, சிரமமான கேள்வி தான்! சுவாமி காரைச் சித்தர் அவர்கள் சித்தருக்குப் பின்வரும் இலக்கணம் கூறுகிறார்:

''சித்தியெனில் கண்கட்டு வித்தையல்ல
சில்லறையாம் கருமத்துச் செய்கையல்ல
மித்தையெனும் சூனியமாம் மாயமல்ல
மின்னணுவாம் விஞ்ஞான வியப்புமல்ல
சித்தியெனில் ஈசனுடன் ஒன்றாம் சித்தி
சிவனாவானவனே தான் சித்தன் சித்தன்.''

சீவன் சிவனாவது தான் சித்து. தம்மைத் தாமே அறிந்து, தலைவனை அறிபவர் சித்தர். அவர்கள் நல்வினை, தீவினைப் பயனால் உண்டான ஊத்தைச் சடலத்தை மீண்டும் எடுத்தலை மாற்றவல்ல 'சாகாக்கலை' எனும் மருந்தை, சரப்பயிற்சி மூலம் அடைந்து, பேரின்பத்தில் திளைப்பவர்கள். எண்ணியதை எண்ணியாங்கு எய்தி, வரும் பொருள் அறிந்து, செயற்கரிய செய்பவர்கள் சித்தர்கள்.

''சித்தர் என்போர் சீவரில் அறிவறி
சித்தர் எனினும் சிவனார் எனினும்
சித்தரே சிவனார் சிவனார் சித்தர்
சித்தரே கூத்தர் சித்தாதி சித்தர்''

நாதம் தான் விந்து. விந்து கட்டினால் மூலம் தெரியும். மூலம் தெரிந்தவர் முனிவர். மூலாதாரம் கண்டவர் ஞானி. மூலாதாரத்துக்கு ஆதாரம் அறிந்தவர் சிதத்ர். அவர் பரம் பொருளோடு இரண்டறக் கலக்க வல்லவர். அவரை தெய்வம் என்றாலும் ஒன்றுதான். அவர் ஆன்மீக அறிவிலும், அனுபவத்திலும் உச்ச நிலையில் இருக்கும் அருளாளர்.

''அறிவைப் பேணி அறிவை அறிவால்
அறிந்து வளர்த்து அறிவின் அனுபவ
அறிவால் ஆய்ந்த அன்பருள் வழிவாழ்
அறிவுரை ஒளியை அருளுவோர் சித்தர்''

சித்தத்தை அடக்கி, மூவாசைகளைத் துறந்து சுத்தமாக்கி, திட நம்பிக்கையோடு இறைவன் பால் மனத்தை வைத்தவர்கள் சித்தர்கள். இறைவனுக்கே 'எல்லாம் வல்ல சித்தர்' என்றோர் பெயருண்டு. சித்தி பெற்றவர்கள் சித்தர்கள். தேவை ஏற்பட்டால் சித்தர்கள் சித்துக்கள் புரிவார்கள். ஆனால், சித்து வேலை செய்பவரெல்லாம் சித்தராகி விட மாட்டார். மனம், வாக்கு, காயம், ஐம்புலன்கள் ஆகிய அனைத்தையும் சுட்டெரித்து, ஆணவத்தை வேரறுத்து எறிந்தவர்களே சித்தர்கள்.

''சினம் அடங்கக் கற்றாலும் சித்தி யெல்லாம் பெற்றாலும்
மனம் அடங்கக் கல்லார்க்கு வாய் ஏன்? பராபரமே!''

என்கிறார் தாயுமானவர். மனம் அடங்கி, தான் எனும் ஆணவம் அடங்கவில்லையானால், சினத்தை அடக்கியும், அட்டமா சித்திகள் பெற்றும் பயனில்லை.

''தன்னை அழித்தே கனிதரும் வாழை மரம்
தன்னை அழித்தே ஒளி தரும் மெழுகுவத்தி
தன்னை அழித்தே வாசந்தரும் ஊதுவத்தி
'தான்' அழிந்தே சித்தராகும் மனிதப் பிறவி.''

''ஐம்புலன்களையும் அடக்க இயலாதவர்களுக்கு நிலையான அறிவு இருக்காது. ஐம்புலன்களையும் அடக்காதவன் இறைவனை அறிய முடியாதவன் ஆகிறான். இறைவனை அறியாதவனுக்கு மனத்தில் அமைதி கிடையாது. அமைதியில்லாதவன் மிகழ்ச்சியை அடையான்.'' என்கிறது கீதை.

''உலகில் மனித வாழ்வு நிலையற்றது. ஆயினும் அதனை நீண்டதாக ஆக்கவல்ல' ஊனினைச் சுருக்கி உள்ளொளி பெருக்கும்' தன்மையினைக் கண்டு தெளிந்து போற்றியவர்கள் சித்தர்கள். 'சித்தத்தைச் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும்' பண்பு அவர்களுடையது. சித்தருடைய வாழ்வு இயற்கையோடு ஒன்றியது. குறிக்கோள் வைத்து வாழ வைப்பது. இயற்கையில் ஒன்றிய அவர்கள்தம் வாழ்வு, அவர்களை நெடுங்காலம் வாழ வைக்கிறது.'' என்கிறார் அ.மு.பரம சிவானந்தம்.

''சித்தர்கள் சாதி சமய வேறுபாடுகளைக் கடந்தவர்கள்; மூட நம்பிக்கைக்கு இடம் அளிக்காதவர்கள்; சடங்குகளோடு ஒட்டிய வழிபாடுகளைப் போற்றாதவர்கள். தத்துவஞானிகள்; மெய்யுணர்வு பெற்றவர்கள்.''என்பர் மு. வரதராசனார்.

''இறவாப் பெரு நெறி'' என்னும் நிறைவான வாழ்வினைக் பெற்று, தத்துவ நிலையினைத் தனித்திருந்து உணர்ந்தவர்கள் சித்தர்கள். அவர்கள் சீவன் முத்தர்கள். அவர்களின் சிறப்பு அளவிடற்கரியது; வாக்கு சத்திய வாக்கு; போக்கு அறிவுலகத்திற்கேற்ற போக்கு. அவர்கள் சித்தத்தை வென்றவர்கள். அவர்கள் பெற்ற அருள் அனுபவ நிலையே சித்து அல்லது சித்தி ஆகும்.

இறைவனை சத், சித், ஆனந்தம் என்பார்கள். சத் என்பது என்றும் உள்ளது. சித் என்பது பேரறிவு, ஆனந்தம் என்பது அழிவில்லாத பேரின்பம். நம்முள் இறைவன் இருக்கிறான் என்றாலும், அவனை அவன் துணையின்றி அறிய முடியாது. சூரியனைச் சூரியனின் ஒளியைக் கொண்டுதான் அறிய முடியும். அது போல இறைவனையும் அவன் அருளினால்தான் அறிய முடியும். இறைவனின் அருளினால் இறைவனைக்காணும் அறிவைப் பெறுவதுதான் சித்து.

அந்த இறையருளைப் பெற்றவர் சித்தர்.

''என்னவே காரணமது நாலதாகும்.
ஏற்ற மனம் புத்தியாங்காரஞ்சித்தம்
நன்னவே நாலினிட விரிவைக் கேளாய்
நலத்தனமன மாவ தொன்றைத் தானினைக்கும்
பொன்னவே புத்தி தான தனை விசாரிக்கும்
போரான வாங்காரம் கொண்டெழுப்பிவைக்கும்
தென்னவே சித்தமதாஞ் செய்து முடிப்பிக்கும்
சிறந்த வந்தக் கரணந்தானான்கு மாச்சே,''

என்கிறார் வைத்திய சிந்தாமணியில் யூகிமுனி.

சித்தம், மனம், புத்தி, அகங்காரம் ஆகிய நான்கும் அந்தக்கரணம் எனப்படும். இவற்றில் மனம் ஒன்றை நினைக்கும், புத்தி நிச்சயிக்கும், அகங்காரம் முனைப்பைத் தோற்றுவிக்கும், சித்தம் இம்மூன்றுக்கும் காரணமாகும்.

சித்தத்தின் சலனமே அனைத்துத் தத்துவங்களின் தோற்றம். ஆதலால், சித்தத்தை வெல்லுதல் வேண்டும். சித்தத்தின் சலனம் பிராண வாயுவின் சலனத்தையும், பிராணனின் சலனத்தையும் பொறுத்தது. பிராண வாயுவின் அசைவே சித்தத்தின் அசைவாகும். எனவே, பிராணாயாமத்தின் மூலம் பிராணனும் சித்தமும் ஒடுங்கிய நிலை சித்தர் நிலையாகும். இதுவே சிவ நிலை எனலாம். திரையற்ற நீர் போல் சிந்தை தெளிந்த நிலை இது. இந்நிலையில் சித்தமும் இல்லை; செயலும் இல்லை. இதனை மோன நிலை எனவும் கூறலாம். திருமூலர் இதனை செத்தார் நிலை எனக் குறிக்கிறார். ''சாகப் பழகுவது சமாதி''என்பார்கள் கருவைச் சித்தகல்ப சிரோன்மணி பொன்னையா சுவாமிகள்.

''சிந்தையிலே களங்க மற்றார் சித்தனாவான்'' என்கிறார் அகத்தியர்.

''சிந்தை தெளிந்திருப்பவனே யவனே சித்தன்
செகமெல்லாஞ் சிவமென்றே யறிந்தோன் சித்தன்,'' என்கிறது வான்மீகர் சூத்திரம்.

''ஆத்தாளைப்பூசித் தோனவனேசித்தன்'' என்று பாடுவர் கருவூரார் காகபுசுண்டர்,'' ஆரூட ஞானம் பெற்றவர்களே சித்தர்கள்'' என்பர்.

''தாக்கோண விட்ட குறை வந்ததென்றால்
தனியிருந்து பார்த்தவனே சித்தனாமே''

என்று விட்ட குறை வாய்த்து தனிமையில், தன் அனுபவத்தில் அனைத்தையும் கண்டறிபவனே சித்தன் என்று உரைப்பர் இராம தேவர்.

''பதமுத்தி மூன்றும் பழுதென்று கைவிட்
டிதமுற்ற பாச இருளைத் துறந்து
மதமற் றெனதியான் மாற்றிவிட்டாங்கே
திதமுற்றவர்கள் சிவ சித்தர் தாமே'' என்கிறார் திருமூலர்.

சாலோபம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் எனும் நான்கும் நான்கு வகை முத்திகள் என்பர். இவை முறையே இறைவன் உலகில் இருக்கும் பேறு; இறைவன் அருகில் இருக்கும் பேறு; இறைவன் ரூபம் அடையும் பேறு; இறைவனோடு ஒன்றும் பேறு. இவற்றில் முதல் மூன்றும் பதமுத்தி எனப்படும். அதனால் அடையும் சாயுச்சியமே பரமமான முத்தி எனப்படும். ஞான பாதத்தின் மூலம் அடையும் சாயுச்சியமே சித்தி எனப்படும். அச்சித்தியை அடைந்தவரே சித்தர் ஆவார். பந்த பாசத்தையும், ஆணவத்தையும் துறந்து, நான் என்ற மதம் அற்று, தான் தனதென்னும் செருக்கற்று, அவையனைத்தையும் அருள் நினைவால் மாற்றி, பேரறிவும் பேரொளியுடன் இணையும் நிலை பெற்றவர் சிவ சித்தராவர் என்கிறது மேற்கண்ட பாடல். சிவ சித்தர் என்றால் செம்மை நிலையுற்றவர் என்பது தெளிவு.

''எழாமல் வாசனையைக் கொன்றோன் ஞானி
ஏகாமல் வாசனையை யடித்தோன் சித்தன்''

என விளக்குகிறார் சட்டை முனி. வாசனை என்பது கர்மவினையாகும். இதன் இயல்பு பிறவி தோறும் தொடர்வது. இதனை எழாமல் தடுப்பவன் ஞானி எனவும், ஏகாமலேயே தடுப்பவர் சித்தன் எனவும் குறிக்கின்றார் சட்டை முனி.

''தானான காயத்தை நிறுத்த வேண்டும்
சதா காலம் சுக்கிலத்தைக் கட்ட வேண்டும்
வேனான மும்மலத்தை யறுக்க வேண்டும்
வெளியான சிதாபாசம் நீக்க வேண்டும்.
பானான முச்சுடரை யறுக்க வேண்டும்
பாழான தூலமதை வெறுக்க வேண்டும்
மானான பராபரியை நிர்த்தனம் செய்து
மானிலத்தில் வாழ்பவனே சித்தனாமே.''

இது போகர் தரும் விளக்கம்.

சித்தர் தம் சித்துக்களை மிகத் தெளிவாகக் கூறுவனவற்றுள் முதலிடம் பெற்றுச் சிறந்தோங்குவது தாயுமானார் பாடலாகும்:

''கந்துக மதக்கரியை வசமா நடத்தலாம்
கரடி வெம் புலி வாயையும்
கட்டலாம்; சிங்கம் முதுகின் மேற் கொள்ளலாம்;
கட் செவி எடுத்தாட்டலாம்;
வெந்தழலின் இரதம் வைத்தைந்து லோகத்தையும்
வேதித்து விற்றுண்ணலாம்;
வேறொருவர் காணாமல் உலகத்துலாவலாம்;
விண்ணவரை ஏவல் கொள்ளலாம்
சந்ததமும் இளமையோ டிருக்கலாம்; மற்றொரு
சரீரத்திலும் புகுதலாம்;
சலமேல் நடக்கலாம்; கனல் மேலிருக்கலாம்;
தன்னிகரில் சித்தி பெறலாம்
சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற
திறமரிது சத்தாகியென்
சித்தமிசை குடி கொண்ட அறிவான தெய்வமே
தேசோமயானந்தமே.''

இப்பாடலில் பதினொரு வகையான செயற்கரிய செயல்கள், சித்திகள் குறிக்கப் பெறுகின்றன. ''சும்மா இரு சொல்லற என்றாலுமே - அம்மா பொருளொன்றும் அறிகிலனே,''என அருணகிரிநாதர் ஏங்குவதும்; இன்று வருமோ, நாளைக்கே வருமோ, துன்றுமல வெம் மாயை அற்று வெளிக்குள் வெளி கடந்து சும்மா இருக்கும் சுகம்,'' என இராமலிங்க அடிகள் இரங்குவதும் போல, தாயுமானார் சிந்தையை அடக்கிச் சும்மா இருப்பதிலும் மேற்காட்டிய சித்துக்களை எளிதில் ஆடுதல் கூடும் என்னும் பொருள் படப் பாடியுள்ளார். எனினும் சிந்தையை அடக்கிச் சும்மா இருக்கச் சித்தி பெறலாம் என்ற குறிப்பும் அப்பாடலில் பொதிந்துள்ளது.

பேராசிரியர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், ''கடவுளைக்காண முயல்பவன் பக்தன்; கடவுளைக் கண்டு தெளிந்தவன் சித்தன்,'' என மிக இரத்தினச் சுருக்கமாய்க்கூறுகிறார்.

சித்தர் செயல்களில் முதன்மையானது உண்ணாமல், உறங்காமல், இடம் பெயராமல், வெயில், மழை, பகல், இரவு எனப் பாராமல் சமாதியில் இருத்தல் ஆகும். அவர் எவர் கூறுவனவற்றையும் செவி மடுக்காதவர். எவருடனும் பேசாதவர். பற்றற்றவர் என்றாலும் ஞானம், இரசவாதம், சமாதி நிலை கை கூடியவர்களிடம் உறவு கொண்டு வாழ்பவர். அவர் இவ்வுலகில் இருந்தாலும் ஏதோ ஓர் உலக வாழ்வை எண்ணி அதற்காக மனத்தை ஓர்மைப் படுத்திக்

கொண்டவர். மனம் பேதுமற்றது போல் இருந்தாலும் எத் தொழிலைச் செய்தாலும் அவரது உண்மையான குறிக்கோள் ஞானம் அடைதலே! இதனைப் பட்டினத்தார்.

''எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைப் பட்டாலும்
முத்தர் மனமிருக்கும் மோனத்தே,'' எனப் பாடுவர்.

அவ்விதம் மனத்தை அடக்கி மோன நிலையில் இருப்பவர்க்கு வைத்தியம், வாகடம், சித்து ஆகிய மூன்றும் கை கூடும். அம்மூன்று நிலைகளும் ஞானத்தின் உட்பக்கம் காண அவருக்கு உறுதுணையாக இருந்து உதவும். ஞானம் முற்ற முற்ற, திடமுள்ள ஆத்மா சூனிய நிலைக்குள் பிரவேசித்து, அண்டங்களை அதனுள் கண்டு, 'நான்' என்பது நீங்கி, இறைவனுடன் இரண்டறக் கலக்கும். அவ்விதம் கலந்தவரே சித்தர். திரிகால ஞானம் படைத்த அவர் ஒன்றை மற்றொன்றாக மாற்றவும், ஒரு உலோகத்தை உகந்தவாறு பஞ்ச பூதங்களின் இயக்கத்தையும் மாற்றவும், வரும் பொருள் உரைக்கவும் வல்லவர்.

மனிதர்களின் மனமாசைப் போக்குவது சித்தரின் தொழிலாகும். இதனை பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தனார், ''எந்த ஒருவனைக் கண்டவுடன் நம்முடைய குரங்கு மனம் சற்று அமைதி அடைகின்றதோ, யாரைக் கண்ட பொழுது நம்முடைய கவலைகளை மறந்து ஓரளவு அமைதி அடைகின்றமோ யாருடன் இருக்கும் பொழுது காரணம் இல்லாமலும் ஒரு வகையான ஆனந்தம் பெருக்கெடுக்கின்றதோ, யாரைக் கண்டவுடன் காணாததைக் கண்டது போன்ற உள்ளுணர்வு உண்டாகின்றதோ அவனே சித்தன் ஆவான். நினையா நம் நெஞ்சை நினைவிப்பதும், அடங்கா மனத்தை அடங்குமாறு செய்வதுமே சித்துக்களாம்'' என்று கூறுவதால் அறியலாம்.

சித்தர்கள் ஆறு வகைப்படுவர். கனவு மூலமாகத் திருவருளைப் பெற்று பூரணமடைபவர் 'சொப்பன சித்தர்'. மந்திரோபதேச மூலம் பரிபூரணமடைபவர் 'மந்திர சித்தர்'. புதையல் கிடைப்பது போல் அல்லது ஒரு தனவான் மகளை மணப்பதால் திடீரெனப் பணக்காரனாவது போல் திடீரெனப் பரிபூரணமடைபவர் 'திடீர் சித்தர்'. இவரில் அனேகர் ஆதியில் பாபிகளாய் விளங்கி, திடீரென விட்டகுறை தொட்ட குறையால் தூயர்களாகி இறைவனை அடைபவர். கடவுளின் கருணையால், திருவருளால் பக்குவமடைபவர் 'கருணா சித்தர்'. இவர் சிரமமின்றி பரிபூரணமடையும் பாக்கிய சாலியாகின்றார். புடல், பூசணி போன்ற கொடிகளில் காய் தோன்றிய பின்னே பூவின் இதழ்கள் வெளிவருவதைப் போல, பிறக்கும் போதே பரிபூரணமாய்ப் பிறப்பவர் 'நித்ய சித்தர்'. சரியை, கிரியை, யோகம் இயற்றி ஞானம் அடைந்து சித்தி பெறுபவர் 'சாதனா சித்தர்'.

யோக சாதனைக்குரிய சித்திகள் எண் வகைப்படும். அவை அட்டமா சித்திகள்: அணிமா அணுவைப் போல சிறுத்தல்; மகிமா இமயம் போல பெருத்தல்; கரிமா கரும் பொன் போல கனத்தல் லகிமா காற்றைப் போல மெலிதல்; பிராத்தியம் அனைத்திற்கும் ஆண்டையாதல்; பிரகாமியம் கூடுவிட்டுக் கூடு பாய்தல்; ஈசத்துவம் - ஈசனைப் போல பேராற்றல் பெறுதல்; வசித்துவம் - தன் வயப்படுத்தும் ஆற்றல்.

இந்த எட்டு வகையான ஆற்றல்களையும் பெற்று, செயற்கரிய அற்புதச் செயல்களைச் செய்பவர்கள் சித்தர்கள். அவர்களைத்தான் 'பெரியர்' என்கிறார் வள்ளுவர்: ''செயற்கரிய செய்வர் பெரியர்'' அவர்கள் அறிவியல் விஞ்ஞானிகளாக, மறை மெய்மை சார்ந்த கவிகளாக, அற்புத சக்தியுள்ள அருளாளர்களாகத் திகழ்பவர்கள்.

புகழ் பெற்ற பதினெட்டுச் சித்தர்கள் சமாதி நிலை எய்திய தலங்கள் யாவும் சிறந்த ஆலயங்களாக விளங்குகின்றன. அவை வருமாறு:

அனந்த சயனத்தில் கும்பமுனி
திருப்பரங்குன்றத்தில் மச்சமுனி
மதுரையில் சுந்தரனார்
அழகர் மலையில் இராம தேவர்
சேதுராமேசுவரத்தில் பதஞ்சலி
பழநியில் போகர்
திருவரங்கத்தில் சட்டமுனி
கருவூரில் கருவூரார்
திருவாரூரில் கமல முனி
மாயூரத்தில் குதம்பைச் சித்தர்
வைத்தீஸ்வரன் கோவிலில் தன் வந்திரி
எட்டி குடியில் வான்மீகர்
தில்லையில் திருமூலர்
விருத்தாசலத்தில் பாம்பாட்டிச் சித்தர்
திருவண்ணாமலையில் இடைக்காடர்
பேரூரில் கோரக்கர்
திருப்பதியில் கொங்கணர்
காசியில் நந்தீசர்

இப்பட்டியல் சைவ சமயக் கையேட்டில் கண்டவாறு தரப்பட்டுள்ளது. அபிதான சிந்தாமணி போன்ற நூல்களில் பெயர்கள் சற்று வேறுபடுகின்றன.

இன்று பிரபல மாகியிருக்கும் நாடி சோதிடம் என்னும் அரிய கலையையும் அளித்தவர்கள் சித்தர்களே. மூன்று நாடிகளை மையமாகக் கொண்டு இயங்குவதாலும், 'எதிர் காலத்தில் மக்கள் நாடி வருவார்கள்' எனக் கருதி அன்றே அனைத்தையும் நாடி அறிந்து எழுதி வைத்ததாலும் 'நாடி சோதிடம்' என்றனர். கணபதி நாடி, அகத்தியர் நாடி, சரசுவதி நாடி எனப் பலவகை நாடி சோதிடங்கள் உள்ளன.

சித்தர்கள் சமுதாய மக்களுக்கு கூறும் அறிவுரைகளைச் செய்ய வேண்டியவை செய்ய வேண்டாதவை என இரு பிரிவுகளாகப் பகுக்கலாம்.

செய்ய வெண்டியவை: மக்கள் நல்வழி நடந்து மேன்மையடைய வேண்டும். மானிடராய்ப் பிறந்தவர் நல்ல குணங்கள் உடையவராயிருக்க வேண்டும். 'உலகத்தோடு ஒத்து வாழ வேண்டும். தெய்வம் ஒன்றென்று வணங்க வேண்டும். பருவத்தில் பயிர் செய்ய வேண்டும். திருடர்களையும், கள்ளர்களையும், போலிகளையும் தரம் பிரித்து அறிய வேண்டும். உண்மை ஞானிகளை தெரிய வேண்டும். சாத்திரங்கள் வேதங்கள் யாவும் பிழைப்பிற்காகப் படைக்கப்பட்டவை என்பதை உணர வேண்டும். உயிர் போகும்போது உடலும் அழிந்து விடும் என்பதை அறியுங்கள். வெட்ட வெளியினை நன்றாகப் பாருங்கள். தந்தையும் தாயும் இணையும் போது கருவாகி நிற்பவன் இறைவன். அவனுக்கே இவ்வுலக உண்மை தெரியும். எனவே அவனையே வணங்குங்கள். நன்மை பயக்கும் அன்பையும், பக்தியையும் கைக் கொள்ள வேண்டும். மனிதனுக்குச் சத்தியம் வேண்டும். மனத்தினைச் செம்மையுடன் வைத்திருக்க வேண்டும். உலகின் மீது பற்று வைக்காதிருக்கப் பழகுங்கள். வல்லவர்களின் கூட்டத்தில் கூடுங்கள். அண்டினவர்கள் மகிழ்வடையும் வழிகளைக் கூறுங்கள். வீடு பேற்றை அடைவதற்குரிய வழியினைத் தெளியுங்கள். உயர் நிலையடைய; தியானம் செய்தல் வேண்டும். நன்மை பயக்கும் நீதிகளை மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டும். கட்டிய மனைவி தெரு முனை வரை வருவாள். பிள்ளைகள் இடுகாடு வரையில் வருவர், நாம் செய்யும் தருமம் மட்டிலும் இறுதி வரை வந்து பரகதியினை ஊட்டு விக்கும். ஏழைக்கு உணவு அளிக்க வேண்டும். அவரவர் கடமைகளை ஆற்ற வேண்டும். வாசியோகம் புரிந்தால் இளமைத் தன்மை யடையலாம். காம நோயைத் தவிருங்கள். சாதிகளையும், சாத்திரங்களையும், சடங்குகளையும் ஒழியுங்கள்.

செய்ய வேண்டாதவை: தீய நெறியில் உய்க்கின்ற செயல்க

ளைச் செய்யாதீர்கள். முத்தியடைய மோகம், பொய், களவு, கொலை முதலியன செய்தல் கூடாது; கோபம் கொள்ளக் கூடாது; பாய்ச்சல் பாயக் கூடாது, பாழ் போகக் கூடாது; பாபம் செய்யக் கூடாது; சாபம் கொடுத்தல் கூடாது; ஆசை கொள்ளக் கூடாது.

''சத்தியமே வேணுமடா மனித னானால்;
சண்டாளஞ் செய்யாதே தவறிடாதே;
நித்தியகர் மம்விடாதே நேமம் விட்டு
நிட்டையுடன் சமாதி விட்டு நிலை பேராதே;
புத்தி கெட்டுத் திரியாதே; பொய் சொல்லாதே
புண்ணியத்தை மறவாதே; பூசல் கொண்டு
கத்தியதோர் சள்ளிட்டுத் தர்க்கியாதே
கர்மியென்று நடவாதே'' என்பர் அகத்தியர்.

சித்தர்கள் ஒரு சமதர்மச் சமுதாயம் உருவாக என்னென்ன வழிமுறைகள் உண்டோ அவை அனைத்தையும் மக்கள் மத்தியில் பரப்பினர். சீரிய சமுதாயச் சிற்பிகளாய்ச் சித்தர்கள் சிறந்து விளங்கினர்.

சரணாகதி

சந்திர சூரியர் ஒளிபெற விளங்கும்
தனிஅருட் பெருவெளித் தலத்தெழுஞ் சுடரே
வந்திர விடைஎனக் கருளமு தளித்தே
வாழ்கஎன் றருளிய வாழ்முதற் பொருளே
சந்திர மேஎனை வளர்க்கின்ற மருந்தே
மாநிலத் திடைஎனை வருவித்த பதியே
தந்திரம் யாவையும் உடையமெய்ப் பொருளே
தனிநட ராசஎன் சற்குரு மணியே.

— திரு அருட்பிரகாச வள்ளலார்.

பர அபர இன்பம்

ஜீவகாருண்யம் என்கின்ற சாதனத்தில் சாத்தியமாகின்ற இன்பம் அபர இன்பமென்றும் பர இன்பமென்றும் இருவகைப்படும். இச்சை முதலியவைகளைப் பற்றி உண்டாகின்ற துன்பத்தை நிவர்த்தி செய்விப்பதில் வரும் இன்பம் அபர இன்பமாகும். பசியினால் வரும் துன்பத்தை நிவர்த்தி செய்விப்பதில் வரும் இன்பம் பர இன்பமாகும். (வள்ளலார்)

அருள்

''கடவுளின் இயற்கை விளக்கமாகிய அருள் எந்த வண்ணத்தை உடையது என்று குறிக்க வேண்டில் சொல்லுவார் சொல்லும் வண்ணங்களும் நினைப்பார் நினைக்கும் வண்ணங்களும் அறிவார் அறியும் வண்ணங்களும், அனுபவிப்பார் அனுபவிக்கும் வண்ணங்களும் ஆகிய சர்வ சக்தி வண்ணங்களும் தனது ஏகதேச வண்ணங்களாக விளங்க விளக்கி விளங்குகின்ற பூரண விளக்க வண்ணத்தை யுடையது'' என்று அறிய வேண்டும். (வள்ளலார்)

தொகுப்பு: செல்வி மோ.யுவராணி
சென்னை-39

இறைவன் உடலில் உயிர்போல் உலகத்தோடு ஒன்றாயும் கலந்துள்ளான்; கண்ணில் கலந்து அதற்குப் பொருள்களைக் காட்டுகின்ற சூரிய ஒளி கண்ணுக்கு வேறுபட்ட தன்மையுடையதாய் இருத்தல் போல இறைவன் உலகில் கலந்து இருப்பினும் தன்மையால் வேறாய் இருக்கின்றான்.

ஸ்ரீலஸ்ரீ கயிலை குருமணி



செக்கர் வேள் செம்மாப்பு

(சித்தாந்தச் செல்வர், பேராசிரியர்
டாக்டர். ப. இராமன். எம். ஏ., பிஎச். டி.,)

அத்தியாச்சிரம சுத்தாத்துவித வைதிக சைவசித்தாந்த ஞானபானு பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் திருத்தேவை என்னும் திருவிராமேச்சுரத்தில் கி.பி. 1850–52–ற்குள் அவதரித்தார்கள். இவர்கள் பெற்றோர் சாத்தப்பிள்ளையும் செங்கமலத்தம்மையும் ஆவார்கள். சுவாமிகளின் பிள்ளைத் திருப்பெயர் அப்பாவு. சேஷகிரிராயர் இட்ட பெயர் குமரகுருதாசர் என்பது. சுவாமிகளுக்குச் சொந்த ஊர் பாம்பன் என்பதால் பாம்பன் சுவாமிகள் என்றழைக்கும் வழக்கம் ஏற்பட்டது.

இவர்கள் அறுமுகன் ஒருவனையே முழுமுதற் கடவுளாக வழிபடும் உறுதிப்பாடுடையவர்கள். அப்பெருமானைப் புகழ்ந்து 6666 திருப்பாடல்கள் பாடியருளியுள்ளார்கள். முப்பத்திரண்டு உரைநடைநூல்கள் இயற்றியருளியுள்ளார்கள். தாம் பாடியருளிய திருப்பாடல்களை ஆறு மண்டலமாக வகுத்துள்ளார்கள். செக்கர்வேள் செம்மாப்பு, செக்கர்வேள் இறுமாப்பு என்னும் இந்நூல் நான்காம் மண்டலத்தைச் சார்ந்ததாகும். இந்நூல் சுவாமிகளின் மெய்ப்பொருட் கொள்கையை விளக்கும் ஓர் ஒப்பற்ற நூலாகும். இக்கருத்தைச் சுவாமிகள் இந்நூலின் முன்னுரையில் பின்வருமாறு கூறகின்றார்கள்:

"செக்கர்வேள் செம்மாப்பு என்னும் பெயரிய இந்நூல், வைதிக சைவ சமய நிலையை ஐயம் திரிபு அற இனிது எடுத்துக் கூறி உண்மையை நிறுவுமாறு செங்வேட்பரமன் திருவருள் ஒன்றனையே முன்னிட்டு எம்மாற்பாடப்பட்டது. இதனுள், முழு முதலிலக்கணவதிகாரமும், செக்கர்வேள் இறுமாப்பினுள் வீடுபேற்றதிகாரமும் எமது முடிவான சித்தாந்தமாகும். (1101) ஆயிரத்து நூற்றொரு திருப்பாட்டுக்களால் நிரம்பியுள்ள திருப்பா என்னும் எமது நூலினுள் 43 திருப்பாட்டுகட்கு மேற்கோள்களோடு வேதத்தமிழால் உரையாக வரையப்பட்ட திட்பத்திலே (3–ஆம் பத்தின் 7–ன் உரையிலே) "இத்தீர்வையே எமது முடிவான சித்தாந்தம்" எனவும் தீட்டப்பட்டமையின் அந்நூலும் பரந்து கிடக்கும் பொருளும், சுருங்கி நிற்கும் பொருளும் சிச்சித்தாந்தமேயாம். இன்னும் எம்முடைய பத்தியகத்திய ரூபமாயுள்ள பன்னூல்களின் முடிபும் இதன் கண்ணேயே அடங்கும் எமக்கு வயது 70–க்கு அதிகமே என்னலாம். துறவு நிலையினை அடைந்து 29 வருடங்கட்கு அதிகமாம். இளம்பிராய முதலின்று காறும் (தென்மொழி வடமொழி) நூலாய்வில் ஏற்பட்ட நூலளவை, காட்சியளவை, கருதலளவை என்னும் மூன்றானும் இச்சித்தாந்தத்தினும் மேலதாகவொன்று அறிந்தேம் அல்லேம்," என்பது காண்டு.

இந்நூல், "சாலிவாகன சகாத்தம் 1844 இல் ருதிரோற்காரி வருடத்து வைகாசித் திங்கள் 32 இல் (14–6–1923) ஏய்ந்த குருவாரத்தில் சென்னைப் புதுப் பாக்கத்தில் பாடி முடிந்தது" எனப் பாடிய காலமும் அணிந்துரையிற் கூறப்பட்டுள்ளது.

செக்கர்வேள் செம்மாப்பு 140 செய்யுட்களையும் செக்கர்வேள் இறுமாப்பு 64 செய்யுட்களையும் கொண்டுள்ளன. செக்கர்வேள் செம்மாப்பில் முழுமுதலிலக்கண அதிகாரமும் செக்கர்வேள் இறுமாப்பில் வீடுபேற்றதிகாரமும் கூறியுள்ளார்கள். இரண்டனையும் முதற்காண்டம் எனவும் தொகுத்துக் கூறியுள்ளார்கள். கனவதிகாரம் என ஓர் அதிகாரமும் (58 செய்யுட்கள்) இந்நூலுள் உண்டு. இதனைச் செக்கர்வேள் செம்மாப்பில் இரண்டாம் கண்டமாகக் குறிப்பிடுகிறார்கள்.

செக்கர்வேள் செம்மாப்பு

செக்கர்வேள் எனும் பெயர் சிவந்த வண்ணமுள்ள முருகப் பெருமானைக் குறிக்கும். செம்மாப்பு என்பது மிகுந்த உயர்வு, முதன்மை, முழுமுதல் எனும் பொருள்களைத் தரும். அதனால் செக்கர்வேளின் முதன்மை பற்றிக் கூறும் நூல் இஃது எனலாம். இதன் முதற்பகுதி சொரூபசம்பந்தவாரம் ஆகும். வாரம் என்பது தெய்வப் பாடல் எனலாம். வாரத்தைப் பக்கம் எனவும் கூறுவர். செக்கர்வேளின் சொரூபத்தை விளக்கும் தெய்வப்பாடல் என்க.

சொரூபசம்பந்தவாரம்

சொரூபம் என்பதன் பொருள் தன்னியல்பு அல்லது சிறப்பு இயல்பு ஆகும். அதாவது இறை தன்னை நோக்கி நிற்கும் நிலை. இதனையே சொரூப லக்கணம் என்பர். தன்னியல்பாவது, இறை, ஒன்றாக இருந்தல், அகண்டப் பொருளாதல், காலம் கடந்திருத்தல், பிறப்பின்மை, காட்சிக்கும் கருத்துக்கும் மொழிக்கும் அப்பாற்பட்டிருத்தல், ஆகிய நிலையாம்.

செக்கப்வேளின் தன்னியல்பை இனிக் காண்போம்.

செக்கர்வேள்

செக்கர் என்பதற்குச் சிவப்பு என்றும் வேள் என்பதற்கு விருப்பம் என்றும் பொருள். எல்லா உயிர்கள் மீதும் விருப்பம் கொள்ளும் சிவந்த வண்ணமுடையான்

என்பதே பொருள். இவன் சிவந்த ஒளிப்பிழம்பாக விளங்குவதால் செஞ்சோதியும் ஆவான். கருநிறம் பொருந்திய கருவேளை மாய்த்திடும் வல்லமை உள்ளவன். அவனைக் கற்றோர் அழிவற்ற இறைவன் எனவும் கூறுவர். உயிர்களின் உள்ளமாகிய குகைதோறும் இருத்தலால் குகன் என ஒரு பெயரும் உண்டு என மறை நுவலும். அதனையே அந்தரியாமி என வடநூல் கூறும். கடந்தும் உள்ளும் இருப்பதால் கடவுள் என்பர். இது பொருந்தாது. உயிர்களின் உள்ளக்குகைதோறும் இருந்து உயிர்களைச் செலுத்திக் கொண்டிருத்தலால் அவன் கடவுள் என்பதே பொருந்தும். கடவுள் = கடவு + உள் எனப் பிரித்துப் பொருள் காண்க. கடவுதலாவது செலுத்துதல். உள் ஆவது உள்ளம். அஃதாவது உள்ளமாய் இருந்து செலுத்துதலாம். மேலும் பரம் எனும் வடமொழியும் குன்றம் எனும் தென் மொழியும் புணர்ந்து பரங்குன்றம் எனும் ஒரு சொல்லானாற்போலக், கடம் என்ற வடசொல்லும் உள் என்ற தமிழ்ச் சொல்லும் புணர்ந்து கடவுள் எனவாயிற்று என்று கூறுவார் கூற்றுச் சிறவாது.

கடவெனும் வினைத்தொ கைச்சொற் கடையுறு
முள்ளென் பேர்தான்
சுடரொளிச் செக்கர் வேளாய்த் துலங்கலி னவற்கே
யென்றுங்
கெடலறு கரும சொந்தங் கிளர்தலிற் கருத்த னென்பேர்
இடரறச் சேரு மேனோர்க் கியம்புதல் சிறவா தன்றே

என இச் செம்மாப்பில் சுவாமிகள் கூறியமையால் கடவு + உள் எனும் சொற்றொடர் ஒரு வினைத் தொகைத் தொடராகும் என்க. கடம் + உள் எனும் இரு பெயர்ப் புணர்ச்சியன்று. அழிவற்ற தொழிலைச் செய்யும் உரிமையுடைய கரும சுதந்திர கருத்தாவாக விளங்குதலினால் கடவுள் என்பது ஐந்தொழிலுக்கும் உரியவனையே குறிக்கும். இதனால் கருத்தன் என்ற பெயர்க்கும் உரியனாவன். பாரமேசுவரத் திருமேனியில் யாவற்றையும் அடக்கிக் கொண்டிருக்கும் முழு முதல்வனாக இருத்தல் பரன் எனப்படுவன். நினைத்ததை முடிக்கும் ஆற்றலுடைமையால் சத்திமான் என்றாவன். இன்னதென்று கூறவொண்ணாப் பேரொளிப் பிழம்பாக விளங்குதலால் பரதேவன் என அழைக்கப்பெறுவன். நன்மைப் பொருளாகி உயிர்களுக்கு நலம் செயவோனாய் அவற்றின் மலக் குற்றங்களை நீக்குவோனாய் இருத்தலால் அவனுக் குச் சிவன் என்ற பெயரும் உண்டு. இயல்பாகவே பாசங்களின்நீங்கிய தன்மையால் அமலன் என்ற பெயரும் உண்டு. எல்லா உயிர்களுக்கும் தலைவனாயிருத்தலால் பசுபதி எனவும் பெயர் பெறுவன். உயிர்களுக்குச் சுகத்தை அளித்தலால் சம்பு எனப்படுவன். எல்லாச் செல்வங்களுக்கும் தலைவனாயிருத்தலால் ஈசன் எனப்படுவன். தவம் செய்து சாரூபபதம் பெற்றவர்களெல்லாம் தன்னைச் சூழ்ந்து வழிபட விளங்குதலால் மகேசன் எனப்படுவன். உயிர்களுக்கு உடம்பு இருப்பதுபோல் செக்கர்வேளுக்கு உயிரே உடம்பு உயிர்களுக்கு நலம் அளித்தலால் சங்கரன் என்றும் அழைக்கப்பெறுவன். சு = ஆனந்தம்; பிரமம் = பெரியபொருள். ணியன் = வேறுதோன்றிய வன். பிரமம் எனும் பெரியபொருளில் இருந்து ஆனந்தப் பொருளாக வெளிப்பட்டவனாகையால் சுப்பிரமணியன் எனப்படுவன். தேவர்களுக்கு முதல்வன் என்பதாலும், சுப்பிரமணியன் என்றாவன்: உயிரைத் தனக்கு உடம் பாகக் கொண்டுள்ள குகன் மனம் வாக்குக்கு எட்டாத பரம்பொருளாவன். சுவானு பூதியில் வெளிப்படும் அவனை மாவினை நீக்கும் சுப்பிரமணியின் எனவும் பொருந்தும். இப்படிச் சுவானுபூதியில் வெளிப்படுதலான் அவன் ஒப்பற்ற பிரமக்குழவியாவன். இம் மெய்ப் பொருளைக் காணாமல் வீடுபேறு கூடும் நெறி வாய்க் காது என ஆய்வாளர் கூறுவர். அழியாப் பொருளாயிருத்தலால் சத்து எனவும், அறிவுப் பொருளாயிருத்தலால் சித்து எனவும் அன்பினுக்கோர் வித்தாக இருத்தலால் ஆனந்தம் எனவும் விளங்குதலால் அவன் சச்சிதானந்தம் எனப்படுவன். ஆயுங்கால், ஒரு கட்டையில் நீளம், அகலம், கனம் எனும் மூவகை அளவுகள் இருந் தாலும் பொருள் ஒன் றாக இருப்பதுபோல், குணங்கள் மூன்றாக இருந்தாலும் பசும்பொருள் ஒன்றே என்பது புலப்படும்.

பரிதியும் அதன் கதிர்களும் போல் பரசத்தும் அதன் சித்தும் பிரிவின்றியிருக்கும். இந்த உண்மையில் குணி சத்ததாகும். அக்குணியில் விரியும் தன்மை உள்ளது சித்தாகும். அதுபோல் ஆனந்தம் அனாதியாக அவற்றுடனிருக்கும். இம்மூன்றும் இங்ஙன் பிரிவின்றியிருத்தலால் சச்சிதானந்தப் பொருள் செக்கர்வேளே என்றுணரலாம். குணகுணித் தன்மையைச் சத்துக்கும் சித்துக்கும் ஒப்பிட்ட பின்பு ஆனந்தம் அதில் எங்ஙன் அடங்கும் என்ற கேள்வி எழும். எவ்வாறடங்குமெனின் ஞாயிற்றின் ஒளியைச் சித்தென்றால், அவ்வொளியில் உள்ள சூடு ஆனந்தம் என்க. "ஆனந்தம் என்பது உண்டோ?" எனச் சிலர் வினவுவர். "இல்லது வாராது; உள்ளது போகாது" எனும் சற்காரிய வாதப்படிச் சுவானுபூதியில் நல்லோர்க்கு (ஞானிகள்) ஆனந்தம் அனுபவமாகும். மேலும் செக்கர் வேளுக்கு ஆகமம், வரம்பில் இன்பமுடைமை என்றொரு குணத்தைக் கூறுகின்றதையும் அறிக. இவ்வேதுக்களால் ஆனந்தம் சத்தையும் சித்தையும் அனாதியாய் நீங்காதிருக்கும் என்றும், வானிலும் மண்ணிலும் உயிர்கள் அனைத்தையும் பரவும் ஆனந்தம் யோகியர்க்கு அகத்தே விளையும் அனுபவமாகும் என்றும் கூறுவர்.

செக்கர்வேளுக்கு நிர்க்குணப் பிரமம் என்ற இயல்பும் உண்டு. நிர்க்குணமாவது, மாயை என்னும் முக்குணம் இல்லாமையே. இக்குணமன்றி, எட்டு அல்லது ஆறு குணங்கள் உண்டு. பகலவன் பொருள்களையெல்லாம் விளக்கும்போது கதிராகவே தன்னைக் காட்டிக் கொள்வன். அதுபோன்றே குற்றமில்லாத பரனும் வேறு நோக்குழிச் சித்தாகிய சத்திப் பெயர் கொள்வன். நோக்காத பொழுது பெருஞ்சத்திமானாக நிற்பன். உலகைப் படைப்போனை ஈன்றோனும், உலகைக் காப்போனுக்கும் அழிப்போனுக்கும் தலைவனும் செக்கர் வேளே; அவனே ஆனந்தப் பிரமம் எனப்படுவன் என மறைகள் அலறும். எவற்றையும் அழிப்பவனே எவற்றையும் தருவோன் ஆவன். ஆதலால் விரிஞ்சனுக்கும் மாலுக்கும் மேலோன் உருத்திரன் ஆவன். அவனும் கூம்பும் தேவவிலாஸத்துள்ளோன் செக்கர்வேள் ஒருவனேயாவன். உலகைப் படைத்த பிரமனுக்கும், காக்கும் திருமாலுக்கும் உலகை அழிக்கும் வல்லமை இல்லையோ? என வினவின், அவர்களுக்கு நெற்றிக்கண், கனல் முதலிய

வடிவங்கள் அமையவில்லை. அனைத்தையும் எரித்துச் சாம்பலாக்கும் இடம் மயானமே என்று அங்கு நடமிடுதலும், துறத்தலும் ஆகிய செயல்கள் அவர்களுக்கு இல்லை. ஆதலால் அழிக்குந் தொழில் உருத்திரனுக்கு மட்டுமே உரியது என மறைகள் கூறுகின்றன. பிரமனுக்கும் பீதாம்பரனுக்கும் அழிப்புச் செயல் இல்லை என்க. இதனால் செக்கர்வேள் மூவருக்கும் மேலோன் ஆவன். தத்துவ நாசமே சாயுச்சிய நிலையாகும். எத்திற உலகையும் நாசம் செய்யும் உருத்திரனும் தாழ்வுற உயர்ந்திருக்கும் வத்துச் செவ்வேளாகலின் முத்தியை விரும்பும் எல்லார்க்கும் முதல்வன் செவ்வேளே என்க. இத்தகைய முடிவில் உள்ள இறைவனை எண்ணாதவர் யாரும் தத்துவ நாசத்தில் அடையப்பெறும் முத்தியை அடையமாட்டார். மூவரோடும் சித்துடைய தேவரும் சீவர்களே ஆவர். மேலான கர்த்தனும் கடவுளும் செர்கர்வேளே என ஞானியர் அறிவர். உடலில் உயிர் பரவியிருப்பதுபோல் உலகம் என்னும் விசுவத்தில் பரவியிருப்பதால் அவன் விச்சுவன் ஆவன். பரவிய வெளிபோல் இருக்கும் பண்பினால் விசுவாதீதனும் ஆவன்.

உயிர் உடம்பு–உயிர் இறை

உயிர் தங்குவதற்கு உரிய பொருளாக விளங்குவது பருவுடல். அதுபோல் இறை தங்குவதற்கு உடம்பாக விளங்குவது உயிர். இருப்பினும் உடம்பில் கலந்திருக்கும் உயிர் உடம்பாகாது. உயிரில் கலந்திருக்கும் இறையும் உயிராகமாட்டார். உயிரும் இறை ஆகாது.

முத்தியில் உயிர்நிலை என்ன?

முத்தியில் உயிர் பராபரன் ஆவதில்லை. கடவுளுக்குச் சமம் ஆகும்; கடவுளாகாது. உலகைப் படைக்கும் வல்லமையும் இல்லை, எண்வகைச் சித்தி கைவந்தோரும். சில அற்புதங்கள் செய்வர். அண்டத்தைப் படைக்கமாட்டார். அவர் நிலை முத்தி பெற்றோர்க்குத் தாழ்ந்த நிலையே. சித்தி அடைந்தவர் படைத்த அண்டம் என்று சான்று காட்ட ஒன்றில்லை. அதைக் காட்டுதற்குக் கற்றோர் செய்த நூலுமின்றி எண்ணரிய அண்ட கோடிகளைச் செய்தவன் ஒருவனே என்று கூறாமல் படைத்தவர் பலர் என்றால் கடவுளரும் பலர் ஆவர் என்ற வாதமாக முடியும் என நடுநிலை உணர்ந்தோர் கூறுவர்.

வியாபகம், வியாத்தி, வியாப்பியம்

ஒன்றான தெய்வம் வியாபகப் பொருளாகும். அது காட்ட அறியும் நிலையில் உள்ள உயிர் வியாத்தியாகும். அதன் மலம் வியாப்பியமாகும். தெய்வம் பேரறிவுடையது. உயிர் அற்ப அறிவுடையது. அதன் மலம் அறிவிலாப் பொருளாகும் என்பது. உப்பு நீர் இருப்பதற்குரிய வெளியிடம் போலாய், வியாத்தி அவ்விடத்தில் தங்கும் உப்பு நீரைப் போன்ற நிலை. வியாப்பியம் அந்நீரில் கலந்துள்ள உப்புப் போன்ற நிலை. நீர், உப்பு, இடம் இம்மூன்றும் கடல என ஒரே பொருளாகி நின்றாற்போல் இறை உயிர் மலம் இம்மூன்றும் பிரமம் எனவே நிற்கும். எனினும் அவை தன்மையில் வேறு வேறாம். தளையும் வீடும் உயிர்க்குமட்டுமே; கடவுளுக்கு இல்லை.

அதிவிருத்தி, நூனவிருத்தி

(அதிவிருத்தி = வியாபகம். நூனவிருத்தி = வியாப்பியம்) உப்பும் நீரும் கலந்திருப்பதுபோல் ஆணவம் என்னும் பெயருடைய அஞ்ஞானமும் சீவபோதமும் கூடிநிற்றலை அதிவிருத்தியும் நூனவிருத்தியும் இல்லாத துல்லியமான வியாத்தி என்று கலைகளைத் தேர்ந்தவர் கூறுவர். சொன்ன வியாத்தி கேவலநிலையாம். ஆன்ம உளந்தனை விழுங்கும் ஆணவம் குறைந்து சற்றே விளங்குதல் சகலம் என்னும் விழிப்புறு நிலையாகும். இது வளர்ந்த நிலவின் ஒளியும் விழியின் நோக்கும் ஒக்கும்.

குருடன், ஞாயிறு

சோதியான செக்கர்வேள் எங்ஙனும் ஒளி வீசாநிற்க உயிர்களுக்கு அஞ்ஞான இருள் ஏன் பரவவேண்டும் என வினவின், ஞாயிற்றின் ஒளி குருடனுக்கு உதவாதது போல அஞ்ஞானம் உள்ளவர்ககும் சோதி தெரியாது. குருட்டுக் கண் வானத்திலுள்ள ஞாயிறின் ஒளியை நோக்காது. எதுபோலென்றால், ஆந்தை ஞாயிற்றைப் பார்க்காதது போல் என்க. பதிஞானம் பெறாது சிற்றறிவாய் நிற்பதே இக்குருட்டுத் தன்மை. பாசத்தை ஒழித்தலே விடுதலை பெறுதல்.

பெத்தர், சீவன் முத்தர், பரமுத்தர்

சகத்தையே பார்த்திருப்பவர் பெத்தர். இவர் இருளில் மட்டுமே சஞ்சரிக்கும் ஆந்தைக்கு ஒப்பாவர். சிவானுபூதி சார்ந்துள்ள பரமுத்தர் பகலில் சஞ்சரிக்கும் புறாவைப் போன்றவர். மாசிலா அகத்துடன் சகத்தையும் சிவத்தையும் காணும் சீவன் முத்தர் பகலிலும் இரவிலும் சஞ்சரிக்கும் பூனையைப் போன்றவர். இவ்வுவமைகள் இம்மூவகையினர் நிலைகளை விளக்கவந்தனவேயன்றித் தாழ்வு கூறவன்று.

உயிர்களும் தேவர்களும் அடிமை

ஆணவமலத்தாற் கட்டுண்டு கிடக்கும் உயிர்களை விடுதலை செய்யும் செக்கர்வேளுக்கு உயிர்களும் தேவர்களும் பிறரும் அடிமைகளே. கடல் நீரில் தட்பம் உள்ளது போல் உயிர் ஞானம் சமவாயமல்லால் சையோகம் இல்லை. கடல் நீருக்கு இயல்பில்லாத குற்றமான உப்பு இருப்பது போல் உயிர்க்கும் குற்றமான மலம் அனாதியாகவிருக்கும். அச்சமவாயம் தாதான்மியம் எனவாகும். அதனைச் சிறந்த நித்திய சம்பந்தம் என உரைத்தல் பொருந்தும். அஞ்ஞானம் நீங்கிய சையோகம் ஒன்றில் மற்றொன்று பொருந்தும் நிச்சயம் ஆம். இதற்கோர் நீங்கும் காலமும் உண்டு.

பகலவன் ஒளியை நோக்கும் பண்புடை விழியைப் போல இன்பவடிவினனாகிய சிவனது ஞானத்தால் துலங்கும் அறிவு உயிர்க்கு எப்போதும் விழிபோலப் போத சுதந்திரம் சாரும் தன்மையால் தெய்வம் அகமன விருத்திக்கெல்லாம் அதனை உட்படுத்தும் அந்த மனவிருத்தியே நன்றும் தீதுமான சொர்க்கம் நரகம் ஆகியவற்றை ஈயும். வியானனான ஆண்டவன் நீதி

செலுத்தும் அரசனைப்போலிருப்பன். தம் மனவிருத்தி நீத்தோர் நிலையான வீடு பேற்றை அடைவர். பகலவன் ஒளி சிவத்தின் செயல் ஒக்கும். அவ்வொளியால் பார்வை மிக்க கண் சீவரின் சொல் ஒக்கும். இதுவே மனவிருத்தி என்பது. சஞ்சிதம் பிராரத்தங்காளதலும் இதுவே. எவ்விதச் சார்பும் இல்லாத சிவச்செயல் என்பது இங்குக் கூறிய அளவில் நிகழும் நிறைவேயாகும். பகலவனால் பார்வை உண்டாகிய இருவர் வழியிற் செல்லுங்கால் ஒரு பக்கத்தில் தனது ஆடையைக் களையும் பெண்ணை ஒருவன் காதலுடன் பார்த்தான். மற்றொருவன் பார்க் கவே இல்லை. இவ்விருவர் செயலையும் பகலவன் செய்ய வில்லை. செய்யத்தூண்டவும் இல்லை. செய்தது அவர் தம் மனவிருத்தியே. இவ்வாறு செயல் இரண்டனையும் நன்கு தெளியவல்லார், "அன்னவன் ஆட்ட ஆடுகின்ற அசேதனமான சட்டத்திற்கு மனவிருத்தியின்மையால் இருவினைகளும் இல்லை. ஆள்வோனுக்கும் இல்லை; உயிர்க்கே உடைத்து என்பர். உயிர்ச் செயலடங்கி உள்ளம் மெய்ப்பொருள்பால் நிற்கவேண்டி யாவும் உயிர்க்குயிரான தெய்வச் செயல் என மனத்தில் நினைக என்று மெய்ந்நூல்கள் ஓதும். அவ்வுரை உடம்பைப் பொருந்திய குற்றமுள்ள உயிரின் செயல் இல்லை என்னும் பொருளை என்றும் தராது. உயிர்க்குயிர் என்னும் தேவும் உயிரும் பொருந்தி நிற்றல் சமவாய மன்று. அது பருவுடம்பும் நுண்ணுடம்பும் அல்லாத மூலத்தனுவும் (காரண உடம்பு) உயிரும் கலந்து நிற்கும் விந்தையான சையோகம் ஆகும்.

சையோக விளக்கம்

அரவின் கண்ணிற் காதும் விழியும் போலும், யானை யின் துதிக்கையில் கையும் மூக்கும் போலவும், வௌவால் மெய்யில் பறவையும் விலங்கும் போலவும், பேய் பிடித்த வனிடத்தில் பேயும் அவன் உயிரும் போலவும், சூரனும் பதுமனும் போலவும் ஒன்றெனவும் இரண்டெனவும் பிரித்துரைக்க இயலாமல் அதாவது இரண்டற்ற நிலை யில் சீவான்மாவும் பரமான்மாவும் கலந்து ஒன்றுபோலத் தோன்றுதலாம் என மறைகள் கூறுகின்றன. ஆதி அகண்ட தேவாம் அம் முதல் உயிர்க்கண் நில்லாது அன்னியப்படுமோ? ஆகாது என்க.

பெத்த கேவலத்திலே நெஞ்சும் இருளும் பிணை வுற்றாற்போல் முத்தி கேவலத்தே இன்பத்திற் கலந்த உயிர் அறிவு சிறந்து சுத்த அறிவிலே கூடுதல் துல்லிய வியாத்தியாம். (வியாத்தி எனும் இது வியாபகப் பொரு ளில் வியாபித்து அப்பொருளே எனப்படாமல் அதனை ஒத்த போலியாய் நிற்கும் ஓரியல்பு) உயிர் தன் கண்டிப்பு நீங்கிப் பேரறிவிற் கூடுதல் முப்புடி (திரிபுடி) (காண்பான், காட்சி, காட்சிப் பொருள்) இலாத ஐக்கிய என்பதல்லால் நீரொடு நீர் கலந்தாற்போல ஒன்றாகிவிடும் என்பார் உரை பொருந்தாது. ஏனெனில், இறைவன் பெத்ததசை யிலும் உயிரைப் பிரியாது நிறைந்திருப்பானா கலின். இச் சையோகம் சையோகம் அல்லாத முன் நிலையினையும் தருவுதலால் மறைந்து வியந்து கூறும் அத்துவிதமாகும். அத்துவிதம் என்பதன் பொருள் ஒன்றுமன்று இரண்டு மன்று, எனவாம். அத்தவிதம் வழிகளும் மூன்று வகையாம். ஆதியில் அனாதியாம் பெத்தாத்துவிதம், அண்ணல் திருவடியை உபாசிப்பான் கொள்ளுகின்ற பாவனாத்து விதம், கடவுளைக் காணலுக்கு ஏற்ற அன்பினால் பொருந்தும் சுத்தாத்துவிதம் எனும் மூன்றுமே இம் மூன்று வகையாம்.

இருந்தது எங்குப் போயிற்று? இருந்தது எப்போதும் இருக்குமன்றோ? அதனால் ஆன்மா பாச நீக்கத்தின் பின்பும் உளதாகும் என்பதாலும், அனுபூதிக்கண் ஒருமையே விளங்குதலானும் பொருந்துதல் ஒன்றா? அல்லது இரண்டா? பற்றிக் கொள்ளும் நிலையும் அன்றே.

தட்சிணாமூர்த்தி

அரன் கல்லாலின் கீழ் அத்துவிதம் என்று உரைத்தானில்லை. ஏகம், துவிதம் என்றும் கூறவில்லை. 'மோன முத்திரையில் கண்டு கொள்க! என மௌனமாக இருந்தான் ஆதலால் உண்மை அறிய விழைவோர் மோன நிலையில் முடிவுள்ளது என்றறிவர். மோனத்தை விட்டால் வாதம் முளைத்திடும். அவ்வாறு முளைக்கா வண்ணம் ஞானத்தைத் தியான யோகத்தால் அடைவர் என ஞானி உரைத்தனன். உணராதார் தெளிந்த மௌனத்தை அறியார். வானத்தன் எழும் தன்மையும் பிரிக்கொணாத மௌனநிலைக்கண் பொருந்துவதே.

குற்றமில்லாத சிவமே காண்பவன் தனக்குமுன் வேறு பொருளைக் காணான். ஆவி, உடம்பில்லாதிருக்காது. அதுபோல் நோவில்லாச் சிவமும் தனித்திருக்காது. இவ்வுண்மை உணர்ந்த அறிஞர் உயிர் இவனைச் சாரும் முறை இஃதே என்று அளவையுட்படுத்து உரைப்பரோ? உரையார் என்க. ஒன்று எனவும் இரண்டு எனவும், இரண்டும் விரவியது எனவும் கூறுவாருள் எவர்தம் ஞானத்தால் இவை இன்று நடக்கும் நாளை இவை நிகழ்ந்திடும் எனப் பூமியின் மேல் நூல்கள் எழுதிவைத் துள்ளார்? எனவே அவர் உண்மை உணர்ந்து கூறினார் அல்லர் என்க. இத்திற ஒளிமையில் நாம் பரப்பிரமம் எனும் புத்திகள் பெரிதும் நாணவேண்டும். ஒப்பில்லாத வத்துவைத் தரிசித்தவர்க்கும் பூலோக முடிவுகள், நடகத்தக்க அரசாட்சிகள், முதலிய வருங்கால பலனைச் சொல்லும் வலிமை இல்லை. உலகத்திற்கு இதமாகப் பலமறைகளுக்கும் யுத்தி வாதமாய்ச் சூத்திர அருத்தம் பண்ணியவர் அவற்றை ஆராயும் கலைஞர் கட்குச் சந்தேகம் வராவகையில் ஞானம் நிறைந்திருக்கச் சொல்லும் உயர்வு பெற்றாரில்லை. அதனால் என் (அடிகள்) கருத்து நிலைபேறுடையதே.

பெரிதினில் பெரிதாய்ச் சிறிதினில் சிறிதாய், அரிதினில் அரிதாய், ஊர், பேர், பொருந்தாததாய், பிறப்பு, இறப்பு, வேட்கை, திரியுரு, ஆண், பெண், நிறமிலதாய், தூயதாய், அன்பர்க்கு இன்பாய் நிற்கும் நிறைதெய்வம். அஃதே சுப்பிரமணியம் ஆகும். இம் முதலைவிட்டு வேறு தெய்வத்தைப்பற்றி உழல்வார்க்கு முத்தி இல்லை என்க.

செக்கர்வேளின் பொது இயல்பு—தடத்த சம்பந்த வாரம்

தன்னையே நோக்கி நிற்கும் பரம்பொருள் அந்நிலையி னின்று நீங்கி உலகத்தை நோக்கும்போது அதன் சிறப்பி

யல்களுள் ஒன்றான பேரருளுடைமை காரணமாக உயிர்களை உய்வித்தற்பொருட்டுத் தனது சக்தியைக் கொண்டு பலநிலைகளை உடையதாக விளங்கும். அந்நிலைகள் அனைத்தும் பதிக்குப் பொதுவியல்பாகும். இவ்வியல்பையே தடத்தலக்கணம் என்பர். தடத்தமானது 'அயலில் உள்ளது' என்று பொருள். பதியின் இத்தகைய பல நிலைகளும் அதன் எண் குணங்களுள் ஒன்றான பேராற்றலால் வருவனவேயாம். ஆதலால் பொது வியல்பு சத்தியினால் வருவது என்றறிக. சொரூபநிலை எனும் தன்னியல்பில் சிவம் எனவும், தடத்தம் எனும் பொது வியல்பில் சத்தி எனவும் பெயர்பெறும். சொரூபநிலையில் சத்தி வெளிப்படாது, சிவத்துள் அடங்கியிருக்கும்; அதனால் சிவம் ஒன்றே ஆக இருக்கும். தடத்தநிலையில் சத்தி தொழிற்படுதலால் அதனுடன் இயைந்து சிவமும் தொழிற்படும். அதனால் சிவமும் சத்தியுமாக இரண்டாக நிற்கும்.

தடத்தநிலையில் பதிக்குப் பல உருவங்களும், பல பெயர்களும், பலதொழில்களும் உண்டு. இவை அனைத்தும் உண்மையே, வெறும் கற்பனை அன்று. தன்னியல்பு போல் பொதுவியல்பும் சிவத்திற்கு உண்மை நிலையேயாம்.

சொற்றஉன் மையினையேக சொருபமென் றுரைப்பார் மேனி
பெற்றது பிறிது சார்ந்து பிறங்கலிற் றடத்தம் என்பார்
குற்றமில் கலைஞர் வேறாய்க் குயிலிடத் ததுவெ னர்த்தம்
பற்றிடுந் தடத்த மி.:.தே பலவுருப் பொதுவா மென்பார்.

எனச் செம்மாப்பு விளக்கம் கூறும்.

உருவம்

அறிவு கூறும் வேதம் சாயுச்சியத்தோடு சாலோகம் என்னும் மூன்றையும் கூறுவதில் உருவம் உண்டலலவா? ஆதலால் இறைவர்க்கு உருவம் இல்லை என்பது பொய்யாகும். எச்சமயத்தினரும் குருவின் உருவை நீத்ததில்லை அன்றோ? முதுமறை புகழும் ஆறுமுகவொளி மண்டலங்களும், செந்தாமரை மலராகிய திருவடிகள் இரண்டும், பன்னிரு தோள்களும், நுதற்கண்களோடு பதினெட்டுக் கண்களும் கொண்ட அழகிய வடிவாய்ச் செக்கர்வேள் இலங்கும் என்க. இவ்வுருவத்தில் சூரபன்மன் அண்ட முதலிய எல்லாமே இருப்பதைக் கண்டான். தேவர்கள் இவ்வுருவில், முழங்கால் அளவே கண்டனர் என்றால் அதன் பெருமையை எங்ஙனம் விளக்க இயலும்?

ஓங்காரம்

தூல சூக்குமங்களாகச் சொல்லப் பெறும் உருவங்கள் அனைத்திற்கும் மூலமாகவும் பெரிதாகவும் முதன்மையாகவும் இருத்தலாலும் முருகன் என்னும் அழகாலும், தியானிப் பார்க்குக் குழந்தையாக்கை உடையனாகவும் வேலனாகவும் திகழ்வதாலும் அவன் திருமேனி ஓங்கார வடிவமாகும். "பிரான் திருமேனி தூய பிரணவம்" (106) என்க.

நாகபடம்

ஒரே உருவில் பாரமேசுவர வடிவமும், சிறு உருவமும், அன்பர்க்குக் கருணையும் பகைவர்க்குக் கோபமும் கொண்டிருத்தல், நாகபடம் விரிதலையும் ஒடுங்குதலையும் ஒக்கும். பிரணவத்தின் கலைகள் உருவம் கொள்வது அனக சிற்சத்தியாதலால் அது மனத்திற்கும் உரைக்கும் எட்டாத தடத்தமேனி (குகன்) கொண்டது. சேய்மையிலிருந்து படத்தை விரிக்கும் ஒரு பாம்பு போன்றதோர் செயலேயாம்.

வித்தில் மரம்

வித்தினுள் மரம் இருத்தல்போல் இச்சிறு வடிவில் எல்லா அண்டங்களும் அடங்கியுள்ளன. இச்சித்துரு அனந்த ரூபம் திகழ வைப்பாய் நிற்கும்.

சிவம் சத்தி

குணியை நீங்காத குணம் எனும் ஞானசத்தி மணியும் ஒளியும் போலிருக்கும். பலமணியை ஒரு நூலிற் கோத்தாற்போல் சத்தியின் பலவடிவங்களுக்கும் சிவம் எனும் ஓர் ஆதாரமே நிலவுவது.

ஆறுமுகம்

ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்யோசாதம், அதோமுகம் (குடிலை) எனத் திருமுகங்கள் ஆறாகும். ஐந்து திருமுகங்கள் சிவனுக்குரியன. சத்தியின் திருமுகமான அதோ முகமும் சேர்ந்து ஆறாயின. ஆதலால் அதோமுகத்தை ஞானமாகவும் சத்தியாகவும் கூறல் பொருந்தும். அவை ஒவ்வொன்றின் தொழிலாவது, சத்தியோசாதம் எல்லாச் சகத்தையும் படைத்தல்; வாமம் அத்தராதலங்களைக் காத்தல்; அகோரம் அவற்றை அழித்தல்; அறிவுமிகுந்த தற்புருடம் மறைத்தல்; ஈசானம் முத்தி வீடருளல் என்க. அதோமுகம் எனும் குடிலை ஐந்தனுக்கும் மூலமாய் இருக்கும்.

நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி ஆகிய நான்கும் உருவம், சாந்தியாதீத கலை அருவுருவம், குடிலை அருவம் எனக் கொள்க. ஆகையால் முன்னர் இல்லாது பின்னர்த் தோன்றியது என்றோ, சூரனை மடிக்கத் தோன்றியவன் என்றோ கூறுதல் பிழையாம். 'அமிசம்' என்ற கருத்தும் பொருந்தாது. "ஐந்து முகமூர்த்தி ஆறுமுகம் கொண்டது அருள் மறத்தொழில் அஃதென்பார்" (114) என அடிகள் கூறுவர். "இம் மறத்தருளைப் புத்தர் இகழ்வர் என்றால், அவர் கொல்வோரையும் கொல்லவரும் புலிகளையும் பைங்கூழை அரிக்கும் பூச்சித் தொகுதிகளையும் காத்து மக்கள் இனத்தை வருத்துவரோ? எனக் கேள்வி கேட்கலாம்," என்பர் அடிகள். அரசு துட்டருக்குத் தண்டனையும் சிட்டருக்கு இன்பும் அளித்துக் காப்பது அரச நீதியாகும். இதனை அறியாதார் இரகசியமான தேவநீதியை உணர்வாரோ? தேவநீதியிலே சொர்க்கம் நரகம் உண்டு. தேவராகாத மாந்தர் சேர்வது நரகமே. தேவர் ஊழ் இழிந்த பிராணியாகப் பிறத்தலின்று, இவ்வாறெல்லாம் தேவர் அறிவர். இதற்கு மாறாகப் புத்தர் கூறுவதென்னை?

வாய்நீர்

இப்பிறவியிலே நாம் காணும் இன்பத் துன்பங்களே சொர்க்கமும் நரகமும் ஆகும். அவைதனியாக வேற்றில்லை என்று சிலர் கூறுவர். அவர் கூற்றை "நும் வாய் நீர் தான் நீர் வேறு நீர் இல்லை" என்பதற்கு ஒப்பிடுவர் அண்ட ஒழுங்கினை உணர்ந்தவர்.

பிரணவமே பெரிய சொர்க்கம்

பிரணவமே பெரிய சொர்க்கம். பிரணவ சுத்தமாயை உன் மனை உலகத்தின் ஆகாயத்திற்கு மேலானது சோமலோகம். அதைத்தான் இறப்பும் பிறப்பும் இல்லார் வாழும் சிவலோகம் என்பர். இச்சிவலோகம் தூல சூக்குமம் எனப் பெயர் பெற்றுள்ள பகுதிகட்கும் பெரி தென்றும், பரம் எனும் பெயர் பெற்றுள்ளதன் உச்சியில் உள்ளதென்றும் கூறுவர். அப்பரப் பகுதியில் உன்மனை உலகத்திற்கு மேலே கூறுமாறு கலை ஒன்றில்லை. ஆதலால் சிவலோகத்திற்கு ஒப்பும் உயர்வுமான ஒன்றில்லை என உணர்வோர் குகனுக்கு அப்பெருநிலை இல்லார்? கீழ்நிலை கூறார்.

வேற்படையும், ஏனைய பதினோரு படைக்கலங்களும்

செக்கர்வேள் பரம் எனும் சத்தியைப் படைக் கலத்து அரசாக ஏந்தும். ஏகாதச ருத்திரர் பதினோரு பேரையும் படைக்கலங்களாக ஏந்தும்.

மூவிலைச் சூலம்

இச்சை, ஞானம், கிரியை எனும் முத்தலைச் சூல மாகச் சிவனிடம் நிற்கும் சூலமே ஒன்றாய்ப் பிளப்பின்றி நிச்சயசத்தியாய் வேற்படையில் நிற்கும். அதனால் வேற் படை வலிது.

ஆறுமுகமும் ஒரு முகம்

முத்தலையும் ஒன்றாய்ச் சேர்ந்து வலிமையான வேற் படையாகத் திகழ்வதுபோல் ஆறுமுகமும் ஒன்றாய்த் திரண்டு விளங்குவது பூரணன் என்று உணர்வோர் மகாதேசோ மண்டலத்தாராய்ச் சுடர்வர்.

சீவன் முத்திதசையில் அறிஞரைப் போற்றித் துன்பம் இல்லாதிருந்து குறைவிலாத அறிவாய் நிற்கும் அழிவில் லாத கிரியை, இச்சை, ஞானம் என்பவற்றிற்கு ஈசனு டைய இச்சை ஞானம் கிரியை ஆதாரமாகும். இந்த ஆதார சத்தி இறைகரம் ஏறிற்றென்றால் இந்த வேற்படையின் வலிமையை யாரே அளக்கவல்லார்? அதனாலன்றோ எந்தை ஏவியவாறெல்லாம் செய்து முடித்துச் சூரன் படைக்கலங்களை விழுங்கவும் மாய்க்கவும் வல்லதாய் விளங்கிற்று! இவ்வேற்படை ஏனைய தேவர்கள் படைக்கலங்களுக்கெல்லாம் மேலானதாகும். இதனுடன் விலங்கு, எழில் முருகனைத் தொழிலே சிறப்பாம்.

வேலினது சூக்குமப் பொருள்

'வேல்தான் நீள் இருள் அழிவுணர்த்தும்' என்பதால் அனாதிமலமான ஆணவமலத்தை அழிக்கவல்லது வேற் படையே.

பதினொரு படைக்கலங்களும் அவற்றின் சூக்குமப் பொருளும்.

தோமரம்	:	தூய மாயையில் சுத்ததத்துவங்கள் தோன்றுமாறு அங்குத் தனது பெருமை விளங்கச் செல்லும் ஒப்பற்ற வளப்பத்தை உணர்த்தும்.
வாள்	:	தூய வாட்படை பிணிக்கும் சாவுக்கும் உறைவிடமான பிறப்பின் வேரை அறுத் தலை உணர்த்தும்
தாமரை	:	விரிந்து கூம்பும் எல்லா உலகங்களும் இப்பெருமானது உடைமைகளே என்பதை உணர்த்தும்
ஈட்டி வச்சிரம்	:	இப்பெருமான் பிறவிப்பிணியை அழிக்கும் வெற்றியைத் தருவர் என்பதும் இவர் பிறரால் அழிக்கப்படாதவர் என்பதும் உணர்த்தும்.
வில்லும் அம்பும்	:	அகங்காரமாகிய ஆணவ மல வளர்ச்சியை அழிக்கும் வலிமையை உணர்த்தும்.
தோட்டி	:	சத்துவம், இராசதம், தாமதம் ஆகிய முக்குணங்களைச் செலுத்துதலைக் காட்டும்.
பரசு	:	எல்லாத் தத்துவங்களையும் நாசம் செய்யும் ஞானவொளியாகிய பராசத்தி இவ்விறைவனின் உரனில் நிற்பவள் என்பதைக் காட்டும்.
தோகை	:	பிரணவத்தின் ஊர்த்துவமாயைக்குத் தலைவராகிய இப்பெருமானிடத்தேயே எல்லா உலக வெற்றிப்பாடும் உளதாகும் என்பதைக் கொடி உணர்த்தும். மேலும் உலக இன்பத்தையும் ஞான ஆனந்தத் தையும் விழைவோர் இப்பெருமான் மாட்டு வருக! எனவும் கூவி அழைக்கும். வேறு வேறு எவர்க்கும் கொடி வேறு ஊர்தி வேறாக இருப்பதில்லை என்பதையும் உணர்த்தும்.
மயிலூர்தி	:	பிரணவத்தின் செறிந்த பிரகிருதியின் அதோமாயை என்பதனை உணர்த்தும்,
படைத்தல்	:	திருக்கையிலுள்ள கண்டையும் உடுக்கை யும் திருவடிச்சிலம்பும் படைத்தலையும், உணர்த்தும். இம்மூன்றினின்றும் தூய

மந்திரம், எழுத்து என்பவற்றைப் படைக்கும் பரநாதத்தின் மூலம் படைத்தல் நிகழும் என்க. திருவடிகளை இந்நாதம் தாங்கும் என்க.

அணிமுடி : அழகிய திருமுடி, மதாணி, முதலிய அணிகளும், உடையும் சேயைப் பணிதலால் உண்டாகும் செல்வத்தை உணர்த்தும். கடப்பமாலை முதலியன அளவற்ற தூய்மையைக் காட்டும்.

தோள் : மலத்தின் வலிமையை அழிக்கும் வேற்படை கொண்ட இறைவனின் படைக்கலங்கள் தாங்காத வலத் திருக்கை அபயம் காட்டும். இடத்திருக்கை வரதக் குறிகாட்டும்.

மலைகள் : கயிலை, மாகயிலை, மந்தரமலை, பொன் மேரு, சக்கரவாளம், ஆகியமலைகளிலும் கயிலையைச் சார்ந்துள்ள கந்தமாதனத்தும் எழுந்தருளிச் செக்கர்வேள் அருளாட்சி செய்தருளுவன்.

தெய்வயானை, வள்ளி : செக்கர்வேளுக்குத் தெய்வயானை, வள்ளி என இருதேவியர் உண்டு. அவர்கள் எக்கலைக்கும் எச்செல்வத்திற்கும் தெய்வமாவர். தெய்வயானை அமுதவல்லி என்பதாலும், வள்ளி சுந்தரவல்லி என்பதாலும் இவரை வல்லி என்றனர். இவர்கள் உண்மையில் பல உலகங்களையும் ஈன்ற பராபரையாவர். சரியை என்பது கிரியையில் அடங்கும். வள்ளியம்மையார் மண்ணுலகத்தில் தோன்றியதால் கிரியாசத்தியாவர். இவர் நிறம் பசுமை. இவர் இம்மை இன்பம் ஈவர். அறுமுகன் வலத்தில் இவர் இருப்பார். தெய்வயானையார் விண்ணுலகில் தோன்றியதால் ஞானசத்தியாவர். யோகம் ஞானத்தில் அடங்கும். இவர் நிறம் பொன்மை. இவர் வீடு பேற்றை அளிப்பார். அறுமுகனின் இடப் பக்கத்து இருப்பர்.

வள்ளியம்மையை இச்சா சத்தி என்றும் தெய்வயானையைக் கிரியாசத்தி என்றும் சில நூல்கள் கூறுவது பிழையாகும்.

வீடுபேறு : செங்கைவேல் இறை எண்ணாது செய்யும் பிற தேவர் பூசை அங்கையார் தேன் கவிழ்த்துப் புறங்கையை நக்குதல் போலாகும். திங்கள், ஞாயிறு, வானம் ஆகியவற்றில் செக்கர்வேளின் உருப்பாவித்தல் மங்களமாயினும் நேரே வணங்கினால் பிறப்பறும். உயிர்கள் வேண்டுகின்ற பிறப்பில்லாத விடுதலை செய்தருளுதற்கு ஆண்டவன் கொண்ட மூர்த்தம் அருள் முருகன் மூர்த்தமே. அப்பெருமான் திருநோக்கத்தாலும், திருமொழியாலும், திருக்கூத்தாலும், தீண்டலாலும், வேண்டுநர்க்கு வேண்டுவன ஈவார். குற்றம் புரிவோர் மனம் நன்மையை விரும்பாது. அதுபோல் உயிர்க்கு உறுதி தேடாத உள்ளம் குகப்பெருமானைத் தேடாது. துயரைக் கடக்கும் கற்புடைய மாதரைப் போல் விடுதலை விரும்புவோர் செவ்வேள் ஒருவனையே வழிபடுவர்.

மகாதேசோ மண்டலத்தார்

"அறுமுகன் அருள் ஒன்றனையே விரும்பி எத்துன்பம் வரினும் அதில் உறுதியாக நிற்போர் எப்பதியில் தோன்றினாலும், எங்கு வாழ்ந்தாலும், எச்சாதியானாலும் அவர் மகாதேசோமண்டலத்தாரய்க் களிப்பர் என்பர் அடிகள்.

தமிழ்வட மொழியின் ஞான சாகரம் பிறந்தென் காட்சி
இமிழ்திற னிருந்து வைராக் கியத்திடை வளர்ந்து பேரின்பு
உமிழ்ஒரு செக்கர் வேள்செம்மாப்பென உலாம் அ..து ஓதும்
அமிழ்தர்கள் உலகுஇன் போடார் அருணிலை அனைந்தும் வாழ்வார்.

திருச்சிற்றம்பலம்

நான்கு உறுதிப் பொருள்களையடைய வள்ளலார் காட்டும் ஒழுக்கங்கள் நான்காகும். அவை:

உறுதிப் பொருட்கள்	ஒழுக்கங்கள்
1. ஏம சித்தி	1. இந்திரிய ஒழுக்கம்
2. சாகாக் கல்வி	2. கரண ஒழுக்கம்
3. தத்துவ நிக்கிரகம் செய்தல்	3. ஜீவ ஒழுக்கம்
4. கடவுளை உணர்ந்து அம்மயமாதல்	4. ஆன்ம ஒழுக்கம்

தொகுப்பு செல்வி.மோ.யுவராணி
சென்னை-39



வள்ளுவர் வழியில் வினை

(புலவர். இரா. இளங்குமரன்)

திருக்குறளில் ஆள்வினை உடைமை (62), தீவினை அச்சம் (21), தெரிந்து வினையாடல் (52), வினை செயல்கை (68), வினைத்திட்பம் (67), வினைத்தூய்மை (66) என ஆறு அதிகாரங்களின் தலைப்புகளில் 'வினை' என்னும் சொல் இடம் பெற்றுள.

திருக்குறள் சொல்லடைவின்படி 'வினை' எனனும் சொல் அறுபது (60) இடங்களில் இடம் பெற்றுள. இவ்வதிகாரத் தலைப்புகளின் வழியும், இச் சொற்களின் வழியும் திருவள்ளுவர் வினை என்பதை எப்பொருள்களில் ஆள்கிறார் என்பதை ஆய்வதே இவ்வாய்வுக் கட்டுரையாகும்.

த்வினை அச்சத்தில் தீய செயல் என்னும் பொருளில் மூன்று இடங்களில் இடம் பெற்றதை அன்றிப் பழவினை, முன் வினை, பின் வினை, செய்வினை என்பன போலச் சமயநூல்கள் கூறும் வினைகள் இடம் பெற்றில.

நல்வினை என்பதும் நல்ல செயல் என்னும் பொருளிலேயே வந்துள்ளது (335).

செய்வினை இடம் பெற்றுள்ள இடங்களில் 'செய்யும் செயல்' என்னும் பொருளிலேயே வந்துள்ளது (455, 463, 653, 677)

சமயச் சான்றோர் கொள்ளும் வினைக் கொள்கைகள் வள்ளுவத்தொடு பொருந்தியுள்ளனவா என்பதைத் தெளிதல் வேண்டும்.

வினை என்பது செயல், தொழில், என்னும் பொருளது. வினையைக் குறிக்கும் சொல் வினைச் சொல். அதனை இலக்கண நூல்கள் விரியக் கூறுகின்றன. அப்பொருள் விளக்கத்திற்கும், சமய நூல்கள் கூறும் பொருள் விளக்கத்திற்கும் ஒன்றுபடுநிலை 'வினை' என்னும் சொல்லளவே.

'அறநூல்' என்னும் பெயரும் வாழ்வியல் நூல் என்னும் வழக்கும் உடைய திருக்குறளில் ஆளப்படும் வினைகள் அனைத்துமே செயல் என்னும் பொருள் பற்றியே உள்ளன.

சமயஞ்சாராத நூல் வள்ளுவர் நூல் எனச் சைவக் கல்லாடரே தெளிவாகக் கூறியபின்னரும், சமயச் சார்பில் உரை காணல் வள்ளுவ நெறியொடு பொருந்தியது ஆகாது என்பது வெளிப்படை.

பழந்தமிழ் நூல்களில் செய்வினை, நல்வினை, தீவினை, என்பன இல்லையோ எனின், உண்டு என்பது உண்மையே. அவற்றில் உண்டு என்பதால் வள்ளுவர்க்கும் அவற்றில் உடன்பாடு உண்டு என்று முடிபுரைப்பது எப்படிப் பொருந்தும்?

ஒருகால எல்லையில் ஒருவர் வாழ்கிறார். அவர் வாழும் காலக் கருத்துகள் எல்லாமும் அவர்க்கு உடன்பாடானவை என்று உறுதிப்படுத்திவிட முடியுமா? கால வழக்குக்கடந்து பார்க்கும் திறம் உடையவர் இலரா? அத்தகு திறத்தர் இலரேல், தூக்கணங்குருவி கூடு கட்டுவது போலவும், கறையான் புற்றெடுப்பது போலவும், சிலந்தி விலை பின்னுவது போலவும் நிலை மாற்றம் இல்லாமல் இற்றைக் காலம் வரை உலகியல் இருந்திருக்கும். உள்ளது சிறத்தல் என்பதற்குப் பொருளே இல்லாமல் போகியிருக்குமே!

சங்கத்தார் காலத்தில் சான்றோர் என்பவராலும் கொள்ளப்பட்ட மதுவும் ஊனும் வள்ளுவரால் கடியப்பட்டனவே.

பரத்தமை வெறுக்கப்பட்டதே.

இப்பார்வை, காலமும் கருத்தும் வென்ற பார்வை அல்லவோ!

வள்ளுவர் கண்ட ஒப்புரவு, அந்நாள் எல்லையில் உலகங்கண்டதா? அவ்விரி பார்வையரைக் கால எல்லைக்குள்ளும் இட எல்லைக்குள்ளும் பொருள் எல்லைக்குள்ளும் அடக்குதல் முறைமை அன்றாம்.

ஒருவன் படும் இன்பத்துக்கும், துன்பத்துக்கும், வளமைக்கும், வறுமைக்கும் அவன் 'தலைவிதி' எனப்படும் செய்வினையே அடிப்படை என வள்ளுவர் கூறுகிறாரா எங்காவது?

அவர் கூறாததை அவர் கூறியதாக உரைகாரர் கூறுவர் எனின், வள்ளுவர் பொருள் புலப்பாடுறக் கூறத் திறமிலராய் மயங்கக் கூறினார் என்னும் குற்றப்பாட்டை அல்லவோ அவர்மேல் சூட்ட வைக்கும்?

மனந்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனந்தூய்மை தூவா வரும (455)

இதில்வரும் 'செய்வினை என்பது செய்யும் செயல்தானே. மனத் தூய்மையும் செய்யும் செயல் தூய்மையும் ஆகிய இரண்டும் ஒருவன் சேர்ந்த இனத்தின் தூய்மை தருதலால் வருவதாம் என்பது தானே இதன் பொருள். இதில் விதி ஏது?

''ஆக்கம் கருதி முதலிழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார்'' - (463)

ஆகின்ற நன்மையை எண்ணி இருக்கும் முதலையும் இழந்துவிடும் செயலை அறிவுடையவர் செய்யமாட்டார் என்பதுதானே இக்குறளின் பொருள். இதில் விதி உண்டா?

''ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
ஆஅதும் என்னும் அவர்'' - (653)

என்பதில் வரும் செய்வினைக்குத் தலைவிதிப் பொருள் உண்டா?

மேனிலை அடைய வேண்டும் என்று விரும்புபவர் புகழைக் கெடுக்கும் செயல்களைவிட்டு நீங்குதல் வேண்டும் என்னும் இதில் விதிப் பொருள் இல்லையே!

''செய்வினை செய்வான் செயல்முறை அவ்வினை
உள்ளறிவான் உள்ளம் கொளல்'' (677)

என்பதில் வரும் செய்வினை விதிப் பொருளதா?

ஒரு செயலைச் செய்ய விரும்புவானது செயல்முறையாவது அச்செயல் நுணுக்கங்களை அறிந்தான் ஒருவனது கருத்தை அறிந்து கொள்ளுதல் ஆகும் என்னும் இதன் பொருளில் தலைவிதி தலை காட்ட இடமில்லையே.

இனி நல்வினை, நன்றிபயவாவினை, நன்றாகா வினை, இன்பம் பயக்கும் வினை என்றெல்லாம் திருக்குறளில் வருகின்ற

னவே. அவற்றுக்கும் வினைக்கும் (விதிக்கும்) தொடர்பு இல்லையா?

''நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும் - (335).

என்னும் 'நிலையாமை'க் குறிப்புக் குறளில் சொல்லப்படும் நல் வினை இரு வினையுள் ஒன்றா? இல்லையே!

நாவு உள்ளிருக்கும்; விக்கல் மேலே எழும்பும்; அக்காலம், இறுதிக் காலம்; அக்காலம் செய்து கொள்ளலாம் என்றால், அவ்வி முத்தலுக்கும் எழுப்புதலுக்குமே பாடாக இருக்கும் அவ்வேளையில், எதுவும் செய்தல் இயலாது. திடமும், தெம்பும் தெளிவும் இருக்கும் போதே நல்ல செயல்களைச் செய்துவிடு; தள்ளிப்போட்டுக் கொண்டு போனால், காலம் உன்னைத் தள்ளிப்போட்டு விடும்; நிலையாமையை உணர்ந்து நிலைப்பன செய் என ஏவுகிறார். இதில் வினை அச்சுறுத்தல் எங்கே உள்ளது?

குற்றங்கடிதலில்,

''வியவற்க எஞ்ஞான்றும் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை'' - (439)

என்கிறார்.

தற்பெருமை கொள்ளாதே; நன்மை தாராத செயல்களைச் செய்ய விரும்பாதே; இவை குற்றமானவை. இவற்றை விட்டு ஒழி என்கிறார். இஃது அறம் கூறும் செயல் கொள்கையா? சமயம் சொல் லும் வினைக் கொள்கையா?

''மனம் தூயார்க்கு எச்சம்நன் றாகும் இனம்தூயார்க்கு
இல்லைநன் றாகா வினை'' - (456)

என்பது சிற்றினம் சேராமை குறிக்கும் குறள்.

மனத் தூய்மை உடையவர்க்கு அவர் வைத்துச் செல்லும் புகழ் பொருள் மக்கள் முதலியனவும் நல்லனவாக அமையும். அதுபோல் சேர்ந்த இனத்தூய்மையும் உடையவர்க்கு நன்மைதாராத செயல் என எதுவும் இல்லை. எல்லாமும் நல்லனவாம் என்னும் இதில் விதிக் கொள்கை உண்டா?

''என்றும் ஒருஉதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை'' - (652)

எனனும் வினைத் தூய்மைக்குறள், ''நிறைந்த புகழும் நீடித்த நலமும் தாராத செயலை எவரும் எக்காலத்தும் செய்யாமல் கட்டாயமாக விலக்கி விட வேண்டும்'' என்கிறது. இதிலும் வினைக் கொள்கை இல்லையே.

''துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை''

என்னும் வினைத்திட்பக் குறளும் இன்பந்தரும் செயல் என்பதையே குறிப்பிடுகிறது.

இனித் **தீவினை** என்பதும் திருக்குறளில் இடம் பெறாமல் இல்லை. அதிகாரம் ஒன்றன் பெயரே. **'தீவினை அச்சம்'** என்பது. அது. தீய செயல்களைச் செய்ய அஞ்சுதல் என்னும் பொருளதே. **தீய, தீயவை, தீப்பால** என அதில் வருவன போலத் தீவினை என்பதும் வருகின்றது.

''தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்
தீவினை என்னும் செருக்கு''

''தன்னைத்தான் காதலன் ஆயின் எனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப் பால்''

''அருங்கேடன் என்ப தறிக மருங்கோடித்
தீவினை செய்யான் எனின்''

எனவரும் மூக்குறள்களிலும் (201, 209, 210) இடம் பெற்றுள்ள தீவினை 'தீய செயல்' என்னும் பொருளவே.

இந்நல்வினை தீவினை என்பவை நல்லினம் தீயினம் (460) என்பன போல வந்தவையே.

இவ்வாறே **அறவினை, பிறவினை** (321) எனவும், **ஆள் வினை நீள்வினை** (1022) எனவும் வருவன அறச்செயல், அறமல் லாச் செயல் என்பவற்றையும், முயற்சி தொடர் முயற்சி என்பன வற்றையுமே குறிப்பனவாம்.

''அருவினை என்ப உளவோ கருவியான்
காலம் அறிந்து செயின்'' - (483)

என்றும்,

''கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்ட தமைச்சு'' - (631)

என்றும், வரும் இடங்களில் உள்ள அருவினை செய்தற்கு அரிய செயல்' என்னும் பொருளையன்றித் தீர்த்தற்கு இயலாதவினை என்னும் பொருள் தாராவே. செயற்கு அரியசெயல் என்னும் வள்ளு வப் பொருளே அருவினை என்பதன் பொருளுமாம்.

அஞ்சும் வினை என்கிறாரே வள்ளுவர். அது சமயங்கூறும் அச்சுறுத்தும் வினையா?

''மன்னுயிர் ஓம்பி அருளாள்வார்க்கு இல்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை'' - (244)

என்பதில் வரும் அஞ்சும் வினையை அருளால் வார்மேல் சூட்டச் சமயச் சால்புடையார் துணிவரோ? தம்முயிர்க்கு அஞ்சி அருளாட் சியை விடார் என்பதல்லவோ பொருள்.

இனித் **'தவாவினை'** என்பது நீங்காத வினை என்னும் பொரு ளதா?

''அவாவினை ஆற்ற அறுப்பின் தவாவினை
தான்வேண்டும் ஆற்றான் வரும்'' - (367)

என்பதிலுள்ள தவாவினை நீங்காவினையா? அழியாச் செயல் தானே. அதனை,

''அவா இல்லார்க் கில்லாகும் துன்பம் அஃதுண்டேல்
தவாஅது மேல்மேல் வரும்'' - (368)

என்னும் அடுத்த குறளே தெளிவித்து விடுகின்றதே.

''தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்
தத்தம் வினையான் வரும்'' - (63)

என்பதில் உள்ள தத்தம் வினை, அவரவர் முயற்சி தானே.

''வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்'' - (471)

என்பதில் உள்ள வினைவலி என்பது தன் வலிமை, பகை வலிமை, துணை வலிமை, என்பன போலச் செயல் அல்லது முயற்சி வலி மையே அல்லவோ! தலை விதிப்பொருளதா அது?

இனி, இருவினை எனவும் வருகின்றதே. அதன் பொருள் என்ன? முதல் அதிகாரமாகிய இறைவணக்கத்தில் வரும் ஒரே ஓர் இடத்து மட்டும் வரும் ஆட்சி இருவினை என்பதாம்.

இருமனம், இருவேறு எனவரும் ஆட்சிகளையும் இவண் எண் ணல் வேண்டும் (920, 374). இருதலை (1196) இருநோக்கு (1091) என எண்ணுப் பொருளிலும், இரு நிலம் (990) எனப் பண்புப் பொருளிலுமாக இருவகைப் பொருளிலும் இடம் பெறும் ஆட்சி இது. இருமை என்னும் ஆட்சியும் உண்டு (23).

''இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்

பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு'' - (5)

என்பது இருவினை வரும் இடம்.

இறைமை இயல்பறிந்து அவ்வழியில் நிற்பவர்க்கு அறியாமை என்னும் மயக்கத்தால் உண்டாகும் தீய செயற்பாடுகளும், அறமும் ஆக்கமும் செய்தேன் என்னும் தற்செருக்கு தன் முனைப்புகளும் ஆகிய இரண்டும் சேரமாட்டா என்பதே பொருளாம்.

''என்ன செய்துவிட்டேன் என்றுதானே வருந்துமாறான செயலோ'', ''என்ன செய்துவிட்டாய்'' என்று பிறர் வருந்துமாறான செயலோ நிகழாமை ஒன்று.

நான் செய்தேன் என்றும் எனது என்றும் பெருமிதம் உண்டாகாமை மற்றொன்று. ஆகலான் இவ்விருமையும் பல்வகைப் பிறப்புகளுக்கும் தொடர்ந்துவரும் எனப்படும் வினைகள் அல்லவாம். மற்றை இடங்களைப் போலவே 'செயல்' என்னும் பொருள் தருவதேயாம்.

இவற்றை நோக்கச், சமயங்கள் சாற்றும் வினைகள் திருக்குறளில் இல்லை என்றும், ஆங்குளதாக உரையாசிரியர்கள் குறித்தமை அவர்கள் குறிப்பாகுமேயன்றி வள்ளுவக் குறிப்பாகாது என்றும் தெளிவாக விளங்கும்.

ஊழ், பொறி, தெய்வம், பால் என்பனவும் வினைப் பொருள் தருவன அல்ல என்பதை **வள்ளுவர் வழியில் ஊழ், வள்ளுவர் வழியில் வினை, வள்ளுவர் வழியில் பிறப்பு** என்னும் எம் சுவடிகளில் கண்டு கொள்க.

ஐந்து அம்பலங்கள்

1. திருவாலங்காடு
   செம்மணி அம்பலம்
   (இரத்தின சபை)
2. சிதம்பரம்
   பொன்னம்பலம்
   (கனகசபை)
3. மதுரை
   வெள்ளியம்பலம்
4. திருநெல்வேலி
   செப்பு அம்பலம்
   (தாமிரசபை)
5. திருக்குற்றாலம்
   ஓவிய அம்பலம்
   (சித்திரசபை)

அட்ட வீரட்டம்

(சிவ பெருமான் வீரச் செயல் புரிந்த எட்டு ஊர்கள்)

1. திருக்கண்டியூர்
   — பிரமண் சிரம் கொய்தது
2. திருக்கோவிலூர்
   — அந்தகாசூரனை அழித்தல்
3. திருவதிகை
   — திரிபுரம் எரித்தல்
4. திருப்பறியல்
   — தக்கன் சிரம் கொய்தது
5. திருவிற்குடி
   — சலந்தரா சூரனை அழித்தது
6. வழுவூர்
   — யானையை உரித்தது
7. திருக்குருக்கை
   — காமனை எரித்தது
8. திருக்கடவூர்
   — எமனை உதைத்தது



இச்சகம் பேசாத வித்தக நெஞ்சம்

வித்துவான் டாக்டர். ப. நீலா
முதல்வர். தருமபுரம் ஆதீனம் கலைக் கல்லூரி, தருமபுரம்.

இம்மைச் செய்தன மறுமைக்கு ஆமெனும் அறவிலை வணி கன் ஆயலன் - என்ற புறநானூற்றுவரி ஆய்அண்டிரன் தர்மத்தை வணிகமாக்கவில்லை என்கிறது. அதாவது ஒன்று தந்து ஒன்றைப் பெறும் வியாபாரத்தில், அறம் இம்மைக்குப் புண்ணியமாகும் போது அதன் பலனாக மறுமையில் 'வீடு' கிடைக்கும். மேலுல கம் இல்லெனினும் ஈதலே நன்று என்று வள்ளுவரும் அறவியா பாரத்தை ஒழுங்குபடுத்தினார்.

பஞ்சத்திலும் பிறகாரணத்திலும் பதியை (ஊரை) விடாத பண்பாளர்கள் வாழ்ந்த நகரம் காவிரிப்பூம்பட்டினம். மூதாதை யர் தேடிவைத்த செல்வத்தைக்கூட அறத்திற்குச் செலவிடவில் லையாம் அங்குள்ள செல்வந்தர்கள். ஏன்? அச்செல்வத்தால் புகழ் அவர்களுக்கும் - செல்வம் கவர்த்து பழி இவர்களுக்கும் ஆகுமாம். இதனை மாசாத்துவான் மேலேற்றிக் காட்டினார் இளங்கோ.

'வருநிதி பிறர்க் கார்த்தும் மாசாத்துவான்' - (சிலம்பு) தான் தேடிய பொருளால் அறம் செய்யும் உயர்ந்த பண்புக்கு இவரொ ருவரே காவிரிப்பூம்பட்டினத்து மக்களின் சார்பில் சான்றாகிறார்.

அப்பட்டினம் சார்ந்த பிள்ளையார் தன் பட்டினத்துப்பிள் ளையார் என்றும் பட்டினத்தார் என்றும் அழைக்கப்பட்ட மகான். பதினோராந்திருமுறையிலமைந்த பாடல்களைவிடவும் தனிப்பாடல்களாலேயே இவர் புகழ் அதிகமாயிற்று என்பது மிகையுரையன்று.

மாவேழ் சனனங்கெட மாயைவிடா

மூவேடனை என்று முடிந்திடுமோ - என்று ஏங்கினார் அரு ணகிரியார்.

பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளை யைப்போல் ஆருந்துறக்கை அரிதரிது - என்று வியந்து நின்றார் தாயுமானவர். இவர்களுக்கு மலைவிளக்குப் போல் நின்றவர் பட்டினத்தார். மூவாசைகளை மட்டுமல்ல,

யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன். (குறள்) என்றபடி பந்தங்கள் அனைத்தையும் துறந்து அவைகள் உண்மையானவைகள் அல்ல என்பதை உணர்த்திய பட்டினத்தாரைப்பார் - என்று தாயுமான வர் சுட்டிக்காட்டினார்.

பார் - அனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளை யைப் போல் ஆரும் துறக்கை அரிது - என்பதனை இப்படிக் கருதுதல் வேண்டும்.

காதற்ற - எதற்கும் உதவாத ஊசிகூட நம்மோடு வராது. பற்றித் தொடரும் இருவினைப் புண்ணிய பாவங்களே என்ற பட்டினத்தார் ஓர் அனுபவ ஞானியே. இவரது ஆண்மையுள்ளம் காண இக்கட்டுரை முயல்கிறது.

ஆண்மையின் விளக்கம்: அஞ்சுவது அஞ்சாமை பேதைமை யானால் அஞ்சுவதற்கு அஞ்சுதல் ஆண்மையாகும். பொய்க்கரி கூற - பிறன் கேடு சூழ அஞ்சுதல் பெரியோர் பண்பு. ஆகவே பொய்ம்மையாளரைப் பாடவும் - பின்பற்றவும் வேண்டாம் எனத் தன் ஆண்மையுள்ளத்தைப் பட்டினத்தார் வெளிப்படுத்துகி றார்.

உடம்பு என்ற மரக்கலத்தில் (கப்பலில்) என்ன என்ன சரக்கு கள் ஏற்றப்பட்டுள்ளன பாருங்கள்.

இவற்றோடு பிறவிக் கடலில் இக்கலம் செல்ல வேண்டும் உய்வதற்கு வழியுண்டா! யோசியுங்கள் என்கிறார்.

அறிவில் ஒழுக்கமும் பிறிதுபடு பொய்யும்
கடும்பிணித் தொகையும் இடும்பை ஈட்டமும்
இனையன பலசரக் கேற்றி - (கோயில் நான்மணி -16)

ஓடும் மரக்கலம் இவ்வுடம்பு.

உய்யவழி என்ன -

போதுகொண்டு (மலர்) வழிபடுக. இல்லையானால் நல்ல நீர் கொண்டு ஆட்டுக. வழியில்லையானால் நெஞ்சார நினைக்க லாமே என்பார் - எளிய பக்தி முறை காட்டி.

போதும் பெறாவிடில் பச்சிலை உண்டு புனல் உண்டெங்கும்
ஏதும் பெறாவிடில் நெஞ்சுண்டன்றே -

கழுமலமும்மணி- 12

நாமத்தினால் என்தன் நாத்திருந்தேன் நறைமாமலர்சேர்
தாமத்தினால் உன்சரண் பணியேன் சார்வதென் கொடு -

— கோயில்நான்மணி -14

அடியார் அடிபணிக: சைவத்தின் சிறப்பே அடியார் வழி பாட்டில் (சங்கமக்கூட்டம்) உள்ளது.

அதற்கேற்றாற் போல் இவர் 'தம் அடியார் மனம்விட்டகலா மதிற்கச்சி ஏகம்பர்' - எனக் குறிப்பார்.

சாதியால், செய்கருமத்தால் உயர்வு பெற்றோர் - இறை வனை வணங்காத போது தாழ்வு பெறுவதும்; தாழ் செயல்க ளைச் செய்தும் இறைவனடி நினைவோர் மேன்மையாளராகக் கருதப்படுவதும் அப்பர் காட்டிய நெறி.

அதே வழியைப் பட்டினத்தாரும் காட்டுகிறார்.

நிலத்தில் தேவர்களைப் போல் உயர்வுடைய அந்தணர்கள், மறை பயின்றும் எரிவளர்த்தும் பயனில்லை. கச்சியுள் ஏகம்பம் கூடித்தொழும் நலத்தவர்களாக அவர்கள் இல்லையென்றால் அவர்கள் வேடுவர்களே என்கிறார் பட்டினத்தார்.

நிலத்திமை யோரில் தலையாய்ப்
பிறந்து மறையொ டங்கம்
வலத்திமைப் போதும் பிரியா
எரிவளர்த் தாலும் வெற்பன்
குலத்துமை யோர்பங்கர் கச்சியுள்
ஏகம்பம் கூடித்தொழும்
நலத்தமை யாதவர் வேட்டுவர்
தம்மின் நடுப்படையே - திருவேக. சுந்-31

இதற்கு நேர்மாறாய் தலையாய் பாவங்களைச் செய்து உயிர் வதைத்து உண்டு, ஒழுக்கமும் தவறி, நட்பில் பொய் கூறி, கடைக் குலத்தில் பிறந்திருந்தாலும் - ஏகம்பத்தான் கழற்கு அன்பரேல் அவர் யாவர்க்கும் உத்தமராக விளங்குவார் என்கிறார்.

படையால் உயிர்கொன்று தின்று
பசுக்களைப் போலச் செல்லும்
நடையால் அறிவின்றி நட்பிடைப்
பொய்த்துக் குலங்களினும்
கடையாய்ப் பிறக்கினும் கச்சியுள்

ஏகம்பத் தெங்களை ஆள்
உடையான் கழற்கன்ப ரேல்அவர்
யாவர்க்கும் உத்தமரே - 32

வேதமும் நாதமும்: சிவம் அசைவின்றி இருப்பது. சக்தி உயிர் கொடுப்பது என்பதாக வழக்கு. ஞானமாக இறைவனும் நாதமாக உமையவளும் ஒருருவில் இணைந்து உலக இயக்கத் தைக் காட்டுகின்றனர்.

பட்டினத்தார் வாக்கில் புதிய நயமொன்று தோன்றுகிறது. ஒரு பொருள் ஒருவருக்குக் கிட்டாமல் போவதும் பிறிதொருவர் அதன் முயற்சியே செய்யாமல் பெறுவதும் உண்டு. கிட்டாமல் போவது அன்பின்மை - பொய்மை முயற்சியின்மை என்பவற் றால் ஆகலாம்.

அன்பாலும் முயற்சியாலும் அதே பொருள் பெறக் கூடிய தும் ஆகும்.

சிவனையும் உமையையும் ஒருருவில் காட்டும் பட்டினத் தார் சிவன் அன்னத்தால் அறியமுடியாதவனாக இருப்பதையும்; உமை தேவமாதர்கள் தொடுத்துத்தந்த மாலை சூடிய குழலாளாக இருப்பதையும் ஒருசேரக் காட்டுவதன் நோக்கம் மேலேகூறிய கருத்தை விளக்குவதற்காகத்தானே!

முன்னைப் பழமை (புராணச் செய்தி)க்கும், பின்னைப் புதுமை (புதிய நயம்)க்கும் அவன் வடிவு இடம் தருகிறது. இப்போது பாடல் வரிகளைப் படிக்கலாம்.


......
நான்முகம் கரந்த பால்நிற அன்னம்
காணா வண்ணம் கருத்தையும் கடந்த
சேணிகந் துளதே ஒருபால் திருமுடி பேணிய
கடவுட் கற்பின் மடவரல் மகளிர்
கற்பக வனத்துப் பொற்பூ வாங்கிக்
கைவைத்துப் புனைந்த தெய்வ மாலை
நீலக்குழல் மிசை வளைஇ
......
திருவொடு பொலியும் ஒரு பால் திருமுடி
— திருவிடை, மும்மணி -1

வேண்டத்தக்கது அறிவான்:

மயக்கும் புலன்களால் பிறந்தும் இறந்தும் மாறி மாறித் தடுமாறும் உயிர்களில் ஒருவராகப் பட்டினத்தார் இருக்க விரும் பவில்லை. நெருப்பின் அருகில் மாசுகள் நெருங்காதே - அப்படி என்னையும் உலக ஆசைகள் வாதைப்படுத்தா. அதனால் பிறவி - பாவம் - நரகம் என்ற சுமைகளை நான் சுமக்கவும் வேண்டாம் என்று இறுமாந்து பேசுகிறார்.

வருந்தேன் இறந்தும் பிறந்தும்
மயக்கும் புலன்வழி போய்ப்
பொருந்தேன் நரகிற் புகுகின்றி
லேன் புகழ் மாமருதிற்
பெருந்தேன் முகந்துகொண் டுண்டு
பிறிதொன்றில் ஆசையின்றி
இருந்தேன் இனிச் சென் றிரவேன்
ஒருவரை யாதொன்றுமே
— திருவிடை - மும்மணி - 3.

பட்டினத்தாரின் ஆண்மையுள்ளம் - ஆசை துறந்த உள் ளம் அதனால் அவர் பெற்ற ஆரா இன்பம் இவைகளை நாமும் பெற முயல்வோம். நாதனடி பணிவோம்.



அர்ச்சனைக்கு உகந்த மலர்கள்

விநாயகர்: எருக்கம்பூ, செம்பருத்தி, ரோஜா, தாமரை, அருகம்புல்.

முருகன்: மல்லிகை, முல்லை, சாமந்தி, காந்தள் ரோஜா.

அம்பாள்: வெண்தாமரை, மல்லிகை, முல்லை, சூரியகாந்தி, செம்பருத்தி, செம்பவள வல்லி.

சிவன்: தும்பை, வில்வம், சங்குப்பூ, செம்பருத்தி.

திருமால்: தாமரை பவளவல்லி, மரிக்கொழுந்து, துளசி.

வரலட்சுமி விரத பூஜையின்போது ஐந்து தாழம்பூவின் மடல்களை வைத்துப் பூஜித்தல் மிகச் சிறந்தது.

தகவல்: சைதை ஆர். முரளி

ஐம்பூதத் தலங்கள் (5)

1. மண் (பிருதிவி)
   திருவாரூர்
2. நீர் (அப்பு)
   திருவாணைக்கா
3. நெருப்பு (அக்கினி)
   திருவண்ணாமலை
4. காற்று (வாயு)
   திருக்காளத்தி
5. வான் (ஆகாயம்)
   தில்லை (சிதம்பரம்)



திருவள்ளுவரின் சொல்லாட்சி

(டாக்டர். பொற்கோ : சென்னைப் பல்கலைக் கழகம்)

திருக்குறளின் சிறப்புக்கு உரிய பல்வேறு காரணங் களுள் திருக்குறளை உருவாக்க வள்ளுவப் பெருந்தகை கையாண்டுள்ள சொல்லாட்சி முறையும் ஒன்று. தம் கால மொழி நிலையை நன்கு உணர்ந்து கொண்ட வள்ளுவர் மிகுந்த தொலை நோக்கோடு எல்லோர்க்கும் விளங்குகிற எளிய கொள்களைக் கொண்டே இந்த அரிய நூலை உருவாக்கியிருக்கிறார். எளிய சொற்களை ஆளும் போதே வாய்ப்புக் கேற்பச் சொல்வழி இலக்கிய நயங் களையும் நுட்பமாக அமைத்துக் கொள்கிறார். உளவியல் நோக்கில் படிப்பவர் உள்ளத்தில் மிகப்பெரிய விளைவு களை ஏற்படுத்தும் வகையில் சொற்களைத் தெரிந் தெடுத்துத் தொடர்களை அமைத்திருக்கிறார். சில சூழல் களில் ஓரிரு சொற்களின் துணைகொண்டே நுண் பொரு ளைப் பருப்பொருளாகக் காட்சிப் படுத்திக் காட்டுகிறார். வேறு சில சூழல்களில் புதிய கொள்கைகளைக் கூடப் படைத் துப் பயன்படுத்துகிறார். இவை எல்லாவற்றையும் ஆழமாக எண்ணிப் பார்க்கும்போது திருவள்ளுவர்க்கு வாய்த்த மொழித்திறம் வியப்புக்குரிய வகையில் உயர்ந்து நிற்கிறது.

முகடி என்ற சொல்லுக்கு மூதேவி என்று பொருள் கூறுவர். முகடி என்பது முகடு என்ற சொல்லிலிருந்து பிறந்தது. செவிடு என்பதிலிருந்து செவிடி என்ற சொல் உருவானது போல் முகடு என்பதிலிருந்து முகடி என்பது உருவாயிற்று. செவிக்கு உரிய பண்புகள் இல்லாமல் உருவால் செவிபோல் அமைந்த ஒன்று செவிடு. ஆகு பெயர் நிலையில் இது கேளாச் செவியை உடைய ஆளையும் குறிக்கும். முகத்துக்கு உரிய பண்பும் பயனும் இல்லாமல் முகம்போல அமைந்த ஒன்று முகடு. கண், காது, மூக்கு, வாய் ஆகிய எந்தப் புலனும் இல்லாமல் முகத்துக்கு உரிய பொலிவும் மலர்ச்சியும் இல்லாமல் முகம்போல அமைந்த ஒன்று முகடு எனப்பட்டது. பெண் பாலுக்கு உரிய இகர விகுதியை ஏற்று முகடு என்பது முகடியாயிற்று. இந்தச் சொல் முகத்தின் இயல்புகளே இல்லாமல் முகம் போன்ற ஒன்றைப் பெற்று முன் நிற்கும் ஒரு பெண் உருவைக் காட்சிப் படுத்துகிறது.

மா என்பது பெருமை, கருமை முதலான பொருள் களில் வரும் மேலே கூறிய முகடி என்பது மா என்ற அடையைப் பெற்று மாமுகடி என வரும் போது முகடி என்ற சொல்லுக்கு உரிய பொருள் மேலும் தெளிவாய்க் காட்சிப் படுத்துப் படுகிறது.

மாமுகடி என்பது பெரிய முகடியா அல்லது கரிய முகடியா என்ற வினாவுக்கு இப்போது நாம் விடை காண வேண்டும். மூதேவிக்கு எதிரான ஒரு கருத்துருவம் செய்யவள் என்ற சொல்லால் சுட்டப்படுகிறது. செய்ய வளின் நிறம் சிவப்பு என்று இந்தச் சொல் உணர்த்து கிறது. ஆகவே செய்யவளுக்கு எதிரான முகடியின் நிறம் கறுப்பு என்று ஆகிறது. மாமுகடி என்பது முகத்துக்கு உரிய பண்போ பயனோ இல்லாமல் முகம் போன்ற ஒரு உறுப்போடு கரிய நிறத்தில் நிற்கிற ஒரு பெண் உருவைக் காட்சிப் படுத்துகிறது. இந்த மாமுகடி என்ற சொல்லை வள்ளுவர் மிக அழகாகப் பயன்படுத்தி ஒரு கருத்துக் காட்சியை உருவாக்குகிறார்

மடியுளாள் மாமுகடி என்ப மடியிலான்
தாளுளாள் தாமரையி னாள்.

என்ற குறளைமட்டும் எடுத்துக் கொண்டு சொல் லாட்சி நோக்கில் சில செய்திகளை இங்கே விளக்கிப் பேச இருக்கிறோம்.

மடி என்பது மடிதல், மடித்தல் ஆகிய பொருள்களை அடிப் பொருள்களாகக் கொண்டு விளங்குவது. பொறுப்புகளை ஏற்று நிமிர்ந்து நில்லாமல் மடிந்து வளையும் தன்மையினையும் இந்தச் சொல் குறிக்கத் தொடங்கியது. இதன் விளைவாக மடி என்பதற்குச் சோம்பல் என்ற பொருள் வந்தது.

உட்கார்ந்திருக்கும்போது உடலின் மடிப்புப் பகுதி யாக அமைந்த ஒன்றும் மடி என்று பெயர் பெற்றது. தாயின் மடியில் குழந்தை அமர்ந்தது என்பதில் உள்ள மடி மேற்குறித்த பொருளில் வந்தது. பசுவின் மடி, மடிப் பிச்சை முதலான தொடர்களில் மடி என்பது இன்னும் வேறுபட்ட பொருள்களில் நிற்கக் காண்கிறோம்.

மடி உளாள் மாமுகடி என்ற தொடர் (1) மாமுகடி ஒருவனது சோம்பலின்கண் வாழுகிறாள் என்றும் (2) மாமுகடி ஒருவனது மடியில் (மிகுந்த உரிமையோடு) அமர்ந்திருக்கிறாள் என்றும் இரண்டு பொருள்களை உணர்த்துகிறது. முதலாவதாக உள்ள பொருள்தான் ஆசிரியர் உணர்த்த விரும்பும் முதன்மைப் பொருள். இரண்டாவது பொருள் இந்தக் குறளின் அழகையும் சுவையையும் கூட்டுகிறது. குறளில் எஞ்சியுள்ள பகுதி இந்த உண்மையை நன்கு தெளிவு படுத்தும்.

"மடியிலான் தாள் உளாள் தாமரையினாள்" என்ற தொடரிலிருந்து முன்னைய தொடரில் மறைந்து நிற்கும் சொல்லையும் நாம் உணர்ந்து கொள்கிறோம். மடி உடையான் மடி உளாள் மாமுகடி என்பதே முன் பகுதியின் முழுவடிவம். மடி உடையான் மடியில்

உள்ளாள் மாமுகடி : ஆனால் தாமரையினாளோ மடியிலான் தாளில் உள்ளாள். தாள் என்பதன் அடிப்பொருள் கால் என்பது. தாள் என்பது ஊக்கம், முயற்சி, இயக்கம் ஆகிய பொருள்களையும் குறிக்கும்.

மடியிலான் தாள் உளாள் தாமரையினாள் என்ற தொடர் (1) தாமரையினாள் ஒருவனது முயற்சியை இடமாகக் கொண்டு வாழுகிறாள் என்றும் (2) தாமரையினாள் ஒருவனது காலடியில் காத்திருக்கிறாள் என்றும் இரண்டு பொருள்களை உணர்த்துகிறது. இங்கும் முதலாவதாக உள்ள பொருள்தான் ஆசிரியர் உணர்த்த விரும்பும் முதன்மைப் பொருள். முன்பே குறிப்பிட்டது போல இங்கும் இரண்டாவது பொருள் இந்தக் குறளின் அழகையும் சுவையையும் கூட்டியிருக்கிறது.

"வெறுத்து ஒதுக்கத்தக்க மூதேவி ஒருவனது சோம்பலில் குடியிருக்கிறாள். விரும்பிப் போற்றத் தக்க செய்யவள் அல்லது சீதேவி சோம்பல் இல்லாதவனுடைய முயற்சியின்கண் வாழ்கிறாள்." இதுதான் வள்ளுவர் கூற வந்த செய்தி. ஆனால் இதைச் சொல்லும்போதே வேறொரு செய்தியையும் வள்ளுவர் நுட்பமாகச் சொல்லாட்சித் திறமையால் நமக்குப் புலப்படுத்தி விடுகிறார். அந்தச் செய்தி இதோ :

"வெறுத்து ஒதுக்கத் தக்க மூதேவி சோம்பல் உடையவனது மடியின்மீது உரிமையோடு ஏறி உட்கார்ந்து கொள்கிறாள். விரும்பிப் போற்றத் தக்க செய்யவள் என்னும் சீதேவியோ சோம்பல் இல்லாதவனுடைய காலடியில் காத்துக் கிடக்கிறாள்"

மூதேவிக்கு உரிமை கிடைத்தது சோம்பலினால்தான். சீதேவி மடியிலான் காலடியில் காத்திருப்பது. முயற்சியின் மேல் உள்ள மதிப்பினால்தான்.

மடி, தாள், முகடி, தாமரையினாள் ஆகிய சொற்களை வள்ளுவர் ஆண்டிருக்கிற முறை வியப்பினால் நம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது. மா என்ற அடை முகடியைக் காட்சிப் படுத்திக் காட்டுகிறது

வள்ளுவரின் சொல்லாட்சித் திறம் இன்னும் பல்வேறு நோக்குகளில் விரிவாக ஆராயத்தக்கது. அப்படிப் பட்ட விரிவான ஆய்வுக்கு நாம் இங்கே கண்ட கருத்துரை ஒரு சிறு தூண்டுகோலாக அமையும் என்று நம்புகிறோம்.

1. தளராத ஊக்கமுடையவனிடம் செல்வத் திரு வழி கேட்டுக் கொண்டுதானே வந்தடையும். நீர்ப்பூவின் தண்டின் நீளம் அஃதுள்ள நீர்நிலையின் ஆழத்தின் அளவாகும். அதுபோல மக்களின் உயர்ச்சி அவர்களது ஊக்கத்தின் அளவாகும். ஒரு செயல் செய்வதற்கு அரியது என்று மனம் தளரவேண்டாம். அதைச் செய்துமுடித்தற்கேற்ற பேராற்றலை முயற்சி தரும். மேற்கொண்டு செய்த ஒருவனை, ஊழ்வினையால் சிறந்த பயனைத் தரவில்லையாயினும், உடல் வருந்திச் செய்த முயற்சியின் அளவிற்குத் தக்கவாறேனும் அது பயன்தரும். (குறள் 594,595, 611,619).

மனம் தளராது இடைவிடாது முயல்பவர், தமக்குத் தடையாகவிருக்கும் விதியையும் புறங்காண்பார் (குறள் 620).

2. சோம்பலின் காரணமாகச் சிறந்த முயற்சி இல்லாதவர்க்கு அவர் பிறந்த குடியழிந்து, குற்றமும் பெருகும். ஒரு செயலைச் செய்வதைப்பற்றிய ஆராய்ச்சியின் எல்லை ஒரு துணி வினைப் பெறுதலாம். பின்பு அவ்வாறு துணியப்பட்ட காரியத்தை உடனே தொடங்காமல் தாமதித்தல் குற்றமாகும் (குறள் 604,671).

3. பொருட்செல்வம் இல்லாதவரை (அவர் நல்லவராயினும் எல்லாரும் இகழ்வர் செல்வம் உடையோரை (அவர் தீயராயினும்) அனைவரும் சிறப்பாக நடத்துவர். பிறர் வருந்துமாறு ஈட்டிய பொருள் எல்லாம் அதைப் பெற்றவன் பின்னர் வருந்துமாறு அவனைவிட்டுப் போய்விடும் (குறள் 752).

4.அருளும் அன்புப் பொருந்திய வழியில் வராத பொருளை ஒருவன் பெற விரும்பாது நீக்கி விட வேண்டும் (குறள் 755).

5. பகைவரின் செருக்கை அழிக்கும் கூரிய வாள் பொருளைவிட வேறொன்றில்லை. எனவே, நாம் பொருளைச் சேர்க்கவேண்டும் (குறள் 755, 779).

6. உழவுத் தொழிலால் உண்டு வாழ்பவர்களே, சிறப்பாக வாழ்பவர்கள், மற்றெரெல்லாம் பிறரை வணங்கி உணவுபெற அவர்கள் பின் செல்பவர்கள் (குறள் 1033).



அஜமும் ஆனைந்தும்

(சித்தாந்தக் கவிமணி. மு.பெ. சத்தியவேல் முருகன். பி.இ.)

வளர்ச்சி மனிதனுக்கு மட்டுமல்ல; சொற்களுக்கும் உண்டு. சொற்களில் பல அவை தோன்றியபோது கொண்ட கருத்து ஒன்றாயிருக்க அதிலிருந்து மாறி சிதைவுண்டு ஒவ்வாத கருத்தில் கையாளப்படும் அவல நிலைக்கு ஆட்படுவதுண்டு. இதற்குக் காலத்தைக் குறை கூறுவது தவறு. காலம் என்ன செய்யும்? முப்பத்தாறு தத்துவங்களின் வரிசையில் நியதிக்கு முன்னே வரும் சடம் தானே அது? அவ்வக் காலங்களில் வரும் மனிதர்களே இதற்கு எல்லாப் பொறுப்பையும் ஏற்க வேண்டியவர்கள். முதுக் குறைவு என்றால் தமிழில் ஆழ்ந்த அறிவு என்று பொருள். இந்த முதுக்குறைவினால் அல்ல, மதிக்குறைவினால் சில மனிதர்கள் பொருள் மிகுந்த சொற்களுக்குத் தீங்க செய்து அவற்றிற்குப் பொருளற்ற பூச்சுகளைச் செய்து பின்வரும் தலைமுறையினரிடையே புழங்கவிட்டுச் சென்று விடுகிறார்கள். 'பாவம்! பின் வருவோர்!, என்று கழிவிரக்கம் கொள்வது ஒரு புறமிருக்க, 'பாவம்! அந்த சொற்கள்' என வருந்துவதும், அவற்றைச்சரியான பொருளில் திருத்தி உலவ விடுவதுமே இன்று நம் தலையாய கடனாகும். ஏனெனில் அந்த சொற்களுக்கு உயிரிருந்தால் அவை உரிய மன்றத்தில் தொடர்புடையவர்கள் மீது மானநட்ட வழக்கு தொடர்ந்திருக்கும். ஆனால் அவையோ உயிரற்றவை; ஆண்டவனை நம்பி அமைதியாய்க் கிடக்கின்றன.

இங்ஙனம் பாதிப்புண்ட சொற்களில் ஒன்றுதான் சைவ சமய இலக்கியங்களில் காணப்பெறும் 'ஆனைந்து' என்ற சொல். இந்தச் சொல் எங்ஙனம் பாதிப்புக்கு உள்ளாகி உள்ளது என்று அறியு முன் இச்சொல்லே போல் வேறு ஒரு சொல் பட்டுள்ள பாட்டினைக் காண்பது சிறந்த எடுத்துக்காட்டாய் விளங்கும்.

சைவ சமயத்தைச் சார்ந்த அன்பர்கள் அனைவரும் தேவார முதலிகள் வேள்வியினையும் வேள்வியின் சிறப்பினையும் விதந்தோதியுள்ளதை அறிவர். ஆனால் வேள்வி என்றாலே அதில் பலியாக உயிர்க் கொலையும் செய்வது உண்டு என்ற உண்மை கருணை உள்ளம் படைத்த சைவர் மனத்தைக் கலக்காமல் இராது. ஆண்டவனைத் தீமுகத்தில் அன்பின் ஆற்றலால் மேம்படுத்தித் தோற்றுவித்து வழிபடும் இந்த வழிபாட்டு முறையில் உயிர்க்கொலை எங்ஙனம் இணைந்தது? இது ஒரு பெரிய கேள்விக்குறி. இதற்கு சரித்திரமே சான்று பகர்கிறது.

வேள்வியினைத் தொடக்க காலத்தில் செய்யும்போது அன்பர்கள் வேள்வியில் அவி சொரிந்திருக்கிறார்கள். ஆனால் அந்த அவி அறுத்த ஆட்டின் துடிக்கும் சதைகளல்ல. முளையாத நெல்லினைத்தான் அவியாகச் சொரிந்திருக்கிறார்கள். வடமொழியில் அஜம் என்றால் பிறப்பில்லாதது என்ற பொருள். ஜம் என்றால் பிறப்பது. அதனாற்றான் உயிரினங்களுக்கு வடமொழியில் ஜந்து என்று பெயர் வழங்கக் காண்கிறோம். எனவே ஜம் என்ற இந்த வடமொழி வேர்சசொல்லோடு 'அ' என்கின்ற அன்மைப் பொருட்டான உபசர்க்கம் சேர அது அஜம் என்றாகி பிறப்பில்லாதது என்று பொருள் தரும்.

அஜம் என்ற முழுச்சொல் - அதாவது வேர்ச்சொல் வேறொன்று உண்டு; அதற்கு ஆடு என்று பொருள். அறிவின்மையினால் ஆட்டிற்கு அந்தப் பெயர் வந்தது. எனவே அஜம் என்ற சொல்லுக்கு ஆடு என்றும் அதே நேரத்தில் பிறப்பில்லாதது என்றும் இரு பொருள் உண்டு.

இவ்வாறிருக்க வேள்வியில் அவியாவது அஜம் என்று பெரியோர்கள் கூறிச் சென்றுள்ளனர். அன்பினை அடிப்படையாகக் கொண்டு அத்தி வழிபாட்டினை வகுத்த ஆன்றோர்கள் அஜம் என்றது முளையாத நெல்லினை - வறுத்த நெல்லினை - வறுத்த நெல்லுக்குப் பொரி என்று பெயர்.

திருவான சம்பந்தர் ஆதரித்த வேள்வியில் பொரிதான் பயன்படுகிறது. திருவீழிமிழலையில் திருஞான சம்பந்தர் தாம் கண்ட அற்புத வேள்வியை வருணிப்பதை அவர்தம் திருப்பாட்டில் காண்க:

அகனமர்ந்த அன்பினராய் அறுபகைசெற் றைம்புலனும்
அடக்கிஞானம்
புகலுடையோர் தம்முள்ளப் புண்டரிகத் துள்ளிருக்கும்
புராணர்கோயில்
தகவுடைநீர் மணித்தலத்துச் சங்குளவர்க் கந்திகழச்
சலசத்தீயுள்
மிகவுடைய புன்குமலர்ப் பொரியட்ட மணஞ்செய்யும்
மிழலையாமே.

பொரியட்டிச் செய்யும் வேள்வியினையே ஞானசம்பந்தப் பெருமாள் ஆதரித்தார். இதுவன்றி மற்ற வேள்விகளை - உயர்க் கொலை புரிந்து செய்யும் வேள்வியினை ஞான சம்பந்தர் வெறுத்தனர் என்பது திருவீழிமிழலையில் பொரியட்டிச் செய்யும் வேள்வியினை மற்றொரு பாடலில் "கேடிலா வேள்வி செய் அந்தணர் வேதியர் வீழிமிழலையார்" என்று கூறுவதினின்றும் தெளிவாகும். கேடிலா வேள்வி என்றதனால் கேடு மலிந்த வேள்வி என்ற ஒன்று உண்டு என்பதனைக் குறிப்பினால் பெறவைத்தார். இது அருத்தாபத்தியின் வகைப்படும்.

இனி, அஜம் என்ற சொல்லுக்கு மீண்டும் வருவோம். அஜம் என்பது வறுத்த நெல்லாகிய பொரியினைக் குறிக்க சிலர் அதற்கு வேறு பொருள் கொண்டு - ஆடு என்ற பொருள் கொண்டு ஆட்டை அறுத்து அவியாக்கி விட்டனர். அஜம் என்றால் விளையா நெல் என்ற சிறந்த பொருளை அவர்கள் தவற விட்டனர். ஆண்டவன் வழிபாட்டில் அன்போடு கொள்ளத்தக்க பொருளைக் கொள்ளாமல் அறியாமையினால் அஜம் என்றால் ஆடு என்று தகாத பொருள் கண்டு வேள்வியில் உயிர்க்கொலையை இணைத்துவிட்ட பாவிகளை என்னென்பது? இது எத்துணை பெரிய அநியாயம்? என்று கொதித்தெழுகிறார் கந்தர பூதி பெற்று சுந்தரநுபூதி சொன்ன எந்தை அரணகிரிநாதர். அவர்தம் அற்புத அந்தாதியான கந்தரந்தாதியில் பதறுவதைப் பாருங்கள்:

தீதா வசவ னுபவிக்க மண்ணிலும் விண்ணிலுஞ்செந்
தீதா வசவநி யாயஞ்செய் வேதியரே தியங்காத்
தீதா வசவ ளிமலர்செவ் வாசாக் கிரவ த்த
தீதா வசவன் புறப்பா ரெனுமுத்தி சித்தி கவே.

மேல்கண்ட பாடலின் திரண்ட பொருள்: ''இம்மையில் புகழையும் மறுமையில் போகத்தையும் பெற நினைத்துப் பழிக் கஞ்சாமல் ஆட்டினைக் கொன்று அநியாய வேள்வி செய்கின்ற மறையோரே! முத்தி வேண்டுமானால் பரமசிவனது மைந்த னான முருகப்பெருமானைச் சாக்கிர அவத்தையிலும் துரியாதீதத் திலும் எங்களுக்கு நல்லறிவு உண்டாக அன்பு வைத்தருள்'' என்று துதியுங்கள்!

இந்தப் பாடலில் ''தீதா அச அநியாயம் செய் வேதியரே'' என்று அருணை முனிவர் சாடுவதை அன்பர்கள் கருத்தூன்றி கவனிப்பார்களாக. (அசம்-ஆடு). அநியாயம் என்று இங்கே அருணை முனிவர் எடுத்தாள்கின்ற சொல் ஆழமான பொருட் குறிப்பு உடையது. 'தீதாய அசவரியா நின்ற வேதி யரே தியங்கா' என்றும் பாடியிருக்கலாம். ஆட்டை அரிந்து என்று சொல்லாமல் ஆடு என்று அநியாயம் செய்கின்ற வேதியர் என்று கூறினது பொருள் பொதிந்தது. தவறு ஒருவன் செய்ய அதைச் சுட்டிக் காட்டியபின் தவற்றை உணர்ந்து திருந்தாமல் தன் தவற்றை நியா யப்படுத்துவது இருக்கிறதே அதுவே அநியாயம். அதாவது தெரி யாமல் செய்வது தவறு; தெரிந்து செய்வது அநியாயம். எனவே ஆட்டை அறுத்து வேள்வியில் அவியிடுவது தவறு என்று தெரிந் தும் வேதியர் (ஆரிய அந்தணர்) ஆட்டை அறுப்பதைத் தொடர்ந் தனர் எனத் தெரிகிறது.

'வேதாகம நிரூபணம்' என்ற ஒரு நூல் யாழ்ப்பாணம் அச்சு வேலி குமாரசாமி குருக்கள் என்பவரால் ஆக்கப்பெற்று 1951-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. நூல் இரண்டு பாகங் களை உடையது. அதில் இரண்டாம் பாகத்தில 65-ம் பக்கத்தில் நூலாசிரியர் - ஓர் அந்தணர் - வேள்வியில் நடத்தும் உயிர்க்கொ லையை எங்ஙனம் நியாயப் படுத்துகிறார் என்பதைக் காணுங் கள்:

''வேள்விக் கொலை'' தீங்குபயவாது நன்மையே பயக்கும். வேள்வியில் கொலையுண்ட உயிர் மேலுலகத்துக்குச் சென்று இன்பந்துய்க்கும் ஆதலானும் எழுப்பப்படும் ஆதலானும் ஆம்.

கந்தபுராணம்

புன்மையாம் பசுதடிந்து புரையில் வேள்வி யாற்றியே
தொன்மைபோ லெழுப்புமாறு சுருதிசொற்ற வாறுபோல்
மன்மதன் தனைப்படுத்து மாதைவேட்டு மற்றதன்
பின்முறைக்கண் நல்களம் பிரானினைந்த னன்கொலாம்.

யாகாதிபதி சிவனே யாதலால் அவர்க்கு அவிக்கு நேர்ந்த உயிர் இந்த அபுத்தி பூர்வ சிவபுண்ணியத்தால் மறுமையிலே புத்திபூர்வ சிவபுண்ணியம் செய்து சிவஞானம் உற்று முத்தி எய்தும். இக்காலத்து மீண்டும் யாகபசுவை எழுப்பும் சத்தி இல் லாதவர் யாக பசுவைக் கொன்று யாகஞ்செய்தல் ஆகாது. அது அப்பய்ய தீட்சிதர் தமது காலத்து யாகம் ஒன்று இயற்றி ஈற்றில் யாகப்பசுவை எழுப்ப அது எழுந்திலது. அவ்வமயத்து தீட்சிதர் வேதத்தை நோக்கி, 'சுருதியே! உன்னை நம்பி இப்பசுவைப் படுத்தேன். எழாதாயின் எனது உயிரைப்படுப்பேன். இது நிச்ச யம்'' என்று கூறிய உறுதிமொழியை வேதபுருடன் கேட்டு வெளிப்பட்டு 'நின் வாய்மைப் பத்தியின் பொருட்டு இப்பசு எழுந்து விடும். இனி இக்கொடுங்கலியில் பசுப்படுத்து யாகம் செய்யற்க; செய்யின் எழாது' என்று சொல்லி மறைந்தனர் என் னும் சரித்திரத்தில் வைத்து உணரப்படும்.

இதனால் வேள்வியிற் கொலை அவ்வுயிர்க்கு நன்மை பயத் தலால் கொலையன்றென்பதும், யாகபசுவை எழுப்புஞ் சத்தி யில்லாதவர் அது செய்யலாகாதென்பதும் அறிந்து கொள்க!!

அன்பர்களே! மேலே நூலாசிரியர் வேள்விக் கொலையை எங்ஙனம் நியாயப்படுத்துகிறார் என்பதை ஊன்றிக் கவனியுங் கள். வேள்வியிற் கொலை அவ்வுயிர்க்கு முடிவில் முத்தியை நல்கும் எனின் வேள்வி செய்யும் அந்தணர் தம் உயிரையே கொடுத்து முத்தியை எளிதாகப் பெற்றுக் கொள்ளலாமே! அன்றி ஓர் உயிரை ஆண்டவனுக்கு அர்ப்பணம் செய்துவிட்ட பின் மீண் டும் அதை எழுப்புவது எனின் அர்ப்பணித்தது போலி என்றா காதா? இன்னோரன்ன கேள்விகளுக்கு அவர்தம் கூற்றில் விடை யின்மையைக் காண்க. ''பசுப்படுத்து யாகஞ் செய்யற்க'' என்று வேதபுருடன் கூறினான் என்று சொல்லிய உடனே இதனால் வேள்வியிற் கொலை அவ்வுயிர்க்கு நன்மை பயத்தலால் கொலையன்று என்று கூறுவது அவர்க்கு உள்ள தடுமாற்றத்தைக் காட்டுகிறதல்லவா? அப்படியிருந்தும் வேள்விக் கொலையை அவர் நியாயப்படுத்த முயல்கிறார் இல்லையா? இதைத்தான் அருணகிரிநாதர் அநியாயம் என்று சாடுகிறார்.

இப்படி தலைமுறை தலைமுறையாக வரும் மற்றொரு அநியாயம் 'ஆனைந்து' என்று தமிழிலும் 'பஞ்சகவ்வியம்' என்று வடமொழியிலும் வழங்கிவரும் சொற்களுக்குக் கொள் ளப்படும் பொருள் ஆகும்.

ஆன் என்ற தமிழ்ச் சொல்லுக்கு பசு என்று பொருள். பசு வின் மடிசுரக்கும் பால் இறைவனுக்குத் திருமஞ்சனம் ஆட்டுவ தற்கு உரியது. பால் மட்டுமல்ல; பாலின் திரிபுப் பொருள்களும் இறைவர்தம் திருமஞ்சனத்திற்கு உரியன. இப்பொருள்கள் யாவை எனப் பட்டியல் இடும்போதுதான் தவறிப்போயுள் ளோம்.

ஆனைந்து என்பவை யாவை? தேன், நெய், பால், பசுவின் சிறுநீர், பசுவின் சாணம் ஆகிய ஐந்தும் என்பர் சிலர். வேறு சிலர் பால், தயிர், நெய், பசுவின் சிறுநீர், பசுவின் சாணம் ஆகிய வையே ஆனைந்து என்பர். முதலாமவர் கூற்றில் தேன் வருவ தைக் காண்க. தேன் பசுவின் பயனில்லை; மாறாக வண்டின் பயனாதலால் ஆனைந்தில் தேனைச் சேர்த்தல் இயலாது எனத் தெளிவாகக் கூறிவிடலாம். இனி எஞ்சுவது இரண்டாமவர் கூற்று. அதில் பசுவின் சிறுநீர் மற்றும் பசுவின் சாணம் ஆகியவை கூறப்படுகின்றன அல்லவா? சைவச் சான்றோர்களே! இங்கே நன்கு ஊன்றி நோக்குக! காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய் நீள்நாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் இலிங் கத்தை - இறைவர் தம் திருவடையாளத்தை நாம் அன்போடு திருமஞ்சன மாட்டும் போது பசுவின் சாணத்தையும் பசுவின் சிறுநீரையும் கொண்டு திருமஞ்சனம் ஆட்டுதல் தகுமா? முறையோ! அப்படி நம் ஆன்றோர்கள் அறிவிற்கு ஒவ்வாதவற் றிற்கு - இவ்விழிதகைச் செயலுக்கு - உடந்தையாய் இருந்திருப் பார்களா? இதனை நன்கு சீர்தூக்கிப் பார்த்தல் ஒன்றே நாம் வேண்டுவது.

தடைகள் தோன்றும் போது தக்க விடைகள் கிடைப்பது திருமுறையில் தாம். நயத்திற்கு சுந்தரனார் என்று போற்றப்பெ றும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் இதபற்றி நயத்தக்க தீர்ப்பு ஒன்றைத் தருகிறார். திருநின்றியூர்த் திருப்பாட்டில் அவர் போகிறபோக் கில் இதுபற்றிய தெளிவான தீர்ப்பை எளிதாகச் சொல்லிச் செல்கி றார். பாடல் வருமாறு:

''வஞ்சங்கொண் டார்மனஞ் சேரகில்லார் நறுநெய்தயிர் பால்
அஞ்சுங்கொண் டாடிய வேட்கையினார் அதிகைப்பதியே
தஞ்சங்கொண் டார்தமக் கென்றும்இருக்கை சரண்அடைந்தார்
நெஞ்சங்கொண் டார்க்கிடம் ஆவது நந்திரு நின்றியூரே''

இதில் ''நெய், தயிர், பால் அஞ்சுங் கொண்டாடிய வேட்கை யினார்'' என்று குறிப்பிடப்படுவதைக் காண்க. நெய், தயிர், பால் ஆகிய ஐந்தும் விரும்பி ஆடியவர் என்பது பொருள். நெய், தயிர்,

பால் என்று கூட்டினால் மொத்தம் மூன்றே கிடக்க அவற்றை ஐந்து என்று சுவாமிகள் கணக்கிட்டுக் கூறியிருப்பதைக் காண்க. இந்த ஒரு பாடலில் மட்டுமல்ல. இன்னும் ஓர் பாடலில் இப்ப டியே சுவாமிகள் குறிப்பிடுகிறார். அப்பாடல் வருமாறு:

''மாவை உரித்தள்கொண் டங்கம் அணிந்தவனை
வஞ்சர் மனத்திறையும் நெஞ்சணு காதவனை
மூவர் உருத்தனதாம் மூல முதற்கருவை
மூசிடு மால்விடையின் பாசுனை ஆகம்உறப்
பாவகம் இன்றிமெய்யே பற்றும் அவர்க்கமுதைப்
பால்நறு நெய் தயிரைந்தாடு பரம்பரனைக்
....''

— திருக்கானப்பேர் திருப்பதிகம்.

இன்னும் இது போல திருமுறைகளில் பல பாடல்களைக் குறிப்பிடலாம். விரிவஞ்சி விடுகின்றேன். ஆயின் ஒவ்வோரிடத் திலும் ''பால், நறுநெய், தயிர் ஐந்தாடு பரம்பரன்'' என்றபடியே தவறாமல் குறிப்பிடுவதைக் காண்க.

மூன்று பொருள்களை மட்டும் கூறி ஐந்து என்று கூறுவதில் மறைபொருள் உறைவதை உயத்துணர்தல் அறிஞர் கடன். பால் முதலான ஐந்து என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் கூறியிருப்பாரே யாயின் எங்சிய நான்கினை நாம் வருவித்துக் கொள்ள வழி ஏற்படுகிறது. ஆனால் பாலைத் தொடர்ந்து இரண்டு பொருள்க ளைக் கூறி அதன்பின் ஐந்து என்று கூறினமையால் வருவிக்க வேண்டியவை ஏதும் இல்லை என்பது போதருகின்றது. அதா வது பொருள்கள் அனைத்தும் கூறப்பட்டன என்பதும் கூறிய மூன்று பொருளிலேயே ஐந்து பொருள்கள் அடங்குகின்றன என் பதும் தெளிவாகிறது. முதலாவது பாலை எடுத்துக் கொண்டோ மானால் ஆனைந்திற்கு அடிப்படையே அது தான். பாலின் திரி புப் பொருள் தயிர்; தயிரின் திரிபுப் பொருள்கள் மோரும், வெண் ணெயும்; வெண்ணெயின் திரிபுப் பொருள் நெய். எனவே பாலையும் அதன் திரிபுப் பொருள்களான தயிர், மோர், வெண் ணெய், நெய் ஆகியவற்றையும் கூட்டிப் பார்க்க நமக்குக் கிடைப் பவை மொத்தம் ஐந்து ஆகிறதல்லவா? எனவே ஆனைந்து இவைதாம்.

இனி, பாலையும், தயிரையும், நெய்யையும் வெளிப்பட கிளந்தெடுத்துக் கூறியதே போல் மோரும், வெண்ணெயும் ஏன் வெளிப்படக் கிளந்தெடுத்துக் கூறப்படவில்லை என கேட்க லாம். பால் தயிராக வேண்டுமாயின் பாலில் பிறைக்குத்தி சில மணி நேரங்கள் பொறுத்திருக்க பால் திரிந்து தயிராகிறது. வெண் ணெய் நெய்யாக வேண்டுமாயின் வெண்ணெயைக் காய்ச்ச வேண்டியுள்ளது. அப்படியின்றி தயிர் கட்டிப்பாகமாகவும், நீர்த் தும், மேல் ஆடும் வெண்ணெயையும் உடனாகவும் உடைமை யால் தயிர் என்று கூறினால் மோரும், வெண்ணெயும் இயல்பாக பெறப்படுதலின் மோரும், வெண்ணெயும் தனியே கிளந்தெடுத் துக் கூறப்படவில்லை என்க.

இது இங்ஙன் இருக்க ஆனைந்தின் உண்மை அறியார் பசு வின் சிறுநீரையும், சாணத்தையும் இறைவர்க்கு அபிடேகம் செய் தல் எத்துணை அறிவீனம் என்பதையும் அநியாயம் என்பதையும் ஆர்ந்துணர்க.

இனி, சுந்தரமூர்த்தி சுவாமிகள் கருணைக் கொடையாக அளித்துள்ள ஆனைந்தைப் பற்றிய கருத்தை மேற்கோளாகக் கொணர்வோமானால் எடுத்த மேற்கோளைத் தருக்க ரீதியாக - அளவை நூற்படி நிறுவுதல் வேண்டும். தருக்க நூல் எடுத்த மேற் கோளை எங்ஙனம் நிறுவுதல் வேண்டும் என்று வழிமுறை வகுத் துள்ளது. அதென்னவெனில் முதலில் மேற்கோளைக் கூறி அதற்கு ஏது கூறி, அது இப்படித்தான் உள்ளது என எடுத்துக்காட் டுக் கூறி, மேற்கோளுக்கு மாறான கருத்துக்களை மறுத்து இதுவே முடிவு என நிறுவுதல் ஆகும். வடநூலார் மேற்கோளைக் கூறி அதன்பாற்படும் ஐயங்களை எடுத்துக் கூறி விலக்கி, பின்னர் மேற்கோளை மறுத்துக் கூறும் பிறர் கூற்றினைக் கூறி, மாற்றுக் கருத்தை மறுத்து முடிவைக் கூறி முடிவிற்கு எடுத்துக் காட்டினை உலகியல்பால் வைத்துக் காட்டுவர். இதனை விடயம், சம்சயம், பூர்வபக்கம், சித்தாந்த நிர்ணயம், சங்கதி என்று வடமொழியில் கூறுவர். தமிழ் அளவையியல் கூறுவதும், வடமொழி தருக்க நூல் கூறுவதும் இரண்டும் ஒன்றின் ஒன்று அடங்குவது ஆதலால் அவை கூறியபடியே நாம் எடுத்துக் கொண்டுள்ள மேற்கோளை இனி நிறுவுவோமாக.

நாம் மேற்கோளாகக் கொண்ட கருத்து ஆனைந்து என்பது பசுவின் பயனான பால், தயிர், மோர், வெண்ணெய், நெய் ஆகிய ஐந்து என்பனவே தவிர வேறில்லை என்பது இக்கருத்து. சுந்தர மூர்த்தி சுவாமிகள் கருத்தைத் தழுவியது என்பது மேலே காட் டப்பட்டது.

இனி, எடுத்துக் கொண்ட மேற்கோளுக்கு ஏது வருமாறு: அபிடேசுத்திற்கு உரியனவாகக் கூறப்படும் பால், தயிர், நெய் ஆகிய மூன்றும் தம்முள் ஒன்றிற்கொன்று தொடர்புடையதாய் ஒன்று மற்றொன்றன் திரிபாய் அமைந்துள்ளது. ஆனால் பாலுக் கும் அதன் திரிபுப் பொருள்களுக்கும் பசுவின் சிறுநீருக்கம், சாணத்திற்கும் இயைபின்மை தெளிவு என்பது ஏது. அதாவது இயைபுடைய மூன்று பொருள்களை நிரல்பட வைத்தபின் இயைபில்லாத இரண்டை ஒருங்கு வைத்தல் இயலாது என்பதே ஏது.

இதற்கு ஐயங்களாவன வருமாறு: 1. பால், தயிர், நெய் என்பன மூன்று தானே அவற்றை ஐந்தெனல் எங்ஙனம்? இந்த ஐயத்தை முன்னரே தெளிவுபடுத்தி விலக்கிவிட்டோம். 2. சிவபூ ஜையில் பஞ்சகவ்வியம் சேர்க்கும் முறை என்று கூறி ஆகமங்கள் பால், நெய், தயிர், பசுவின் சிறுநீர், பசுவின் சாணம் ஆகியவற் றைக் கலவை செய்து பயன்படுத்து முறையைக் கூறுகிறதே என் பது மற்றொரு ஐயப்பாடு. ஆகமங்கள் எல்லாம் இன்று வடமொ ழியில் உள்ளன. வடமொழி ஆரியர் மொழி. ஆயின் ஆரியராகிய சுமார்த்த அந்தணர்கள் ஆகமங்களை ஏற்பதில்லை என்பது கண் கூடு. அவர்கள் ஏற்காத ஒன்று அவ்வாரிய மொழியில் இருப்பது ஒன்றே அது மொழிபெயர்ப்பு என்பதற்குப் போதிய சான்றா கும். மொழி பெயர்ப்பு எனின் எதிலிருந்து மொழி பெயர்த்தார் கள் எனின் தமிழ் ஆகமங்களிலிருந்து மொழி பெயர்த்தனர். ஏனெனில் ஆரியர் இந்நாட்டிற்கு வந்தபோது இந்நாட்டில் வளம் பெற்ற மொழியாக வழங்கியது தமிழ் ஒன்றேதான் என்று சரித்தி ரம் சான்று பகர்கின்றது. இதனைப் பாம்பன் சுவாமிகள், மறைம லையடிகள் சரித்திர ஆசிரியர் ஆர்.எல்.தாண்டேகர் ஆகியோர் நூல்களில் காண்க. இதனைப் பலபட விரித்தல் மற்றொன்று விரித்தலாகிவிடும். எனவே தமிழ் ஆகமங்களை மொழி பெயர்த்த வடமொழி வாணர்கள் பால், தயிர், நெய் ஆகிய ஐந்து என்பது எப்படி ஐந்தாகிறது என்பது விளங்கிக் கொள்ளும் ஆற் றல் இன்மை காரணமாக பசுவின் சிறுநீரையும், பசுவின் சாணத் தையும் சேர்த்துக் கூறி குளறுபடி செய்துவிட்டனர் என்பது தமிழ் வேதமாகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருமுறை வாக்கினின்றும் தெளிவாவதை மேலே நன்று நிறுவியுள்ளதிலிருந்து தெளிவா கும்.

அடுத்ததாக பிறர் கூற்று என்பதை எடுத்துக் கொள்வோமா யின் இக்கருத்து பற்றி பிறர் கூற்று என்று தனியாக ஏதுமில்லை எனினும் அவர் கூற்றாக சிலவற்றை நாமே எடுத்தாண்டு ஆய் வோம்.

பசுவின் சாணம் கிருமிகளைக் கொல்லவல்லது அல்லவா? பசுவின் சாணத்தால் வீட்டைக்கூட மெழுகுவதுண்டே! என்ற கேள்வி எழலாம். பசுவின் சாணம் ஒரு கிருமிநாசினி என்பது சரி. ஆனால் அது அபிடேகப் பொருளாகுமா என்பதே கேள்வி? குளியலுக்கு அதனை நாம் பயன்படுத்தினால் இறைவனுக்கும் அபிடேகத்திற்கு நாம் அதனைப் பயன்படுத்தலாம். குளியலுக்கு நாம் சாணத்தைப் பயன்படுத்த மாட்டோம். ஆனால் இறைவனுக்கு மட்டும் பயன்படுத்துவோம் என்பது ஏற்கத் தக்கதல்ல.

இறைவனுக்கு இதுவரை எந்தத் தலத்திலும் சாணத்தால் அபிடேகம் செய்ததில்லை; பஞ்சகவ்வியம் என்ற முறையில் பால், நெய், தயிர் ஆகியவற்றுடன் பசுவின் சிறுநீரையும், சாணத்தையும் குழைத்துத் தெளித்து சிவபூசையில் சுத்திகரிப்பிற்கு மட்டுமே அதைப் பயன்படுத்தும் படி ஆகமம் கூறுகிறது என்றால் அதுவும் சரியன்று. ஏனெனில் சுத்திகரிப்பிற்கு மட்டுமே பயன்பட வேண்டுமாயின் தயிரும், பாலும், நெய்யும் சேர்ப்பதில் பொருளில்லை அல்லவா? காரணம் சாணம் மட்டும்தான் கிருமி நாசினி.

சாணத்தினை நெருப்பில் இட்டு நீறாக்கி அதனைச் சைவர் வெண்ணீறு எனக்கூறி விதந்தெடுத்துப் பூசும்போது அபிடேகத்திற்கு மட்டும் சாணத்தை ஆகாது என்பானேன் என்று கேட்கலாம். இது சாணத்தை அப்படியே பயன்படுத்துவது சாலாது என்ற கருத்திற்கே துணை செய்யுமே அன்றி அவர்தம் கருத்திற்கு ஆதரவு செய்யாது அவர்க்கு இது தோல்வித்தானமாய் முடியும்.

பசுவின் சிறுநீரை எடுத்துக் கொள்வோமாயின் சாணத்திற்கு உள்ள கிருமி நாசினி என்ற பெருமைதானும் அதற்கு இல்லை. பசுவின் சிறுநீர் நீண்டநாள் தேக்கி வைக்கப்படுமாயின் அதில் தேள் உற்பத்தி ஆகும் என்று சிவஞானபோக பேருரையில் (பக் 141 - கழகப் பதிப்பு) உலகவர் கூற்றாக சிவஞான முனிவர் எடுத்தாள்வதைக் காண்கிறோம். தேள் உற்பத்தி ஆகின்றதோ இல்லையோ கொசு உற்பத்தி நிச்சயம் உண்டு என்பது கண்கூடு. எனவே பசுவின் சிறுநீருக்கு எந்தப் பெருமையும் ஏற்றிட வழியில்லை. ஆக, பசுவின் சிறுநீரையும் சாணத்தையும் ஆனைந்து என இறைவனது அபிடேகப் பொருள்களைக் கூறுவனவற்றில் சேர்த்துக் கொள்ளப்படுதல் வேண்டும் என்ற பிறர் கூற்று யாவும் பொடிபட்டுப் போவதைக் காண்க.

இனி இதற்கு எடுத்துக் காட்டாவன: பால், தயிர், நெய் ஆகியவற்றை அபிடேகப் பொருட்களாகப் பயன்படுத்தப்படுவதற்கு எடுத்துக் காட்டுகள் ஏராளம் என்பதோடு அவற்றை மாற்றுக் கருத்துடையாரும் ஒப்புக் கொள்வதால் அதற்கு எடுத்துக் காட்டு தேவையன்று எனினும் தருக்க நூல் மரபிற்கு ஏற்றபடி அவற்றையும் உள்ளிட்ட எடுத்துக் காட்டுக்களைக் கீழே வருமாறு காண்க.

1) பால்:

பாலையாடுவர் பன்மறையோதுவர்
சேலையாடிய கண்ணுமை பங்கனார்
.... அப்பர், திருக்குறுந்தொகை.

2) நெய்:

நெய்யாடிநின்மலனே நீலகண்டா
நிறைவுடையாய் மறைவல்லாய் நீதியானே
... அப்பர்.

3) தயிர்:

நெய்யும் பாலும், தயிரும் கொண்டு நித்தல்
பூசனை செய்யலுற்றார்
.... சுந்தரர்.

4) பால், தயிர், நெய் மூன்றும்:

ஆடினாய் நறுநெய் யொடு பால் தயிர்
அந்தணர் பிரியாத சிற்றம்பலம்
..... திருஞானசம்பந்தர்.

5) வெண்ணெய்:

நல்வெண்ணெய் விழுதுபெய் தாடுதிர் நாடொறும்
நெல்வெண்ணெய் மேவிய நீரே
நெல்வெண்ணெய் மேவிய நீருமை நாடொறும்
சொல்வண மிடுவது சொல்லே
..... திருஞானசம்பந்தர்.

இதில் விடுபட்டுப் போவது மோர் ஒன்றுமே. தயிர் ஆகும் போது நீருடன் கலந்து மோராகிவிடுவதால் மோர் பற்றி திருமுறைகளில் தனியே கிளந்தெடுத்துக் கூறப்படவில்லை என்று நுனித்துணரலாம்.

இது மட்டுமன்றி ஐயப்பனுக்கு நெய்யபிடேசகம் செய்வது உலகவர் நடையில் உள்ளதாய்க் காண்கிறோம். மதுரையில் முக்குறுணிப் பிள்ளையாருக்கும், அநேக கோயில்களில் ஆஞ்சநேயருக்கும் வெண்ணெய் சாத்துவது கண்கூடு.

இனி ப.இராமநாதம் பிள்ளை என்ற சித்தாந்த செஞ்ஞாயிறு, திருமுறைப் பேறிஞர் இதுபற்றி பலவாறு வலியுறுத்திக் கூறும் கூற்றுக்களைக் காண்க:

''ஆதிப்பாலட்ட மூர்த்தியை ஆனஞ்சும்
வேதிப்பானை'' எனவரும் அப்பர் திருக்குறுந்தொகைப் பாடலுக்கு உடையெழுதுங்கால் அவர் அவ்வரிகட்கு எழுதிய உரையாவது:

''...தூய ஆனிடமாக விருந்து (பாலின் திரிபாகக் கொள்ளப்படும் பால், தயிர், வெண்ணெய், மோர், நெய் என்று சொல்லப்படும் ஐந்தினையும் தனித்தனியாகவும் ஒருங்கு கலந்துந் திருமுழுக்குச் செய்து கொண்டருளுபவனும்...''

(தேவாரத் திருப்பதிகத் திரட்டு (அப்பர்) பக்கம்-40)

''...ஆன்-கறவை; அஞ்சு - பால், தயிர், வெண்ணெய், மோர், நெய்''

(— பக்கம் 41)

''சிவபெருமான் வழிபாட்டிற்கும், பிற நலங்கட்கும் ஆன் பாலும் அதன் விளைவாகிய தயிர், வெண்ணெய், மோர், நெய் என்னும் ஏனைய நான்கும் இன்றியமையாது என்றும் வேண்டப்படுவதாகும். இச்சிறந்த குறிப்பே சிவபெருமான்'' ஆவினில் ஐந்துங் கொண்டு ஆட்டுகந்தான்'' என்பதாகும்.

(— மேற்படி நூல் பக்.14)

முடிந்தது முடித்தல் அல்லது இயைபு: இனி நாம் மேற்கொண்ட கருத்தினை நிறுவுவதற்கு இறுதியாக முடிந்தது முடித்தல் என்னும் தீர்வாகிய பகுதிக்கு வருவோம். இறைவர் தம் திருமஞ்சனத்திற்கு ஆவின் பயனாகிய பாலும் பாலின் திரிபுப் பொருள்களும் பயன்படுவதால் பசுக்குலங்களைப் போற்றிப் பாடுகிறார் தெய்வச் சேக்கிழார். சண்டேச நாயனார் புராணம் பாடி வரும்போது சேக்கிழார் நெக்குருகி விடைக்குலத்தை போற்றிப் பாடும் பாடலில் ஒன்றினைக் கீழே காண்க.

''ஆய சிறப்பினார் பெற்ற அன்றே மன்றுள் நடம்புரியும்
நாயனார்க்கு வளர்மதியும் நதியும் நகுவெண்படலைத்
தொகையும்

மேய வேணித் திருமுடிமேல் விரும்பிஆடி அருளுதற்குத்
தூய திருமஞ் சனம் ஐந்தும் அளிக்கும்
உரிமைச் சுரபிகள்தாம்''

இப்பாடலில் தெய்வச்சேக்கிழார் இறைவனுக்குத் திருமஞ்சனம் ஐந்தும் அளிக்கும் சுரபிகள் என்று பசுவின் மடியை மட்டும் கூறியது பொருள் பொதிந்தது. பசுவின் மடியை இறைவர்க்கு உரிமைப்படுத்தி உரிமைச் சுரபிகள் என்று குறிப்பிட்டதுடன் திருமஞ்சனம் ஐந்தும் அளிக்கும் சுரபிகள் என்று குறிப்பிட்டது திருமஞ்சனத்திற்கு உரியன. பாலும் பாலின் திரிபுப் பொருள் ளான தயிர், மோர், வெண்ணெய், நெய் ஆகிய ஐந்துமே என்று உறுதி செய்தல் காண்க. பசுவின் சிறுநீரும், சாணமும் சுரந்து வருவன அல்ல; அவை கழிவுப் பொருள்கள்.

எனவே தருக்க ரீதியாக நிறுவப்பட்ட ஆனைந்தில் பசுவின் சிறுநீருக்கும், பசுவின் சாணத்திற்கும் இடமில்லை என்பதை ஆன்றோர்கள் உணர்ந்து அவற்றைச் சிவபூசையில் தவிர்த்து எல்லா நலங்களும் பெற்று ஆர்வார்களாக!

சப்த விடங்கத் தலங்கள் (7)

1. திருவாரூர்
2. திருநள்ளாறு
3. திருநாகைக் காரோணம்
4. திருக் காறாயில்
5. திருக்கோளிலி
6. திருவாமூர்
7. திருமறைக்காடு

14. சைவ சித்தாந்த சாஸ்திரங்கள்

1. திருவுந்தியார் - திருவியலூர் உய்யவந்த தேவநாயனார்
2. திருக்களிற்றுப் படியார் - திருக்கடவூர் உய்ய வந்த தேவநாயனார்
3. சிவஞானபோதம் - மெய்கண்ட தேவ நாயனார் (திருவெண்ணைநல்லூர்)
4. இருபா இருபஃது - அருணந்தி சிவாச்சாரியார்
5. சிவஞானசித்தியார் - அருணந்தி சிவாச்சாரியார்
6. உண்மை விளக்கம் - மனவாசகம் கடந்தார் (திருவதிகை)
7. சிவப்ரகாசம் - உமாபதி சிவாசாரியார் (உமாபதிசிவம்)
8. திருவருட்பயன் - உமாபதி சிவாசாரியார்
9. வினாவெண்பா - உமாபதி சிவாசாரியார்
10. போற்றிப் பஃறொடை - உமாபதி சிவாசாரியார்
11. கொடிக்கவி - உமாபதி சிவாசாரியார்
12. நெஞ்சு விடு தூது - உமாபதி சிவாசாரியார்
13. உண்மை நெறி விளக்கம் - உமாபதி சிவாச்சாரியார்
14. சங்கற்ப நிராகரணம் - உமாபதி சிவாச்சாரியார்

செய்யுள்

உந்தி களிறு உயிர் போதம் சித்தியார்
பிந்தி ருபா உண்மை பிரகாசம் வந்த வருட்
பண்பு வினா போற்றி கொடி பாசமிலா நெஞ்சுவிடு
உண்மை நெறி சங்கற்ப முற்று.

— இந்து மத இணைப்புவிளக்கம்
— கே.ஆறுமுக நாவலர் (27.10.63)
பக்கம்10.



அர்த்த பஞ்சகத்தில் தடையியல்

டாக்டர் M.A. வேங்கட கிருஷ்ணன்

வைணவத்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்

உலகில் ஒவ்வொருவரும் எந்தவொரு செயலில் இறங்கும் போதும் ஐந்து விஷயங்களைப் பற்றி நன்கு ஆலோசித்தல் மிக அவசியம்.

உதாரணமாக ஒருவன் கடைக்குச்சென்று ஏதோவொரு பொருளை வாங்கவிரும்புகிறான் என்று வைத்துக்கொள்வோம். அப்போதுகூட அவன் ஐந்து விஷயங்களைப் பற்றித் தெரிந்து கொள்ளவேண்டியுள்ளது.

முதலாவதாக, அப்பொருள் எப்படிப்பட்டது? என்று தெரிந்து கொள்ளவேண்டும். இரண்டாவதாக, அப்பொருள் தனக்குத் தேவை தானா என்றறிந்துகொள்ள, தன்னைப்பற்றியும் நன்கு தெரிந்து கொள்ளவேண்டும். மூன்றாவதாக, அப்பொருளைப் பெறுவதற்கு வழி என்ன (அதாவது, எவ்வளவு பணம் கொடுத்தால் அப்பொருள் கிடைக்கும் என்பன போன்றவற்றை) அறிந்துகொள்ள வேண்டும். நான்காவதாக, அப்பொருளைப் பெறுவதன் மூலம் அவனுக்குக் கிடைக்கக்கூடிய பயன் என்ன என்பதையும் உணர வேண்டும். ஐந்தாவதாக, அப்பொருளைப் பெறுவதில் உள்ள தடை எது? என்பதையும் தெரிந்து கொள்ளவேண்டும். இப்படி உலகியல் வாழ்விலேயே நாம் ஐம்பொருள்களைப்பற்றித் தெரிந்து கொள்ள வேண்டியுள்ளது. எனும்போது, இவ்வுலக வாழ்க்கையை நீத்து, பேரின்பநிலையை எய்தும்போதும் இதே போல் ஐந்து விஷயங்களை நாம் அறிந்து கொள்ளத்தான் வேண்டும் என்பதைக் கூறவும் வேண்டுமோ?

அவ்வைந்து விஷயங்களாவன: 1. பரம்பொருள் என்பது யாது? அதன் தன்மைகள் யாவை? 2. நாம் யார்? நம் தன்மைகள் எவை? 3. பரம்பொருளை நாம் அடைவதற்கு வழி எது? 4. நாம் அடைய வேண்டிய பயன் என்ன? 5. அப்பயனை அடையவிடாமல் தடுக்கும் தடைகள் யாவை? என்பனவையே. இவ்வைம்பொருள்களை அர்த்த பஞ்சகம் என்பர் ஆன்றோர்.

வைணவ சமயத்தில் அர்த்த பஞ்சகம் என்பது மிகவும் உயர்ந்ததாகக் கருதப்படுகிறது. பிள்ளைலோகாசாரியார் எனும் ஆசாரியார் 'அர்த்த பஞ்சகம்' எனும் தலைப்பிலேயே ஒரு நூலை இயற்றியுள்ளார். உலகில் ஒவ்வொருவருக்கும் அர்த்த பஞ்சகத்தை (அதாவது ஐம்பொருள்களை) அறிந்துகொள்வதன் மூலமே வீடுபேறு அடைய முடியும் என்பது வைணவ சமயத்தின் உறுதியான கொள்கை.

இவ்வைம்பொருள்களில் எது மிகமிக முக்கியமானது என்ற கேள்வி எழலாம். ஒவ்வொரு நோக்கில் பார்க்கும்போது ஒவ்வொன்று மிக முக்கியமானதாகத் தோன்றும். அப்படிப்பட்ட ஒரு நோக்கில் பார்க்கும்போது, மற்றெல்லாவற்றையும்விட தடையியலே மிக முக்கியமானதாகப் பார்க்கப்படும். ஏனெனில் வீடுபேறு அடைவதற்கு இன்றியமையாததான அர்த்தபஞ்சக அறிவு ஏற்படுவதற்குத் தடையாவுள்ளது. இந்தத் தடையியல் தானே! எனவே தடையியலை நன்கு அறிந்துகொண்டுவிட்டால், அத்தடைகளைக் கடந்து, அர்த்த பஞ்சக அறிவும் பெற்று வீடுபேறு அடைந்துவிடலாம் அன்றோ!

அதனால்தான் பிள்ளைலோகாசார்யர் தமது அர்த்தபஞ்சகம் எனும் நூலில் தடையியலைப்பற்றி விளக்கும்போது, அர்த்த பஞ்சகத்தில் குறிப்பிடப்படுகின்ற மற்ற நான்கு விஷயங்களுக்கும் ஒவ்வொரு தடையுளது என்று குறிப்பிட்டுக்காட்டுகிறார். அவற்றை இங்கே சுருக்கமாகக் காண்போம்.

1. அர்த்தபஞ்சகத்தில் நாம் முதலாவதாக அறிந்துகொள்ள வேண்டியது 'பரமாத்ம ஸ்வரூபம்' என்று கூறப்படுகின்ற பரம்பொருள் தன்மைகளைப் பற்றியது. ''பரம்பொருள் ஸ்ரீமந்நாராயணன் ஒருவனே; அவன் எல்லாவிதமான நற்குணங்களோடும் செல்வங்களோடும், அழகிய திருமேனியோடும் கூடியவன். பிரமன், சிவன் உட்பட எல்லாத் தேவதைகளையும், அனைத்து ஜீவராசிகளையும் ஆளும் தலைவன் அவனே; எனவே எல்லோரும் அவனுக்கு அடிமைப்பட்டவர்களே'' என்று அறிவதுதான் பரம்பொருளைப் பற்றி உண்மையாக அறிவது. இதற்கு நேர்மாறாக நினைப்பது 'பரத்வ விரோதி' எனப்படும். அதாவது ஸ்ரீமந்நாராயணனைத் தவிர மற்ற தேவதைகளை பரம்பொருளாக நினைத்தல் அல்லது மற்ற தேவதைகளை அவனுக்குச் சமமாக நினைத்தல், பரம்பொருளான நாராயணன் மனிதவடிவில் இவ்வுலகத்தில் அவதரிக்கின்ற காரணத்தினால் அவனை மனிதனாகவே நினைத்தல், கோயில்கள் முதலான இடங்களில் (விக்ரகமாக) எழுந்தருளியுள்ள அவனிடம் சக்திகிடையாது என்று நினைத்தல் முதலியன, அப்பரம்பொருளை அறிவதற்குத் தடையாகவுள்ளவை. இப்படிப்பட்ட தவறான நினைவுகளைக் களைவதன் மூலமே, தடை நீங்கி அவனை நன்கு அறிந்து கொள்ள முடியும்.

2. அர்த்த பஞ்சகத்தில் நாம் இரண்டாவதாக அறிந்துகொள்ள வேண்டியது ஜீவாத்மாவான நம்மைப்பற்றியது. ''கண்ணால் காண்கின்ற உடலைக்காட்டிலும் ஆத்மா என்பது வேறுபட்டது; அது ஸ்ரீமந்நாராயணன் ஒருவனுக்கே அடிமைப்பட்டது; அவனுக்குத் தொண்டு செய்வதற்காகவே ஏற்பட்டது'' என்று அறிந்துகொள்ள வேண்டும். இதற்கு நேர்மாறான அறிவு 'ஸ்வரூப விரோதி' எனப்படும். ஏ. ''ஸ்வரூபவிரோதி களைகையாவது 'யானே நீ என்னுடைமையும் நீயே' என்றிருக்கை'' என்று பிள்ளையுலகாசிரியர் தம்முடைய மற்றொரு நூலில் அருளிச் செய்கிறார்.

பி. யானே என்னை அறியகிலாதே
யானே என்றனதே என்றிருந்தேன்
யானே நீ என்னுடைமையும் நீயே
வானேயேத்தும் வானவரேறே.

என்றருளிச் செய்கிறார் நம்மாழ்வார். ''என்னைப் பற்றி நான் அறிந்து கொள்ளாமல் 'நான்' என்றும் 'என் உடைமைகள்' என்றும் (அகங்கார மமகாரங்கள்) கொண்டிருந்தேன். (பிறகு உன்னருளால்) நானும் உன்னுடைமை என்னுடைமைகளும் உன்னுடையவைகளே என்ற நிந்துகொண்டேன்'' என்கிறார் இப்பாசுரத்தில். எனவே, உடலே ஆத்மா என்றும் நமக்கு நாமே தலைவன் என்று நினைத்தலும், பிற தேவதைகளுக்கு அடிமைப்பட்டவன் என்று நினைத்தலும் ஜீவாத்மாவின் தன்மைகளைப் பற்றி அறிந்து கொள்வதற்குத் தடையாக அமை

ஏ. முமுக்ஷுப்படி - 85

பி. திருவாய்மொழி 2-9-9

யும். இத்தடைகளைக் கடப்பதன் மூலமே ஜீவாத்மாவின் தன்மை களை நன்கு அறியமுடியும்.

3. அர்த்தபஞ்சகத்தில் மூன்றாவதாக நாம் அறிந்துகொள்ள வேண்டியது பரமபொருளை அடைவதற்கு வழி எது என்பது. இது 'உபாயஸ்வரூபம்' எனப்படும். பரம் பொருளான ஸ்ரீ மந்நாராயண னுடைய காரணமற்ற அருள் (நிர்ஹேதுக க்ருபை) மூலமாகவே நாம் அவனை அடையமுடியும்'' என்று அறிவதுதான் உண்மையான அறிவு. இதற்கு மாறாக நம்மை நாமே காப்பாற்றிக் கொள்ளமுடியும் என்று நினைத்தல், நாம் செய்கின்ற செயல்களினால்தான் (கர்மயோ கம், ஞானயோகம் முதலிய உபாயங்களினால்தான்) அவனை அடையமுடியும் என்று நினைத்தல், நாம் செய்கின்ற பிரபத்தி முதலி யவற்றினால்தான் நமக்கு அவன் அருள் செய்கின்றான் என்று நினைத்தல் போன்றவை உபாயத்தை (வழியை) அறியவிடாமல் தடுக்கும் தடைகளாகும். ஏ, ''உபாய விரோதி கழிகையாவது 'களை வாய் துன்பம் களையாதொழிவாய் களைதண் மற்றிலேன்' என்றிருக் கை'' என்றருளிச் செய்கிறார் பிள்ளைலோகாசாரியர். அதாவது ''என் துன்பங்களை நீ போக்கினாலும் சரி, போக்காவிட்டாலும் சரி, உன்னைத்தவிர வேறு காப்பு உடையேனல்லேன்'' என்று எம்பெரு மானைக் குறித்து பி. நம்மாழ்வார் அருளிச் செய்தபடியே எண்ணியி ருத்தலின் மூலமே உபாய விரோதியைப் போக்கிக் கொள்ள முடியும்; உபாயத்தைப் பற்றிய அறிவும் நன்கு ஏற்படும்.

4. அர்த்தபஞ்சகத்தில் நான்காவதாக அறிந்துகொள்ள வேண்டி யது. நாம் அடையவேண்டிய பயனைப்பற்றியது. இது புருஷார்த்தம் அல்லது பலம் என்று கூறப்படும். எம்பெருமானுக்குத் தொண்டு செய்வதே நாம் அடையக்கூடிய உயர்ந்தபேறு. அதுவும் அவனு டைய மகிழ்ச்சிக்காகவே நாம் தொண்டு செய்யவேண்டும். இதற்கு மாறாக, செல்வம், கைவல்யம் முதலிய தாழ்ந்த பயன்களைப் பெற நினைத்தல், எம்பெருமானுக்கே தொண்டு செய்ய எண்ணினாலும் அதைத் தன்னுடைய மகிழ்ச்சிக்காகச் செய்ய நினைத்தல் முதலி யவை உண்மையான புருஷார்த்தத்தை (பயனை) அறிவதற்குத் தடையாக நிற்கும். இதைப் ப்ராப்ய விரோதி என்பர். சி. ''ப்ராப்ய விரோதி கழிகையாவது 'மற்றை நம்காமங்கள் மாற்று'' என்றிருக்கை '' என்கிறார் பிள்ளையுலகாசிரியர். அதாவது, ''எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்றன்னோடு உற்றோமே ஆவோம், உனக்கே நாம் ஆட்செய்வோம்'' (எம்பெருமானே! எல்லாக் காலத்திலும் ஏழேழ் பிறவிகளிலும் நாங்கள் உனக்கே உறவினர்களாகப் பிறக்கக் கட வோம்; உனக்கே நாங்கள் அடிமை செய்யக் கடவோம்) என்று அருளிச்செய்த ஆண்டாள் தொடர்ந்து, ஏ. ''மற்றை நம் காமங்கள் மாற்று'' (எங்களுடைய மற்ற ஆசைகளைத் தவிர்த்தருள்) என்றரு ளிச் செய்கிறாள். இங்கு ஆண்டாள் வேண்டுவதாவது 'உனக்குத் தொண்டு செய்யும்போது அது எங்களுடைய மகிழ்ச்சிக்காக என்ற எண்ணம் எங்களுக்கு எழுமானால் அதையும் நீயே போக்கித் தர வேண்டும்' என்று அவனையே இரக்கிறாள். எனவே நம்முடைய மகிழ்ச்சிக்காகத் தொண்டு செய்வது என்றிராமல், அவனுடைய மகிழ்ச்சிக்காகவே தொண்டு செய்யவேண்டும் என்ற அறிவைப் பெறுவதன் மூலமே ப்ராப்ய விரோதியைப் போக்கிக் கொள்ளமுடி யும் என்கிறார் பிள்ளையுலகாசிரியர்.

5. ஆக, பரம்பொருளைப்பற்றிய அறிவு, ஜீவாத்மாவைப் பற் றிய அறிவு, உபாயத்தைப் பற்றிய அறிவு, புருஷார்த்தத்தைப் பற்றிய அறிவு ஆகிய இந்நான்கு அறிவுகளுக்கும் எதிரிடையாக (அதாவது அவற்றைத் தவறாகப் புரிந்து கொள்வதால்) உண்டாகக்கூடிய அறி விற்கு விரோதிஸ்வரூபம் என்று பெயர். இதுதான் தடையியல் எனப் படுவது. இப்படித் தடையாக நிற்கக் கூடிய அறிவு ஏற்படுவதற்குக் காரணம், முற்பிறவியில் செய்த வினைகளின் காரணமாக உடலுடன் ஏற்பட்டுள்ள தொடர்பு, பகவானிடத்திலும், அவனடியார்களிடத்தி லும் அபசாரப்படுதல் முதலியவற்றாலுண்டாகும் பாவங்கள் முதலிய வையே. எம்பெருமானுடைய அருளால் இவ்விரோதிகளைப் போக் கிக் கொள்வதன் மூலமே நாம் அர்த்தபஞ்சக அறிவுபெற்று வீடுபேறு அடையமுடியும்.

எம்பெருமானால் மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார் கள் அருளிச் செய்த திவ்வியப் பிரபந்தப் பாசுரங்கள் அனைத்தும் இவ்வைம் பொருள்களையே வலியுறுத்திகின்றன.

ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோரூபம் ப்ராப்துச்ச ப்ரத்யகாத்மந;
ப்ராப்த்யுபாயம் பலம் ப்ராப்தே: ததா ப்ராப்திவிரோதி ச;
வதந்தி ஸகலா வேதா: ஸேதிஹாஸபுராணகா:
முநயச்ச மஹாத்மாந: வேதவேதார்த்த தர்சிந:

(அடைய வேண்டிய பரம்பொருளின் தன்மை, அடைகின்ற ஜீவாத்மாவின் தன்மை, அடைகின்ற வழி, அடைவதினால் பெறும் பயன், அடையவிடாமல் தடுக்கும் தடை ஆகிய ஐம்பபொருள்க ளையே எல்லா வேதங்களும், இதிஹாஸபுராணங்களும் கூறுகின் றன. வேதங்களின் உட்பொருளை அறிந்த முனிவர்களும் மஹாத் மாக்களும் இதையே கூறுகின்றனர்.) என்பது மிகவும் பிரஸித்தமான சுலோகம்.

இங்கு மஹாத்மாக்கள் என்று குறிப்பிடுவது யாரை என்ற ஐயம் எழலாம். பி. ''வாஸுதேவஸ் ஸமஹாத்மா'' (எல்லாம் வாசுதே வனே என்பவன் மஹாத்மா) என்று கண்ணபிரானே அருளியுள் ளான்; எனவே சி. ''உண்ணும் சோறு பருகும் நீர் தின்னும் வெற்றிலை எல்லாம் கண்ணன் எம்பெருமான்'' என்றிருந்த நம்மாழ்வார் போன் றவர்களே மஹாத்மாக்கள் என்பர் பெரியோர். அதற்கேற்ப, நம்மாழ் வார். அருளிச் செய்த திருவாய்மொழியும் அர்த்தபஞ்சகத்தையே விளக்குவதாக பராசரபட்டர் தனியனில் அருளிச் செய்துள்ளார்:

மிக்கவிறை நிலையும் மெய்யாமுயிர் நிலையும்
தக்கநெறியும் தடையாகித் - தொக்கியலும்
ஊழ்வினையும் வாழ்வினையும் ஓதும் குருகையர்கோன்
யாழினிசை வேதத்தியல்.

என்பதே அத்தனியன். நம்மாழ்வார் தடையியலைப்பற்றி நான்கு பதிகங்கள் அருளிச் செய்துள்ளார். அப்பாசுரங்களில் சிலவற் றைக் காண்போம்.

தடைகளை அறிந்துகொண்டு, அத்தடைகளை விலக்கி வீடு பேறு அடையுங்கள் என்று உபதேசிக்கிறார். ஏ. ''வீடுமின்முற்றவும்'' என்று தொடங்கும் பதிகத்தில். அதில் ஒரு பாசுரத்தில், அகங்கார மமகாரங்களை அடியோடு தொலைத்து, எம்பெருமானைப் பற்றுங் கள் என்கிறார்.

பி. நீர் நுமதென்றிவை வேர்முதல் மாய்த்து இறை சேர்மின் உயிர்க்கு அதனோ் நிறையில்லே.

என்பது அப்பாசுரம். ''நான், எனது, எனும் அகங்கார மமகாரங் களை அடியோடு விட்டுவிடுங்கள்'' என்று கூறவேண்டியிருக்க, ஆழ்வார் ''நீர் நுமது என்றிவை வேர் முதல் மாய்த்து'' என்றருளிச்

ஏ. முமுக்ஷுப்படி - 85

பி.திருவாய்மொழி 5-8-8

சி. முமுக்ஷுப்படி - 85

ஏ. திருப்பாவை - 29

பி. பகவத்கீதை 7-19

சி. திருவாய்மொழி 6-7-1

ஏ. திருவாய்மொழி 1-2

பி. மேற்படி 1-2-3

செய்ததற்குக் காரணம் என்ன என்பதை நம்பிள்ளை எனும் ஆசாரியார் வெகு அழகாகக் காட்டுகிறார். நான், எனது, எனும் சொற்களைத் தன் வாயால்கூடச் சொல்ல விரும்பாமல்தான் 'நீர் நுமது' என்றருளிச் செய்துள்ளார் ஆழ்வார் என்கிறார் நம்பிள்ளை. ''நான் எனது என்று தம் வாக்காலே சொல்ல மாட்டரே, நாக்கு வேம் என்று'' என்பது நம்பிள்ளையின் ஈடு உரை.

செல்வத்தைப் பெறுவதற்காகத் தாழ்ந்த மனிதர்களைத் துதிக்கும் மதியற்ற மனிதர்களை நோக்கி அறிவுரை வழங்குகிறார் சி, ''சொன்னால் விரோதமிது'' என்று தொடங்கும் மற்றொரு பதிகத்தில். அதில் ஒரு பாசுரத்தில் ஆழ்வார் அருளிச் செய்கிறார்.

டி என்னாவதெத்தனை நாளைக்குப்போதும் புலவீர்காள்
மன்னாமனிசரைப்பாடிப் படைக்கும் பெரும்பொருள்
மின்னார்மணிமுடி விண்ணவர் தாதையைப் பாடினால்
தன்னாகவே கொண்டு சன்மம் செய்யாமையுங் கொள்ளுமே.

''அற்பர்களான மானிடர்களைக் குறித்துப் புகழ்ந்து பாடுவதால் என்ன பயன் கிடைக்கப் போகிறது? செல்வம்தானே! அந்தச் செல்வம் எத்தனை நாளைக்கு நிற்கும்? ஆனால், விண்ணவர் தலைவனான எம்பெருமானைக் கவி பாடினால் உங்களை அவன் தனக்கு அடிமையாகவே கொண்டு, இனிமேல் உங்களுக்குப் பிறவியே இல்லாமல் செய்துவிடுவான்; எனவே அவனையே துதியுங்கள்'' என்கிறார் ஆழ்வார்.

செல்வம் போன்ற தாழ்ந்த பயன்களை விரும்புவதும், அதையும் தாழ்ந்த மனிதர்களிடம் பெறவிரும்புவதும் பயனற்றது என்றருளிச்செய்த ஆழ்வார், செல்வத்தின் நிலையாமையை ''ஒருநாயகமாய்'' என்று தொடங்கும் பதிகத்தில் நன்கு அருளிச் செய்கிறார்.

ஏ. ஒரு நாயகமாய் ஓடவுலகுடனாண்டவர்
கருநாய் கவர்ந்த காலர் சிதைகிய பானையர்
பெருநாடுகாண இம்மையிலே பிச்சைதாம் கொள்வர்
திருநாரணன்தாள் காலம்பெறச் சிந்தித்துய்மினோ.

இப்பாசுரத்தில் செல்வத்தின் நிலையாமையை வெகு அழகாக விளக்குகிறார் ஆழ்வார். பூவுலகம் முழுவதையும் ஆளுகின்ற ஒரே சக்கரவர்த்தியாக இருக்கிறான் ஒருவன். வெகுகாலம் அப்படி அரசாட்சி செய்து வந்த அவன் திடீரென்று ஒருநாள் எதிரிகளால் தோற்கடிக்கப் பட்டுவிட்டான். வெளியில் வந்தால் தன்னைக் கொன்றுவிடுவார்களோ என்று பயந்து ஒருவரும் அறியாவண்ணம் ஒரு குகையிலே பதுங்கிக்கிடக்கிறான். இரவு நேரம் வந்தது. பிச்சையெடுத்தாகிலும் உண்ணவேண்டிய அளவுக்குப் பசிவந்தது. பிச்சையெடுப்பதற்கும் பாத்திரம் வேண்டுமே! அந்தக் குகையில் ஒரு உடைந்த ஓடு இருப்பதைக் கண்டான். அதையே எடுத்துக் கொண்டு புறப்பட்டான். இருளோடு இருளாய்க் கறுத்த நாய்கள் தெருவிலே கிடக்குமே! இவன் இருளில் தெரியாமல் அதன்மீது தனது காலை வைத்துவிட்டான். அதனால் அது இவன் காலைக் கடித்து விட்டது. முன்பு வீரக்கழல் அணிந்த காலை உடையவர் என்று புகழப் பெற்றவன் இப்போது நாய் கடித்தகாலை உடையவன் என்கின்ற நிலைக்கு வந்து விட்டான். அதுமட்டுமா?

முன்பு பொற்கிண்ணங்களிலே உணவு உண்டவன் இப்போது சிதைந்த ஓட்டைக் கையிலே கொண்டிருந்தான். முன்பு யாரேனும் காணிக்கையிட வந்தாலும் அவர்களைக் கண்ணெடுத்தும் பாராமல் அலட்சியம் செய்தவன் இன்று அனைவரும் காணும்படி பிச்சையெடுக்கிறான். முன்பு காணிக்கைகளைத் தம்கையால் வாங்குவது தன் மதிப்பிற்குக் குறைவு என்று எண்ணி, வேலையாட்களையிட்டு வாங்கியவன், இன்று பிச்சையைத் தானே தன் கையால் வாங்குகிறான். பெரும் செல்வச்செழிப்போடு இருந்தது ஒருபிறவியிலே, பிச்சையெடுப்பது மற்றொரு பிறவியிலே என்றுகூடக் கொள்ளமுடியாதபடி, இம்மையிலே, இப்பிறவியிலேயே இப்படிப்பட்ட ஏழ்மையை அடைவன். இப்படிப்பட்ட நிலையாமையை உடைய செல்வத்தைப் போய் அடைய வேண்டிய பயனாக (புருஷார்த்தமாக) நினைக்கிறீர்களே! உடனே ஸ்ரீமந்நாராயணனுடைய திருவடிகளைச் சிந்தித்து உய்வு பெறப் பாருங்கள் என்கிறார் நம்மாழ்வார்.

இப்படி செல்வத்தின் நிலையாமையை அருளிச் செய்த ஆழ்வார் 'கொண்ட பெண்டிர்' என்று தொடங்கும் மற்றொரு பதிகத்தில் எம்பெருமான் ஒருவனே நமக்கு உற்ற உறவினன், மற்றெல்லோரும் உறவினர்கள் அன்று. ஆகையாலே அவர்கள் கைவிடத்தக்கவர்களே என்கிறார்.

ஏ. கொண்டபெண்டிர் மக்களுற்றார் சுற்றத்தவர் பிறரும்
கண்டதோடு பட்டதல்லால் காதல் மற்றியாதுமில்லை
எண்டிசையும் கீழும்மேலும் முற்றவும் உண்டபிரான்
தொண்டரோமாயுய்யல்லால் இல்லைகண்டீர் துணையே.

கைக்கொள்ளப்பட்ட மனைவியர், வயிற்றில் பிறந்த பிள்ளைகள், உறவினர்கள், மற்றுமுள்ள நண்பர்கள் ஆகிய அனைவரும் கையிலே பணம் கண்டபோது நம்மை நேசிப்பர்களேயொழிய, வேறு விதமாகச் சிறிதுமில்லை. பத்து திசைகளிலும் உள்ள பொருள்கள் அனைத்தையும் பிரளயகாலத்தில் உண்டவனான எம்பெருமானுக்கு அடியவர்களாகி உய்வது தவிர வேறு உற்ற துணை எதுவுமில்லை என்கிறார் ஆழ்வார். உலகத்தில் உறவினர்கள் என்று கூறிக்கொள்பவர்கள் உதவி செய்வதுபோல வந்து நம்மையே அழித்துவிடுவர்கள் என்கிறார் மற்றொரு பாசுரத்தில்.

பி. துணையும் சார்வுமாகுவார்போல் சுற்றத்தவர் பிறரும்
அணையவந்தவாக்கமுண்டேல் அட்டைகள் போல் சுவைப்பர்

துணையாகவும் சார்பாகவும் இருப்பவர்கள்போல் நடித்து, வாய்ப்புக் கிடைக்கும்போது, பசையற ரத்தத்தைக் குடிக்கும் அட்டைகள் போல நம்மிடத்தில் உள்ளவைகளை உறிஞ்சிவிடுவர்.

சி. பொருள்கையுண்டாய் செல்லக் காணில் போற்றியென்றேற்றெழுவர் இருள்கொள் துன்பத்தின்மை காணில் என்னே என்பாருமில்லை

நம்கையிலே பொருள் இருந்தால் நம்மை வாழ்த்துப்பாடி மயக்கி ஏதேனும் பெற்றுக்கொண்டு சென்றுவிடுவர். துன்பத்தை விளைக்கக்கூடிய ஏழ்மையிலே நாம் இருந்தோமானால் ஏன் என்று கூடக் கேட்காமல் அலட்சியம் செய்வர்கள் என்று ஆழ்வார் உலகியல் வாழ்க்கையை அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறார். இப்படிப்பட்ட உலகியல் உறவினர்களை விட்டுவிட்டு நமக்கு எல்லா விதத்திலும் உறவினனான எம்பெருமானையே பற்றவேண்டும் என்று அறிவுரை வழங்குகிறார்.

தடையியலைப் பற்றி ஆழ்வார் அருளிச் செய்துள்ள நான்கு பதிகங்களுமே பிறருக்கு அறிவுரை வழங்கும் விதத்தில் பரோபதேசமாக அமைந்துள்ளது ஒரு தனிச்சிறப்பாகும்.

ஆழ்வாருடைய அறிவுரைகளின்படி தடையியலை நன்கு அறிந்து கொண்டு, அத்தடைகளைக் கடந்து, அர்த்தபஞ்சக அறிவும் பெற்று வீடுபேறு அடைவோமாக!

சி. மேற்படி 3-9

டி. மேற்படி 3-9-4

ஏ. திருவாய்மொழி 4-1-1

ஏ. திருவாய்மொழி 9-1-1

பி. மேற்படி 9-1-2

சி. 9-1-3



ONLY ONE LOGICAL CONCLUSION IN SAIVISM - MONOISM

(GOPAL VEERA BUDROO. B.A., SOUTH AFRICA.)

The emergence of man from savagery and barbarism to the realization that he had a duty towards his fellow being heralded a dawn of civilization.

Self-realization through meditation leads to God realization. Saints and sages, especially the authors of the Thiru murais, the Thiruvasagam and the Arutpa have encountered Lord Siva through deep meditation.

According to Thirumoolar, Saiva Sithantha believes in the 3 entities known as Pathi – Siva, Pasu – Soul, Paasam – the fettering bonds and that these three are eternal.

Cows are of different colours, their milk is however of one colour. The cowherd who grazes them and cares is of a different colour. When the cowherd leads them with a stick, they have simple faith and follow him.

In the 3rd verse of the chapter entitled "Upadhesam" in the first Tantram of the Thirumanthiram it states :

"Pathi pasu paasam enapphar moondril
Pathiyinaipol pasu paasam anaadhi
Pathiyniai sendru anuhaa pasupaasam
Pathi Anuhil pasu paasam nilaave"

This verse is paraphrased thus :

Of the 3 mentioned as Pathi, Pasu and Paasam, the pasu and paasam are beginningless as Pathi. Pasupaasam will not and cannot go anywhere near Pathi. If Pathi gets anywhere near Pasu, Pasupaasam will not be there any more.

The words Pasu and Paasam written separately mean "soul" and "bonds". The same two words written as Pasupaasam mean the fettering bonds which has the soul in its grip.

Annadhi means beginningless, – eternal.

Thirumoolar emphasises that the soul, bonds and Pathi i.e., Siva Himself are beginningless. Paasam is "MALAM" or impurity comprising "ANAVAM" (ego), "KANMAM" (action) and "MAYA" (illusion). These 3 impurities with their subtle variations are elaborated and referred to as the bondage.

Lines 3 & 4 referring to "Pasu Paasam" grammatically speaking is a collective plural and refers to all the malams attached to the soul.

In the 2 lines of the tenth verse in the Chapter entitled "Kevala Sahala Suddham" in the 8th tantram ;

"Anaadhi Pasu Viyathi Ahaum Ivanai
Anaadhuyil Vandha Malam Ainidhal Aati"

These 2 lines indicate the eternal nature of the soul and the impurities comprising the Paasams are clearly indicated by Thirumoolar.

In the 8th tantram entitled "ARIVUDHYAM" The verse runs thus :

"Arivu Vadivu Endru Ariyaatha ennai
Arivu Vadivu Endru Arul Saythaan Nandhi
Arivu Vadivu Endru Arulal Arindhe
Arivu Vadivu Endru Arividhu Irundhene"

(2357)

Thirumular says that he (the soul) did not know that he was "intelligence in form, until Nandhi out of grace, made it known to him. And on knowing that his form was intelligence he continued to be poised in it.

The soul which is in the form of intelligence is unborn, not created, and it does not perish, does not die. The eternal nature of the soul is thus stated again by Thirumular in the following verse :

"Arivu Azhivillai Aakamum illai
Arivuku Arivallathu Aadhaaram illai
Arive Arrivai Ariparindrathu endrittu
Araihindrana marai eeruhal Thame"

The above verse says that for the soul which is in the form of intelligence there is no other support excepting the Lord, who is all knowledge, that it takes note of the soul which is in the form of intelligence. The soul, though a distinct and eternal entity is ever dependent on the Lord, this has been thus emphasised by Thirumular in the Chapter entitled "Pathi, Pasu, Paasam Verinnmai" in the 8th Tantram

"Arivu Arivu Endra Arivum Anaadhi
Arivuku Kattiya Paasam Anaadhi
Arivu Pathiyal Pirappu Arum Thaane"

The soul is indicated again and again as (Arivu) i.e., intelligence. Pathi who imparts knowledge to that soul, and Paasam which binds that Arivu, namely the soul are all beginningless. When the Lord who is all knowledge gets embedded in the soul the chain of birth is snapped. Mukthi or salvation is attained.

Thirumular says that we would not have known about the eternal nature of Pasu and Paasam and about the removal of Pasupaasam by the Lord had not Siva imparted that knowledge out of grace, to the Saivites who aspired for that knowledge.

Saiva Sithantha emphasises that the soul ultimately becomes God-like and NOT God himself. Like God it partakes the nature of "intelligence". But, though the soul had, prior to its redemption from the fettering bonds, only imperfect or finite knowledge, this is so owing to the obsucuring of its intelligence by Anava Malam.

The soul does not ever know that its real form is intelligence and it gets to know only when it is rid of the Malam by the grace of the Lord and when taught by Him that its real form is intelligence.

Manickavasagar says in Muthineri :

"Sithamalam arivithu – Siva maagi yennay andeh"

Get rid of the original sin and make me one like you my LORD. Commentary – "God is distinct from man."

In the verse 2410 Thirumoolar says:

"Naadum Pathiyudan Nal Pasu Paasamum
Needuma Nithan Nilai Arivar illai
Neediya Nitham Pasupaasa Neekamum
Nardya Saivarku Nandhi Alitha thate."

Thirumoolar seems to pity those who do not get to know the eternal nature of Pasu and Paasam along with Pathi. His concern for those who fail to know the truth about the said 3 eternal entities is clear when he says in verse 328 referring to the behaviour of the "Vaama sect" in the mode of worshipping of Sakthi and decries their habit of drinking as part of the observance of its rituals. What a pity he says "these men do not realise the inherent truths and get to know about Pasu Paasam; they do not seek and get benefitted by the grace of the munificent Lord, they do not take Sivayoga that would give clear and true divine wisdom (gnanam), these drunkards are ever unaware of the underlying truth. The following is the text of that verse:

"Ull unmai oraar Unaraar Pasupaasam
Vallanmai Nadhan Arulinin Vazhvuraar
Thellunmai Gnana Sivayogam Saarvuraar
Kallunum Maandhar Karuthu Ariyaare."

It is emphasised again about the eteral nature of Pasupaasam, in verse 1577 when the word "moova" is used. Moova means that which does not age with age, is constant forever.

The Lord who is Guru sees to it that the devotee adopts the method of approaching and recognising the entire scheme is things in the universe as compromising the said 3 entities that He, by initiation, that is, by "Upadhesam" renders ineffective the non aging Pasu Pasaam. Then, by means of Mukthi He bestows on the devotee everything worthy out of supreme mercy.

Thirumoolar also mentions the word "Vaatalal" which occurs in verse 1577. "Vattal" means subjecting a thing containing moisture to heat and dehydrating it. It is explained that the Lord, by conveying the truths to the devotees by Upadhesam neutralises the effect of Pasupaasam. There is no question of destroying it, indestructible as it is.St Sambandar in his Thirumurai (1–12–3) stated succintly and in a forthright manner about the eternal nature of Pasu and passam.

"Vilayathathar Parisil Varu pasupaasa Vedhanai Onn thalaiyina Thavirav Varul Thalaivan" meaning:

The Lord who bestows grace on the soul so as to redeem it from the fettering bonds are by their nature beginningless.

Pasaam is a bond which is beginningless connected to the soul. Anava which envelopes the soul is not created.

Pasu Vedhanan is Kanmam or action and the luminous bond is (Ohnthalai) that is Maya which provides scope for the soul to desire to know and act.

St. Appar in Enugan Yensoli says; when his life was about to leave his body:

"Puniyeh wum adikeh podiginren"

Virtuous one I proceed to your feet.

He attained salvation in living experience.

In Thalayeh Nee Vanangaai St. Appar says that it was impossible for Brahama and Vishnu to see him, but he realised the Lord within himself.

In Osai oli yellam, Appar says:

"Aarum aariyaai idathaai nee yeh"

You are in the place not perceived by even one.

"He is omnipresent."

"Ulagukku oruvanaai nindraai ne yeh"

You stand as the peerless one throughout the world.

"dhesa vilakellam anaai nee yeh"

You have become the light of the world.

Appar's pathigams always states that the Lord had trampled Raavana and bestowed grace and that he equally wants Lord Siva's grace.

Commentary

Lord Siva is merciful - gave salvation to Raavana - "Anbare Sivam Sivameh Anbare."

The stength of the soul consists only in adoring Him. It will be an unforgivable sin for the soul, if it were to forget the Lord, who had lifted it up from darkness and showered on it happiness. Let's have the unswerving gratitude towards God for the pitfalls suffered and anticipating the final release that has no fear of death. But the qualities to attain this is simplicity, humility, love, piety, and the fruits will come to bear where birth and death is no more.

The purport of His Cosmic Dance is to redeem the souls from Bondage. The place of that dance is in the heart of those who regard all living beings as equal to them. God takes the heart of the pure souls as His abode and He is forever hunting after such hearts.

Intense and concentrated meditation to God, begets inspired devotion to Him. It is called Bhakthi, which leads to the highest consciousness of the mind. Love towards God. This will perceive the presence of God in all living beings and inanimate objects. That exhalted love absorbs him in perpetual enjoyment of God consciousness in his soul.

The 3 great malams are to the soul what the husk and bran are to the soul what the husk and bran are to the sprouting grain. The soul is like rice which is enshrouded by the husk and bran. In that state the sould has no contact with the Lord. Detach yourself from paasam and yearn for Him.

The souls are several millions. If paasams are cut as-under, the soul will catch hold of the Lord and will not thereafter leave Him.

Thirumoolar advises in verse 99 of the Payiram;

Introduction to Thirumanthiram, that;

3,000 verses in Tamil contain the truths as told by Nandhi – (his Guru) out of sheer grace for all the world to know that those who get up early - when the mind and intellect is clear and read the verses, sing and understand their correct importance, will reach Him who is head of all worlds.

In conclusion, on behalf of the South African Tamil Federation and its President, Thiru Sathia Pillay, the Anaithulaga Deiva Tamil Muthal Manadu deserves every credit in arranging such a conference, for surely - Tamil is the most ancient and highly developed language of the world.



உலகம் உய்ய ஒரே வழி

செ. சிவசாமி. பி.ஏ., (ஹானர்ஸ்)

நாம் இருபதாம் நூற்றாண்டின் கடைசிப்படியில் நின்று கொண்டிருக்கின்றோம். இந்த நூற்றாண்டில் விஞ்ஞானத்தின் பல்வேறு துறைகளிலும் மாபெரும் வெற்றிகளையும் சாதனைகளையும், மனிதன் படைத்துள்ளான், அணுசக்தி உற்பத்தி, சந்திர மண்டலத்தில் மனிதன், விண்வெளி ஆராய்ச்சி, உயிரியல் துறையில் புரட்சி மற்றும் பல துறைகளிலும் கற்பனையையும் மிஞ்சும் சாதனைகள், உணவு மற்றும் பொருள் உற்பத்திகள் பெருகிப் பொருளாதாரமும் செல்வச் செழிப்பும் உலகமெங்கும் ஓங்கியுள்ளன. இதன் விளைவாக தனி மனிதனுக்கும் உணவு, உடை, உறைவிடம், வாகனம், மற்றெல்லா வாழ்க்கை வசதிகளும் பெருகியுள்ளன. நமது நாட்டிலும் பல நூற்றாண்டுகளிலும் இல்லாத அளவுக்குப் பொருளாதார வளர்ச்சியைக் கடந்த ஐம்பது ஆண்டுகளில் மட்டுமே கண்டுள்ளோம் என்பதில் ஐயமில்லை.

மனிதன் தனது விஞ்ஞான அறிவின் துணையால் இயற்கைச் சக்தியின் இரகசியங்கள் பலவற்றைக் கண்டு பிடித்துத் தனது வாழ்க்கை வசதிகளை மிகுதியாகப் பெருக்கிக் கொண்டாலும் அதாவது பொருளாதார அடிப்படையில் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொண்டாலும், உண்மையான இன்பத்தையும் மகிழ்ச்சியையும் தரக்கூடிய வாழ்க்கையை வீட்டிலும், நாட்டிலும் அமைத்துக் கொள்வதில் முன்னேற்றம் கண்டுள்ளானா? சற்று நிதானமாகச் சிந்தனை செய்தால் இந்தக் கேள்விக்குப் பதில் முன்னேற்றம் இல்லை என்பது மட்டுமல்ல! பின்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பதாகும். எப்படி என்று பார்ப்போம்.

மனிதனின் முயற்சிகள், செயல்கள் அனைத்திற்கும் மூலகாரணம் இன்பம் அல்லது மகிழ்ச்சியை நாடுவது தான். அதை வாழ்க்கையில் அடைவதற்கு என்னென்ன தேவை? வாழ்க்கை வசதிகளை அளித்திடும் செல்வம் மட்டும் போதுமா? போதாது. "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்ற வாக்கின்படி தேக ஆரோக்கியம் வேண்டும். அன்பும், ஒழுக்கமும், பாசமும் நிறைந்த குடும்பமும், நட்புணர்வும், சகோதரத்துவமும் நிறைந்த சமுதாயமும், சட்டம், ஒழுங்கு, நீதி, நேர்மை இவற்றைப் பராமரிப்பதில் கடமை தவறாத அரசு இவையனைத்தும் தேவை. இவைகளனைத்துக்கும் மேலாகத் தனி மனிதனிடம் நல்ல மனம் தேவை, ஆனால் இன்றுள்ள நிலைமை என்ன?

எந்த வேகத்தில் விஞ்ஞான உத்திகளும் தொழில் நுட்பங்களும், பொருளாதாரமும் வளர்ந்து வருகின்றனவோ அதைவிட அசுர வேகத்தில் நாட்டில் சீர்கேடுகள் பெருகி வருகின்றன. ஒன்றாக வாழ்ந்த குடும்பங்கள் சிதறிக் கொண்டுள்ளன. நட்பாக இருந்து அந்த மக்கள் சமுதாயத்தில் சாதி, மதம், இனம், மொழி, கட்சி என்ற வேறுபாடுகளால் பகை உணர்வும், கலகங்களும் வளர்ந்து கொண்டுள்ளன. பதவிமோகத்தால் கட்சிகள் உடைந்து சிதறுகின்றன. நாடுகள் துண்டாடப்படுகின்றன. ஒரு பக்கம் நட்பு சமாதானம் என்று பேசிக் கொண்டு மறுபக்கம் நாடுகள் அணுகுண்டு தயாரிப்பதில் முனைகின்றன.

உரிமைகளுக்குப் போராடுகின்றவர்கள் கடமைகளை மறந்துவிட்டார்கள். செய்தித்தாள்களில் கொலை, கொள்ளை, விபத்து, கலவரம் பற்றி செய்திகளே முக்கிய இடம் வகிக்கின்றன. "கள், காமம், கவறு ஆகிய தீய சக்திகள் மூன்றும் தலை விரித்தாடுகின்றன. பெற்றோர், ஆசிரியர்கள் மற்றும் பெரியோர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த மதிப்பும் மரியாதையும் மறைந்துவிட்டன. வரதட்சணைக் கொடுமையால் பெண்மக்கள் வாட்டி வதைக்கப்படுகின்றனர், மறை நூல்களையும் ஆன்மீகப் பெரியார்களையும், சமயக்கோட்பாடுகளையும் மக்கள் மறந்துவிட்டார்கள். இந்த அவலமான சூழ்நிலை நாட்டில் உலவும்போது மனிதனுக்கு உண்மையான இன்பமும், மகிழ்ச்சியும் எப்படிக் கிடைக்கும்?

வேத இதிகாசங்களிலும், ஆகம சாஸ்திரங்களிலும், மறைநூல்களிலும், திருமுறைகளிலும் சொல்லப்பட்டுள்ள வாழ்க்கைத் தத்துவங்களையும் வழி முறைகளையும் நம் நாட்டில் தோன்றிய மாமுனிவர்களும், மகான்களும், அவதாரப் புருடர்களும், சித்தர்களும், ஞானிகளும் தெளிவாகவும், விளக்கமாகவும் போதனைகள் செய்து வந்துள்ளனர். இப்போதனைகளின் சிறப்புகளையும், மேன்மைகளையும் போற்றிப் புகழ்ந்து திரும்பும் இடமெல்லாம் பேசவும், எழுதவும் செய்கின்றார்கள். ஆனால் அவற்றை நடைமுறையில் கொண்டு வரவும், செயலில் கடைப்பிடிக்கவும் இயலாத நிலையில் மனிதன் இருக்கின்றான். மனிதனின் பேச்சு ஒன்றாகவும், செயல் வேறாகவும் உள்ளது. அதாவது நல்வழிகளைப் பின்பற்றவேண்டுமென்ற விருப்பம் இருந்தாலும் செயற்பாட்டில் கொண்டு வரும் சக்தி அவனிடம் இல்லை, இது ஏன்? மனிதன் தனது வாழ்க்கை முழுவதிலும் ஆற்றும் செயல்கள் அனைத்திற்கும் ஆதாரமாக இருந்து உயர்வுக்

கும் – தாழ்வுக்கும், நன்மைக்கும் தீமைக்கும் காரணமாக வும், கருவியாகவும் இருப்பது அவனது மனம் அல்லது சித்தம் ஆகும். இந்த கருவி எப்படிச் செயல்படுகின்றது என்று பார்ப்போம்.

பிரபஞ்சங்களனைத்தையும் இயக்கி வரும் இயற்கை அன்னையின் வெவ்வேறு தோற்றங்களான ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், நிலம் என்ற ஐம்பெரும் பூதங்களும் முறையே அவைகளின் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்து தன் மாத்திரைகளின் மூலமாக, மனித உடலிலுள்ள, காது, மெய், கண், நாக்கு, மூக்கு என்ற ஐம்புலன்களையும் இயக்கி வருகின்றன. இந்த ஐம்புலன்களும் புத்தி, சித்தம், அகங்காரம் எனப்படும் அந்தக் கரணங்களை உள்ளடக்கிய மனம் (MIND) என்றழைக்கப்படும் அந்தக் கரணத்தின் கட்டுப்பாட்டில் இயங்கிவருகின்றன.

நமது முன்னோர்கள் தங்களின் அனுபவ முதிர்ச்சியால் நமக்களித்த பொன் மொழிகள்

1. **மனம் போல் வாழ்வு**
2. **மனம் போல மாங்கல்யம்**
3. **மனம் பாதி மருந்து பாதி**
4. **மனமிருந்தால் மார்க்கமுண்டு**

இவை மட்டுமா? இன்னும்.

1. **மனம் ஒரு குரங்கு**
2. **மனம்போன போக்கெல்லாம் போக வேண்டாம்.**

இந்த பழமொழிகள் நமக்கு அறிவுறுத்துவது என்ன? ஒருவனது வாழ்க்கையின் உயர்வும், தாழ்வும் அவனது மனத்தின் தன்மையைப் பொறுத்தது என்ற மகத்தான உண்மையைத்தான்.

கிளைக்குக் கிளை, மரத்துக்கு மரம் சதா தாவித்திரியும் குரங்கினைப் போல மனமும் நிலையற்ற குணம் கொண்டது, சண்டித் தனமும் அடங்காப்பிடாரித்தனமும் கொண்டது. ஐம்புலங்கள் என்ற குதிரைகளை அடக்கி ஆளவேண்டிய மனம் என்ற சாரதி, சப்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்ற சுகங்களை நல்கும் பொருள்களை நாடித்திரிந்து, நாளடைவில் அவற்றுக்கு அடிமையாகித் தன் சக்தியை இழக்கின்றது. ரதத்தின் சாரதி குதிரைகளுக்கு அடிமையாகிவிட்டால், ரதம் என்ற தேகத்தின் கதி என்ன? அதில் பயணம் செய்யும் ரத்திற்கு உரியவர் கதி என்ன? புலன் வழிச் சுகங்களை அளிக்கும் பொருள்களே நாளடைவில் உயிரைக் குடிக்கும் நச்சரவங்களாக மாறி வாழக்கையை நரகமாக்குகின்றன.

இவ்வாறு ஐம்புலங்களின் வசப்பட்ட மனதில் காமக் குரோதாதிகளால் கடலில் அலைகள் போல எண்ணங் கள் இடைவிடாது பொங்கி ஆர்ப்பரித்துக் கொண்டுள் ளன. இந்த எண்ண அலைகள் எப்போது ஓய் கின்றனவோ அப்போதுதான், "மனம்போல் வாழ்வு தரும்" மனம் என்னும் தடாகத்தின் அடித்தளத்தில் உள்ள இறைவனது சக்தியின் பிரதி பிம்பமான ஆன்மா வின் சொரூபம் தெரியவரும்.

வாழ்க்கையை நரகமாகவோ அல்லது சுவர்க்க மாகவோ மாற்றக்கூடிய மகத்தான சக்திபடைத்த இந்த மனத்தை அடக்கி சுய கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர நாம் என்ன முயற்சி எடுக்கின்றோம்? உடம்பைச் சுத்தி கரித்து உரம் கொடுக்க எத்தனையோ தேகப்பயிற்சிகள், விளையாட்டுகள், ஆனால் மனதைத் தூய்மைப்படுத்தி வாழ்வில் ஒளிபெற ஒரு பயிற்சியும் இல்லை. சுவாமி விவேகானந்தரின் கூற்றுப்படி மக்களில் பெரும்பான் மையினர், மனத்திற்கும், ஐம்புலன்களுக்கும் அடிமை களாக விலங்கு வாழ்க்கையைத் தான் நடத்தி வருகின் றார்கள், இதில் ஏழைபணக்காரன், படித்தவர், படிக்கா தவர் என்ற வேறுபாடு கிடையாது, ஏனென்றால் இதைப் பற்றிய அறிவையும், அவசியத்தையும் உணர்ந்து முயற்சி எடுப்பவர்கள் வெகு சிலரே, கல்விக் கூடங்களில் கூட இதைப் பற்றிய அறிவு கற்றுக் கொடுக்கப்படுவது இல்லை.

ஐம்புலன்களையும் அடக்கி மனதை ஒரு நிலைப்படுத்தி தன்வசம் கொண்டு வர தினசரி தியானப் பயிற்சி ஒன்றே வழியாகும். "நானே அது, அதுவே நான்", "தத்துவமசி" என்பது போன்ற மகா வாக்கியங்களின் உட்பொருளை உணரமட்டுமல்ல, நேரடியான அனுபவத்தைப் பெற தியானம் அவசியம். பார்த்தனைத் தேரில் அமர்த்தி பார்த்த சாரதியாக இருந்து பகவான் அருளிய கீதோபதேசத்தில் தியானப் பயிற்சியின் அவசியம் பற்றி கீழ்க்கண்ட சுலோகங்களில் வற்புறுத்திக் கூறப்பட்டுள்ளது.

அத்.	சுலோகம்	அத்.	சுலோகம்.
2	53, 61, 65, 66	8	8, 9, 12
5	27, 28	12	2, 6
6	10, 15, 19, 20, 24	18	51, 52, 53, 65
	25, 26, 36		

தியானப் பயிற்சியின் முக்கியதேவை அது தினசரி செய்யப்படவேண்டும். துவக்கத்தில் "இது நம்மால் முடியாது" என்ற உணர்வை உண்டாக்கும். ஆனால் தினசரிப் பயிற்சியின் விளைவால், சிறிது சிறிதாக மெள்ள மெள்ள ஆனால் நிச்சயமாக மனதில் பொங்கி வரும் எண்ண அலைகள் ஓய்ந்து அடங்குவதைக் காண லாம். தியானப் பயிற்சி ஆன்மீக நெறியில் ஈடு பட்டுள்ளவர்களுக்கு மட்டுமல்ல, உலகாயத வாழ்க்கை யில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் மாணவர் – ஆசிரியர், ஆண்கள்–பெண்கள், இளைஞர்–முதியோர், இல்லத் தோர்–துறவியர் முதலிய வேறுபாடுகள் இன்றி யாவருக் கும் தேவை. இப்பயிற்சியின் பலனாக உள்ளம் மட்டுமல்ல உடலும் தூய்மையடைந்து வலிவும் வனப்பும் பெறும். அவரவர் செய் தொழிலில் திறன் வளர்வதைக் கண்கூடாகக் காணலாம் வாழ்க்கையில் மறு மலர்ச்சி ஏற்படும்.

இப்பயிற்சியின் பயன்களையும் அளவிலடங்காத வியத்தகு பலன்களையும் மேல் நாட்டினருக்கே உரித் தான விஞ்ஞான அடிப்படையில் ஆராய்ந்து, அளவிட்டு உறுதிப்படுத்திய பின், அங்கு லட்சக்கணக்கான மக்கள் தியானப் பயிற்சியை ஆர்வத்துடன் செய்து வருகின்றார் கள். இம்முயற்சியில் சுவாமி முக்தானந்தாவால்

துவக்கப்பட்ட சித்தயோக தியான இயக்கமும், மகரிஷி மகேஷ்யோகியால் துவக்கப்பட்ட ஆழ்நிலை தியான இயக்கமும் உலகளாவிப் பல நாடுகளில் செய்து வரும் மகத்தான பணி குறிப்படத்தக்கது. எனவே நம் நாட்டிலுள்ள கல்வித் திட்டத்தில் தியானம் பற்றிய அறிவை மாணவர்களுக்கு கற்றுத் தர அரசினரும், பல்கலைக் கழகங்களும், சமயப் பெரியார்களும் உடனடியாக ஆவண செய்ய வேண்டும். மேலும் மக்களிடையே இது பற்றிய அறிவைப் பரவச் செய்து விழிப்புணர்வையும் ஆர்வத்தையும் ஏற்படுத்தவேண்டும். நாடெங்கும் பெரும் செலவில் சினிமா, மற்றும் திருமண மண்டபங்கள் கட்டப்படுவது போல, குமரி முனையில், விவேகானந்தா பாறையில் அற்புதமாக அமைந்துள்ள தியான மண்டபத்தைப் போல மண்டபங்களை எழுப்ப கொடை வள்ளல்கள் வழி செய்ய வேண்டும். தினசரி தியானப் பயிற்சியின் வழியாக வீடுகள் தோறும், நாடெங்கிலும், உலகமெங்கும் வற்றாத அன்பும், நீடித்த நிம்மதியும் தெய்வீக அன்பும் அமைதியும் நிலவுவதற்கு வழி செய்வோம்.

முக்குணம்

தானாக நிற்றல் சத்துவம். இராகத் துவேஷாதிகளோடு கூடியது இராஜசம், ஜீவஹிம்சை செய்தல் சோம்பல் நித்திரை முதலியன தாமசம். ஆகையால் இயற்கையாகிய சத்துவத்தோடு கூடிச் செயற்கையாகிய ராஜச, தாமசத்தைச் சிறுகச் சிறுக நீக்க வேண்டியதில் சதா ஞாபகம் செய்ய வேண்டியது.

(வள்ளலார் - வசனபாகம்)

தொகுப்பு: தி.சுந்தரமூர்த்தி
அம்பத்தூர்

வள்ளல் இராமலிங்க சுவாமிகளின் முக்கிய கொள்கைகள்.

1. புலால் உண்ணலாகாது
2. சிறு தெய்வ வழிபாடு கூடாது.
3. கடவுள் ஒருவரே. அவர் அருட்பெருஞ்சோதி ஆண்டவர்.
4. தெய்வங்கள் பெயரால் உயிர்ப்பலி கூடாது.
5. சாதி, சமய வேறுபாடுகள் கூடாது.
6. எவ்வுயிரையும் தம்முயிர் போல எண்ணும் ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமையைக் கடைப்பிடித்தல் வேண்டும்.
7. ஏழைகளின் பசி தவிர்த்தலாகிய ஜீவகாருண்ய ஒழுக்கமே பேரின்ப வீட்டின் திறவுகோல்
8. இறந்தவரை சமாதி செய்யவேண்டும் - எரிக்கக் கூடாது.
9. எதிலும் பொது நோக்கம் வேண்டும்.

அவர் கூறிய மகா மந்திர வசனம்

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

— இராமலிங்க அடிகள் சித்தி
நூற்றாண்டு விழா மலர்
1874 - 19774
பக்கம் 3.



பாளி சிங்கள மொழி இலக்கியங்களிலே தெய்வத் திருக்குறட் கருவூலங்கள்

(புலவர். கனகரத்தினம். பி.ஏ., (இலண்டன்)
துணைச் செயலர், கொழும்புத் தமிழ்ச் சங்கம்.) இலங்கை

தெய்வப் புலவர் திருவள்ளுவர் செய்த திருக்குறள் தமிழிலுள்ள மிகச் சிறந்த இலக்கிய நூல். தமிழில் மட்டுமன்றி உலகப் பெரு நூல்கள் எல்லாவற்றுள்ளுமே இது ஈடும் எடுப்பும் இல்லாப் பீடுடையது என அல்பேர்ட் சுவையற்சர் (Albert Schweizer) என்ற பல்கலைக் குரிசில் பகர்ந்துள்ளார். அறம் பொருள் இன்பம் என்பவற்றை விளக்கி வீடுபேற்றுக்கு வழிகாட்டும் அறநூலாகவும் இலக்கிய நயம்படைத்த, இலக்கிய நூலாகவும் விளங்குகிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் செய்யப்பட்ட இந் நூல் அழியாப் புகழ் பெற்றுக் காலத்தை வென்று விளங்குகிறது. திருக்குறளின் பெருமையால் பல மொழிகளிலும் இந்நூல் மொழிபெயர்க்கப் பெற்றுள்ளது. தலைமுறை தலைமுறையாகத் தமிழ்ப் புலவர்கள் அனைவராலும் போற்றப்பட்டு வந்துள்ளது. இத்தகைய நூலை இந்தியாவிலே தோன்றிய பெருஞ் சமயங்கள் யாவும் தத்தமக்கு உரியது என்று உரிமை பாராட்டுவதும் இயல்பாகி விட்டது. இத்தகைய பான்மையும் திருக்குறளின் சிறப்பை மேம்படுத்துவதாக அமைகிறது.

திருக்குறள் தோன்றிய காலத்தைப் பற்றி வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டுள்ளனர். சிலர், அது கி.மு. முதல் நூற்றாண்டில் எழுந்தது என்பர். வேறு சிலர் அது கி.பி. ஐந்தாம் நூற்றாண்டளவிலே, சங்க மருவிய காலத்திலே தோன்றியது என்பர். எவ்வாறாயினும், கிறித்துவுக்கு முந்திய இரண்டொரு நூற்றாண்டுகளிலும் பிந்திய சில நூற்றாண்டுகளிலும் தென்னிந்தியாவிலே சமண சமயம், பௌத்த சமயம், வைதிக சமயம் என்னும் மூன்று சமயங்கள் கால் கொண்டிருந்தன வென்பது வரலாற்று உண்மையாகும். இவை தவிர, தமிழர்களிடையே தொன்றுதொட்டு வழங்கி வந்த ஒரு சமயமும் இருந்ததென்பதற்கும் ஐயமில்லை. இச்சமயமே ஆரியர் வருகைக்கு முன் சிந்து வெளியிலே வாழ்ந்த திராவிட மக்களின் சமயமென்றும் இதுவே பிற்காலத்தில் சைவமென வழங்கியது என்றும் ஆராய்ச்சியாளர் சிலர் கூறுவர்.

திருக்குறளிலே கடவுள் வாழ்த்தை நோக்கினால், அங்கே கடவுளின் இயல்பு பற்றியும் வீடுபேறு பற்றியும் வள்ளுவர் கூறியிருக்கும் கருத்துக்கள் சைன (சமண) சமயக் கோட்பாடுகளுக்கும் ஒத்திருப்பதைக் காணலாம். அறவாழி அந்தணன், மலர்மிசை ஏகினான், எண்குணத்தான், ஐந்தவித்தான் என்பன பௌத்த மதக் கோட்பாடுகளுக்கும் பொருந்துவனவாகக் காணப்படுகின்றன. கொல்லாமை ஊனுண்ணாமை, உயிர்க்கின்னா செய்யாமை என்ற அகிம்சை ஒழுக்கத்தைச் சைவம், சைனம், பௌத்தம் போன்ற சமயங்கள் ஒப்புக் கொள்கின்றன.

திருக்குறளிற் காணப்படும் கருத்துக்கள் பாளிமொழியியற் செய்யப்பட்ட தம்மபதம் என்னும் நூலிலும் காணப்படுகிறது. பிற்காலத்திலே (18ம் நூற்றாண்டளவில்) சிங்கள மொழியிற் செய்யப்பட்ட 'உலோகோபகாரய' என்ற நூலிலும் காணப்படுகிறது. தம்ம பதம் என்ற 'அறவழி' நூல் திருக்குறள், பகவத்கீதை ஆகிய நூல்களிலும் பார்க்கக் காலத்தால் முந்தியது. மேலும், தம்மபதமும் உலக இலக்கியத்திலே சிறந்த நூலாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்நூலிலே புத்தபகவானின் அறத்தை - அவரின் அருள் வாக்குகளை விரிவாகக் காணலாம். தம்ம என்பது தருமம் - அறம்; பதம் - வழி என்பதாகும்.

தம்மபதம் என்றால் அறவழி. இந்நூல் பௌத்த பிடகங்களில் ஒன்றான சுத்தபிடகத்தைச் சேர்ந்த குத்தகநியாயம் என்ற நூலின் ஒரு பகுதியாகும். இந்நூல், பாளி மொழியில் 423 பாசுரங்களைக் கொண்டது. 26 அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பௌத்தர்களால் இது பெரிதும் போற்றப்படுகிறது. இது புத்த சமயத்தவரின் பாராயண நூலாகவும், பிரமாண நூலாகவும் போற்றப்பட்டு வருகிறது.

தம்மபதம் என்ற நூலிலே திருக்குறளில் வரும் அதிகாரங்கள் போன்ற அதிகாரங்களும் வருகின்றன. உதாரணத்திற்கு அவா அறுத்தல், மடியின்மை, வெகுளாமை, தீவினையச்சம் என்பவற்றைக் குறிப்பிடலாம். முதற்கண் மனத்தைப் பற்றித் தம்ம பதத்திலுள்ள மன இயலில் வரும் பாசுரம் ஒன்றை எடுத்துக் கொள்வோம்.

mano pubbangama dhamma - மனோ புவ்பங்கமா தம்மா
mano Settha manomaya; - மனோ ஸெட்டா மனோமயா
manasa Ce padutthena - மனஸா சே பதுட்டேன
bhasati va Karoti va - பாசதி வா கரோதி வா
tota nan dukkham anveti - ததோ நங் துக்கம் அன்வேதி
Cakkan Va Vahato padan - சக்கங் வா வஹதோ பதங்

(யமகவக்க -1)

இப்பாசுரத்தில் மனத்தினது இயல்பை அழகாக எடுத்துக் கூறுகிறார். மனம் வாக்குக் காயம் என்ற திரிகரண சுத்தியில்லாவிட்டால் ஏற்படும் தீமையையும் விளக்குகிறார். துன்பம் தொடர்வதற்குரிய நல்லதோர் உவமானத்தையும் கையாள்கிறார். ''துக்கம் அன்வேதி'' அதாவது துன்பம் அவனைத் தொடர்ந்து செல்லும். எவ்வாறெனில், 'சக்கங்வா வஹதோ அன்வேதி''- வண்டிச் சக்கரம் மாட்டின் அடியைத் தொடர்ந்து செல்வது போல என்று நல்லதோர் உவமானத்தைக் கருத்தாழத்தோடு காட்டுகின்றார். இப்பாசுரத்தின் முழுக் கருத்தினையும் நோக்குவோம்:

சித்தத்தின் நிலைகளுக்கு எல்லாம் மனமே முன்னோடி. அவை மனத்திலிருந்து உண்டானவை. மனமே எல்லாவற்றுக்கும் மேலாக நிற்கின்றது. தீய எண்ணத்தோடு ஒருவன் பேசினாலென்ன, செயல் புரிந்தாலென்ன வண்டிச் சக்கரம் மாட்டின் அடியைத் தொடர்ந்து செல்வது போலத் துன்பம் அவனைத் தொடர்ந்து செல்லும்.

இனி மனத்தைப் பற்றித் தெய்வத் திருவள்ளுவர் கூறும் கருத்தினைப் பார்ப்போம்.

''மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற''

(அறன்வலியுறுத்தல் 4)

இரண்டடிக் குறட்பாவில் மனத்தின் தூய்மையையும் அறத்

தையும் அழகாகக் காட்டியுள்ளார் திருவள்ளுவர். 'ஒருவன் தன் மனத்தில் குற்றம் இல்லாதவனாக இருப்பானாயின், அறம் அவ் வளவே. மனத்தூய்மை இல்லாத மற்றவை ஆரவாரத் தன்மை உடையவை; அவை அறச் செயல்கள் ஆக மாட்டா' என 'மனத் துக்கண் மாசு' (அழுக்கு - கறை - குற்றம் - தூய்மையின்மை) எனத் திருக்குறளில் கூறப்பட்ட கருத்துத்தான் 'மனசாசே பதுட் டேன பாசதி' என்று தம்மபதத்தில் பாளிமொழியில் கூறப்பட்டி ருக்கிறது. மனத்தின் கண் மாசில்லாதவன் தூயன். அறத்திற்கு மனத்தூய்மையே பிரதானம். பேச்சு, செயல் என்பனவற்றிற்கும் மனத்தூய்மையே வேண்டும். மற்றையனவெல்லாம் ஆகுல ஆர வாரத் தன்மை உடையனவென்கிறார் திருவள்ளுவர். இதனைப் புத்த பகவான் மனத்தூய்மையில்லாவிட்டால் துன்பம் தொட ரும். வண்டியில் பூட்டப்பட்ட மாட்டின் அடியை வண்டிச் சக்க ரம் தொடர்வது போலத் தொடரும் எனப் பகர்ந்துள்ளார்.

தெய்வத் திருக்குறள், இலங்கை நாட்டிலே சிங்கள மொழி பேசும் சிங்கள மக்களும் பயிலும் வகையில் மொழி பெயர்ப்புப் பெற்றுள்ளது. இதுவரையில் இரு மொழி பெயர்ப்புகள் வெளி வந்துள்ளன. சிறீ சான்ஸ் த.சில்வா 'சிறீ யே

என்ற பெயரில் மொழிபெயர்த்துள்ளார். மற்றையது ஜீ மிஸி ஹாமி அம்மையாரின் மொழிபெயர்ப்பாகும். சிங்கள மொழி பேசும் மக்கள் இம்மொழி பெயர்ப்பு வாயிலாகத் திருக்குறளின் பெருமையை அறிந்து கொள்ள முடியும். அன்றியும், பௌத்த மத நூலாகிய தம்மபதத்திலும் திருக்குறளின் அரிய கருவூலங்க ளைக் கண்டு நயக்க முடியும் அன்றோ!

தம்மபதத்தில் வரும் வேறு சில கருத்துக்களையும் ஆய் வுக்கு எடுத்துக் கொள்வோம்.

தூய மனத்தோடு ஒருவன் பேச வேண்டும்; செயல் புரிய வேண்டும். அப்போதுதான் சுகமும் நிழல்போல் தொடரும் என் கிறது தம்மபதம். எனவே தீயவழியிற் செல்லும் உள்ளத்தைத் திருத்துதல் எம் கடமை 'திருகு சிந்தையைத் தீர்த்துச் செம்மை செய்ய வேண்டும்' என்கிறார் அப்பரும். பகைமையைப் பகை மையால் வெல்ல முடியாது. அன்பினாலேதான் பகையையும் வெல்லலாம். இதனைத் தம்மபதம் பாளிமொழியிற் பின்வரு மாறு கூறுகிறது:

Na hi Verena Verani - ந ஹி வேரேன வேரானி
Sammanti dha Kudacanag - சம்மந்தி இத்த குதாசனங்
averena ca sammanti - அவேரேனா ச சம்மந்தி
esa dhammo sanantano - ஏஸ தம்மோ சனந்தனோ.

(யுமகவக்க - 5)

இப்பாசுரத்தில் புத்த பகவான் இன்சொல்லையும் அன்பி னையும் விதந்து கூறுகிறார். எக்காலத்தும் பகைமை பகைமை யால் தணிவதில்லை. அன்பினாலேதான் அது தணியும். இதுவே காலங் கடந்த கோட்பாடு; சனாதனதருமம் என்று அருளிச் செய் கின்றார்.

இதனைத் தெய்வத் திருவள்ளுவர் பின்வருமாறு கூறுகிறார்:

'இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று'

(இனியவை கூறல் - 100)

இக்குறட்பாவில் இன்சொல்லை விளக்க வந்த தெய்வத் திருவள்ளுவனார் கனிகள் இருக்கும்போது காய்களைப் பறித் துத் தின்பதைப் போன்றது என்று உவமானமும் காட்டி நயமாகக் கூறுகின்றார். இன்சொல்லை - இனிய கனி (பழம்)யாகவும் வன்சொல்லைக் - காயாகவும் உவமித்துள்ளார். எனவே, வன் சொல் வழங்குவதாற் பயனில்லை என்பது அவர் கருத்து. இன் சொல் வழங்குக என்றே அறிவுரை கூறுகிறார். பாளி மொழியில் 'வேரேன என்பது பகைமையால் என்று பொருள்படும். 'அவே ரேன' என்பது அன்பு - அன்பினால் எனப் பொருள்படும். ஈண் டும் தெய்வத் திருக்குறட் கருவூலத்தின் சிறப்பைக் காண்கின் றோம்.

ஔவையார் பாடிய நல்வழியிலும் வன்சொற்கள் - வெட் டெனவை என்றும் இன்சொற்கள் - மெத்தனவை என்றும் குறிப் பிடப்படுகின்றன. வன்சொற்கள் இன்சொற்களை வெல்ல மாட்டா - இதனை நல்ல இரு உவமைகளைக் காட்டி ஔவை யார் பின்வருமாறு பாடியுள்ளார்.

'வெட்டெனவை மெத்தெனவை வெல்லாவாம் வேழத்தில்
பட்டுருவுங் கோல்பஞ்சில் பாயாது - நெட்டிருப்புப்
பாறைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும்''

(நல்வழி - 33)

அந்தணர் என்போர் யாவர்? என்பதைத் திருக்குறளும் தம்மபத மும் எவ்வாறு விளக்குகின்றது என்பதை ஆராய்வோம்.

பிறப்பால் எவரும் உயர்ந்தவராவதில்லை. அவரவர் செய் கையாலே ஒருவர் உயர்ந்தவராக மதிக்கப்படுகிறார். அந்தணர் என்போர் யாவர்? அழகிய தண்ணளியை உடையவர்களே அந்த ணராவர். அவர்களே அறவோர். மேலான ஒருவரையே அந்த ணர் என்கின்றோம். இக்கருத்தைத் தெய்வத் திருவள்ளுவர் தெளி வாய்க் கூறுகின்றார்.

'அந்தணர் என்போர் அறவோர் மற்று எவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்'

(நீத்தார் பெருமை 30)

எல்லா உயிர்களிடத்தும் செந்தண்மை - செம்மையான அருளை மேற்கொண்டு ஒழுகுபவரே அந்தணர் என்கிறார் வள்ளுவர்.

இக்கருத்தையே தம்மபதம் எனும் அறவழி நூல் பின்வரு மாறு கூறுகிறது:

'na C'ahan Brahmanan brumi 'ந ச அஹங் பிராக்மணங் புறூமி
Yonijan Mattisambhavan யோனியங் மத்தி சம்பவங்
Bhovadi nama so hoti - போவாதி நாம ஸோ ஹோதி
Sace hoti Sakincano - சசே ஹோதி சகிஞ்சனோ
akincanan anadanan அகிஞ்சனங் அனாதானங்
tam ahan brumi Brahmanan' - தம் அஹங் புறூமி
பிராக்மணங்'

(பிராக்மணவக்க - 396)

'பிராமண யோனியிற் பிறந்தவன், பிராமணத்தாய் வயிற் றில் உதித்தவன் என்பதால் மாத்திரம் ஒருவனை நான் அந்தணன் என்று கூற மாட்டேன். அவன் களங்கமுடையவனானால் போவாதி - பேச்சளவில் மாத்திரம் அந்தணன் என்பேன். களங்க மற்ற பற்றில்லாதவனையே அந்தணன் என்பேன்' என்கிறார் புத்த பகவான். இக்கருத்தினையே 'வசலசுத்த'விலும் அவர் அழுத்திக் கூறுகிறார்.

'na jacca Vasalo hoti - 'ந ஜச்ச வஸலோ ஹோதி
na jacca hoti Brahmano - ந ஜச்ச ஹோதி பிராக்மணோ
Kammena Vasalo hoti - கம்மேன வஸலோ ஹோதி
Kammena hoti Brahmano' - கம்மேன ஹோதி பிராக்மணோ'

பிறப்பால் ஒருவன் (பிராக்மணோ ந ஹோதி) பிராமணன்

- அந்தணன் ஆவதில்லை. (கம்மேன) செயலாலேயே ஒருவன் பிராமணன் - அந்தணன் ஆகிறான்.

கூடாவொழுக்கம் என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறும் கருத்தினைப் புத்தபகவான் 'தம்மட்ட வக்க' (The Righteous) என்ற அற அதிகாரத்தில் கூறும் ஓரிடத்தையும் கருத்திற் கொள்வோம்.

மக்கள் நல்லொழுக்கத்தையே கடைப்பிடித்தல் வேண்டும். தீய ஒழுக்கம் இடும்பை - துன்பம் தரும். தவவேடத்தில் மறைந்து வாழ்தல் கூடாது. மனத்தில் மாசு இல்லாத வாழ்வே உத்தம வாழ்வு. பொய் ஒழுக்கம் கூடாது. உலகம் பழிக்கும் தீய ஒழுக்கத்தை விட்டுவிடல் வேண்டும். தலையை முண்டிதம் செய்வதாலோ தாடியை வளர்த்தலாலோ சடை வளர்த்தலாலோ - தலைமுடியை நீட்டிக் கொள்வதாலோ எவரும் துறவியாவதில்லை. உள்ளத் துறவே உயர்ந்த துறவு. இதனைத் தம்மபதம் பின்வருமாறு கூறும்:

'na mundakena Samano - ந முண்டகேன சமணோ
abbato alikam bhanag; - அப்பதோ அலிகம் பணங்
iccha lobha samapanno - இச்சா - லோப - ஸமாபன்னோ
Samano Kim bhavissati?' - சமணோ கிம் பவிஸ்ஸதி

(தம்மட்டவக்க - 264)

தலையை முண்டிதம் செய்வதால் ஒருவன் துறவி யாவதில்லை என்பதையே 'ந முண்டகேன சமணோ' என்று கூறியுள்ளார். மேலும், புலனடக்கமின்றிப் பொய் (அலிகம்) பேசித் திரிபவன் (பனங்) இச்சை லோபம் என்ற குணங்கள் நிறைந்தவன் எவ்வாறு தன்னைச் சமணன் - துறவி என்று கூறிக் கொள்ளலாம்? இக்கருத்தினைத் திருக்குறள் பின்வருமாறு கூறுகிறது:

''மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின்''

(குறள் - 280)

ஒரு துறவி உலகம் பழித்தது ஒழித்து நல்லொழுக்க நெறியில் ஒழுகுதலின் அவசியத்தைத் தெய்வத் திருவள்ளுவர் விளக்கிய கருவூலத்தின் நயத்தை நாம் கற்குந்தோறும் கற்குந்தோறும் நயப்போமாக. இவ்வாறு பாளி மொழி இலக்கியங்களில் அக்கருவூலங்கள் இழையோடியிருப்பதைக் கண்டு தெளியலாம்.

சிங்கள இலக்கியங்கள் பற்றி நோக்குமிடத்து, இலங்கையில் கண்டி மன்னர் ஆட்சிக் காலத்தில், முக்கியமான இலக்கிய முயற்சியாகத் திகழ்வது றணஸ்கல்ல தேரரின் 'லோகோபகார' ( )என்ற நீதி நூல். ஆசிரியர் தமிழ், பாளி, சமஸ்கிருதம் ஆகிய மொழி நூல்களிலிருந்து கருத்துக்களைத் தெரிவு செய்துள்ளார். இவர் திருக்குறள் முதலாம் உயர்ந்த நீதி நூல்களை ஆராய்ந்து கற்றவராகக் காணப்படுகிறார். அண்மைக் காலத்தில் சிறந்த தமிழ் அறிஞராய் விளங்கிய ஹிஸ்ஸல்லே தர்மரத்தின தேரரும் லோகோபகார ஆசிரியர் திருக்குறட் கருத்துக்களை ஆண்டுள்ளமை பற்றி விரிவாக விளக்கியுள்ளார். அழகிய வண்ணமுக வெட்டி என்ற பெயருடைய் தேரர் ஒருவர் ஒளவையாரின் நல்வழி, மூதுரை என்பவற்றிலுள்ள கருவூலங்களை வைத்துக் கொண்டு 'சுபாஷித' என்ற பெயரில் சிங்கள மொழியில் சிறந்த நீதி நூல் இலக்கியத்தைச் செய்துள்ளார் என்பதும் ஈண்டு மனங் கொள்ளத்தக்கது.

லோகோபகார என்னும் சிங்கள நீதிநூலில் வரும் பாடல்களும் திருக்குறள் போன்று இரண்டடிப் பாடல்களாக அமைந்துள்ளன. மேலும், திருக்குறட் கருவூலங்கள் மட்டுமின்றிச் சொல்லுக்குச் சொல் பொருளுக்குப் பொருள் பொருத்தமுற அமைகின்றன. குறளில் இடம் பெற்ற உவமானங்கள் கூட மாற்றமின்றிக் கையாளப்பட்டிருக்கின்றன. உதாரணத்திற்கு ஒரு குறளை எடுத்துக் கொள்வோம்.

தமது பிள்ளைகளின் சிறிய கைகள் அளாவிய உணவு பெற்றோருக்கு அமிர்தத்திலும் இனிமையானது எனத் தெய்வத் திருவள்ளுவர் மக்கட்பேறு அதிகாரத்தில் கூறும் குறட்பா இது:

''அமிழ்தினு மாற்ற வினிதே தம்மக்கள்
சிறுகை யளாவிய கூழ்''

(மக்கட்பேறு 4)

இதே கருத்தை மையமாகக் கொண்டு சிங்கள மொழியிலுள்ள லோகோபகார ஆசிரியர் கூறும் பாடலையும் பார்ப்போம்.

எம ரஸயட்டம வெடி - ரஸயக்கி சுறன் புதினே

ஈற்றத் வெடி றஸெக்கி - தமா தறுவன் ஹெணு சுபோஜுன்

திருக்குறளில் வரும் அமிழ்தினை இவரும் ( ) என்றே சிறப்பிக்கின்றார். கூழ் என்பதனை ( ) அதாவது நல்ல போஜனம் என்கிறார். சிறுகை அளாவிய என்பதனை ( ) என்றும் கருத்து மாறுபடாத முறையில் ஒரே கருத்திற்கூறிய பாங்கும் இரசிக்கத்தக்கதாகும். ஆராய்ச்சியாளர்க்கு இவை நல்ல இலக்கிய விருந்தாகும்.

பௌத்த மத தத்துவங்கள் பெருமளவில் பாளிமொழியிலே உள்ளன. அவை சிங்கள மொழியிலும் பெயர்க்கப்பட்டுள்ளன. தமிழிலேயுள்ள மணிமேகலை என்னும் காப்பிய நூலும் பௌத்த மத தத்துவங்களைத் தெளிவாகத் (தமிழில்) கூறுகின்றது. இத்தத்துவங்களின் கருவூலங்களைத் திருக்குறளிலும் காண்டல் கூடும்.

பௌத்த மதத் தத்துவம் பன்னிரண்டு நிதானங்களை உடையது. நிதானம் என்பது காரணம். பன்னிரண்டு நிதானங்களைத் தான் தமிழில் பன்னிரு சார்பு என்பர். அவற்றை மணிமேகலை ஆசிரியர் சீத்தலைச் சாத்தனார்,

'பேதமை செய்கை உணர்வே அருவுரு
வாயில் ஊறே நுகர்வே வேட்கை
பற்றே பவமே தோற்றம் வினைப்பயன்
இற்றென வகுத்த இயல்பீ ராறும்
பிறந்தோர் அறியில் பெரும்பேறு அறிகுவர்
அறியார் ஆயின் ஆழ்நர கறிகுவர்?

(மணிமேகலை 24 ஆம் காதை 105-10
30 ஆம் காதை 45-50)

என்று பாடியுள்ளார்.

இப்பன்னிரண்டு நிதானங்களும் பாளிமொழியில்

1. அவிஜ்ஜை, 2. ஸங்க்காரம், 3. விஞ்ஞானம், 4. நாமரூபம், 5. ஸளாயதனா, 6. பஸ்ஸ, 7. வேதனா, 8. தண்ஹா, 9. உபாதானம், 10. பவம், 11. ஜாதி, 12. ஜராமரணம் என வழங்குவர்.

இச்சார்புகளினாலேதான் பிறப்பு இறப்பு உண்டாகின்றன.

இச்சார்புகளை அறுத்தால் பிறப்பு இறப்பு நீங்கும். நிர்வாண மோட்சம் என்னும் வீடுபேறும் கிட்டும். இவற்றைப் பாளிமொழியிலுள்ள பிடக நூல்களில் உள்ளவாறே மணிமேகலை ஆசிரியர் சாத்தனார் மொழி பெயர்த்து விநய பீடகம் -

மகாவக்கம் முதல் காண்டம் பார்க்கக் கூறியுள்ளார். இந்தச் சார்புகளை - நிதானங்களை ஊழ்வட்டம் அல்லது ஊழ்மண்டிலம் என்பர். இச்சார்புகள் பற்றிய கருவூலத்தைத் தெய்வத் திருவள்ளுவரின் குறளிலும் காணலாம். அச்சார்புகளை அறுத்தால் பிறவிநோய் நீங்க வீடுபேறு என்றே குறளும் அறைகின்றது. அத் தெய்வத் திருக்குறள் பின்வருமாறு:

''சார்புணர்ந்து சார்பு கெட ஒழகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரும் நோய்''

(மெய்யுணர்தல் - 9)

இவ்வாறு அறம், பொருள், இன்பம் என்பனவற்றையன்றி வீடு பேற்றிற்கும் வழிகாட்டும் தெய்வத் திருக்குறளின் கருவூலங்களை ஆயுந்தொறும் அளவில் பெருகும் அன்றோ! பன்மொழிப் புலவர்கள் அறிஞர்கள் கூடும் - கூடி ஆராயும் அனைத்துலகத் தெய்வத் தமிழ் மகாநாடு போன்ற அமைப்புகள் அகிலமெங்கும் தெய்வத் தமிழ் மணம் கமழச் செய்யுமென வாழ்த்தி விடை பெறுகிறேன்.

வணக்கம்.

உசாத்துணை நூல்கள் - சஞ்சிகைகள்

1. திருக்குறள் - பரிமேலழகர் உரை
2. தம்மபதம் - (பாளி) English - Translation by A.P.Budhadatta by Ven. Narada Thena
3. (உ) லோகோபகாரய (சிங்களம்) ரணஸ்கல்லதேரர்
4. தம்மபதம் - அறவழி - தமிழ் மொழி பெயர்ப்பு - நவாலியூர் சோ.நடராசன்
5. ஔவையார் நல்வழி, மூதுரை
6. தம்மபதம் (தமிழில்) - என் சோமானந்ததேரர் - 1950 தமிழ்நாடு.
7. மணிமேகலை
8. பௌத்தமும் தமிழும் - மயிலை சீனிவேங்கடசாமி
9. மகாவமிசம்
10. விநய பிடகம் - மகாவக்கம்
11. சுபாஷித - அழகிய வண்ணமுகவெட்டி (சிங்களம்)
12. சிறீயே (சிங்களம்) - திருக்குறள் மொழிபெயர்ப்பு
13. திருக்குறள் சிங்கள மொழிபெயர்ப்பு - ஜீ. பிஸிஹாமி கொறொக்கொட
14. நல்வழி - சிங்கள மொழிபெயர்ப்பு - இந்து சமய கலாசாரத்திணைக் களவெளியீடு
15. தமிழ் இலக்கிய வரலாறு - E.S.வரதராஜ அய்யர், பி.ஏ.
16. அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுக் கட்டுரைகள்
17. 'வெசாக் சித்திவிலி' 2535 ஐக்கிய பௌத்த மத்தியசபை
18. வெசாக் மலர் 1985, 1986.
19. ஓர் ஒப்பீட்டு இலக்கிய ஆய்வு - தமிழ் சிங்கள இலக்கிய உறவு (அச்சில்) மயிலங்கூடல் புலவர் - த.கனகரத்தினம்
20. சிந்துவெளி நாகரிகம்
21. The Pali Literature of Ceyon.
22. Buddhist India by T.W.Rhys - Davids.

திருவள்ளுவர்

அடக்கம் ஒருவனை உயர்த்தும், அதனால் அடக்கத்தை உறுதிப்பொருளாகக் கொண்டு அழியாமல் காக்கவேண்டும். அடக்கம் எல்லார்க்கும் நல்லது. அதிலும் செல்வர்க்கு அது மேலும் சிறப்பினைத் தரும். மனம், மொழி, மெய் ஆகிய மூன்று நிலைகளிலும் அடக்கம் வேண்டும். ஒருவன் மற்ற எதனை அடக்க முடியாவிடினும், நாவையாவது (பேச்சையாவது) அடக்கிக் காக்கவேண்டும். இல்லாவிடின், சொற்குற்றம், ஏற்பட்டுப் பின்னர் வருந்த நேரிடும். (குறள் 121, 122, 125, 127)

எண்குணத்தான்

1. தன்வயத்தனாதல், 2. தூய உடம்பினனாதல், 3. இயற்கை உணர்வினனாதல் 4. முற்றுமுணர்தல் 5. இயல்பாகவே பாசங்களினின்று நீங்குதல் 6. பேரருளுடைமை 7. அலவிலாற்றலுடைமை 8. வரைவிலின்பமுடைமை.

(சைவசித்தாந்தம் கூறும் எண்குணம்)

1.ஆதிபகவன் 2. வாலறிவன் 3. மலர்மிசை ஏகினான் 4. வேண்டுதல் வேண்டாமை இலான் 5. இறைவன் 6. தனக்குவமை இல்லாதான் 7. பொறிவாயில் ஐந்தவித்தான் 8. அறவாழி அந்தணன்.

திருவள்ளுவர் கூறும் எண் குணம்

மக்களுள் மூவகையினர்

1. **சகலர்:** ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் பெற்றிருப்பவர்.
2. **பிரளயாகலர்:** மாயையை விடுத்து ஆணவம் கன்மம் ஆகிய இரண்டினையும் பெற்றிருப்பவர்.
3. **விஞ்ஞானகலர்:** கன்மம் மாயை தவிர்த்து ஆணவ மலம் மட்டும் பெற்றிருப்பவர்.

விஞ்ஞானகலர் முயன்றால் அந்த ஆணவ மலமும் நீங்கி அமலராகலாம்.



தமிழாகமம்

(வாழ்வியற் புலவர். சொ. ர. தேமொழியார்)

வேதம், ஆகமம், வேதாகமம் என்ற சொற்கள் மக்கள் மத்தியில் வழங்குகின்றன. இவற்றை ஆதாரமாகக் கொண்டு நிற்பவை, மதங்கள், சமயங்கள் எனப்படும். மதங்கள் கொள்கையின் அடிப்படையில் அமைந்தவை. சமயங்கள் குணங்களின் அடிப்படையில் அமைந்தவை.

எந்த ஒரு வேதமும், ஆகமமும், வேதாகமமும் எல்லா மதங்களுக்கும், சமயங்களுக்கும் பொருந்தாதவை. ஒவ்வொரு மதத்துக்கும், சமயத்துக்கும் தனித்தனி வேதாகமங்கள் உண்டு. அனைத்தும் ஒரே கொள்கையையோ, கோட்பாட்டையோ கூறுவன அல்ல. ஒரே மொழியில் அமைந்தனவுமல்ல.

மதங்களும், சமயங்களும் எந்தெந்தப் பகுதியில் நிலவுகின்றனவோ அந்தந்தப் பகுதியில் வழங்கும் மொழியில் அமைந்தன. அப்பகுதி மக்களின் பக்குவ நிலைக்கு ஏற்ப உரைத்தவை. இவை அனைத்தும் 'ஒல்லும் நெறி அறம்'' எனப்படும். எனவே வேதம் பல, ஆகமம் பல, வேதாகமம் பல. இவை அனைத்துமே இறைவன் அருளால் வெளிப்பட்டவை. இதில் எவை உயர்ந்தவை, எவை தாழ்ந்தவை என வரையறை செய்ய இயலாதன.

'காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு' என்பார் போல, மக்கள் தாம் தாம் கைக்கொண்ட வேதாகமங்களை உயர்த்திப் பேசுவர். இவை அறிவுச் சார்புடையனவாகவும் அமையலாம். அறியாமைச் சார்புடையனவாகவும் அமையலாம்.

நடுநிலையிலிருக்கும் சான்றோர்கள் மட்டும் எந்த வேதாகமத்தையும் விருப்பு வெறுப்பில்லாமல் சூழ்ந்தும், ஆய்ந்தும், தோய்ந்தும் தெளிவர். இவர் சமய, மத, வழிப்பற்றில்லாதவர். அருள் வழி நின்று ஒழுகுபவர்.

நாம் இங்கு கூற நினைப்பது தமிழ் ஆகமத்தைப் பற்றிய செய்தியாகும்.

ஆய்வுப் பண்பு:

ஒருவர் சார்ந்திருக்கும் மதம், சமயம் இவற்றின் கோட்பாட்டைத் தாங்கி நிற்பதே வேதம் அல்லது ஆகமம். இவற்றில் எவையிடத்தும் பற்றுதல் கூடாது. பற்றுதல் இருப்பின் அதன்பால் உள்ள நன்மை, தீமைகளை நன்கு அறிய இயலாது. பற்றுள்ளத்தோடு ஆய்பவர்களுக்கு நன்மையும் தீமையாகத் தெரியும்; தீமையும் நன்மையாகத் தெரியும். இவர் ஆய்வுப் பண்பு இல்லாதவர். இயற்கை அறிவும் அற்றவர். செயற்கை அறிவால் மருளுவர், மருட்டுவர். எதையும் இயல்பாக எண்ணி ஆய்தலே ஆய்வுப் பண்புக்குத் தகுதி என அறியப்படும்.

வேதம்:

வேதத்தை விட்ட அறமில்லை என்பது 'திருமந்திரம்'. வேதம் என்ற சொல் வேதி என்ற சொல்லின் விரிவாகும். வேதி, வேதித்தல் எனும் சொல் அடிப்படையில் தோன்றுவன. வேதத்தின் இயல்பு, அதைக் கேட்போர் உள்ளத்தைத் தூய்மை செய்வது. ஆசையை அகற்றுவது.

இரும்பைப் பொன்னாக்கும் மருந்தைப் போல வேதம் பயில்வோரின் மன மாசினை நீக்கும் நன் மருந்தாகும். வேதாந்தம் கேட்க விரும்பிய வேதியர் வேதாந்தம் கேட்டும் வேட்கை ஒழிந்திலர், வேதாந்தமாவது வேட்கை ஒழிந்த இடம் என்பார் திருமூலர்.

இந்த வேதத்தை இறைவனே உரைப்பினும், கேட்கும் நமக்கு அது முன்னுரையாகும். இது நாம் முன்னேறுவதற்கு உரிய முன் உரையாகக் கொள்ளுதல் வேண்டும்.

''கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்'' என்பது போல வேதத்தை உரைப்போர் உரைத்தால் கேட்போர் உள்ளத்திலும், உயிரிலும் உள்ள மாசுகள் கரைந்து போகும். மாசு போனால் அங்கு நேசம் நிறையும். அந்த இடத்தைத் தமக்கு இடமாகக் கொண்டு ஈசன் இருப்பான். இதை ''நேயத்தே நின்ற நிமலனடி போற்றி'' என்றார் மணிவாசகப் பெருமான்.

ஒரு செயலில் செம்மையான திறம் பெற சொல் முறையும், செயல் முறையும் கற்பிக்க வேண்டும். ஒன்றின்றி ஒன்று அமையாது. ஒரு நிலை சிறக்க இரண்டும் தேவை.

வேதத்தை உரைத்த இறைவன் ஆகமத்தையும் அருளுகின்றான். எனவே வேதம் ஆகமத்தின் முன்னுரையாகும். இதை ''ஆகமத்தின் பாயிரமாம் வேதம் எனலாம்'' என்றார் இராமலிங்க அடிகளார்.

வேதம், விதிநூல் (அ) அறிவு நூல் எனப்படும். ஆகமம், அனுபவ நூல் (அ) அன்பு நூல் எனப்படும். ஆலமர் பெருமானாகிய தென்முகக் கடவுள் சனகாதி முனிவர் நால்வர்க்கும் நான் மறையின் நற் பொருளைத் தேனூறும் சிந்தனையால் தெளிவித்தான். இதை,

> ''நன்றாக நால்வர்க்கும் நான்மறையின் உட்பொருளை
> அன்றாலின் கீழிருந்து அறம் உரைத்தான் காணேடி''

என்றும்,

> ''அருந்தவர்க்கு ஆலின் கீழ் அறமுதல் நான்கினையும்
> இருந்தவர்க்கு அருளுமது எனக்கறிய இயம்பேடி''

என்றும், மணிவாசகப் பெருமான் உரைத்தருளினார்.

ஆகமம்:

ஆகமம் என்ற சொல் மாணிக்கவாசகர் காலத்துக்கு முன் உள்ள சங்க நூல்களிலும் காணப்படவில்லை. 12 உபநிடதங்களிலும் காணப்படவில்லை. இருக்கு முதலிய 4 வேதத்திலும் காணப்படவில்லை. சாங்கியம், யோகம், வைசேடிகம், நையாயிகம், மீமாம்சை, வேதாந்தம் என்னும் 6 தரிசனங்களிலும் காணப்படவில்லை.

ஆகமம் என்னும் சொல்லால் உலவிய நூல் எது? அதன் தன்மை என்ன? அவை எதை உணர்த்தின? என்பதற்கு இன்று வரை ஆதாரமில்லை.

பண்டைக் காலத்தில் ஆகமம் என்ற சொல் முடிந்த ஞானத்தை உணர்த்தும் நூலாகக் கருதப்பட்டுள்ளது. இதை பிங்கல நிகண்டு, ''ஆகம ஞானம்'' என்று கூறுகிறது. பிங்கல நிகண்டுக்கு முன் உள்ளது திவாகரம். அதில் ஆகமம் என்ற சொல் ஒரு நூலுக்குப் பெயராக வந்துள்ளது. சிறப்பாக ஞான நூலை உணர்த்துவதாகத் தெரிய

வில்லை.

திவாகரம் தோன்றிய காலத்தில் ஆகமம் என்ற ஞான நூல் தோன்றவில்லை. அதற்குப் பின் வந்த பிங்கலந்தையின் காலத்தில் தான் சில அறிவு நூல்களுக்கு ஆகமம் என்று பெயரிடப்பட்டுள்ளன. இதை ஆகமத்து ஒன்றும் எனத் தொடங்கும் பிங்கலந்தையால் அறியலாம். அக்காலத்தில் தோன்றிய நூல்களுள் ரௌரவம் ஒன்றே ஆகமம் என்று பெயர் பெற்றது. எனவே ஆகமம் என்ற சொல் ஞான நூல்களுக்குச் சிறப்புப் பெயராக விளங்கியது.

வேதாகமம்:

மன வளர்ச்சிக்கு ஏற்ப எந்த ஒரு சொல்லும் உயர்ந்த பொருளைத் தரும். மனத்தளர்ச்சிக்கு ஏற்ப தாழ்ந்த பொருளையும் தரும். இவை கால முதிர்ச்சியாலும் ஆன்ம வளர்ச்சியாலும் நிகழ்வன. முதிராத காலமும் உண்டு, வளராத நெஞ்சமும் உண்டு. ஒரு மரத்தில் காய்க்கும் காய்கள் எல்லாம் ஒரே காலத்தில் முதிர்வதில்லை. சில முதிரும், சில உதிரும், சில எதிரும். அதுபோல ஒரு கொடியில் ஒரே காலத்தில் எல்லா மலரும் மலர்வதில்லை. சில அரும்பும், சில மலரும், சில உதிரும். இவைதான் இயற்கை. வேதாகமங்களும் மக்கள் மனவளர்ச்சிக்கு ஏற்ப அறம் உரைத்தலும், அனுபவம் ஊட்டலும், நிகழ்வனவாகும். இவையே வேதாகமம் எனப்படும்.

'ஆ' என்பது ஆன்மா. 'கம' என்பது நிறைவு. எனவே ஆகமம் என்றால் ஆன்மாவில் நிறைவது என்று பொருள். உலகியியல் சிறப்புகள் எவையும் ஆன்மாவை நிறைவு செய்வதில்லை. அருளியல் நலம் ஒன்றே ஆன்மாவில் நிறைந்து இயலும். இதையே 'கம' நிறைந்து இயல்வது என்றார் தொல்காப்பியர். மணிவாசகப் பெருமானும் ''ஆகமமாகி நின்று அண்ணிப்பான்'' என்றும், ''ஐம்புலன்கள் ஆற வந்தனை உள்ளே புகுந்த இச்சை மாலமுதப் பெருங்கடலே'' என்றும் கூறுவார்.

இறைவனை வேத விழுப் பொருளையும், ஆகமச் செழும் பொருளையும், உரைத்தான். உணர்த்தினான். உயிர்களை உய்வித்தான் என்பது உண்மை.

> ''ஆரண ஆகமங்கள் அருளினால் உருவு கொண்டு
> காரணன் அருளானாகி கதிப்பவர் இல்லதாகும்''

என்பது 'சித்தியார்'.

தமிழாகமம்:

உலகில் எப்பகுதியிலும், எம்மொழியிலும், எம்மதத்திலும், எச்சமயத்திலும், ஆகமம் உள்ளன. அதில் நாம் சொல்ல நினைப்பது தமிழாகமத்தைப் பற்றியதாகும். இது ''இன்னது அல்லது இது என மொழிதல்'' எனும் உத்தியாகும். ஆகமம் பொது. தமிழுக்கே உரிய ஆகமம் தமிழாகமம் எனச் சிறப்பிக்கப்படும்.

தமிழில் இருந்தால் மட்டும் தமிழாகமம் ஆகா. தமிழ் நிலத்தில் பிறந்து, தமிழே பயின்று, தற்பரனைக் காதலித்து, தற்பரத்துள் முகிழ்ந்து, அதில் நெகிழ்ந்து, அதனால் நிறைந்த உணர்வை வெளியிடுவதே தமிழ் ஆகமம் ஆகும். அந்த ஆகமம் பல நிலைகளை விளக்கும் பாங்குடையதாகும். காரணம் அத்தகையது.

பன்னிரண்டு திருமுறைகளும் சைவ வேதம் எனப்படும். பதினான்கு சாத்திரங்களும் சைவ ஆகமம் எனப்படும். இவை இரண்டுமே தமிழ் வேதாகமம் எனப் போற்றப்படுகின்றன. இவற்றுள் திருமந்திரம் தலைசிறந்த தமிழாகமமாகத் திகழ்கின்றது. திருமந்திரத்தில் திருமூலர் ''என்னை நன்றாகப் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே'' என்று கூறுகின்றார். எனவே திருமந்திரம் (இது) சிறப்பாகத் ''தமிழாகமம்'' எனப் பெயர் பெற்றது.

திருவாசகத்தில் முதல் நான்கு அகவல்களும் தமிழ் வேதம் என்பர். மற்ற பகுதிகள் அனைத்தும் தமிழ் ஆகமம் ஆகும். அது போன்றே பொதுமறையான திருக்குறளிலும், பாயிரமாக விளங்கும் நான்கு அதிகாரங்கள் தமிழ் வேதம் எனப்படும். மற்ற அனைத்து அதிகாரங்களும் தமிழ் ஆகமங்கள் எனப்படும்.

திருவாசகம் அக இயலில், அற நிலையும் அருள் நிலையும் உணர்த்தியது. திருக்குறள் புற இயலில் அகநிலையையும், அக இயலில் அருள்நிலையையும் உணர்த்தியது. அதனால் இவையும் தமிழாகமம் எனப்படும்.

திருக்கோவையார் உயிர் இயலில் உணர்வு நிலையும், உணர்வு இயலில் ஒளி நிலையையும், அதில் நிரம்பும் நீர்மையை வாழ்வியல் போல் வழங்குவது. எனவே இதுவும் தமிழ் வேதமாய், தமிழ் ஆகமமாய், நெறியாய் நவம் தரும் தமிழாய், அதன் எல்லையாய், எல்லாமாய் விளங்குவது. இதில் திருக்கோவையாரின் சிறப்பை

> **ஆரணங்காணென்பர் அந்தணர்; யோகியர் ஆகமத்தின்**
> **காரணங் காணென்பர்; காமுகர் காமநன் நூலதென்பர்;**
> **ஏரணங் காணென்பர் எண்ணர் எழுத்தென்பர் இன்புலவோர்;**
> **சீரணங் காயசிற் றம்பலக் கோவையைச் செப்பிடினே.**

எனக் கூறினர்.

திருக்குறள், திருக்கோவையார், திருவாசகம், திருமந்திரம், இவையெல்லாம் தமிழ் வேதாகமம் என்பதே துணிவு. இவற்றுள் பொதுநிலைத் தமிழாகமம் திருக்குறள். மற்றது சிறப்பு நிலைத் தமிழாகமம் எனக் கூறுதல் வேண்டும். இவற்றின் நீர்மைகளையும், நேர்மைகளையும் மதிநுட்பமும், நூல் நுட்பமும் நன்குணர்ந்து ஒழுகும் ஞானியர்பால் இருந்து கேட்டுத் தெளிக.

ஒன்பா ஆகமம்:

திருமந்திரத்தில் ஒன்பது நிலைகள் உள்ளன. ஒன்பது நிலைகளும் ஒன்பது ஆகமம் எனப் பேசப்படுகின்றன. ஒரு ஆன்மா ஒவ்வொரு நிலையிலும் தான் பெற்ற ஒளிநிறை அனுபவங்கள் ஆகமம் எனப்படும். இதை, மெய்ப்பாடு எனவும் கூறலாம். இவற்றுள் எண் வகை மெய்ப்பாடாகிய அனுபவங்கள் கருவி காரணங்களோடு பொருந்தி வெளிப்படுவன. இவற்றைத் தொல்காப்பியம்,

> ''பண்ணைத் தோன்றிய எண் - நான்கு பொருளும்
> கண்ணிய புறனே நால் - நான்கு''

எனக் கூறுகின்றது. அவற்றுள்ளும் மெய்ப்பாடு என்ற அனுபவம் ஒன்றுக் கொன்று நுண்மைப்படுவதாய் அவை 32 எனவும் மொழிந்தன.

ஒன்பதாவது நிலை கருவி கரணங்களைக் கடந்த நிலை. அதனை இலக்கண வகையால் கூற இயலாது. இதை ''ஒளியில் ஒளி போய் ஒன்றிய வாறும், அளியில் அளிபோய் அடங்கியவாறும், ஆழ்ந்து இன்புறத் தக்கவை. அது அருட்சுவை மிளிரும் நிலை. நூல் வல்லார் உணர்த்துவது எண் வகை நிலை. மேல் வல்லார் உணர்த்துவது எட்டு நிலை கடந்த ஒன்பாண் அனுபவத்தை. அதுவே ஒன்பாண் ஆகமம் எனப்படும்.

திருமந்திரப் பொதுமை:

திருமந்திரத்தில் முதல் தந்திரம் முதல் நான்காம் தந்திரம் முடிய அறம், பொருள், இன்பம், வீடு எனும் நால் வேத நன்னெறியை உணர்த்துவன. வேத நெறியாவது சரியை, கிரியை, யோகம், ஞானம். அந்நெறி தழைக்க வந்தவர் திருஞானசம்பந்தர். எனவே தான் சேக்கிழாரடிகள், ''வேத நெறி தழைத்தோங்க, புனித வாய் மலர்ந்து அழுதார்'' எனச் சிறப்பித்தார். ஐந்தாம் தந்திரம் முதல் ஒன்பதாம் தந்திரம் முடிய ஆகமப் பொருளாகிய அனுபவ நிலையை உணர்த்தினார். இதுவே சைவத் துறை எனப்படும். திருஞானசம்பந்தர் ''சைவத்துறை விளங்க புனித வாய் மலர்ந்தழுதார்'' எனச் சேக்கிழார் சிறப்பித்துக் கூறினார். மறை என்பது ஒலி. அது ஓதத் தகுதியு

டையது. ஆகமம் என்பது ஒளி. அது உணரும் தகுதியுடையது. எவையும் ஓதும்போது மறையாய்த் திகழும். ஒழுகும் போது ஒளி யாய்த் திகழும். இப்படி இரு வகையிலும் பொதுவாய்த் திகழ்வதே தமிழ் வேதாகமத்தின் சிறப்பாகும்.

ஆகமத்தின் அரும் பொருள்:

திருமந்திரத்தில், முதல் தந்திரம் ஆன்மாவிற்கு அமைய வேண் டிய நல்லொழுக்கங்களை உணர்த்தின. இரண்டாம் தந்திரம் ஆன்மா அறிய வேண்டிய முழுமுதல் நிலையை அறிவித்தன. மூன்றாம் தந்திரம் அறிந்த பொருளில் ஆன்மா அழுந்திப் பழகும் பழக்க நிலை யைக் காட்டின. நான்காம் தந்திரம் ஒண் பொருளைத் தன் பொருளா கச் செய்யும் தகுதியுடைய ஆன்மாவிற்கு மந்திர மொழியை முறைப் படுத்தின. அந்த ஒலி முழக்க நிலையை உணர்த்தின. ஐந்தாம் தந்திரம் ஒலி முழக்கால் அறிந்த ஒளி நிலையில் ஒழுகவல்ல ஆன்மாவிற்கு திருநெறி நிலையைத் தேற்றின. ஆறாம் தந்திரம் நெறியில் நிலைத்த ஆன்மாவிற்குக் குரு அருள் நிலையைக் கூட்டுவித்தன. ஏழாம் தந்தி ரம் குரு அருள் நிலையை அறிந்த ஆன்மா அதை அடைவதற்குரிய தவச்சிறப்பு நிலைகளை உணர்த்தின. எட்டாம் தந்திரம் எழுநிலை கடந்த ஆன்மா எண் குணம் பெறத் திருவருள் நிலையைத் திரட்டின. ஒன்பதாவது தந்திரம் எண் குண நிறைவால் சிவ நிலையை ஓங்க உணர்த்தின.

மண் வழி நிறைவு, நீர் வழி நிறைவு, தீ வழி நிறைவு, காற்று வழி நிறைவு, வான்வழி நிறைவு, அன்பு வழி நிறைவு, அருள் வழி நிறைவு, ஒளி வழி நிறைவு, வெளி நிலை நிறைவு என நிறைவு ஒன்பது நிலையில் அமையும். இவை முறையே ஆன்மாவில் நிறைந்து இயலுவதால் ஆகமம் எனப் பேசப்பட்டது.

முடிவுரை:

வேதம், ஆகமம், வேதாகமம் எனத் தோன்றிய நிலைகளையும், அதன் சார்பாக உள்ள சமய மத இயக்கங்களையும் அதை ஆய்ந்தறி யப் புகுவோர் திறத்தையும் அறிந்தோம். அதில் தமிழ் வேதம் உணர்த் தியது அறம், தமிழ் ஆகமம் உணர்த்தியது பொருள் எனத் தெளிந் தோம்.

அறிவால் விளைவது அறம். அன்பால் விளைவது ஆகமம். இவை இருதிறனும் விளங்குவது வேதாகமம் எனத் தேர்ந்தோம். அவையும் பல்வகையாகப் பல்கிப் பெருகிய நிலையும் கண்டோம். அவற்றின் வளர்ச்சிகளையும், தளர்ச்சிகளையும் சிந்தித்தோம்.

ஆகமம் என்னும் சொல் தோன்றிய காலமும், அது இன்று மலர்ந்து மணம் வீசும் நிலையும், நுகர்ந்து மகிழ்ந்தோம். அதில் பொது நிலையும், சிறப்பு நிலையும் எவ்வாறு உள்ளன என்று அறிந்து இன்புற்றோம்.

தமிழ் ஆகமங்கள் என்பது எவை எவை என்று வரையறை செய்தோம். அவையே தமிழ் வேதாகமங்களாக எப்படிப் பயின்று வருகின்றன எனத் தேர்ந்தோம். அவற்றுள் திருமந்திரம் என்னும் ஆகமத்தின் அரும் பொருளையும் சிந்தித்தோம். இவை எல்லாமே தமிழில் கிடைத்த அரிய செல்வங்களாகும்.

நிறைவாக பேரறிவின் பிழிவே தமிழ்வேதம். பேரன்பின் பிழிவே தமிழாகமம். இதை அனுபவத்தால் பெற்றுப் பிறங்கிய பெரி யவர்கள், நாமும் அந்நிலை பெற்று இன்புறத் தொகுத்தும் வகுத்தும் வழங்கியுள்ளனர். இந்த அரிய செல்வங்களால் நாமும் அப்பேற்றி னைப் பெற்று நிலையான இன்பம் எய்துவோமாக.

திருச்சிற்றம்பலம்

புல்லும் பூவும்

அற்பமாகக் கருதப்படும் அருகம்புல்லுக் குள் இருக்கும் சக்தி போன்றது விநாயகருடை யது. அருகம்புல் ஓரிடத்தில் முளைத்துக் கொடி போல் நீண்டு படரும் இயல்புடையது. அது போல், விநாயகர் எளிமையான தோறத்தில் அபார சக்தியை அடக்கி நம்மைக் காப்பவர். அத னாலேயே அருகம்புல்லை அவருக்கு அணிவிக் கிறோம். அருகம்புல் வெப்பத்தைப் போக்கும் தன்மையும் கொண்டது.

அதேபோல் எருக்கம்பூவின் பால் விஷ ஐந் துக்களைக் கொல்லக்கூடியது நமது கஷ்டங்க ளைப் போக்கும் கணபதிக்கு அதன் காரணமா கவே எருக்கம்பூவினால் பூஜை செய்கிறோம்.

— முசிறி சங்கரன்.

பொறுமை என்பது எவர் நிந்தனை யும், தீங்குச் செயலையும் பொறுத்திருக் கும் பண்பாகும். ஆசை நிரம்பிக் கிடக்கும் உள்ளத்தில் பொறை சுருங்கிக்கிடக்கும். ஆசையென்பது நம் உள்ளத்தைப் பொறை கொள்ள வொட்டாதவாறு போக்கி (நுகர்ச்சி) விஷயங்களிலேயே இழுத்துச் சென்று கெடுப்பதாகும். பொறாமை நம் நெஞ்சை முற்றுகையிட் டுச் சிதைக்கும். அப்பொழுதும் இப்பொ றுமை என்பது வற்றுதலின்றி உள்ளத்தே உறையும் இயல்புடையது. பொறுமைப் பண்பை வளர்த்துக்கொண்டால் இறைய ருளைப் பெறலாம். (திருமந்திரம் 539-542)



தெய்வத் தமிழுக்குத் திருமுருகன் தலைவன்

(கவிஞர். சாமி. சீனிவாசன்)

வள்ளியம்மை தமிழால் வைத போதும்
  வாடாமல் வந்து வாழவைத்தான் குமரன்
நல்லதமிழ் கொண்டு நாவினால் வைதாலும்
  நல்லருள் புரிந்து நலம் செய்வான் முருகன்
வெல்லத் தமிழ்ப்பாட வேண்டி அடியாரை
  விருப்புடன் தடுத்தாண்ட வேலேந்தும் பரமன்
தெள்ளு தமிழுக்கும் தெய்வத்தமிழிசைக்கும்
  திருமுருகன் அவனே திருவருட் தலைவன்

தமிழின்மேல் வைத்த தணியாதக் காதலால்
  தன்னுடல் துறந்த தனிக்கவி அருணகிரி
கிளிஉருவில் இருந்தும் கிள்ளைத் தமிழ்ச்சந்தம்
  கேட்டு மகிழக் கிருபாகரன் முருகன்
கிளியைத் தன்னோடு கிட்ட வைத்து
  கேட்கும் தமிழ்ச்சுவைக்குக் கேட்ட - விலை கொடுத்தான்
வளரும் தெய்வத் தமிழிசை வளர்ந்து
  வானோடும் போற்றும் வகையன்று செய்தான்

சீரலைவாய்ச் செந்தூரில் சிறந்திடும் சேந்தன்
  சிந்தை மகிழும்வகை செய்திடும் குமரன்
ஒரு வார்த்தைப் பேசாது ஊமையாய் இருந்த
  ஒருபாலன் குமர குருபரனை உவந்து
அரிய கந்தர் கலிவெண்பா அணிசெய்ய
  ஆற்றல் தந்து ஆட்கொண்டு நின்றான்
பெருமைமிகு தெய்வத்தமிழ் பெரும்புகழ் விளங்க
  பேரருளைப் பொழிந்தான் பெம்மான்சேந்தன் கந்தன்

ஆலோலம் பாடும் ஆரணங்கு வள்ளியின்
  அழகிய தமிழ்ப்பாட்டில் அகம்மிக மகிழ்ந்தான்
வேலனாய் வேடனாய் விருத்தனாய் வளையல்
  விற்கும் வணிகனாய் விளையாடி நின்றான்
நாளும் ஆன்மாவை நாடித்தான் சென்று
  நற்பதம் தந்தருளும் நாதன் தானென்று
உலகுக்கு உணர்த்த உள்ளம் கொண்டான்
ஒய்யாரத் தமிழிசையில் ஒன்றியே வென்றான்

முந்துதமிழ் முத்தமிழ்ச் சங்கத்தின் முதல்வன்
  முழங்கும் தெய்வத்தமிழிசைக்கும்
  எந்த நாளும் எழில்முருகனே தலைவன்!
  எப்போதும் தமிழின்பம் எய்திடும் முதல்வன்
கந்தப் பெருமானே கவிகளின் தலைவன்
  கணக்கின்றி தமிழ்ப்பாடக் கனிந்தருளும் சேந்தன்
செந்தமிழ் அருவியில் சிரித்திடும் குமரன்
  சிறந்தடியாய் சிந்தை சேர்ந்திடும் பரமன்





வீர சைவமும் தமிழும்

(பேராசியர். டாக்டர் வை. இரத்தினசபாபதி
மேனாள் தலைவர். சைவசித்தாந்தத் துறை)

முன்னுரை

'சிவனெனும் ஓசையல்லது அறையோ, திருநின்ற செம்மையுளதே' என்றும் 'சிவனெனும் நாமம் தமக்கே உரிய செம்மேனி எம்மான்' என்றும் அப்பரடிகளால் போற்றப்பெற்ற பரம்பொருளை முதன்மைப் பொருளாகக் கொண்டு வழிபட்டுய்யும் நெறிக்குச் சிவநெறி என்றும் சைவநெறி என்றும் திருநெறி என்றும் பெர்கள் உண்டு.

சைவப் பிரிவுகளுள் ஒன்றாகக் கருதப்பெற்றும் போற்றி ஒழுகப் பெற்றும் வந்த நெறியே 'வீர சைவம்" என்ற பெயரால் குறிக்கப் பெறுகிறது.

வீரசைவம் பசவேசரால் கி.பி. 12ம் நூற்றாண்டில் கன்னட நாட்டில் தோற்றுவிக்கப் பெற்றது என்று கூறுவார்கள்.

பசவேசர் வீர சைவத்தைத் தோற்றுவித்தவரல்லர், வீரசைவக் கொள்கையை மறு பரிசீலனை செய்து பரப்பியவர். பசவேசருக்குப் 'பஞ்சாசாரப் பிரமம்' என்றொரு பெயரும் உண்டு.

தமிழகத்தில் கும்பகோணத்தில் பெரிய மடம் என்றொரு வீரசைவ மடம் உண்டு. இம்மடத்தில் வாழ்ந்த வீர மாகேசுரர் பற்றி ஒட்டக்கூத்தர் தக்கயாகப் பரணியில் கீழ்க்கண்ட தாழிசை ஒன்றை அருளியுள்ளார்கள்.

"குடந்தையம் பதியில் கோதிலாப் பெரிய
மடம்தனில் வாழ்வீர மாகேச்சுரர் வாழியே"

என்பது அத்தாழிசை. எனவே பசவேசர் காலத்தை ஒட்டியோ அல்லது சற்று முன்னோ வாழ்ந்தவர் ஒட்டக்கூத்தர். அவர்காலத்தில் கும்பகோணத்துப் பெரிய மடம் சிறப்பாக இருந்தமையால் தமிழகத்தில் பசவர் காலத்துக்கு முன்னமேயே வீரசைவம் இருந்தது என்பது புலனாகும்.

வீர சைவம் என்பதன் பொருள்

பரம்பொருள் மாற்றமற்ற தன்னிலையில் நின்றபோது செம்பொருள். வாக்கிறந்த பூரணமாய், மறைக்கப் பாலாய் எல்லாமாய் அல்லதுமாய் இருந்தது என்ற நிலையே செம்பொருள். இது தன்னை முதன் முதலில் வெளிப்படுத்திக் காட்டிய முதல்நிலை சிவம். எனவே உலகவர் கண்களுக்கு முதன் முதலாகத் தெரிந்த தோற்றத்தில் 'சிவம்' ஆனான் என்பதே. செம்பொருள் இயற்கை நிலை; சிவம் ஆக்கம். அன்பே சிவம் ஆவது என்று ஆக்கம் குறித்தார் திருமூவர்.

சிவனை வீரக் கடவுளாக மொகஞ்சதரோ, ஹரப்பா நகரச் சிற்பங்கள் உணர்த்துகின்றன. தமிழர்தம் கடவுட் கொள்கை வரலாற்றில் காலத்தால் முற்பட்டது செம்பொருளே. காலத்தாற் பிற்பட்டதே 'சிவம்'. செம்பொருள் கோபப் பொருளாக வீரவடிவத்தோடு விளங்கிய கால நாகரிகத்தைத்தான் அவை வெளிப்படுத்துகின்றன எனக் கொள்ளல் வேண்டும். அதனினும் மிக முற்பட்ட கால வரலாற்றை – அவ்வரலாற்றோடு இணைந்த கடவுட் கொள்கையை – செம்பொருட் கொள்கையை, செம்பொருளோடு இணைந்த வாழ்வியல் நாகரிகத்தைத் தமிழர்கள் பெற்று வாழ்ந்த காலம் உண்டு என்பதை நாம் உணர்தல் வேண்டும்.

வரலாற்று முறையில் நோக்கும் போது செம்பொருள் இவ்வாறு எட்டுமுறை தன்னைக் கோபப் பொருளாக மாற்றி வெளிப்படுத்திக் கொண்டது எனத் தெரிய வருகிறது. 'அட்ட வீரட்டம்' என இவை பேசப் பெறுகின்றன.

பரம்பொருள் இன்பப் பொருளாக, அன்புப் பொருளாக, செம்பொருளாக நின்று காப்பதும், அதுவே கோபப் பொருளாக மறத்தை விளைவிக்கும் பொருளாக நின்று அழிப்பதும் தம்முள் மாறுபட்டவை போலத் தோன்றினாலும் ஒரே பயனை நோக்கியே இருவகைச் செயல்கள் என அறிதல் வேண்டும். அன்பு காட்டி நன்மையை வளர்த்து இன்பம் கொடுப்பதும், வீரம் காட்டி சினத்தை வெளிப்படுத்தி, தீமையை அழிப்பதன் மூலம் நன்மையைக் காத்து இன்பம் கொடுப்பதும் ஒன்றே. இரண்டு செயல்களும் மக்களுக்கு இன்பத்தைக் கொடுக்கத்தான்.

மொஹஞ்சதரோ ஹரப்பா வெளிப்படுத்தும் அடையாளங்களுள் ஒன்று 'சுகம்' என்பதைக் குறிப்பிடும் 'சுவஸ்திகா'. இது சுகத்தை உணர்த்தும் வடிவம். சுவஸ்திகா என்பது (卐) இருமாறுபட்ட நேர்க்கோடுகள். பரம்பொருள் அன்புப் பொருளாக நின்றதும், கோபப் பொருளாக நின்றதும் 'சுகம்' என்ற ஒன்றை வழங்கத்தான். இதுவே பிற்காலத்தில் 'சுவஸ்திகா' ஆயிற்று.

பரம்பொருளைக் கோபப் பொருளாக, சிவமாகப் பார்த்த மக்கள் இன்ப அன்புருவாய், செம்பொருளாய் நின்ற கடவுள் வேறு, சின வடிவில் வெளிப்பட்ட சிவம் வேறு என நினைக்கத் தொடங்கினார்கள். இத்தகைய வேறுபாடு வலிமையடைந்ததை எண்ணித்தான் திருமூலர் 'அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்' என்று சொல்ல முற்பட்டார். பழம் பொருளாகிய செம்பொருள் சிவமாக மாறுவதற்குரிய அடிப்படைக் காரணமும் அன்புதான். இக்கருத்தைத்தான் திருமூலர்,

'அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்'

என்று கூறுவாராயினர். இக் கருத்தை ஒட்டி எழுந்த திருக்குறள் ஒன்றையும் இங்கே நாம் இணைத்துக் காணலாம்.

'அறத்துக்கே அன்பு சார்பென்ப, அறியார்
மறத்துக்கும் அஃதே துணை'

மேலே குறிப்பிடப் பெற்ற கருத்துக்களை இணைத்துப் பார்த்தால் ஒரு உண்மை விளங்கும்.

சைவ சமயம் என்றால் சிவ சம்பந்தம் உடைய சமயம் என்பது பொருள். சிவன் வீரக்கடவுள். எனவே சிவனுக்கு 'வீர' என்ற அடைமொழி இணைக்கப்பட்டது. சிவன் வீரசிவன் ஆனான். வீரசிவனை வழிபடுபொருளாகக் கொண்ட சமயம் 'வீரசைவம்' எனப்பெற்றது. அதனை மேற்கொண்டு ஒழுகுகிறவர்கள் 'வீரசைவர்' எனப் பெற்றனர்.

சிவம் என்ற பொருள் தோன்றுவதற்குக் காரணமே வீரம்தான். வீரத்துக்கும் சிவத்துக்கும் சம்பந்தம் உண்டு என்பதை, உள்ளார்ந்த பண்பை எடுத்துக் கூறுதல் வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டே 'வீர சிவம்' இணைக்கப் பெற்றது. அதனால் வீரத்தோடு சம்பந்தமில்லாத சிவம் ஒன்று உண்டு என்றும், அது கோழைச் சிவம் என்றும் அது அன்புச் சிவம் என்றும் எண்ணுதலாகாது.

எனவே சிவசம்பந்தம் உடையது சைவம் எனக் கொண்டால், சைவத்தின் அனைத்துப் பிரிவுகளுக்கும் மூலமாக நின்ற முதற் பொருள் சிவம் எனக் கொண்டால் மூலப் பொருள் ஒன்றே. அது வீரங்கலந்த விழுப் பொருள். வீர சைவம். அப்பெயர் பெறுவதற்கு வீரம் என்ற அடை மொழியை இணைத்து அதனால் சிறப்புப் பெறுவதற்கு அடிப்படைக் காரணம் சிவன் அன்று என்பது வெளிப்படை. சிவசம்பந்தம் உடையது சைவம் என்று கூறுதல்போல வீரசிவ சம்பந்தம் உடையது வீர சைவம் என்று கொள்ளுவதற்கு இடமுண்டு என்றாலும். வீர சைவம் என்ற வழக்கு அவ்வாறு ஏற்பட்டிருக்காது என்று கொள்ளலாம்.

செம்பொருள் சிவனாக மாறி நின்றபோது செய்து காட்டிய, மேற்கொண்டு ஒழுகிய வாழ்வியல் நெறி ஒன்று உண்டு. ஒரே நெறியை மேற்கொண்டுதான் எட்டு வீரச் செயல்களைச் செய்திருக்கிறான்.

வீரர்கள் இருவகையினர். தனக்கு அயலான அம்பு, தண்டம், வாள், வேல் முதலிய படைக்கலங்களைத் துணையாகக் கொண்டு போர் செய்து வெற்றிபெறப் பாடுபடுபவர் ஒருவகையினர். தனக்கு அயலான படைக் கலங்களைத் தொடாமல் தன்னுடைய கைகள் கால்கள் முதலியவற்றின் உதவிகொண்டே போர் செய்து வெற்றி பெறப் பாடுபடுவர் இன்னொரு வகையினர். இராமா யணத்தில் சொல்லின் செல்வனாகிய அனுமன் வேறு படைக்கலங்களைத் தொடாமல் தன் கைகளால் மரங் களைப் பெயர்த்து அடித்தும், மலைகளைப் பிடுங்கி எறிந்தும், கைகளால் பகைவரை அகப்படுத்திக் கீழே தள்ளிக் கொன்றும் போர் செய்தவன். இவ்வாறே செம்பொருள் சிவனாக வெளிப்பட்டு எட்டு வகையான வீரச் செயல்களைச் செய்தபோது, தனக்கு அயலாக உள்ள எந்த ஒரு படைக் கலத்தையும் எடுக்காமல், தன்னி டத்தில் பதித்திருந்த வலிமையை மட்டுமே கருவியாகக் கொண்டு, செய்து காட்டியது என்று கூறும் திருமூலர் 'பதிவலியில் வீரட்டம் எட்டு' என்று குறிப்பிட்டுக் காட்டினார்.

சிவனாக மாறி நின்ற செம்பொருள் தன்னிடம் பதிந்துள்ள வலிமையை எழுப்பி வெளிக் கொணர்வதற்கு ஒரு யோக முறையை மேற்கொண்டது. சிவம் தானே ஆகமமாக நின்று செய்து காட்டிய யோக முறையை 'அங்கி யோகம்' என்றும், 'அருந்தவ யோகம்' என்றும் திரு மூலர் சுட்டிச் செல்கிறார். இந்த யோகத்துக்கு மேலும் ஒரு சிறப்புப் பெயர் உண்டு. அதுதான் 'அகத்தியம்'.

ஒருவன் வலிமையையோ, ஆற்றலையோ, வரங் களையோ பெற்று வெற்றி பெறுவதற்கு இரண்டு முறைகள் கையாளப் பெற்றன.

(1) யாக குண்டம் அமைத்து, தீ வளர்த்து முறையான மந்திரங்களுடன் பலியுணவை அத்தீயில் பெய்து, தவமி யற்றினால் எந்தக் கடவுளை நோக்கி மந்திரம் கூறிப் பலியுணவு கொடுக்கப் பெற்றதோ அந்தக் கடவுள் நேரே வருவார். அவரிடம் தனக்கு வேண்டிய வலிமைகளை யெல்லாம், தேவைகளையெல்லாம் வரங்களாகப் பெற் றுக் கொள்ளுதல் – இம்முறை புலத்தீ முறை என்று கூறப்படும். புலம் – வெளி. தனக்கு அயலாக யாக குண் டத்தில் தீயை வளர்த்துச் செய்யும் முறை. புலத்தீ வளர்ப் பதற்குரிய குண்டங்கள் மூன்று வகைப்படும். குண்டங் களின் வேறுபாட்டால் தீயின் பெயரும் வேறுபடும். ஆகவ னீயம், காருகபத்யம், தாக்ஷினாக்னியம் என்பன.

(2) முன்சொன்ன புலத்தீ நெறிக்கு மாறுபட்டது அகத்தீ நெறி. தன்னுடம்பிலேயே அமைந்திருக்கும் வலிமையை வெளிப்படுத்த, தானே யாக குண்டமாக நின்று தன்னுள் அமைந்த தீயை வளர்த்து, யோகம் செய்து, வலிமையைப் பெறுதல்.

வெளியில் வேள்வித் தீ வளர்த்து, அதன் உதவியால் வலிமை பெறும் நெறியைக் கடைப்பிடித்தவர்கள் 'புலத்தீ மரபினர்' எனப் பெற்றனர். புலத்தீ நெறியினை என்பது புலத்தியன் என்றாயது. இராவணன் தன்னைப் 'புலத் தியன்' மரபில் வந்தவன் என்று கூறிக் கொண்டது இந்த அடிப்படையில்தான். இம்மரபினரின் பெயர்களிலேயே 'அக்னி' என்ற சொல் ஒட்டிக் கொண்டிருக்கும். ஜம தக்னி திரணதூமாக்னி என.

புலத்தீ நெறிக்கு முற்றிலும் மாறான நெறி 'அகத்தீ நெறி'. இந்நெறி முறையினர் அகத்தீயர் எனப் பெற்றனர். அகத்தியர் இம்மரபினரே.

புலத்தீ வளர்த்துப் பெறும் ஆற்றலைவிட அகத்தீ வளர்த்துப் பெறும் ஆற்றல் எல்லா வகையிலும் சிறந்தி ருந்தது என்பதை வரலாறு நமக்கு விளக்கிக் காட்டு கிறது. இராவணனுக்கும் அகத்தியருக்கும் நடைபெற்ற போரில் இராவணன் தோற்றிருக்கிறான். புலத்தீ நெறியில் நின்று சில கடவுளர்களை வரவழைத்து வரம்பெற்றவர்கள் எவ்வாறு அழிந்தார்கள் என்பதை

ஆராய்ந்தால் அகத்தீ நெறியின் விளைந்த ஆற்றலே காரணம் என்பதை அறியலாம்.

நடுவு நிலையில் நில்லாமல் இவ்வுலகமானது சரிந்து கெடுகின்றது என்று முறையிட்டபோது இறைவன் அங்கு நின்ற அகத்தியரைப் பார்த்து, நடுவு நிலையில் நில் லாமல் அழிவதற்கு விரைந்தோடும் இவ்வுலகத்தை முன் நின்று தடுத்து நிறுத்துக என்று கூறி அனுப்பினான்.

இச் செய்தியைச் சொல்லும் முன், இறைவன் அகத்தி யனை 'நடுவுள அங்கி அகத்திய!' என்று விளிக்கிறான்.

மூச்சுக் காற்றினை இடகலை பிங்கலை என்ற இடவல நாடிகளிலேயே செலுத்திக் கொண்டிருந்து, சுழுமுனை என்ற நடுநாடியில் நிறுத்திப் பழக்காமற் போனால், இவ்வுடம்பு விரைந்து அழிந்து விடுகின்றது. 'நடுவு நிற்றல்' என்பது மூச்சுக் காற்றினைச் சுழுமுனை நாடியிலேயே நிற்கப் பண்ணுதல். மூச்சுக் காற்றானது 'நடுவு நிலை' எனப் பெறும் சுழுமுனை நாடியில் நின்றால் மூலாதாரத்தில் ஒருவகை வெப்பம் தோன்றும். அந்த வெப்பத்தினால் மூலாதாரத்தில் வெண்ணிறப் பாம் பெனச் சுருண்டு, மேரு தண்டம் எனப்பெறும் முதுகுத் தண்டின் உட்புறத் தொளையின் முகப்பில் தன் வாயை வைத்துக்கொண்டிருக்கும் குண்டலினி, தன் வடிவம் மாறி சத்தியாக வெளிப்பட்டு, முதுகுத்தண்டு வழியாக மேலேறி மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை எனப் பெறும் ஆறு ஆதா ரங்களிலும் முறையே பதிந்து இறுதியில் புருவ மத்தியில் உள்ள ஆயிர இதழ்த்தாமரையை மலர்வித்து, அதனுள் அமுத ஊற்றைப் பெருக்கெடுக்குமாறு செய்து, அவ் வமுத தாரைகளை உடல் முழுதும் பரப்பும்.

ஆறாதாரங்களும், ஒவ்வொருவர் உடம்பிலும் அமைந்திருக்கும் ஒளியிடங்கள். அவை தாமரை வடிவில் இருக்கும். அத்தாமரையிடம் செயல்பட்டுத் தன் வலிமை யைக் கொடுப்பதற்குரிய மூல எழுத்துக்கள் அங்கே இருக்கும். அவ்வெழுத்துக்குரிய கடவுளும் அங்கிருப்பர். ஓம், ந, ம, சி, வ, ய என்ற ஆறெழுத்துக்களும் முறையே மூலாதாரம் முதல் ஆக்ஞை வரை அமைந்துள்ள எழுத்துக்களாகும்.

மூச்சுக் காற்றினைச் சுழுமுனையில் நிறுத்தினால், மனம் அசைவற்று நிற்கும். பிறகு உள்நின்று எழுகின்ற குண்டலினி சக்தியை 'இலிங்க வழி' என்று சொல்லப் படும் ஆறு ஒளியிடங்களிலும் பற்றிச் செல்லுமாறு செய்தால் உடல் முழுவதும் ஒளிமயமாக ஆகும்.

'இருந்த மனத்தை இசைய இருத்திப்
பொருந்தி இலிங்க வழியது போக்கித்
திருந்திய காமன் செயலழித்து அங்கண்
அருந்தவ யோகம் கொறுக்கை அமர்ந்ததே'

பகைவரை அழிப்பதற்கு மட்டுமேயன்றி அவர் களையே மறுபடியும் நன்னிலையில் நிறுத்தி வாழ வைத்து அருள் வழங்கவும் கூட இத்தவயோகம் பயன் படும் என்பதை 'இலிங்க புராணம்' என்ற தலைப்பில் திருமூலர் அழகுபெற எடுத்து மொழிகிறார்.

'ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்
எண்ணில் தவத்தால் வரும்'

என்ற திருக்குறளால் உயர்த்தப்பெறும் தவம் அகத்தீ நெறித் தவமே, அங்கியோகமே, அருந்தவ யோகமே என்று எடுத்துக் காட்டி விளக்குகிறார் திருமூலர்.

அருந்தவ யோகம், அங்கி யோகம் எனப்பெறும் ஆறாதார யோகத்தை ஆகமமாக நின்று செய்து காட்டிய வன் சிவனே. அவன் இத்தகைய அகத்தீ முறைத் தவத் தால் புரிந்த வீரச் செயல்கள், சேவகச் செயல்கள் எட்டு. இவ்வெட்டையும் இணைத்துக் கூறும் தனிப்பாடல் ஒன்று உண்டு.

'பூமன் சிரம் கண்டி அந்தகன் கோவல் பரம் அதிகை
மாமன் பறியல் சலந்தரன் விற்குடி மாவழுவூர்
காமன் குறுக்கை யமன் கடவூர் இந்தக் காசினியில்
தேமற்று கொன்றையும் திங்களும் சூடிதன் சேவகமே'

அகத்தீத் தவமுறையால் செம்பொருள் சிவனென நின்று நிகழ்த்திய ஒன்பதாவது செயல் ஒன்றும் உண்டு.

சூரபதுமனை அழிக்கத் திருவுளங் கொண்ட பரம் பொருள் ஆறு ஆதாரங்களில் உள்ள ஆறு ஆற்றல்களை யும் ஆறு முகங்களாக ஆக்கி, அவைகளின் நெற்றிக் கண்களிலிருந்து ஆறு தனித்தனித் தீப்பொறிகளை வெளி வரச் செய்து, அவைகளால் ஆறு தனித் தனிக் குழந்தை கள் தோற்றம் பெறச் செய்தது. இவ்வாறு தோற்றம் பெற்ற ஆறு குழந்தைகளையும் 'ஒருவர் பயந்த ஆறமர் செல்வ' என்று சொல்லாமல், 'அறுவர் பயந்த ஆறு அமர் செல்வ' என்று ஆறு பேர் பெற்ற ஆறு குழந்தைகளாகவே முருகனை முதன் முதல் அமைத்துக் காட்டுகிறது திரு முருகாற்றுப்படை.

இவ்வகையில் திருமுருகாற்றுப்படை அளிக்கும் இணைப்புச் செய்திகளையும் நாம் அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

ஒருவன் சிறையிலிருக்கும்போது எழுதப்பெற்ற நூலுக்குத் தனி மதிப்பு உண்டு என்பதை இக்கால அர சியல் வரலாற்றறிஞர் பலரும் ஒப்புவர்.

திருமுருகாற்றுப்படை சிறையில் பாடப் பெற்ற நூல் என்பது மட்டுமன்று, சிறையிலிருந்து மீட்டுக் கொடுத்த பாட்டும் ஆகும். பாடிய ஒருவரை மட்டும் சிறைவீடு செய்த பாட்டன்று; பாடியவரோடு பல்கியிருந்த தொள் ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது பேர்களுக்கும் சிறையிலிருந்து விடுதலை செய்து கொடுத்த பாட்டாகும்.

திருமுருகாற்றுப் படையின் ஆசிரியர் நக்கீரர் ஒரு பொய்கைக் கரையில் தவமியற்ற அமர்ந்தார். பொய் கைக் கரையை அடுத்திருக்கும் ஆலமரத்தின் பழுப்பு இலை ஒன்று கீழே விழுந்தது. விழுந்த இலையின் ஒரு பாதி தண்ணீரிலும், மறு பாதி தரையிலும் ஆகக் கிடந்தது. தண்ணீரில் விழுந்த பாதி இலை மீனாக மாறியது. நிலத்தில் விழுந்த பாதி இலை பருந்தாக மாறியது. இரண் டும் ஒன்றையொன்று இழுத்தன. தவத்தில் இருந்த நக்கீரர் தவம் கலையப் பெற்று இத்தகைய காணற்கரிய காட்சியைக் கண்டார். தவத்தில் வழுவிவிட்டார் என்ற குற்றத்திற்காக நக்கீரரை இழுத்துக் கொண்டு போய் ஒரு சிறையில் தள்ளியது ஒரு பூதம். அங்கே முன்னேயே இவ் வாறு தவத்தில் தவறியமையால் சிறைப்படுத்தப் பெற்றவர்கள் 999 பேர் உள்ளனர். ஆயிரமானதும்

கொன்று சாப்பிட எண்ணியிருந்தது அப்பூதம். ஆயிரமாம் பெருமைக்கு உரியவராக நக்கீரர் சென்றதும் ஏனைய 999 பேர்களும் – நக்கீரரைத் தாக்க முற்பட்டனர். 'உடம்மால் தானே எங்கள் உயிர் போகப் போகிறது. நீவிர் ஒருவர் வரவில்லையானால் எங்களை இப்போது பூதம் சாப்பிட முற்படாதே. நீவிர்தான் எங்கள் – அழிவுக்குக் காரணம்' என்று அவர்கள் குற்றம் சாட்டினார்கள். இந்நிலையில் திருமுருகாற்றுப்படை தோற்றம் பெறுகிறது.

பொய்கைக் கரையே இந்த உலகம். ஆலம் பழுப்பே உயிர்கள். உலக வாழ்க்கையைத் தொடங்க முற்படும் உயிர்களுக்கு முன்னால் இருவகை வாழ்வுப் பாதை காட்டப் பெறுகின்றன.

மீன் தண்ணீரின் மேற்பரப்பிலேயே நீந்தி விளையாடி, அங்கே கிடக்கும் அழுக்கையே உணவாகத் தின்று மடிந்துபோகும் வாழ்க்கை உடையது.

பருந்து மிக உயரப் பறக்கும் வாழக்கையுடையது. வாழ்க்கை உயர்ந்ததேயாயினும், இறந்து அழுகிய பிணங் கள் கிடக்கின்றனவா என்று தேடிக் கொண்டேயிருக்கும் கண்கள் பருந்துக்கு உண்டு.

மீன் வாழ்க்கை உணர்ச்சி வயப்பட்ட வாழ்க்கை. உலகின் அடித்தளம் வரையில் சென்று வாழ்வின் உண்மையை அனுபவித்துக் காணாமல் ஏதோ மேலெ ழுந்த சில அழுக்குப் போன்ற தாழ்ந்த இச்சைகளையே நிறைவு செய்துவிட்டு மடிந்து போகும் வாழ்க்கை.

பருந்து வாழ்க்கை அறிவு வாழ்க்கை. அறிவு மிக உயரத்தில் பறக்கும். ஆனால் ஆசை அதனை இழிநிலை யிற் கொண்டு வந்து ஈடுபடுத்திவிடும்.

அறிவும் உணர்ச்சியும் ஒன்றுக்கொன்று முரண்பட்டு இழுக்கப் போர்கள் நிறைந்த போர்க்களமே உலகம்.

இது நக்கீரர் தவத்தைக் குலைத்த நிகழச்சியின் கருப் பொருள்.

இக் கருப்பொருள் உணர்த்தும் நீதி ஒன்று உண்டு. மீனும் பருந்தும் இணைந்த ஒருவகை வாழ்க்கை முறை வேண்டும். உலகமெனும் இப்பொய்கையில் வாழ வேண்டுமானால் நீந்தத் தெரியவேண்டும். உலகிலிருந்து ஒதுங்கி வாழாமல் தனக்கென எத்தகைய பற்றும் இன்றி, எதிலும் தோய்ந்து நின்று நுகர்தல் இன்றி, நீரின் மேற் பரப்பிலேயே நீந்தி வாழும் மீனைப்போல் உலக– வாழ்க் கையை அமைத்துக் கொள்ள வேண்டும். ஆனால் அதே சமயத்தில் பருந்து வாழ்க்கையை மேற்கொள்ள வேண் டும். பருந்து வாழ்க்கை ஒருவகை யோக வாழ்க்கை. உடல் வாழ்க்கையில் மீனாக, உயிர் வாழ்க்கையில் பருந்தாக அமைத்துக் கொள்ளுதலே ஏற்ற நெறிகள்.

இத்தகைய அடிப்படையில் எழுந்த திருமுருக்காற்றுப் படை முருகன் எழுந்தருளியிருக்கும் ஆறுபடை வீடுகளை விளக்கிக் காட்டுகிறது. முருகன் ஆணின் நெற்றிவழித் தீப்பொறியிலிருந்து நேரே வெளிப்பட்டவர்.

மனித உடம்பில் ஆறு ஆதாரங்களை அடிப் படையாகக் கொண்டு தோன்றிய ஆறுமுகங்களிலிருந்து வெளிப்பட்ட முருகன் பிண்டத்திலுள்ள ஆறாதாரங்களை விளக்கிக் காட்டியது போலவே அண்டத்திலுள்ள ஆறு ஆதார இடங்களைச் சுட்டிக் காட்டி அவைகளைப் படைவீடு எனக் கொண்டு வாழ்ந்து காட்டுகிறான். திருமுருகாற்றுப் படையிலுள்ள ஆறுபடைவீடுகளும் ஆறு ஆதாரங்களின் விளக்க இடங்கள் என்று கொள்ள வேண்டும்.

முருகனைப் போலவே கி.பி. 12ஆம் நூற்றாண்டில் ஒரு குழந்தை பிறந்தது. பசவேசர் காலத்தில் வாழ்ந்த அல்லமாப்பிரபு தேவர் இந்நெறியால் வெளிப்பட்டவரே.

வள்ளிகாவை என்ற ஊரில் நிராங்காரன், சுஞ்ஞானி என்ற இருவரும் இல்லறம் நடத்தி வந்தனர். மகப்பேறு இல்லை. மகப் பேற்றை விரும்பிய நிராங்காரன், கீழ் நோக்கிச் செல்லும் வாயுவையும், மேல் நோக்கிச் செல்லும் வாயுவையும் அடக்கி, சுழுமுனையில் நிறுத்தி, மனத்தை விஷயங்களிற் செல்லவிடாமல் திருப்பி,

நான்கு இதழ்களையுடைய தாமரையைக் (மூலாதாரம்) கடந்து
ஆறு இதழ்களையுடைய தாமரையைக் (சுவாதிட்டானம்) கடந்து
பத்து இதழ்களையுடைய தாமரையைக் (மணிபூரகம்) கடந்து
பன்னிரண்டு இதழ்களையுடைய தாமரையைக் (அனாகதம்) கடந்து
பதினாறு இதழ்களையுடைய தாமரையைக் (விசுத்தி) கடந்து
இரண்டு இதழ்களையுடைய தாமரையைக் (ஆக்கினை) கடந்து

மேலே சென்று ஆயிரம் இதழ்களையுடைய தாமரையின் மேல் வீற்றிருக்கும் சோதியைக் கண்டு என் எண்ணத்தை முடிப்பேன் என்று எழுந்து தம் மனைவியையும் அழைத்துக் கொண்டு காட்டை அடைந்து கமலாசனமாக அமர்ந்து, விழியை அளவாக மூடி மனத்தைத் திறந்து இட்டலிங்கத்திற் பதித்து, இடகலை பிங்கலை வழியாற் செல்லும் காற்றினை மாற்றிச் சுழுமுனையில் நிறுத்தி, அறிவு மாறுபாடு அடையாமல் இருப்பதற்காக 'சிவோகம்' என்ற மந்திரத்தை உச்சரித் துக் கொண்டு, குறியற்ற குறியைக் குறித்து, ஒன்பது திங்கள் சிவயோக சமாதியில் இருந்தார். நிராங்காரனு டைய நெற்றியின்கண் பரஞ்சோதி திரண்டு குழந்தை உருவை அடைந்து வெளியில் வந்து கிடந்தது. அக் குழந்தையே அல்லமாப்பிரபு.

இறைவனால்தான் அவ்வாறு ஒரு குழந்தையை உண்டாக்க முடியும் என்பதன்றி மக்களாலும் அவ்வாறு குழந்தையை அளிக்க முடியும் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. இது வரலாற்று முறையில் சான்றுகள் கொண்டு விளக்கும் கருத்து.

மேலே காட்டப் பெற்றவைகளால் முடித்துக் காட்ட வேண்டிய சில கருத்துக்களைக் கீழே காணலாம்.

1. புலத்தீ நெறியிலிருந்து மாறுபட்ட அகத்தீ நெறி ஒன்று உண்டு.
2. அகத்தீ நெறியால் நம்முள்ளே பதிந்திருக்கும் பேராற்றலை வெளிப்படுத்தி வியத்தகு செயல் களை ஆற்ற முடியும்.
3. செம்பொருள் சிவனாக மாறி நின்று அங்கியோகம் எனப்பெறும் அகத்தீ நெறித் தவத்தால் எண்வகை வீரச் செயல்களை முடித்தது.
4. ஆறாதார இலிங்க வழியை மூலமாகக் கொண்டு அங்கங்கே எழுப்பப்பெற்ற ஆறு சோதிப் பிழம்பு

களையும் தான் அமைத்துக் கொண்ட ஆறுமுகங்க ளில் உள்ள ஆறு நெற்றி விழிகளால் வெளிப்படுத்த அப்பொறிகள் ஆறு குழந்தைகளாக வெளிப்பட் டன. அவைகளை இணைத்ததால் அமைந்த மூர்த்தமே முருகன். அவன் பாசறை வீடுகளே ஆறு படைவீடுகள்.

மேலே குறிப்பிடப்பெற்ற நான்கு செய்திகளும் ஒருமுகமாக நின்று விளக்கும் கருத்து ஒன்று உண்டு. மேலே குறிப்பிடப்பெற்றவை வீரசைவ நெறி என்பதே அக் கருத்து.

தமிழ் நூல்கள்

தமிழைப் பல்லாற்றானும் வளம் பெறச் செய்த பெருமை வீரசைவர்களுக்கு உண்டு.

வீரசைவக் கொள்கையை விளக்கும் நூல்கள் பல தமிழில் உள்ளன. அவற்றையெல்லாம் விரிவாக அமைக்க இயலாமை இடமும் சூழலும் கருதி அமைந்தது.

கி.பி. 17ம் நூற்றாண்டில் வாழ்ந்த கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச சுவாமிகள் வீரசைவத் தத்துவ நூல்கள் பலவற்றை இயற்றியருளியுள்ளார்கள். அவை களிற் சிலவற்றைக் கீழே குறித்துள்ளேன்.

1. பிரபுலிங்க லீலை
2. சிவஞான பாலய தேசிகர் நெஞ்சுவிடுதூது
3. சிவஞான பாலய தேசிகர் தாலாட்டு
4. சிவஞான பாலய தேசிகர் பிள்ளைத் தமிழ்
5. சிவஞான பாலய தேசிகர் கலம்பகம்
6. சிவஞான பாலய தேசிகர் திருப்பள்ளி எழுச்சி
7. இஷ்டலிங்க அபிஷேக மாலை
8. நெடுங்கழி நெடில்
9. குறுங்கழி நெடில்
10. நிரஞ்சன மாலை
11. கைத்தல மாலை
12. சித்தாந்த சிகாமணி

வீரசைவமும் தமிழும் விளங்கி நின்று செழிப்பதற்கு இன்றளவும் தொண்டு புரிந்து வருகின்ற குறிப்பிடத்தக்க சில வீரசைவ மடங்களைக் கருத்தில் கொள்வது சிறந்தது.

மயிலம் சிவஞான பாலய சுவாமிகள் திருமடம்

பேரூர் சாந்தலிங்க சுவாமிகள் திருமடம்

விருத்தாசலம் குமாரதேவர் திருமடம்

திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் திருமடம்

திருப்பாதிரிப் புலியூர் ஞானியார் சுவாமிகள் திருமடம்

கும்பகோணம் பெரிய மடம்

வீர சைவ கொள்கையை விளக்கும் 'வீரசைவ முரசு' என்ற இதழை கவிஞர் ஆ. திருவாசகன் நடத்தி வருகிறார்.



அருட்பிரகாசர் அவதாரச் சிறப்பு

(சுத்த சன்மார்க்கத் தோன்றல்,
சைதை. துரை. பாலசுப்பிரமணியன்)

அவதாரம் என்றாலே சிறப்புடைப் பிறப்பு என்று பொருள்; புத்தர் அவதரித்தார்; ஏசு அவதரித்தார்; நபிகள் அவதரித்தார்; மாணிக்கவாசகர் அவதரித்தார்; வள்ளலார் அவதரித்தார். ஞானிகள் பிறப்பதை அவதாரம் என்பார்கள்.

வள்ளலார் இரண்டு காரணங்களுக்காக இவ்வுலகில் வருவிக்கவுற்றார். ஒன்று இராமலிங்கப் பிறவியை இறுதியாக்குதல், மற்றொன்று சுத்தசன்மார்க்கத்தை நிலைநாட்டுதல். இது அருட் பெருஞ்ஜோதி ஆண்டவரின் திருவுள்ளம்.

"பேருற்ற வுலகிலுறு சமயமத நெறியெலாம்
பேய்ப்பிடிப் புற்ற பிச்சுப்
பிள்ளை விளையாட்டென வுணர்ந்திடாது உயிர்கள்பல
பேதமுற்று அங்குமிங்கும்
போருற்று இறந்துவீன் போயினார் இன்னும் வீண்
போகாதபடி விரைந்தே
புனிதமுறு சுத்தசன் மார்க்கநெறி காட்டிமெய்ப்
பொருளினை யுணர்த்தி யெல்லாம்
ஏருற்ற சுகநிலை யடைந்திடப் புரிதிநீ
யென்பிள்ளை யாதலாலே
இவ்வேலை புரிகவென்று இட்டனன் மனதில்வேறு
எண்ணற்க வென்ற குருவே
நீருற்ற வொள்ளிய நெருப்பே நெருப்பினுள்
நிறைந்து இருளகற்றும் ஒளியே
நிர்க்குணானந்த பரநாதாந்த வரையோங்கு
நீதி நடராஜ பதியே"

என்று நடராஜபதி மாலையில் பெருமானார் பாடுவார். பேருற்ற உலகு எத்தனை எழில்மிக்க உலகு; எத்தனை வளம்; எத்தனை அறிவு; எத்தனை கலைகள்; விஞ்ஞானத்தில் எத்தனை கண்டுபிடிப்புகள். சமய மதங்களைப் பேய் பிடிப்புற்ற பிச்சுப்பிள்ளை விளையாட்டு என்கிறார். இதனை உணராமல் மக்கள் அவரவர் சாமி என்கைை பெரிது என்று பேதம்பேசி, போரிட்டு பெரிது, கொள்கை பெரிது என்று பேதம்பேசி, போரிட்டு வீண் வீண் போகிறார்கள். இனியும் அவர்கள் வீண் போகாதபடி புனிதமுறும் சுத்தசன்மார்க்கநெறி காட்டு; அதுவும் விரைந்துகாட்டு என ஆண்டவர் ஆணையிடுகிறார்.

பெருமானார் தயங்குகிறார். காரணம் வள்ளலார் வாழ்ந்த காலம் பத்தொன்பதாம் நூற்றாண்டு அறியாமைப் பேரிருள் மண்டிக்கிடந்த காலம். மக்கள் சாதிப்பித்து சமயப் பித்து கொண்டு அலைந்த காலம். இச்சூழ்நிலையில் சன்மார்க்கத்தை எப்படிப் பரப்புவது என்று பெருமானார் நினைக்கிறார். அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர், 'இது உன்னால்தான் முடியும். நீ என் பிள்ளை. அதனாலே இவ்வேலையிட்டனன். மனதில் வேறு எண்ணற்க' என்று கூறுகிறார்.

உலகத்தில் தோன்றிய பெரியவர்கள் எல்லாரும் சன்மார்க்கம் பேசினர். யாரும் துன்மார்க்கம் போதிக்கவில்லை. ஆனால் வள்ளலார் போதித்தது சுத்தசன் மார்க்கம். சுத்த சன்மார்க்கம் யாது என்பதை அவரே விளக்குகிறார். ஆறாம் திருமுறையில் முதல் பக்கத்தில் ஒரு விண்ணப்பம் வெளியாகியுள்ளது. எல்லா சன் மார்க்க சங்கத்தாரும் வழிபாட்டின் முடிவில் இதனை ஓதுகிறார்கள்.

"எல்லாமுடைய அருட்பெருஞ்ஜோதி அற்புதக் கடவுளே! இது தொடங்கி எக்காலத்தும் சுத்தசன் மார்க்கத்தின் முக்கிய தடைகளாகிய சமயங்கள் மதங்கள் மார்க்கங்கள் என்பவற்றின் ஆசார சங்கற்ப விகற்பங்களும், வருணம் ஆசிரமம் முதலிய உலகாசார சங்கற்ப விகற்பங்களும் எங்கள் மனதில் பற்றா வண்ணம் அருள் செய்தல் வேண்டும், சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லட்சியமாகிய அன்மநேய ஒருமைப்பாட்டுரிமை எங்களுக்குள் எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எவ்வளவும் விலகாமல் நிறைந்து விளங்கச் செய்வித்தருளல் வேண்டும். எல்லாமாகிய தனிப்பெருந் தலைமை அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே! தேவரீர் திருவருட் பெருங் கருணைக்கு வந்தனம். வந்தனம்."

இந்த விண்ணபத்தின் முற்பகுதியில் சமயங்கள் மதங்கள் வருணம் ஆசிரமம் போன்றவை தடைகள் என்கிறார். பிற்பகுதியில் ஆன்மநேய ஒருமைப் பாட்டுரிமை லட்சியம் என்கிறார். ஆம்! அந்த ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமைதான் வள்ளலாரின் முதல் முழக்கம். அந்த முழக்கத்தில் தோன்றியதுதான் அருட்பா எனும் தெய்வநூல்.

'எதையும் சாரவேண்டாம், சாடவேண்டாம்' என்று எச்சரிக்கின்றன 'சங்கற்பம், விகற்பம்' என்ற சொற்கள். அதையதை அப்படியே விட்டுவிடுங்கள், ஆன்ம நேயத்தை உறுதியாகப் பற்றிக் கொண்டு முன்னேறுங்கள். எத்தகைய சமரச நோக்கு!.

அருள் தந்தையின் ஆணையை ஏற்ற பெருமானார் முதலில் சங்கம் அமைக்கிறார். அதில் அனைவரையும் சேர அழைக்கிறார். அதற்கு அவர்கள் செலுத்த வேண்டிய சந்தா தயவு என்று அறிவிக்கிறார்.

'உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே' என்பது பழமொழி. தர்மங்களில் சிறந்தது அன்னதானம். சாலை கண்டு பசிப்பிணி போக்குகிறார்.

உலகத்திலுள்ள கோயில்கள் எல்லாம் சமயக் கோயில் களாகவே உள்ளன. ஆகவே ஆகமங்களுக்கு அப்பாற் பட்ட ஒரு பொதுக் கோயிலை வடலூர் பெருவெளியில் நிறுவினார். இது சன்மார்க்கக் கோயில், சமரசக் கோயில், உலகத்தின் முதற்கோயில், ஒரே கோயில் என்பது குறிப்பிடதக்கதாகும். இன உலகிலுள்ள மக்கள் அனை வரும் வடலூர் பெருவெளியை நோக்கி வருவார்கள்.

"ஆணை ஆணை நீ அஞ்சலை அஞ்சலை அருள் ஒளி
தருகின்றாம்
கோணை மாநிலத்தவர் எலாம் நின்னையே
குறிக்கொள்வர் நினக்கே எம்
ஆணை அம்பலத்து அரசையும் அளித்தனம் வாழ்க நீ
மகனே என்று
ஏணை பெற்றிட எனக்கருள் புரிந்தநின்
இணைமலர்ப் பதம் போற்றி."

'நின்னையே குறிக்கொள்வார்' என்பது இப்பாடலில் குறிப்பிடத்தக்கதாகும். இனிவரும் உலகம் வள்ளல் யார் என்பதை ஆராயும். அப்போது எல்லாச் சமயங்களும் மதங்களும் மார்க்கங்களும் போய் சுத்த சன்மார்க்கம் ஒன்றே நிலவும்.

ஆன்மாவுக்குப் பெருமானார் தரும் விளக்கம் கோடி பெறும். ஆன்மா சிற்றணு வடிவம். கோடி சூரியப் பிர காசம் உடையது. லலாடஸ்தானம் அதன் இருப்பிடம். கால் பங்கு பொன்மை முக்கால் பங்கு வெண்மை வண்ணம். ஆன்மப்பிரகாசத்தை ஏழு மாயாத்திரைகள் மறைக்கின்றன. அவை–கறுப்புத்திரை–மாயாசக்தி; நீலத்திரை – கிரியா சக்தி; பச்சைத்திரை – பராசக்தி; சிவப்புத்திரை – இச்சாசக்தி; பொன்மைத்திரை – ஞான சக்தி; வெண்மைத்திரை – ஆதி சக்தி; கலப்புத் திரை – சிற் சக்தி.

இதைத்தான் புறத்தே ஞானசபையில் எழுதிரை களைத் தொங்கவிட்டு ஒவ்வொன்றாக நீக்கி ஜோதி தரிசனம் காட்டுகிறார்கள்.

வள்ளலார் 'அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி!, என்கின்ற மகாமந்திரத்தை வழங்கினார். புறத்தே ஒளி வழிபாட்டை நிறுவினார். தனிக்கொடி கண்டார். இக்கொடி மற்றை யக் கொடிகளைப் போன்றதன்று. இது அனுபவக் கொடி.

வள்ளலார் எத்தகைய புறக்கோலமும் ஏற்கவில்லை. தூய வெள்ளாடைத் துறவியாக வாழ்ந்தார். வெள்ளாடை தயவுக்கு அடையாளம்.

சமாதி பழக்கம் பழக்கமல்ல; சகப்பழக்கமே பழக்கம் என்றார். கடைசி வரையில் மக்களோடு கலந்து வாழ்ந் தார்.

தமிழகத்தில் சீர்திருத்த கருத்துகளுக்கு முதன்முத லாக வித்திட்டவர் வள்ளலார் என்றால் அது மிகை யாகாது. நூற்றுக்கணக்கான பாடல்களை அருட்பாவில் காணலாம். எடுத்துக்காட்டாக ஒரு சில:

"சாதியிலே மதங்களிலே சமயநெறிகளிலே
சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே
ஆதியிலே அபிமானித்து அலைகின்ற வுலகீர்
அலைந்தலைந்து வீணே நீர் அழிதல் அழகலவே
நீதியிலே சன்மார்க்க நிலைதனிலே ஞான
நிருத்தமிடுந் தனித்தலைவர் ஒருத்தரவர்தாமே
வீதியிலே அருட்ஜோதி விளையாடப் புரிய
மேவுகின்ற தருணமிது கூவுகின்றேனுமையே"

என்றும்,

"கொள்ளைவினைக் கூட்டுறவால் கூட்டியபல் சமயக்
கூட்டமும் அக்கூட்டத்தே கூவுகின்ற கலையுங்
கள்ளமுறும் அக்கலைகள் காட்டிய பல்கதியுங்
காட்சிகளுங் காட்சிதரு கடவுளருமெல்லாம்
பிள்ளை விளையாட்டென நன்கறிந்து இங்கெனையே
பிள்ளையெனக் கொண்டு பிள்ளைப் பெயரிட்டபதியே
தள்ளரிய மெய்யடியார் போற்ற மணிமன்றில்
தனிநடஞ் செய்யரசேயென் சாற்று மணிந்தருளே"

என்றும்,

"தெய்வங்கள் பலபல சிந்தை செய்வாரும்
சேர்கதி பலபல செப்புகின் றாரும்
பொய்வந்த கலைபல புகன்/றிடுவாரும்
பொய்ச் சமயாதியை மெச்சுகின்றாரும்
மெய்வந்த திருவருள் விளக்கமொன்றில்லார்
மேல்விளைவறிகிலர் வீண்கழிக்கின்றார்
எய்வந்த துன்பொழித்து அவர்க்கு அறிவருள்வீர்
எனைப் பள்ளியெழுப்பி மெய்யின்பந் தந்நீரே"

என்றும் பலவாகப் பாடியுள்ளார்.

ஞானத்தை எளிமையாக்கியவர் வள்ளலார். கடவுளி டத்து அன்பும் உயிர்களிடத்து தயவும் கொண்டு ஒழுகி வந்தால் அருட்ஜோதி ஆகலாம் என்பது அவரது உப தேசம். தன்னை ஏறா நிலைமிசை ஏற்றிவட்டது தயவு. அந்த தயவு எனும் கருணைதான் தன்னைத் தூக்கி விட்டது என்று உறுதி செய்கிறார். தானும் இரக்கமும் ஒன்றுதான்; அவை இரண்டில்லை என்று ஆணை செய்கிறர்.

வள்ளலார் உயர்ந்து செல்கிறார். ஒவ்வொரு அடியெ டுத்து வைக்கும்போதும் திரும்பித் திரும்பிப் பார்க்கிறார். இது அவர் உயிர்கள்பாற் கொண்ட பெருந்தயவாகும். பேரியக்கம் கண்ட பெருமானார் தன்னைத் தலைவராக அறிமுகம் செய்து கொள்ளவில்லை. சிற்றடியேன் என்று கூறிக் கொண்டு, உங்கள் தாள் வணங்கிச் சாற்றுகின்

றேன். தயவினொடுங் கேட்பீர் என்கிறார். சன் மார்க்க சங்கத்தில் உங்களில் என்னை ஒருவனாகக் கொள்ளுங் கள் என்கிறார். இவற்றைக் கேட்கின்றபோது நமது உள்ளம் அதிர்கின்றது.

பலர் பலவாகக் கூறுவார்கள். அதைக் கேட்டு அறிவு மயங்காதீர்கள். சுத்தசிவம் ஒன்றே. அது எல்லாம் செய்ய வல்லது. அதுவே பூரண சுகத்தைத் தரவல்லது. அதையே போற்றுங்கள். இது இறைவனின் ஆணை. இதைத்தான் நான் கூறுகிறேன். இதோ அந்தப் பாடல்:

"சன்மார்க்க சங்கத்தீர் சிற்றடியேனுமது
தாள்வணங்கிச் சாற்றுகின்றேன் தயவினொடுங் கேட்பீர்
என்மார்க்கத் தெனைநுமக்குள் ஒருவனெனக் கொள்வீர்
எல்லாஞ்செய் வல்ல நமது இறைவனையே தொழுவீர்
புன்மார்க்கத் தவர்போலவேறு சில புகன்றே
புந்திமயக் கடையாதீர் பூரணமெய்ச் சுகமாய்த்
தன்மார்க்கமாய்விளங்குஞ் சுத்தசிவம் ஒன்றே
தன்னாணை யென்னாணை சார்ந்தறிமின் ஈண்டே"

திரு அருள் சமூகத்தில் பெருமானார் விண்ணப்பித் துக் கொண்டேயிருந்தார். சத்தியச் சிறு விண்ணப்பத்தில் பெருமானார் வேண்டுகிறார்:

"தேவரீர் திருவருட் சுதந்திரத்தை என்னிடத்தே வைத் தருளி, மரணம், பிணி, மூப்பு, பயம், துன்பம் முதலிய அவத்தைகள் எல்லாவற்றையும் தவிர்த்து, இத் தேகத்தையே நித்திய தேகமாக்கி, எக்காலத்தும் அழியாத பேரின்ப சித்திப் பெருவாழ்வில் என்னை வாழ்வித்தல் வேண்டும். இத்தேகத்தைப் பெற்ற எல்லாச் சீவர்களுக்கும் எனக்கறிவித்த வண்ணமே அறிவித்து அவரவர்களையும் உரிமையுடையவர்களாக்கி வாழ்வித் தல் வேண்டும்.

இதுவரையிலிருந்த ஞானிகள் எல்லாம் சிவஜோதி யில் இரண்டறக்கலந்தனர். வள்ளலார் நிலை அதுவல்ல. அவர் கலவாமல் கலந்து திருவருட்செங்கோல் செலுத்து கிறார்.

"சுத்தவடிவும் சுகவடிவாம் ஓங்கார
நித்தவடிவும் நிறைந்தோங்கும் சித்து எனுமோர்
ஞானவடிவும் இங்கே நான்பெற்றேன் எங்கெங்கும்
தானவிளையாட்டு இயற்றத்தான்"

இதுவே திருவருட்பிரகாசர் பெற்ற முத்தேகச் சித்தி யாகும்.

"எல்லா வுலகமும் என்வசமாயின
எல்லாவுயிர்களும் என்னுயிராயின
எல்லா ஞானமும் என்ஞானமாயின
எல்லாவித்தையும் என்வித்தையாயின
எல்லாப்போகமும் என் போகமாயின
எல்லா இன்பமும் என்னின்பமாயின
எல்லாம் வல்ல சிற்றம்பலத்து என்னப்பர்
எல்லாம் நல்கி என்னுள்ளத்துள்ளாரே"

இது இறைநிலை. இந்நிலையைப் பெற்றுவிட்ட திருவருட்பிரகாச வள்ளலாரின் ஆட்சியே எங்கும் நிலவுகிறது என்பதே உண்மை.



VOICE OF VALLALAR IN JAPAN

(SHUZO MATSUNAGA JAPAN)

About six years ago, I published a small booklet which introduces Ramalinga Swamigal to the Japanese people. The circumstances why I challenged to the story of such a saint was as follows.

Mr. S.M.Muthu, a cinema manager in Komarapalayam, Salem Dt. at that time is my most intimate friend in India. One day when he met Dr. N.Mahalingam, the president of Ramalingar Panimandram in order to introduce my deed of having translated Thirukkural Etc. into Japanese, the president requested Mr. Muthu to have me introduce Ramalinga Swamigal to the Japanese people.

Immediately Mr. Muthu sent me a small book titled "Voice of Vallalar" written by Mr. S.R.V.Arasu and conveyed me Dr. Mahalingam's request. Dr. Mahalingam himself also sent me a voluminous book titled "Pathway to God trod by Saint Ramalingar" written by Mr. G.Vanmikanathan. The fact that a great man of virtue in South India named me as a man to introduce such a saint to the Japanese people gave me no reason to refuse it. I was obliged to struggle with this story for one year.

The book which Dr. Mahalingam presented me was so voluminous that it was almost impossible to finish the translation within a year as was requested by Mr. Muthu. So I decided to translate "Voice of Vallalar" and publish a small booklet on my own expense.

By the way, who is and what is vallalar? So far I hadn't seen this name in the literatures related to India written in Japanese. I read through Mr. Arasu's book again and again and referred to Mr. Vanmikanathan's book in various parts, and summarized the knowledge I obtained as follows.

Vallalar, whose formal name was Chidambaram Ramalingam was a saint who devoted himself to the enlightenment movement in Tamil Nadu in the nineteenth Century. The principle of his teaching was "All the souls of the human being are one. Therefore we have to love others in the same manner as we love ourselves and have deep compassion to all the beings in the world."

He was an enthusiastic devotee to Siva, one of the Hindu Gods. But he abaondoned the traditional Hinduism which persists on the discrimination between man and man authorized by the caste system and made it his ideal that all men, not only in India but also in the world have a brotherlike intimate relation under a unique absolute God. (He called it Siva).

He captured God as light. He built a cosmopolitan place of worship named Satthiya-Gnaana Sabhai in which every person could enter regardless of their caste, race, or religion. In that hall, a lamp which symbolized a grace light (Johthi) was offered as the objective of worship surrounded by big mirrors.

On the other hand, he had a profound knowledge on economics and made many utterances desiring the realization of the equal society. He thought that an empty stomach is an enemy to love and benevolence and built a free-feeding house named Satthiya Dharumachchaalai.

Further, Vallalar is highly estimated as a Tamil poet. Thiruarutpaa, his most important work which is full of faithful implore to God is composed of about six thousand lylics accompanied by beautiful melodies, and evey now, they are still recited every day by Tamil people with pleasure.

Owing to the strict spiritual training, he acquired a strong mental power. However, this fact caused a situation that he was regarded as a kind of Siddha who has a miracle power not only by the general folks but also by his followers. Vallalar, who hated such a situation locked himself in a room in Mettukuppam which he used for Samadhi and instructed his disciples not to open it for some time. He has never been seen since that time and the room is still kept locked. He is held by those who still believe in him that he was miraculously made one with God and that in the fullness of time he will reappear to the faithful.

Thought I hadn't any knowledge on Saint Ramalinga at first, I became an eager admirer of this saint in the course of my translation work, and his neat figure wrapped with two pieces of pure white cloth comes into my mind every now and then.

What is the reason why he impressed me so much? It is because of his generous and kind attitude to all the beings. Some religions are sometimes quite exclusive to the people who don't belong to that religion. If the worst happens, religions become an important cause of wars. I am sure such a situation is completely the opposite of the ideal of any religions. The fact that Saint Ramalinga

built a cosmopolitan place of worship named Satthiya--Gnaana Sabhai in which every person could enter regardless of their caste, race, or religion in the nineteenth century was a quite progressive and far-sighted act when India was panting under the strict imperialism and colonial policy. The essence of his thought is concentrated in the following four lines.

"மார்க்கம்எலாம் ஒன்றாகும், மாநிலத்தீர் வாய்மையிது;
தூக்கம் எலாம் நீக்கித், துணிந்து, உளத்தே - ஏக்கம்விட்டுச்
சன்மார்க்க சங்கத்தைச் சார்ந்திடுமின்! சத்தியம், நீர்
நன்மார்க்கம் சேர்வீர்இந் நாள்!"

More than one hundred years have passed since Vallalar disappeared in the room in Mettukuppam. His ideal of the worldwide brotherhood seems to be far from realization. However, when we look back this one hundred years, the discrimination between man and man, race and race seems to be steadily decreasing. I heartily hope that Dr. Mahalingam, the president of Ramalingar Panimandram will promote Vallalar's ideal to all over the world and become a strong support to the warless world.

I published two hundred copies of the Japanese version of "Voice of Vallalar". I presented the copies to my friends, relatives, and important people in this district, and donated some of them to important libraries in Japan.

The main part of the original book was written in English and the quoted poems were in Tamil accompanied with the English translation. It is a regret that I could not convey the real merit of Vallalar as a poet because it is impossible to introduce the beautiful tone of the original Tamil poems.

It is my greatest pleasure that my small booklet was offered to the elegant feet of Vallalar's statue by Dr. Mahalingam on the occasion of the Thaippusam Day, i.e., on January 26th, 1986 at Vadalur.

I give my heartfelt thanks to Dr. N.Mahalingam who gave me a chance to know about such a great saint in South India, to Mr. S.M.Muthu and his son-in-law Mr. P.Sivaprakasam who helped my translation work, and further Mr.V.Rajaram of Komarapalayam who gave me detailed explanations of Siddhha.

At the end, I have to add one more thing. It was my greatest pleasure that Mr. S.R.V.Arasu, the original writer of "Voice of Vallalar" could receive and enjoy the Japanese version of his book when he was almost ninety years old. I hear that he was not a professional writer but a retired banker. He dovoted himself to introducing Vallalar's life and message in connection with the world situation at that time, though he was in the middle of his seventieth. Celebrating the First International Divine Tamil Conference, I offer my special gratitude to this big senior of life.

1. அறநெறியறிந்த, முதிர்ந்த அறிவினையுடையோரது நட்பைக் கொள்ளுமுறையறிந்து பெற்றுக்கொள்ள வேண்டும். நல்லவர்களுடைய நட்பை இழத்தல் பலருடைய பகைமையைக் கொள்வதைவிடப் பன்மடங்கு தீமை தருவதாகும்.

2. தீயவர்கள் கூட்டத்தைக் கண்டு அஞ்சுதல் பெரியோர் இயல்பு. ஆனால், சிறியோர் (அற்பர்) அத்தகைய தீயவர் கூட்டத்தைத் தம் சுற்றமாகக் கருதிச் சூழ்ந்து கொள்வர். ஒருவர்க்கு நல்லினத்தைக் காட்டிலும் சிறந்த துணையும் இல்லை. கெட்ட இனத்தைவிடத் துன்பம் தரக்கூடியதும் வேறொன்றும் இல்லை. (குறள் 441, 450, 451, 460).

இறைவன் யாவரையும் அடிமையாக வுடையவன் அவனுக்கு மிக நெருங்கியவர்கள் அவனடியார்கள் அவர்களே பெரியோர்கள். அவர்களுடன் நாம் இணங்கினாலும், மரணம், மலம் இரண்டும் நீங்கப் பெறலாம். பெரியார்களுடன் கூடினால் அவர்கள் நம்மைப் படிப்படியாக ஊக்கமுறச் செய்வர். மெய்ஞ்ஞானமூட்டிப் பிறவியைப் போக்கிக் கொள்ளும் வன்மையூட்டுவர். எனவே, அத்தகைய ஆற்றலுடைய பெரியோர்களின் நட்பை நாம் தேடியும், நாடியும் அடைந்து வாழ்தலே நலமாகும் (திருமந்திரம் 543, 548).



வழி காட்டும் வள்ளுவம்



கல்லை. தே. கண்ணன். ஆசிரியர் "வள்ளுவர் வழி"

திருக்குறளில் – எழுவாய் முதல் இறுவாய் வரை உலகு என்னும் சொல்லும், புதுமைப் பொருளுணர்த்தும் சொற்களும், சொற்றொடர்களும் தக்க இடங்களில் திகழ்கின்றன. இன்னோரன்ன குறிப்புகள், திருக்குறள் உலக நூல் என்பதை வலியுறுத்துவனவாம்.

திருக்குறளின் உயிர்ப்பாய் ஒளிர்வது ஒன்று: அஃது 'உலகம் ஒரு குலம்' என்பது.

திருவள்ளுவர் நெறியோ அறத்தை அடிப்படையாகக் கொண்டது. அறத்தில் மாசு படிதல் அரிதன்றோ?

– தமிழ்த் தென்றல் திரு. வி. க.

மக்கள் வாழ்க்கை மெய், வாய், கண், மூக்கு, செவி என்பனவற்றின் வாழ்வுமட்டுமன்று. இவையுமாய் இவற்றிற்கு அப்பாலுமாய் உணர்ந்து அறிந்து மனத்தால் வாழும் வாழ்க்கையுமாகும். இந்த மனம், பண்படுமிடம் காதல் வாழ்க்கை; மனம், பயன்படுமிடம் பொது வாழ்க்கை; மனம், வாழுமிடமே தனிவாழ்க்கை.

– மு. வ.

மேற்கண்ட எடுத்துக்காட்டுகள் நமக்குத் தெரிவிப்பது திருக்குறள் ஓர் உலக நூல்; திருவள்ளுவர் நெறி அறத்தை அடிப்படையாகக் கொண்டது. மனத்தால் வாழும் வாழ்க்கையே வாழ்வாகும்.

திருக்குறள் அறம் மனத்தூய்மையை அடிப்படையாகக் கொண்டது. மனத்தூய்மையே அறம் என்று சொல்லியிருக்கலாம். ஆனால், திருவள்ளுவர் "மனத்துக் கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்" என்கிறார். இவ்வாறு சொல்வதில் ஒரு பொருளாழம் உண்டு. மனம் இயல்பாகத் தூய்மையானது. பலரோடு பழகும் போதும், பல்வேறு காட்சிகளைக் காணும் போதும், மனதில் மாசுகள் படிகின்றன. அவ்வாறு மாசுகள் படியா வண்ணம் வாழ்வதே அறமென்ற கருத்தைச் சொல்லாமல் சொல்கிறார் திருவள்ளுவர்.

மனதில் படியும் மாசுகள் எவை ? அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல் என நான்கு என்று குறள் 35 தெரிவிக்கிறது. திருக்குறள் முழுவதையும் படித்தறிவார்க்கு மேலும் ஒரு மனமாசு அறியக்கூடும். அதிகாரம் 61 மடியின்மை என்னும் அதிகாரத்தில் முதல் குறளில் 'மடியென்னும் மாசு' என்ற சொற்றொடரைக் காணலாம்.

'மாசு' என்ற சொல் பொதுவாக 'அழுக்கு' என்ற பொருளை உணர்த்தும். உரையாசிரியர்கள் (மனதில் படியும்) 'மாசு' என்ற சொல்லுக்குக் 'குற்றம்' (பரிமேலழகர், மணக்குடவர்) 'பாவம்' (பரிதியார், காளிங்கர்) என்று விளக்கம் தருகின்றனர். மனதில் குற்றம் என்கிறபோது 'மனக் குற்றம்' என்ற சொல் 'தீயன சிந்தித்தல்' என்ற விளக்கம் பரிமேலழகர் தருகிறார்.

ஒருவனுடைய மனம் தீயனவற்றைச் சிந்திக்காமல் இருப்பதே மனத்தூய்மை –அதுவே அறம். தீயவை எவை என்கிறபோதுதான், அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல், மடி என்பன பெறப்படுகின்றன.

"உலகத்து எம்மகனும், எம்மகளும் தன் மனம் தூய்மையாய் வாழ எழுதப்பட்டதே குறள். தூய்மையே வள்ளுவம்". என்ற வ.சுப. மாணிக்கனாரின் கூற்றும் கொள்ளத் தக்கது.

மனத்தின் கண் படியும் மாசுகளைப் போக்குவது எப்படி? அதற்குத் திருவள்ளுவர் என்ன வழிகாட்டுகிறார்? அதிகாரம் 4. அறன் வலியுறுத்தலில் சொல்லப்படும் அறவிளக்கம், மன மாசுகள் தவிர இவற்றைப் போக்கும் வழி அங்கு ஏதும் அறிய முடியவில்லை.

மனத்தூய்மை ஆவதற்கு வழிகள் வேறு அதிகாரங்கள் ஒன்றிரண்டில் காண்கிறோம். அதிகாரம் 30 வாய்மையில் ஒரு குறள் (8). உடல் தூய்மையை நீரினால் பெறலாம். அகம் தூய்மையாக விளங்குதல் வாய்மையால் அறியலாம் என்கிறார் திருவள்ளுவர். "மனத்தின் தூய்மை மெய் சொல்லுதலினாலே அறியப்படும்" என மணக்குடவர் விளக்கமளிப்பர். காளிங்கர் தரும் விளக்கம்; "அகந் தூய்மையானது, அவ்வகமாகிய உள்ளத்தினின்றும் புலப்படுகின்ற சொல் அறநெறி வழுவாமையாகிய வாய்மையான் அறியப்படும்". காளிங்கர் தரும் விளக்கத்தில் வாய்மைக்கு ஒரு விளக்கம் தரப்படுகிறது: மனதிலிருந்து வெளிப்படுகிற சொல் அறநெறி வழுவாமை – வாய்மை என்பது,

அவா அறுத்தல் என்ற 37 ஆவது அதிகாரத்தில் நான்காவது குறள். "தூஉய்மை என்பது அவாவின்மை மற்றது, வாய்மை வேண்ட வரும்". அவா இல்லாது இருத்தலே தூய்மையாகும். மெய்மையை விரும்ப அவாவின்மை நிலை ஏற்படும். 'தூஉய்மை' 'வாஅய்மை' என்ற சொற்களுக்குப் பரிமேலழகர் 'வீடு' 'மெய்மை யுடைய பரம்' என்றும் 'அழுக்கறுத்தல்' 'மெய் சொல்லு தல்' என மணக்குடவரும் விளக்கம் தருகின்றனர். ஆனால், காளிங்கர், 'தூஉய்மை' என்ற சொல்லுக்கு 'மனத் தூய்மை' என்றும், 'வாஅய்மை' என்பதற்கு 'மெய்மை' என்றும் கொருள் காண்கிறார்.

மேற்கண்ட இரண்டு குறட்பாக்களின் (298, 364) கருத்துப்படி மனம் தூய்மை பெறுவதற்கு வாய்மையைக் கடைப்பிடித்தலும் அவாவின்மையை மேற்கொள்வதுந் தான் வழிகள் என அறிகிறோம்.

மனம் தூய்மை பெறுவதற்கு மேலும் ஒரு வழியை அதிகாரம் 46 'சிற்றினஞ் சேராமை' அதிகாரத்தில் காண்கிறோம். இந்த அதிகாரத்தில் ஒருவனுடைய அறிவு, செயல் எல்லாம் அவன் சார்ந்திருக்கும் இனத்தைப் பொருத்தது எனக் காண்கிறோம். தனிப்பட்ட முறையில் ஒருவன் சிறந்த அறிவுடையவனாகவோ, ஒழுக்கமுடையவனாகவோ இருக்கலாம். ஆனால் அவன் சேர்ந்திருக்கும் இனத்தைப் பொருத்துத்தான் அவன் எத்தகையன் என்று உலகம் சொல்லும் (குறள் 453). நல்லவர்களோடு பழகி வருவானானால் அவனுக்கு நற்பெயரும், தீயவர்களோடு பழகி வருவானானால் அவனுக்குக் கெட்ட பெயரும் ஏற்படும்.

ஒருவனுடைய மனம் தூய்மை பெறுவதுகூட அவன் சார்ந்திருக்கும் இனத்தைப் பொறுத்தே அமையும். இதைச் சொல்லவந்த திருவள்ளுவர், இன்னொன்றையும் சேர்த்தே கூறுகிறார். அதாவது ஒருவனுடைய செயலின் தூய்மையும் அவன் சார்ந்த இனத்தைப் பொருத்ததே ஆகும்.

"மனந்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனந்தூய்மை தூவா வரும்" –என்பது குறள். (455)

இந்தக் குறளுக்கு விளக்கம் தருகின்றபோது பரிமேலழகர் "ஒருவன் இனந் தூயனாகவே அதனோடு பயிற்சி வயத்தான் மனந்தூயனாய் அதன்கண் விசேடவுணர்வு புலப்பட்டு அதனால் சொல்லும் செயலும் தூயனாம்". என்று கூறுகிறார். நல்லவர்களோடு பழகிவரும்போது அப்பழக்கத்தின் பயனாய் ஒருவனுடைய மனம் தூய்மை பெற்று, அதன் காரணமாக அவனிடமிருந்து வெளிப்படும் சொல்லும் செயலும் தூய்மையாக அமையும் என்ற கருத்தைப் பெறுகிறோம்.

நம்முடைய மனம் தூய்மை பெறுவதனால் அடையக் கூடிய பயன்கள் என்ன? குறிப்பாக மூன்று நன்மைகளைப் பெறுகிறோம். ஒன்று, 'எச்சம் நன்றாகும்'. (குறள் 456) இரண்டாவது, மன்னுயிர்க்கு ஆக்கம் (குறள் 457). மூன்றாவது, மனநலத்தின் ஆகும் மறுமை (குறள் 458).

'எச்சம்' என்பது நமக்குப்பின் எஞ்சிநிற்கும் புகழ் முதலியன. இவற்றுள் நன்மக்கட் பேற்றையும் கொள்ளலாம். 'மன்னுயிர்க்கு ஆக்கம்' என்பது மக்களுக்குச் செல்வத்தால் பெறக்கூடிய அறத்தைக் குறிக்கிறது. 'மனம் நன்றாதல் தானே அறமாகலின் ஆக்கம் தரும்' என்ற பரிமேலழகர் விளக்கமும் கருதத்தக்கது. 'மனநலத்தின் ஆகும் மறுமை' என்பது ஒருவர்க்கு மனநன்மையானே மறுமையின்பம் உண்டாம் (பரிமேலழகர்). மனநலம் மறுமைக்குத் துணையாம் (மணக்குடவர்).

ஒருவனுடைய மனம் இயல்பில் தூய்மையானது. பழக்க வழக்கத்தின் காரணமாக மனதில் மாசுகள் (மனக் குற்றங்கள்) படியும். அவ்வாறு படியும் குற்றங்கள் அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல், மடி என்பன. இவற்றைக் கடிந்து ஒழுக வாய்மையைக் கடைப்பிடித்தலும், நல்லவர்களோடு சேர்ந்து பழகுதலும். அவ்வாறு பெறக்கூடிய மனத்தூய்மை, நமக்கு இம்மையில் புகழும் செல்வமும், மறுமையில் இன்பமும் தரும் எனக் கண்டோம்.

மனத் தூய்மையோடு ஒருவன் எவ்வாறு இவ்வுலகில் வாழவேண்டும்? அதற்குத் திருவள்ளுவர் காட்டும் வழிகள் எவை? என்பனபற்றி ஒரு சிலவற்றைக் காண்போம்.

ஒருவனுடைய வாழ்வு இரண்டு வகையில் அமைகிறது. ஒன்று, பழக்கத்தின் காரணமாக வாழ்தல். மற்றொன்று, அறிவு சார்ந்த வாழ்வு வாழ்தல். அறிவு சார்ந்த வாழ்வு என்கிறபோது மனிதன் மனிதனாக மனிதத் தன்மையோடு வாழ்வதுதான். இதனைத்தான் திருக்குறள் முழுவதிலும் காண்கிறோம்.

"ஒருவன் வாழ்க்கைச் செயலெல்லாம் மனத்தின் விளைவு. மனத்திற்கு அமைச்சன் போல்வது அறிவு. ஆதலின், அறிவினை ஒருவன் மனக்கண் என்று கொள்ளல் வேண்டும். அறிவு வெளியீடே ஒருவன் சொல்லும் எழுத்தும் என்க. திருக்குள் வள்ளுவனாரின் அறிவுக் குழவி" என்று வ.சுப. மாணிக்கனார் கூற்றும் நினைவு கூரத்தக்கதே.

'அறிவு சார்ந்த வாழ்வு' என்கிறபோது 'அறிவு' என்று எதைத் திருவள்ளுவர் கருதுகிறார்? 'வாழ்வு' என்பதை ஏதாகக் கொள்கிறார்? 'அறிவு அற்றங்காக்கும் கருவி' (குறள் 421). 'சிறந்த அறிவு யாது? அதுவே தமக்கோர் இடையூறு வரும் வழி பாதுகாக்கும் படையாகும்' என்று கூறுகிறார் காளிங்கர். 'நன்றின் பால் உய்ப்பது அறிவு' (குறள் 422). தீயதனின் நீக்கி நல்லதன் கண் செலுத்துவது அறிவு (பரிமேலழகர்).

அறிவு பெறுவதற்குக் காரணமாக அமைவது கல்வி, கேள்வி என்ற கருவிகள். கல்வி கேள்விகளின் வழி பெறப்படும் அறிவுவழி சார்ந்த வாழ்வை மேற்கொள்ள வேண்டும் என்பதே வள்ளுவம்.

'கல்விக்குப் பயன் அறிவும், அறிவிற்குப் பயன் ஒழுக்கமும்' என்று பரிமேலழகர் குறள் 140 உரையின் விளக்கத்தில் கூறுவார்.

'வாழ்வு' என்பது இரண்டு வகை. ஒன்று, இல்லிலிருந்து மனைவி மக்களொடு வாழ்வது. மற்றொன்று, மனத்துறவு மேற்கொண்டு பொதுவாழ்வு வாழ்வது.

இல்லிலிருந்து மனைவி மக்களுடன் வாழ்வது எல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தல் பொருட்டு என்பார் திருவள்ளுவர் (குறள். 81). இல்வாழ்க்கையில் செய்யப்படும் அறம் 'பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தலே. (குறள் 44). இல்வாழ்க்கையின் பண்பும் பயனுமாக அமைவது அன்பும் அறமும் (பகுத்துண்ணும் அறம்) (குறள் 45). தொடர்புடையார் யாவர் மாட்டும். அன்புடைமையும் நேர்வழியில் ஈட்டிய பொருளைக் கொண்டு பலரோடு பகுத்துண்ணும் அறத்தையும் மேற் கொள்வதுதான் இல்லறம்.

பொது வாழ்வின் இலக்கணம் அருளுடைமையும் (அதிகாரம் 25) உற்றநோய் நோன்றலும் உயிர்க்குறுகண் செய்யாமையும் (அதிகாரம் 27). தன்னோடு தொடர்புடையார் மாட்டு செலுத்துவது அன்பு. தொடர்பற்று இயல்

பாக எல்லாவுயிர்கள் மாட்டும் செலுத்துவது அருள். இதனை இரக்கம், கருணை என்றும் சொல்லலாம்.

இல்லறத்திற்கு அன்புடைமை சிறந்தது போல பொது வாழ்விற்கு அருளுடைமை சிறந்ததாகும். பொதுவாழ்வை மேற்கொள்பவர்கள் எல்லா உயிரினங்கள் மாட்டும் இரக்கமும் கருணையும் கொண்டும் பிறவுயிர்களால் தமக்கு ஏற்படும் துன்பங்களைப் பொறுத்தலும், தாம் பிற எவ்வுயிர்க்கும் தீங்கு செய்யாமையும் மேற்கொள்ள வேண்டும்.

'அறிவு சார்ந்த வாழ்வு' என்கிறபோது ஒழுக்க வாழ்வு எனக் கொள்ள வேண்டும். அவ்வொழுக்கம் வெளிப்படும் வழிகள்; உலகத்தோடு ஒட்ட ஒழுகுதல் (குறள் 140); யார்மட்டும் வெஃகி வெறிய செய்யாமை (குறள் 175); பிறிதின் நோய் தன் நோய்போல் போற்றல் (குறள் 315); மக்கட் பண்போடு வாழ்தல் (குறள் 997). மேற்குறிப்பிட்ட நான்கின் வழி வாழாதவர்கள் பல கற்றும், அஃகி அகன்ற அறிவு பெற்றும், அரம் போலும் கூர்மையான நுண்ணிய அறிவு கொண்டிருந்தும் பயன் ஒன்றுமில்லை என்கிறார் திருவள்ளுவர்.

அறிவு சார்ந்த வாழ்வு என்கிறபோது மற்ற மக்களோடு கலந்து பழகியும், பிறர் வெறுக்கத்தக்க செயல்களைச் செய்யாதும், பிறவுயிர்கள் துன்பம் உறும்போது அத்துன்பம் தமக்கு நேர்ந்ததாக எண்ணித் தம்மால் இயன்ற அளவு அவற்றைப் போக்கியும், பிறர் இயல்பு அறிந்து அவர்களோடு ஒத்து வாழ்தலுமேயாம்.

"செயற்கு உறும் அறம் கூறுவதே வள்ளுவம் எனவும், யாரும் வாழ்வாங்கு வாழ வழி வகுப்பதே வள்ளுவம் எனவும், உலகு ஒட்டிய அறம் கரைவதே வள்ளுவம் எனவும், யார்க்கும் ஒல்லும் நெறி காட்டுவதே வள்ளுவம் எனவும்" எனக் கூறும் வ.சுப. மாணிக்கம் அவர்கள், வழிகாட்டும் வள்ளுவத்திற்கு விளக்கம் தந்ததாகவும் கொள்ளலாம்.

இறுதியாக "தூய்மையுள்ள மனமே முழுதும் பண்படும்; முழுவதும் பயன்படும்; முழு வாழ்வு வாழும். இந்த தூய்மையை விளக்குவதே திருவள்ளுவர் நோக்கம்" என்ற மு.வ. அவர்களின் கூற்றை நினைவு கொண்டு திருக்குறளை, மக்களாகப் பிறந்த நாம் அனைவரும் வழி காட்டும் வள்ளுவமாகக் கொண்டு வாழ்ந்து சிறப்புறுவோமாக.

நாகன், கூர்மன், க்ருகரன், தேவதத்தன்,
மலாசரயம், சுக்கிலாச்ரயம் என ஆச்ரயங்கள் ... 5

அன்னமயம், பிராணமயம், மனோமயம்,
விக்ஞானமயம், ஆநந்தமயம் என கோசங்கள் ... 5

மூலாதாரம், சுவாதிஷ்டானம்,, மணிபூரகம்,
அநாகதம், விசுத்தம், அக்ஞேயம் என
ஆதாரங்கள் ... 6

வாத, பித்த, சிலேஷமம் என தோஷங்கள் ... 3

தரேஷன, புத்திரேஷன, வித்தேஷன
என ஈஜாணாத்திரயங்கள் ... 3

ஸாத்விகம், ராஜஸம், தாமஸம் என குணங்கள் ... 3

இராக, துவேஷ, காம, குரோத, லோப,
மோக, மத, மாச்சர்ய, டம்ப, தர்ம,
ஈர்ஷை அசூயை, ஆங்கார, மமகாரங்கள்
என துர்க்குணங்கள். ... 14

நல்வினை, தீவினை எனவினைகள் ... 2

ஜாக்ரத், சுப்பன, சுழுப்தி, துரியம், துரியாதீதம்
என அவஸ்தைகள் ... 5

ஆக தத்துவங்கள் 96

— திருவருட்பிரகாச வள்ளலார் உபதேசம்.



தமிழன் கண்ட இறையருட் சக்தி

டாக்டர். எஸ். எஸ். சர்மா, பி.எச்.டி., சிங்கப்பூர்.

இயற்கையின் ஆற்றல் தான் இறைவன் என்பதை ஆன்றோர் கண்டுணர்ந்தனர். அறிவியலும் பொருளியலும் மனிதனை நவீன யுகத்திற்கு மேம்படுத்தி இருந்தாலும் அவன் ஆன்ம பலம் பெறுவது மெய்ஞ்ஞான சித்தி ஒன்றினால்தான் என்பதை விவரிப்பது இந்த அரிய படைப்பு -

மனித குலம் மேம்பட அறிவியல் ஆய்வுகள் இன்று அற்புத முன்னேற்றத்தைக் கொண்டு வந்திருக்கின்றன.

மனிதன் நிலவில் காலடி வைத்தது மட்டுமா, பரவெளியைத் தாண்டி அண்ட கோளங்களையும் படம் பிடித்துக் கொண்டு வந்து காட்டும் ஆற்றலையும் அறிவியலார் பெற்றிருக்கின்றனர்.

இலக்குத் தவறாமல் சென்று தாக்கும் ஏவுகணைகளையும் அது வருமுன்பே தகர்த்து விடும் எறி படைகளையும் விண்ணிலிருந்து வேவு பார்த்துத் தாக்கும் ஆயுதங்களையும் வல்லரசுகள் பெற்றிருக்கின்றன.

விரல் பட்டதும் நொடிப்பொழுதில் விடை தரும் கணினிப் பொறி யுகத்தில் நாம் வாழ்கிறோம்.

அகிலத்தையே நொடிப் பொழுதில் தவிடு பொடியாக்கிவிடும் அணுசக்தி ஆற்றலை அதிகமான நாடுகள் பெறத் தொடங்கிய பிறகு அதுவே உயிரினங்களையும் மனித குலத்தையும் பூண்டோடு அழித்து விடும் ஆபத்தை உணரத் தொடங்கியது. மனித குலம். அந்த மிரட்டல் இப்போது தணிந்து அணுசக்தியை ஆக்கப் பணிகளுக்குப் பயன்படுத்துவதென உலக நாடுகள் அணுக்கம் கண்டிருக்கின்றன.

பல நாட்கள், பல ஆட்கள் செய்த பணிகளை உடனடியாகச் செய்து முடிக்கக் கூடிய சாதனங்கள், தானியங்கிகள், பொறிகள் வந்து விட்டன. எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் அதைத் துரிதமாக முடித்துக் கொடுக்கும் சாதனம் உருவாக்கப்பட்டு விடுகிறது.

சோதனைக் குழாயிலே குழந்தையை உருவாக்கித் தரும் காலம் இது. செயற்கைக் கருத்தரிப்பு, மாற்று உறுப்பு அறுவை சிகிச்சை என இயங்காதவற்றை இயங்க வைக்க முயற்சி செய்யப்படுகிறது.

இந்த வேகத்திற்கெல்லாம் ஈடுகொடுத்து நிற்க மனித வாழ்க்கை பதட்டமும் பரபரப்பும் கொண்ட சூழலில் இயங்கிக் கொண்டிருக்கிறது. அதிலிருந்து விடுபட முடியாத சுழற்சியில் மனிதனும் இயந்திரமாக மாறி இயங்க வேண்டிய நிலை.

ஆனால் காலப் போக்கில் மனிதன் எல்லா வசதிகளையும் சுக போகங்களையும் அடையப் பெற்று விட்டாலும் மனதில் அமைதியும் நிறைவும் இல்லாததை உணர்கிறான். எல்லாம் இருந்தும் ஏதோ இல்லாத உணர்வு! அந்த விரக்திக்குக் காரணம் எது? இங்கே தான் அறிவியல் ஈடு செய்ய முடியாத இடைவெளியை ஆன்மீகம் நிறைவு செய்கிறது.

மனிதகுலம் உய்ய, அழுத்தும் பிரச்சினைகளிலிருந்து விடுபட ஆன்மீகமே உற்ற வழி என்பதை நமது சமயமும் இலக்கியங்களும் நெடுகிலும் வலியுறுத்தி வந்திருக்கின்றன.

ஞான வழியே மனிதனைச் செம்மைப் படுத்தி எதிலும் நிறைவைப் பெறுகின்ற மனத்தினைத் தரவல்லது. அதானல் தான் பாரதியார்,

''ஞானத்திலே பரமோனத்திலே உயர் நாடு'' என்று போற்றுகிறார்.

விஞ்ஞானத்தாலே விண்டுரைக்க முடியாதது மெய்ஞ்ஞானம். இந்த ஞான நிலையை, இறைவனின் அருட் சக்தியை தெய்வத் தமிழ் மறைகள் பலவற்றில் காணமுடியும்.

பல அணுக்களின் சேர்க்கைதான் உயிரின் தோற்றம் என்பது இன்றைய விஞ்ஞானிகளின் முடிவு. ஆனால் இதனை நமது ஞானிகள் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தெளிவு படுத்தியிருக்கின்றனர்.

மகாகவி பாரதி அதனை மிக அழகாக வெளிப்படுத்துகிறார்:

விண்டுரைக்க அறிய அரியதாய்
விரிந்த வானவெளியென நின்றனை
அண்ட கோடிகள் வானில் அமைத்தனை
அவற்றில் எண்ணற்ற வேகம் சமைத்தனை
மண்டலத்தை அணுவணுவாக்கினால்
வருவதெத்தனை அத்தனை யோசனை
கொண்ட தூரம் அவற்றிடை வைத்தனை

என்று இறைவனின் அருட் சக்தியை விவரிக்கிறார் பாரதியார்.

பஞ்ச பூதங்களாகிய நீர், நெருப்பு, நிலம், காற்று, ஆகாயம் ஆகியவற்றின் இயக்கமே இறைசக்தி! இந்தப் பிரபஞ்சத்தின் இயக்கத்தை ஆடும் பெருமான் நடராஜராக உருவகப்படுத்தியவன் தமிழன்.

காளியோடாடிக்
கனகாசலத் தாடிக்
களியோ டாடிக்
குவலயத்தே யாடி
நீடிய நீர் தீகால்
நீள் வானிடையாடி
நாளுற அம்பலத்தே யாடும்
நாதனே

எனத் திருமூலர் இறைவனின் அசைவுதான் அகிலத்தின் இயக்கம் என்று காட்டுகிறார்.

''நீராய் நிலனாய்த் தீயாய்க் காலாய் நெடுவானாய்...'' திகழும் திருமாலைப் போற்றுகிறது திருவாய் மொழி.

''திட விசும்பு எரி வளி நீர் நிலம் இவை மிசை படர் பொருள் முழுதுமாய் அவை, அவைதொறும் உடல் மிசை உயிர் எனக் கரந்து எங்கும் பரந்துளன்'' என்பது நம்மாழ்வார் மொழி. **''தீயினும் வெய்யன், புனலினம் தண்ணியன்'', ''உணர்வு சூழ் கடந்தோர் உணர்வு''** என்றெல்லாம் இறை சக்தியின் மாட்சி அளவிட முடியாதது எனக் கண்டவன் தமிழன். **''உலகுயிர்த்திரள் எலாம் ஒளி நெறி பெற்றிட''** என்ற பாடலில் வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் பெருவெளியில் நிறைந்து விளங்கும் பெரும் பொருள் என்று இறைவ

ளைப் போற்றுகிறார்.

''வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி
உண்மையுமாய் இன்மையுமாய்
கோனாகி யானெனதென்று
அவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயே
என் சொல்லி வாழ்த்துவனே''

என்பது மாணிக்கவாசகர் பாடல். இறை சக்தி நம் எண்ணத்திற்கு எட்டாதது என்கிறார் இவர். உலகை இயக்கும் இறைவனின் திருவிளையாடலை **''கூத்தனிவ் வானுங் குவலயமுமெல்லோமுங் காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி...''** என்ற பாடலிலும் விவரிக்கிறார் மாணிக்கவாசகர்.

அறிவானும் தானே
அறிவிப்பான் தானே
அறிவாய் அறிகின்றான் தானே
அறிகின்ற
மெய்ப் பொருளும் தானே
விரிசுடர் ஆகாயம்
அப்பொருளும் தானே அவன்

என்ற பாடலில் இறைவன் எங்கும் எதிலும் நீக்கமற நிறைந்தவன் எனப் போற்றுகிறார் காரைக்காலம்மையார்.

''.... காணலுமாகான் உளனல்லன் இல்லையல்லன்
பேணுங்கால் பேணும் உருவாகுமல்லனுமாம்
கோணை பெரிதுடைத்து எம்பெம்மானைக் கூறுதலே''

என்னும் நம்மாழ்வார் பாடலும் எங்கும் பரந்திருக்கும் பரம் பொருளைப் பார்க்க முடியாவிடினும் அவன் அருளைப் பெறும் அறிவையும் ஞானத்தையும் பெற வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது.

உலகை இயக்கும் சக்தியின் வடிவாக ஆடும் பெருமானை உருவகப் படுத்தியது போல் இன்னும் பல வடிவங்களிலும் காண்கிறோம். இராமலிங்க அடிகள் இறைவனை ஒளிமயமாகக் கண்டார். திருமங்கையாழ்வாரும் இயற்கையின் வடிவில் இறைவனைப் போற்றுகிறார்:

மின்னுருவாய் முன்னுருவில் வேதம் நான்காய்
விளக்கொளியாய் முளைத்தெழுந்த திங்கள் தானாய்
பின்னுருவாய், முன்னுருவிற் பிணிமூப் பில்லாப்
பிறப்பிலியாய் பிறப்பதற்கே யெண்ணாது எண்ணும்
பொன்னுருவாய் மணியுருவில் திகழும் ஜோதி
புனலுருவாய் அனலுருவில் திகழும் ஜோதி
தன்னுருவாய் என்னுருவில் நின்ற எந்தை
தளிர் புரையும் திருவடியென் தலைமேலவே

இப்படி அனலாய்ப் புனலாய் ஒளியாய்த் திகழும் இறைவனின் அருளை நாடுவோர் பெரும் படையல்கள் படைத்தோ உடலை வருத்தும் வேண்டுதல்களையோ செய்துதான் பெறவேண்டும் என்பதில்லை. எல்லாவற்றையும் அறிந்து ஈந்து தரும் தலைவனிடம் நாம் நாடுவதும் அவன் அருளை அன்றி வேறு எதுவாகவும் இருக்க முடியாது.

மலரோ, இலையோ, நீரோ அர்ச்சித்தும் ஈசனைத் துதிக்கலாம். **''போதும் பெறாவிடில் பச்சிலை உண்டு, புனல் உண்டு - எங்கும் ஏதும் பெறாவிடில் நெஞ்சு உண்டு அன்றே''** என்பது ஒரு பழம் பாடல்! நெஞ்சாரத் துதித்தே இறைவனின் நற்கருணையைப் பெற முடியும்.

தத்துவம் கடந்தவன் இறைவன் என்கிறது புற நானூறு - ''கொடி நிலை கந்தழி'' என்ற பாடலில்.

உருவங்கள், வடிவங்கள், நாமங்கள் எதுவாயினும் எல்லாவற்றையும் கடந்தவர், எல்லாவற்றிலும் உள்ளவர் கடவுள் (கட - கடந்தவர், உள் - உள்ளவர் = கடவுள்) என்பது தமிழர்களின் தெய்வ நெறி. அதனால்தான் எல்லாச் சமயநெறிகளையும் அது தன்னுள் ஆட்கொண்ட ஒரு பண்பட்ட சமயமாகத் திகழ முடிகிறது. தோற்றுவார் இன்றிக் கிளைத்து வளர்ந்த நமது சமயத்திற்கு வளமூட்டிய வேதங்களும் ஆகமங்களும் புராணங்களும் சித்தாந்தங்களும் திருமுறைகளும் காவியங்களும் காலம் காலமாக இறைமாட்சியை எடுத்தியம்பி வருகின்றன.

''...ஆட்பால் அவர்க்கருளும் வண்ணமும்
ஆதி மாண்பும் கேட்பான் புகில்
அளவில்லை, கிளக்க வேண்டாம்.''

என்பது திருஞான சம்பந்தரின் திருமுகப் பாசுரம். நம் எண்ணங்களுக்கெல்லாம் மேம்பட்டு நிற்கும் இறையருட் சக்தியைக் காலம் காலமாகத் தோன்றி வரும் அருளாளர்கள் விண்டுரைத்து வருகின்றனர்.

ஆச்சாரியர்களும் பெரியார்களும் ஆழ்வார்களும் நாயன்மார்களும் ஞானிகளும் மேதைகளும் சமயச் சான்றோரும் வாரி வழங்கியிருக்கும் பக்திச் செல்வம் தமிழில் இருப்பது போல் வேற்று மொழிகளில் இருக்குமா என்பது ஐயமே.

மனித குலம் நாகரிக, நவீன சமுதாயமாக இன்று வளர்ச்சி கண்டிருப்பது விஞ்ஞான பொறி இயல், அறிவியலின் அரும் சாதனை என்பதில் ஐயமில்லை. பொருளியலைப் பெருக்கினால் வசதிகளை அடைய முடியும் என்பதால் தன் தேவைக்கு மேலே செல்வத்தைத் தேடுவதில் ஓயாது போராடிக் களைத்துப் போயிருக்கும் மாந்தர்கள் பெருகிவருகின்றனர்.

''பொருளில்லாருக்கு இவ்வுலகமில்லை, அருளில்லாருக்கு அவ்வுலகம் இல்லை'' என்று தமிழ் மறை கூறுகிறது. பொருளியலே வாழ்க்கை என்று நவீன சிந்தனைக்கு ஆட்பட்டவர்கள் அமைதி, பக்தி, தியானத்தில் மனதை முழுமையாக ஈடுபடுத்த இயலுவதில்லை.

''இரு வேறு உலகத்து இயற்கைத திரு வேறு தெள்ளியராலும் வேறு'' எனக் கூறும் வள்ளுவர், பொருளை நாடுவோரையும் அருளை நாடுவோரையும் இணைக்க வழி காணமுடியவில்லை என்கிறார்! அது எத்துணை உண்மை!

நம் வாழ்வே ஒரு பெரிய வேள்வி. வாழும் காலத்தில் நாம் சந்திக்கும் சோதனைகளுக்கும் போராட்டத்துக்கும் அளவில்லை. எல்லா சுக போக வசதிகளைப் பெற்றவர்களும் பலவித பிரச்சினைகளால் அலைக்கழிக்கின்றனர். அவர்களை அழுத்தும் துன்பங்கள், துயரங்கள், இடர்கள், நலிவுகள், மனச்சுமைகளை அந்தச் செல்வத்தால் ஈடு செய்ய முடிவதிலை!

செல்வபோக அகந்தையால், ஆணவம், அதிகாரம், மமதையினால் ஆர்ப்பரிப்போர் அப்பாவிகளை அடக்கி ஒடுக்கி அடிமைப்படுத்தி இகழ்ந்துரைக்கும் போதெல்லாம் அவர்கள் ஆறுதல் பெறுவது ஆண்டவனிடம் முறையிடுவதன் மூலமே தான்!

ஆன்மீகத்தின் முதல் விரோதியே வெறுப்புணர்வுதான்! தன் மனதைப் புண்படுத்தியவர்களையும் மன்னித்துப் பிரார்த்திப்பவனே நல்ல மனப்பண்பைப் பெற்றவன்! அந்த அன்பில் விளையும் நன்மை மனித நேயத்தைப் பேணும். குரோத உணர்வு தலை தூக்கும் போது மேலும் துன்பங்கள் தொடரும்!

''இகலானாம் இன்னாத எல்லாம் நகலானாம் நன்னயம் என்னும் செருக்கு'' என்னும் குறள், மாறுபட்ட போக்கு துன்பத்தைத் தரும். நட்புதான் உயர்த்தும் என்கிறார். பகைவரின் செருக்கை அடக்கப் பொருளைவிடக் கூர்மையான வாள் வேறு இல்லை என்றா

லும் அந்தப் பொருளால் அன்பும் இன்பமும் பெறவும் முடியும் என்பது வள்ளுவர் வாக்கு.

இருப்பினும், நமக்கு ஏற்படும் துன்பங்களுக்குக் காரணம் எது? வினைப்பயன் என்று மட்டும் கூற முடியாது. எதன் மீது ஆசை வைக்கிறோமே அதுவே நம் துன்பங்களுக்கும் அடிப்படையாகிறது.

''யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்''

என்பது வள்ளுவர் வாக்கு. அந்தப் பற்று அகலும் போது மனம் தெளிவடைகிறது.

''தனக்குவமை இல்லாதான் தாள்
மனக்கவலை மாற்றும் மருந்து''

இறை பக்தி தான் நம் மனத்துயர் நீக்கும் மாற்றாகும்!

''அறிவால் அறிந்து உன் இருதாள்
இறைஞ்சும் அடியார் இடைஞ்சல்
களைவோன்''

என்பது அருணகிரிநாதர் வாக்கு. இறையருள்தான் இடர் போக்கும் என்கிறார்.

மனிதனைச் செம்மைப்படுத்தி மெய்ஞ்ஞான சித்தியையும் அருட் சக்தியையும் தரவல்ல தெய்வத் தமிழ் பாமாலைகளிலும் மறைகளிலும் மன நிறைவையும் வாழ்வில் பயனையும் காண்போமாக.

ஊருக்கு உழைத்திடல்யோகம்
நலம் ஓங்கிடுமாறு வருந்துதல் யாகம்
போருக்கு நின்றிடும் போதும்
உளம் பொங்கல் இல்லாத
அமைதி மெய்ஞ்ஞானம்

(பாரதியார்)

மறையின் மாண்பு

ஞான நூற்கல்வியே கற்கவேண்டும். இத னால் அகக்கண் எனப்படும் பதிஞானம் பெற லாம். இவ்வாறு கற்றவரே, பேரின்பம் உறுவர், கற்றவர் நெஞ்சில் நிற்பான் ஈசன். ஞானம் பெறுத லின் பயன் இறையடி தொழுதலே, ஞானத்தால் தேகம் பொன்னாம், ஞான நூலே நற்றுணையா வது.

அர்த்தம் பஞ்சகம் பேற்றியாய

1. ஈசனை அகத்தும் புறத்தும் வழிபடுக. கொல்லா விரதத்துடன் வழிபடுக. கொலைபுரிந் தால் வழிபாடு பயன் தராது. இயமதூதர் கொடுமை மிகும். காலன்கைப்பட்டு வருந்து வதை விட்டுக் காலகாலன் (சிவபெருமான்) கால் பட்டு சுகத்திலமுழ்துவதுமேல்.

2. கள்ளுண்போர் மாக்களிலும் இழிந்தோர் ஆவர். காம மயக்கமும் கள் மயக்கமும் கூடா. மயக்கமும் தியக்கமும் மாறிமாறி வரச் செய்வது கள்.

1. நல்லாரைக் காண்பதுவும் நன்றே; நலமிக்க
நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே - நல்லார்
குணங்களுரைப்பதுவும் நன்றே அவரோ(டு)
இணங்கி யிருப்பதுவும் நன்று.

2. தீயாரைக் காண்பதுவுந் தீதே, திருவற்ற
தீயார் சொற் கேட்பதுவுந் தீதே - தீயார்
குணங்க ளுரைப்பதுந் தீதே யவரோ(டு)
இணங்கி யிருப்பதுவுந் தீது



சமய நெறியில் மகளிர் பங்கு

(வித்துவான். சுலோசனா வெங்கடேசன். எம்.ஏ., பி.லிட்.)

முன்னுரை:

''மங்கையராகப் பிறப்பதற்கே - நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா''

என்று பாடினார் கவிமணி.

மங்கையராகப் பிறந்து இந்த பூவுலகிலே அவர்கள் அன்று தொட்டு இன்றுவரை ஆற்றியுள்ள அரும்பெரும் சாதனைகள் அளப் பரியன. அவற்றில் சமயத்துறையிலே அவர்கள் ஆற்றியப் பணிக ளைக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சங்க காலத்தே சமயம் ஒரு தனித்துறையாகக் கருதப்பெற வில்லை. இல்வாழ்க்கையை அறநெறியில் நடத்தும்போது அதுவே சமய வாழ்க்கையாகக் கருதப் பெற்றது. உலகியலை அருளோடு ஒட்டிய வாழ்வியலாக் கொண்டனர். பின்னர் கால அளவில் சமயத் தில் பல பிரிவினைகள் தோன்றலாயின. கடவுள் நம்பிக்கையுடன் வாழ்ந்த மக்கள் வேறுபல சமயங்களின் ஊடுருவலால் உந்தப்பட்டு மாறுபட்டனர். நாட்டில் இந்து சமயங்களான சைவமும், வைணவ மும் அழியத் தொடங்கின. அத்தகைய நேரத்திலே இந்து சமயத்தைக் காக்க நாயன்மார்களும் ஆழ்வார்களும் தோன்றி உலகில் சமயத்தை நிலை நிறுத்தினர். மக்கள் உள்ளத்திலே மீண்டும் புத்துணர்ச்சிப் பெறச் செய்தனர். அந்த வகையிலே பெண்களாகத் தோன்றி சமயநெ றியில் தோய்ந்து மக்களின் உள்ளங்களிலே கடவுள் பற்றை வேரூன் றச் செய்த சில பெண்மணிகளைப் பற்றி பார்ப்போம்.

ஔவையார்

பாரதநாட்டின் வடபுலத்தில், பெண்மையை வழிபட்ட பெருமை அழிந்து, தாய்க்குலம் அடிமைப்பட்ட காலத்திலும் தென்பா ரதமாகிய தமிழகத்தில் மட்டும் பெண்ணுரிமை அழியவில்லை. தமிழ கத்து மங்கையர் நடுவே பெருமைக்குரிய தனிச் சிறப்புற்றுத் தோன்றி யவர் தான் ஔவை பெருமாட்டியார். ''ஔவை வாசகத்தில் பொய்யே இருக்காது'' மகா கவி பாரதியார் ''தமிழ் மகள் சொல்லிய சொல் அமிழ்தம் என்போம்'' என்று பாடியுள்ளார். ஆண், பெண் அனைவருக்கும் ஔவையாரின் நீதியே வழிகாட்டி. ஒரு காலத்திலே இமயம் வரை பரந்து கிடந்த தமிழ் மொழி காலப்போக்கில் விந்தியம் வரை பின் வாங்கி, அதற்கும் பின்னர் வேங்கடம் வரை குறுகி, கி.மு.முதல் நூற்றாண்டில் அம்மலையையே வடக்கெல்லையாகக் கொண்டிருந்தது. அந்தக் காலத்தில் தான் அறிவுக்கரசி ஔவையார் தோன்றினார். ஔவையாருக்கு முன்பு அவரைப் போன்ற பெண்பாற் கவிஞரைப் பெறவில்லை. உலக மொழிகளுள் எந்தவொரு மொழி யும் அவரைப் போன்ற கவிஞரைப் பெற்றிருக்கவில்லை என்று வர லாறு கூறுகின்றது. மூன்று காலங்களிலே மூன்று ஔவையார் தோன் றினார். ஒவ்வொருவரும் செயற்கரும் பணிகளை ஆற்றி உலகில் செம்மாந்து இருந்தனர்.

சங்க கால ஔவையார்:

சங்க இலக்கியங்களிலுள்ள ஔவையார் செய்யுள்கள் 59. அவற்றுள் 23 செய்யுள்கள் அதியமான் நெடுமானஞ்சி என்னும் சிற்றரசனைப் பற்றியவையாகும். அதியமானின் அரசவைப் புலவ ராக இருந்தார் என்பதை இதன் மூலம் அறிகிறோம். அதியமான் சார்பில் தொண்டை மானிடம் தூது சென்று இருவருக்கும் நேரவி ருந்த போரைத் தவிர்த்தார். அதியமானுடன் நட்பு பூண்டு ஔவை பலகாலம் அவன் அவையில் வாழ்ந்தார் என்பதற்குப் புறநானூற்றுப் பாடலொன்று சான்றாக அமைகின்றது.

''....

பெருமலை வடரகத்து அருமிசைகொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது
ஆதல் நின் அகத்து அடக்கி
சாதல் நீங்க எமக்கு ஈந்தனையோ!''

என்று பாடியதிலிருந்து நெல்லிக் கனியைப் பெற்ற வரலாறு காண்கின் றோம். அம் மன்னனை வாழ்த்தும்போது

'பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி
நீலமிடற்று ஒருவன் போல்
மன்னுக பெரும நீயே'

சிவபெருமான் போல் நீ வையத்து வாழவேண்டும் என்கிறார்.

அக்காலத்து புலவர்களிடையேயும் அரசர்களிடையேயும் பெருமதிப்புற்றுத் திகழ்ந்தவர் என்பது புறநானூற்றுப் பாடல்களால் அறிகிறோம். இவருடைய செய்யுட்களை நோக்கும்போது எளிமை, செறிவு, பொருள் நுணுக்கம், உள்ளப் பிணிப்பு ஆகியவற்றால் சிறந் தன என்பது தெளிவாகும். அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை என்னும் தொகை நூல்களிலும் இவரது பாடல்கள் காணப்படுகின் றன. பெண்பாலரயினும் தெய்வப்புலவர் என்னும் புகழோடு வாழ்ந் தவர் இவர்.

இடைக்கால ஔவையார்

கம்பரும், புகழேந்தியும், ஒட்டக்கூத்தரும், செயங்கொண்டா ரும் மற்றும் புலவர் பெருமக்களும் வாழ்ந்த நாளிலே அவர்கள் அனைவரும் போற்றும் அறிவுத் திட்பத்துடன் இந்த ஔவையார் விளங்கினார். 'பந்தன் அந்தாதி' என்ற ஒரு நூலும் 'அசதிக் கோவை' என்றொரு கோவையும் இவரால் இயற்றப்பட்டது. இவர் சிறந்த சிவபக்தராகவும், விநாயகப் பெருமானைப் போற்றி வழிபட்டதாக வும் கூறப்படுகிறார்.

மூன்றாவது ஔவையார்

குழந்தைகளுக்கென்று ஆத்திச்சூடி, நல்வழி, கொன்றை வேந் தன், மூதுரை போன்ற நூல்களையும், விநாயகர் அகவல் என்ற நூலையும் இவர் செய்துள்ளார். சிறந்த நீதிகளையும் எளிதாகவும், இனிதாகவும், படிப்படியே பயிற்றும் ஒரு நல்ல குழந்தைக் கல்வி திட்டத்தை முதன் முதலில் உலகிலேயே உருவாக்கியவர் இவர். திருக்குறளுக்கு எவ்வளவு புகழ் உள்ளதோ அவ்வளவு புகழ் இவர் இயற்றிய ஆத்திச் சூடிக்கு உண்டு. காரணம் குறளைப் போல மிகச் சுருங்கிய சொற்களால் ஆத்திச்சூடி அமைந்திருந்தலே ஆகும். குறள் இரண்டு அடிகளால் ஆனது. ஆத்திச்சூடி இரண்டு சீர்களால் ஆனது.

ஔவையின் 'ஆத்திச்சூடி' முதன் முதல் தமிழ் நெடுங்கணக்

கைக் கற்கும் சிறுவர்களுக்குத் தமிழ் எழுத்தை அறிமுகப்படுத்தும் முறையில் அகரவரிசையில் அமைந்திருக்கிறது. அவ்வகையில் ஔவை முன்னோடி என்பர். ஆத்திச்சூடி 108 தொடர்களைக் கொண்டு அமைவதால் வேதாந்திகள் அதனை 'அஷ்டோத்திர நீதி' என்பர்.

அரசனையும், ஆலய வழிபாட்டையும் அடிக்கடி வற்புறுத்துவதும் இவர் பாடலின் நோக்கமாக உள்ளது. 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்', 'ஆலயந்தொழுவது சாலவும் நன்று' இவை இரண்டும் தமிழகத்துக்கு அவர் அளித்த இரு கண்களெனலாம். அடிக்கடி ஔவையாரின் பெயரை மக்கள் மனதில் முகிழ்க்க வைப்பவை 'பார்த்தாவுக் கேற்ற பதிவிரதை யுண்டானால் – கூறாமல் சன்னியாசம் கொள்', 'அரிது அரிது மானிடராதலரிது', 'சோழவளநாடு சோறுடைத்து', 'கற்றது கைம்மண்ணளவு' ஆகிய தொடர்களாகும்.

'ஔவைக் குறள்' என்னும் பெயரால் ஒரு நூல் நம்நாட்டில் உலவுகின்றது. வேதாந்தக் கருத்துக்களும் யோகநிலையும் உட்பொருளாக உடையது இந்நூல். விநாயகர் அகவல், ஞானக்குறள், வேழமுகம் ஆகிய சமய நூல்கள் சைவ சித்தாந்தக் கருத்துக்களைத் தொகுத்துத் தருகின்றன. இவற்றுள் அடங்கும் செய்யுட்களில் காணப்படும் இலக்கியச் செறிவையும், பொருள் ஆழத்தையும், தத்துவப் புலமையையும் நோக்க ஔவையார் ஏன் பெருஞானியர்களால் பெரிதும் போற்றப் பெற்றார் என்பது விளங்கும். நக்கீரர் முருக வழிபாட்டை முதலில் தமிழகத்தே பரப்பினாரெனில் விநாயக வணக்கத்தை முதலில் நாட்டில் விரிவுபடுத்தியவர் சமய ஔவை எனலாம். திருமூலரையும், மணிவாசகரையும் ''திருமூலர் வாக்கும் திருவாசகமும் ஒரு வாசகமென்று உணர்'' எனத் தம் பாடலில் குறித்ததால் இவர் பதினோராம் திருமுறையில் நம்பியாண்டார் முதலோர் விநாயக வணக்கத்தைப் பெரிதும் விரிவுபடுத்தியுள்ளதாகக் காண்பதால் நம்பி காலத்தை ஒட்டி வாழ்ந்திருக்கலாம் என்பர்.

''விநாயக சதுர்த்தி விழா''வன்று இல்லந்தோறும் பெரியவர்களும், பள்ளிப்பிள்ளைகளும் இவர் இயற்றிய விநாயகர் அகவலைப் பாடுவதைக் காணலாம். இப்பாடல்கள் தத்துவக் கருத்தமைந்த உயர் தரமான பாடல்களாகும். 'உயர் ஞான சாரநூல்' என்றொரு யோக சாதனைப்பயிற்சிக் குரிய நூலும் இயற்றியுள்ளார். ஞானக்குறள், வீட்டு நெறிப்பால், திருவருட்பால், தன்பால் என முப்பாலாய் வகுக்கப்பட்டுள்ளது.

'முத்திக் கவ்வையார் சொல் முந்நூற்றுப் பத்தும் உன்
சித்தத்தே வைத்துத் தெளி'

என்ற பாடல் ஔவையின் ஞானக்குறளின் சிறப்புணர்த்தும். மேலும் சைவ இலக்கியங்களின் பிழிவாக ஞானக்குறள் அமைந்துள்ளது.

இவ்வாறு சங்ககால ஔவை, இடைக்கால ஔவை, பிற்கால ஔவை என்றெல்லாம் கூறும் மூவருள்ளும் சங்க ஔவை 'அரசவைப் புலவர்' பின்னவர் 'மக்கட் புலவர்' பிற்காலத்தில் நீதிகளைப் பாடியவர் 'சமய ஔவை' என்றும் குறிப்பிடலாம். மூவரும் சமயத்தை நிலைநாட்ட வழி வகுத்தனர்.

காரைக்காலம்மையார்:

பன்னிரண்டாம் நூற்றாண்டில் தோன்றியது திருத்தொண்டர் புராணம் எனப்படும் பெரியபுராணம். இத்தகைய தொடர் நிலைச் செய்யுட்கள் பெருங்காப்பியம் என்று கூறப்படும். பெரிய புராணத்தைச் சைவப் பெருங்காப்பியம் எனவும் அறிஞர்கள் போற்றுவர். நாடு, குலம், தொழில், சமுதாயநிலை ஆகிய வாழ்க்கை முறைகளால் வேறுபட்ட பல திருத்தொண்டர்கள் தமிழ் நாட்டின் கண் வாழ்ந்து சமயப் பற்றையும், பக்தி உணர்ச்சியையும் வளர்த்தனர். இத்தகைய தொண்டர்களுள் பொன்பாலரும் இருந்தனர். அவர்களுள் தலை சிறந்தவர் தான் காரைக்கால் அம்மையார் என்று அழைக்கப் பெற்ற புனிதவதியார். சைவ மரபுப்படி இவரை நாயன்மார்களுள் மூத்தவராகக் கருதுவர். இதன் காரணமாக இவர் பாடிய திருப்பதிகங்கள் 'மூத்த திருப்பதிகம்' என்று அழைக்கப்பெறுகின்றன. இவர் அற்புதத் திருவந்தாதி, திரு இரட்டை மணிமாலை, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம், திருவாலங்காட்டுத் திருப்பதிகம் ஆகியவற்றைப் பாடியுள்ளார்.

அற்புதத் திருவந்தாதி 101 வெண்பாக்களால் ஆனது. அந்தாதித் தொடையில் இயற்றப்பட்டது. இரட்டை மணிமாலை என்னும் பிரபந்தம் பத்து வெண்பாவும், பத்துக் கட்டளைக் கலித்துறையும், கலித்துறையை அடுத்து வெண்பா வருமாறு அந்தாதித் தொடையில் அமைந்துள்ளது.

கணவனே தன்னைத் தெய்வமெனக் கால்களில் வீழ்ந்து வணங்கிய உடனே புனிதவதியார் இறைவனை நினைந்து பேய்வடிவைப் பெற்றார். வானவர் மகிழ்ந்து பூமாரி பொழிந்தனர். சிவகணங்களெல்லாம் மகிழ்ச்சிப் பெருங்கூத்தாடின. வானவரெல்லாம் மகிழ்ந்து பாராட்டும் போது, அம்மையார் முன்னே நின்றிருந்த மானுடமாகிய சுற்றத்தாரெல்லாம் தொழுது அஞ்சி அகன்று போயினர். மெய்யுணர்வு எய்தியோர்க்கு இந்நிலவுலகை விட வானுலகமே நெருங்கிய தொடர்புடையது.

''ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நனிய துடைத்து''

என வள்ளுவர் வாய்மொழி நமக்கு இதனை விளக்குகிறது.

பேயடியாராக மாறியமையும் அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை என்ற இரண்டு அனுபூதி பதிகங்களையும் பாடியமை புனிதவதியார். அரனடிக்கு அணியரானார் என்பதை அறிவிக்கின்றன. அளப்பரும் அன்பினால் இவ்வாறு செல்லும் பேயடியாரை ஆளுடை அண்ணல் 'அம்மையே' என்றழைப்பதும், இறைவனை அம்மையார் 'அப்பா' என்றழைப்பதும் புனிதவதியாரின் பக்திப் பயணத்தின் எல்லை எனலாம்.

கயிலையில் சிவபெருமான் திருவருளைப் பெற்ற அம்மையார் சிவபெருமானின் ஆணைப்படி திருவாலங்காட்டை அடைந்து அங்கு இரண்டு பதிகங்களைப் பாடினார். அடியார்களுள் காலத்தால் முற்பட்ட அம்மையார் திருவாக்கில் மலர்ந்த இப்பதிகங்கள் இரண்டும் 22 திருப்பாடல்களையுடையன. அச்சந்தரும் சுடுகாட்டில் சிவபெருமான் ஆடிய நடனச் சிறப்பை இவ்விரு பதிகங்களிலும் காரைக்காலம்மையார் பாடியுள்ளார். இறைவனே தனக்கு இனிய தலைவன் ஆதலின் அவன் தொடர்பு கொண்டு இன்புறும் தமக்கு அரியது எதுவும் இல்லை என்று அவர் பாடுகிறார். எந்த வடிவில் இறைவனை நினைத்துத் தவம் செய்தாலும் அந்த வடிவில் அவன் அடியார்க்குத் தோற்றம் அளிப்பான்.

''எக்கோலத்து எவ்வுருவாய் எத்தலங்கள் செல்வார்க்கும்
அக்கோலத்து அவ்வுருவே ஆகும் இறைவன்''

என்ற அடிகளில் இறைவன் எல்லாமாக நீக்கமற நிறைந்திருக்கும் திறத்தைப் புலப்படுத்துகிறார். இவ்வாறு சைவநெறியை நாடெங்கும் பரப்பி புகழ் பெற்றார்.

ஆண்டாள்:

சைவ நெறியினைப் பரப்ப நாயன்மார்கள் தோன்றியது போன்று வைணவ நெறியைப் பரப்ப ஆழ்வார்கள் தோன்றினர். ஆழ்வார்கள் என்பதற்கு, 'பகவத் குணங்களில் ஆழ்ந்து ஈடுபடுவோர்' என்பது பொருள். பல்லவர் காலத்தில் தான் வைணவச் சமயம் மறுமலர்ச்சி அடைந்தது. ஆழ்வார்கள் தோன்றி அச்சமயத் திற்குப் புத்துயிர் அளித்தனர். ஆழ்வார்களின் குறிப்பிடத் தக்கவர் ஆண்டாள். ஏனைய ஆழ்வார்கள் அனைவரும் ஆண்கள் ஆழ்வார்கள் தம் செயலை விஞ்சி நிற்கும் தன்மையளாய் பிஞ்சிலே பழுத்த

வள் ஆண்டாள்.

''பிறந்து மொழி பயின்ற பின்னெல்லாம் காதல்
சிறந்த நின் சேவடியே சேர்ந்தேன்.''

என்று மொழிந்த காரைக்காலம்மையார் போன்று திருமாலிடம் பேரன்பு கொண்டார். மணப்பருவம் எய்தியபோது மணம் செய் விக்க பெரியாழ்வார் கருதியபோது கோதை நாச்சியார்,

''மானிடவர்க் கென்று பேச்சுப்படில்
வாழகில்லேன் கண்டாய்''

''மற்றொருவர் கென்னைப் பேசலொட்டேன்
மாலிருஞ் சோலை எம் மாயர் கல்லால்''

என்று உறுதியாகத் தான் திருமாலிடம் கொண்ட காதலை வெளிப்ப டுத்துகின்றார். அதில் உறுதியாகவும் நின்று கண்ணனையே மணவா ளனாகவும் அடையும் பேறு பெற்றாள்.

ஆண்டாள் இயற்றிய பிரபந்தங்கள் திருப்பாவை, நாச்சியார் திருமொழி என இரண்டாகும். அவற்றுள் திருப்பாவை ஒப்புயர்வற்ற நூலாக மதிக்கப்படுகின்றது. சிறந்த உபநிடதப் பொருள்களை அந் நூல் உள்ளுறையாக வைத்துக் கூறுகின்றது என்று சான்றோர் கூறுவர். பாவை நோன்பைப் பற்றிக் கூறுகிறது. திருப்பாவை. இதில் அடங்கிய முப்பது பாடல்களும் சொற்சுவையும், பொருட்சுவையும் செறியப் பெற்றவை. பாவை நோன்பு என்பது கன்னிப் பெண்களால் மார்கழி மாதத்தில் தொடங்கப் பெற்று அம்மாதத்துப் பௌர்ணமியோடு முடிக்கப்பெறும் ஒரு விரதமாகும். நல்ல நாயகனைப் பெறவும், நாடு செழிக்கவும் காத்தியாயினி தேவியை நோக்கிக் கன்னிப் பெண்க ளால் இந்நோன்பு நடத்தப் பெறுவது என்பதும் சங்க நூல்களால் அறிகிறோம். இந்நோன்பு சங்க நாளிலே 'தைநீராடல் என்ற பெய ரால் வழங்கப்பட்டது. மலையாள நாட்டாரால் 'திருவாதிரைத் திருவி ழா' என்றும், சைவரால் 'ஆருத்திரா தரிசனம்' என்றும் கொண்டாடப் படும் இத்திருநாள் இவ்விரத முடிவு தினமே என்று மு.இராகவையங் கார் 'ஆழ்வார்கள் காலநிலை' என்ற நூலிலே குறிப்பிடுகிறார். திருப் பாவை மூலம் அஞ்ஞானமாகிய கடலிலே மூழ்கிக் கிடப்பவர்களை ஆண்டாள் துயிலுணர்த்துகிறாள் என்றும் கூறுவர். கண்ணனின் திரு விளையாடல்களை கூறுமுகத்தான் அவன் மீது பக்தி செலுத்தும் மார்க்கத்தை நமக்குப் புலப்படுத்துகின்றார்.

காரைக்காலம்மையார் ஆண்டாள் ஒரு ஒப்பீடு:

இவ்விருவரும் மேற்கொண்ட பக்தி நெறி தனி மனித பக்தி நெறியாக விளங்கியது எனலாம். அவர் காலத்து உலவிய சமய மறு மலர்ச்சி சூறாவளியில் இவர்கள் பங்கு பெற்றதாகத் தெரியவில்லை. அப்பர், சம்பந்தர் போன்றோ, தொண்டரடிப்பொடி, திருமங்கை மன் னர் போன்றோ புறச்சமயக் கண்டனங்களையோ, எதிர்ப்புக்க ளையோ அம்மையார், ஆண்டாள் இருவருமே எதிரொலிக்கக் காண கிலோம். இறைவன், தான் என்னும் ஆன்ம உறவிலே மட்டும் நாட் டங்கொண்டவர்களாக வாழ்ந்துள்ளனர் எனலாம். ஆக நாயன்மார், ஆழ்வார் பதம் பெற்றமை, பதிகம், பாசுரங்கள் பாடியமை, சமுதாய உராய்வற்ற ஆன்மிக உறவில் ஈடுபட்டமை ஆகியவற்றை இருவர்க் கும் இடையே அமைந்த ஒப்புமைக் கூறுகளாகக் கருதலாம்.

பக்தி முறையில் வேறுபாடு:

அம்மையாரும் ஆண்டாளும் தத்தம் கடவுளர்கள்மீது ஒப்பற்ற பக்தி உடையவர்களாயினும் இவ்விருவரது பக்தி முறையில் வேறு பட்டு காணப்பெறுகிறது. முதலாவதாக காரைக்காலம்மையார் மானுட வாழ்க்கையை விரும்பி ஏற்காத துறவு மனப்பான்மை உடை யவராகக் காணப்படுகிறார். இவ்வுலக வாழ்க்கையில் சிறிதும் பற்றற் றவராக சில காலம் வாழ்கிறார். திருமணம், இல்லறம் ஆகியன தந்தைக்கும், கணவனுக்கும் ஆற்றும் கடமைகளெனக் கருதுகிறார். சிவனைப் பற்றி நினைப்பதிலும், அவன் புகழ் பாடுவதிலும், அவன டியாரை வழிபடுவதிலும் தான் மகிழ்ச்சியடைகிறார்.

ஆண்டாளும் மானுடம் விரும்பாதவர்தான். கண்ணனையே நினைந்து அவனை அடைதலையே குறிக்கோளாகக் கொண்டவர். இந்த வகையால் அம்மையாரும், ஆண்டாளும் ஒப்பர். இறைவனை அடைய முயலும் பக்தி நெறியில் இவர் அம்மையாரினும் வேறுபடுகி றார். இறைவனுக்கு என்று தொடுத்த மாலையை நாள்தோறும் தான் முதலில் சூடிப்பார்த்து உகந்தது என்று உணர்ந்த பின்னரே, அது இறைவனுக்குப் படைக்கப்பட்டு வந்ததை பட்டர்பிரான் அறியார். ஆனால் இறைவன் அறிவான். ஒருநாள் ஆண்டாள் அணியாது வந்த மாலையை இறைவன் புறக்கணித்தபோதுதான் பெரியாழ்வாருக்கு ஆண்டாளின் பக்தி நெறி புலப்பட்டது. ஆண்டாள் விருப்பப்படியே திருவரங்கப் பெருமானுக்குத் திருமணம் செய்துத் தருகிறார்; ஆண் டாளும் இறைவனுடன் ஒன்றாகக் கலந்து விடுகிறார். இந்த வகையில் நோக்கும் போது அம்மையாரிலிருந்து ஆண்டாள் வேறுபட்ட பக்தி நெறியை உடையவர் என்று அறிகிறோம்.

பக்தி நெறியில் காணும் இந்த வேறுபாட்டின் அடிப்படையில் இவ்விருவர் தம் அருட்பாடல்களிலும் வேறுபாடு காண்கிறோம். அம்மையார் பாடல்களில் அரனடியார் புகழ் மணமும், சிவபிரான் தன் அருள் மணமும் கமழக் காண்கிறோம். இவ்வுலக வாழ்க்கையின் கூறுகள் மிகமிகக் குறைவு எனலாம். பற்றற்றான் பற்றினைக் கூறுவ தால் பற்றற்றன போலவே நமக்குத் தோன்றுகின்றன. ஆண்டாளின் பாவைப் பாடலும், நாச்சியார் திருமொழியும் பக்தி நெறி வேறுபாட் டின் காரணமாக உயிர்த்துடிப்பு மிகுதியாகக் கொண்டிருக்கக் காண்கி றோம். ஆண்டாள் இறைவன் மீது கொண்ட காதலைப் பழந்தமிழரின் அகப் பொருள் துறைகள் மேல் சார்த்தி விளக்கும் போது உலகியல் தன்மையும், காதலுணர்வெனும் உளவியல் தன்மையும் பழந்தமிழ் இன்பமும் இழைந்தோடுதலில் மானுட மணம் இப்பாடல்களில் கமழ் வதைக் காண்கிறோம்.

அம்மையார் பாடல்களில் காணாத மற்றொரு வேறுபாடு ஆண் டாள் பாசுரங்களில் கமழும் தமிழ் மணம். தமிழ் என்னும் சொல் லோடு சேர்ந்தே அவருடைய பாடல்கள் பல இடங்களில் வெளிப்படு கின்றன. தமிழில் பாடிப் பரவியதாகக் கூறும் நாயன்மார்களும், ஆழ்வார்களும் உண்டு. ஆனால்-தமிழே தன் பாசுரம் எனக் கருதிய வர் ஆண்டாள் எனலாம். அவர் பயன்படுத்தும் தொடர்களுள் சில:

'கோதை வாய்த் தமிழ் வல்லவர்'

'கோதைத் தமிழ் ஈரைந்தும்'

'சங்கத் தமிழ் மாலை முப்பதும்'

'புதுவையர் கோன் கோதைத் தமிழ்'

இவ்வாறு தமிழ் மொழியின் மீது, தமிழ் வாழ்க்கையின் மீது ஆண் டாள் மிகுதியான பற்று கொண்டவராக விளங்குகிறார். காரைக்கா லம்மையார் பாடல்களில் இவ்வியல்புகளைக் காண இயலவில்லை.

முடிவுரை:

சைவ சமயத்தைப் பரப்பவும், சிவ பெருமானின் பெருமையை நிலை நாட்டவும் அவனைப் பணிந்து வணங்கி இன்புறுவதையே வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு வாழவும் செயல்பட்டவர்கள் நாயன்மார்கள். அவர்களில்பெண்குலத் திலகமாய்த் தோன்றி 'மக் கள் தொண்டே மகேசன் தொண்டு' என்ற குறிக்கோளுடன் வாழ்ந்து தான் இறையருளைப் பெற்றதன்றி உலக மக்களும் இறைவன் பேற்றி னைப் பெற வழி வகுத்துத் தந்தவர் காரைக்காலம்மையார். எளிய நடையில் குழந்தைகளும் புரிந்துக் கொள்ளும் வகையில் எளிய இனிய பாக்களைப் பாடி நல்லுரைகளையும் இறைவன் திருவரு ளைப் பெறும் வழிகளையும் காட்டியவர் ஔவையார்.

அவ்வை வளர்த்த அருந்தமிழ்



டாக்டர், வித்துவான், தி. முத்து. கண்ணப்பன். எம்.ஏ., பி.எச்.டி.

"தமிழ் நாட்டின் மற்றச் செல்வங்களையெல்லாம் இழந்துவிடப் பிரியமா? அவ்வையின் நூல்களை இழந்து விடப் பிரியமா?" என்று நம்மிடம் யாரேனும் கேட்பார் களாயின், மற்றச் செல்வங்களையெல்லாம் பறி கொடுக்க நேர்ந்தாலும் பெரிதில்லை. அவற்றைத் தமிழ் நாடு மீட்டும் சமைத்துக்கொள்ள வல்லது. ஆனால், அவ்வைப்பிராட்டியின் நூல்களை இழக்க ஒருபோதும் சம்மதப்படமாட்டோம். அது மீட்டும் சமைத்துக் கொள்ள முடியாத தனிப் பெருஞ்செல்வம்' என்று நாம் மறுமொழி உரைக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்"

இது அவ்வைப் பிராட்டியின் எழுத்துப் பற்றிப் பாட்டுக்கொரு புலவன் மகாகவி பாரதி கூறியுள்ள கருத்து. பாரதியார், ஏனைய புலவராலும் அவ்வை யாரையே பெரிதும் மதித்துப் பாராட்டிப் போற்றிப் புகழ்ந்துள்ளார் என்பதற்கு இது தக்க சான்று.

அவ்வையார் ஏழை எளிய மக்களின் இதயங்களில் என்றும் இடையறாது வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் கவிஞர்.

சங்க காலத்திலும், பிற்காலத்திலும் பல்லாயிரக் கணக்கான கவிஞர் பெருமக்கள் வாழ்ந்துள்ளனர். சங்கப் புலவர் பெருமக்களுள் முப்பதின்மருக்கு மேற் பட்ட பெண்பால் கவிஞர்கள் வாழ்ந்துள்ளர்; பிற் காலத்திலும் பலர் வாழ்ந்துள்ளனர்.

ஆனால், கல்லார்க்கும் கற்றார்க்கும், பொருள் உள்ளார்க்கும் இல்லார்க்கும், மழலைச் செல்வங்கள் முதல் கிடுகிடு கிழவர் வரையுள்ள எல்லார்க்கும், அன்றும் இன்றும் என்றுமே தெரிந்த கவிஞர் பெருமாட்டி அவ்வையாரே என்னும் உண்மையை யார் மறுக்க முடியும்?

இத்தகைய சிறப்புக்குக் காரணம் அவ்வையாரின் எளிய வாழ்வு; பணிவு; அன்றாட வாழ்க்கையில் இன்றி யமையாது பின்பற்றற்குரிய அரிய நீதி நெறிக் கருத்துகள்; பாமர மனிதனாயினும், பாராளும் மன்னனாயினும் வேறு பாடின்றிப் பழகும் அன்பு; ஆன்ம நேயம். இவையனைத் தினும் மேலாக இனிய எளிய தெளிந்த நடையில், படிப் போர் கேட்போரின் நெஞ்சங்களில் பளிச்செனப் பாய்ந்து பதியும் வகையில், சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் பாங்கு; நுட்பம் இவையே அவ்வை தமிழின் அழகு; அருமை; தனித் தன்மை!

மகாகவி பாரதியார்.... "அவ்வை நூலோ மிகத் தெளிந்த, மிக எளிய தமிழ் நடையில் எல்லா ஜனங்களுக்கும் பொருள் விளங்கும்படியாக எழுதப் பட்டிருக்கிறது. 'சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்' என்பது கவிதைத் தொழிலில் மிகவும் உயர்ந்த தொழில். இதில் அவ்வை ஒப்பற்றவள். இத்துடன் மிகவும் அருமை யான, நுட்பமான விஷயங்களை யாவருக்கும் அர்த்த மாகும்படி மிகவும் எளிய நடையில் சொல்வதாகிய அற்புதத் தொழிலை, உயர்ந்த கவியரசர்களே தெய்வீகத் தொழில் என்றும், தெய்வ சக்தி பெறாத சாதாரணக் கவிஞர்களுக்குச் சாத்தியப்படாத தொழில் என்றும் கருதுகிறார்கள். இந்த அற்புதத் தொழிலில் அவ்வை நிகரற்ற திறமை வாய்ந்தவர்."

"ஜனஸமூக நீதிகளின் விஷயத்தில் தமிழ்நாட்டில் எப்போதும் பிரமாணமாக இருந்து வருவது அவ்வையின் நீதி வாக்கியங்களும், நீதி நூல்களுமேயாம்... அதிகப் படிப்பில்லாதவர்களும், படிப்பே தெரியாதவர்களுமா கிய ஜனங்கள் ஆண் பெண் அனைவருக்கும் அவ்வை யாரின் நீதியே வழிகாட்டி" என்று இதே கருத்துகளைக் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

வள்ளுவரின் குறட்பாக்களே மிகவும் சுருக்கமானவை என அறிஞர்கள் கூறுவர். வள்ளுவர் ஒன்றே முக்கால் அடிகளில் கூறியுள்ள செய்திகள் பலவற்றை அவ்வை யார் ஒரே அடியில் கூறியிருக்கிறார் என்பதும் கருதற் பாலது.

இடைக்காடனார் என்னும் புலவர், 'கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக் குறுகத்தரித்த குறள்' என்று திருக்குறளின் சுருக்கத்தில் உட்பட்டுக்கிடக்கும் பொருளின் பெருக்கத்தைக் கூறுகிறார். ஆனால், அவ்வையாரோ 'அணுவைத்துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக் குறுகத் தரித்த குறள்' என்று கடுகையும் அணு வாகச் சுருக்கிய நயம் எண்ண எண்ண இனிக்கிறது.

திருவள்ளுவர் தம் திருக்குறளில், நான்கு புருடார்த் தங்களை – மக்கள் அடைய வேண்டிய பயன்களாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்பவற்றில், மூன்று பேறுகளைப் பற்றி மட்டுமே 1330 பாடல்களில் கூறியுள்ளார். அவற்றுள் அறம் பற்றிய பாடல்கள் 380; பொருள் பற்றியவை 700; இன்பம் பற்றியவை 250. ஆனால் 'வீடு' என்னும் இறுதிப் பேற்றினை விதந்து கூறாது, 'முப்பாலில் நாற்பால் மொழிந்தார்' எனக் கொள்ளுமாறு, விடுத்தார்.

ஆனால், அவ்வையாரோ, ஒரே வெண்பாலில், நான்கே அடிகளில்,

"ஈதல்; அறம்; தீவினைவிட்டு ஈட்டல்பொருள்; எஞ்ஞான்றும்
காதல் இருவர் கருத்து ஒருமித்து – ஆதரவு
பட்டதே இன்பம் பரனை நினைந்து இம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு"

என அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கினையும் பாடியுள்ள பாங்கு, அவரது சுருக்கத்தின் நுட்பத்திறன், வியந்து பாராட்டற்குரியது.

இக்கருத்தினைப் பாரதியாரும்

"புருஷார்த்தங்கள், அதாவது மானிட ஜன்மம் எடுத்ததினின்றும் ஒருவன் அடையக் கூடிய மிக உயர்ந்த பயன்களாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கில், வீடு என்று சொல்லப்படும் முக்தி, வாக்குக்கும் மனத்துக்கும் எட்டாதாகையால் அதனை விரித்துக் கூற முயலாமல், அதற்குச் சாதனமாகிய தெய்வ பக்தியை மாத்திரம் முதல் அத்தியாயத்தில் கூறி நிறுத்திவிட்டு, திருவள்ளுவநாயனார் முப்பால் என்ற பெயருடைய திருக்குறள் செய்தருளினார்ஆயிரத்து முந்நூற்று முப்பது சிறிய குறட்பாக்களில் நாயனார் அறம், பொருள், இன்பம் என்ற முப்பாலையும் அடக்கிப் பாடியது மிகவும் ஆபூர்வமான செய்கை என்று கருதப்பட்டது. இது கண்ட அவ்வைப் பிராட்டி வீட்டுப் பாலையும் கூட்டி நான்கு புருஷார்த்தங்களையும் ஒரே சிறிய வெண்பாவுக் குள் அடக்கிப் பாடினார். அந்த ஆச்சரியமான வெண்பா பின் வருமாறு" என்று வியப்புறக் கூறி மேலே கூறிய வெண்பாவினைக் குறிப்பிடுகிறார்.

இக்கருத்துகள் சுருங்கச் சொல்லி விளங்க வைத்த லில் அவ்வையார், திருவள்ளுவரையும் விஞ்சியவர் என் னும் உண்மையைப் புலப்படுத்துகின்றன.

தமிழில் திருக்குறள், நாலடியார், பழமொழி, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, இன்னிலை, நான் மணிக் கடிகை, திரிகடுகம், ஆசாரக்கோவை, சிறுபஞ்ச மூலம், முதுமொழிக் காஞ்சி முதலிய பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுள் பலவும், நறுந்தொகை, நன்னெறி, நீதி நெறி விளக்கம் முதலியனவும், பெருங்காப்பியங்கள், சிறு காப்பியங்கள் முதலியனவும், புராண இதிகாசங்கள் பலவும், சில பல தனிப்பாடல்களும் மக்கள் வாழ்வாங்கு வாழ்தற்குரிய நல்வழிகளையும், நீதி நெறிகளையும் அறவுரைகளையும் உயர்ந்த கருத்துகளையும் எடுத்து விளக்குகின்றன.

ஆனாலும், அமிழ்தின் இனிய தமிழ்ச் சொற்கிழவி அவ்வை அன்னையார் அருளிய ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி ஆகிய அருந்தமிழ் நூல்கள் மூலமாகவும், பல்வேறு தனிப்பாடல்கள் மூலமாகவும் மக்களுக்குக் கூறியுள்ள அறிவுரை, அறவுரைகளைப் போல அத்துணை எளிமையும், தெளிவும், இனிமையும், பசுமரத்தாணிபோல் நெஞ்சில் பதிந்து நிலைக்கும் பாங் கும் உடையன அல்லவா? அப்பாடல்களுக்கு உரையோ, விளக்கமோ வேண்டா. அவை இளங்குழவிகளும், எழுத்தறியாப் பாமரரும் கேட்டதும் உணர்ந்து புரிந்து கொள்ளும் எளிமை வாய்ந்தன என்பதை அனைவரும் அறிவர்.

அவற்றில் சிலவற்றை இங்குக் காண்போம் :—

புலவர் என்றாலே வறுமையின் வடிவம் என்று கருதிய காலமும் இருந்தது. பசிப்பிணியகற்றுவதற்கே பெரும் பாலான புலவர்கள் பாடிவந்தனர்.

அவ்வையார் வறுமையின் கொடுமையை நன்கு அறிந்தவர்; உணவின்றிப் பல நாள்கள் வாடி வருந்தியவர்.

"சேவித்தும் சென்றுறு இரந்தும் தெண்ணீர்க்கடல் கடந்தும்
பாவித்தும் பார் ஆண்டும் பாட்டிசைத்தும் – போவிப்பம்
பாழின் உடம்பை வயிற்றின் கொடுமையால்
நாழி அரிசிக்கே நாம்"

என்று 'இறைவனை அடைதற்கென்றே கிடைத்த இம்மனிதப் பிறவியை பசிக் கொடுமையால் வாடி அதனைத் தீர்ப்பதற்கு வேண்டிய நாழி அரிசியை (உணவை)த் தேடும் முயற்சியிலேயே பலவாறு உழன்று வீணே கழிக்கின்றோமே!' என வேதனை மீதூரக் கூறுகின்றார். 'கொடிது கொடிது வறுமை கொடிது' என்று கூக்குரல் எழுப்புகிறார்.

"ஒரு நாள் உணவை ஒழியென்றால் ஒழியாய்
இருநாளைக்கு ஏலென்றால் ஏலாய் – ஒருநாளும்
என்னோய் அறியா இடும்பை கூர் என்வயிறே
உன்னோடு வாழ்தல் அரிது" – என்று பசியால் தம்மைத் துடிக்க வைத்த வயிற்றைக் கட்டிக்கொண்டு வாழ்வதற்காகத் தம்மைத்தாமே நொந்து கொள்கிறார்.

"மானம் குலம்கல்வி வண்மை அறிவுடைமை
தானம் தவம்முயற்சி தாளாண்மை – தேனின்
கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப்பறந்து போம்"

என்று கூறுகிறார். பசியின் கொடுமையை விளக்க இவற்றினும் வேறு சான்றும் வேண்டுமோ?

அதனை நன்கு உணர்ந்தமையால்தான் அவ்வையார், உணவிட்டு வயிற்றுப் பிணியைத் தணித்தலைப் பெரிய தருமமாகக் கூறுகிறார். உயிர் வாழ்வதற்கு உணவுதானே முக்கியம்? உணவின்றி உயிர்வாழ முடியுமா? தருமங்களில் பல உள்ளன. உடையளித்தல், வாழ இடமளித்தல், அணிமணிகளையளித்தல், நோய் தீர மருந்தளித்தல், தங்க நிழல் அளித்தல், வாழ, இன்ன பிற வசதிகள் அளித்தல் – இவையனைத்தும் தருமமே— அறமே. ஆனால் உயிர்வாழ்க்கைக்கு இன்றியமையாதது உணவேயன்றோ? இந்த உண்மையைத்தான் வடலூர் வள்ளலாரும் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

"பசியினால் வரும் துன்பத்தை நிவர்த்தி செய்விப்பதில் வரும் இன்பம் பர இன்பமாகும். அவை இம்மையில் போக சித்திகளாலும், யோக சித்திகளாலும், ஞான சித்திகளாலும் வருகின்ற இன்பங்களும், முடிவில் அனுபவிக்கப்படும் மோர்ச்ச இன்பமும் ஆகுமென்றறிய வேண்டும். உண்பதற்கு ஆகாரமில்லாமல் சோர்வடைந்த சீவர்களுக்குச் சீவகாருண்யத்தால் ஆகாரங் கொடுக்க உண்டு பசி நீங்கிய தருணத்தில், அந்தச் சீவர்களுக்கு

அகத்தினிடத்தும் முகத்தினிடத்தும் தழைத்துப் பொங்கித் ததும்புகின்ற இன்பமும், அது கண்டபோது கொடுத்தவர்களுக்கு அகத்திலும் முகத்திலும் அவ்வாறு உண்டாகிற இன்பமும், ஆன்ம சகிதமாகிய கடவுள் கரணத்தில் பூரணமாகத் தோன்றுகின்றவையாகையால், பர இன்பம் என்றறிய வேண்டும்....

"வஸ்திரம், இடம், நிலம், பொன் பொருள் முதலான வைகள் இல்லாமல் துன்பப்படுகின்றவர்கள், அத்துன் பங்களை மனவெழுச்சியால் சகித்துக்கொண்டு உயிர் தரித்துத் தங்களாற் செய்யக்கூடிய முயற்சியைச் செய்யக் கூடும். பசியினால் துன்பம் நேரிட்டபோது மனவெழுச்சி யால் அத்துன்பத்தைச் சகித்துக் கொள்ளக்கூடாது. சகிக்கத் தொடங்கில் உயிரிழந்துவிடுவார்கள்....

"நரகவேதனை, சனனவேதனை, மரண வேதனை என்கின்ற மூன்று வேதனைகளும் கூடி முடிந்த வேதனையே பசி வேதனை என்றும், அகம், புறம், நடு, கீழ், மேல் பக்கம் என்கின்ற எவ்விடத்தும் நிறைந்து எக் காலத்தும் வேறுபடாத மோட்ச இன்பமே ஆகாரத் தினாலுண்டாகும் திருப்தியின்பம் என்றும் அறியப்படும்.

.... பசியை நிவர்த்தி செய்வதே சீவகாருண்யம்... சீவகாருண்யமே கடவுள் வழிபாடு"... – இது வள்ளலார் வாக்கு.

தமிழ் மறை தந்த திருவள்ளுவரும் இப்பொல்லாத பசிக்குக் காரணமாகிய வறுமையின் கொடுமையை நல்குரவு என்னும் அதிகாரத்தில் தெளிவுற விளக்கி யுள்ளார். 'வறுமையினும் கொடியது பிறிதில்லை', 'வறுமை எனப்படும் பாவி', 'நெருப்பிலே கூடப் படுத்து றங்கக் கூடும்; ஆனால், வறுமைத் துன்பத்தில் உறங்கலும் கூடுமோ?... நேற்று என்னைக் கொன்ற வறுமை, அந்தோ இன்றும் வரும் போலுள்ளதே!" என்னும் குறள் குறிப்புகள் வறுமையின் கொடுமையை நன்கறிந்த வள்ளுவரின் உள்ளக் குமுறலையன்றோ காட்டுகின்றன!

'அறம்' என்னும் சொல் தருமம், புண்ணியம், சமய நம்பிக்கை, ஞானம், நேர்மை எனப் பல்வேறு பொரு ளைக் கொண்டது. எனினும் வயிற்றுப் பசியைத் தீர்க்க இடும் உணவைத் தான் முக்கியமாகக் குறிக்கிறது என்று கொள்வதுதான் பெரிதும் பொருந்தும். 'ஈதலே' அறம் என்று தெளிவாய்க் கூறுகிறார். அறம் அல்லது தருமத் தின் இறுதிப் பயன் வயிற்றுக்கு உணவிடல்தானே? 'தாயே தருமம்', 'தாயே பிச்சை' என்று பசித்தோரால் கேட்கப் படுவனவெல்லாம் வயிற்று உணவைத்தானே குறிக்கின் றன?

'அறம் செய விரும்பு', ஈவது விலக்கேல்', ஐயமிட்டுண்', 'தானமது விரும்பு', 'விருந்திலோர்க்கில்லை பொருந்திய ஒழுக்கம்'–இவற்றின் அடிப்படை வயிற்றுப்பசி தணித் தல்தானே! 'திரை கடலோடியும் திரவியம் தேடச் சொல்வதும் வயிறு வளர்க்கத்தானே?

அழுது புரள்வோரைக்கூட "மாண்டவர் வாரார்; நாமும் ஒரு நாள் இறந்துதான் தீர வேண்டியுள்ளது. ஆகையால் கவலையை விட்டுப் பிச்சையிட்டு நீங்களும் உண்டு இனிதே இருங்கள்" – என்றன்றோ கூறுகின்றார்.

அரும்பாடுபட்டுப் பொருள் சேர்த்துத் தானும் உண்ணாமல் பிறருக்கும் வயிற்றுப் பசி தீர்த்துக் கொள்ள வழங்காமல், வீணே புதைத்து வைத்து மாண்டு போகும் பாவிகளைக் கண்டு வேதனையுறுகிறார்.

செல்வம் ஆற்று வெள்ளத்தினால் உண்டாகும் மேடு பள்ளங்களைப் போல ஒரு கால் பெருகும் பின்னர்க் கரைந்து போய்விடும். ஆகையால்,

"... சோறிடும்

தண்ணீரும் வாரும் – அதனால் உங்கள் உள்ளத்திலே தூய்மை ஓங்கி நிற்கும்" – என்று அறைகூவல் விடுகிறாரே! 'தானம் செய்பவர்க்கு வானவர்நாடு வழி திறந்து நிற்கும்' என்கிறாரே, 'விருந்தினரை உபசரித்து உண்பிக்காத வீடு விழல்' என்கிறாரே!

இதுகாறும் அவ்வையார் பசிப்பிணியின் கடுமையையும், கொடுமையையும், அதனைத் தீர்ப்பதன் நலனையும் பலனையும் குறித்துக் கூறிய அறவுரைகளைக் கண்டோம். இனி, குடும்ப வாழ்க்கை–கணவன்–மனைவி கடமை நெறி முதலியன பற்றி அவ்வையார் கூறுவதைச் சிறிது காண்போம்.

"இல்லற வாழ்க்கையே சிறந்த வாழ்க்கை"
"இல்லறமல்லது நல்லறமன்று" என்கிறார்.

நற்குண நற்செய்கைகள் உடைய இல்லத்தரசி வீட்டில் இருப்பாளாயின் அவ்வீடு எந்தக் குறையும் இல்லாத வீடாகும். அத்தகைய நல்ல இல்லத்தரசி இல்லாவீடும், இருந்தும் அவள் இனிமையற்ற, கடுமையான சொற் களைச் சொல்லுபவளாயின் அந்த வீடும் வீடாயிராது. 'கடும்புலி வாழும் காடாகும்' என்கிறார்.

"இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை
இல்லாளும் இல்லாளே யாமாயின்–இல்லாள்
வலிகிடந்த மாற்றம் உரைக்குமேல் அவ்இல்
புலிகிடந்த தூறாய் விடும்"

"கணவனுடன் முரண்பட்டு எதிர்த்துப் பேசும் மனையாளினும், பேய் நன்று" என்பதும் அறிதற்குரியது.

இங்கு "இல்லது என் இல்லவள் மாண்பானால், உள்ளதென் இல்லவள் மாணாக் கடை" என்ற குறளும் இதே பொருளைக் குறிப்பதை உணரலாம்.

இல்லற வாழ்வில் கணவனும் மனைவியும், மனம் ஒத்துத் தத்தம் உரிமையையும், கடமையையும் உணர்ந்து வாழ்தல் வேண்டும். கணவன் குடும்பத் தலைவன். இல்லறத்தில் அவனுக்கு இன்றியமையாத் துணையாய் நிற்பவளே மனைவி. எனவே, அவள், அவனது வாழ்க்கைத் துணைவியாவாள். துணைவி இன்றி இல்லற வாழ்க்கை இனிது இயங்காது; மனைவியே இல்லாள்–இல்லத்தரசி என்பதைக் கணவன் உணர்ந்து வாழ வேண்டும். மனைவியும் பெண்களுக்கே உரிய, அன்பு, அடக்கம், பொறுமை, மறந்து மன்னிக்கும் மாண்பு, விட்டுக் கொடுக்கும் பண்பு–தியாக உணர்வு இவற்றின் ஒட்டுமொத்தமான உருவம் என்பதை உணர்ந்து நடந்தால்தான் இல்லறம் இனிது நடைபெறும். மனைவி ஏறுமாறாக இருப்பாளேயானால் கணவன்

சொல்லாமல் துறவியாய்ப் போய்விடுதலன்றி வேறு வழியில்லை.

"பத்தாவுக்கேற்ற பதிவிரதை யுண்டானால்
எத்தாலும் கூடிவாழலாமி – சற்றேனும்
ஏறுமாறாக இருப்பாளே யாமாயிற்
கூறாமற் சன்னியாசம் கொள்"

என்பது பொல்லாத மனைவியுடன் வாழ்ந்து வருந்தும் இல்லறத்தானுக்கு அவ்வையார் இடும் அன்புக் கட்டளை.

கணவனுடன் ஒத்து இன்பமாகக் குடும்பம் நடத்தாத மனைவியரை அவ்வையார் மிக வன்மையாகக் கண்டிக் கிறார்.

ஒரு நல்ல கணவன். ஆனால் அவனுக்கு மனைவியாக வாய்த்தவளோ பொல்லாதவள். குடும்பத்தில் எப்படி இன்பம் நிலவும்? அக்குடும்பம் சீரழிந்து போய்விடு மல்லவா? அந்நிலைக்குக் காரணமாயிருந்த இல்லாளை மனைவியாகக் கொண்ட கணவனைக் கண்டு கழிவிரக் கம் கொண்டு,

"சண்டாளி சூர்ப்பநகை தாடகையைப் போல் வடிவு
கொண்டாளைப் பெண்ணென்று கொண்டாயே"

என்று கூறி அவளுடன் வாழ்வதினும் "நீ நெருப்பிலே வீழ்ந்து மடிந்து போதலே தக்கது" என்கிறார்.

நல்ல ஆண்மகனுக்கு மரத்துப் போன கட்டை போன்ற அன்பற்ற பெண்ணொருத்தியை மனைவியாயிருக்குமாறு வகுத்த நான்முகனைக் கண்டால், ஏற்கெனவே பறி போன ஒருதலை போக, எஞ்சியுள்ள அவனுடைய நான்கு தலைகளையும் பிடித்துத் திருகித் தூக்கி வீசி எறிந்து விடுவேன்" என்று உள்ளம் குமுறிக் கூறுகிறார், அன்பே வடிவான நம் அவ்வைப்பிராட்டி,

"அற்றதலை போக அறாததலை நான்கினையும்
பற்றித் திருகிப் பறியேனோ – வற்றும்
மரமனையாட் கிந்த மகனை வகுத்த
பிரமனையான் காணப் பெறின்"

அவ்வைப்பிராட்டியார், குடும்பத் தலைவியாகிய நல்ல மனைவியை மிகவும் பெருமைப்படுத்திப் பேசு கிறார். மனைவியானவள் கணவனை உள்ளக் கனிவுடன் உபசரித்து, உணவூட்டி இனிது பேணலால் தாயானவள்; கல்வி கேள்விகளில் துணை செய்வதில் தந்தையானவள்; வீட்டின் இன்றியமையாச் செல்வமாய்த் திகழ்வதில் அவள் குழந்தையானவள்; வாழ்வுக்குப் பக்க பலமாய் நிற்றலில் உறவினரானவள்; துன்பத்திலும் இன்பத் திலும் தோள் கொடுத்தலில் உடன் பிறப்பானவள்; அத்தகைய இல்லக் கிழத்தியை ஒரு கணவன் இழந்தால், அவன் அவ்வளவு பேரையும் ஒருங்கிழந்த திக்கற்ற வனாவான் என்னும் பொருள்பட,

"தாயோடு அறுசுவைபோம் தந்தையோடு கல்விபோம்
சேயோடு தான்பெற்ற செல்வம் போம் – ஆய வாழ்
உற்றாருடன் போம் உடன்பிறப்பால் தோள்வலிபோம்
பொற்றாலி யோடெவையும் போம்"

எனப்பாடுகிறார். ஓர் இல்லத்தரசியின் கடமையை உரி மையை, பெருமையை, மதிப்பை எவ்வளவு சிறப்பாகக் கூறியுள்ளார், அனுபவத்தில் தேர்ந்த அறிவுரையாள ராகிய அவ்வையன்னையார்!

செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருக்கும் விருந்தோம்பல் பண்பு நல்ல மனையாளுக்குரிய பெருங் கடமைகளுள் தலையாய ஒன்றாகும். அகமும் முகமும் கனிந்து விருந்தினரை வரவேற்று, அவரது விருப்பறிந்து உரிய முறையில் இன்னமுதூட்டி உபசரித்தல் இல்லறத் தாரின் நல்லறமாகும். செல்வம் ஈட்டிப் பாதுகாத்து வாழும் இல்லற வாழ்க்கையின் இறுதிப் பயனே விருந்தினரைப் பேணுதல்தான்,

"இருந்து ஓம்பி இல்வாழ்வ(து) எல்லாம் விருந்து ஓம்பி
வேளாண்மை செய்தல் பொருட்டு"

என்கிறார், வள்ளுவப் பெருந்தகை.

"ஒப்புடன் முகமலர்ந்து உபசரித்து உண்மை பேசி
உப்பிலாக் கூழிட்டாலும் உண்பதே அமுதமாகும்
முப்பழ மொடுபால் அன்னம் முகங்கருத்(து)
இடுவராயின்
கப்பிய பசியும் மாறிக் கடும்பசியாகு மன்றோ?"

என்னும் பாடல் கருத்தும் இங்குக் கருதத்தக்கது.

ஒருமுறை ஏழைக் குடியிற் பிறந்த இளம் பெண்கள் இருவர், அவ்வையார் அப்பக்கம் சென்ற போது, அவரை அன்புடன் தம் குடிசைக்கு அழைத்துச் சென்று இனிது உபசரித்து, வேறோர் உணவுப் பொருளும், உண வும் தம் வீட்டில் இல்லாமையால் வீட்டருகில் இருந்த வெறும் கீரையைப் பறித்து வந்து அதனை வேகவைத்து கனிவுடன் உண்பித்தனர். அதனையுண்ட அவ் வையார்,

"வளையணிந்த அழகுக் கைகளையுடைய இக் கன் னியர், பதமான சூடும் நறுமணமும் உடையதாய், நல்ல நெய்யிலே பொறிக்கப்பட்டதாய், விரும்பி எவ்வளவு தின்றாலும் சலிப்பற்றதாய் உள்ள அருமையான அமு தத்தை, உண்ணக் கொடுத்து, இது பசுமையான வெறும் கீரையென்று பொய்யல்லவா சொன்னார்கள்!

"வெய்தாய் நறுவிதாய், வேண்டளவும் தின்பதாய்
நெய்தான் அளாவி நிறம்பசந்த-பொய்யாய்
அடகென்று சொல்லி அமுதத்தை இட்டார்
கடகம் செறிந்தகை யார்"

என்று வியந்து பூரித்துப் பாடிப் புகழ்ந்தார்.

மற்றொரு முறை, வேளூர் என்னும் ஒரு சிறிய ஊரில் வாழ்ந்த பூதன் என்னும் எளியவன் உப்புக்கும் பாடிப் புளிக்கும் ஒரு கவிதை ஒப்பித்த நம் அவ்வை அன்னை யாரை தன் குடிசைக்கு அன்புடன் அழைத்துச் சென்று, தன் வீட்டில் இருந்த, வெறும் கேழ்வரகுச் சோறும், கத்தரிக்காய் வாட்டும், நுரைத்துப் புளித்துப் போன மோரும் அளித்து உள்ளன்புடன் உபசரித்து விருந்திட் டான். அதை உண்டு மகிழ்ந்த அவ்வையார் 'இந்த உணவுக்கு உலகம் முழுதும் கொடுத்தாலும் தகும்; அவ் வளவு உயர்ந்தது!'

''வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்
முரமுரெனவே புளித்த மோரும் – திறமுடனே
புல்வேளிர் பூதன் பிரிந்துவிருந்திட்டசோ(று)
எல்லா வுலகும் பெறும்''

என்று பாடி பாராட்டி வாழ்த்தினார்.

ஓர் இல்லக் கிழத்தி, ஒரு நாள், தன் உள்ளத்தில் அன்பில்லாது இட்ட உணவைக் கண்டு அவ்வையார்,

''காணக்கண் கூசுதே, கையெடுக்க நாணுதே,
மாணொக்கவாய் திறக்க மாட்டாதே – வீணுக்(கு) என்
என்பெல்லாம் பற்றி எரிகின்ற(து) ஐயையோ
அன்பில்லாள் இட்ட அமுது''

எனப்பாடியது அன்பில்லாது இட்ட உணவைக் கண்டு அவ்வையார் அடைந்த வேதனைக் குமுறலை நன்கு வெளிப்படுத்துகின்றது.

இரப்பவருக்கு அகமும் முகமும் கனிய அளித்தல் வேண்டும். 'ஏசி இடலில் இடாமையே நன்று' என்கிறார். அதே சமயத்தில் தனக்கு இடுவோரை மெச்சி வாழ்த்தா தவர் கெட்டழிவர் – 'இட்டதனை மெச்சா இரவலன் கெட்டுவிடும்' என்று கூறுகிறார்.

மதியாதார் சுற்றம் மதித்தல் கூடாது உளமுவந்து உப சரித்து உணவளிக்காதவர் மனையில் உண்ணக் கூடாது; நற்குடிப் பிறவாதவரிடம் இணக்கம் கொள்ளக் கூடாது; சொன்ன சொல் தவறக்கூடாது. அவ்வாறிருத்தல் ஒவ் வொன்றும் ஒவ்வொரு கோடி பொன்னுக்குச் சமமாகும்.

''மதியாதார் முற்றம் மதித்தொருகால் சென்று
மிதியாமை கோடி பெறும்.
உண்ணீர் உண்ணீர் என்று உபசரியார் தம் மனையில்
உண்ணாமை கோடி பெறும்.
கோடி கொடுத்தும் குடிப்பிறந்தார் தம்மோடு
கூடுதல் கோடி பெறும்
கோடானு கோடி கொடுப்பினும் தன்னுடைநாக்
கோடாமை கோடி பெறும்''

என்னும் அறிவுரை, பல கோடி பெறும் அற்புதமான அறிவுரையல்லவா ?

ஊழ்வினை, விதி மிக மிக வலிமை வாய்ந்தது அதனை வெல்லுதல் அரிது என்று அவ்வையார் பல பாடல்களிற் பாடியுள்ளதும் அறிதற்குரியது. வான் மறை தந்த வள் ளுவப் பெருந்தகை விதியின் வலிமையை

''ஊழிற் பெருவலி யாவுள ? மற்று ஒன்று
சூழினும் தான்முந்துறும்''

என்று கூறியுள்ளதும் தக்க சான்றாகும்.

மிகுந்த ஆழமும் பெரும்பரப்பும் கொண்டுள்ள கடல் நீரை, ஒரு படிப்பாத்திரத்தைக் கொண்டு ஆழ்த்தி ஆழ்த்தி மொண்டாலும் ஒருபடி நீர்தானே வரும்? அவ் வாறே ''தந்தம், விதியின் பயனே பயன்'' என்கிறார்.

''எழுதியவாறே காண் ... மட நெஞ்சே'',
''ஈட்டும் பொருள் முயற்சி எண்ணிறந்த ஆயினும்
ஊழ் கூட்டும் படியன்றிக் கூடாவாம்,' ''தாந்தாம்
முன் செய்தவினை தாமே அனுபவிப்பர் ...
ஊரெல்லாம் ஒன்றாய் வெறுத்தாலும் போமோ
விதி?'' ''செய்தீ வினை இருக்கத் தெய்வத்தை
நொந்தக்கால் எய்த வருமோ இருநிதியம்?''

என்றெல்லாம் அவ்வையார் குறிப்பிடுவன விதியின் வலி மையில் அவர் கொண்டிருந்த அசைக்க முடியாத நம்பிக் கையைக் காட்டுகின்றது. இவ்வாறே புலவர்கள் பலரும் விதியின் வலிமையைப் பலபடக் கூறியுள்ளனர்.

''விதியை மதியால் வெல்லலாம்'' எனும் வாசகமும் உள்ளது. முயற்சியால் ஓரளவு விதியை வலிவற்றதாகச் செய்யலாம். ''ஒரு செயலைச் செய்து வெற்றி பெற வேண்டும் என்று ஒருவன் விடாது முயல்வானாயின் விதி அவனுக்குத் தடையாக நிற்குமானால், அவன் எதிர் பார்த்த அளவு முழுவெற்றி பெறாவிட்டாலும், உழைப் புக்குத் தக்க பலனை அவன் பெறலாம்.'' ''ஒரு வினை யைச் சோர்வு இன்றித் தொடர்ந்து முயன்று செய்பவன் விதியை வெல்லக்கூடும் என்னும் பொருள்பட

''தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்''

என்றும்,

''ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவு இன்றித்
தாழாது உஞற்றுபவர்''

என்றும் கூறுகிறார் வள்ளுவர்.

ஆனால், இங்கு அவ்வைப் பெருமாட்டியார் திருவைந் தெழுத்தாகிய 'சிவாயநம' என்னும் திருமந்திரத்தை இடையறாது சிந்தனை செய்திருப்பவர்க்கு விதியால் ஒரு தீங்கும் வாரா. அப்படிச் செய்யாதவர்க்கு விதி தன் வலிமையைக் கண்டிப்பாய்க் காட்டிவிடும். இது மறுக்க முடியாத உண்மை.


''சிவாய நமவென்று சிந்தித் திருப்பார்க்கு
அபாயம் ஒரு நாளும் இல்லை – உபாயம்
இதுவே மதியாகும் அல்லாத வெல்லாம்
விதியே மதியாய் விடும்''

என்கிறார்.

வான்புகழ் வள்ளுவர் குறள், நான்மறை முடிவாகிய உபநிடதங்கள், ஞான சம்பந்தர் நாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரும் அருளிய தேவாரம், வாதவூர் அடிக ளாகிய மாணிக்கவாசகப் பெருமானின் திருக்கோவை திருவாசகங்கள், திருமூலர் அருளிய திருமந்திரம் ஆகிய இவையனைத்தும் ஒரே உண்மைப் பொருளைத்தான் கூறுகின்றன என்று ஓர்ந்து கூறுகிறார். அவ்வை அடிகளார்.

''தேவர் குறளும் திருநான் மறை முடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் – கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகம் என்(று) உணர்''

இவையனைத்தும் ஒருமித்துக் கூறும் அந்த ஒரு வாச கத்தின் உட்பொருளான ஒரு பொருளை – மெய்ப் பொருளை, பரம் பொருளைக் காணும் முயற்சியில் இடை யறாது ஈடுபட்டு, உணர்ந்து இனிது உய்வோமாக!



ஸ்ரீ வரதராஜப் பெருமாள், காஞ்சிபுரம்



ஆழ்வார்கள் வளர்த்த தமிழ்

(பாரதி சுராஜ்)

'தேவர் வருக வென்று சொல்வதோ – ஒரு
செம்மைத் தமிழ் மொழியை நாட்டினால்
ஆவலறிந்து வருவீர் கொலோ? – உம்மை
அன்றி ஒரு புகலும் இல்லையே!'

என்று பாடினார் மகாகவி பாரதியார்.

வேத மந்திரங்களால், சமஸ்கிருத சுலோகங்களால் அழைத்தால் தான் வருவீர்களா ? நல்ல செம்மைத் தமிழ் மொழியில் அழைத்தால் வரமாட்டீர்களா? என்று கேட்டார் அவர்.

அவருக்குப் பலநூற்றாண்டுகளுக்கு முன்பே ஆழ்வார்களும் நாயன்மார்களும், பின்வாழையடி வாழையாக வந்த தாயுமானவர், வள்ளலார் போன்றோர் தமிழ், தெய்வத்தை வணங்க ஏற்ற மொழி என்பதைத் தங்கள் படைப்புக்களால் உறுதிப்படுத்தினார்கள்.

ஆழ்வார்கள் தமிழுக்குச் செய்துள்ள தொண்டு அளவிறந்தது. கம்பன் போன்ற உத்தமக் கவிஞர்களுக்குக் கை கொடுக்கும் அளவுக்கு அவர்களது படைப்புக்கள் இலக்கிய நயம் நிறைந்தவை.

முதலாழ்வார்கள்

பொய்கையார், பூதத்தார், பேயார் என்று அழைக்கப்பெற்ற இவ்வாழ்வார்கள் நற்றமிழால் நூல் செய்து நாட்டை உய்த்தவர்கள்.

இவர்களில் கடல்மல்லையில் கவி முத்தாக வந்து தித்த பூதத்தார் தம்மைத் 'தமிழன்' 'பெருந்தமிழன்' 'நல்ல பெருந்தமிழன்' என்று அழைத்துப் பெருமை கொண்டார். வெறும் தமிழர்கள் இடையில் இறைவனைப் பாடிய நான் நல்ல பெருந்தமிழன் என்று மார்தட்டினார் அவர்.

யானே தவம் செய்தேன் ஏழ்பிறப்பும் எப்பொழுதும்
யானே தவமுடையேன் எம்பெருமான் – யானே
இருந்தமிழ் நன்மாலை இணையடிக்கே சொன்னேன்
பெருந்தமிழ னல்லேன் பெரிது

கம்பனே எடுத்துக் கையாண்ட அற்புதமான இயற்கைக் காட்சியொன்று அவரது இரண்டாம் திருவந்தாதியில் வருகிறது.

திருமலை (திருப்பதி) க்குச் செல்லும் காட்டு வழி. பக்தரானாலும் கவிஞர் அல்லவா ? ஒரு காட்சி அவரது கவிதைக் கண்களில் தெரிகிறது.

ஆணும் பெண்ணுமான, களிறும் பிடியுமான யானைத் தம்பதிகள். ஊடல் தணிக்கும் காட்சி. ஆசை மீக்கூரப் பெற்ற வேழம் தன்'பிடி'க்காக இளைய மூங்கில் ஒன்றை இலாகவமாக ஒடிக்கின்றது. அதுமட்டுமா? மேலே உள்ள தேன்கூட்டில் உள்ள தேனில் தோய்த்துத் தன் துணைவியிடம் நளினமாக நீட்டுகிறது. இத்தகைய வளம் நிறைந்த திருவேங்கடத்தில்தான் நீலவண்ண நெடுமால் உறைகிறான்.

பாடலைப்பாருங்கள் :

பெருகுமதவேழம் மாப்பிடிக்கு முன்னின்று
இருகண் இள மூங்கில் வாங்கி – அருகிருந்த
தேன் கலந்து நீட்டும் திருவேங்கடம் கண்டீர்
வான் கலந்த வண்ணன் வரை.

'தேன் கலந்து' என்பதையும் 'வான்கலந்த' என்பதையும் சொல்லிச் சொல்லி மகிழலாம்.

'வான்கலந்த மாணிக்க வாசக!' என்ற வள்ளலார் பாடல் நினைவுக்கு வருகிறதா ? அப்படி சுவைப்பது தான் கவி இன்பம். பேயாழ்வாரை – சென்னை, மயிலையில் அவதரித்தவரை 'தமிழ்த்தலைவன்' என்றே போற்றுகிறார் திருவரங்கத்தமுதனார்.

திருமழிசையார்

திருமழிசையில் வந்த ஆழ்வார் திருமழிசை ஆழ்வார். காஞ்சிபுரத்து திருவெஃகாவில் நாகணைக் கிடந்தவனைத் தான் ஊரைவிட்டு அரசனால் வெளியே அனுப்பபட்ட போது (தேசப்ரஷ்டம்) "பாய்சுருட்டிக் கொள்' என்று ஆணையிட்டு, அரசன் மன்னித்துக் கொள்ளுங்கள்' என்று வேண்டிய பின் 'பாய்விரித்துக் கொள்' என்று பாடி அப்படியே இறைவனைச் செய்ய வைத்தவர். தமிழின் (ஆழ்வாரின்) பின்னால் இறைவன் சென்ற இக்காட்சி தான் குமரகுருபர அடிகளை

'பைந்தமிழின் பின் சென்ற பச்சைப் பசுங் கொண்டலே' என்று பாட வைத்தது.

இன்றும் வைணவ ஆலயங்களில் எம்பெருமான் வீதி வலத்தில் முன்னே தமிழ் பிரபந்தங்கள் ஓதிச் செல்ல, பகவானுக்குப் பின்னே தான் 'வேதம்' வல்லார் வேதம் ஓதி வருவார்கள். இவரது திருச்சந்த விருத்தத்தினால் தமிழ் விளையாடுவதைப் பாருங்கள்.

பூநிலாய ஐந்துமாய்ப் புனற்கண் நின்ற நான்குமாய்
தீநிலாய மூன்றுமாய்ச் சிறந்த காலிரண்டுமாய்
மீநிலாய தொன்றுமாகி வேறுவேறு தன்மையாய்
நீ நிலாய வண்ணம் நின்னை யார் நினைக்க வல்லரே

அருள்மாறன்

ஆழ்வார்களில் தலைமை இடம் இவருக்கு வைணவர்கள் நாள்தோறும் இவரை வணங்குகிறார்கள். திருமால் கோயில்களில் 'சடகோபம்' என்று இவரது பெயரால்தான் இறைவன் திருவடிகள் பக்தர்கள் தலையில் சூட்டப்பெறுகின்றன. இவர் வேளாளர் என்பது கவனிக்கத்தகுந்தது. 'நமாம்யஹம் திராவிட வேதஸாகரம்' என்று வடமொழி தனியனால் இவரை வாழத்தித்தான் இவரது பாடல்கள் ஓதப்பெறும்.

வேதம் தமிழ் செய்த மாறன் என்று சிறப்புப் பெற்றவர் இவர். 'திராவிட வேதக் கடல் என இவர் அழைக்கப் பெறுகிறார். இவரது திருவாய் மொழியைத் தமிழ் வேதமாகவே வைணவ உலகம் போற்றுகிறது.

கவிதையைக் கடவுளாகவே போற்றியவர். இது திருமாலிருஞ்சோலையில் உள்ள அழகன்தான் 'மாயக் கவியாய்' வந்தான் என்று பாடுகிறார் ஆழ்வார்.

செஞ்சொற் கவிகாள்! உயிர்காத்தாட் செய்ம்மின் திருமாலிருஞ்சோலை
வஞ்சக் கள்வன் மாமாயன் மாயக் கவியாய் வந்து – என்
நெஞ்சும் உயிரும் உள் கலந்து நின்றார் அறியா வண்ணம் – என்
நெஞ்சும் உயிரும் அவையுண்டு தானேயாகி நிறைந்தானே!

மதுரகவி ஆழ்வார்

மதுரகவி ஆழ்வார் தம் குருநாதராகிய நம்மாழ் வாரைத் தவிர்த்து இறைவனைக் கூடப் பாடாதவர்.

குருநாதர் – ஞானாசிரியர் என்ன செய்கிறார் என்பதை விளக்கும் அவரது பாடல்,

பயனன்றாகிலும் பாங்கல்லராகிலும்
செயல் நன்றாகத் திருத்திப் பணி கொள்வான்
குயில் நின்றார் பொழில்சூழ் குருகூர் நம்பி
முயல்கின்றேன் உந்தன் மொய் கழற் கன்பையே.

ஆன்மத் தேட்டம் உள்ளவர்கள் படித்துப் படித்து மகிழ வேண்டிய நூல் திருவாய்மொழி

'அவரவர் இறையவர் குறைவிலர் – இறையவர்
அவரவர் விதிவழி அடைய நின்றனரே'

என்று விரிந்த மனத்துடன் உபதேசித்தவர் இவர்.

குலசேகராழ்வார்

'கொல்லி காவலன், கூடல் நாயகன் கோழிக்கோன் என்று மூன்று தமிழ் நிலங்களுக்கும் பேரரசராய் விளங்கிய இவர் தமிழிலே ஆழங்காற் பட்டவர் இவரது திருவாக்குகள் 'பெருமாள் திருமொழி' என்று அழைக்கப் பெறுகின்றன.

தென்னரங்கனை இவர் 'தேட்டரும் திறல் தேன்' என்று அழைப்பார்.

அவசரயுகத்தில் வாழும் நமக்குப் பத்துப்பாடல்களில் இராமாயணம் பாடித்தந்தவர் இவர்.

'மன்னு புகழ்க் கௌசலைதன் மணிவயிறு வாய்த் தவனே' என்று தொடங்கும் இவரது தாலாட்டுப் பாடலை அறியாதார் இல்லை.

இறைவனுக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பைப் பத்துப் பாடல்களால் கூறுகிறார் இவ்வாழ்வார். 'தரு துயரம்' என்ற பதிகத்தில்

மாதிரிக்கு ஒன்று.

தவறிப் போய் மாற்றான் கை மேல்பட்டாலே வெகுண் டெழுகிறான் மனிதன். தீராத நோய் தீர்க்கையில் அறுவைச் சிகிச்சைக்காக (ஆபரேஷன்) கத்தியுடன் வரும் மருத்துவரை எத்தனை பரிவுடன் பார்க்கிறான். ஐயா நான் பிழைத்து விடுவேனா என்று எப்படிக் கேட்கிறான்! அப்படித்தான் நம்மைத் திருத்த, இறைவன் தரும் துயரங்களையும் எண்ண வேண்டும். அறுவை சிகிச்சையை விட்டால் வேறு வழி இல்லை.

வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்
மாளாத காதல் நோயாளன் போல் – மாயத்தால்
மீளாத்துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா! – நீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே.

பெரியாழ்வார்

இறைவனுக்குப் பல்லாண்டு பாடியதால் இவர்
பெரியாழ்வார் என்று பெயர் பெற்றார்.
வேதத்துக்குப் பிரணவம் (ஓம்) போல இவரது
திருப்பல்லாண்டு, இதை முதலிலும் முடிவிலும்
கூறித் தான் ஆழ்வார் பாசுரங்களின் ஓதல்
(சேவை) நிறைவு பெறும்.
'பிள்ளைத் தமிழுக்கு வழிகாட்டி' என்று

கண்ணனைப் பற்றி இவரது பாடல்களைக் கூறுவார் கள்.

கண்ணக்குழந்தைக்குப் பிறந்தநாள் பரிசாகப் பிரமன் தந்தது ஒரு தொட்டில். ஆழ்வார் தமிழில் அது எப்படிப் படம் பிடிக்கப்படுகிறது!

மாணிக்கம் கட்டி வயிரம் இடைகட்டி
ஆணிப் பொன்னாற் செய்த வண்ணச் சிறுதொட்டில்
பேணி உனக்குப் பிரமன் விடுதந்தான்
மாணிக்குறளனே! தாலேலோ! வையமளந்
தானே! தாலேலோ.

'அப்பா இதில் உறங்கும் போது நீ கண்ணன் – குழந்தை என்ற நினைவுடன் உறங்க வேண்டும். முன்பு வாமனனாக வந்து திரிவிக்கிரமனாக – பேருருவம் எடுத் தாயே! அப்படிச் செய்தால் நான் தொட்டிலுக்கு எங்கே போவது? என்ற குறிப்பு தோன்ற 'மாணிக் குறளனே தாலேலோ! வையம் அளந்தானே தாலேலோ என்ற அடிகளின் நயத்தைக் கவனிக்க வேண்டும்.

இவர் தமிழ்ப்பற்றுடன் தமிழ் இனப்பற்று - தமிழ் நாட்டுப் பற்றும் மிக்கவர். திருமாலின் திருவடிகள் தமது முடியில் சூட்டப்பெறுவதை ஒரு உவமையால் கூறு கிறார். முன்பு இமயமலையில் மீன் கொடியைப் பொறித் தானே பாண்டிய மன்னன் அது போல என்கிறார்!

'பருப்பதத்துக் கயல் பொறித்த பாண்டியர் குலபதிபோல்
திருப்பொலிந்த சேவடி என் சென்னியின் மேல் பொறித்தாய்!

பாடுபவர் சேரமன்னர்! பேசுவது பாண்டியன் புகழ் - கவனிக்க வேண்டும்.

தொண்டர் அடிப்பொடி ....

என்று தூய தமிழ்ப் பெயர் சூட்டிக் கொண்டவர். விப்ரநாராயணர் இயற்பெயர். இறைவனுக்குப் பள்ளி எழுச்சி பாடிய பெருந்தகை. இவரது 'திருமாலை' எளிய இனிய நூல். 'திருமாலை அறியார் பெருமாளை அறியார்' என்று இவரது நூல் புகழ் பெறும்.

இந்த அடியவருக்குத் தமிழ்க் காவிரி, கங்கையை விடப் புனிதம் நிறைந்ததாக தெரிகிறது.

'கங்கையிற் புனிதமாய காவிரி நடுவுபாட்டு
பொங்கு நீர்ப்பரந்து பாயும் பூம்பொழில் அரங்கம் தன்னுள்
எங்கள் மால் இறைவன் ஈசன் கிடந்ததோர் கிடக்கை கண்டும்
எங்ஙனம் மறந்து வாழ்கேன் ? ஏழையேன், ஏழையேனே !

திருரங்கத்தைக் கவிச் சோலையாக்கும் இவரது பாடல் வரிகள்

'வண்டினம் முரலும் சோலை மயிலினம் ஆலும் சோலை
கொண்டல் மீதணவும் சோலை, குயிலினம் கூவும் சோலை
அண்டர் கோன் அமரும் சோலை, அணிதிருவரங்கம் என்னா
மிண்டர் பாய்ந்து உண்ணும் சோற்றை விலக்கி நாய்க்கு இடுமின் நீரே.

ஆழ்வார்களில் இவர் சீர்திருத்தக் குரல்கொடுத்தவர். திருமாலையின் கடைசிப் பாசுரங்களை ஊன்றிப் பார்ப்பவர்களுக்கு இது விளங்கும்.

உதாரணத்துக்கு ஒரு பாடல்

அமரவோர் அங்கமாறும் வேதம் ஓர் நான்கும் ஓதி
தமர்களின் தலைவராய சாதி அந்தணர் களேனும்
நுமர்களைப் பழிப்பராகில் நொடிப்ப தோர் அளவில்
அவர்கள்தாம்புலையர்போலும் அரங்கமா நகருள் ளானே

திருப்பாணாழ்வார்

தாழ்த்தப்பட்ட இனத்தில் வந்த இவர் பத்தே பாடல் கள் பாடினார். பரமவைதிகரான வேதாந்த தேசிகர் இப்பத்து பாடல்களுக்கு விளக்கம் எழுதினார்.

பாண் பெருமாள் பாடல் பத்தும் பழமறையின் முடிவென்று பரவினோமே' என்பது அவர் வாக்கு.

இவர் வரலாறு புரட்சிகரமானது. பிறப்பின் காரண மாகச் சிறுமைப்படுத்தப்பட்ட இவரை, வைதிக அந்த ணர் தோளில் சுமந்து வந்து கருவறைக்குள் விட வேண்டுமென்று கட்டளையிட்டான் அரங்கன். எந்த விதமான தூய்மைச் சடங்கும் இன்றி, இருந்த இருப்பில் அரங்கன் கருவறை சென்று அவனைக் கண்ணாரக் கண்டு அவனுடன் கலந்தவர் இவ்வாழ்வார்.

'வெய்யோன் ஒளி' என்று தொடங்கும் கம்பராமாயண அயோத்தியா காண்டத்துப் பாடல் இராமன் அழகை அற்புதமாகக் கம்பன் தீட்டும் சொல்லோவியம். அதற்குக் கை கொடுத்த ஆழ்வாரின் பாடல் இது!

'ஆலமாமரத்தின் இலை மேல் ஒரு பாலகனாய்
ஞாலமேழும் உண்டான் அரங்கத்தரவின் அணையான்
கோலமாமணி ஆரமும் முத்துத்தாமமும் முடிவில்ல தோர்எழில்
நீலமேனி ஐயோ! நிறை கொண்ட தென் நெஞ்சினையே!

திருமங்கை ஆழ்வார்

'நாலுகவிப் பெருமாள்' என்பது இவரது பட்டப் பெயர். தமிழ்க் கவிதையின் அத்தனை துறைகளிலும் பாடி தன் புலமையைக் காட்டியவர். 'இருந்தமிழ் நூற்புலவன்' என்றே தம்மை அழைத்துக் கொண்டவர். கள்ளர் மரபில் வந்த பெருந்தகை இவர்.

மடல், உலா போன்ற இலக்கிய வகைகளை அத்தனை சிறந்ததாக, கவிதை சுவைஞர்கள் ஏற்பதில்லை. இவர் பாடிய சிறிய திருமடல் பெரிய திருமடல் போன்றவை படிக்கப் படிக்க நெஞ்சை ஈர்ப்பவை.

திருநாவுக்கரசரின் தாண்டகப் பாடல்களுடன் ஒப்பு நோக்கத்தக்கவை, இவரது திரு நெடுந்தாண்டகப் பாடல்கள்.

சொல்லுக்குச் சொல்லழகு தோன்றும் திருநெடுந் தாண்டகப் பாடல் ஒன்றைப் பாருங்கள்.

முளைக்கதிரைக்குறுங்குடியுள் முகிலை மூவா
மூவுலகும் கடந்து அப்பால் முதலாய் நின்ற
அளப்பரிய ஆரமுதை அரங்கம் மேய
அந்தணனை, அந்தணர் தம் சிந்தையானை
விளக்கொளியை மரகதத்தைத் திருத்தண்காவில்
வெஃகாவில் திருமாலைப் பாடக்கேட்டு
வளர்த்ததனால் பயன் பெற்றேன் வருகவென்று
மடக்கிளியைக் கை கூப்பி வணங்கினாளே!

ஆண்டாள்

ஆழ்வார்கள் தஞ்செயலை விஞ்சி நிற்கும் தன்மையள் என்று போற்றப் பெறுபவர் இவர். பெரியாழ்வாரின் வளர்ப்பு மகள். இவரது திருப்பாவை 'வேதமனைத் துக்கும் வித்து'. நித்திய பாராயணமாக விதிக்கப்பட்டது இவரது திருப்பாவை.

விரிந்த மனத்துடன் இவர் பாடிய வாழ்த்துப் பாடல்.
'ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாடி
நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினால்
தீங் கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து
ஓங்கு பெரும் செந்நெலூடு கயல் உகள
பூங்குவளைப் போதில் பொறி வண்டு கண்படுப்ப
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைப்பற்றி
வாங்க – குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய்'.

ஆழ்வார்கள் வாழி! அருளிச் செயல் வாழி!
தாழ்வேதும் இல்குரவர் தாம் வாழி – ஏழ்பாரும்
உய்ய அவர்கள் உரைத்தவைகள் தாம் வாழி
செய்யமறை தன்னுடனே சேர்ந்து.

– மணவாள மாமுனிகள்.

பொது விண்ணப்பம்

எல்லாமுடைய அருட்பெருஞ்ஜோதி அற்புதம் கடவுளே! இது தொடங்கிச் சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய தடைகளாகிய சமயங்கள் மதங்கள் மார்க்கங்கள் என்பவற்றின் ஆசார சங்கற்ப விகற்பங்களும் வருணம் ஆசிரமம் முதலிய உலகாசார சங்கற்ப விகற்பங்களும் எங்கள் மனதில் பற்றாவண்ணம் அருள்செய்தல் வேண்டும். சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய இலட்சியமாகிய ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமை எங்களுக்குள் எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எவ்வளவும் விலகாமல் நிறைந்து விளங்கச் செய்வித்தருளல் வேண்டும். எல்லாமாகிய தனிப் பெருந்தலைமை அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே தேவரீர் திருவருட் பெருங்கருணைக்கு வந்தனம், வந்தனம்.

(வள்ளலார்)

தொகுப்பு. எஸ்.கோதண்டன்
சென்னை-13

தத்துவங்கள் 96

பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என பூதங்கள்.	... 5
வாக்கு, பாணி, பாதம், பாயு, உபஸ்தம் என கர்மேந்திரியங்கள்	... 5
வசனம், தாளம், கமளம், விசர்ஜனம், ஆனந்தம், என கர்மேந்திரிய விஷயங்கள்	... 5
துவக்கு, சக்ஷு, சரோத்தரம், ஜிஹ்வை, கிராணம் என ஞாநேந்திரியங்கள்	... 5
சப்த, ஸ்பரிச, ரூப, ரச, கந்தம் என அந்தக்கரணம்,	... 5
நாடிகள்:- இடை, பிங்கலை, சுழும்நா, கண்டம், அஷிகள், காந்தாரி, அத்தி, அலம்புடை, சங்கிலி, குரு.	... 10
பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன் என வாயுக்கள்.	... 5

கடவுள் வாழ்த்துவாழ்வு
தயவு

காண்பரிய மெய்ப்பொருளைக் காணத் தமிழ்மொழியே
மாண்புடையார் வாய்மலர்ந்த வாக்கு. (தயவுக் குறள்)

சரவணானந்தா - திண்டுக்கல்.

கடவுள் வாழ்த்து வாழ்வு

சுத்தாகிச் சித்தாகி இன்பமாகிச்
சதாநிலையாய் திகழ்கின்ற ஒன்றே கடவுள்
புத்துருவாய் எக்காலும் பொலிந்து கொண்டு
பொன்றாமல் வாழ்ந்திடவே உளங்கொண்டாரால்
தத்துவங்கள் தீண்டாத உள்ளகத்தே
தமிழமுத மலரரும்பாய்த் தோன்றி இன்று
சித்தாலே மலர்ந்துதயா மணத்தை யுலகு
தேர்ந்துகொள வருகுதிதை ஏற்று வாழ்வீர்
"ஒன்றுநீ அல்லை உனையன்றி யொன்றில்லை
யார்உனை அறியகிற் பாரே!"

என்ற மணிவாசக அடிப்படையில் பரம்பொருள் உண் மையை இன்று அகநின்று அறிந்து உலகம் எல்லாம் வாழ ஆணை செய்யப்படுகின்றது.

மெய்ப்பொருள் ஒன்றே இருக்கின்றது உண்மை. ஆனால் அந்த ஒன்று, தன்தனிப் பெருங்கருணையால், அல்லது தனிப்பெருந்தயவால் அனைத்துலகுயிர்ப் பொருள்கள் யாவுமாய்த் தோற்ற மாற்ற மறைவு காட்டிக் கொண்டேயுள்ளது. அதுவே இந்த மனிதனில், மெய்ஞ் ஞானத்தால் அகத்தும் புறத்தும் விளங்கலை அறிகின் றோம். அப்படி விளங்கிக் கொண்டிருக்கும் ஒன்றைத் தான், தயவு உண்மையாக உணர்த்தப் பெறுகின்றது.

தெய்வத் தமிழில் அமைந்துள்ள தயவு மூலம், எங்கும் நிறை தகராகாசப் பெருஞ்ஜோதிப் பரம்பொருள்தானே இம் மனிதனின் தலைநடு மெய்யறிவுத் தலத்தே யகர மாகிய ஆன்ம சிற்சபையில் பூரண இயல்பொடு எழுந் தருளி உள்ளது சத்தியம். அத்தயாநிலையிருந்தே தன் அருட்பேர் ஆற்றலால் நம் ஜீவ தேகாதி பிரபஞ்சம் அனைத்துமாய்ப் புறத்தே விளங்கிக் கொண்டுள்ளது: எது? அந்த அக மெய்ப்பொருள் ஒன்றுதான். ஆகையால் அந்தத் தயா பெரும்பதியே, யாவுமாய், நாம் ஒவ்வொரு வருமாய்த் திகழ்ந்து கொண்டுள்ளது மெய்யே! இப்படி அவரே, தயவாய் அக நின்று உணர்த்துகின்றதும், நாமாய்ப் புறஞ்சூழ்ந்து உணர்கின்றதும் மெய்யே! மற்ற படி, பிற எவராலும் எக்காலும் அறிந்து கொள்ளவும், அயலிருந்து அடைந்து விடவும் முடியவே முடியாது! இப்போது, எடுப்பிலே குறித்த மணிவாசகத்தின் உண்மை நன்கு தெளியப்படும்.

ஒன்றான அனாதிநித்திய பதியே தன் அருளால் அனந்த ஆன்மப் பசுபாசங்களாய் விளங்கி, மனிதப் பிறப்பில் (மனிதனுக்கு) அருள் அறிவால் உணர்த்தினார். ஆனால், இவன் தன்னைப் பதிக்கு அயலாக, அழியுறும் தேகவடிவினனாக எண்ணி ஆண்டவர் அருளினைப் பெற்று, அவரில் ஒன்றுபட்டு, மறைந்திடவும் முயன்றான். அப்படியே ஆனான். இந்த ஒழியுறு முடிவைக் குறிக்கோளாகக் கொண்டு அடையவே, தெய்வ தெய்வீக, சமய மதக் கொள்கை கோட்பாடுகளை எல்லாம் தோற்று வித்தனர் ஆன்றோர். அவை கொண்டு இந்நாள்வரை மக்கள் சமுதாயம் இறை இயல் வாழ்வில் ஒன்றுபட்டு வாழாது போய்க் கொண்டுள்ளதாம்.

இரண்டு படாக் கடவுள் மனித உண்மை, அருட்ஜோதி யாக இருந்தும், அபக்குவத்தால், அருளை அகத்தும், ஜோதியைப் புறத்தும் கொண்டு, அகநிலை பெறப் புறத்தை நீத்து வாழ்வற்றுப் போனான். இப்போது தய வாய் பதிநிலையிற் பிரிவற இருந்து கொண்டே உள் ளிருந்தபடி செயல்படத் தயவு உதவுகின்றதாம். இத னால், சிந்தனையும் சொல்லும் செயலும் தயவு ஆற்றல் நிரம்பிட, உள்ளமும், உயிரும், உடம்பும் இறை இயல் நிறை இன்ப நிலையை அடையக் கூடியதாகின்றதாம்.

இந்தத் தயவு நெறிமுறையை, சுத்த சன்மார்க்கமாக வடலூர் வள்ளல், திரு அருட்பிரகாசர் வழங்கியுள்ளார். அவருக்கு ஆண்டவர் அருட்பெருஞ் ஜோதியாக உள்ள மாம் சத்தியஞான சபையில் வெளிப்பட்டார். நிறை அருள் வசத்தால், அவரோடிரண்டற இருப்பதை யுணர்ந்து, அகமிருந்த வண்ணம் அனக தயவு வாழ்வும் வழங்கப்பெற்றுவிட்டார். இத்தயவு நெறி முறையே மக்கள் இனம் முழுமைக்கும் பொருந்துவதாய்க் கண்டு இதுசமயம் உலகுக்கு வெளிப்படுத்துகின்றார்.

எனவே, உண்மையைப் புரிந்து கொள்ளாமல், பல தெய்வக் கொள்கைகளால் அவத்தையும் அழிவும் அடைந்துகொண்டுள்ள மன்பதை, இத்தயவுக் கொள் கையால், உண்மை கொண்டு ஒத்து வாழ்ந்து உயர் நலம் பெறுவது நிச்சயம்.

ஏகமாம் தயாபெருஞ்ஜோதியே எல்லாருக்கும் உரிய உண்மை ஆலயமாகவும், அதில் எழுந்தருளியுள்ள தனிப் பெருந்தயவுச் சுடரே பலரும் போற்றிக் கொண்டு உலகிலே தயவுச் செயலாகிய தெய்வ வழிபாடு ஏற்று நல் வாழ்வு பெறப்போவது திண்ணம்!

எல்லாத் தெய்வமும் உண்மையில் தயவு ஒளியாக இருக்கின்றது. ஒவ்வொருவரின் உள்ளமும் ஒரு தயவு ஆலயம்தான்! ஒவ்வொருவரும் தயவு உண்மை கொண்டவரே.

தெய்வத்தமிழ், தயவுப் புத்தொளி கொண்டு உலகம் எல்லாம் உய்ய எழுந்து பரவத் தொடங்குகின்றது.

தயா தெய்வ வேண்டுகை

தயாஒளி விளக்கே தயாபரஞ் சுடரே
தயாபெருஞ் ஜோதிஎன் அரசே
தயாவெளித் தலத்தே தயாமணி மன்றில்
தயாஅரி ஆதனத் தமர்ந்து
தயாமுறை விளங்கத் தயாநெறி யோங்க
தயாஅர சியற்பெருஞ் செங்கோல்
தயாஇயல் உண்மை தயாவறி வின்பம்
தயாவுல கெலாம் செலுத்துகவே.

தயவு

(தயாவிளக்க மாலை)

மறைமலை அடிகளார் வளர்த்த சைவம்

டாக்டர். திருமதி. சாரதா நம்பி ஆரூரன் எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி.

முன்னுரை

மறைமலை ஒரு பெரும் அறிவுச் சுடர்; தமிழ் நிலவு; சைவ வான். தமிழே சிவமாகவும், சிவமே தமிழாகவும் வாழ்ந்தவர். "தென்னாடு பன்னெடுங்காலம் தன்னை மறந்து உறங்கியது. அவ்வுறக்கம் போக்கிய பெருமை மறைமலை அடிகளுக்கு உண்டு. அவர்தம் தமிழ்ப் புலமையும், வட மொழிப்புலமையும், ஆங்கிலப் புலமை யும், ஆராய்ச்சியும், பேச்சும், எழுத்தும், தொண்டும் தென்னாட்டை விழிக்கச் செய்தன. தென்னாடு அடிக ளால் விழிப்புற்றது என்று மண்ணும் முழங்கும், மரமும் முழங்கும். அடிகள் பேச்சு பல பேச்சாளரைப் படைத் தது; எழுத்து, பல எழுத்தாளரை ஈன்றது; நூல், பல நூலாசிரியன்மாரை அளித்தது. அடிகளே தென்னாடு; தென்னாடே அடிகள்" என்று வாயார, மனமார அடி களாரைப் பாராட்டுகின்றார் தமிழ்த் தென்றல் திரு.வி.க.

அடிகள் வரலாறு

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே

என்ற திருமூலர் வழி நின்று தமிழ்த் தொண்டும் சிவத் தொண்டுமே தம் வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்தவர் அடிகளார்.

'கற்றார் பயில் கடல் நாகை'யை அடுத்துள்ள ஊர் காடம்பாடி. அவ்வூரில் வாழ்ந்த புகழ்பெற்ற அறுவை மருத்துவரான சொக்க நாதருக்கும், துணைவியார் சின்னம்மையாருக்கும் நீண்ட நாட்கள் மகப்பேறு வாய்க்க வில்லை. திருக்கழுக்குன்றம் சென்று ஒரு மண்டலம் நோன்பு நோற்று, அவ்விறைவனருளால் தாம் பெற்ற மகவிற்கு வேதாசலம் என்று பெயரிட்டனர். வேதாசலம் பிற்காலத்தில் துறவு நிலை நின்ற வழி 'சுவாமி வேதாசலம்' ஆனார். தனித்தமிழ் இயக்கம் கண்ட பின்னர் 'மறைமலை அடிகள்' என்று தம் பெயரை மாற்றி அமைத்துக் கொண்டார்.

விளையும் பயிர் முறையிலே

பிற்காலப் புலவர்கள் நன்னூல், இராமாயணம், பாரதம், ஏதேனும் சில புராணங்கள் இவற்றை மட்டுமே பயின்று வந்தனர். ஆயின், அடிகளார் தமது இளமைக் காலம் முதலே செந்தமிழ் இலக்கண இலக்கியங்களை முறையாகக் கற்கத் தொடங்கித் தம் இருபத்தொன்றாம் அகவைக்குள் கற்று முடித்த நூல்களை அடிகள் வாயிலாகக் காண்போம்:

"எமது பதினைந்தாம் ஆண்டில் முறைப்படி துவங்கிய தமிழ் பயிற்சியானது எனது இருபத்தோராம் ஆண்டிற்குள் தொல்காப்பியம், திருக்குறள், சிற்றம்பலக் கோவையார் என்னும் மூன்று நூல்களையும் முழுதும் நெட்டுருச் செய்து முடித்தோம்.

கலித்தொகை, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், நாலடி முதலிய நூல்களிற் பெரும்பகுதிகள் அங்ஙனமே நெட்டுருச் செய்து முடிக்கப்பட்டன.

சிவஞான போதம், சிவஞான சித்தியார் என்னும் நூல்கள் இரண்டும் முழுமையும் நெட்டுருச் செய்து முடிக்கப்பட்டன. இவையேயன்றி நன்னூல் விருத்தி, இறையனார் அகப்பொருள் உரை, தண்டியலங்காரம் முதலான நூல்களும் முன்னமே முழுமையும் நெட்டுருச் செய்து முடிக்கப்பட்டனவாகும்.

. . . இங்ஙனமாக விழுமிய தமிழ்ப்பழ நூல்களில் எமது கருத்து ஈர்ப்புண்டு நின்று பயின்ற பயிற்சியினாலேயே செய்யுளும், உரையும் தனிச் செந்தமிழ் நடையில் எழுதும் திறம் எமது இளமைப்பருவத்திலேயே எமக்கு வாய்ப்பதாயிற்று (திருவொற்றியூர் முருகர் மும்மணிக் கோவையின் முகவுரை) என்று அடிகளாரே கூறுவதிலிருந்து கற்றுப் புலமை நலம் முற்றிய திறம் கண்டு வியக்கின்றோம்.

அடிகளும் சைவமும்

தமிழும் சமயமும் தம்முள் ஒன்றோடொன்று பிரிப் பதற்கரியன என்று அடிகள் கருதினார். சைவம், தமிழ் இரண்டும் அடிகளின் இருகண்களாய், அவர்தம் பேச் சும் மூச்சுமாகத் திகழ்ந்தன. அடிகளாரின் சைவத்தில் வடமொழிக்கு முதன்மை கிடையாது; சாதி வேறுபாடு கட்கு இடமில்லை; புராணப் பொய்ம்மைகளும், மூடப் பழக்க வழக்கங்களும், போலிச் சடங்குகளும், பகுத் தறிவுக் கொவ்வாத பழமைக் கொள்கைகளும் அடிகளா ரால் கடிந்து ஒதுக்கப்பட்டன.

"அடிகளார் சைவம் வைதிகச் சைவமன்று, அறிவுச் சைவம்! சாதிச் சைவமன்று, சமரசச் சைவம்! ஆரியச் சார்புடைய சைவமன்று, அருந்தமிழ்க்குரிய சைவம்! புராண போலிச் சைவமன்று, வரலாற்றுண்மைச் சைவம்! அற்புத நிகழ்ச்சிச் சைவமன்று, ஆராய்ச்சி யுணர்வுச் சைவம்! என்று அடிகளாரின் தலைமாணாக்கர் முருகவேள் அடிகளைப் போற்றுகின்றார்

நாயகரும் அடிகளும்

அடிகளார் காலத்தில் சென்னையில் வாழ்ந்த சோம சுந்தர நாயகர் என்பவர் சைவசமயப் பற்றும், பிற சமயக் கொள்கைகளைச் சுழற்றியடிக்கும் திறமும் உடையவராய் வாழ்ந்து வந்தார். சேது நாட்டு வேந்தரால் "சைவ சித்தாந்த சண்ட மாருதம்" என்று விருது வழங்கப்பட்ட நாயகர் நாகைக்கு வந்தாற்றிய சொற்பொழிவுகளை அடிகளார் செவிமடுத்தார். இலக்கிய இலக்கணத் தேர்ச்சி மிக்க அடிகளைச் சமயத்துறையிலும் வல்லவராக்கியது நாயகரின் செற்பொழிவுகளெனில் மிகையன்று.

இந்நிலையில் நாயகர் எழுதிய சிலவற்றை மறுத்து 'ஏகான்ம வாதி' யொருவர் நாகையில் வெளியான 'ஸஜ்ஜனப் பத்திரிகா' என்னும் கிழமைத்தாள் ஒன்றில் எழுதியிருந்தார். அதனைப் படித்த மறைமலையடிகளார் நன்கு ஆராய்ந்து, நாயகர் கூறியதே சிறப்புடைத்தாதலையும், ஏகான்மவாதியின் கூற்றுப் பிழைபடுதலையும் 'நாகை நீலலோசனியில்' 'முருகவேள் என்னும் புனை பெயருடன் வெளியிட்டார். அதனைக் கண்ணுற்ற நாயகர் கட்டுரையின் நடையும், ஒட்டமும், கருத்து மாட்சியும் கண்டு வியந்தார்; கட்டுரை எழுதியவரைக் காண விழைந்தார்; கண்ணுற்றபோது அடிகளின் இளமைத் திறம் கண்டு வியந்தார். நாயகர் அடிகளைப் பலவகையானும் ஆராய்ந்து அவரது ஆழம் கண்டு வியந்து பாராட்டினார்!

அடிகளின் சைவ சித்தாந்த அறிவைப் பயன்படுத்த எண்ணிய நாயகர், சீகாழிச் சிற்றம்பல நாடிகள் அருளிச் செய்த துகளறுபோதம் என்னும் நூலைக் கொடுத்து உரை காணுமாறு பணித்தனர். நூறு செய்யுட்களை உடைய அந்நூலை நன்காராய்ந்து ஒப்பற்ற உரை எழுதினார் அடிகள். மிகுந்த நுட்பமும், சித்தாந்த தெளிவும், சொற்சுவை பொருட்சுவைகளும் சிறந்து காணப்பெற்ற அவ்வுரையைப் படித்த நாயகர், "இவ்வுரை சிவஞான முனிவர் உரையோடு ஒப்பது" எனப் பாராட்டினார். தம் செலவிலேயே அச்சிட்டு வெளியிட்டார்.

நாயகர் திருக்குறளின் முதற்பாவுக்குக் கூறிய உரை ஒன்றினை ஒருவர் மறுத்து 'முதற் குறள் வாதம்' என வெளியிட்டார். அதைப் படித்த அடிகள் முதற்குறள் வாத நிராகரணம் என்ற நூலை அதற்கு மறுப்பாக எழுத அதனையும் நாயகரே தம் செலவில் வெளியிட்டார்.

நாயகரின் மாணவரான ஜே.எம். நல்லசாமிப் பிள்ளை சைவ சித்தாந்த உண்மைகளைப் பரப்புவதற்காகத் திங்களிதழ் ஒன்றைச் சித்தாந்த தீபிகை அல்லது உண்மை விளக்கம் என்னும் பெயரில் ஆங்கிலத்திலும், தமிழிலும் வெளியிட விரும்பியபோது, அடிகளே அதற்குத் தக்க அறிவுடையவர் என்று கருதிய நாயகர் அடிகளாரைச் சென்னைக்கு வரவழைத்துச் சித்தாந்த தீபிகையின் தமிழ்ப்பகுதிக்கு ஆசிரியராக்கினார்.

அடிகளாரின் சமயப் பணி எனும் விளக்கொரிய தூண்டுகோலாய் அமைந்தவர் நாயகரவர்கள். தாயாய், தந்தையாய், தனிப்பேராசிரியராய் விளங்கிய சோம சுந்தர நாயகர் இவ்வுலக வாழ்வை நீத்தபோது அடிகளார் வடித்த கண்ணீரே, கையறு நிலைப்பாடலாக, சோம சுந்தரக் காஞ்சியாக உருவாயிற்று!

மறைமலையடிகளின் சமயப் பணி எழுத்து, பேச்சு இரண்டாலும் பொலிந்தது. அவருடைய ஆராய்ச்சி நூல்களுள் பல அடிகள் நிகழ்த்திய விரிவுரைகளேயாகும்.

அடிகளின் சொல்லாற்றல்

நாநலம் என்னும் நலனுடைமை அந்நலம்
யாநலத் துள்ளதூஉம் அன்று

என்பதற்கேற்ப அடிகள் நாநலம் உடையவராய்க் கேட்டார்ப் பிணிக்கும் தகையராய்க் கேளாரும் வேட்ப மொழியும் திறலினர். கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவர் த.வே. உமா மகேசுரம் பிள்ளை அவர்கள் கரந்தைக் கட்டுரையில் குறிப்பிட்டது போல, தமிழில் விரிவுரை நிகழ்தும் நெறிமுறைகளை வகுத்துப் பண்படுத்தி வளர்த்தவர் மறைமலையடிகளே!

தமிழகத்தில் மட்டுமன்றி சைவ சமய சொற்பொழிவுகளுக்காக வடநாடு முழுவதும் சென்று கல்கத்தா, காசி, அரித்துவாரம், துரோணாசிரமம், டில்லி, மதுரா, பம்பாய், சிகந்தராபாத்து முதலான பற்பல நகரங்களிலும் ஆங்கிலத்தில் விரிவுரைகள் நிகழ்த்தி ஆரிய சமாசத்தார், பிரம சமாசத்தார் முதலானோர் வியப்பும், மயக்கும் எய்தும் வண்ணம் சைவ சித்தாந்த தத்துவத்தின் மேன்மையும், தமிழ் மொழியின் சிறப்பும் விளங்குமாறு செய்தார் அடிகளார்!

சைவ சித்தாந்த ஞான போதம், கடவுள் நிலைக்கு மாறான கொள்கைகள் சைவம் ஆகா, பழந்தமிழ்க் கொள்கையே சைவ சமயம், தமிழர் மதம் போன்ற அடிகளாரின் ஆராய்ச்சி நூல்கள் பலவும் ஆங்காங்கு அடிகள் நிகழ்த்திய விரிவுரைகளேயாகும். கடல்கடந்து யாழ்பாணத்திற்கும் சென்று சைவம் தழைக்கச் செய்தவர் அடிகளார்!

சமய உணர்வும் அடிகளாரும்

அடிகளார் எல்லாம் வல்ல முழுமுதற்கடவுளாக அம்பலவாணரை மட்டுமே ஏற்றுக் கொண்டவர்; 'உள்ளேன் பிற தெய்வம் உன்னையல்லால் எங்கள் உத்தமனே' என்ற மணிவாசகர் நெறியில் நின்றவர்; சிறு தெய்வ வழிபாட்டையும், உயிர்ப் பலியையும் கடிந்தவர். சமுதாயம் நன்னெறியில் உய்வதற்குச் சமய உணர்வு இன்றியமையாதது என்பது அடிகளார் கருத்தாகும்.

"சமய உணர்ச்சி சிலர் மட்டும் விரும்பக் கூடிய அலங் காரப் பொருளன்று. மக்களை விலங்கினின்று பிரித்துத் தெய்வமாக்குதற்கு இன்றியமையாது வேண்டப்படும் சத்தியாம் அது (சைவ சமயத்தின் தற்கால நிலை, ப.17) என்று சமய உணர்வின் தேவையை வலியுறுத்துகிறார் அடிகளார்.

சைவ சமயம் முக்காலத்திற்கும், எந்நாட்டினர்க்கும். பொருந்தும் சமயமென்பது அடிகள் கருத்து. இந்நூற் றாண்டில் ஒரு சமயமானது மக்கள் வாழ்க்கையில் கலந்து, அதை எல்லாத் துறைகளிலும் பண்படுத்த வேண்டுமாயின் அது சில கொள்கைகளைப் பெரிதும் வற்புறுத்துவதாயிருக்கவேண்டும். அவையாவன: அன்பு வடிவாம் கடவுள் ஒருவரே; அவரால் படைக்கப் பட்ட உயிர்களெல்லாம் சகோதரர்கள்; மக்கள் செய்யும் நன்மை தீமைகள் தத்தம் பயனைத் தந்தே தீரும், தீமையால் துன்பம் வருவது போல நன்மையால் இன்பம் தேடிக் கொள்ளலாம்; இடவேற்றுமை, மொழி வேற் றுமை, நிற வேற்றுமை, சமய வேற்றுமை கருதாது மன்னுயிர்கள் உற்ற துன்பினைத் துடைத்தல் வேண்டும் என்பனவாம்.

இக்கொள்கைகளனைத்தும் சைவத் திருவாளர்கள் திருவாக்கில் காணப்படுகின்றன. 'அன்பே சிவம்' ; நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்; எவ்வுயிரும் நீங்காது உரையும் இறை சிவனென்று எவ்வுயிர்க்கும் அன்பாயிரு, எவ்வுயிரும் என்னுயிர் போலெண்ணி இரங்க நின் தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே, என்ற ஆன்றோர் வாக்குகள் எல்லா உயிரிடத்தும் அன்பா யிருத்தலையே வலியுறுத்துவதால் சைவம் எல்லோர்க் கும் உரிய சமயமென்று அடிகளார் கருதுகிறார். (சைவ சமயத்தின் தற்கால நிலை, ப. 19, 20)

வள்ளலாரும் அடிகளாரும்

வள்ளலார் பாடிய பாடல்களை அருட்பா எனல் கூடாது என்பது ஒருசாரார் கருத்து. அருட்பாக்களை மருட்பா என்று கூறி கிளர்ச்சி செய்த அணிக்குப் பெரும்புலவர் கதிரைவேலர் தலைமை தாங்கினார். வள்ளலார் வழிக் கூட்டம் அடிகளாரைத் தலைவராகக் கொண்டது. சிந்தாதிரிப்பேட்டையில் பொதுமக்களும், அறிஞர் பெருமக்களும் நிறைந்த அவையில் அடிகளுக் கும், கதிரை வேலருக்கும் சொற்போர் நடந்தது; வென்றது அருட்பாவே! தொடர்ந்து பல இடங்களிலும் வள்ளலார் கருத்துக்களைப் பரப்பி அவை மருட்பா அல்ல என்று நிரூபித்துக் காட்டினார் அடிகள். வள்ள லார் மீது தாம் கொண்ட ஈடுபாட்டால் பல்லாவரத்தில் சமரச சன்மார்க்க சங்கம் (பொது நிலைக் கழகம்) ஏற்படுத்தி வள்ளலார் கருத்துக்களைப் பரப்பினார்.

சைவசித்தாந்த மகா சமாஜம் நிறுவல்

சிவநெறியின் பெருமையை யாண்டும் பரப்பவேண்டு மென்று அடிகள் விரும்பினார். அவ்விருப்பத்தின் பயனாக 7,7,1905 இல் திருப்பாதிரிப் புலியூர் ஞானியாரடிகள் முன்னிலையில் சைவசித்தாந்த சமாஜம் தோன்றியது. ஆண்டு விழாக்கள் சிதம்பரம், நாகை முதலிய இடங்களில் சீரும் சிறப்புடனும் நடைபெற்றன.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்

அறிவு நூல்களை வெளியிட வேண்டும் என்பதற்கா கவே அடிகளாரின் மருமகனார் திருவரங்கர், அடிக ளார், நெல்லைவாழ் சைவ அன்பர்கள் முயற்சியுடன் திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம் லிமிடெட் என்னும் பெயரால் 21.9.20இல் திருநெல்வேலியில் பதிவு செய்யப்பட்டது. இக்கழகம் சைவத்திற்கும் தமிழுக்கும் இன்றளவும் ஆற்றி வரும் பணி அனைவரும் அறிந்ததே.

அடிகளாரின் ஆங்கில வெளியீடுகள்

அடிகளின் சைவ சித்தாந்தக் கருத்துக்களைத் தாங்கி '(கீழ் நாட்டு மக்கள் மனக் கவர்ச்சி) The Oriental mystiemyna– என்னும் ஆங்கிலத் திங்கள் வெளியீடு 1908–1909இல் வெளிவந்தது. பிரிட்டன், பிரான்ஸ், செருமனி, ஆத்திரியா, அமெரிக்கா முதலிய நாடுகளுக்கெல்லாம் சென்ற இவ்விதழ் குறுகிய கால அளவில் நின்றுவிட்டது.

The Ocean of wisdom (அறிவுக்கடல்) என்னும் மற்றோர் ஆங்கில வெளியீடு ஒன்றை அடிகள் 1935 முதல் இரண்டு திங்கட் கொருகால் பருவவெளியீடாக வெளியிட்டு வந்தார். இது பற்றி அடிகள் தம் முற்காலப் பிற்காலத் தமிழ்ப் புலவோர்' என்னும் நூலின் முகவுரையில் கூறுவதாவது.

"செந்தமிழ் மொழியிலும் சைவ சித்தாந்தத்திலும் பொதிந்து கிடக்கும் அரும் பெரும் பொருள்களை இவ்வுலகமெங்கணுமுள்ள அறிஞர்கள் தெரிந்து நலம் பெற வேண்டி அவையிற்றை யாம் ஆங்கில மொழியில் எழுதி இரண்டு திங்கட்கு ஒருகால் ஒரு வெளியீடாகச் சென்ற ஒன்றரையாண்டுகளாக வெளியிட்டு வருகி றோம்" என்கிறார்.

ஒழுக்கமும் இறையுணர்வும்

மக்கள் இறை நம்பிக்கை உடையவர்களாக இருந்தால் ஒழுக்கம் தானே இயல்பாய் வருமென்பர் அடிகளார். "மக்களாகிய நாம் கடவுளுணர்ச்சியுடையராய் அக்கடவு ளிடத்து அன்பும் அச்சமும் உடையராய் ஒழுகினாலன்றி நாம் நல்லொழுக்கத்தில் பிறழாது நிற்றல் இயலாது" என்பது அடிகள் கொள்கை. (கடவுளுக்கு மாறான கொள்கைகள் சைவம் ஆகா–ப,. 52, 53)

"வஞ்சமனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்"

"வஞ்சித் தொழுகும் மதியிலிகான் யாவரையும்
வஞ்சித்தோ மென்று மகிழன்மின் – வஞ்சித்த
எங்குமுள னொருவன் காணுங்கொல் யென்றஞ்சி
அங்கங் குலைவ தறிவு"

போன்ற பாடல்களில் நம் சைவ ஆசிரியன்மார் எல்லாம் வல்ல இறைவனைச் சான்றாக வைத்து நல்லொழுக்கங்களை அறிவுறுத்தியுள்ளதால் சைவமே நடைமுறைக்குப் பொருத்தமானதென்பர் அடிகளார்.

அடிகளின் நடுநிலைமையும் அஞ்சாமையும்

காய்தல் உவத்தல் அகற்றி ஒரு பொருட்கண் நடுநிலை யாளராய் ஆய்தல் உடைய அடிகளார் சிவநெறியின் கண் தாம் பெரிதும் ஈடுபாடுடையராயிருந்தும் பிறர் எதிர்ப்புக் கஞ்சாது பல உண்மைகளை ஆராய்ந்து கூறினார். யானை முகப்பிள்ளையார் பற்றிய கதைகளனைத்தும் சைவத்துக்கு முற்றும் மாறானவை என்று கடிந் தொதுக்குகிறார் அடிகளார். யானையின் முகமும், அம்முகத்திலிருந்து தொங்கும் தும்பிக்கையும் வட்ட வடிவும், வரிவடிவும் சேர்ந்த ஓகார வடிவாயிருத்தலின் அவ்ஒலி வடிவில் நிற்கும் கடவுளை யானை முகமுடைய வராக வைத்து வழிபடுகிறோம் என்கிறார். (கடவுளுக்கு மாறான கொள்கைகள் சைவம் ஆகா ப. 73) கந்த புராணத்தில் சொல்லப்படும் முருகன் பிறப்பு பற்றிய கதை அறிவாராய்ச்சிக்குப் பொருந்துவதன்று. தடா தகைப் பிராட்டியார் கதையும் இறைவியைப் பற்றிய தன்று என்று இதே நூலில் தர்க்க முறையில் ஆராய்ந்து கூறுகிறார்.

பெரிய புராணத்தின் கண்ணும் சேக்கிழாரிடத்தும் அடிகள் பெரிதும் மதிப்புடையவராயினும் சேக்கிழார் கூற்றையும் மறுக்கின்றார். இறைவனிடத்துத் திருமுகப் பாசுரம் பெற்றவரும், இறைவன் திருவடிச் சிலம் போசை கேட்டவரும் சுந்தரர் காலத்திருந்த கழறிற்றறி வாராய சேரமான் பெருமாள் அல்லர், அவர்க்கு முன்னி ருந்தார் வேறொருவர் எனவும், சுந்தரர் கைலையில் இரு பெண்களைக் காதலித்து அதன் விளைவாக மண்ணுல கில் தோன்றினாரெனல் அறிவாராய்ச்சிக்குப் பொருந்து மாறில்லை எனவும், பெரிய புராணத்தில் இடைச் செருகல்கள் பல நிகழ்ந்துள்ளன எனவும், பொய்யடிமை இல்லாத புலவர் என்றும் சுந்தரர் குறிப்பிட்டது மணிவாசகரையேயாம் என்றும் தம் ஆராய்ச்சிகளால் நிறுவியுள்ளார்.

பொய்ப்பால பொய்யேயாய்ப் போயின பொய் அல்லாத
மெய்ப்பால மெய்யாய் விளங்கினவே

எனும் வண்ணம் முதன் முதலாக அடிகள் மிகத் துணிவோடும், நடுவு நிலையோடும், ஆராய்ந்து கூறியுள்ள முறை வியத்தற்குரியது!

சைவசமயம் பற்றி அடிகளார் கருத்து

சைவ சமயத்தின் வழிபாட்டு உண்மைகளையும், மெய்யுணர்வு மேன்மைகளையும் தனித்தமிழில் தந்த பெருமையாளர் அடிகளார்.

இறைவனை உண்மையாகவும், பேரறிவாகவும் பேரின்பமாகவும் கண்ட சமயம் சைவ சமயமாகும். எப்பொருளையும் கடந்து நிற்கும் கடவுளின் முழுமுதல் தன்மையை ஆராய்ந்தறிந்த நிலையே சைவ சமயமாகும். (சைவ சித்தாந்த ஞானபோதம். ப. 106)

தமிழிலும் வடமொழியிலும் சிவம் என்னும் சொல், மகிழ்ச்சி, அன்பு, இன்பம் என்ற பொருள்களிலேயே வழங்குதலால் அது முழுமுதற் கடவுட் பெயராக அமைதல் பொருத்தமேயாகும். உயிர்களின் துன்பம் துடைக்கும் இயல்போடு, இன்ப உருவினனாகவும் கடவுளைக் காணும் சைவ சமயமே மாட்சி மிக்கதாகும் (சை. சி. ஞா. ப. 25)

இறைவன் திருவுருவங்களில் அம்பலவாணர் அம்மை திருவுருமே மிகச் சிறந்தது. ஏனென்றால் தோற்றம், நிலை, இறுதி, மறைப்பு, அருள் என்னும் ஐந்தொழில் களும் உயிர்களிடத்தும் உலகங்களிடத்தும் ஓவாது நடை பெறுமாறு செய்யும் இறைவனது ஐந்தொழில் ஆட்டத் தைக் காட்டுவது அம்பலவாணரம்மை திருவுருவமே (தமிழர் மதம், ப. 213)

சிறு தெய்வ வழிபாடொழிப்பும், உயிர்க் கொலை யொழிப்பும், ஊனுணவு ஒழிப்பும் சிறந்த தெய்வக் கொள்கைகளாகும். (தமிழர் மதம், ப. 268)

தமிழர் சடங்குகள் தமிழிலேயே நடத்தப்படுதல் வேண்டும், தமிழர் கோயில் வழிபாடு தமிழிலேயே நடத்தப்படல் வேண்டுமென்பன அடிகளாரின் உயிர்ப் பான கொள்கைகளாகும்.

வாய்ச் சொல் வீரராக இல்லாமல் தம் கொள்கை களைத் தாமே வழி நடத்திக் காட்டினார் அடிகளார். தம் பொது நிலைக் கழக மாளிகையில் அம்பலவாணர் திருக்கோயில் அமைத்தபோது, வடமொழிக்கு மாறாக நால்வருடைய தமிழ் மறைகளை ஓதி தாமே குடமுழுக்கு விழாவை நடத்தினார். அனைவரும் தத்தம் கரங்களால் இறைவனுக்கு மலர் சொரிந்து வழிபட்டு, திருநீற்றையும் தாமே எடுத்து அணிந்து கொண்டனர்.

தமிழ் மொழி சீர்கேடுற்று, சைவ நெறி தாழ்வுற்றிருந்த காலத்தில் வீறு கொண்ட ஞாயிறென மறைமலையடி களார் தோன்றினார். அஞ்சா நெஞ்சம் அசையா ஊக்கமும் உடைய அடிகளார் தம் எழுத்துக்களாலும் சொற்பொழிவுகளாலும் தமிழுக்கும் சைவ சமய வளர்ச்சிக்கும் ஆற்றிய பணி போற்றுதற்குரியதாகும்!

மோனத்தின் பயன்

(பசும் பொற்கிழார் - பாளையங்கோட்டை.)

மோனம்

'மௌனம்' என்பதே 'மோனம்' என்பதாம். மவுனம், அக மவுனம் (மோனம்) புற மவுனம் என இரு வகையாகப் போற்றப் படுகின்றன. அக மவுனம் என்பது, மன மவுனம். புற மவுனம் என்பது உடல் மவுனம். அதாவது, உடல் உறுப்புக்கள் தத்தம் நிலையில் அமைதியாக இருத்தல். முதற்கண், வாய் பேசாதிருத்தல் இதையே பெரும்பாலும் 'மவுனம்' எனப் போற்றுகிறார்கள். அது மட்டும் முழு மவுனம் ஆகுமா? வாய், தன் பேச்சை நிறுத்தினால் மட்டும் போதாது. மவுனத்தின் குறிக்கோளுக்கு மாறான வற்றைப் பருகவோ, தின்னவோ, உண்ணவோ, சுவைக்கவோ, புகைக்கவோ கூடாது. அதே போல், கண்களும், செவிகளும், கைகளும், கால்களும் பொதுவாக மெய்யும் (உடம்பும்) மவுனத்தின் குறிக்கோளுக்கு மாறான செயல்களைச் செய்யக் கூடாது. இவ்வாறு, உடல் உறுப்புக்கள், தத்தம் நிலையில் திரியாது அடங்கியிருத்தலே புற அடக்க முடைமையாகும். இதுவே, புற மோன மாகும். இப்புற மோனம் எந்த அளவிற்கு மெய்ம்மையாகச் செயல் படுகிறதோ அந்த அளவிற்குப் பயன் உண்டு.

''வெள்ளத்தனைய மலர் நீட்டம் மாந்தர் தம்
உள்ளத் தனைய(து) உயர்வு.''

மனமோனம்:

இனி, மன மவுனம் பற்றிச் சிறிது பார்ப்போம். மனத்தை மவுனப் படுத்தும் போது உடல் உறுப்புக்களும் கட்டுப்பட்டே தீரும். மன மோனத்தின் பயன், மனத்துக்கண் மாசு இல்லாமல் இருத்தலே. அவ்வாறு மாசு என்னும் அழுக்கை உடனடியாகப் போக்க முடியாது. சன்னஞ் சன்னமாகத்தான் போக்க இயலும். நம் தமிழ் மறையாரும் 'அவா' என்னும் அழுக்கைப் பற்றிச் சொல்ல 'அவா அறுத்தல்' - என்று தலைப்பைத் தந்ததைப் பார்த்தால், அறுத்தல் - அறுப்பது, உடனே துண்டிப்பது போன்ற தன்று. படிப்படியாய் அறுத்துத் துண்டிப்பதாகும் வினை.

எனவே, மனத்தின் அழுக்கிற்கு அடிப்படையே அவாதான். அவாதான் தவாப் பிறப்பீனும் வித்து. அப்படிப்பட்ட அழுக்கை அறுத்த பின்னர்தான் அம்மனம் மோனத்தில் உறையும். அவ்வாறு மோன நிலையில் (பற்றற்ற நிலையில்) உள்ளவர்கள் வனத்தகத்தில் தான் இருப்பர் என்பதில்லை! வெளி உலகத்தார் இடையிலேயும் இருப்பர். ஆயினும் அவர்கள் உண்ணாது நோற்கும் பெரியராய் இருப்பர்! ஆனால் அவர்கள் காண்டற்கு அரியராய் இருப்பர்.

அப்படிப்பட்டவர்கள் காட்சிக்கு எளியராய், கடுஞ்சொல் அல்லராய், அறிவின் மாட்சிக் குரியராய், இரவோர் போலும், பித்தர் போலும் கூட நடமாடுவர். அவர்களில் ஓரிருவர், ஆன்ம ஒளி ஆற்றலால் மகளிரையும் ஈர்க்கவும் கூடும். அதனால், மகளிர் தம் வலியுறுத்தலுக்கு ஆட்படவும் கூடும். ஆயினும் அவர்கள், தம் மனத்தகத்து அழுக்கறுத்த மவுன ஞான யோகிகளாகவே இருப்பர்! போகியாக மாட்டார்!

உண்மையான மோன நிலை நிலைக்கத் தவம் உடற்றியவர்கள் மோரில் மிதக்கும் வெண்ணெய் உருண்டையைப் போல் உள்ளவர்கள். மோரினுள் கலந்திருந்த வெண்ணெய் மத்தினால் எவ்வாறு கடையப் பெற்று உருண்டு திரண்டு பக்குவமாக உருட்டப்பட்ட அவ்வெண்ணெய் மீண்டும் மோரில் ஒன்றுவதில் லையோ அதுபோல உண்மையான மவுனஞான யோகியர் வெளியுலகில் தோய்ந்து காணப்பட்டாலும் அவர்கள் அவர்களே! இதை,

''மனததகத்(து) அழுக்கறுத்த மவுனஞான யோகிகள்
முலைத்தடத்தில் இருக்கினும் மவுனஞான யோகியே
மனத்தகத்து அழுக்கறாத மவுனஞான யோகிகள்
வனத்தகத்(து) இருக்கினும் மனத்தகத்து அழுக்கறார்.''

என்ற சிவ வாக்கியர் பாடலும் கூறும்.

''அவரவர்தம் மனமே, உண்மையான குரு வாகும்! அதுவே காரண குருவாகும். வழி காட்டிக் கொடுப்போர் காரிய குரு'' என்பார், சித்த சமாஜ நிறுவகர் தந்தை சிவானந்த பரம அம்சர் அவர்கள்.

மோனநிலை:

மன அடக்க நிலையே மோன நிலை. மன அடக்கத்தின் பயன்? அமரருள் உய்க்கும் ஆற்றலைத் தருவது. அவ்வாற்றலே அடக்கமுடைமையின் அணி. மனமது அடங்குதல் என்பது, தூங்காமல் தூங்கும் தூயநிலை. அந்நிலைதான், பற்றற்றான் பற்றினைப் பற்றிய நிலை! அந்நிலையில் உள்ள அறிவே, மலர்தலும், கூம்பலும் இல்லாத அறிவு நிலை! அவ்வறிவே எப்பொருளிலும் மெய்ப்பொருள் காணும் மேலான அறிவு நிலை! எதிலும் காய்தல், உவத்தல், அகற்றி ஆயும் அறிவுநிலை. ஊழையும் உப்பக்கம் காணும் உயர்நிலை! இடும்பைக்கு இடும்பை படுக்கும் ஈடிலா நிலை! அடுக்கி வரினும் அழிவிலா உளநிலை. அஞ்சாமையை இயல்பாகக் கொண்ட அரியநிலை! விழுச் செல்வமாகிய வேண்டாமையைப் பெறும் பயனை மோன நிலைதரும். இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யும் இயல்பைத்தருவது மோன நிலை! இடுக்கண் வருங்கால் இனிய நகையாலே வெல்லும் இங்கித நிலையே மோன நிலை!

மோனத்தின் வழியில்தான் ஞானத்தைப் பெற்றனர் சித்தர்கள். 'தியானம்' என்பதும் மோனமே! ஆம்! மன மோனமே 'தியானம்' மனம் எப்பற்றுமில்லாத நிலை உறக்கநிலை. ஆம். உறக்கநிலைதான் பொதுவாகப் பற்றற்ற நிலை. அந்நிலையைப் பெற எந்தப் பயிற்சியும் தேவையில்லை! இயல்பாகவே இரவு வரவும் உறக்கம் வருவது இயல்பு. அவ்வுறக்கத்தைத் தடுத்து, பலர் தொடர்ந்து அலுவல் புரிந்தாலும், அடுத்து அலுப்புத்தீர உறங்குவார்! அவ்வுறக்கம் இல்லையானால், மூளைக்குத் தெளிவு வருவதில்லை.

ஏதோ, கிரக்கமாகவும், சிறு மயக்கமாகவும், முகத்தில் தெளிவு இல்லாமலும், சோர்வும் ஏற்படும்! இதைச் சற்று ஆராய வேண்டும். வெளிஉறக்கம் கொள்ளும்போது, மனம் பற்றுக்களி லிருந்து ஓய்வெடுத்துத் தனித்து அமைந்துள்ளது. அப்போது,

மனத்திற்கு வேண்டுதலும் இல்லை. வேண்டாமையும் இல்லை. உடலும், சாக்காட்டுப் பிணம் போல் கிடக்கிறது! அப்போது, உயிர் உண்டா? இல்லையா? என்றால் உயிர் உண்டு. அதன் சார்பான உள் மூச்சும் உண்டு. ஆனால், மனம் புறப் பற்றுக்களிலிருந்து ஓய்வு எடுத்துத் தனித்து இருக்கும்போது மட்டுமே உள் மூச்சுக் காற்று நேராகச் சுழிமுனை நாடி வரை செல்கிறது. அப்போது அதற்கு ஓசையும் உண்டு. அது மேலும் கீழுமாய்ப் போக வர இருக்கும்போது, அதன் பெயர் 'வாசி' என்பர். வாசி என்னும் வா - நெடில் 'வசி' என்னும் வ - குரல் நெடிலாகியது. அறு - ஆறு - எழு - ஏழு ஆவது போல, வாசி வசித்தலுக்குரியதாம். அவ்வாறு, சுவாசிப்பதே வசிப்பதாகுமாம். உறக்கம் விழித்தலும் அவ்வாசி, நாசி (மூக்கு) வழியாக நசிக்கின்றதாம். அது நசிக்கும் இடம்தான் நாசி என்ப.

மோன நிலையைத் தருவது, பொதுவாகவுள்ள புற உறக்க நிலை. அதுவும் மோனத்தைத் தருகிறது. ஆனால், அது, இயலாத ஒருவன் பொறுமையுடையவனாய் இருப்பது போன்றதாகும்.

இனி, விழித்திருக்கும் போதே தன் மனத்தை, புறப்பற்றுக்களிலிருந்து, நீக்கி, பற்றற்றானின் பற்றைப்பற்றி, இயல்பாகும் நோன்பிற்கு ஒன்றின்மை - என்ற தமிழ் மறைக்கேற்ப ஒரு சிறு பற்றும் மனத்தில் இடம் பெறாமல், மனத்தைச் சும்மா இருக்கப் பழக்குவதே மேலான வழி பாடாகும்.

அவ்வழியைப் பலரும் பல முறைகளில், பலவகை வழிபாட்டுக் கலைகளில் பெற முயல்கின்றனர். அதற்காகப் பலர்க்கு, அரிய பெரிய பக்தித் தலங்களும், பெரிய ஆலயங்களும், பொருட் செலவுடைய வழிபாடுகளும் (பூசை ஆராதனைகளும்) தேவைப்படுகின்றன. ஆனால், ''உள்ளம் பெருங்கோயில், ஊனுடம்பு ஆலயம், தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவனே சிவலிங்கம்'' என்னும் திருமூலர் கருத்துப்படி.

நம் உடம்பையே கோவிலாக்கி, நம் சீவனை (உயிர்க்காற்றை) சிவமாக்கி அதை விழித்துக்கொண்டே வாசித்து (சித்த வித்தை செய்து) அதனால் மனத்தை சுழி முனையிடத்திலேயே உறங்க வைத்துப் பழக்கலாம். அப்போது மனம் மோனத்தில் ஆழ்கிறது. அப்போது ''ஆழ்நிலைத் தியானமாகிறது.'' அம்மோன நிலையை அடிக்கடி துய்க்கும் போது, அல்லவை தேயும்! அறம் பெருகும்! ''அறவினை யாது? எனில், கொல்லாமை!'' என்பது முப்பாலர் வினாவிடை. அறம் பெருகும் என்பது உயிர் ஆற்றல் பெருகும்! என்பது. அவ்வாற்றல் மோனத்தால் ஏற்படுவது. மோன ஆற்றலைப் பெறுவதே செயற்கு அரிய செயல்! அச்செயலின் பயன், கூற்றமும் குதித்தோடச் செய்யவல்ல ஆற்றலாம்!

பஞ்சாங்க நமஸ்காரம் என்பது, ஐந்து உறுப்புக்கள் நிலத்தில் படட வணங்குவது. ஐந்து உறுப்புக்களாவன; தலை ஒன்று, கை இரண்டு, முழந்தாள் இரண்டு, எனவே, பஞ்சாங்க நமஸ்காரத்தில் மார்பு, வயிறு முதலியன நிலத்தில் படவேண்டுவது இல்லையாம். ஆடவர்கள் 'அட்டாங்கம், பஞ்சாங்கம்' என்னும் இரு நமஸ்காரங்களைள யும் செய்தற்கு உரியர். பெண்டிர், பஞ்சாங்க நமஸ்காரம் ஒன்றுமே செய்தற்கு உரியர்.

— ''சிவாலய தரிசன முறை''

இருகைகளையும் குவித்துச் சிரசிற்கு மேலாயினும், முகத்திற்கு - மார்பிற்கு நேராகவாயினும், வைத்துக் கும்பிடுதலும், தலை வணங்குதலும், நமஸ்காரமே யாகும். ஆயினும், ''நமஸ்காரம்'' என்று சிறப்பித்துச் சொல்லப்படுவன, நிலத்திலே வீழ்ந்து வணங்குவனவாகிய அட்டாங்க பஞ்சாங்க நமஸ்காரங்களேயாம். இவைகளை எப்பொழுதும் கோயிலின் உட்புறத்திலே செய்யலாகாது; வெளியிலேதான் செய்தல் வேண்டும். ஏனெனில், உட்புறத்தில் எப்பக்கத்திலும் மூர்த்திகள் இருப்பார்கள். ஆகையால் எந்தத் திசையில் கால் நீட்டினாலும் குற்றாம். அதனால் உட்புறங்களில் கும்பிடும் தலை வணக்கமுமே செய்தற்குரியன.

— ''சிவாலய தரிசன முறை''



ஆண்டாள் அருளிய அமுதத் தமிழ்

(பேராசிரியர். டாக்டர். இரா. நாகு. எம்.ஏ., பிஎச்.டி)
தமிழ்த் துறை தலைவர். மாநிலக்கல்லூரி, சென்னை-5.

தமிழ் இலக்கிய வரலாற்றில் ஆழ்வார்களும் நாயன்மார்களும் இசை நிறைந்த பாடல்களால் இறைவனை ஏத்திப்பாடிய காலத்தைப் பக்திக்காலம் என்பர். மானுடர்தம் வீரத்தையும் காதலையும் மகிழ்ந்து பாடித் தமிழுக்கு வளமூட்டிய காலமாகச் சங்க காலம் திகழ்ந்தது. சங்க காலத்திற்குப் பின்னர் வந்த பக்திக் காலத்திலோ மானுடத்தை மகிழ்ந்து பாடும் போக்கு மாய்ந்து 'ஏழிசையாய் இசைப் பயனாய்' விளங்கும் இறைவனைப் பாடும் போக்கு நிலைபெற்றது. மன்னா இம்மனுசனைப் பாடிச் செறிவுடை நடையோடு செம்மாந்திருந்த தமிழ் பக்திக் காலத்தில் கனிவுடை நடையொடு களிநடம் புரியத் தொடங்கியது; பக்திக் காலத்தில் கடவுள் மீது காதலாகிக் கசிந்துருகிக் கண்ணீர் மல்கிப் பாடிய பாடல்களால் தமிழின் பரப்பு விரிந்தது; புதுவகை இலக்கியங்களும் புதுப்புது இலக்கிய உத்திகளும் இலக்கிய வகைகளும் தமிழுக்குப் புதுவரவாய் அமைந்தன. வடவேங்கடம் தென்குமரிக்குள் மண்டிக்கிடந்த தமிழ், தன் ஆட்சி எல்லையை விரிவாக்கி இந்தியாவெங்கும் காலூன்றத் தொடங்கியது. பாடு பொருளாலும் பாடும் முறையாலும் பாடும் நெறியாலும் பக்திக் காலத் தமிழ், தமிழுக்குள்ள பார்வையை உலகளாவியதாக மாற்றம் பெறச் செய்தது; அதனால், தமிழ் இலக்கிய வரலாற்றில் பக்திக் காலத்திற்கு ஒரு தனி இடம் ஏற்படலாயிற்று எனலாம்.

பக்திக் காலத் தமிழைப் பாங்குடன் வளர்த்தவர்கள் ஆழ்வார்களும் நாயன்மார்களுமே யாவர். திருமால் நெறி நின்று தீந்தமிழ் பாடியவர்கள் ஆழ்வார்கள்; அவர்கள் பரந்தாமன் புகழ் பாடிப் பக்திச் சுவை தந்தவர்கள்; நாரணற்கு ஆள்பட்டு ஞானத்தமிழ் புரிந்தனர். சித்தம் அழகியராய்ச் சிவன் நெறி நின்று நித்தம் தமிழ் பாடிப் பெருமை பெற்றவர்கள் நாயன்மார்கள்; அவர்கள் காதலாகிக் கசிந்துருகிப் பாசுரங்கள் பல பாடியவர்கள்.

இந்த ஆழ்வார்களும் நாயன்மார்களும் பொன்னும் பொருளும் போகமும் வேண்டாது இறைவனின் அன்பையும் அருளையுமே வேண்டிப் பாடினர். அவர்தம் பாடல்களால் பக்தி சுரந்தது; பண்பாடு சிறந்தது. அவர்தம் செய்கையால் தமிழுக்குப் புது இலக்கிய வகைகள் புதுவரவாய் அமைந்தன; அப்புது வரவுள் ஒன்றுதான் பாவை இலக்கியமாகும். ஆழ்வார்களுள் ஒருவரான ஆண்டாள் திருப்பாவை தந்தாள்; நாயன் மார்களுள் ஒருவரான மாணிக்க வாசகர் திருவெம்பாவை தந்தார். இவர்தம் செய்கையால் பாவை இலக்கிய வகை தோன்றக் காரணமாயிருந்தது.

உயர்வற உயர்நலமுடைய இறைவனைப் புகழ்ந்து மயர்வற மதிநலம் அருளப் பெற்ற ஆழ்வார்கள் பாடிப் பரவினர். அவ்வாழ்வார்களுள் ஒருவர் ஆண்டாள்; அவள் அருளியது திருப்பாவை; அத்திருப்பாவை மிக்க சிறப்பு வாய்ந்தது; அப்பாவைக்குத் தனித்ததொரு ஏற்றம் உண்டு; அதனுள் முப்பது பாடல்கள் உண்டு; அப்பாடல்கள் முப்பதும் பாதகங்கள் தீர்த்துப் பரமனடி காட்டும் பண்புடையன; அப்பாடல்களோ வேதமனைத்திற்கும் வித்தாகத் திகழ்பவை. இராமானுசருக்கு அப்பாடல்களில் மிக்க ஈடுபாடு இருந்தது. அதனால், அவருக்குத் திருப்பாவை ஜீயர் என்ற திருநாமமும் ஏற்பட்டது. எல்லாப் பொருளும் இப்பாடல்களில் இருந்தமையால் இதற்கு ஆறு விரிவுரைகள் எழுதப் பெற்றன. திருப்பாவைப் பாடல்கள் இல்லற இன்பத்தில் உறங்கிக் கிடக்கும். ஜீவர்களை எழுப்பும் குரலாக ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

ஆண்டாள் அருளிய திருப்பாவைக்கு ஏனைய ஆழ்வார்கள் பாடல்களைவிட ஏற்றம் மிகுதி என்பர். அதனால் திருப்பாவை பாடிய ஆண்டாளுக்கு ஏற்றம் மிகுதி என்பது பெறப்படும். ஆண்டாளைச் சிறப்பித்துக் கூறுமிடத்தில் பெரியவாச்சான் பிள்ளை, "ஸம்ஸாரத்திலே உறங்குகிறவர்களை எழுப்பி எம்பெருமான் தானே தன்னைக் காட்டக் கண்டார்கள் ஆழ்வார்கள்; இவள் (ஆண்டாள்) தானேசென்று எம்பெருமானை எழுப்பித் தன்குறையை அறிவித்தாள்; ஆகையாலே அவர்களிலும் இவள் விலக்ஷணை" என்று பெருமை பேசுகிறார். ஆண்டாள் பாடிய பாடல்களில் ஆழங்கால்பட்ட பெரியார் ஒருவர், "ஆடவரை ஆடவர் கண்டு காமுறுவதிற் காட்டிலும் பெண்டிர் கண்டு காமுறுதல் பள்ளமடையாயிருக்குமென்பது உலகத்து எளிதிலுணர்ந்த விஷயமாதலால் புருஷோத்தமன் விஷயத்தில் ஆழ்வார்களின் காமம்போல் மேட்டுமடையா யிருக்கை யாகிற மற்றொரு வைலக்ஷண்யமும் உற்று நோக்கத் தக்கது. ஆழ்வார்கள் காமத்தின் மெய்ப்பாட்டுக்காகப் பெண்ணுடை உடுத்திப் பேசினார்கள்; இவட்கு அங்ஙன் ஆரோபித்துக் கொள்ள வேண்டிய ஆகாரமொன்றுமில்லையே" என்று ஆண்டாளுக்குரிய தனித்தன்மையைச் சிறப்பித்துக் கூறியுள்ளார். இதற்குத் தனித்தன்மை வாய்ந்த ஆண்டாளின் திருப்பாவைக்குத் தனிச் சிறப்பு இருப்பதில் வியப்பில்லையல்லவா?

திருப்பாவை என்பது ஒரு புது இலக்கிய வகை எனக் குறித்தோம்; பக்திக் காலத் தமிழ் தந்த புதுக் கொடை எனப் பகர்ந்தோம். பண்டைத் தமிழகத்தில் பாவை நோன்பு நோற்கும் பழக்கம் திருமணமாகாத கன்னிப் பெண்களிடம் இருந்தது. திருமணமாகாத அப்பெண்கள் விடியற்காலையில் ஒருவரை யொருவர் துயிலெழுப்பிக் கூட்டமாகக் கூடிக் குளக்கரைக்குச் சென்று நீராடிப் பாவை (பொம்மை) வைத்து வழிபாடு செய்வர். மழை பெய்து நாடு வளம்பெற வேண்டுமென்றும் தங்களுக்கு விரைவில் திருமணம் ஆக வேண்டுமென்றும், தங்களுக்கு நல்ல கணவன்மார் வாய்க்க வேண்டுமென்றும் வேண்டிப் பாடுவர். பண்டைக் காலத்து ஊர்களில் நிலவிய இந்தப் பழக்கத்தை ஊடகமாக வைத்துப் பாடிய இலக்கிய வகைதான் பாவைப் பாடலாகும். இத்தகைய பாவை நோன்பைப் பாடுதற்குரிய பொருளாக அமைத்துக் கொண்டு பாடியது தான் ஆண்டாள் அருளிச் செய்த திருப்பாவை யாகும்.

திருப்பாவையில் ஆண்டாள் மகளிரைத் துயிலெழுப்பு வதாகப் பாடுகிறாள்; 'எல்லே இளங்கிளியே இன்னும் உறங்குதியோ' என்றழைக்கிறாள்; 'கோதுகலமுடைய பாவாய் எழுந்திராய்' என்கிறாள்; நீராட அழைக்கிறாள்; 'குள்ளக் குளிரக் குளிர்ந்து நீராடலாம்; வா என அழைக்கிறாள். 'நாராயணனே நமக்கே பறைதருவான்; 'கேசவனைப் பாட வா' என்கிறாள். இவ்வாறு முதல் பதினைந்து பாடல்களில் ஆண்டாள் கன்னிப் பெண்களுக்கு நீராட அழைப்பு விடுக்கிறாள். கீழ்வானம் வெள்ளென்று இருக்கும் வைகறைப்போதில் நீராட அழைப்பதுபோல் பாடிய ஆண்டாள் அப் பெண்கள் குள்ளக் குளிரக் குடைந்து பொய்கையில் நீராடியதாகச் சித்தரிக்க வில்லை. இதனை ஆராயும்போது, திருப் பாவையில்வரும் நீராடலுக்கு வேறு பொருள் இருப்பதாக உணர்வில் படுகிறது.

திருப்பாவைப் பாடல்களில் மேற்போக்கான பொரு ளும் உண்டு; உள்ளுறை பொருளும் அவற்றுள் உண்டு. திருப்பாவையுள் பொதிந்திருக்கும் உள்ளுறை பொரு ளைக் கண்டு அனுபவித்த பெரியோர்கள்தாம் 'திருப் பாவையை வேதமனைத்துக்கும் வித்து' எனப் புகழ்ந்த னர். இல்லற இன்பத்துள் துயின்று கொண்டிருக்கும் 'சம்சாரிகளை' எழுப்புவதுதான் திருப்பாவையின் நோக்கமெனக் கண்டனர். திருப்பாவைப் பாடல்களுள் இடம் பெறும் ஒவ்வொரு சொல்லிலும்உலகாயுதப் பொருளோடு உள்ளுறை பொருளும் இருப்பதைக் கண்டனர். திருப்பாவையில் வரும் நீராடல் என்பது குளத்திற்குச் சென்று குளித்தல் அன்று என்றும் அதன் உள்பொருள் பேறு என்றும் உணர்ந்தனர். 'பகவா னோடும் பாகவதர்களோடும்ஆசார்யர்களோடும் கொள் ளும் உறவையே' நீராட்டம் என்று ஆண்டாள் குறிப்பிடு கிறாள் எனக் கண்டு களித்தனர். பெரியவாச்சான் பிள்ளை, 'நீராடப் போதுவீர்' என்ற தொடருக்கு உரை கூறும்போது, 'நீராட–இத்தால் இவர்கள் நினைக்கிறது கிருஷ்ண ஸ்ம்ச்லேஷம். தமிழரும் கலவியைச் சுனையாடல் என்றார்கள்' என்கிறார். அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் என்பவர் ஆறாயிரப்படி உரையில் 'நீராட' என்ற சொல்லுக்குத் தரும் விளக்கம் வருமாறு:–

"இவர்கள் தங்களுக்கு நீராட வென்று நோயாசை யாயிறே;
யமுநா ஜலம் ஒருத்தியுடைய விரஹாக்நியாலே சுவறுமே.
தமிழர் கலவியைச் சுனையாட லென்றாய்த்துச்
சொல்லுவது;
க்ருஷ்ண ஸம்ச்லேஷத்தை யாய்ந்து இவர்கள் நீராட
வென்றது".

இப்பெரியார்கள் தரும் விளக்கத்தைக் கற்போர், திருப்பாவையில் பயின்று வரும் சொற்கள் அனைத் துள்ளும் குற்புப் பொருள் ஊடுருவி நிற்பதை உணர்வர்.

திருப்பாவை முழுவதிலும் உருவக உயர்வு நவிற்சி அணி உள்ளது என்னுங்கருத்துடையர் திரு. பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராச்சாரிய சுவாமிகள். இந்த அணியை வடமொழியில் 'ரூபகா திச யோக்தி' என்பர். இந்த அணிக் கோட்பாட்டில் முதல் பதினைந்து பாடல் களுக்கு உரைகூறும் பொழுது மிக வியப்பான உள்ளுறை பொருள்கள் வெளிப்படுகின்றன. இவ்வாறு உரை கூறுவதை ஏற்பவர்களும் உண்டு; ஏற்காதவர்களும் உண்டு. ஏற்பதே சிறப்பாகும் எனலாம். திருப்பாவைப் பாக்கள் முப்பதும் வெண்டளையால் வந்த எட்டடி நாற்சீர் ஒரு விகற்பக் கொச்சகக் கலிப்பா வகையைச் சார்ந்தது என்பர்.

திருப்பாவையின் முதற்பாடல், 'மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளில்' என்று தொடங்குகிறது; முப்ப தாவது பாடல், 'எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர் எம்பாவாய்' என்று முடிகிறது. அதாவது, 'எம்பாவாய்' என வினித்து, "நீராடப் போதுவீர், போதுமினோ. . . . செங்கண் திருமுத்துச் செல்வத் திருமாலால் எங்கும் திருவருள் பெற்றின் புறுவர்" என்ற அமைப்பில் திருப்பாவை அமைநதுள்ளது. இதன் பொருள்; 'இறைவ னோடு கலக்கவாரும்; வந்தால் திருமாலோடு கலந்து திருவருள் பெற்று இன்புறலாம்" எனப்பலன் கூறுகிறது. இத்தகைய ஜீவநாதத்தைத் திருப்பாவை கொண்டிருப் பதனால்தான், அதனை,

"பாதகங்கள் தீர்க்கும் பரமனடி காட்டும்
வேதமனைத் திற்கும் வித்தாகும் – கோதைஅ தமிழ்
ஐயைந்து மைந்தும் அறியாத மானிடரை
வையம் சுமப்பதும் வம்பு"

என்று புகழ்ந்தனர்.

உலகீர்! உலகிற்குப் பாரமாக வாழாதீர்! வேத. மனைத்திற்கும் வித்தான கோதை தமிழைப் பயிலுவீர்! திருப்பாவையுள் கந்தங் கமழும் சொற்கள் உண்டு; அவை, படிப்போர் பந்தம் களையும். ஓங்கி உலகளந்த உத்தமனைப் பாடுவீர்! தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து ஓங்கு பெருஞ்செந்நெல் உவந்து மணியுதிர்த்து உலகு காக்கும். சிற்றஞ் சிறுகாலே எழுந்து வந்து குற்றமொன்றில்லாத கோவிந்தனைத் தொழுதால் மற்றை நம் காமங்கள் மாற்றி யருளுவான். ஆதலால். கோயிலுள் சென்று,

"அன்றிவ் வுலக மளந்தா யடிபோற்றி!
சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய் திறல்போற்றி!
பொன்றச் சகட முதைத்தாய் புகழ்போற்றி!
கன்று குணிலா யெறிந்தாய் கழல்போற்றி!
குன்று குடையா யெடுத்தாய் குணம் போற்றி!
வென்று பகை கெடுக்கும் நின்கையில் வேல்போற்றி!
என்றென்றுன் சேவகமே யேத்திப் பறைகொள்வான்
இன்றுயாம் வந்தோ மிரங்கேலோ ரெம்பாவாய்!"

என்று தொழுவீராக! அவன் 'கோப்புடைய சீரிய சிங்காசனத் திருந்து யாம் வந்த காரியமாராய்ந்து அருள்வான்' என எண்ணுவீராக.

ஆண்டாள் திருவடிகளே சரணம்

மூவகை ஞானம்

ஞானம் என்பது மூவகைப்படும். அவை உபாய ஞானம், உண்மை ஞானம், அனுபவ ஞானம். இவற்றின் கருத்து: (1) நட்சத்திரப் பிரகாசம் போல் தோன்றிய ஜீவ அறிவே உபாய ஞானம். (2) சந்திரப் பிரகாசம் போல் தோன்றி அறியும் ஆன்ம அறிவே உண்மை ஞானம். (3) எல் வத்துக்களையும் தெரிந்து அனுபவிக்கச் செய்கின்ற சூரியப் பிரகாசம் போன்ற கடவுளறிவே அனுபவஞானம்.

பஞ்ச பூதங்களில் பஞ்ச புலன்கள்

நிலம்: சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஐந்தும் கலந்துள்ளன.

நீர்: சுவை, ஒளி, ஊறு, ஓசை நான்கும் கலந்துள்ளன.

தீ: ஒளி, ஊறு, ஓசை மூன்றும் கலந்துள்ளன.

காற்று: ஊறு, ஓசை இரண்டும் கலந்துள்ளன.

வெளி: ஓசை ஒன்றே விண்வெளியெங்கும் கலந்துள்ளது.

சுப்பிரமணியம்

சுப்பிரமணியம் என்பது என்ன? நமது புருவ மத்தியில் ஆறு பட்டையாய் உருட்சியுள்ள ஒரு மணி பிரகாசம் பொருந்தி இருக்கின்றது. இந்த ஜோதி மணியை சண்முகம் என்று பெரியோர்கள் சொல்லுவார்கள். நமது மூலாதாரத்திற்கு மேல் மூன்றிடம் தாண்டி விசுத்தியாகிய இருதய ஸ்தானத்தில் இடது புறத்தில் ஆறு தலையுடைய ஒரு நாடி இருக்கின்றது. இதைச் சுப்பிரமணியம் என்று சொல்லுவார்கள். இந்தத் தேகத்திலுள்ள ஆறறிவும் ஒருங்கே சேர்ந்த சுத்த விவேகம் என்பதையும் சண்முகம் என்பார்கள். ஆறு ஆதாரங்களிலுள்ள ஆறு பிரகாசத்தையும் சண்முகம் என்பார்கள்.

(வள்ளலார் - வசனபாகம்)

தெய்வத்தமிழ்

சந்தக்கவிமாமணி. தமிழழகன்

வண்ணத் தமிழ்க் கவி
வாணர்தம் நாவில்
வலம்வரு வாள்.
நண்ணத் தனிப்பெரு
நல்லின்ப மாக
நலம்தரு வாள்.

பண்ணொத்த வாய்மழல்
பாலர்தம் செஞ்சொல்
பயின்றிடு வாள்.
எண்ணத் தொலையா
இயற்கைவிந் தைக்குள்
இயன்றிடு வாள்.

மாந்தளிர்க் கிள்ளை
மணிக்குரல் கேட்டு
மகிழ்ந்திடு வாள்.
பூந்தளிர் கோதிப்
புனைகுயில் தம்மில்
புகழ்ந்திடு வாள்.

சார்ந்தளி வண்டுகள்
சங்கீதம் பாடச்
சதிர்இடு வாள்.
ஏந்திழை மாதர்
இளநகைக் கெல்லாம்
எதிர்ப்படு வாள்.

நன்செய் உழவனின்
நலம்கொளும் ஏர்சீர்
நனிஅறி வாள்.
பஞ்சைமிக் கேழையர்
பாட்டாளி கூடப்
பணிபுரி வாள்.

விஞ்சைக் கலைகள்
விதம் விதம் தோன்ற
விறு விறுப் பாள்.
அஞ்சிக் கிடந்தோர்க் (கு)
அபயம் கொடுத்தே
அரவணைப் பாள்.

புகலும்விஞ் ஞானப்
புதுமைகள் யாவையும்
பூண்டிடு வாள்.
அகலும்அஞ் ஞான
அகந்தையை மாய்த்தருள்
ஆண்டிடு வாள்.

திகழும் அறிவால்
திசைதொறும் வெல்லத்
திறம் விளைப்பாள்.
சகல கலாவல்லி
சந்ததம் அன்னாள்
சரண்திளைப் போம்.



வள்ளுவம் காணும் இன்பம்

(திருக்குறள் நெறித் தோன்றல்
சித்தாந்தப் புலவர். தா.ம. பாரத்தசாரதி)

உயிர் என்பது எது? அது எங்கு உள்ளது? அது இயங்கும் நிலையாது? இவை போன்ற ஆய்வுகளைத் தெய்வீகச் சான்றோர்கள் ஆய்ந்துணர்ந்து இறைவனிடம் வேண்டுகின்ற முறையில் உணர்த்தியுள்ளனர். அவை பற்றிய விளக்கங்கள் மிகவும் நுணுக்கமானவை. உயிர் அறிவாயிருந்து தன்னையுணர மாட்டாது அறியாமைக் காரணமாய்த் தியங்கி மயங்கி பொருள் அல்லாத வற்றையெல்லாம் விழைந்து தன் வாழ்வை இயக்குகின் றது. திருவள்ளுவப் பெருமான், உயிர் வாழ்வு அன் பின் வழியைக் கொண்டு இயங்குகின்றது என்பார். அது மனத் தோடு சேர்ந்து 'பொருளல்லவற்றைப் பொருளென்று' கருதுதலும் 'நிலையல்ல வற்றை நிலையென்று' உணர்த லும் மருள் கொண்டு புல்லறிவாய்த் திகழ்கின்றது. என வள்ளுவம் பகர்கின்றது. அத்தகைய வாழ்வே 'இருள் வாழ்க்கை' என்று கூறுவதாகும். அதனால் பெறும் பயன் துன்ப வாழ்வாக அமைகின்றது.

உயிர் வாழ்க்கையில் இன்பம் காணுதலே சிறப்பு இயல்பாகும். அது அன்பாலும், மெய்யறிவாலும், அருளா லும், அறத்தாலும் அமைந்த வாழ்வேயாகும். அவ்வகை யில்லாது மெய்யறிவைப் பெறாது இன்னல் வாழ்வுச் சூழலில் தம் வாழ்க்கையைக் கொண்டு இயங்க நேரிடு கிறது. 'அன்பின் வழியது உயிர்நிலை' எனக் கூறிய வள்ளுவத்தின் பொருள். அன்பின் வழியே கனிவு, காதல் கருணை, ஈகை முதலியன பிறக்கின்றன. அன்பற்ற உயிர் வாழ்க்கை என்பு தோல் போர்த்த உடலாகவும், பாறை யில் தோன்றிக் காணப்பெறும் பட்டுப்போன மரம் தளிர்ப்பதாகவும். வள்ளுவம் தெரிவிக்கிறது.

"அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு" – (குறள்–80)

"அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று" –(குறள். 78)

அன்பின் வழியின்றி இன்பம் எய்துதல் இயலாது. அன்பின் கசிவே இன்பமாகும். 'இறைவனும் அன்புரு வானவன், இன்புருவானவன், அறவுருவானவன் என்று சமயப் பெரியோர்கள் கூறியுள்ளமையைக் காண்போம்.

"ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த
இன்பமே என்னுடை அன்பே"

என்று மணிவாசகரும், சேக்கிழார் பெருமான் திரு. கண்ணப்பரது பக்தி நிலையைக் கூறுமிடத்து,

"முன்புசெய் தவத்தின் ஈட்டம்
முடிவிலா இன்பமான
அன்பினை எடுத்துக் காட்ட
அளவிலா ஆர்வம் பொங்கி". என்று

குறிப்பிட்டுள்ளதும் காரைக்காலம்மையார் இறை வனை வேண்டும் போது, 'இன்ப அன்பு' வேண்டிப் பின் வேண்டுகின்றார்." என்னும் விழைவின் குறிக்கோளையும் கருத்தில் கொள்ளத் தக்கவையாகும்.

அறத்தால் பெறும் இன்பம்

இன்பத்திற்குக் கருவாய் அமைவது அன்பு என்பதனையறிந்தோம். இனி, அறத்தால் பெறும் இன்பத்தைக் காண்போம். அன்பினால் அறம் செயல் படுகின்றது. அன்பின்றி செய்யும் செயல் அனைத்தும் மறச் செயல் (தீச் செயல்) பாவச் செயலாகும். உள்ளத்தில் மாசுகள் (தீய உணர்வுகள்) அமையுமானால் மனம் அழுக்குடையதாய் பிற உயிர்கள் நலம் பேணாது தன்னலம் ஒன்றையே பெரிதாய்க் கொண்டு தீயோராய் வாழும் அவல நிலைக்குரியோராவர். அதனால் அன்பின் இன்பக் கசிவு நீங்கும்; துன்பம் விளைவிக்கும்; மறச் செயல்களே தோற்றும். தூய அன்பால் செயல் படுவது அறமாகத் திகழ்வதாகும்.

'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்துஅறன்
ஆகுல நீர பிற'. (குறள். 34)

என்பது வள்ளுவம் காட்டுவது. அறத்திற்கு மாசாக இருப்பவை பொறாமை, ஆசை, கோபம், கடுஞ்சொல் ஆகியவை என்னும் நான்கினைத் திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ளார்.

'அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்.' (குறள். 35)

இதனால் அறத்தின் உண்மைத் தன்மையை நம்மால் அறிய முடிகிறது. அறத்தன்மையற்ற செயல்கள் அனைத்தும் ஆரவாரத் தன்மையைக் காட்டுவதாகும் என்பார் திருவள்ளுவர். தூய செயலாகச் செய்பவை யனைத்தும் இன்பம் பயக்கக் கூடியதாக அமையும். அத்தகைய அறத்தால் பெறும் பயனே இன்பமாகும்.

'அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்
புறத்த புகழும் இல' (குறள். 39)

தெய்வீக நாட்டமுற்ற அறச்சான்றோர் இறைவனை தம் உள்ளத் தாமரையின் கண்ணே அமர்ந்திருப்பதாகக் கொண்டு அவ்வுள்ளத்திலே உள்ள இறைவனைப் போற்றி வழிபடுகின்றனர். இறைவன் இன்புருவானவன் என்றும், அன்புருவாய் அமர்ந்துள்ளான் என்றும் சமயச் சான்றோர்கள் கூறுவதையும் நாம் காண்கின்றோம். திருவள்ளுவனாரும் 'மலர்மிசை ஏகினான்' என்று குறிப்பிடுதலையும் கருதத் தக்கது. அறம் பாபத்தை யழிக்கும், கடவுள் உலகம் சேர்ப்பிக்கும், அவ்வறமே சிவனது வடிவம் என்றும் சிவஞான முனிவர் கூறுதலையும் காண்க.

"அறமே மறங்கள் முழுதழிக்கும்
அறமே கடவுள் உலகேற்றும்
அறமே சிவனுக் கொருவடிவ மாகும்"

என்பது காஞ்சிபுராணம்.

அன்பால் இயைந்து அறத்தால் செயல்படும் இன்ப வாழ்வு எவ்வகையில் இல்வாழ்வான் துய்க்கின்றான் என்பதைக் காண்போமாக.

'இன்மை எனஒரு பாவி மறுமையும்
இம்மையும் இன்றி வரும்.' –(குறள். 1042)

– என்று திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார். நல்குரவை பாவி என்றே குறிப்பிடுதலை நோக்குதல் வேண்டும். வறுமையுற்று வாழ்பவனை எவரும் விழைவதில்லை. அவன் எல்லோராலும் பழிக்கப்படுவதற்கு உரியவனாக ஆக்குகின்றனர். வறுமையின் கொடுமையைக் கூறவந்த திருவள்ளுவர்,

"நல்குரவு என்னும் இடும்பையுள் பல்குரைத்
துன்பங்கள் சென்று படும்." (குறள். 1045)

"நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்
யாதொன்றும் கண்பாடு அரிது" (குறள். 1049)

என்னும் குறட்பாக்கள் மூலம் பல்வேறு வகையான துன்பங்கள் அனைத்தும் அவனைச் சென்று அடையக் கூடியதாயும் இருத்தலினால் வறுமை நிலையில் எவ்வகையாலும் கண்மூடித் தூங்குதல் அரிதாகும் என்று கூறியுள்ளார்.

இவ்வகையில் அறம் சாரா நல்குரவின் காரணத்தால் தம் உயிர் வாழ்வின் பொருட்டு மக்கள் யாசிக்கும் அவல நிலைக்கு ஆளாகின்றனர். பலர் நோலாதவர் என்று நாம் கருதுவது அறம் சாரா வாழ்வு என்பதை அறிதல் வேண்டும்.

அறநெறி நின்று உண்மை நிலையையறிந்து மெய் யறிவோடு கூடி வாழ்கின்றவர்களே சான்றோர் களாவர். அவர்கள் தமக்குத் துன்பமானவற்றைச் செய்தவர்க்கும் இனிய உதவிகளைச் செய்யக் கூடியவர்கள்.

இல்லறத்தின் மாண்பு நெறி

இல்லறம் ஏற்போரது கடைமைகளாகத் திருவள்ளு வர் பதின்மர்களுக்குச் செய்ய வேண்டுவனவற்றைக் குறிப்பிட்டுள்ளார்.

1. புற நாட்டமற்று அறிய வேண்டுவனவாகிய கல்வியைக் கற்கும் மாணவ நிலையுடையோர்க்கும்.
2. இல்லற நெறிநின்று ஆற்றவேண்டிய கடமைகள் அனைத்தையும் நிறைவுடன் ஆற்றிய பின் இறை நாட்டம் கொண்டு யாத்திரை செய்யும் பெரியோர் களுக்கும்.
3. துறவு நிலை மேற்கொண்டு மெய்யறிவாளர் களுக்கும் இல்லறத்தார் நன்னெறியினின்று துணையாகவும்,
4. பாதுகாப்பிற்கான எவ்வகையாலும் துணையின்றி இருப்பவர்களுக்கும்,
5. வறுமையுற்றோருக்கும்.
6. யாருமற்று இறந்து கிடப்போருக்கும்,
7. தென்புலத்தார்.
8. தெய்வம்.
9. விருந்து.
10. ஒக்கல் (சுற்றத்தார்) என்னும் பத்து அறச் செயல் களுடன் அதனை ஆற்றும் இல்லறத்தானாகிய இவன் 'தான்' என்னும் பதினொராம் செயலாகத் தன்னைப் பேணும் செயலையும் கொண்டு இல் வாழ்க்கை அறநெறிகளைக் கூறியுள்ளார்.

'அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.' (குறள். 45)

என்பது வள்ளுவம்.

உலக வாழ்வில் மக்களது வாழ்வு நிலைகளை இருவேறு தன்மையுடையவைகளாகக் காண்கிறார் திருவள்ளுவர். அஃதாவது அறிவுடையோராகவும், குறையறிவுடையோராகவும், செல்வராகவும், வறுமை யுற்றவராகவும், வலிமைப் பெற்றவராகவும் வலிகுன்றி யவராகவும் காணக் கூடியவர்களாக வாழ்ந்து கொண்டிருப்பது. இவ்வுலகம் இயற்கையாக அமைந்து வருவதை 'இருவேறு உலகத்து இயற்கை' எனச் சுட்டிக் காட்டியுள்ளார். இத்தகைய நிலைக்குக் காரணம் ஊழ் என்று கூறுவர். ஊழ் வலிமையுடைத்தாயினும் அதன் வலி குறைவதற்குத் தவநெறியைக் கைகொள்ளுதல் வேண்டும் என்பது திருவள்ளுவனாரின் கருத்தாகும்.

'இலர்பல ராகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர்' (குறள். 27)

நோற்றல் என்பது தவம் எனும் பொருள் பெறும். தவமாவது கடமையாற்றுதல் என்னும் பொருளில் வள்ளுவம் பகர்கின்றது.

"தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லார்
அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு" (குறள். 266)

அவரவர் கடமையில் நேர்பட ஒழுகாத காரணத்தால் பலர் இன்னலுற்று வறுமையால் வாடுகின்றனர். "தவமும் தவமுடையார்க்கு ஆகும்" என்று திருவள்ளுவர் கூறுவதின் நோக்கம் 'உற்ற நோய் நோற்றலும்; மற்ற உயிர்களுக்குத் துன்பம் செய்யா திருத்தலும் ஆகும். சோர் வில்லாமல் முயற்சியில் செயலாற்றுபவர்; ஊழையும் ஒரு காலத்தில் தோல்வியுறச் செய்வர் என்பதை திருவள்ளு வர் வலியுறுத்துகின்றார்.

மக்களிடையே இல்லாமையெனும் நல்குரவு (வறுமை) நெருங்குமானால் இவ்வுலக இன்பத்தையும் மறுமை இன்பத்தையும் பெறுதற்கு இயலாதவராகின்றனர். ஒரு வனை வறுமை என்று கூறப்படும் பாவி நெருங்கினால், அவனுக்கு எவ்வகை இன்பமும் இல்லாமற் போகும். 'ஊழி, பெயரினும்' தான் பெயரார், எனும் பண்பினை உற்றவராய் விளங்குவார்கள். மக்களது இன்னலைப் போக்குதலே சான்றோர்களின் பண்பாகத் திகழ்கின் றது. அந்த வாழ்வே அறவாழ்வாகக் கொள்ளுதல் வேண்டும். அறச் செயல் ஒன்றினால் பெறத்தக்க இன்பம் உயர் இன்பம். அது உயிரின் இன்பம் என்பதைத் திருவள்ளுவர் நமக்கு எடுத்தோதுகின்றார். சான்றோர் களுக்கு உவமையாக ஊரின் நடுவேயுள்ள நிருண்ணும் குளம் நீரால் நிறைந்திருத்தல் போன்று பயன்படக் கூடியவராகவும், ஊரின் நடுவேயுள்ள பயன் மிகுந்த மரம் பழங்கள் பழுத்தாற் போன்று மக்களுக்குப் பயன்படக் கூடியவராகவும். வள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

ஈகை அல்லது பகுத்துண்ணல் எனும் பண்புடை வாழ்வே இன்ப வாழ்வாகும். அத்தகைய இன்ப வாழ்வு மக்களுடைய வாழ்க்கையில் மிளிர்தல் வேண்டும். ஈகைக் குணமற்ற வாழ்வைக் கொண்டுள்ளோர்களை வள்ளுவப் பெருந்தகை. வன் கண்ணர் என்று குறிப்பிடுவார். அவர்கள்

"ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்கணவர்" (குறள். 228)

என்பது வள்ளுவம். எனவே மக்கள் தம் வாழ்க்கை யில் தாம் பெற்றிருக்கும் உடைமை எத்துணையாயினும் பகுத்துண்டு வாழும் பண்பு நிலையைப் பெற்றிருத்தல் வேண்டும்.

'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாந் தலை' (குறள். 322)

நீதியையும் நன்மையையும் மேற்கொண்டு பிறர்க்குப் பயன்பட வாழும் நெறியாளர்களை உலகத்தார் போற்றிக் கொண்டாடுவர்.

சீரிய இன்பம்

உலகில் பெறும் இன்பங்கள் அனைத்தினும் மிகச் சிறப்புடையதாக மக்கள் கைக்கொள்ளுதல் காதல் இன்பமாகும். அஃது ஐம்புலன்களும் ஒருங்கு சேர அனுபவிக்கும் தன் தலைவியினிடத்தில் கிடைக்கின்ற இன்பம் என கூறப்படுவது ஆகும். திருவள்ளுவரும் அதனை எடுத்துக் காட்டியுள்ளார். அவ்வின்பம் திருமால் உலகத்தில் கிடைக்கின்ற இன்பமும் ஒப்பாகாது என அவர் குறிப்பிட்டுள்ளார். அத்தகைய இன்பத்திற்கு ஒப்புமை காட்டுதற்கு யாவராலும் இயலாது என்பதையே பலர் எண்ணினாலும் திருவள்ளுவர் அதற்கு அறவாழ்வின் பகுத்துண்ணு தலால் வரும் இன்பத்தை ஒப்புமை காட்டியுள்ளார்.

"தம்மில் இருந்து தமதுபாத்து உண்டற்றால்
அம்ம அரிவை முயக்கு" –(குறள் 1107)

எனவே மக்கள் தம் வாழ்க்கையில் சிறந்த இன்பமாக பெறத் தகுந்த இன்பமாவது இல்லார்க்குக் கொடுத்து மகிழ்தலும் அறநெறியில் பிறழாது வாழ்தலும் எவ்வுயிர்களிடத்தும் அருளோடு கூடிநிற்றலும் வாழ்வில் பெறத்தக்க உயரிய இன்பம் என்பதை வள்ளுவம் நமக்கு வலியுறுத்துகிறது.





சித்த மருத்துவத்தின் சிறப்பு

(நல்லாசிரியர். மருத்துவக் கலைஞர்
புலவர். சி. இரத்தின வேலனார்)

கல்தோன்றி மண்தோன்றிக் கார்தோன்றிக் காய்கதிரால்
புல்தோன்றி வந்த மருந்து. — (சி.ம.கு)

உலகில் ஒப்பற்ற உயர்தனிச் செம்மொழியாகிய தமிழ் பைய நாவையசைத்த பழங்காலத்தே இயற்கையோடு இயற்கையாய் சித்த மருத்துவம் தோன்றிற்றெனலாம். இயற்கையாகத் தோன்றிய மக்கள் இயற்கையாகிய தாவரங்கதைத் தாயின் மடியில் சேயென உண்டுக ளித்த உணவே உயிர்ச் சக்தியூட்டும் அருமருந்தாகும். நல்லறமாம் இல்லறத்தினின்று துறந்து துறவறமுற்றார்க்கும் இத் தாவரங்களே அமைதிக்கு ஆருயிர் மருந்தாக அமைந்தது.

வரந்தா வரமென்பார் வாழ்வின் அமைதி
தருந்தா வரமே தகைத்து. — (சி.ம.கு)

தாரவங்களாகிய வானார்ந்த மரங்களும் வளமார்ந்த செடிக ளும் புல்லும் புதலும் பூடும், மரங்களைக் கொழுகொம்பாகவும் செடிகளை இழு கொம்பாகவும் பற்றிப்படரும் கொடிகளும் மண் மறைத்த பைங்கூழ் மருதமாய்க் கான்பரந்த முல்லையாய்க் கோடு யர்ந்த குற்றிக் கோல் குறிஞ்சியாய் விளங்கும் பச்சைப் பசேலென்ற காட்சி கண்ணிற்கு விருந்தாகவும் மனத்திற்கு மருந்தாகவும் எண் ணற்ற உயிரினங்களுக்கு உறைவிடமாகவும் உணவாகவும் அமைந்து கிடப்பதே ஓர் இயற்கையின் கண் கொள்ளாக் காட்சியா கும்!

''புல்லும் மரனும் புதலும் பூடும்
வல்லியும் பெயர்க்கொடை மருந்தெனப் படுமே''

என்னும் அடிகள் சேந்தன் திவாகரத்தின் மருந்தியற்கோட் பாட்டுத் தேனலர் மணத்தென்றலாய் வான்வழி வந்து வண்டமிழ் இசைப்பதை நம்மால் கேட்க முடிகிறது.

தாவரங்களின் இலைகள் மட்டுமா, மருந்தாக - உணவாக ஆகின்றன? அவற்றின் (மூலம்) வேர், முளை, குருத்து, தளிர், துளிர், இலை, ஈர்க்கு, பழுப்பு, அரும்பு, மொட்டு, போது, மலர், குரும்பை, வடு, பிஞ்சு, காய், செங்காய், கனி, வித்து, தோடு முதலியனவும் மருந்துணவாவதை மறுக்க முடியுமோ? மேலும் சில தாவரங்களின் பட்டை, கட்டை, மட்டை, தண்டு, கிழங்கு முதலியனவும் அருமருந் தாய் - பெருமருந்தாய் ஆக்கம் பெருகின்றன. எனவே பற்றுக்கா லென்று போற்றப்படும் தாவரத்தின் பற்றுக்காலாகிய மூலவேர் பற்றற் றவர்க்கும் பற்றும் மருந்தாகப் பயன்படுகிறது. ஆதலினால் பற்றிய வேரைப் பற்றிக்கொண்டு வளரும் தாவரங்களின் ஏனைய உறுப்புக ளும் சித்த மருத்துவ முறையில் ''மூலிகை'' என்றே போற்றப்படு கின்றன.

தமிழரின் மருத்துவமாகிய சித்த மருத்துவம் தற்போதுள்ள தமிழ் எல்லைக்கு மட்டும் உரியதன்று. தென்னாட்டின் அடங்கியுள்ள அத்துணைப் பகுதிகளும் சேர்ந்த நிலப்பரப்பிற்குச் சொந்தமானது என்பதை நினைவிற்கொள்ள வேண்டும். தமிழில் வடமொழி கலப் பால் மூலிகைகளின் தன்னிலை திரிந்து காணப்படும் பெயர்கள், மலையாளத்தில் நிலைமாறாது தூய தமிழில் இன்றும் வழங்கி வரு வது கண்கூடும்.

மருத்துவம் அறிவியல் மட்டுமன்று. நம் நல்லுயிருடலைப் பேனி வளர்க்கும் ஓர் ஒப்பற்ற அருங்கலையுமாகும். எனவே அறிவி யல் ஆய்வுக் கண்கொண்டு நோக்குவார்க்கு விளக்கிக் காட்ட முடியா தனவாக, எல்லையைக் கடந்து ஒலிக்கும் இசையின்பம் போலச் சிற்சில நற்கூறுகள் மருத்துவத்தில் உண்டெனப்பது பலரும் அறிந்த ஒன்று. மேலும் நோய் நீக்குவதில் அறிவியலையும் விஞ்சும் அளவு நலன் செய்யும் ஆற்றல் மருத்துவத்திற்குரிய தனிச்சிறப்பு. உடல் நோயோடு மன நோயையும், மனநோயோடு உடல் நோயையும் தீர்க்கும் திறமுடைய மருந்துவகையான மாமூலைகைகள், பற்பங் கள், செந்தூரங்கள் கட்டுகள், முப்பு, செயநீர், எண்ணெய் வகைகள் இன்னோரன்ன மருந்துகளைக் கொண்ட சித்த மருத்துவக் கலையின் சிறப்பு உள்ளங்கை நெல்லிக் கனியெனத் தெள்ளத் தெளிவாகிறது.

''நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'' என்பது முற்ற முடிந்த முதுமொழி. இம் முதுமொழிக்கு இலக்கணமாக நோய்வரா மல் காப்பதற்கும் வந்த நோயை நீக்குவதற்கும் நீண்ட வாழ்நாள் தருவதற்கும் ஏற்ற ஒன்றே மருந்தாகுமென்று சித்தருக்குச் சித்தராகிய திருமூலர் செப்பிச் சென்றனர். ஆகவே, குறைவற்ற செல்வத்தைக் கொடுக்கும் மருத்துவக் கலையே மற்றெல்லாக் கலைகளுள்ளும் நனி சிறந்தது என்பது அறிவியல் ஆய்வாளரெல்லாம் ஒப்ப முடிந்த உண்மை!

எந்த முறை மருத்துவமாயினும் அந்த முறையில் கொள்ளும் மருந்து எதிர் விளைவின்றி நோய் நீக்குவதாயின் அதுவே உயர்ந்த முறை மருத்துவம் என்று போற்றப்படும். அந்த முறை மருத்துவம் சித்த மருத்துவம் என்பதில் ஐயமில்லை.

சங்க காலந்தொட்டு தமிழர் மருத்துவமாகிய சித்த மருத்துவம் தென்னாட்டுப் பேரரசர்களாலும், சிற்றரசர்களாலும், குறு நில மன்னர் களாலும், ஆன்றோர்களாலும், சான்றோர்களாலும் பயன்படுத்தப் பட்டுப் போற்றி வளர்க்கப்பட்டு வந்தது. இந்நிலைக்குப் பல்லாயிரம் ஆண்டுகட்டு முன்னும் பின்னும் பதினெண் சித்தர்களும், அவர்க ளையொத்த அறிவருள் சான்ற மருத்துவக் கலைஞர்கள் ஒன்பதின்ம ரும் ஆக இருபத்தேழு சித்தர்கள் இருந்தார்கள் என்பது பிற தென் னாட்டு மொழிகளிலுள்ள மருத்துவ நூல்களில் காணக் கிடக்கிறது.

அச்சித்தர்கள் அருளிய மூன்று இலட்சம் மருத்துவப் பாடல்க ளால் மருந்தின் ஒப்புறை, எதிருறை, கலப்புறை என்னும் மூன்று வகைகளிலும் நாடி முறை, மருந்து செய்பாகம், அளவுகள், நோயின் குணக்குறிகள், தீர்க்கும் வழிவகைகள், உணவுக் கட்டுப்பாடு இவை யாவும் தெளிவாக அறிய முடிந்தது. அவற்றுள் இப்பேருலகம் என்று முடியுமோ அன்றுவரை மக்களுக்கு (மிருகங்களுக்கும் பறவைகளுக் கும்கூட) உண்டாகும் நோய்களைக் கணித்து வரையறுத்துக் கூறப் பட்டிருப்பதோடு, அந்நோய்களைத் தீர்க்கும் ஏற்ற மருந்துவகை களும் தரப்பட்டுள்ளன.

நாலா யிரத்துநா னூற்றுநாற் பத்தெட்டுத்
தோலாத நோய்கள் தொகை. — (சி.ம.கு)

இந்நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு நோய்கள் 1971-ஆம் ஆண்டு ஆய்ந்த முடிவின்படி ஆயிரத்துத் தொள்

ளாயிரத்துத் தொண்ணூற்றெட்டு (1998) நோய்கள் மக்களுக் குற்றிருக்கின்றன. இன்றுவரை இரண்டாயிரத்தை யெட்டியுள் ளது. எனவே, சித்த மருத்துவத்தில் பொதுவாகச் சேர்க்கப்பட வேண்டுமென்பதொன்றில்லை.

மொழி வளர்ச்சிக்கும் நாகரிக வளர்ச்சிக்கும் ஒப்ப தமிழ ரின் பண்பட்ட முன்னேற்றத்தின் காலக்குறியீடுகளும் காணக் கிடைக்காத காலந்தொட்டு அனைத்து நிலைகளிலும் உயிரொ ளியாகவும் உயிரொலியாகவும் மக்களின் நல்வாழ்வில் இரு கலையோடு கலந்து முகிழ்த்து நிற்கும் ஓர் ஒப்பற்ற கலையாகச் சிறப்புற்ற விளங்குவது சித்த மருத்துவக்கலையே. இக்கலை இடமாற்றத்தாலுண்டாகும் தாவரங்களின் சேர்க்கை பொருட்கு ணத்தால் நேரும் வேற்றுத் தாதுப்பொருட்கள், இடைவந்தோ ரால் கொண்டும் கொடுத்தும் உண்டான பெருக்கம், மற்றுமோர் கலப்புறையாக வளர்ச்சிக்கு உரமூட்டுவதாக அமைந்துள்ளமை சித்த மருத்துவமுறையின் முன்னேற்றமாகும். அதைப் போன்று நாட்டின் பிற மருத்துவ முறையாளரும் தம் முறைக்குண்டான வளர்ச்சியின் உயர்வுக்கு ஒத்துக்கொள்ள வேண்டியவராவர்.

சித்தரென்பதற்கு இதுவரை நாம் கண்ட விளக்கங்கள் அனைத்தும் நம்பிக்கையற்ற இடத்திற்கு நம்மை அழைத்துச் செல்கின்றன. ஆனால் மரத்திலோ கல்லிலோ சிற்பம் செய்பவ ரைச் சிற்பி என்பதுபோல் அணுவைச் சிதைத்து ஒன்றுமில்லாத வெட்ட வெளியிலும் எண்ண அலைகளைச் செலுத்தி உண்மை காணும் பேரறிவாளர்களைச் சித்தர்கள் என்று போற்றுவது சாலப் பொருந்துமன்றோ? சித்தர்கள் ஆயிரக் கணக்கான மூலி கைகளையும் குறிப்பாக அறுபத்து நான்கு (64) நச்சு வகை (பாடாணங்)களையும், நூற்றிருபது (120) உப்பு வகைகளை யும் துணை சரக்குகளையும் நவமணிகளையும், ஐந்துவகை மாழை (பஞ்சலோகங்)களையும் மருந்தாக மாற்றிய தோடன் றிக் களிம்புள்ள புன்மையான உலோகங்களையும் பொன்மை யான உலோகங்களாக மாற்றும் இரசவாத வித்தையும் கற்றிருந் தனர் என்பது போதரும். மேலும் வெள்ளெருக்கன் நூலினா லும், அயக் காந்தச் சத்து, அபிரகச் சத்து, சூதச் சத்து இவைக ளைக் கொண்டும் ஆக்கப்பட்ட பூவிமானத்தில் பல்லாயிரக் கணக்கான மக்களை ஏற்றிக்கொண்டு அகில உலகத்தையும் அளந்தனர் நம் முன்னோர்களாகிய சித்தர்கள். அவர்களால் கையாளப்பட்ட இந்த மருத்துவமுறை ''சித்த மருத்துவம்'' என்று சிறப்பிக்கப்படுவது சாலப் பொருந்தும்.

> ''அண்டப் பகுதியில் உண்டைப் பிறக்கம்
> அளப்பருந் தன்மை வளப்பருங் காட்சி
> ஒன்றினுக் கொன்றாய் நின்றெழில் பகரின்
> நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன''

என்னும் அடிகள் மணி வாசகமன்றோ?

நாடிமுறை - சித்த மருத்துவத்தின் நோயறியுந்தன்மை:

ஏனைய உலக மருத்துவ முறைகளில் எவற்றிலுமில்லாத நாடி பார்க்கும் முறை நனி சிறந்ததாகும். இம்முறையின் பிறப்பிடம் நம் தமிழகமே என்பதற்குச் சான்றுகள் உலகளாவிய அளவிலுள்ளன. என்பது முற்ற முடிந்த உண்மை. இதயக் குருதியோட்டத்தின் எடுப் பையும், தொடுப்பையும், படுப்பையும் உயிருடல் நரம்பின் நாடி காண்பதே நாடி முறையாகும். இங்ஙனம் கூறுவது பண்பு வழக்கா கும். அதிலேயே அறுசுவை நாடி முறையும் அடங்கும்.

> ''மண்திணிந்த நிலனும் நிலனேந்திய விசும்பும்
> விசும்பு தைவரு வளியும் வளிதலைஇய தீயும்
> தீமுரணிய நீரும் என்றாங்கு
> ஐம்பூ தத்து இயற்கை போல''

ஐம்பூதங்களாலாகிய இவ்வுடம்பு, அவற்றினிடைப்பட்டவளி, தீ, ஐயம் என்பன முறையே காற்று, நெருப்பு, நீர் எனவும்; அவை வாதம், பித்தம், சீதம் - (சிலோத்துமம், கபம்) எனவும் வழங்கப்ப டும். இவையே ஒளி ஒலியாகிய இவ்வுயிரையும் உடலையும் ஆட் டிப்படைக்கின்றன. இவற்றால் உண்டாகும். இதயக் குருதியோட்டத் தின் சமநிலை முறையே ஒன்று, அரை, கால் என்னும் மாத்திரை அளவில் அமைந்திருக்க வேண்டியது இயற்கையாகும். மக்களின் இரு கரங்களிலும் மணிக்கட்டுக்கு ஓர் அங்குலம் இடைவெளிவிட் டுப் புறங்கை கீழுற மேற்பகுதியில் நாடி பார்ப்பவர் தம் கையில் ஐந்து விரல்களுள் இடைப்பட்ட மூன்று விரல்களை நரம்பின்மேல் வைத்தி டவேண்டும். ஆள்காட்டி விரலில் அன்ன நடை போன்று நெளிவது வாதம்; பெருவிரலில் ஆமைபோல் அசைவது பித்தம்; மோதிர விரலில் பாம்புபோல் ஊர்வது சீதம். இம்மூன்றிலும் மேற்கூறிய மாத்திரையளவு மிகினும் குறையினும் நோய் செய்யும். இதையே வான்புகழும் வள்ளுவர்,

> ''மிகனுங் குறையினும் நோய்செய்யும் நூலோர்
> வளிமுதலா வெண்ணிய மூன்று'' — திருக்குறள்

என்றனர். இதற்குச் சிலர் உணவு மிகினும் குறையினும் நோய் செய்யுமென்று தம் விருப்பத்தைக் கூறினர் போலும்.

நாடிமுறை ஆண்களுக்கு வலக்கரத்தும் பெண்களுக்கு இடக்கரத்தும் காண்பது வழக்காகுமெனினும் அறுசுவை நாடி முறை இருபாலார்க்கும் இருகரங்களிலும் காண்பது இயல்பா கும். பொதுவாக மூன்று நாடிகள் மிகுவதாலும் குறைவதாலும் உண்டாகும் நோய் களுள் சில-

வாதம்	மிகுவதால்	- கால் குடைச்சல், தூக்கமின்மை
	குறைவதால்	- வயிற்றுப் போக்கு, சோர்வு வீக்கம்.
பித்தம்	மிகுவதால்	- சிறுநீர் மிகுதியாதல்
	குறைவதால்	- நீர்ச்சுருக்கு
கபம்	மிகுவதால்	- உடல் பருமன்
	குறைவதால்	- நாவறட்சி

இவற்றின் உட்பிரிவுகளும் அறுசுவை நாடி முறையின் பெருவிளக்க மும் விரிவஞ்சி விடுத்தனம்.

ஓடும் பாதரசத்தைக் காட்டியுருட்டி உயர் மருந்தாக்கி உயிர் நலங்காணலும், ஆடும் பாம்பை அடக்கியாளலும், நீடு நின்றிலங் கும் நிகரற்ற பெருமை சித்த மருத்துவத்தின் சிறப்பிற்கு மற்றுமோர் எடுத்துக்காட்டாகும். மேலும் கத்தூரி, குங்குமப்பூ, கோராசனை இவை கூட்டிச் செய்யும் எண்ணற்ற மருந்துகள் சின்னஞ்சிறு குழந்தை கள் தொட்டு, பென்னம் பெரிய மூத்தோர் ஈறாக யாவர்க்கும் மன்னிய மருந்தாய் முக்குற்றம் தீர்த்து முழு நலன் விளைக்கும் நம் மருத்துவ முறை நனி சிறந்ததென்று சொல்லவும் வேண்டுமோ?

முன்னாளில் நம் முன்னோர்கள் பிற நாட்டாரோடு செய்த வாணிகத்தால் வந்துற்ற சிறப்புப் பொருள்களாலும் நம்முடைய சித்த மருத்துவம் வளர்ச்சி யுற்றதெனலாம்.

> ''வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
> பிறவும் தமபோற் செயின்'' — குறள்

> கலந்துரை யாடிக் கருத்தின் ஒருமை
> நலந்திகழ்தல் நல்லா ரியல்பு — சி.ம.கு.

இங்ஙனம் அன்று கொண்டுங் கொடுதததும் வளர்த்த மருத்துவத்தை இன்று மக்கள் மன்றமெங்கணும் மகிழ்நடம் புரிய வைப்பது தமிழரா கிய நம் தலையாய கடமை.

> ''உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்று

அப்பானாற் கூற்றே மருந்து'' - குறள்.

இக்குறள் திருவள்ளுவனாரின் திருக்குறள் மருந்ததிகாரத்தின் ஈற்றுக் குறளாகும். மருந்தியல்பால் நாற்கூற்றின் விரிவாக்கத்திற்குத் தொடர்ந்து அதைப்போலவே தனி மருத்துவ நூல் ஆக்கப்பட வேண்டுமென்று வழிகாட்டி இடம் விட்டுச் சென்றிருக்கிறார் என்பது வெள்ளிடைமலை. எனவே அம் முறையில் முந்துறச் செல்லும் போக்கே இக்கட்டுரைத் தொகுப்பாகும் என்று முடிப்பதில் பெருமகிழ் வெய்துகிறேன்.

குறிப்பு: சி.ம.கு. இக்கட்டுரை ஆசிரியரின் வெளிவரவிருக்கும் சித்த மருத்துக்குறள் நூலிலிருந்து சேர்க்கப்பட்டது.

1. ஆலும் வேலும் பல்லக் குறுதி
   நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி
2. பழகு தமிழ்ச் சொல் அருமை
   நாலிரண்டில் காணலாம்
3. நாலடி இரண்டடி படித்தவனோடு
   வாயடி அடிக்காதே!

(பழமொழிகள்)

தொகுப்பு: சரவணமூர்த்தி

அறநெறியில் நாம் நடத்தும் வாழ்க்கையினால் அடையும் நலனுக்கு ஈடாக வேறெதுவும் இல்லை. அவ்வாறே, அறநெறி வாழ்க்கையை மறப்பதால் அடையும் தீமையைப் போலவும் வேறொரு துன்பமும் நம்மை வருத்தாது.

நம் மனத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்வதிலேயே அறமனைத்தும் அடங்கிவிடும். இதனை விடுத்து, பிறவெல்லாம் வெறும் ஆரவாரமும் பகட்டு வாழ்வின் தன்மையுமே யாம். பொறாமை, ஆசை, சினம், கஞ்சொல் இவை நான்கினையும் தவிர்த்து நடப்பதே அறமாகும்.

பின்னர் மரணகாலத்தில் பார்த்துக் கொள்ளலாம் என்று கருதாது, அறத்தை இப்பொழுதிலிருந்தே, எப்பொழுதும் செய்து வரவேண்டும். ஏனெனில், அவ் அறமே நம் உயிர் போகுங்காலத்தில் உயிர்க்கு அழியாத் துணையாக உடன் செல்வது. பிற உயிரைக் கொல்லாமையும் பொய்யாமையுமே தலையாய இரு அறங்களாகும் (குறல் 32, 24, 35, 36, 323).

(அ) சிவபெருமானின் உருவ, அருவ, அருவுருவத் திருமேனிகள்:

உருவம்: (4) பிரம்மன், விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன்

அருவம்: (4) விந்து, நாதம், சக்தி, சிவம்

அருவுரும்: (1) சதாசிவம்.

(ஆ) தக்ஷிணாமூர்த்தி, அருள்மூர்த்தி, புண்ணிய மூர்த்தி தரும் அட்ட மூர்த்தியானோன்.

தக்ஷிணாமூர்த்தி: தென்திசை நோக்கிய குரு மூர்த்தி ஜன்காதி முனிவர் நால்வருக்கும் வேதங்களின் நுண்பொருள்களைச் கூறாமல் கூறியவர்.

அருள் மூர்த்தி: அடியார்களுக்கு அருள்புரியும் அம்மை அப்பனாகிய மூர்த்தி

புண்ணிய மூர்த்தி: தெற்கு நோக்கி ஆனந்தத் தாண்டவம் புரியும் நடராஜ மூர்த்தி

அட்ட மூர்த்தி: எட்டு மூர்த்திகள். நிலம், நீர், தீ, காற்று, வெளி, சூரியன், சந்திரன், இயமானன் ஆகியோர்.

நாச்சியார் திருமொழி

டாக்டர். சு. வள்ளியம்மாள். எம். ஏ., பி.எச். டி.

ஆண்டாள் அம்மையார் அவனிக்கு அளித்த பிரபந்தங்கள் இரண்டு. அவை நாலாயிரத் திவ்விய பிரபந்தத்துள் முதலாயிரத்தில் இடம் பெற்ற திருப்பாவை, நாச்சியார் திருமொழி எனப் பெயர் கொண்டவை.

திருப்பாவையில் ஆண்டாளின் அன்பு வெள்ளம் நிறைந்து நிற்கிறது. திருமொழியில் அவரது காதல் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. பாவை கோதையின் வரலாற்றைக் குறிப்பாக உணர்த்துகிறது. திருமொழி ஆண்டாள் அரங்கனிடத்துக் கொண்ட காதலை ஒளிவு மறைவின்றி வெளிப்படுத்துகிறது. இத்திருமொழியின் சிறப்புணர்த்த வந்த பி.ஸ்ரீ. ''இந்நாச்சியார் திருமொழி கண்ணாடியில் காண்பதுபோல் ஆண்டாளின் வாழ்க்கைச் சித்திரத்தை உள்ளபடியே கண்டுகொள்ள நமக்கு உதவும் கவிதைக் கண்ணாடி ஆகும்1 என்று கூறுகிறார். இந்நாச்சியார் திருமொழி நூற்று நாற்பத்து மூன்று திருமொழிகளைத் தன்னகத்துக் கொண்டு ஒளிர்கிறது.

துளசிச் செடியின் கீழ்க்கண்டெடுக்கப்பட்ட மகவுக்குக் கோதை என்னும் பெயர் கோவிந்தனால் பரிந்துரைக்கப்பட்டது.2 பரமனுக்குரிய மாலையைப் பாவையாம் கோதை சூடிக் கொடுத்தமையால் ''சூடிக் கொடுத்த சுடர்க்கொடி'' என்னும் பெயர் பெற்றார்.3 அச்சுடர்க்கொடி தம் பரமபக்தியால் பெரியாழ்வாரை ஆண்டு கொண்டமையால், 'ஆண்டாள்' எனப்பட்டார்.4 இவ்வம்மை,

''மல்லி நாடாண்ட மடமயில்''

''தென்திருமல்லி வளநாடி'' என்று போற்றப்படுகின்றார்.5 இதனால் இவர் மல்லிநாட்டைச் சார்ந்தவர் என்பது தெளிவுபடுத்தப்படுகிறது. இவர் வாழ்ந்த காலம் கி.பி.எட்டாம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலம் என்கிறார் டாக்டர் எஸ்.கண்ணன்.6

பூட்கையில்லோன் வாழ்க்கை புகழற்றது. ஒவ்வொருவருக்கும் உயரிய குறிக்கோள் இருத்தல் வேண்டும். நாச்சியாரின் குறிக்கோளைத் திருமொழி,

''புள்ளின் வாய்பிளந்தாள் என்பதுஓர்
இலக்கினில் புகஎன்னை எய்கிற்றியே''7

''வித்தகன் வேங்கட வாணன் என்னும்
விளக்கினில் புகஎன்னை விதிக்கிற்றியே''8

''அவரைப் பிராயம் தொடங்கி என்றும்
ஆதரித் தெழுந்த என் தடமுலைகள்
துவரைப் பிரானுக்கே சங்கற்பித்துத்
தொழுது வைத்தேன் ஒல்லைவிதிக்கிற்றியே9

என்னும் அடிகளால் தெளிவுபடப் புலப்படுத்தி விடுகிறது.

குறிக்கோளுடன் வாழ்வார்க்கு அதனை அடையாத வாழ்க்கை வாழ்க்கையன்று. அதைவிடவும் இறந்து விடுதலே ஏற்புடைத்தாகும் என்பதை,

''வானிடை வாழும்அவ் வானவர்க்கு
மறையவர் வேள்வியில் வகுத்தஅவி
கானிடைத் திரிவதோர் நரிபுகுந்து
கடப்பதும் மோப்பதும் செய்வதொப்ப
ஊனிடை யாழி சங்குத்தமற் கென்று
உன்னித் தெழுந்த என் தடமுலைகள்
மானிடவர்க் கென்று பேச்சுப்படில்
வாழகில்லேன் கண்டாய் மன்மதனே10

என்னும் அடிகளால் உறுதியுடனுரைக்கிறார். இது அம்மையார் தம் உள்ளத்திண்மையை வலியுறுத்துகிறது.

கொண்ட குறிக்கோள் நிறைவேறுதலைக் கருதித் தன்னை, மதுரைப் புறத்து,11 ஆய்ப்பாடிக்கு,12 நந்தகோபன் கடைத்தலைக்கு,13 யமுனைக்கரைக்கு,14 கண்ணன் காளிங்கன் மீது நடம்புரிந்த பொய்கைக்கு,15 பத்தவிலோசனத்து,16 பாண்டிவடத்து17 கோவர்த்தனத்து18 துவராபதிக்கு19 உய்த்திடுமின் என்று இணைந்து உருகி நிற்கிறார். குருபரம்பரைக் கதைகளின்படி ஆண்டாள் திருவரங்கத்து அரங்கனை அணைந்தார் என்ற போதிலும் அவர் உள்ளம் கண்ணன் என்னும் கருந்தெய்வத்திடம் மட்டுமே காட்சி பழகிக் கிடந்தது என்பதைக் கண்ணனுடன் தொடர்புடைய இடங்களை மட்டுமே அவர் குறிப்பிட்டு அங்குத் தன்னைக் கொண்டு சேர்க்குமாறு கூறுவதால் புலப்படுத்தப்படுகிறது. மேலும் பரமனின் அர்ச்சை நிலையை இத்திருமொழியில் புலப்படுத்துகிறார்.

ஆண்டாளின் உள்ளம் கண்ணனிடம் ஆழ்ந்து படிந்து கிடந்த போதிலும் ஆலிலைப் பெருமான் முதலாகப் பரமனின் பல்வேறு

1. ஆண்டாளும் மீராவும் - பி.ஸ்ரீ.ப. 63
2. நாலா. திவ். பிர. முதலா - ப.17
3. திருப்பாவைத்தனியன்
4. ஆண்டாளும் மீராவும் - பி.ஸ்ரீ.ப.4
5. நாச்சியார் திருமொழி - தனியன்கள்
6. பெரியாழ்வார் ஆண்டாள் பாசுரங்கள் - சமூக சமயப்பண்பாட்டு, ஆய்வு
ஆய்வேடு - ப.43
7. நாச்சியார் திருமொழி - 1 - 2. 4
8. '' '' 1-3. 4
9. '' '' 1-4. 4
10. '' '' 1-5.
11. '' '' 12-1. 4
12. '' '' 12-2. 4
13. '' '' 12-3. 4
14. '' '' 12-4. 4
15. '' '' 12-5. 4
16. '' '' 12-6. 4
17. '' '' 12-7. 4
18. '' '' 12-8. 4
19. '' '' 12-9. 4

தோற்றங்களிலும் அவர் தோய்ந்து கிடந்தமையையும் அவர்தம் திருமொழிகள் உணர்த்துகின்றன.

நிலமகளின் துயர்துடைக்கப் பிறந்தவன் கண்ணன்20 நிலமகளின் அம்சமாகத் தோன்றியவர் நாச்சியார்21 எனவே, அவர் பரமனின் ஆதித்தோற்றம் முதல் அனைத்தையும் போற்றி நிற்பதில் வியப்பில்லை.

இறைவன் வைகுந்தத்தில் வீற்றிருக்கும் பரத்துவநிலை, பாலாழியில் எழுந்தருளியிருக்கும் வியூக நிலை, அவதாரங்களாகிய விபவநிலை, எங்கும் நிறைந்திருக்கும் அந்தர்யாமித்துவ நிலை, மூர்த்திகளாகி நிற்கும் அர்ச்சை நிலை என்னும் ஐந்து நிலைகளில் நிற்பதாகக் கருதப்படுகிறான்22

இந்நிலைகளில் எதையும் நாச்சியார் விட்டுவைக்கவில்லை.

''நாட்டைப் படை என்று அயன்முதலாத் தந்த நளிர்மா மலருந்தி23 என்பதால் அவர் பரமனின் பரத்துவநிலையைக் குறிப்பிட்டுள்ளமையை அறியலாம்.

திருமாலே கண்ணனாகப் பிறந்தான் என்பதை ஓர்ந்து அந்தத் தோற்றத்தைப் போற்றவும் அம்மையார் மறக்கவில்லை.

''பொங்கிய பாற்கடல் பள்ளி கொள்வான்24 என்கிறார்.

பாற்கடலில் பரமன் பள்ளி கொள்ளும் அணை அரவணை. இதனை,

''அரவணை மேல்பள்ளி கொண்டாய்''25

''நரகணை மிசைநம்பரர்''26

''நல்லார்கள் தொழும் நளிரரங்க நாகணையான்''27

என்று ஏத்தி நிற்கின்றார். இதனால் பாலாழியில் எழுந்தருளியிருக்கும் வியூகநிலையில் அம்மையார் ஈடுபட்டமையை அறியலாம்.

அடுத்து வருவது அவதாரங்களாகிய விபவநிலை. ''அவதாரங்கள் பத்து. அவற்றுள் மீன் புராதன உயிர். ஊழிக்கடலிலிருந்தும் (Palaezoic seas), ஆமை நடுவழிக் கடலிலிருந்தும் (Mesozoic seas) தோன்றின. மனிதன் குகை மரப்பொந்துகளில் வாழ்ந்த காலத்தில் நரசிங்கம், வாமனம் தோன்றின. அவன் வேட்டுவனாகித் திரிந்த காலத்தில் பரசுராம அவதாரம் தோன்றியது. நாகரிகம் மிக்க நகர வாழ்க்கையில் இராமன், கண்ணன் ஆகிய அவதாரங்கள் தோன்றின'' என்று ஏ.டி.புசால்கா கூறுகிறார்.28 இது அறிவியல் முறையுடன் ஒத்துப் போவதாக உள்ளது.

''அவதாரம் என்பதற்கு இறங்குதல், கீழே வருதல் என்பது இலக்கியப் பொருள். தலைசிறந்த ஆன்மா தன்னுடைய ஒப்பற்ற மாயை என்ற ஆற்றலால் விளையாட்டாக முழுமுதல் ஒருமைப்படியிலிருந்து தொடர்புடைய பன்மைப் படிக்கு இறங்குகிறது'29 என்று அவதாரத்துக்கு விளக்கம் அளிக்கிறார் ஏ.கே.பானர்ஜி.

சங்க நூல்களில் அவதாரங்கள் பற்றிய குறிப்புகள் உள.30 எனினும் அவதாரம் என்ற சொல்லாட்சி இல்லை. ''வேதங்களிலும் இதுபற்றிய குறிப்பில்லை.''31 எனச் சுட்டுவார் ஆய்வாளர் சென். இதுபோலவே திருமொழிப் பாடல்களிலும் அவதாரங்கள் பற்றிய குறிப்புகள் உள. ஆனால் அவதாரம் என்ற சொல்லாட்சி இல்லை.

திருமொழியில் கூர்மாவதாரத்தைச்

''சங்கமா கடல் கடைந்தான்''32

''மந்தரம் நாட்டி அன்று மதுரக் கொழுஞ்சாறு கொண்ட சுந்தரத் தோளுடையான்''33

''கடலே கடலே உன்னைக் கடைந்து கலக்குறுத்து உடலுள் புகுந்து நின்று ஊறலுறுத்தவற்கு''34

என்று சுட்டி நிற்கிறார். கூர்மாவதாரம் புலனை அடக்கி உள்ளத்தை ஒருமைப்படுத்த வேண்டும் என்பதை வற்புறுத்தத் தோன்றியது.

இவ்வாமை பாற்கடலைக் கடையப் பயன்பட்டது. நம் உடல் ஒரு பெருங்கடல். அதில் ஒரு புறம் அசுரப் பண்பும், இன்னொரு புறம் தேவப் பண்பும் உள. நன்மை, தீமை இரண்டும் உள. அதை நாராயணன் கடைகிறான். தீமையைத் தான் ஏற்றுக் கொண்டு நன்மையை மட்டுமே தொண்டர்க்கு நல்குகிறான்.

பாற்கடலில் தோன்றிய நஞ்சை யொழித்துத் தேவர்கள் அமுதுண்ண வழி செய்தது போலத் தானும் துன்பமொழிந்து அவனை அணைய வழி செய்யுமாறு வேண்டுகிறார் நாச்சியார்.

காமம், குரோதம் முதலியவற்றை ஒழித்து ஐம்புலன்களையும் வென்றுவிட்டவனுக்குப் பெரியவன், சிறியவன், உயர்ந்த பிராணி, தாழ்ந்த பிராணி என்ற பேதம் தோன்றாது. இது விவேகியின் நிலை. இவ்விவேகத்தைக் கைக் கொள்வதையே வராக அவதாரம் உணர்த்துகிறது. இவ்வவதாரத்தையும் சுட்டுகிறார் சூடிக் கொடுத்த சுடர்க்கொடி. நிலமகளின் அம்சமாகத் தோன்றியவர் நாச்சியார். அவர் தம்மைக் காப்பாற்றப் பரமன் முன்னொரு காலத்தில் பட்ட துன்பங்களை நினைவு கூர்ந்து பேசுகிறார். நிலமகள் நெடுங்காலம் நீரில் பாசி படர்ந்து கிடந்தாள். அவள் மீதுள்ள ஆசையால் அவளைக் காப்பாற்ற ஆண்டவன் பன்றி வடிவம் கொண்டான் என்கிறார்.35 பரமன் தன் அடியார்க்கருளக் கருதி எந்த இழிந்த உருவையும் ஏற்றுக் கொள்ளும் பரிவுணர்வுடையவன் என்பதை எண்ணித் தம்மையும் காத்தருளுமாறு இறைவனை உரிமையோடு வேண்டுகிறார். மேலும் வராக அவதாரத்தில் பரமன் கூறியனவற்றை நினைவுகூர்ந்து நிற்கிறார் கோதையார்.

''அன்புடன் என்னையே கதியென எவன் உறுதியுடன் அடைவானோ அவனுடைய நினைவு கடைசியில் தடுமாறும் காலத்தில் நானே அவனுக்கு நன்மையைச் சங்கல்பித்து அவனுக்கு நல்ல பதவியளிப்பேன்36 என்னும் வராக சரம சுலோகச் சொற்

20. வில்லிபாரதம் - ஆதிபருவம் - சம்பவச் சருக்கம் பா.111
21. நாலா திவ் முதலா ப.74
22. வில்லிபாரதம் - சபாப் பருவம் - இராஜசூயச்சருக்கம் - பாடல் 142 உரை
23. நாச்சியார் திருமொழி 14-9 - (1-2)
24. ,, ,, 5-7-1
25. ,, ,, 3-1-2
26. ,, ,, 10-10-1
27. ,, ,, 11-5-3
28. Studies in the epics and puranas of India - (Int. P(ixi) 1955
29. History of Philosophy. Eastern and Western Vol II. Page 125-1952
30. 1) பரிபாடல். பா. 4 - அடி - 19-21
    மேற்படி. பா. 4 - அடி 22-23
    2) முல்லைப் பாட்டு அடி 1-3
    3) அகம் பா. 220-5
    4) புறம் பா. 378: 18-19
31. Lord Sri Krishna - His life and teachings - Vol II Page. 154-1955.
32. நாச்சியார் திருமொழி - 8-7-1
33. ,, ,, 9-1 (3-4)
34. ,, ,, 10-9 (1-3)
35. ,, ,, 11-8
36. தசாவதார தத்துவங்கள் - பக்.37

களையும் சிந்தித்து வராகப் பெருமானாகி நின்ற பரமன் வந்து தன்னைக் காக்க வேண்டிய கடப்பாடுடையவன் என்னும் கருத்தைப் புலப்படுத்துகிறார்.

திருமாலின் அவதாரங்களிலேயே மிகவும் அச்சம் தரும் அவதாரம் நரசிம்மாவதாரமாகும். கொடுமை, தன்னைக் காட்டிலும் பெரியதொரு கொடுமையால் அடித்து ஒடுக்கப்படும் என்பது இந்த அவதாரத்தின் உட்பொருள். இறைவன் மனித உயிர்கள் தனக்கு எதிராக இயங்கினாலும் பொறுத்துக் கொள்வான். தன் அடியார்க்குத் தீங்கு செய்தால் பொறுத்துக் கொள்ள மாட்டான் என்பதை விளக்குகிறது இவ்வவதாரம். இந்த உக்கிர உருவத்தையும் ஆழ்வார்கள் கண்டு அஞ்சி ஒதுங்கினாரில்லை. பாடிப் பரவினர்.

தாம் அம்மி மிதித்த அனுபவத்தை வெளியிட்ட ஆண்டாள் தம் தமையன்மார் வந்து பொரிமுகந்தட்டும் செய்தியைக் கூறியபோது

''அரிமுகனச்சுதன் கைமேலென் கைவைத்து
பொரிமுகந்தட்டக் கனாக்கண்டேன் தோழீநான்''37

என்று குறிப்பிட்டுக் கொடுமை, இனிமை இரண்டையும் இணைத்து இரணியவதத்துக்காக அரிமுகத்துடன் அவதரித்த அச்சுதனை ஓர்ந்து நிற்கிறார். ஆண்டாள் அகப்பொருள் நலம் ததும்ப மேலும் ஓரிடத்தில் அவ்வவகாரத்தில் ஈடுபடுகிறார்.38

திருமாலின் அவதாரங்களில் மிகவும் சாந்தமானது வாமனாவதாரம். இதில்தான் முதன் முதலாகப் பகவான் முழுமை பெற்ற மனிதனாகத் தோன்றினான். மனிதன் சிறிய உருவத்தில் இருப்பினும் அரிய செயல்களை இயற்றுதல் இயலும் என்பதை இந்த அவதாரம் உணர்த்துகிறது. சிறியவை பல சேர்வதே பூரணம். இதையும் இறைவன் எடுத்த வாமனாவதாரம் போதிக்கிறது.

ஆண்டாள் உள்ளத்தில் இவ்வவதாரம் ஆழ்ந்து படிந்து கிடந்தமையை அவர் பதினான்கு இடங்களில் இவ்வவதாரத்தைச் சுட்டுகின்றமையால் அறியலாம். ஆண்டவன் எடுத்த அவதாரங்களை பத்தனுள் அழித்தல் என்பது இல்லாதது இந்த ஓரவதாரத்தில் மட்டுமே. மாவலி பகைவன் அல்லன். திருமால் அவனை அழிக்க வந்தவனும் அல்லன். தன் திருவடியின் பரிசத்தால் அவனுக்கு அருள் செய்யவே வந்தான். அதை உளங்கொண்ட ஆண்டாள் மதனிடம் ''திரிவிக்கிரமன் திருக்கைகளால் தன்னைத் தீண்டுதல் வேண்டும்''39 என்று வேண்டுகிறார். மாவலி கடவுளது காலால் தீண்டப் பெற்றே காலமெல்லாம் நிலைபெற்று விட்டான். அவன் கையால் தீண்டப் பெறறால் தாமும் அவனுடன் சேர்ந்துவிட முடியும் என்று அவாவி நிற்கிறார்.

''அப்பாதங்களால் தம் சிற்றில்லை அழிக்கக் கடவாயோ''40 என்று வினவுகிறார். வேங்கடத்திலும் திருக்கண்ணபுரத்திலும் மகிழ்ந்துரை வாமனன் ஓடிவந்து தன் கையைப் பிடித்துத் தன்னுடன் அணைத்துக் கொள்ள வேண்டுகிறார்41 குறளனாய் வந்து நெடியனாய் நிமிர்ந்து நின்றமையைச் சிந்திக்கிறார்42 அவன் உலகளந்தமையைப் பலமுறை சுட்டுகிறார்.43

இந்த அவதாரத்தின் சிறப்பு நோக்கியே போலும் திருக்குறள்.

''மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்
தாஅய தெல்லாம் ஒருங்கு''44

என்று வாமனாவதாரத்தை மட்டும் உரைத்து நிற்கிறது.

வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய அறங்களை உணர்த்துவது இராமாவதாரம். இந்த அவதாரத்தை அம்மையார் தம் திருமொழியில் ஒன்பதுமுறை சுட்டி நிற்கிறார்.45

இராம, இராவணப் போர் இருநாடுகட்கு இடையே நிகழ்ந்த போர் அன்று, அறம், மறம் ஆகியவற்றுக்கிடையே நிகழ்ந்த போர். அப்போர் பற்றியே ஏழு இடங்களில் சுட்டி நிற்கிறார் ஆண்டாள். போருக்குக் காரணம் இராவணன் கவர்ந்து சென்ற திருமகளை மீட்டு வருதல் தானே? எனவே, திருமகளது உரிமைகளை எல்லாம் பெறுதற்குரிய தன்னை மட்டும் காத்தற்குப் பரமன் வராமை அவர் மனத்துள் வேதனையை ஏற்படுத்துகிறது. அதனால் சீற்றமும் ஏற்படுகிறது. அதன் பயனாக மனைவியைத் தவிர மற்றவரை ஏறெடுத்தும் பாராத இராமனை 'உன் மணவாட்டி மாரொடு சூழுறும் சேதுபந்தம் திருத்தினாய்46 என்று குத்தலாகக் கூறுகிறார். அவ்வாறு கூறக் காரணம் தம்மைக் காத்தற்குப் பரமன் வராமையே என்பதை மற்றோரிடத்துப் புலப்படுத்துகிறார்.47 மாயத் தலையைக் காட்டி சீதையிடம் இராமன் இறந்தான் என்றான் இராவணன். சீதை தளர்ந்தாள். இதனை உணர்ந்த அறமகன், இராமன் கடற்கரையிலே நின்று தன் சார்ங்க வில்லை ஒலிப்பித்து, சீதையின் வேதனை தவிர்த்தான். அதுபோல அச்சார்ங்கவில் நாணொலியைத் தாம் அண்மையில் செவிமடுத்தல் எந்நாளோ?48 என்று வருந்திப் பேசுகிறார்.

மேலும் இராமாவதாரத்தை,

''கொல்லையரக்கியை மூக்கரிந்திட்ட குமரனார் சொல்லும் பொய்யானால் நானும் பிறந்தமை பொய்யன்றே49 என்ற அடிகளால் சுட்டுகிறார். கொல்லையரக்கியை மூக்கரிந்த குமரனார் என்ற தொடரால் இராமனைச் சுட்டினார். ஒருவர் மெய்யான அன்போடு என்னை வந்து பற்றாவிட்டாலும் அன்பன் போலப் பாவனை செய்து கொண்டு வந்து சேர்ந்தானேலும் அவனையும் நான் ஒருவிதத்திலும் கைவிடமாட்டேன்.50 என்று கூறியவனாயிற்றே இராமன்; அவன் வார்த்தையே உண்மைக்குப் புறம்பாகுமானால் தம் பிறப்பே பொய்யாய் விடுமே'' என்று வருந்தி நிற்கிறார்.

பலராமன் ஆதிசேடனின் அம்சம். கோரபிரலம்பன் என்னும் அசுரனைக் கொன்றவன். கலப்பையைத் தன் ஆயுதமாகக் கொண்டவன்51 என்ற குறிப்புகள் திருமொழிகளால் வெளிப்படுகின்றன.

'கிருஷ்' என்றால் 'தன்னிடத்தில் எல்லாவற்றையும் கவர்ந்து கொள்வது''52 என்பர் பகவன்தாசு. இவ்வாறு எல்லாவற்றையும் கவர்ந்து கொள்ளும் சிறப்புடைய, ''கிருஷ்ணாவதாரமோ வைகுண்டத்திற்கும் பிரம்மாண்டத்திற்கும் மேலுள்ளதும் எந்தப் பிரளயத்திலும் அழியாததுமான கோலோகத்திலுள்ள ஸ்ரீசாட்சாத் கிருஷ்ணனுடைய அவதாரம்''53 என்று கர்க்க சம்கிதை குறிப்பிடுவதாக அறிஞர்

37. நாச்சியார் திருமொழி - 6-9-2
38. '' '' 8-5. 3-4
39. '' '' 1-7-3
40. '' '' 2-9-3
41. '' '' 4-2-2
42. '' '' 4-9
43. '' '' 5-5-4; 5-10 1-8; 6(1-2). 11-4-2. 11-5 (1-2)
44. திருக்குறள் - பாடல் 610

45. நாச்சியார் திருமொழி
(1) 2-6 (3-4) (2) 2-7 (3-4) (3) 3-3-3
(4) 3-4-3 (5) 5-3 (1-2) (6) 5-8-1
(7) 8-8 (1-2) (8) 9-9-4 (9) 10-4-3
46. நாச்சியார் திருமொழி 2-7 (3-4)
47. '' '' 9-9-4
48. '' '' 9-9-4
49. '' '' 10-4 (1-2)
50. நாச்சியார் திருமொழி - 10-4 (3-4) உரை.
51. '' '' 12-7
52. Krishna - A study in the theory of Avatharas Page - 266. 1929.
53. ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா - ப.71 - 1944.

அரங்கநாத முதலியார் கூறுவார். ''கண்ணன் அறுபத்து நான்கு கலைகளிலும் தலைமை பெற்றமையால் பூர்ணாவதாரம்54 எனப்பட்டதாக சுவாமி சிவானந்தர் குறிப்பிடுவார்.

இந்தச் சம்பூர்ண அவதாரமாகிய கண்ணன் அவதாரத்தில் தாம் காட்சிபழகிக் கிடந்ததாக நாச்சியார் தம்திருமொழி முழுதுமே வெளிப்படையாகக் காட்டுகிறார். திருமொழிப் பாடல்கள் அனைத்தும் அவனுக்காகவே பாடப்பட்டன. அவற்றுள் பாரதக் கண்ணனின் செயலையும் இரண்டு இடங்களில் நினைவு கூர்ந்து நிற்கிறார் நாச்சியார்.

''கண்ணாலங் கோடித்துக் கன்னிதன்னைக் கைப்பிடிப்பான்
திண்ணார்ந்திருந்த சிசுபாலன் தேசழிந்து
அண்ணாந்திருக்கவே ஆங்கவளைக் கைப்பிடித்த
பெண்ணாளன்''55

என்று திருமகளின் மாற்றுருவாய்த் தோன்றிய உருக்குமினியைச் சிசுபாலனிடமிருந்து காத்தமையால், உலககமகளிர் அனைவரையும் காத்தவன் என்று கொண்டு, 'பெண்ணாளன்' என்று கூறினார்.

கண்ணனை அணையும் நாள் நோக்கிக் காத்திருந்தவள் உருக்குமிணி. 'சிசுபாலனை மணப்பதை விட இறப்பது மேல்' என்றிருந்த உருக்குமிணி தங்கியிருந்த புறஞ்சோலையிலே நின்று பரமன்தன் பாஞ்சசன்னியத்தை ஊதினான். அதுதன் செவியில் புகுந்த போது மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்தாள் திருமகளின் அம்சமான உருக்குமிணி. அதுபோலப் பரமன் வந்து தன் பாஞ்ச சன்னியத்தால் நிலமகளின் அம்சமான தன்னைப் பரவசப்படுத்தும் நாள் எந்நாளோ? என்ற ஆதங்கத்தோடு கூறி நிற்கின்றார்56 நாச்சியார்.

பரமன் எடுத்த மற்றொரு அவதாரம் நரநாராயணாவதாரம். அதுபற்றியும் கோதையார் குறிப்பிடத் தவறவில்லை. நர பர்வதம், நாராயண பர்வதம் என்ற மலைகளுக்கிடையே உள்ள பள்ளத்தாக்கில் பதரிகாசிரமத்தில் பரமன் நரநாராயணர்களாகத் தோன்றினான். அவ்வவதாரத்தையும் அம்மையார், ''நாமமாயிரமேத்த நின்ற நாராயணா நரனே''57 என்று குறிப்பிடுகின்றார்.

இவைபோன்ற செய்திகளால் நாச்சியாரின் உள்ளம் அவதாரத்துவங்களில் ஆழ்ந்து கிடந்தமையை அறியலாம்.

திருமால் எடுத்த அனைத்து அவதாரங்களிலும் எல்லோர் மனத்தையும் கொள்ளை கொண்டது கிருஷ்ணாவதாரமே. இதற்குக் கண்ணனின் பிள்ளைமை விளையாட்டுக்களும், ஒரு பெருங் காரணமாகி இருத்தல் வேண்டும். திருமொழிப் பாடல்களும் நாச்சியாரின் மனம் திருவிளையாடல்களில் ஈடுபட்டமையைத் தெரிவிக்கத் தவறவில்லை.

கண்ணன் பூதனையை வதைத்தமை, உரலில் கட்டப்பட்டமை, மருதுக்கிடைபோய் நளகூபரன், மணிக்கிரீவன் ஆகியோருக்கு விடுதலை அளித்தமை, புள்வாய் பிளந்தமை, குவலயாபீடம் என்ற யானையைக் கொன்றமை, எருத்தினை வீழ்த்தியமை, காளியனை அடக்கியமை, மல்லர்களை வீழ்த்தியமை, கம்சனைக் கொன்றமை, தேனுகனைக் கொன்றமை, கன்று மேய்த்து விளையாடியமை, குன்றினைக் குடையாகப் பிடித்தமை போன்ற செய்திகளை நாச்சியார் தம் திருமொழியில் நயம்படக் கூறியுள்ளார்.

பூதனை வதம் பற்றிப் பேசிய சுவாமி கிருஷ்ணதாச அச்சுதா உலகக் குழந்தைகளை எல்லாம் அரக்கியிடம் இருந்து பாதுகாத்து அவளுக்கும் வீடுபேற்றை அளித்தான்... கண்ணனின் பகைவரை நேசிக்கும் பாங்கு இதனால் புலப்பட்டது''58 என்றுக் குறிப்பிட்டுப் பூதனை வதத்தின் சிறப்பைப் புலப்படுத்துகிறார்.

''வஞ்சகப்பேய்ச்சி பாலுண்ட மகிமையிலீ''59 என்று குறிப்பிட்டுக் கண்ணனைப் பழிப்பது போலப் புகழ்கிறார். இதனால் பகைவரையும் நேசிக்கும் பாங்குடைய பரமன் அவனையே உயிரெனக் கொண்டொழுகும் தம்மைத் தளர்வகற்றாமையையும் புலப்படுத்துகிறார் நாச்சியார்.

ஆயர்பாடியில் புகுந்து வெண்ணெய் உண்ட கண்ணன் ஆய்ச்சியரால் உரலொடு பிணைத்து வைக்கப்பட்டான். தாமத்தால் உதரத்தில் கட்டப்பட்டமையால் தாமோதரன் எனப்பட்டான். இவன் தன்னைக் கட்டி வைத்த உரலை இழுத்துக் கொண்டு இரண்டு மருத மரங்களுக்கு இடையில் சென்றான். அதனால் அம்மரங்கள் வீழ்ந்தன. சாபத்தால் மரங்களாகி நின்ற நளகூபரன், மணிக்கிரீவன் ஆகியோர் வீடுபேறு பெற்றனர். இந்நிகழ்ச்சியை நாச்சியார் நான்கு இடங்களில் பேசுகிறார்.60 இதுவும் பிறர்கெல்லாம் அருள் செய்த இறைவன் தனக்கருளாது காலந்தாழ்த்துவதன் காரணமறியாது நாச்சியார் தவித்து நிற்றலை நமக்குப் புலப்படுத்துகிறது.

பகைவனாம் கம்சனால் ஏவப்பட்டவர்களில் பறவை உருவில் வந்த பகாசுரனும் ஒருவன். ''இவன் பூதனையின் உடன்பிறந்தவன்61 என்றும் கூறுவர் பீமன்பிகாரி மசும்தார். இவ்வசுரன் பற்றிய நிகழ்ச்சியினை நாச்சியார் தம் திருமொழியில் மூன்று இடங்களில் குறிப்பிடுகிறார்.62

கண்ணன் காளியனை அடக்கினான் என்றும் ஒரு செய்தி, கண்ணனைப் பற்றிக் கூறிய பலராலும் கூறப்படுவது'' இது ஒரு வேளை ஐம்புலன்களையும் ஆன்மா ஆட்சி புரிதல் வேண்டும் என்பதைக் குறிப்பதாதல் வேண்டும்' 63 என்பார் பகவன்தாசு. நடப்பிலிருந்த நாகவணக்கத்தைப் போக்குதற்குச் செய்த முயற்சியே காளியவதம்64 என்பார் டாக்டர் ஜெ.என்.பானர்ஜி.

கண்ணனின் இத்திருவிளையாடலைத் திருமொழியில் மூன்றிடங்களில் குறிப்பிட்டு நிற்கிறார் நாச்சியார்.

''குதிகொண்டு அரவில் நடித்தாய்''65
''ஆய்ச்சிமார்களு மாயரு மஞ்சிடப்
பூத்த நீள கடம்பேறிப் புகப்பாய்ந்து
வாய்த்த காளியன்மேல் நடமாடிய கூத்தனார்66
''நீர்க்கரை நின்ற கடம்பை யேறிக்
காளியனுச்சியில் நட்டம் பாய்ந்து,
போர்க்களமாக நிருத்தம் செய்த
பொய்கைக்கரைக் கென்னை உய்த்திடுமின்''67

என்று கூறுகிறார். ''வாயத்த காளியன்'' என்ற தொடரால் காளியனின் நற்பேற்றையும் தனது பேறின்மையையும் குறிப்பிட்டு நாச்சி

54. Lord Sri Krishna - His leelas & teachings (Int. P.P. XXV & XXVI) 1960
55. நாச்சியார் திருமொழி - 1) 11-9 (2) 4-7-(1-2)
56. நாச்சியார் திருமொழி 9-9-3
57. நாச்சியார் திருமொழி 2-1-1
58. Srimad Bagavatham Retold & Commented) - P. 231. 1976.
59. நாச்சியார் திருமொழி 3-9-4.
60. நாச்சியார் திருமொழி 4-6-1-, 4-7-1, 7-6 (1-2), 12-8-2.
61. Krishna in history & legend Page - 73. 1969.
62. நாச்சியார் திருமொழி 1-2-4
63. Krishna - A study in the theory of Avataras - page 42 1962.
64. The story of Krishna in Indian Literature Page 12-1976.
65. நாச்சியார் திருமொழி 3-2-4
66. நாச்சியார் திருமொழி 4-4 (1-4)
67. நாச்சியார் திருமொழி 12-5 (1-4)

யார் தம் வேதனையை வெளிப்படுத்துகிறார்.

ஓர் ஆடவனை ஒரு பெண் விரும்புவதற்குரிய காரணங்களில் ஒன்று அவனது வீரமும் ஆம். அவ்வீரம் கண்ணனிடத்தில் நிறைந்து கிடந்தமையை வெளிப்படுத்தும் வீரத்திருவிளையாடலே குவலயா பீடம் என்னும் யானையின் கொம்பொடித்தமை, நாச்சியார் இத்திரு விளையாடலில்68 இரண்டிடங்களில் ஈடுபடுகிறார்.

முல்லை நிலத்து மக்கள் ஆயர்கள், கால்நடைகளே அவர்தம் செல்வங்கள். அக்கால்நடைகள் உய்தலை வேண்டி அவர்கள் இந்திர பூசை செய்து வந்தனர். கோவர்த்தனக் குன்று ஆயர் செல்வங்களைக் காப்பது என்பதை ஆயர்களுக்குக் கூறிய கண்ணன் இந்திர பூசைக்காகச் சேகரித்த் பொருள்களை அக்கால்நடைகளுக்கே உணவாக்குமாறு செய்தான். இச்செயல் பற்றி, 'இந்திரனுக்கு விழாச் செய்தலைத் தவிர்த்து அவ்வுணவை ஏழைகளுக்கும், பசுக்களுக்கும் அளிக்கச் சொன்னான்''69 என்று குறிப்பிடுகிறார் பீமன்பீகாரி மசும்தார். நாச்சியார்தம் உள்ளத்திலும் இவ்வருட்செயல் ஆழ்ந்து பதியத் தவறவில்லை.

''காலிகளுய்ய மழைதடுத்து
கொற்றக் குடையாக ஏந்திநின்ற
கோவர்த்தனத்து என்னை உய்த்திடுமின்''70

என்று குறிப்பிடுகிறார். கண்ணனின் அவதார நோக்கம் தீமை தீர்த்தலும் நன்மை காத்தலுமே. எனவே, ஆயர் கூட்டத்துக்குத் தீமை செய்த இந்திரனின் செயலினின்று ஆயர்களைக் காத்தற்காகக் கோவர்த்தனக் குன்றை உயர்த்தியதாகக் கூறப்படுகிறது. இதனை, ''அறிவியல் யுகத்தின் விளக்கம்''71 என்கிறார் சென். இந்த நிகழ்ச்சி பற்றிக் கூறிய டாக்டர் இராதாகிருஷ்ணன், ''புராணங்களில் உண்மைகள் கற்பனைக் கதைகளால் அழகு செய்யப்படுகின்றன''72 என்கிறார். ஆனால் கோதையாரே எனில், காலிகளுய்யக் காத்தவன் தான் உய்ய உதவுவான் என்ற உறுதியுடன் தம்மைத் தேடிப் பரமன் வரா விட்டாலும் அவனிருக்குமிடத்துக்குத் தாம் போதலை விரும்பி நிற்கிறார். இது ஆத்மபோதம் பெற்றுவிட்ட ஆன்மாவின் துடிப்பாகவே உள்ளது.

கண்ணன் திருவிளையாடல்களில் ஒன்று கோபியர் துகில் கவர்ந்தமை. இந்நிகழ்ச்சிக்குப் பல்வேறு தத்துவங்கள் - பொருள்கள் கூறப்படுகின்றன. தைத்திரீய ஆரண்யகாவில் ''ந அப்சு மூத்ரபுரீசம் குரியாத்''73 என்று ஒரு தொடர் கூறப்படுகிறது. பொதுமக்கள் பயன்படுத்தும் நீரை அசுத்தப்படுத்துதல் கூடாது என்பதே அதன் பொருள். கோபியர் பற்றிய இந்நிகழ்ச்சி பொதுமக்கள் பயன்படுத்தும் நீரை இவர்கள் அசுத்தப்படுத்தியமையையும், அவரிடையே ஆடையின்றி நீராடும் வழக்கம் இருந்தமையையும் காட்டுகிறது. கண்ணன் துகில் கவர்ந்தமை ''கோபியரின் நாணமற்ற செயலை ஒழித்து ஒரு நீதி போதித்தமையே''74 என்பார் சென். இவை அறிவியல் நோக்கில் அமைந்த விளக்கங்கள்.

''கிருஷ்ணாவதாரத்தில் கிருஷ்ணனைக் கடவுளாக அனுபவித்தவர் கோபியர்''75 என்றும் கோபாலகிருட்டிணன் நாயுடுவின் கருத்து. கோபியர் கண்ணன் உறவின் உண்மை நிலையைப் புலப்படுத்துகிறது.

துகில் கவர்ந்த செயலுக்கு 'வறுக்கப்பட்டு விட்ட விதை செடியாக வளர்வதில்லை. அதுபோலக் கறை நீங்கிய மனத்தொடு உயிர்கள் இறைவனைக் காணும்போது அவற்றுக்கு வெட்கமோ, நாணமோ தோன்றுவதில்லை''76 என இச்செயலுக்குச் சிறந்த தத்துவக் கருத்தைக் கற்பிக்கிறார் பட்டாச்சார்யா. இந்நிகழ்ச்சி பேரின்பத்தில் நாட்டங் கொண்ட நெஞ்சுறுதி சிற்றின்பத்தால் சிதறுறாது என்ற உண்மை நிலையை அறியும் சோதனை முறையே என்று தோன்றுகிறது.

சூடிக் கொடுத்த சுடர்க்கொடியும் இந்த உண்மையை உணர்ந்தவர் போலவே மூன்றாந்திருமொழியில் இச்செய்திகளைச் சுட்டி நிற்கிறார். இது நாச்சியார் பக்குவப்பட்டு விட்ட ஆன்மா என்பதைப் புலப்படுத்துவதாகவே உள்ளது.

நாச்சியாரின் உள்ளம் கோவிந்தனின் வீரச் செயல்களில் ஈடுபட்டது. திருமொழியில் திருமாலை அடைவதையே குறிக்கோள் என்று கூறிய நாச்சியாரின் மனம் நப்பின்னையை மணக்க ஏழுருவங் கொண்டு கண்ணன் ஏழு எருதுகளை வலியடக்கிய செய்தியில் ஈடுபட்டமையை ''எருதும்.... வீழமுன்கொன்றவன்''77 என்றும் அடிகளில் வெளிப்படுத்துகிறது.

அதுபோலவே தேனுகாசுரனை வீழ்த்திய நிகழ்ச்சியிலும் ஈடுபடுகிறார்.78

நாச்சியார் திருமொழியில் பாரதக் கண்ணனும் பேசப்படுகிறான் என்பதை முன்னர்க் கண்டோம். அவற்றுள்

''அன்றின்னாதன் செய்சிசுபாலனும்
.... வீழமுன் கொன்றவன்''79

என்ற தொடரும் ஒன்று. உருக்குமிணியாகித் தோன்றிய திருமகளுக்காகச் சிசுபாலனிடம் பகைமை கொண்டவன் கண்ணன். இதனால் கனன்றிருந்த சிசுபாலன் தருமனின் இராசசூய யாகத்தில் கண்ணனுக்கு அக்ரபூசை செய்யப்பட்டதைக் கண்டு சினந்து அளவற்ற வசை மொழிகளைப் புகன்றான். அவனது நூறு குற்றங்களைத் தான் பொறுப்பதாக வாக்களித்திருந்த கண்ணன் அவ்வுறுதி நிறைவேறி விட்ட நிலையில் தன் திருவாழியினால் அவனது தலையைத் துணித்தான். அவன் ஒளியுடலம் பெற்று எம்பெருமானின் திருவடிகளை அணைந்தான்.

நிலமகளின் அம்சமாகித் தோன்றிய ஆண்டாள் திருமகளுக்காகத் திருமால் செய்தவற்றைச் சிந்தித்துத் தனக்காக அவன் வாராமையை எண்ணி வருந்தி நிற்றல் இங்குப் புலப்படுகிறது.

தீமை தீர்க்கப் பிறந்த கண்ணன் கம்சன் ஏவிய அசுரர்களை அழித்ததோடன்றி அவனால் ஏவப்பட்ட சாணூரன், முட்டிகன் என்னும் மல்லர்களையும் வீழ்த்தினான்.80 பின்னர்க் கம்சனையும் அழித்தான். அதற்குக் காரணம் கண்ட ஆய்வாளர் சதுர்புஜசகாய், ''நாடு முழுவதும் அச்சுறுத்தும் ஆட்சியே நிலவி வந்தது''81 என்பார்.

68. நாச்சியார் திருமொழி (1) 4-5-3 (2) 7-1-3
69. Krishna in history & Legend Page. 237. 1969.
70. நாச்சியார் திருமொழி - 12-8 (3-4)
71. Lord Sree Krishna - His life and techings Vol. I. Page. 137. 1954.
72. Indian Philosophy - Vol. I. Page 25, 1948
73. Thithriya Aranyaka - Prasnah - I - Section 216. Page 113
74. Lord Sree Krishna - His life and teachings - Vol I - Page 126, 1954.
75. ஆழ்வார்கள் அனுபவித்த ஆயர்பாடி அதிபதி - ப.22 - 1971.
76. The Philosophy of Srimad Bagavatham. Vol I. Metaphysics - P.115
77. நாச்சியார் திருமொழி 4-7-3
78. நாச்சியார் திருமொழி 14-9-3
79. நாச்சியார் திருமொழி 4-7 (1-2)
80. நாச்சியார் திருமொழி 12-1-4
81. The Politics and the philosophy of Lord Krishna P.12, 1958

எனவே கம்சனை அழித்து அவ்வச்சுறுத்தும் ஆட்சியை அகற்ற வேண்டியது கண்ணனின் கடமையாயிற்று. இக்கம்சனைக் காய்ந்த மையை அம்மையார் மூன்று இடங்களில் சுட்டுகிறார்.82 இவற்றுள் கஞ்சனை வஞ்சனையில் வென்றவன் என்று கூறுவதால் கண்ணன் வஞ்சனையை வஞ்சனையால் வீழ்த்த வந்தவன் என்பது புலப்படுத் தப்படுகிறது.

இவற்றால் நாச்சியார் கண்ணனின் திருவிளையாடல்களில் ஆழ்ந்து ஈடுபட்டமையை நம்மால் தெளிந்து கொள்ள முடிகிறது. மேலும் நாச்சியார் கண்ணனின் கலைத்தன்மை மிக்க திருவிளையாட லையும் கண்டுகளிக்கத் தவறினார் இல்லை. கிருஷ்ணாவதாரத்தில் அவன் ஆடிய ஓராடல் குடக்கூத்து. இது பதினோராடலில் ஒன்று என்றும், அறுவகைக் கூத்தில் ஒன்று என்றும் கூறிச் சிலப்பதிகார உரையில் அடியார்க்கு நல்லார் காட்டுவர்.83

கண்ணன் இக்கூத்தினை ஆடியமையை நாச்சியார்தம் திருமொழியில் மூன்று இடங்களில் சுட்டுகிறார்.

''குடத்தை எடுத்தேற விட்டுக் கூத்தாடவல்ல எங்கோ''84
''குடமாடு கூத்தன்''85
''குடந்தைக் கிடந்த குடமாடி''86

என்பனவே அவை. இக்கூத்து இடையர்க்குச் செல்வம் விஞ்சினால் அதனாலுண்டாகும் செருக்குக்குப் போக்குவீடாக அவர் ஆடும் கூத்து என்று கூறுதலும் உண்டு என்பர்.

ஆண்டாள் அல்லும் பகலும் கண்ணனின் அழகுத் திருமேனி யைச் சிந்தித்தவர். அக்கருமையை அதன் அழகினை வெளிப்படுத்த தற்கு அவர் கையாளும் சொல்லோவியங்கள் சுவைமிக்கன.

காயாவண்ணன்87, கருவிளைபோல் வண்ணன்88, கருந்தெய் வம்89, சாமத்தினிறம் கொண்ட தாளாளன்90, கோலம் கரிய பிரான்91, மணிவண்ணன்92, பைங்கிளிவண்ணன்93. கருமா முகில்94, ஒதநீர்வண்ணன்95, என்று பல்வேறு தொடர்களால் கண்ண னின் திருமேனி வண்ணம் கருமை, நீலம், பசுமை எனப் பொருத்தமு றச் சுட்டியுள்ளார்.

''அடிப்படையான நிறங்கள், நீலம், மஞ்சள் சிவப்பு. இவை ஒன்றுபடும்போது மனிதனைப் பொறுத்தவரையில் கருமை நிறம் தோன்றும். ஆற்றலின் அளவை அறிந்து கொள்வதற்கு நிறம் ஒன்றே அளவுகோல் என்பர் அறிவியல் அறிஞர். உலகின் அடிப்படைக் காரணமே ஆற்றல். அவ்வாற்றல் ஒன்றுபடும்போது நிர்குணப் பிரம மம் தோன்றும். நிர்குணப் பிரம்மமாகிய கண்ணன் கருமை நிறமாகக் காட்டப்படுகிறான்.96 என்பார் ஸ்ரீநிவாச ராகவ ஐயங்கார். இது நாச்சியார் கண்ணனைக் கருநிறமாகக் கண்டமையின் பொருத்தத்தை யும் புலப்படுத்துகிறது.

மழையோ, கடவுளோ தம் செயலுக்கான கைமாற்றை எதிர் பார்க்கவில்லை. எனவே அம்மழை மேகத்தின் பண்பையே ஆன் றோர் தம் கருத்துள் தோன்றிய கடவுளுக்கும் ஏற்றிக் கூறினராதல் வேண்டும்.

விரிந்த ஆகாயம், பரந்த கடல், உயர்ந்த மலை ஆகியன நீலமா கவே காட்சியளிக்கின்றன. நீலநிறம் நிலைபேறுடைமை, எல்லை யற்ற தன்மை ஆகியவற்றுடன் தொடர்புடையது. அதுபோல அனைத்துலகத்துக்கும் தலைவனாம் கண்ணனும் நிலைபேறுடைய வன், எல்லையற்றவன் என்பதை உள்ளத்தில் கொண்டே நாச்சியார் கண்ணனை நீலநிறமாகக் கொண்டார் எனலாம்.

பசுமை, நிறைவு, செழுமை, தன்மை, இனிமை, ஆகியவற்றைக் குறிப்பது. எனவே இப்பண்புகள் அனைத்தையும் தன்னிடத்துக் கொண்ட கண்ணனை நாச்சியார் பசுமை நிறமுடையவனாகக் கண் டமை சிறப்புடைத்து.

அழகு இன்பமளிப்பது. அது காண்போர் கண்ணையும் கருத்தை யும் கவர்வது, அழியாதது. அத்தகைய அழியாத அழகைத் தன்னி டத்து நிலையாகக் கொண்டவன் கண்ணன். பரமன் பல்வேறு அவதா ரங்களைக் கொண்டபோதிலும் ஏனைய அவதாரங்களை விட, கண் ணனின் அவதாரம் மக்களை மிகவும் கவர்வதற்குக் காரணங்கள் இரண்டாம். ஒன்று அவனது பிள்ளைமை விளையாட்டுகள். இரண்டு உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் அவனது பேரழகு எனலாம்.

செய்ய தாமரைக்கண்ணன்97, தன்கைச்சார்ங்க மதுவே போல் புருவ வட்டம் அழகியவன்98, பவளவாயன்99, நாள்மலர் மேல் தேனுகரும் அன்னம்போல் செங்கண்கருமேனி100, என்னரங்கத் தின்னமுதர், குழலழகர், வாயழகர், கண்ணழகர், கொப்பூழில் எழுகம லப் பூவழகர்101, களிவண்டு எங்கும் கலந்தாற்போல் கமழ்பூங்குழல் கள் தடந்தோள்மேல் மிளிர நின்று விளையாட102 உருவு கரிதாய் முகம் செய்தாய் உதயப் பருப்பதத்தின் மேல் விரியும் கதிரே போல் வான்103 அருத்தித் தாரா கணங்களால் ஆரப் பெருகு வானம் போல் விருத்தம் பெரிதால் வருவான் 104. நாங்கள் இழைத்த கோலம் கழித்தியாகிலும் உந்தன்மேல் உள்ளமோடி உருகலல்லால் உரோட மொன்றும் இலோங்கண்டாய்105 பீதகவண்ணவாடை106 உன்தன் பேச்சும் செய்கையும் எங்களை மையலேற்றி மயக்க உன் முகம் மாய மந்திரந்தான் கொலோ107 என்பன போன்ற கருத்துக்களை நாச்சி யார் திருமொழியில் பரக்கக் காணலாம். இவை கண்ணனின் பேரழ கையும் அதனைக் கண்டார்தம் கருத்தை எல்லாம் இழந்தமையையும் இனிது புலப்படுத்துகின்றன.

''கண்ணனின் பாட்டன் தலைமுறையைச் சார்ந்த வீடுமன் நூறு வயதிற்கும் மேற்பட்டவன். தன் உயிரை உகுக்க உத்தராயணத்தை எதிர்பார்த்து மரணப்படுக்கையில் இருந்தவன், அருகில் நின்ற கண் ணனின் அழகால் கவரப்பட்டு இளையோரையும் மகளிரையும் பைத்

82. நாச்சியார் திருமொழி 4-6 (2-3), 4-7 (3-4), 13-3 (1)
83. சிலப்பதிகாரம் - கடலாடுகாதை 54-55 உ.வே.சா. பதிப்பு.
84. நாச்சியார் திருமொழி 3-6-3
85. '' '' 10-7-3
86. '' '' 13-2-3
87. '' '' 1-6-3
88. '' '' 1-6-3
89. '' '' 13-1-1
90. '' '' 8-2-2
91. '' '' 3-5-4
92. '' '' (1) 1-10 (2) 5-1-1
93. '' '' 5-9-1
94. '' '' (1) 14-7-2 (2) 2-4-4 (3) 1-6-3
95. '' '' (1) 12-7-2 (2) 2-7-3 (3) 12-5-2 (4) 10-1-1 (5) 1-9-2 (6) 2-8-4 (7) 7-8-2 (8) 1-2-3
96. Sri Krishna Charitham with Science and Vedanda Page 34, 1981.

97. நாச்சியார் திருமொழி - 2-4-4
98. '' '' 14-6 (1-2)
99. '' '' (1) 5-1-4 (2) 7-1-2 (3) 10-3-2
100. '' '' 7-7 (1-2)
101. நாச்சியார் திருமொழி 11-2 (1-3)
102. '' '' 14-8 (3-4)
103. '' '' 14-6 (3-4)
104. '' '' 14-7 (3-4)
105. '' '' 2-5 (2-3)
106. '' '' 13-1 (3-4)
107. '' '' 2-4 (1-2)

தியமாக்கும் அழகிய நிறம் ஒளிமிக்க ஆடை, தாமரை முகத்தில் தவழ்ந்து விளையாடும் சுருள் கேசம், அன்புப் பார்வை, சிலிர்க்க வைக்கும் ஒலி, அழகிய குறுநகை, சிறப்புப் பேச்சு போன்ற ஒவ்வொரு அசைவையும் நிலையையும் கண்ணிமைக்காது காண்பார். அனைவரது உள்ளங்களும் கனவு, நினைவு, உறக்கம் ஆகிய மூன்று நிலைகளிலும் அவற்றை விரும்பும்108 என்று கூறுவதாகக் குறிப்பிடுகிறார் பகவன்தாசு. இச்செய்தி கண்ணனின் பேரழகு அவன்காலத்து வாழ்ந்த இளைஞர்களை, மங்கையரை மட்டுமின்றி முதியோர்களையும் கூடக் கவர்ந்தமைக்குச் சிறந்த சான்றாயமைகிறது. எனவே அல்லும், புகலும் அவனையே கருத்துள் கொண்ட நாச்சியார் அவனது அழகில் கருத்தைப் பறிகொடுத்தமை வியப்பன்று. கண்ணனைச் சுட்டியபோது திருமாலின் பெயர்களாகிய நாராயணன்109, இருடீகேசன்110, கோவிந்தன்111, மதுசூதனன்112, கேசவன்113, மாதவன்114, சிரீதரன்115, திரிவிக்கிரமன்116, வாமனன்117, தாமோதரன்118, பத்மநாபன்119 என்று திருமாலின் பன்னிரு நாமங்களில் பதினொன்றை வெளிப்படையாகச் சுட்டுகிறார். விஷ்ணு என்னும் திருநாமத்தைப்

''பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும்
அங்காதும் சோராமே ஆள்கின்ற எம்பெருமான்''120 என்னும

டிகளால் மறைமுகமாகச் சுட்டி நிற்கிறார். இவற்றின் மேலாகத் திருமால்121 என்ற பெயராலேயும், கண்ணனைச் சுட்டுவதைக் காண முடிகிறது. மேலும் கோவர்த்தனன்122, அச்சுதன்123, ஈசன்124, வாசுதேவன்125, வைகுந்தன்126 கண்ணபிரான்127 என்னும் பெயர்களால் அழைக்கின்றமையால் பரம்பொருளே கண்ணன் என்னும் பெயர் தாங்கி வந்து தம்மைக் கவர்ந்தது என்பதை நாச்சியார் முற்றிலும் உணர்ந்திருந்தமை புலப்படுகின்றது.

கவிதை நயம் என்று காண்பதாயின் நாச்சியார் திருமொழிப் பாடல்கள் ஒவ்வொன்றும் தனிச்சிறப்புடையன. செய்யுட்கு அழகு செய்வன. உவமை, உருவகம் போன்றவற்றால் சிறந்து விளங்குவன. காட்டாக ஒன்றை மட்டும் காண்போம். கண்ணனுடைய கையில் பாஞ்சசன்யம் என்னும் சங்கு வீற்றிருக்கின்றது. அது நாச்சியார் திருமொழியில்

''தடவரையின் மீதே சரற்காலச் சந்திரன்
இடையுவாவில் வந்தெழுந்தாற் போல''128

தோன்றுகிறது. கருமை நிறமுடைய கண்ணன் கை தடவரையாகவும், அவன் கையில் வைத்து ஊதும் சங்கு சரற் காலச் சந்திர மண்டலமாகவும் உவமைப்படுத்தப்படுகின்றன. சிந்திக்குந் தோறும் சிறப்பினைத் தரும் உவமை.

வாழ்க்கை ஒரு பெருங்கடல். அக்கடலைக் கடத்தற்கு ஒவ்வொருவருக்கும் இன்றியமையாதது உறுதியானதொரு தோணி. நாச்சியாரும் தம் வாழ்க்கைக் கடலைக் கடக்க ஒரு தோணியை அவாவுகிறார்.

''............ பலநாளும்
துன்பக்கடல் புக்கு வைகுந்தனென்பதோர்
தோணி பெறாதுழல்கின்றேன்''129

என்று குழைந்து பாடுகிறார். துன்பக்கடல் கடக்க அவர் வேண்டுந் தோணி ''விஷ்ணுபோதம்'' என்னும் தோணியே. பரமபத நாதனையே தன் வாழ்க்கைக் கடல் கடத்தற்குரிய தோணியாக உருவகிக்கும் அவரது கவிதைச் சிறப்பு உன்னுந்தோறும் உவக்கச் செய்வது.

ஒரு நூல் எழுந்தபின் அதன் தொடர்பாக மேலும் ஒரு நூல் தோன்றுதற்கு அந்நூல் அடிப்படையாதல் வேண்டும் என்பர். அந்த முறையிலும் நாச்சியார் திருமொழி சிறந்து நிற்கிறது. பெரியாழ்வார் பிள்ளைத் தமிழுக்கு வித்திட்டமை போலவே நாச்சியார் குயில், மேகம் போன்றவற்றைக் கோவிந்தனிடம் தூது அனுப்பிய முறையால் பிற்காலத்தில் தூது என்னும் இலக்கியம் சிறக்க வழிவகுத்தார் என்பது உளங்கொளற்குரியது.

மேற்கூறியவற்றால் நாச்சியார் திருமொழியால் அவர்தம் குறிக்கோளை அறிகிறோம். அவர் இறைவனின் பரத்துவ, வியூக, விபவ, அந்தர்யாமித்துவ, அர்ச்சை நிலைகளில் ஆழ்ந்து ஈடுபட்டமையைக் காண்கிறோம். பரமனின் திருவிளையாடல்களில் ஊறிக் கிடந்த அவர்தம் உள்ளத்தின் சிறப்பைக் கண்டு உவக்கிறோம். முடிவற்ற அவனது திருவிளையாடல்களைப் போலவே அவனது அழகுக்கும் ஓரெல்லை இல்லை என்பதை நாச்சியார் நன்கு உணர்ந்திருந்தார் என்பதை நாமும் உணர்கிறோம். நாச்சியார் திருமொழிகள் கவிதைச் சிறப்புடையன என்று கண்டு சுவைக்கிறோம். அவரது திருமொழிகள் அடுத்து வரும் சிற்றிலக்கிய வகையான தூது இலக்கியத்துக்கு வழிவகுத்தமைக் கண்டு மகிழ்கிறோம்.

எனினும் இடையறாத பயிற்சியினால் பக்குவப்பட்டு விட்ட ஆன்மாவுக்கு ஓர் அன்பு உடல் வந்து அமைகிறது. அந்த அன்பு உடலுடன் ஆன்மா ஆண்டவனுடன் இரண்டறக் கலக்கிறது என்னும் அறிவர் கண்ட உண்மைக்கு நாச்சியார் திருமொழி நல்லதொரு சான்றாகி நிற்கிறது.

பயன்பட்ட நூல்கள்:

1. அகம்
2. ஆண்டாளும் மீராவும் பி.ஸ்ரீ.ஸ்டார் பிரசுரம், சென்னை, 1977.
3. ஆழ்வார்கள் அனுபவித்த ஆயர்பாடி அதிபதி. மெர்க்குரிப் புத்தக கம்பெனி, கோயம்புத்தூர், 1971.
4. சிலப்பதிகாரம்.
5. தசாவதார தத்துவங்கள். நஜன் பிரதீபா பிரசுரம், 39 ஆடம் தெரு, மயிலாப்பூர்.

108. Krishna - A study in the theory of Avataras Page 67-68, 1929.

109. நாச்சியார் திருமொழி 2-1-1
110. " " 12-6-2
111. " " 1-3-3, 2-9-2, 6-2-3, 8-3-3
112. " " 10-7-3, 12-4-3, 12-9-1, 6-6-2, 7-5-3
113. " " 1-8-4, 2-5-4
114. " " 2-5-4, 5-1-1, 6-2-3, 7-1-3, 12-1-1, 14-5-1
115. " " 2-1-4, 5-9-1
116. " " 1-7-3
117. " " 4-2-1, 11-5 (1-2), 12-2-3
118. " " 7-4-1
119. " " 7-10-1
120. " " 11-3 (1-2)
121. " " 3-2-2, 5-8-3, 7-6-3, 8-1-2.
122. " " 13-8-2, 14-2-2
123. " " 6-9-3
124. " " 14-4-2, 14-5-2
125. " " 7-7-2
126. " " 5-4-2
127. " " 10-6-1
128. " " 7-3 (1-2)
129. " " 5-4 (1-2)

6. திருக்குறள்.

7. திருப்பாவை, அண்ணங்கராச்சாரியார், பி.ப.இரந்தமாலா, காஞ்சீ புரம். 1969.

8. நாச்சியார் திருமொழி, அண்ணங்கராச்சாரியார், பி.ப.இரந்த மாலா, காஞ்சீபுரம், 1969.

9. நாலாயிர திவ்வியப் பிரபந்தம், வி.வி.எஸ். கமிட்டி, சென்னை 1981.

10. பரிபாடல், 2, வே.சா. நூலகம், சென்னை, 1980.

11. புறம்.

12. பெரியாழ்வார் ஆண்டாள் பாசுரங்கள், சமூகச்சமயப்பண்பாட்டு ஆய்வு, டாக்டர் .கண்ணன்.

13. வில்லிபாரதம், ஆதிபருவம், வை.மு.கோ. வெளியீடு 1953.

14. வில்லிபாரதம், சபா பருவம், வை.மு.கோ. வெளியீடு.

15. ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா, சொர்ணவிலாஸ், 13, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, 1944.

1. History of Philosophy Eastern and Western - Vol II - George Allan & Unurin Ltd, London 1952.

2. Indian Philosophy George Allen & Union Ltd, London 1948.

3. Krishna in History and Legend - Biman Behari Majumdar University of Calcutta 1969.

4. Krishna A Study in the theory of Avatharas Bagavan Dass, Bharadhiya Vidhya Bhavan, Bombay 1964.

5. Lord Krishna - His life and teachings Vol II Makhanlal sen Oriental Publishing Company, Calcutta 1955.

6. Lord Sri Krishna - His Leelas and teachings Sri Sivananda literature research Institute, Tehri, 1960.

7. Sri Krishna Charitham with science and Vedanda A.N. Srinivasa Ragava Iyengar S.V.G. Press, Trivandrum 1961.

8. Srimad Bagavalham Retold and Commented - Krishna Dass Achuda, 24, Kaka Thopa St., Madurai 1976.


9. Studies in the epics and puranas of India, Pasalkar A.D., Barathiya Vidya Bhavan, Bombay 1955.

10. Taithriya Aranyaka

11. The Philosophy of Srimad Bagavatham, Vol I. Metaphysics Viswa Barathi Santhiniketan.

12. The Politics and the Philosophy of Lord Krishna, Chatubhuj Salai, Tr. Missilal Sadhair Karyalaya, Mathura 1958.

13. The Story of Krishna in Indian Literature Chakravarthi Atulchandra, Indian Associated Publishing Co (p) Ltd., Calcutta, 1976.



திருக்குறளில் சிவனியம்

அன்பர்களுக்கு நான் தொண்டு செய்யவேண்டும். அவர்களுக்குப்பணி செய்யும் கடமையாம் நற்பணியில் என்னை ஈடுபடுத்தவேண்டும். அப்படி ஈடுபட்டு விட்டால் துன்பம் தன்னைத் தொடராது. இன்பநிலை தானாகவே அவனை வந்தடையும்.

1. நிலையில்லாத பொருள்களை நிலையுள்ளனவாகக் கருதும் அற்ப அறிவினையுடையராயிருத்தல் இழிவாகும். ஒருவனுக்குச் செல்வம் சேர்வதும் பின்னர் அது அழிவதும், கூத்தாடும் அரங்கத்தில் காண்போர் வந்து கூடுவதும் பின்னர் அக்கூட்டம் கலைவதும் போன்றது (குறள் 331, 334).

2. உடலுடன் உயிர்க்கு உள்ள உறவு முட்டை தனித்து நிற்க, அதன் உள்ளிருக்கும் பறவை பறந்து செல்வதைப் போன்றதாகும். ஒருவன் இறத்தல் தூங்குவது போன்றது; பிறத்தல் தூங்கி விழிப்பதைப் போன்றது (குறள் 338, 339).

3. அவா என்பது எல்லா உயிர்க்கும் எக்காலத்தும் நீங்காது வருகின்ற பிறப்பினை விளைவிக்கும் வித்து என்று நூலோர் சொல்வர் (குறள் 361).



அதற்குத் தக

(காப்பியக் கலைமணி, சிரவை ஆதீனம்
புலவர். க. இளங்கோவன். எம். ஏ.,)

"கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க
அதற்குத் தக"

கற்க வேண்டிய நூல்களைக் குற்றம் நீங்கக் கற்க வேண்டும். அவ்வாறு கற்ற பின்பு அதற்குத் தக்கவாறு ஒழுக வேண்டும்.

மேற்கண்ட குறளின் பொருள் இது.

`அதற்குத் தக' என்பதற்குக் கற்றதற்குத் தக எனப்பொருள் கூறி வந்தனர்.

வள்ளுவர் விரிந்த சிந்தனையாளர். அவரது
குறளும் தொட்டனைத்தூறும் மணற்கேணி
போன்றது.

ஆதலின் அத்தொடர் வேறு பொருளையும் தருமா? அது பொருத்தமாக அமையுமா? என்று காண்பது இக்கட்டுரையின் நோக்கம்.

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன்
முதற்றே உலகு" என்ற குறளில்

உலகிற்கு முதல்வனாகக் கடவுள் ஒருவர் இருக்க வேண்டும் என `முதற்கடவுளது உண்மை கூறிய வள்ளுவர் அடுத்த குறளில் அக்கடவுளைப் பற்றிய செய்திகளைச் சொல்ல வேண்டும். ஆனால் அவ்வாறு சொல்லாமல்,

`கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்'

என கற்றதன் பயன் அவனடி தொழுதலே என்று பயனை வலியுறுத்துவார்.

இங்கு கற்றதன் பயன் என்பது மேற்காட்டிய குறளில் `கற்றபின் நிற்பது' ஆகும்.

உலஇயற்கல்வியாக இருப்பினும், ஞானநூற் கல்வியாக இருப்பினும் `கற்றதன்படி நிற்பது'. என்பது `அவன் தாளை வணங்குதல்.'

அவன் தாளை வணங்குதலும், அவன் நெறி ஒழுகுதலும், கற்றபின் அதற்குத்தக நிற்றலாகும்.

`அதற்குத்தக' என்றதும் எதற்குத்தக என்றவினா எழுகிறது.

அது `கற்றதற்கு' என்பதையும் குறிக்கலாம்.

"பரம்பொருளுக்கு", `இறைவனுக்கு', `வாலறிவனுக்கு' என்றும் குறிக்கலாம்.

கற்க வேண்டியவைகளைக் குற்றமறக் கற்க வேண்டும். கற்றபின் வாலறிவனாகிய பரம்பொருளுக்கு, அது காட்டிய நன்னெறிக்கு ஏற்ப நிற்க வேண்டும் என்பது அக்குறளின் பொருளாகிறது.

இதற்கு வேதத்தில் `மகாவாக்கியம்' என்று கூறப் படும் தொடர் சான்றாதாரமாகிறது.

"தத்துவமசி' என்பது அம் மகா வாக்கியம்.

தத் = அது
துவம் = நீ
அசி = ஆனாய்.
"அது நீ ஆனாய்."

ஜீவாத்மாவாகிய நீயே அது எனப்படும் பரமாத்மா ஆவாய்.

இது `அது' என்பது பரம்பொருளைச் சுட்டுகிறது. அதற்குத்தக என்பது அப்பரம்பொருளின் கருத்துக்கு ஏற்ப எனப் பொருள் தருகிறது.

கற்றதனால் ஆய பயன் பரம்பொருளின் தாளைத் தொழுதல். கற்பவை கசடறக் கற்றதனால் பயன் பரம் பொருளின் கருத்துக்கேற்ப நிற்றல் என்பது புதியசிந்தனை.

அதற்கு என்ற சுட்டு `பண்டறிசுட்டு' எனப்படும். அது என்பது இறைவனைச்சுட்டுமென்பது பண்டைக்கால முதல் அனைவரும் அறிந்தது.

அது என்பது இறைவனையும், அதற்குஎன்பது இறைவனின் கருத்துக்கு என்பதையும் சுட்டுகின்றது.

`இருள் சேர் இருவினையும் சேரா இறைவன் பொருள் சேர் புகழ்புரிந்தார் மாட்டு' என்ற குறளில் இறைவன் பொருள் என்பது அவன் அருளிய வேதங்களைக் குறிக்கும்.

`இறைவனுடைய புகழை விரும்பும் செயல் ஒன்றானே வினை அகலா அவன் கூறிய வேதநெறிப்படி

ஒழுகுகின்ற ஒன்றானே வினையகலும். ஆகவே அவன் அருளிய வேதங்கள் நான்கையும் ஓதியுணர்ந்து ஒழுகுக் என்பதையும்.

(வள்ளுவத்தில் மெய்ப்பொருட்சுவடுகள் பக்கம் 82)

முதல் வேதம் மக்களைக் கொலை முதலிய தீய ஒழுக்கங்களில் ஈடுபட வேண்டாம் என்றது

இரண்டாம் வேதம் உலக அமைப்பு, அவற்றின் பெயர் இவைகளை அறிவிப்பது.

மூன்றாம் வேதம் துறவு பூண்டு நல்லொழுக்கத்தைக் கடைப்பிடிக்கத் தூண்டுவது.

நான்காம்வேதம் புத்கலம், உயிர், உயிரற்றது முதலிய ஆறு பொருள்களின் இயல்பையும் உணர்ந்து வீடுபெறும் வழியை உணர்த்துவது.

(வள்ளுவத்தில் மெய்ப் பொருட்சுவடுகள்- பக்கம்82)

அதற்குத்தக, அவ்விறைவன் கருத்துக்கேற்ப நிற்க என்பதை மேற்காட்டிய வகையில் வள்ளுவர் பிற அதிகாரங்களில்குறிப்பிட்டுள்ளார்.

இறைவன் அருளிய முதல் வேதக் கருத்தை கொல்லாமை முதலிய அதிகாரங்களிலும், இரண்டாம் வேதக்கருத்தை அருளுடைமை என்ற அதிகாரத்திலும், மூன்றாம் வேதக் கருத்தை துறவு என்ற அதிகாரத்திலும், நான்காம் வேதக் கருத்தை மெய்யுணர்தல், அவா அறுத்தல் என்ற அதிகாரங்களிலும் சுட்டிக் காட்டியுள்ளார்.

எனவே `அதற்குத்தக' என்பதற்குக் `கற்றதற்குத் தக' என்பதினும், `இறைவன் கருத்துக்குத் தக' எனப் பொருள் கொள்வது பரந்த பொருள் வளமுடையதாகும்.

தேவாரத்தில் அப்பர் கையாண்ட பழமொழிகள்

1. முயல்விட்டுக் காக்கைபின் போனவாறு
2. இருட்டறையில் மலடு கறந்து எய்த்தவாறு
3. கரும்பிருக்கக் இரும்பு கடித்து எய்த்தவாறு
4. பாழூரில் பயக்கம் புக்கு எய்த்தவாறு
5. விளக்கிருக்க மின்மினித் தீக்காய்ந்தவாறு

— தொகுப்பு சரவண மூர்த்தி



TAMIL-THE DIVINE LANGUAGE

BY. S. MUTHU KUMARAN
(VICE CHANCELLOR, BHARATHI DASAN UNIVERSITY. TRICHI)

Tamilians, wherever they live and whatever they may do for their livelihood, have invariably built a temple for God even before they erected a shelter for themselves, because they believe in commencing their work for the day after prayer nd praying before they rest for the day. They always share their happiness and sorrow with all those around them in the common place, i.e., the temple of God. Tamilians believe in "Do not live in a town without a Temple" (கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்); or in other words, for every Tamil hamlet, a temple is a necessary component.

History of the growth of Tamil

Tamil is a natural language; there is no artificiality about it. That is why its antiquity is not known. It has from its beginning, the touch of divinity about it.

The history of the growth of the Tamil language according to the Sangam text *Iraiyanar Agapporul Urai* (இறையனார் அகப்பொருளுரை) dates back to 10,000 B.C.. More than 12,000 years ago, the first Tamil grammar was written. Thereafter, an institution known as the Sangam was established to assess the worth of original treatises, in the capital called Koodal (கூடல், மதுரை) by the Pandya Kings. Koodal was situated somewhere south or south-east or south-west of the tip of the present Sri Lanka. This city was submerged in the Indian Ocean nearly 8,000 years ago. The first Sangam existed for 4,440 years.

After the deluge, some of the Tamil people moved north by land and set up a new capital known as Kabadapuram, somewhere near the present Tiruchendur. The presiding deity of this new capital was referred to as Murugan (முருகன்) In this new capital, the second Sangam was established. The second Sangam existed for 3,700 years. This capital was also swallowed by the sea around 4,000 years ago.

The Tamil people moved further north and established a new capital on the river Vaigai, known as Kudal or Vada Madurai (which is the present Madurai). The third Sangam was established here and it flourished for 1,850 years till there was a famine due to poor rainfall for several years at a stretch.

There are also other references to the deluge in other old Tamil texts. In Cilapadikaram, Madurai Kandam, Kadu Kan Kadai (சிலப்பதிகாரம், மதுரைக் காண்டம், காடு காண் காதை) the following lines 19 – 22 occur:

பஃறுளி ஆற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
தென்திசை யாண்ட தென்னவன் வாழி!

i.e., Long live the Pandya King who when Ocean submerged the Pakruli river and the Kumari mountain ranges, ruled his land with Ganges and Himalayas as the northern boundary.

There are enough scientific evidences today to establish that the sea level was continuously rising for several thousand years up to about 4,000 years ago, when the sea level was highest (For example, pl. see. Fig. 13.27 in Volume 2 of climate, Present, Past and Future by H.H. Lamb, published by Methuen and Co. Ltd., London. year 1977) Other old civilizations also state that there was a deluge some 4,000 years ago (Pl. see The Bible, Genesis 7; The Flood). But the average period of reign of the Pandya Kings as seen from the Iraiyanar Agapporul is long. There were 89 kings in 4,440 years of the first Sangam; 59 kings in 3,700 years of the second Sangam and 49 kings in 1,850 years of the third Sangam, i.e., the average length of reign of a king was approximately 50 years during the first Sangam period, 63 years during the second Sangam period and 37 years during the third Sangam period. If these kings came

to power at the age of 20 or 30, then the age of the king at the time of death was of the order of 60 - 90 years. This is considered unacceptable and unbelievable by many. They base their arguments on the presumption that the people live longer now, because of the discoveries of modern medicine. But considering the fact that almost all old Tamil texts state that the age of man was 100-120 years, the length of reign appears to be reasonable and plausible. (Pl. see The Bible, Genesis 6: From now on they will live no longer than 120 years) Not only that, there are scientists, who believe that the longevity of the men of the 20th century is more due to favourable climatic conditions than due of medical discoveries. Thus, one need not doubt the veracity of the details furnished in Iraiyanar Agapporul.

The divine language thus has a long history of 12,000 years. During the course of this long history, several texts have been lost, several words have disappeared, meanings of several words have changed, and several words from other languages have crept in with or without modifications due to passage of time and/or due to the two deluges. But the language has kept its youthful vigour, by virtue of its simplicity and the attitude of its people -- these being the result of the Tamils' abiding belief in God and His kindness towards the simple, honest, sincere, law abiding, duty conscious Tamil villagers. Because of this divine grace, the Tamil texts which may be 2,000 or more years old are understood even by Tamil children or those that have studied the language only for a brief period. Today, we are fortunate in having the old grammar of the second Sangam period, Tolkappiam *(தொல்காப்பியம்)* 36 books of the Sangam period (probably the third Sangam period) including the monumental treatise on Ethics, Thirukkural *(திருக்குறள்)* and the twin epics Cilapathikaram *(சிலப்பதிகாரம்)* and Manimegalai *(மணிமேகலை)* apart from the Saivite and Vaishnavite literatures of later years as well as many medical, astrological and other books.

Spread of Tamil Culture

Some people have spread their religion and culture by fighting and conquering peoples belonging to other races. Others have spread their religion and culture by sending out missionaries to preach. It is the Tamil speaking people who spread their religion and culture by working hard for the welfare of the country of adoption. (Singapore, Malaysia, Indonesia, Mauritius, Reunion Islands, South Africa, England, U.S.A., Canada, Australia etc.) It was the simplicity, honesty and devotion to duty that had attracted the attention of the native people. The native people also noticed the values of the Tamils and ought to have concluded that because of the value systems contained in the treatises in Tamil language, the Tamils are simple, honest and devoted. The natives have thus imbibed the values of the Tamils, because they are attracted by it. Thus, this divine language and the culture it stands for, have spread far and wide, not by force but by its worth.

Concluding Remarks

A language is not only the mirror but also a custodian of the culture of the people who speak that language. The values embodied and enshrined in Tamil language/literature are the values that have guided the Tamils down the ages and illuminated them in the path of progress and supported them in moments of crisis.

May God continue to bestow His choicest blessings on the Tamils, their values, culture etc. and may God give the Tamils the courage and wisdom to continue to follow the values and spread the culture throughout the world for the benefit of all human beings



திருச்செந்தூர் திருத்தலம்

பன்னூலாசிரியர்
கி.மா.பக்தவத்சலன்



திருச்செந்தூர் - தமிழ் நாட்டின் கோடியில் கிழக்குக் கரை வங்கக் கடல் ஓரமாக இருக்கிறது.

சென்னையிலிருந்து 850 கி.மீ. தூரத்தில் உள்ள இவ்வூருக்கு ரயிலும் செல்லலாம் பேருந்துவிலும் செல்லலாம்.

திருச்செந்தூர் புராணகால ஊர். புராணம் என்னும் சொல்லுக்குப் பழமை என்பது பொருள்.

திருநாவுக்கரசு நாயனாரின் திருவீழிமிழலைத் திருத்தாண்டகத்தில் **கந்தமாதனத்துளார்** என்று பாடிய வைப்புத் தலம்.

இங்கு சிவன் ஐந்து முகத்துடன் அதோ முகமுங் கூட்டி ஆறுமுகமானார் என்று புராணம் சொல்கிறது. தேவர்களின் வேண்டுதலின்படி அசுரர்களைக் கொல்ல சிவனருளால் அவதரித்தவர், முருகக் கடவுள்.

சூரபத்மன் மேல் படையெடுத்துச் சென்ற போது தங்கியிருந்த ஆறுபடை வீடுகளுள் திருச்செந்தூர் இரண்டாவதாகும்.

திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்) திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை இவை ஆறும் முருகப் பெருமானின் ஆறுபடை வீடுகள் என்று சொல்லப்படும்.

முருகக் கடவுள் அசுரர்களான சூரபத்மனையும், சிம்மமுகனையும் கொன்று, அவன் நாட்டைக் கடலில் முழுகடித்துச் சூரனை மயில் வாகனமாக்கிக் கொண்டு அதில் தங்கி, அகத்தியர், சுகர், நாரதர் முதலிய முனிவர்களுக்கும் இந்திரனுக்கும் தேவர்களுக்கும் விசுவரூப தரிசனங்காட்டித் தானுஞ் சிவனை வழிபட்ட தலம்.

மிகப் பழமையானதும் சங்க காலப் புலவர் பலரால் பாடல் பெற்றதுமான திருச்செந்தூருக்குத் திருச்சீர்அலைவாய் என்றொரு பெயரும் உண்டு. பண்டைச் சாசனங்களில் இவ்வூர் `திரிபுவனமாதேவி', `சதுர்வேதி மங்கலம்' எனவும் சொல்லப்பட்டு இருக்கிறது.

சூரபத்மனை வெற்றி கொண்ட பிறகு முருகக் கடவுள் தெய்வதச்சன் மயனை அழைத்துத் தாம் தங்குவதற்கு ஒரு கோயில் அமைக்கும் படி கட்டளையிட்டதாகவும் மயனால் கட்டப்பட்ட இத்தலத்தில் `அலங்கல் அஞ்சுடர் மஞ்சையி நின்(று) இழிந்தனன் அயில்வேலோன்' எழுந்தருளினார் என்றும் கந்த புராணம் கூறுகிறது.

இங்கே குமரன் தமது வெற்றியைக் கொண்டாடினார். அதனால் இவ்வூருக்கு செயந்திபுரம் என்ற பெயரும் வழங்கலாயிற்று. செயந்தி என்ற பெயரே பின்னாளில் மருவி செந்தி, செந்தில், செந்தூர் என்று வழங்கலாயிற்று என்பர். திருச்செந்தூர் என்ற சொல்லுக்கு `வெற்றி நகர்' என்பது பொருள்.

வெண்டலைப் புணரி யலைக்குஞ் செந்தில்
நெடுவேள் நிலைஇய காமர் வியன்துறை

என்று புறநானூறும்

திருமணி விளக்கின் அலைவாய்ச்
செரு மிகு சேய்

என்று அகநானூறும்

சீர்கெழு செந்திலும் செங்கோடும் - வெண்குன்று
மேரகமு நீங்கா இறைவன்

என்றுசிலப்பதிகாரமும்

முருகன் தீம்புனல் அலைவாய்

என்று தொல்காப்பியமும்

நன் செந்தின் மேய வள்ளி மணாளர்க்கு

என்று தேவாரமும்

ஒரு கோடி முத்தம் தெள்ளிக் கொழிக்கும்
கடவுள் செந்தில்

என்று திருப்புகழும் இத்தலத்தின் சிறப்பை வெளிப்படுத்துவனவா யிருக்கின்றன.

கடைச் (தமிழ்) சங்கத்திற்கு தலைவராக விளங்கிய நக்கீரர் என்னும் புலவர் இக்குமரனை வேண்டித் தன் குறை நீங்கும் படி முருகாற்றுப் படையில் பாடியிருக்கிறார். முருகாற்றுப்படை முருகப்பெருமாள் வீற்றிருக்கும் ஆறுபடை வீடுகளையும் பற்றிக் கூறுவது. முதற்பகுதியில் முருகக் கடவுளுக்குரிய திருவுருவச் சிறப்பும் அவர் அணியும் மாலைச் சிறப்புகளும் சூரர்

மகளிர் செயல்களும் முருகப் பெருமான் மாறுபடுசூரனை வதைத்த திறனும், மதுரை, திருப்பரங்குன்றம் ஆகியவற்றின் வளமும் கூறப்பட்டுள்ளன. இரண்டாவது பகுதியில் முருகப் பெருமானின் ஆறுமுகங்களின் தோற்றமும் அவற்றிற்கு இசைய அவர்தம் பன்னிருகரங்கள் ஆற்றும் திருவருட் செயல்களும் திருச்சீரலைவாய்த் தலத்தின் சிறப்புகளும் கூறப்பட்டுள்ளன. மூன்றாம் பகுதியில் தேவர் வரலாறுகளும் நான்காவது பகுதியில் அந்தணர் இயல்பும் ஐந்தாவது பகுதியில் குன்றக் குறவையும், ஆறாவது பகுதியில் குமரப் பெருமான் எழுந்தருளியுள்ள இடங்களைப் பற்றியும் அவரை வழிபடும் வழியும் கூறப்பட்டுள்ளன. கிழக்கிலும் வடக்கிலும் இக்கோயிலின் மதில் சுவர்களைக் கடல் அலைகள் ஓய்வும் ஒழித்தலும் இல்லாமல் கொந்தளித்து மோதி அலைக்கழிப்பதால் `அலைவாய்ச் சேறல் என்று பாடியிருக்கிறார்!

நக்கீரரால் பாடப் பெற்றதால் இத்தலம் அவர் காலமாகிய கி.பி இரண்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாக இருக்க வேண்டும்.

மன்னார் குடா கடற்கரையில் கிழக்கு நோக்கி மிக அழகாக அமைந்துள்ள இத்தலம் நெல்லை மாவட்டத்தின் சிறப்புகளில் ஒன்றாக விளங்குகிறது.

இரயில் நிலையத்திலிருந்து ஏறக்குறைய ஒரு கிலோ மீட்டர் தூரம் சென்றதும் வழி நெடுகக் கோயில் வரை போடப் பட்டிருந்த பந்தலைக் கண்டோம். வெயிலின் கொடுமையும் வழி நடைக் களைப்பும் சிறிதும் இல்லாமல் பயணிகள் அருள் கொழிக்கும் அந்த ஆலயத்தை அடையச் செய்யப் பட்டிருக்கும் இந்த அன்புப் பணி எங்களை மிகவும் கவர்ந்தது.

இங்கு நாங்கள் முதலில் கடலில் நீராடினோம். சண்முக விலாசம் எனப்படும் கோயில் மண்டபத்திற்கு முன்னால் உள்ள கடற்கரையில் பக்தர்கள் பயமின்றி நீராடக் கண்டோம். கடல் அலைகளின் கொந்தளிப்பும் இழுப்பும் இந்தக் கரையோரத்தில் இல்லை.

அடுத்து நாங்கள் கடலோரத்தில் உள்ள நாழிக் கிணறு எனப்படும் தீர்த்தத்தில் நீராடினோம். இந்தக் கிணறு முருகப் பெருமான் வேலூன்றி உண்டாக்கிய தென்று சொல்லப்படுகிறது. இதனால் இதற்கு `வேல் தீர்த்தம்' `கந்தபுட்கரணி' என்னும் பெயர்களும் உண்டு.

நாழிக் கிணறு ஓர் அடி சதுரமும் ஆறடி ஆழமும் கொண்டது. இந்தக் கிணற்றின் உள்பாகம் மிகவும் சிறியது.

இதற்குள் ஏராளமான பேர் குளிப்பதால் கிணற்று நீர் குழம்பிக் கிடந்தது. நாங்கள் ஒவ்வொருவராகப் படிகளில் இறங்கி இதில் குளித்து விட்டு வந்தோம். இந்தக் கிணற்றின் ஒருபக்கத்தில் குடிக்கும் தண்ணீரும், மற்ற பக்கங்களில் உப்பு நீருமாய் இருக்கிறது. இந்த கிணற்றில் எவ்வளவு பேர் நீராடினாலும் வற்றா என்றும் உற்சவக் காலங்களில் இங்கு சாரணப் படையினர் இருந்து வேண்டிய ஏற்பாடுகள் செய்கிறார்கள், என்றும் கேள்விப்பட்டோம்.

திருச்செந்தூர் வைகாசி விசாகத் திருவிழாவுக்கு தமிழ் நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் மக்கள் வெள்ளம் போல் திரண்டு வருகிறார்கள்.

விசாகம் திருவிழா பத்து நாள் நடக்கிறது. முதல் நாள் உச்சி கால பூசை முடிந்ததும் பாலசுப்பிரமணியக் கடவுள் கோயிலின் எதிரே உள்ள வசந்த மண்டபத்தைச் சுற்றி நான்கு புறமும் அகழ் போல கட்டியுள்ள வாய்க்கால்களில் தண்ணீர் நிரப்பப்பட்டு அந்த மண்டபம் குளிர்ச்சியாய் இருக்கும். மாலை வரை சுவாமி வசந்த மண்டபத்தில் இருப்பார். அப்போது ஆராதனைகள் நடக்கும். மாலையில் பதினொரு தடவை சப்பரத்தில் வலம் வந்த பிறகு சுவாமி கோயிலுக்குள் போவார். வைகாசித் திங்கள் பௌர்ணமி விசாக நட்சத்திரம் வருமன்று இலட்சக்கணக்கான பக்தர்கள் பால் குடம், பால் காவடி, மச்சக்காவடி முதலியவை கொண்டு வருவார்கள். சுவாமிக்குப் பால் அபிஷேகமும் நடக்கும். அன்று இரவில் நான்கு ரத வீதிகளிலும் சுவாமி ஊர்வலமாக வருவார். இது தவிர இங்கு ஆவணி, ஸ்கந்த சஷ்டி, மாசி முதலான உற்சவங்களும் நடைபெறுகின்றன.

`பாமரர்களும் கல்வி கற்றவர்களும், பணக்காரர்களும் ஏழைகளும் ஒன்று கூடி நடத்தும் விழாக்கள் சமுதாயத்தின் உயிருக்கு உயிர். பூவும் காயுமே பிரதானம் என்று இலைகளை எல்லாம் பறித்து விட்டால், சீக்கிரத்திலேயே செடி உலர்ந்து போய் விடும். மகிழ்ச்சிக்குரிய விளையாட்டுகளையும் விழாக்களையும் நீக்கி விட்டால், சமுதாய வாழ்க்கை வெறும் போட்டியிலும் துன்பத்திலும் சிக்கிக் கொண்டு அழிந்து போகும். விழாக்களும், கூத்துக்களும், ஆடல் பாடலும், தேரும் திருநாளும், பூசைகளும் உற்சவங்களும் சமுதாய மகிழ்ச்சிக்கு நம் விழாக்கள் அறிவீனத்தினாலோ, மூடப்பக்தியினாலோ ஏற்பட்டவை அல்ல. சமுதாய வாழ்க்கைக்கு அவசியமான சிறந்த சாதனங்கள்' என்று சொல்லாம்!

நாழிகிணறுக்கு அருகில் சண்முக விலாச மண்டபம் இருக்கிறது. இங்கிருந்து பிரதானக் கோயிலுக்குச் செல்லும் வழயில் உள்ள தூண்களில் அழகிய சிற்பங்கள் காணப்படுகின்றன. கோயிலுக்குள் செல்லும் வழியில் தூண்டுகை விநாயகர், அகத்தியர் முதலியோர் சந்நதிகள் உள்ளன.

பக்தர்கள் தூண்டுகை விநாயகரைத் துதித்த பின்னரே கோயிலுக்குள் சென்று முருகக் கடவுளை வழிபடுகின்றனர்.

கோயிலுக்குள் நுழையும் போது முருகக்கடவுள்,

மாஇருள் ஞாலம் மறுவின்றி விளங்க
பலகதிர் விரிந்தன் (று) ஒரு முகம் . . .
எஞ்சிய பொருள்களை ஒருமுகம் எமுறநாடி -
திங்களைப் போல் திசை விளக்கும்மே . . .
குறவர் மடமகள் கொடி போல் நுசுப்பின்
மடவரல்வள்ளியோடு . . .

அழகான செம்பொன் மயில் மேல் அமர்ந்து தெற்கு நோக்கி காட்சியளித்து அருள் செந்தில் முருகனுடைய சிறுவிக்கிரகம் நின்ற கோலத்தில் கிழக்கு நோக்கிய வண்ணம் இருக்கிறது. திருசெந்தூர் வேலாண்டி என்று பக்தர்கள் முருகனை அன்புடன் அழைக்கின்றனர்.

திருச்செந்தூர் ஆலயம் முதன் முதலில் கரையோரத்தில் உள்ள செங்கற்பாறைகளை அடித்தளமாகக் கொண்டு கல்மலையில் ஐம்பது அடி உயரமுள்ள ஒரு பகுதியைக் குடைந்து கட்டப்பட்டதென்றும் காலப் போக்கில் இரண்டாவது மூன்றாவது பிரகாரங்கள் தோன்றின என்றும் தற்போது இருக்கும் கோயில் மவுன சுவாமி என்பவரால் அண்மை காலத்தில் தான் நிருமாணிக்கப்பட்ட தென்றும் தெரிய வருகிறது.

கோயில் வடக்கு தெற்காக முன்னூறு அடியும். கிழக்கு மேற்காக இருநூற்றுப் பதினான்கு அடியும் இருக்கிறது. கோயிலின் பிரதான வாயில் தெற்கு நோக்கி இருக்கிறது. மேலே கோபுரம் யாளி மண்டபத்துக்கு மேல் நூற்று முப்பத்தேழு அடி உயரமும் தொண்ணூறு அடி நீளமும் அறுபத்தைந்து அடி அகலமும் உள்ளது. ஒன்பது மாடங்களுடன் உள்ள இந்தக் கோபுரத்தில் ஒன்பதாவது மாடத்தில் கடிகாரமாளிகை இருக்கிறது.

பாஞ்சாலங் குறிச்சி பாளையக்காரர்கள் செந்திலாண்டவன் மீது பேரன்பு கொண்டவர்கள். முருகப் பெருமானின் பூசை முடிந்ததை அறிந்த பின்னரே பகல் உணவு கொள்ளும் வழக்கம் உடையவர்கள். பாஞ்சாலங் குறிச்சிக்கும் திருச்செந்தூருக்கும் அறுபது கிலோ மீட்டர் தூரம் உள்ளது. செந்தூர் முருகனின் பூசை முடிந்த தென்பதை அறிவிக்க கோபுர கடிகாரமாளிகை மணிகள் ஒலிக்கும். வழி நெடுகிலும் அமைக்கப்பட்டிருக்கும் மணிகள் ஒன்றன் பின் ஒன்றாகத் தொடர்ந்து ஒலித்து இதைப் பாஞ்சாலங் குறிச்சிக்கு அறிவிக்கும். முருக பக்தனாய் விளங்கிய வீரபாண்டியக் கட்ட பொம்மனும். இந்த மணியோசையைக் கேட்ட பின்னரே செந்தூர் முருகனின் பூசை முடிந்ததை அறிந்து சில நிமிடம் முருகன் நாமாவளியைச் சொன்ன பிறகு உணவு அருந்துவாராம்!

இக்கோயிலின் கர்ப்பக்கிருகம் பக்கத்தில் ஜகந்நாத சிவலிங்கம் இருக்கிறது. இச்சிவலிங்கம் முருகனால் பூசிக்கப்பட்டது என்றும் சொல்லப்படுகிறது.

மூன்றாம் சந்நிதியில் போத்திகள் அர்ச்சகராய் இருக்கிறார்கள். இவர்கள் ஒரு சிறு பன்னீர்இலையில் விபூதி, சந்தனம் பிரசாதம் வைத்துப் படியில் இருந்து கொண்டே பக்தர்கள் மேல் வீசி எறிகிறார்கள். படியில் நின்று கொண்டு பிரசாதத்தை அப்படி வீசி எறியும் அர்ச்சகர்கள் எங்களிடம் பணம் வாங்கும் போது மட்டும் அருகில் வந்து நின்று மிகப் பணிவாகக் கையை நீட்டியதை இப்பொழுது நினைத்துக் கொண்டாலும் சிரிப்புத் தான் வருகிறது.

இதென்ன ஆசாரம்? என்று ஒரு நண்பர் அன்று கேட்ட கேள்விக்கு இன்றும் சரியான விடை கிடைக்கவில்லை.

கோவிலைச் சுற்றி அழகான நடைப் பாதை அமைக்கப்பட்டு இருக்கிறது. அங்கிருந்து ஓயாமல் மோதும் கடல் அலைகளின் எழிலையும் குளிர்ச்சியான காற்றையும் நுகர மனதுக்கு இதம் அளித்தது.

ஐந்து வயதுவரை பேசும் சக்தியற்றிருந்த குமரகுருபரரை இத்திருத்தலத்திற்குப் பெற்றோர் அழைத்துவந்து முருகப் பெருமான் அருளால் தம் மகன் பேசும் ஆற்றலைப் பெற வேண்டுமென மனம் வருந்தித் துதித்து வணங்கினர் என்றும் முருகப் பெருமானின் அருளால் குமரகுருபரர் பேசும் ஆற்றலைப் பெற்றார் என்பது வரலாறு! குமரகுருபரரால் நமக்குப் பிள்ளைத்தமிழ் கிடைத்த பெருமை இத்தலத்திற்கு உண்டு.

கடற்கரை ஓரத்தில் சந்தனமலை எனப்படும் கல்லும் மணலும் சேர்ந்து ஆன குன்று ஒன்று இருக்கிறது. இங்குள்ள கோயிலில் வள்ளிச் சிலை இருக்கிறது. இந்தக் கோயில் மிகவும் சிறியது. கோயிலுக்குள் ஒருவர் சுற்றி வரக் கூடிய அளவு இடந்தான் இருக்கிறது! இது வள்ளியம்மை இருந்த இடம் என்று சொல்லுகிறார்கள். கோயிலைச் சுற்றி வரும் மலையில் குடைந்திருக்கிறார்கள். ஏறக்குறைய இருபத்தைந்து அடி ஆழம் படிக்கட்டுகளின் வழியே இறங்கிச் சென்று வள்ளியம்மையின் திருவுருவைத் தரிசித்தோம்.

இக்குகை `வள்ளி ஒளித்த வளநாடு' என்று வழங்கப்படுகிறது. இந்தக் குகைக் கோயிலின் மேல் கோபுரம் ஒன்றும் கட்டப்பட்டிருக்கிறது. குகைக்கு மேல் புறத்தின் முன்னால் பதினாறு கால் மண்டபம் ஒன்று இருக்கிறது. கடலலைகள் ஓயாமல் மோதி குகையை அலைக்கும் காட்சி காண்பதற்கு ஒரு அற்புதக் காட்சியாகத்தான் இருக்கிறது.

திருச்செந்தூர் சங்க காலம் தொட்டு பெருமையும் சிறப்பும் கொண்டு விளங்குகிறது. பண்டைக்காலத்தில்

தமிழ் நாட்டை ஆண்ட மன்னர்கள் ஒவ்வொருவரும் திருச்செந்தூர் கோயிலைப் பழுது பார்த்துப் புதுப்பித்து வந்துள்ளனர். சிவிலி மண்டபம் எனப்படும் முதல் திருச்சுற்றாலை, திருச்சுற்றுமாளிகை; கோயில் பிரகாரங்களும் அவைகளைச் சுற்றி எழுப்பிய மதில்களும் திருச்சுற்றாலையிலும் கொடித்தம்பம் இருக்கிற இரண்டாவது திருச்சுற்றாலையிலும் பள்ளி கொண்ட பெருமாள், சீனிவாசர், கஜலட்சுமி முதலியோரது சந்நிதிகளும் முருகப் பெருமான். வள்ளி, தெய்வயானை முதலியோரது சந்நிதிகளும் முருகப் பெருமான், வள்ளி, தெய்வயானை ஆகியோரது பஞ்சலோக விக்கிரகங்களும் இருக்கின்றன.

கி.பி. 1648 ஆம் ஆண்டில் முருகனுடைய விக்கிரகத்தை டச்சுக்காரர்கள் கவர்ந்து சென்று விட்டனர் என்றும் அந்தக் காலத்தில் திருச்செந்தூர் கோயில் சில நாட்கள் டச்சுக்காரர்களின் படைவீடாயிருந்தது என்றும் அப்போது திருநெல்வேலிச் சீமையில் திருமலை நாய்க்க மன்னரின் பிரதிநிதியாயிருந்த வட மலையப்பன் என்பவர் பெரும் பொருள் கொடுத்து 1653 -ஆம் ஆண்டில் டச்சுக்காரர்களிடமிருந்து விக்கிரகத்தைத் திரும்பப் பெற்று அதைக் கோயிலில் வைத்தார் என்றும் சொல்லப்படுகிறது. உற்சவக் காலங்களில் வடமலையப்பன் செந்தில் ஆண்டவன் மீண்டதன் சின்னமாகக் கட்டியுள்ள வசந்த மண்டபத்திற்கு எழுந்தருளுவது அச்செய்தியை உறுதிப்படுத்துகிறது.


வெற்றிமாலைக் கவிராயர் என்பவர் திருச்செந்தூர் தல புராணம் என்ற நூலை இயற்றியுள்ளார். அதில் அவர்

இந்த நிலத்தில் திருபாண்டிச் சீமையின்
எழுதிசைக் கடல்சூழும் குணபதி
செந்தில் நகர்வளம் அழிந்து போகாமல்
தேசத்தில் உள்ளோர்செய் பூஜா பலத்தினால் .

காரேறு தண்டலை சூழும் செழுந்தமிழ்க்
காவை வடமலையப்பன் தொழுதிட
இப்போது தேவரீர் எழுந்தருளினது
எல்லோர்க்கும் நல்ல காலம்'

என்று குறிப்பிடுகிறார்.

நமக்கு இது ஒரு நல்ல காலம். பழமைச் சிறப்பும் தெய்வத் திருவருளும் பெற்ற திருச்செந்தூர் திருத்தலத்தை முருகப்பெருமான் சூரனை வென்று வந்து செந்தூரில் நின்ற திருக்கோலத்தைக் கண்டு களித்து அவனருள் பெறவும் ஒரு நல்வாய்ப்பு பெற்றோமே என்று எண்ணியெண்ணி மகிழ்ந்தோம்!



உயிர் உடலினின்று இரகசியமாக மறைகிறது அல்லது நீங்குகிறது. அது வரை சிறப்புப் பெயர் பெற்ற அவ்வுடன் உயிர் நீங்கியதும், பிணம் எனப் பொதுப் பெயர் பெறுகிறது. மனைவி, மக்கள், உற்றார், உறவினர் அனைவரும் கூடி மிக்க ஆரவாரத்துடன் அழுது அரற்றி (ஆடம்பரத்துடன்) அதை மயானத்திற்கு எடுத்துச் சென்று எரித்தோ, புதைத்தோ அழித்திட்டு, நீரில் மூழ்கிப் பின்னர் அவவுயிரின் நினைப்பும் மறந்திருப்பர். இதுதான் அவர்கள் காட்டும் அன்பு, உலக வாழ்வு (திருமந்திரம் 144,145).



இருமையும் மலரும் அருமை விழா

(ஒளியகம். ந.ரா. ஆடலரசு)

முன்னுரை:

தமிழகத்தின் தலைநகராகிய சென்னையில் நடைபெறும், அனைத்துலகத் தெய்வத் தமிழ் முதல் மாநாட்டின் நோக்கம், செயல் முறைகள் பற்றிய அருமை பெருமைகளை நினைத்த போது, கீழ்கா ணும் சிந்தனைகளை, மேற்குறிப்பிட்டுள்ள தலைப்பில், மாநாட்டு மலர்வழி அன்பர்கள் முன் பணிவுடன் வைக்க விழைகின்றேன்.

மக்கள்நிலை: இக்கால மக்கள் வாழ்க்கையில் பல துறைகளி லும் குழப்பம் நேரிட்டிருக்கிறது. வாழ்க்கை இம்மையோடு முடிவ தில்லை. உடலை விட்டு, உயிர் பிரிந்த பின்னரும், உயிர் நிலையான தாகலின், வாழ்க்கை இருக்கிறது. அதை மறுமை என்று குறிப்பிடுவது வழக்கம்.

''இருமை வகை தெரிந்து ஈண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்று உலகு''

என்பார் தெய்வத் திருவள்ளுவர். எனவே இருமை நிலைகளையும் எண்ணி, அவற்றுக்குரிய நலங்களில் கருத்தாக இருந்து இந்த வாழ்க் கையை நடத்த வேண்டும். இம்மை வாழ்க்கைக்கு உற்றபடி இதன் பயனாகவே, மறுமை வாழ்க்கை அமையும். பெரும்பாலான மக்கள் வறுமையிற் கிடந்து உழல்கின்றனர். இம்மை நலங்களுக்கு வெறும் பொன் பொருளும் போகங்களும் போதும் என்று கருதுகின்றனர். அன்பும் அருளும், அமைதியும் இருந்தால்தான் இனிய வாழ்வு வாழ முடியும் என்று நினைக்காமல், பொன் பொருள் போகங்களுக்கா கவே தமக்குள் போரும் பூசலும் இட்டுக் கொண்டு அல்லல்படுகின்ற னர். அவர்களுள் பலர், மறுமை பற்றிய தெளிவு சிறிதுமின்றி, அத னைக் கூட்டும் சமய வாழ்க்கையை வெறும் மூடப் பழக்க வழக்கச் சடங்கு வாழ்க்கையாகவே மேற்கொள்கின்றனர். சிலர், புண்ணிய புறநல நிலைகளையே குறிக்கோளாகக் கொண்டு போலிச் சமய வாழ்க்கை நடத்துகின்றனர். இம்மை வாழ்க்கைக்கு வேண்டும் நலங் கள் எவை, எவை என்னும் தெளிவு கூட இல்லாத மக்கள் எப்படி மறுமை வாழ்க்கையைப் பற்றி எண்ணி, அதற்கு ஏற்றபடி வாழ்வார் கள்?

இயக்கக்காரர்கள் நிலை: இவ்வாறு இருமை நலமும் இழந்து வரும் பொதுமக்களை, இம்மை நாட்டம் மட்டுமே உடைய இரக்கமும், நாட்டுப் பற்றும் கொண்ட புதுமைச் சீர்திருத்தவாதிகளில் சிலர், சம யத் துறையில், காலப்போக்கில் புகுந்து விட்ட ஊழல்கள், மூடத் தன்மைகள், முதலியவற்றை எடுத்துக் காட்டித் திருப்பி இம்மைக்கு ரிய நலங்களை மட்டுமே ஓம்பிக் கொள்ளுமாறு, செய்ய முனைந்து விடுகின்றனர். அந்நலங்களுக்கு அடிப்படையான அறவுணர்வை, இவர்கள் போதித்தாலும் அது உண்மையை ஒட்டி இல்லாத காரணத் தால் நிலைக்க முடியாத வகையிலேயே வற்புறுத்தப்படுகின்றது.

இடைக்காலத்தில் தெளிவற்ற போக்கில் சமயத்தை ஓம்பி வந்த இந்நாட்டு மக்கள் பல்வேறு சூழ்நிலைகளில் தம் மொழி நாடு அரசு முதலியவைகளை நிலைகுலையும்படி விட்டு விட்டார்கள். இப் போது அவற்றை உயரிய முறையில் காக்கும் எண்ணத்துடன் பணி செய்யும் புதுமைச் சீர்திருத்தவாதிகள் தம்முடைய நிறை நலமற்ற செயல்களையே சீர்திருத்தம் - மறுமலர்ச்சி- புரட்சி என்று கருதி விளம்பரப்படுத்துகின்றார்கள்.

சமயச் சான்றோர்கள் இயக்கம்: ஆனால் கடைச்சங்க காலத்தும் அதனை அடுத்தும் செல்வாக்கோடு இந்நாட்டிற்குள் நுழைந்த வேற்ற வர்களின் மொழி, சமய, அரசியல் மற்றும் பழக்க வழக்கங்கள், இந்நாட்டின் பழைய எல்லைகள் - மொழி நலம் - பண்டைய மக்க ளின் நம்பிக்கை, பழக்க வழக்கங்கள் எல்லாவற்றையும் சிதைத்து விட்ட நிலையில், அவைகளை ஓம்புதற்குரிய உணர்ச்சியை மக்களி டையே ஊட்டிப் பரவலாகப் பணி செய்தவர்கள், ஆழ்வார்கள், நாயன்மார்களாகிய அருள்நெறிச் செல்வர்களே. அவர்கள் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் இந்நாடு முழுவதும் வலம் வந்து அருளிச் செய்த அருட்பாடல்களே தெய்வத் தமிழ் என்று போற்றத் தக்கன வாக நிலைபெற்றிருக்கின்றன. உலகில் வேறு எம்மொழியிலும் இவைபோன்ற தெய்வ இலக்கியங்கள் இல்லை என்று அறிஞர்கள் தெரிவிக்கின்றனர். அவர்கள் மேற்கொண்ட பத்தி இயக்கம் ஏற்படுத் திய நலங்கள் கூடப் பின்னாளில் சில பல ஊடுறுவல் நிலைகளால் சிதைந்து விட்டன. எனினும் அவற்றின் வலிவும், பொலிவும் உரிய முறையில் உணர்ந்து போற்றப்பட்டால், எடுத்து விளக்கப்பட்டால் இக்காலத்துக்கு வேண்டிய எல்லாச் சீர்திருத்தங்களையும் அவற்றை வைத்தே செய்து கொள்ளலாம் என்பது ஒரு தலை.

தெய்வத்தமிழ் இலக்கியங்கள் சாதித்தவை: இந்நாட்டில் தோன் றிய அவ்வருள் நெறிச் சான்றோர்கள் - ஆழ்வார்கள் - நாயன்மார் கள் அவர்களைப் பின்பற்றி வந்த அருளாளர்கள் அருளிய ஒப்பற்ற தெய்வத் தமிழ் இலக்கியங்களாகிய தேவாரம் திருவாசகம் முதலிய சைவத்திருமுறைகளும், வைணவத் திருநாலாயிரம் முதலிய அருள் நூல்களும் சாதித்தவை என்று குறிப்பிடத்தக்கன:

1. தமிழர்களின் உயிராகிய தமிழ் மொழியின் பீடு வேற்றவர்க ளால் அழியத் தொடங்கிய காலத்தில் அவ்வருளாளர்கள் தோன்றி நாடெங்கும் அருள் வலிவோடு சுற்றித் தமிழ்ப் பாசுரங்களைப் பாடித் தமிழின் ஆற்றலை மக்களுக்கு எடுத்துக் காட்டினர். தமிழ்ப்பாடல் பெற்ற தலங்களுக்குத் தனிச்சிறப்பும் வளர்ச்சியும் உண்டாகச் செய்த னர். அத்தலங்களில் உலகவர் வியக்கும் வானளாவிய திருக்கோயில் கள் அமைந்தன. பலகலைகளும் சமுதாயப் பணிகளும் அக்கோயில் களால் வளர்ந்தன.

2. தவப்பயிற்சிக்குழு எனப் பழந்தமிழ் முன்னோர்கள் கொண்ட மந்திர வித்தொலிகளின் அடிப்படையில் பிற்காலத்தில் பேச்சு வழக் கற்ற ஒரு தனி மொழி வளர்ந்தபோது அதனை வடமொழி (வடக்கி ருத்தல் - தவமிருத்தல்) என்றும், தவத்தின் பயனாகிய ஞானத்தைப் பரப்பும் நம் தமிழ் மொழியைத் தென்மொழி (தென் - ஞானம்) என்றும் வழங்கி வந்தார்கள். ஒரு காலத்தில் தமிழ் மொழி ஒன்றுக்கே உட்பட்டு ஓராட்சியின் கீழிருந்த நாவலந்தீவு (ஒருமொழி வைத்து உலகாண்ட இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்னும் வரலாற்று வழக்கும், இந்தியாவில் இன்றுள்ள பல மொழிகள் 1000 - 1500 ஆண்டுகளுக்கு முன் இல்லை என்பதும் சிந்திக்கத்தக்கன) புதிதாக வளர்ந்த அம்மொழியின் கலப்பால் பல்வேறு மொழி வழங்கும் நாடாகப் பிரிந்து விட்டது. அந்நிலையில் தொடர்ந்து வேற்றவர்கள் ஆட்சியே இந்நாட்டில் நடைபெற்றதால் தமிழ்மொழி வழக்கு ஆட்சி

- கலை- அருள் முதலிய பல துறைகளிலும் அருகிவிட்ட நிலையில் அதை ஞானத்தமிழ் - திருநெறிய தெய்வத் தமிழ் - தெய்வ ஒண்டீந்த மிழ் என்றெல்லாம் சிறப்பித்து வழங்கியவர்கள் மேற்குறிப்பிட்ட அருளாளர்களே.

3. 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்னும் உயர் நிலையில் இருந்து பிறழ்ந்து சாதி வழிபட்ட பல்வேறு பிரிவாகப் பிரிந்துவிட்ட தமிழ் மக்களைத் 'தமிழன்' என்று மொழிப் பெயரால் ஒன்றுபட்டுத் தலை நிமிர்ந்து நிற்கும்படி முதன்முதற் கற்பித்தனர். சாதி வேற்றுமைகளைத் தம் வாழ்க்கை நடப்புகளினால் ஒதுக்கித் தள்ளினார்கள். பல்வேறு சாதியினர் என்று கருதப்படும் 63 நாயன்மார்களையும், 12 ஆழ்வார்களையும் ஒரே வரிசையில் வைத்து வழிபடும் நிலையை உண்டாக்கினார்கள். (ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இப்படிச் செய்த நம் முன்னோர்களைப் பின் பற்றி அருளாளர்கள் என்று ஒப்புக் கொள்ளப்பட்ட வடலூர் வள்ளலார் - திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் போன்றவர்களை நம்மால் திருக்கோயிலில் 63வருடன் வைத்து வழிபட இயலவில்லையே...

4. தமிழில் புதிய பல கவிதை வகைகளை வகுத்துக் காட்டி அதனை வளர்த்தனர். தமிழ் இயலை மட்டுமின்றி இசை, நாடகம், கலைப்பகுதிகளையும், தம்பதிகங்களாலும் ஆங்காங்கு நடத்தி வைத்த விழாக்களாலும் ஓம்பினார்கள்.

5. வேற்று நாட்டவர்கள் மொழியாளர்கள் இந்நாட்டில் நுழைந்துவிட்ட நிலையில், பழந்தமிழர் வாழ்வியலில் கலந்துநின்ற கடவுட் கொள்கை திருவள்ளுவரால் தெளித்து எடுத்து அவ்வேற்றவர்களும் ஒப்பப் பொது முறையில் எடுத்துக்காட்டப்பட்டது. என்றாலும், அவ்வேற்றவர்கள் மேலும் மேலும் முனைந்து இயற்கைக்கும் உண்மைக்கும் மக்கள் வாழ்க்கைக்கும் ஒவ்வாத தம் சமயக் கொள்கைகளைச் செல்வாக்கோடு இந்நாட்டில் பரப்பி வந்தனர். எனவே, திருவள்ளுவர் கடவுடகொள்கையையே சிறப்புமுறையில் சிவ சமய இயக்கமாக விளக்கிப் பரவச் செய்து மாற்றாரைப் புறங்கண்டார்கள்.

6. கொல்லாமை என்னும் பேரால் அயலவர்கள் கொண்ட எள்ளி நகையாடத்தக்க இழிந்த பழக்க வழக்கங்களையும் தாய்மை நிலையுடைய பெண் பிறபி தாழ்ந்தது என்னும் தவறான கொள்கையையும், இறைவன் ஒருவன் உண்டு என்று ஒப்புக் கொள்ளாத இழிவையும், இயற்கைக்கு மாறான துறவு நிலையை வற்புறுத்தும் போலி நெறியையும் எல்லாம் கண்டித்து ஒழித்தார்கள்.

7. திருவள்ளுவர் வழியில் மக்கள் மணம்பூண்டு இல்லறம் நடத்தி இம்மையில் அடையத்தக்க இன்பங்களை எல்லாம் இனிது நுகர்ந்து, அந்நிலையிலேயே உள்ளத் துறவைப்பெற்று உண்மை அருள் நலத்தோடு வாழவேண்டும் என்று அறிவுறுத்தி - அதற்கேற்ப உயிர்க்குயிர்களை எல்லாம் இயக்கும் முழுமுதற் கடவுளும் அம்மையப்பர் கோலத்திலேயே வயங்குகின்றார் என்னும் பழந்தமிழ்க் கொள்கையை எடுத்துக்காட்டி மக்கள் அம்மையப்பர் வழிபாட்டைத் திருக்கோயில்தோறும் மேற்கொள்ளச் செய்தார்கள்.

8. உயிர் இல்லை - கடவுள் இல்லை - வினை இல்லை - எல்லாம் விதியே - மறுபிறப்பு இல்லை - மக்கள் வாழ்க்கைக்கும், இயற்கை நிகழ்ச்சிகட்கும் தொடர்பில்லை என்றெல்லாம் எண்ணும் மக்கள் மனநிலைகளையும், மற்றைச் சமயங்களின் பொருந்தாக் கொள்கைளையும் கண்டித்து கடவுள் உண்டு - உயிர் உண்டு - வினை உண்டு - முயற்சி வேண்டும் - மறுபிறப்பு உண்டு - வாழ்க்கைக்கும் இயற்கைக்கும் தொடர்பு உண்டு என்றெல்லாம் மக்கள் அறிவார்ந்த முறையில் எண்ணி உணருமாறு கருத்துக்களை வழங்கினார்கள்.

9. ஆருயிர்த் தொண்டு செய்யும் அறப்பெரு நிலையங்களாக நீதிமன்றங்களாக அரியகலைகள் வளரும் பல்கலைக் கழகங்களாக அண்ட பிண்டங்களின் நுட்பங்களை வாழ்க்கை நெறிமுறைகளை விளக்கும் அரும்பெரும் காட்சிச் சாலைகளாக நாடெங்கும் நூற்றுக்கணக்கான திருக்கோயில்களை அரசர்களையும், மக்களையும் தூண்டி அமைக்கச்செய்தார்கள்.

10. பிறப்பால் உயர்வு தாழ்வு கருதும் பிழை மனப்பான்மையைத் தம் வாழ்க்கையாலும் அருளுரைகளாலும் மறுத்தார்கள்.

சுருங்கச் சொன்னால் மேற்குறிப்பிட்ட நம்நாட்டு அருளாளர்கள் மக்கள் வாழ்க்கையில் இம்மை மறுமை நலங்களை அடைதற்கு வேண்டிய எல்லாச் சீர்திருத்தங்களையும் மறுமலர்ச்சிகளையும் புரட்சிகளையும் ஆயிரம் ஆண்டுகட்கு முன்பே செய்திருக்கிறார்கள் என்பதை அவ்வருளாளர்களின் வரலாறுகளையும் அருளிச் செயல்களையும் ஊன்றிப்படிப்பார் நன்கு உணரலாம்.

இரங்கத்தக்க நிலை:

அவ்வருளாளர்கள் காட்டிய நெறியைத் தொடர்ந்து போற்றாத ஒன்றே, இன்று நம் நாடும் மொழியும் அரசும் நிலை குலைந்திருப்பதற்குக் காரணம். இதனை நன்கு ஆராய்ந்து தெளியாமல், தமிழ் அன்பர்களில் சிலர் 'சமயம்' என்ற துறையே தக்க அடிப்படையின்றி வெறுத்து ஒதுக்கி, உண்மையறியும் வேட்கையின்றித் தம் அறிவு ஆற்றல் முயற்சிகளையெல்லாம் விழலுக்கு இறைத்து வெற்றாரவாரம் செய்து வருவது பெரிதும் இரங்கத்தக்கதாக இருக்கிறது.

தமிழின் மறுமலர்ச்சி, சாதி, ஒழிப்பு முதலிய சீர்திருத்தம் ''ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்'' என்னும் புரட்சி, மன்பதைத் தொண்டு இவைகளுக்கெல்லாம் வித்திட்டவர்கள் தமிழகத்தின் சான்றோர்கள். குறிப்பாக நால்வர் பெருமக்கள். அவர்களின் நெறி நின்று இத்தொண்டுகளைச் செய்தால் எளிதாக அவைகள் நடைமுறைக்கு வரும் என்பது ஒருதலை. அவர்கள் செய்தது வெற்றுச் சமயப் புரட்சியன்று; வாழ்க்கைச் சமயப் புரட்சி; வேற்றுச் சமயங்களுக்கு இடையில் அவர்கள் கொள்கைகளும், ஒரு சமயமக வைத்து எண்ணப்பட்டாலும் திருவள்ளுவரைத் தலைவராகக் கொண்டு அவரை நிறைவாகப் பின்பற்றும் கொள்கைகளை உடைய சிவசமயம் ஒரு சமயமன்று - சமயாத்தம் - சமயம் கடந்த சமரசம் - சன்மார்க்கம் - பொதுச் சமயம் என்று பின்வந்த தாயுமானார், இராமலிங்கர், தமிழ்ப் பெரியார் திரு.வி.க. போன்றவர்கள் விளக்கியிருப்பதை எண்ணிப் பார்த்தல் வேண்டும்.

தெய்வத் தமிழ் மன்ற மாநாட்டில் ஈடுபடும் அன்பர்கள் மேலே குறிப்பிட்ட கருத்துக்களின் அடிப்படையில் சிந்தித்துச் செயலாற்றினால் மக்களுக்கு இருமையும் மலரும். அருமை விழாவாக அம்மா நாடு அமையும் என்பதில் ஐயமில்லை.

ஆறு ஆதாரங்கள்

விழிப்பு — ஆக்ஞை
கனவு — விசுத்தி
சுழுத்தி — அநாகதம்
துரியம் — மணிபூரகள்
துரியாதீதம் — சுவாதிட்டானம்
மூலஅடிப்படை — மூலாதாரம்



மாதொரு பாகன்

(பா.சிவராம கிருஷ்ணசர்மா, இந்துக் கல்லூரி, கொழும்பு.)

மாதொருபாகன்

சிவனுடைய மகேஸ்வர மூர்த்தங்களில் தேவியுடன் இணைந்துள்ள வடிவங்களில் ஒன்று அர்த்தநாரீஸ்வர வடிவம். அர்த்தம் என்பது அரைப்பங்கு. நாரி என்பது பெண் எனப் பொருள்படும். சிவன் ஓர் அரைப் பங்காகவும், உமை மற்ற அரைப்பங்காகவும் இணைந்த வடிவமாக அர்த்தநாரீஸ்வர வடிவம் விளங்கும், சிவ சக்தி ஐக்கிய நிலையை இந்த அம்சம் வெளிப்படுத்தும்.

ஆறுவகைச் சமய நெறிகளுள் ஒன்றான சாக்தநெறி பரம்பொருளைப் பெண்ணாகக் கொள்கிறது. சைவநெறி யின் அர்த்தநாரீசுவர நிலை இறைவனை ஆணும் பெண்ணும் ஒன்றுசேரக் காட்டுகின்றது. மாணிக்க வாசகர் தமது திருவாசகத்தில் படைக்கும் படைப்போன் பழையோன்[1] எனவும், தன்னேர் இல்லோன்[2] எனவும், பெண் ஆண் அலியெனும் பெற்றியன்[3] எனவும் சொற் பதம் கடந்த தொல்லோன்[4] எனவும் காட்டியுள்ளார்.

ஐங்குறுநூற்றுக்[5] கடவுள் வாழ்த்தில் இந்த அம்சம் 'நீலமேனி வாலிழை பாகத்து ஒருவன்' எனவும், புறநானூற்று[6] இறைவாழ்த்தில், 'பெண்ணுரு ஒரு திறன் ஆகின்று அவ்வுருத் தன்னுள் அடக்கிக் கரக்கினும் கரக்கும்' எனவும் திருமுருகாற்றுப் படையில்[7] உமைய மர்ந்து விளங்கும் முரண்மிகு செல்வன்' எனவும், சிலப்பதிகாரத்தில்[8] உமையவள் ஒரு திறனாக ஓங்கிய இமையவள்' எனவும் காட்டப்பட்டுள்ளது.

மாணிக்கவாசகப் பெருமான் தமது திருக்கோத்தும் பியில்[9]

'தோலும் துகிலும் குழையும் சுருள் தோடும்
பால் வெள்ளை நீறும் பசுஞ்சாந்துப் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையும் உடைத்தொன்மைக் கோலம்'

எனக் காட்டுகிறார்.

சிவஞானசித்தியார், 'மாதொரு பாகனைப் போற்று வதைக் காணலாம். காளிதாசன் இரகுவம்சத்தில்[10] 'மாதொரு பாகனைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

அர்த்தநாரீசுவர மூர்த்தத்துக்கு உள்ள தத்துவ விளக்கம் பின்வருமாறு கொடுக்கப்படும். "பிரம்மம் தன்னைத் தானே அறியும்போது 'சித்' ஏற்படுகிறது. இதனால், சக்தியின் பல வடிவங்களைக் காணமுடி கிறது. சத்., சித்தை, அறிவதைத் தான் ஞானம் என்றும், அறிவு என்றும் கூறுவர். 'சத்' என்பது, ஈஸ்வரன், 'சித்' என்பது அம்பிகை. தன்னையே அறிந்து கொள்ளும் போது தான் ஆனந்தம் என்கிற உணர்வு உண்டாகிறது. ஈஸ்வரனும், அம்பிகையும் சேர்ந்து 'சத்' 'சித்' ஆனந்த மாக (சச்சிதானந்தமாக) இருக்கிறார்கள்.

சிவன் அர்த்தநாரீசுவர வடிவம் கொண்டதற்கான பல தெய்வீக வரலாறுகள் உண்டு. பிரமன் பிரஜாபதி களைப் பெற்று, அவர்கள் மூலம் படைக்கும் தொழிலைச் செய்வித்தான். பிரமன் எதிர்பார்த்தவாறு இவர்கள் படைத்தல் தொழிலைச் செய்யாதபடியால் படைத்தல் தொழில் மந்த கதியை அடைந்தது. பின் பிரமன் மகேசுவரனை நோக்கி தவமியற்றினான். மகேசுவரன் ஆணும், பெண்ணும் ஒன்றாக இணைந்த விளங்கும் வடிவில் தோன்றி கவலை நீங்கும்படி கூறினான். இந் நிலையைக் கண்ட பிரமருக்குப் பெண்ணைப் படைக்கும் தேவையேற்படவில்லை. மகேசுவரனின் இவ் வடிவத்தி னால் தனது தவறை உணர்ந்த பிரமன் படைப்பதற்குப் பெண்ணைத் தந்தருள வேண்டினான். பிரமனின் வேண்டுகோள் வழங்கப் படவே படைத்தல் தொழில் தங்கு தடையின்றி நடைபெற்றது.[11]

சிவன் பார்வதி தேவி சகிதம் கைலாயத்தில் இருந்த போது தேவர்களும் ரிஷிகளும், பிருங்கி ரிஷியைத் தவிர, அனைவரும் வலம் வந்து வழிபட்டனர். பிருங்கி ரிஷியா னவர் ஒரே பரம்பொருளான சிவனை மட்டுமே வழிபடுவ தாக உறுதிபூண்டிருந்தவர். இச் சங்கற்பத்திற்கேற்ப பார்வதி தேவியுடன் இருந்த சிவனை வலம் வரவில்லை. இதனால் கோபமுற்ற பார்வதி தேவி, பிருங்கி ரிஷிக்குத் தசை, குருதி அகன்று வெறும் எலும்புத் தோலுடன் இயக்க சக்தி எதுவுமின்றிப் போகச் சாபமிட்டார். இதனால் இந்த முனிவர் தன்னைத்தானே தாங்கிக் கொள்ள முடியாத நிலையில் வெதும்பினார். இறைவன் இப் பரிதாப நிலையைக் கண்டு இரங்கி, முனிவர் தம்மைத் தாங்கிக் கொள்ளும் பொருட்டு மூன்றாவது கால் ஒன்றைக் கொடுத்தருளினார். இதனால் பிருங்கி ரிஷி ஆனந்தக் கூத்தாடினார். பார்வதி தேவியின் முயற்சி தோல்வியடைந்ததினால் அவர் சிவனை நோக்கித் தவமியற்றி சிவனுடன் இணைந்த உருவத்தைப் பெற்றார். இதுவே அர்த்தநாரீசுவர மூர்த்தம். இம் மூர்த்தம் பிருங்கி ரிஷியின் உறுதியைச் சோதிப்பதாக அமைந்தது எனினும், பிருங்கி ரிஷி வண்டின் உருவில் இருவருக்கு மிடையில் சென்று சிவனை வலம்

வரலானார். இவ்வுறுதிப்பாட்டினால் மனங்குளிர்ந்த பார்வதிதேவி முனிவருக்கு வரம் நல்கினார் என்று புராணங்கள்[12] கூறுகின்றன.

அர்த்தநாரீசுவர மூர்த்திக்கு விதிக்கப்படும் பலதரப்பட்ட வடிவங்களை காமிகா கமம்[13], காரணாகமம்[14], சில்பரத்தினம்[15], சகளாதிகாரம்[16], காசியப சில்ப சாஸ்திரம்[17] ஸ்ரீ சாரஸ்வதீய சித்திரகர்ம சாஸ்திரம்[18], ஸ்ரீ தத்துவ நிதி[19] முதலியவை விவரிக்கின்றன.

அர்த்தநாரீசுவர மூர்த்தத்தில் காமிகாகமம்[20] சிவனை வலப் பக்கத்திலும் பார்வதியை இடப்பக்கத்தி லும் அமைக்கப்படவேண்டும் என விதிக்கின்றது. காரணாகமமும்[21] ஸ்ரீ தத்துவநிதியும்[22] வலப்பக்கத்தில் சிவன் சிவப்பு நிறமாகவும், இடப் பக்கத்தில் பார்வதி பச்சை நிறமாகவும் அமைய வேண்டுமென விதிக்கின்றது. ஓவியங்களிலும், கதைவிக்கிரகங்களிலும் இவ்வாறு நிறங்கள் தீட்டப்படுவதைக் காணலாம். காரணாகமம்[23] இம் மூர்த்தத்தை அர்த்தநாரீஸ்வர வபுஹு எனச் சுட்டும்.

அர்த்த நாரீசுவர மூர்த்தத்தின் வலப்பக்கத்தில் அமையும் சிவனின், ஜடா மகுடத்துடன் கூடிய தலையில் பிறைச் சந்திரன் இருக்கும். வலது காதில் நக்ர குண்டலமோ சர்ப்பக் குண்டலமோ தொங்கும். நெற்றிக் கண் வலப்பக்கத்தில் அரைப் பகுதியாக இருக்கும். வலது புறத்தில் இருகைகளும், இடது புறத்தில் உள்ள கையில் நீலோற்பலமலர் இருக்கும். காரணாகமத்தின்[24] படி வலதுபுற இரு கைகளில் ஒன்று மழுவையும், மற்றது இடபத்தின் தலைமேல் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும். காமிகாகமத்திற்கிணங்க[25] இரு கைகளில், ஒன்று மழுவுடனும் மற்றையது அபய நிலையிலும் இருத்தல் வேண்டும். இடது பக்கத்தில் இரு கைகள் அமையலாம் எனவும், மற்றைய கை உயர்த்திய நிலையில் கண்ணாடியை வைத்திருப்பதோடு, தேவியின் கண்கள் அதை நோக்கியவாறு பதிந்திருத்தல் வேண்டும் எனவும் குறிப்பிடுகிறது. பத்ம பீடத்தில் அமைந்திருக்கும் இம் மூர்த்தத்தின் வலதுபுற சிவனின் ஆடை, தொடை மட்டத்தில் இருக்கும். இப்பகுதி மார்பில் சிவனுக்கு விதிக்கப்பட்ட அணிகலன்களுடன் நாகயக்ஞோப வீதமும் அரை இடுப்பில் நாகமேகலையும் விளங்கும். சிவனது வலது பக்க வலது கால் வளைந்தோ, நேராகவோ அமைந்திருக்கும்.

இவ் வடிவத்தின் இடது புறத்தில் பார்வதிதேவிக்குரிய கரண்டமகுடம் வலதுபுற நெற்றிக்கண்ணின் தொடர்ச்சியாகத் திலகம் விளங்கும். இடது பெண்மைக்குரிய கண் மைதீட்டப்பட்டு, இடது காதில் வாளிகா வகைக் குண்டலம் தொங்கும். இடது புற மார்பகத்தின் மேல் பெண்களின் அணிகலன்கள் மிளிரும். பட்டாடைகள் கணைக்கால்வரை அமைவதோடு, பாத சலங்கை காணப்படும். பின்புறத்தில் அல்லது பக்கவாட்டில் இடபம் காணப்படும்[26].

இம் மூர்த்தத்தின் அடிப்படை சந்திரசேகர மூர்த்தியாக அமைய வேண்டும் எனவும், சில நுட்ப மாறுதல்களை விளக்கமாக காரணாகமம்[27] காட்டுகின்றது. இம் மூர்த்தத்தின் அங்கலட்சணவமைப்புப் பற்றி சந்திரசேகர வடிவத்தைப் போன்றது எனக் கூறி, மற்றைய நுணுக்கங்களை ஸ்ரீ ஸாரஸ்வதீய சித்ர கர்ம சாஸ்திர நூல்[28] விளக்கிச் சொல்கிறது.

இம் மூர்த்தம் ஆபங்கலட்சணத்துடனாவது சமபங்கலட்சணத்துடனாவது அமையலாம்[29].

இம் மூர்த்தம் இரண்டு மூன்று அல்லது நான்கு கைகளுடன் காணப்படும். சில வேளைகளில் காசியப சில்ப சாஸ்திர விதிப்படி ஆறு கைகளுடனும் விளங்கும். ஆகமங்கள் சிவனது வலது கைகளில் ஒன்றே இடபத்தில் தலைமீது அமைவதை குறிப்பிடுகையில் சிற்ப நூல்கள் தேவியின் இடது கைகளில் ஒன்றின் அம்சமாக இதனைக் குறிப்பிடுகிறது. எனினும், ஆகமங்கள் சுட்டும் அமைப்பில், இடது புறத்தில் தேவி புஷ்பம் ஏந்திய கையினளாக விளங்கும் நிலையும் சிற்ப நூல்களில் உள்ளன[30].

இம் மூர்த்தத்தின் வலது கால் நேராகவும், இடது கால் குஞ்சிதமாகவும் இருக்க வேண்டும்[31] எனக் கூறும் சித்திர சாஸ்திர நூல் ஆகம மரபுக்கேற்ப இடது கால் நேராகவும் வலது கால் வளைந்தும் இருக்கலாம்[32] எனவும், கூறுகின்றது. இவ்வாறே சில்ப சாஸ்திர நூலும்[33] காட்டுகிறது.

முக லிங்கத்தில் உள்ள சோமேசுவரர் கோயிலில் உள்ள அர்த்தநாரீசுவரர் மூர்த்தத்தில் வலது புறத்தில் இடபமும் இடது புறத்தில் சிங்கமும் காணப்படுகின்றது. வலது கைகளில் ஒன்று சூலாயுதத்தைத் தாங்கியுள்ளது.

கும்பகோணம் நாகேசுவர சுவாமி கோவில் பாதாமி குகைச் சிற்பம், திருச் செங்காட்டங்குடிச் சிவாலயம், மகாபலிபுரம், காஞ்சி கைலாசநாதர் சுவாமி கோயில் பிரகாரம் ஆகிய இடங்களில் உள்ள அர்த்தநாரீசுவரர் அமைப்புக்களை விரிவாக கோபிநாதராவ்[34] தருகிறார்.

மகாபலிபுரத்து தர்மராஜத் தேரில் உள்ள அர்த்த நாரீசுவரரைப் பற்றி விரிவாக ஆராயப்பட்டுள்ளது[35].

திருவெண்காட்டிலிருந்து பெறப்பட்ட அர்த்தநாரீசுவரர் பற்றி விரிவாக விளக்கப்பட்டுள்ளது[36].

சோழர் ஆட்சிக் காலத்தில் அர்த்தநாரீசுவரருக்குத் தேவையான நிவந்தங்கள் வரியில்லாமல் மானியமாக அளிக்கப்பட்டிருந்தன.[37]

தமிழ் நாட்டில் சேலம் மாவட்டத்து திருச்செங்கோடு என்ற சிவசக்தி ஐக்கிய தலத்தில் அர்த்தநாரீசுவரர் வெண்மை நிறத்தில் மூலவராக அமைந்துள்ளார். தேவிக்கு அர்த்தநாரீஸ்வரி, பாகப்பிரியாள் என்ற பேர்கள் உள்ளன[38]. அருகில் மூன்று கால்களுள்ள பிருங்கி ரிஷியின் உருவமும் உள்ளது. திருஞானசம்பந்தர் திருச்சாத்த மங்கைத் தலப் பதிகத்திலும்[39] திருவண்ணாமலைப் பதிகத்திலும்[40] அர்த்தநாரீசுவரரைப் புகழ்ந்து பாடியுள்ளார். சுந்தரரும் அர்த்தநாரீசுவரர் மூர்த்தத்தைப் போற்றிப் பாடியுள்ளார்.[41]

காஞ்சி கைலாசநாதர் ஆலயத்திலே உள்ள அர்த்த நாரீசுவரர் இடபத்தில் வீற்றிருப்பதோடு, உமையவளின் கையில் வீணை காணப்படுகிறது.

திருமழபாடியில் உள்ள அர்த்தநாரீசுவர மூர்த்தம் ஆகம, சிற்ப சாஸ்திர விதிகளுக்கும் மாறாக வலப்பக்கம் தேவியின் அரையுருவைத் தாங்கிய உருவமாக உள்ளது.[42]

சிவனுடைய அம்சங்கள், தேவியினுடைய அம்சங் களையும் ஒன்று சேர்த்து சிவனை அர்த்த நாரீசுவரராக வழிபடும் முறைக்குப் புராண வரலாற்றுச் சம்பவங்கள் வழி கோலியுள்ளது.

தொன்மைக் கோலமெனப் போற்றப்படும் போக மூர்த்தமான அர்த்தநாரீசுவர மூர்த்தம் தத்துவார்த்த சிறப்பினைக் கொண்டிருப்பதோடு, பல்வேறு இடங்களில் பரவலாகக் காணப்பட்டாலும், அடிப்படை அம்சங்களில் அதிக வேறுபாடுகளைக் கொண்டிராத சிவவடிவங்களுள் ஒன்று எனலாம்.

1. பெறாமையில்லாத குணத்தை ஒருவன் ஒழுக்கமாகக் கொள்ள வேண்டும். பொறாமையுடையவர்க்குப் பகைவரே வேண்டுவதில்லை. பகைவர் விளைவிக்கக் கூடிய கெடுதியினையெல்லாம் அவனது பொறாமையே செய்துவிடும். ஒருவன் மனத்திலுள்ள பொறாமையென்னும் கொடிய பாவி அவனது செல்வத்தையழித்து அவனைத் துன்பத்தில் வீழ்த்திவிடும். (குறள் 161, 165, 168).

2. ஆசையற்றவர்க்குத் துன்பமேயில்லை, அஃது உடையவர்க்குத் துன்பங்கள் மேன்மேல் வரும் (குறள் 368).

3. பிறர்க்கு இன்னாதவற்றை நாம் முற்பகல் செய்தால் நமக்கு இன்னாதன அற்றைப் பிற்பகலே தாமே வரும் (குறள் 319).

4. செருக்குடைய சிறியோர் தம்மை வியந்து பெருமை பாராட்டுவர். செருக்குடன் வாழ்வது சிறுமைக் குணமாகும். (குறள் 978).

5. ஓர் உயிரைக் கொன்று அதன் ஊனைத்தின்னுதல் அருளற்ற செயல், அது சிறிதும் நன்மை தராது. ஓர் உயிரைக் கொல்லாமலும் அதன் ஊனை உண்ணாமலும் இருப்பவனை எல்லா உயிர்களும் கை குவித்து வணங்கும் (குறள் 254, 260).

6. ஒருவர்க்குத் தீயனவெல்லாம் அவரது சினத்தால் உண்டாகும். ஆதலால் எவரிடத்தும் சினங்கொள்ளுதலையொழிக, ஒருவன் தனக்குத் துன்பம் வராது காத்துக்கொள்ள விரும்பினால் அவன் சினத்தினின்று தன்னைத் தடுத்துக் கொள்ளவேண்டும். இல்லையேல் அச்சினம் (பிறர்க்குத் தீமை விளைவிப்பது மட்டுமின்றி) அவனையே அழித்துவிடும்.

துறவிகளின் கோபம் ஒருகணநேரம் நிலைக்குமாயினும் அதற்குக் காரணமானோர் அக்கோபத்தினின்று தங்களைக் காத்துக்கொள்ள இயலாது (குறள் 303, 305, 29).

அன்பு வெள்ளம்

(டாக்டர். தெ. ஞானசுந்தரம் பச்சையப்பன் கல்லூரி)

பெரியாழ்வார்: பெரியாழ்வார் வில்லிபுத்தூரில் தோன்றியவர். இவர் தம் இயற்பெயர் விட்டுசித்தன். இவர்பால் அமைந்த அளவுடைமை கண்டு பாண்டிய மன்னன் சூட்டிய பட்டப் பெயர் பட்டர்பிரான்; இவர்தம் அகவாயில் ஊற்றெடுத்த பரிவினைப் போற்றி வைணவ உலகம் ஒருமிடறாகப் புனைந்த பெயர் பெரியாழ்வார். இவரது இறை யனுபவம் பொங்கி வழிந்த பாசுரங்கள் திருப்பல்லாண்டு, பெரியாழ் வார் திருமொழி என்னும் இரு நூல்களாக வடிவங் கொண்டன. திருப்பல்லாண்டினைப் பெரியாழ்வார் திருமொழியின் முதல் திரு மொழியாகக் கொண்டு ஒரு நூலாக ஒருங்கவிடுவதும் உண்டு. ஒவ் வொரு திருமொழியின் இறுதிப் பாசுரத்திலும், விட்டு சித்தன்', 'பட் டன்', 'பட்டர்பிரான்', 'புதுவை மன்னன்' என்பவற்றுள் ஏதேனும் ஒன்றைத் தம்மைக் குறிக்கப் பயன்படுத்தியுள்ளார். இவ்விடங்களில் விட்டுசித்தன், பட்டர்பிரான் என்னும் இரு பெயர்களை அடைமொ ழிகளோடும், தனித்தும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவர் தம்மை 'புதுவையர் கோன்' என்றும், 'மின்னுநூல் விட்டுசித்தன்' என்றும், 'மெய்யடியான் விட்டுசித்தன்' என்றும் கூறிக் கொள்கிறார். தம்மைப் பெரியாழ்வார் என்று எங்கும் சுட்டிச் செல்லவில்லை. இவரது பாசு ரங்களைக் கொண்டு நோக்கும்போது, பெரியாழ்வார் என்பது பின் னர்ப் பெருமை கருதிப் பெற்ற பெயராகவே தெரிகிறது. 'பெரிய பெருமாள், பெரியாழ்வார், பெரிய வாச்சான்பிள்ளை என்பர் அவர வர்தம் பெருமையினால்' என்று பெரியோர் அருளிச் செய்வர். எம் பெருமான் இவருக்குப் 'பெரியாழ்வார்' என்ற பெயரைச் சூட்டி மறைந்தருளினான் என்பாரும் உண்டு.

அறிவு நிலை: ஒவ்வொருவருக்கும் அறிவு நிலை என்றும், அன்பு நிலை என்றும் இரு நிலைகள் உண்டு. விட்டுசித்தரின் அறிவு நிலை யைக் காட்டுவதே பட்டர்பிரான் என்னு பெயர். பாண்டிய மன்னன் வல்லபதேவன் சிறியதைப் பெரியது நலியாதபடி செங்கோல் செலுத்தி வந்தான். ஒரு நாள் கறுப்புடுத்து இரவில் நகர்வலம் வந் தான். அப்பொழுது ஒரு வீட்டுத் திண்ணையில் மறையவன் ஒருவன் கிடக்கக் கண்டான். அவனை உணர்த்தி யார் என்று வினவினான். அவன் தான் மறையவன் என்றும், கங்கையாடி வருபவன் என்றும் தெரிவித்தான். ''அங்ஙனமாயின், வட மொழிச் செய்யுள் ஒன்று சொல்லுக'' என்று பணித்தான் மன்னன். அவ்வந்தணன் ''மழைப்பரு வத்தில் இன்புற்று வாழ மற்றப் பருவங்களில் பாடுபட வேண்டும்; இரவில் கவலையின்றிக் கண்ணயரப் பகலில் உழைக்க வேண்டும்; கிழப்பருவத்தில் இடரின்றி வாழ இளமைப் பருவத்தில் உலையா முயற்சி வேண்டும்; மறுமையில் நலமுற இம்மையில் அறவினை இயற்றல் வேண்டும்'' என்னும் பொருளமைந்த வடமொழிச் செய்யு ளைக் கூறினான். அதனைச் செவிமடுத்த மன்னன் தனக்கு இம்மை யில் குறையொன்றும் இல்லாததனால் மறுமையில் இன்புறுதற்கு வழி கோல விழைந்தான். அதன் பொருட்டுப் பரம்பொருள் எதுஎன்பத னைத் தெளியப் புலவர் அவையினைக் கூட்டினான். அவ்வாராய்ச்சி யில் விட்டுசித்தர் பெருமான் பணித்தவாறு பங்கேற்க வில்லிபுத்தூரி லிருந்து மதுரை மாநகரை அடைந்தார். பாண்டிய மன்னனும் அவனு டைய அமைச்சர் செல்வநம்பியும் வணங்கி வரவேற்றனர். அங்கு விட்டுசித்தர் பேசத் தொடங்கினார். நான்முகன் அருளால் வான்மீகி முனிவர் பொருளனைத்தும் உணர்ந்து கொண்டது போலவும், பாஞ்ச சன்னியம் பட்டவாறே மன்னர் குலத்தில் பிறந்த சிறுபிள்ளை துருவன் பேரளவுடையனாக மாறியது போலவும் பெருமானுடைய அடியற்ற அருளாலே தாமும் மறைப்பொருள்கள் எல்லாம் கைவரப் பெற்றார். நாரணனே பரம்பொருள் என்று மேற்கொள்களால் அறுதியிட்டார். திருமந்திரத்தின் செம்பொருளைத் தெளிவுபடுத்தினார். அகரத்தால் சுட்டப்படும் பெருமானுக்கே மகரத்தால் குறிக்கப் பெறும் உயிர் அடிமை என்பதே அம்மெய்ப்பொருள். அவன் நோக்குபவன் (ரக்ஷ கன்); நாம் நோக்கப் பெறுபவர்கள் (ரக்ஷ்யம்). அவன் அண்ணல் (சேஷி), நாம் அடிமைகள் (சேஷபூதர்), அவன் உடையவன் (ஸ்வாமி); நாம் உடைமைகள் என்று பெருமானுடைய மேன்மை தலைமைத் தன்மைகளை உணர்த்தினார். இவரது அறிவுத் தெளிவி னைக் கண்டு பாண்டிய மன்னன் பட்டர்பிரான் என்று பட்டஞ் சூட்டி னான். பட்டர் என்னும் சொல் புலவர் என்றும், பிரான் என்றும் சொல் உதவுபவன் என்றும் பொருள்படும். இதனால் இவர் புலவர்களுக்கு உதவுபவராகத் திகழ்ந்தார் என்பது விளங்குகிறது. பெருமானை நோக்குபவனாகவும் தம்மை நோக்கப்படுவோராகவும் கருதிய நிலை, அறிவுநிலை ஆகும்.

இவரது பேரறிவினை உலகம் உணரக் காரணமாக இருந்தவன் பாண்டிய மன்னனுக்கு அமைச்சனாக விளங்கிய செல்வநம்பி அவன் இவரைக் கொண்டாடிய சிறப்புக்குரிய வைட்டணவன் ஆத லின் அவனை இவரும் நினைந்து போற்றியுள்ளார். அவனை,

> ''அல்வழக்கொன்றும் இல்லா அணி கோட்டியர்கோன்
> அபிமான துங்கன்
> செல்வனைப் போலத் திருமாலே நானும் உனக்குப்
> பழவடியேன்'' (தி. பல். 11)

> ''நளிர்ந்த சீலன் நயாசலன் அபிமான துங்கனை நாள்தொறும்
> தெளிந்த செல்வனைச் சேவகங் கொண்ட செங்கண்மால்''
> (ஸ.தி. 4:4:8)

என்றும் குறித்துச் செல்வது இவ்வரலாற்றுக்கு ஓரளவு அகச்சான்றாக அமைகிறது.

அன்பு நிலை: ஒருவனுக்கு இறைவனைப் பற்றி முழுமையான அறிவு வாய்க்கும்போது, பெருமானுடைய தலைமை, மேன்மை, நீர்மை, எளிமை, முற்றறிவு, பேராற்றல், குறைவிலா நிறைவு, பேரி றைமை ஆகிய பண்புகளும், தனது தன்மையும் (தாழ்வு) அவனை அடையும் பேறும், அதற்குரிய ஆறும், தனக்கும் அவனுக்கும் குறுக்கே நிற்கும் இடைச்சுவரும் ஆகிய ஐம்பொருள் பற்றிய தெளிவு கிட்டுகிறது. இவ்வறிவு அன்பாகக் கனிந்து முதிர்கிற போது இத்தெ ளிவு மறைகிறது; கலக்கம் பிறக்கிறது; அத்தலை குழைச்சரக்கு ஆகி றது; இத்தலை அத்தலையைத் தன்னால் காத்தற்குரியதாகக் கொள்கி றது. இஃது அன்பினால் மூளும் கலக்கம். ஆதலின் இது தன்மைக்குக் கொத்தையோ நிறக்கேடோ அன்று; புகர் கூட்டுவதே. ''அறிவு நிலை யில் நோக்குண்பவன் நோக்குபவன் என்னும் எண்ணம் தன் கப்பிலே கிடக்கும்; அன்பு நிலையில் தட்டுமாறிக் கிடக்கும்'' (ஸ்ரீவசன பூஷ ணம், 248). ''அவன் தன்மையினை நினைத்தால் அவனைக் கடகா கக் கொண்டு தன்னை நோக்கும்; மென்மையை நினைத்தால் தன்

னைக் கடகாகக் கொண்டு அவனை நோக்கும்'' (ஸ்ரீவசன பூஷணம், 249) என்பர் பிள்ளை உலகாரியர்.

பாண்டிய மன்னன் இவரை ஆனைமேல் ஏற்றி நகர்வலம் வந்த போது இவர் அன்பு வயப்பட்டார். தாம் அவையில் உணர்த்திய செம்பொருளை மறந்தார். பெருமானைத் தம்மால் காக்கப்படுதற்கு ரிய குழைச்சரக்காகக் கொண்டார். இது முறுகிய அன்பு இவர்பால் விளைத்த மாற்றம்; கலக்கம். தம் பிள்ளைகள் சிவிகையில் வரும் காட்சியினைக் காண விழைந்து வரும் பெற்றோர்களைப் போலப் பெருமான் பிராட்டியோடு பெரிய திருவடியின் மீது ஏறி இவருக்கு நேரும் சிறப்பினைக் காண விண்ணில் வந்து காட்சியளித்தான். அக்காட்சி இவரைத் தம் உயர்வை எண்ணி மேனாணிப்புக் கொள் ளச் செய்யவில்லை. மாறாக, அச்சங்கொண்டு அவனுக்காக வயிறெ ரியச் செய்தது. ஆடவர் பெண்ணாகப் பிறந்திருக்கக் கூடாதா என்று ஏங்கும்படியான அவன் வடிவழகையும், பேசப் பிசகும்படியான மென்மையையும், துவக்கும் இளமையையும் கண்டார். அவனு டைய முற்றறிவு, முடிவில் ஆற்றல், நோக்குந்தன்மை ஆகிய அனைத் தையும் மறந்தார். தம் நிலை அழிந்தார். ''இது பொல்லாத உலகம் ஆயிற்றே! இவ்விருள்தரு மாகுலத்தில் எதிரம்பு கோக்கும் இராவண னைப் போன்ற வன்னியம் குவாலாய் உண்டே! காலம் நடையாடாத விண்ணுலகில் அமரர்களின் பல்லாண்டினைச் செவியேற்று இனிது ஓலக்கமிருப்பவன் கலியரசோச்சும் மண்ணுலகில் காட்சி தருகி றானே! இவனுக்குக் கண்ணேறு பட்டுவிடுமோ!'' என்று கலங்கினார். நெஞ்சில் கூடு பூரித்த பரிவாலே வயிறு பிடித்தார்; யானை மேல் கிடந்த மணிகளே தாளமாயின. அவனை வாழ்த்தும் வேட்கை கிண் ணகமெடுத்துப் பொங்கிப் பரந்து பாய்ந்தது.

''பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா! உன்
சேவடி செவ்வி திருக்காப்பு''

என்று அவனுக்குப் பல்லாண்டு பாடினார்.

அத்தோடு அமையாமல், 'மங்கையும் பல்லாண்டு' என்றும், 'சுடராழியும் பல்லாண்டு' என்றும், 'அப்பாஞ்ச சன்னியமும் பல் லாண்டு' என்றும் அவனுக்குக் கல்மதிலிட்டாற்போலே காப்பாய் இருக்கும். அவன் அடியார்களுக்கும் பல்லாண்டு இசைத்தார். தாம் மட்டும் பாடுவதில் நிறைவடையாமல் தம்மைப் போன்று அவ னையே ஆசைப்பட்டவர்களைச் சேர்த்துக் கொண்டும், பொருட் பேற்றினையும் கைவல்யப் பேற்றினையும் விழைந்தவர்களைத் திருத்திச் சேர்த்துக் கொண்டும் பல்லாண்டு பாடினார்.

இந்தப் பொங்கும் பரிவே இவரைப் பெரியாழ்வார் ஆக்கியது. இவருக்குப் பெருமை தலைமையாலும், கால முதன்மையாலும், பாசுரத் தொகையாலும் உண்டாகவில்லை. தலைமையால் பெருமை நம்மாழ்வார்க்கு, கால முதன்மையால் பெருமை முதலாழ்வார்க ளுக்கு; பாசுரத்தொகையால் பெருமை திருமங்கையாழ்வார்க்கு; இவருக்குப் பெருமை இவரது தன்மையால் வந்தது. மற்றவர்களுக்கு இருந்தது பரிவு; இவருக்கு இருந்ததோ பொங்கும் பரிவு; ஞானம் அடியாகப் பிறந்த பெரும்பரிவு; சோராத காதல் சுழிப்பு; அதனால் பேரறிஞர் பெரியாழ்வார் ஆனார்.

''மங்களா சாசனத்தில் மற்றுமுள்ள ஆழ்வார்கள்
தங்களார் வத்தளவு தானன்றி - பொங்கும்
பரிவாலே வில்லிபுத்தூர்ப் பட்டர்பிரான் பெற்றான்
பெரியாழ்வார் என்னும் பெயர்.''

என்பது உபதேசரத்தின் மாலை (17).

பெரியாழ்வார் ஏற்றம்: பெருமானைக் கண்டவுடன் முதன் முன்னம் தம் குறைகளை அவனிடத்து விண்ணப்பம் செய்ய விழையாமல் அவனுக்கு நன்மைகளை நாடி நின்ற சிறப்பு இவர் ஒருவருக்கே உண்டு. நம்மாழ்வாருக்கு மயர்வற மதி நலம் அருளப் பெற்ற நிலை யில் தம்முடைய ''பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா ஒழுக்கும் அழுக்குடம்புமே' முகந்தோற்றின. பெருமான் திருமங்கையாழ்வா ருக்குத் தன் படிகளைக் காணக் கொடுத்த நிலையில், அவர் தம் முன்னைய நிலையினை எண்ணி, 'வாடினேன்' என்று பாடினார். பெரியாழ்வார் முதலில் மட்டுமின்றி இடையிலும் முடிவிலும் அவ னுக்குப் பரிந்து பாடியுள்ளார். இவரது பரிவே இவரைக் கிருட்டினாவ தாரத்தில் கால்தாழச் செய்தது. முதற்பத்து இரண்டாந் திருமொழி முதல் மூன்றாம் பத்து ஆறாம் திருமொழி வரை கண்ணனின் பல் வேறு திருவிளையாடல்களைப் பாடுகிறார். பாகவதத்தின் பத்தாம் அத்தியாயத்தின் தொடக்கப் பகுதிகளின் தமிழாக்கமாக அப்பகுதி அமைந்துள்ளது என்பர் திரு.இராமசுவாமி அய்யங்கார் (Peeps into mysticism, page 30) பரிவர்கள் இழியும் துறை கிருட்டினாவதாரமே. அதுவே பரிவர் தேட்டமான பிறப்பு. ''இராமாவதாரத்திலே தமப்பன் சம்பரனை முடித்தவனாய்த் தனிவீரனாய் இருப்பான் ஒருவன்; பிள் ளைகள் தாங்களும் ஆண்புலிகள், குடிதானே வன்னியம் அறுத்திருப் பது ஒரு குடி; இவையெல்லாம் மிகையாம்படி பண்பாலே நாட்டை யெல்லாம் ஒரு மார்வெழுத்தாக்கிக் கொண்டு இருப்பார்கள்; ஆகை யாலே, பகைவர் என்கிற பேச்சில்லை. இங்கு அங்ஙனன்றிக்கே, தமப்பன் ஒரு மூத்த பொதுவன்; பிறந்ததும் கம்சன் சிறைக்கூடத் திலே; வளர்ந்ததும் அவன் அகத்தருகே; பிருந்தாவனத்திலே எழும் பூண்டுகள் அகப்பட அசுரமாய் இருக்கும்; நோக்குபவர் ஓரடி தாழ நிற்கில், பாம்பின் வாயிலே விழும்படியாயிற்று அவன்படி இருப்பது; இப்படியானால் வயிறெரியாதிரார்களே இவர்கள்'' என்று பரிவர் தேட்டத்திற்குக் காரணம் காட்டுவர் மணவாள மாமுனிகள் (பெரி யாழ்வார் திருமொழி வியாக்கியான அவதாரிகை)

இவரது பரிவு பாசுரங்களில் தொடை கொள்ளலாம் படி கிடக்கி றது. கண்ணன் பிறந்த நாளைத் தெரிவித்தால் அதுகொண்டு தீயோர் கேடு சூழ்ந்தாலும் சூழ்வர் என்று நினைத்து மறைத்துச் சொல்கிறார்.

''பத்து நாளும் கடந்த இரண்டாம் நாள்
எத்தி சையும் சயமரம் கோடித்து
மத்த மாமலை தாங்கிய மைந்தனை
உத்தா னம்செய் துகந்தனர் ஆயரே'' (1:1:8)

என்று பிறந்த நாளை ஒளித்துப் பாடுகிறார்.

''அத்தத்தின் பத்தாம் நாள் தோன்றிய அச்சுதன் (1:2:6)
முத்தம் இருந்தவா காணீரே''

என்னும் பாசுதரத்தில் மறைத்துச் சொல்வதற்கு மணவாள மாமுனி கள், ''பல்லாண்டு இசைப்பவர் ஆகையாலே பகை அறிந்து கேடு சூழ்வதற்கு வாயப்பில்லாதபடி (அபிசரிக்கைக்கு அவகாசமில்லாத படி) தோன்றிய நாளை மறைத்தருளச் செய்கிறார்,'' என்று விளக்கம் தருகிறார்.

''நாள்கள் ஓர்நாலைந்து திங்கள் அளவிலே
தாளை நிமிர்த்துச் சகடத்தைச் சாடிப்போய்
வாள்கொள் வளைஎயிற்று ஆருயிர் வவ்வினான்
தோள்கள் இருந்தவா காணீரே, (1:2:11)
சுரிகுழலீர்! வந்து காணீரே!

என்னும் பாசுரத்தில் கண்ணன் பிறந்த நாளை மயக்கிச் சொல்கிறார். இதற்கும் அடி அவனுக்குப் பிறர் தீங்கு சூழ்வாரோ என்னும் அச்சமே.

இங்ஙனம் இவர் திருவுள்ளத்தில் ஓடும் நரம்பினை மணவாள மாமுனிகள் மயர்வுற அறிந்திருந்தமையாலேயே,

''கிடக்கில், தொட்டில் கிழிய உதைத்திடும்;
எடுத்துக் கொள்ளில், மருங்கை இறுத்திடும்

ஒடுக்கிப் புல்கில், உதரத்தே பாய்ந்திடும்;
மிடுக்கி லாமையால் நான்மெலிந்தேன் நங்காய்!''

என்னும் பாசுரத்திற்கு அசோதை தனக்கு மிடுக்கிலாமையால் மெலிந்தேன் என்கிறாள் என்று உரை வரையாமல், இச்செயல்களைச் செய்யப் பிள்ளைக்கு மிடுக்கில்லாமையால் என்வருமோ என்று மெலிந்தேன் என்கிறாள்'' என்று உரை வரைந்தார்.

தன் கண்ணே பட்டுவிடுமோ என்று நினைக்கும் பரிவு நிலையை மாகத் திகழ்பவள் தாய். தாயன்பு மிக்க இவர்,

''படைபோர் புக்கு முழங்கும் அப்பாஞ்ச
சன்னியமும் பல்லாண்டே.''

என்று தம் முகத்தை மாற வைத்துக் கொண்டு பல்லாண்டிசைத்தார். இதனை, ''பிள்ளையை அலங்கரித்த தாய் 'தன் கண்படினும் கண்ணெச்சிலாம்' என்று பார்க்கக் கூசுமாப் போலே, பல்லாண்டு பாடுகிற தம்முடைய கண்களையும் செறித்து முகத்தை மாறவைத்துச் சொல்கிறார்'' என்று தெளிவுபடுத்துகிறார் பெரியவாச்சான்பிள்ளை.

பெரியாழ்வார் உச்சிவீடும் விடாதே எப்போதும் பெருமானுக்குப் பல்லாண்டு பாடினார் என்னும் போக்கில் பிள்ளை உலகாரியர் நூற்பா இட்டுச் சென்றுள்ளார். 'மற்றைய ஆழ்வார்களுக்குப் பல்லாண்டு இசைத்தல் ஒரே வழி நிகழ்வது; இவர்க்கு எந்நாளும் நிகழ்வது'' என்பது அவர் கூற்று. பெரியாழ்வார்க்குப் பல்லாண்டு பாடுகை என்றும் ஒக்க உள்ளதா?

ஒருவர் அன்பு நிலையிலேயே எப்போதும் இருப்பது இயற்கைக்குச் சேராது. சில போது அறிவு நிலையிலும் சிலபோது அன்பு நிலையிலுமாகத் தோள் மாறுவதே மனித இயற்கை. பெரியாழ்வார் பெரும்பான்மையும் அன்பு நிலையில் கால் தாழ்ந்திருந்தார் என்று கருதுவதே தகும்.

பெருமானுக்குப் பல்லாண்டு பாடிய பின்பு கிருட்டினாவதாரத்தை பரிவோடு எண்ணிப் போற்றுகிறார். மற்றவர்கள் பாடாத சீமாலிகன் வதத்தைப் பாடுகிறார். வான்மீகத்தில் இல்லாத ஒரு நிகழ்ச்சியை அனுமன் சீதைக்கு அடையாளமாகத் தெரிவிப்பதாகக் கூறுகிறார். 'அல்லியம்பூ மலர்க்கோதாய்' பாசுரத்தில், இவை அறிவுத் தெளிவால் கண்ட காட்சி. இறைவன் தந்த மயர்வற்ற மதி நலத்தால் கண்டகாட்சி இங்கெல்லாம் பல்லாண்டு பாடுகை அரையாறுபடுகிறது. மூன்றாம் பத்து ஏழாம் திருமொழி தொடங்கி அவனது பரிமாற்றத்துக்குப் பாரித்துத் துடிக்கிறார். ''மற்றுள்ள ஆழ்வார்களைக் குமிழ் நீருண்ணப் பண்ணும் அவனுடைய வடிவழகாகிற ஆழங்கால் தானே மேடாய், உயிர்தாங்கி நின்று பல்லாண்டு இசைக்கும் இயல்வினரான இவர், இப்போது அவர்களைப் போலே அவனைக் கலந்து பரிமாற வேணும் என்னும் ஆசை கிளர்ந்து அவ்வேட்கைக்குச் சேரக் கிட்டிப் பரிமாறப் பெறாமையாலே தாமான தன்மை அழிந்து ஓர் இடைச்சி நிலையை அடைந்து தன்னிலையைப் பிறர் வாயாலே பேசுகிறார்'' என்பது அத்திருமொழிக்கு மாணவாள மாமுனிகள் இட்டுள்ள தோற்றுவாய். மேலும், 'துப்புடையாரை' திருமொழியில் பெருமானிடம் தம்மைக் காக்க வேண்டும் என்று வேண்டும் விண்ணப்பமே வெள்ள மிடுகிறது. அதில் 'என்னைக் குறிக் கொண்டு என்றும், அல்லற் படாவண்ணம் காக்க வேண்டும்'' என்று வேண்டுகிறார். 'நெய்க்குடத்தை' திருமொழியில் முதல் எட்டுப் பாசுரங்களில் இறைவன் தமக்குக் காவலானபடியைச் சொன்னார் என்றும் 'உறகல் உறகல் உறகல்' என்னும் பாட்டில் தாம் அவனுக்குக் காவலான படியை அருளிச் செய்தார் என்றும் மணவாளமாமுனிகள் கூறுகிறார்.

எனவே என்றும் தம் குறைகளையே பரக்க நினைந்து அவற்றைப் போக்க முயன்று என்றோ ஒரு நாள் இறைவனுக்குப் பல்லாண்டு பாடிய ஏனைய ஆழ்வார்களைப் போலன்றி என்றோ ஒரு நாள் தம் குறைகளை அவனுக்கு விண்ணப்பித்து என்றும் அவன் நலத்திற்குப் பரிந்து நின்ற சிறப்பால், இவர்க்குப் பல்லாண்டிசைப்பது நித்தியம் என்று சொல்லப்படுவதாகக் கொள்வதே பொருத்தம். சுருக்கமாகச் சொன்னால், இவர் தம்மை அவனுள் வைத்தும், அவனைத் தம்முள் வைத்தும் போதுபோக்கியவர் ஆவார்.

''உன்னைக் கொண்டு என்னுள் வைத்தேன்;
என்னையும் உன்னில் இட்டேன்'' (5:4:5)

என்பது இவரது பாதரம்.

இறைவனிடம் தாயன்பு காட்டி அவனைக் குழந்தையாக்கி நீராட்டி, ஒப்பித்து, தாலாட்டி, பாலூட்டி, அவன் குறும்புகளில் நெஞ்சை இழந்து, அவனைக் குழைச்சரக்காகக் கருதி எந்நாளும் பல்லாண்டு பாடி மகிழ்ந்தவர் பெரியாழ்வார். அடிமையின் எல்லை நிலம், தன்னை அழிய மாறியாகிலும் தன் தலைவனுக்குச் செழிப்பை விரும்புவது ஆகும். அந்த வேத முடிபினைப் பெரியாழ்வார் விளக்கியுள்ளார். அதனாலேயே அன்பு வெள்ளமாகத் திகழ்ந்த அவரை மற்ற ஆழ்வார்களினும் மேலாகப் போரப் பொலியக் கொண்டாடுகிறது வைணவ உலகம்.



உயிர் இவ்வுடலில் நில்லாது என்பதறிந்து நாம் யாது செய்யவேண்டு என்பதையும், உயிருக்குச் சுதந்திரம் இன்மையால் அது இறைவனிட்ட கட்டளைப்படி இருப்பதுவும், நீங்குவதும் செய்யும் என்பதையும் நாம் அறிந்து உயிர் நீங்கு முன்பே இறைவனையடைய ஆவன ஆற்றிக் கொள்ள வேண்டும். அதுவே அறிவுடைமையாகும். உயிர்க்குப் பயன் இவ் அறிவையடைவதே. (திருமந்திரம் 190).

2. ''ஒன்றே குலம் ஒருவனே தேவன் நன்றே நினைமின்'' (திருமந்திரம் 2104).



நித்திய வழிபாடு

(திருமதி. கே. மங்களம் காசிராஜன்)

நித்திய வழிபாடு

எப்போ தகத்தும் நினைவார்க் கிடரில்லை
கைப்போ தகத்தின் கழல்!

உலகில் தோன்றியுள்ள மக்களாகிய நாம் நித்திய வழிபாட்டின் சிறப்பினை உணர்ந்து செயல்படவேண்டும்.

இந்நித்திய வழிபாடு செய்வது மிகச் சிரமமான காரியமல்ல. மிகமிக எளிமையானது; வீட்டில் தீபமேற்றி, அதற்குச் சிறப்புச் செய்வதற்காக அவரவர்கள் தங்களுக்குத் தெரிந்த பக்திப் பாடல்களைப் பாடித் துதிப்பதே இவ்வழிபாடு.

பக்திப் பாடல்கள் என்று சொன்னவுடன் மலைப்பாக எண்ண வேண்டியதில்லை. அவரவர் படிக்கும் பள்ளிக்கூடங்களில் கணபதி தோத்திரம். சரசுவதி துதி, முருகன் புகழ், நாமாவளி என்று சொல்லிக் கொடுப்பார்கள். அவற்றைத் தினமும் திருவிளக்கு முன் நின்று பாடினால் போதுமானது.

இப்பொழுது கடவுள் வாழ்த்துப் பாடல்கள் எல்லாம் வேறுவிதமாகத் திசை திரும்பிவிட்டன! எந்தப் பாட்டைப் பாடுவது என்று யோசிக்க வேண்டா.

இருக்கவே இருக்கின்றன புத்தக நிலையங்கள். அந் நிலையங்களில் பக்திப் பாடல்கள் அடங்கிய புத்தகங்கள் இருக்கும். அவைகளில் நமக்கு வேண்டியவை இல்லாதிருப்பின், கோயில்களுக்குச் செல்லும்பொழுது கோயில் வாசலில் பக்திப் புத்தகங்கள் விற்பனைக்கு இருக்கும். அவற்றை வாங்கிக் கொள்ளலாம்.

பக்திப் பாடல்களை இசையோடு பாடுவதற்குரிய இராகங்கள் தெரியாதே என்று எண்ணவேண்டா. அவரவர்களுக்குத் தெரிந்த இராகத்தில் உள்ளம் உருகப் பாடினால் போதுமானது. அப்படியே இராகம் போட்டுப் பாடமுடியாவிட்டால், அர்த்தம் புரியும்படியாக, நிறுத்தி, நிதானமாகப் பிழையின்றி வாக்கியங்களைச் சொன்னால் போதும். மனத்திற்குள் சொல்லிக் கொள்ளாமல், கணீரென்று அர்த்த பாவத்துடன் சொல்ல வேண்டும்.

இப்பொழுதுள்ள அவசர யுகத்தில், காலை மாலை பூஜைகளுக்கு நேரம் எங்கே என்று கவலை கொள்ள வேண்டா. காலையும் மாலையும் ஒரு ஐந்து நிமிடமோ அல்லது பத்து நிமிடமோ பூஜைக்கு ஒதுக்கினால் போதுமானது. ''சரணகமலாலயத்தை அரை நிமிஷ நேரமட்டில்'' என்ற அருணகிரிநாதர் திருப்புகழ் எண்ணத் தக்கதாகும்.

பூஜை என்றவுடன் பெரிய பிரயத்தனம் செய்யத் தேவையில்லை. வீட்டிலுள்ள திருவிளக்கில் தீபமேற்றி வழிபட்டால் போதும்... தீபமே தெய்வம். அதைத் திருமூலர், தான் இயற்றிய திருமந்திரத்தில்.

''ஆரறிவார் எங்கள் அண்ணல் பெருமயை!
ஆரறிவார் இந்த அகலமும் நீளமும்!
பேரறியாத 'பெருஞ்சுடர்' ஒன்றதின்
வேரறியாமை விளம்புகின்றேனே!''

என்று உலகமாநதர் அனைவருக்கும் தெள்ளத் தெளிவாகப் புரியும்படியாக இறைவனைப் 'பெருஞ்சுடர்' என்று சுட்டிக்காட்டுகிறார். நம்மையும் சுடரை நோக்கி வழிநடத்துகிறார்.

இதையேதான் மாணிக்கவாசகரும் ''திருவெம்பாவை'' யின் முதற்பாட்டில் 'ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதி' என்று காட்டுகிறார்.

வள்ளலாரும்,

'அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி'

எனப்போற்றுகிறார்.

நித்திய வழிபாட்டுக்கு நிலைக்களன் சுடர் வழிபாடேயாகும். சோதியாக, சுடராக, சுடரொளியாக விளங்கும் இறைவனை எவ்வாறு தொழுதால் மாந்தர் கவலையின்றி வாழலாம் என்பதை நாயன்மார்களில் ஒருவரான சுந்தரர் விளக்கமாகப் பாடல் வடிவில் நமக்கு அளித்திருக்கிறார்.

'மேலைவிதியே வினையின்பயனே விரவார்புரமூன் றெரி
செய்தாய்
காலையெழுந்து தொழுவார்தங்கள் கவலைகளைவாய்
கறைக்கண்டா
மாலைமதியே மலைமேல் மருந்தே மறவேன் அடியேன் வயல்
சூழ்ந்த
ஆலைக்கழனிப் பழனக்கச்சூர் ஆலக்கோயில் அம்மானே!''

இறைவனைத் தொழுவதற்கு காலை வேளை உகந்தது என்கிறார். இதையே ஔவைப் பிராட்டியும் ''வைகறைத் துயிலெழு'' என்று அழுத்தந் திருத்தமாகக் கட்டளை யிட்டிருக்கிறார். இறைவழிபாடு நிமித்தம் காலையில் எழும்பொழுது உடல் ஆரோக்கியமடைகிறது. இறைவனைத் தொழுவதற்கு உள்ளம் பக்குவமாகுவது போல் உடம்பும் சுத்திகரிக்கப்படுகிறது. எழுதல், குளித்தல் முதலான அன்றாட நடைமுறைகள் செவ்வனே நடைபெற வாய்ப்புகள் ஏற்படுகின்றன.

காலை சூரிய ஒளி கால்கழஞ்சு கிடைத்தால் கூட, அது கால் பொன்னுக்குச் சமம். அவ்வளவு உயிர்ச்சத்து அச்சூரிய ஒளியில் இருப்பதால்தான் நம் முன்னோர்கள், 'காலை எழுதலை' இறைவழிபாட்டோடு இணைத்து, அதற்கு முக்கியத்துவம் அளித்தார்கள். சுந்தரர் காலை எழுதலை மட்டும் சுட்டிக்காட்டாமல், மாலை மதியையும் சுட்டிக்காட்டுகிறார். அதாவது சூரிய அஸ்தமனத்திற்குள் அன்றாடம் நடந்து முடிந்த வேலைகளுடனே மாலை மதியையும் நினைவு கூர்ந்து கொள்ளுங்கள் என்கிறார். மாலை மதியின் சாந்தம், மக்களாகிய நம்முடைய உள்ளத்தை, உணர்வைக் குளிர்விக்கிறது.

காலையும் மாலையும் ஒழுங்குபடுத்தப்படும்பொழுது, இடைப்பட்ட நேரம் பயனுடையதாக அமைந்துவிடும். அன்றன்றாடம் அவரவர் வேலை, படிப்பு போன்ற யாவும் ஒருவரன்முறைக்குள் அமைந்துவிடும். தினசரி அலுவல்கள் முறைப்படுத்தப்படும்போது அன்றன்றாடம் செய்யும் காரியங்களில் ஆர்வம் ஏற்படும். ஆர்வம் மிகுதியால்

செயல்திறன் ஏற்படுகிறது: செயல்திறன் செம்மையாக அமையும் பொழுது கவலை களையப்படுகிறது; நிதானமாக தன்னம்பிக்கையுடன் கூடிய வெற்றி கிட்டுகிறது.

மேற்கூறப்பட்ட பயன்கள் யாவும் நித்திய வழிபட்டால் தனிப்பட்ட முறையில் ஒருவனுக்கோ ஒருத்திக்கோ ஏற்படுகின்றன.

அந்த ஒருவனும் ஒருத்தியும் குடும்பம் என்னும் தோப்பில் ஒன்றுபடுகின்றனர்; அதனால் குடும்பம் செழிக்கிறது; ஊர் செழிக்கிறது; நாடு செழிக்கிறது; உலகம் செழிக்கிறது; வாழ்க உலகெலாம்!

'திருச்சிற்றம்பலம்'

அன்பெனப் படுவது தன்கிளை செறாமை
அறிவெனப் படுவது பேதையர் சொல்நோன்றல்
பண்பெனப் படுவது பாடறிந் தொழுதல்
செறிவெனப் படுவது கூறியது மறாமை
நிறையெனப் படுவது மறைபிறர் அறியாமை
முறையெனப் படுவது கண்ணோடாது உயிர் வௌவல்

(பாலைக்கலி)

தொகுப்பு சரவண மூர்த்தி

1. எவனெவன் பக்தியுள்ளவனாய் எவ்வெத்தேவர்களை வணங்குவதில் ஈடுபடுகிறானோ அவனவனுக்கு அந்தந்த ஈடுபாட்டுக்குரிய பக்தியின் பயன்களையும் அந்த மூர்த்தியாகித் தருகிறான் எம் இறைவன் நாராயணன் (திருவாய் மொழி 1.1.5).

2. காலமெல்லாம் நாம் இருந்து அழுது அழுது என்ன பயன்? நெஞ்சே! உன்னை நீ அறியாயோ? உண்மையான ஞானம் நமக்கில்லை. பாபங்களில் கொண்டுபோய் மூட்டக்கூடிய பிறவிகளிலே அழுந்திச் செல்லும்படியான நிலையில் நாம் இருக்கிறோம். எக்காலத்திலும், எல்லாப் பொருள்களிலும் நீக்கமற நிறைந்து நிற்கும் மெய்ஞான ஒளியே தன் உருவமான பரமனை நாமாக அடைய முடியுமோ? (அதாவது பக்தனுடைய முயற்சிகளினால் பயனில்லை. அவன் அருளே அவனை அடைவதற்கு வழியாகும் என்பது கருத்து (திருவாய் மொழி 3-2-7)



அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர்

புரட்சியின் வித்தே
பெரிய புராணம்

(க. திருப்புரசுந்தரி, (எம். ஃபில்) இராணிமேரி கல்லூரி, சென்னை)

(கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெற்றது)

உலகெலாம் உய்யத் தெய்வமாத் தமிழினால் "தொண்டர்சீர் பரவுவார்" இயற்றிய பாமாலையாம் பைந்தமிழ் மாலை பெரிய புராணமாகும்.

பெரிய புராணத்திற்குத் தெய்வச் சேக்கிழார் இட்ட திருப்பெயர்த் "திருத்தொண்டர் புராணம்" என்பதாம். இதனை,

"இங்கிதன் நாமம் கூறின்

பொங்கிய இருளை ஏனைப்
புற இருள் போக்குகின்ற
செங்கதி ரவன்போல் நீக்கும்
திருத் தொண்டர் புராணம் என்பாம்"

என வரும் பெரிய புராணப் பாடலால் அறியலாம்.

அரனாரின் அடியவர்களின், தொண்டர்களின் வரலாற்றை விரித்துக் கூறுவதால் இந்நூற்குத் "திருத்தொண்டர் புராணம்" எனும் பெயரேற்பட்டது என்பர். மேலும், இந்நூலில் கூறப்படுகின்ற ஒவ்வொரு நாயனாருடைய வரலாறும் "புராணம்" என்ற பெயரோடு அமைந்துள்ளது. இவ்வாறு பல புராணங்களைத் தன்னகத்தே உடைமையால் இதனைப் "பெரிய புராணம்" என்றும் வழங்குவர்.

"பூசு நீறு போலுள்ளும் புனிதர்கள்"

வரலாற்றை விளம்புவதால் இதனைப் "பெரியர் புராணம்" என்றுங் கூறுவர்

"சைவ முதல் திருத் தொண்டர்
தம்பிரான் தோழனார் நம்பி"

என்று சேக்கிழார் கூறுவதால், (தடுத்தாட் கொண்ட புராணத்தில்) "திருத்தொண்டர் புராணம் - சுந்தரர் புராணமே" என்று சாற்றுவோருமுளர்.

"ஊனும் உயிரும் உருக்கு அன்பினால்" "கோதிலா வாரமுதை"த் தொண்டர்கள் தொழுத வரலாற்றை விளக்கும் நூல் இது.

சிலப்பதிகாரம் சேர, சோழ, பாண்டியர் என்ற மூவேந்தர் ஒற்றுமையை நிலை நாட்ட எழுந்த நூல் அவ்வளவே. ஆயின் பெரிய புராணம் தமிழ் மக்களின் ஒருமைப்பாட்டைக் காக்க, சாதி பேதமற்ற சமுதாயத்தை உருவாக்க, சமத்துவத்தை நிலைநாட்ட, எழுந்த ஒப்பற்றதோர் எழிலோவியம் - அருளோவியம்.

சமுதாயத்தைப் பிரதிபலித்துக் காட்டும் கண்ணாடியாய் ஒளிரும் இக்காவியத்தின் பெருமையை நன்குணர்ந்த அறிஞர் அ.ச. ஞானசம்பந்தன் அவர்கள் தம் பெரிய புராண ஆராய்ச்சியுரையில் பெரிய புராணம் ஓர் சமுதாயக் காப்பியம் என்றே சாற்றுகின்றார்.

தொட்டனைத் தூறும் மணற்கேணியாய் உள்ள இந்நூலில் தொட்ட இடமெல்லாம் தேனாய்ப் பாலாய், பாகாய், கரும்பாய் இனிக்கும் தகைமையை என்னென்று சொல்வது! இதனை ஓர் அருட்கேணி அன்புக் கேணி, சமுதாயக் கேணி, பொதுமைக் கேணி என்றெல்லாம் சாற்றலாம். ஏன்? - புதுமைக் கேணி, புரட்சிக் கேணி என்றும் சாற்றுதல் தகும். இதனைத் தொட்ட இடமெல்லாம் - கண் பட்ட இடமெல்லாம் காணலாகும். புரட்சிக் கருத்துக்களில் சிலவற்றைப் புகல்வதே இக்கிட்டுரையின் நோக்கமாகும்.

'பெரிய புராணம் புரட்சியின் வித்தாய் அமைந்ததோர் அருளோவியம்' என்பதை நிலை நாட்ட முதலில் பெரிய புராணம் தோன்றிய காலச் சூழ்நிலையை அறிந்து கொள்ளுதல் மிக மிக அவசியமாகின்றது.

பெரிய புராணம் தோன்றிய காலச் சூழ்நிலை:-

கி.பி 10, 11, 12 ஆம் நூற்றாண்டுகள் தமிழக வரலாற்றில் தனக்கென தனித்ததோர் இடம் பெற்ற சிறப்புடைய காலக் கட்டமாகும். இதனை இடைக்காலம் என்று இயம்புவர். ஆம் இது இடைக்காலம்தான் இடர்க்காலமன்று இனிய காலம், பொற்காலம் - பக்தி இயக்கம் எனும் வித்து முளைத்தெழுந்த இனிய காலம்

"வரப்புயர நீர் உயரும்
நீர் உயர நெல் உயரும்
நெல் உயரக் குடி உயரும்
குடி உயரக் கோன் உயரும்
கோன் உயரக் கோல் உயரும்."

என்ற மொழிக்கேற்ப, இராசஇராசன், இராசேந்திரன்

போன்ற சோழ மன்னர்களின் செங்கோல் உயர்ந்த காலம். செழுமை பிறந்த காலம். எங்கு நோக்கினும் பச்சை பசும் புல்வெளிகள், பாலாறுகள், பாய்ந்தோடும் பனியாறுகள் இயற்கைத்தாய் செழுமையில் திளைத்திருந்த காலமது. இச் செல்வ வளம் மட்டுமா? கங்கை கொண்டு, கடாரம் கொண்டு திரட்டிய செல்வங்கள்தாம் எத்தனை! எத்தனை! அத்தனையும் இருந்தால்,

"வன்மை இல்லை ஓர் வறுமை இன்மையால்
திண்மை இல்லை நேர் செருநர் இன்மையால்"

என்ற நிலை இருந்தது. எங்கும் அமைதி தவழ்ந்தது. அன்பு கொலுவிருக்கும் பொற்காலமாய் இருந்தது.

இதே போன்ற காலச் சூழல் கி.பி. 2 முதல் 5 ஆம் நூற்றாண்டுகள் வரை இருந்தது. ஆனால் அக்கால மக்கள் காதலையும் வீரத்தையும் கண்ணெனக் கொண்டு வாழ்ந்தனரே யன்றிக் கண்ணுதலானைக் கருத்தில் கொள்ள மறந்திருந்தனர். தனி மனிதனை - வள்ளலை, இவ்வுலகாளும் மன்னனைப் பாடிப் பரவி பொருள் பெற்றுப் பொழுதினைக் கழித்தனரேயன்றி அவ்வுலகாளும் அரனை வணங்கும் மனநிலை பெறவில்லை. அந்த அளவிற்கு அவர்கள் பக்குவம் பெறவில்லை. சிற்றின்பச் சேற்றில் மூழ்கியதால் பேரின்பப் பெருவாழ்வைக் காண முற்படவில்லை. இதுதான் சங்க காலம். ஆனால், இடைக்காலத்திலே அமைதி தவழ, அன்பு பெருக, அறம் வளர, மக்கள் ஆக்கப் பணிகளில் ஈடுபடலாயினர்.

"எல்லாரும் எல்லாமும் பெற்று"

வாழ்ந்த காரணத்தால், அத்தனையும் அளித்த அரனை நினைக்குமளவிற்கு மன வளர்ச்சி பெற்றிருந்தனர். ஆம்,

"அவனருளாளே அவன்தாள் பணிந்து" போற்றினர்.

"ஆடும் அரவா நீ ஆட உன்
அடிக் கீழ் நான் இருத்தல் வேண்டும்"

இதனையல்லால் வேறோர் பேறும் வேண்டுமோ? என்று வேண்டிப் பணிந்தனர். விளைவாக, தேவார, திருவாசகம் போன்ற பைந்தமிழ்ப் பாமாலைகளாம் திருமுறைகள் முகிழ்த்தன. சைவம் தழைத்தது - அன்பு நெறி செழித்தது. சாகாச் சைவம் தளிர் நடையிடும் பருவத்தே, "தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்" என்றாற் போல் சமணமானது தமிழகத்தில் மூடுபனி என நுழைந்து சைவத்தை மறைத்தது. அன்பை அழித்தது; அராஜகம் புகுத்தியது; பெண்ணடிமை, சாதிக் கொடுமை, சாயக் கொடுமை, சாத்திரக் கொடுமை போன்ற பல இருள்மைகளை இழுத்துப் போர்த்தியது. தமிழ் வளர்த்த - தமிழ் மறை காத்து - சைவம் வளர்த்த சோழக் குல தோன்றலாகிய அநபாய சோழனே சமணச் சேற்றில் சிக்குமளவிற்குப் புதைக்குழியாய் புண்ணியத் தமிழ்நாட்டில் கால் கொண்டது. சீவக சிந்தாமணி போன்ற சிற்றின்பக் காவியங்களை முனிவர்கள் என்ற போர்வையிலுள்ள சமணர்கள் இயற்றி மக்களின் அறிவை மயக்கினர். மன்னனே மதி மயங்கினான் எனில் மக்களை என் சொல்வது? அநபாயனின் அமைச்சராயிருந்த சேக்கிழார் பெருமான் தக்க தருணம் பார்த்து அவனுக்கு தமிழ்மறைகளின் பெருமையினைச் தொண்டர்தம் பெருமையினைச் சைவத்தின் பெருமையினைச் சாற்றலானார். அது கேட்ட அவன் இது புராணமோ? காவியமோ? தனிப் பாடலோ? எப்பொழுது எழுந்தது? என்றெல்லாம் வினவ, விளக்கமாக விடை பகர்ந்தார் விளக்கொளியன்ன அமைச்சர்பிரான். அது கேட்ட அநபாயன் சிந்தை தெளிந்து இதனை யாவரும் படிக்கும் வண்ணம் காவியமாய் இயற்றுக என்று கூற தில்லையம்பதி சென்று இறைவன் திருமுன் நின்று அடியெடுத்துக் கொடுக்குமாறு வேண்ட "உலகெலாம்" என்னும் ஒலி உரக்க எழுந்தது. அனைவரும் ஆனந்தப் பரவசம் அடைந்தனர். அம்பலக் கூத்தனை வணங்கிய அடியார் ஆயிரக்கால் மண்டபத்துள் சென்று அமர்ந்து அருமறைகளை மனதில் தியானித்ததால்

சுந்தரர்

"தென் தமிழ்ப் பாவை செய்த தவப் பயனால்
திருத்தொண்டத் தொகை முன் பாட"

நம்பியாண்டார் நம்பி, அதனைச் சற்றே விரித்து

"திருத்தொண்டர்திருவந்தாதி" பாட,

சேக்கிழார் பெருமானார் அவ்விரண்டையும் முதல் நூலாகக் கொண்டு "திருத்தொண்டர் புராணம்" பாடினார்.

தருமத்தின் வாழ்வை சூது கவ்வினாலும் "தருமம் மறுபடி வெல்லும்" என்றாற்போல் தக்க தருணத்தில் திருத்தொண்டர் புராணம் பாடித் தமிழை - சைவத்தை வாழ வைத்து சமுதாயத்தில் எண்ணிறந்த புரட்சிகளைச் செய்து சீர்திருத்தினார் தம் பாமாலையால் எனில் அது மிகையாகாது. இனி, சேக்கிழார் செய்த புரட்சிகளைக் காண்போம்.

புரட்சியின் வித்தே பெரிய புராணம்

உலகில் இன்றைய நாளில் புரட்சி! புரட்சி! எங்கும் புரட்சி எதிலும் புரட்சி! என முழங்கிக் கொண்டு தங்களை விளம்பரப்படுத்திக் கொள்ளும் தகைமையோர் எத்துணை பேர். இவர்க்குப் புரட்சி என்பதற்குப் பொருள் தெரியுமோ? என்றால் இல்லை. ஆனால்,

ஆர்பாட்டம் ஏதுமின்றி அமைதியான முறையில் அன்னைத் தமிழால் பாமாலை பாடி ஒரு பெரும் புரட்சியைச்செய்தவர் சேக்கிழார் சுவாமிகள். திருமலைச் சருக்கம் தொடங்கி வெள்ளானைச் சருக்கம் ஈறாகக் காணலாகும். புரட்சிகளில் சில இதோ காணுங்கள்

1. கலப்புத் திருமணம்:-

இருமனங்கள் கூடுவதே திருமணம், சாதி மதம் என்ற வேறுபாடு தேவையில்லை என்று சாற்றி கலப்புத் திருமணம் பற்றிப் பலர் நாற்சந்திகள் கூடும் சாலைகளில் இன்று முழக்கமிடுவதைப் புரட்சியாய்க் கருதுகிறார்கள். இற்றை நாள் அரசாங்கமும், பல நிறுவனங்களும் கலப்புத் திரும்மணம் செய்வோருக்குப் பட்டமும் பதக்கமும் அளிப்பதாகக் கூறுகின்றனர். ஆனால், இத்தகைய ஆர்பாட்டம் ஏதுமின்றி அமைதி முறையில் கலப்பு மணத்தை ஆதரித்துப் போற்றிய பெருமகனார் தெய்வச் சேக்கிழார்.

இவர் தாம் பாடிய காவியத்தில், தடுத்தாட் கொண்ட புராணத்தில், மிக மிக அழகாகப் பேசுகிறார் கலப்பு மணத்தை!

அந்தணர் குலத்தில் பிறந்து, அரசர் குலத்தில் வளர்ந்து, வெண்காட்டுப் பித்தனாம் அரனால் ஆட்கொள்ளப் பெற்ற சுந்தரர் பல தலங்களுக்கும் சென்று இறைவனைத் தரிசித்துப் பாமாலை சூட்டி மகிழ்கிறார். அவ்வாறு சென்றவர் திருவாரூர் வீதி விடங்கரைக் காணச் செல்கிறார். பக்திப் பரவசத்தால் பரமனைப் பாடிய அடியவர் ஆசூழ் கூட்ட, அரனின் சபையில் அங்கண் திறந்து பார்க்கையில், தன் எதிரே நின்ற தளிப்பூங்கொடியைக் கண்டு காதல் கொள்கிறார்.

"கற்பகத்தின் பூங் கொம் போ?
காமன்தன் பெரு வாழ்வோ?
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ
சிவனருளோ?"

என்றெல்லாம் எண்ணி அதிசயிக்கிறார்.

"அண்ண லும் நோக்கினான்
அவளும் நோக்கினாள்"

என்றாற் போல, ஆலவாயண்ணல் சந்நிதியில் வந்து நின்ற பரவையாரும் பரமனின் பக்தரைக் கண்டார்.

"முன்னே வந்தெதிர் தோன்றும் முருகனோ?
அழகனோ?"

என்றெல்லாம் எண்ணி அதிசயித்து அவரிடம் தன் மனத்தை இழக்கிறாள். அரனின் அருளால் அந்தணர்களின் துணையோடு, வேத வேள்வி முறைப்படி அழகனாராம் சுந்தரர் அரிவையாம் பரவையாரை மணந்து கொள்கிறார். காதல் கொண்டனர் கலியாணத்தில் முடிந்தது? இதிலென்ன புரட்சி என்று வினவலாம். இதில்தான் மாபெரும் புரட்சி புதைந்துள்ளது.

அந்தணர் குலத்தில் பிறந்து அரச குலத்தில் வளர்ந்த சுந்தரர், கணிகையர் குல மங்கையாம் பரவையாரை மணப்பது என்பது சாதாரண காரியமா? அதுவும் எப்படி? மறையவர்களே முன்னின்று இதனை நடத்தினர் என்றால் இதனை எப்படி சொல்லால் சொல்லக் கூடும்.

"காதல் காதல் காதல்
காதல் போயின்
சாதல் சாதல் சாதல்"

என்று சாற்றுகின்ற செயல்வீரர்கள் இன்று பலரிருக்கலாம். ஆனால், காதலித்து எப்படி யாவரும் வெறுத்து ஒதுக்கும் கணிகையர் குலப் பெண்ணைக் காதலித்துக் கடிமணமும் புரிந்து கொள்கிறார் ஒருவர். அதுவும் எப்போது? சாதிக் கொடுமைகள் தலைவிரித்தாடிய காலத்தில்.

இக் கலப்பு மணம் எத்துணை பெரிய புரட்சி! இம்மட்டுமா?

சுந்தரர் மணந்த மற்றொரு மங்கையாம் சங்கிலியார் யார்?

"உழுகுலத்தில் பிறந்தோரே
உலகுய்யப் பிறந்தோரே!"

என்று போற்றப்படும் வேளாளர் குலத்தில் பிறந்தவர்.

அந்தணர் - கணிகையர்
அந்தணர் - வேளாளர் குலத்தை

இணைத்த பெருமை சேக்கிழாரையே சாரும். இம்மட்டுமா?

திருநாட்டியத்தான்குடி வேளாளர் மரபில் தோன்றிய திருக்கோட்புலியார் சிங்கடி என்ற தம் இருபெண்களை அந்தணர் குலத் தோன்றலாம் சுந்தரை மணக்குமாறு வேண்டுகிறார் மேலும்,

வணிகர் குலத் தோன்றலாம் சிவநேசஞ் செட்டியார் தமது மகள் பூம்பாவையை மறையவர் குலத் தோன்றலாம் ஞானசம்பந்த பெருமானுக்கு மணமுடிப்பதற்கென்றே வளர்த்ததாகவும் அவளுக்கு அவர் உயிர் கொடுத்தது போலவே வாழ்வும் கொடுக்கவேண்டும் என்று ஞானசம்பந்தரிடம் வேண்டினார். இதனால் சேக்கிழாரின் கலப்பு மணப் பற்றுப் புலனாம்.

2.தீண்டாமை:-

பாணர் குலத்தில் பிறந்த திருநீலகண்ட யாழ்ப்பாணர் திருஆலவாய் இறைவனைத் தரிசிக்க விரும்பினார். ஆனால் திருக்கோயிலுட் செல்லவில்லை. காரணம் அன்றைய நாளில் உயர்குலத்தோர் மட்டுமே கோயிலுட் செல்லலாம் உயர்குலத்தோராய் மதிக்கப்பட்டவர் முறையே அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்போர். இவர்களைத் தவிர்த்த ஏனையோர் "இழிகுலத்தோர்" என்றெண்ணப்பட்டனர். இவர்கள் கோயிலிருக்கும் பக்கமே செல்லல் கூடாது என்று விதித்திருந்தனர். பாணரோ பரமனின் பக்தர். பண்ணமைத்து யாழ் மீட்டிப் பரமனைப் பாடிப் பணிந்தார். உடன் இறைவன் ஆணையின் பேரில்

அந்தணர்கள் அவரை எதிர் கொண்டு திருக்கோயிலுக்குள் அழைத்துச் செல்வதைப் பாடுகிறார்.

இவர் மறையவர் குலத்தோன்றலாம் ஞானசம்பந்தரின் உடனுறைந்து உண்டு அவர் தம் பதிகங்களைப் பண்ணமைத்துப் பாடி வந்தார். அது கண்ட அந்தணர் சிலர் அடுக்கா மொழி பேசினர். ஆனால் சம்பந்தர் அதைப் பொருட்படுத்தவில்லை. ஒரு சமயம் வேள்விக்குப் பாணரையும் அழைத்துச் சென்று வேள்வித்தீ சுடர்விட்டெரிவதை அனைவர்க்கும் காட்டி அரனின் அடிக்கீழ் அனைவரும் ஒன்றே என்ற தத்துவத்தை எடுத்துரைத்தார். இவர்களை உபசரித்து உண்ணவும் உறங்கவும் இடமளித்த பெரியாரோ வேதியர் குலத் தோன்றலாம் திருநீலநக்க நாயனார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதே போன்று நந்தனாரின் புராணத்திலும் அன்பு நெறியில் அரனின் அடிக்கீழ் நிற்பவர் யாவரும் சமம் என்ற தத்துவத்தை உணர்த்தினார்.

3. சமபந்தி போசனம்:-

சமபந்தி போசனமே சன்மார்க்க நெறியாம் என்றும் சாற்றுகின்றார்சேக்கிழார்.

வேதியர் குலத் தோன்றலாம் சுந்தரர், அரசர் குலத் தோன்றலாம் சேரமான் பெருமாளைக் கணிகையர் குலத்துக் காரிகையாம் பரவையார் இல்லில்தான் அன்போடு விருந்துபசாரம் செய்கிறார்.

அற்றை நாளில், ஒவ்வொரு சாதியினர் உண்ணும் உணவும், உண்ணும் முறையும் வெவ்வேறு தன்மையன. மேலும், அரசர்கள் அந்தணரோடு ஒக்க அமர்ந்து விருந்துண்ணும் பழக்கம் கடுகளவுமில்லை. அவ்வாறு செய்தல் பாவம் என்று கருதிய நாளிலே அன்பின் அடிபற்றிச் சுந்தரரும், சேரமானும் ஒக்க அமர அவர்கட்குப் பரவையார் பாங்குற உணவு படைப்பதாகக் கூறுகிறார் சேக்கிழார்.

மேலும்,

மாமாத்துவ மரபினராய சிறுத்தொண்டர் பைரவராகிய அடியவருடன் அமர்ந்து நரமாமிசம் உண்ணுதலையும் காட்டுகிறார்.

மாமாத்துவ மரபினர் உயிர் காக்கும் முறையினர். உயிர் கொன்று ஊன் பொதியை உண்ணும் வழக்கம் அவர்கட்கு இல்லை. பைரவரோ நரமாமிசம் உண்பவர்கள். அவ்வாறிருக்க வந்திருக்கும் அடியவரின் அன்பு வேண்டுகோளுக்கு இணங்கிச் சிறுத்தொண்டர் நரமாமிசத்தை அமுதோடு இணைத்து உண்கிறார். அதுவும் அந்த நர மாமிசம் யாருடையது? தான் பெற்ற மகனுடையது அதனை உண்ண எத்துணைப் பொறுமையும் சகிப்புத் தன்மையும் வேண்டும். அப்பப்பா! இதுவல்லவோ அன்பு நெறி!

இம்மட்டுமா?

அந்தணர் குலத் தோன்றலாம் அப்பூதியடிகள் வேளாளர் குலத் தோன்றலாம் நாவுக்கரசரோடு ஒக்க அமர்ந்து உணவருந்துகிறார்.

அந்தணர்கள் பிறகுலத்தாரோடு உண்ணும் வழக்கம் அக்காலத்தில் இல்லை. மேலும் மாற்றாரை இல்லுக்குள் அழைத்துச் செல்வதோ அவர்க்கு சரிசமமாக விருந்துபசாரம் செய்வதோ அக்காலத்தில் கடுகளவும் இல்லை. அப்படியிருக்க அப்பூதியார் அடியவர் மேல் கொண்ட அன்பின் காரணமாகவே அமர்ந்து உண்ணுகிறார்.

இவ்வாறு சமபந்தி போசன முறையில் பெரும்பிடிப்புள்ளவராயிருந்தார் சேக்கிழார்.

4. இல்வாழ்க்கையில் மகளிர்க்கும் சம உரிமை:-

பெண்களைப் பார்ப்பதும் பழகுவதும் அவர்களோடுறைவதும் பாவம் என்று பறைசாற்றிய சமணர்கள் பலர் செங்கோல் புரிந்த காலத்தில், மங்கையர்க்கரசியார்தன் கொள்கை வழாது சைவத்தையே பற்றி நிற்கும் உரிமையைப் பாண்டியன் சமணனாயிருந்தபோதும்அளித்திருந்தான்.

> திருநீற்றைப் பார்ப்பதுவும் தீது (கண்டுமுட்டு)
> திருவைந்தெழுத்தைக் கேட்பதுவும் தீது (கேட்டு முட்டு)

எனும் கொள்கையோர் சமணர்கள் ஆதலால் அம்மையார், தமக்குரிய உரிமையைத் தவறாகப் பயன்படுத்தாது, சந்தனத்தோடு திருநீற்றையும் குழைத்துப் பூசியும், ஐந்தெழுத்தை மனதினுள் மட்டுமே தியானித்தும் வரலானார். இவ்வாறிருக்கையில் ஆளுடையபிள்ளை மதுரை வந்தடைந்ததைக் கேள்வியுற்ற சமணர் அவரை மந்திரத்தால் எரியழல் ஊட்ட அனுமதி வழங்குமாறு வேண்ட பாண்டியனும் இசைகிறான். ஆனால் அவன் மனம் கலங்குகிறது. தான் செய்தது தவறோ என்றஞ்சுகிறான். அவன் கலக்கத்தைக் கேள்வியுற்ற அரசியார் காரணத்தை வினவ, விடை பகர்ந்து இனி யாது செய்வல்! என்று ஆலோசனை கேட்கிறான். அப்போது பாண்டிமாதேவி

> "வென்றவர் பக்கம்
> சேரலாம்
> துயரம் நீக்குக மன்னவ!" என்று

விடை பகர்கிறார். இவ்வாறு மனையாளிடம் ஆலோசனைக் கேட்கும் வழக்கத்தை இளையான்குடி மாற நாயனார் சிறுத்தொண்டர் போன்றோர் வரலாறுகளிலும் காணலாம்.

மேலும், பரத்தமை ஒழுக்கம் பூணுதல் அந்நாளில் ஆண்களின் வழக்காயிருந்தது. இதனை எதிர்த்துப் போர்க்கொடி யெழுப்பும் ஓர் பெண்ணைப் பற்றி நமக்குக் கூறுகிறார் சேக்கிழார்.

திருநீலகண்டர் ஒரு முறை பரத்தமை ஒழுக்கம் கொண்டு மீண்டும் மனைக்கு வந்த போது

"எம்மைத் தீண்டுவரேல் திருநீலகண்டம்" என்று கூறி

"அற்புறுப் புணர்ச்சி யின்மை
அயலறி யாமல் வாழ்ந்தார்"

அவ்வம்மையார்.

மேலும், சுந்தரர் சங்கிலியாரை 2ஆம் மணமாக செய்து கொண்டுவிட பரவையார் சினக்கிறார். இதனால் பெண்ணுரிமையைப் பெரிதும் நிலைநாட்டுகிறார் சேக்கிழார் பெருமானார்.

5. உடன் கட்டை ஏறுதலைத் தடுத்தல் :-

உடன்கட்டை (அ) சதி என்று சொல்லப்படுவதோர் கொடுமையை அந்நாளிலேயே கண்டிக்கிறார் சேக்கிழார். இதனைத் திலகவதியார் திருப்புராணத்தில் கூறுகிறார்.

6. தொண்டு நெறி:-

தொண்டு நெறியே சிறந்தது. தலைமை என்றும் ஆபத்தானது என்பதை நாவரசர் புராணத்தால் விளக்குகிறார்.

"என் கடன் பணி செய்து கிடப்பதே" எனும் கொள்கையோடு

"கேடும் திருவும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொன்னும் ஒக்க நோக்குவார்"

எனும் தன்மையோடு,

`பரமனைப் பற்றினால் பாதகம் நேரா என்று எடுத்துரைக்கிறார்.

7. இரசிகர் மன்றம்:-

அரனின் தொண்டர்க்கே அன்பு நெறியாளர்க்கே இரசிகர் மன்றம் வைத்தல் சிறந்தது என்பதை அப்பூதியடிகள் புராணத்தில் விளக்குகிறார்.

முடிவுரை :-

"நாமார்க்கும் குடியல்லோம்
நமனை யஞ்சோம்"

எனும் வீரத்தோடு

"அத்தனுக்கு ஆட்பட்டு"

அவனருளாலே அவன்தாள் பணிந்து போற்றிய அடியார்களின் வாழ்வில் நிகழ்ந்த புதுமைகளைப் புரட்சிகளைத் திரட்டித் தொகுத்துத் தந்து விளக்கும் ஓர் அற்புதப் படைப்பே பெரிய புராணம்.

பெண்ணுரிமையைப் பேணி, சாதிக் கொடுமையை மாற்றி, தீண்டாமையை ஒழித்துத் தீக்குளிப்பை அகற்றி, அன்பு நெறியில் அரனின் அடிக்கீழ் ஒன்று கூடும் அனைத்து உயிரினங்களும் சமமே என்றுரைக்கும் இதனைப் புதுமைக் காப்பியம் புரட்சிக் காப்பியம் எனல் மிகையாகாது.

வாழ்க அடியார்கள்
வாழ் அரன் நாமம்
வாழ்க சேக்கிழார் பெருமான் புகழ்
வளர்க அவர் இயற்றிய பெரிய புராணத்
திருப்புகழ்

1. பிறர் செய்த தீமையை எப்பொழுதும் பொறுத்துக்கொள்க. அத்தீமையை மறந்துவிடல் அவ்வாறு பொறுப்பதினும் மிக நன்று. பிறர் நமக்குத் தகாத செயல்களைச் செய்திடினும், அவ்வாறு அவர்கள் செய்வதால் அவர்களுக்கு விளையக் கூடிய துன்பத்திற்கு வருந்தி, நாம் அவர்களக்கு அறமல்லாத செயல்களைச் செய்யாதிருத்தல் சிறந்தது (குறள் 152, 157).



தவத்திரு தண்டபாணி சுவாமிகள் படைப்புகளில் சமயமும் சமுதாயமும்

(டாக்டர். இ. சுந்தரமூர்த்தி
இணைப் பேராசிரியர். தமிழ்த்துறை. சென்னைப் பல்கலைக் கழகம்)

சமுதாய நோக்கில் அருளாளர்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றிய சமுதாய அருளாளர்களின் படைப்புகளில் மறுமலர்ச்சி நோக்கும் பொதுமை வழிபாட்டுணர்வும் பெரிதும் வெளிபட்டு நின்றன. திருவருட்பிரகாச வள்ளலார் (1823 - 1874) வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் (1839 - 1898) பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் (1850 - 1929) ஆகிய மூவரும் தமிழுக்கும் சமுதாய உணர்விற்கும் சமயத்திற்குப் பெருந் தொண்டாற்றினர். தமிழின உணர்ச்சி, மொழி உணர்ச்சி, சமுதாய உணர்ச்சி ஆகியவற்றைத் தம் படைப்புகளில் வெளிப்படுத்திப் புத்துணர்ச்சி மல்கக் காரணமாயினர். உயிரிரக்கத்தோடு கூடிய வழிபாட்டுணர்வைத் தம் பாடல்களில் வற்புறுத்தினர். `கொல்லா நெறியே குருவருள் நெறி' எனக் கொள்கை முழக்கம் செய்தனர். இம்மூவருள் தண்டபாணி சுவாமிகளின் படைப்புகளில் காணும் சமய சமுதாயப் பார்வை குறித்து இக்கட்டுரை எடுத்துரைக்கின்றது.

தண்டபாணி சுவாமிகள்:

தண்டபாணி சுவாமிகள் உயிரிரக்க நெறி நின்று பாடிய பாடல்கள் பலவாகும். கருவிலே திருவுடையராய் விளங்கிய இவர் சிறுவயதில் கவிபாடும் ஆற்றல் பெற்றவர் என்பர். வண்ணம் பாடுவதில் வல்லவராய் விளங்கியமையின் `வண்ணச்சரபம்' எனப் போற்றப் பெற்றார். இலக்கண, இலக்கிய, சமய, சாத்திர தத்துவ நூல்கள் எனப் பல்வகையிலும் தம் புலமையைப் பதித்தவர். ஏறத்தாழ ஒரு இலட்சம் பாட்லுக்கும் மேலும் பாடியதாகவும் இப்பொழுது சுமார் 50,000 பாடல்கள் கிடைப்பதாகவும் கூறுவர். தம் படைப்புகளுள் பாதிப்பாடல்களுக்கு மேல் இறைவன் மீது கொண்ட ஊடலால் அனலிலும் புனலிலும் இட்டுத் தாமே அழித்ததாகக் கூறுவர்.

மகான் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் சமய பேதமற்ற பெருந்தகையாளர். அனைத்துத் தெய்வங்கள் மீதும் பாடிய அருளாளர் திருவரங்கத் திருவாயிரம், பழனித்திருவாயிரம், தில்லைத்திருவாயிரம், தெய்வத்திருவாயிரம், திருமால் திருவாயிரம், ஏழாயிரப் பிரபந்தம் போன்ற சமய நூல்கள் பலவும் இவருடைய படைப்புகளாகும். கோவை, பிள்ளைத்தமிழ், கலம்பகம், சதகம், அந்தாதி, மாலை சித்திரகவி, எனப் பல துறைகளிலும் நூல்கள் பாடியவர்.

“மும்மணிக் கோவைபல மாலை பல அந்தாதி
முவகைய பலஇன் னவா
முதுநெறிப் பனுவல்பல புதுநெறிப் பனுவல் பல
முத்தமிழ்ச் சுவை வழாமல் மகிழ்வுறத் ததாத”

இம்மண்ணிற் புலவர்கள் மகிழக் கொடுத்ததாகத் தாம் பாடிய பாடல்கள் குறித்து அவரே குறிப்பிடுவார். `புதுநெறிப் பனுவல்' எனத் தம் நூல்களை அவர் சுட்டுவது உளங்கொள்ளத் தக்கது.

சமயப் பொதுமை:

ஆறுசமயங்களான சௌரம், சைவம், சாக்தேயம், வைணவம், காணாபத்யம், கௌமாரம் முதலிய அனைத்தையும் பேதமின்றிப் பாடியவர். தண்டபாணி சுவாமிகள். ஏழுகிழமைகட்கும் உரிய வழிபாட்டுப் பாடல்களாக ஏழாயிரம் பாடல்கள் பாடி `ஏழாயிரப்பிரபந்தம்' எனும் நூலைத் தந்தவர்.

அந்த பேதத்து அறுவகைச் சமயமும்
அவை முழுவதும் ஒருவலும் சமயமும்
அதீத நெறி ஒன்றும் ஆய எழும்
வழிபடற் பொருட்டே வாரம் ஏழாயவே.

என்று தம் சத்திய சூத்திரத்தில் குறிப்பிடுவர் - அந்தந்தச் சமயத் தெய்வங்களைப் பற்றிப் பாடும் போது அவ்வச் சமய வாணராகவே மாறிவிடுகின்றார். ஏழாயிரப் பிரபந்தத்துள் கதிரவனைச் துதிக்கையில் சௌரனாகவும், சிவனைப் போற்றுகையில் சைவனாகவும், கணபதியை வணங்குகையில் காணாபத்தியனாகவும், குமரனை ஏத்துகையில் கௌமாரனாகவும், சமயாதீத்தைச் சார்கையில் மாந்தனாகவும், அந்தந்த நிலையில் நின்று பாடுகிற பீடும் பெருமையும் இவரிடத்தே ஈடும் எடுப்பின்றிக் கொண்ட கொள்கையில் தண்டமிழ்த் தொண்டராய் விளங்குகின்றார் என்பர். (த.கோவேந்தன், திருமால் ஆயிரம். முன்னுரை ப.XII)

மாந்த இன ஒருமைக்குச் சமய ஒருமை

இன்றியமையாதது என்பதை உணர்ந்தவர் அருளாளர் தண்டபாணி சுவாமிகள் என்பது அவர்தம் படைப்புகளால் நன்கு விளங்கும் தெய்வ வடிவம் பலவாயினும் பரம் பொருள் ஒன்றே என்பதைப் பல பாடல்கள் வழி வற்புறுத்துவர். எந்த ஒரு சமய வாதிக்கும் தன் தெய்வத்தைப் போற்றும் நிலை தொடக்க காலத்தில் இருக்கக் கூடும். முறையான வழிபாட்டால் சமரச நிலையை அடைய முடியும் என்பதைத் தம் நூலான `தியானாநுபூதியால்கூறுவார்.

என்கடவு 'ளேஉயர்ச்சி யென்று சொல்வேன்
இறுமாந்து நாட்கழியாது ஏங்கி வாடித்
தன்கடவுள் திருவுருவைக் காண வேண்டித்
தவித்தானேல் சமரசத்தோர் தம்மிற் சேர்வான்
பின்கடவுள் வேற்றுமைதோற் றாது சொன்னாற்
பிணங்கிடான் அவரோடும் பேசிக் கொள்வான்
முன்கடவுள் வரக்கண்டும் புவியோர் உய்யும்
முறைகருதிப் பலவாறு மொழிவார் வாட (24)

எனும் பாடல் வழிச் சமரச நன்னெறிக்கு வழி வகுக்கின்றார்.

உயிரிரக்கக் கோட்பாடு:

அனைத்து உயிரின் மீதும் அளவற்ற அன்பு பூண்டவர் சுவாமிகள். ஜீவகருணையைத் தம் உயிர் நாடியாகக் கொண்டவர். எல்லா மக்களும் கொல்லல் ஊன் உணவு கொள்ளல் இன்றி நல்லோராய் வாழ வேண்டுமென எண்ணியவர். இத்தகு கோட்பாட்டினைக் தம் உயிர்க் கொள்கையாகக் கொண்ட வடலூர் அடிகளாரிடம் நட்புக் கொண்டவர். `உன்கையால் ஒரு சிற்றெறும்பைக் கொன்று விடு' உனக்கும் பிறஉயிர்கட்கும் வீடுபேறு தருவேன் என்று இறைவனே கூறினும் அத்தகைய முத்தி வேண்டேன் என்று கூறித் தன் அழுத்தமான உயிரிரக்க உணர்வை வெளிப்படுத்துவார்.

சிற்றெறும்பு ஒன்றைச் செருத்தியேல் அதற்கும்
மற்றெல்லா உயிர்க்கும் வணங்கும் உன்தனக்கும்
நம் திரு வடிநிழல் நன்களிக் குதும் என
முந்திய முதல்வனே முன்வந் துரைப்பினும்
ஐய! அம் முத்தி அடியனேற்கு ஆகாது.

என்னும் கொள்கையினர் சுவாமிகள் - வடலூர் அடிகளாரின் சிந்தனைகள் இவற்றோடு ஒப்பு நோக்கத் தக்கன.

தமிழ் உள்ளம்:

தமிழின் மீது உள்ள பற்றினை அவர் வெளிபடுத்தும் விதம் எண்ணி எண்ணி இன்புறத்தக்கது. தமிழ்ச் சுவையறியாத தெய்வத்தையும் அவர் சாடுவார்.

தமிழ்ச்சுவையறியாத் தெய்வம் உளதெனில்
அஃதுணர் அலகையில் தாழ்வெனல் அறமே.

(அறுவகை இலக்கணம் புலமை -3)

என்று தமிழ்ச் சுவையறியாத தெய்வத்தை அலகைக்கும் கீழானது என்பர்.

தமிழ் மொழிக்கு உயர்மொழி தரணியில்
உளதெனல்
வெகுளியற்றிருப்போன் வெறும் புலவோன்

என்பார். தமிழ்ச் சுவையறிந்த முருகனைப் பற்றிக் குறிப்பிடும் போது.

பூசைக் கவுமாரர் புதுத்தமிழ் மீது
ஆசைப்படும் அறுமுகக் குகவேள் (முருகதாசர்
அநுபூதி 50)

என்றுரைப்பார். இறைவனிடம் வேண்டும் போது கூடச் செந்தமிழ்ப் பேரார்வம் சிதையும்படிக் கலிப்பேய் வந்தடையாவாறு வரம் தருவார் என வேண்டுவார். தமிழினையும் இறைவனையும் ஒன்றாகப் போற்றும் உள்ளம் இவரிடமிருந்ததை இவர்தம் பாடல்கள் காட்டுகின்றது.

சமுதாயச்சிந்தனை:

ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்த துறவியருள் இவர்தம் பணி வரலாற்றில் குறிப்பிடத்தக்கதாய் விளங்குகின்றது. எனலாம். ஆங்கிலேயரின் வரவால் தமிழ்ப்பண்பாடு எங்ஙனமெல்லாம் சிதைந்துள்ளன என்பதை `ஆங்கிலியரந்தாதி' என்னும் தம் நூலுள் காட்டுகின்றார். `திருமால் ஆயிரம்' எனும் இறைவழிபாட்டு நூலிலும் இத்தகு சமுதாயப் பார்வையினைக் காணமுடிகின்றது.

ஆங்கிலேயர் ஆட்சி நிகழ்ந்தபோது அவர் உண்ணும் ஆனிறைச்சி அடிகளின் உள்ளத்தைப் புண்படுத்தியது. அரசியல் குறித்து ஆன்மீகத்தில் உள்ளோர் பெரும்பாலும் பேசுவதில்லை யெனினும் சுவாமிகள் ஆங்கிலேயரின் கொடுமையை எதிர்த்துப் பாடல்களைப் பாடியுள்ளமை இங்கு எண்ணத் தக்கது. `இங்கிலீசுக்காரர் அநியாயக் கொடுமை' என்று தொடங்கும் அவர்பாடல் பெரிதும் குறிப்பிடத்தக்கது.

எடுப்பு:

இங்கிலீசுக் காரர் அநியாயக் கொடுமையை
என்னென்று சொல்வேன் அம்மா (இங்கிலீசு)

தொடுப்பு:

பங்குத் தகப்பன் பால் மகன் சண்டை செய்வதும்
பாரிக்கு நாயகன் பயப்படுகின்றதும்
எங்கும் வழக்கிழந்திடுவதும் முதலாக (இங்கிலீசு)

உடன் தொகுப்பு:

சப்பாத்திக் கள்ளிக்கும் தரிசுக்கும் தீருவை
தடையறக் கொடுத்திடத் துன்பங்கள் செய்வது
மெய்ப்பார்ப்பார் விட்டினிற் பிறந்த பிள்ளைகளும்

வேதங்கள் படியாமல் வேலைகேட் டலைவதும்.
துப்பாக்கி எனும் திருட்டாயுதம் வாள்முதல்
கொல்லும் நல்ஆயுதத் தொகைகளை வெல்வதும்
செயர்க்கு வித்தாகிய கள்ளும் சாரயமும்
தேனுக்கும் மேலாய சிறப்புற்று விளங்கலும்
பயிர்த்தொழில் செய்வோர்க்கும் மேலான
லாபங்கள்
பாவி வக்கில்களே படைப்பதும் ஆதியாம்
(இங்கிலீசு)

வெள்ளையர் ஆட்சியைக் கொடுங்கோல் என்றும், அவர்களுடைய குடையைக் `கருங்குடை' என்றும் அவர்களை இழிந்த பேய் போன்றவர் எனுங் கருத்துடன் `குணுங்கர்' என்னும் சொல்லால் இழித்தும் பழித்தும் பேசுவார்.

`புலை வெண்குணுங்கர்'
`எமன் ஒக்கும் ஆங்கிலியர்,
திருட்டுத் தன்மை கைவந்த ஆங்கிலியர்

என்றெல்லாம் சாடுவர்.

நிரைப்படப் பசுவினைத் தினம் கொன்று தினும்
நீசர் குடை நிழலில் வெம்பித்
தலைமகள் அழுதுயர் சகித்தறியேன்
சாட்சி யன்றி யுண்டோ!

என்று திருத்தணிகைப் பதிகத்திலும் குறிப்பார். இவ்வாறு ஆங்கிலேயரைச் சாடும் சுவாமிகள் அவர்தம் ஆட்சியை அகற்ற வல்லமை படைத்த ஒருவன், வீரனை, தலைவனை சிந்தனைப் படைத்துத் தருமாறு என்று இறைவனிடம் வேண்டுகின்றார்.

செந்தமிழ்ப் பயிற்சி மறைந்து ஆங்கில மோகம் ஏற்பட்டதையும் குறிக்கின்றார்.

கன்னிநன் நாட்டில் பிறந்தாரும் ஈனக்கலை பயில
இன்னிசை செந்தமிழ்ப் பாவாணர் வாடுவதும்
இக்கொடுமை

என்பர்.

தவத்திரு சுவாமிகளின் படைப்புகள் இங்ஙனம் சமய சமுதாய மொழி உணர்வை ஊட்டும் வண்ணம் அமைந்திருப்பதை அனைத்துப் பாடல்களாலும் அறிய முடிகின்றது. ஏறத்தாழ நூறு ஆண்டுகளுக்கு முன்னாலேயே அவர்தம் அணுகுமுறை ஆங்கில எதிர்ப்பை விழிப்புணர்ச்சியோடு காட்டியுள்ளது. தமிழ், தமிழின, தமிழ்ச் சமுதாய பற்றாளர் சுவாமிகள். தமிழிப் பற்றாளர் ஆதிக்க எதிர்ப்புணர்ச்சி கொண்டவர். உயிர்க் கொலையை வெறுத்த அருளாளர், பண்பாட்டை போற்றியவர் என பல நிலைகளாலும் சுவாமிகளைக் கண்டு மகிழலாம்.







வள்ளலார் காட்டும் இறவா நெறி

(ஊரன் அடிகள்)

தமிழ் நாட்டில் தொன்று தொட்டே இறவாநெறி என்று ஒன்று உண்டு. சாகாக்கலை, சாகாக் கல்வி, மரணமிலாப் பெரு வாழ்வு என்ற பெயர்களில் வள்ளலார் அதனை வழங்குவார்.

இழவு வீட்டுக்குச் சென்று வருவதைப் பெரியகாரியத்திற் குச் சென்று வந்தேன் என்கிறோம். செத்துப்போவதா பெரிய காரியம்? சாகாமலிருப்பதன்றோ பெரிய காரியம்.

சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்க வாசகர் ஆகிய இந்நால்வர்க்கும் சமாதி இல்லை. இந்நால்வரும் சாகவில்லை. இவர்கள் உடம்பு பிணமாக விழவில்லை. பூமியில் புதைக்கப்பட வில்லை. நெருப்பில் எரிக்கப்படவில்லை. மண்ணுக்கோ நெருப்புக்கோ இரையாகவில்லை. நால்வரும் உடம்போடே இறைவனோடு இரண்டறக் கலந்தனர்.

சம்பந்தர் திருப்பெருமண நல்லூர்க் கோயில் மூலத்தானத் தில் எழுந்த சிவஜோதியிற் கலந்தார். அப்பர் திருப்புகலூர் கோயில் மூலத்தானத்தில் சிவலிங்கத்தோடு ஐக்கியமானார். சுந் தரர் கயிலையிலிருந்து வந்த வெள்ளை யானையின் மீது ஏறிக் கயிலைக்குச் சென்றார். மாணிக்க வாசகர் சிதம்பரம் கோயிலில் நடராசர் சந்நிதியில் நடராஜரோடு ஐக்கியமானார்.

வள்ளலார் வடலூருக்கு அடுத்த மேட்டுக் குப்பத்தில் தாம் உறைந்த சிந்திவளாகத் திருமாளிகையில் தமது தனி அறையி லேயே உடம்பை, சுத்த, பிரணவ, ஞான தேகமாக மாற்றிக் கொண்டு அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் மயமாகும் ஞானசித் தியைப் பெற்றார். வள்ளலார் உடம்பு பிணமாக விழவில்லை. மண்ணிற் புதைக்கப்படவில்லை. நெருப்பில் எரிக்கப்பட வில்லை. சமாதி இல்லை.

நால்வரும் வள்ளலாரும் உடம்போடே முத்தி சித்திகளைப் பெற்றவர்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொருவகை. நால்வரும் ஒருவகை என்றால் வள்ளலார் ஒருவகை, தனி வகை.

நால்வரில் மூவர் திருக்கோயில் மூலத்தானத்திற்கும் ஒருவர் கயிலைக்கும் சென்று இறவா நிலை பெற்றனர். வள்ளலார் தாம் இருந்த இடத்திலேயே இருந்து இறவா நிலை பெற்றார். நால்வ ரும் இறைவனிடம் சென்று அடை(ணை)ந்தனர். வள்ளலாரிடம் இறைவன் வந்து அடை(ணை)ந்தான்.

திருவருட்பாவின் ஈற்றுப் பாடலாகிய,

என்சாமி என்துரை என்உயிர்நா யகனார்
 இன்றுவந்து நான்இருக்கும் இடத்தில் அமர் கின்றார்
பின்சாரும் இரண்டரைநா ழிகைக்குள்ளே எனது
 பேருடம்பில் கலந்துளத்தே பிரியாமல் இருப்பார்
தன்சாதி உடையபெருந் தவத்தாலே நான்தான்
 சாற்றுகின்றேன் அறிந்ததுதான் சத்தியம்சத் தியமே
மின்சாரும் இடைமடவாய் என்மொழிநின் தனக்கே
 வெளியாகும் இரண்டரைநா ழிகைகடந்த போதே. 5818

என்னும் பாடல் வள்ளற்பெருமான் சித்திபெற்ற நிலையைக் குறிப்பதாகும்.

உடம்போடு சித்திபெறுவதாகிய சாகாக்கலை தமிழகத்தில் பண்டு தொட்டே உண்டு. சங்க இலக்கியங்களில் சில சான்றுகள் உள்ளன. சமய இலக்கியங்களில் பல சான்றுகள் உள்ளன. சித்தர் நூல்களிலும் பல சான்றுகள் உள்ளன.

திருவருட்பாவில் உடம்போடு சித்திபெறுதலாகிய சாகாக் கலைக்குரிய சான்றுகள் மிகப்பல.

அருளுடம்பின் ஆற்றலைக் கூறும் திருவருட்பாப் பாடல் கள் இரண்டினை மட்டும் ஈண்டுக் காண்போம்.

ஆராலும் அறிந்துகொளற் கரியபெரும் பொருளே
 அம்மே என் அப்பாஎன் ஐயாஎன் அரசே
காராலும் கனலாலும் காற்றாலும் ககனக்
 கலையாலும் கதிராலும் கடலாலும் கடல்சூழ்
பாராலும் படையாலும் பிறவாலும் தடுக்கப்
 படுதலிலாத் தனிவடிவம் எனக்களித்த பதியே
சீராலும் குணத்தாலும் சிறந்தவர்சேர் ஞான
 சித்திபுரத் தமுதேஎன் நித்திரை தீர்ந் ததுவே. 4636

காற்றாலே புவியாலே ககனமதனாலே
 கனலாலே புனலாலே கதிராதி யாலே
கூற்றாலே பிணியாலே கொலைக்கருவி யாலே
 கோளாலே பிறஇயற்றும் கொடுஞ்செயல்க ளாலே
வேற்றாலே எஞ்ஞான்றும் அழியாதே விளங்கும்
 மெய்அளிக்க வேண்டும்என்றேன் விரைந்தளித்தான் எனக்கே.
ஏற்றாலே இழிவெனநீர் நினையாதீர் உலகீர்
 எந்தைஅருட் பெருஞ்ஜோதி இறைவனைச் சார்வீரே - 5450

தேக சித்தி பெற்றவர்களது சித்திவல்லபதரத்தை ஜீவகா ருண்ய ஒழுக்க நூலில் வள்ளற்பெருமான் கூறுவது வருமாறு:

''பேரின்ப லாபத்தையடைந்தவர் பெருமை எது என்றறிய வேண்டில்: தோல் நரம்பு என்பு தசை இரத்தம் சுக்கிலம் முதலிய அசுத்த பூத காரியங்களும் அவற்றின் காரணங்களாகிய, அசுத்த பிரகிருதி அணுக்களுமாகிய தேகத்தை மாற்றி, மாற்று இவ்வ ளவு என்றறியப்படாத உயர்ந்த பொன்னாகிய சுத்த பூதகாரிய தேகத்தையும், பொன்வடிவாகத் தோன்றுதல் மாத்திரமேயன்றி ஆகாயம் போல் பரிசிக்கப்படாத சுத்தபூதகாரண தேகத்தையும், தோன்றப்படுதலுமின்றி ஆகாயம் போல் விளங்குகின்ற ஞான தேகத்தையும் பெற்றவர்களாயிருப்பார்கள். உள்ளே மண்ணினது திண்மையால் தரிக்கப்படார்கள். புறத்தே மண்கல் முதலியவற் றால் எறியினும் அவை அவர் வடிவில் தாக்குவனவல்ல. உள்ளே நீரினது தன்மையால் குளிரப்படார்கள்; புறத்தே நீரிலமுத்தினும் அவர் வடிவம் அழுந்தாது. உள்ளே நெருப்பினது வெம்மையால் சுடப்படார்கள். புறத்தே நெருப்பிற் சுடினும் அவர் தேகத்தில் சூடும் வடுவும் தோன்றுவனவல்ல. உள்ளே காற்றினது ஊக்கத் தால் அசைக்கப்படார்கள். புறத்தே காற்று அவர் வடிவை பரி சித் தசைக்க மாட்டாது. உள்ளே ஆகாயத்தினது கலப்பினால் அந்தரிக்கப்படார்கள். புறத்தே ஆகாயம் அவர் தேகத்தை அந்த ரிக்க மாட்டாது. ஆதாரத்திலன்றி நிராதாரத்திலும் அவர் தேகம் உலாவும். அவரது கண்கள் முதலிய ஞானேந்திரியங்களும் வாக்கு முதலிய கர்மேந்திரியங்களும் பார்த்தல் முதலிய விஷ யங்களையும் பேசுதல் முதலி விஷயங்களையும் பற்றுவன

வல்ல. தயையினால் பற்ற வேண்டில் சுவர் மலை முதலிய தடைகளும் அவர் கண்களை மறைப்பனவல்ல. அண்ட பிண்டங் களில் அகம் புறம் முதலிய எவ்விடத்துமுள்ள விடயங்களை அவர் கண்கள் இருந்தவிடத்திருந்தே கண்டறியும். அண்ட பிண் டங்களில் எவ்விடத்திருந்து பேசினாலும் அவர் செவிகள் இருந்த விடத்திருந்தே கேட்டறியும். எவ்விடத்திருக்கின்ற ரசங்களை யும் அவர் நா இருந்தவிடத்திருந்தே சுவைத்தறியும். எவ்விடத்தி ருக்கின்ற பரிசங்களையும் அவர் மெய் இருந்தவிடத்திருந்தே பரிசித்தறியும். எவ்விடத்திருக்கின்ற கந்தங்களையும் அவர் நாசி இருந்த இடத்திருந்தே முகர்ந்தறியும். எவ்விடத்திலிருக்கின்ற வர்களுக்கும் அவரது கைகள் இருந்த விடத்திருந்தே கொடுத்தல் கூடும். எவ்விடத்திலும் அவரது கால்கள் இருந்த விடத்திலி ருந்தே நடத்தல் கூடும். அவரது வாக்கு எவ்விடத்திலிருக்கின்ற எவ்வெவர்களோடும் இருந்த விடத்திருந்தே பேசுதல் கூடும். மற்ற இந்திரியங்கள் இருந்த விடத்திருந்தே எவ்விடத்தும் ஆனந் தித்தல் கூடும். அவரது மன முதலான கரணங்கள் எப்பயிப்பட்ட விஷயங்களையும் பற்றுவனவல்ல. தயவினால் பற்றத் தொடங் கில் எல்லா உயிர்களினது எல்லாச் சங்கற்ப விகற்பங்களையும் ஒரு நிமிடத்தில் ஒருங்கே நினைத்து விசாரித்து நிச்சயித்துக் கொள்ளும். அவரறிவு ஒன்றையும் சுட்டியறியாது. தயவினால் சுட்டியறியத் தொடங்கில் எல்லா அண்டங்களையும் எல்லாவு யிர்களையும் எல்லாப் பண்புகளையும் எல்லா அனுபவங்களை யும் எல்லாப் பயன்களையும் ஒருங்கே ஒரு நிமிடத்தில் சுட்டியறி யும். அவர்கள் நிர்க்குணத்தராவார்கள் அல்லது தாமச இராசத சாத்துவிக முதலிய முக்குணங்களாலும் உள்ளே விகாரப்படார் கள். புறத்தே அவரது குணங்கள் கரணங்களைப் பற்றுவனவல்ல. உள்ளே பிரகிருதியினால் மூடப்படார்கள். புறத்தே அவரது பிரகி ருதி குணங்களைப் பற்றுவனவல்ல. உள்ளே கால தத்துவத்தால் வேற்றுமைப் படார்கள். புறத்தே காலத்தால் அவரது திருமேனி தடைபடாது. உள்ளே நியதி அளவால் அளக்கப்படார்கள். புறத்தே நியதியால் அவரது திருமேனி வரைபடாது. அன்றிக் காலம் வித்தை ராகம் புருடன் முதலிய மற்றைத் தத்துவங்களும் தத்துவ காரியங்களும் அவர்களுக்கு இல்லை. மாயையால் பேதப்படார்கள். சுத்த மகா மாயையைக் கடந்து அதன் மேல் அறிவுருவாக விளங்குவார்கள். ஆகாரம் நித்திரை மைதுனம் பயம் என்பவைகளால் தடைபடார்கள். அவர்கள் தேகத்திற்குச் சாயை, வியர்வு, அழுக்கு, நரை, திரை, மூப்பு, இறப்பு முதலிய குற்றங்கள் உண்டாவனவல்ல. பனி, மழை, இடி, வெயில் முதலி யவற்றாலும், இராக்கதர், அசுரர், பூதம், பசாசு முதலியவற்றா லும், தேவர், முனிவர், மனிதர், நரகர், மிருகம், பறவை, ஊர் வன, தாவரம் என்பவைகளாலும், எவ்விடத்தும், எக்காலத்தும் அவர் தேகம் வாதிக்கப்படாது; வாள் கத்தி முதலிய கருவிகளா லும் கண்டிக்கப்படாது. எல்லா அண்டங்களும் அணுக்கள் போலச் சிறிதாகத் தோற்றலும் எல்லா அணுக்களும் அண்டங் கள் போலப் பெரிதாகத் தோற்றலும் அவர் தேகத்துக்கு உரித்து. இறந்தோரை யெழுப்புதல், வார்த்திபரை வாலிபராக்கல் முத லிய கரும சித்திகளும், யோக சித்திகளும், ஞான சித்திகளும் அவர் சந்நிதியில் இடைவிடாது விளங்கும். சிருஷ்டித்தல், காத் தல், அழித்தல், மறைத்தல், அனுக்கிரகித்தல் என்கின்ற கிருத்தி யங்களும் அவர் நினைத்த மாத்திரத்தில் நடக்கும். பஞ்ச கர்த்தாக் களும் அவர் கடைக்கண் பார்வையால் தங்கள் தங்கள் தொழில் நடத்துவார்கள். அவர்கள் அறிவு கடவுளறிவாக இருக்கும். அவர் கள் செய்கை கடவுள் செய்கையாக இருக்கும். அவர்கள் அனுப வம் கடவுள் அனுபவமாக இருக்கும். சர்வசக்தியுமுடையவர்க ளாய், எக்காலத்தும் அழிவில்லாதவர்களாய், ஆணவம், மாயை, கன்மம் என்னும் மும்மலங்களும் அம்மலவாதனைகளும் இல் லாதவர்களாய், பேரருள் வண்ணமுடையவர்களாய் விளங்கு வார்கள். ஜடமாகிய ஒரு துரும்பும் அவரது திருநோக்கத்தால் உயிர்பெற்றுப் பஞ்ச கிருத்தியங்களும் செய்யும். அவரது பெருமை வேதாந்த, சித்தாந்த, கலாந்த, போதாந்த, நாதாந்த, யோகாந்தம் என்கின்ற ஆறந்தங்களிலும் விளங்கும். அவற்றைக் கடந்தும் விளங்குமென்றறிய வேண்டும். இவை பேரின்ப லாபத்தையடைந்தவர் பெருமையென்று அறிய வேண்டும்.

இவ்வளவும் வள்ளற் பெருமான் ஜீவகாருண்ய ஒழுக்க நூலில் எழுதுவது. இவ்வளவு அனுபவங்களையும் வள்ளற் பெருமான் பெற்றவர்.

தேகசித்தியில் வள்ளற்பெருமான் சுத்ததேகம், பிரணவ தேகம், ஞானதேகம் என மூவகை உடம்புகளைக் கூறுகிறார்.

சுத்ததேகம்: காரியரூபம், பரதேகம், பரவுணர்ச்சி, பரஅ றிவு, பரத்துவம், பொன்வண்ணம், 12 வயது பருவம், நரை, திரை, பிணி, மூப்பு, மல ஜலம், வேர்வை, ஆகாரம், நித்திரை, தாகம், சாயை முதலிய இல்லாமை, ரோம வளர்ச்சி தாழ்ச்சியில் லாமை, அபரஞ்சி மாற்று, கர்மசித்தி, கல்பதேகி அபரமார்க்கி.

பிரணவதேகம்: காரிய காரணரூபம், பரம்பர தேகம், பரம்ப ரவுணர்ச்சி, பரம்பர அறிவு, பரம்பர தத்துவம், 16 முதல் 108 வரையில் மாற்று, 5 முதல் 8 வயது, உரைபடாதது. தேகம் தோற் றும், பிடிபடாது. சர்வசித்தி, பிராண கல்பதேகி பரஅபரமார்க் கம்.

ஞானதேகம்: காரண ரூபம், எங்கும் பூரண வியாபகம், பராபர அறிவு, பராபர தத்துவம், அளவு கடந்த மாற்று, சப்தமய தரிசனம், சர்வ மகாசக்தி, சர்வ சுதந்தரம், உருவம் தோற்றியும் தோற்றாமலுமிருக்கும், காலாதீதன்.

இவை வள்ளற் பெருமானின் உபதேசக் குறிப்புகள். சுத்த தேகம், பிரணவ தேகம், ஞானதேகம் ஆகிய மூன்று தேகங்களை யுமே வள்ளலார் பெற்றார்.

''முத்திறல் வடிவமும் முன்னியாங் கெய்துறும்
அத்திறல் எனக்கருள் அருட்பெருஞ் ஜோதி.''

''சுத்த வடிவும் சுகவடிவாம் ஓங்கார
நித்த வடிவும் நிறைந்தோங்கு - சித்தெனும் ஓர்
ஞான வடிவும் இங்கே நான் பெற்றேன் எங்கெங்கும்
தான விளையாட்டியற்றத் தான்.''

''மன்னுகின்ற பொன்வடிவும் மந்திரமாம் வடிவும்
வான்வடிவும் கொடுத்தெனக்கு மணிமுடியுஞ் சூட்டி.''

என்பன வள்ளற்பெருமாள் அருளிய திருவருட்பா. வள்ளற் பெருமானது தேக சித்திப் பேறு.

பொன் வடிவம் - சுத்த தேகம்.
ஓங்கார வடிவம், மந்திர வடிவம் - பிரணவதேகம்.
வான் வடிவம், - ஞான தேகம்.

இம்மூன்றும் முறையே ஒளி, ஒலி, அருள் வடிவங்களாம். இத் தேக சித்திகளைப் பெற்றார் உடம்பு பிணமாவதில்லை. மண் ணிற்புதைப்பதற்கில்லை. நெருப்பில் எரிப்பதற்கில்லை, சமாதி இல்லை.

இத்தகைய தேக சித்தி பெற்றவர்களுக்கு சாயை (நிழல்) இல்லை. ஆதலின் அவர்களை நிழற்படம் (போட்டோ படம்) பிடிக்க இயலாது. நிழல் இருந்தால் தானே, நிழல் விழுந்தால் தானே, நிழல் பதிந்தால்தானே நிழற்படம் பிடிப்பதற்கு. பேரொ ளியைப் படம் பிடிக்க இயலாது. பேரிருளையும் படம் பிடிக்க இயலாது. இரவில் படம் பிடிக்க வேண்டுமாயினும், போதிய வெளிச்சம் இல்லாது போயினும் ஒளியூட்டி (பிளாஸ் செய்து) படம் பிடிக்கிறோம். பேரொளியைப் படம் பிடிக்க வேண்டுமா யின் இருளூட்டி நிழல் செய்து படம் பிடிக்க வேண்டும். பேரொ ளியாகிய சூரியனைப் படம் பிடிப்பதற்கு ஹீலியோ கிராப் ஹீலி யோஸ்கோப் முதலிய கருவிகளைப் பயன்படுத்துவதையும், கிர கண காலங்களில் படம் பிடிப்பதையும் வானமண்டல ஆய்வுக் கூடங்களிற் காணலாம். வள்ளற் பெருமானை நிழற்படம் பிடிப் பதற்குப் பலமுறை முயன்றும், படத்தில் பெருமானின் திருவுரு வம் பதியவில்லை. உடுத்த ஆடை மட்டுமே மங்கலாகத் தெரிந் தது. வள்ளலார் படம் போட்டோ படம் அன்று. ஆர்டிஸ்ட் எழுதிப் பிரதி செய்த படங்களே. தேக சித்தியைப் பற்றியும்,

நிழற்படம் பிடிபடாமை பற்றியும், இதுபோன்ற பற்பல செய்திகளையும் வள்ளலார் மறைந்தது எப்படி (சாகாக்கலை ஆராய்ச்சி) என்னும் எமது நூலில் விரிவாகக் காணலாம்.

''மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாங் கண்டீர்'' என்று வள்ளலார் அனைவரையும் அழைக்கிறார். வள்ளலார் காட்டும் வழியில் நடந்தால் இறவாமையைப் பெறலாம். வாழ்க! வாழ்க!!

வள்ளலார் கழல் வாழ்வவதே!

கூறும் விழிப்பில் கனவில் சுழுத்தியில்
வீறும் துரியம் அதீதத்தில் தேறும்
அமைதியில் சாரும் அருளிறை என்பர்
சமைந்திடவே எங்கட்குச் சாற்று.

தண்ணீர் அருந்தும் வகை

சாப்பாட்டில் இடை இடையே தண்ணீர் பருகல் கூடாது. உடம்பு ஊதும். வயிறு நிரம்பிய உணர்வு ஏற்படும். சிறிது நேரத்தில் பசி எடுக்கும். சாப்பிட்டு முடிந்த பிறகு தண்ணீர் சாப்பிடுவது சிறப்பு. தாகம், விக்கல் எடுத்தால் உடனே தண்ணீர் குடிக்கலாம். தண்ணீரைக் காய வைத்து சூடு இல்லாமல் சாப்பிடலாம். தண்ணீர் அருந்த தங்கம், வெள்ளி, செம்பு, வெண்கலம், இரும்பு, மாறாதவெள்ளி, கண்ணாடிக்குடுவை போன்ற பலவகைப் பாத்திரங்கள் உள்ளன. பாத்திரங்களுக்கு ஏற்றபடி தண்ணீரின் குணம் மாறுபடும்.

பௌர்ணமி பூஜை:

பௌர்ணமி பூஜை பலவகையில் உண்டு. சத்யநாராயண பூஜை ஒருவிதம், உமாமகேஸ்வர விரதம் வேறு விதம். சக்தி பூஜை, திருவிளக்குப்பூஜை, சந்திர பூஜை என்று பல வகைகள் உள்ளன. இவைகள் எல்லாம் இகபர சுகங்களைத் தரக்கூடியது. சைவர்கள் உமா மகேஸ்வரர் பூஜையைத்தான் செய்ய வேண்டும். சத்ய நாராயண பூஜை மற்றவர்களுக்கு ஏற்றது. அம்பிகை பூஜையை எல்லோருமே செய்யலாம்.

பெரியவர்களைக் காணும்போது சொல்ல வேண்டியன:

சில பெரியவர்கள், பணக்காரர்கள், உத்யோகஸ்தர்கள் இவர்கள் மூலம் சில சமயம் காரியம் நடக்க வேண்டியிருக்கும். இந்த சமயங்களில் ஸ்ரீராஜராஜேஸ்வரியையும் மஹாகணபதியையும் தியானம் செய்து தோத்தரிக்க வேண்டும். இதற்கான சில ஸ்லோகங்கள் உள்ளன. மந்திரங்களும் உள்ளன. மந்திரங்களைப் பெரியவர்கள் கேட்டு ஜெபிக்க வேண்டும்.

ஜன்மநக்ஷத்திரத்தில் ஆகாதன:

வளைகாப்பு, சீமந்தம் இவைகளை ஜென்ம நட்சத்திரத்தில் செய்யக்கூடாது. சண்டைக்குப் போனால் தோல்வி வரும். நீண்ட நாள் வளர்த்த முடிகளை எடுக்கக்கூடாது. நோய்க்கு மருந்து சாப்பிட ஆரம்பிக்கக்கூடாது. வெளியூர் பயணங்கள், கடல் கடந்த வியாபாரப் பயணங்கள் வெற்றி தராது. ஆண்கள் தங்கள் பிறந்த நக்ஷத்திரத்தில் திருமணம் செய்து கொள்ளக்கூடாது. பெண்கள் திருமணம் செய்து கொள்ளலாம்.

கோதை கண்ட கோபாலன்

(கௌ. பிரமிளா இரண்டாம் ஆண்டு இளங்கலை கணிதம்
மீனாட்சி மகளிர் கல்லூரி, சென்னை.)
(கட்டுரைப் போட்டியில் முதற்பரிசு பெற்றது)

முகவுரை :-

1. முன்னுரை
2. பக்தி இலக்கிய காலம்
3. ஆழ்வார்கள்
4. ஆண்டாள் - இளமைப் பருவம்
5. கோதை கோபாலனை பல்வேறு நிலைகளின் பாடி பரவுதல்.
6. கோதை பாடல்கள் - ஓர் ஆய்வு
7. முடிவுரை.

முன்னுரை:-

"இருந்தமிழே உன்னால் இருக்கின்றேன்
இமையோர்
விருந்தமிழ்தும் வேண்டேன் இனி."

எனப் பாடப் பெறும் தமிழிலக்கிய வரலாற்றிலே பக்தி இலக்கியக் காலம் முக்கியத்துவமும் முதன்மையும் வாய்ந்தது. திங்களோடும் செழும்பரிதி தன்னோடும் விண்ணோடும் உடுக்களோடும் பொங்கு கடல் இவற்றோடும் என்றுமுள தென் தமிழ் தழற் புரை நிறக் கடவுள் அருளிய மொழியாம். அத்தமிழ் சமுதாயத்தில் தோன்றிய கோதை கண்டு களித்த கோபாலனை நாமும் ஈண்டு விரித்துக் காண்போம்.

பக்தி இலக்கிய காலம் :-

மூவேந்தர்களால் சங்கம் வைத்து வளர்க்கப் பட்ட தமிழ் பஃறுளியாற்றங்கரையில் தவழ்ந்து வளர்ந்து நிலை பெற்றது. எனினும் கி.பி ஆறாம் நூற்றாண்டில் களப்பிரர் ஆட்சிக் காலத்தில் சைவமும் வைணவமும் வளர்ச்சியின்றி நின்றன. சமணமும் பௌத்தமும் ஓங்க அம் மதத்தின் கொள்கைகள் பரவலாயின. கி.பி. ஏழாம் நூற்றாண்டில் இருள் நீக்க வந்த இளஞாயிறாய், திங்களாய், உடுக்களாய்ச் சைவ சமயத்தையும் வைணவ சமயத்தையும் வாழ்விக்க பல்வேறு ஆன்மீக வாதிகள் தோன்றினர். சிவபெருமான் மற்றும் திருமால் பற்றிய பாடல்களை நாடெங்கும் சென்று பாடினர். நம் சமயங்களில் மறுமலர்ச்சிக்கு வழி வகுத்தனர். இவர்கள் தமிழ் வழி நின்று சமயத் தொண்டாற்றியமையால் தமிழும் இக் காலக் கட்டத்தில் சிறப்பு பெற்றது.

ஆழ்வார்கள்:

"பச்சை மாமலை போல் மேனி
பவள வாய்க் கமலச் செங்கண்
அச்சுதா! அமரரேறே!
ஆயர் தம் கொழுந்தே!"

என்று பாடப் பெறும் திருமால் உலகைக் காக்கும் பொறுப்பை ஏற்றவர். இறைவனின் குணங்களில் ஆழ்ந்து விளங்கியவர்களையே ஆழ்வார்கள் என்று கூறுகிறோம்.

ஆழ்வார்கள் பன்னிருவர், பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், நம்மாழ்வார், மதுரகவியாழ்வார், திருப்பாணாழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார், குலசேகர ஆழ்வார், திருமங்கை யாழ்வார் என வழங்கப் பெறும் பன்னிருவரும் கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு வரை வாழ்ந்தவர்கள். பன்னிரு ஆழ்வாரையும் விஞ்சி பிஞ்சிலே பரமனைப் பாடித், தேடி அவனை நாடிய கோதை சிறப்பு வாய்ந்தவள். சூடிக் கொடுத்த சுடர்க் கொடி பாடிக் கொடுத்த திருப்பாவையும் நாச்சியார் திருமொழியும் இன்றும் தமிழ்நிலம் முழுதும் ஓதப் பெறும் உயர்வு பெற்றது.

ஆண்டாள் - இளமைப் பருவம்:-

செந்தமிழ் நாட்டின்கண் அமைந்த ஸ்ரீவில்லிபுத்தூரில் நந்தவனம் அமைத்து இறைவனுக்கு மலர்த்தொண்டு ஆற்றும் வாழ்வை மேற்கொண்டு பெரியாழ்வார் வாழ்ந்து வந்தார். பாமாலைகளுடன் இறைவனுக்குப் பூமாலைகளையும் சூட்டி வழிபடுபவர். ஒரு நாள் காலையில் நந்தவனத்தில் மலர் பறித்துக் கொண்டு இருக்கும் போது துளசிச் செடியின் கீழே ஒளி பொருந்திய தெய்வீகப் பெண் குழவியொன்று இருக்கக் கண்டு மகிழ்ந்தார். நள ஆண்டு ஆடிமாதம் சுக்கில சதுர்த்தியில் செவ்வாய்க்கிழமை பூரநட்சத்திரத்தில் கண்டெடுத்த அக்குழந்தைக்குக் கோதை எனப் பெயர் சூட்டி வளர்த்தார்.

அன்பும், அறிவும், அழகும் வாய்க்கப் பெற்ற கோதை தன் தந்தைபால் மிக்க அன்பு பூண்டவள். கணம் விடாது அவர் பாடும் கண்ணனது புகழ் கோதையின் மனதில் பதிந்தது. தந்தைக்கு உதவியாய் மலர் பறித்து மாலவனுக்குச் சூட்டுவதையே மிக்க விருப்பத்துடன் கூடிய விளையாட்டாகக் கொண்டாள்.

தந்தையைப் போலவே கவி பாடும் திறனும், கற்பனை வளமும் நிறைந்தவளாதலின் கோபாலனின் புகழைப் பாடத் தொடங்கினாள். அவள் நெஞ்சு கவர்ந்த கோவிந்தனைத் தவிர பிறரை நினைக்கவும் இயலாத அவள் தன்னை மணப்பதற்குரிய மணவாளன் திருமாலே என மனத்துள் உறுதியுடன் வரித்தாள்.

தான் இறைவனுக்கு ஏற்ற அழகும் குணமும் பொருந்தியவளா என்பதை அறிய ஒப்பனை கொண்டு ஆடியின் முன் கண்டாள்.

> "காறை பூணும் கண்ணாடி காணும்
> கையில் வளை குலுங்கும்
> கூறை உடுக்கும் அயர்க்கும் தன்கொவ்
> வைச் செவ்வாய் திருத்தும்"

எனப் பெரியாழ்வார் கூறும் மொழி உறுதிப்படுத்தும்.

சூடிக் கொடுத்தல்:-

நாளும் தந்தை மலர் மாலைகளை இறைவனுக்கு அணிவிப்பதனால் அம்மாலைகள் மாதவனுக்குப் பொருத்தமானவையா என்பதை அறிந்து கொள்ளும் பொருட்டு, கோதை அம்மாலைகளைத் தானே சூடுவாள் ஆனாள். கண்ணாடியில் நோக்கி தன் உருவத்தில் கோபாலனைக் கண்டு மன மகிழ்ந்து கோயிலுக்குக் கொடுத்து அனுப்பினாள். தற்செயலாக இதை அறிந்த பெரியாழ்வார் அவளைக் கடிந்து கொள்கிறார். இறைவன் அவர் கனவில் தோன்றிக் கோதை சூடிக் கொடுக்கும் மலர்களே தன் மனத்துக்கு உவகை அளிப்பதாகவும், பொலிந்து விளங்குவதாகவும் கூறவே பெரியாழ்வார் மகிழ்ச்சி கொண்டார்.

இதனால் கோதை 'சூடிக் கொடுத்த நாச்சியார்' என்றும் "ஆண்டாள்" '(இறைவனை ஆண்டவள்)' எனவும் அழைக்கப் பெற்றாள்

திருப்பாவையும் நாச்சியார் திருமொழியும்:-

கன்னிப் பெண்கள் கார்த்திகாயினி தேவியை நோக்கி நோன்பு இருந்து நாட்டு நன்மையைக் கோருவதும் தனக்கு நல்ல கணவனை அருளும்படி வேண்டுவதும் பண்டை மரபு. சங்க காலத்திலும் 'தைந்நீராடல்' என்ற பெயருடன் இந்நோன்பு வழக்கிலிருந்தது. கணவனாகக் கண்ணனையே வரித்துக் கொண்ட ஆண்டாள் அவன் மனதுக்குகந்த மார்கழி மாதத்தையே தேர்ந்தெடுத்து நோன்பு ஏற்கிறாள்.

துவாபர யுகத்தின் காலத்தில் தான் வாழ்வதாகக் கருதி வில்லிப்புதூரையே கோகுலமாகப் பாவித்துப் பாடுகிறாள். மற்ற பெண்களையும் கோபிகைகளாகக் கொண்டு அவர்களையும் ஆற்றுப் படுத்தி நோன்பு கொள்ளலானார்.

> "மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
> நீராடப் போதுவீர் போதுமினே நேரிழையீர்!
> சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்
> கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன
> ஏரார்ந்த கண்ணி யசோதை யிளஞ் சிங்கம்
> கார்மேனிச் செங்கண் கதிர் மதியம்
> போல்முகத்தான்
> நாராயணனே நமக்கே பறை தருவான்
> பாரோர் புகழ படிந்தேலோ ரெம்பாவாய்!

என மார்கழி மாதத்தில் நோன்பு நோற்கும் அவள் நோன்பிற்குரிய வழி முறைகளை.

"வையத்து வாழ்வீர்கள்" என அவர்களை விளித்து

> ". . . . . பாற்கடலுள்
> பையத்துயின்ற பரமனடி பாடி
> நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே
> நீராடி
> மையிட்டெழுதோம் மலரிட்டு நாம் முடியோம்
> செய்யாதன செய்யோம். தீக்குறளைச்
> சென்றோதோம்'

என நோன்பு காலத்தில் பின்பற்றும் நெறி முறைகளைப் பின்பற்றுகிறாள்.

> "விசும்பிற்றுளி வீழின் அல்லால் மற்றாங்கே
> பசும்புற் றலைகாண் பரிது."

என்ற வள்ளுவர் வாக்கின்படி மழையையும் அதன் பயனையும் அறிந்து கண்ணனிடம் வேண்டுகிறாள். ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாடித் திங்கள் மும்மாரி பெய்து நாடு சிறக்க வேண்டும் என வேண்டும் கோதையின் நோக்கம் சிறப்புடைத்து.

மன்மதனை வேண்டுதல்:- தலைவனுக்கும் தலைவிக்கும் இடையே அன்புப் பாலத்தை உருவாக்குபவன் மன்மதன். எனவே,

> "தையொருத் திங்கள் தரைவிளக்கி
> தண்மண்டலமிட்டு மாசி முன்னாள்
> ஐயநுண்சிறு மணற்கொண்டு தெருவணிந்து
> அழகினுக் கலங்கரித்தேன் அனங்க தேவா!
> உய்யவுமாங் கொலோ என்று சொல்லி
> உன்னையும் உம்பியையும் தொழுதேன்"

என்று வெய்ய தழல் ஆழியைக் கையில் ஏந்திய திருவேங்கடத்தானுக்கு நான் துணையாகும்படிச் செய்வாய்! அவனுடைய திருவடிகளைத் தொடும்

பேற்றை எனக்களிப்பாய் என்று வேண்டுகிறாள்.

பெரியவர்கள் கோதைக்கு மணமுடிப்பதற்கு உரிய பேச்சை ஆரம்பித்ததும், கோதை தன் வேண்டுதலின் உறுதியை காம தேவனுக்குப் புலப்படுத்தி,

"ஊனிடை ஆழிச்சங்கு உத்தமர்க்கு என்று
உன்னித்து எழுந்த ஒண்தடமுலைகள்
மானிடவர்க்கு என்று பேச்சு படில்
வாழ்கில்லேன் கண்டாய் மன்மதனே!"

என அவனை அச்சுறுத்துகிறாள்.

கோதையின் செயல்கள்:-

காதல் வயப்பட்டவர்கள் எப்போதும் அவர்களை தன் அருகிலேயே இருப்பதாகப் பாவிப்பது இயல்பு. எனவே,

"பொங்கு கடல் வண்ணா! உன்றன் பேச்சும்
செய்கையும் எங்களை
மையலுற்று மயங்க உன் மாய மந்திரம்
கொல்லோ"

எனக் கூறிச் சிற்றில் சிதைக்காதே என்றவனை வேண்டுவதும்,

"நீரில் நின்றயர்ந்தோம், நீதியில்லாதன செய்கிறாய்
ஊரகச் சாலவும் சேய்த்தாய் ஊழியெலாம்
உணர்வோனே"

என்று விளித்துத் துகில் அளிக்க அவனிடம் கெஞ்சுகிறாள்.

தூது:-

அகக்கண் நிறைந்தவள் புறக்கண்ணுக்குப் புலப்படாத ஆற்றாமை ஆற்று வெள்ளமாக, உய்யும் வழி தேடி மாமுகிலையும் மாங்குயிலையும் அவனுக்குத் தூது விடுகிறாள்.

"வெள்ளி ஆழி தன் இடம் கொண்ட
விமலன் தன் உருக் காட்டான்
உள்ளம் புகுந்து எனை நைவித்து
நாளும்உயிர் பெய்து கூத்தாட்டு காணும்
கள்ளுடைச் செண்பகப் புதுமலர் கோதி
களித்து இசை பாடுங் குயிலே!
மெள்ள இருந்து மிழற்றி மிழற்றாது
வேங்கடவன் வரக் கூவாய்!"

என வேண்டுகோள் விடுக்கின்றாள்.

குயில் கூவவுமில்லை பாடவுமில்லை. வேங்கடம் வரை தூது செல்லும் திறனற்ற குயிலை விடுத்து வேங்கடத்தில் உறைகின்ற குளிர் மேகங்களிடம் வேண்டுகோள் விடுக்கிறாள். மின்னலைக் கருவாகக் கொண்ட முகில்களே! அவன் பால் பூண்ட அன்பால் கண்ணிமை பொருந்தாது, வளை நெகிழ மெலிந்து, கண்ணீர் சொரிந்து, முலைக் குவட்டில் விழ தான் நலமிழந்து நிற்கும் காட்சியை அவனுக்குச் சொல்லுங்கள் என்று இறைவனுக்கு அவன் மலையில் தவழும் மேகங்களையே தூதாக அனுப்புகிறாள்.

சங்கை நோக்கிக் கூறும் மொழிகள்:-

காதல் கொண்ட தலைவி தலைவனின் நெருங்கிய சுற்றத்தவரையும், தோழரையும் அணுகி அவன் இயல்பறிவது வழக்கு. திருமால் கையிலிருக்கும் சங்கே அவனிடம் நெருக்கம் கொண்டது எனக் கருதுகிறாள். எனவே,

"சந்தர மண்டலம் போல் தாமோதரன் கையில் விளங்கும் சங்கே!" என அழைத்து,

கற்பூரம் நாறுமோ! கமலப்பூ நாறுமோ
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்திருக்குமோ
மருப்பொசித்த மாதவன் வாய்ச்சுவையும்
நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கிறேன் சொல் ஆழி வெண்
சங்கே!"

என வேண்டுகிறாள்.

கூடலிழைத்தல்:

கூடலிழைத்துத் தன் உள்ளத்துக் கருதிய பொருளை அறிவது மகளிர் மரபு. எனவே ஆண்டாளும்,

"ஆய்ச்சியரும் ஆயரும் அஞ்சிடப்
பூத்த நீள் கடம்பேறிப் புகப்பாய்ந்து
வாய்த்த காளியன் மேல் நடமாடிய
கூத்தனார் வரில் கூடிடு கூடலே."

என்று கூடலிழைக்கிறாள்.

கனவு காணுதல்

மாதவனைத் தான் சென்று சேர்வது உறுதி எனத் தெளிந்து,

"வாரணமாயிரம் சூழ்ந்து வலம் வர
நாரணன் நம்பி நடக்கின்றான் என்று
பூரண பொற்குடம் வைத்து எங்கும்
தோரணம் நாட்டக் கனாக் கண்டேன் தோழி
நான்!"

எனக் கனவிலும் அவன் தன்னை மணமுடிக்க வருவதாகக் கூறுகிறாள்.

மந்திரக் கோடியுடுத்து, நாற்றிசை தீர்த்தம் ஆடி, பொரிமுகம் காட்டி, அம்மி மிதித்து,

"மத்தளம் கொட்ட வரிச் சங்கம் நின்றூத
முத்துடைத் தாமம் நிரை தாழ்ந்த பந்தரின் கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதனன் வந்தென்னைக்

கைத்தலம் பற்றக் கனாக் கண்டேன் தோழீ
நான்!'

என்று கூறி தன் திருமண நிகழ்ச்சியை விவரிக்கிறாள்.

திருமாலிருஞ் சோலையில் அவனைக் கண்டு

"மந்தரம் நாட்டி அன்று மதுரக் கொழுஞ்சாறு
கொண்ட

சுந்தரத் தோளுடைய"வனை

விரும்பி மனத்துள் மையல் கொள்கிறாள்.

கோபாலனைக் காணுதல்: தன் கனவெல்லாம் நனவாகியது என்று கூறும் கோதை விருந்தா வனத்தே

"கணங்கள் மின் மேகம் கலந்தென வனமாலை
மின்னும்"

அழகிய கண்ணனை,

"விரி கதிரே போல்வானை விருந்தாவனத்தே கண்டேன்" எனக் கூறி மகிழ்ச்சி அடைகிறாள்.

திருவரங்கப் பெருமான் ஆணைப்படி பெரியாழ்வார் கோதையைத் திருவரங்கத்திற்கு அழைத்துவரக் கோதை இறைவனுடன் இரண்டறக் கலந்து வாழ்வின் பயனை அடைகிறாள்.

கோதைப் பாடல்கள் - ஓர் ஆய்வு :-

வேயர் பயந்த விளக்காகிய கோதை மாயனை வியந்தும் நயந்தும் பாடிய பாடல்கள் கன்னியொருத்தி கடிமணம் புரிந்து காதலனைக் கூடிட விழைதலைக் கூறி நிற்கின்றன. எனினும் ஆழக் கற்றுணர்ந்தோர் அழியும் தன்மையுடைய நிலையற்ற உடலைச் சார்ந்த அழிவில்லாத ஆன்மா இறைவனாகிய இயற்கையைக் கூடிட விழைவதே இப்பாடல்களின் உள்ளுறைப் பொருள் என்பதை தெளிவாக அறிவர். அஞ்ஞானக் கடலில் ஆழ்ந்து இருந்த மக்களைத் துயிலெழுப்ப கோதை பாடியதே திருப்பாவை மொழி. பாவை இலக்கியங்களில் காலத்தால் முற்பட்ட திருப்பாவையில் ஆண்டாள் இறைவனை வருணிக்கும் காட்சி இறைவனையே இயற்கையாக, இயற்கையையே இறைவனாகக் கண்ட தன்மையை விளக்கும்.

"ஆழி மழைக் கண்ணா! ஒன்று நீ கை கரவேல்
ஆழியுள் புக்கு முகந்து கொடார்த்தேறி
ஊழி முதல்வ னுருவம் போல் மெய்கறுத்துப்
பாழியந்தோளுடைப் பத்மநாபன் கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரி போல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்க முதைத்த சரமழை போல்
வாழ உலகினில் பெய்திடாய்."

என்று பாடுந்திறன் சான்று பகர்கிறது.

காக்கைச் சிறகினில் பாரதி கண்ணன் நிறம் காண்பதும்

"மையோ! மரகதமோ! மறிகடலோ! மழை
முகிலோ"

எனக் கம்பநாடன் திருமாலின் அழகை வியப்பதற்கும் ஆண்டாள் ஒரு முன்னோடி எனின் மிகையன்று.

"ஆவல் அன்பு உடையவர் மனத்தன்றி
மேவலன் விரைசூழ் துவராபதிக் காவலன்"

என நம்பியதாலும்

பண்டு பார் மகளின் துயர் நீக்க மானமிலா பன்றி வடிவெடுத்தமையாலும் பேதைப் பெண்ணான தன்னை அவன் கைவிட மாட்டான் என நம்பி வெற்றி காண்கிறாள்.

திருமாலின் பத்து அவதாரங்களில் தெய்வத்தின் நிலைக்கு உயர்ந்த கண்ணனையே ஆண்டாள் வரித்தது அறியத் தக்கது. உலகின் தீமைகளை அழித்து அறத்தைத் தழைக்கச் செய்ய வல்லவன் என அறிந்து,

"வல்லானை மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை"

"சினத்தால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக்கினியானை"

அற வாழ்வு அளிக்கும் அவனையே கணவனாகக் கொள்ள நாடினாள்.

"இம்மை மாறி மறுமையாயினும்
நீலாகியரென் கணவனை"

என்று மானிடவர் காதலில் ஆழ்ந்து கிடந்த மகளிரிடை மாதவனை மணவாளனாகக் கொள்கிறாள்.

"மாயனை மன்னு வட மதுரை மைந்தனைத்
தூய பெருநீர் யமுனைத் துறைவனை
ஆயர் குலத்தினில் தோன்றும் அணி விளக்கை
தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரனைத்
தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித் தொழுது
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க
போயபிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினால் தூசாகும்."

எனக் கருதி அவன் திருவடிகளைப் பற்றிப் பிறவிக்கடலில் இருந்து உய்ய வழி காட்டுகிறார்.

காயா மலர்களும், மேகத்தை கருவாகக் கொண்ட மலர்களும் அவளுக்குக் கண்ணன் மேனி நிறத்தை நினைவூட்டுகிறது. முல்லைக் கொடியில் பூத்திருக்கும் முல்லை மலர்கள் கண்ணபிரானது முறுவலை அவளுக்கு உணர்த்துகின்றன.

இயற்கையிலே இறைவனின் அழகு கண்ட கோதையின் துணிவு பாராட்டத் தக்கது.

தலைவன் பெயர் சொல்லப் பெறுவதால் கோதையின் பாடல்கள் அகப்பாடல்களாகா என்று கூறுவது பொருந்தாது. தலைவன் என்பதைப் போல இறைவனும் பொதுவானவன். உலகத்து உயிர்கட்கு எல்லாம் அவனே தலைவன். மற்ற அகப்பாடல்கள் படித்து உணரத் தக்கவை. ஆயின் கோதைப் பாடல்களோ உணர்ந்து பாடி இன்புறுத்தக்கன.

முடிவுரை :-

"யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற கருத்தையுடையவள். கோதை எனவேதான் தன் பாடல்களைப் படிப்போருக்கும் உய்ய வழி காட்டுகிறாள். தன் பாசுரங்களின் முடிவில் தன் பாடல்களைப் படிப்பவரும் கோபாலனைக் காண வழிவகுக்கிறாள்.

பருந்தாள் களிற்றுக்கு அருளிய அவன் புகழை விருந்தா வனத்தே கண்டு கோதை உரைப்பதை

"மருந்தாக மனத்தே கொண்டவர் என்றும்
பெருந்தாளுடை பிரானடிக் கீழ் வாழ்வர்."

என்று உறுதியாகச் செப்புகிறாள்.

தமிழிலக்கிய வரலாற்றிலும் பக்தி இலக்கியத்திலும் தனக்கென நீங்காப் புகழ் கொண்டவள் கோதை. மடை வெள்ளம் பள்ளத்தை நோக்கிப் பாய்வது போல் மாதவன் பால் காதல் கொண்டு வாழ வழி காட்டுகிறாள்!

உலகிற்கு உதவுகின்ற மழைக்கு உலகிலுள்ள உயிர்கள் என்ன கைம்மாறு செய்யக்கூடும்? (ஒன்றும் செய்ய இயலாது); அதுபோல பிறர்க்கு உதவும் இயல்புடைய நல்லோர் அவ்வாறு உதவுதல் தம் கடமையெனக் கருதி உதவுவனரேயன்றி, எத்தகைய பிரதிபயனையும் கருதிச் செய்யார் (குறள் 211).



ஆண்டாள் தமிழைக் கண்டாள்

(கவிஞர். இரவி. பாரதி. எம். ஏ.,)

கண்ணனை எண்ணிய கன்னிகை – இவள்
காகுத்தன் தோட்டத்து மல்லிகை!
மின்னிடும் இதழ்களில் மென்னகை – இவள்
மேவிய காதலின் புன்னகை!

பொழுது ,புலர்கின்ற காலையில்
பூக்களில் ஒன்றாய் மலர்ந்தவள்!
தொழுது நிற்கின்ற கண்ணனின்
தோளுக்கு மாலையாய்ச் சேர்ந்தவள்!

கொடிகளின் மத்தியில் ஒளிவீச
கொடியாய்க் கிடந்த காரணத்தால்
“சுடர்க்கொடி” எனும்பேர் பெற்றாளோ...?
சுடர்வண்ணன் திருமேனி உற்றாளோ...?

தித்திக்கும் “நாச்சியார் திருமொழி”
“திருப்பாவை” பாடிய தேன்மொழி
எத்திக்கும் நிறைந்த கண்ணனை – நெஞ்சில்
ஏந்திய கோதைப் பைங்கிளி!

உண்டு, ருசி பார்த்தப் பின்னரே
ஊட்டினாள் தாய்போல இறைவனுக்கு–அந்த
தொண்டுக்கு நிகரிங்கு ஏதுமில்லை
தூயவன் “கண்ணப்பன்” அன்புபோல ....

தான்சூடி மகிழ்ந்து அழகுபார்த்து
சரியென்று பட்டதும் இறைவனுக்கு
தேன்மாலை தந்திட்ட மைவிழி – அந்த
தேவகி மைந்தனின் காதலி!

வாடிடும் மாலைகள் ஆயிரம்
வந்திடும் வைகுந்தன் வாசலுக்கு – இவளோ
வாடாத மாலையாய் வந்தவள் – அந்த
வாசனுக்கே தன்னைத் தந்தவள்!

இறைவனின் மனதையே ஆண்டதால்
இவள்பெயர் "ஆண்டாள்" ஆனதோ ...?
நிறைமொழி "தமிழையே" ஆண்டதால்
நேரிழை "ஆண்டாள்" ஆனாளோ ...?

தந்தையும் மகளும் ஓர் வரிசை
தந்ததே பெண்மைக்கு சீர்வரிசை!
இன்புற்று மகிழ்ந்தார் பெரியாழ்வார்!
இறைவனே மருமகன் ஆனதினால்!

மார்கழி நோன்பு நோற்றிடுவோம்
மனதினில் உறுதியை ஏற்றிடுவோம்
கார்மேக வண்ணனைச் சுடர்க்கொடியை
காலமும் நெஞ்சினில் போற்றிடுவோம்!



காலமுண்டாகவே காதல் செய்மின்

(இறை நெறிக்காவலர். K. குப்புசாமி அம்பத்தூர்)

பிறப்பிலே சிறந்தது மானிடப்பிறப்பு. இப்பிறப்பு தப்பினால் எப்பிறப்பு வாய்க்குமோ என்று வருந்துவதும் உண்டு. ஏனென்றால் இம்மண்ணுலகில் மானிடனாகப் பிறக்கும் பிறப்பொன்றுக்கே பிறவா இறவா நிலையினை அடையமுடியும். வேறு எவ்வுலகிற்கும் இந்நிலைகிடை யாது. இதனை மாணிக்கவாசகர்;

புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின்றோம் அவமே இந்தப்பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமுதே பள்ளி எழுந்தரு ளாயே

என்று பாடியுள்ளார். தேவர்களுள் சிறந்த திருமாலும் பிரமனுமே மண்ணுலகில் பிறந்து நற்பேறடையாமல் விண்ணுலகில் பிறந்து வீணாக நாட்களைக் கழிக்கின் றோமே என்று ஏங்குகின்றார்கள் என்றால் இவ் வகையில் மிகப் பெரும் புண்ணிய பூமி இம்மண்ணுலகம் என்பதை உணரவேண்டும்.

பிறந்த பிறப்பின் பயனை அடைய நாம் என்ன செய்ய வேண்டும்? இப்பிறப்பில் இளமையிலேயே கல்வி கற்க வேண்டும். "இளமையில் கல்" என்றார் ஔவையாரும். உலகியல் கல்வியோடு ஆன்மீகக் கல்வியையும் கற்க வேண்டும். சிறுவர் சிறுமியரைக் கற்கவைக்கவேண்டும். இளமையிலேயே கடவுள் பக்தியை ஊட்டிக் குழந்தை களை வளர்க்கவேண்டும். "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" ஆகையால் இளமைப் பருவத்தில் கற்கும் கல்வி பசுமரத்தாணிபோல் பதிந்துவிடும். அவல வயிற்றை வளர்ப்பதற்கே பாடுபடுகின்றோமே தவிர எடுத்த பிறவி யில் இறைவனை அடைவதற்குரிய மார்க்கத்தில் செல்வ தில்லை. குருவையோ, கடவுளையோ, நாடுவதில்லை. இந்நிலை மாறவேண்டும்.

நம் தெய்வத் தமிழ் நாட்டில் எண்ணற்ற அருளாளர்கள் இறைவனை, இளம்பிராயத்திலேயே இறைபக்தியைப் பெற்றுப் பேரின்பம் அடைந்துள்ளார் கள். எடுத்துக் காட்டுகளாக துருவன் பிரகலாதன் திருஞான சம்பந்தர் முதலியவர்களைக் குறிப்பிடலாம். இம்மூவரின் வரலாறுகளையும் சிறுவர்களுக்குக் கற்பித் தால் இளம் பிராயத்திலேயே கடவுள் பக்தியைத் தோற்றுவித்துவிடலாம். காலம் பொன் போன்றது. நம் முடைய காலம் எப்படி வீணாகப் போய்க் கொண்டிருக் கின்றது என்பதை அப்பர் சாமிகள் தொண்டரடிப் பொடி ஆழ்வார் இருவரும் முறையே தேவாரத்திலும் திவ்வியப் பிரபந்தத்திலும் கீழ்க்கண்டவாறு விளக்கி யிருக்கின்றார்கள்.

"பாலனாய்க் கழிந்த நாளும் பனிமலர் கோதை மார்தம்
மேலனாய்க் கழிந்த நாளும் மெலிவோடு மூப்பு வந்து
கோலனாய்க் கழிந்த நாளும் குறிக்கோளிலாது கெட்டேன்
சேலுலாம் பழனவேலித் திருக்கொண் டீச்சரத் துளானே
என்று அப்பரும்.

"வேதநூல் பிராயம் நூறு மனிதர் தாம்புகு வரேனும்
பாதியும் உறங்கிப் போகும் நின்றதில் பதினை யாண்டு
பேதைபா லகனதாகும் பிணிபசி மூப்புத் துன்பம்
ஆதலால் பிறவி வேண்டேன் அரங்கமா நகரு ளானே"

என்று தொண்டரடிப்பொடி ஆழ்வாரும் பாடிய பாடல்களைப் படித்துணர வேண்டும். இவ்வாறு கழியும் காலம் போக எஞ்சிய காலம் மிகக் குறைவு என்பது விளங்குகின்றது. இக்குறுகிய காலத்திலேயே இறைபக்தி யால் பேரின்ப நிலை அடையப் பாடுபடவேண்டும். இதனாலன்றோ வள்ளலாரும் "சும்மா இருக்கும் சுகம் இன்று வருமோ நாளைக்கே வருமோ அல்லது என்று வருமோ" என்று பாடி ஏங்குகின்றார்.

இறையுணர்வு பெறுவதற்கு நித்திய அநித்திய உணர்வு வேண்டும். இளமை, யாக்கை, செல்வம் இவை அனைத்துமே நிலையில்லாதவை என்பதை நன்கு அறிந்துகொள்ள வேண்டும். நம் வாழ்க்கையின் நிலையாமையைத் திருமூலர் விளக்குவதைப் பின்வரும் அவரது பாடலால் அறியலாம்.

"அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்
மடக்கொடி யாளோடு மந்தனம் கொண்டார்
இடப்பக்க மேஇறை நொந்ததிங் கென்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே."

"நின்றான், இருந்தான், கிடந்தான் தன்கேளலறச்
சென்றான் எனப்படுதலால் வாழ்வு நிலையில்
லாததென்பதை உணர்ந்து இன்றிருந்தே கடவுள்
பக்தி பூண்டு ஒழுகுவோமா."

வாலிப வயதில் பக்தி எதற்கு வயதான பிறகு பக்தி நெறியில் ஈடுபடலாம் என்று நினைப்பது தவறு. நமது உடலில் இருக்கின்ற உறுப்புகள் ஒவ்வொன்றாகப் பழுதடைந்தபின் ஏதாவது ஒரு நோயால் தாக்குண்டு மடிந்துவிடுவோம். மடியும் அத்தருணத்தில் இறைவனை நினைக்கவே முடியாதே. உறுப்புகளெல்லாம் செயலற்றுவிடுகின்றனவே. ஆகவே நல்ல நிலையிலுள்ள போதே பக்தியில் ஈடுபட்டுப் பலனடையவேண்டும். இறைவன் பக்தி வலையில் அகப்படுவான் பெரியாழ்வார் பாடியுள்ள பின்வரும் பாடலைப் படித்துணர்வது நல்லது:

துப்புடை யாரை அடைவ தெல்லாம்
சோர்விடத் துத்துணை யாவரென்றே
ஒப்பிலே னாகிலும் நின்ன டைந்தேன்
ஆனைக்கு நீயருள் செய்தமையால்
எய்ப்பென் னைவந்து நலியும் போது
அங்கேதும் நானுன்னை நினைக்கமாட்டேன்
அப்போதைக் கிப்போதே சொல்லி வைத்தேன்
அரங்கத் தரவணைப் பள்ளி யானே.

அருட்பெருஞ்ஜோதி இராமலிங்க அடிகளாரும் இறைவனை நினைக்காத உள்ளத்தைக் கீழ்க் கண்டவாறு சாடிச்சாடி வருந்துகின்றார்.

"எந்தைநினை வாழ்த்தாத பேயர்வாய் கூழுக்கு
ஏக்கற் றிருக்கும் வெறுவாய்
எங்கள் பொருமானுனை வணங்காத மூடர்தலை
இகழ்விறகு எடுக்கும்தலை"

என்றெல்லாம் பாடியுள்ளார்.

"சரணகம லாலயத்தை அரைநிமிட நேரமட்டில்
தவமுறை தியானம் வைக்க அறியாத"

என்று அருணகிரி நாதர் அரற்றுகிறார். ஆகவே இப்பிறப்பே ஏற்ற காலம் இறைவன் அருள் பெறுவதற்கு. இறைவனோ தன்மூல பண்டாரமாகிய அருள் செல்வத்தைக் கொடுக்கக் காத்திருக்கின்றான். நாம்தான் அவனை நினைந்து அணுகாமல் இருக்கின்றோம். இதனை மாணிக்க வாசகர் பின்வரும் பாடலால் உணர்த்துகின்றார்.

காலமுண் டாகவே காதல்செய்
துய்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப்
பிரான்தன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின்
றான்வந்து முந்துமினோ

நாமும் அம்மூல பண்டாரத்தைப் பெற இப்பிறப்பிலேயே முந்திக் கொள்வோம் முத்திநிலை பெற்றுக்கொள்வோம் "காற்றுள்ள போதே தூற்றிக் கொள்" என்பதை மறந்துவிடலாமா?

திருமங்கையாழ்வார் வரலாற்றில் காதலில் மலர்ந்த கடவுள் காட்சி

பெரும்புலவர். வி. கோவிந்தசாமி, சென்னை-39.

1. தொண்டரை வணங்கித் தொண்டர்
தூயசே வடிகள் போற்றித்
தொண்டர்தம் பசியைப் போக்கித்
தொண்டர்கள் பெருமை வாழ்த்தித்
தொண்டர்க்குத் தொண்டனாகத்
தொண்டுகள் செய்து நாட்டில்
தொண்டுக்கு விளக்கமாகத்
தோன்றினார் மங்கை மன்னர்.

2. பற்பல மதங்கள் எங்கும் பரவிய அவர் காலத்தில்
அற்புத வைண வங்காண் அருமறை தத்துவங்கள்
மற்புய மங்கை மன்னர் மங்கலத் தமிழில் பாட
பொற்பமை ஆலி கோயிற் புனிதனு முள்ளங் கொண்டான்.

3. திருவமு தளிக்கும் தொண்டில் திருவெலாம் செலவிட்டாழ்வார்
பொருளிலாக் குறையால் நாளும் புண்ணிய தொண்டிற் கேதம்
வருமென நினைந்து நைந்து வழிவகை காண எண்ணி
கருதிய செயல்மு டிக்க கண்ணெனும் தோழ ரோடு

4. பரமனின் பணிக ளோங்கப் பற்பல வகையி லாய்ந்து
உரமுடன் பொருள் கைக்கொண்டே உலகினை அளந்தான் தொண்டு
பரவிடச் செய்வோ மென்று பரகாலர் முடிவு காண
அரவணைப் பெருமான் தொண்டை அன்புடன் தொடரலானார்.

5. ஆற்றவே செல்வங் கொண்டோர் அடைந்தவர்க் குதவாமக்கள்
போற்றரும் நிதியை வீணில் புகழுக்கே கரைக்கும் மாந்தர்
சீற்றங்கொள் திருவின் மிக்கார் சிறப்பிலா இவர்கள் தம்மை
நாற்றிசை தோறும் நண்ணி நற்பொருள் பறித்து வந்தார்.

6. வழிப்பறி தொழிலால் வந்த வளத்தினைக் கொண்டு ஆழ்வார்
கழிபெருங் காதலோடு கருணையங் கடவு ளெம்மான்
வழிவழி சான்றோர் வாழ்த்தும் வளர்துயில் அரங்கன்போற்றி
பழிப்பிலா அடியார் பாதம் பாங்குடன் வழுத்துங்காலை.

7. செயலிது வழுவாம் ஆனால் சீர்திகழ் தொண்டர்க்காக
பயனெதிர் கருதாவண்ணம் பரகாலர் செய்வ தாலே
மயலினி ஒழித் தவர்க்கு மாசறு காட்சி நல்கும்
செயலினை உள்ளங் கொண்டான் திருவய லாலி எம்மான்.

8. செய்பணி சிறக்க ஓர்நாள் தெய்வத்தை வணங்கி ஆழ்வார்
வெய்யகான் ஏகி யங்கு வேற்றவர் வரவு நோக்கி
கைப்பொருள் உடையார் யாரும் காணாமல் கவலை யோடு
மெய்த்துயர் பாரா தெங்கும் விழைவுடன் சுற்றுங் காலை.

9. நீரின்மேல் நடப்பான் கண்ட நிழலிலே ஒதுங்கி நிற்பான்
ஊரில்தான் ஊதுவானோடு உயர்ந்தோராவழக்க னென்னும்
வீரியத் தோழர் நால்வர் வெவ்வேறு திசையில் நிற்ப
காரிய மாற்றும் வண்ணம் கருதிய நோக்கத்தோடு.

10. நாள்வழி பாடும் தொண்டர் நல்வழி பாடும் செய்ய
வாள்வழி பறிக்க இன்று வழியிடை எவரும் காணோம்
தோள்வலி இருந்தும் என்னாம் துணைவலி இருந்தும் என்னாம்
ஆள்வினை யோடிக் காட்டில் அலைந்து நாம் பார்ப்போ மென்று,

11. வானுற வளர்ந்து நின்ற மரக்கிளை பற்றி ஏறிக்
கானுறும் நெறிக ளெல்லாம் கண்ணினால் அளந்து நோக்கி
மீனுறு நீல வான்போல் மேனியான் ஆலி யப்பன்
தானுந்தன் குழுவி னோடும் வருதல்கண் டுவகை கொண்டார்

12. நல்லதோர் வேட்டை இன்று நாரணன் கருணையோடு
நல்கினான் ஐயன் வாழ்க, நாடியே வளைத் தன்னார்தம்
செல்வங்கள் சூறையாடித் திருப்பணி செய்வேன் என்று
சொல்லொலி எழுப்பியச்சம் தோன்றவே ஓடி முன்னே,

13. மன்றவர் கோலத்தோடும் மாமக ளோடும் சேர்ந்தே
அன்றுதான் மணமுடிந்த அந்தண வடிவத்தோடு
தென்றலால் தவமும் செந்நெற் திருவய லாலியம்மான்
ஒன்றுமே அறியான் போன்றவ் வுவர்நெறி தன்னில் வந்தார்

14. மன்றலர் குழுவை மங்கை மன்னவர் வழிம றித்து
நின்றுமுன் ஒலியெழுப்பி நீண்டகூர் வாளை ஓங்கி
சென்றடி வைப்பீராகில் செகத்தினில் தொலைந்தீர் நீவீர்
என்றுநம் மங்கை மன்னர் எழுசினம் பொங்க சாற்றி!

15. விழிகளில் சினத்தீ தேங்க வீரவாள் கையில் மின்ன
எழிலுறு புருவங்கோட ஏற்றமீ சையுந் துடிக்க
செழியதம் இடக்கையாட செல்பவர்க் கச்சந் தோன்ற
எழில்மண மகனை நோக்கி ஏடா! நின் அணிக ளோடும்

16. நின்துணை நகைகள் மற்றும் நேயங்கொள் குழுவி னுள்ளோர்
தன்னரும் பொருள்கள் யாவும் தடையிலா தெடுத்து வைப்பாய்
என்சொலை மறுத்தீ ரானால் இங்குநின் குழுவி னோடும்
கொன்றுயான் குவிப்பேன்; சொல்லைக் குறைவின்றி முடிப்பாய் என்று

17. நீண்டதன் உறைவா ளோச்ச நிமலனும் அவர்சொல் நேர்ந்து
பூண்டபே ரச்சங் கொண்ட பொய்கெழு தோற்றத் தானாய்
காண்டகும் அணிகளெல்லாம் கழற்றியே ஓர்பால் வைத்தான்
மாண்டகு துணைவியோடு வருங்குழு வினரும் வைத்தார்.

18. வந்தவர் அணிக ளெல்லாம் வாய்த்தவோ ரிடத்தி லங்க
சிந்தனை யோடு மன்னர் சேர்த்தொரு பொதியாய்க் கட்டி
கந்தமார் குழலாள் அன்னை காலரு காழி நோக்கி
இந்தமோ திரத்தை யும்நீ எடுக்கலா தேனோ வென்ன.

19. நீலமார் மேனி யாலி நேமியா னவர்சொல் கேட்டு
காலரு காழி மட்டும் களைந்திட இயல வில்லை
மேலதென் செய்வ லென்ன வென்றிவேல் மங்கை யாரும்
கோலமார் ஆழிதன்னைக் கொள்வேன் யானென்று கூறி

20. மறையெலாம் போற்றும் அம்மை மலர்த்திருப் பாதம் மேவி
முறையுடன் பொருந்திக் காணும் மோதிரந் தன்னை ஆழ்வார்
கறையிலாப் பற்க ளாலே கடித்ததை நீக்கிக் கொண்டார்
இறைவனும் ஐயா நீர்நம் கலியனோ வென்று சாற்ற

21. சாற்றருஞ் சொல்லைக் கேளா சற்குண கலிய னாரும்
போற்றுதற் குரிய செல்வப் பொதியினை எடுக்க லானார்
ஆற்றலை எல்லாங் காட்டி அப்பொதி எடுத்தும் வாரா
மாற்றங்கண் டவரும் சோர்ந்து மணமகன் றன்னை நோக்கி,

22. என்னமந் திரஞ்செய் திந்தப் பொதியினை எடுக்க லாற்றா
துன்னினை; சொல்வாய் இன்றேல் உயிரினைப் பறிப்பே
னென்ன,
நன்னிலம் ஏத்தும் நாத நம்பனும் நகைத்தே! ஐயா
உன்னிடம் அதனைச் சொல்வேன் உற்றுநீ வருக என்றான்.

23. புண்ணிய ஆலியப்பப் புனிதன்முன் கலியன் செல்ல
நண்ணிய கலியனாரின் நற்செவி நன்னில் ஐயன்
எண்ணிலா சீர்கொள் தெய்வத் திருவெழுத் தெட்டு தன்னை
மண்ணிடைச் செல்வ மென்று வழங்கியே ஓதினானே

24. வேதங்கள் நவின்ற வாயான் வேங்கடப் பெருமான் அன்று
பாதங்கள் நிலத்தில் தோயப் பழமைகொள் எட்டெ ழுத்தை
நாதனாம் தானும் நல்ல நரனுமாய்ப் புவியில் தோன்றிப்
போதங்கள் செய்ய வந்தும் பொன்னெனக் கொள்வா ரில்லை.

25. அத்திரு மந்திரத்தை ஆலிவாழ் பெருமான் நாட்டில்
முத்தெனத் தோன்றி இங்கு மூத்தபேர் வைண வத்து
வித்தெனு மெட்டெ ழுத்து விளங்கிட வையந் தன்னில்
சத்துவ பரகா லர்க்கு சாற்றிநன் குரைத்தா ன்ம்மா!

26. குலப்புகழ் செல்வம் மற்றும் குளிரருள் உயர்மெய்ஞ் ஞானம்
தலப்புகழ் தாயின் மேலாம் தகைநலம் பலவும் நல்கி
நிலப்படு துயரைப் போக்கி நேரிலா விசும்பின் வாழ்வும்
சொலப்புகில் வாழ்வில் உய்க்கும் தூயசீர் எட்டெழுத்து.

27. பற்றிலா அறவோர் பாசத் தளையறு ஞானியர்க்கும்
குற்றங்கள் களைந்து வாழும் குணநிறை அடிய வர்க்கும்
செற்றமாம் சிறுமை நீங்கிச் செய்கட னாற்று வோர்க்கும்
வெற்றியே அளித்து வீட்டுப் பேற்றினை உய்க்கு மன்றே

(வேறு)

28. திருமங்கை மன்னவரைத் திசை மாறச் செய்தவர்தம்
திருச்செவியில் கருணையுடன் திருவெழுத்தெட் டினையருளி
திருத்தாயோ டடன்மேவி திகழ்ஞாலம் பேறுபெற
திருக்கருடன் மிசை தோன்றி தெளிஞான அமுதளித்தார்.

29. உலகமெலாம் படைத்தளிசெய் தழித்துவிளை யாட்டயரும்
நிலமளந்த நெடியோனை நிறைவுடனே கண்களிப்ப
அலகிலாநற் திருக்காட்சி அம்மையுடன் கண்டுதமிழ்க்
குலம் செய்த தவப்பயனாய்க் கோமகனும் ஆனந்தப்

30. பெருவெள்ளந் தனிலாழ்ந்து பெருவிழிகண் ணீர்சொரிய
திருவுள்ளம் களிப்பெய்த திளைத்துடலம் மயிர்ப் பொடிப்ப
பொருவெள்ளக் காதலினால் புதுஞானப் பெருக்கென்னும்
திருவெள்ளந் தனில் மூழ்கித் தேன்தமிழால் பாடுகின்றார்.

31. வாடினேன் வாடி என்றே வளமிகு சொல்லெ டுத்து
நாடிதான் கண்டுகொண்ட நாரண திருநா மத்தின்
கூடிய பயனை எல்லாம் குளிர்திரு மாலை யாக்கிப்
படியே பாடல் பத்தும் பரமன்தாள் சூட்டி யாழ்வார்.

பதினோராம் திருமுறை

மூத்த திருப்பதிகம்

காரைக்காலம்மையார்

கொங்கை திரங்கி நரம் பெழுந்து
குண்டுகண் வெண்பற் குழிவயிற்றுப்
பங்கி சிவந்திரு பற்கள் நீண்டு
பரடுயர் நீள்கணைக் காலோர்பெண்பேய்
தங்கி அலறி உலறு காட்டில்
தாழ்சடை எட்டுத் திசையும் வீசி
அங்கங் குளிர்ந்தனல் ஆடும் எங்கள்
அப்பன் இடந்திரு ஆலங்காடே.

கொங்கை தளர்ந்து நரம்பெழுந்து, குண்டுகண், குழிவயிறு, தலைமயிர் சிவந்து, பற்கள், நீண்டு, பரடுயர் நீள் கணைக் காலோர் பெண்பேய் தங்கி, அலறி உலறும் காட்டில், தாழ்சடை எட்டுத் திசையும் வீசி, உள்ளம் குளிர்ந்து அனல் ஆடும் எங்கள் அப்பன் இடம் திருவாலங்காடே.



நக்கீர தேவ நாயனாரின் "கார் எட்டு"

(முனைவர். இராம. குருநாதன்
தமிழ்த்துறை. பச்சையப்பன் கல்லூரி, சென்னை.)

இயற்கையின் இன்னருஞ் சூழ்நிலையை இறைவனின் உறைவிடமாகக் கண்டவர்கள், பழந்தமிழர்கள். இயற்கையில் காணும் வண்ணத்தையும் வடிவத்தையும் கடவுளின் நிறத்திற்கும் உருவிற்கும் தொடர்புபடுத்து கடவுளின் நிறத்திற்கும் உருவிற்கும் தொடர்புபடுத்து இலக்கியம் சில இடத்து உணர்த்தும். திருமாலை வதை இலக்கியம் சில இடத்து உணர்த்தும். திருமாலை மழைமேகத்திற்கு ஒப்பிட்டுக் கூறுகிறது முல்லைப்பாட்டு. விண்ணில் கொக்குகள் வரிசையாகப் பறப்பதை முருகனின் ஆரத்திற்கு ஒப்பிட்டு மகிழ்கிறார் அகப் புலவர் ஒருவர்.

சங்க இலக்கியத்துள் ஆங்கொன்றும் ஈங்கொன்று மாகக் காணக்கிடைக்கும் இயற்கையோடு இறைவனைச் சார்த்திக் கூறிய சிந்தனை பிற்றை நாளில் பத்தி இலக்கியத்துள் கரைந்து கலந்தது.

கார்காலம்

சங்க இலக்கியத்தில் பருவம் பற்றிய பாடல்களில் கார்ப்பருவம் சிறப்பு மிக்கது. 'தளிதரு தண்கார்,' எனவும், 'நறுந்தண் கார்,' எனவும் கூறிய பண்டைக் காலத்தில் கூறப்பட்ட அகப்பொருள் சிந்தனை காதலரின் நெஞ்சை ஈர்ப்புறச் செய்தது. கவின்மிகு கார்காலம் பற்றிய இலக்கியப் புனைவு நெகிழ்ச்சியை ஏற்படுத்தக் கூடியது. கார்ப்பருவம் வந்துற்றபோது, காதலன் வருவான் என்று ஏங்கிக் காத்திருக்கும் கன்னியரின் உள்ளத்தை அக இலக்கியம் காட்டும்.

கார்காலத்தில் கொன்றையும், முல்லையும், குருந்தும் பூத்து நிற்றலின் அக்காலம் புலவர் புனைதற்கு ஏது வாயிற்று. மான்கள் தம் பிணைகளோடு மகிழ்ந்து குலாவ உகளும்; மயில்கள் கார்மேகம் திரள அகவும்; இப்படிப் பட்ட அக்காலம் காதலர்க்குக் கவின்மிக்க வரவு.

கார்கால மழை, உயிரினங்களைத் தளிர்ப்பிக்கச் செய்யும். காதலரின் நெஞ்சை உயிர்ப்புறச் செய்யும். வாழ்க்கைக்கு முதல்வாயில் கார்கால வருகை. வாழ்வைத் தளிர்ப்பிக்கச் செய்யும் முதற்பருவமே கார்ப்பருவம். மழையின் முன்னோடியாகக் கார்காலம் இருக்க, அக்காலமோ காதலரின் அன்பு கெழுமிய வாழ்விற்கு முன்னோடியாக விளங்கவல்லது.

கார்காலம் மழையின் அறிகுறி. கார்வானம் இடிக்குரல் என முழங்கும்; மின்னற் கற்றை விரித்து மறையும்; வெண்மேகம் தடிந்து திரண்டு சூலுற்றுக் கருமுகிலாய்ச் சூழும்; அதன் சாரலும் தூறலும் தொடக்க அறிகுறியாக மழைக்கு விளங்கும்; இரவும் பகலும் மயங்கிப் பொழுதறியாச் சூழ்நிலையில் மருட்கை எழுப்பும்; மேகக் கொடையோ தாகம் தீர்க்கும்; மழையால் கோலுயரும்; குடியுயரும்; இயற்கை வளம் மண்ணில் நிலைபெறும். சிறப்பொடு பூசனை நடக்கும். மக்களின் வாழ்வும் ஒழுக்கமும் உயரும். இத்தகைய மழைக் காலத்தை இறைவனோடு தொடர்புபடுத்தல் அல்லது உருவகப்படுத்திக் காட்டல் இயல்பு அல்லவா? 'ஊழி முதல்வனாய் உருவம் போல் மெய்கறுத்து', என்று சொல்லவைப்பதல்லவா?

யாவுமாய் நிற்பவன்

யாவும் இறைவனின் இடமே என்று எண்ணும் காரைக் காலம்மையார், விரி சுடர் பார் ஆகாயமெல்லாம் அவன் பொருளாகக் காண்பர். இயற்கைப் பொழுதுகளின் வண்ணத்தை இறைமேல் சார்த்தி,

> காலையே போன்றிலங்கும் மேனி கடும்பகலின்
> வேலையே போன்றிலங்கும் வெண்ணீறு—மாலையின்
> தாங்குருவே போலுஞ் சடைக்கற்றை மற்றவற்கு
> வீங்கிருளே போலும் மிடறு

என்று கூறுவர்.

கண்ணுதலானுக்குரிய கார்

கார்காலத்தைப் பார்க்கின்ற போது அக்காலத்துப் பூக்கும் கொன்றையை ஈசனுக்குரிய மலராகக் கொண்டு காரார் 'பூங்கொன்றையினான்' எனவும், 'கார்விரி கொன்றை கலந்த கண்ணுதலான்' எனவும் பாடி மகிழ்ந்தனர். கார்காலத்தில் தோன்றும் மின்னலை இறைவனோடு தொடர்பு படுத்தி 'மின்னார் செஞ்சடை' எனவும், 'மின்போலும் செஞ்சடையான்' எனவும் பாடுவாராயினர்.

கார்கால இயல்புகளை நக்கீரதேவ நாயனார் இறைவனோடு தொடர்புபடுத்திக் கார் எட்டு என்ற சிறு பிரபந்தம் இயற்றியருளியுள்ளார்.

கார் எட்டு அகப்பொருளா?

பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்றான கார்நாற்பது அகப்பொருள் பற்றியது. கார் எட்டு, அகப்பொருளோ என ஐயுறவைப்பது. கார் எட்டு, தலைவனது பிரிவினால் வருத்தமுற்ற தலைமகளை நோக்கிக் கார்ப்பருவம் வந்தது. இனித் தலைவரும்

வந்துவிடுவார் என்று கூறித் தோழி வற்புறுத்துவதாக அமைந்தது என நூலின் பொருளை விளக்கியுரைப்பர் வித்துவான். க. வெள்ளைவாரணனார் (பன்னிரு திரு முறை வரலாறு. ப. 667) பாடற்பொருளை நோக்க அகப் பொருள் என்பதற்கான சான்று குறிப்பாகவே கிடக் கிறது. 'கற்பகலம் காண்புற்ற கார்' என்று வரும் தொடர் கொண்டு ஓரளவு இயைபுபடுத்தலாம். முற்றும் ஏற்றுக் கொள்ளுமாறு இல்லை.

அவனே மழை

உயிரினங்களுக்கு முதற்காரணம் மழை; உலகினுக்கு முதற்காரணன் இறைவன். அவனே மழைக்கும் காரண னாவான் என்ற நோக்கில் பாடப்பெற்றது கார் எட்டு. குறளில் கடவுள் வாழ்த்திற்குப் பின்னர் வான்சிறப்பு அமைந்துள்ளது. ஆனால் அவ்விரண்டும் ஒன்றாகிக் கலந்த பான்மையில் அவனே மழை; மழையே அவன் என்ற அவன் வரவினைக் காட்டி நிற்கிறது, இந்நூல்.

எட்டுக்குச் சிறப்பு

பதினோராம் திருமுறையில் எண் வழி அமைந்த பிரபந்தங்களில் இதுவும் ஒன்று. கார் எட்டு, எட்டு வெண்பாக்களால் இயன்றது.

தமிழில் எட்டு என்ற– எண்ணிற்குத் தனிச்சிறப்புண்டு. எட்டுத் தொகை, எண்குணம், எண் திசை, எட்டு வகை மெய்ப்பாடு, எண்வகைச் சித்தி, எண்வகைச் செல்வம், என்று வருவன எட்டின் சிறப்புணர்த்தும். இறைவனின் உறைவிடங்களாக அரட்ட வீரட்டம் என்பதனைக் குறிப்பர். அத்தகைய ஊர்கள் திருக்கண்டியூர், திருக் கடவூர், திருவதிகை, திருவழுவூர், திருப்பறியலூர், திருக்கோவலூர், திருக்குறுக்கையூர், திருவிற்குடி ஆகிய எட்டுத் தலங்கள் ஆகும்.

தமிழில் எட்டு எண்ணைக் குறிக்க 'அ' என்ற தமிழ் எண் எழுதப்பெறும். எழுத்தின் தலைச் சொல்; உயிரெழுத்து முதல்; எனவே அஃது ஆதி முதல்வனைக் குறிப்பதாகக் கொள்ளலாம். இறைச் சிந்தனையும் முயற்சியும் ஊக்கமும் ஒருமைப்பட்டு நிற்பின் அவனை எட்டிப் பிடித்து இன்புறலாம். ஒரு குறிக்கோளை எட்டுவது அல்லது மனத்தின்கண் உள்ள அறியாமையை யும் மும்மல இருளையும் அகழ்ந்து எடு என்பதன் பொருளாக, எடு, எட்டு என்பதனைக் கொள்ள இடமுண்டு.

'எண் குணத்தான்' என்பதற்குத் தன் வயத்தனாதல் தொடங்கி இறைவனின் குணங்களாக எட்டுக் குணங் களை அடுக்கியுரைப்பர் பரிமேலழகர்.

எண்ணப்படும் குணங்கள் எனக் கொண்டு எண்ணு கின்ற வண்ணம் எனவும் பொருளுரைப்பர்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த நிலையில் இறைவனைக் கூடி நின்றால் வானும் வசப்படும்; நெருங்கி வருவான் நிமலன்; காட்சி அளவையான் கண்டு கொள்ளலாம்; அவன் அருள் மழையில் நனையலாம் என்றெல்லாம் நமக்குச் சுட்டவே, எட்டு வெண்பாக்களால் பாடியுள்ளார் நக்கீர தேவ நாயனார்.

இயற்கையில் இறைவன்

கார் கால மின்னற் கற்றையும் இருட்காட்சியும் நக்கீர தேவ நாயனாரை இறைவனோடு தொடர்புபடுத்திக் காணச் செய்கின்றன. அக்காலத் தெழும் முழக்கம் கைச்சங்கம் போல் ஒலி எழுப்புகிறது. வானம் கறுக்கிறது. ஈசனின் கண்டம் போல் கறுத்து உள்ளது.

அரவம் அரைக்கசைத்த அண்ணல் சடைபோல்
விரவி எழுந்தெங்கும் மின்னி–அரவினங்கள்
அச்சங்கொண் டோடி யணைய அடைவுற்றே
கைச்சங்கம் போல்முழங்குங் கார்.

எனப்பாடுவர்.

திருமாலையும் மேகத்தையும் ஒப்பிட்டுக் கூறும் மரபைச் சங்க நூலுள் கண்டோம். கார்காலத்தை இவ் வாறு இறைமையோடு தொடர்புபடுத்தும் சிந்தனை தொடருகிறது; அதுவே மரபுமாகிறது. இதற்கு இயற் கையும் இறைமையும் வேறு வேறு அல்ல என்ற எண்ணமே அடிப்படை. கம்பரும் இதற்கு விதிவிலக்கல்லர். திருமாலின் நிறங் கறுத்திருப்பதனைக் 'கண்ணன் மெய்வடிவெனக் கருதிக் கார் விசும்பு' என்று சுட்டுகிறார். கார்கால மின்னலை, சிவனெறிந்த நெருப்புச் சரத்திற்கு ஒப்பிட்டும் மகிழ்வர் கம்பர்.

கார் எட்டில் ஒவ்வொரு பாடலுமே மின்னல், இருள் ஆகிய இரு காட்சிகளையும் ஒளியாக, இருளாகக் காணாது, இறைவனாகவே காணுவது, அநுபூதிநிலை. அந்நிலையில் ஆட்படுத்த வல்லது சிவானுபவம். இந்தச் சிந்தனையின் வார்ப்பில்தான் கார் எட்டில் அமைந்த பாடல்கள் விளங்குகின்றன. பெரும்பான்மையான பாடல் கள் அவ்விருக் காட்சிகளை முறையே சடையாகவும், நீல மணி மிடறாகவும் காண வைக்கின்றன.

காரெட்டில் வரும் கற்பகலம், செலவஞ்சும், அஞ்சொலார், அலர், ஆவிசோர் நெஞ்சு போன்ற தொடர்கள் அகப்பொருளாயும் சிந்தை கவர்வனவாயும் உள்ளன.

டாக்டர் இராம. குருநாதன்.

வைணவத் திருத் தலங்கள் 108

	திருத்தலப் பெயர்கள்	வட்டம்	இறைவன், இறைவி பெயர்கள்	பாடிய ஆழ்வார்கள்
1.	திருவரங்கம்	திருச்சிராப்பள்ளி	பெரியபெருமாள் திருவரங்க நாச்சியார்	ஆழ்வார் பதினொருவர்
2.	திருவேங்கடம்(திருப்பதி)	சித்தூர் (மா.வ)	திருவேங்கடமுடையான் அலர்மேல்மங்கைத் தாயார்	மதுர, தொண்டரடி தவிர ஏனைய பதின்மர்
3.	காஞ்சிபுரம்	செங்கற்பட்டு மாவட்டம்	வரதராசப் பெருமாள் பெருந்தேவித் தாயார்	பூதத்தாழ்வார் திருமங்கையாழ்வார்
4.	திருவல்லிக்கேணி	சென்னை	பார்த்தசாரதி வேதவல்லி	பேயாழ்வார், திருமழிசை ஆழ்வார் திருமங்கையாழ்வார்
5.	அட்டபுயகரம்	காஞ்சி இரயில் நிலையம் அருகில்	ஆதிகேசவர் அலர்மேல்மங்கை	பேயாழ்வார் திருமங்கையாழ்வார்
6.	ஊரகம்	காஞ்சிபுரம்	உலகளந்தபெருமாள் அமுதவல்லி	திருமழிசை ஆழ்வார் திருமங்கை ஆழ்வார்
7.	கள்வனூர்	காஞ்சிப் பகுதி	ஆதிவராகர் அஞ்சிலை நாச்சியார்	திருமங்கை ஆழ்வார்
8.	காரகம்	காஞ்சிப் பகுதி	கருணாகரப் பெருமாள் பத்மாமணித்தாயார்	திருமங்கை ஆழ்வார்.
9.	கார்வானம்	காஞ்சிப் பகுதி	கள்வன் கமலவல்லித்தாயார்	திருமங்கை ஆழ்வார்
10.	கடல்மல்லை	மாமல்லபுரம்	தலசயனப்பெருமாள் நிலமங்கைத் தாயார்	பூதத்தாழ்வார் திருமங்கை ஆழ்வார்
11.	திருத்தண்கா	காஞ்சிநகர்ப் பகுதி	விளக்கொளிப் பெருமாள் மரகதவல்லித் தாயார்	திருமங்கை ஆழ்வார்
12.	திருநின்றவூர் (திண்ணனூர்)	திருவள்ளூர் வட்டம்	பக்தவத்சலப்பெருமாள் எனைப்பெற்றதாயார்	திருமங்கை ஆழ்வார்
13.	திருநீர்மலை	சைதை வட்டம் (சென்னை)	நீர்வண்ணப் பெருமாள் அணிமாமலர் மங்கை	பூதத்தாழ்வார் திருமங்கை ஆழ்வார்
14.	திருப்புட்குழி	காஞ்சி நகர்	விசயராகவன் மரகதவல்லி	திருமங்கை ஆழ்வார்

	திருத்தலப் பெயர்கள்	வட்டம்	இறைவன், இறைவி பெயர்கள்	பாடிய ஆழ்வார்கள்
15.	திருவிடந்தை	செங்கை (மா.வ)	நித்தியகல்யாணப்பெருமாள் கோமளவல்லி	திருமங்கை ஆழ்வார்
16.	திருஎவ்வளூர்	திருவள்ளூர் வட்டம்	வீரராகவப் பெருமாள் கனகவல்லித்தாயார்	திருமழிசை ஆழ்வார் திருமங்கை ஆழ்வார்
17.	நிலாத்திங்கள் துண்டம்	காஞ்சிப்பகுதி	நிலாத்திங்கள்துண்டத்தான் நேரிலாவல்லித் தாயார்	திருமங்கை ஆழ்வார்
18.	நீரகம்	காஞ்சி நகர்	செகதீசன் நிலமங்கைவல்லி	திருமங்கை ஆழ்வார்
19.	பரமேச்சுர விண்ணகரம்	காஞ்சி நகர்	பரமபதநாதர் வைகுந்தவல்லி	திருமங்கை ஆழ்வார்
20.	பவழவண்ணம்	காஞ்சி நகர்	பவழவண்ணர் பவழவல்லித் தாயார்	திருமங்கை ஆழ்வார்
21.	பாடகம்	காஞ்சி நகர்	பாண்டவத்தூதன் உருக்குமணி, சத்தியபாமா	பூதத்தாழ்வார் பேயாழ்வார் திருமழிசை ஆழ்வார் திருமங்கை ஆழ்வார்
22.	வெஃகா	காஞ்சி நகர்	சொன்னவண்ணம்செய்தபெருமாள் கோமளவல்லித்தாயார்	பொய்கை, பேயார், திருமழிசை, திருமங்கை, நம்மாழ்வார்.
23.	வேளுக்கை	காஞ்சி நகர்	அழகிய சிங்கர் வேளுக்கைவல்லி	பேயாழ்வார்
24.	கடிகை	(வாலாசா வட்டம்)	அக்காரக்கனியார்	பேயாழ்வார் திருமங்கையாழ்வார்
25.	சித்திரகூடம் (சிதம்பரம்)	சிதம்பரநகர்	கோவிந்தராசர் புண்டரிகவல்லி	குலசேகர ஆழ்வார் திருமங்கை ஆழ்வார்
26.	திருக்கோவலூர்	திருக்கோவலூர் நகர்	கோவலன் ஆயனார் பூங்கோவல் நாச்சியார்	பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார், திருமங்கை ஆழ்வார்
27.	திருவயிந்திரபுரம்	கடலூர் புதுநகர்	தேவநாதன் வைகுந்தநாயகி	திருமங்கை ஆழ்வார்
28.	அரிமேயவிண்ணகரம்	சீர்காழி	குடமாடுகூத்தன் அமிர்தகடவல்லி	திருமங்கை ஆழ்வார்

	திருத்தலப் பெயர்கள்	வட்டம்	இறைவன், இறைவி பெயர்கள்	பாடிய ஆழ்வார்கள்
29.	ஆதனூர்	குடந்தை வட்டம்	ஆண்டளக்கும் ஐயன் அரங்கநாயகி	திருமங்கை ஆழ்வார்
30.	கண்டியூர்	தஞ்சை	அரன்சாபம் தீர்த்த பெருமாள் கமலவல்லித் தாயார்	திருமங்கை ஆழ்வார்.
31.	கவித்தலம்	பாபநாசவட்டம், தஞ்சை (மா.வ)	கசேந்திரவரதர் இரமாமணிவல்லி	திருமங்கை ஆழ்வார்
32.	காவளம்பாடி	தஞ்சை (மா.வ)	கோபால கிருட்டிணன் மடவரல் மங்கை	திருமங்கை ஆழ்வார்
33.	காழிச்சீராமவிண்ணகரம்	சீர்காழி	தாளளர்திருவிக்கிரமன் மட்டவிழும்குழலி	திருமிழிசை ஆழ்வார்
34.	குடந்தை	கும்பகோணம்	சாரங்கபாணிப்பெருமாள் கோமளவல்லி	பூதத்தாழ்வார், பேயார், மழிசை, நம்மாழ், திருமங்கை, பெரியாழ், ஆண்டாள்.
35.	கூடலூர்	கும்பகோணம்	வையங்காத்தார் பத்பாசனித்தாயார்	திருமங்கை ஆழ்வார்
36.	சிறுபுலியூர்	நன்னிலம் (வட்டம்) தஞ்சை	அருமாக்கடல் பெருமாள் அல்லிமாமலர் நாச்சியார்	திருமங்கை ஆழ்வார்
37.	செம்பொன் செய்கோவில்	சீர்காழி (வட்டம்)	பேரருளாளப் பெருமாள் அல்லிமாமலர் நாச்சியார்	திருமங்கை ஆழ்வார்
38.	தஞ்சைமாமணிக் கோவில்	தஞ்சாவூர்	நீலமேகப் பெருமாள் செங்கமலவல்லி	பூதத்தாழ்வார் திருமங்கை ஆழ்வார்
39.	தலைச்செங்கநாண் மதியம்	சீர்காழி (வட்டம்)	நாண் மதியப் பெருமாள் தலைச்செங்க நாச்சியார்	திருமங்கை ஆழ்வார்
40.	திருக்கண்ணங்குடி	நன்னிலம் (வட்டம்)	சியாமளமேனியார் கண்ணபுர நாயகி	திருமங்கை ஆழ்வார்
41.	திருக்கண்ணபுரம்	நன்னிலம் (வட்டம்)	சௌரிராசப்பெருமாள் கண்ணபுர நாயகி	நம்மாழ், குலசேகரர், பெரியாழ், ஆண்டாள், திருமங்கை ஆழ்வார்.
42.	திருக்கண்ணமங்கை	நன்னிலம் (வட்டம்)	பக்தவத்சலன் அபிடேகவல்லித்தாயார்	திருமங்கை ஆழ்வார்
43.	திருச்சேறை	கும்பகோணம்	சாரநாதன் சாரநாயகி	திருமங்கை ஆழ்வார்

	திருத்தலப் பெயர்கள்	வட்டம்	இறைவன், இறைவி பெயர்கள்	பாடிய ஆழ்வார்கள்
44.	திருத்தெற்றி அம்பலம்	சீர்காழி (வட்டம்)	செங்கண்மால் செங்கமலவல்லி	திருமங்கை ஆழ்வார்
45.	திருத்தேவனார் தொகை	சீர்காழி (வட்டம்)	மாதவப் பெருமாள் கடல்மகள் நாச்சி	திருமங்கை ஆழ்வார்
46.	திருநறையூர்	கும்பகோணம்	நம்பி நம்பிக்கை நாச்சியார்	திருமங்கை ஆழ்வார்
47.	திருமணிக்கூடம்	சீர்காழி	மணிக்கூட நாயகன் திருமாமகள்	திருமங்கை ஆழ்வார்.
48.	திருவழுந்தூர்	மாயவரம்	ஆமருவியப்பன் செங்கமலவல்லி	திருமங்கை ஆழ்வார்.
49.	திருவாலி	சீர்காழி	நரசிம்மப் பெருமாள் அமிர்தகடவல்லி	குலசேகர ஆழ்வார் திருமங்கை ஆழ்வார்
50.	திருவிந்தளூர்	மாயவரம்	பரமநரங்கநாதன் இமோசனவல்லித் தாயார்	திருமங்கை ஆழ்வார்.
51.	திருவிண்ணகர்	கும்பகோணம்	உப்பிலியப்பன் பூமிதேவி நாச்சியார்	பேயாழ்வார் நம்மாழ்வார் திருமங்கை ஆழ்வார்
52.	திருவெள்ளக்குளம்	சீர்காழி	கண்ணன் பூவார் திருமகள்	திருமங்கை ஆழ்வார்.
53.	திருவெள்ளியங்குடி	கும்பகோணம்	கோலவல்லி ராமன் மரகதவல்லித் தாயார்	திருமங்கை ஆழ்வார்.
54.	நந்திபுர விண்ணகரம்	கும்பகோணம்	விண்ணகரப் பெருமாள் சண்பகவல்லித் தாயார்	திருமங்கை ஆழ்வார்
55.	நாகை. (நாகப்பட்டினம்)	நாகப்பட்டினம்	சௌந்தரிய ராசன் சௌந்தரியவல்லி	திருமங்கை ஆழ்வார்
56.	பார்த்தன்பள்ளி	சீர்காழி	தாமரையாள் கேள்வன் தாமரை நாயகி	திருமங்கை ஆழ்வார்
57.	புள்ளம்பூதங்குடி	கும்பகோணம்	வள்ளி ராமன் பொற்றாமரையாள்	திருமங்கை ஆழ்வார்
58.	மணிமாடக் கோயில்	சீர்காழி	நந்தா விளக்குப் பெருமாள் புண்டரீகவல்லி	திருமங்கை ஆழ்வார்

	திருத்தலப் பெயர்கள்	வட்டம்	இறைவன், இறைவி பெயர்கள்	பாடிய ஆழ்வார்கள்
59.	வண்புருடோத்தமம்.	சீர்காழி	புருடோத்தமன் புருடோத்தம நாயகி	திருமங்கை ஆழ்வார்.
60.	வைகுந்த விண்ணகரம்.	சீர்காழி	வைகுந்த நாதன் வைகுந்த வல்லி	திருமங்கை ஆழ்வார்
61.	அன்பில்.	இலால்குடி	வடிவழகிய நம்பி அழகிய வல்லித் தாயார்.	திருமங்கை ஆழ்வார்
62.	உறையூர்	திருச்சி	அழகிய மணவாளன் உறையூர்வல்லி.	திருமங்கை ஆழ்வார்
63.	கரம்பனூர்	இலால்குடி	புருடோத்தமப் பெருமாள் பூர்வாதேவித் தாயார்.	திருமங்கை ஆழ்வார்
64.	திருப்பேர் நகர்	இலால்குடி	அப்பக் குளத்தான் கமலவல்லி	திருமழிசை ஆழாவார் நம்மாழ்வார், பெரியாழ்வார், திருமங்கை ஆழ்வார்
65.	திருமய்யம்	புதுக்கோட்டை	சத்தியகிரிநாதன் உய்யவந்தாள் நாச்சியார்.	திருமங்கை ஆழ்வார்.
66.	திருவெள்ளறை	திருச்சி	புண்டரீகாட்சன் பங்கயச் செல்வி	பெரியாழ்வார்
67.	கூடல்	மதுரை	கூடலழகர் வகுளவல்லி.	பெரியாழ்வார் திருமங்கை ஆழ்வார்.
68.	திருமாலிருஞ் சோலை மலை.	மேலூர்.	அழகர் சுந்தரவல்லித் தாயார்	பூதத்தாழ்வார், நம்மாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கை ஆழ்வார்.
69.	திருமோகூர்	மேலூர்	காளமேகப் பெருமாள் மேகவல்லி	நம்மாழ்வார் திருமங்கை ஆழ்வார்.
70.	திருக்கோட்டியூர்	சிவகங்கை	சௌமிய நாராயணன் திருமாமகள்	பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசை ஆழ்வார், பெரியாழ்வார், திருமங்கையாழ்வார்.
71.	திருத்தங்கால்.	சிவகாசி	தண்காளப்பன் அண்ண நாயகி	பூதத்தாழ்வார் திருமங்கை ஆழ்வார்.
72.	திருப்புல்லாணி	இராமநாதபுரம்.	தெய்வச்சிலையான் தெய்வச்சிலை நாச்சியார்	திருமங்கை ஆழ்வார்

	திருத்தலப் பெயர்கள்	வட்டம்	இறைவன், இறைவி பெயர்கள்	பாடிய ஆழ்வார்கள்
73.	திருவில்லிப்புத்தூர்	திருவில்லிப்புத்தூர்	வடபத்திரசாயீ ஆண்டாள்	பெரியாழ்வார் ஆண்டாள்
74.	குருகூர்	திருச்செந்தூர்	ஆதிப்பிரான் குருகைவல்லித் தாயார்	நம்மாழ்வார் மதுரகவி ஆழ்வார்
75.	குளந்தை	ஸ்ரீ வைகுண்டம்.	மாயக்கூத்தன் குழந்தைவல்லித் தாயார்	நம்மாழ்வார்.
76.	ஸ்ரீவரமங்கை	நாங்குனேரி	வானமாமலைப் பெருமாள் ஸ்ரீவரமங்கைத் தாயார்	நம்மாழ்வார்.
77.	திருக்குறுங்குடி	நாங்குனேரி	வைணவ நம்பி. குறுங்குடிவல்லித் தாயார்.	திருமழிசை ஆழ்வார், நம்மாழ்வார், பெரியாழ்வார், திருமங்கை ஆழ்வார்.
78.	திருக்கோளூர்	திருச்செந்தூர்	வைத்தமாநிதிப் பெருமாள் கோளூர்வல்லித் தாயார்.	நம்மாழ்வார்.
79.	திருப்புளிங்குடி	திருவைகுண்டம்	காய்சின வேந்தன் மலர்மகள்	நம்மாழ்வார்
80.	திருப்பேரை.	திருச்செந்தூர்	மகரநெடுங்குழைக் காதர் குழைக்காது நாச்சியார்.	நம்மாழ்வார்.
81.	தொலைவில்லி மங்கலம்	திருச்செந்தூர்	தேவபிரான் கருந்தடங்கண்ணித் தாயார்	நம்மாழ்வார்.
82.	வரகுண மங்கை	திருவைகுண்டம்	விசையாசனன் வரகுணவல்லித் தாயார்	நம்மாழ்வார்
83.	வைகுண்டம	திருவைகுண்டம	கள்ளப்பிரான் வைகுந்தவல்லி	நம்மாழ்வார்
84.	செங்குன்றூர்	- - - -	இமயவரப்பன் செங்கமலவல்லி	நம்மாழ்வார்
85.	திருக்கடித்தானம்	- - - -	அற்புத நாராயணன் கற்பக வல்லி	நம்மாழ்வார்.
86.	திருப்புலியூர்	- - - -	மாயப்பிரான் பொற்கொடி நாச்சியார்	நம்மாழ்வார் திருமங்கை ஆழ்வார்
87.	திருவண்டூர்	- - - -	பாம்பணையப்பன் கமலவல்லித் தாயார்	நம்மாழ்வார்

	திருத்தலப் பெயர்கள்	வட்டம்	இறைவன், இறைவி பெயர்கள்	பாடிய ஆழ்வார்கள்
88.	திருவல்லவாழ்	- - - -	கோலப்பிரான் செல்வத் திருக்கொழுந்து நாச்சியார்	நம்மாழ்வார் திருமங்கை ஆழ்வார்
89.	திருவண்பரிசாரம்	நாகர்கோயில்	திருவாழ் மார்பன் அமலவல்லித் தாயார்.	நம்மாழ்வார்
90.	திருவனந்தபுரம்	திருவனந்தபுரம்	அனந்தபத்மநாபன் திருஅரிலட்சுமி	நம்மாழ்வார்.
91.	திருவட்டாறு	தக்கலை	ஆதிகேசவப் பெருமாள் மரகதவல்லி.	நம்மாழ்வார்
92.	திருவாறன்விளை	- - - -	திருக்குறளப்பன் பத்மாசன நாச்சியார்	நம்மாழ்வார்
93.	திருகாட்கரை	- - - -	காட்கரையப்பன் பெருஞ்செல்வ நாயகி	நம்மாழ்வார்
94.	திருமூழிக்களம்	- - - -	அப்பன் மதுரவேணி	நம்மாழ்வார் திருமங்கை ஆழ்வார்.
95.	திருநாவாய்	- - - -	நாராயணன் மலர் மங்கைத்தாயார்	நம்மாழ்வார் திருமங்கை ஆழ்வார்.
96.	வித்துவக் கோடு	- - - -	உய்யவந்தப் பெருமாள் வித்துவக்கோட்டுவல்லி	குலசேகர ஆழ்வார்
97.	சிங்கவேள் குன்றம்	- - - -	நரசிம்மன் இலட்சுமி	திருமங்கை ஆழ்வார்
98.	துவாரபதி	- - - -	கலியாண நாராயணன் கலியாண நாச்சியார்	திருமழிசை ஆழ்வார், நம்மாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கை ஆழ்வார்.
99.	திருவாய்ப்பாடி	- - - -	நவமோகன் கிருஷ்ணன் உருக்குமணி பிராட்டி	பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கை ஆழ்வார்
100.	வட மதுரை	- - - -	கோவர்த்தநேசன், சத்தியபாமை	நம்மாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கை ஆழ்வார்

	திருத்தலப் பெயர்கள்	வட்டம்	இறைவன், இறைவி பெயர்கள்	பாடிய ஆழ்வார்கள்
101.	அயோத்தி	- - - -	சக்ரவர்த்தித் திருமகன் சீதாப் பிராட்டி	நம்மாழ்வார், குலசேகர ஆழ்வார், பெரியாழ்வார், திருமங்கை ஆழ்வார், தொண்டரடிப் பொடி ஆழ்வார்
102.	நைமிசாரண்யம்	- - - -	தேவராசன் திருஅரிலட்சுமி	திருமங்கை ஆழ்வார்.
103.	கண்டங்கடி நகர் (தேவப் பிரயாகை)	- - - -	நீலமேகப் பெருமாள் புண்டரீகவல்லித் தாயார்.	பெரியாழ்வார்
104.	பிரிதி.	- - - -	பரம புருஷன் பரிமளவல்லி	திருமங்கை ஆழ்வார்
105.	வதரியாச்சிரமம்.	- - - -	பத்ரி நாராயணன். அரவிந்தவல்லி	பெரியாழ்வார் திருமங்கை ஆழ்வார்.
106.	சாளக்கிராமம்	- - - -	திருமூர்த்தி ஸ்ரீதேவி.	பெரியாழ்வார் திருமங்கை ஆழ்வார்.
107.	திருப்பாற்கடல்	- - - -	க்ஷிராப்தி நாதன் கடல்மகள் நாச்சியார்	திருப்பாணாழ்வார், மதுரகவி ஆழ்வார் இவர்களைத் தவிர ஏனைய பதின்மர் பாடியுள்ளனர்.
108.	பரமபதம் (திருநாடு)	- - - -	பரமபதநாதன் பெரியபிராட்டியார்	ஆழ்வார்கள் பன்னிருவரும் பாடியுள்ளனர்.

தேவாரப் பாடல் பெற்ற
சிவத்தலங்கள் - 275

வித்துவான் திருமதி. சுலோசனா வெங்கடேசன் M.A

1. தில்லை (சிதம்பரம்)
பாடியவர்கள்:
திருஞானசம்பந்தர்,
திருநாவுக்கரசர்,
சுந்தரர்.

2. திருவேட்களம்:
சம்பந்தர்,
அப்பர்.

3. திருநெல்வாயில் (சிவபுரி):
சம்பந்தர்.

4. திருக்கழிப்பாலை,
அப்பர்,
சம்பந்தர்,
சுந்தரர்.

5. திருநல்லூர்ப் பெருமணம்
(ஆச்சாள்புரம்)
சம்பந்தர் (திருமணம் நடந்த ஊர்)

6. திருமயேந்திரப் பள்ளி
(கோயிலடிப் பாளையம்)
சம்பந்தர்.

7. தென்திருமுல்லைவாயில்:
சம்பந்தர்.

8. திருக்கலிக்காமூர்:
(அன்னப்பன்பேட்டை)
சம்பந்தர்.

9. திருச்சாய்க்காடு
(சாயாவனம்)
சம்பந்தர்,
அப்பர்.

10. திருப்பல்லவனீச்சுரம்:
(காவிரிப்பூம்பட்டினம்)
சம்பந்தர்.

11. திருவெண்காடு:
சம்பந்தர்
அப்பர்,
சுந்தரர்.

12. கீழைத் திருக்காட்டுப்பள்ளி
சம்பந்தர்.

13. திருக்குருகாவூர்:
(திருக்கடாவூர்)
சம்பந்தர்,
சுந்தரர்.

14. சீர்காழி:
சம்பந்தர்,
அப்பர்,
சுந்தரர்.

15. திருக்கோலக்கா:
சம்பந்தர் - தாளம் கொடுத்த ஊர்.

16. புள்ளிருக்கு வேளூர்:
(வைத்தீசுவரன் கோயில்)
சம்பந்தர்,
அப்பர்.

17. திருக்கண்ணார் கோயில்:
(குறுமாணக்குடி)
சம்பந்தர்.

18. திருக்கடை முடி:
(கீழையூர்)
சம்பந்தர்.

19. திருநின்றியூர்:
சம்பந்தர்,
அப்பர்,
சுந்தரர்.

20. திருப்புன்கூர்:
சம்பந்தர்,
அப்பர்,
சுந்தரர்.

21. நீடூர்:
அப்பர்,
சுந்தரர்.

22. திரு அன்னியூர்:
(பொன்னூர்)
சம்பந்தர்,
அப்பர்.

23. வேள்விக்குடி:
சம்பந்தர்,
சுந்தரர்.

24. எதிர்கொள்பாடி:
(மேலைத் திருமணஞ்சேரி)
சம்பந்தர்.

25. திருமணஞ்சேரி:
(கீழைத் திருமணஞ்சேரி)
சம்பந்தர்,
அப்பர்.

26. திருக்குறுக்கை:
அப்பர்.

27. கருப்பறியலூர்:
(மேலைக்காழி தலைஞாயிறு)
சம்பந்தர்,
சுந்தரர்.

28. குரக்குக்கா,
அப்பர்.

29. திருவாளொளிப்புத்தூர்:
சம்பந்தர்,
சுந்தரர்.

30. மண்ணிப்படிக்கரை:
(இலுப்பைப்பட்டு)
சுந்தரர்.

31. ஓமாம்புலியூர்:
சம்பந்தர்,
அப்பர்.

32. கானாட்டு முள்ளூர்:
(கானாட்டாம் புலியூர்)
சுந்தரர்.

33. திருநாரையூர்:
சம்பந்தர்,
அப்பர்.

34. கடம்பூர்:
(மேலைக்கடம்பூர்)
சம்பந்தர்,
அப்பர்.

35. பந்தணைநல்லூர்:
சம்பந்தர்,
அப்பர்.

36. திருக்கஞ்சனூர்:
அப்பர்.

37. திருக்கோடிக்கா:
சம்பந்தர்,
அப்பர்.

38. திருமங்கலக் குடி:
சம்பந்தர்,
அப்பர்.

39. திருப்பனந்தாள்:
சம்பந்தர்.

40. திருஆப்பாடி:
அப்பர்.

41. திருச்சேய்ஞ்ஞலூர்
(சேங்கனூர்)
சம்பந்தர்.

42. திருந்து தேவன்குடி:
சம்பந்தர்.

43. திருவியலூர்:
சம்பந்தர்.

44. கொட்டையூர்:
அப்பர்.

45. இன்னம்பர்:
சம்பந்தர்,
அப்பர்.

46. திருப்புறம்பயம்:
சம்பந்தர்,
அப்பர்,
சுந்தரர்.

47. திருவிசையமங்கை
சம்பந்தர்,
அப்பர்.

48. திருவைகாவூர்:
சம்பந்தர்.

49. வடகுரங்காடுதுறை
சம்பந்தர்.

50. திருப்பழனம்:
சம்பந்தர்,
அப்பர்.

51. திருவையாறு:
சம்பந்தர்,
அப்பர்,
சுந்தரர்.

52. திருநெய்த்தானம்:
சம்பந்தர்,
அப்பர்.

53. பெரும்புலியூர்:
சம்பந்தர்.

54. திருமழபாடி:
சம்பந்தர்,
அப்பர்,
சுந்தரர்.

55. திருப்பழுவூர்:
(கீழைப்பழுவூர்)
சம்பந்தர்.

56. திருக்கானூர்:
சம்பந்தர்,
அப்பர்.

57. அன்பில் ஆலந்துறை:
(அன்பில்)
சம்பந்தர்,
அப்பர்.

58. திருமாந்துறை
சம்பந்தர்.

59. திருப்பாற்றுறை
சம்பந்தர்.

60. திருவானைக்கா:
(சம்புகேசுவரம்)
சம்பந்தர்,
அப்பர்,
சுந்தரர்.

61. **திருப்பைஞ்ஞீலி:**
அப்பர் (அப்பருக்கு இறைவன் கட்டமுது கொடுத்த ஊர்)
சம்பந்தர்,
சுந்தரர்.

62. **திருப்பாச்சிலாச்சிரமம்:**
(திருவாசி)
சம்பந்தர்,
சுந்தரர்.

63. **திரு ஈங்கோய் மலை:**
சம்பந்தர்.

64. **திருவாட்போக்கி:**
(இரத்தினகிரி, மாணிக்க மலை, சிவாயமலை)
அப்பர்.

65. **கடம்பந்துறை:**
(குழித்தலை)
அப்பர்.

66. **திருப்பராய்த்துறை**
சம்பந்தர்,
அப்பர்.

67. **கற்குடி:**
(உய்யக் கொண்டான்)
சம்பந்தர்,
அப்பர்,
சுந்தரர்.

68. **முக்கீச்சுரம்:**
(உறையூர்)
சம்பந்தர்.

69. **திருச்சிராப்பள்ளி:**
சம்பந்தர்,
அப்பர்.

70. **எறும்பியூர்:**
அப்பர்.

71. **நெடுங்களம்:**
(திருநட்டாங்குளம்)
சம்பந்தர்.

72. **மேலைத் திருக்காட்டுப்பள்ளி:**
சம்பந்தர்,
அப்பர்.

73. **திருவாலம்பொழில்:**
அப்பர்.

74. **திருப்பூந்துருத்தி:**
அப்பர்.

75. **கண்டியூர்:**
சம்பந்தர்,
அப்பர்.

76. **திருச்சோற்றுத்துறை:**
சம்பந்தர்,
அப்பர்,
சுந்தரர்.

77. **திருவேதிக்குடி:**
சம்பந்தர்,
அப்பர்.

78. **தென்குடித்திட்டை:**
(திட்டை)
சம்பந்தர்.

79. **திருப்புள்ளமங்கை:**
(பசுபதி கோயில்)
சம்பந்தர்.

80. **சக்கரப்பள்ளி:**
(ஐயம்பேட்டை)
சம்பந்தர்.

81. **திருக்கருகாவூர்:**
(திருக்களாவூர்)
சம்பந்தர்,
அப்பர்.

82. **திருப்பாலைத்துறை:**
அப்பர்.

83. **திருநல்லூர்:**
சம்பந்தர்,
அப்பர்.

84. **ஆவூர் பசுபதீச்சுரம்:**
(ஊர்ப்பெயர் ஆவூர்
கோயில் பெயர் பசுபதீச்சுரம்)
சம்பந்தர்.

85. **திருச்சத்தி முற்றம்:**
அப்பர்.

86. **பட்டீச்சுரம்:**
(சம்பந்தருக்கு முத்துப்பந்தர் அளித்த ஊர்)
சம்பந்தர்.

87. **பழையாறை வடதளி:**
(சமணரால் மூடப்பட்ட சிவலிங்கப் பெருமான் அப்பருக்குக் காட்சி கொடுத்த ஊர்)
அப்பர்.

88. **திருவலஞ்சுழி:**
(வெள்ளைநிற விநாயகர் உள்ள ஊர்)
சம்பந்தர்,
அப்பர்.

89. **குடமூக்கு: (கும்பகோணம்)**
சம்பந்தர்,
அப்பர்.

90. **குடந்தைக் கீழ்க்கோட்டம்:**
சம்பந்தர்,
அப்பர்.

91. **குடந்தைக் காரோணம்:**
(மகாமகம் நடைபெறும் குளத்தின் வடகரையில் உள்ள கோயில்)
அப்பர்.

92. **திருநாகேச்சுரம்:**
சம்பந்தர்,
அப்பர்,
சுந்தரர்.

93. திருவிடை மருதூர்:
சம்பந்தர்
அப்பர்,
சுந்தரர்.

94. தென்குரங்காடுதுறை:
(ஆடுதுறை)
சம்பந்தர்,
அப்பர்.

95. திருநீலக்குடி:
(தென்னல்குடி)
அப்பர்.

96. வைகன்மாடக் கோயில்:
சம்பந்தர்.

97. திருநல்லம்:
(கோனேரிராசபுரம்)
சம்பந்தர்,
அப்பர்.

98. கோழம்பம்:
சம்பந்தர்,
அப்பர்.

99. திருவாவடுதுறை:
(திருமூலர் ஆண்டுக்கொரு பாடலாக மூவாயிரம் திருமந்திரம் பாடிய ஊர்)
சம்பந்தர்,
அப்பர்,
சுந்தரர்.

100. திருத்துருத்தி:
(குத்தாலம்)
சம்பந்தர்,
அப்பர்,
சுந்தரர்.

101. திருவழுந்தூர்:
(தேரெழுந்தூர்)
சம்பந்தர்.

102. மயிலாடுதுறை:
(மாயூரம்)
சம்பந்தர்,
அப்பர்.

103. திருவிளநகர்:
சம்பந்தர்.

104. திருப்பறியலூர்:
(பரசலூர்)
சம்பந்தர்.

105. திருச்செம்பொன்பள்ளி:
சம்பந்தர்,
அப்பர்.

106. திருநனிபள்ளி:
(புஞ்சை)
சம்பந்தர்
அப்பர்,
சுந்தரர்.

107. திருவலம்புறம்:
(பெரும்பள்ளம்)
சம்பந்தர்,
அப்பர்,
சுந்தரர்.

108. தலைச் செங்காடு:
சம்பந்தர்.

109. ஆக்கூர்:
சம்பந்தர்,
அப்பர்.

110. திருக்கடவூர்:
(மார்க்கண்டேயருக்காக எமனைக் உதைத்து ஊர்)
சம்பந்தர்,
அப்பர்,
சுந்தரர்.

111. திருக்கடவூர் மயானம்:
(திருமெய்ஞ்ஞானம்)
சம்பந்தர்,
அப்பர்,
சுந்தரர்.

112. திருவேட்டக்குடி:
சம்பந்தர்.

113. திருத்தெளிச்சேரி,
(கோவில்பத்து)
சம்பந்தர்.

114. தருமபுரம்
சம்பந்தர்.

115. திருநள்ளாறு
சம்பந்தர்,
அப்பர்,
சுந்தரர்.

116. கோட்டாறு:
(திருக்கொட்டாரம்)
சம்பந்தர்.

117. அம்பர்:
சம்பந்தர்.

118. அம்பர் மாகாளம்:
சம்பந்தர்.

119. திருமீயச்சூர்:
சம்பந்தர்.

120. திருமீயச்சூர் இளங்கோயில்:
அப்பர்.

121. திலதைப்பதி:
(மதிமுத்தம்)
சம்பந்தர்.

122. திருப்பாம்புரம்:
சம்பந்தர்.

123. சிறுகுடி:
சம்பந்தர்.

*124. திருவீழிமிழலை:
(பஞ்சக் காலத்தில் அடியார் பொருட்டு சம்பந்தருக்கும் அப்பருக்கும் படிக்காசு வழங்கிய ஊர்)
சம்பந்தர்,
அப்பர்,
சுந்தரர்.

125. திருவன்னியூர்,
(அன்னூர்)
அப்பர்.

126. கருவிலி:
அப்பர்.

127. பேணுபெருந்துறை:
(திருப்பந்துறை)
சம்பந்தர்.

128. திருநறையூர்:
சம்பந்தர்,
சுந்தரர்.

129. அரிசிற்கரைபுத்தூர்:
சம்பந்தர்,
அப்பர்,
சுந்தரர்.

130. சிவபுரம்:
சம்பந்தர்,
அப்பர்.

131. கலையநல்லூர்:
சுந்தரர்.

132. கருக்குடி:
சம்பந்தர்.

133. திருவாஞ்சியம்:
சம்பந்தர்,
அப்பர்,
சுந்தரர்.

134. நன்னிலம்:
சுந்தரர்.

135. திருக்கொண்டீச்சுரம்:
அப்பர்.

136. திருப்பனையூர்:
சம்பந்தர்,
சுந்தரர்.

137. திருவிற்குடி:
சம்பந்தர்.

138. திருப்புகலூர்:
சம்பந்தர்,
அப்பர்,
சுந்தரர்.

139. திருப்புகலூர், வர்த்தமானிச்சுரம்:
சம்பந்தர்.

140. இராமனதீச்சுரம்:
சம்பந்தர்.

141. திருப்பயற்றூர்:
அப்பர்.

142. திருசெங்காட்டங்குடி:
சம்பந்தர்,
அப்பர்.

143. திருமருகல்
சம்பந்தர்,
அப்பர்.

144. திருச்சாத்தமங்கை
சம்பந்தர்.

145. திருநாகைக்காரோணம்
சம்பந்தர்,
அப்பர்,
சுந்தரர்.

146. சிக்கல்
சம்பந்தர்.

147. கீழ்வேளூர்,
சம்பந்தர்,
அப்பர்.

148. தேவூர்
சம்பந்தர்.

149. பள்ளியின்முக்கூடல்
அப்பர்.

150. திருவாரூர்
சம்பந்தர்,
அப்பர்,
சுந்தரர்.

151. திருவாரூர் அரநெறி
அப்பர்.

152. திருவாரூர்ப் பரவையுண்மண்டலி
சுந்தரர்.

153. திருவிளமர்
சம்பந்தர்.

154. கரவீரம் (கரையபுரம்)
சம்பந்தர்.

155. பெருவேளூர்
(காட்டூர் ஐயன்பேட்டை)
சம்பந்தர்,
அப்பர்.

156. தலையாலங்காடு
அப்பர்.

157. குடவாயில்
சம்பந்தர்.

158. திருச்சேறை
(உடையார்கோவில்)
சம்பந்தர்,
அப்பர்.

159. நாலூர் மயானம்
சம்பந்தர்.

160. கடுவாய்க்கரைப்புத்தூர்
(ஆண்டான்கோவில்)
அப்பர்.

161. இரும்பூளை
(ஆலங்குடி)
சம்பந்தர்.

162. அரதைப்பெரும்பாழி
(அரித்துவார மங்கலம்)
சம்பந்தர்.

163. அவள் இவள் நல்லூர்
சம்பந்தர்,
அப்பர்.

164. பரிததி நியமம்
(பருத்தியப்பர் கோவில்)
சம்பந்தர்.

165. வெண்ணி
சம்பந்தர்,
அப்பர்.

166. பூவனூர்
அப்பர்.

167. பாதாளீச்சுரம்
(பாமணி)
சம்பந்தர்.

168. திருக்களர்
சம்பந்தர்.

169. சிற்றேமம்
(சிற்றாம்பூர் - சிற்றாய்மூர்)
சம்பந்தர்.

170. திருஉசாத்தானம்
(கோவிலூர்)
சம்பந்தர்.

171. இடும்பாவனம்
சம்பந்தர்.

172. கடிக்குளம்
(கற்பகனார் கோவில்)
சம்பந்தர்.

173. தண்டலைநீள்நெறி
(தண்டலைச்சேரி)
சம்பந்தர்.

174. கோட்டூர்
சம்பந்தர்.

175. திருவெண்துறை
(திருவண்டுறை)
சம்பந்தர்.

176. கொள்ளம்பூதூர்
சம்பந்தர்.

177. திருவிடைவாய்
சம்பந்தர்.

178. பேரெயில்
ஓகைப்பேரையூர்
அப்பர்.

179. திருக்கொள்ளிக்காடு
சம்பந்தர்.

180. திருத்தெங்கூர்
சம்பந்தர்.

181. திருநெல்லிக்கா
சம்பந்தர்.

182. திருநாட்டியத்தான் குடி
சுந்தரர்.

183. திருக்காறாயில்
சம்பந்தர்.

184. கன்றாப்பூர்
அப்பர்.

185. வலிவலம்
சம்பந்தர்
அப்பர்,
சுந்தரர்.

186. கைச்சினம்
சம்பந்தர்.

187. திருக்கோளிலி
(திருக்குவளை)
சம்பந்தர்,
அப்பர்,
சுந்தரர்.

188. திருவாய்மூர்
சம்பந்தர்,
அப்பர்.

189. திருமறைக்காடு
(வேதாரணியம்)
சம்பந்தர்,
அப்பர்,
சுந்தரர்.

190. அகத்தியான் பள்ளி
சம்பந்தர்.

191. திருக்கோடி
(குழகர்கோவில்)
சுந்தரர்.

ஈழநாடு
(2 - தலங்கள்)

192. திருக்கோணமலை
சம்பந்தர்.

193. திருக்கேதிச்சுரம்
சம்பந்தர்
சுந்தரர்.

பாண்டி நாடு
(15 தலங்கள்)

194. திருஆலவாய்
(மதுரை)
சம்பந்தர்.

195. திருஆப்பனூர்
(ஆப்புடையார்கோவில்)
சம்பந்தர்.

196. திருப்பரங்குன்றம்
சம்பந்தர்,
சுந்தரர்.

197. திருஏடகம்
சம்பந்தர்.

198. கொடுங்குன்றம்
சம்பந்தர்.

199. திருப்புத்தூர்
சம்பந்தர்
அப்பர்.

200. திருப்புனவாயில்
சம்பந்தர்,
சுந்தரர்.

201. காமேச்சுரமி
சம்பந்தர்,
அப்பர்.

202. திருஆடானை
சம்பந்தர்.

203. திருக்கானப்பேர்
(காளையார்கோவில்)
சம்பந்தர்
சுந்தரர்.

204. திருப்பூவணம்
சம்பந்தர்
அப்பர்
சுந்தரர்.

205. திருச்சுழியல்
சுந்தரர்.

206. திருக்குற்றாலம்
சம்பந்தர்.

207. திருநெல்வேலி
சம்பந்தர்.

மலைநாடு
(1. தலம்)

208. திருவஞ்சைக்களம்
சுந்தரர்.

கொங்குநாடு
(7 தலங்கள்)

209. அவிநாசி
சுந்தரர்.

210. திருமுருகன் பூண்டி
சுந்தரர்.

211. திருநணா
(பவானி)
சம்பந்தர்.

212. கொடிமாடச் செங்குன்றூர்
(திருச்செங்கோடு)
சம்பந்தர்.

213. வெஞ்சமாக்கூடல்
சுந்தரர்.

214. திருப்பாண்டிக்கொடுமுடி
சம்பந்தர்,
அப்பர்,
சுந்தரர்.

215. கருவூர்
(கரூர்)
சம்பந்தர்.

216. திருநெல்வாயல் அறத்துறை
(திருஅறத்துறை)
சம்பந்தர்,
அப்பர்,
சுந்தரர்.

217. திருத்தூங்கானைமாடம்
(பெண்ணாகடம்)
சம்பந்தர்
அப்பர்.

218. கூடலை ஆற்றூர்
சுந்தரர்.

219. எருக்கத்தம் புலியூர்
(இராசேந்திரப் பட்டணம்)
சம்பந்தர்.

220. திருத்தினை நகர்
(தீர்த்தனகிரி)
சுந்தரர்.

221. திருக்கோபுரம்
(தியாக வல்லி)
சம்பந்தர்.

222. திருவதிகை
சம்பந்தர்,
அப்பர்,
சுந்தரர்.

223. திருநாவலூர்,
(சுந்தரர் பிறந்த ஊர்)
சுந்தரர்.

224. திருமுதுகுன்றம்
(விருத்தாசலம்)
சம்பந்தர்,
அப்பர்,
சுந்தரர்.

225. திருநெல்வெண்ணெய்
சம்பந்தர்.

226. திருக்கோவலூர்,
சம்பந்தர்,
அப்பர்.

227. அறையணிநல்லூர்,
சம்பந்தர்.

228. இடையாறு
சுந்தரர்.

229. திருவெண்ணெய்நல்லூர்
சுந்தரர்.

230. துறையூர்
(திருத்தளூர்)
சுந்தரர்.

231. வடுகூர்,
ஆண்டார்கோவில்,
சம்பந்தர்.

232. திருமாணிக் குழி
சம்பந்தர்.

233. திருப்பாதிரிப் புலியூர்
சம்பந்தர்
அப்பர்.

234. திரு முண்டீச்சுரம்
அப்பர்.

235. புறவார் பனங்காட்டூர்
(பனையபுரம்)
சம்பந்தர்.

236. திரு ஆமாத்தூர்
சம்பந்தர்,
அப்பர்,
சுந்தரர்.

237. திரு அண்ணாமலை
சம்பந்தர்,
அப்பர்.

தொண்டை நாடு
(33 தலங்கள்)

238. கச்சிஏகம்பம்
(காஞ்சீபுரம்)
சம்பந்தர்
அப்பர்
சுந்தரர்.

239. கச்சிமேல்தளி
(காஞ்சீபுரம்)
அப்பர்
சுந்தரர்.

240. ஓணகாந்தன்தளி
சுந்தரர்.

241. கச்சிஅநேகதங்காவதம்
(காஞ்சிபுரம்)
சுந்தரர்.

242. கச்சிநெறிக்காரைக்காடு
(காஞ்சிபுரம்)
சம்பந்தர்.

243. குரங்கணில் முட்டம்
சம்பந்தர்.

244. மாகறல்
சம்பந்தர்.

245. திருவோத்தூர்
சம்பந்தர்.

246. திருப்பனங்காட்டூர்
(தருப்பனங்காடு)
சுந்தரர்.

247. திருவல்லம்
சம்பந்தர்.

248. திருமாற்பேறு
சம்பந்தர்
அப்பர்.

249. திருவூறல்
(தக்கோலம்)
சம்பந்தர்.

250. இலம்பையங்கோட்டூர்
சம்பந்தர்.

251. திருவிற்கோலம்
(கூவம்)
சம்பந்தர்.

252. திருவாலங்காடு
(பழையனூர் ஆலங்காடு)
சம்பந்தர்
அப்பர்
சுந்தரர்.

253. திருப்பாச்சூர்
சம்பந்தர்
அப்பர்.

254. திருவெண் பாக்கம்
சுந்தரர்.

255. திருக்கள்ளில்
(திருக்கண்டலம்)
சம்பந்தர்.

256. திருக்காளத்தி
சம்பந்தர்
அப்பர்
சுந்தரர்.

257. திருவொற்றியூர்
சம்பந்தர்
அப்பர்
சுந்தரர்.

258. திருவலிதாயம்
(பாடி)
சம்பந்தர்.

259. வடதிருமுல்லைவாயில்
சுந்தரர்.

260. திருவேற்காடு
சம்பந்தர்.

261. மயிலாப்பூர்
(திருமயிலை)
சம்பந்தர்.

262. திருவான்மையூர்
சம்பந்தர்,
அப்பர்.

263. திருக்கச்சூர்,
(ஆலக்கோயில்)
சுந்தரர்.

264. திருஇடைச்சுரம்
சம்பந்தர்.

265. திருக்கழுக்குன்றம்
சம்பந்தர்
அப்பர்
சுந்தரர்.

266. அச்சிறுபாக்கம்
சம்பந்தர்.

267. திருவக்கரை
சம்பந்தர்.

268. அரசிலி
(ஒழுந்தியாப்பட்டு)
சம்பந்தர்.

269. இரும்பை மாகாளம்
சம்பந்தர்.

துளுவ நாடு
(1 தலம்)

270. கோகர்ணம்
சம்பந்தர்
அப்பர்.

வடநாடு
(5 தலங்கள்)

271. திருப்பருப்பதம்
(சீசைலம்)
சம்பந்தர்
அப்பர்
சுந்தரர்.

272. இந்திர நீலப்பருப்பதம்
(இமயமலைச் சாரலில் உள்ளது)
சம்பந்தர்.

273.. அநேகதங்காபதம்
(கேதாரம் செல்லும் வழியில் உள்ள கௌரி குண்டம் என்னும் இடமே அநேகதங்காபதம்)
சம்பந்தர்.

274. திருக்கேதாரம்
சம்பந்தர்
சுந்தரர்.

275. நொடித்தான் மலை
(திருக்கயிலாயம்)
சம்பந்தர்
அப்பர்
சுந்தரர்.

3. உலக இயல்பறிந்து உதவி செய்ய விரும்பும் பேரறிவுடைய நல்லோரின் செல்வம், ஊருக்குக் குடி தண்ணீர் தந்து பயன்படும் ஊருணியில் நீர் நிறைந்திருப்பது போலாம். மேலும், அத்தகையோரது செல்வம் கனிகள் நிறைந்து பழுத்துக் குலுங்கும் பழமரம் ஊர் நடுவில் இருப்பது போலவும், தன்னுடைய அனைத்துறுப்புக் களாலும் பிறர்க்குப் பயன்தரும் மருந்துமரம் போல்வும், பிறர்க்குப் பயன்படும். (குறள் 102, 108).



மோப்பக் குழையும் அனிச்சம்

(சொல்லாக்கச் செம்மல். கோ. முத்துப்பிள்ளை)

விருந்தினரின் தன்மையை விளக்கிக் கூறப்போந்த தெய்வப் புலவர் திருவள்ளுவர், அனிச்ச மலரின் தன்மையை முதற்கண் விளக்கிக் கூற முற்படுகின்றார். மல்லிகை மலர் எவ்வாறு மணத்திற்கு எடுத்துக்காட்டாக இலங்குகின்றதோ, அதேபோன்று அனிச்ச மலரும் மென்மைக்கு எடுத்துக்காட்டாக இலங்குகின்றது. மல்லிகை மலரை மடியில் கட்டிக் கொண்டால் கூட, அது மணம் வீசிக் கொண்டேயிருக்கும். அதேபோன்று அனிச்ச மலரும் தொட்டுப் பார்க்காவிட்டாலுங்கூட, முகர்ந்து பார்க்கும் அளவிலேயே வாடிப்போகும். மூச்சுப்பட்டாலே அது குழைந்துபோகுமாம்.

இலவம் பஞ்சு, மயிலின் தோகை, அன்னத்தின் தூவி ஆகிய அனைத்தும் மென்மைத் தன்மைக்கு மேன்மை யான எடுத்துக்காட்டுகளாகும். அவற்றையும் விஞ்சிநிற் கின்ற மென்மை, அனிச்சத்திற்கு உண்டு என்று பேசுகிறார் பெருநாவலர். அனிச்ச மலர் ஓர் அழகான மலர். மணமுள்ள மலர். அசையும் காற்றில்கூட அதன் புதுமலர்ச்சி குன்றிப் போகலாம். முகர்ந்த அளவிலேயோ அதன் அழகும் மென்மையும் அடியோடு அழியும். புதுமை நலமும் வெண்மை நலமும் வேறுபட்டுப் போகும். இயற்கையான வெப்பமூச்சிற்கு வாடிப் போகின்ற அம் மலர், சற்றுக் கடுமையான வெப்ப மூச்சிற்குக் காய்ந்து சருகாய்ப் போய்விடும் என்று சொல்லத் தேவையில்லை.

அழகிய அனிச்ச மலரை ஆயிரம் பெயர்கள் சொல்லி வாழ்த்துவது புலவர்களுக்கு வாடிக்கையாகும். நாக மல்லிகை என்றும் விண்மலர் என்றும் வான்மலர் என்றும் அவர்கள் வாழ்த்துக் கூறுவார்கள். அனிச்சத்தைச் செடிவகை என்றும் மரவகை என்றும் இலக்கியம் எடுத்துப்பேசுகின்றது. இப்போது இச்சிறிய மரம் பங்களூரில் உள்ள "லால்பாக்" பூங்காவில் வளர்க்கப் பட்டு வருவதை அறிகிறோம்.

வள்ளுவரின் வாக்கினை இப்போது கேட்போம்:

"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து

நோக்கக் குழையும் விருந்து"

இரண்டு மலர்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றார் வள்ளுவர். ஒன்று அனிச்ச மலர். இன்னொன்று விருந்தினரின் உள்ளமாகிய தாமரை மலர். கையினால் எடுத்து முகர்ந்து பார்த்த அளவிலேயே வாடிப்போவது அனிச்ச மலர். ஆனால் பார்த்த பார்வையிலேயே வாடிப்போவது விருந்தினரின் நெஞ்சமாகிய தாமரை மலர். "விருந்தினர்" என்பவர் யார் என்னும் வினா எழுகின்றது. விருந்து என்றால் புதுமை. விருந்தினர் என்றால் புதிதாக வந்தவர்கள். ஆனால் இன்றோ மாமா–அத்தை, பாட்டன்–பாட்டி, பெரிய தந்தை யார்–சிறிய தந்தையார் ஆகியோரின் வருகையையும் 'விருந்தினர் வருகை" என்றே கூறுகின்றோம். "காலம் மாறிவிட்டது" என்பதையே இது காட்டுகின்றது. பொருள் வசதி சுருங்கச் சுருங்க, விருந்தினர் என்னும் சொல்லின் பொருளும் சுருங்கிக்கொண்டே வருகின்றது என்று கொள்ளலாம்! அன்பு நிலையும் அருகிக்கொண்டே வருகின்றது போலும்!

சேய்மையில், விருந்தினர் ஒருவர் வரும்போது, அவரை இனிமையாகப் பார்த்தல் வேண்டும். அந்தப் பார்வையினைப் பற்றுக்கோடாகக் கொண்டு விருந்தினர் நெருங்கி வருவார். அண்மையிலே வந்தவுடன், செவிக்கினிய தேன்போன்ற சொற்களை இயம்புதல் வேண்டும். அவற்றைப் பற்றுக்கோடாகக் கொண்டு அகம் மகிழ்ந்த விருந்தினர் நம் அகத்தினில் நுழைவார். அப்போது இனிய உணவை, இருக்கும் உணவை, அவருக்குக் கனிவுடன் வழங்குதல் வேண்டும். இதுவே பரிமேலழகர் வழங்கும் பசும்பொன் உரையாகும்.

அனிச்ச மலரின் அருமை பெருமைகளை அறிந்து கொண்டோம். விருந்தினரின் பெருமைகளையும் விளங்கிக்கொண்டோம். மனித முகம் மாறுபட்டு விட்டால், ஏற்படும் விளைவு என்ன என்பதையும் நுட்ப மாகக் காட்டியுள்ளார் வள்ளுவர் பெருந்தகை. "முகந் திரிந்து நோக்க" என்னும் சிறிய தொடரிலே அரிய கருத்துகளை அடக்கிவைத்துள்ளார். "முகம்" என்பது முகத்தோற்றம். இயற்கையான பொலிவினையுடையது முகம். மனித முகத்திற்கென்று மாறாத இயல்பு ஒன்று உண்டு. அஃது ஓர் அழகிய கண்ணாடி. சில நேரங்களில் ஏற்படும் மாறுபட்ட உணர்வுகளையும் வெட்டென வெளிப்படுத்திவிடும். "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்பது பழமொழியன்றோ? அழகிய முகம் திரிந்துபோனால், திரிந்த முகத்துடன் விருந்தினரை வரவேற்றால், நிலைமை என்னவாகுமென்பதை எளிதில் உணரலாம். "திரிதல்" என்னும் சொல்லின் பொருளை முதலில் அறிதல் வேண்டும். "திரு, இரிதல்" ஆகிய இரு சொற்களின் கூட்டுறவே திரிதல் ஆகும். அழகு குடியிருந்த முகம், அழகு ஓடிப்போன முகமாக மாறிவிட்டால், விருந்தினர் பெரிதும் வாடுவர் என்பதை வள்ளுவர் தெள்ளிதின் விளக்குகின்றார். "குழந்தையும் தெய்வமும் கொண்டாடுமிடத்தில்" என்னும் பழமொழி விருந்தினர்க்கும் பொருந்துமன்றோ?

அனிச்ச மலரின் மென்மைத் தன்மை வள்ளுவரின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டுவிட்டது என்றுதான் சொல்லவேண்டும். தெள்ளமுதமாகிய தம் திருக்குறள் நூலில், மேலும் மூன்று இடங்களில் அனிச்ச மலருக்கு முடிசூட்டி மகிழ்கின்றார் திருவள்ளுவர். காமத்துப் பாலில், காதல் வாழ்க்கையின் பெருமையைப் புலப்படுத்தும் பகுதியில், "நலம் புனைந்து உரைத்தல்" என்னும் அதிகாரத்தில் அனிச்ச மலரின் அழகையெல்லாம் அள்ளித்தருகிறார் அவர். மலரைக் காட்டிலும் மென்மையானது காதலின்பம் என்பது வள்ளுவரின் கருத்து. எனவேதான் மென்மைக்கு மென்மையான அனிச்ச மலரை அவர் தேர்ந்தெடுத்துக் கொள்கின்றார்.

"நன்னீரை வாழி அனிச்சமே நின்னினும்
மென்னீரள் யாம்வீழ் பவள்"

அனிச்சப் பூவே நீ வாழ்வாயாக. என்னால் விரும்பப்படும் பெண்ணோ நின்னைக் காட்டிலும மென்மையானவள்.

"அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை"

காம்புகளை அகற்றாது பெய்துவிட்டால், அனிச்சப் பூவின் பாரம் தாங்காமல், மெல்லிய இடை முரிந்துபோகுமே என்று வருந்திக் கூறுகிறார்.

"அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்"

மென்மையின் வடிவான அனிச்சப் பூவானது நெருஞ்சி முள் போல் தைக்க வல்லதாயின், மாதர் அடியின் மாண்புதான் என்னே!

வான்புகழ் வள்ளுவரின் இத்தகைய கருத்துகளை எல்லாப் புலவர்களும் ஏற்றுப் போற்றியுள்ளனர்.

"அனிச்சமென் புதுமலர் அமளி" என்று குறிப்பிடுகிறார் அதிவீர ராம பாண்டியர். மென்மை தரும் நன்மையை எடுத்துப் பேசுகிறார் அவர்.

"அடுக்கிய அனிச்சப் பூவின் அமளிமேல்" என்று அனிச்ச மலரின் மென்மையை மோனை நயத்தோடு மொழிகிறது சூளாமணி. "அன்னத்தின் தூவி அனிச்ச மலரெடுத்துச் சின்ன உடலாகச் சித்திரித்த மெல்லியலோ" என்று பாடுகிறார் பாவேந்தர் பாரதிதாசன். இஃதென்ன, மலருக்குப் பாராட்டா குழந்தைக்குத் தாலாட்டா என்று வியந்து போற்றுகின்றோம்.

அனிச்ச மலரின் மென்மையை அளந்து காண முற்பட்ட வள்ளுவர், அணி வகையில் எடுத்துக் காட்டுவமை அணியை அமைத்துக் கொண்டதில் வியப்பேதுமில்லை. உலகம் போற்றும் அவர்தம் ஒப்பற்ற நூலின் தொடக்கமே எடுத்துக்காட்டுவமை அணிதானே.

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

முழுமுதற் கடவுளின் முழுமையான வடிவத்தை, உவமை கூற முடியாத ஒப்பற்ற வடிவத்தை, உவமையில்லா உவமையின் மூலம் தெரியவைக்கிறார் திருவள்ளுவர். இதே போன்ற பெருமைக்குரியது "விருந்தோம்பல்". ஆகவேதான் அவர் வழங்கும் அணியும் அதே அணியாகத் திகழ்கின்றது. "மோப்பக் குழையும் அனிச்சம்" என்பது ஒரு கருத்து "முகம் திரிந்து நோக்கக் குழையும் விருந்து" என்பது இன்னொரு கருத்து. இவற்றுள் எது உயர்ந்தது என்று சொல்ல இயலுமோ? எது கருத்து, எது உவமை என்றே அறிய முடியாத அருமைப்பாடு. ஒன்றை ஒன்று நினைவூட்டும் ஒப்பற்ற காட்சிகள்.

வாழ்க வள்ளுவம். வாழ்க வையகம்.



திருமகள் (புருஷாகார வைபவம்)

(K.E.B. ரங்கராஜன் (மணியரங்கன்)

பேரருளாளனான எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனது தேவிமார்களுள் முதன்மையானவர்கள் மூவராவர். அவர்களை முறையே ஸ்ரீ, பூ, நீளா என்று வடமொழியிலும், திருமகள், மண்மகள், ஆயர்மடமகள் என்று செந்தமிழிலும் அழைப்பர். அவர்களுள் திருமகள் 'அகலகில்லேன் இறையும்' என்று எம்பெருமான் திருமார்பில் நிலை பெற்றிருக்கின்றாள். அதனால் எம்பெருமானது திருநாமங்களும் திருமால், திருநாரணன், மாதவன், திருவாழ் மார்பன், திருவின் மணாளன், திருமகள் கேள்வன் என்றாயின. திருவில்லா மற்ற தேவரைத் தொழாது திருவுடன் கூடிய நாரணனடிக் கீழ்க்குற்றேவல் செய்வதையே தங்கள் பிறவிப் பயனாகக் கருதுமவர்கள் திருமாலடியராவர்.

திருநாரணனது இருபெருஞ் செல்வங்களாக அவனது நிலையான இருப்பிடமான பரமபதந்தன்னையும் அவனது இன்புறும் விளையாட்டுக் கிருப்பிடமான நம்முலக முள்ளிட்ட ஈரேழுலகங்களையும் கூறுவர். வள்ளுவப் பெருந்தகையும் 'தாமரைக் கண்ணான் உலகு' என்று பரம பதத்தையும், 'அடியளந்தான் தாஅயது' என்றிவ்வுலகங்களையும் குறிப்பிடுவார். இவ்வுலகத்தில் பிறவாமல் அவன்தன் பரமபதத்தில் வாழ்கின்ற அனந்தன், கருடன், விஷ்வக்ஸேனர் எனப்பெறும் ஸேனை முதலியார் முதலானவர்கள் நித்யர்கள் எனப்பெறுவர். இவ்வுலகில் பிறந்தபோதும் அவனை அவனதருளாலே யுணர்ந்து அவ்வுலகை அடையும் ஜீவன்களை முக்தர்கள் எனப் பெறுவர். அவ்வுலகில் வாழும் நித்ய முக்தர்களும் அவனைப் போன்றே சங்கு சக்கரம் ஏந்திய திருக்கையினராகக் காட்சியளிக்க, அவனை அடையாளங் கண்டு கொள்வது அவனது மார்பிலுறைகின்ற திருமகளாலும் ஸ்ரீவத்ஸ கௌத்துப வனமாலைகளாலும் ஆகும்.

அந்தமில் பேரின்பந்தரவல்ல தாமரைக் கண்ணான் உலகைச் சென்றடைய முடியாத வண்ணம் இவ்வுலகில் வாழும் நாம் அறியாமமையின் பயனாய் வரும் அழுக்காறு, அவா வெகுளி மயக்கங்கள் 'யான்', 'எனது' என்ற அகப்பற்றும் புறப்பற்றும் மிக்கவராய் அறநெறி நூல்கள் காட்டும் 'தீதில் நன்னெறியைப் பற்றாது செய்து வரும் குற்றங்கள் கணக்கில் அடங்காது. இக்குற்றங்களில்லாத ஒருவனால் தான் அவன்தன் வீட்டுலகை அடையமுடியுமென்றால், இவ்வுலகில் மக்களும் மாக்களும் மிகுந்திருப்பரே யன்றி குறைந்து போவர் என்பது எந்நாளும் நடவாது. ஆதலின் அறநெறி நூல்களை ஆராய்ந்தறிந்த நம் ஆன்றோர்கள், குன்றனைய குற்றஞ் செய்தாலும் எம்பெருமானின் மேன்மையையும் தன் சிறுமையையும் பாராதே 'புகலொன்றிலா அடியேன் உன்னடிக் கீழ் அமர்ந்து புகுந்தேனே' என்று திருவின் மணாளனது திருவடிகளைப் பற்றுவோமானால் திருமாமகளருளால் திருமாலவனின்னருளுக் கிலக்காகி அவனது திருநாட்டை அலங்கரிக்கலாமென்றோதியுள்ளனர். இதற்கு எம்பெருமானது மேன்மை யென்னவென்றும், ஜீவன்களாகிய நமது தன்மையென்னவென்றும் இருவருமிணைய முடியாதபடி இடைச்சுவராயிருக்கும் தடைகள் என்னவென்றும், அத்தடைகளைக் களையச் செய்யும் வழியென்னவென்றும், இருவரையும் இணைத்து வைக்கும் பாலமாகச் செயற்படும் திருமகளின் சிறப்பென்னவென்றும் அறிந்துணரவேண்டும். இவற்றுள் முந்தைய நான்கினைப் பற்றியும் இம்மலரில் சான்றோர்கள் முன்னமே எடுத்துக் காட்டியிருப்பதால், ஈண்டு பரம்பொருளையும் உயிர்ப்பொருளையும் இணைக்கும் திருமகளின் சிறப்பான செயல்பாட்டைக் காண முற்படுவோம்.

எம்பெருமான் உலகங்களின் படைப்புக்குத்தானே காரணமாய், எல்லாப் பொருள்கயைும் உடையவனாய், அவைகளைத் தனக்காக்கிக் கொள்ளுமவனாயிருப்பவன். அதாவது பரமபதம் மற்றும் ஈரேழுலகுகளிலுமுள்ள பொருள்களையும் தன்னில் கொண்டவனாய் அவைகளில் தானிருப்பவனாய், எல்லாவற்றைக் காட்டிலும் மேம்பட்டவனாய் அவற்றின் உள் புக்கருக்கிறவன் எம்பெருமான், அவன் அனைத்தையும் காக்குமியல்பினனாய், எல்லார்க்கும் மிக்க எளியவனாய், எல்லார்க்கும் எல்லாவித உறவுகளும் உடையவனாய், எல்லார்க்கும் இனியவனாயுமிருக்கின்றான். தன்னுடைமைகளான உயிர்களின் குற்றங்களையும் இன்பமாகக் கொள்ளும் தாயன்பு உண்டு. அதே சமயம் அனைத்தையும் தன் நினைவின்படி ஆள்கின்ற தலைவனும் அவனாவான். ஆயினும் அறப்பெரியவனான அவன் மிகவும் தாழ்ந்தவர்களிடத்தும் தன் பேறாகப் பொறையறக் கலக்குந் தன்மையால் எல்லார்க்கும் கிட்டும்படியான எளியனாயிருப்பான்.

இங்ஙனம் எம்பெருமான் எல்லா ஆற்றலையுமுடையவனாயிருக்க, ஜீவன் தன்னைத் தான் காப்பாற்றிக் கொள்ளும் வல்லமையற்றவன். காக்குமியல்பினனான எம்பெருமானையன்றி தனக்குப் பிறிதோர் புகலிடம் தேடக்கடவனல்லன். ஆக எம்பெருமான் தலைவன்.

ஜீவனான நாமவனுக்கடிமை என்ற வுணர்வுண்டாக வேண்டும். எல்லாவற்றாலும் நிறைவுற்றவனாயிருக்க ஆனந்தமே வடிவான அவனுக்கு அடிமை பூண்டொழுகு தலாலுண் டாகும் இன்பமும் அவனுக்கே அன்றி தனக் கில்லை என்பதும் அறிதல் வேண்டும். எல்லாம் அறிந்த பேரறிவாளனாய் எம்பெருமான் இருக்க, அறிவே வடி வான ஜீவனும் இயல்பாகவே அறிவுடையவனாயிருக்கச் செய் தேயும் இடையிலமைந்த ஐம்புலன் பொறிகளாலான தொடர்பால் தன்னைத் தான் அறியப் பெறாது, அவனை விட்டுப் பிரிந்து பன்னெடுங் காலமாகப் பிறவிப் பிணியால் வாடி நிற்கிறது. ஆக ஐம்புலன் பொறிகளின் பிடி யினின்றும் விடுபட அறியாமை என்னும் இருள் விலகு கிறது. ஏழு வகையான பிறப்புகளுள் ஆறறிவு படைத்த மனிதப் பிறவியில் தான் இறைவனைப் பற்றிய மெய் யுணர்வுண்டாகிறது. இவ்வுணர்வுண்டானதும் ஜீவனான வன் திருவுடையடிகளிடம் சரண்புகுந்து தன் உய்விற் குற்ற ஆறும் பேறுமாக

"ஸ்ரீமந் நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே
ஸ்ரீமதே நாராயணாய நம;"

என்ற எட்டு பதங்களாலாவன இருவாக்யங் களை—துவய மந்திரத்தை இடைவீடின்றிச் சொல்லு கிறான்.

இங்ஙனம் மெய்யுணர்வு கொண்டு துவய மந்திரத் தைச் செப்பி திருவின் மணாளனைச் சரண்புகுந்தாலும் அந்த ஜீவன் அறநெறி நூல்களால் விலக்கப்பட்ட செயல் களைச் செய்கையாகிற குற்றமும், விதிக்கப்பட்ட செயல் களைச் செய்யாததான குணக்கேட்டையும் கண்டு, "இவற் றைப் பொறுக்கமாட்டேன், உன்னை நரகங்களில் தள்ளு வேன்" என்று எம்பெருமான் கூற இடமுண்டு. அங்ஙனம் அவன் சொல்வானாகில் எல்லா உயிர்களையும் காக்கு மியல்வினன் என்ற அவனது குணத்திற்கு ஊறு உண்டா கும். மேலும் அந்த ஜீவனுக்குத் தாய் தந்தை முதலான அனைத்துச் சுற்றமும் நட்பும் தானே என்ற உறவு முறை காரணமாக எல்லா நன்மைகளையும் செய்ய வேண்டிய வனாயிருக்க அதனைத் தவிர்த்தலும் அவனுக்குக் குற்ற மாம்.

அதேபோன்று, திருமகள் தான் எம்பெருமான் ஒரு வனுக்கே உரியவளாய், மற்ற ஜீவன்களுக்குத் தாயாய் இருந்து காப்பாற்றுமவளாயிருக்கச் செய்தே, தங்களிரு வரையும் பற்றிச் சரண்புகுந்த ஜீவனைக் காப்பாற்றா மலிருப்பது தன் குணக் கேடாகக் கருதுகிறாள். மேலும் இந்த ஜீவனுடைய குற்றங்களைப் பாராமல் கைக் கொண்டு எம்பெருமானுடன் சேர்ப்பிக்கும் செயலைச் (புருஷகாரத்தைச்) செய்யாமலிருப்பதும் தன் குற்ற மென்றுணர்கிறாள்.

இத்தகைய நிலையில் இருவர் மாட்டும் குற்ற முண்டாகாதபடி திருமகள் செயல்படும் விதந்தான் என்னே! எம்பெருமான் திருமகளின் பரிந்துரையால் சரண் புகுந்தவனின் குற்றத்தைக் கணிசியாமல் காக்கின்றானா? அல்லது அதற்குரிய தண்டனைகளை வழங்குகின்றானா? என்ற கேள்விகள் எழுகின்றன.

மேற்கூறிய துவயமந்திரம் தன்னடைவே திருமகள் கேள்வனாகவே எம்பெருமானைப் பற்றுவதாகக் காட்டுவதால் எம்பெருமான் இந்த ஜீவனைக் காப்பாற் றிக் கரை சேர்க்கிறான் என்பதே ஆன்றோர்கள் முடிவு. அதாவது ஜீவனானவன் துவய மந்திரத்தைச் செப்பும் போது முதல் வாக்கியத்திலுள்ள 'ஸ்ரீமத்' பதத்தாலும், இரண்டாம் வாக்கியத்திலுள்ள 'ஸ்ரீமதே' பதத்தாலும் திருமகள் கேள்வனாகவே எம்பெருமானைப் பற்று கிறான். அதன் பொருட்டே அவனதின்னருளுக்கிலக்கா கிறான்.

இது எங்ஙனம் எனில், முதல் வாக்கியத்திலுள்ள 'ஸ்ரீமத்' என்ற பதம் ஜீவன்களால் மட்டுமே பற்றப் படுமவளாய் 'அகலகில்லேன் இறையுமென்று' தான் எம்பெருமானைப் பற்றியிருப்பவளாய், ஜீவன்களின் விண்ணப்பத்தைக் கேட்கின்றவளாய், எம்பெருமானை ஜீவன்களின் விண்ணப்பத்தைக் கேட்கச் செய்பவளாய், எம்பெருமானது கருணை முதலான குணங்களைப் பெருகச் செய்பவளாய், ஜீவன்களையும், எம்பெருமானை யும் இணைத்து வைப்பவளாய் இருக்கிற திருமகளுடன் எப்பொழுதும் சேர்ந்திருப்பவளாய் எம்பெருமானைக் காட்டுகிறது. இதே போன்று மேல் வாக்கியத்திலுள்ள 'ஸ்ரீமதே' என்ற பதம் கீழ்ச் சொல்லப்பட்ட நிலையையுடை யவளாய், அடையத் தக்கவளாய், அடிமைத் தொழிலை வளர்ப்பவளாயும் இருக்கும் பெரிய பிராட்டியரோடே எப்போதும் சேர்ந்திருப்பவனான எம்பெருமானைக் காட்டுகிறது. இங்ஙனம் திருமகள் கேள்வனின் திருவடி வாரத்திலே இந்த மந்திர ரத்தினத்தைச் செப்பி அவ்விரு வருக்குமாக அடிமை செய்ய விண்ணப்பிக்க வேண்டும். அத்தகைய அடிமை செய்வதால் உகப்பதும் அவ னென்றிருத்தல் வேண்டும்.

இந்த மந்திரத்தை எம்பெருமான் திருமகளுக் குரைக்க, திருமகள் இதனை விஷ்வக்ஸேனர் என்கிற ஸேனை முதலியார்க்குரைக்க, அவர் இதனை ஆழ்வார் களுக்குணர்த்த, ஆழ்வார்களுள் தலைவரான நம்மாழ் வாரிடமிருந்து ஞானயோக சக்தியால் நாதமுனிகள் பெற்று ஓராண் வழியாய் பின்புள்ளார்க்கு உபதேசித்தார். அவ்வழி வந்த இராமானுசர் எழுபத்தி நான்கு ஆசாரியர் களை நியமித்து அவர்கள் மூலம் ஆசையுடையோர்க் கெல்லாம் அறிவிக்கச் செய்தார். ஆழ்வார் 'அகலகில் லேன் இறையும் என்று அலர் மேல் மங்கையுடை மார்பன் அடிக்கீழ் புகுந்தார்' எனில், ஆழ்வார் திருவடிக்கீழ் சரணம் புகுந்தவர் எம் பெருமானார் என்ற புகழ் வாய்ந்த இராமானுசர். அவரது திருவடிக்கீழ் சரணம் புகுந்தவர் நம் ஆசாரியர்கள். அவர்களது திருவடிக்கீழ் சரணம் புகுந்து அவர்கள் மூலம் எம்பெருமானுக்கும், பிராட் டிக்கும் சேவை செய்வது அவர்களை உகப்பிப்பதே நம் வாழ்நாளைக் கடத்த வேண்டும் என்பது நம் ஆன்றோர் துணிவாகும். இத்தகைய மந்திர ரத்தினத்தின் பொருளை ஆசாரியன் மூலம் கேட்டறிதல் வேண்டும்.

ஆயின் திருமகள், திருமகள் கேள்வன் என்றிரு வரையும் ஒன்றாகப் பற்றி நின்றாலும், திருமகளும் நம்மைப் போன்ற ஜீவனாவாள். அதாவது அவளும் தன் நிறம் பெறுவது அவனுக்கே உரியவளாய் இருப்பதனால் ஆகும். அவனும் உளனாந் தன்மை பெறுவது இவள் தன்

சேர்த்தியாலே ஆகும். ஆதலின் இருவரும் இணைந்திருக்கும் நிலையில் அவனைச் சரணடைதல் வேண்டும். எம்பெருமானார் காட்டிய நெறி நின்ற அடியார்கள் தன் ஆசாரியன் மூலம் திருமகள் தன்னைத் தஞ்சமாக பற்றியே எம்பெருமானைப் பற்ற வேண்டும். எம்பெருமான் தானும் எந்த ஜீவன் எந்த நேரத்தில் எந்த இடத்தில் எத்தகைய குற்றங்களுடன் தன்னைச் சரணடைவானோ என்றெதிர்பார்த்தே, அச்சமயம் திருமகளை முன்னிட்டுத் தன்னைப் பற்றுதல் அந்த ஜீவனுக்கெளிதாகும் என்பதன் பொருட்டே திருமகளைத் தன்னாகத்தே நிலை பெறுத்தியிருக்கிறான் போலும்.

அது மட்டுமின்றி தன்னைச் சரணடையும் ஜீவனை இதுநாள் வரை இடும்பைக் குழியில் தள்ளிப் புகப் பெய்ததனால், அந்த ஜீவன் தன்பால் வெறுப்புக் கொண்டு சரணடையாமல் விலகி விடுவானோ என்றஞ்சி அந்த ஜீவனை நல்வாக்குகளால் தன்பால் மனம் சுழிக்க திருமகள் துணையை எம்பெருமான் நாடுகின்றானாம். ஜீவனும் எம்பெருமானுடனான ஒழிக்க இயலாத உறவை அறியாதே செய்த தீவினைகளாலும், உறவை அறிந்த போதும் இகபர சுகங்களுக்காக மற்றைத் தெய்வங்களைப் பணிந்து அவனுக்கடிமை செய்யாதொழிந்ததனாலும் எம் பெருமானது சீற்றத்துக்குள்ளாகி தான் மீண்டும் பிறவிப் பிணி மூப்புத் துன்பத்திற்குள்ளாக நேருமோ என்றஞ்சி தன் குற்றங்களை நற்றமாகவே கொள்ளும்படி செய்ய திருமகளின் துணையை நாடுகின்றானாம்.

ஆக இருவர்க்கும் திருமகள் துணை புரிவதுடனன்றி ஒருவன் காப்பவனும், மற்றொருவன் காப்பாற்றப் படுபவனுமாக உள்ள இருவருக்குமுண்டான தொடர்பை இவ்விருவர் மட்டுமறிவதுடனன்றி அதற்குச் சாட்சியாகவும் திகழ்கிறாள். திருமகள் சாட்சியாகத் தன்னைக் கைக்கொண்டதால் அந்தத் தாமரையாளும் சிதகுரைக்குமேல் 'என்னடியார் அது செய்தார், செய்தாரேல் நன்று செய்தார்' என்றுரைக்க வல்ல எம்பெருமான் தன்னைக் கைவிட மாட்டான் என்ற தெளிவு ஜீவனுக்குண்டாகிறது. அதே போல் திருமகளின் திருவருளுக்கிலக்காகி அவளது முன்னிலையில் தன்னைச் சரணடைந்த ஜீவனும் தனக்கேயாட் செய்வான் என்ற உறுதிப்பாடும் எம்பெருமான் திருவுள்ளத்திலுண்டாகிறதாம்.

இதற்குக் காரணம்யாதெனில் இவளது திருநாமமான 'ஸ்ரீ' என்பதற்கு 'ஸேவிக்கப்படா நின்றவள்' என்றொரு பொருளுமுண்டு. அதாவது ஜீவனால் அடிமைக்குற்றேவல் செய்யும் பொருட்டு ஸேவிக்கப்படுகின்றாள். எம்பெருமானால் தன் அன்பிற்குரிய மனையாளாக ஸேவிக்கப்படுகின்றாள். ஆக இருவராலும் என்றும் மறவாது சேவிக்கப்படுபவளாகையாலே இவள் சாட்சியாகி ஜீவனுக்கும் எம்பெருமானுக்குண்டான ஒழிக்க முடியாத உறவை நிலைப் படுத்துகின்றாள்.

இத்தகைய புருஷகாரம் – துணை – அறியாமையில் ஆழ்ந்துள்ள பக்தர்களுக்கு மட்டுமின்றி அறியாமை விலகப் பெற்ற முக்தர்களுக்கும் அறியாமை என்பதே தலையெடுக்கப் பெறாத நித்யர்களுக்கும் தேவைப் படுகிறது. அதாவது நம்மைப் போன்ற அறிவிலிகளுக்கும், ஆசார்யர்களைப் போன்ற ஞானவான்களுக்கும், ஆழ்வார்களைப் போன்று பரமபக்தியாகிற பேரவா கொண்டவர்களுக்கும் எம்பெருமானைப் புகலாகச் சென்றடையுங்கால் புருஷகார பூதையாக செயலாற்றுபவள் திருமகளாவாள். இனி இச் செயலை அவள் எங்ஙனம் நிகழ்த்துகிறாள் என்பதனை அவர்களுக்கிடையே நடைபெறும் உரையாடலைச் செவிமடுத்து அறிவோமாக.

திருமால் : தேவீ! ஈதென்ன! உன் கமல முகத்தின் ஒளி சற்றுக் கூடியது போலிருக்கிறதே. இதன் காரணமென்னவோ!

திருமகள் : அன்பரே! நம்மிராமானுசன் தந்த நண்ணடு ஞானம் தலையெடுத்து அவர் வழி நின்ற ஆசாரியரின் நல்லுரையை நெஞ்சில் கொண்டு நம்மிருவரையும் சரணாகப் பற்றி நமக்கும் நம்மடியார்க்கும் உகந்து பணி செய்து நம்மை உகப்பிக்க ஒரு ஜீவன் முற்பட்டுள்ளான்.

திருமால் : தேவீ! நம்மைச் சரணடைந்தவன் முன்னம் செய்த தீவினைகள் என்னவென்று அறிவாயா?

திருமகள் : அன்பரே! போய பிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாக்க வல்ல உமது திருநாமத்தையன்றோ அவன் ஓதுகின்றான். அவனுக்கருள் பாலிப்பதன்றோ நமது கடமை.

திருமால் : தேவீ! இவனது சிறுமை பாராதே இவனுக்காக பரிந்துரைக்க விழைகிறாய். தான் ஏறி வந்த ஏணிப் படியையும் எட்டி உதைக்கும் கொடியவனிவன். இவனை நாம் ஏற்பதென்பது இயலாத காரியம்.

திருமகள் : உண்மைதான் அன்பரே! நிறை ஞானத்தொடு மூர்த்தியாய், ஒத்தாரும் மிக்காருமில்லாதவனாய் விண்ணுலகையும், மண்ணுலகையும் தனிக்கோல் செலுத்தி ஆள்கின்ற உம் மேன்மை எங்கே? தன்னைப் பற்றியும், உம்மைப் பற்றியும் உண்மையுணர்வுண் டாகப் பெறாது. அறியாமையே மிக்கு நிலையல்லாதனவற்றை நிலையென்றெண்ணியும் பொருளல்லாதனவற்றை பொருளென்று மயங்கியும் 'யான்' 'எனது' என்ற அகப்பற்றும் புறப்பற்றும் மிகுந்து உண்டியே உடையே என உழன்றோடும் இவன்தன் சிறுமை எங்கே? மேரு மலைக்கும் சிறுகடுகுக்கும் உள்ள வேறுபாடன்றோ தோன்றுகிறது.

திருமால் : அவ்வாறிருக்க எங்களிருவரையும் இணைப்பதென்பது இயலாததன்று அறிந்து கொண்டாயா?

திருமகள் : ஐயனே! வேண்டுதல் வேண்டாமையிலா தவர் நீர். உமக்கு யாதொன்றும் நாங்கள் கொடுக்காத போதிலும் நிறைவு பெற்றவ ராகவே தோற்றுவீர். அஃதன்றிக்கே உமக்கு எவ்வளவு கொடுத்தாலும் நிறைவுண்டானதாகவும் தோற்றாது. ஓமத் தீயில் விடப்படும் நெய்யினால் அத் தீமேலும் கொழுந்து விட்டு எழுவது

போல் உமது ஆவலும் பெருகி நிற்கும். ஆதலால் எவ்வகையிலும் உம்மை மகிழ்விப்பது என்பது எவராலும் இயலாது.

திருமால் : தேவீ! நீ சொன்னபடி மலையொத்த பாவத்திலும் கடுகத்தனை நற்செயலிருந்தா லன்றோ நாம் அருளக் கூடும். 'பாவமே செய்த பாவியானேன்' என்றல்லவோ நம் முன் வந்திருக்கிறான். இவனை நம் சீற் றத்திற்காளாக்காமல் என் செய்வது?

திருமகள் : அன்பரே! நீர் ஒன்றை மறந்து பேசுகிறீர். இவனது பாபங்களை நோக்குங்கால் 'நாராயணன்' என்ற உமது திருநாமத்தால் விளங்கும் எளிமை, கருணை என்பதான குணங்கள் அடித்தளத்திற்குப் போய் முதன்மை, தலைமை என்பதான குணங்கள் மேலெழுந்து சீற்றமுண்டாகிறது. அதனால் அர்ஜுனனின் தேர்த் தட்டில் நின்று 'அனைத்து செயல்களின் பலனையும் எனக்கே அளித்து என்னொருவனையே சரணாக அடைபவரது இருவல் வினைகளும் மாய்த்து அறாத இன்ப வீட்டை அளிக்கின்றேன் கவலைப் படாதிரு' என்று நீர் கூறினபடி உமது காக்குந்தன்மையன்றோ பின்னடைகின்றது. உமது தன்னிச்சையின் காரணமாக இவனது குற்றத்திற்குரிய தண்டனையை அளித்து மீண்டும் இவனைப் பிறவித் துயரத்தி லாழ்த்த எண்ணுகின்றீர். உன்றன்னோடு 'உறவேல் நமக்கிங்கொழிக்க ஒழியாது' என்று எவராலும் பிரிக்கவொண்ணாத படியான உறவு உமக்கும் இவனுக்குமுண்டாகியிருப்பதை இவன் மறந்திருந்து இன்று நினைப்பானாயில் நிறை ஞானத் தொரு மூர்த்தியான நீர் மறக்கலாமோ? இவனது கைக்கூப்புச் செய்கையொன்றையே கடுகத்தனை நற் செயலாகக் கருதக் கூடியவரன்றோ நீர்!

திருமால் : தேவீ! நீ என்ன சொன்னாலும் சரி. இவன் உனது கருணைக்குச் சற்றும் தகுதியுடையவனல்லன்.

திருமகள் : ஐயனே! நீர் சீதாராமனாக அவதரித்த காலத்தே முறை தவறி உம்மையும் என்னையும் பற்றின சூர்ப்பணகை இராவணனைப் போலன்றி, தன் தாய் தந்தையர் சுற்றம் சான்றோர் என்று எல்லாராலும் கைவிடப் பட்டு நமக்கே தீங்கு செய்தவனா யிருந்தாலும் 'சரணம்' என்று வாயால் சொல்லவும் மாட்டாமல் நம்மிருவர் முன்பும் வந்து விழுந்த காகாசுரனுக்குக் கருணை புரிந்தவரன்றோ நீர்! 'அகலகில்லேன் இறையுமென்று அலர்மேல் மங்கையுறை மார்பா என்று நம்மிருவரது சேர்த்தியி லன்றோ 'புகலொன்றிலா அடியேன் உன் னடிக் கீழமர்ந்து புகுந்தேனே' என்று சரணடைந்துள்ளான். ஆதலால் இவனுக்கு அருள் பாலிப்பது நம் கடமையே ஆகும்.

திருமால் : தேவீ! மருந்து குப்பியின் அடியில் தங்கி விட்ட மருந்தை மேலெழச் செய்ய அக்குப்பியை குலுக்குவது போல், என்னுள்ளத்தின் அடித் தளத்தில் பொதிந்துள்ள இரக்க உணர்வை உன் வாக்கு வன்மையால் மேலெழச் செய்ய முயற்சிக்கிறாய். ஆனால் இன்ன குற்றம் செய்தவனுக்கு இன்ன தண்டனை என்று அறநெறி நூல்கள் விதித்திருப்பதால் அதனை மீறி நாம் நடக்கலா குமா? ஆகையால் இவனுக்குரிய தண்டனை அளிப்பதில் தவறேதுமில்லை.

திருமகள் : ஆனால் தவறிருப்பதாக எனக்குத் தோன்றுகிறது.

திருமால் : எதைக் கொண்டு சொல்கிறாய் தேவீ!

திருமகள் : 'அறவனை ஆழிப்படை அந்தணனை' என்றல்லவோ உம்மைக் குறிப்பிடுகின்றார் நம் ஆழ்வார். "அந்தணர் என்போர் அறவோர் எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலான்" என்ற தமிழறிஞர் உம்மைக் கருணைக் கடல் என்பதாகவல்லவோ 'அறவாழி அந்தணன்' என்ற உமது பெயர் நிலைபெற வேண்டாமா! உம்மையே ஆறும் பேறுமாக அறிந்து உமக்கடிமை செய்ய உயிரேதேனும் கிடைக்காதா என்றல்லவோ உகந்தருளின நிலங்களிலே நின்றுமிருந்தும் கிடந்தும் நடந்தும் என்று பற்பல கோலங்கள் ஏற்றிருக்கின்றீர். உமது பெயரை நிலை நிறுத்துவதும், உமது ஆவலை நிறை வேற்றுவதும், உமது பட்டத்து இராணி என்ற முறையிலே அடியேன் செயல்பட வேண்டாவோ? அதன் பொருட்டாகிலும் நம்மை நாடிவந்தவனை காப்பாற்றாவிடில் தவறாகுமன்றோ?

திருமால் : தேவீ! அநாதிகாலமாய் நமது ஆணையை மீறி அறநெறி ஓவாதே குற்றங்கள் செய்து போந்த இவனது குற்றத்திற்குத் தக்க தண்டனையளிக்காமல் அக்குற்றங்களை மன்னித்தோமாகில் நாம் வகுத்த அறநெறிகளை நாமே மீறினதாகாதோ! இவன்தான் குற்றம் செய்தானாயின், இவனது தவறு களைத் திருத்துவதாகக் கொண்டு நாமும் தவறு செய்யலாமா! தவறு செய்தவன் தண்டனைக்குள்ளாவதன்றோ முறை! இவனை மன்னித்தால், மற்றவர்களும் 'மன்னிப்பு ஒரு நாள் நமக்குக் கிட்டும்' என்ற நம்பிக்கையுடன் இவனைப் போன்றே தவறு செய்து கொண்டேயிருப்பரன்றோ!

திருமகள் : ஐயனே! நீர் எண்ணுகிறபடி நீதிநெறி வழுவாத படியும், மற்றவர்களும் இவனைப் பின்பற்றும் படியும் ஒருபாயம் சொல்லுகின்றேன்.

திருமால் : என்ன உபாயமது?

திருமகள் : நீர் நீதி நெறி வழுவாமல் தண்டனை கொடுக்க வேண்டியது உம்மிடத்தில் பகையுணர்வு கொண்டு கண்டு கேட்டுற்று மோந்துண்டுழ லும் ஐங்கருவி கண்ட இன்பமே பெரிதாகக் கொண்டு வாழ்பவர் பால் ஆகும். அங்ஙனன் றிக்கே பூவுலக பொருட்களின் நிலையாமையும் சிறுமையுமுணர்ந்து முட்டி மீண்டு 'செங்கண் மால் எங்கள் மால்' என்றவர் தம் சென்ற நாள் செல்லாத நாள் எந்நாளும் நல்ல நாளாகும் படி மயர்வற மதிநல மருள வேண்டாவோ! இதனால் உமது கருணை முதலான குணங் கள் வெளிப்படுமன்றோ! புகலென்று வந்த வனுக்குப் புகலளிப்பதில் நீதி வழுவா தன்றோ! மற்றவர்களும் உண்மையுணர்ந்து உமக்காட்படுவரன்றோ! ஆதலின் நீர் இவனுக்கருள் பாலிப்பதே நலம் என்று உறுதியாகக் கூறுவேன்.

திருமால் : தேவீ! நீ இவ்வளவு தூரம் பரிந்துரைத்பின் இவனுக்கருள் புரியலாம் என்றெண்ணு கிறேன். ஆனால் இவன் வேறேதோ எண்ணு வது போலுள்ளதே!

திருமகள் : ஆம் இவனுக்கருள் புரிய நாம் சில வினாடி கள் தாமதித்ததால் இவன் நம்மைத் தவறா கக் கருத ஆரம்பித்துள்ளான் போலும். இவனை வழி படுத்துகின்றேன் (ஜீவனை நோக்கி) குழந்தாய்! எங்களிருவரையும் சரணாகக் கொண்டபின் உன் முகத்தில் ஏதோ வாட்டம் தெரிகிறதே! ஏன்?

ஜீவன் : அம்மா! கிணற்றருகே செல்லும் குழந்தை அதில் விழுந்து விடப் போகிறதே என்று முன்னம் பாய்ந்து தடுக்காமல் குழந்தை கிணற்றில் விழுந்தால் அதனைக் கிணற்றில் தள்ளிய குற்றம் தாய்க்குண்டாகுமன்றோ! அது போல் ஐம்புலன் பொறிகளின் பிடியில் சிக்காமலிருக்கும்படி காப்பாற்ற வேண்டி யது எம் பெருமானின் கடமையன்றோ! அக் கடமையிலிருந்து தவறிய அவனை அக் குழந்தையும் புறக்கணிக்கக் கூடாதோ என்று தான் தயக்கம்.

திருமகள் : குழந்தாய்! நீ சொன்ன உதாரணத்தைச் சற்று மாற்றிக் கூறட்டுமா! குழந்தை மண் தின்பதற்கு ஆசைப்பட்டால் முன்னம் அதனை மண் தின்ன விட்டுப் பின்னர் அதற் குரிய மருந் தையும் தாய் புகட்டுவாளன்றோ! கிணற்ற ருகே சென்றபோதே தடுக்காவிட்டாலும். உடன தனைக் காப்பாற்ற தானு மல்லவா கிணற்றில் குதிக்கின்றாள். அது போல் பிறவிப் பெருங் கடலில் விழுந்த ஜீவன்களைக் காப்பாற்றிக் கரைசேர்க்க எம்பெருமாளல் லவா ஆங்காங் குள்ள திருக் கோயில்களில் நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் என்பதான அர்ச்சை நிலையிலே எழுந்தருளி யிருக்கின்றான். அவனன்றோ பிறவிப் பிணிக்கும் மருந்தாகி யிருக்கின்றான். அங்க வனை நாடும் அடியார்களை அங்கீகரிப் பதற்காக 'அகலகில்லேன் இறையு' மென்று அவன் மார்பில் நானு முறைந்திருக்கின்றேன். இதனை அறியாயோ!

ஜீவன்: அம்மா! தவறு செய்தவன் தானாக இருக்க மற்றவர் மீதே பழி சுமத்தும் இவ்வுலக வழக் கப்படி ஏதேதோ பேசிவிட்டேன். அறியாமை யால் உங்களது மேன்மையையுணரா தொழிந் தேன். அடியேனது பிழைகளைப் பொறுத் தருள்க. ஆயினும் இந்நாள் வரை ஆக்கையின் வழியுழன்று அடியேன் செய்த பிழைகள் ஏழேழ் பிறவியெடுத்தாலும் போக்க வொண் ணாததாயிருக்கின்றதே!

திருமகள்: "போய பிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாக்கும்" வல்ல இறைவனருள் உனக்குண்டாக இருக்க அதைப்பற்றிய கவலையெதற்கு? தொட்டிலையும் கட்டிலை யும் விடாத தாயாக இருந்து உங்களை இணைத்து வைக்கின்றேன் (எம்பெரு மானை நோக்கி) அண்ணலே! 'இவனின்றி நீயில்லை நீயன்றி இவனில்லை' என்று இருவர்க்கு முள்ள உறவு இருவராலும் ஒழிக்க வொண் ணாததாயிருக்க இவனுக் கருள் செய்வதே நலம். இவன் துயர் நீங்குவ தன்றி ஒரு ஜீவனையும் நாமாட்கொள்ள வில்லையே என்ற உமது துயரும் நீங்கு மன்றோ!


திருமால்: தேவீ! உன் ஆணைப்படியே இவனுக்கருள் செய்கின்றேன். இனி நீயே இவன் மீது குற்றங்கூறினாலும் 'என்னடியார் அது செய்யார் செய்தாரேல் நன்று செய்தார்! என்றே நான் கூறக்கூடும்.

ஜீவன்: ஐயனே! உங்களிருவர்க்குமாக அடியேன் செய்யும் குற்றேவலினால் உகப்பது நீங்களா கவே இருக்கும்படி அடியேனை உகந்து பணி கொள்ள வேண்டும்.

அட நீங்கள் எங்கே புறப்பட்டுவிட்டீர்கள். திருக் கோயிலுக்குச் சென்று திருமகள் கேள்வனைச் சரண் அடைவதற்காகவா! அவ்வளவு தூரம் செல்லாமல் இருந்தவிட்டத்திலேயே 'இராமானுசாய நம:' என்றிருங் கள். ஆம் பதினோராம் நூற்றாண்டில் வாழ்ந்த பகவத் இராமானுசர் முன்பே நமக்காக திருமகளை முன்னிட்டு எம்பெருமானிடம் சரணாகதி செய்துள்ளார். அவரது திருத்தாள் பற்றியிருந்தாலே போதும். ஓர் மலையினின் றும் மற்றோர் மலைக்குத் தாவும் சிங்கத்தின் உடலிலுள்ள சிறு பூச்சிகளும் மலையைக் கடந்து விடுவதுபோல் நாமும் பிறவிப் பெருங்கடலைக் கடப்பது எளிதாகி விடும்.

திருமால். திருமகள் திருவருள்! எங்குமுண்டாவதற்கு அண்ணலி ராமாநுசன் அடிபோற்றி நிற்போமாக. மாறன் மலரடி வணங்கும் தொண்டர் பொற்றாளின் சென்னிவைக்கும்.

மணியரங்கன்.



அன்னை காமாட்சி



இந்தியர் அனைவரையும் ஒன்றாக இணைக்கும் பெரும்பணியில் ஈடுபடுவோமாக

(மயிலை நாதன்)

ஆன்மீகம் பற்றி எனக்கு எவ்வித தகுதியும் இல்லை. நான் மகாத்மா காந்தியை ஓரளவுக்குக் கற்றிருப்பதால் தான் முயன்று பார்க்கும் துணிவைப் பெற முடிகிறது. எல்லா மதங்களும் ஒரு பரம்பொருளின் புறத்தோற்றங் களாகும். இந்த உண்மையை மகாத்மா மனித குலத்திற்குப்போதித்துள்ளார்.

எனக்குப் பாரத நாட்டின் பழங்கால ரிஷிகளிடமும், சித்தர்களிடமும் பெருமதிப்பு இருக்கிறது. கிரேக்க நாகரிகம் தோன்றுவதற்கு முன்பே - ரோமானிய நாகரிகம் பிறப்பெடுப்பதற்கு வெகு காலத்திற்கு முன்பே, தற்கால நவீன ஐரோப்பியர்களின் முன்னோர்கள் காட்டுமிராண்டிகளாகக் காடுகளில் திரிந்து கொண்டிருந்த காலத்திற்கு முன்பே - பாரத நாட்டில் மிக உயர்ந்த நாகரிகம் செழித்தோங்கி இருந்து வந்திருக்கிறது என்பதை வரலாறு நமக்கு உணர்த்துகிறது. மிகப் பழமையான அந்தக் காலத்திலிருந்து இன்று வரையிலும் இந்த நாட்டிலிருந்துதான் உன்னதமான சிந்தனைகளும் கருத்துக்களும் அலை அலையாக வெளியுலகிற்குச் சென்று பரவியிருக்கின்றன. அவை அன்புடனும் சமா தானத்துடனும் சென்றுள்ளன. அப்படிப்பட்ட சிந்தனைகளுக்குத் சொந்தக் காரர்கள் பாரத நாட்டின் ரிஷிகள்தாம்!

அந்தப் பழங்கால ரிஷிகளின் வழி வந்தவர்கள்தாம் சுவாமி விவேகானந்தர், மகாத்மா காந்தி ஆகியோர் ஆவார்கள். அவர்கள் தங்கள் எழுத்துக்களிலும் உரைகளிலும் தங்கள் இதயத்தையும் ஆன்மாவையும் பிழிந்து வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய பேச்சு களையும் எழுத்துக்களையும் நாம் இன்று படித்தாலும், இன்றைய சூழ்நிலைக்கு அவை பொருத்தமாக அமைந்துள்ளன என்பதை உணர முடிகிறது.

"உலகிலேயே பாரத நாடு ஒன்றுதான் மிகுந்த பெருமை வாய்ந்தது" என்பதில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டு விவேகானந்தர் வெளியிட்ட கருத்துக்களைப் படித்த பிறகுதான் நமக்கு நம் தாயகத்தின் மீது இருந்த பற்று ஆயிரம் மடங்கு அதிகரித்தது என்று மகாத்மாவே கூறியுள்ளார். நேராகவும் மறைமுகமாகவும் அவர்கள் இருவரும்தாம் இன்றைய இந்தியாவை உருவாக்கி னவர்கள் என்று துணிந்து கூறலாம்.

இந்திய வரலாற்றில் அவர்கள் இருவர் மட்டும்தாம் அரசியலையும் ஆன்மீகத்தையும் நன்கு இணைத்தவர்கள் என்பது என் தாழ்மையான கருத்து. அவர்களுடைய கருத்துக்கள்தாம் இந்தியாவின் உயிர்த் துடிப்பை எதிரொலிக்கின்றன.

கடவுளைப் பற்றியும் மதத்தைப் பற்றியும் அந்த இரண்டு மகான்களும் கூறியுள்ள கருத்துக்களை எந்த மத போதகரும் மறுத்ததில்லை; மறுக்கவும் முடியாது. எல்லா நாட்டினரையும், எல்லா இனத்தவரையும், எல்லா மொழியினரையும், எல்லா மதத்தினரையும், தங்கள் சகோதரர்களாகக் கருதிய அந்த இருவரும் "சிறந்த இந்து"வாகப் பிராகசித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்து மதத்தைச் சார்ந்த ஒவ்வொரு குடிமகனும் எப்படி விளங்க வேண்டும் என்பதற்கு அவர்கள்தாம் இலக்கணமாக இருக்கிறார்கள். இந்தியர்களாகிய நாம் நமது இதயத்தையும் மூளையையும் சுதந்திரமாகவும் வலிமையுடையதாகவும் வைத்துக் கொள்ள அவர்களுடைய கருத்துக்கள்தாம் உதவுகின்றன.

ஒழுக்கச் சிதைவுக்கு ஊற்றுக் கண்ணாகத் திகழும் சில அரசியல்வாதிகள் பாரத நாட்டின் பழம் பெருமைகளைச் சிதைத்துவிட முடியும் என்று நம்பி நாட்டின் வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டிருக்கும் மோசமான இந்தக் காலக்கட்டத்தில், எங்கு நோக்கினும் கடவுள் வழிபாடுகளும் கோயில் கும்பாபிஷேகங்களும் ஆன்மீக மாநாடுகளும் நடைபெற்று வருவதைப் பார்க்கின்றோம். கொஞ்ச காலம் உறங்கிக் கொண்டிருந்த மக்கள் விழித்துக் கொண்டார்கள் என்பதையே இவை உணர்த்துகின்றன.

இந்த நேரத்தில் சுவாமி விவேகானந்தர் கூறிய சில வாக்கியங்களை நினைவு கூர்ந்திடுவது அவசியம்.

"அமரத்துவம் வாய்ந்த எனது அருமைக் குழந்தைகளே! நம் பாரத நாடு என்னும் கப்பல் பல்லாயிரக்கணக்கான ஆண்டு காலமாக தனது நாகரிகத்தை ஏற்றிக் கொண்டு உலகை வலம் வந்திருக்கிறது. தனது எண்ணற்ற அரும்பெரும்

செல்வங்களால் இந்த உலகம் முழுவதையும் வளமாக்கிக் கொண்டிருக்கிறது. கோடிக்கணக்கான மக்களை வாழ்க்கை என்னும் கடலைக் கடக்க உதவிபுரிந்து வந்திருக்கிறது. அவர்களைத் துன்பமற்ற மறுகரைக்கு அழைத்துச் சென்றபடியே இருக்கிறது. ஆனால், இன்று அந்தக் கப்பலில் ஓர் ஓட்டை விழுந்து பழுதடைந்து போயிருக்கிறது. இந்த நிலைக்கு உங்களுடைய தவறுகளே காரணம், அல்லது வேறு காரணங்களும் இருக்கலாம். என்றாலும் அதை நாம் அவ்வளவாகப் பொருட்படுத்த வேண்டியதில்லை. இப்போது நீங்கள் செய்யப்போகும் காரியம் என்ன? அந்தக் கப்பலைத் திட்டிக் கொண்டு ஒருவரோடு ஒருவர் சண்டை போட்டுக் கொண்டு இருக்கப் போகிறீர்களா? அல்லது அனைவரும் ஒன்றாக இணைந்து அந்தக் கப்பலைப் பழுது பார்க்கப் போகிறீர்களா? நாம் ஒன்றாக இணைந்து பழுது பார்க்கும் அப்பெரும் பணிக்கு நமது இதயத்தை மனமுவந்து தருவோமாக!"

உலக அமைதிக்கு வழிகோலக் கூடிய உன்னதமான பணியில் ஈடுபட்டிருக்கும் அனைத்துலக தெய்வத் தமிழ் மாநாடு எல்லா இந்தியரையும் ஒன்றாக இணைக்கும் பெரும்பணியில் தனது பங்கை ஆற்ற வேண்டும் என்பதே நமது விழைவும் வேண்டுகோளுமாகும்.

அரசன் கல்வியறிவு உள்ளவனாக இருத்தல் வேண்டும். இன்றேல், அவன் காலனைவிடக் கொடியவனாகக் கருதப்படுவான். அவன் அவநெறி தடுத்துத் தவநெறி காக்க வேண்டும். குடிமக்களை நன்னெறிப்படுத்தாவிடின், அவர்கள் பாவத்தில் ஆறிலொரு பங்கு அரசற்குச் சேரும். சமயப் போருக்கு மன்னன் இடந்தரலாகாது.

1. நல்லாரைக் காண்பது, அவர் சொல் கேட்பது, அவர் குணங்களைப் பற்றிப் பேசுவது, அவருடன் சேர்ந்திருப்பது இவையனைத்தும் நலம் தரும். இவ்வாறே தீயவர்களின் சேர்க்கை பலவகையிலும் தீமை தரும்.

2. குணங்களிற் சிறந்த சான்றோர், வாழ்க்கையில் தாழ்ச்சியுற நேரினும், தம் குணங்களில் குன்றார்.



அனைத்துலக தெய்வத் தமிழ் மாநாடு சில எண்ண அலைகள்

(கே. என். சீனிவாசன். B.A., B.L.
சுதந்திர போராட்ட வீரர். முன்னாள் மேயர். சென்னை மாநகராட்சி)

அனைத்துலக தெய்வத் தமிழ் மாநாடு நடைபெறும் போது இக்கட்டுரை வெளிவருகிறது. ஆகவே, இக்கட்டுரையில், இடம் பெறும் விஷயங்கள் மாநாட்டின் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளதாகவே இருப்பது பொருத்தமுடையதாகும் எனின் இந்த அனைத்துலக தெய்வத் தமிழ் மாநாட்டின் நோக்கம் என்ன எனும் வினா எழுகிறது. ஆகவே இந்த மாநாட்டின் நோக்கம் என்ன என்று பார்ப்போம்.

"திருமூலர், திருவள்ளுவர், திருவருட்பிரகாச வள்ளலார், நாயன்மார்கள், ஆழ்வாராதிகள் போன்ற ஞானப் பெருமக்கள் அருளிய தெய்வத்தமிழ் உலகெங்கும் பரவி மக்கள் மனதில் நிலை பெற வேண்டும் என்பதேயாகும்."

மேலும் இம்மாநாட்டில், ஆதீனங்கள், மடாதிபதிகள், ஞானப் பெருமக்கள் பங்கேற்பதாலும் வைணவ, சைவ மாநாடுகளும், இதில் இடம் பெறுவதாலும் இதைத் தமிழ் மொழி, சம்பந்தமான மாநாடு என்று சொல்லிவிட முடியாது.

ஆகவே இந்த மாநாட்டில் மொழியைப் போன்று தெய்வமும் சம பங்கேற்கிறது என்று சொல்லுவதே சரியான கருத்தாகும்.

ஆகவே தெய்வத் தமிழ் என்பது எதைக் குறிக்கும்? இந்த வினாவிற்கு விடை தருவதாக 'தெய்வத்தமிழ்' எனும் கட்டுரை, திருவாளர் க.சு. பெரிய நாயகம், தேவ நல்லூர், அவர்களால் எழுதப் பெற்று 'ஆன்மசக்தி' இதழில் வெளியாகி உள்ளது. எனவே இதைக் குறிப்பிட்டு மேல் செல்ல விரும்புகிறேன்.

அடுத்து தெய்வீகம் என்பது என்ன என்பதைக் குறித்து ஒரு விசாரணை தேவைப்படுகிறது. தெய்வப்புலவர் திருவள்ளுவர், தம் நூல் திருக்குறளில் இடம் பெறும் 'கடவுள் வாழ்த்து' எனும் முதல் அதிகாரத்தில், இந்த விசாரணைக்குப் பதில் அளித்துள்ளார். 'வாலறிவன் நற்றாள் தொழுவது, 'மாணடி சேர்தல்' 'பொறிவாயில் ஐந்தவித்தல்', 'பிறவாழி நீத்தல்' "இறைவனடி சேராதார் பிறவிப் பெருங்கடல் நீந்தார்' எனும் கருத்துக்கள் கருவூலமாக அமைகின்றன. ஆகவே மனிதன் யார்? ஆன்ம சாக்ஷாத் காரம் (Self realisation) மரணமிலாப் பெருவாழ்வு (Deathless glorious life) குறித்து, 'ஆன்மசக்தியும் அன்பு வழியும்' எனும் தலைப்பில் ஒரு சிறந்த கட்டுரை Dr.S.R. ஜெயவேலு அவர்களால் 'ஆன்மசக்தி' இதழில் இடம் பெற்றிருக்கிறது. ஆகவே, அங்குக் குறிப்பிட்டிருப்பதை மட்டும் சுட்டிக்காட்டி, மேலும் அது தொடர்புடைய சில கருத்துக்களை அதோடு சேர்க்க வேண்டும் என்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மறுமை, இறைவன் அடிசேர்தல் மோக்ஷம் எனும் கருத்துகளில் சிலருக்கு நம்பிக்கை இருப்பதும், அதே போன்று சிலருக்கு அவற்றில் நம்பிக்கை இல்லாதிருப்பதும் யாவரும் அறிந்ததே.

ஆனால் 'ஜீவன்முக்தி' எனும் இல்லறத்தில் இருந்தே துறவறம் பூணுவது என்பது. இந்நிலையை மேற்கொள்கிறவர்கள் அவர்கள் உயிர் வாழ்ந்திருக்கும் போதே, துறவிகள் பெறும் பேரின்பத்தைப் பெறுகிறார்கள் என்பது மறுக்க முடியாத ஓர் உண்மையாகும். ஒருவன் இந்நிலையில்தான் துறவறம் மேற்கொள்ளும் அளவிற்கு, தான் வாழும் காலத்திலேயே, மனக்கவலையற்ற ஒரு துன்பமற்ற இன்பவாழ்க்கையை அமைத்துக் கொள்கிறான் என்பது கண்கூடு. ஆகவே, ஒருவன் இம்மையில் இன்பப் பெரு வாழ்வு பெறுவது எவ்வாறு என்பதை விளக்குவதும் மற்றொரு முக்கிய நோக்கமாகும்.

மனிதன், தான் உயிர் வாழும் இப்பிறவியிலேயே, மறுமையில் பெறப்படுவதாகக் கூறும் பேரின்பத்தைப் பெறுகிறான். எவ்வாறு?

"Freed from attachment, fear, anger" absorbed in me, purified by the five of knowledge may have attaine my being

Gita Chapter IV verse 10

"The man attains peace, who abandoning all desires, moves about without longing, without the sense of 'I – ness' and 'my' – ness"

Gita Chapter I verse 71

இக்கருத்தையே, திருவள்ளுவர் அறன் வலியுறுத்தல்

அதிகாரத்தில்

"மனத்தின்கண் மாசிலன் ஆதல்"

அவசியம் என்பதைக் குறிப்பிட்டும் "அழுக்காறு அவா வெகுளி இன்னாச் சொல்" எனும் நான்கு குற்றங்களைச் சுட்டிக் காட்டியுள்ளார். அவற்றை கடிந்து ஒழுகுவதே அறமாகும்.

இதுகாறும் சொல்லியது தனிமனிதனின் ஒழுக்கத்தின்பாற்பட்டதாகும்.

இதுவன்றி இதற்கென இவற்றினும் சிறந்தது ஒருவன் தான் சார்ந்திருக்கும் சமூகத்திற்குச் செய்யும் உதவியும், தொண்டும், பணியுமாகும்.

"அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு", "பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின்" `அற்றார் அழிபசி தீர்த்தல்' `மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று' எனும் வள்ளுவரின் அறிவுரைகளால் இதன் முக்கியத்துவம் புலனாகிறது.

இவ்வாறே பகவத் கீதை

"rejoicing over, in the welfare of all beings – verily they also come unto me"

Chapter XII Verse 4

"Speaking of mental contents of the Godly "Compassion to beings"

Chapter XII Verse 4

இயேசுநாதர்

"உள்ளவற்றை ஏழைகளுக்குக் கொடுங்கள்".

லூக்கா - 41.

"உன்னிடம் கேட்பவன் எவனுக்கும் கொடு"

லூக்கா - 30.

"பதிலுக்கு எதையும் எதிர் பாராமல் கடன் கொடுங்கள்"

லூக்கா - 35.

காந்தி அடிகள்

தன் உழைப்பாலும், தன் மக்கள் தொண்டினாலும் உயர்ந்தவர் காந்தி அடிகள் ஆவார். அவர் தொண்டில், குறிப்பாக நம் நாட்டின் விடுதலை இயக்கத்தில், அஹிம்சையும், அன்பும் அடித்தளமாக அமைந்தன.

"Gandhi was probably the first person in history to lift the love epic of Jesus abore mere inter – action between individuals to a powerful and effective social force on a large scale. Love for Gandhi was a potent instrument for social and cultural transformation"

S.M. Sivaram – in Hindu

விவேகானந்தர்

நம் நாட்டின் விடுதலைக்குக் குரல் கொடுத்த சுவாமி விவேகானந்தர், நம் இறைவனைத் தேடும் முயற்சியில், மக்கள் தொண்டும் முக்கிய இடம் பெறுகிறது எனும் கருத்தை வலியுறுத்தியுள்ளார்.

"Service to the people, the poor and the down – trodden – is service to God is one of the basic principles of the practical Vendata of Swami Vivekananda."

"பிறர்க்கென வாழ்பவர்களே வாழ்பவர்கள்;
மற்றவர்கள் நடைப் பிணத்துக்குச் சமமானவர்களே"

"யாருடைய நெஞ்சு ஏழைமக்களுக்காகத் துயரத்தில்
அழுமோ, அவனையே நான் மகாத்மா என்பேன்"

"நீங்கள் அனைவரும் பிறர்க்கென உழைத்துக்
கொண்டே இறப்பதை நான் விரும்புகிறேன்"

சுவாமி விவேகானந்தர்.

மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்பதை இதுகாறும் பார்த்தோம். மேலும் மரணமிலாப் பெருவாழ்விற்கு

தியானம் - (meditation). ஓர் ஊன்றுகோலாக அமைகிறது என்பது வெள்ளிடைமலை. தியானம் தான் என்ன? தியானத்தை குறித்த விளக்கங்கள் தேவைதான் என்றாலும் அதை சுருக்கமாகச் சொல்லலாம். தியானம் சரியான முறையில் 15 மணித் துணிகள் (minutes) மேற்கொள்ளப்படுமானால், அதன் பயன் மூன்று மணி நேர 'தூக்கத்தினால் ஏற்படும் ஓய்விற்கும், சுகத்திற்கும், அமைதிக்கும் இணையாகும் என்று இத்துறையில் வல்லுநர் கூறுகிறார்கள்.

"Meditation is the freedom from thought. It is action of silence. It is the flowing of love."

J. Krishnamurthi

Withdraw your mind from senses and fix it in meditations. Slow down your thought currents, find the thought centre, and fix yourself there in that silence. It is the god inside you peace, happiness, harmony, health indeed everything is within you.

Thayumanavar

"During meditation we arrive at our inner state of silence. Fntry into this state, transforms man's entire nature. As we enter intimately into ourselves,

the picture of the world will disappear. When we put the mind to rest, we secure the tonic for an active energetic and effective life

Paul Brunton

Empty thyself, I shall fill thee.

Lord Jesus.

Regular "sittings" in Meditation ensures the harmonious and balanced development of life without accumulation of stress and strain. It expands awareness, improves clarity of perception and provides deep rest which is the basis of dynamic action

Mahesh Yogi

எனில் யோகம் (Yoga) என்பது என்ன?

"To be one in all ways of thy being with that which is the Highest"

"To be one with all nature and all beings"

"has four powers and objects purity, liberty, beatitude, and perfection"

"to be with the eternal"

"self perfection and not self annulment."

Renunciation of ego, acceptance of God in life – no other renunciation

ஸ்ரீ அரவிந்தர்.

இறுதியாக,

இக்கட்டுரையின் ஆரம்பத்தில் `தெய்வத்தமிழ் `ஆன்மசக்தியும் அன்புவழியும்' என்பதைக் குறிப்பிட்டேன். இறைவன் அடி அடைதல் இரு கூறுகளாகும். அதில் ஒன்று `பக்தி' - மற்றொன்று `மக்கள் தொண்டு'. பின்னர் கூறிய கருத்தையே ஒரு சிறிது விளக்கிக் கூறி, அதோடு இணைந்த தியாகம் யோகம், என்கிற கருத்துக்களையும் ஒரு சிறிது விளக்கியாங்கு இக்கட்டுரை முடிவு பெறுகிறது

படை, குடி, பொருள், அமைச்சு, நட்பு, அரண் எனும் இவ் ஆறு அங்கங்களையும் பெற்றுள்ள அரசன் அரசர்களுக்குள் சிங்கம் போன்றவன். நாடாளும் அரசன், குடிமக்கள் காண்பதற்கு எளியவனாகவும், கடுஞ்சொற்கள் பேசாதவனாகவும் இருப்பானேயாகில் அம்மன்னனது நாட்டை மக்கள் உயர்த்திக் கூறுவர். (குறல் 381, 386).

உலகப் பொதுமறை

(பா.ஸ்ரீ வித்யா. முதுகலைத் தமிழிலக்கியம் இரண்டாம் ஆண்டு
(இராணிமேரிக் கல்லூரி, சென்னை)
(கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெற்றது)

முன்னுரை:-

உலக அரங்கில் ஒரு நூல் நிலையம் ஒன்றை நடத்தி, அந்நூல் நிலையத்தில், எந்த நூல் சிறப்பாக இருக்கிறது என்று காண்போமானால், தமிழ் நூல்களில் சிறப்பான நூல் என்று இடம் பெறுவது `உத்தரவேதம்' என அழைக்கப்படும் `திருக்குறள்'. ஆகும்.

"பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ! பாரிலுள்ளோர்
நூலெல்லாம் வள்ளுவர் செய் நூலாமோ"

என்ற பெருமைக்குரிய மேற்கோளின் படி, திருக்குறள் சிறப்புவாய்ந்ததொன்றாகும்.

"அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டி
குறுகத் தறித்தது குறள்"

என்று, தமிழ் மூதாட்டியான ஒளவையாரின் கூற்றுப்படி திருக்குறள் விளங்குகின்றது.

திருக்குறள் எல்லா மொழிகளிலும் இயற்றப்பட்டுச், சிறப்பாக, பேசப்பட்டு வரும் ஒரு மாமறையாகும்.

திருவள்ளுவர்:- திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். இவர் சென்னையில் உள்ள மயிலையில் வாழ்ந்து வந்தார் என்று குறிப்புகள் பல காணப்படுகின்றன.

வள்ளுவன் என்றொருவன் வள்ளுவரை வளர்த்ததால் `திருவள்ளுவர்' வள்ளுவர் என்று அழைக்கப்பட்டார் என்றும் ஒரு செய்தி கூறுகிறது.

திருவள்ளுவர் எந்த சமயத்தைச் சார்ந்தவர் என இன்றும் பல பேராசிரியர்களால் குறிப்பிடப்படவில்லை.

ஆனால், திருவள்ளுவர் எந்த சமயத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் எவராலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய நூல் அவரால் இயற்றப்பட்டது என்பது பெருமைப்படக்கூடியதாகும்.

திருவள்ளுவர், பொய்யா மொழிப்புலவர், தெய்வப்புலவர் எனப் பல பெயர்களால் சிறப்படைகின்றார்.

திருக்குறள் - பெயர்வரக் காரணம்

செய்யுட்களில், குறள் வெண்பா என்ற ஒரு பாவகை ஒன்று உள்ளது. திருக்குறள் இரண்டு அடிகளை உடையது. அந்தக் குறுகிய அடிகளிலும் பல்வேறு கருத்துக்களை உடையது.

திருக்குறள், குறள் வெண்பா என்ற பாவகையை ஒத்ததாகும். திருக்குறள் உத்தரவேதம், பொய்யா மொழி, உலகப் பொதுமறை, மாமறை, வாயுறை வாழ்த்து, என பல பெயர்களால் சூட்டப்படுகின்றது.

திருக்குறளின்பெருமை

திருக்குறள் இரண்டடிகளை உடையதாயினும், அந்தக் குறுகிய அடிகளில் எக்காலத்துக்கும், எச்சயத்திற்கும் எந்நாட்டவர்க்கும் உரியதொன்றாகிறது. ஒளவையார் கூறுவது போல, திருக்குறள் அணுவைத் துளைத்து, ஏழ்கடலையும் புகட்டுகின்ற ஒரு சிறப்பான நூலாகும்.

திருக்குறளின் அமைப்பு

திருக்குறள், மூன்று பிரிவுகளை உடையது. அவை அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் 133 அதிகாரங்களாகும். அதிகாரத்துக்குப் பத்துப்பத்துப் பாடல்களை உடையதாய், மொத்தம் 1330 பாக்களை உடையது.

மூன்று பால்களிலும் சொல்லப்படாத கருத்துக்களே இல்லை.

அறத்துப்பால் "அறத்தான் வருவதே இன்பம்" என்று வள்ளுவர் கூறுகிறார். அறத்துப்பால், இல்லறவியல், துறவறவியல், ஊழ் இயல் என மூன்று பிரிவுகளை உடையதாகும். அறத்தின் இன்றியமையாமையைத் திருவள்ளுவர் மிகச் சிறப்பாக எடுத்துரைக்கின்றார்.

`அறத்தாற்றின் இல்வாழ்க்கை யாற்றின் புறத்தாற்றிற்
போய்ஓய்ப் பெறுவது எவன்'

என்று கூறுகிறார்.

அறத்தின் இன்றியமையாமை பற்றியும், ஒழுக்கமுடைமை, பண்புடைமை கள்ளுண்ணாமை, வாய்மை போன்ற பல அதிகாரங்களையும் மிகச் சிறந்த முறையில் ஆசிரியர் அமைத்துள்ளார்.

இல்லறத்தின் இன்றியமையாமை மட்டுமல்லாது,

துறவறத்தின் சிறப்பினை வலியுறுத்துகிறார் வள்ளுவர்.

"துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றை யவர்கள் தவம்"

என வலியுறுத்துகின்றார்.

இல்லற வாழ்க்கையானது, மனிதனை ஆசைக்கே ஆளாக்கிவிடும் ஆதலால், மனிதன் ஆசையை ஒழிக்க வேண்டும். ஆசையே துன்பத்திற்குக் காரணம்.

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு

என்று இறை பற்றின் இன்றியமையாமையை வலியுறுத்துகின்றார் ஆசிரியர்.

பொருட்பால்:- பொருட்பால், என்ற பிரிவில், அரசியல், அங்கவியல், ஒழிபியல் என்ற முப்பெருவியல்களையும் அடக்கியுள்ளார். அரசியல் எனும் பொருளில், மன்னன் தனது நாட்டைக் கட்டிக் காக்க வேண்டும் என்றும், நாட்டைப் பாதுக்காத்து, அதன் மூலம் மக்கள் நல்வழிகளை அடைய வேண்டிய முறைகளையும் ஆசிரியர் வகுத்துள்ளார். அரசியல் என்னும் பொருளில், படை, குடி, கூழ் அமைச்சு, அரண், நட்பு என்ற ஆறு வகைப் பிரிவுகளைப் பற்றி மிகச் சிறப்பாகக் கூறியுள்ளார் ஆசிரியர்.

மன்னன், தனது அமைச்சர் சொல்வழி நடத்துதல் வேண்டும். ஆதலால் அமைச்சராக இருக்கும் ஒருவன், நல்லவனாக, மன்னனை இடித்துரைக்கும் நிலையில் உள்ளவனாக இருக்க வேண்டும். இதையே

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்."

என்று கூறி, அமைச்சர் மன்னனை நல்வழியில் இடித்துரைக்க வில்லையென்றால் நாடானது, அழிவுக்குள்ளாகிவிடும் என்று வலியுறுத்துகிறார்.

இவ்வாறு, பொருட்பாலில் உள்ள கருத்துக்களை நோக்கினால், இதைக் குடியியல் என்றும் கூறலாம்.

காமத்துப்பால்: இல்லறம் - துறவறம் என்ற பகுப்புகளைப் பற்றி கூறிய திருவள்ளுவர், காமத்துப்பால் என்று அதற்கெனத் தனியே ஒரு பிரிவை வகுத்துள்ளார்.

`அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்'

என்று கூறுகின்றார்.

காதல் வாழ்க்கையைப் பற்றியும், கடிமணம் புரிந்த பின், கற்பு வாழ்க்கையையும், மிகச் சிறப்பான முறையில் அமைத்துள்ளார் திருவள்ளுவர்.

களவு, கற்பு என்ற இரு பொருட்களைப் பற்றியும் ஆசிரியர் காதல், கற்பு ஆகிய வாழ்க்கை முறையினையும் அமைத்துள்ளார்.

திருக்குறள் எல்லா நாட்டவர்க்கும் எல்லா சமயத்திற்கும், எக்காலத்திற்கும் ஏற்றதொன்றாகவும், பழக்க வழக்கங்கள், பண்பாடு, சமயம், அரசியல், போன்ற பல பொருட்களைப் பற்றியும், அவை எந்தச் சூழலுக்கும் பொருந்துவதாகவும் உள்ளன. திருக்குறளானது எல்லா மொழிகளிலும், மொழிபெயர்க்கப் பட்டு, இன்றும், பல பேராசிரியர்கள் தமது ஆய்வேடுகளில், திருக்குறளிலிருந்து பல குறிப்புகளையும், கட்டுரை எழுதவோ, பேச்சாற்றலுக்கோ, சேர்க்க சிறந்த எடுத்துக்காட்டாக திகழ்கின்றது.

வாழ்க்கைத் துணைநலம்:-

திருக்குறளானது, வாழ்க்கைக்கு வேண்டிய பல நல்ல அறக்கருத்துக்களையும், சமுதாயத்தில் வாழ்கின்ற மக்களுக்கு ஒரு சிறந்த சமுதாய நூலாகவும், ஒப்புரவாளர்களின் கண்ணோட்டத்தில் சிறந்த ஒப்புரவறிவு நுலாகவும் திகழ்கிறது. அரசியல் நோக்கில் ஒரு சிறந்த அரசியல் நூலாகவும், இவ்வாறு பல வழிகளிலும், பலர் முன்னிலையிலும் பாராட்டப்பட்ட நூல் திருக்குறளாகும். `முப்பால்' என அழைக்கப்படுகின்ற திருக்குறளில் "சொல்லப்படாத பொருள்கள் எதுவுமில்லை." என்று புலவர் ஒருவரால் போற்றப்படுகின்ற நூல் இத் திருக்குறளாகும். `தேன் சொரியும் மலர்' என்று இறையனாரே பாராட்டியுள்ளார்.

வாழ்விற்கோர் எடுத்துக்காட்டாய் உலகிலுள்ள நூல்களுக்கெல்லாம் மணிமுடியாய் திருக்குறள் திகழ்கிறது.

உலக நூல்களிலும், திருக்குறள் போல வேறு எது அமைந்துள்ளது என் ஒப்பிட்டுப் பார்த்தால், ஹெளியட் என்ற அறிஞர் தமது நூலில், பல கருத்துக்கள் அமைத்துள்ளார். சான்றாக, அவர் தம் நூலில்

கப்பல்களில் அதிகமான பொருளை ஏற்றாதே. அவ்வாறு ஏற்றினால் கப்பலானது கவிழ்ந்துவிடும் என்று கூறும் முறையில் திருக்குறளில்,

"பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்"

என்று வள்ளுவர் தமது நூலை அமைத்துள்ளார்.

பொன்னான நாட்டில் பசி, பிணி, பகை போன்ற பிணிகளானவை , இருத்தல் கூடாது என்பதை,

`உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு'

என்று அமைத்துள்ளார்.

நண்பனை அறிந்து, ஆராய்ந்து நட்பு கொள்ள வேண்டும் என்பதை

"மருவுக மாசற்றார் கேண்மை" "துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு"

என்று தமது நூலில் கூறியுள்ளார்.

அது மட்டுமில்லாமல், வெர்ஜில் என்ற ரோமானிய அறிஞர், தமது நூலான `வேலையும், நாட்களும்' என்ற தலைப்பில், உழவுத்தொழிலின் மேன்மையை விளக்குகின்றார். திருவள்ளுவரும் உழவுத் தொழிலின் சிறப்பையும்வலியுறுத்துகின்றார்.

வெர்ஜில், தமது உழவு நூலில், நிலத்தை நன்றாகக் காய வைத்து அதன்பின் எருவிடுதல் வேண்டும் என்பதை.

`தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்' என்ற

குறளில் காண்க.

மேலும், நிலத்தை நன்றாகக் காப்புக் கட்டி பயிரிட வேண்டும் என்பதை வள்ளுவர்

ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு

என்று கூறியுள்ளார்.

வெர்ஜில், நிலத்தினை அகல உழ்வதை விட ஆழ உழுவதே மேல் என்று கூறியுள்ளதையும், வள்ளுவர் தமது நூலிலும் மிகச்சிறந்த முறையில் அமைத்துள்ளார்.

சீனப் பேரறிஞரான கன்பூஷியஸ், ஒரு சிறந்த அறிஞராக கருதப் படுகிறார். அவர் தமது கூற்றில், 15 ஆம் வயதில், "நான் ஒரு சிறந்த மாணாக்கனாக இருந்தேன். முப்பது வயதில், இறைவனை அடைய வேண்டிய வழிகளைக் கற்றேன். நாற்பது வயதில் புகழும், பெருமையும் என்னை நாடி வந்தன." என்ற கருத்துரைகளை அவர் கூறுகின்றார்.

அவர் தமது நூலில், ஒரு மனிதன் ஒரு வேளை பட்டினியாகக் கிடந்தாலும், அறநெறியில் உழைத்து கிடைத்த சோறே அவனுக்குப் பயன்தரும். வள்ளுவர் பெருந்தகை.

`ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை'

என்று கூறியுள்ளார்.

இவ்வாறு, உலகிலுள்ள இலக்கியங்களில், திருக்குறளைப் போல கருத்துக்கள் காணப்பட்டாலும், மிகக் குறுகிய எல்லையை உடைய திருக்குறள் மிகச் சிறந்து விளங்குகின்றது.

இலக்கியங்களில் மிகச் சிறந்தது அணியாகும்.

திருவள்ளுவர்

`உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு

என்ற குறளில் ஒருவனது உடையானது, உடலிருந்து சரிந்து விழும் போது அதை எவ்வாறுசரி செய்வதற்குக் கைகள் செல்கின்றனவோ, அதைப் போல, நண்பன் என்பவன் மற்றொருவனுக்குத் துன்பம் விளைந்தால் அவன் கேட்காமலே, நண்பன் உதவியைத் தானே வலிய சென்று செய்ய வேண்டும் என்று கூறுகின்றார். இதை வினையுவமம் என்று கூறலாம்.

`வினைபயன் மெய்உரு ஆகிய நான்கே
வகைபெற வந்த உவமைத் தேற்றம்

[தொல்காப்பியம்]

இலக்கிய உலகில் திருக்குறள்

திருக்குறளில், `விருந்தோம்பல்' என்னும் அதிகாரத்தைவகுத்துள்ளார்.

`வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்'

என்பதில், விருந்து அளித்தவனுடைய நிலத்தில், விதையும் இடல் வேண்டுமோ. அவனுடைய நிலத்தில் தானாகவே பயிர் வளரும் என்ற கருத்து மக்களால் ஏற்கக் கூடியது.

ஏனெனில், முன்னொரு காலத்தில் விருந்து உண்டவன் ஒருவன், விருந்து அளித்தவனுடைய நிலத்தில், நன்றிக்கடனாகப் பயிர் இடுவது வழக்கமாக இருந்தது. இதையே குறிப்பாக ஆசிரியர் வலியுறுத்தியும் மிகச் சிறந்த முறையிலும் அமைத்துள்ளார்.

முடிவுரை:- இவ்வாறு, திருக்குறள் நீதி இலக்கியமாகவும், பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகவும், சமுதாயத்திற்கும், எக்காலத்திற்கும், எச்சமயத்தார்க்கும், எந்நாட்டார்க்கும், எச்சூழ்நிலைக்கும் பொருந்துவதாகவும் திருக்குறள் அமைந்துள்ளதனால், `உலகப் பொதுமறை என்று அழைக்கப்படுகிறது. உலகிலுள்ள எல்லா மக்களாலும், விரும்பத்தக்கதாயும், மக்கள் முன்னிலையில் மணிமுடியாகவும் திகழ்கின்ற நூல் திருக்குறள்.

`வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு'

எனப்போற்றப்படுகிறது.



திருச் செந்தூர் தல மகிமை

(டாக்டர். எஸ். டி. ஜெயபாண்டியன். எம். ஏ., பிஎச். டி)
தூத்துக்குடி.

குறிஞ்சிக் கடவுளான முருகப் பெருமானுடைய ஆறுபடை வீடுகளில் ஒன்றான திருச்செந்தூர் மன்னார்குடாக்கடல் ஓரத்தில் அமைந்துள்ளது. அலைகளால் சூழப்படுவதால் அலைவாய் என் றும், திருச்செந்தூரில், சீரலைவாய், ஜெயந்தி புரம் என்றும் அழைக் கப்படுகிறது. இத்தலம்சைவர்களுக்குப் புனிதஇடமாகும். மருதமும் குறிஞ்சியும் மயங்கிய ஊர் திருச்செந்தூர் என்று பரணர் பாடலில் விளங்குகிறது. ''செந்தில் மா மலையுறும் செங்கல்வராயன்'' என்பது இராமலிங்கர் வாக்கு. அலைவாயிலில் அமர்ந்த முருகன் குறிஞ்சிக் கடவுளாகவே கொள்ளப்படுகிறார். சங்க காலத்திலேயே சந்த மலை இருந்தமை புலனாகும். இம்மலையிலேயே வள்ளி திருமணம் நடை பெற்றதாகத் தல புராணம் கூறுகிறது.

திருச்செந்தூர் நீலத்திரைக் கடற்கரையில் அமைந்த கோயில் இன்பம் தரவல்ல இயற்கை வனப்பு மிகுந்ததாகும். அதிகாலையில் சிவந்த நிறத்தில் கதிரவன் நீலவானத்தில் உதயமாகும் காட்சி இத்த லத்தின் முருகப்பெருமான் நீலமயில்மீது வருவதைப் போன்று தோன் றுகிறது. மயில் குறிஞ்சிப் பறவை ஆகும். மயிலின் நீல நிறம் காணப்ப டுவதால் நீலக் கடலில் எழு பால சூரியனாக முருகனை நினைக்கும் தன்மை நக்கீரர் காலத்திலேயே வந்துவிட்டது. முருகனைச் ''செவ் வேள்'' எனவும், ''குங்கும வர்ணா கோடி சூர்யப் பிரகாசா'' என்றும் போற்றுவதுண்டு.

'' வாரும் வாரும் தெய்வ வடிவேல் முருகரே
வள்ளி மணாளரே வாரும்
புள்ளி மயிலோரே வாரும்
சங்க மொலித்தது தாழ்கடல் விம்மிற்றுச்
சண்முக நாதரே வாரும்
அருணன் உதித்தனன் அன்பர்கள் சூழ்ந்தனர்
ஆறுமுகத் தோரே வாரும்
மாறிலகத் தோரே வாரும்''

என்று அருட் பிரகாச வள்ளலார் பாடியுள்ள சண்முகர் காலைப் பாட்டு வர்ணிக்கிறது.

''மயிலும் அயிலும் கொண்டு வன்பகை தணிக்கலாம்'' என்றும் ''எம் கோன் படை வேல்துணை யுண்டு எமக்கொரு நாளும் பயமில் லையே'' என்றும் பாடி மகிழ்ந்தார் சிதம்பரசுவாமிகள். ஆலயத்தின் ராஜகோபுரத்தில் வேல்வடிவில் அமைக்கப்பட்டுள்ள தீப அலங்கா ரத்தின் ஒளி இரவில் வெகு தூரத்திற்கு ''யாமிருக்கப் பயமேன்'' என்று பக்தர்களை எல்லாம் பரவசப்படுத்தி வருகிறது.

இரண்டாவது படைவீடான திருச்செந்தூரில் முருகப் பெரு மானை வணங்கி, வாழ்வில் வெற்றிபெற்று வரும் பக்தர்கள் அதிகம். அசுரர்களை அழித்த வேல் இங்கு பக்தர்களின் பகையையும் அழித் துக் காத்து வருகின்றது. தன் பெயரை விரும்பி அழைக்கும் அன்பர்க ளுக்கும் தன்பால் நம்பிக்கை வைக்கும் அடியவர்களுக்கும் திருச்செந் தூர் வேலன் என்றென்றும் வந்து அருள் புரிகிறார். செந்திலில் சென்று கந்தனை வழிப்பட்டால் நோய் தீரும் என்பர்.

கந்தரலங்காரம் திருச்செந்தூர்ப் பெருமையைக் குறிப்பிடும் பொழுது ''மாமயிலோன், வேல் பட்டழிந்தது வேலையுஞ் சூரனும் வெற்பும், அவன், கால்பட்டழிந்தது என் தலைமேல் அயன்தன் கையெழுத்தே'' என்று கூறுகிறது. செந்திற் கலம்பகம் ''ஒழிந்தன துன்பம், உவந்தன உள்ளம், இழிந்தன நம் வினையெல்லாம் செழும் புனற் சேந்தன் திருச்செந்தில் சேர்ந்து'' என்று போற்றுகிறது.

கோயில் அமைப்பு

திருக்கோயில் கடற்கரையில் கிழக்கு நோக்கி, கடற்பாறை அடங்கிய மணல் மேட்டில் கட்டப்பட்டுள்ளது. மூன்று சுற்றாலைக ளும், மேலைக் கோபுரமும், கீழக் கோபுரமும், பலவிமானங்களும், கருங்கற்றிருப்பணி கொண்ட பல பெரிய மண்டபங்களும் கொண்டுள் ளது. கருவறையில் மூலவர் நின்ற கோலத்தில் கிழக்கு நோக்கியுள் ளார். ஆறுமுகன் இரு தேவிமார்களோடு உற்சவமூர்த்தியாகத் தெற்கு நோக்கி இருக்கின்றார். சுற்றாலைகளில் இரண்டு அம்மன்களும் மூர்த் திகளும் உள்ளார்கள். வெளிச் சுற்றாலையில் திருமால் இயற்கைக் கற்பாறையில் குடைந்த குகை மண்டபத்தில் நின்ற நிலையில் இருக் கின்றார். இக்குகைக் கோயிலுள் கஜலக்ஷ்மி, பள்ளி கொண்ட பெரு மாள், தேவிமார், ஆழ்வார்கள் உள்ளார்கள். இக்குடைக் கோயில் பல்லவ சிற்ப முறையில் அமைந்துள்ளது. கோயிலின் வெளிவாயி லில் அருகில் சண்முக விலாசம் என்ற மண்டபம் கட்டப்பட்டுள்ளது. மேற்குக் கோபுரம் மிகவும் பெரியது. அதனை ஒட்டி வசந்த மண்ட பம் என்ற பெரிய மண்டபமும், கலியாண மண்டபமும் உள்ளன.

ஐதிகங்கள்

சூரபன்மன் முதலான அவுணர்கள் தேவர்களுக்கு மிக்க கொடுமை செய்ய, அவர்களை மீட்பதற்காக முருகக் கடவுள் சேனை களுடன் தங்கியிருந்த பாசறை திருச்செந்தூர் ஆகும். சூரபன்மனை வதைத்து வெற்றியுடன் திரும்பினபோது தமிழ் நாட்டில் முதன் முதல் இறங்கின படை வீடு இதுவே ஆகும். அதனால் இவ்வூர் செயந்தி புரம் ஆயிற்று. இக்கோயில் ஆடிவேல் விழா, வைகாசி விசாக விழா, மாசித் திருவிழா, ஐப்பசி சூரசங்காரம் முதலிய விழாக்கள் ஐதிகங்கள் ஒட்டி நடைபெறும்.

வரலாறு

தமிழ் இலக்கியங்களில் சங்க நூல்களில் திருமுருகாற்றுப் படை யில் திருச்சீரலை வாய்ப்பகுதி திருச்செந்தூரைப் பற்றியது. ஆகவே இந்தத் தலம் இருபது நூற்றாண்டுகட்கு முன்பே சிறந்திருக்க வேண் டும். திருமால் குடை கோயில் பல்லவர் காலத்தது. 1648ல் டச்சுக்கா ரர் ஆறுமுகநயினார் சிலையை எடுத்துக் கொண்டு போய்க் கடலில் போட்டார்கள். அதனை வடமலைப் பிள்ளையன் 1657இல் மீட்டார். திருவிதாங்கூர் மார்த்தாண்டவர்மன் (1729 - 1758) துளுவ நாட்டுப் போற்றிகளை மூலவர் பூசைக்கு அமர்த்தினார். சண்முகர் ஆராதனை குருக்கள் மாரிடம் இருக்கிறது. செதுக்கல் திருப்பணிகள் ஒரு நூற் றாண்டளவில் சில துறவிகளால் செய்யப்பட்டன. (1868 - 1910)

இலக்கியங்கள்

சங்க நூல்களுடன் வென்றிமாலைக் கவிராயர் இயற்றிய திருச் செந்தூர்ப் புராணமும், பகழிக் கூத்தர் இயற்றிய பிள்ளைத் தமிழும், சாமிநாத தேசிகர் இயற்றிய கலம்பகமும்,, குமரகுருபரர் இயற்றிய

கந்தர் கலிவெண்பாவும், தண்ட பாணிசுவாமிகள்இயற்றியதிருச்செந் திற்கோவையும் மிகச் சிறந்த இலக்கியங்கள். மேலும் அருணகிரிநாதர் பாடிய 84 திருப்புகழ்கள் கிடைத்திருக்கின்றன. இன்னும் பல புலவர்களின் பிரபந்தங்களும் உண்டு.

மகிமைகள்

திருச்செந்தூர் முருகனின் மகிமைகளை உணர்ந்து அவரது அருளில் திளைத்த நக்கீரர் திருமுருகாறற்றுப்படையில்,

**''உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையான் பின் செல்லேன் - பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்திவாழ் வே''** என்று பாடி மக்களை அவன் பால் நம்பிக்கை வைத்து நலங்கள் பெற்றுய்யத் தூண்டியுள்ளார்.

கடற்கரைக் கோயிலில் தூண்டுகை விநாயகர் ஆலயம் வரையுள்ள மணல்மேடு முழுவதும் புனிதமுள்ள இடமாகக் கருதப்படுகிறது. இதனை அருணகிரி நாத சுவாமிகளும் ''மகாபுனிதம் தங்கும் செந்தில்'' எனத் திருப்புகழில் பாடியுள்ளார்.

சண்முக விலாசத்தினருகில் உள்ள கடற்கரைத் தீர்த்தம் ''வதனாரம்ப தீர்த்தம்'' என அழைக்கப்படுகிறது. முருகதரிசனத்திற்குச் செல்பவர்கள் முதலில் இத்தீர்த்தத்தில் நீராடி பின்னர் மறுபடியும் ஸ்கந்த புஷ்கரணியாகிய நாழிக் கிணற்றிலும் தீர்த்தமாடிச் செல்ல வேண்டுமென்பது இங்கு நிலவிவரும் வழக்கம் ஆகும். மஹாபாரதம் வனபர்வத்தில் கூறப்படும் தாமிரபரணி நதிக்கரையிலுள்ள ''குமாரதீர்த்தம்'' என்னும் இடம் திருச்செந்தூரையே குறிக்கும் என்று கருதப்படுகிறது.

செந்திலாண்டவன் சந்நிதியில் பன்னீர் மரத்தின் இலையில் வைத்து இலைவிபூதிப் பிரசாதம் வழங்கப் படுகிறது. இலைவிபூதிப் பிரசாதம் திருச்செந்தூருக்கே உரியது. இந்த இலைவிபூதிப் பிரசாதத்தின் மகிமையை ஸ்ரீசுப்பிரமண்ய புஜங்கம் விளக்குகிறது. இந்த இலை விபூதியைக் கண்டதும் வியாதிகளும் இதர துன்பங்களும் விலகி விடுகின்றன.

**''வந்த வினையும் வருகின்ற வல்வினையும்
கந்தனென்று சொல்லக் கலங்குமே - செந்திநகர்ச்
சேவகா! என்று திருநீறு அணிவார்க்கு
மேவவா ராதே வினை''** எனப் பாடியுள்ளார் ஒரு பக்தர். அறுமுகனின் பன்னிரண்டு கைகளின் நினைவாகப் பன்னிரண்டு நரம்புகளுள்ள பன்னீர் இலை தேர்ந்தெடுக்கப்படுகிறது.

முருகன் தாரகாசுரனை அழித்துவிட்டுத் தன் படைகளுடன் திருச்செந்தூரில் தங்கினார். அங்கு தேவகுருவாகிய வியாழபகவானால் பூஜிக்கப்பட்ட காரணத்தால் திருச்செந்தூர் பிரசித்தி பெற்ற வியாழ க்ஷேத்திரமாகவும் கருதப்படுகிறது.

திருச்செந்தூரிலிருந்தே குமரன் வீரவாகுத் தேவரைச் சூரபத்மனுக்குத் தூது அனுப்பினார். அது பயனற்றுப் போகவே மாமரமாக நின்ற சூரனைத் தனது வேலால் பிளந்ததுடன், தேவர்களையும் சிறை மீட்டினார். தேவர்களின் பூஜையினையும் ஏற்றுக் கொண்டார். ஆகவே திருச்செந்தூர் வெற்றிமா நகர் என்றும், ''ஜெயந்திபுரம்'' என்றும் அழைக்கப்பட்டது. செல்வமும், வெற்றியும் அருளவல்ல ஸ்தலம் என்றும் கூறுவர்.

முருகன் திருச்செந்தூரில் ஆறு முகங்களுடனும், பன்னிரண்டு கரங்களுடனும், கரத்தில் வேல் தாங்கி நிற்பதை நக்கீரர் தனிச்சிறப்புடன் கூறுகிறார். உலகம் ஒளியுடன் திகழ ஓர் முகமும், அன்பர்களுக்கு வரங்களை அருள ஓர் முகமும், யாகங்களுக்கு இடையூறு வராமல் பாதுகாக்க ஓர் முகமும், அரிய பொருள்களை எல்லாம் தெரியப்படுத்த ஒரு முகமும், வள்ளியம்மனோடு இன்புற்றிருக்க ஓர் முகமும் ஆக முருகன் ஆறு திருமுகங்களைக் கொண்டுள்ளார். வீரம், அருள, அன்பு, ஞானம், இன்பம், கருணை முதலியவைகளைக் கொண்டுள்ள ஆறுமுகப்பெருமானை அடைந்து நமது வாழ்விலும் ஒளி பெற்றுய்ய வாருங்கள் எனத் திருமுருகாற்றுப்படையில் அழைக்கிறார் நக்கீரர். இது திருச்செந்தூர் ஸ்தலத்துக்கு ஏற்பட்டுள்ள தனிச்சிறப்பு ஆகும்.

மூலவர் திருவுருவ அமைப்பும் ஆறுமுகப் பெருமான் திருவுருவ அமைப்பும் ஏனைய முருகன் கோயில்களில் காணப்படாத தனிச்சிறப்பு வாய்ந்ததாகும். இருவரையுமே மூலவராகக் கருதலாம். திருவிழாக்களிலும் ஒரே நேரத்தில் இரண்டு பிரதி பிம்பங்களும் (செயந்திநாதர், குபரவிடங்கர்) எழுந்தருளுதல் தமிழகத்தில் வேறெங்கும் காணமுடியாத காட்சி ஆகும். முருகன் ஆண்டியாகவும், அரசனாகவும் காட்சி தருகிறார். திருச்செந்தூரில் இரு கோலங்களையும் ஒன்றாகக் காணலாம்.

தானத்தில் சிறந்தது அன்னதானம் என்பார்கள். திருச்செந்தூர் முருகன் திருக்கோயிலில் வழங்கப்படுமளவு சோற்றுத் திரளை அல்லது சோற்றுக்கட்டி வேறு முருகன் கோயில்களில் வழங்கப்படுவதில்லை.


சூரசங்காரம் முடிவுற்றபின் முருகன் சிவபூஜை புரிந்த இடமும், அபிஷேகத்திற்காகத் தன் கைவேலினால் ஸ்கந்த புஷ்கரணி தீர்த்தத்தைத் தோற்றுவித்த ஸ்தலமும் திருச்செந்தூரே ஆகும். இத்தீர்த்தம் நாழிக்கிணறு என்று அழைக்கப்படுகிறது. இப்புனிதக் கிணற்றின் நீர் சுத்த இனிமையான நீராக இருப்பதுடன் நோய்களைத் தீர்க்கவும் செய்கிறது. மூலவருக்குப் பின்னால் உள்ள சுரங்க அறையில் முருகப் பெருமானால் பூஜிக்கப்பெற்ற பஞ்ச லிங்கங்கள் இருக்கின்றன.

முருகனின் கர்ப்பகக் கிருஹத்திற்கு முன்புள்ள அர்த்த மண்டபத்தை நவவீரர்களில் வீரவாகு தேவரும், வீரமஹேந்திரனும் கவாலர்களாக நின்று காவல் புரிகின்றனர். திருச்செந்தூருக்கே வீரவாகு தேவர் காவல் தெய்வமாக இருப்பதால், இந்த ஸ்தலம் வீரவாகுப் பட்டினம் என்றும் அழைக்கப்படுவதாகவும் சொல்லப்படுகிறது. இங்கு வீரவாகு தேவருக்குப் பூஜை நடந்த பின்னர்தான் மூலவருக்குப் பூஜை நடக்கிறது.

செந்திலம்பதியை அடைவோர்க்குச் சாகாவரமும் தந்திடும்; உடம்பில் போகாப் பீடை போக்கி இரட்சிக்கும்; வறுமை நீங்கும்; வாழ்வுண்டாகும் என்று திருச்செந்தூர் அகவல் கூறுகிறது.

**''பன்னிரு கரத்தாய் போற்றி பசும்பொன்மா மயிலாய் போற்றி
முன்னிய கருணை யாறு முகப்பரம் பொருளே போற்றி
கன்னியர் இருவர் நீங்காக் கருணைவா ரிதியே போற்றி
என்னிரு கண்ணே கண்ணு ளிருக்குமா மணியே போற்றி''**

— திருச்செந்தூர் தல புராணம்



வள்ளலாரின் சன்மார்க்கம்

ப.ஜெபச்செல்வி (முதல் ஆண்டு, இளங்கலை இயற்பியல்
எத்திராஜ் மகளிர் கல்லூரி, சென்னை)
(கட்டுரைப் போட்டியில் முதற்பரிசு பெற்றது)

உலகில் உள்ள மதங்கள் நூற்றுக்கும் மேற்பட்டவை என்றும் அவற்றில் மிகப்பெரிய மதங்கள் ஒன்பது என்றும் (அறிஞர்) சமயவாதிகள் கூறுகின்றனர். அவை முறையே இந்து மதம், புத்த மதம், சமண மதம், கிருஸ்துவ மதம், இஸ்லாம் மதம், பார்சி மதம், சைவம், வைணவம், சமய சன்மார்க்கம் என்பன. இவை அனைத்தும் நாம் வாழ் கின்ற இந்த ஆசிய கண்டத்தில் தோன்றியவை. அதனால் ஆசிய கண்டத்தினை "ஞானம் பிறந்த கண்டம்" என்று அறிஞர்கள் கூறுகின்றனர். அதிலும் ஆறு மதங்கள். நம் இந்தியாவில் பிறந்தவை. அதிலும் மூன்று மதங்கள் தமிழகத்திலே தோன்றியவை. அவை சைவம், வைணவம், சுத்த சன்மார்க்கம் என்பன. இவற்றுள் சன்மார்க்க நெறியைத் தோற்றுவித்தவர் நம் வள்ளலார்.

பொருளை வாரி வழங்குபவர்கள் பொருள் வள்ளல்கள் ஆவர். அருளை வாரி வழங்குபவர் அருள் வள்ளல்களாவர். அத்தகைய அருள் வள்ளல்களுள் வள்ளலார் என்ற பெயரையே பெற்றுத் திகழ்பவர் நம் வள்ளலார். இயற்பெயர் - இராமலிங்கம். பெற்றோர் - சின்னம்மையார். இராமையாப் பிள்ளை. பிறந்தநாள் - 5.10.1823. பிறந்த ஊர் - சிதம்பரத்திற்கு வடக்கே உள்ள மருதூர். உடன்பிறந்தோர் - சபாபதிப் பிள்ளை, பரசுராமப்பிள்ளை, சுந்தரம்மாள், உண்ணாமுலை.

சென்னையில் ஒரு வயது முதல் பன்னிரண்டு வயது வரையிலும் சென்னையை அடுத்த திருவொற்றியூரில் பன்னிரண்டு முதல் முப்பத்திஐந்து வயது வரையும், சிதம்பரத்தில் கருங்குழியில் முப்பதைந்து முதல் நாற்பத்திநான்கு வயது வரையும், வடலூரில் நாற்பத்தி நான்கு முதல் நாற்பத்தி ஏழு வயது வரையும், சித்திவளாகத்தில் நாற்பத்தி ஏழு (47) முதல் ஐம்பத்தொரு வயது வரையும் ஆக ஐம்பத்தொரு (51) ஆண்டுகள் இப்பூதவுடலுடன் வாழ்ந்தார்.

பள்ளிக் கல்வி என்று குறிப்பிட்டு சொல்லக் கூடிய அளவில் அவர் கல்வி கற்கவில்லை. அவராகவே ஓதாமல் உணர்ந்த உத்தமர். அவரிடம் தொழுவூர் வேலாயுத முதலியார், பொன்னேரி சுந்தரம் பிள்ளை, இறுக்கம் இரத்தின முதலியார், பண்டாரம் ஆறுமுக ஐயர், காயாறு ஞான சுந்தரம் ஐயா ஆகியோர் கல்வி பயின்றனர். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர், காஞ்சிபுரம் சபாபதி முதலியார், மாயூரம் முன்சீப் வேதநாயகம் ஆகியோர் அவர்காலத்தில்வாழ்ந்தவர்கள்

வள்ளலார் ஞானியாக, துறவியாக, புலவராக, கவிஞராக, சொற்பொழிவாளராக, எழுத்தாளராக, உரையாசிரியராக, நூலாசிரியராக, ஞானாசிரியராக, மருத்துவராக, சித்தராக விளங்கியவர். அவர் தனிக் கொள்கையை, தனி மார்க்கத்தை, தனிக் கொடியை, தனி சபையை, தனி வழிப்பாட்டைத் தனி முறையாக கண்டவர். திருக்குறள் வகுப்பு, முதியோர்கல்வி ஆகிய துறைகளில் அவரது தொண்டு சிறந்து விளங்கியது.

நாம் எண்ணங்களைக் கோடிக்கு மேல் எண்ணுகிறோம். ஆனால் திருவள்ளுவரோ, "அடுத்த நிமிடம் உயிர் வாழ்வதை அறிய மாட்டார்கள், எண்ணங்களைக் கோடிக்கு மேல் எண்ணுகிறார்கள்" என்று கூறுகிறார்.

"ஒரு பொழுதும் வாழ்வதறியார் கருதுப
கோடியும் அல்ல பல"

ஆக நாம் எண்ணங்களைக் கோடிக்கணக்கில் எண்ணுகிறோம். எழுத்துக்களை இலட்சக்கணக்கில் எழுதுகிறோம். பேச்சுக்களை ஆயிரக்கணக்கில் பேசுகிறோம். கொள்கைகளை நூற்றுக் கணக்கில் கூறுகிறோம். திட்டங்களைப் பத்துக் கணக்கில் வகுக்கிறோம். ஆனால் ஒன்றையாவது உறுப்படியாகச் செய்வதில்லை. (ஆனால்) வள்ளலாரோ பல செயல்களை அதுவும் செயற்கருஞ் செயல்களைச் செய்து முடித்துள்ளார்.

சத்திய தரும சாலை, சத்திய ஞான சபை, சத்திய சமரச சன்மார்க்க சங்கம் போன்ற அமைப்புகளைத் தோற்றுவித்துச் செயற்கரிய செய்கைகளைச் செய்துள்ளார்கள்.

வள்ளலார் ஞானியாகவும், சித்தராகவும், சித்த மருத்துவராகவும் இருந்து உடற்பிணிக்கும், மனப்பிணிக்கும் உயிர்ப்பிணிக்கும் மருந்து கூறியவர்.

"ஞான மருந்து இம்மருந்து - சுகம்
நல்கும் வைதிய நாத மருந்து

சுத்த சன்மார்க்க மருந்து - அருட்
ஜோதி மலையில் துலங்கு மருந்து

சித்துருவான மருந்து - என்னைச்
சித்தெல்லாம் செய்ய செய்வித்த மருந்து"

பெற்ற உடம்பு சாகடிப்பதற்காக அல்ல என்று உணர்ந்தவர்கள் சித்தர்கள். அதை விளக்கும் பாடல் "சாகாக் கலை" பாடலாகும்.

"நந்த வனத்தி லொரு ஆண்டி - அவன்
நாலாறு மாதமாய் குயவனை வேண்டி
கொண்டு வந்தா னொரு தோண்டி - அதைக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி!"

உலகில் ஒரு ஆன்மா, நாலாறு மாதமாய் - நாலும் ஆறும் பத்து மாதங்களாய், தாய் வயிற்றில் வளர்ந்து குயவனை வேண்டி - பிரம்மாவை வேண்டி, கொண்டு வந்தானொரு தோண்டி - இந்த உடம்பு அதை பாதுக்காக்காது உலக இன்பத் துன்பங்களில் உழற்றி போட்டுடைத்தாண்டி - சாகடித்தாண்டி.

வள்ளலார் வாழ்வில் எண்ணற்ற வியப்பிற்குரிய செயல்கள் பல செய்துள்ளார். அவற்றில் சிலவற்றை மட்டும் இங்குக் குறிப்பிடுகிறேன்.

ஒரு வயது குழந்தை வள்ளலாரை தில்லை நடராச பெருமானைத் தரிசிக்க அவர் தமையனார் கையில் ஏந்திச் சென்றார். தில்லை நடராசரைப் பார்த்த குழந்தை நடராசப் பெருமானைக் கண் கொட்டாமல் பார்த்து விட்டு காண்போர் அதிசியிக்க கலகல்வென நகை செய்தார். அதைக் கண்ட தீட்சிதர் இக்குழந்தை அம்பலவாணனின் அருட் குழந்தையே என்றார்.

மற்றொரு முறை, அவர் ஆசிரியர்

"ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்.
ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்
மாதாவை ஒரு நாளும் மறக்க வேண்டாம்
வஞ்சனைகள் செய்வாரோடு இணங்கவேண்டாம்"

என்று உலக நீதி பாடல்களைச் சொல்லச் சொல்லியும் சொல்லாதிருந்தார். ஏன் சொல்லவில்லை என்று ஆசிரியர் கேட்ட போது இறைவனிடத்தில் ஏன் வேண்டாம் வேண்டாம் என்று சொல்லிக் கொண்டிருப்பானேன். ஏதாவது வேண்டும் வேண்டும் என்று எதை வேண்டலாம் என்று எண்ணிக் கொண்டிருப்பதாக் கூறினார். நீ வேண்டுமானால் வேண்டும் வேண்டும் எனப்பாடு என்று ஆசிரியர் கட்டளையிட்டார், அவர்

"ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற
உத்தமர் தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்.
பெருமை பெறு நினது புகழ் பேசவேண்டும்
பொய்மை பேசா திருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும்
மத மான பேய் பிடியாதிருக்க வேண்டும்.

மருவு பெண்ணா சையை மறக்கவே வேண்டும்
உனை மறவா திருக்க வேண்டும்
மதி வேண்டும் நின் கருணை நிதி வேண்டும்
நோயற்ற வாழ்வில் நான் வாழவேண்டும்

தருமமிகு சென்னையில் கந்தகோட் டத்துள்
வளர் தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே!"

என்ற தமிழுலகம் போற்றி மகிழும் பாடலைப் பாடி முடித்தார்.

ஒரே இரவில் 1596 அடிகளை உடைய அருட் பெருஞ்ஜோதி அகவல் என்ற நூலை எழுதி முடித்தது வியப்பிற்குரிய ஒரு நிகழ்ச்சியாகும்.

வள்ளலார் சமுதாயத்தில் உள்ள ஏழை, பணக்காரர், மேல் ஜாதி, கீழ் ஜாதி முதலிய முறைகளைக் கண்டித்தார். கோயில் கட்டியவன் கோயிலுக்குப் போகாத நிலையையும் குளம் வெட்டியவன் தண்ணீர் எடுக்க முடியாத நிலையையும் எடுத்துக் கூறி காந்திஜிக்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்னரே புரட்சிக்கு வித்திட்டவர்.

யார் பெரியர் என்ற கேள்விக்கு திருவள்ளுவர் கூறுகிற விடை பணத்தரல்லர், நிலத்தரல்லர், பேச்சரல்லர், எழுத்தரல்லர், வயது முதிர்ந்த கிழவர்களும் அல்லர். செயற்கரிய செயல்களைச் செய்பவரே. குறள் மூலம் இது விளங்குகிறது. அத்தகைய பெரியர் வள்ளலார்.

இப்படி வள்ளலாரின் வாழ்வில் நிறைய வியப்பிற்குரிய செயல்கள் இடம் பெற்றுள்ளன. அவை அனைத்தும் எழுத இயலாது.

தமிழில் நான்கு நூல்கள் தனிச்சிறப்புப் பெற்று விளங்குகின்றன. முதல் சிறப்பு பகவத் கீதைக்கு இது மனிதன் கேட்க கடவுள் சொன்னது. இரண்டாவது சிறப்பு திருவாசகத்திற்கு இது கடவுள் கேட்க மனிதன் சொன்னது. மூன்றாவது சிறப்பு திருக்குறள் பெற்றிருக்கிறது. இது மனிதன் கேட்க மனிதன் சொன்னது., நான்காவது சிறப்பு திருவருட்பாவிற்கு இது மனிதருள் அருளாளார்கள் கேட்க அருளாளர் கூறியது.

தமிழில் உள்ள நூல்களில் ஐந்து நூல்கள் தம் பெயரையே தமக்குத் தனிப் பெருஞ்சிறப்பாகப் பெற்று விளங்குகின்றன.

1. மந்திரங்கள் பல. ஆனால் திரு சேர்ந்த மந்திரம் ஒன்றே ஒன்று அது திருமந்திரம்
2. வாசகங்கள் பல. நானும் நீங்களும்

பேசுவதெல்லாம் வாசகங்கள் தான். ஆனால் திரு சேர்ந்த வாசகம் ஒன்றே ஒன்று அது திருவாசகம்.

3. கோவை பல. தஞ்சை வாணன் கோவை, திருவெங்கைக் கோவை, திருவாரூர் கோவை என்பன. ஆனால் திரு சேர்ந்த கோவை ஒன்றே ஒன்று அது திருக்கோவை.

4. குறள்கள் பல. ஔவைக் குறள் முதலியன. ஆனால் திரு சேர்ந்த குறள் திருக்குறள் ஒன்றே.

5. அருட்பாக்கள் பல. அருளாளர்கள் எழுதிய பாக்கள் அனைத்தும் அருட்பாக்களே. ஆனால் திரு சேர்ந்த அருட் பா ஒன்றே அது திருவருட்பா.

திருவருட்பா ஆறு திருமுறைகளைக் கொண்டது. அதாவது ஆறு பகுதிகள். 399 பதிகங்களை உடையது. 5818 பாடல்கள் பெற்றுள்ளது. அதில் உள்ள அருட்ஜோதி அகவல் ஒரு மலை போன்றது. அதில் உள்ள பாடல்களின் அனைத்து அடிகளும், படிகளைப் போன்று உள்ளன. இதுவே திருவருட்பாவின் அமைப்பு.

உலகில் உள்ள ஞானிகளும் அறிஞர்களும் இறைவனின் இருப்பிடத்தைத் தேடி அலைந்து கொண்டிருக்கும் போது, வள்ளலார் ஒருவரே இறைவனின் இருப்பிடம் மனிதரது உள்ளம் என்பதை அறிந்து கூத்தாடி மகிழ்ந்தனர். அதனை தம் திருவருட்பாவில் கீழ்க் கண்டவாறு கூறியுள்ளார்.

"எத்துணையும் பேத முறாது எவ்வுயிரும்
தம்முயிர்போல் எண்ணி உள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார் யாவர்
அவர் உளம் தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும் இடம்
என நான் தேர்ந்தேன்
அந்த வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திட என்
சிந்தை மிக விழைந்ததாலோ"

இதில் உள்ள எத்துணையும் என்ற சொல்லுக்கு இரு பொருள் உண்டு ஒன்று எந்த அளவும் என்பது மற்றொன்று எள்ளளவும் என்பதாகும். எள்ளளவும் பேதமின்றி வாழுவும் மனிதனின் உள்ளத்தில் இறைவன் உள்ளான்.

நாடுகளை ஆட்சி புரிபவர்கள் இறைப்பற்று கொண்டவர்களாக இருக்க வேண்டும். அத்தகையவரின் ஆட்சியில் நாடு நலம் பெற்று விளங்க வேண்டும். இறைப்பற்று இல்லாத ஆட்சியாளர்கள் ஒழிய வேண்டும் என்று வள்ளலார் தீர்மானமாகக் கூறுகின்றார். இதனை 5618வது அருட்பாவில் குறிப்பிட்டுள்ளார்.

"கருணை இல்லா ஆட்சி கடுகி ஒழிக
அருள் நயந்த நன்மார்க்கர் ஆள்க - தெருள்நயந்த
நல்லோர் நினைத்தநலம் பெறுக நன்றுநினைந்து
எல்லாரும் வாழ்க இனிது."

3344 வது பாடலில் வள்ளலார் ஒருவரை பார்த்தவுடன் நாம் வணங்க வேண்டும் அதுவும் அவர்கள் வணங்கும் முன் நாம் வணங்கவேண்டும் என்று கண்டிப்பாகக் கூறியுள்ளார். நபிகளும் "சலாம் செய்வதில் முந்திக் கொள்" என்று கூறியுள்ளார். பிறர் கைகூப்பி வணங்கிய பின்னரும் மரியாதைக்காகக் கூட வணங்காத கைகளைக் கொடுங்கை என்று கூறுகிறார் வள்ளலார்.

335, வது பாடலில் மனிதனின் இழிவான எண்ணங்களைச் சாடிப் பாடியுள்ளார். ஏழையே எனினும் வட்டியைப் பெருக்கு அவர்கள் மனைகளை கவர்வதும், பிறர் ஓட்டைச் சட்டியை வைத்திருந்தாலும் பொறாமை கொள்வதும், சூதுகளை கையாள்வதும் தவறு என்றும், இதனைப் பிறர்செய்வதாகக் கூறுவதாகக் கூறாமல் அதை தாம் செய்வதாகத் தம் மேல் ஏற்றித் தம்மை ஆண்டவன் காக்குமாறு பாடுகிறார். தேனான அப்பாடல்

"வட்டியே பெருக்கிக் கொட்டியே ஏழை
மனை கவர் கருத்தினேன் - ஓட்டைச்
சட்டியே எனினும் பிறர் கொளத் தரியேன்
தயவிலேன் சூதுகள் அடைந்த
பெட்டியே நிகர்த்த மனத்தினேன்
-உலகில்
பெரியவர் மனம் வெறுக்கச் செய்
எட்டியே மண்ணாங்கட்டியே அனையேன்
எனினும் காத்தருள் எனையே".

வள்ளலாரின் வாக்குகளில் மிகச்சிறந்த வாக்காக பொன் வாக்காகத் திகழ்கிறது கீழ்உள்ள பாடல்.

"நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து
நெகிழ்ந்து நெகிழ்ந்து அன்பே நிறைந்து நிறைந்து
ஊற்றெழும் கண்ணீரதனால் உடம்பு
நனைந்து நனைந்து அருளமுதே நன்னிதியே
ஞான
நடத்தரசே என்னுரிமை நாயகனே என்று
வனைந்து வனைந்து ஏத்துதும் நாம் வம்மின்
உலகியலீர் மரணமில்லாப் பெருவாழ்வில்
வாழ்ந்திடலாம் கண்டீர் புனைந்துரையேன்
பொய்புகலேன் சத்தியம் சொல்கிறேன்"

இப்பாடலின் மூலம் "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற வள்ளலாரின் உயர்வான கருத்தை விளக்குகிறது. வள்ளலார் "வாடிய பயிரைக் கண்ட விடத்து வருந்தினேன்." என்று கூறுவதன் மூலம் அவர் அஃறிணை பொருள்களிடத்து அன்பு கொண்டுள்ளது விளங்குகிறது.

வள்ளலார் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர். சொத்துக்கள் எதுவும் இல்லாதவர். அவருக்கு வருமானமும் எதுவும் இல்லை. இத்தகைய நிலையில் அவருடைய தமையனார் அவரைக் கடிந்து வீட்டைவிட்டு வெளியில் அனுப்பினார். தமையனார் வீட்டில் அவருக்கு உணவுதரக் கூடாது என்று கூறினார்.

அவரும் இந்த இழிவான நிலையிலும் எவரிடமும் இரந்ததில்லை. யாரிடமிருந்தும் கேட்டுப் பெற்றதில்லை. பசி எப்படி மனிதரை வதைக்கும் என்பதை உணர்ந்த வள்ளலார் மக்களின் பசியை நீக்க சத்திய தரும சாலையை நிறுவினார். அன்று அவர் வைத்த அடுப்பின் நெருப்பை இன்று அவரது அன்பர்கள் அணையாது காத்து வருகிறார்கள். இது உலகில் எங்கும் நடைபெறாத சிறப்பாகும்.

மனிதன் வேற்று நாட்டினரிடத்தும், வேற்று மதத்தினரிடத்தும், வேற்று மொழியினரிடத்தும் மட்டுமின்றி உயிரினங்கள் அனைத்தின் மீதும் அன்பு கொள்ள வேண்டும். இதற்கு உயிர் இரக்கம் என்று பெயர். இதையே வள்ளலார் ஜீவகாருண்ய ஒழுக்கம் என்று குறிப்பிடுகிறார்.

பிணங்களை எரிப்பதில் தனக்கு உள்ள எண்ண மாறுபாட்டை தன் அருட்பாவில் சிறப்பாக விளக்கியுள்ளார்.

"அணங்கெழு பேர் ஓசையோடு பறையோசை
பொங்கக் கருணை கொண்டிருந்தோ
பிணங்கமுவி எடுத்துச் சென்று சுடுகின்றீர்
இனி சாகும் பிணங்களே, நீர்
கணங் கழுகுண்டாலும் ஒரு பயன் உண்டே
என் பயன் கண்டீர் சுட்டே
எணங்கெழு சாம்பலை கண்டீர் அது
புன்செய் எருவுக்கும் உதவா தன்றே!"

வள்ளலார் முற்றும் துறந்த துறவியாகத் திகழ்ந்தார். அவர் தெய்வத்திற்கு அடுத்தபடியாக தமிழ் மொழியினிடத்துப் பற்று கொண்டார். தமிழ் தனது தாய்மொழி என்பதற்காக பற்றுக் கொள்ளவில்லை. அதன் அருமை பெருமைகளை அறிந்து அதனைக் காதலித்தார். கற்பதற்கு இனிமையாகவும், எளிமையாகவும் சாகாக் கல்வியைத் தரக் கூடியதும் தமிழ் ஒன்றே என்று அறிந்து அம்மொழியை வணங்கினார்.

மனுமுறை கண்ட வாசகம், ஜீவகாருண்ய ஒழுக்கம், சன்மார்க்க விண்ணப்பங்கள் ஆகிய உரைநடை நூல்களும் வள்ளலாரின் வியத்தகு வாக்குகளை விளக்குகின்றன.

வள்ளலார் வாழ்க்கையில் உய்ய ஒரு மனிதன் பின்பற்ற வேண்டிய மூன்று மகா மந்திரங்களை கூறியுள்ளார். அவை

"பசித் திரு
தனித் திரு
விழித் திரு" என்பன.

இதைவிட எளிமையாக வேறு யாராலும் உபதேசிக்க முடியாது. இம் மூன்று சொற்களுக்கும் விளக்கித்தான் பொருள் அறிய வேண்டும் என்று இல்லை. இம் மூன்றும் சொற்களின் மூலம் வள்ளலார் நம்மை அயராது பணி செய்யச் சொல்கிறார். இம் மூன்றையும் ஒருவர் வாழ்வில் கடைப்பிடித்தால் என்ன வரும்? மூன்று வார்த்தைகளின் முதல் எழுத்துகளைக் கூட்டிப் பாருங்கள் `பதவி' வரும். கல்விப் பதவி, செல்வப் பதவி, அருள் பதவி, சொத்துப் பதவி, போன்ற எல்லா வகையான பதவிகளும் தானே வந்து சேரும் என்று கூறுகிறார்.

வள்ளலார் கூறிய அனைத்தையும் நாம் கடைப்பிடித்தால் நாம் உய்ய முடியும். வள்ளலாரைப் பற்றி இவ்வளவு அறிந்த நாம் மற்றொன்றையும் உணர வேண்டும். அதாவது வள்ளலாரின் மறைவுக்குபின் வடக்கே தோன்றிய காந்தியடிகள் போற்றிய கருத்துக்கள் யாவும் வள்ளலாரின் கருத்துக்களே. அரசியலில் நுழைந்து சுதந்திர போராட்டத்தில் பங்கு கொண்ட காந்தியடிகள் போற்றிய குறிக்கோள்களும் கருத்துக்களும் வள்ளலாருடையதே என்பதை காந்திய சத்திய சோதனையைப் படித்தால் விளங்கும்.

வள்ளலார் தம் கொள்கைகளையும் குறிக்கோள் களையும் தாம் எதிர்பார்த்த அளவில் மக்கள் ஏற்கவில்லை என்பதை அறிந்து "கடைவிரித்தேன் கொள்வாரில்லை' என்று கூறித் தைப்பூச நன்னாளில் சித்திவளாகத்தில் 30.1.1874 அருட் ஜோதி வடிவான இறைவனாயினார். அவரே தற்போது சன்மார்க்கம் நடத்துகிறார்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

என்ற குறளுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக திகழ்கிறார் நம் வள்ளலார்.

வள்ளலாரின் மறைவுக்குப் பின் அறிவியல் (விஞ்ஞானம்) சிறந்த முறையில் முன்னேற்றம் அடைந்துள்ளது. மனிதனின் கண்டுபிடிப்புகள் அனைத்தும் மனிதன் அமைதி வாழ்வில் வாழ உதவ கண்டு பிடிக்கப்பட்டவையே. ஆனால் நாம் கண் முன்னே காணும் நிலை என்ன? பக்கத்து நாட்டாரோடு ஏன் பக்கத்து வீட்டாரோடு சுமுகமான நிலையில் மனிதன் வாழ கற்கவில்லை. வள்ளலாரும் காந்தியும் மனிதன் வாழும் விதிமுறைகளை எடுத்துக் கூறியும் பணத்தாசையாலும் வீணான இடம்பத்தாலும் மனிதன் அழிவு பாதையில் விரைந்து நோக்கிச் செல்கிறான். நம் இந்தியாவில் தான் எத்தனை குழப்பங்கள். புத்தனும் காந்தியும் தோன்றிய நாட்டில் ஏன் இந்த நிலை? அவர்கள் கூறிய வழிமுறைகளைப் பின்பற்ற தவறியதே காரணம். இனி நாம் வள்ளலாரின் வாக்கைப் பின்பற்றி உய்வோம்.

வள்ளலார் நம்மை வாழ வைக்க வந்த உத்தமர். வாழ்க வள்ளலார்! வாழ்க அவர் அருள் நெறி! வாழ்க இவ்வையகம்.



சிவ வழிபாடு

(புலவர். ஞானமுருகு, பம்மல், சென்னை)

''உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவோம்''.

சைவம்:

சைவ நெறி இந்தியாவில் இமயம் முதல் குமரி வரையிலும் வாழும் பல மக்களின் வாழ்க்கை நெறியாக உள்ளது. தமிழகத்தில் மட்டுமல்லாது ஸ்ரீலங்காவிலும், இமய மலையகத்திலும் வாழும் பெரும்பான்மையினர் சைவத்தையே தங்கள் வாழ்க்கை நெறியாகக் கொண்டவர்களாவர்.

சிவ வழிபாடு:

சிவ வழிபாடு மிகவும் தொன்மையானது. ''சைவ சமயமே சமயம்; சமயா தீதப் பழம்பொருள்'' என்னும் தாயுமானவரின் கூற்று இன்று உண்மையாகவே திகழ்கிறது. இந்திய மக்கள் சிவ லிங்கத்தைத் தொன்றுதொட்டு வழிபட்டு வருகின்றனர் என்பதற்குச் சான்றுகள் பல உள்ளன.

சீனா, ஜப்பான், இந்து கடல் தீவுகள், பாபிலோனியா, எகிப்து, கிரீஸ். அயர்லாந்து, இங்கிலாந்து, ஜெர்மனி, மெக்சிகோ, பெரு ஆகிய பகுதிகளில் சிவ லிங்க வழிபாடு இருந்தமையால், உலக முழுவதும் ஒரு காலத்தில் சிவ வழிபாடு இருந்திருக்கிறது என்பதை அறிய முடிகிறது.

''எந்நாட்டடவர்க்கும் இறைவா போற்றி'' என்ற மணிவாசகரின் திருவாக்கின் வாய்மையைச் சொல்லவும் வேண்டுமோ!

சைவம் ஒரு தெய்வீக நெறி என்ற நிலையில், இந்தியப் பண்பாட்டில் தோன்றி வைதீக நெறியாக வளர்ந்ததனை நாம் நினைவிற் கொள்ளவேண்டும். திருமுறைகளும், சித்தாந்த நூல்களும் இவ்வுண்மையினை நன்கு விளக்கும்.

வேத நெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்க அவதரித்தவர் ஞானசம்பந்தர் என்பர் சேக்கிழார் பெருமான். சைவர்கள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் மாணிக்கவாசகர் என்னும் நால்வரையும் சைவ சமயக் குரவர்கள் என்றும், மெய்கண்டார், அருணந்தி சிவம், மறை ஞான சம்பந்தர், உமாபதி சிவம் என்னும் நால்வரையும் சந்தான குரவர்கள் என்றும் கூறுவர்.

சைவம் என்பதை விளக்கும் திருமூலர் 'சைவம் சிவனுடன் சம்பந்தமானது' என்பர். எல்லாப் பொருள்களையும் கடந்த நிலையிலும், எல்லாப் பொருள்களிலும் ஊடுருவி நிற்கும் பரம்பொருளையே 'சிவன்' எனக் கூறுகிறோம்.

'எல்லாம் சிவ மயம்' என்பர் ஆன்றோர். சிவனன்றி வேறு தெய்வமில்லை, சிவ புண்ணியமின்றி வேறு பூசை இல்லை என்று சங்கிர சங்கிதை கூறுகிறது.

மேலும் ,

''சிவனொடொக் குந்தெய்வம் தேடினும் இல்லை
அவனொடொப்பர் இங்கு யாவரும் இல்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னும்
தவனம் சடை முடித்தாமரை யானே'' என்பர் திருமூலர்.

சிவனையே முழு முதற்கடவுளாகக் கொண்டு சரியை, கிரியை, யோகம், ஞானம் முதலிய நான்கினாலும் அவனை அடையப் பாடு படும் சமயமே சைவமாகும்.

வழிபாடு:

வழிபாடு என்பதற்கு இறை நெறி நிற்றல் எனவும், பக்தி என்பதற்கு அன்புறுதல் என்னும் பொருள். இறை நெறி நிற்றல் அன்புறுதல் ஆகிய இரண்டும் ஒழுக்கத்தால் ஒன்றேயாம்.

கடவுளை அடைவதற்கு உரிய வழிபற்றி ஒழுகுவது வழிபாடாகும். அவ்வாறு வழிபடும்போது உள்ளம் உலகியல் ஆசைகளை அறவே மறந்து இறைவனொடு ஒன்று பட்டிருக்க வேண்டும். அவ்வாறில்லையேல் உள்ளம் இறைவழி நிற்காது.

மனிதப் பிறவியின் பயன்:

'அரிதரிது மானிடராதல் அரிது' என்றார் செந்தமிழ் மூதாட்டியார்.

'குறிக்கோளிலாது கெட்டேன்' என்றார் அப்பர். ஒவ்வொருவரும் சிவனுக்குப் பூசை செய்யக் கடமைப் பட்டவர்கள் என்பர். மானிடப் பிறவி எடுத்ததே சிவ பூசை செய்வதற்குத்தான் என்றும் கூறுவர்.

''மானிடப் பிறவிதானும் வகுத்தது மனம் வாக்(கு) காயம்
ஆனிடத் தைந்துமாடும் அரன் பணிக்காக வன்றோ
வானிடத் தவரும் மண்மேல் வந்து அரன்தனை அர்ச்சிப்பர்
ஊனெடுத் துழலும் ஊமர் ஒன்றையும் உணரார் அந்தோ'' என்பது சித்தியார்.

''வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்த சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்தவா வினையேன் நெடுங்காலமே''

என்பது அப்பர் பாடல்.

இறைவன் ஆன்மாக்களுக்கு அளித்துள்ள கருவி கரணங்களைக் கொண்டு அப்பெருமானோடு தொடர்பு கொண்டு விளக்கம் பெறுதலே சிவபூசை என்பதும் இப்பாடலால் அறியலாம்.

இதனாலேயே, மனிதர்களேயன்றிப் பிற உயிர்களும் சிவ பூசை செய்து உயர்ந்ததாக ஆன்றோர்கள் அறிவுறுத்துவர்.

'யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை' எனக்கூறும் திருமந்திரமும் சிவ பூஜையினையே குறிக்கின்றது.

இறை நிலை:

இறைநிலை வடிவற்ற நிலையாதலால், அந்நிலையில் இறைவனை வழிபடுவது உள்ளம் சிறந்த பக்குவம் அடைத்தவர்க்கு மட்டும் கூடும். ஆகவே மக்கள் இறைவனை ஏதாவது ஒரு வடிவிற் கொண்டு வழிபடலாம்.

முன்னோர்கள் சிறந்த பக்குவம் உடையவராயிருந்தமையால், இறைவனைத் தானாகவே கருதும் தற்பாவனை நெறியில் இறைவனை வழிபட்டு வந்தனர். பிற்காலத்தில் மக்களுக்கு அது கடினமாய்த் தோன்றியதால் வடிவ வழிபாடு இன்றியமையாததாயிற்று.

வடிவ வழிபாடு (சிவலிங்க வழிபாடு)

வடிவ வழிபாடு உடையவர்கள் வடிவத்தின் மூலமாக இறைவனையே அடைய முயல்கிறார்கள். ஆகையால் இறுதியில் அவர்கள் பக்குவத்தால் உயர்ந்து தற்பாவனை நெறியை மேற்கொண்டு உயர்வடைகின்றார்கள்.

எனவே வடிவம் என்பது - இடையே நிற்பதன்றி, வடிவ வழிபாட்டிற்கு எக் குற்றமும் இல்லை. இவ்வாறு வடிவ வழிபாடு (சிவலிங்க வழிபாடு) செய்து, அதனால் முத்தியடைந்த நாயன்மார்கள் முப்பது பேர் ஆவர்.

இதனை,

''... எறிபத்தர் கலயர்
முருகனார் கண்ணப்பர் ஆனாயர் தாயர்
மூர்த்தியார் சண்டேசர் திருநாளைப் போவார்
சேரனார் சாக்கியனார் கூற்றுவனார் தண்டி
சிறப்புலியார் பசுபதியார் கலிக்காமர் கலியர்
காரியார் அதிபத்தர் நீலநக்கர் பூசல்
கணம்புல்லர் கோட்புலியார் நமிநந்தி யடிகள்
சீருடைய கழற்சிங்கர் வாயிலார் தூய
செருத்துணையார் புகழ்த்துணையார் காடவர்
மூரிநெடு வேற்செங்கட் சோழனார் ஆக
முப்பது பேர் சிவலிங்கத்தால் முத்தியடைந்தார்''

என்பதனால் அறியலாம்.

புண்ணியம்:

சிவ பூசையினைத் தருமம், புண்ணியம் என்று கூறுவர்.

''நல்ல சிவதன் மத்தால் நல்ல சிவயோகத்தால்
நல்ல சிவஞானத்தால் நானழிய - வல்லதனால்
ஆரேனும் அன்புசெயின் அங்கே தலைப்படுங்காண்
ஆரேனும் காணா அரண்''


என்னும் திருக்களிற்றுப் பாடியார் சரியை கிரியைகளையே 'சிவ தருமம்' என்கிறது.

திருமூலர் சிவ பூசையினைப் 'புண்ணியம்' என்பர்.

''புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ணல் அதுகண்டு அருள்செய்யா நிற்கும்
எண்ணிலி பாவிகள் எம்மிறை ஈசனை
நண்ணல் செல்லாது நழுவுகின் றார்களே''

என்பது திருமந்திரம்.

நாமனைவரும் சிவ பூசை செய்து பிறவிப் பெருங்கடல் நீந்துவோமாக!



பிரும்ம முகூர்த்தம்:

பிரும்ம முகூர்த்தத்தில் எழுந்திருப்பவன் நோயற்றவன். புத்திசாலி; அவனுடைய குடும்பம் சந்தோஷமானது. அவனுக்குப் பிறக்கும் குழந்தைகள் அறிவாளிகளாக விளங்குவார்கள். புத்திசாலிகள் காலையிலேயே எழுந்துவிடுவார்கள். காலையில் படித்தால் புத்தியில் நன்றாகப் பதியும். குழந்தைகளின் கல்வி சிறக்க காலையில் படிப்பது நல்லது. மனதில் நீண்ட நாட்கள் நிற்க வேண்டியவர்களைக் காலையில் சொல்லிச் சொல்லிப் பழக வேண்டும்.

படுக்கையில் இருந்து எழும்போது செய்ய வேண்டியது என்ன?

படுக்கையில் இருந்து எழுந்ததும் உடனே தனது குலதெய்வத்தையும் மாதாபிதாவையும் நினைக்கவேண்டும் குருவை மனதால் வணங்கி தான் வழிபடும் தெய்வ மந்திரம், தோத்திரம் இவைகளை வாயால் அல்லது மனதிற்குள் சொல்லி 'அன்னபூர்ணே, மஹா சரஸ்வதி, மஹாலெக்ஷ்மி. தேஹி சௌபாக்யம்' என்று சொல்லி இரண்டு கைகளையும் விரித்து தனது கண்ணால் பார்க்க வேண்டும். பின்புதான் மற்ற எதையும் பார்க்க வேண்டும். இப்படிச் செய்தால் அன்றைய காரியங்கள் நல்லபடியாக நடக்க உதவியாகும்.

கால் கை ஏன் கழுவ வேண்டும்:

பல் துலக்கியதும் முகம், கை, கால் இவைகளையும் கழுவிக் கொண்டோ துடைத்துக்கொண்டோ சுத்தம் செய்து கொள்ள வேண்டும். ஒரு சிலர் மலம், ஜலம் கழித்த பின்பு கால்களைக் கழுவாமல் நடப்பார்கள். தாங்கள் கால்களில் செருப்பு அணிந்திருப்பது காரணம் என்பார்கள். இது பிழை. மலசலம் கழிக்கும் போது உடல் மற்றும்வாய் இங்கெல்லாம் சில மாற்றங்கள் நரம்புகளில் நிகழுகின்றன. இது சம நிலையை அடைய கால்களைக் கழுவியும் வாயைக் கொப்புளித்தும் சுத்தம் செய்ய வேண்டியது அவசியம்.

படையல்

வீட்டில் சமைக்கும் உணவுப் பண்டங்களையே தெய்வத்திற்கு நிவேதனம் செய்யலாம். அது ஆசாரக் குறைவாக இருந்தால் பழம், வெற்றிலை இவைகளை நிவேதிக்கலாம். திராக்ஷை, கற்கண்டு, அவல், பேரீட்சை, வெல்லக்கட்டி இவைகளைத் தங்கள் சௌகர்யப்படி நிவேதனம் செய்யலாம். சிறந்த நிவேதனம் பசுவின்பால், கதலிப்பழம், தேன் மூன்றும் கலந்த நிவேதனம் தான். இதை 'திரி மதுரம்' என்று உயர்வாகச் சொல்லுவார்கள். இது எல்லா தெய்வங்களுக்கும் ஏற்ற நிவேதனம். வசதிக்குறைவானவர்கள் தோத்திரம் மட்டும் செய்தால் போதுமானது.

சிறந்த சாப்பாட்டு இலைகள்

சாப்பிட வாழை இலை சிறப்பு. வெள்ளிக் கிண்ணி உயர்ந்தது. புரச இலை, சீமைப் பூவரசு இலைகளை ஏற்கலாம். சூடு இல்லாத சாப்பாட்டை தாமரை இல்லையின் பின்புறம் சுத்தம் செய்து சாப்பிடலாம். ஆல இலை சாப்பிட உகந்தது அல்ல. பழைய காலத்தில் வாழை மட்டையை ஜாக்கிரதையாக இரண்டாகப்பிரித்துஅதைத் தைத்துச்சாப்பாட்டிற்கு ஏனமாகவும் பயன்படுத்துவர். மண்சட்டி உடலுக்கு நல்ல குளுமையைத் தரும். அது வழக்கத்தில் உடைந்து போகும் என்று இன்று பயன்படுத்துவது இல்லை. வெள்ளித் தாம்பாளத்தில் பால்சோறு சாப்பிட்டால் உடம்பில் ரத்த சுத்தி ஏற்படும்.

இசையும் தெய்வமும்

(செந்தமிழ்ச் செல்வர். கோ. செல்வம். எம்.ஏ.,
முன்னாள் வானொலி இயக்குனர்)

சுவாமி சிவானந்தா அவர்கள் ஒரு கதையை வேடிக்கையாகச் சொல்வதுண்டு.

''அன்றாடம் வழிபாடு செய்கிறீர்களா? ஜபம் - தியானம் செய்து வருகிறீர்கள் அல்லவா?'' என்று யாரையாவது பார்த்துக் கேட்டால், அதற்கு அவர், ''எப்படி முடியும்? உணவுப் பண்டங்களின் விலையோ மிக உயரத்தில் கிடக்கிறது. நானும் பாதி பட்டினி. எப்படிப் பூசை - புனஸ்காரம் செய்ய இயலும்?' என்றுதான் பதில் சொல்வார்.

''உணவே ஏன் நீ விலை உயர நிற்கிறாய்? ஏழைக்கும், நடுத்தர மனிதனுக்கும் எட்டாப் பொருளாகி விட்டாய்?'' என்று கேட்டான். அதற்கு உணவுப் பொருள், ''உன் பக்தி குறைவாக உள்ளது. விலை உயர்கிறது. மழை சரியாகப் பொழிவதில்லை; உற்பத்தி மிகவில்லை'' என்று உணவுப் பண்டம் பதில் பகரும்.

மழையிடம் சென்று, ''ஏன் தேவையான அளவு பெய்யவில்லை? என்னாயிற்று?'' என்று வினவினால், மழையோ, 'குற்றம் என்னுடையதன்று; அக்கினியை நம்பி நான் இருக்கிறேன்''என்று விடை கூறும்.

அக்னியை அணுகி, ''என்ன காரணம்?'' என்று கேட்டால், ''ஹோமம் யார் செய்கிறார்கள்? யாகம் யார் செய்கிறார்கள்? வறண்ட மண்ணில் மரம் கிடையாது; ஹோமப் புகை எழுந்தால் மேகம் கருணை கொள்ளும். இப்போதெல்லாம் சிகரெட்டுப் புகையினால், மேகமண்டலம் மாசு பெற்றுள்ளதே, எதற்கும் என் தேவனாகிய வாயு பகவானைக் கேட்டுப் பாருங்கள்'' என்று எடுத்துச் சொல்லும்.

வாயு பகவானை அண்டினால், அவர், ''நான் என்ன செய்ய! ஒலியே ஆகாயத்தின் சொத்து. நான் ஆகாயத்தினால் தோற்றுவிக்கப்பட்டவன். ஆகாயம் தீய புகைகளால் மண்டியுள்ளது. பேரொலிகள் மண்ணிலிருந்து எழும்பி ஆகாயத்தை முட்டிக் கலக்கப்படுத்தியுள்ளன. எதற்கும் ஆகாயத்தைக் கேட்டுப் பாருங்களேன்'' எனப் பதில் பகரும். ஆகாயத்தை அண்டி நின்றாலோ, ''உண்மையில் நிலம், நீர், காற்று, வாயு யாவும் என்னிடம் தோன்றியவையே. நான் ஒலிக்கு ஆதாரம். நல்ல ஒலியைத் தந்து வந்தவன் என்னிடம் பூமியிலிருந்து வரும் நாராச ஒலிகளும் தீய பேச்சுக்களும் என்னை மாசுபடுத்துகின்றன. இறைப் பாடல்களும், இசைக் கீதங்களும் வருவது குறைந்து விட்டன. முறையான நாம சங்கீர்த்தனம் எனக்குப் பிடித்தமானது. அது கிடைத்தால் பதிலுக்கு நான் மழை பொழிய வைப்பேன்'' என்று அது பதிலிறுக்கும்.

சுவாமி சிவானந்தர் சொல்லும் இக்கதை இன்று சிந்தித்தற்குரியது. இனிய ஓசை இந்த மண்ணில் பிறப்பது அருகி விட்டது. இசை வழிப்பாடல்கள் இங்கிருந்து புறப்படுவதும் அருகி விட்டது. நாம சங்கீர்த்தனம் நலிந்து வருகின்றது. தூய்மை சேர்க்கும் தொன்மையான இறை இசை குறைந்து விட்டது என்பது உண்மை.

இசைக்கு மாபெரும் ஆற்றல் உண்டு. இசைப்பவர் கேட்பவரைத் தம் இசையால் ஈர்ப்பார். தம் வயப்படுத்துவார். இசையே மருத்துவம், இசையே இறை, ஆன்ம லயத்தை உண்டாக்க வல்லது இசையே. ஆன்ம பரிபாகம் அடைய எளிய வழி பக்தியோகமே யாகும். பக்தியை இசைவழிப் பண்ணியும் பக்தியோகம் புரியலாம். இவ்வகையான இறைவழிச் சாதனத்தைச் சங்கீர்த்தன யோகம் என்று சுவாமி சிவானந்தர் குறிப்பிடுவார். ஆக பக்தி உலகில் இசைக்கு ஓர் உரிய இடம் உண்டு என்பது உறுதி.

தென்னகத்தில் திவ்விய நாம சங்கீர்த்தனம் என்ற முறை உள்ளது. தென்னகம் தவிர ஏனைய மாநில மக்களான குஜராத்தியர், மராத்தியர், வங்காளியர், பிஹாரியர் யாவரும் அவரவர் மரபுக்கேற்ப ''மோஹல்லாக்களில்'' சங்கீத பக்தி புரிந்து வருவதைப் பார்க்கலாம். அகண்ட கீர்த்தனை, வாத்சல்ய கீர்த்தனை, தாசபாவ கீர்த்தனை, லீலா கீர்த்தனை முதலான பக்திப் பாடல்கள் இன்னமும் சிற்சில பகுதிகளில் இங்குமங்குமாகப் புழக்கத்தில் இருந்து வருகின்றன. ஏனைய பக்திமார்க்கங்களைவிட சங்கீத வழியான பக்தி எளிது. மூச்சு அடக்கிப் பிராணயாமம் செய்வதை விட எளிது இசைவழி பக்தி. பாடத் தெரிந்தோர் பாடி மகிழ்ந்திட அப்பாடலில் திளைப்பதும் எளிய பக்தியே. வேதம் தெரிந்தவர்கள், யோகம் தெரிந்தவர்கள் எல்லோரும் இசைப் பக்தியில் எளிதில் வீழ்ந்து நனைந்து மகிழலாம். எளிய இனிய பக்தி முறை இந்த இசை வழியான பக்தி முறை. எனவேதான், ''உளங்கனிந்த போதெலாம் உவந்து உவந்துபாடுவேன்'' என்றார் திருஞானசம்பந்தர்.

இறைவனே ''ஏழிசையானவன்; இசைப்பயனானவன்'' என்பதைப் பாடியே அறிவித்தவர்கள் நம் நாயன்மார்களும் ஆழ்வார்களும்

இசைக்கு எல்லா இடங்களிலும் உரிமை உண்டு. வீட்டுக்குள்ளே பாடலாம்; வீதியில் விடியற்காலையில் குழுவோடு பாடலாம்; கோவில்களில் பாடலாம். எங்கும் பாடலாம். எப்போதும் பாடலாம். எப்படிப் பாடினாலும் இறைவன் அதனை ஏற்றுக் கொள்வானாதலால் எப்படியும் பாடலாம். பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் தமது பாடல்களின் பதிகமுடிவில் 'பாடி ஆடுக' என்றே குறிப்பிட்டிருக்கக் காணலாம்.

இசைவழி இறைவனை ஏத்திடவே அருணகிரி நாதர் சந்தமுறையில் திருப்புகழ் செய்தார். இசையினால் அமைந்த பக்திப் பாடல் பாடுபவரையும் கேட்பவரையும் தெய்வீக ஓட்டத்தில் கொண்டு செலுத்தும்.

பக்தியின் ஒன்பது முறைகளுள் சங்கீர்த்தனமும் ஒன்று என்பது மறக்கற் பாலதன்று. திவ்விய நாம சங்கீர்த்தனம் என்பது தென்னிந்தியாவிற்கே உரியது. திவ்விய நாமக் கீர்த்தனங்களில் பக்தியின் எல்லாப் பாவங்களும் அடங்கியுள்ளன. பகவானின் லீலா விநோதங்களைச் செவிமடுக்கும் சிரவணம், பகவான் நாமங்களை மீண்டும் மீண்டும் நாமடுத்து உச்சரிக்கும் ஸ்மரணை, பகவானின் கீர்த்திமை சங்கீர்த்தனை பகவானின் பாதாரவிந்தங்களை வழிபடும் பாதசேவை, மலர்களால் வழிபடும்

அர்ச்சனை, பகவானின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கும் வந்தனை, பணியாள் பாவமான தாஸ்யம், நண்பனின் பாவமான சக்யம், தன்னையே பகவானுக்கு அர்ப்பணிக்கும் ஆத்ம நிவேதனம் - ஆகிய யாவுமே பக்தியின் பாவங்களாகித் திவ்விய நாம சங்கீர்த்தனத்தில் அடங்கிக் கிடக்கக் காணலாம்.

நம் பாரத நாட்டின் வட பகுதியில் கீர்த்தனை பாடுவது பக்தியில் சிறப்பான பகுதியாகும். மிருதங்கமும், சிப்ளாவும் கொண்டு பாடுவது கீர்த்தனை. சந்தனமும் மாலையும் அணிவித்து மிருதங்கத்தை வழிபட்ட பிறகு கீர்த்தனையைத் தொடங்குவர். வைணவ சம்பிரதாயம் நிறைந்துள்ள மணிப்பூரில் மிருதங்கம், கோல், மந்திரா ஆகியவற்றுக்கு ஆரத்தி செய்துவிட்டுக் கீர்த்தனை தொடங்குவார். கீர்த்தனை பாடுபவரும் மாலை புனைவது சிறப்பானதாகும்.

இசை ஒருவரை இசைவிக்கக் கூடியது. இசை என்றால் 'புகழ்' என்ற பொருளும் கொண்டது. புகழாகிய இசையை, இசையால் பாடினால் இறைவன் இரங்குவான், இறங்கி வருவான் என்பது உண்மை. இமயமலையை அசைக்க முயன்ற இராவணன் இசை பாடியே இறைவனின் திருவுள்ளத்தைக் கரைய வைத்தான். தேவார, திருவாசக, பிரபந்த ஆசிரியர்களும் திருப்புகழ் அருணகிரி முதலான பல பக்தர்கள் இறைவனை இசையால் ஏத்தியே அவனை நெருங்கினர். சங்கீத மும்மூர்த்திகளான தியாகராஜர், முத்துசாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரி முதலானோரும் கோபாலகிருஷ்ண பாரதியார் போன்றோரும், இசைவழியே இறைவனை ஏத்தினர். அவனை அறிந்தனர். அதன்பின் அவனோடு இணைந்தனர்.

முத்தமிழில் 'இசைத்தமிழ்' என்பது இயலுக்கும் நாடகத்திற்கும் இடைப்பட்ட தமிழ். 'முத்தமிழால் வைதாரையும் வாழ வைப்போன் முருகன்'' என்பது அருணகிரியின் அரிய வாக்கு. இசைத் தமிழால் அறியாது வைதாலும் இறைவன் ஏற்பான் என்கிற கருத்தில் அருணகிரியார் அதனை உணர்ந்திருக்க வேண்டும்.

இசை உலகில் 'சஞ்சாரம்' என்ற சொல் வழங்குவதுண்டு. தன்னை மறந்த லயத்தில் இசையறிஞர் பாடும்போது எங்கெங்கோ சஞ்சரிக்கிறார். கேட்பவரையும் கூடவே அழைத்துச் சென்று சஞ்சரிக்க வைக்கிறார். இறைப்பாடல் பாடும் பாடகர் இறைவனோடு சஞ்சரிக்கிறார்.

பக்தி உலகம் பரந்தது; பல்வேறு பட்டது. பல்வகை முறைகளில் இறைவனை உணர வழிவகுப்பது பக்தி உலகம். அதில் வேதாந்த வழி இறைவனை அடையலாம் என்று ஒரு வழி உண்டு. வேதாந்தம் அறிந்து கொள்ள[illegible]ன உறுதிப்பாடும், அகன்ற அறிவும் தெளிந்த சிந்தனையும், [illegible]ழ்ந்து ஆராயும் நுண்ணறிவும் தேவை. மிகச் சிலரே இத்தி[illegible]மை பெற்றவராவார். குண்டலினி வழி பேரின்ப நிலை அடையலாம் என்று ஒருவகை வழியைப் பக்தி உலகம் சுட்டுகின்றது. அவ்வழி செல்ல மகத்தான ஆன்ம பலம் தேவையாகும். ஆனால் இன்றைய அவசர உலகில் இசை வழியாக இறைவனை ஆடிப்பாட இயலும். எளிதில் இயலும். இசைபாடி இறைவனை ஏத்திப் பரவுகையில் தூய்மையின்மை அகலும்; மனம் அலைபாயும் தன்மை ஓயும்; அறியாமை என்ற இருள் விலகும். கபீர்தாசர், குருநானக், சூரதாசா, அருணகிரிநாதர், தியாகராஜர் போன்ற ஆன்றோர்கள் நாத யோகம் வழியாகவே இறைவனை அணுகுகின்றனர். இசையானது சத்துவ குணத்தையும், தூய்மையையும் உண்டாக்கவல்ல தாய் - இனிய இசையால் சமாதி நிலையும் எய்த முடியும் என்பது உண்மையாதலால் நாம் பாடுவோம்; பரமனைப் பாடி ஏத்துவோம், அவன் அருள் பெற்றிடப் பாடி யாடி மகிழ்வோம்.

மூன்றாம் திருமுறை

சம்பந்தர்

வீடலால வாயிலாய் விழுமியார்கள் நின்கழல்
பாடலால வாயிலாய் பரவநின்ற பண்பனே
காடலால வாயிலாய் கபாலிநீள்க டிம்மதில்
கூடலால வாயிலாய் குலாய தென்ன கொள்கையே.

மெய்ஞ்ஞானிகள் முத்திப்பேற்றை யன்றி வேறொன்றை விரும்புதல் இல்லையாகி, நின் திருவடிகளைப் பாடல் வாயிலாய்க் கொண்டாடித் துதிக்கின்ற பண்பனே. முதுகாட்டைத் தவிர விரும்பி நிற்றல் இல்லாதவனே நெடிய கவாலி என்னும் பெயரையுடைய மதிலையுடைய நான்மாடக்கூடலாகிய திருவாலவாயில் எழுந்தருளிய பெருமானே, குலவி விளையாடியது எம்மால் அறியும் தரத்தன்று.

நான்காம் திருமுறை

அப்பர்

மாதர்ப் பிறைக்கண்ணி யானை
மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப்
புகுவா ரவர்பின் புகுவேன்
யாதும் சுவடு படாமல்
ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங்
களிறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங்
கண்டறி யாதன கண்டேன்.

அழகுடைய பிறையைச் சடையில் கொண்டவனையும், மலையான் மகளையும், பூவும் புலனும் ஏந்திப் பாடிச் செல்லும் அடியார் பின் செல்வேன். தீங்கு நீக்கிய யாக்கையின் சுவடு தோன்றாமல் திருவையாறு அடையும் போது மிகவும் களிறுமாய் நிற்கும் சக்தியையும் சிவத்தையும் கண்டேன். இதற்குமுன் காணாத அத்தோற்றத்தைக் கண்டேன்.

ஐந்தாம் திருமுறை

அப்பர்

பண்ணின் நேர் மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னார்வலஞ் செய்ம்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே.

பண்ணையொத்த மொழியாளாகிய உமையம்மையை ஒரு பங்கில் கொண்டவரே. மண்ணுலகத்தார் வலம் செய்யும் மறைக்காடரே அடியேன் என் கண்களால் உம்மைக் காணுமாறு வேதங்களால் அடைக்கப் பெற்ற இக்கதவினைத் திண்ணமாகத் திறந்து அருள் செய்வீராக!



தமிழர் தம் ஆதிவழிபாடு

(க.ப. அறவாணன் - புதுச்சேரி)

தமிழர்தம் ஆதிவழிபாடு

"தன் தலையைத் தானே அம்மனுக்குப் பலி இடுவது நவகண்டம் எனப்பெற்றது. தன் கழுத்தைத் தானே அறுத்துத் தற்கொலை செய்து கொள்ளும் வீரர்களின் உருவங்கள் பதித்த சிற்பங்கள் பல இடங்களில் உள்ளன. அவை வழிபடப் பெறுகின்றன. அதனைப் போலவே தீக்குளித்துத் தற்கொலை செய்து கொண்ட பெண்டிரும் தெய்வமாகக் கொள்ளப் பெற்றனர்.

ஒன்றை / ஒருவனை / ஒருத்தியை வணங்குவது; தொடர்ந்து வணங்குவது எதிர்பார்ப்புடன் / வேண்டுதலுடன் தொடர்ந்து வணங்குவது வழிபாடு எனப்பெறும், கூட்டமாகவும், அமைப்பாகவும், ஒழுங்காகவும் நிகழுவதால் வழிபாடு மதத்தின் புலப்பாடாக விளங்குகிறது.

வழிபடுதலுக்கு ஆதி காரணம் அச்சமே. காலம் போகப் போக மனித மனம் தெளிவுறத் தெளிவுற அன்பும் வழிபாட்டிற்கு ஒரு காரணமாயிற்று. மேலும், காலம் நீளநீள நன்றியும் காரணமாக ஒட்டிக் கொண்டது. அனைத்து வழிபாடுகளின் ஊற்றுக்கண் அச்சத்திலிருந்தோ, அன்பிலிருந்தோ, நன்றியிலிருந்தோதான் தோன்றியதாக இருக்கும். மேற்கண்ட மூன்றோ, மூன்றில் இரண்டோ, ஒன்றோ கூட வழிபாட்டின் தோற்றத்திற்கும், வலுப்பெறுதற்கும்காரணமாக இருந்திருக்கலாம்.

தமிழர்தம் தொன்மை வழிபாட்டை ஊன்றி நினைக்கையில் அவர்தாம் வழிபாடு இன்று முற்றும் மாறிவிட்ட ஒன்றாக இருக்கிறது. தமிழர்தம் பற்கால வழிபாட்டில்,

முன்னோர் வழிபாட்டுக் கூறுகள்,
இயற்கை வழிபாட்டுக் கூறுகள்,
தத்துவ/தனி மனித வழிபாட்டுக் கூறுகள்
மூலவர் வழிபாட்டுக் கூறுகள்

முதலிய அனைத்தும் கலந்து பிணைந்து தமிழர் ஆதி வழிபாடு எது என்று அடையாளம் அறிய முடியாத அளவிற்கு மிடைந்து கிடக்கின்றன.

தமிழகம் எங்கும் பரவிக் கிடக்கும் பல்லாயிரக்கணக்கான நாட்டுப்புற அம்மன் வழிபாடுகள், தமிழ் முன்னோர் தாய்த் தெய்வ வழிபாட்டினர் என அறிவிக்கின்றன. ஆனால் தமிழர்தாம் ஆதி நூலான தொல்காப்பியத்தில் மாயோன், சேயோன், வேந்தன், வருணன் ஆகிய ஆண் தெய்வங்கள் முன்னிலை பெற்றதும், நாட்டுப்புற அம்மன் வழிபாட்டின் தெய்வமான கொற்றவை பின்னிலை பெற்றதும், நானிலத் தெய்வங்களில் இடம் பெறாததும், அன்றே பெண் தெய்வ வழிபாடு வீழ்ச்சி பெற்றதை நினைவூட்டுகின்றன. பெருந்தெய்வ, சிறுதெய்வ இணைவை உண்டாக்கிய பிற்காலமாந்தர்கள் கூட அம்மனுக்கு என்று தனியே கோயில் அமைத்தும், அம்மனைக் கருவறையில் நுழைய விடாததும் எண்ணத்தக்கன.

இயற்கையாக இறந்துபோகும் அம்மா அப்பா உருவப் படங்கள் இன்றும் தமிழ்க் குடும்பங்களில் வழிபாட்டுக்கு உள்ளாகி வணங்கப்பெறுதல் எண்ணுதற் குரியது. ஆண்டுதோறும் நிகழ்த்தப் பெறும் திவசம், அமாவாசை நாள்தோறும் காக்கப்பெறும் விரதம், இறந்தோர் விரும்பிய பொருளை வைத்துப் படைக்கும் பழக்கம் ஆகியன முன்னோர் வழிபாட்டின் எச்சங்களே. இறந்த பெற்றோர் பேரனாகவும், பேத்தியாகவம் பிறப்பர் என்ற நம்பிக்கையும் எண்ணுதற் குரியது.

போரில் இறந்த வீரர்களுக்கு எடுக்கப்பட்ட நடுகற்கள், அவை தொழப்பட்ட செய்திகள் ஆகியன முன்னோர் வழிபாட்டின் ஒரு கூறாகி வீரவழிபாட்டின் எச்சங்களாக உள்ளன.

கி.பி. 9ஆம் நூற்றாண்டில் திருப்புறம்பியத்தில் நிகழ்ந்த போரில் பங்கேற்று இறந்த மூன்றாம் பிருதிவிபதிக்குப் போர் நிகழ்ந்த உதிரம் படிந்த தோப்பிலேயே பள்ளிப்படை எடுத்த செய்தியும், அது வழிபாட்டிற்குள்ளான செய்தியும் எண்ணத் தக்கன.

திருநெல்வேலிமாவட்டம் ஏரல் என்ற சிற்றூரில் இறந்துபோன அருணாசல நாடார் சமாதியில் எழுப்பப்பட்ட கோயில் இன்று சுற்றுப்புற மக்களுக்குப் பைத்திய நோய் தீர்க்கும் கோயிலாக விளங்குகிறது.

சிவகங்கைச் சீமையில் இறந்துபோன சிவகங்கை அரசர், அரசி ஆகியோர் சமாதியில் கோயில் எழுப்பப்பட்டு அவை இன்றும் வழிபாட்டில் உள்ளன. (தகவல்: டாக்டர ஆறு.இராமநாதன், தஞ்சாவூர்)

சைவ மடங்களில் இறந்த துறவியர் சமாதியில் எழுப்பப் பட்ட கட்டடங்கள் அனைத்தும் இன்று வழிபடும் இடங்களாக உள்ளன.

பிற்காலச் சோழர் காலத்தில் இராசராசசோழன் குடும்பத்தைச் சார்ந்த பஞ்சவன் மாதேவியின் நினைவாகப் பட்டீசுவரம் பக்கத்தில் பள்ளிப்படை ஒன்று எழுப்பப்பட்டு உள்ளது. அப் பள்ளிப்படை பஞ்சவன் மாதேவி ஈச்சுரம் எனக் கோயிலாகக் குறிக்கப்பெற்று வழிபடும் இடமாக இன்றும் விளங்குகிறது. சைவ நாயன்மார்கள் அறுபத்து மூவரும் சிவன் கோயிலில் உள்ளே இடம் பெற்று வழிபடு தெய்வங்களாக ஆகிவிட்டனர். சிற்சில இடங்களில் நாயன்மார்களுள் சிலர் சான்றாக, திருஞான சம்பந்தர் முதலானோர் தனியே வழிபடப் பெறுகின்றனர்.

தூயவரும் இறப்பர், தீயவரும் இறப்பர், இறப்பது என்பது மூச்சு விடுதல் நிற்பது. மூச்சு விடுவது உயிர்ப்பது என்று தமிழில் அழைக்கப் பெற்றது. உயிர்த்தல் இருத்தலால் உடல் இயங்குகிறது. எனவே உடல் இயங்கக் காரணமாக இருக்கும் மூச்சு, உயிர் என்று அழைக்கப் பெற்றது. உயிர் என்ற மூச்சு போன பின், உடல் சவமாகிறது. உள்ளிருந்து வெளியே வந்தும், உள்ளே சென்று வரும் காற்றே வெளிமண்டலத்திலும் உள்ளது. எனவே, உடலில் இருந்து இறப்பால் பிரிந்த மூச்சுக் காற்று வெளிக்காற்றோடு கலந்ததாகக் கருதப்பெற்றது. ஆகவே, இறந்தவர்தம் உயிர் / மூச்சு / ஆவி இந்த உலகத்திலேயே காற்றுடன் கலந்து இருப்பதாக நம்பப் பெற்றது. இறந்தவர் தூயவரானால், அவர் தம் ஆவி தமக்கு உதவுதல் வேண்டும், இறந்தவர் தீயவரானால் அவர்தம் ஆவி தம்மைத் துன்புறுத்தாமல் இருக்க வேண்டும் என்னும் ஆவி வழிபாடு தொடங்கலாயிற்று; பின், தொடருவதாயிற்று. இவ்வாறாக ஆவி வழிபாடு தோன்றி நிலைபெற்றது. ஆவி வழிபாடு, கல்வழிபாடு - நடுகல் வழிபாடு - உருவ வழிபாடு ஆகியவற்றுடன் கால அடைவில் இணைந்து நாட்டப்பட்ட பொருளா

கிய கல்லில் அல்லது நடுகல்லில் இறந்தவர்தம் ஆவி குடிகொள்ளுவ தற்கு வேண்டும் முகமாக கால்கோள் நிகழ்ச்சி நிகழ்ந்தது. கோயில் திருஉருவப் பிரதிஷ்டை கூட இந்த அடிப்படையிலேயே நிகழுகிறது. குறிப்பிட்ட இன்ன தெய்வம், குறிப்பிட்ட கற்சிற்பத்தில் அல்லது செப்புப் படிமத்தில் குடி ஏறுமாறு வேண்டுவதே பிரதிஷ்டை மந்திரங் களின் அடிப்படைப் பொருளாகும்.

தன் தலையைத் தானே அம்மனுக்குப் பலி இடுவது நவகண்டம் எனப் பெற்றது. தன் கழுத்தைத் தானே அறுத்துத் தற்கொலை செய்து கொள்ளும் வீரர்களின் உருவங்கள் பதித்த சிற்பங்கள் பல இடங்க ளில் உள்ளன. அவை வழிபடப் பெறுகின்றன. அதனைப் போலவே தீக்குளித்துத் தற்கொலை செய்து கொண்ட பெண்டிரும் தெய்வமாகக் கொள்ளப்பெற்றனர். தீக்குளித்த பெண்டிரின் பெயர்களில் நாச்சியார் அம்மன்கோயில்கள் தமிழ்நாட்டில் உள்ளன. இவை அனைத்தும் தற்கொலை செய்து கொண்ட பெண்களை ஒட்டி எழுப்பப் பெற்ற அம்மன்கோயில்களே ஆகும். கடலூர் - குடந்தை சாலையிலுள்ள தீப்பாய்ந்த நாச்சியார் அம்மன் கோயில் வரலாறு இதனை உறுதி செய்கிறது. ஒருத்தியை மணந்து வாழும் ஒருவன் மேல் மையல் கொண்டு இளம்பெண் ஒருத்தி வாழ்கிறாள். அவளுடைய காதலன் வருகிறான். அவன் இறப்பைத் தாங்கமாட்டாமல் வைப்பாட்டிப் பெண்ணும் தீக்குளித்து உயிர் துறக்கிறாள். அவள் நினைவாக எழுப் பப்பட்ட கோயிலே இன்று வழிபடும் கோயிலாகவும், விழாக் கொண் டாடும் தலமாகவும் விளங்குகிறது. இக்கோயிலுக்கு மிகுந்த வருமா னம் வருவதை ஒட்டித் தமிழ்நாடு அரசு அறநிலையத்துறை இக்கோ யில் நிர்வாகத்தை ஏற்க, வைப்பாட்டி அருள்மிகு தீப்பாய்ந்த அம்ம னாக ஆகிவிட்டாள்.

சில தலைமுறைகளுக்கு முன்னர் பூதங்குடி என்ற கிராமத்தில் வசித்த பெரியவர் ஒருவர் குதிரை வாங்குவதற்கு வெளியே சென்று திரும்புகையில் அவரைப் பெண் ஒருத்தி தொடர்ந்து வந்தாள். அப் பெண்ணை அவர் தம் வீட்டிற்கு அழைத்து வந்து வைத்திருந்தார். பெரியவர் இறந்தபோது, அப்பெண் அவருடன் தீயில் விழுந்து இறந்தாள். அவளுடன் இருந்த மங்கலப் பொருள்கள் அனைத்தும் கருகாமல் இருந்ததைப் பார்த்து அவளை வழிபடத் தொடங்கினர்.

சேத்தியார் குடும்பத்தைச் சேர்ந்த திரு.மனோகரன் அப்பெண் ணைப் பெரியவர் மனைவியாக வைத்திருந்தார் என்று குறிப்பிடுகி றார். அவ்வூரைச் சேர்ந்த திரு.அரங்கநாதன், ''மனைவிக்குப் பயந்து பெரியவர் அப்பெண்ணைச் சகோதரியாகச் சொல்லிக் கொண்டிருந் தார்'' என்கிறார்.

பூதங்குடி, தென்னாற்காடு மாவட்டம் சிதம்பரம் வட்டம் சேத்தி யாத்தோப்பிலிருந்து கும்பகோணம் செல்லும் வழியில் ஆறு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. சாலையை ஒட்டி இடப் பக்கத்தில் வெள்ளாற்றங்கரைக்குத் தெற்கே, வீராணம் ஏரியின் வடக்கே தீப் பாய்ந்த அம்மன் கோயில் உள்ளது.

(தகவல்: ஆறு.இராமநாதன், தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம்)

இறந்த வேந்தர், ஆண்டவர் ஆகிவிடுதலை, ஆண்டவர், இறை, கோயில் என அரசனுக்கும் கடவுளுக்கும் பொருந்தும் சொற்கள் புலப்படுத்துகின்றன. இறந்த மதத் தலைவர் இறைவர் ஆகிவிடுத லும் நம்நாட்டு சைவமதங்களின் வரலாறுகள் எடுத்துரைக்கின்றன. இறந்த தலைவர்கள் வழிபடப்பெறுதலைத் தில்லி சமாதிகள், சென் னைக் கடற்கரைச் சமாதிகள், மைசூர் சமாதிகள் தெளிவுபடுத்துகின் றன.

தமிழர்தம் வழிபாட்டில் முன்னே சுட்டியது போலப் பல்வேறு வழிபாட்டுக் கூறுகள் தனித்துப் பிரிக்க முடியாத அளவிற்குக் கலந் துள்ளன. அவற்றுள் இடம்பெற்றுள்ள முன்னோர் வழிபாட்டுக் கூறு கள் ஒருசில மேலே எடுத்துக் காட்டப்பெற்றன.

மதம், வழிபாடு, மந்திரம், சடங்கு, சம்பிரதாயம் ஆகிய சொற் கள் உணர்த்தும் பொருள்கள் ஒன்றோடொன்று தொடர்புடையன. மயக்கம் தருவன, சடங்கு சம்பிரதாயங்களையே மதம் என்று கருது வோரும், மந்திர, தந்திரம் ஆகியனவே மதம் என்று கருதுவோரும், வழிபாட்டை மட்டுமே மதம் என்று கருதுவோரும், தத்துவார்த்தத் தையே மதம் என்று கருதுவோரும் உள்ளனர். அனைத்திலும் உண் மையும் இருக்கிறது; மிகைக்கருத்தும் இருக்கிறது. மதம் என்ற நிறுவ னம் ஏனைய அனைத்தையும் உள்ளடக்கி இருக்கிறது. சில இடங்க ளில், மந்திரம், தந்திரம், சடங்கு, சம்பிரதாயம் வழிபாட்டில் இருந்து மதம் தோன்றி வளர்ந்து இருக்கிறது என்றும் கருதலாம்.

மானுட குலத்தைச் சாதி மதமொழி அரசியல் எல்லைகளுக்கு அப்பால் நின்று பிணைந்து ஒருமைப்படுத்தும் செயலை மதம் உலக மனித வரலாற்றில் சாதித்து இருக்கிறத. காலப்போக்கில், மதம், சடங் குச் சம்பிரதாயமாகச் சுருங்கிய நிலையில் மானுட குலத்தைப் பிரித் தும் இருக்கிறது; பிரிவுபடுத்தியும் இருக்கிறது. பிரிவுக்கும், பிளவுக் கும் காரணமாக மதம் அமைந்த காலத்தில் மதம் மெய்ம்மையைப் பார்க்கும் பார்வையில் இருந்துமானுட குலத்தை விலக்கி மயக்குறுத் தும் நிலையிலும் செயல்பட்டு இருக்கிறது; செயல்பட்டு வருகிறது. அரசியல் போர்களின் தலைமைக் காரணங்களுள் ஒன்றாக மதமும் இன்றும் இருந்து வருகிறது என்பது நடப்பு மெய்ம்மை. அயர்லாந் தில் நடக்கும் உள்நாட்டுப் போருக்குக் காரணம் புரோட்டஸ்டண்டு கத்தோலிக்கக் கிருத்துவ வேறுபாடு, லெபனானில் நடக்கும் போருக் குக் காரணம்; கிருத்துவம் இசுலாம், பாலஸ்தீனில் நடக்கும் போருக் குக்காரணம்; யூதம்/கிருத்துவம் இசுலாம், ஆப்பிரிக்காவில் நிகழ்ந்து வரும் உள்நாட்டுக் கலகங்கள் பலவற்றிற்குக் காரணம்; மரபு கிருத்து வம்/இசுலாம், இந்தியத் துணைக் கண்டத்தின் நிரந்தரச் சிக்கலுக்குக் காரணம் இந்து இசுலாம். இலங்கைத் தீவின் போருக்குக்காரணம் சிங்கள பௌத்தம் இந்து/கிருத்துவம், ஒரு காலத்தில் பல எல்லைக ளைத் தாண்டி மானுட குலத்தை இணைக்கும் பாலமாக இருந்தமதம், இடைக் காலத்திலும், நிகழ்காலத்திலும் பிளக்கும் சக்தியாக இருந்த தும் இருப்பதும் வெளிப்படை. அனைத்து மதங்களின் முதற்கூறு 'வழிபாடு'. பழைய காலத்தில் - ஆதி மனிதனின் இனக்குழு வாழ்க் கையில், மதம் இடம்பெற்று இருந்தது என்பதைவிட, மதம் என்ற நிறுவன அமைப்பு இல்லாத, வழிபாட்டுக் கூறுகள் இடம் பெற்றிருந் தன என்று சொல்லுதலே மிகப் பொருத்தமாக இருக்கும். இவ்வழி பாட்டுக்குக் காரணங்கள் பல. மதத் தோற்றத்தைப் பற்றி ஆராய்ந்த பிரஞ்சு சமூகவியல் மேதை எமில் துர்க்கேம் எடுத்துரைக்கும் கருத்து எண்ணத்தக்கது. துர்க்கேம்தம் ஆய்விற்குக் களமாக ஆஸ்திரேலியா வில் வாழும் அருண்டா பழங்குடி மக்களை எடுத்துக் கொண்டார். அறிவியல் உலகத்தில் பாதிப்பு ஏற்படாத பழங்குடி மக்களிடம் இருந்து திரட்டப்படும் தரவுகளை மூலமாகக் கொண்டு தம் கொள் கையை அவர் உருவாக்கினார். அவர் கூறும் முடிவு வருமாறு:

''மக்கள் ஒரே மாதிரியாகப் போய்க் கொண்டிருக்கும் அன்றாட மாமூலான வாழ்க்கையில் சலிப்படைகிறார்கள்' அந்தச் சலிப்பிலி ருந்து விடுதலை பெற அனைவரும் ஒன்று கூடிக் கொண்டாட்டங் களை நிகழ்த்துகிறார்கள். குதூகலமாக அந்தக் கொண்டாட்டங்களில் மக்கள் ஆடிப்பாடிக் களிக்கிறார்கள். இந்த ஆர்ப்பாட்டங்கள் ஒரே கூச்சலோடு நிகழுகின்றன. இவை வெறித்தனமாக ஆரவாரத்தோடு அமைவதால் இவற்றில் கலந்து கொள்பவர்களுக்கு ஆவேசம் வருகி றது. அதனால் அவர்கள் உணர்ச்சிப் பிழம்பாக ஆகிறார்கள். அத்தகு பதற்றச் சூழ்நிலையில் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கும் பொது மக்களுக்கும் ஆவேசம் வந்துவிடுகிறது.

எப்படி இந்த ஆவேசம் ஏற்படுகிறது? அது எப்படி பிறகு போய்விடுகிறது? என்பது மக்களுக்குப் புரியாத புதிராக இருக்கிறது.

இந்த ஆவேசத்திற்கு ஏதோ ஒரு நுட்பமான, அருவமான, மறைவு அடக்கமான சக்திதான் காரணமாக இருக்க வேண்டும் என்று அக்

கால மக்கள் நம்பினர். அருண்டா பழங்குடி மக்கள் இவ்வாற்றலை 'மனா' என்று அழைக்கிறார்கள். மனா புறத்தே இருந்து வந்த மக்கள் உடலில் குடிபுகும்போது அவர்களுக்கு ஆவேசம் வந்துவிடுகிறது. எனவே, இந்த ஆவேச இயக்கத்திற்கு அந்தச் சக்திதான் காரணமாக இருக்க வேண்டும் என்று மக்கள் நம்புகிறார்கள். ''இப்படிப்பட்ட சக்தியைப் பூசித்து மரியாதை செய்வது நல்லது என்று அவர்கள் கருதினார்கள். அதற்கு எப்படி வணக்கம் செய்வது என்று சிந்திக்கும் போது அதற்கு ஒரு புற உருவம் சமைத்துக் கொடுத்தால் வணங்கு வது எளிது என்று மக்கள் தீர்மானிக்கிறார்கள். பிறகு அதற்கு ஏற்ப ஓர் உருவம் சமைத்து சக்தியின் சின்னமாக அதைக் கருதுகிறார்கள். அவ்வுருவம் சக்தியின் இருப்பிடம் என்பதால் அதை ஒரு புனிதப் பொருளாகக் கருதி வணங்குகிறார்கள், வழிபடுகிறார்கள். காலம் செல்லச் செல்ல, மெல்ல மெல்ல அந்த வணக்க வழிபாட்டில் பூசை கள், சடங்குகள், சடங்கு வினைமுறைகள், படையல்கள் முதலாயின இடம் பெறகின்றன. இப்படி சக்திக்குச் சின்னமாக எழும் உருவத்தை 'டோட்டம்' (Totem) என்று சமூகவியல் அறிஞர்கள் வழங்குவர். டோட்டத்தை வழிபடுகிற முறைக்கு 'டோட்டமிசம்' என்பர். இந்த டோட்டமிசத்தில் இருந்துதான் மதம் முளைத்தது என்பது துர்க்கேம் கருத்து. மதம் என்பது புனிதப் பொருள்கள் சமபந்தப்பட்ட நம்பிக் கைகளும், செயலாறுகளும் ஒருங்கே அமைந்த அமைப்பு முறை'' என்று விளக்கினார் துர்க்கேம். தமிழர்களைப் பொறுத்தவரை தமிழர் களிடம் வழங்கும் பழைய இலக்கியங்கள், இன்னபிற எழுத்துக் குறிப்புகள், நாட்டுப்புற வழிபாட்டு முறைகள் ஆகியவற்றை அடிப்ப டையாகக் கொண்டு எண்ணும்போது துர்க்கேம் கருத்துத் தமிழர்க ளைப் பொருத்த அளவிற்குப் பொருந்தி வராது எனக் கருத இடம் உள்ளது. தமிழர்தம் பண்டை வழிபாட்டு முறைகளை நாம் முதலில் வகைப்படுத்திக் கொள்ளலாம்.

1. தாய் வழிபாடு
2. வீர வழிபாடு
3. முன்னோர் வழிபாடு
4. இயற்கை வழிபாடு
5. அரச வழிபாடு
6. பெருந்தெய்வ வழிபாடு

1. தாய் வழிபாடு:

தாய் வழிபாட்டைப் பழந்தமிழ் இலக்கியங்கள் விரிவாகப் பதிவு செய்து வைக்கவில்லை. காரணம், தாய் வழிபாடு பெரும்பா லும் மேட்டுக் குடி மக்களிடம் இருந்ததைவிட, நாட்டுப்புற மக்களி டமே செல்வாக்கில் இருந்தது. மிகுதியாகவும் இருந்தது. தமிழ்நாடு, புதுவை உள்ளிட்ட கோயில்களை ஆராயும்போது இந்த உண்மை புலனாகும். அம்மன், மாரி, காளி, திரௌபதி முதலான வேறு வேறு பெயர்களில் கிராமங்கள் தோறும் இடம் பெற்றிருக்கும் கோயில்கள் அனைத்தும் தாய்த் தெய்வ வழி பாட்டின் எச்சங்களே. இவையே மிகுதியானவை என்று புள்ளி விவரம் சாற்றுகிறது (தமிழ்ப் பல்க லைக் கழகம், கணிப்பொறி மையம், தி.முருகரத்தினம் தொகுத்தது பார்க்க).

மானுட குல வரலாற்றில் தாய் என்ற உறவே முதலில் அறியப் பட்டது. காரணம், கட்டுப்பாடற்ற ஆண் பெண் உறவு இருந்த காலத் தில், பிறக்கும் குழந்தை தாய் இடமே இருந்தது. முற்காலங்களில் கிட்டத்தட்ட ஏழு முதல் பத்து ஆண்டுகள் வரை குழந்தை தாயிடமே பால் குடித்து வளர்ந்தது. நெடுங்காலம் வரை ஒரு குழந்தைக்குத் தாய் யார் என்று அறியப்பட்ட அளவிற்குத் தந்தை யார் என்று அறியப்பட வில்லை. பல ஆயிரக்கணக்கான ஆண்டுகள் மானுடகுலத்தில் குடும்ப அமைப்பு தோன்றுகிற வரை தந்தை முதன்மை பெறவில்லை. தாயே முதன்மை பெற்றிருந்தாள். எனவே, தாய் நினைவு அவள் மறைவிற்குப் பிறகு கனவு வழி நினைவுப் பொருளாக மானுட குலத் தில் எஞ்சியது. எனவே, தாயே முதலில் அறியப்பட்டவள், முதலில் வழிப்படப்பட்டவள் ஆதல் வேண்டும். அதனால்தான் தமிழ்நாட் டில் உள்ள நாட்டுப்புறக் கோயில்களில் வெறும் அம்மன் இடம் பெற்றுள்ளாள். மிகப் பிற்காலத்திலேயே தனிக்குலப் புரோகித முறை விரிவு பெற்றபோது சில அம்மன் கோயில்களில் ஈசுவரனும் இடம் பெறச் செய்விக்கப் பெற்றான். தொடக்க காலச் செவ்விலக்கியங்க ளில் நாட்டுப்புறக் கூறுகள் இடம் பெற்றுள்ளன. ஆனால் நாட்டுப்பு றக் கருப்பொருள் செல்வாக்கு பெற்றிருந்ததாகக் கருத முடிய வில்லை. சங்க இலக்கியங்களில் கூட இடைத்தர, மேல்தர மக்கள் கூறுகளே மிகுதியாக இடம் பெற்றிருந்தன எனக் கருத வேண்டியுள் ளது. எனவே, பழைய தமிழ் இலக்கியங்களில் தாய் வழிபாடு பற்றிய குறிப்புகள் மிக அருகியே காணப்படுகின்றன. எனினும், கொற்றவை பற்றிய குறிப்பு கருதத்தக்கது. அவள் பாலை நிலத் தெய்வமாகச் சுட்டப் பெறுகிறாள். தமிழ்க் கடவுள் எனக் கருதப்படும் முருகன், கொற்றவை மகனாகத் திருமுருகாற்றுப்படையில் வருணிக்கப்படு வது எண்ணத் தக்கது. பாவைப் பாடல்களின் அடிப்படையும் எண் ணத் தக்கது.

2. வீரவழிபாடு:

போரில் வீரப் புண்பெற்று இறந்த வீரர்களுக்கு நடுகல் எடுக்கப் பெற்று வழிபடப் பெற்றது. போர்களில் புறப்புண் பெற்று அதற்காக நாணி வடக்கிருந்தவர்களுக்கு நடுகல் நாட்டப் பெற்று வழிபடப் பெற்றது. சிற்றூர்களில் வீர சாதனை புரிந்து இறந்தோர் மதுரை வீரன் என்றும், காத்தவராயன் என்றும், இன்னபிற பெயர்களிலும் வழிப டப் பெற்றனர். இவர்கள் அனைவரும் ஏதேனும் வீரச் செயல்கள் செய்தவர்கள். இந்த வகையில் தீப்பாய்ந்து உயிர் துறந்த - தீப்பாய்ந்து உயிர் துறந்து வீரச் செயல் புரிந்த பெண்களும் வழிபடப் பெற்றார் கள். இவ்வழிபாடு மக்கள் குழு நிலையிலும், இனக்குழு நிலையிலும் வாழ்ந்த காலத்தில் வாழ்வு, சாவு, போர் இவற்றின் அருமை பெருமை கள் அறிந்த காலத்தில் நிகழ்ந்த வழிபாடு ஆகும். இவ்வழிபாடு பற்றித் தமிழ் இலக்கியங்கள் விரிவாகப் பதிவு செய்து வைத்திருக்கின் றன. சிற்றூர் மக்களும் பல சிறுதெய்வ வழிபாடுகளை இந்த அடிப்ப டையில் கொண்டிருக்கிறார்கள்.

3. முன்னோர் வழிபாடு:

இறந்துபோன அம்மாவை வழிபடுவது, அப்பாவை வழிபடு வது, முனி சாமியை வழிபடுவது ஆகியன இதன்கண் அடங்கும். இறந்துபோன பெற்றோரை நினைவுகூர்தலும், ஆண்டாண்டு தோறும் சடங்கு நிகழ்த்தலும் வற்புறுத்தப் பெற்றது. காரணம், முன் னோர் ஆவியாக இருந்து அவர்களுக்கு உதவிக் கொண்டிருக்கின்ற னர் என்று மக்கள் நம்பினதும், நம்ப வைக்கப் பெற்றதும் காரணங் கள். பிதிரர் வழிபாடு தென் புலத்தார் வழிபாடு என்று திருவள்ளுவத் தில் குறிப்பிடப் படுகிறது. எனவே, திருவள்ளுவர் காலத்திலும் இவ்வழிபாடு இருந்தது தெளிவு.

4. இயற்கை வழிபாடு

தமிழர்கள் இயற்கையைக் கண்டு அஞ்சினர். பார்வைக்கு மலைப்பாக இருந்தமையால் மலை என்றனர். கடக்க இயலாத நீர்ப் பெருக்கைக் கடக்க முடியாதது எனும் பெயரில் 'கடல்' என வழங்கி னர். நிலம், நீர், தீ, வளி, விண் என்ற ஐந்தையும் இறைப்பெயர் கொடுத்து வழிபட்டனர். விண்ணில் கடவுள் உலகம் இருப்பதாக நம்பினர். அது மேலே இருப்பதால் மேல் உலகம் என்றும், விண்ணுல கம் என்றும் கருதினர். அங்கே ஒரு ஆட்சி நடைபெறுவதாக நம்பி னர். சிலப்பதிகாரத்தில் ஞாயிறு, திங்கள், பூம்புகார் ஆகிய இயற் கைப் பகுதிகள் போற்றப் பெறுகின்றன. இவ்வைந்தையும் பொதுமக் கள் பல்வேறு பெயர்களில் வழிபட்டனர்.

5. அரச வழிபாடு:

தமிழர்கள் தாம் வணங்கிய குழுத்தலைவன், இறப்பிற்குப்

பின்பு ஆவியாக வருவான் என்று நம்பினர். இதன் குழுத்தலைவன் காலப்போக்கில் அரசனாக வளர்ச்சி பெற்றபோது அரச வழிபாடும் உருவம் பெற்றது. அதனால்தான் அரசனுக்கும், இறைவனுக்கும் பல்வேறு பொதுக்கூறுகள் தமிழ் இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளன. அரசனைக் கடவுள் என்று பொதுச் சொல்லால் அழைப்பதும், ஆண்டவன் என்று பொதுச்சொல்லால் குறிப்பிடுவதும், இன்னபிற குறிப்புகளும் எண்ணத்தக்கன. அரச வழிபாடுபற்றிய குறிப்புகள் கல்வெட்டுகளிலும் இடம் பெற்றுள்ளன. போரில் மடிந்த வேந்தனுக்குக் கோயில் கட்டி வழிபடுவதும் அக்கோயில்கள் பள்ளிப்படை எனத் தனிப் பெயரிட்டு வழங்கப்படுவதும் கல்வெட்டுகள் குறிக்கும் செய்திகள். இதனுடைய பிற்கால வடிவமே தலைமை வழிபாடு. (பார்க்க: தமிழர் தம் மறுபக்கம்)

6. பெருந்தெய்வ வழிபாடு:

சிவன், விஷ்ணு முதலான வழிபடுகள் சங்க இலங்கியங்களில் இடம் பெற்றுள்ளன. சிற்றூர்களிலும், கோயில்கள் உள்ளன. ஆனால் இவை பிற்காலச் சேர்க்கை என்றே கருதவேண்டியுள்ளது. ஒரு தெய்வ வழிபாடும், ஒருவரே தெய்வம் என்ற வழிபாடும் தமிழர்களுக்கு உரியனவாகக் கருத இடம் இல்லை. ஆரிய சமயத்தில் உள்நாட்டு வழிபாடுகளும், ஆரிய வழிபாடுகளும் இணைக்கப் பெற்றுப் பெருந்தெய்வ வழிபாடு என அறிமுகப்படுத்தப் பெற்றது என்றே கருதத்தகும்.

மேற்கண்ட ஆறு வழிபாடுகளுள் தமிழரின் முதல் வழிபாடு எதுஎன்பது ஆராயத் தக்கது.

ஏழாந் திருமுறை

சுந்தரர்

பண்ணிடைத் தமிழொப்பாய் பழத்தினிற் சுவையொப்பாய்
கண்ணிடை மணியொப்பாய் கடுவிருட் சுடரொப்பாய்
மண்ணிடை யடியார்கள் மனத்திடர் வாராமே
விண்ணிடைக் குருகாவூர் வெள்ளடை நீயன்றே.

திருக்குருகாவூர் வெள்ளடைக் கோயிலில் எழுந்தருளி இருப்பவனே, பண்ணின்கண் இனிமையாகவும், பழத்தின் கண் சுவையாகவும், கண்ணின்கண் மணியாகவும், மிக்க இருளின்கண் ஒளியாகவும், அமைந்தவனே! பரவெளியின் கண் உள்ள நீ இம் மண்ணுலகில் வாழும் அடியவர்களது மனத்தின்கண் யாதொரு துன்பமும் தோன்றாதவாறு காப்பாயாக.

வரலாற்றில் புதிய திருப்பம்

பத்தொன்பதாம் நூற்றாண்டு தமிழகத்தின் சமூக சமய இலக்கிய வரலாற்றில் ஒரு புதிய திருப்பம் ஆகும். காரணம் மூன்று பெருமக்களின் வாழ்வும் வாக்கும் தமிழகத்தை ஈர்த்துவந்துள்ளன. அவர்கள் யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலரும் இரண்டாவது கம்பன் என்று பாராட்டப்பெற்ற திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையும் தமிழ் உலகமும் பக்தி உலகமும் நன்கு அறிந்தவரான சிதம்பரம் இராமலிங்க அடிகளாரும் ஆவர். இவர்களில் அடிகளாரின் புகழ் தமிழர் வாழும் பிற நாடுகளிலும் பரவி வருகின்றது.

விருத்தாசலம் திரு முருகேசம் பிள்ளை என்பார் (தாசில்தார்) அடிகளாரைத் தரிசித்த பாக்கியம் பெற்றவர். 1906-ஆம் ஆண்டு கோபால நாயகர் என்பவரால் பதிக்கப்பெற்ற வள்ளல் பெருமானின் பக்திப் பாடல்கள் புதிய பதிப்பாகவும் திருந்திய பதிப்பாகவும் திரு. எஸ்.எம்.கந்தசாமி பிள்ளை என்பவரால் கொண்டு வரப்பட்டது. இதனைக் கொண்டு வர புதுக்கோட்டை திரு. டி.எம்.முத்தையா செட்டியார் பெரிதும் பொருளுதவியும் வழங்கியிருந்தார். மேலும் இரண்டாயிரம் பக்கங்கள் கொண்ட பெருமானின் பாடல்கள் பரமத்தி வேலூர் திரு பத்மநாப முதலியாரால் வெளியில் கொண்டு வரப்படாமல் போய்விட்டது. அருட்பா அன்பர்களுக்கு இது ஒரு பேரிழப்பாகும்.

தகவல்: சிவந்திரு என்.இராமையா திருவள்ளூர்.



மாயை மறைந்தது

(டாக்டர். கா. மீனாட்சி சுந்தரம். எம். ஏ., பிஎச். டி)

சமைக்கப்படுவது சமயம். சமைத்தல் என்றால் பக்குவப் படுத்தல் என்பது பொருள். உணவு செரிப்பதற்கேற்பச் சமைக்கப் பட்டுப் பக்குவப்படுத்தி உண்டாலே வாழலாம். ஆகவே சமயம் மக்களைப் பக்குவப்படுத்த வேண்டும். சமயச் சான்றோர்கள் விலங்காய்ப் பிறந்த மனிதனை மனிதனாக வாழ்வதற்குப் பக்குவப் படுத்தவே சமய நெறிகளைத் தோற்றுவித்தனர். விலங்குகள் ஒன்றையொன்று கொன்றோ அல்லது விரட்டியோ உண்டு உயிர் வாழும். பகுத்தறிவு படைத்த மனிதனும் அப்படியா? உயர்ந்த மனிதப் பிறவி கிடைத்திருப்பதால் அவனுக்கே கிடைத்துள்ள தன் பகுத்தறிவைப் பயன்படுத்தி ஒருவரை ஒருவர் கொன்று கொள்ளாமல், சுரண்டாமல், எல்லோரையும் சமமாகப் பாவித்து உடன் பிறப்புகளாய் எண்ணி இறைவனின் குழந்தைகள் எனப் பாவித்து ஒருவருக்கொருவர் அன்பாய் வாழ்வதற்கு வழி கற்பிப்பதே சமயம் ஆகும். மனிதரை மட்டுமா? உயிர்களனைத்தையும் உடன் பிறப்புக்களாக என்ன வேண்டும். ''அனைத்துயிர் ஒன்றென்று எண்ணி அரும்பசி அனைவருக்கும் ஆற்ற வேண்டும்.'' ஆகவே மனத்தை அறிவு கொண்டு நெறிப்படுத்தி அவ்வழியில் செலுத்துதல் வேண்டும். இவ்வாறு அமைதல், தக்க பயிற்சி இன்றி, அமையாது. இயலாது. எனவே ஒவ்வொருவரும் இப்பயிற்சி பெற்றுத் தம்மைத் தாமே செம்மைப்படுத்திக் கொள்ளல் வேண்டும். அப்போதுதான் முழுச் சமுதாயமும் திருந்தும். முழுச் சமுதாயமும் பக்குவப்படுத்தப்பட்டு விட்டால் அதே வான் உலகம் - வானோர் உலகம் - தேவருலகம் - சிவபுரம் ஆகிவிடும். இவ்வுலகமே நரகமும் வீடுமாகப் பக்குவத்திற்கேற்ப அமைகிறது. உலகம் வேறு, இறைவன் வேறு அல்ல. உலகம் சிவசக்தி வடிவம். பொறிகளால் நுகரப்படும்போது உலகமாயும். ஞானக்கண்ணால் காணும் போது கடவுளாயும் இந்த உலகம் அமையும் என்பர். இறைவன் இவ்வுலகில் ''புன்மையரை உயர்த்தி விண்ணோரைப் பணித்து'' ''நாடகம்'' செய்கிறார். மண்ணுலகில் இருக்கும் ஞானியர் விண்ணுலகத்தவரைக் காட்டிலும் மேலானவர் என்கிறார் மாணிக்க வாசகர் (திருச்சதகம் 5-1-10). இந்தப் பார்வையை - அருள் பார்வையை அனைவர் பாலும் தோற்றுவிப்பதற்கே சமயங்கள் முயல்கின்றன. அப்பார்வை ஞானப்பார்வை - கிடைத்துவிடின் போரேது? சண்டையேது? பேதமேது? உலகமே ஒன்றாய் விடாதா? நாடு ஒருமைப்பட்டன்றோ காணப்படும்! அத்வைதம் என்பது என்ன? ஒன்றாகக் காணும் காட்சிதானே!

உழவன் உழுதுழுது பண்படுத்தி விதைத்தாலும், தன்னால் விதைக்கப்படாத களைகள் முளைப்பதைத் தடுக்க முடிவதில்லை. அதேபோல், சமுதாயத்தைச் சொல்லாலும் செயலாலும் பண்படுத்தினாலும், தீமைகள் தோன்றாமல் இல்லை. நன்மைகளும் தீமைகளும் கலந்தே உலகத்தில் உள்ளன. அவைகளும் மாறி மாறித் திரும்பத் திரும்பக் களைகளாக முளைத்த வண்ணம் உள்ளன. நல்ல செடிகள் விதைத்தாலன்றி தாமே முளைப்பது அருமை. ஆனால் களைகள் அப்படி அல்ல. விதைக்காவிட்டாலும் களைகள் மாறி மாறி முளைத்துக் கொண்டே உள்ளன. இவ்வாறு மாறி மாறித் தாமே தோன்றும் களைகளைப் போல தீமைகள் தோன்றி மறைந்து, தோன்றி மறைந்து, தோன்றிச் சுழன்று கொண்டுள்ளன. சமுதாயத்தில் தீயவையும் இப்படியே. இவ்வாறு மாறி மாறி மயக்கம் தந்து கொண்டிருப்பதையே 'மாயை' எனச் சமய அறிஞர்கள் கலைச்சொல் (Technical Word) தந்து பேசுகின்றனர். அதனாலேயே உலகம் மாயை - பிரபஞ்சம் மாயை - என எழுதுகின்றனர். இந்த உலகம் இடையறாது இயங்கி வருவதால்தான் இதனை இயற்கை என்கிறோம். இயற்கை முழுவதும் இறைவனின் இன்னிசைக் கருவியாம். இந்த இயற்கையே மாயை எனவும் ஆகிறது. இந்த மாயை - இந்தக் களைகள் - பிடுங்கப்பட வேண்டும். கண்டறிந்த வழிகளே சமயவாதிகள் கூறும் வழிகளாகும். அவ்வழிகளை ஒவ்வொருவரும் பின்பற்றியாதல் வேண்டும். இல்லையாயின் ஒரு காட்டில் தோன்றும் களை இன்னொரு காட்டிற்குத் தாவிப் பரவுதல் போல தீமையும் பரவும். கெடுக்கும். பார்த்தீனியன் நச்சுக் செடி அமெரிக்காவிலிருந்து இந்தியாவிற்குத்தாவி, எவரும் அஞ்சும் வண்ணம், பரவிவிடவில்லையா? ஆகவே ஒவ்வொருவரும் தீமையை அழிக்க அல்லது தடுக்க வில்லையானால் அது பரவி சமுதாயத்தைக் கெடுக்கும். போதைப் பொருட்கள் பரவிக் கெடுப்பதைத் தடுக்க வேண்டாமா? எனவேதான் சமயவாதிகள் மனப் பயிற்சியை - மனப் பக்குவத்தை ஒவ்வொருவரும் கொள்ளவேண்டும் எனக் கூறுவதோடு தீயவர் வற்புறுத்துகின்றனர். தீமையின் தாக்கத்தை நன்மை தாங்கி வெல்ல வேண்டுமல்லவா? தான் பட்ட துன்பங்களையும் இடையூறுகளையும் துடித்துத் துடித்து மாணிக்க வாசகர் தம் பாடல்களில் கூறியிருப்பவை அவருக்கு ஏற்பட்டவை மட்டும் அல்ல. பொதுவாக மக்கள் எல்லோருக்கும் ஏற்படும் இழிநிலைகளையே தம்மேல் ஏற்றி எல்லா உயிர்களும் உய்வதற்காகவே தீமைகளை - மாயைத் தன்மைகளை - எடுத்துக் காட்டி உருகியுள்ளார் அப்படியானால் மாயையை வெல்வது எப்படி? மாயையைத் தடுப்பது எப்படி. போரிடுவதைவிட அதைப் பயந்து ஓடும்படி செய்வது சிறந்ததல்லவா?

தடுப்பூசிகள் போட்டுக் கொள்வது நோயை வெல்வதற்கன்று. வென்று அந்நோயைப் பிடித்து நாம் என்ன செய்யப் போகின்றோம். ஆகவே வெல்வது என்பது அவற்றைப் பிடிப்பதற்கன்று. அங்கு **தீமைகள் வராமல் தடுப்பதே வெல்வதாகும்.** தீமைகட்கு - கிருமிகளுக்கு - நோய் நுண்ணுயிரிகளுக்கு - எதிரான வலுவுடைச் சத்துக்கள் (Immunity) உடலில் அமைந்தால் நோய் - தீமை - எப்படி உடலைப் பற்றும்? பற்ற முடியும்? அவ் வலுச்சத்துக்களைக் கண்ட கிருமிகள் - நோய்கள் - தீமைகள் அஞ்சி பற்றாமல் ஓடும். அதனால் பெறுவது வளமான உடல். வளமான வாழ்வு. நோய்கள் தொற்றாமல் தடுக்கப் பலவகையான தடுப்பூசிகள் போட்டுத் தடைகாப்புச் செய்வது போல சமையத் தலைவர்கள் தடைக்காப்புச் செய்ய என்ன ஊசி மருந்துகளைத் தருகின்றனர்? மனநலம் கெடாமல் இருக்க மனத்தில் தைக்க வேண்டியவை உள. அவை தைத்துவிடின் இந்த உலகம் கவலையற்ற இன்ப உலகமாக அமைந்து வான் உலகமாக மாறிவிடும். அதற்கு அழைத்துச் செல்ல வழிகாட்டிய அந்நிலையிலேயே தம் வாழ்வை அமைத்துக் கொண்ட மாணிக்க வாசகர், மாயையோடு போராடித் தடுத்து ஓடச் செய்வதற்கு காட்டும் நெறிகளில் ஒன்றிரண்டை இக்கட்டுரை காட்ட முயல்கிறது.

மாயையை வாராமல் தடுத்தாக வேண்டும். அதற்கு நம் பார்வையை மாற்றியாக வேண்டும். எனவே ''திருப்படை எழுச்சி''

என்னும் தலைப்பில் இரண்டு பாடல்களில் மாயையை வெல்ல - வாராமல் தடுக் - வழிகள் காட்டுகிறார். அதற்குத் தக்க படை தேவை. படை என்பதற்குத் தமிழ் அகராதியில் பத்தொன்பது பொருள்கள் கூறப்பட்டுள்ளன, மேலும், ஆற்றுப்படை, ஆறுபடைவீடுகள், நாற் படை, அறுபடைகள் (மூலப்படை, கூலிப்படை, நாட்டுப்படை, காட் டுப்படை, துணைப்படை, பகைப்படை) படைத்தல் போன்ற சொல் பயிற்சியையும் நாமறிவோம். இவற்றை நோக்கின் படை என்பது தலைவன் படைத்து ஆக்கிக் கொண்டு வழிப்படுத்தும் திறள் அல்லது குழு எனப் பொருள் கொள்ளலாம் எனத் தோன்றுகிறது.

இருவர்க்குள் முரண் ஏற்படின் அல்லது ஒருவரை ஒருவர் யார் விஞ்சியவர் எனக் காண எண்ணின் அல்லது ஒருவர் நாட்டை ஒரு வர் பிடித்துக் கொள்ள விரும்பின் அல்லது ஒருவரை எப்போதும் சுரண்டியோ அச்சுறுத்தி கொண்டோ இருப்பின் போர் நிகழ்வது இயல்பு. இரு பக்கங்களிலும் அவரவர்க்கு நம்பிக்கையானவர்கள் கருவி காரணங்களுடன் படை எடுப்பது மரபு. படைகள் அணிவகுக் கப் பட்டுச் சீராகச் செல்லவேண்டும். படையை நெறிப்படுத்துபவன் யார் யார் எங்கெங்கு அமைய வேண்டும் என நிறுத்துவான். படைத் தலைவனையும், படைகளின் போராளிகளையும், கருவிகரணங்க ளையும் படைகளின் ஆரவாரத்தையும் படைப் பெருக்கத்தையும் கேட்டால் அல்லது கண்டால் எதிரி போருக்கே வராமல் ஓடி ஒடுங்கி விடவும் கூடும். போருக்கு வரினும் தோற்றுவிடக் கூடும் எனப் பயப்பட்டு எதிரி அடங்கி விடவும் கூடும். இது இயற்கை. மிக்க ஆற்றலும் பின்பலமும் கொண்ட ஒருவனிடம் அவை இல்லாததால் அஞ்சி அடங்கி ஒடுங்கி அகன்று விடுவான். படைவலியுடையான் தடை அகன்றதும் எளிதில் எண்ணிய இடத்தை அடைதல் மிக எளிமை. இவைகளை மனதில் பதித்துக் கொண்டு பின் வரும் பாட லைப் படியுங்கள்:

''ஞான வாள் ஏந்தும் ஐயர் நாதப் பறையறைமின்!
மான மா ஏறும் ஐயர் மதிவெண்குடை கவிமின்!
ஆனநீற்றுக் கவசம் அடையப் புகுமின்கள்!
வானஊர் கொள்வோம் நாம் மாயப்படை வாராமே''

மாயப்படையுடன் போரிட வேண்டும். ஏன் படையை வாராமல் தடுக்க முடியாதா? முடியும். மாயப்படையுடன் போரிடாமல் அதைத் தடுப்பதே மாணிக்கவாசகரின் குறியாம். மாயப்படையை வெல்லு வது நோக்கமன்று. மாயப்படையை அஞ்சி ஒடுங்கச் செய்ய வேண் டும். ஒடுக்கிவிட வேண்டும். அடக்கிவிட வேண்டும். முனைப்புத் தன்மை கொண்ட விதையை வறுத்து அதன்பின் விதைத்தால் முளைக்குமா? முளைக்காது. அதன் முனைப்பின் முனைப்பு அவிக் கப்பட்டு விட்டது. விதை உண்டு. ஆனால் முளைத்திறன் இல்லை. அதைப் போல மாயை தன் ஆற்றலை, முனைப்புக்களை, தன் செயல் களை ஒடுக்கிக் கொண்டு அடங்கிவிட வேண்டும். படை எடுப்பில் சிவனடியார்களின் நோக்கமாக மாணிக்கவாசகர் காட்ட விரும்புவது அவ்வளவே. அப்படியாயின் அவைகளைக் கொல்ல வேண்டிய தில்லை. அழிக்க வேண்டியதில்லை. உயிரிழப்பு ஏதும் இந்தப் போர் நோக்கில் இல்லை. சிவனடியார் எவ்வுயிரையாவது கொல்வாரா? கொல்லாமை அவர் குறியாயிற்றே. ஆகவே மாயப்படையை அழிக் காமல் ஆனால் வராமல் தடுப்பது எப்படி? படைத் தலைவனின் தோற்றம், படைகளின் தோற்றம், அவர்களின் ஆற்றல்கள், கருவி கள், துணைகள் தம் வலிமை, எழுச்சி, ஆகியவற்றை மிகப் பலமாகக் காட்டினால் எதிரியும் எதிரிப்படையும் அஞ்சி ஒடுங்கி ஓடி அடங் கும்.

உலகத்தை அழித்துவிடக் கூடிய அணுகுண்டு போன்ற வலி மையை ஒருவர் கொண்டிருப்பாரானால் யார் அவருடன் போரிட முன் வருவர்? அவன் போரிட வருவானாயின் ''அவனிடம் அடைக் கலமன்றோ புகுவர். அடங்கி ஒடுங்கி அகன்று விடமாட்டாரா? மாயையும் அந்நெறிக்கு விதிவிலக்கு அன்று. ஆகவே மாயை அஞ்சு மாறு தம் படையை அமைக்கத் தம்படை எழுச்சியை ஆயத்தப் படுத்தி நிறுத்தி, மாயப்படை வாராமல் அஞ்சி அடங்கி ஒடுங்கி அகலுமாறு தம்முடைய படை அணிவகுப்பை நிறுத்திக் காட்டுகிறார்.

சிவனடியார்கள் போருக்குப் புறப்படும் போது பக்க பலமாகப் படைகள் நிறுத்தப்படுகின்றன. மாணிக்கவாசகரின் பாடலைப் பாருங்கள்.

''தொண்டர்கள் தூசிசெல்லீர்! பத்தர்காள் சூழப்போகீர்!
ஒன்திறல் யோகிகளே பேரணி உந்தீர்கள்!
திண்திறல் சித்தர்களேகடைக்கூழை சென்மின்கள்;
அண்டர்நாடு ஆள்வோம் நாம் அல்லற் படை வாராமே.''

தொண்டர்கள், ஒண்திறல் யோகிகள், திண்திறல் சித்தர்கள், பக்தர்கள் ஆகிய நால்வகையான படைகள் - சிவ அன்பர்கள் - மாணிக்கவாசக ரின் படைகளாய் உதவுகின்றனர்.

கருவிகளைக் கை கொண்டு செல்லாமல் வீரர்கள் போருக்குச் செல்லுதல் எங்கேனும் உண்டோ? இல்லையல்லவா? ஞான வீரர்கள் ஞானவாளினை ஏந்தியுள்ளனர். வாள் எனக் கருவி ஒன்றினைச் சொல்லியிருந்தாலும் சிவ பெருமானிடம் திரிசூலம் இருப்பது போல திரிசூலம் கொண்டு செல்பவரும் உண்டு எனக் கொள்ள வேண்டும். இவ்வாறு கொள்ள இலக்கணமும் இலக்கியத் திறனாய்வுக் கொள்கை களும் இடம் தருகின்றன. ஐயராகிய சிவனடியார்கள் ஞானவீரர்க ளாய் ஞானத்தையே மெய்யுணர்வையே - மெய்யறிவையே (Wisdom) கூரிய அறிவையே - வாளாகக் கொண்டுள்ளனர். முக்குண அழித்தலைச் சின்னமாகத் திரிசூலம் கொள்ளலாகிறது. அச்சிவனடி யார் படையில் மாணிக்கவாசகரும் ஒருவர். தன்னைத் தனிப்படுத்தித் தலைவனாக்கிக் கூறியிருந்தால் ஆணவப் பிடிப்புத் தோன்றிவிடும். மலங்களை அழித்தவர் என்பதைக் காட்டவே தன்னை தனிப்படுத்தி - தலைமைப்படுத்திக் கூறவில்லை. கூறியிருப்பின் செருக்கின் தோற் றம் வெளிப்பட்டுவிடும்.

சிவனடியார்கள் தம் நால்வகைப் படைகளுடன், ஞானம் மெய் யறிவு - மெய்யுணர்வு கருவிகளுடன், போருக்கு ஆயத்தமாய் விட்ட னர். இந்தக் கருவிகள் என்ன செய்யும்? எதிரி மாயை. அம்மாயை யில் தோன்றுவது அஞ்ஞானம் - அறியாமை. அஞ்ஞானத்தை, ஞானவாளால் மெய்யறிவால் - அழித்தால் ஞானம் வாழும். எல்லா உண்மைகளும் துலங்கும். ஒருவன்படும் துன்பங்களுக்கெல்லாம் காரணமே அஞ்ஞானம்தான். அறியாமைதான். அந்த அறியா மையை அகற்றுவதற்கு ஞானவாள் ஒன்றால் தான் ஆகும். அது விலகினால் மெய்ஞ்ஞானம் - உண்மை - அறிவு - மெய்யுணர்வு தோன்றும். அந்த மெய்யுணர்வு வளர்க்கப்பட வேண்டும். அதனை வளர்ப்பதற்கு முதற்படி. நிறைவானபடி, இறைவன் பெயரை முழங் குதலே, நாதப்பறை அறைதலே. ஆகவே அப்படைகள் நாதப் பறையை முழக்கிச் செல்கின்றன. நாத முரசுகள் ஏன் முழங்கவேண் டும்? இறைவனுக்கு நாதமே பறை என மாணிக்கவாசகரின் கீர்த்தித் திருவகவல் நூற்றி எட்டாவது வரியும் திருத்தசாங்கம் எட்டாவது பாட்டும் கூறுவதைக் கற்போர் இணைத்து பார்த்துச் சுவைக்கலாம். ஓங்காரத் தத்துவமே சிவனாரின் முரசு. அதற்குப் புறச்சின்னமே உடுக்கை. முரசுபுறை முழங்க சிவவீரர்கள் ஞானவாளுடன் அணி அணியாகப் புறப்பட்டு விட்டனர். அவர்கள் வாய்தொறும் நடைப் பாட்டுத் தோன்றி உயிர்ப்பும் எழுச்சியும் ஊட்டி உற்சாகம் தரவேண் டுமல்லவா? எனவே ஒவ்வொரு வீரர் வாயும் 'ஓம் நமசிவாய' முழக்கத்தை ஒவ்வொரு ஏட்டிலும் எழுப்புகிறது. சிவநாத ஒலி - ஓங்கார ஒலி - ஓங்கார ஐந்தெழுத்து முழக்கம் வீரர்களுக்குத் தெம்பும் கிளர்ச்சியும் ஊக்கமும் ஏற்படுத்துகின்றது. ஓம் என்னும் ஓசையின் வடிவினனாகிய இறைவனின் திவ்விய உடல் அலகிலா ஜோதி பேரின்பம். சித் அம்பரம் ஆளும். அகர, உகர, மகரமாகிய மூன்று எழுத்துக்களின் ஒன்றித்த ஒலி இது. அகரம் உலகின் தோற்றத்துக்

கும், உகரம் உலகின் இருப்புக்கும், மகரம் உலகின் ஒடுக்கத்துக்கும் உரிய ஓசைகளாம். ஆகவே ஓம் என்று ஒரு தடவை இறைவன் கூறும்போது அண்டத்தின் படைத்தல் காத்தல் அழித்தல் ஆகியவை நிகழ்கின்றன. இயற்கையில் இடையறாது ஓம் என்னும் ஓசை ஒலித் துக் கொண்டிருக்கிறது. ஆகவே அவ் ஓங்கார ஒலியை சிவனடியார்க ளும் எழுப்பி நடைபோடுகின்றனர். மாணிக்க வாசகரின் முதற் சொல்லே 'நமசிவாய' என்பது தான். சிவபுரணாத்தின் தொடக்கமே அச்சொல் தொடர் ''நமசிவாய வாழ்க. நாதன் தாள் வாழ்க'' என்பதே முதலடி. நாதத்தின் தலைவன் நாதன். ஆக நாதப்பறை முழக்க வேண் டியதுதானே! படைகள், நாதனின், சிவனின் பல பெயர்களையும் கூவிநாதம்கிளப்புகின்றன. ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும் இல் லார்க்கு ஆயிரம் திரு நாமம்' பாடிச் செல்கின்றன. ஒவ்வொரு பெய ரின் பொருளுணர்ந்த ஆயிரம் திருப்பெயர்களை ஓதுவது நல்ல அர்ச்சனையும், ஆராதனையும், உபாசனையும் ஆகுமல்லவா?

பெருமை பொருத்திய காளையை ஊர்ந்து செல்லும் வீரர்களின் மதி வெண் குடையாகக் கவிந்துள்ளது. காளை சிவனுக்குரிய ஊர்தி. காளை என்பது உயிர். உயிரை வாகனமாகக் கொண்டு இறைவன் அமைகிறான். இந்த மெய்யுணர்விலிருந்து வீரம் பிறக்கும். விடைப் பாகனல்லவா? காளையின் மீது அமர்ந்திருப்பது உயிர்கள் அனைத் திலும் அவன் ஆரோகனம் செய்வதற்கு அறிகுறியாம். எனவே போர் வீரர்கள் அவ்வூர்தியைப் பயன்படுத்துகின்றனர். அவர்களுக்கு அமையும் அறிவே - மதியே நுண்ணறிவே வெண்குடையாக ஊர்தி மேல் அமர்வாருக்கு அமைகிறது. மதிசூடியவன் சிவனல்லவா? சிவன் நிலவினைத் தலையில் வைத்திருப்பது நினைவில் வந்தமை யும். இந்த நுண்ணறிவு - மூன்றாம் பிறை - மதி எதிரியை அகற்றுவ தற்காக ஒளி வீசி நல்வழியைக் காட்டித் தரும். அது வெண்குடை நிழலுக்கு நிகராம். வீரர்கள் சிவக்கோலம் பூண்டு நடைபோடுகின்ற னர்.

ஞானவீரர்கள் நன்மை தரும் திருநீற்றுக் கவசம் அல்லது போர்வை அணிந்துள்ளனர். வீரக்கவசம் பசுவின் சாணத்தின் சாம்ப லாகிய திருநீறே ஆகும். சிவன் திருநீறு பூசியிருப்பதை முன்னிட்டு அவரை ''நீற்றோன் காண்க'' என்கிறார் மணிவாசகர். எல்லாம் தீயில் வெந்து போன பிறகு எவ்வளவுதான் எரித்தாலும் எது வேகாதிருக்கி றதோ அதுநீறு. உலகெலாம் இறுதியில் அழிந்துபோன போதிலும் அழியாதிருப்பவன் சிவன். உடலோ அழியும் தன்மையுடையது. உடன் சுகத்தை நாடும் மனம். தனக்குக் கேடு சூழ்ந்து கொள்கிறது. தியாகத்தின் சின்னம் திருநீறு. ஆதலால் அதைத் தியாகராசன் அணிந் திருக்கிறார். உடல் உணர்வை வெல்ல வேண்டும். உடலைச் சாம்பல் போன்று வைத்திருத்தல் நல்லது. அதன் மூலம் அற்ப சுகத்தை நாடாதி ருப்பது ஆத்ம சக்தியாம். பண்டங்களெல்லாம் தீயில்வெந்து அழிந்து போன நீற்றிருப்பது நீறு. அதை மீண்டும் எவ்வளவு சுட்டாலும் அதன் தன்மை மாறாது. ஆக அது மெய்ப்பொருளாகிய சிவனது சின்னமாம்.

இயற்கை இறைவனின் உண்மை வடிவம். அவரை ஒரு மனித னாகச் சமைத்து நீறு பூசுவித்து, புலித்தோலிடுத்தி, பாம்பு அணி வித்து, மறை ஓதப் பண்ணுவித்து - இன்ன பிற செய்துள்ளமை, மனிதனது கற்பனையாம். ஆயினும் இதன் மூலம் உண்மைகள் - தத்துவங்கள் மிளிர்கின்றன. மாறும் தன்மையுடையதாய் இருப்பது உலகம். அழியாத் தன்மையாயிருப்பது இறைவன். உலகப் பொருள் ஒன்றில் அழியும் பகுதி தகனம் - நெருப்பிலிட்டு எரிப்பது ஆகிறது. அழியாப் பகுதி சாம்பலாய் எஞ்சி நிற்கிறது. பிறகு முன்பு சொன்னது போல எவ்வளவு சுட்டாலும் பழைய சாம்பலாகவே இருக்கும். எனவே சாம்பல் இறைவனின் சின்னம். ஆகவே அழியும் தன்மையு டைய உலகிற்கு ஆதாரமாக அழியாப் பொருள் ஒன்று உண்டு என் னும் உண்மையை விளக்குகிற சின்னம் திருநீறு. இது வைராக்கியத் தின் சின்னமுமாம். வைராக்கியம் என்பதன் பொருள் உலகப்பற்றை ஒழித்தல் என்பதாம். இது சுட்டறுத்தல் எனவும்படும். (ராகம் - உலகின் கண் பற்று வைத்தல், வைராக்கியம் அதன் எதிர்மறை). பற்றை அழித்தலே. அறியாமைப் பகையை ஒடுக்குதற்குரிய வழி. அறியாமையை அழித்தவர் - சம்மாரம் செய்தவர் - சுட்டறுத்தவர் சிதம்பரம் புகுவர். இவ்வளவு பெருமை உடைய திருநீற்றைப் படை யினர் கவசமாய் அணிந்துள்ளனர். சிவனின் நீற்றைப் பூசியுள்ளனர் என்பதே மேற்பொருளாம். சிவவடிவமாக மெய்யடியார்கள் மாறி நிற்கின்றனர்.

வான ஊர், அண்டர் நாடு, கொள்வதும் வெல்வதும் என்பவை எப்படி? வான ஊரும் அண்டர் நாடும் எங்கேயோ இருக்கின்றன என என்னவேண்டாம். இனிய தூய மனமுடையர்க்கு இந்நிலவுல கமே மலமற்ற இறைவனாக மிளிர்கிறது. இறைவன் வேறு இயற்கை வேறு அல்ல. காண்போனின் தகைமைக்கு ஏற்ப அது இறைவனா கவோ இயற்கையாகவோ காட்சி தருகிறது. ''நிலந்தன்மேல் வந்த ருளி நீள் கழல்கள் காட்டி'' எனச் சிவபுராணம் பேசும். இயற்கை இறைவனின் உண்மை வடிவமாயிற்றே. ''ஈசன் அவன் எவ் உயிர்க் கும் இயல்பு ஆனான் சாழலோ'' எனக் கூறும் திருச்சாழல். ஆக ஞானக்கண்ணுக்கு இயற்கை இறைவன். ஊனக்கண்ணுக்கு அது மாயை, எனவே வானஊர் அண்டர்நாடு, சிவபுரம், சிதம்பரம் எல் லாம் ஒரே பொருள் ஒரே இடமாகும்.

ஞானத் தலைவருடன் தூசிப்படை - முன்படையாகத் தொண் டர் படை படையும், பக்கப்படைகளாகப் பக்தர் படையும், இடையில் பேரணியாகப் பேரணிப் படையும், கடைக்கூழை - இறுதிப் படையா கச் சித்தர்படையும் நிற்கின்றன. தன் பக்கம், பலமாக இருக்கத், தன் கருத்தொத்தவர்களையே சேர்த்துக் கொள்ள வேண்டும். நட்புக் கொள்ள வேண்டும். சேரிடமறிந்து சேர வேண்டும். நல்லாரிணக்கம் - சிவனடியார் நட்பு - சத்சங்கம் ஒருவனுக்கு இடர் தராது, வெற் றியே நல்கும். பேரணி கண்டு, கட்சிகளின் வலுவை இக்காலம் உணர்வது போல, ''பேரணிகள்'' செல்வதாக மாணிக்கவாசகர் கூறு வது இதன் பெருமையை உணர்த்தும்.

''இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்'' என்பது போலப் படையைக் கண்ட அல்லது கேட்டறிந்த மாயை போரிட வருமா? சிவவடிவில் சிவனடியார்கள் திரண்டு நிற்பதை அறிந்த மாயை - அறியாமை - போருக்கு வராமல் ஓடிவிடும். வான ஊருக்குள்ள தடை மாயை நீங்கும். அல்லல் அகலும். சிவனடியார்கள் எத்தடையு மின்றி நேராகச் சிவபுரம் அடையலாம். அண்டர் நாட்டில் சுதந்திர மாய் வாழலாம். சிதாகாசமாகிய சுயராஜ்யம் கிடைத்துவிடும். மாயை - காமம், வெகுளி, மயக்க நோய்கள் - அடங்கி ஒடுங்க சிவனடியார் இங்கேயே ஞானக்கண்ணால் இறைவனை நேரில் கண்டு மகிழலாம். தடைச்சுவர் நகர்ந்தது. தலைவன் தலைவனாய் என்றும் உள்ளவனாகிறான்.

சிவபுரம் சென்ற சிவக்கூட்டம் சிவனைக் காண வேண்டாமா? சிவனைக் கண்டு என்ன செய்வது? திருக்கழுக்குன்றப் பதிகத்தில் மாணிக்க வாசகர் காண் ஒணாத் திருக்கோலம் காட்டியதையும் அவர் பெற்றதையும் கூறும் பாடலைப் பாடி நாமும் அடைக்கலாம் புகு வோம்.

> ''பேதம் இல்லது ஓர் கற்பு அளித்த
> பெருந்துறைப் பெருவெள்ளமே
> ஏதமே பலபேச நீஎனை
> ஏதிலார் முனம் என்செய்தாய்
> சாதல் சாதல் பொல்லாமை அற்ற
> தனிச்சரண் சரண் ஆம் எனக்
> காதலால் உனை ஓத நீவந்து
> காட்டினாய் கழுக்குன்றிலே''

காதலால் ஓதிக் கண்ணீர் மல்கி திருக்கழுக்குன்றத்தில் காண் ஒணாத்

திருக்கோலம் கண்டு அடைக்கலம் புகுந்து நாம் உய்ய சிவப்படையு டன் சேர்ந்து சிவபுரத்தில் வாழ்வோமாக. இவ்வுலகமே சிவபுரம் என்பதை உணர்ந்து மனதில் மாசு அகற்றி மனக் கவலைகளை ஒடுக்கி உறுதிப்படுத்துவோமாக. திருவடியே சிந்தித்து திருவருளில் திளைப் போமாக. மாயை மாயமாக மருண்டு மறைந்தது.



எட்டாம் திருமுறை

திருச்சதகம்

நாடகத்தால் உன்னடியார் போல் நடித்து நான்நடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே இடையறா அன்புனக்கென்
ஊடகத்தே நின்றுருகத் தந்தருள்எம் முடையானே.

எம் உடையவனே, அன்பில்லாத யான், அன்புடைய உனது அன்பர் போல் நடந்து காட்டி, அன்பர் வீடு செல்வதற்கிடையே, யானும் முக்தி பெறுவதற்கு அதிகமாகத் துரிதப் படுகின்றேன். மாணிக்க மலைபோலும் ஐயனே! உன்பால் எப்போதும் நிகழும் அன்பினை என் நெஞ்சினுள் நிலைபெறவும், அதனால் நெஞ்சமு ருகவும் உதவியருள்வாயாக.

ஒன்பதாம் திருமுறை

சேந்தனார்

ஏகநா யகனை இமையவர்க்(கு) அரசை
என்னுயிர்க்(கு) அமுதினை எதிரில்
போகநா யகனைப் புயல் வணற்(கு) அருளிப்
பொன்னெடுஞ் சிவிகை ஆர்ந்த
மேகநாயகனை மிகுதிரு வீழி
மிழலை விண்ணிழி செழுங் கோயில்
யோகநா யகனை யன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.

ஒப்பற்ற ஒரே தலைவனா யிருப்பவனே, இமயவர்க்கரசை, என் னுயிர்க்கு அமுதினை இணையில்லாத சிவானந்தமாகிய இன் பத்தை ஊட்டும் தலைவனை, மேகம் போன்ற நிறத்தினனை, திருமாலுக்குச் சக்கரம் அளித்து அருள் செய்து அத்திருமாலையே பொன்னாலான நீண்ட சிவிகையாகக் கொண்டு ஏறிச் செலுத்திய மேகம் போலும் கைம்மாறு கருதாத தலைவனாகிய சிவபெரு மானை, மேன்மை மிகுந்த திருவீழிமிழலையில், தேவலோகத் தினின்றும் கீழே இறங்கி வந்த செழுமையான கோயிலிலே எழுந்தருளிய சிவயோகங்களுக்குத் தலைவனாயிருப்பான் அல் லாமல் வேறொரு பொருளும் உள்ளதென்று நான் அறிந்திலேன்.



திருப்புகழ் - ஓர் ஆய்வு

(டாக்டர். பெ. கு. வரதராசன். எம்.ஏ., பிஎச்.டி)

'வெள்ளை வாரணப் பிள்ளையார் பதம்
உள்ளுவார் மனக் கள்ள மாறுமே'

திருப்புகழ் மொத்தம் பதினாறாயிரம் பாடல்கள் என்பர் நமக்குக் கிடைத்து அச்சுவாகனமேறிய பாடல்கள் மொத்தம் 1340 ஆகும்.

திருப்புகழ் பாடல்களை ஆன்றோர்கள் மூன்று பகுதிகளாகப் பிரித்தனர். முருகப்பெருமானுடைய படை வீடுகள் என்று சொல்லப் படும் திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழநி, சுவாமிமலை, குன்று தோராடல் பழமுதிர்ச் சோலை என்னும் திருத்தலங்களுக்குரிய எல்லாப் பாடல்களுமாகும். இவை மட்டும் 447 பாடல்கள் ஆகும்.

1. திருப்பரங் குன்றம் - 14 பாடல்கள்
2. திருச்செந்தூர் - 84 பாடல்கள்
3. திருவாவினன் குடி - 95 பாடல்கள்
4. சுவாமிமலை - 38 பாடல்கள்
5. குன்றுதோறாடல் - 200 பாடல்கள்
6. பழமுதிர் சோலை - 16 பாடல்கள்

ஆக மொத்தம் 447 பாடல்கள்

கைத்தல நிறைகனி யப்ப மொடவல் பொரி'' என்று தொடங்கும் விநாயகர் துதி - முத்தைத்தரு பத்தித் திருநகை எனத் தொடங்கும் முதற்பாடல். ஆறு திருப்பதிகங்கள் பற்றிய பாடல்களுடன் 450 ஆகும். திருச்செந்தூர் என்னும் தலம் திருச்சீரலைவாய் என்றும், பழநியைத் திருவாவினன் குடி என்றும், சுவாமிமலையைத் திருவேரகம் என்றும் நக்கீரர் பாடிய திருமுருகாற்றுப்படை அறிவிக்கும்.

திருவேரகம் என்பது சேரநாட்டுத் தலங்களுள் ஒன்று என்றும் ஆன்றோர் குறிப்பிடுவர். 'குன்றுதோறாடல்' என்ற தொடர் முருகபெருமான் குன்று தோறும் ஆடல் புரிகின்ற குறிஞ்சிக்கடவுளானதால் முருகன் எழுந்தருளிய குன்றுகள் அனைத்தும் இத்தொடருள் அடங்கும்.

1. 'பதியெங் கிலுமி ருந்து விளையாடிப்
பலகுன்றிலு மமர்ந்த பெருமானே'
2. 'பருவரை துணிய வொருகணை தெரிவ
பலமலை யுடைய பெருமாளே'
3. 'மகிழு நாயக தேவர்கள் நாயக
கவுரி நாயக னார்குரு நாயக
வடிவ தாமலை யாவையும் மேவிய தம்பிரானே'
4. 'கும்பிட நாடி வாழ்வு தந்தவ ரோடு வீறு
குன்றுதோ றாடல் மேவு பெருமாளே'

என்ற தொடர்களால் திருப்புகழாசிரியரே இக்கருத்தினைத் தெளிவுப் படுத்துகிறார்.

எனினும் திருப்புகழாசிரியர் முருகப்பெருமான் அன்பர்களுக்கு அருள்பாலிக்க மனமுவந்து எழுந்தருளிய குன்றுகளாக சில வற்றைத் தேர்ந்தெடுக்கின்றார். அவற்றுள் சிறந்ததும் அதிகப் பாடல்களைப் பெற்றதும் திருத்தணிகையேயாகும்.

கச்சியப்ப சிவாச்சாரியார், முருகப் பெருமான் வள்ளியை மணந்து கொள்ள திருப்பரங்குன்ற மணத்திற்குப் பின் மீண்டும் கந்த கிரி சென்று அங்கிருந்து திருத்தணிகை வந்ததாகக் கூறுகின்றார்.

'இந்த முறையில் இவள் ஏனற் புனங்க காப்ப
அந்த வளவில் அவளுக் கருள் புரியக்
கந்த வரை நீங்கிக் கதிர் வேலவன் தனியே
வந்து தணிகை மலையிடத்து வைகினனே'

— கந்தபுராணம்

'குன்று தோறாடல்' என்ற தொடரை திருத்தணிகை மலைக்கேயேற்றி அஃதொன்றினையே குன்று தோறாடல் என்றும் சிலர் மாறுபடக் கருதுவர்.

திருப்புகழாசிரியர் முருகப்பெருமான் ஆடும் குன்றுகளாகத் தமது பாடல்களில் குறிப்பிடுபவை. கயிலை மலை - ஸ்ரீசைலம் - திருவேங்கடம் - திருத்தணிகை - வள்ளிமலை - திருக்கழுக்குன்றம் - மயிலம் - திருச்சிராப்பள்ளி - திருக்கற்குடி - இரத்தினகிரி - விராலிமலை - விநாயக மலை - திருச்செங்கோடு - கொல்லிமலை - ராஜகம்பீர வளநாட்டு மலை - ஞானமலை - இதனை நைனாமலை என்றுங் கூறுவர். ஊதிமலை - குருடிமலை - தென்சேரிகிரி - கொங்கணகிரி - தீர்த்தமலை - கனகமலை - புகழிமலை - பூம்பறை - கொடுங்குன்றம் - குன்றக்குடி - பொதியமலை - கழுகுமலை - வள்ளியூர் ஆக 29 மலைகள். இவையன்றி ஈழநாட்டில் உள்ள கதிர்காமம் - அருக்கொணாமலை - திருக்கோணமலை ஆகிய மூன்றினையும் குறிப்பிடுகின்றார்.

ஆறுபடை வீட்டுத்தலங்கள் அல்லாத மற்ற காசி முதல் இராமேஸ்வரம் வரையுள்ள எல்லாத்தலங்களையும் பற்றிய பாடல்களும் பஞ்சபூதத் தலங்களையும் குறிப்பிட்டுப் பாடிய 545 பாடல்கள் இரண்டாம் தொகுதியில் இடம் பெற்றுள்ளன.

பஞ்சபூதத் தலங்கள் என்பவை - காஞ்சீபுரம் - திருவானைக்கா - திருவண்ணாமலை - திருக்காளத்தி - சிதம்பரம் ஆகும். இவை முறையே நிலம், நீர், நெருப்பு, காற்று, விண்தலங்களாகும்.

இவையனைத்துமே முத்தியளிக்கும் தலங்கள் என சைவப் பெரியார்கள் குறிப்பிடுகின்றனர்.

இவைகளைப் பற்றிய பாடல்கள் மட்டும் 204 ஆகும். காஞ்சிபுரம் - 44 பாடல்கள்; திருவானைக்கா - 14 பாடல்கள்; திருவண்ணாமலை - 78 பாடல்கள்; திருக்காளத்தி - 3 பாடல்கள் சிதம்பரம் - 65 பாடல்கள்.

பஞ்சபூதத் தலங்களன்றி 158 தலங்கள் பற்றிய 341 பாடல்கள் இவ்விரண்டாம் தொகுதியில் இடம் பெற்றுள்ளன. வயலூர் - சீர்காழி - மதுராந்தகம் - மதுரை போன்ற தலங்கள் பத்தும் அதற்கு மேற்பட்ட பாடல்களையும் பெற்ற தலங்களாகும்.

அடுத்து 309 பாடல்கள் 'பொது' என்ற தலைப்பில் தொகுத்து தொகுதி மூன்று எனப் பெறக் கிடைக்கின்றது. இத்தொகுதியில் 11 பாடல்களும், முதற் பகுதியில் 25 பாடல்களும் புதிதாக இடம் பெற்றுள்ளன. இவை அனைத்தும் சேர மொத்தம் 1340 பாடல்கள் ஆகும்.

இவற்றை முறையாகச் சேகரித்துத் தொகுத்து அச்சுவாகன மேற்றி முருகனருள் பெறத் துடிக்கும் அன்பர்களிடையே உலவ விட்ட பெருமை திருவாளர் வ.த.சுப்பிரமணிய பிள்ளையவர்க ளையே சாரும்.

டாக்டர் உ.வே.சாமிநாத ஐயரவர்கள் சங்கத் தமிழ் நூல்கள் பலவற்றைற ஏடுதேடி செப்பஞ் செய்து வெளியுலகத்திற்கு அறிமுகப் படுத்தியது போல - புத்தகங்களாக அச்சிட்டது போல திருவாளர் சுப்பிரமணிய பிள்ளையவர்களும் திருப்புகழைத் தேடி ஏட்டுப்பிரதி களை பல்வேறு இடங்களிலிருந்தும் பெற்று அவைகளை ஒப்பு நோக்கி செப்பம் செய்து ஒன்று, இரண்டு மூன்று என முறைப்படுத்தப் பட்ட தொகுதிகளாகப் பதிப்பித்தார்.

இவர் முதற்பகுதியினை 1894 ஆம் ஆண்டும், இரண்டாம் தொகுதியினை 1901 ஆம் ஆண்டும், மூன்றாம் தொகுதியினை 1924ஆம் ஆண்டிலும் பதிப்பித்து வெளியிட்டதாகத் தெரிகின்றது. இம்முயற்சியில் ஈடுபட்டு முருகனது புகழையும், அருளையும் நுகர விரும்பிய பதிப்பாசிரியர் மேற்கண்ட அல்லல்களையும் அரும்பெ ரும் முயற்சிகளையும் டாக்டர் உ.வே.சாமிநாத ஐயரவர்கள் தமது சாற்றுக் கவியால் வெளிப்படுத்துகின்றார். பாம்பின் கால் பாம்பறியும் என்பதுதானே பழமொழி.

பூவரு மமலன் அயிற்கரச் செவ்வேள்
பொன்னடியே நினைந் துருகித்
தாவரு மருணகிரிப் பெருங் கவிஞன்
சாற்றிய திருப்புகழ் பலவும்
மேவரு நிலையை உணர்ந்தவ னருளே
மெய்த் துணையாக் கொடு தேடி
யாவரும் பெறச்செய் சுப்பிர மணிய
ஏந்தல்சீ ரியம்புதற் பாற்றோ

— டாக்டர் உ.வே.சா. அவர்கள்.

திருவாளர் வ.த.சுப்பிரமணிய பிள்ளையவர்கள் காஞ்சீபுரத் திற்கு அருகில் உள்ள வடக்குப்பட்டு என்னும் ஊரிற் பிறந்தார். இவரது தந்தையார் திருவாளர் தணிகாசலம் பிள்ளை யாவார்கள். இவர் சீர் கருணீகர் மரபினர் என்பதும் கௌதமனார் கோத்திரத்தினர் என்பதும்

''பரவுபுகழ் பெருகியசீர் கருணீக
மரபுதித்தோன் பாரிலாசை
விரவுதராக் கௌதமானார் கோத்திரத்தான்''

என்ற சரவணப் பிள்ளையவர்களின் சாற்றக் கவியின் தொடரால் தெளிவாகிறது.

திருப்புகழை நினைத்த அளவில் பாடவல்ல அநுபூதிச் செல்வ ராகிய அருணகிரியார் நினைக்க முக்தியளிக்கும் திருவண்ணாமலை யில் அவதரித்தார்.

இவர் பிரபுட தேவ மன்னன் காலத்தில் வாழ்ந்தவர் எனக் கூறப்படுகின்றது. அம்மன்னனது ஆட்சிக் காலம் இன்றைக்குச் சற்றே றக்குறைய 1450 ஆண்டுகளாகலாம். எனவே அருணகிரியார் காலம் 530 ஆண்டுகட்கு முன் எனக் கூறலாம்.

இவர் தமது வாழ்வின் முற்பகுதியை சிற்றின்ப நுகர்விலேயே கழித்தார் என்பதை இவரது பாடல்களே காட்டும். காமநுகர்ச்சியால் அடைந்த இன்பம் இவருக்குப் பரிசாகப் பல துன்பங்களை நோயாகக் கொடுத்தது. அவைகளை இவரது வறுமை வளைத்துக் கொண்டது.

இதிலிருந்து விடுபட திருவண்ணாமலை கோபுரத்து மீது ஏறி அங்கிருந்து கீழே குதித்து உயிர்விட முயன்றார். குதித்தபோது முரு கன் இவரைத் தன் பன்னிருகரங்களால் ஏற்று துன்பங்களை நீக்கி மெய்ஞ்ஞான உபதேசம் செய்தார்.

'வறுமையாகிய தீயின்மேற் கிடந்து
நெளியு நீள்புழு வாயினேற் கிரங்கி யருள்வாயே'

'அருணை நகர்மிசை கருணையொ டருளிய
மவுன வசனமு மிருபெரு சரணமு மறவேனே'

என்ற தொடர்கள் இக்கூற்றறினை உண்மையாக்குவனவாம்.

அருணகிரிப் பெருமானுக்கு முருகனது அருள் முற்பிறவியிற் செய்த நல்வினைப் பேற்றால் கிட்டியது. உபதேசம் பெற்று உண்மை யுணர்ந்த அடியார்.

'நான் முருகப்பெருமானுக்கு அடிமை' அதுவும் முற்பிறவியிலி ருந்தே எனக் கூறுகின்றார்.

'எழுமையும் எனைத்தனது
கழல் பரவு பக்த னென'

இனிது கவியப்படி ப்ரசாதித்த பாவலனும்'' என்னும் திருவகுப் பாலும்,

'என்றனை வழிவழி யன்புசெய்
தொண்டு கொண்டருள் பெருமானே'

பழைய நினது வழியடிமை' என வரும் திருப்புகழாலும் தெளி வாகின்றது.

அருணகிரிநாதர் திருவண்ணாமலையினின்றும் நீங்கித் தெற்கே உள்ள சிவாலயங்கள் தோறும் முருகபெருமானது திருப்புகழைப் பாடிக் கொண்டே சென்றார். திருப்பந்தணை நல்லூர் என்னுந் திருத்த லத்திற்கு வந்தார். அங்கு முருகனை, 'சந்தத்தமிழால் உன்னை நிறை யப் பாட ஆசைப்படுகின்றேன். அருள் தாராய்' என வேண்டிக் கொண்டார்.

அங்கிருந்து திருவையாறு சப்தஸ்தான உற்சவத்தன்று போய்ச் சேர்ந்தார். பின் திருச்சிராப்பள்ளிக் கடுத்துள்ள வயலூரை அடைந் தார்.

அங்கு முருகப் பெருமான் ஏகமுகத்துடன் மயில் வாகனத்தில் வேல் தாங்கிய கையராய் அவர் கனவில் தோன்றி அவரைத் தடுதாட் கொண்டு 'அன்ப' திருப்புகழ் பாடவேண்டும் என்னும் உனது விருப் பத்தை நிறைவேற்றுகின்றேன். நீ இனி நமது ஊர்தியாகிய மயிலை யும், நீபத்தையும், வேலையும், கோழியையும் பேரின்ப நிலையான சிற்றடியையும், பன்னிரு தோளையும், செய்ப்பதியையும் சிறப்பித்து தினந்தினம் 'திருப்புகழ் விருப்போடு உரைத்தி எனக் கட்டளை இட்ட ருளினார். இச்செய்திகளை அவர்தம் வாக்கால் அறியலாம்.

'வயலி நகரியி லருள்பெற மயில்மிசை
யுதவு பரிமள மதுகர வெகுவித
வசை மலரடி கனவிலு நனவிலு - மறவேனே'

'பாத பங்கய முற்றிட வுட்கொண்
டோதுகின்ற திருப்புகழ் நித்தம்
பாடுமென்பது செய்ப்பதி யிற்றந் தவனீயே'

'பட்சியெனு முக்ரதுர கமுநீடப்
பக்குவ மலர்த் தொடையு மக்குவடு பாட்டொழிய
பட்டுருவ விட்டருள்கை வடிவேலும்
திக்கது மதிக்கவரு குக்குடமும் ரக்ஷைதரு
சிற்றடியும் முற்றிய பன்னிருதோளும்
செய்பதியும் வைத்துயர் திருப்புகழ்வி ருப்பமொடு
செப்பென எனக்கருள்கை மறவேனே'

வயலூரிடத்து சுவாமிகளுக்கு மிக்க விருப்பமுண்டு, வேறு தலங்களைப் பற்றிய திருப்புகழிலும் கூட 'வயலூரா' என மறவாது அவ்வூர் முருகனை நினைப்பார். சுவாமிகள் வயலூரில் தங்கியிருந்த போது முருகபெருமான் அற்புதக் கோலத்தோடு தோன்றி 'நாம்

உறைதரு பருப்பதம் திருவிராலி மலை' 'ஆண்டு வருதி' எனக்கூறி மறைந்தருளினார்.

ஆண்டவன் கட்டளையை நினைவிற் கொண்டு அருணகிரிநாதர் விராலிமலையை அடைந்தார்.

'திருவண்ணாமலையில் தடுத்தாட் கொண்டு வயலூரிலும்
உமது அருமைத் திருமேனியைக் காட்டுவித்து
விராலிமலைக் கழைத்தீர் என்னே உமது அருள்' எனத் துதித்துப் பன்னாள் தங்கிப் பின்னர் திருவானைக்கா கருவூர், நெருவூர், கொடுமுடி, பட்டாலியூர், திருச்செங்கோடு அவிநாசி முதலிய தலங்களை தரிசித்துப் பழனி மலைக்கு வந்து சேர்ந்தார்.

பழனியில் சுவாமிகள் அதிக நாட்கள் தங்கியிருத்தல் வேண்டுமென்பது அவரது பழனித் திருப்பதிப் பாடல்களால் தெளிவாகின்றது. இங்குதான் முருகபெருமானை ஜெபமாலையளித்தாகக் கருதப்படுகிறது.

பின் பழனியிலிருந்து புறப்பட்டுப் பாண்டிநாட்டுத் தலங்களாகிய மதுரை, கொடுங்குன்றம், குன்றக்குடி முதலிய தலங்களையும் தரிசித்து திருப்புகழ்பாடி மறுபடியும் வடதிசை நோக்கிப் பயணமானார். சக்கிரப்பள்ளி, திருவாஞ்சியம், எட்டிக்குடி, திருப்படிக்கரை திருவரத்துறை முதலிய தலங்களை தரிசித்துப் பின் வடக்கே திருவேற்காடு, காஞ்சீபுரம், திருத்தணிகை வள்ளிமலை,காளத்தி, ஸ்ரீசைலம், காசி முதலிய திருப்பதிகளையும் கண்டு களித்துத் திருவண்ணாமலைக்கு வந்து சேர்ந்தார்.

இவரது கந்தரந்தாதிக்கு வில்லிபுத்தூராழ்வார் உரை கூறி வரும் போது 'திதத்தத்த' என்ற 54வது பாடலுக்குப் பொருள்கூற இயலாது திகைத்தபோது தாமே பொருள்கூறி அவரது அகந்தையை நீக்கினார் என்ற வரலாறும் உண்டு.

சம்பந்தாண்டான் தேவிஉபாசனை பெற்றவன் பிரபுட தேவராஜனைத் தன் வயப் படுத்திக் கொண்டு அருணகிரி நாதரை இழிவு படுத்த வேண்டுமென்ற தீய எண்ணங் கொண்டவன். இவர் அருணகிரி நாதரை வாதுக்கிழுத்தான். மன்னனிடம் கூறி மன்னரவையில் யாவரும் காண யார் தன் உபாசனை மூர்த்தியை வரவழைக்கின்றார்களோ அவர்களே உயர்ந்தவராவார் என சோதிக்க ஏற்பாடு செய்தான். அருணகிரி நாதர்தான் வாழிபடும் முருகபெருமானை அவையில் காட்சிதர வரவழைப்பதாக ஒப்புக்கொண்டார்.

சம்பந்தாண்டான் பார்வதி தேவியாரை வரவழைப்பதாக ஒப்புக்கொண்டான். முடிவில் அருணகிரி நாதரே வென்றார். இந்நிகழ்ச்சி சம்பந்தாண்டானுக்குப் பெரும் அதிர்ச்சியையும், பொறாமையையும் உண்டு பண்ணியது.

பிரபுட தேவராஜாவின் மருத்துவத்திற்குக் கற்பக நாட்டு பாரிஜாதப் பூ தேவையெனவும் அதனைக் கொண்டு வருபவர் யாவர் எனவும் செய்தி வந்தபோது அருணகிரிப் பெருமான் தன்னுடலை நீத்துக் கிளியுருவாகிக் கற்பக நாடு சென்றார். அவ்வேளையில் சம்பந்தாண்டான் 'அருணகிரிநாதர் இறந்தனர்' எனக்கூறி அவ்வுடலைத் தகனம் செய்வித்துத் தன் வஞ்சினத்தைத் தீர்த்துக் கொண்டான்.

பாரிஜாதப் பூவுடன் கிளியுருவாக வந்த அருணகிரிநாதர் தன் உடல் காணாமையைக் கண்டு திகைத்தார்.

சம்பந்தாண்டானது கயமைத் தனத்தையும் வஞ்சந்தீர்த்துக் கொண்ட இழிநிலையினையும் புரிந்து கொணடாா.

பின் கிளியுருவமாகவே செந்தமிழ்க்கடவுளிடத்துஐக்கிய மாயினர் என வரலாறு கூறுகிறது.

சுவாமிகள் முன்வேண்டிக் கொண்ட விண்ணப்பத்தை முருகப் பெருமான் நிறைவேற்றி வைத்தார் என்பதை இவர் பாடிய திருப்புகழே சான்று பகருகின்றது.

'பரவசந்தணிந் துணையு ணர்ந்தொரு
மவுன பஞ்சரம் பயில் தருஞ்சுக
பதமடைதிருந் தருள் பொருந்தும - தொரு நாளே'

'துகளில் சாயுச்சியக் கதியை யீறற்ற சொற்
சுக சொருபத்தையுற் றடைவேனோ'

'அருணகிரி நாதர் திருவடி வாழ்க - அவர் தம் திருவாய்
மலர்ந்தருளிய திருப்புகழ் வாழ்க'

இனி அவர்தம் திருப்புகழில் சொற்சுவையும், பொருட்சுவையும் சந்தச் சுவையுமுடைய சில பாடல்களைக் காண்போம்.

பகுதி I ல் 16.

''தண்டையணி வெண்டையங் கிண்ணிசு தங்கையுந்''

100. ''நாத விந்துக லாதீ நமோநம''
214. ''சரணகம லால யத்தை அரைநிமிஷ நேரமட்டில்''
343. ''வாசித்துக் காணொ ணாதது''

பகுதி II

638. ''காவி யுடுத்துந் தாழ்சடை வைத்துங்''
707. ''ஆதிமுத னாளி லென்றன் தாயுடலி லேயிருந்து''
961. ''ஆனைமுக வற்கு நேரிளைய பத்த''

பகுதி III

1056. ''அதல சேட னாராட அகில மேரு மீதாட''
1193. ''முனைய ழிந்தது மேட்டிகு லைந்தது''

சீர பாத வகுப்பு: -

''உததியிடை கடவுமர கதவருண குலதுரக''



நால்வர் காட்டிய நன்னெறி



(ஆத்ம ஜோதி - நா. முத்தையா.)

சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் ஆகிய நால்வரும் நால்வர் என்ற பெயரால் அழைக்கப்படுகின்றனர். இவர்கள் நால்வரும் வேதங்கள், ஆகமங்கள், வேதாங்கங்கள் பிரம்ம சூத்திரம் போன்ற எல்லா நூல்களும் துறைபோகக் கற்றவர்கள். இவர்களிலும் பார்க்க கூடுதலாகக் கற்றவர்கள் யாருமில்லை. அவற்றை நன்கு விளங்கிக் கொண்டவர்களும் யாருமில்லை.

ஆனால் இவர்கள் நால்வருக்கும் ஒரு சந்தேகம் நீண்டகால மாகவே இருந்து வந்தது. நாம் இவ்வளவு கற்றும் கற்றதன் பயன்தான் என்ன என்பதே அந்தச் சந்தேகம். அச் சந்தேகத்தைத் தீர்ப்பதற்கு ஏற்ற குருமாரைத் தேடித் திரிந்தனர். யாரும் கிடைக்கவில்லை. கடைசியில் தமது சந்தேகத்தைத் தீர்க்கக் கூடிய ஒரே ஒருவர் சிவபெருமான் தான் என்பதை உள்ளத்தில் தெளிந்தனர்.

கயிலையை நோக்கி நால்வரும் சென்றனர். நால்வரும் எதற்காக வந்துள்ளனர் என்பதைப் பெருமான் உணர்ந்து கொண்டார். பெருமான் கல்லால விருட்ச நிழலிலே தெற்குப் பார்த்த முகத்தோடு தெட்சணா மூர்த்தியாக உட்கார்ந்திருந்தார். பெருமான் வாய் திறந்து ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. சின் முத்திரை பிடித்த வண்ணம் இருந்தருளினார்.

சீடர்களும் நல்ல புத்திசாலிகள் நால்வரும் குருவைப் பார்த்த வண்ணம் வடதிசை நோக்கி இருந்தார்கள். குரு வாய் திறந்து ஒன்றும் பேசாமல் இருந்தே நால்வருக்கும் உண்மைப் பொருளை உள்ளத்திலே உணர்த்தி அருளினார்.

ஆட்காட்டி விரலை கட்டை விரலின் அடியில் சேர்த்த வண்ணம் மற்றைய விரல்கள் மூன்றையும் நிமிர்த்தி நிற்பதே சின் முத்திரை என்று பேசப்படுகின்றது. கட்டை விரலே சிவத்தை உணர்த்துகிறது. கட்டைவிரலின் தோற்றமே சிவலிங்க வடிவமாக அமைந்துள்ளது. ஆட்காட்டி விரலே ஜீவாத்மா. ஜீவாத்மா பரமாத்மாவின் திருவடிடையச் சேர்வதே சின் முத்திரையின் தத்துவமாகும்.

மற்றைய மூன்று விரல்களும் முக்குணம். மும்மலம் போன்ற மும்மைகளை உணர்த்துவது, ஆட்காட்டிவிரல் எப்போதும் மற்றைய மூன்று விரல்களோடும் சேர்ந்தே இருப்பது போல ஜீவாத்மாவும் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களோடும் சேர்ந்தே இருப்பதை உணரலாம். ஜீவாத்மாவும் மலங்களையும் விடுத்து இறைவன் திருவடியைச் சேர்தலே முத்தி என்றும் மோட்சம் என்றும் பேசப்படுகிறது. மடக்காத மூன்று விரல்களையும் மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என்றும் கூறுவர். மூவாசைகளையும் விடும்போது தான் திருவடி ஞானம் கிட்டுகிறது.

இந்தச் சின்முத்திரையால் எல்லாவேதங்களின் அர்த்தமும் தெரிவிக்கப்படுகிறது. பரம் பொருளும் நாம் பெறும் ஞானமும் ஒன்றே என்பதை அது அறிவிக்கின்றது.

ஆனந்த ரூபியான நடராஜாவும், ஞானரூபியான தட்சணாமூர்த்தியும் ஆணவமாம் முயலகனை தன் காலடியில் அமுத்தி தெற்கு நோக்கிக் காட்சி அளிப்பது, மயக்கம் தாழும்போது ஞானானந்தப் பேறு கிடைக்கும் என்பதையும், தரிசிப்பவர்களுக்கு தென்னவன் (யமன்) பயம் இல்லை என்பதையும் உணர்த்துகின்றது.

கட்டைவிரல் இல்லாவிடில் மற்றைய நான்கு விரல்களாலும் எவ்விதப்பயனும் இல்லாதவாறுபோல கட்டைவிரலாகிய இறைவன் இல்லாவிடில் உலகில் எவ்வித இயக்கமும் நடைபெறமாட்டா என்ற த்துவத்தையும் உணர்த்துகின்றது.

இத்தத்துவத்தை திருவிளையாடற் புராண ஆசிரியரான பரஞ்சோதி முனிவர் பின்வருமாறு விளக்குகின்றார்.

கல்லாலின் புடையமர்ந்து நான் மறை
ஆறங்கம் முதற் கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை
இருந்தபடி இருந்துகாட்டி
சொல்லாமற் சொன்னவரை நினையாமல்
நினைந்து பவத் தொடக்கை வெல்வாம்.

இறைவனுக்கு யமி என்றொரு பெயருமுண்டு. யமனை வென்றவன், அதாவது எல்லாவற்றையும் அடக்கியவன். சாந்த மூர்த்தியாக யோகியாக இருக்கும் கோலமே யமி என்பது.

இவரைப் பார்த்தால் வயதினராகக் காணப்படுகின்றார். ஆனால் இவருடன் காணப்படும் நான்கு

சிஷ்யர்களும் வயதில் முதிர்ந்திருப்பவர்கள். குரு வயதானவராகவும் சிஷ்யர்கள் வாலிபர்களுமாகவே இருப்பதுண்டு. குரு பேசாமலேயே சின் முத்திரையைக் காட்டுவதன் மூலம் சிஷ்யர்களின் சகல சந்தேகங்களையும் போக்கிக் கொண்டிருக்கிறார்.

தேவி தன்னை விட்டுப் பிரிந்தால் பரம வைராக்கியமுள்ளவராகி ஆலமரத்தடியில் தெற்கு முகமாக தியானத்தில் அமர்ந்த மூர்த்தமே தட்சிணாமூர்த்தி. இவர் இல்லாத சிவாலயமில்லை. முக்கியமாக ஞானம் விரும்புவோர் தட்சிணாமூர்த்தியை உபாசிக்கவேண்டும்.

இவர் உட்காரத் தேர்ந்தெடுத்த இடம் ஆலமரநிழல். ஆலமரம் மிக விசாலமானது. அதன் விதை மிகச் சிறியது. அதிலிருந்து பெரிய மரம் உண்டாகி கிளைகளும் விழுதுகளும் கொண்டதாக வளர்கிறது. இதைப் போலவே மிகச் சூட்சுமமான பரமனிடத்திலிருந்து பதினான்கு லோகம் அடங்கிய பிரும்மாண்டம் உண்டாகிறது. விதைக்குள் அம்மரம் அடங்கியிருப்பது போல அனைத்தும் அவனிடம் அடங்கியிருக்கிறது.

தேவகுருவான பிரகஸ்பதி தட்சிணாமூர்த்தி உபாசனையினால் அறிவிற் சிறந்து தேவகுருவானார். சிருஷ்டியை ஒட்டியும் சிருஷ்டியினால் கட்டுப்படாமல் நிற்பதும் இறைவன் என்ற பரதத்துவம். இந்த தத்துவம் உலகுக்கு ஆதாரமாக நின்று உலக சம்பவங்களால் கட்டுப்படாமல் ஆனந்தமாக இருக்கிறது.

"நீரிலே முளைத்தெழுந்த தாமரையின் ஓர் இலை
நீரினோடு கூடி நின்று நீரிலாதவாறு போல
பாரிலே முளைத்தெழுந்த பண்டித பராபரம்
பாரினோடு கூடிநின்ற பண்புகண்டறிவிரேல்".

என்றார் ஒரு சித்தர். தாமரை இலையைத் தாங்கி நிற்க தண்ணீர் ஆதாரம் கொடுத்துச் செழிக்கச் செய்கிறது. ஆனால் தாமரை இலையின் மீது நீர் ஒட்டுவதில்லை. அதுபோல பாரினில் ஒட்டாமல் இருக்கும் ஒரு த்துவம் அதனுடன் எப்போதும் கூடியே நிற்கும். இதை அகற்ற முடியாது. எங்கும் பரந்து நிற்கிறது.

சைவசமயாசாரியர்கள் நால்வர். அவர்கள் சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்போராவர். இவர்கள் நால்வரையும் நால்வர் என அழைக்கும் பண்பு நம் சைவத்தமிழ்ச் சான்றோர்களிடையே காணப்படுகின்றது.

நால்வரை ஆட்கொள்வதற்காக இறைவன் கொண்ட வடிவங்களும் வெவ்வேறு ஆட்கொண்ட வண்ணங்களும் வெவ்வேறு.

திருஞானசம்பந்த சுவாமிகளைச் சிவபெருமான் சிவபெருமானகவே வந்து ஆட்கொண்டருளுகின்றார். சுந்தரமூர்த்தி சுவாமிகளை அந்தண முதியோனாய் வந்து ஆட்கொண்டருளுகின்றார். மாணிக்கவாசக சுவாமிகளை மனித உருவில் வந்து ஆட்கொண்டருளுகின்றார். திருநாவுக்கரசு சுவாமிகளை திலகவதியாரிடமாக நின்று ஆட்கொண்டருகின்றார். அப்பூதியடிகளை திருநாவுக்கரசு சுவாமிகளிடமாக நின்று ஆட்கொண்டருளுகின்றார். இங்ஙனம் அவர் ஆட்கொள்ளும் வடிவங்கள் அனந்தம்.

திருஞானசம்பந்த சுவாமிகளுக்கு ஞானப்பாலைக் கொடுத்து ஆண்டருளுகின்றார். சுந்தரமூர்த்தி சுவாமிகளை அடிமை ஓலையைக் காட்டி ஆண்டருளுகின்றார். மாணிக்கவாசக சுவாமிகளை சிவஞானபோத நூலைக் காட்டி ஆண்டருளுகின்றார். திருநாவுக்கரசு சுவாமிகளை சூலையைக் கொடுத்து ஆண்டருளுகின்றார். அப்பூதியடிகளை திருநாவுக்கரசு சுவாமிகள் பால் அன்பூட்டி ஆண்டருளுகின்றார். இங்ஙனம் அவர் ஆட்கொள்ளும் வண்ணங்களும் அனந்தம். சைவப்பெருமக்கள் இவ்வனந்த வடிவங்களிலும் அனந்தவண்ணங்களிலும் ஒவ்வொன்றை வேண்டிப் பிரார்த்தித்து வேண்டியவாறே ஆட்கொள்ளப் பெற்று விடுதலை பெறுவர்.

உலகப் பற்றில் நின்று விடுதலை பெற்றுச் சிவபெருமானின் திருவடியை அடைதற்குரிய பாதங்கள் அல்லது படிமுறைகள் நான்காகும். அவற்றைச் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனச் சைவ சித்தாந்த நூல்கள் கூறுகின்றன. நால்வருக்கும் நான்கு படிகளும் தனித்தனியே சிறப்புடையன.

நாவுக்கரசர் சரியா மார்க்கத்தை அநுட்டித்து முத்தி அடைந்தார். இதைத்தாச மார்க்கம் என்றும் சொல்வர். அதாவது சிவனை எஜமானனாகக் கொண்டு அப்பர் அடிமையாகப் பாவனை செய்து பக்தி செலுத்தினார்.

"தன்கடன் அடியேனையுந் தாங்குதல்
என் கடன் பணி செய்து கிடப்பதே"

என்பது அப்பர் வாக்கு. அப்பருடைய தேவாரம் ஒன்று சரியைத் தொண்டினைப்பற்றித் துல்லியமாகக் கூறுகின்றது.

"நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்குமிட்டு
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடி
சங்கரா சயபோற்றி போற்றி என்றும்
அலைபுனல் சேர் செஞ்சடைஎம் ஆதி என்றும்
ஆரூரா என்றென்றே அலறாநில்லே"

சம்பந்தப் பெருமான் கிரியா மார்க்கத்தை அநுட்டித்து முத்தி அடைந்தார். கிரியை வழி நின்று ஒழுகும் நெறியை சற்புத்திரமார்க்கம் அல்லது புதல்வர் நெறி என்றும் சொல்வர். அதாவது சிவபெருமானைத் தந்தையாகக் கொண்டு ஞானசம்பந்தர் தம்மை மகனாகப் பாவித்து ஒழுகிய நெறியாகும்.

சுந்தரர் காட்டிய நெறி சகமார்க்கம் அல்லது தோழமை நெறி எனப்படும். அதாவது சுந்தரர் இறைவனுடைய தோழனா விளங்கினார். இதனை யோக நெறி என்றும் சொல்வர்.

ஞானவழி நின்றவர் மணிவாசக சுவாமிகள் இதனைச் சன்மார்க்கம் அல்லது காதல் நெறி என்று சொல்வர். அதாவது இறைவனைத் தலைவனாகவும் மணிவாசகர் தம்மைத் தலைவியாகவும் பாவனை செய்து பக்தி செய்தார் என்பது கருத்து.

நான்கு பாதங்களுள் ஒவ்வொன்றும் உபாயநிலை உண்மைநிலை என இருவகைப்படும். உபாயநிலை என்பது உலக இன்பங்களைப் பெறுவதற்காகச் செய்யப்படுவதாகும். உண்மை நிலை என்பது உலகப் பற்றைத் துறந்து இறைவன் திருவடிப்பேறாகிய முத்தி இன்பத்தைக் கருதிச் செய்யப்படுவதாகும். எனவே உபாயச் சரியை, உபாயக்கிரியை, உபாயயோகம், உபாய ஞானம் என்றும் உண்மைச் சரியை, உண்மைக் கிரியை, உண்மையோகம், உண்மை ஞானம் என்றும் சிவபுண்ணியங்கள் எட்டாகும் என்பதாம்.

உபாயச் சரியை முதலிய நான்கையும் அநுட்டித்தப் பின் உண்மைச் சரியை முதலிய நான்கையும் அநுட்டிப்பார்கள். ஒவ்வொரு பாதத்திலும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு பாதங்களும் உண்டு. அவை சரியையிற் சரியை, சரியையிற் கிரியை சரியையில் யோகம், சரியையில் ஞானம் எனவும்; கிரியையிற் சரியை கிரியையிற் கிரியை, கிரியையில் யோகம், கிரியையில் ஞானம் எனவும் யோகத்திற் சரியை, யோகத்திற் கிரியை, யோகத்தில் யோகம், யோகத்தில் ஞானம் எனவும் ஞானத்தில் சரியை, ஞானத்திற் கிரியை, ஞானத்தில் யோகம், ஞானத்தில் ஞானம் எனவும் வரும். இதனால்சைவ சமயப் படிகள் உபாயநிலை பதினாறும், உண்மை நிலை பதினாறுமாக முப்பத்திரண்டெனக் கொள்க.

மேற்கூறியவற்றால் சிவபெருமானின் திருவடிப் பேறாகிய முத்தி இன்பத்தை நுகர்தற்கு அரும்பு போலத் தோன்றும் தாச மார்க்கமாகிய சரியையும், மலர் போலத் தோன்றும் சற்புத்திர மார்க்கமாகிய கிரியையும், காய் போலத் தோன்றும் சகமார்க்கமாகிய யோகமும் கனிபோலத் தோன்றும் சன்மார்க்கமாகிய ஞானமும் படிகளாக அமைந்துள்ளன.

அரும்பு தோன்றாமல் மலர் உண்டாகாத தன்மை போலச் சரியை நெறியில் ஒழுகாதார்க்கு கிரியை பயன் கொடாது. மலர் தோன்றாமல் காய் உண்டாகாத தன்மை போல கிரியை நெறியில் ஒழுகாதவர்க்கு யோகம் பயன் கொடாது. காய் தோன்றாமல் கனி உண்டாகாத தன்மைபோல யோக நெறியில் ஒழுகாதார்க்கு ஞானம் பயன் கொடாது. கனியை உண்ணாதார்க்கு அதன் சுவை உணர்ச்சி கிட்டாத தன்மையைப் போல ஞானநெறியில் ஒழுகாதார்க்கு வீட்டின்பப்பேறு கிடையாது என்பதாம். இதனை

"விரும்பும் சரியைமுதல் மெய்ஞ்ஞான நான்கும்
அரும்பு மலர்காய் கனி போலன்றோ பராபரமே".

எனத் தாயுமான சுவாமிகள் கூறுகின்ற அருள் மொழிகளால் உணரலாம்.

நான்கு நெறிகளும் நால்வருக்கும் கூறப்பட்டாலும் அவர்கள் சரியையில் ஞானமும், கிரியையில் ஞானமும், யோகத்தில் ஞானமும், ஞானத்தில் ஞானமும் பெற்றே முத்தி அடைந்தார்கள் என்பது பெறப்படும்.

ஆறாம் திருமுறை

அப்பர்

வண்டாடு பூங்குழலாள் பாகன் கண்டாய்
மறைக்காட் டுறையு மணாளன் கண்டாய்
பண்டாடு பழவினை நோய் தீர்ப்பான் கண்டாய்
பரலோக நெறிகாட்டும் பரமன் கண்டாய்
செண்டாடி அவுணர்புரஞ் செற்றான் கண்டாய்
திருவாரூர்த் திருமூலட் டானன் கண்டாய்
கொண்டாடும் அடியவர்தம் மனத்தான் கண்டாய்
கோடிகா அயர்ந்துறையுங் குழகன் தானே.

திருக்கோடிகாவில் அமர்ந்து உறையும் குழகன், மயக்கம் அறுக்கும் மருந்து, பரலோக நெறிகாட்டும் பரமன், ஏழுலகமாய் நின்ற அப்பன், பற்று அற்றார்க்குத் தன்னை வெளிக்காட்டிக்கொள்ளும் தன்மையன் நினைப்பவர் வினைகளைத் தீர்ப்பவன்.

விநாயகர் பெருமை

(சிவநெறிச் செல்வர். முரு. பழ. இரத்தினஞ் செட்டியார்.)

"விநாயகரின் பெருமை"

முன்னுரை: தமிழ் நாட்டிலுள்ள விநாயகப் பெருமானின் மூர்த்தங்கள் மிகுந்த சாந்நியத்துடன் விளங்குவதால் அவற்றை அறிமுகப்படுத்த விரும்புகின்றேன்.

கடவுள் எங்கும் நிறைந்தவர். எனினும் சில இடங்களில் அவர் திருவருள் முனைந்து நிற்கிறது. அப்படி நிற்கிற இடங்களையே படைவீடுகளென்றும் சாந்நித்தியம் மிகுந்த இடங்களென்றும் கூறுகிறோம். இறைவன் திருவருள் இவ்வாறு சில இடங்களில் முனைந்திருப்பதற்குக் காரணம் அருளாளர்கள் அவ்விடங்களைச் சிறப்பித்துப் பாடியிருப்பதேயாகும்.

வினை தீர்க்கும் பிள்ளையார்

விநாயகப் பெருமான் வினை தீர்ப்பதில் மிகவும் வல்லவர், "விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்" எனப் பதினோராம் திருமுறை பேசுகிறது. தேவாரத்தில் "ஆடிப்பாடி அண்ணாமலை கைதொழ ஓடிப் போகும் உள்ள வினைகளே" எனச் சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் திருவண்ணாமலை வினை தீர்க்கும் தலம் என்பது புலனாகிறது.

திருவண்ணாமலை கோயில் நுழைவாயிலில் ஒரு பிள்ளையார் இருக்கிறார். அவர்க்கு "அல்லல் தீர்க்கும் பிள்ளையார்" எனப் பெயரிடப்பட்டிருக்கிறது. பிள்ளையார் சிறியவராக இருந்தாலும் வல்லமை வாய்ந்த மூர்த்தமாக விளங்குகிறார். இப்பிள்ளையாரைப் பற்றிய பழைய பாடல் வருமாறு.

"அல்லல் போம் வல்வினைபோம் அன்னைவயிற் றிற்பிறந்த
தொல்லைபோம் போகாத் துயரம்போம் - நல்ல
குணமதிக மாம்அருணைக் கோபுரத்தில் மேவும்
கணபதியைக் கைதொழுதக் கால்."

கணபதியார் நம் வினைகளைப் போக்குவதில் மிகவும் ஆற்றல் படைத்தவர். வினைகளைப் போக்குவது மிக அரிய செயலாகும். இச்செயலைத் திருவண்ணாமலையில் உள்ள இப்பிள்ளையார் செய்கிறார்.

செல்வமும் கல்வியும் தரும் பிள்ளையார்

"திருமுதுகுன்றம்." இது விருத்தாசலம் என்ற ஊராம். விருத்தாசலக் கோவில் நுழைவாயிலில் பூமிக்கடியில் ஆழத்துப் பிள்ளையாரென ஒரு பிள்ளையார் விளங்குகிறார். அவர் பொருட்செல்வமும் கல்விச் செல்வமும் தருவதில் மிகவும் சிறந்தவர். அவர்க்குரிய பாடல் வருமாறு:

"திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமது உள்ளம் பழுக்கவும்
பெருகும் ஆழத்துப் பிள்ளையைப் பேணுவாம்."

மரணபயம் நீக்கும் பிள்ளையார்

திருக்கடவூரில் இது உள்ளது. அங்கே திருக்கோவிலில் உள்ள பிள்ளையாருக்குக் "கள்ளவிநாயக"ரென்று பெயர். இப்பிள்ளையார் மரண பயம் நீக்குவதில் மிகவும் வல்லவர். திருக்கடவூர் மார்க்கண்டனுக்கு மாணமில்லாப் பெருவாழ்வை வழங்கிய தலமாகும். ஆதலால் இத்தளத்தில் உள்ள "கள்ள விநாயகரை" வணங்கினால் மரணபயம் அடியோடு நீங்கும் அவர்க்குரிய பாடல் .

"தண்டாயுதத்தையும் சூலா
யுதத்தையும் தாங்கியென்னைக்
கண்டாவிகொள்ள நமன் வரும்
வேளையில் காத்திடுவாய்
வண்டார வாரஞ்செய் மாமலர்
சோலை வளப்பமுடன்
விண்டாவிய கடவூர் வாழுங்
கள்ள விநாயகனே."

சிந்தித்ததைச் சித்திக்கச் செய்யும் பிள்ளையார்.

திருஆலவாய் எனப்படும் மதுரையம்பதியில் அம்மன் சன்னதிக்குள் நுழைவதற்கு முன் உள்ள மண்டபத்தில் விநாயகர் சன்னிதி இருக்கிறது. சித்தி விநாயகர் என்று சன்னதியில் எழுதி இருக்கும். மணிவாசகப் பெருமான் குதிரை வாங்கப் புறப்படும் பொழுது இந்தப் பிள்ளையாரை வழிபட்டுத்தான் சென்றுள்ளாரென்று "திருவிளையாடல் புராணம்" கூறுகிறது. இவர் சித்தி விநாயகராக விருப்பதால் இவரை நினைத்து எந்தக்காரியத்தைத் தொடங்கினாலும் அது உடனே சித்தியாகும். காரியசித்தி செய்கின்ற விநாயகராக இருப்பதால்தான் இவருக்கு சித்தி விநாயகர் என்று பெயர். பிள்ளைகளுக்குத் திருமணம் ஆக வேண்டும் என்றாலும், பிள்ளைப் பேறு கிடைக்க வேண்டுமானாலும், செல்வம் கிடைக்க வேண்டுமானாலும், வேலை கிடைக்க வேண்டுமானாலும், இவரை வேண்டினால் உடனே கிடைக்கும். இவர்க்குரிய பாடல் வருமாறு:

உள்ளமெனுங் கூடத்தில் ஊக்கமெனுந்
தறிநிறுவி உறுதியாகத்,
தள்ளரிய அன்பெனுந் தொடர் பூட்டி
இடைப்படுத்தித் தறுகட் பாசக்
கள்ளவினை பசுபோதக் கவளமிடக்
களித்துண்டு கருணை யென்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை
நினைந்துவரு வினைகள் தீர்ப்போம்.

பல தலங்களை வழிபட்ட பலன்தரும் பிள்ளையார்

எல்லா ஊர்களிலும் உள்ள பிள்ளையார் மூர்த்தங்களை வணங்கிய பலனைத்தருவதில் காசியில் உள்ள "துண்டி ராஜ கணபதி' குறிப்பிடத் தக்க பெருமானாவார். இவரை வணங்கினால் எல்லாத் தெய்வங்களையும் வணங்கிய பலன் கிடைக்கும். காசிக்குப் போக முடியாதவர்கள், பிள்ளையார் பட்டியில் உள்ள கற்பக விநாயகரை வணங்கினால் இதே பலன் கிடைக்கும். கற்பக விநாயகர் கற்பக விருட்சத்திற்குத் திருவருள் வழங்கியவராதலால் வழிபடுவோர் அனைவருக்கும் எல்லாவகையான இன்பங்களையும் வழங்குவார். காசி விநாயகருக்குள்ள பாடல் வருமாறு:

"தருவான கற்பகச் சோலையே எல்லாம்

தரும்பெரிய பதும நிதியே
சங்கநிதியே உண்ண உண்ண தெவிட்டாத
நண்ணமுதின் அதிமதுரமே
கருவூலமே என்று உனைப்பாடி உருக அருள்
காசி வாழ் துண்டிராச
கணபதியெனும் பெரிய குணமேருவே அருட்
கருணாநிதிக் கடவுளே''

பிள்ளையார் பட்டிப் பெருமானை வணங்கினால் எல்லா விநாயகப் பெருமானை வணங்கிய பலன்களும் கிடைக்கும்.

''பிள்ளையார் பட்டி பெருநகரில் வீற்றிருந்தே
உள்ளுவார் துன்பம் ஒழிக்கின்ற - தெள்ளமுதே
என்னருமைக் கற்பகமே என்னுளத்தில் நீ இருக்கத்
துன்னுமோ முன்னைவினை சொல்!''

ஞானம் தருகின்ற பிள்ளையார்

சிதம்பரத்திற்குப் பக்கத்திலுள்ள திருநாரையூராகும். இங்குள்ள பிள்ளையார் பெயர் பொல்லாப் பிள்ளையார் என்பதாகும். இவர் தேவார திருமுறைகளை வெளியாக்கியவர். ஆகவே இவர் ஞானம் தருகின்ற பிள்ளையார் ஆவார். இவர்க்குரிய பாடல் வருமாறு:

''மருப்பை ஒரு கைக்கொண்டு நாரையூர் மன்னும்
பொருப்பை அடி போற்றத் துணிந்தால் - நெருப்பை
அருந்த எண்ணுகின்ற எறும் பன்றே அவரை
வருத்த எண்ணுகின்ற மலம்!''

உலக வாழ்க்கையில் என்ன செல்வம் பெற்றாலும் இறுதியில் ஞானம் பெறுவதே நம் குறிக்கோளாகும். இந்த ஞானத்தைத் திருநாரையூரில் உள்ள பொல்லாப் பிள்ளையார் தந்தருள்வார்.

முடிவுரை:

இதுகாறும் கூறியவற்றால் திருவண்ணாமலை பிள்ளையார் இடத்தே வினை நீக்கம் பெறலாமென்றும், விருத்தாசலம் பிள்ளை யார் இடத்தே பொருட் செல்வமும், கல்விச்செல்வமும் பெறலா மென்றும், திருக்கடவூர்ப் பிள்ளையார் இடத்தே மரணபயத்தை நீக் கிக் கொள்ளலாம் என்பதும், மதுரைப் பிள்ளையார் இடத்தே நினைத்த காரிய சித்தி பெறலாமென்றும், காசிப் பிள்ளையார் இடத்தே எல்லாத் தெய்வங்களையும் வணங்கிய பலனைப் பெறலா மென்றும், அங்கே போக முடியாதவர்கள் பிள்ளையார் பட்டிப் பிள் ளையாரை வணங்கினால் அதே பலனைப் பெறலாமென்றும், திருநா ரையூர்ப் பிள்ளையார் இடத்தே ஞானத்தைப் பெறலாம் என்பதும் இனிது புலனாகும்.

''முன்னவனே யானை முகத்தவனே முத்திநலம்
சொன்னவனே தூய்மைச் சுகத்தவனே - மன்னவனே
சிற்பரனே ஐங்கரனே செஞ்சடையஞ் சேகரனே
தற்பரனே நின்தாள் சரண்''

என்று வள்ளலார் பாடியுள்ள பிள்ளையார் வணக்கப் பாடலைப் பாடித் துதிப்போமாக.



பஞ்ச நிருத்த சபைகள்

1. ஆலங்காடு - இரத்தினசபை
2. சிதம்பரம் - பொற்சபை
3. மதுரை - வெள்ளிசபை
4. திருநெல்வேலி - தாமிரசபை
5. குற்றாலம் - சித்திரசபை

நல்ல சகுனம்:

மங்களவாத்தியம், புஷ்பங்கள், சுபகாரிய வரிசை, மணக் கோலம், சுமங்கலி, சுமங்கலிகள், கன்னிப் பெண், தண்ணீர் நிறைந்த குடம், பால் நிறைந்த குடம், பழங்கள், தனல், தாசிமா தர், வேதியர் கூட்டம், இரட்டை அந்தணர், சாதம், மிக உயர் பதவியாளர்கள், குடை, கொடி (சண்டை, போராட்டம் இல்லாதது) கரும்பு, மாமிசம், தயிர், கள், தேன், பொரி, காளைமாடு, யானை, குதிரை, நரி, பசுக்கூட்டம் பறவைக்கூட்டம், வெளுத் தத் துணி இவைகள் சுபம் தரும் சகுனங்கள்.

இரவு உணவுமுறை:

இரவில் வெகுநேரம் கழித்து உணவுகளை உண்ணக்கூ டாது. கீரை வகைகளை உணவில் இரவில் சாப்பிடுவது நல்ல தல்ல. இரவில் நெல்லிக்காய், முள்ளங்கி இவைகளை உணவில் சேர்த்துக்கொண்டால் நோய் வரும்; போகாது. காலையில் இஞ் சியும், மத்தியானத்தில் சுக்கும், இரவில் கடுக்காயும் மருந்திற் கும் உணவிற்கும் ஏற்றவைகள் இரவில் கடுந்தயிரை உணவில் சேர்ந்துக் கொள்ளக்கூடாது. பகலில் பால்சோறு சாப்பிடக் கூடாது. இரவு உணவில் மிளகு சீரகம் கலந்த வெஞ்சனங்கள் உடலுக்கு நல்லது.

அனகவாழ்வு வாழ்ந்து வருகிறார்

எல்லாம் வல்ல இறைவன் எங்கும் உள்ளதாய் விளங்கும் அருட்பெருஞ் ஜோதியாகவும், எங்கும் விளங்குவதாய் உள்ள தனிப்பெருங் கருணையாகவும் இரண்டிலும் உள்ள பூரண இன்ப மாகவும் என்றும் மாறாத இயற்கை நிலையில் ஒளிமயமாயுள் ளார். இம்மானிடப் பிறவியை அடைந்துள்ள நாம் இப்பிறப்பி னால் அடையும் ஆன்ம இலாபமாகிய சிவானுபவத்தை இறைய ருளால் இம்மனித ஆயுள் உள்ளபோதே அறிந்து அடைதல் வேண்டும்.

சென்ற பத்தொன்பதாம் நூற்றாண்டில் நம் போன்ற மனித உடம்போடு வாழ்ந்த திருவருட் பிரகாச வள்ளலார் இராமலிங்க அடிகள் அவர்கள் இதற்குண்டான வழிமுறையைக் கடைப்பிடித் துத் தன் அழியும் உடம்பை அழியா நித்திய உடம்பாக திருவரு ளால் மாற்றப் பெற்று இன்றும் நம்மிடையே அனக வாழ்வு வாழ்ந்து வருகின்றார்.

தகவல்: அருட்பெருஞ்ஜோதி அடிகள்



BOLD AND COMFORTING THOUGHTS OF ST. APPAR

BY. S.T. KASIRAJAN I.A.S (Rtd)

Tamilnadu can be proud of itself. The treasures it has are legion. Its literature is extraordinary. The religious songs it can regale with are as plentiful as apples in autumn. The spiritual leaders who have walked this ancient and glorious land are not small in number, and they beckon to us to enjoy a life of joy and fulfilment. If one listens to them, one will be happy, here and hereafter.

This thought is encouraging and reassuring, the thought that one will be happy and successful on this earth, in this mundane world, without disqualifying oneself to become a worthy member of heaven. How will you have good and happy life here, which will make you fit to taste the sweets of hereafter as well? St. Appar has the answer.

Think truth. Speak truth. Act truth.

But then what is Truth? Everybody seems to speak about truth, but not the truth. Nor does every one understand truth. When Gandhiji talks of Truth, I am at sea to know what is what. I wade through the Gandhian literature to get at the truth of truth. And, I get the answer. It is mere "recording of facts", as they happen, as one sees them happen. These are the words of Gandhiji. No padding should be there and no omission. So this is simple, as simple as simpleness can be. But simple as it is, it is difficult to follow. But then you should strive.

Secondly, love everybody. Receive him courteously. Show him a smiling face. Speak to him lovingly.

Thirdly, eschew falsehood. Do not act false. Be sincere, Give a wide berth to untruth.

Fourthly, be patient. Patience is the greatest ornament and soundest armour. Patience compasses achievements.

Fifthly - this is very important - turn the torch light inside. Try to analyse who you are and what you are and whether you deserve anything more than you have.

Sixthly, never swerve from the path of virtue and straightforwardness.

Seventhly, stand firm in decency and virtuous living.

You do these and you will be happy as a bird on this earth and also above.

Now what more do you want when you have the best of everything in both the worlds?

The ideas narrated above are illustrated with a beautiful metaphor from agriculture:

If you plough with truth, sow the seed of active desire,

Weed out falsehood, water with unswerving patience,

Look into yourself with a critical eye, fence yourself with rectitude and correctness,

Stand in love and decency, SIVASAKTHI will flower and blossom.

What an amount of labour a ploughman puts forth to get his grains! How many items of work he attends to in order to reap the harvest of his labour! Imitate him, and you will be happy and will get the grain of grace from the Lord. The life here, if lived well, will fetch you the hereafter as well. Appar has indeed shown the sure way to both the worlds.

"I have not", says Appar, "learnt the arts. Nor have I moved with the artists. I am, therefore, a stranger to good feelings, elevated feelings. I have not obtained the affection and kindness of women. They look askance at me. I do not know where I stand. I am just puzzled. And I cannot puzzle things out."

How many arts are there to enjoy! They are many in number. They give joy to the artists, to those who learn and master them. In turn, they provide happiness for others too. He who does not learn the arts does not enjoy himself; nor does he gladden the hearts of others. A true artist is ever a good man. Nothing can spoil him.

Days were when the arts and artists were looked down upon, and dance and drama disposed. Music was considered immoral. Unthinking orthodoxy was against all this, running foul of them. It was given to Appar to take up the cudgels for putting a period to this kind of deleterious thinking and perverted approach and to broadcast the glory of the arts.

"It will be of no use even if you recite the **Vedas,** listem to **Shastras,** learn religious literatures and teach them, if you fail to enshrine the Lord in your heart and to think of Him every minute of the day and night.

"The stick and grass, the umbrella and deer skin, all held in a showy manner, without real feeling and compassion at heart, will butter no parsnips, but end in smoke.

But if you have Lord Siva in your heart, no trouble can come to you, no tribulations can shake you. The sky may crash, the earth may shake, mountains may break and fall to pieces, the sea may dry up, the fishes may die, the sun may fall. Yet you will remain calm, unagitated, and cheerful, for you have the Lord in your heart."

Bold thoughts from a bold saint, indeed! Exhibitionism may deceive men. Often it does. But it never deceives God. Pious hypocrisy may throw dust in the eyes of men. But it fails with the Lord. These bold thoughts were needed, as the atmosphere in the seventh century had been fouled up up to the hilt. Ritualism was the order of the day. The spirit of spirituality had gone, but pomp and show, religious and spiritual, had taken its place; they had the suport of the ruler of the day.

To swim against the current calls for courage and confidence. Only a few possess them. A Gandhi may have, and a Kamaraj and a Rajaji and a Nehru. Millions do not have, even educated millions. They know full well where their bread is buttered. And they know how to take the line of least resistance. It is so, and it has been so in all history. But we find, if I may say so and use an inelegant word - I may be pardoned for that - we find spiritual dare - devilry in Appar. He goes the whole hog against insincerity and against the torrent of pious words with a desert of meaning. Says he,

We are nobody's subjects, We fear not Yama
We will suffer not in hell, We know no privations
We are correctly proud, We know no pain,
We will make no submission
Joy for ever, pain never, never
We who owe our allegiance but to the Lord of Lords.

This soul - stirring song sung by Appar against the fearsome call of the infuriated king of the day Mahendravarman Pallava of Kancheepuram, goes to show the stuff of which Appar is made.

The royal "We" he uses sounds kingly in his utterance and brings out in bold letters the strength of his character and the stoutness of his heart. The thoughts encased in the exulting and upbeat utterance of Appar are worth their weight in gold. You need fear none under the sun if you fear God. If God is for you, who can be against you? And every new day will be a day of joy. Install GOD in the temple of your body, and your life will be a river of exultant joy. Let us have faith in the ringing words of Appar. இன்பமே எந்நாளும் துன்பமில்லை.

Inspite of his Herculean achievements and miracles - I need not detail them here - and Himalayan faith, he was a man of extreme modesty and child - like simplicity. What was his age? what was the age of Saint Gnanasambandar? What was the age of Appar when Gnanasambandar was born? Appar was a full - blooded man when Gnanasambandar saw the light of the day. Yet did he not carry the palanquin of the child - saint Gnanasambandar? Did he not respond in his humble way as servant or slave when Gnanasambandar addressed him as "Appare"? Did he feel offended when the child - saint left for Madurai against his warnings of planets foreboding evils? Did not Appar receive him with a heart overflowing with ineffable joy on his victorious return from Madurai as if he welcomed a conqueror? What does this show if not modesty? Modesty always pays. Modesty places you among the gods, says Thiruvalluvar.

Indeed to set an example is better than to preach. An ounce of practice is better than a ton of precept, they say. And Appar was not an ivory - tower preacher. Nor was he a cloistered saint. A realist, a God - intoxicated realist, he practised what he preached, and preached what he practised and experienced.

Gandhiji spun the **charka.** And the whole world spun around him. For he led the way, doing what he wanted the others to do. Did people believe, till we got our independence, that we would get our independence through the strength of **charka?** Yet we got our independence.

Once I saw the College Principal, Dr. K.Meenakshisundaram, of Coimbatore, renowned for his learning and his sense of high integrity, carrying a chair to a nearby building where a meeting was tobe held in an interval of 15 minutes after a PATTIMANRAM had been held in another building, and the entire number of 2000 chairs were lifted by sutdents in a trice. Once Pulavar R.Ilankumaran, of Madurai, a famed teacher of no mean achievement, removed two eaten leaf - plates, not one, from an ugly heap in front of his school - room and the whole heap disappeared in no time, because the students followed the example of the ideal teacher.

The saint, the sage, the savant that Appar was, he set an example by carrying a hoe on him - it was his constant companion - and by it clearing the bushes and shrubs and thorns in the precincts of the sacred temples he visited. It was not an isolated thing done by an isolated individual. The individual had the untold strength of the many. People followed him, and did, as he did. He dug wells; People did the same too. He helped dig tanks. People followed suit. The days Appar lived were glorious days. Preach not, always, but do; people will follow you. And the reform you want to bring about can be easily brought about. Nothing like setting an example. That is the talisman. This is what the life of Appar reveals to us.

And Appar is there to prescribe easy remedies for all our ills. He is a sympathetic soul, an affectionate soul. Great men are always sympathetic and kind. And Appar is a great Apostle of God. He will not let us down, but will com to our aid. And he does. Worship God with no ill - feeling at heart. Never use harsh words. Try to be

nice. Meditate on NA MA SI VA YA the five lettered mantra. The Lord of Tiruvanaikka will rush to you with open arms. This, Appar says with a note of absolute of finality. Think of Him intensely and He will, in the twinkling of an eye, bless you with His grace. The strength and value of the five mystic letters were demonstrated in modern days by Swami Muktananda of Ganeshpuri. What we need is but faith, pure and simple. Work without faith is like an attempt to reach the bottom of a bottomless pit, says Mahatma Gandhi. Let us have faith in ourselves, and in God, and in God's meseengers, and we will have everything we want, here and hereafter.

கல்வி



டாக்டர் டி.கே. சாந்தி குணசிங்
எம்.பி.பி.எஸ்., டி.ஜி.ஓ., எம்.டி.,

'அன்பான என்றன் செல்வா!
அதிவேகம் போவ தெங்கே?"
"பண்பான என்றன் அண்ணா!
பணக்காரன் ஆகப் போறேன்".

"பணக்காரன் ஆனால் உன்றன்
பணமெலாம் நிலைத்தா நிற்கும்?
கணநேரம் தோன்றி மறையும்
கவின்மின்னல் போன்ற தன்றோ?"

"அவ்வாறே ஆனால் அண்ணா!
அழியாத செல்வம் யாதோ?"
"எவ்வாறு நோக்கி னாலும்
எழிற்கல்வி நிலைத்து நிற்கும்"

"பொன்னான செல்வம் கல்வி ;
போற்றிநீ கற்பாய் அப்பா!
கண்ணான கல்வி கற்றுக்
கற்றோர்கள் போற்ற வாழ்வாய்! "

உலகப் பொதுமறை

1. கடவுள் வாழ்த்து

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு. 1

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின். 2

மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார். 3

வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில. 4

இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு. 5

பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார். 6

தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லான்
மனக்கவலை மாற்ற லரிது. 7

அறவாழி அந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லார்
பிறவாழி நீந்த லரிது. 8

கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
றாளை வணங்காத் தலை. 9

பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா
ரிறைவ னடிசேரா தார். 10

